இங்கிலாந்தின்

அரசாங்கமும் அரசியலும்

(கி.பி. 1603 முதல்)

THE GOVERNMENT AND POLITICS IN ENGLAND SINCE-1603



கே. செங்கோட்டி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 790

இங்கிலாந்தின் அரசாங்கமும் அரசியலும்

(கி. பி. 1603 முதல்)

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

கே. செங்கோட்டி, எம். ஏ., பி. எல்., டி. பி. எம்.,
துணைப் பேராசிரியர், அரசியல் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — February, 1978
Number of Copies — 2000

T. N. T. B. S. (C. P.) No. 790

THE GOVERNMENT AND POLITICS IN ENGLAND (Since 1603)

K. SENGOTTI

Price Rs. **12.05**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
Muthamizh Chelvi Achagam,
1/65, Broadway, Madras-1.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டு கள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற் றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறை வும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர் களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சி யைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சி யைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன இங்கிலாந்தின் அரசாங்கமும் அரசியலும் (கி. பி. 1603 முதல்) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 790 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 825 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

1. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தின் நிலை

ஆங்கில நாட்டு அரசியலமைப்பு வரலாற்றில் ஸ்டூவர்ட்டு களின் காலம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்காலத்தில் தான் 'நாட்டின் இறுதியான அதிகாரம்' இருப்பது அரசரிடமா அல்லது பாராளுமன்றத்திடமா என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டு எல்லா நிகழ்ச்சிகளும் சுழன்றன. இங்கிலாந்தில் டியூடர்களின் ஆட்சி முடிவுபெற்ற பின்னர் 1603ஆம் ஆண்டில் ஸ்டூவர்ட்டுகளின் ஆட்சி ஆரம்பமாயிற்று. ஸ்டூவர்ட்டுகளின் ஆட்சி ஆரம்பமானவுடனேயே இங்கிலாந்தில் அரசியலமைப்புப் போராட்டங்கள் துவங்கின. டியூடர்கள் காலத்தில் அரசர்களின் ஆணைப்படி ஆடிக்கொண்டிருந்த பாராளுமன்றம் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் அரசர்களை எதிர்த்துப் போராடத் துவங்கியது. அப் போராட்டம் இறுதியில் பாராளுமன்றத்தின் வெற்றியோடு முடிவு பெற்றது. அப் போராட்டத்திற்கு ஸ்டூவர்ட்டு அரசர்களின் கொள்கைகளும் நடத்தைகளுமே முழுப் பொறுப்பானவைகள் என்று சொல்லமுடியாது. உண்மையில் போராட்டத்திற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியதில் டியூடர் அரசர்களுக்கும் பங்கு உண்டு.

டியூடர்கள் ஆங்கில அரியணையில் அமருவதற்கு முன்னர், ஆங்கிலநாடு பெரும் குழப்பத்தில் சிக்கித் தவித்துக்கொண் டிருந்தது. நாட்டில் அமைதியின்மையும் ஒழுங்கின்மையும் நிலவியது. நீதியும், நேர்மையும், பண்பும், நெறியும், கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்குமிடம் தெரியாமல் இருந்தன. கொலையும், கொள்ளையும், இலஞ்சமும், ஊழலும் நாட்டில் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. சமயச்சீர்திருத்த இயக்கத்தினால் (Reformation) உள்நாட்டுப்போர் ஏற்படக் கூடிய அச்சம் நிலவியது. நாட்டில் வெளிநாட்டுப் படையெடுப்புப் பற்றிய பீதியும் பரவியிருந்தது. இந்நிலையில்தான் டியூடர்கள் பட்டத்திற்கு வந்தனர். 1588ஆம் ஆண்டில் எலிஸபெத் இராணியார் ஸ்பெயின் நாட்டுக் கப்பற் படையை கிரேவ்லைன்ஸ் போரில் (Battle of Gravelines) தோற் கடித்து நாட்டில் பரவியிருந்த வெளிநாட்டுப் படையெடுப்பைப்

பற்றிய பீதியை அகற்றினர். எலிஸபெத் இராணியாரின் சமய ஒப்பந்தத்தால் (Religious Settlement) நாட்டில் உள்நாட்டுப்போர் ஏற்படக் கூடிய அச்சம் அகற்றப்பட்டது. அத்துடன் டியூடர் களின் வல்லாட்சியால் நாட்டிலிருந்த சமூக விரோத சக்திகள் அழிக்கப்பட்டன. ஆகவே, நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டன. இத்தகைய அமைதியான சூழ்நிலையில் தான் இங்கிலாந்தில் மறு மலர்ச்சி இயக்கம் (Renaissance) பரவ ஆரம்பித்தது. அத்துடன் ஆங்கில மக்களும் தங்களது உரிமை களைப்பற்றியும் அரசியல் பிரச்சினைகளைப் பற்றியும் சிந்திக்க முற்பட்டார்கள். அங்ஙனம் மக்கள் தங்களின் சமூக, அரசியல் உரிமைகளைப் பற்றிச் சிந்தித்து, அவைகளைப் பெறச் செயல் பட்ட தினால்தான் நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டன.

அரசியலமைப்புப் போராட்டம் ஏற்பட்டதற்கான சூழ்நிலைகள்

1. பாராளுமன்றத்தின் வளர்ச்சி

குழந்தை போன்றிருந்த பாராளுமன்றத்தை டியூடர்கள் நன்கு சீராட்டி வளர்த்து வாலிபமாக்கி விட்டுச் சென்றனர். குழந்தை யாக இருக்கும்போது தாயின் ஆணைகளைச் சிரமேற் கொண்டு செய்து முடிக்கும் குழந்தை, வாலிப காலத்தில் அத் தாயையே அதட்டிக் கேட்டு தன்னுரிமை கோருவது போலவே, டியூடர்கள் காலப் பணிவுமிக்க பாராளுமன்றமானது ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் துணிவுமிக்க பாராளுமன்றமாக மாறியது.

டியூடர்கள் விரும்பியிருந்தால் பாராளுமன்றத்தின் துணை யின்றியே ஆட்சி நடத்தியிருக்க முடியும். ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்யவில்லை. பாராளுமன்றத்தின் துணைகொண்டே அவர்கள் தம் எதேச்சாதிகாரத்தைச் செலுத்தினர். பாராளு மன்றத்தின் மூலமாகத்தான் ரோமினின்று இங்கிலாந்து பிரிக்கப் பட்டது. பாராளுமன்றத்தின் துணை கொண்டுதான் எலிஸபெத் இராணியார் சமயப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார். எட்டாம் ஹென்றிக்குப் பிறகு அரியணை உரிமை யாருக்கு என்ற பிரச்சினையை அந்தப் பாராளுமன்றம்தான் தீர்த்தது. அதேபாராளு மன்றம்தான் சமய முதன்மைச் சட்டத்தையும் (Act of Supremacy), மத ஒருமைச் சட்டத்தையும் (Act of Uniformity), இரவலர் சட்டத்தையும் (Poor Law) இயற்றியது. சமயம், சமுதாயம், வாணிபம் ஆகிய பல துறைகளிலும் ஏராளமானச் சட்டங்களை டியூடர்கள் பாராளுமன்றத்தின் துணை கொண்டே இயற்றினர். அதனால் டியூடர்கள் காலத்தில் பாராளுமன்றத்தின்

அனுபவம் வளர்ந்தது. ஆட்சித் துறையிலும் அதற்கு நன்கு பயிற்சி ஏற்பட்டது. நல்ல பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்ற பாராளுமன்றத்திற்கு அதிகார ஆசை ஏற்பட்டது. அத்தகைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ள 1588 ஆம் ஆண்டிற்குப் பிறகு பாராளுமன்றம் எலிஸபெத் இராணியாரின் அதிகாரத்திற்கு சவால்விட ஆரம்பித்தது. எலிஸபெத் இராணியார் தனக்கு விருப்பமானவர்களுக்கு ஏகபோக உரிமை (Monopoly) வழங்குவதைப் பாராளுமன்றம் எதிர்த்தது. அதனால் வேறுவழியின்றி எலிஸபெத் இராணியார் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கு இணங்கினர். அதுதான் பாராளுமன்றத்தின் முதல் வெற்றியாக அமைந்தது. அதிலிருந்து பாராளுமன்றத்தின் அதிகாரம் வளரத் தொடங்கியது. ஆகவே, டியூடர்கள் பாராளுமன்றத்தின் விருப்பத்தை உணர்ந்து, அதோடு கூட்டாக நின்று ஆட்சி செலுத்தினர்.

நாட்டை ஆளுவது அரசரா அல்லது பாராளுமன்றமா என்ற பிரச்சினை டியூடர்கள் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் எழுந்தது. ஸ்டூவர்ட்டுகள் அரியணையில் அமர்ந்தவுடனேயே அப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஸ்டூவர்ட்டு அரசர்கள் பாராளுமன்றத்தைத் தங்களுக்குட்பட்ட ஓர் அடிமையைப் போல் நடத்த விரும்பினர். ஆனல், பாராளுமன்றமோ அரசர்களைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர விரும்பியது. இத்தகைய முரண்பட்ட கருத்தினுல்தான் ஸ்டூவர்ட்டு அரசர்களுக்கும் அவர்களது பாராளுமன்றங்களுக்குமிடையே போராட்டங்கள் ஏற்பட்டன.

2. பொருளாதார நெருக்கடி

ஸ்டூவர்ட்டு அரசர்களுக்கும் அவர்களது பாராளுமன்றங்களுக்கும் இடையே போராட்டங்கள் ஏற்படுவதற்கான ஒரு பொருளாதார நெருக்கடியையும் டியூடர்கள் ஏற்படுத்திவிட்டுச் சென்றனர். நாணயத்தின் மதிப்பு டியூடர்கள் காலத்தில் வேகமாகக் குறைந்துகொண்டே வந்தது. மெக்ஸிகோ, பெரு போன்ற வெளிநாட்டு சுரங்கங்களிலிருந்து தங்கமும் வெள்ளியும் வணிகர்களால் ஏராளமாக இங்கிலாந்திற்குள் கொண்டுவரப்பட்டதால் வெள்ளி நாணயத்தின் மதிப்புக் குறைந்தது. அதனுல் நாட்டில் விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருந்தன.

விலைவாசிகளின் உயர்வால் பழைய வருவாயைக் கொண்டு அரசாங்கத்தால் நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. அங்கு எப்பொழுதும் பற்றுக்குறை வரவு - செலவுத் திட்டமாகவேதான் அமைந்திருந்தது. திறமையும் அறிவும் ஒருங்கே அமையப்பெற்ற

எலிஸபெத் இராணியாரால்கூட நிலைமையைச் சமாளிக்க முடிய வில்லை. அவருக்கும் பணமுடை இறுதியில் ஏற்பட்டு விட்டது. இருந்த போதிலும் டியூடர்கள் மிகவும் சிக்கனமுள்ளவர்களாத லால் நிலைமையை ஒருவாறு சமாளித்தனர். ஆனால், ஸ்டுவர்ட்டு கள் ஆடம்பரப் பிரியர்கள், சிக்கனம் சிறிதுமில்லாதவர்கள். அதனால் அவர்களுக்குப் பெரிதும் பண நெருக்கடி ஏற்பட்டது. அரசர்களின் செலவுக்கேற்றவாறு பாராளுமன்றம் நிதித்தொகை வழங்க மறுத்து விட்டது. அரசர்களின் பண நெருக்கடியைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு பாராளுமன்றம் குறைகளைக் களையவும் உரிமைகளைப் பெறவும் தலைப்பட்டது. அதனால் கோபமுற்ற ஸ்டுவர்ட்டு அரசர்கள் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு எதேச் சாதிகார முறையில் பணம் திரட்டினர். இதை எதிர்த்து மக்கள் கொதித்தெழுந்தனர். இங்ஙனம் நாட்டில் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடியானது. அரசர்-பாராளுமன்றப் போராட்டத்திற்கு ஓர் அடித்தளமாய் அமைந்துவிட்டது.

3. சமயப் புரட்சி

டியூடர்கள் இங்கிலாந்தில் சமயப்புரட்சி ஒன்றை ஏற்படுத்தி விட்டுச் சென்றனர். அச் சமயப் புரட்சியும் அரசர் - பாராளுமன்றப் போராட்டத்திற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. சமயச்சீர்திருத்த இயக்கத்தின் விளைவாக நாட்டில் கத்தோலிக் கரின் ஆதிக்கம் குலைந்தது. தனிப்பட்ட ஆங்கிலிக்கத் திருச்சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அரசரின் முழு கட்டுப்பாட்டிற்குள் அது கொண்டுவரப்பட்டது. ஆங்கிலிக்கத் திருச்சபையின் மீது அரசர் தனியாணைச் செலுத்துவதைச் சிலர் வெறுக்கலாயினர். அத்தகைய கூட்டத்தினர் பியூரிட்டன்கள் (Puritans) அல்லது தூய்மை வாதிகள் எனப்பட்டனர். இத்தகைய பியூரிட்டன்கள் எலிஸபெத் இராணியார் காலத்தில் ஒரு சிலரே இருந்தனர். எனவே, அவர் களது எதிர்ப்பைப் பற்றி இராணியார் கவலைப்படவில்லை. அத்துடன் அவர்களுக்கு அவர் உரிமையும் வழங்கவில்லை. ஆனால், அத்தகையோரின் எண்ணிக்கை ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் பெரிதும் வளர்ந்தது. ஸ்டுவர்ட்டு அரசரான முதலாம் ஜேம்ஸ் 1603ஆம் ஆண்டில் அரியணையேறியபொழுது அவர்கள் பொது மக்கள் சபையில் பெரிதும் வலிமை பெற்றிருந்தனர். டியூடர்கள் காலத்தில் கிட்டாத உரிமைகள் ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் தங்களுக்குக் கிடைக்கும் என்று அவர்கள் கருதினர். ஆனால், ஸ்டுவர்ட்டு அரசர்கள் பியூரிட்டன்களையும் அவர்களது கொள்கை களையும் வெறுத்தனர். அதனால் பியூரிட்டன்கள், அரசர்களின் பகைவர்களாக மாறினர். பொதுமக்கள் சபையில் அவர்கள் பெரும்பான்மையினராக இருந்ததால், அரசரைப் பலவகையிலும்

அவர்கள் கட்டுப்படுத்த முயன்றனர். நிதித் தொகைகளை அனுமதிக்க மறுத்தனர். ஆகவே, அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே போராட்டம் வலுத்தது.

4. சமுதாயப் புரட்சி

டியூடர்கள் காலத்தில் சமுதாயத்தில் ஏற்பட்ட பெரும் மாறுதலும் ஒரு வகையில் அரசர் - பாராளுமன்றப் போராட்டத்திற்கு ஏதுவாயமைந்தது. நாட்டில் பழைய நிலமானியப் பிரபுக்களை ஒழிக்க டியூடர்கள் ஒரு புதிய பிரபு வர்க்கத்தை ஏற்படுத்தினர். டியூடர்கள் தனியுரிமைகளைத் தங்களின் வேண்டியவர்களுக்கு அளித்து அவர்களைச் செல்வந்தர்களாக்கினர். வாணிபம் செய்யும் உரிமைகளைப் பலருக்கு வழங்கி அதன்மூலம் வணிகச் செல்வந்தர்கள் பலரை அவர்கள் உண்டாக்கினர். மடாலயங்களைக் கலைத்ததன் மூலம் கிடைத்த பெரும் செல்வத்தைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வழங்கி டியூடர்கள் ஒரு புது பணக்கார வர்க்கத்தையே உருவாக்கினர். அத்துடன் நில அமைப்பு முறையின் மூலமாகப் பல நிலப்பிரபுக்கள் தோன்றினர். இத்தகையோரே டியூடர் காலத்தில் பாராளுமன்றத்திலும் தல ஆட்சியிலும் பெரிதும் இடம் பெற்றனர். அதனுல் அவர்களை நம்பி அரசர்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். அங்ஙனம் அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதனுல், அவர்கள் ஆட்சித் துறையில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும், அனுபவமும் பெற்றனர். எனவே, அவர்களிடம் ஒரு தன்னம்பிக்கைத் தோன்றியது. நாட்டை அரசரின் துணையின்றியும் கூடத் தாங்களே ஆள முடியும் என நினைத்தனர். அத்தகைய அவர்களின் நினைப்பே போராட்டத்திற்கு இட்டுச் சென்றது.

5. தெய்விக உரிமைக் கொள்கை

ஸ்டூவர்ட்டுகளின் ஆரம்ப தெய்விக உரிமைக் கொள்கையும், அரசர்–பாராளுமன்றப் போராட்டம் ஏற்படுவதற்கான ஒரு காரணமாகும். ஸ்டூவர்ட்டு வம்சத்தின் முதல் அரசரான முதலாம் ஜேம்ஸ் தெய்விக உரிமைக் கொள்கையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர். அத்துடன் அக் கொள்கையை விவரித்து 'சுதந்திர முடியாட்சியின் உண்மையான சட்டம்' (The True Law of the Free Monarchy) என்ற நூலையும் அவர் இயற்றியவர். 'அரசர்களைக் கடவுள் தான் ஆக்குகின்ருர், மக்கள் அல்ல' என்ற கொள்கையில் பிடிப்புடையவர். பிறந்ததிலிருந்தே அவர் அரசராக இருந்ததால் தர்மைக் கடவுள் தான் அரசாகப் பிறப்பித்தார் என்று நம்பினர். 1616-ஆம் ஆண்டில் இவர் ஸ்டார் சேம்பர் நீதி,

மன்றத்தில் (Court of Star Chamber) ஆற்றிய சொற்பொழிவொன்றில் 'கடவுள் என்ன செய்யக்கூடுமென்பதை மறுத்துரைப்பது நாத்திகம் அல்லது தெய்வ நிந்தனை ஆகும். கடவுளுடைய சொல்லில் வெளிப்படும் விருப்பில் நல்ல கிறித்துவர்கள் மனநிறைவு கொள்ளவேண்டும். ஓர் அரசர் என்ன செய்யக்கூடும் அல்லது சொல்லக்கூடும், அல்லது இதை அல்லது அதை ஓர் அரசர் செய்யக் கூடாதெனவும் மறுத்துரை செய்வது கடுங் குற்றம்" எனக் கூறினர். 'அரசர் வெளியிடும் விருப்பில்தான் சட்டம் இருக்கிறது' எனவும் கூறினர். 'அரசர் இடும் ஆணைகளுக்குப் பாராளுமன்றமும் மக்களும் தடையின்றிக் கட்டுப்பட்டாக வேண்டும்' என்று அவர் வலியுறுத்தவே பாராளுமன்றம் சினங் கொண்டது. தனது உரிமைகளைப் பாதுகாக்க விரும்பிய ஜேம்ஸின் முதலாவது பாராளுமன்றம் தனது சிறப்புரிமைகளை எல்லாம் தொகுத்து 'காப்புரை தாள்' எனும் ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து ஜேம்ஸிடம் வழங்கியது. 'பாராளுமன்றத்துக்கென்று தனிப்பட்ட உரிமைகள் எவையும் கிடையாதென்றும், அப்படி எவையேனும் இருந்தால் அவை அரசராகப் பார்த்து அதற்கு அருள் கூர்ந்து வழங்கியவையே ஆகும்' என்றும் ஜேம்ஸ் கூறினர். 'இந் நிலவுலகிலே மிக்க இறைமை வாய்ந்தது அரசனின் நிலைமையென்றும், அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகளென்றும், அவர்கள் அமர்ந்திருப்பது கடவுளின் அரியாசனமென்றும், ஆகவே பொது மக்கள் சபை மரியாதையோடு அறிவுரை வழங்குவதோடு நிறுத்திக் கொண்டு, அரசாங்கத்தின் முக்கிய அலுவல்களில் தலையிடாமல் இருக்கவேண்டுமென்றும்' என பாராளுமன்றத்தில் ஒரு சொற்பொழிவையே நிகழ்த்தினர். இவருடைய இதே கொள்கையை இவருக்குப் பின் அரியணையில் அமர்ந்த இவருடைய மகனை முதலாம் சார்லஸ் பின்பற்றியதால்தான் பொறுத்திருந்த பாராளுமன்றம் தன் பொறுமையையிழந்து போராட்டத்தில் குதித்தது.

6. முடியாட்சியின் மாறுபட்ட குணவியல்புகள்

முடியாட்சியின் மாறுபட்ட குணவியல்பும் இப் போராட்டத்திற்கு ஒரு காரணமாகும். டியூடர்களைப் போலன்றி, ஸ்டூவர்ட்டுகள் வெளிநாட்டவராகையால் நாட்டினர் மனநிலையை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை. ஆனால் டியூடர்களோ, என்றும் தேசிய விருப்பை மதித்து நடந்தார்கள். ஸ்டூவர்ட்டுகள் அரசியலமைப்பு வளர்ச்சியைக் காண மறுத்தார்கள். மேலும், ஸ்டூவர்ட்டுகள் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தினர்கள். இதற்கெதிராகக் கிளம்பிய பாராளுமன்ற எதிர்ப்புகளுக்கு ஸ்டூவர்ட்டுகள் சாதுரியமின்றித் தம் சிறப்பதிகாரங்களை வரையறை செய்தார்கள்.

பாராளுமன்றமும் சினந்து அதன் சிறப்பதிகாரங்களை வரையறுத்துக் கூறியது. தெய்விக உரிமைக் கோட்பாட்டை டியூடர்களும் பற்றி நின்றார்கள். எனினும், அதை வரையறை செய்யவோ, ஆராயவோ அவர்கள் முற்படவில்லை. மேலும், டியூடர்கள் பாராளுமன்றத்துடன் நட்புறவோடு பழகினார்கள். ஆனால், ஸ்டூவர்ட்டுகள் தெய்விக உரிமைக் கோட்பாட்டிற்கு விளக்கம் கூறிப் பாராளுமன்றத்தையும் மக்களையும் தமக்குப் பணியவைக்க முயன்றார்கள். அத்துடன் அவர்கள் பாராளுமன்றத்தைப் பகைத்துக்கொண்டு அதன் இயல்பான உரிமைகளைக்கூட மீறினார்கள். ஆகவே, வல்லாட்சி, படிப்படியாகச் சட்டவரம்பிற்குட்பட்ட முடியாட்சியாக மாறுபடாமல் ஒரு வன்முறை மோதலில் கொண்டுபோய் விட்டுவிட்டது.

7. வாணிபக் கட்டுப்பாடு பற்றிய மோதல்

ஸ்டூவர்ட்டு அரசர்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் வாணிபக் கட்டுப்பாடு பற்றிய கருத்து வேறுபாடு ஏற்பட்டது. வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதும், வாணிபத்தின் மீது வரி விதிப்பதும் தன்னுடையச் சிறப்பு அதிகாரமாகுமென்று அரசர் வற்புறுத்தினார். இதை வணிகர்கள் பெரிதும் எதிர்த்தனர். ஆனால், வாணிபத்தின் மீது அரசர் வரிவிதிப்பதை நீதிபதிகள் ஆதரித்தனர். அரசர் தனியுரிமைகளைக் குறிப்பிட்ட கம்பெனிகளுக்கு வழங்குவதை மக்கள் எதிர்த்தனர். ஆனால், முதலாம் ஜேம்ஸ் அரசர் தனியுரிமைகளை வழங்குவது தனது சிறப்புரிமையாகுமெனக் கூறி அங்ஙனமே தனியுரிமைகளை வழங்கி வந்தார். வெளிநாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொண்டபோது தங்களின் குறிக்கோள்கள் புறக்கணிக்கப்பட்டனவென்று கூறி வணிகர் சமுதாயம் அரசருக்கெதிராக மாறி பாராளுமன்றத்தை ஆதரிக்கத் தொடங்கியது. ஆகவே பாராளுமன்றத்தின் போராட்டம் மேலும் வலிமை பெற்றது.

8. தேசிய விழிப்புணர்ச்சி

டியூடர்கள் காலத்தில் இங்கிலாந்தில் தேசியம் தோன்றி வளர்ந்தது. தாங்கள் தனி இனத்தவர்களென்றும், பிற நாடுகளுக்குக் கட்டுப்படாமல் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள முடியுமென்றும் ஆங்கில மக்கள் நம்பினர். மேலும் ஆட்சித் துறையில் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ளவும் விரும்பினர். அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு டியூடர்கள் நடந்து கொண்டனர். ஆனால், ஸ்டூவர்ட்டுகள் ஆங்கில மக்களின் இத்தகைய சுயாட்சி வேட்கையைப் புறக்கணித்தனர். மக்களின் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் புறம்பாக ஸ்டூவர்ட்டுகள் நடந்து

கொண்டனர். ஆங்கில மக்களால் வெறுக்கப்பட்ட கத்தோலிக்க கோட்பாடுகளை அவர்கள் ஆதரித்தனர். ஆங்கில மக்களால் வெறுக்கப்பட்ட கத்தோலிக்க நாடுகளான ஸ்பெயின், ஃபிரான்சு போன்ற நாடுகளோடு நட்புறவு கொள்ள அவர்கள் முற்பட்டனர். எனவே, ஸ்டூவர்ட்டு அரசர்களின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறைந்தது. ஆனால், டியூடர் அரசர்கள் ஸ்பெயின் போன்ற கத்தோலிக்க நாடுகளின் வலைக்குள் விழாமல் ஆங்கில மக்களின் உரிமைகளைக் காத்தார்கள். மக்களது விருப்பமும் டியூடர் அரசர்களின் விருப்பமும் ஒன்றெனத் திகழ்ந்தது. ஆகவே டியூடர்கள் ஆங்கில மக்களால் நேசிக்கப்பட்டனர். ஸ்டூவர்ட்டுகள் ஆங்கில மக்களின் எண்ணங்களுக்கு மாறாகச் செயல்பட்டதால் அவர்களின் நன்மதிப்பை இழந்தனர். எனவே அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் பகைமை ஏற்படுவதென்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஸ்டூவர்ட்டுகளின் இத்தகைய விடாப்பிடிக் கொள்கைகளைக் கண்ட ஆங்கில மக்கள் அவர்களைப் பதவியினின்றும் நீக்கினாலொழியத் தங்களது உரிமைகளைப் பெறமுடியாதென்பதை உணர்ந்தனர். அதன் காரணமாகத்தான் 1603ஆம் ஆண்டிலிருந்து 1688ஆம் ஆண்டுவரை ஸ்டூவர்ட்டு அரசர்களுக்கும் அவர்களது பாராளுமன்றங்களுக்கும் ஓயாத போராட்டம் நடைபெற்று வந்தது. அப் போராட்டத்தின் இறுதியில் பாராளுமன்றமே வென்றது. அரசரது சிறப்பதிகாரங்கள் அனைத்தும் குலைக்கப்பட்டன. வரம்பிலா முடியரசு மாய்ந்து வரம்புக்குட்பட்ட முடியரசு (Limited Monarchy) நாட்டில் 1688ஆம் ஆண்டிற்குப் பிறகு நன்கு நிறுவப்பட்டது.

அரசியல் துறையில் இத்தகைய மாற்றம் ஏற்பட்டது போல் சமயத்துறையிலும் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. முதல் இரண்டு ஸ்டூவர்ட்டு அரசர்களின் காலத்தில் அரசர்களை எதிர்த்து பியூரிட்டன்கள் வெற்றிபெற்றனர். ஆகவே அக்காலம் 'பியூரிட்டன் புரட்சிக்காலம்' எனப்படுகின்றது. ஆனால் பின்னைய இரண்டு ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் பியூரிட்டன்கள் ஆதிக்கம் அழிந்து பிராட்டஸ்டென்டுகளின் ஆதிக்கம் நிலைநாட்டப் பட்டது. அக்காலம் 'பிராட்டஸ்டென்டுகள் புரட்சிக்காலம்' எனக் கூறப்படுகின்றது. இறுதியில் கத்தோலிக்கரல்லாத ஏனைய கிறித்துவர்கள் அனைவருக்கும் வழிபாட்டுரிமை வழங்கிய சமயப்பொறை சட்டமும் (Toleration Act) 1689ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் நிலவிய சமய ஒறுப்புக் காரணமாகப்

பல ஆங்கிலேயர் கடல்கடந்துசென்று குடியேற்ற நாடுகளை அமைத்தனர். அதனால் அக்கரை நாடுகளில் ஆங்கில ஆதிக்கம் பரவ ஆரம்பித்தது. அத்துடன் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் அரசர்களிடம் உரிமைச் சாசனம் பெற்ற வியாபாரக் கம்பெனிகள் அயல் நாடுகளோடு வாணிபம் செய்து தாய் நாட்டிற்குப் பெரும் செல்வத்தைக் கொண்டுவந்து குவித்தன. அதனால் நாணயத்தின் மதிப்பு குறைந்து, விலைவாசிகள் உயர்ந்தன. விலைவாசிகள் உயர்வால் சாதாரண மக்கள் வறுமையால் வாடினர். அதோடு பணக்கார வர்க்கம் நாட்டில் தோன்றலாயிற்று. மற்றும் ஸ்டூவர்ட்டுகள் காலத்தில்தான் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒன்றுபட்டன.

இங்ஙனம் வரம்பில்லா வல்லரசு மாறி வரம்புக்குட்பட்ட முடியரசு ஏற்படவும், சமயத்துறையில் போட்டியும் பூசலும் மாறி ஒரே சமயம் நன்கு உறுதியடையவும், பல சமயப்பிரிவினர் வழிபாட்டு உரிமை பெறவும், குடியேற்ற நாட்டு வளர்ச்சி ஏற்படவும் ஸ்டூவர்ட்டு அரசர்கள் வழிவகுத்துவிட்டுச் சென்றனர்.

2. முதலாம் ஜேம்ஸ்
(1603 - 1625)

எலிஸபெத் இராணியார் 1603-ஆம் ஆண்டில் இறந்தவுடன் ஸ்காட்லாந்து அரசரான ஆரும் ஜேம்ஸ் இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் அரசராக முடிசூடப்பட்டார். இதனால் ஸ்காட்லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் இருந்துவந்த பகைமை மாறி நட்பு வளரும் என்ற நல்லெண்ணம் மக்களிடையே நிலவியது. முதலாம் ஜேம்ஸ் அரசர் நன்கு படித்தவர்; பல புத்தகங்களை எழுதியவர்; நுண்ணறிவும் சாதுர்யமும் ஒருங்கே அமையப் பெற்றவர். தன்னைப் பற்றியும் தன் அறிவைப்பற்றியும் தனக்குத்தானே பெருமிதமாக நினைப்பவர். தன்னைப்பற்றியோ, தான் எழுதிய நூல்களைப்பற்றியோ திறனாய்வுச் செய்வோரை இவருக்குப் பிடிக்காது. அறிவிலும் ஆற்றலிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமிருக்க முடியாது என நினைத்தார். அதனால்தான் ஃபிரான்ஸு நாட்டரசர் நான்காம் ஹென்ரி இவரை 'கிறித்துவ உலகிலேயே ஓர் அறிவுமிக்க முட்டாள்' (the wisest fool in Christendom) என அழைத்தார்.

முதலாம் ஜேம்ஸ் அரசர் அரசியலைப் பற்றியும் அரசர்கள் நிலையைப் பற்றியும் ஒரு குறிப்பிட்ட எண்ணத்தைப் பெற்றிருந்தார். தெய்வீக உரிமைக் கொள்கையில் (Divine Right Theory) பற்றுடையவராய் இருந்தார். அத்துடன் அக் கொள்கையை விவரித்து 'சுதந்திர முடியாட்சியின் உண்மையானச் சட்டம்' (The true Law of the Free Monarchy) என்ற நூலையும் இயற்றியவர். 'அரசர்கள் தெய்வத்தால் ஆக்கப்பட்டவர்கள். அந்தத் தெய்வத்திற்கு மட்டும் தான் அவர்கள் பொறுப்பானவர்கள். அவர்களுடைய செயல்களில் தவறைச் சுட்டிக் காட்டவோ அல்லது அவர்களது அதிகாரத்திற்கு சவால்விடவோ மக்களுக்கு உரிமையில்லை' என்ற தத்துவத்தை இங்கிலாந்து நாட்டு மக்களிடையேயும் கூறி வந்தார். ஸ்காட்லாந்து நாட்டு மக்கள் பின்னிலையில் இருந்த காரணத்தினால் இவருடைய இந்தக் கருத்தைப் பொறுத்துக்கொண்டார்கள்.

ஆனால் இங்கிலாந்து நாட்டு மக்கள் இக் கருத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அரசரும் நாட்டுச் சட்டங்களுக்குப் பணிந்துதான் செயல்பட வேண்டும் என்ற கருத்தைக்

கொண்டிருந்தனர். இத்தகைய மாறுபட்ட கருத்துகளினுல்தான் அரசருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே பெரும் போராட்டம் நிலவியது.

முதலாம் ஜேம்ஸ் அரசரும் சமயமும்

ஸ்காட்லாந்தில் பிரஸ்பிடீரிய திருச்சபை அரசியலில் பெருஞ் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தது. அரசரையே குறை கூறும் அளவுக்கு அச் சபை உரிமை பெற்றிருந்தது. பிரஸ்பிடீரியர்கள் (Presbyterian) சமயத்துறையில் ஜனநாயகத்தையும் உரிமைகளையும் விரும்புபவர்கள். இயேசுதான் நாட்டின் அரசர் என்றும் ஜேம்ஸ் எல்லோரையும் போல் ஒரு சாதாரணக் குடிமகனே என்றும் கூறிவந்தனர். இந்த பிரஸ்பிடீரிய திருச்சபையின் அமைப்பில் பிஷப்புக்களின் ஆட்சி கிடையாது. ஏற்றத்தாழ்வு கிடையாது. ஸினுட் (Synod) என்ற குருமார் சபையே சமய நிர்வாகத்தை நடத்தி வந்தது. இதன் காரணமாக ஜேம்ஸ் இந்த மத அமைப்பின்மேல் வெறுப்படைந்திருந்தார். அதே சமயத்தில் இங்கிலாந்தில் மத அமைப்பிற்கு அரசரே தலைவர். அந்த அமைப்பை நிர்வகிக்கும் பிஷப்புக்களை அரசரே நியமித்தார். அந்த பிஷப்புக்கள் அரசனைத் தெய்வத்தின் பிரதிநிதி எனக் கூறி வந்தனர். அதனுல் இங்கிலாந்தின் மத அமைப்பு ஜேம்ஸ் அரசருக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்நிலையில்தான் முதலாம் ஜேம்ஸ் அரசராக இங்கிலாந்துக்குள் நுழைந்தார்.

அப்பொழுது இங்கிலாந்தில் மூன்றுவிதமான மதப்பிரிவுகள் இருந்தன. (1) ஆங்கிலிக்கன் மதப்பிரிவு. (2) பியூரிட்டன் மதப்பிரிவு (Furitan) (3) கத்தோலிக்க மதப்பிரிவு (Catholics). ஆங்கிலிக்கன் மதப்பிரிவு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. அரசனே மதத்தின் தலைவன் என்ற கொள்கையைப்பின்பற்றுவது. பியூரிட்டன் மதப்பிரிவைச் சார்ந்தவர்கள் சமயத்துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும், ஜனநாயகமும் உரிமைகளும் சமயத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும், ஆங்கில மத அமைப்பு சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும் கருதுபவர்கள். கத்தோலிக்க மதப்பிரிவைச் சார்ந்தவர்கள் ஆங்கிலேய மத அமைப்பை வெறுத்தவர்கள். அவர்களில் பலர் திருக்கோயில்களுக்குச் செல்வதில்லை. வழிபாடுகளிலும் கலந்து கொள்வதில்லை அத்தகையோருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் போப்பாண்டவரின் தலைமையை விரும்புபவர்கள். மேற்சொன்ன மூன்று பிரிவினரில் ஒவ்வொருவரும் ஜேம்ஸ் தங்களையே ஆதரிப்பார் என எண்ணினர். 'ஸ்காட்லாந்து பிரஸ்பிடீரிய மதச் சூழ்நிலையில்

வளர்ந்தவராதலால் ஜேம்ஸ் தங்களையே ஆதரிப்பார் என பியூரிட்டன்களும் (Puritans), கத்தோலிக்க மேரி அரசியின் புதல்வராதலாலும், மேரியை ஆதரித்ததின் காரணமாய் கத்தோலிக்கர்கள் எலிஸபெத் இராணியால் அனுபவித்த இன்னல்களை நேரில் அறிந்தவராதலாலும் ஜேம்ஸ் தங்களையே ஆதரிப்பார் என கத்தோலிக்கர்களும் எண்ணினர். ஆங்கிலிக்கன்கள் தங்களது மத அமைப்பு அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகையாலும், அரசனை அவர்கள் தலைவராகப் போற்றியதாலும், தங்களையே அவர் ஆதரிப்பார் என எண்ணினர்.[1]

ஜேம்ஸ் அரசர் லண்டன் வரும்வரை கூட காத்திருக்க முடியாமல், ஸ்காட்லாந்திலிருந்து வந்துகொண்டிருந்த பொழுதே வழியில் அவரை இடைமறித்துத் தங்கள் குறைகளை நீக்கும்படி 'ஆயிரவர் விண்ணப்பம்' (Millenary Petition) என்ற பத்திரத்தை பியூரிட்டன்கள் நீட்டினர். அதில் சாதாரண கோரிக்கைகள்தான் இடம் பெற்றிருந்தன. ஆங்கிலிக்கன் மத அமைப்பில் சில சாதாரணச் சீர்திருத்தங்கள் தான் செய்ய வேண்டுமெனக் கோரினர். எனினும் அக் கோரிக்கைகளை நன்கு ஆராய்ந்த பின்னர் முடிவு கூறுவதாகச் சொல்லிவிட்டார். அக் கோரிக்கைகள் மிகவும் முக்கியமானவை அல்ல, அவைகளைக்கவனிக்காமல்விட்டிருக்கலாம். அல்லது முடிவு எடுக்கக் காலம் தாழ்த்தியிருக்கலாம். ஆனால் முதலாம் ஜேம்ஸ் அரசர் அக் கோரிக்கைகள் மீது முடிவெடுக்க 1604ஆம் ஆண்டில் 'ஹாம்ப்டன் கோர்ட் மகாநாடு' (Hampton Court Conference) என்ற ஓர் ஆலோசனைச் சபையைக் கூட்டினர். அதில் விட்கிப்ட் (Whitgift) மற்றும் எட்டு ஆங்கிலிக்கன் பிரதிநிதிகளும், ஜான்ரேனுல்ட்ஸ் (John Reynolds), ஜான் நியூஸ்டப்ஸ் (John Knewstubs) மற்றும் சில பியூரிட்டன்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஜான் ரேனுல்ட்ஸ் பேசும் போது 'பிரஸ்பிடீரிய சினட் (Presbyterian Synod) போன்ற தொழுவோர் பிரதிநிதிகளடங்கிய சபையைக் கலந்தாலோசித்தப் பிறகே ஆங்கிலேய பிஷப்புகள் செயல்பட வேண்டும்' என்று கூறினர். 'பிரஸ்பிடீரிய' என்ற சொல்லைக் கேட்டவுடனே ஜேம்ஸ் கொதித்தெழுந்தார். பிரஸ்பிடீரிய சபை தமக்குச் செய்த கொடுமைகளை எண்ணிப்பார்த்தார். உடனே பியூரிட்டன்கள் யாவரும் ஆங்கிலிக்க மதச் சபைக்கு ஒத்துப் போக வேண்டுமென்றும், அங்ஙனம் செய்யாதவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்றும் கோபத்துடன் ஜேம்ஸ் கூறிவிட்டு மகாநாட்டை விட்டு வெளியேறினர். பின்னர் மாநாடு முடிந்தது. ஆங்கிலிக்கன்கள் அரசரைப் புகழ்ந்தனர். கடவுள்தான் அரசரை அவ்வாறு பேச வைத்தது எனக் கூறினர்.

1 பிரிட்டன் வரலாறு, கி. ர. அனுமந்தன்.

பியூரிட்டன்கள் அரசரின் நிலையான எதிர்க்கட்சியினராக மாறினர். அதனால் பாராளுமன்றத்திற்கும் அரசருக்குமிடையே பெரும் பகை ஏற்பட்டுவிட்டது.

கத்தோலிக்கரிடம் முதலாம் ஜேம்ஸ் அரசர் ஓரளவு பரிவு காட்டினார். எலிஸபெத் காலத்து 'தண்டனைச் சட்டங்களின் கடுமையை அவர் தளர்த்தினார். சிறையிலிருந்த பல கத்தோலிக்கர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுக்குத் தொழுகைச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால் கத்தோலிக்கர்கள் மனம்மாறி ஆங்கிலிக்கன் மத அமைப்பை ஏற்றுக் கொள்வார்கள் என ஜேம்ஸ் எண்ணினார். அதற்கு மாறாக அதுவரை மறைவாகத் தொழுகை நடத்திவந்தக் கத்தோலிக்கர்கள் வெளிப்படையாக உலவினர். வெளிநாட்டிலிருந்தும் பல கத்தோலிக்க குருமார்கள் இங்கிலாந்துக்குள் புகுந்தனர். பலர் தங்களை இதயபூர்வமான கத்தோலிக்கர்கள் எனக் கூறிக்கொண்டனர். இதன் காரணமாக அவர்களின் எண்ணிக்கை பெருகியது. இதைக் கண்ட அரசர் திடுக்கிட்டார். பாராளுமன்றத்திலும் வெளியிலும் எதிர்ப்பு கிளம்பியது. உடனே ஜேம்ஸ் கத்தோலிகர்கள்பால் தாம்கொண்ட கொள்கையை மாற்றிக் கொண்டார். கத்தோலிக்கக் குருமார்களை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்திரவிட்டார். ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் தண்டிக்கப்பட்டனர். இதையறிந்த கத்தோலிக்கர்கள் அரசரையும் அரசரின் மனம்மாறக் காரண மாயிருந்த பாராளுமன்றத்தையும் வஞ்சம் தீர்க்க எண்ணமிட்டனர். அதற்காக இரகசியமாய்ச் சதித் திட்டங்களைத் தீட்டினர். முதலாவதாக 1603ஆம் ஆண்டில் ஒரு சதித் திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி முதலாம் ஜேம்ஸ் அரசரைக் கடத்துவது, அவர் இடத்தில் ஸ்பெயின் நாட்டு உதவியுடன் ஏழாம் ஹென்றியின் உறவினரான அரபெல்லா ஸ்டுவர்ட் (Lady Arabella Stuart) என்ற பெண்ணுக்கு முடிசூட்டுவது என்று தீர்மானித்தனர். அரபெல்லா ஸ்டுவர்ட் இங்கிலாந்தில் பிறந்ததால் ஆங்கில கத்தோலிக்கர்களிடம் பிரபல்ய மடைந்திருந்தார். சர் வால்டர் ராலி (Sir Walter Raleigh) என்பவர் இச் சதிக்கு உடந்தையாக இருந்ததினால் தண்டிக்கப் பட்டார். பிறகு ஓரினோக்கோ ஆற்றங்கரையில் (Orinoco River) தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடிப்பதற்காக விடுதலை செய்யப் பட்டார். அவரால் தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடிக்க முடியாததினால் 1618ஆம் ஆண்டில் அவருக்கு தேசத் துரோகக் குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பிறகு இரண்டாவதாக 1604ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கத்தோலிக்கர்கள் ஒரு சதித்திட்டத்தைத் தீட்டினர். அதுதான் 'வெடி மருந்து சதி' (Gun Powder Plot) எனப் பெயர் பெற்றது. இத் திட்டத்தின்படி

பாராளுமன்றம் கூடும்போது அதன் கட்டிடத்தை வெடிமருந்து மூலம் தகர்த்து அரசரையும், அரசரை மனம்மாறச் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழித்து முதலாம் சார்லஸ்சை (Charles I) அரசராக்கி கத்தோலிக்க அரசாங்கத்தை ஏற்படுத்துவது எனத் தீர்மானித்தனர். ராபர்ட் கேட்டஸ்பி (Robert Catesby) என்பவர்தான் இச் சதிக்குத் தலைமையானவர். இவருடன் கைஃபாக்ஸ் (Guy Fawkes) என்பவரும் மற்றும் சிலரும் சேர்ந்துகொண்டனர். அவர்கள் பிரபுக்கள் சபையின் ஓர் அறைக்கு பக்கத்துவீட்டிலிருந்து பாதாளச் சுரங்கப்பாதையை வெட்டினர். அந்த அறையில் இரண்டு டன் (Two Tons) வெடி மருந்து திணிக்கப்பட்டது. இந்த சதிக்காரர்களில் ஒருவர் இதைப்பற்றி ஒரு கத்தோலிக்க பிரபுவிடம் கூற, அவர் பிரபுக்கள் சபையில் உள்ள தன் நண்பருக்குத் தெரிவிக்க, அச் செய்தி செசில் பிரபு (Lord-Cecil) வுக்கு உடனே அறிவிக்கப்பட்டது. சதியில் வெடி மருந்து பயன்படுத்தப்படக்கூடும் என்ற ஐயத்தின் பேரில் பாராளுமன்றத்தின் பாதாள அறைகள் சோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அப்பொழுது அங்கு கைஃபாக்ஸ் என்பவன் கைது செய்யப்பட்டான். பிறகு சதியினர் யாவரென்று கண்டுபிடிக்கப்பட்டது. கைஃபாக்ஸ் தூக்கிலிடப்பட்டான். கேட்டஸ்பியும் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இங்ஙனம் கத்தோலிக்கர்கள் செய்த சதிகள் பயனற்றுப் போயின. இச் செயல்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் நற்பெயருக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. கத்தோலிக்கர் மீதிருந்த கருணை ஜேம்ஸின் மனத்தை விட்டகன்றது. அவர்கள்பால் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டன. பலர் சிறைப்பட்டனர். 'அரசனைப் பதவியினின்றும் நீக்கப் போப்புக்கு உரிமை கிடையாது' என்ற சபதத்தை எடுக்கும்படி ஒவ்வொரு கத்தோலிக்கரும் வற்புறுத்தப்பட்டனர். இவ்வாறு முதலாம் ஜேம்ஸ் அரசர் காலத்தில் இங்கிலாந்தின் சமயத்துறையில் பல குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்பட்டன. அதன் காரணமாய் சமயத்துறையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த விரும்பிய முதலாம் ஜேம்ஸ் அரசரின் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது.

முதலாம் ஜேம்ஸ் அரசரும் பாராளுமன்றமும்

'பணிவடக்கத்தோடு சாணப்பட்ட ஏழாம் ஹென்றியின் பாராளுமன்றம் எலிசபெத்தின் காலத்தில் முணுமுணுக்கத் தொடங்கி, ஜேம்ஸின் காலத்தில் புரளி செய்கின்ற பாராளுமன்றமாகி, முதலாம் சார்லஸ் காலத்தில் கலகம் செய்யும் பாராளுமன்றமாக மாறியது' என பேஜ்ஹாட் (Bagehot) குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணமென்ன? டியூடர்கள் காலத்தில் தங்களுடைய உரிமைகளைப்பற்றி

அறியாத மக்கள் முதலாம் ஜேம்ஸ் அரசருடைய காலத்தில் அவைகளைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். இத்தகைய சிந்தனைக்கு வித்திட்டவர்கள் டியூடர்கள்தான். சிந்திக்கத் தொடங்கிய மக்கள் தங்கள் உரிமைகளுக்காக அரசரோடு போராடவும் தயாரானார்கள். அதன் விளைவே அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் ஏற்பட்ட போராட்டமாகும்.

'அரசர்கள் கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள். அந்தக் கடவுளுக்குத்தான் அவர்கள் பொறுப்பானவர்கள். மக்களுக்கு அல்ல. அவர்களை எதிர்க்கும் மக்கள் தேசத்துரோகிகள் மட்டுமல்லாமல் கடவுளையே எதிர்க்கும் குற்றவாளிகளும் ஆவார்கள்' என்ற தெய்விக உரிமைக் கொள்கையில் (Divine Right Theory) நம்பிக்கை கொண்டிருந்த முதலாம் ஜேம்ஸ் அரசர், பாராளுமன்றம் தன் சொல்படி நடக்கும் என்ற எண்ணத்தில் இருந்தார். ஆனால் சீக்கிரமே தன் எண்ணம் எவ்வளவு தவறு என்பதை அவா உணர்ந்து கொண்டார்.

முதல் பாராளுமன்றம்

ஜேம்ஸ் அரசர் தமது முதலாவது பாராளுமன்றத்தை 1604 ஆம் ஆண்டில் கூட்டினார். அரசரின் உண்மையான நிலை என்ன? பாராளுமன்றத்தின் உரிமைகள் என்னென்ன? அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? என்பவைகள் பற்றி விரிவான விவாதம் நடைபெற்றது. ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தவுடனே தனியாணைப் பேரறிவிப்பு (Prerogative Proclamation) மூலம் சட்டப் பாதுகாப்பற்றவர்கள் (Outlaws) பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவர்கள் என அறிவித்தார். இந்த அறிவிப்பு பாராளுமன்றத்தின் உரிமைகளில் தலையிடுவதாகும் என யாவரும் கருதினர். சர் பிரான்சிஸ் காட்வின் (Sir Francis Godwin) என்பவர் பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசரின் தனியாணைப் பேரறிவிப்பின்படி இவருடைய தேர்தல் செல்லாது என அறிவிக்கப்பட்டு அத்தொகுதியில் மறுதேர்தல் நடத்தப்பட்டு ஃபார்ட்டஸ்க் (Fortesque) என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுமக்கள் சபை (House of Commons) இச் செயலை வன்மையாகக் கண்டித்தது. அத்துடன் காட்வின் (Godwin) அவர்களை வரவழைத்துப் பொதுமக்கள் சபையில் உறுப்பினராக அமரும்படிக் கட்டளையிட்டது. உடனே அரசர் குறுக்கிட்டு 'நீங்கள் பெற்றுள்ள சலுகைகள் என்னிடமிருந்து பெற்றவைகளாகும். அவைகளை எனக்கெதிராகவேப் பயன்படுத்துவீர்கள் என நான் எதிர்பார்க்கவில்லை' என உருக்கமாகக் கூறினார். பாராளுமன்றத் தேர்தலுக்கு நிற்கும் உறுப்பினர்களின் தகுதிகளை

நிர்ணயித்தல் தேர்தல் வழக்குகளில் தீர்ப்புக் கூறல் போன்ற உரிமைகள் பாராளுமன்றத்திற்கே உரியது எனப் பாராளுமன்றம் வாதாடியது. அதனுல் இந்த வழக்கு சான்சரி நீதிமன்றத்தின் (Chancery Court) தீர்ப்புக்கு விடப்பட்டது. இந் நீதிமன்றம் இரண்டு தேர்தல்களையும் ரத்து செய்துவிட்டு மூன்ருவது தேர்தல் நடத்தும்படி ஒரு கட்டளையைப் பிறப்பித்தது. இத்தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு ஒரு வெற்றியெனக் கருதப்பட்டது. அத்துடன் பாராளுமன்றத் தேர்தல் பற்றிய வழக்குகளில் தீர்ப்பு கூறும் உரிமை பாராளுமன்றத்தின் உரிமையாகவும் கருதப்பட்டது.

முதல் பாராளுமன்றத்தைத் தொடங்கி வைத்த ஜேம்ஸ், முடியாட்சியின் உண்மையான கோட்பாட்டை வெளியிட்டார். அரசரின் இக் கோட்பாட்டை எதிர்க்கும் வகையில் ஜேம்ஸின் முதலாவது பாராளுமன்றம் தனது சிறப்புரிமைகளை எல்லாம் தொகுத்து 'காப்புரைத்தாள்' (A Form of Apology) என்னும் ஒரு பத்திரத்தை அரசரிடம் கொடுத்தது. பாராளுமன்றத்தில் யாதொரு கட்டுப்பாடுமின்றிக் கருத்துக்களை எடுத்துரைக்கும் உரிமை, தன் உறுப்பினர்களைத் தடையின்றித் தேர்ந்தெடுக்கும் உரிமை, பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெறும் போது சிறையிடப்படா உரிமை ஆகியவைகள் வழிவழியாகப் பாராளுமன்றம் பெற்றுவந்த உரிமைகள் ஆகும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவைகளை ஜேம்ஸ் அரசர் ஏற்க மறுத்தார். அத்துடன் பாராளுமன்றத்துக்கென்று தனிப்பட்ட உரிமைகள் எதுவும் இல்லையென்றும், அப்படி எவையேனுமிருந்தால் அவை அரசராகப் பார்த்து அதற்கு வழங்கியவை யென்றும், இவ்வுலகில் அரசரின் இறைமை நிலையானதென்றும், அவர் கடவுளின் பிரதிநிதி என்றும், அவர் அமர்ந்திருப்பது கடவுளின் அரியாசனமென்றும் கூறி, பொதுமக்கள் சபையானது அரசருக்கு மரியாதையோடு அறிவுரை வழங்குவதோடு நிறுத்திக் கொள்ளவேண்டுமன்றி அரசாங்கத்தின் அலுவல்களில் தலையிடக் கூடாது என்றும் ஜேம்ஸ் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினுர். ஆனுல் பாராளுமன்றம் ஜேம்ஸின் கருத்தை எதிர்த்தது. அத்துடன் நாட்டின் முக்கிய பிரச்சினைகளை விவாதிக்கும் உரிமை பாராளுமன்றத்தின் வழிவழியாக வந்த மிகப்பழமையான உரிமை என்றும் வாதாடியது. எனவே, பொதுமக்கள் சபை முன்னிகழ்வையொட்டித் தன் நிலையை வலியுறுத்தியது. அத்துடன் வரலாறு, வழக்காறு, மரபு, சட்டம் ஆகியவைகளின் சான்றுகளைக் கொண்டு தன் உரிமைகளுக்காகப் போராடியது.

ஜேம்ஸ் ஸ்காட்லாந்திலிருந்து வந்தவராகையால் ஸ்காட்லாந்தையும் இங்கிலாந்தையும் இணைத்துவிட எண்ணினுர். இந்த இணைப்பு முறையை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. இது

நாடுகளிடையே தடையிலா வாணிகம் (Free Trade) நடைபெறலாம் என்றும், ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தபின் பிறந்த ஸ்காட்லாந்தியரெல்லாம் இங்கிலாந்தின் குடியுரிமையைப் (Naturalisation) பெறலாம் என்றும் அக்குழு சிபாரிசு செய்தது. இச்சிபாரிசுகளைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆனால் ஜேம்ஸ் பொதுச்சட்ட நீதிமன்றங்களை (Common Law Courts) ஏற்படுத்தி அதன் மூலம் தன் விருப்பத்தை ஓரளவு நிறைவேற்றிக் கொண்டார்.

பாராளுமன்றத்திற்கும் அரசருக்குமிடையே நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்காகவும் போராட்டம் நிலவியது. அமெரிக்காவிலிருந்து தங்கம் வந்து குவிந்ததால் பணத்தின் மதிப்புக் குறைந்து நாட்டில் விலைவாசிகள் உயர்ந்தன. அதன் காரணமாய் நிருவாகத்தில் நிதிச்சிக்கல் ஏற்பட்டது. அதே சமயத்தில் ஜேம்ஸ் அரசரும் சிக்கனமாய் வாழத் தெரியாதவர். அவர் வருடத்திற்கு 500,000 பவுன் முதல் 600,000 பவுன்வரை செலவழித்தார். அதனால் வருடத்திற்கு 50,000 பவுன் முதல் 150,000 பவுன் வரை பற்றுக்குறை ஏற்பட்டது. இதை ஈடுசெய்ய வணிகத்தை முறைப்படுத்தும் உரிமையைப் பயன்படுத்தி தம் நிலையைச் சரிக்கட்டலாமென உறுதியோடு அரசர் இருந்தார். அதன்படி 1606 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்களின்மீது காப்புவரி (Tariff) விதிக்கக் கட்டளையிட்டார். பழைய நிலமானியக் கட்டணங்களை வசூலிக்க முற்பட்டார்.

பாராளுமன்றத்தின் இசைவின்றி 1606 ஆம் ஆண்டில் இறக்குமதிப் பொருள்களின் மீது ஒரு டன்னுக்கு 5 ஷில்லிங்கு வீதம் ஒரு காப்பு வரியை விதித்தார். ஏற்கனவே இருந்த வரியோடு இதுவும் சேர்த்து வசூலிக்கப்பட்டதால் இது இடுவரி (Imposition) யெனப் பெயர் பெற்றது. ஜான் பேட் (John Bate) என்ற வணிகர் 1606 ஆம் ஆண்டில் அதிகப்படி வரியைக் கொடுக்க மறுத்தார். பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இவ்வரி விதிக்கப்பட்டதால், இது செல்லாது என பேட் வாதித்தார். நிதித்துறை நீதிமன்றத்தில் (Exchequer Court) இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்விதம் அதிகப்படியான வரிபோடும் முறை டியூடர்கள் காலத்திலிருந்தே இருந்து வருவதை நீதிபதிகள் முன் நிகழ்வு (Precedents) ஆதாரங்களாக எடுத்துக் காட்டி அரசருக்குச் சாதகமாய்த் தீர்ப்புக் கூறினர். அரசர் இத்தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமலேயே

மேலும் பல வரிகளை விதித்தார். அதனால் 1610-ல் கூடிய பாராளுமன்றம் இவ்வாறு வரிவிதிக்கும் முறையைக் கண்டித்தது. நிதித்துறையில் கட்டுப்பாடுகளை விதிக்கமுடியாத நிலை உருவானால் அரசரைக் கட்டுப்படுத்த இயலாதென்பதைப் பாராளுமன்றம் உணர்ந்தது. அத்துடன் பாராளுமன்றத்தின் அனுமதியின்றிச் சுங்கவரிகள் போடுதல் சட்ட விரோதமெனப் பாராளுமன்றம் விவாதித்தது.

இதற்கிடையில் சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டார். இச் சமரச ஏற்பாடு 'பெரும் ஒப்பந்தம்' (Great Contract) எனப் பெயர் பெற்றது. இதன்படி நிலமானிய முறை வரிகளை அரசர் வசூலிப்பதை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக 200,000 பவுன்களை மொத்தமாகப் பாராளுமன்றம் அரசருக்கு வழங்க வேண்டும் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தம் செயற்பாட்டிற்கு வரவில்லை. அதற்குள் பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் பூசல் அதிகரித்துவிட்டது. மேலும் சமயத்தில் பல மாறுதல்களைச் செய்ய வேண்டி, அரசரைப் பாராளுமன்றம் கோரியதால் அரசர் ஆத்திரம் அடைந்து 1611-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு இனி, பாராளுமன்றத்தைக் கூட்டக் கூடாது என முடிவெடுத்தார்.

இரண்டாவது பாராளுமன்றம்

ஜேம்ஸ் அரசரின் இரண்டாவது பாராளுமன்றம் 1614-ஆம் ஆண்டில் கூட்டப்பட்டது. இப் பாராளுமன்றத் தேர்தலில் அரசரின் ஆட்கள் தோற்கடிக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசரின் செயல்களைப்பற்றியும், வரிவிதிக்கும் முறைகளைப்பற்றியும் கண்டித்து விவாதித்தனர். இப் பாராளுமன்றம் இரண்டு மாதங்கள் கூட்டத்தொடரிலிருந்தும் ஒரு சட்டத்தைக்கூட இயற்றவில்லை. உடனே இப் பாராளுமன்றத்தையும் ஜேம்ஸ் அரசர் கலைத்து விட்டார். அதனால்தான் ஜேம்ஸின் இரண்டாவது பாராளுமன்றம் ஒரு பயனற்ற பாராளுமன்றமென (Addled Parliament) கூறப் படுகின்றது.

இதற்குப்பின் அரசர் பாராளுமன்றத்தைக் கலந்து கொள்ளாமலேயே ஆட்சி செய்தார். தனியுரிமைகளை விற்பதாலும், இடுவரிகளாலும், நன்கொடைகளாலுமே அவர் பொருள் திரட்டினார். 1612-ம் ஆண்டுவரை ஆட்சி செய்வதில் ஜேம்ஸுக்கு செசில் பிரபு (Lord Cecil) ஆலோசனை கூறிவந்தார். அரசருக்கும் மக்களுக்கும் இடையே பூசல் வலுக்காமல் பார்த்துக் கொண்டார். 1612 ஆம்

ஆண்டில் செசில் பிரபு இறந்தவுடன் ஜேம்ஸ் தம் ஆலோசகர்களைத் தம் விருப்பப்படி நியமித்துக் கொண்டார். தம் ஆலோசகர்களை நியமிப்பதில் அறிவு, ஆற்றல், திறமையுள்ளவர்களை விட பார்ப்பதற்கு இனிய தோற்றமுள்ளவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது.

ராபர்ட் கார் (Robert Carr) 1590-1645.

இங்ஙனம் அரசரின் ஆதரவைப் பெற்றவர்களில் முதன்மையானவர் ராபர்ட் கார் (Robert Carr) என்பவராவார். இவரை 1612 ஆம் ஆண்டில் தமும்டன் அரசர் சேர்த்துக் கொண்டார். இவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர். மிக்க அறிவும் சிறந்த திறமையும் பெற்றவரும் அல்ல. எனினும் எஸ்ஸெக்ஸ் (Essex) பிரபுவின் மனைவியை மணந்து கொண்டதாலும் சாமர்செட் ஏர்ல் (Earl Samerset) என்னும் பட்டம் பெற்றதாலும் இவர் நிலை உயர்ந்தது. இதே நிலையை வெகு நாட்கள் இவரால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் ஒரு கொலை வழக்கில் இவரும் இவருடைய மனைவியும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிய வந்ததால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பக்கிங்ஹாம் கோமகன் (Duke of Buckingham) 1592-1628

ராபர்ட்கார் பிரபுவுக்குப் பிறகு ஜேம்ஸின் ஆதரவைப் பெற்றவர் பக்கிங்ஹாம் கோமகன் ஆவார். இவருடைய இயற்பெயர் ஜார்ஜ் வில்லியர்ஸ் (George Williers) என்பதாகும். இவர் அழகு பொருந்தியவர். மற்றவர்களைக் கவரும் வகையில் பழகுபவர். அதோடு அறிவாற்றலும் திறமையும் பெற்றவர். நல்ல நிருவாகியாகவும், மனத் தைரியம் பெற்றவராகவும், சிந்தித்துச் செயலாற்றும் மனத்திறனைப் பெற்றவராகவும், இருந்தார். இவரை ஜேம்ஸ் முழுமையாக நம்பினர். அதனுல் இங்கிலாந்தில் மிகவும் சக்திவாய்ந்தவராய் மாறினர். பத்து ஆண்டுகள் இங்கிலாந்து இவருடைய ஆட்சியில்தான் இருந்தது எனவும் கூறலாம். ஜேம்ஸ் இறந்தவுடன் முதலாம் சார்லசுக்கும் ஆலோசகராய் இருந்தார். அப்பொழுது இவரைப் பாராளுமன்றமும் பியூரிட்டன்களும் வெறுத்தனர். மக்களின் வெறுப்புக்கும் ஆளானர். சார்லசின் பாராளுமன்றம் இவரைப் பதவி நீக்கம் செய்தபோது இவரைக் காப்பாற்றுவதற்காக சார்லஸ் பாராளுமன்றத்தையே கலைத்து விட்டார். பிறகு 1628 ஆம் ஆண்டில் இவர் கொலை செய்யப்பட்டார்.

ஜேம்ஸ் அரசரும் பொதுச் சட்டமும் (James-I & Common Law)

ஜேம்ஸ் அரசர் காலத்தில் பல பிரச்சினைகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. அரசரின் கோரிக்கைகளுக்குக் கோக் (Coke) என்பவர்

எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியவரானர். இவர் மக்கள் சபையின் (House of Commons) சபாநாயகராக (Speaker) இருந்தவர். இவர் 1594 ஆம் ஆண்டில் எலிஸபெத் காலத்தில் வழக்குரைஞர் நாயகமாக (Attorney - General) இருந்தவர். 1606 ஆம் ஆண்டில் பொது வழக்கு நீதிமன்றத்தின் (Court of Common Pleas) நீதிபதியாக நியமிக்கப்பட்டவர். பிறகு 1613-ல் அரச நீதிமன்றத்தில் முதன்மை நீதிபதியாக அமர்த்தப்பட்டார். அரசரின் விருப்பங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார் என்ற நம்பிக்கை அரசருக்கு இருந்தது. ஆனல் அரசரின் செயலை எதிர்த்து பீச்ஹாம் (Peacham) வழக்கில் தீர்ப்புக் கூறினர்.

இவர் நாட்டில் பொதுச்சட்டம் நிலைத்துநிற்கப் பாடுபட்டார். எல்லாச் செயல்களும் பொதுச் சட்டத்தின் அடிப்படையில்தான் அமைந்திருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினர். நீதிபதிகள் தான் ஒரு சட்டம் செல்லுமா செல்லாதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று கூறினர். ஆனல் பேக்கன் (Bacon) என்ற இவருடைய எதிர்ப்பாளர் 'நீதிபதிகள் சிங்கங்கள் தான் ஆனல் அந்த சிங்கங்கள் அரசருக்குக் கட்டுப்பட்டவைகளே' என்று கூறினர். ஆகவே நீதிபதி கோக் (Coke) அரசரின் எண்ணப்படி நடக்க மறுத்ததால் 1612-ல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். உடனே கோக்கின் போட்டியாளரும், அரசரின் விருப்பப்படி செயல்படுபவருமான பேக்கன் (Becon) என்பவர் நீதித்துறையின் முதன்மை நடுவரானர். பிறகு கோக் 1621-ல் மக்கள் சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆங்கில மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் வீரராகத் திகழ்ந்தார். 'பாராளுமன்றம் தொன்று தொட்டு ஆங்கில மக்கள் அனுபவித்து வந்த உரிமைகளுக்காகத்தான் போராடுகின்றதேயொழிய புதியவைகளுக்காக அல்ல' என வாதாடினர். இவருடைய கூற்றை சர் ராபர்ட் பிலிப்ஸ் (Sir Robert Phillips), பிம் (Pym) போன்ற சட்ட வல்லுனர்கள் பொதுமக்கள் சபையில் (House of Commons) ஆதரித்தனர். இவர் காலத்தில்தான் ஒருமித்த கட்டுப்பாடோடு கூடிய ஓர் எதிர்ப்பு அணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ஜேம்ஸின் வெளிநாட்டுக் கொள்கை

ஜேம்ஸ் அரசரின் வெளிநாட்டுக் கொள்கை அவருடைய சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது[1]. அவர் போரைவிட அமைதியையே விரும்பினர். அத்துடன் தன்னை 'அமைதிகாண் அரசர்' (King of Peace)[2] என்று

[1] The Early Stuarts (1603-1660) by Godfry Davies P. 48

[2] „ „ „ „

அழைக்கப்படுவதை விரும்பினர். அதனல் சிலர் அவரைக் கோழை என்றும், போர் ஏற்பட்டால் தன் உயிருக்கு ஆபத்து என்று அஞ்சுபவர் என்றும் குறை கூறினர். ஆனல் உண்மை யிலேயே ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என அவர் எண்ணினர்.

கத்தோலிக்க நாடுகளுடனும், பிராடெஸ்டெண்டு நாடுகளுட னும் தாம் ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்தினல், ஐரோப்பாவில் நிச்சயமாய் அமைதி ஏற்படும் என எண்ணினர். இந்த எண் ணத்தின் அடிப்படையில்தான் தன் மகள் எலிஸபெத்தை ஜெர்மன் நாட்டு பிராடெஸ்டெண்டு தலைவராகிய பிரடரிக் (Frederick) என் பவருக்கு மணம் முடித்தார். அத்துடன் கத்தோலிக்க நாடாகிய ஸ்பெயினுடன் (Spain) ஒரு உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளவும் முனைந்தார். அதற்காகத் தன் மகன் சார்லஸுக்கு (Charles) ஸ்பெயின் நாட்டு இளவரசியை மணமுடிக்க ஏற்பாடுகள் செய்தார். இதை ஆங்கில மக்கள் எதிர்த்தனர். ஏனெனில் ஒரு கத்தோலிக்கப் பெண்ணை மணந்தால் ஆங்கில நாட்டு அரியணையில் ஒரு கத்தோலிக்கர் அமரும் நிலை ஏற்பட்டுவிடும் என அஞ்சினர். அத்துடன் பிராடெஸ்டெண்டு எதிர்ப்பு பிரச்சாரம் தீவிரமடைந்து விடும் எனவும் கருதினர். மக்களின் இத்தகைய எண்ணங்களைப் பொருட்படுத்தாமல் ஸ்பெயினேடு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளும் வழிகளையே ஜேம்ஸ் பின்பற்றி வந்தார். ஸ்பெயினேடு நல்லுறவுகொண்டு இருந்தால்தான் தன் மகனுக்கு ஸ்பெயின் நாட்டு இளவரசியை மணமுடிக்க முடியும் என்றும், அவ்வாறு திருமணம் நடந்தால் தமக்கு வெகுமானமாக (Dowry) 600,000 பவுன் களாவது கிடைக்கும் எனவும் புத்திசாலித்தனமாக எண்ணினர். ஆனல் இத் திருமணம் நடந்தேற வேண்டுமானல் பல கோரிக் கைகளை ஜேம்ஸ் நிறைவேற்ற வேண்டும் என ஸ்பெயின் நாட்டு மக்களும் மதத் தலைவர்களும் கோரினர். முதலாவதாக இவர் களுக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளைக் கத்தோலிக்கர்களாகப் பாவிக்க வேண்டும். இரண்டாவதாக இக்குழந்தைகளுக்கு வாரிசு உரிமை பாவிக்க (Succession to the throne) அளிக்கப்படவேண்டும். மூன்ருவதாக கத்தோலிக்கர்களைப் பாதிக்கும் சட்டங்களை நீக்க வேண்டும். நான்காவதாகத் திருமண உடன்படிக்கையை இங்கி லாந்து நாட்டுப் பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். ஐந்தா வதாக ஆங்கில கத்தோலிக்கர்களுக்குத் தொழுகை (Worship) சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற பல கோரிக் கைகளை முன் வைத்தனர். ஜேம்ஸ் ஸ்பெயின் நாட்டை திருப்திப் படுத்தும் வகையில் சிறையிலிருந்த 100 கத்தோலிக்க பாதிரி மார்களை விடுதலை செய்தார். அத்துடன் 1618 ஆம் ஆண்டில் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவும் அனுமதியளித்தார்.

இந்நிலையில் 1618 ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டில் ஒரு சமயப்போர் தோன்றியது. அப்போருக்குக் காரணமாய் இருந்தவர் ஜேம்ஸ் அரசரின் மருமகனுகிய பிரடரிக் (Frederick) தான். இந்தப் போர்தான் பொஹீமியர் புரட்சியால் (Bohemian Revolution) ஏற்பட்ட முப்பதாண்டுப்போர் (Thirty years war) எனக் கூறப்படுகின்றது. பொஹீமியர்கள் பிராட்டெஸ்டெண்டு மதத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். ஆனுல் அவர்களை ஆண்டு வந்த அரசர் ஜெர்மன் பேரரசரால் நியமிக்கப்பட்ட ஒரு கத்தோலிக்கர். இக் கத்தோலிக்க அரசருக்குப் பின் இவருடைய சந்ததியினர் இல்லாமற் போகவே மேத்தியாஸ் (Mathias) என்ற ஜெர்மன் பேரரசர் ஃபெர்டினண்டு என்பவரை பொஹீமிய அரசராக நியமித்தார். இவருடைய நியமனத்தை பொஹீமியர்கள் ஏற்றுக் கொள்ளாமல் பிராட்டெஸ்டெண்டு தலைவராகிய பிரடரிக் என்பவரையே ஆகஸ்டு மாதம் 1619 ஆம் ஆண்டில் தங்களின் அரசராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதனுல் ஜெர்மன் பேரரசருக்கும் பிரடரிக்குக்கும் போர் மூண்டது. 1620 ஆம் ஆண்டு வொயிட்ஹில் (White Mountain) என்னும் இடத்தில் பிரடரிக்கின் படைகள் படுதோல்வியடைந்தன. எனவே பிரடரிக் பொஹீமியாவை இழக்க வேண்டி நேர்ந்தது. அதே சமயத்தில் தன் சொந்த நாடாகிய பாலடைனில் (Palatine) ஸ்பெயின் படைகள் புகுந்து கைப்பற்றிக் கொண்டன. ஆகவே ஜேம்ஸின் மருமகன் பிரடரிக் தன் சொந்த நாட்டை இழந்ததோடல்லாமல் பொஹீமியாவை விட்டே ஓடவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இந்நிலையில் ஆங்கில மக்களின் அனுதாபமெல்லாம் பிரடரிக்கின் பக்கமே இருந்தது. ஆனுல் ஜேம்ஸ் அரசரோ தன் மருமகனுக்கு முழு மனதோடு உதவி செய்ய முன்வரவில்லை. தன் மகனுக்கு ஸ்பெயின் நாட்டு இளவரசியை மணமுடிக்கும் முயற்சியிலேயே இருந்தார். இத்துடன் 1620 - ஆம் ஆண்டில் காண்டோமர் (Gondomar) என்ற ஸ்பெயின் நாட்டுத் தூதுவர் மூலம் தன் மருமகனுக்கு பாலடைன் (Palatine) நாட்டைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி ஸ்பேனிய அரசருக்கு வேண்டுகோள் விடுத்தார். அது பயன்படவில்லை. அதனுல் ஆங்கில மக்கள் ஸ்பெயின் மீது போர் தொடுக்க வேண்டும் என வற்புறுத்தினர். ஆனுல் ஜேம்ஸ் அரசரோ ஸ்பெயினேடு மும்முரமாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

ஜேம்ஸின் மூன்ருவது பாராளுமன்றம்

1621 ஆம் ஆண்டு ஜேம்ஸ் அரசர் பாராளுமன்றத்தைக் கூட்டும்படி வற்புறுத்தப்பட்டார். வெளிநாட்டு விவகாரங்களில்

குழப்பநிலை இருந்ததாலும் தமக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டதாலும் வேறுவழியின்றி ஜேம்ஸ் தனது மூன்ருவது பாராளுமன்றத்தைக் கூட்டினர். பொதுமக்கள்சபை ஜேம்ஸின் வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டித்தது. வெளிநாட்டுக் கொள்கை ஒரு கலையென்றும், அதை ஒருசிலரால்தான் புரிந்து கொள்ள முடியுமென்றும், ஆனல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுக் கொள்கையிலுள்ள சிக்கல்களைப் புரிந்து கொள்ளும் திறனில்லை என்றும் கூறி, உங்களுடைய அறிவுக்கெட்டாத ஒரு பொருளைப்பற்றி வெளிப்படையாக ஏன் விவாதிக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சபையில் ஜேம்ஸ் வினவினர். அத்துடன் பாராளுமன்றம் தமது சொந்த குடும்ப விஷயங்களிலும், வெளிநாட்டுக் கொள்கையிலும் தலையிடுவது தவறு என்று எச்சரித்தார். ஆனல் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவருடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் ஐரோப்பிய பிராடெஸ்டெண்டுகளுக்கு உதவி செய்யும் பொருட்டு ஸ்பெயின் மீது போர் தொடுக்க வேண்டும் என ஜேம்ஸ் அரசரை வற்புறுத்தினர். ஸ்பெயினுக்கெதிராகப் பல உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசினர். அப்போது அரசர் உறுப்பினர்களின் கடமைகளைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர். 'அரசின் முக்கியமான பிரச்சினைகளில் தலையிட வேண்டாமென்றும் வெளிநாட்டு விவகாரங்களைப்பற்றி விவாதிக்க வேண்டாமென்றும், உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். அத்துடன் 'இச்சபைக்குள்ள சலுகைகள், உரிமைகள் யாவும் அரசரது கருணையால்தான் அளிக்கப்பட்டனவேயன்றி வேறில்லை என அவர் அச்சபையினருக்கு நினைவூட்டினர். ஆனல் பொதுமக்கள் சபையோ ஜேம்ஸின் கூற்றுக்கு சவால்விடும் விதத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அது எதிர்ப்புத் தீர்மானம் (Protestation) எனப் பெயர் பெற்றது. 'பாராளுமன்றத்தின் உரிமைகள் பழமையானவைகளென்றும், சந்தேகமின்றி அவைகள் ஆங்கில மக்களின் பரம்பரை பரம்பரையாக வந்த பிறப்புரிமைகள் என்றும், இங்கிலாந்தின் எத்தகைய விவகாரங்களைப் பற்றியும் விவாதிக்க பாராளுமன்றத்திற்கு உரிமை உண்டென்றும், கூறும் அத்தீர்மானம் பாராளுமன்ற சஞ்சிகையில் (Parliamentary Journal) பதிவு செய்யப்பட்டது. இதை அறிந்த ஜேம்ஸ் ஆத்திரமடைந்து அச்சஞ்சிகையைக் கொண்டுவரச்செய்து தன் கையாலேயே அத்தீர்மானம் பதியப்பெற்ற ஏட்டைக் கிழித்தெறிந்தார். உடனே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பொது மக்கள் சபையின் உறுப்பினர்களான கோக் (Coke), சர் ராபர்ட் பிலிப்ஸ் (Sir Robert Philips) பிம் (Pym) போன்றவர்கள் 1622 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சிறையிலடைக்கப்பட்டனர்.

1623 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஜேம்ஸின் அனுமதியுடன் சார்லஸ் இளவரசர் பக்கிங்காம் கோமகனுடன் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று திருமணத்திற்காகத் தாம் எந்த தியாகத்தையும் செய்யத் தயார் என்றும், கத்தோலிக்கர்களுக்கெதிராக உள்ள சட்டங்கள் அனைத்தையும் நீக்கி விடுவதாகவும், தமக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கூட கத்தோலிக்கராகச் செய்யப் போவதாகவும் கூறினர். இருப்பினும் ஸ்பெயின் நாட்டவர் இத்திருமணத்திற்குத் தங்கள் ஆதரவைத் தரவில்லை. பக்கிங்காம் கோமகன் இதற்காகச் சினம் கொண்டார். அதே நேரத்தில் லண்டன் மாநகரில் மக்கள் 'சார்லஸ் இளவரசர் ஒரு மணமாகாத பிராடெஸ்டெண்டாக திரும்பி வரவேண்டும்' எனக் கடவுளை வேண்டிக் கொண்டனர். அது போலவே சார்லஸ் இளவரசர் வெறுங்கையுடன் வந்து சேர்ந்தார். இதைக் கண்ட ஆங்கில மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். ஸ்பெயின் மீது வெறுப்புற்ற பக்கிங்காம் கோமகன் இதையறிந்து தன் கொள்கையை மாற்றிக் கொண்டார். ஸ்பெயினுடன் போர் தொடுக்கும்படி ஜேம்ஸ் அரசருக்கு ஆலோசனையும் கூறினர். ஜேம்ஸின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியுற்றது. 1624 ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கெதிராக போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது. தம் மருமகனுகிய பிரடரிக் என்பவருக்கு உதவி செய்ய கவுன்ட் மேன்ஸ்ஃபீல்டு (Count Mansfield) என்பவர் தலைமையில் ஜேம்ஸ் ஆங்கிலப் படைகளை அனுப்பினர். அது பயனில்லாமல் போகவே பிரடரிக் தமது அரியணையில் அமர முடியாமல் போய்விட்டது.

நான்காம் பாராளுமன்றம்

முதலாம் ஜேம்ஸ் அரசரின் நான்காம் பாராளுமன்றம் 1624-ஆம் ஆண்டு பிப்ரவரியில் கூட்டப்பட்டது. இப்பாராளுமன்றம் ஜேம்ஸின் வெளிநாட்டுக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டதால் அரசரோடு ஒத்துழைத்தது. ஸ்பெயினேடு போர் தொடுப்பதற்கு வேண்டிய உதவித் தொகைகளை அரசருக்கு வழங்கியது. இந் நிலையில் ஜேம்ஸ் அரசர் தம் உடல் நலம் நலிந்துகொண்டிருந்ததால் அமைதியை விரும்பிய பாராளுமன்றத்திற்குச் சில குறிப்பிட்ட சலுகைகளை அளித்தார். இப்பாராளுமன்றம் தனியுரிமை வழங்குவதைச் சட்டவிரோதமாக்கியது. அதிகாரிகளை அரசியல்துரோகக் குற்றம் சாட்டி விசாரித்துத் தண்டனை வழங்கும் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தது. ஏகபோகஉரிமையை (Monopolies) தவருகப் பயன்படுத்திய குற்றத்திற்காக சர் கைல்ஸ் மாம்ப் பிசன் (Sir Guiles Mom Peson) என்பவரும் சர் ஃபிரான்ஸிஸ் மிட்ச்சர் என்பவரும் அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, சிறையிடப்பட்டனர். கிரேன்ஃபீல்டு, (Cranfield) மிடில்செக்ஸ் பிரபு (Earl of Middlesex) கருவூலப் பிரபு (Lord Treasuer) போன்றவர்கள்

பொதுநிதியைத் தவருகப் பயன்படுத்தியதாகப் பதவியிழந்தனர். சர் ஜான் பானுவெட் (Sir John Bonuet) என்ற நீதிபதியும் சான்ஸலர் பிரபுவும் (Lord Chanceller) லஞ்ச ஊழலுக்காக அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, பதவியிழந்தனர். இவைகளெல்லாம் பாராளுமன்ற இக்கூட்டத் தொடரின் முக்கிய செயல்களாகும். 1625 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜேம்ஸ் இறந்தார்.

குடியேற்ற நாடுகள் (Colonies)

காலனி ஆதிக்கம் :

முதலாவது ஜேம்ஸ் அரசர் காலத்தில்தான் கடல் கடந்து போய்ப் பல ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் (காலனிகள்) நிறுவப்பட்டன. 1607 ஆம் ஆண்டில் பல ஆங்கிலேயர்கள் விர்ஜீனியா (Virginia) வுக்குச் சென்று தங்கினர். ஜேம்ஸ் அரசரின் நினைவாக ஜேம்ஸ் டவுன் (James Town) என, தாங்கள் முதலில் குடியேறிய பகுதிக்குப் பெயரிட்டனர். அதே ஆண்டில் பெர்முடாஸ்சும் (Bermudas) குடியேற்ற நாடாக்கப்பட்டது (காலனியாக்கப்பட்டது). வர்ஜீனியாவுக்கு வடக்கே மெரிலேண்டிலும் ஒரு குடியேற்ற நாடு (காலனி) ஏற்படுத்தப்பட்டது. 1608 ஆம் ஆண்டில் பியூரிட்டன்கள் இங்கிலாந்தைவிட்டு சமயப் பூசல் காரணமாய் ஹாலந்துக்குச் சென்றனர். பின்னர் அமெரிக்காவுக்குக் குடியேற முடிவு செய்தனர். அவர்களோடு இங்கிலாந்திலிருந்து மற்றும் பலரும் சேர்ந்துகொண்டு 1620 ஆம் ஆண்டில் அட்லாண்டிக் கடலைக் கடந்து மேஃபிளவர். (May Flower) என்ற கப்பலில் அமெரிக்கா சென்று அடைந்தனர். அவர்களுடைய முதல் நகரத்திற்கு பிளிமோத் (Plymoth) எனப் பெயரிட்டனர். இதேபோல் வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் (East Coast of North America) மற்றும் பலர் குடியேற்ற நாடுகளை (காலனிகள்) அமைத்தனர். மற்றும் 1612 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவிலுள்ள சூரத்தில் (Surat) ஒரு தொழிற்சாலையை அமைத்தது. ஆகவே முதலாம் ஜேம்ஸ் அரசர் காலத்தில் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் எதிர்கால ஆங்கில சாம்ராஜ்ஜியத்திற்கு ஓர் அடிக்கல் நாட்டப்பட்டது எனலாம்.

ஜேம்ஸின் ஆட்சிக் கால முக்கியத்துவம் :

டியூடர் காலத்தில் தங்களுடைய உரிமைகளைப் பற்றி உணர்ந்த ஆங்கில மக்கள் முதலாம் ஜேம்ஸின் காலத்தில் அவைகளுக்காகப் போராடினர். அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் நடைபெற்ற

போராட்டத்தில் ஜேம்ஸின் ஆட்சிக் காலம் முதல் கட்டத்தை வகிக்கின்றது. அந்த முதல் கட்டத்திலேயே பாராளுமன்றம் சில உரிமைகளைப் பெற்றது. அத்துடன் இன்னும் பல உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்தையும் ஆரம்பித்து வைத்தது எனக் கூறலாம். இப் போராட்டம் ஒரு இரத்தம் சிந்தாப் போராட்டமாகத்தான் இருந்தது. ஆனால் அங்கு நடைபெற்ற வன்முறைகளைப் பார்க்கும்போது அதற்கு மாறான போராட்டமாக மாறி விடுமோ என்று அஞ்சக்கூடிய நிலைமையை உருவாக்கியிருந்தது. இப்போராட்டத்தினால் பாராளுமன்றத்தின் கவுரவம் சிறிதளவு உயர்ந்தது எனலாம். ஏனெனில் சில பல உரிமைகளை அது பெற்றது. 1. தெய்வீக உரிமைக் கோட்பாட்டைப்பற்றிப் பேசிய ஜேம்ஸ் அரசருக்குத் தக்க வகையில் எதிர்ப்பு தெரிவித்தது. 2. காட்வின் வழக்கிலிருந்து தேர்தல் வழக்குகளைத் தீர்க்கும் உரிமை பாராளுமன்றத்திற்கே உரியது என நிலைநாட்டியது. 3. பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதியை நிர்ணயிப்பதும், அவர்களை ஏற்றுக் கொள்வதும், மறுப்பதும் பாராளுமன்றத்திற்கே சொந்தமான உரிமையென நிலைநாட்டியது. 4. ஏகபோக உரிமை வழங்குவதைச் சட்ட விரோதமாக்கியது. 5. அதிகாரிகளின் மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டி விசாரித்துத் தண்டனை வழங்கும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. 6. இங்கிலாந்தின் எல்லா விவகாரங்கள் பற்றியும் விவாதிக்க, பாராளுமன்றத்திற்கே உரிமையுண்டு என வாதாடியது. 7. அரசரின் வெளிநாட்டுக் கொள்கையைத் திறனாய்வு செய்யும் உரிமையையும் ஓரளவு பெற்றது. 8. அரசரின் ஏகபோக உரிமைகளை விற்றல், நன்கொடை வாங்குதல், இடுவரி விதித்தல், தனியாணைப் பேரறிவிப்பு வெளியிடல்போன்ற முறையற்ற சில தனிச்சிறப்பதிகாரங்களைக் கண்டித்தது.

ஜேம்ஸின் சில கொள்கைகளுக்கு அவர் காலத்தில் எதிர்ப்பிருந்த போதிலும், பிற்காலத்தில் அவைகள் நல்லவைகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஜேம்ஸ் இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் இணைக்க விரும்பினார். ஆனால் அந்த இணைப்பு பிற்காலத்தில் ஏற்பட்டது. ஜேம்ஸின் சமயக்கொள்கை அவர் காலத்தில் பயனளிக்கவில்லையெனினும் ஒரு நூற்றாண்டிற்குப் பின் பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நாம் காணலாம். இங்ஙனம் ஜேம்ஸ் நல்ல பல குறிக்கோள்களைக் கொண்டிருந்த போதிலும் அவைகளைத் திறமையுடன் நிறைவேற்றும் ஆற்றல் அற்றவராக இருந்தார். அத்துடன் அவருக்கு மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்காதது அவரின் துரதிருஷ்டமேயாகும்.

3. முதலாம் சார்லஸ்
(1625-1649)

1625 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ஆம் நாள் முதலாம் ஜேம்ஸ் அரசர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார். இவருடைய மூத்த மகன் ஹென்றி (Henry) இவருக்கு முன்பே இறந்துவிட்டதினுல் இவருடைய இரண்டாம் மகன் முதலாம் சார்லஸ் அரச அரியணையில் அமர்த்தப்பட்டார். அப்பொழுது முதலாம் சார்லஸ் 25 வயதுடைய இளைஞராகத்தான் இருந்தார். இவர் கவர்ச்சியான இனிய தோற்றமுடையவராயிருந்தார். குதிரைச்சவாரி செய்வதிலும், நீந்துவதிலும், டென்னீஸ் ஆடுவதிலும் மிக்க பற்றுடையவராயிருந்தார். சிறுவயது முதல் சமய சம்பிரதாயங்களிலும் சடங்குகளிலும் அதிகப் பற்றுள்ளவராயிருந்தார். ஒரு பிஷப்பாக இருக்கத்தக்க பண்பைப் பெற்றவர். உண்மையிலேயே இவருடைய மூத்த சகோதரன் ஹென்றி இறந்திருக்காவிடில், இவர் கான்டர்பரி (Canterbury) யின் பிஷப்பாகத் தான் வந்திருப்பார். கல்வியறிவும் பற்றும் திறமைகளும் பெற்றிருந்தார். இவருடைய அறிவினுலும், திறமையினுலும், பண்பாலும் பல அறிஞர்களும், கலைஞர்களும் இவர்பால் ஈர்க்கப்பட்டனர். இத்தனை நற்குணங்களிருந்தும் அவரிடம் பல குறைகளும் இருந்தன.

தம் தந்தையைப்போலவே இவரும் யாவரையும் எளிதில் நம்பிவிடும் இயல்புடையவர். நல்லவர்யார், தீயவர்யார் என மனிதர்களை நிதானித்தறியும் திறமை இவரிடம் இல்லை. இவருடைய தந்தை ஜேம்ஸ் தேவைக்கு அதிகமாய்ப் பேசுவார். ஆனுல் சார்லஸ் மிகக் குறைவாகத்தான் பேசக்கூடியவர். அதனுல் இவருடைய மனக் கருத்தைப்பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் கடினம். தம் தந்தையைப் போலவே தெய்வீக உரிமைக் கோட்பாட்டிலும் நம்பிக்கை உடையவராய் இருந்தார். அதனுல் அரச பதவியை மிக மேன்மையாக நினைத்தார். அத்துடன் மக்களது பிரதிநிதிகளையும் அலட்சியம் செய்தார். தம் கொள்கைகளுக்காக முரட்டுப் பிடிவாதமாயிருந்தார். இவருடைய இப்பிடிவாதம்தான் இவரை மக்களின் பகைவனுக மாற்றிவிட்டது.

முதலாம் சார்லஸ் அரசரின் ஆட்சிக்காலத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. முதல் நான்கு வருட ஆட்சி

(1625—1629). இக்காலத்தில்தான் வெளிநாடுகளுடன் போர், அவைகளில் தோல்வி, பாராளுமன்ற அரசர் உறவு பாதித்தல் முதலியன ஏற்பட்டன. 2. 1629 லிருந்து 1640 வரை நடைபெற்ற ஆட்சி. இந்தக் காலத்தில்தான் சார்லஸ் பாராளு-மன்றமின்றி ஆட்சி செய்தார். 3. 1640 லிருந்து 1642 வரை நடைபெற்ற ஆட்சி. இதுதான் குறுகிய, நீண்ட பாராளு மன்றம் நடைபெற்றகாலம். இக்காலத்தில் நிரந்தரமான சில முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 4. 1642 லிருந்து 1649 வரை நடைபெற்ற ஆட்சி. இக்காலத்தில்தான் இரண்டு உள்நாட்டுப் போர்கள் ஏற்பட்டன. 1649-ஆம் ஆண்டில் சார்லஸ் அரசரின் சிரம் துண்டிக்கப்பட்டது.

முதலாம் சார்லஸின் வெளிநாட்டுக்கொள்கை

தம் தந்தை ஜேம்ஸ் அரசர் கடைப்பிடித்துவந்த வெளி நாட்டுக் கொள்கையை சார்லஸ் மாற்றியமைத்தார். அத்துடன் பக்கிங்காம்கோமகனின் கைப்பாவையாக சார்லஸ் இருந்ததால், அவருடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்றவாறே சார்லஸின் வெளிநாட்டுக் கொள்கையும் அமைந்தது. பட்டத்திற்கு வந்த வுடனேயே சார்லஸ் ஸ்பெயினோடு போரிட்டுத் தன் மைத்துன ரான பிரடரிக்கின் நாடான பாலத்தீனை மீட்டுத்தர எண்ணினார். இதற்கிடையில் பக்கிங்காம் கோமகனின் முயற்சியால் சார்லஸுக் கும் பிரெஞ்சு இளவரசி ஹென்றியெட்டா மரியாவுக்கும் (Henrietta Maria) திருமணம் நடைபெற்றது. இவர் நான்காம் (Henry IV) ஹென்ரியின் மகனும் பிரெஞ்சு நாட்டு அரசர் பதின்மூன்றும் லூயி (Louis XIII) யின் தங்கையும் ஆவார். கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த இளவரசியை சார்லஸுக்கு மணமுடித்தால் ஆங்கிலேயர் கள் விரும்பமாட்டார்கள் என நினைத்து பக்கிங்காம் கோமகன் பாராளுமன்றத்தைக்கூட்டு முன்பே திருமணத்தை முடித்து விட்டார். இத்திருமணத்திற்காக சார்லஸுக்கும் பிரெஞ்சு அரசர் பதின்மூன்றும் லூயிக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி இளவரசி மரியாவுடன் வரும் கத்தோலிக்கர்களுக்குத் தொழுகைச் சுதந்திரம் வழங்கவும், ஆங்கிலேய கத்தோலிக்கர்களுக்குத் தண்டனைச் சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கவும் சார்லஸ் ஒப்புக்கொண்டார். கத்தோலிக்க இளவரசியை சார்லஸ் மணந் தது பிராடெஸ்டெண்டுகளான ஆங்கிலேயர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இதனால் ஸ்பெயினை வெறுத்ததுபோல் பிரான் ஸையும் அவர்கள் வெறுக்க ஆரம்பித்தார்கள்.

சார்லஸின் முதல் பாராளுமன்றம்

1625ஆம் ஆண்டில் அதாவது தாம் பட்டத்துக்கு வந்த முதல் ஆண்டில் தமது முதல் பாராளுமன்றத்தை சார்லஸ் கூட்டினர். ஐரோப்பியப் போர்களை நடத்த மானியம் வழங்கும்படி பாராளுமன்றத்தைக் கேட்டுக்கொண்டார். அரசரைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க எண்ணிய பாராளுமன்றம் அரசர்களுக்கு வழக்கப்படி ஆயுள்மானியமாக வழங்கிவந்த டன் எடை வரி, (Tonnage) பவுண்டு கட்டணம் (Powndage) என்ற சுங்கவரிப் பணத்தை சார்லஸ் அரசருக்கு ஆயுள் மானியமாயிருந்ததைக் குறைத்து ஒரு ஆண்டிற்கு மட்டுமே வசூலித்துக் கொள்ள அனுமதியளித்தது. அத்துடன் ஸ்பெயினேடு போர் செய்வதற்கு வேண்டிய மானியத்தொகையை அளிக்க மறுத்தது. ஏனெனில் இப்போரை நடத்திவந்த பக்கிங்காம் கோமகனைப் பாராளுமன்றம் வெறுத்தது.

இப்பாராளுமன்றம் சார்லஸின் வெளிநாட்டுக்கொள்கையைக் கண்டித்தது. இவருடைய சமயக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. கத்தோலிக்க இளவரசியை மணந்ததால் கத்தோலிக்கர்களுக்கு எல்லா உரிமைகளையும் அரசர் வழங்குகிருர் எனக் குறைகூறியது. இவருடைய நிர்வாகத்தில் உள்ள குறைகளையும், குற்றங்களையும் சுட்டிக்காட்டியது. இவருடைய அமைச்சரான, பக்கிங்காம் கோமகனின் செயல்களைக் கண்டித்தது. அத்துடன் இவரைப் பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் அரசரை வற்புறுத்தியது. மேலும் அரசர் தன் அமைச்சர்களையும், ஆலோசகர்களையும் நியமிக்கும்போது பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும். வெளிநாட்டுக்கொள்கையையும் சமயக்கொள்கையையும் நிர்ணயிக்க அரசர் பாராளுமன்றத்தின் உதவியை நாடவேண்டும் என்றும் வற்புறுத்தியது. அத்துடன் பக்கிங்காம் கோமகனைப் பதவியிலிருந்து இப்போதே விடுவிக்க வேண்டுமென்றும் இல்லையேல் இதற்குமேல் மானியம் வழங்க முடியாது எனவும் பாராளுமன்றம் கூறியது. சார்லஸ் பாராளுமன்ற வற்புறுத்தலின்பேரில் கத்தோலிக்கர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தண்டனைச்சட்டங்களை மட்டும் மீண்டும் செயல்படுத்தினர். ஆனல் பாராளுமன்றம் விதித்த மற்றக் கோரிக்கைகளை சார்லஸ் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று கூறிப் பாராளுமன்றத்தை உடனே கலைத்துவிட்டார். பிறகு ஸ்பெயின் போரை நடத்தத் தீர்மானித்து, அப்பொறுப்பை பக்கிங்காம் கோமகனிடம் ஒப்படைத்தார். சர் எர்வர்ட் செசில் என்பவருக்குக் கப்பற்படையுடன் காடிஸ் துறைமுகத்தைத் தாக்கும்படி பக்கிங்காம் கோமகன் கட்டளையிட்டார். அதன்படி அத்துறைமுகம் தாக்கப்பட்டது. ஆனல் ஆங்கிலப்படைகளுக்குத் தோல்வியே ஏற்பட்டது.

சார்லஸின் இரண்டாவது பாராளுமன்றம்

நிதி நெருக்கடி காரணமாக சார்லஸுக்குத் தமது இரண்டாவது பாராளுமன்றத்தை 1626-ஆம் ஆண்டில் கூட்டும்நிலை ஏற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுமுன் தமக்குப் பிடிக்காதவர்களாகிய கோக், (Coke) வென்ட்வொர்த் (Went worth) போன்றவர்களைப் பாராளுமன்றத்தில் நுழையாவண்ணம் செய்யவேண்டும் என பக்கிங்காம் கோமகன் நினைத்தார். அதன்படி அவர்களை ஷெரீப்புகளாக (Sheriffs) நியமிக்கும்படி செய்து பாராளுமன்ற உறுப்பினர்களாகும் தகுதியை இழக்கச் செய்தார். இவருடைய மற்றொரு எதிரியான அருண்டேல் கோமகனை, சட்ட விரோதமானமுறையில் திருமணம் செய்து கொண்டார் எனக் குற்றம்சாட்டிச் சிறையிலடைக்கச்செய்தார். ஜான் டிக்பி (Johne Dighby) என்பவரை பிரபுக்கள் சபைக்கு வருமாறு அழைப்பு விடுக்காமலேயே விட்டுவிட்டார். இதையறிந்த பிரபுக்கள்சபை டிக்பி, அருண்டேல்கோமகன் ஆகியோரை சபைக்கு அழைத்தாலொழிய எச்செயலையும் மேற்கொள்ள முடியாது என அறிவித்தது. பின்னர், இவர்கள் இருவரும் சபைக்கு அழைக்கப்பட்டனர். ஆனால் பொதுமக்கள் சபைக்கு கோக், வென்ட்வொர்த் போன்றோர் வர இயலவில்லையெனினும் அவர்களின் நண்பர்களும், உரிமைகளுக்காகப் போராடுவோருமாகிய ஆர்வமிக்க எலியட், பிம் (Pym) போன்றோர் உறுப்பினர்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். இங்ஙனம் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் ஐந்து நைட்டுகள் முக்கியமானவர்கள். இவர்கள் ஐவரும் ஒரு வழக்குத் தொடுத்தார்கள். இது ஒரு முக்கியமான வழக்காகக் கருதப்பட்டது. இவ் வழக்கு டார்நல் (Darnel) வழக்கு என்றும், ஐந்து நைட்டுகள் வழக்கு என்றும் அழைக்கப்படுகின்றது. சிறைப்பட்ட ஐந்து நைட்டுகளும் தங்கள் வழக்கை அரசநீதிபதிகள் மன்றத்திற்கு (Court of King's Bench) கொணரவேண்டும் என்றுகூறி ஹேபியஸ் கார்ப்பஸ் கட்டளையின் மூலம் (Writ of habeas corpus) கேட்டுக்கொண்டார்கள். நீதிமன்றம் இவர்களை விடுவித்து நீதிமன்றத்திற்கு அனுப்பும்படியும், அவர்களைச் சிறைப்படுத்திய காரணமென்ன என்பதை அறிவிக்கும்படியும் சிறை அதிகாரியை ஹேபியஸ் கார்ப்பஸ் கட்டளையின்மூலம் கேட்டுக்கொண்டது. அரசரின் சிறப்புக்கட்டளையின்படி அவர்களைக் கைதுசெய்ததாகச் சிறை அதிகாரி கூறினர். அதற்குள் (Darnel) டார்னெல் என்ற கைதி வழக்குத் தொடர்வதிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டார். இருப்பினும் மற்ற நால்வரும் வழக்கறிஞர்கள் மூலம் வாதாடினர்கள். கைதிகள்மீது குறிப்பிட்ட குற்றம் ஏதும் கூறப்படாததினுல் அவர்களை ஜாமீனில்

(Bail) விடுதலை செய்யவேண்டும் எனக் கைதிகளின் வழக்கறிஞர்கள் கோரினர். அரசரின் வழக்கறிஞர் (Attorney General) நீதிமன்றத்திற்கு அவர்களை எப்போது கொண்டுபோகலாம் என்று அரசர்முடிவு செய்யும்வரை அவர்கள் சிறையில் இருக்கவேண்டும் என்று வாதாடினர். நீதிபதிகள் என்ன செய்வது என்று திகைத்தனர். இதற்குமுன்பு யாரையும் அரசரிடம் ஆலோசனை செய்யாமல் ஜாமீனில் விடுவித்ததில்லை. அதன் காரணமாய் அவர்கள் நைட்டுகளைச் சிறைச்சாலைக்கே அனுப்பிவிட்டனர். ஆனால் அவர்கள் 1628ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டனர்.

சார்லஸின் இரண்டாவது பாராளுமன்றம் கூடியதும், அதன் குறைகள் நீக்கப்பட்டாலொழிய நிதியுதவி அளிக்கமுடியாது எனக்கூறியது. அடுத்து பக்கிங்காம் கோமகனை அரசியல் துரோக குற்றம்சாட்டி விசாரிக்கமுயன்றது. சர் ஜான் எலியட் என்பவர் பிரபுக்கள்சபையில் 'காடிஸ் துறைமுக முற்றுகையின் தோல்விக்கும், நாட்டில் ஏற்பட்ட எல்லாத் தீமைகளுக்கும் பக்கிங்காம் கோமகன்தான் காரணம்' என்று அறுதியிட்டுக் கூறினர். கோமகனைக் காப்பாற்றும் பொருட்டு 'அவருடைய செயல்களுக்கெல்லாம் நான்தான் பொறுப்பு' என்று அரசர்கூறி வாதாடினர். ஆனால் அரசரின் வாதத்தைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைக்கண்ட சார்லஸ் சினங்கொண்டார். சர் ஜான் எலியட்டையும், சர் டட்லி டிக்கிஸ் (Sir Duddley Diggis) என்பவரையும் சிறையிலடைக்க உத்தரவிட்டார். உறுப்பினர்களைச் சிறைப்படுத்துதல் சட்டமுரண் என்றும், அவர்களை விடுதலை செய்யும்வரை எதையும் செய்யமுடியாதென்றும் சபை கூறிவிட்டது, அதனால் சார்லஸ் பாராளுமன்றத்தைக் கலைத்தார். 'பாராளுமன்றத்தைக் கூட்டுவிப்பதும், விவாதிக்கச்செய்வதும், கலைப்பதும் என்னுடைய அதிகாரங்கள் என்பதை நீங்கள் நினைவுறுத்திக்கொள்ளுங்கள். பாராளுமன்றத்தால் நன்மையுண்டென்று நான் நினைத்தால் பாராளுமன்றம் நீடிக்கப்படலாம். இல்லையேல் அழிக்கப்படலாம்' என்று பாராளுமன்றம் கலைக்கப்படும்பொழுது உறுப்பினர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்தார்.

மானியம் எதுவும் அரசருக்குக் கொடுக்காமல் பாராளுமன்றம் கலைந்ததால் வேறுவழியின்றி கட்டாயக் கடன்களை (Forced Loans) வசூலிக்க முற்பட்டார். இக்கடனைக் கொடுக்கமறுத்தவர்கள் பலவகையிலும் துன்புறுத்தப்பட்டனர். சிலரைச் சிறையில் அடைத்தார். கட்டாயமாக படைவீரர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பை பலரிடம் ஒப்படைத்தார். இச்சமயத்தில் பிரான்சு நாட்டு பிராடெஸ்டெண்டுகளான ஹியூக்னோக்கள் (Huguenots) வசமிருந்த லாரொஷேல் (La Rochalle) கோட்டையைப் பிடிக்க

பதின் மூன்றும் லூயி படைகளை அனுப்பியதாக சார்லஸ் கேள்விப் பட்டு பிராடெஸ்டெண்டுகளான ஹியூக்னேக்களைக் காப்பாற்ற பக்கிங்காம் கோமகன் தலைமையில் சார்லஸ் ஒரு படையை அனுப் பினர். ஆனால் இப்படை தோல்வியுற்றது. பக்கிங்காம்கோமகன் லா ரோஷேல் கோட்டையை ஹியூக்னேக்களிடம் ஒப்படைக்க முடியாமல் பாதிப்போர்வீரர்களை இழந்து நாடுதிரும்பினர்.

சார்லஸின் மூன்றுவது பாராளுமன்றம்

சார்லஸ் பணமுடை தாங்காது மறுபடியும் தமது மூன்றுவது பாராளுமன்றத்தை 1628 ஆம் ஆண்டில் கூட்டினர். இப் பாராளுமன்றம் புத்துணர்ச்சியோடு புதிய தலைவர்களின் கீழ்க் கூடியது. பிம், வென்ட்வொர்த், எலியட், ஹாம்டன், செல்டன், கோக் போன்றோர் இப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றனர். இப் பாராளுமன்றத்தின் கூட்டம் ஆங்கில வரலாற்றில் மிக முக்கியத் துவம் பெறுகின்றது. ஏனெனில் இப் பாராளுமன்றம்தான் உரிமை கள் விண்ணப்பம் (Petition of Rights) ஒன்றைத் தயாரித்து அரசரிடம் சமர்ப்பித்தது.

உரிமைகள் விண்ணப்பம் (1628)

சார்லஸின் மூன்றும் பாராளுமன்றம், பாராளுமன்றத்தின் உரிமைகளடங்கிய ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்தது இந்த உரிமைகள் விண்ணப்பத்தைத் தயாரிப்பதில் எலியட், வென்ட் வொர்த்.கோக்,பிம் போன்றோர் முக்கிய பங்கேற்றுர்கள். இவ்வுரிமை விண்ணப்பத்தில் இடம் பெற்ற முக்கிய கோட்பாடுகள். 1. சார்லஸின் யதேச்சாதிகாரச் செயல்களைக் கண்டித்தது. 2. பாராளுமன்றத்தின் இசைவின்றி அரசர் எவரையும் சிறை யிடக் கூடாது. 3. சட்டப்படி விசாரணையின்றி அரசர் எவரையும் காவலில் வைக்கக் கூடாது. 4. பாராளுமன்றத்தின் இசைவின்றி அரசர் கட்டாயக் கடன்களையோ வரிகளையோ திரட்டக் கூடாது. 5. போர் வீரர்களைச் சாதாரண மக்களின் இல்லங்களில் தங்க வைக்கக் கூடாது. 6. அமைதிக் காலத்தில் படைமுறைச் சட்டங் களை (Martial Law) அமுல் நடத்தக் கூடாது. இத்தகைய உரிமைகள் ஒருங்கே அமையப் பெற்ற ‘உரிமைகள் விண்ணப் பத்தை’ பிரபுக்கள் சபையும் (House of Lords) ஏற்றுக்கொண்டது. பொதுமக்கள் சபையும் (House of Commons) நிறைவேற்றியது. இரண்டு சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் விண்ணப்பத்தை அரசரிடம் சமர்ப்பித்து ‘இதை அரசர் ஏற்றுக் கொண்டாலொழிய அரசருக்கு மானியம் எதுவும் அளிக்கப்பட மாட்டாது’ என உறுப்பினர்கள் கூறினர். இதை ஏற்றுக் கொள் வதா? அல்லது பாராளுமன்றத்தைக் கலைப்பதா? என்பதைப்பற்றி

அரசர் ஒரு வாரம் சிந்தித்தார். பணம் இல்லாமல் தம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்று எண்ணி 1628 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் நாள் உரிமைகள் விண்ணபத்தை ஏற்றுக் கொண்டதாக அம் மசோதாவில் கையெழுத்திட்டார். உடனே ஆங்கில மக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுக்கு வெற்றி கிட்டியது என எண்ணி மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். பிறகு பாராளுமன்றம் அரசருக்கு நிதிஉதவி யளித்தது.

இவ் விண்ணப்பம் ஆங்கில அரசியலமைப்பில் சிறந்த ஒரு இடத்தைப் பெறுகின்றது. மகாசாசனத்திற்கு (Great Charter) அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க சிறப்பு இவ்வுரிமை விண்ணப்பத்திற்கு உண்டு. சட்டங்களுக்கும் அரசரின் சிறப்பதிகாரங்களுக்கும் உள்ள தொடர்பை இது விளக்குகின்றது. நாட்டின் இறைமை அரசரிடமிருந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டிருப்பதை இவ் விண்ணப்பம் தெளிவுபடுத்துகின்றது. இவ்வுரிமைகள் புதியவையல்லவெனினும் தெளிவாய் வரையறுக்கப்பட்டு அரசரின் அனுமதிபெற்றது ஓர் சிறப்பாகும்.

ஸ்பெயினேடும் பிரான்சோடும் போர் செய்வதற்கு வேண்டிய எல்லா நிதியுதவியையும் பாராளுமன்றம் அளிக்கும் என்ற நம்பிக்கையில் சார்லஸ் உரிமைகள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டார். ஆனல் பாராளுமன்றம் அவருக்கு 350,000 பவுன்கள்தான் மானியமாக வழங்கியது. அத்துடன் பக்கிங்காம் கோமகனின் செயல்களை மிகவும் கண்டித்தது. அதன் காரணமாய் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இருந்த உறவு மேலும் மோசமடைந்தது. உரிமைகள் விண்ணப்பம் எத்தகைய புதிய உரிமைகளையும் ஆங்கில மக்களுக்கு அளிக்கவில்லையென்றும், அவர்கள் அனுபவித்து வந்த பழைய உரிமைகளைத்தான் உறுதிப்படுத்தியது என்றும் அரசர் உரிமைகள் விண்ணப்பத்தை ஏளனம் செய்யும் விதத்தில் கூறி, பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார் (Prorogued). இதை அறிந்த மக்கள் வெறிகொண்டனர். பக்கிங்காம் கோமகனின் மருத்துவர் (Physician) தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் 1628 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23ஆம் நாள் (John Felton) ஜான் ஃபெல்டன் என்பவனல் பக்கிங்காம் கோமகன் போர்ட்ஸ்மவுத் என்னுமிடத்தில் கொல்லப்பட்டார். ஜான் ஃபெல்டன் கடற்படையிலிருந்து பக்கிங்காம் கோமகனல் விலக்கப்பட்டவன். இச் சொந்தப் பகையைப் பயன்படுத்தி பக்கிங்காமைப் பழிதீர்த்துக் கொண்டான். பக்கிங்காம் கொலையால் மேலும் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கு மிருந்த உறவு சீர்குலைந்தது. பக்கிங்காம் கொலைக்கு எலியட்டும்

அவரது ஆதரவாளர்களுமே பொறுப்பானவர்கள் என்று அரசர் எண்ணி அவர்களைத் தண்டிக்க எண்ணினுர்.

மூன்றும் பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர்

சார்லஸின் மூன்றும் பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் 1629 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பித்தது. 1629 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் நாள் சர் ஜான் எலியட் என்பவர் பொதுமக்கள் சபையில் மூன்று தீர்மானங்களைக் கொண்டு வந்தார். 1. சமயத்தில் புதுமைகளைக் கொண்டுவருபவர்களும் ஆர்மீனியனிசம் (Armenianism) என்ற சமயத்தில் நுழைபவர்களும், 2. பாராளுமன்றத்தால் அளிக்கப் படாத டன் எடை வரியையும், பவுண்டு கட்டணத்தையும் விதிக்க அறிவுரை கூறுபவர்களும், 3. இவ்வாறு விதிக்கப்பட்ட டன் எடை வரியையும், பவுண்டு கட்டணத்தையும் விரும்பிக் கொடுக்க முன்வருபவர்களும் நாட்டின் தலையாய எதிரிகளாகக் கருதப்படவேண்டும் என்று இத் தீர்மானங்கள் கூறுகின்றன.

பாராளுமன்றத்தில் இத் தீர்மானங்கள் கொண்டுவரும்போது அரசர் பாராளுமன்றத்தை ஒத்திப்போடுமாறு கட்டளையிட்டார். இதையறிந்த சபாநாயகர் தம் இருக்கையிலிருந்து எழுந்தார். கோபமடைந்த உறுப்பினர்கள் சபாநாயகரைக் கட்டாயமாக இருக்கையில் அமரச்செய்து பொதுமக்கள் சபையின் கதவுகள் மூடப்பட்டன. அத் தீர்மானங்களை வாசித்து, வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, நிறைவேற்றும் வரையில் கதவுகள் திறக்கப்பட வில்லை. இதையறிந்த அரசர் கோபமுற்று 1629 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10ஆம் தேதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். எலியட் உள்படப் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். எலியட் மூன்றுண்டுகள் சிறையிலிருந்து 1632 ஆம் ஆண்டில் உயிர் நீத்தார். தமது மூன்றும் பாராளு மன்றம் கலைக்கப்பட்ட பின்பு, பாராளுமன்றமின்றி ஆட்சி செய்ய சார்லஸ் முடிவு செய்தார்.

முதலாம் சார்லஸின் தனிவல்லாட்சி (1629—1640)

முதலாம் சார்லஸ் தமது மூன்றும் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்ட பிறகு பாராளுமன்ற மின்றியே ஆட்சி செய்ய முடிவெடுத் தார். அதன்படி இங்கிலாந்தைப் பாராளுமன்றமின்றியே பதினேராண்டுகள் ஆட்சி செய்தார். மற்ற நாடுகளுடன் போரின்றி இருந்தால், தம்மால் பாராளுமன்றத்தின் துணையின்றியே நல்ல முறையில் ஆட்சி செய்ய முடியும் என சார்லஸ் எண்ணினுர். அதன்

படி தமது வருவாயின் பெரும் பகுதியை விழுங்கிவந்த ஐரோப்பியப் போர்களை நிறுத்தினர். 1629 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட சூசா (Susa) உடன்படிக்கையின்படி அவர் பிரான்சோடு சமாதானம் செய்துகொண்டார். 1630 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட மாட்ரிட் (Madrid) உடன்படிக்கையின்படி அவர் ஸ்பெயினேடு புரிந்துவந்த போரை நிறுத்தினர். பாராளு மன்றத் தலைவர்களைச் சிறையிலடைத்துவிட்டு சட்ட விரோதமான முறைகளை யெல்லாம் கையாண்டு நிதி திரட்டினர். இவருடைய கொள்கைகளை எதிர்த்தவர்கள் ஸ்டார் சேம்பர் நீதிமன்றம் (The Court of Star Chamber) உயர் ஆணை நீதிமன்றம் (House of High Commission) போன்றவைகள் பயன்படுத்தப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள். வணிகத்தைச் சீராக்குவது அரசரின் கடமை என்று கூறி, டன் எடை வரியையும், பவுண்டு கட்டணத்தையும் வசூலித்தார். வணிக வளர்ச்சியால் அரசருக்கு இதன் மூலம் நல்ல வருவாய் கிட்டியது. கட்டாயமாகக் கடன்களையும் வசூலித்தார். 1624 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் சட்டவிரோதமானது என அறிவிக்கப் பட்ட ஏகபோக உரிமைகளை (monopolies) வழங்குவதை மறுபடியும் புதுப்பித்தார். இதேபோல் வனச் சட்டங்கள் (Forest Laws) மீண்டும் செயற்படுத்தப்பட்டன. அதன்படி வனங்களை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டவர்களிடமிருந்து தண்டப்பணம் திரட்டப்பட்டது. எட்வர்டு காலத்தில் நாற்பது பவுன் அல்லது அதற்கு மேல் வருமானம் பெறுபவர்கள் கட்டாயமாக நைட் வீரர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற சட்டம் இருந்தது. பிறகு பல ஆண்டுகளாக அது அமுல் செய்யப் படாமல் இருந்தது. அதை சார்லஸ் மீண்டும் உயிர்ப்பித்தார். இச்சட்டப்படி இப்பட்டங்களைப் பெறுபவர்கள் அரசருக்கு ஒரு குறிப்பிட்ட நிதியை அளிக்க வேண்டும். பட்டங்களைப் பெற விரும்பாதவர்கள் அதற்கு ஈ க ஒரு அபராதத் தொகையைச் செலுத்த வேண்டும். இவ்வாறு இப் பட்டத்தைப் பெற்றவர், பெருதவர் ஆகிய இரு சாராரிடமிருந்தும் அரசருக்கு வருமானம் வந்தது.

கடற்கரையைப் பாதுகாப்பது தம் கடமை எனக் கூறி அதற்காக அடுத்தபடியாக சார்லஸ் கப்பற்பணம் (Ship money) வசூலிக்க ஆரம்பித்தார். முதலில் இப்பணம் துறைமுக நகரங்களில் வசூலிக்கப் பட்டது. பிறகு 1635 ஆம் ஆண்டிலிருந்து உள் நாட்டிலிருந்தும் வசூலிக்கப்பட்டது. உள் நாட்டிலிருப்போர் பாதுகாப்பாக இருப்பது அரசர் கடற்கரைகளைப் பாதுகாப்பதினுல்தான் எனக் கூறி அவர் களிடமிருந்தும் கப்பற்பணம் வசூலிக்கப்பட்டது. மிகவும் நெருக்கடி காலங்களில்தான் இக் கட்டணம் வசூலிப்பது வழக்கம். ஆனுல் அவசர நிலை யில்லாதபோதும் ஒவ்வொரு ஆண்டும் இக் கட்ட ணம் வசூலிக்கப்படுவதை அறிந்து ஆங்கில மக்கள் பெரும்

பரபரப் படைந்தார்கள். ஜான் ஹாம்ப்டன் (John Hampden) என்பவர் பெரும் நிலக்கிழார். கடந்த பாராளுமன்றத்தின் உறுப்பினர். இவர் ஒரு பியூரிட்டன். இவர் கப்பற் பணத்தைக் கொடுக்க மறுத்தார். அதனுல் 1637 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டார். அரசருக்கு அவசர நிலை அதிகாரங்கள் உண்டென்றும் அதை எப்பொழுது பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கும் நீதிபதி அவர்தான் என்றும் கூறி ஹாம்ப்டன் வழக்கு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப் பட்டது. நீதி மன்றத்திலுள்ள 12 நீதிபதிகளில் 5 நீதிபதிகள்தான் ஹாம்ப்டனுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார்கள். கப்பற் பணவழக்கு நீதிமன்றத்தில் தோல்வியுற்ற போதிலும் அது மக்களிடையே ஒரு கொந்தளிப்பை உண்டாக்கியது. அத்துடன் இவ் வரிக்கு மக்கள் பெரும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். 1639 இல் அரசரால் 20 சதவிகித கப்பற் பணத்தைத்தான் வசூலிக்க முடிந்தது. இங்ஙனம் சார்லஸ் தமது கொள்கைமூலம் நாட்டுமக்களைப் பகைத்துக் கொண்டார்.

இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அடிக்கடி லண்டன் நகரில் சந்தித்து எதிர்காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி யோசிக்கலாயினர். இக் கூட்டங்களில் ஆலிவர் செயின்ட் ஜான் (Olivar St. John) என்ற பியூரிட்டன் வழக்கறிஞரும் ஜான் பிம் (John Pym) என்பவரும் முக்கிய பங்கேற்றுர்கள். இவர்கள் சார்லஸின் கொள்கைகளையும் செய்கைகளையும் கண்டித்துப் பேசினர். எந்தத் தியாகத்திற்கும் மக்கள் தயாராய் இருக்க வேண்டும் என்று அறைகூவல் இட்டனர்.

முதலாம் சார்லஸ் தம் ஆட்சியை ஸர் தாமஸ் வென்ட்வொர்த் (Sir Thomas went worth), வில்லியம் லாட் (William Laud) போன்றவர்களின் ஆலோசனைப்படி செய்துவந்தார். இவர்களுடைய ஆலோசனையால் பிற்காலத்தில் ஏற்படப்போகும் பேராபத்துக்களைப் பற்றி சார்லஸ் எண்ணிப் பார்க்கவில்லை. வென்ட்வொர்த் என்பவர் அரசரையும் பக்கிங்காம் கோமகனையும் பாராளுமன்றத்தில் வன்மையாகக் கண்டித்தவர். அரசரின் வெளிநாட்டுக் கொள்கையைக் குறை கூறியவர். அரசர் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டே செயல்பட வேண்டும் என்று வாதிட்டவர். அத்துடன் அரசரின் அறிவுரையாளராக இருந்த பக்கிங்காமின் செயல்களைத் தேசவிரோதமானவை என்று பறைசாற்றியவர். இத்தகையவர்தான் பக்கிங்காம் கோமகன் இறந்தவுடன் சார்லஸின் முதன்மையான அறிவுரையாளராக மாறினுர். உடனே பல பட்டங்கள் இவருக்கு அரசரால் கிடைத்தன. இவர் நிர்வாகத்தில் நல்ல திறமை பெற்றிருந்ததினுல் அயர்லாந்தின் கவர்னராகவும் நியமிக்கப்பட்டார்.

பல வழிகளிலும் அயர்லாந்து மக்கள் முன்னேற இவர் செயல் பட்டார். அத்துடன் இங்கிலாந்துச் சட்டங்களையும் மத ஏற்பாட் டையும் பலவந்தமாக அவர் அங்குப் புகுத்தினார். எதிர்த்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அதனால் அயர்லாந்து மக்களின் வெறுப் பைப் பெற்றுக் கொண்டார்.

சமயத் துறையில் தனியாட்சி செலுத்துவதற்கு வில்லியம் லாட் (William Laud) என்பவர் சார்லஸுக்கு அறிவுரை வழங்கினார். இவர் சார்லஸ் அரசரால் கான்டர்பரி ஆர்ச் பிஷப்பாக(Archbishop of Canterbury) நியமிக்கப்பட்டவர். இவருடைய அறிவுரையை சார்லஸ் ஏற்றுக் கொண்டதால் சமயத் துறையில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட மதப் பிரிவினர் வாழ்ந்த இங்கிலாந்தில் இவர் ஒரே மாதிரி யான வழிபாட்டு முறையைப் புகுத்த விரும்பினார். பழைய சமய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்ட குருமார்களே மேல் பதவிகளைப் பெற்றனர். பழைய ஏற்பாட்டிற்குப் புறம்பாக நடந்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பியூரிட்டன்களின் வழிபாட்டு முறையை இவர் எதிர்த்தார். பியூரிட்டன்களும் பழைய ஏற்பாட்டின்படியே தொழவேண்டும் எனக் கட்டளையிட்டார். பியூரிட்டன்கள் புத்த கங்கள் வெளியிடுவதையும் தடுத்தார். தடை செய்யப்பட்ட நூல் களை இரகசியமாய்ப் பலரும் படித்தனர். பியூரிட்டன்கள் தனியாகக் கூடித் தொழுவதும் தடை செய்யப்பட்டது. தாம் செய்த சீர்திருத் தங்களைச் சமயத் துறையில் எல்லோரும் கடைப்பிடிக்கும்படி வற் புறுத்தினார். லெய்ட்டன் (Leighton) என்பவர் பியூரிட்டன் மதக் கொள்கையை ஆதரித்துப் புத்தகம் எழுதியதால் சவுக்கால் அடிக் கப்பட்டும், (Whipped) சூடு போடப்பட்டும் பல ஆண்டுகள் சிறை யில் தள்ளப்பட்டார். சிறந்த வழக்கறிஞரும், தேசபக்தருமான வில்லியம் பிரைன் (William Prynne) என்பவர் நாடகங்களைப் பற்றிக் குறை கூறியதால் தண்டிக்கப்பட்டு அவர் காதுகள் அறுக்கப் பட்டன. ஏனெனில் அரசியார் அடிக்கடி நாடகங்களைப் பார்ப்பதால் மறைமுகமாய் அவரைத்தான் தாக்கியிருக்கிறார் என்று கருதியதால் அவ்வாறு தண்டிக்கப்பட்டார். இவரைத் தண்டிக்கும்போதே 1637-ல் அதே நீதிமன்றம் பர்ட்டன் (Burton) என்பவர் பலி பீடத்தை (altar) தாக்கிப் பேசியதற்காகவும், பாஸ்ட்விக் (Bastwick) என்ற மருத்துவர் பிஷப்புகளைத் தகாத முறையில் தாக்கிப் பேசிய தற்காகவும் அதே கதியை அடைந்தனர். அதனால் மக்கள் லாட் கொள்கையை வெறுத்தனர்.

லாட் மற்றொரு தவறையும் செய்தார். இங்கிலாந்தில் தாம் புகுத்திய மதச் சீர்திருத்தங்களை ஸ்காட்லாந்திலும் புகுத்த நினைத் தார். ஸ்காட்லாந்தியர் பிரஸ்பிடீரிய மதக் கொள்கையில் ஊறிய

வர்கள். அவர்கள் கொள்கைக்கு மாருக ஸ்காட்லாந்தில் இங்கிலாந்தின் வழிபாட்டு முறையைப் புகுத்த முனைந்தார். சார்லஸும் இவருடைய ஆலோசனைக்குச் செவிசாய்த்தார். 1637 ஆம் ஆண்டில் லாட் ஸ்காட்லாந்தியர்களுக்காக ஒரு புது ஜெபப் புத்தகத்தைத் தயாரித்தார். அவ்வாண்டு ஜூலை மாதத்திலிருந்து புது ஜெபப் புத்தகத்தைத் தொழுகைக்கு ஸ்காட்லாந்தியர்கள் பயன்படுத்த வேண்டுமென்று சார்லஸ் கட்டளை யிட்டார். அதன்படி ஜூலை மாதத்தில் ஸ்காட்லாந்து செயின்ட் கைல் (St. Gile's) மாதா கோயிலில் பிஷப் படிக்க ஆரம்பித்தவுடனே, அங்குக் கூடியிருந்த அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அங்கு ஒரு பெரும் கலகமே ஏற்பட்டது. அக் கலகம் நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் பரவியது. பிரஸ்பிடீரியன், மத ஏற்பாட்டை எவ்வகையிலும் காக்க உறுதி பூணுவதாக ஒரு தேசிய ஒப்பந்தத்தில் (National Covenant) ஆயிரக் கணக்கோர் கையெழுத்திட்டனர். இதைக்கண்ட சார்லஸ் திடுக்கிட்டார். உடனே ஸ்காட்லாந்தியர்களைச் சமாதானப் படுத்த ஒரு மாநாட்டைக் கூட்டினுர். அம் மாநாட்டில் சார்லஸ் அரசரையும் அவருக்கு உதவிசெய்யும் ஸ்காட்லாந்து பிஷப்புகளையும் வன்மையாகக் கண்டித்தனர். சமாதான முயற்சி தோல்வியடைந்ததால் சார்லஸ் அம்மாநாட்டைக் கலைத்தார்.

ஸ்காட்லாந்தியர்கள்மீது சினங்கொண்ட சார்லஸ் ஸ்காட்லாந்துமீது படையெடுக்க முடிவு செய்தார். ஆனுல் நிதிநிலை மிகவும் மோசமாயிருந்தது. பிறகு நிதி திரட்டினுர். அதன் மூலம் படையைத் திரட்டினுர். ஆயினும் இவருக்கு நல்ல படைத் தலைவர்கள் கிடைக்கவில்லை. ஆனுல் இவ்விதத்தில் ஸ்காட்லாந்தியர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஐரோப்பாவில் கத்தோலிக்கர்களுக்கு எதிராக முப்பதாண்டுப் போரில் கலந்துகொண்டு அவர்கள் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்கள். அத்துடன் அலெக்ஸாண்டர் லெஸ்லி (Alexander Lesli) என்ற திறமைமிக்க தளபதி அவர்களின் படைக்குத் தலைமை தாங்கினுர். அவர் 1639ஆம் ஆண்டு மே மாதத்தில் 20,000 படை வீரர்களுடன் சார்லஸை எதிர்த்து ஸ்காட்லாந்தின் எல்லையில் நின்றுர். இதையறிந்த சார்லஸ் போர் செய்வதைவிட அவர்களுடன் ஒரு சமாதான உடன்பாட்டைச் செய்து கொள்ளலாம் என நினைத்தார். அதன்படி 1639ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பெர்விக் (Beriwck) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கைப்படி ஸ்காட்லாந்தின் எல்லாப் பிரச்சினைகளையும் ஸ்காட்லாந்து பாராளுமன்றமும் ஸ்காட்லாந்து மாதாகோயில் மன்றமும் தீர்த்துக் கொள்ள சம்மதித்தார்கள். இப்போர்தான் முதல் பிஷப்புகள் போர் (First Bishops' War) என அழைக்கப்படுகின்றது.

ஸ்காட்லாந்தின் பாராளுமன்றமும் மாதாகோயில் மன்றமும் (Assembly of Scottish Assembly) 1639ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கூட்டப்பட்டன. இரு மன்ற உறுப்பினர்களும் சார்லஸ் நடவடிக்கைகளைப்பற்றியும், அவருடைய அறிவுரையாளர்களின் ஆலோசனைகளையும் வன்மையாகக் கண்டித்தனர். சமயத் துறையில் சார்லஸ் தலையிடுவதைத் தகாத காரியம் என விவாதித்தனர். ஸ்காட்லாந்தில் நியமிக்கப்பட்ட பிஷப்புகளை ஒழிக்க வேண்டும் என வற்புறுத்தினர். ஒவ்வொரு ஸ்காட்லாந்தியரும் தேசிய ஒப்பந்தத்தில் கையொப்ப மிடவேண்டும்எனக் கட்டளையிட்டனர், இதைக்கண்ட சார்லஸ் என்ன செய்வதென்று புரியாமல் அயர்லாந்திலிருந்து வென்ட்வொர்த்தை வரவழைத்தார். அவருக்கு ஸ்டிராஃபோர்ட் கோமகன் (Earl of Strafford) என்ற பட்டத்தை சார்லஸ் வழங்கினார். பாராளுமன்றத்தை மறுபடியும் கூட்டுவதே நல்லது எனச் சார்லஸுக்கு அவர் அறிவுரை கூறினார். அரசரும் அவருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்.

இங்கிலாந்து முழுவதும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் 1640ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கூடியது. பாராளுமன்றம் கூடியவுடனேயே அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்தது. தங்களுடைய குறைகளை எல்லாம் அரசர் நீக்கினாலொழிய நிதியுதவியளிக்க முடியாது என வற்புறுத்தியது. இதைக்கண்ட சார்லஸ் பாராளுமன்றம் தமக்கு உதவியளிக்காது என நினைத்து 1640ஆம் ஆண்டு மே மாதத்தில் கலைத்துவிட்டார். இப்பாராளுமன்றம் ஒரு மாதத்திற்கும் குறைந்தே நிலைத்ததால் 'குறுகிய பாராளுமன்றம்' (Short Parliament) எனப் பெயர்பெற்றது. சார்லஸ் தமது படைகளைக் கொண்டு மறுமுறையும் ஸ்காட்லாந்தோடு போர் தொடுத்தார். ஸ்டிராஃபோர்டு கோமகன் பெரு முயற்சி எடுத்துப் படைகளைத் திரட்டினார். இருந்தும் ஆங்கிலப்படை ஸ்காட்லாந்துப் படையோடு ஒப்பிடும் நிலையிலில்லை. ஸ்காட்லாந்துப் படைகள் எல்லையைக் கடந்து இங்கிலாந்திற்குள் வரும்போது எதிர்த்துத் தாக்குபவர்களே இல்லை எனலாம். முதலில் இங்கிலாந்தில் ஸ்காட்லாந்துப் படைகள் நியூகேஸிலில் (New castle) என்ற நகரத்தைக் கைப்பற்றியது. இங்கிலாந்து மக்கள் தம் அரசரை எதிர்த்துப் போர் செய்யும் ஸ்காட்லாந்துப் படைகளுக்கு உதவி செய்தார்கள். அதன் பிறகு ஆங்கிலப்படை நியூபர்ன் (New burn) என்ற இடத்தில் முறியடிக்கப்பட்டது. இவ்வாறு ஸ்காட்லாந்துப் படைகள் இங்கிலாந்தின் வடகோடியில் உள்ள ஆறு கவுன்டிகளைக் (Countees) கைப்பற்றிக் கொண்டது. பிறகு இரண்டு தரப்பாரிடையே ஒரு சமரசம் ஏற்பட்டது. அதன்படி சமாதான உடன்படிக்கை

(Peace Treaty) கையொப்பமாகும்வரை ஸ்காட்லாந்துப் படைகள் தாம் கைப்பற்றிய ஆறு கவுன்டிகளில் இருக்கவும் அவர்களின் செலவுக்காக நாளொன்றுக்கு 860 பவுன்களை ஆங்கில அரசு கொடுக்கவேண்டும்என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டன. இப்போர்தான் இரண்டாம் பிஷப்புகள் போர் (Second Bishop's War) என அழைக்கப்படுகின்றது. ஸ்காட்லாந்தோடு இத்தகைய உடன்படிக்கை ஏற்பட்டதால் வேறு வழியின்றி சார்லஸ் தமது பாராளுமன்றத்தைக் கூட்டினர்.

நீடித்த பாராளுமன்றம்

சார்லஸ் 1640ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம்நாள் தமது பாராளுமன்றத்தைக் கூட்டினர். இப்பாராளுமன்றம் தொடர்ந்து இருபது ஆண்டுகள் செயல்பட்டது. அதனுல்தான் இப்பாராளுமன்றம் நீடித்த பாராளுமன்றம் (The long Parliament) என அழைக்கப்படுகின்றது. முதலாம் சார்லஸ் அரசர் பாராளுமன்றமின்றிப் பதினொரு ஆண்டுகள் ஆட்சி செய்தார். பாராளுமன்றமின்றி ஆட்சி செய்ய அரசருக்கு எவைகள் எல்லாம் உதவி செய்தனவோ அவைகள் எல்லாவற்றையும் களைத்தெறியும் மனவுறுதியோடும் அரசரைப் பாராளுமன்றத்தின் ஒரு துணைக் கருவியாக மாற்றவேண்டும் என்ற எண்ணத்தோடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடினர்.

இந்த நீடித்த பாராளுமன்றம் கூட்டியவுடனே சார்லஸ் தமக்கு உதவி செய்ய அயர்லாந்திலிருந்து ஸ்டிராஃபோர்டு கோமகனை லண்டனுக்கு வரும்படி அழைத்தார். அவர் யார்க்ஷையரில் (Yorkshire) இருந்து புறப்படும்போது தமக்கு என்ன ஆபத்து நடக்குமோ என அஞ்சினர். ஒருவேளை கொலை செய்யப்படுவோமோ என்றுகூட எண்ணினர். ஆனுல் தமக்கு எந்தவிதத் தீங்கும் நேராமல் காப்பதாக அரசர் வாக்குறுதியளித்திருந்ததால் தைரியமாய் லண்டன் மாநகரை வந்தடைந்தார்.

பாராளுமன்றத்தில் தமக்குப் பல எதிரிகள் இருப்பதையறிந்து அவர்களை எப்படியாயினும் தேசத்துரோகக் குற்றம் சாட்டிச் சிறையில் அடைப்பது என ஸ்டிராஃபோர்டு கோமகன் எண்ணினர். ஆனுல் தம் எண்ணத்தைச் செயலாற்று முன்பே பொதுமக்கள் சபை இவர்மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டித் தீர்மானம் நிறைவேற்றியது. பொதுமக்கள் சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை பிம் என்ற பொதுமக்கள் சபைத் தலைவர் பிரபுக்கள் சபைக்கு அவசரம் அவசரமாக எடுத்துக்கொண்டு சென்ருர். பிரபுக்கள் சபையில் அத்தீர்மானம் நிறைவேற்றும்பொழுதுதான்

ஸ்டிராஃபோர்டு கோமகன் அச்சபையில் நுழைந்தார், நுழைந்த வுடனேயே இதைக் கண்டு திடுக்கிட்டார். உடனே இதைப்பற்றி விவாதிக்க முயன்ருர். முடியாமல் 1640ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள் அவர் சிறையிலடைக்கப்பட்டார். ஸ்டிரா ஃபோர்டு மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட போதிலும் சட்டப்படி அவரை தேசத் துரோகியெனக் கூறப் போதிய ஆதார மில்லை. மூன்ரும் எட்வர்டு காலத்தில் ஏற்பட்ட தேசத் துரோகச் சட்டப்படி (Treason Law) அரசரைக் கொல்ல சதி செய்தாலோ, அல்லது அவருக்கெதிராகப் போர் புரியப் படை திரட்டினுலோதான் தேசத் துரோகியெனக் கூறமுடியும். ஆனுல் பல தவறுகளை ஸ்டிராஃபோர்டு கோமகன் செய்திருந்தபோதிலும் சட்டப்படி தேசத் துரோகக்குற்றம் செய்யவில்லை. இருந்த போதிலும் எப்படியாயினும் ஸ்டிராஃபோர்டைத் தண்டிக்க வேண்டுமெனப் பாராளுமன்றம் நினைத்தது. அதற்காகப் பொதுமக்கள் சபை ஒரு அரசியல் துரோக மரண தண்டனைச் சட்டத்தை (Act of Attain-der) நிறைவேற்றியது. இச்சட்டத்தை எதிர்த்துப் பொதுமக்கள் சபையில் 59 உறுப்பினர்கள் வாக்களித்தார்கள். இவ்வுறுப்பினர் களின் பெயர்களை அச்சடித்து அதில் "இவர்கள் அனைவரும் ஸ்டிராஃபோர்டின் ஆதரவாளர்கள்—நாட்டைக் காட்டிக் கொடுப் பவர்கள்" என எழுதிய அட்டைகளை மக்கள் லண்டன் மாநகரில் ஏந்திய வண்ணம் ஊர்வலம் வந்தனர்.

பொதுமக்கள் சபையில் மரண தண்டனை மசோதா நிறை வேற்றியபின் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டது. பிரபுக்கள் சபை இம் மசோதாவை நிறைவேற்றத் தயங்கியது. இந் நிலையில் தான் ஒரு சதி வெளியிடப்பட்டது. அதன்படி அரசியார் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு பாராளுமன்றத்தைக் கலைப்பதற் காகவும், ஸ்டிராஃபோர்டை விடுதலை செய்வதற்காகவும் வருகின்ருர் எனக் கூறப்பட்டது. இதையறிந்த மக்கட்கூட்டம் பாராளு மன்றத்தின் முன் கூடிக் கூச்சலிட்ட வண்ணம் இருந்தது. இத் தகைய பரபரப்பான சூழ்நிலையில்தான் இம் மசோதா பிரபுக்கள் சபையிலும் நிறைவேறியது. இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப் பட்ட மசோதா அரசரின் ஒப்புதலைப் பெற்ருல்தான் சட்டமாக வர முடியும். அதற்காக இம்மசோதா அரசரின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டது.

அரசர் என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிய நிலையில் இரண்டு நாட்கள் மசோதாவிற்குத் தம் ஒப்புதலை அளிக்காமலேயே இருந்தார். இம் மசோதாவை ஏற்றுக்கொண்டால் தம்முடைய நண்பனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ருமல் போய்த் தமது மதிப்பும் குறைந்துவிடுமே என எண்ணினுர். இம் மசோ

தாவை ஏற்றுக்கொள்ளாவிடில் தமக்கு நிதியுதவி கிடைக்காதெனவும் எண்ணினர். அதைவிட அரசியார் பதவிநீக்கம் செய்யப்படலாம் எனவும் கூறப்பட்டது. ஆகவே உற்ற நண்பன் ஒருபுறம், நிதி நெருக்கடி இன்னொருபுறம், தம் மனைவியோ வேறொருபுறம். இந் நிலையில் எப் பக்கம் சாய்வதென்று அறியாது திகைத்தார். அதே நேரத்தில் மக்களோ கொதித்தெழுந்தார்கள். அப்போது தமக்களித்த வாக்குறுதியைத் திரும்பிப் பெற்றுக் கொள்வதாக ஸ்டிராஃபோர்டிடமிருந்து அரசருக்கு ஒரு செய்தி வந்தது. பிறகு அரசர் அம் மசோதாவில் கையொப்ப மிட்டார். அம் மசோதா சட்டமாக்கப்பட்டது. அச் சட்டப்படி 1641ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் நாள் ஸ்டிராஃபோர்டின் தலை துண்டிக்கப்பட்டது. இவ்வாறு பாராளுமன்ற இரத்த வெறி பிடித்த நரிகள் கருணையின்றி ஸ்டிராஃபோர்டை வஞ்சம் தீர்த்துக் கொண்டன. அத்துடன் பல குற்றங்களுக்காக லாட் (Laud) என்ற அரசரின் அறிவுரையாளரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பெற்றார். நான்கு ஆண்டுகள் இவர் விசாரணையின்றியே சிறையில் கிடந்தார்.

அடுத்தாற்போல், ஆர்ச்பிஷப் லாடின் கொடுங்கோன்மைக்கு இலக்கான பலர் விடுதலை செய்யப்பட்டனர். கத்தோலிக்க மதத்தைக் குறை கூறியதாகக் கைதுசெய்யப்பட்ட பிரேய்ன், பர்ட்டன், பஸ்டாலிக் போன்றோரும், கப்பற் பணத்தைக் கொடுக்க மறுத்த ஹாம்ப்டன் என்பவரும் விடுதலை செய்யப்பட்டனர். பிறகு பாராளுமன்றம் அரசரது முறையற்ற செயல்களை எல்லாம் சட்ட விரோதமாக்கியது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வசூலிக்கப்படும் டன் எடை வரி, பவுண்டு கட்டணம், கப்பற் பணம் போன்றவைகளைச் சட்ட விரோதமாக்கியது. அத்துடன் நைட் (Knight) பதவியை மக்கள்மீது அரசர் பலவந்தமாகத் திணித்துப் பணம் வாங்குவதும், அப்பதவியைப் பெற விரும்பாதவர்களிடமிருந்து அதற்கு நஷ்ட ஈடாகப் பணம் வசூலிக்கப்படுவதும் சட்டத்திற்குப் புறம்பானது என அறிவித்தது. காடுகளின் எல்லைகளை அரசர் நிர்ணயிக்கக் கூடாதென்றும், அரசர் ஏகபோக உரிமைகளை விற்கக் கூடாதென்றும் சட்டம் இயற்றியது. அரசரின் எண்ணங்களைச் செயலாக்கும் நீதிமன்றங்களான ஸ்டார் சேம்பர் நீதிமன்றமும் (Court of Star Chamber). உயர்துணை நீதிமன்றமும் (the Court of High Commission). வட நீதி மன்றமும் (Council of North) ஒழிக்கப்பட்டன. பிரிவு கவுன்ஸிலில் நியாயம் வழங்கும் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன் பாராளுமன்றத்தின் அனுமதியின்றிப் பாராளுமன்றத்தைக் கலைக்கக் கூடாது என்ற ஒரு சட்டமும் இயற்றப்பட்டது. இதற்கடுத்து இயற்றப்பட்ட மூவாண்டுச் சட்டம் (Triennial Act) அரசருக்கு ஒரு பேரிடியாக இருந்தது. இச்சட்டம் மூன்றாண்டுகளுக்கு ஒரு

முறை அரசர் கட்டளையிட்டாலும் இடாவிட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று கூறியது. அத்துடன் ஒரு பாராளுமன்றம் கூட்டப்பட்ட ஐம்பது நாட்களுக்குள் அரசர் அதைக் கலைக்கவோ, கூட்டத் தொடரை ஒத்தி வைக்கவோ, அன்றுடக் கூட்டத்தைத் தள்ளி வைக்கவோ கூடாது எனவும் கூறியது. இங்ஙனம் இயற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவுக்கும் அரசர் வேறு வழியின்றி ஒப்புதலை அளித்தார். இங்கிலாந்தின் வடக்கெல்லையை ஸ்காட்லாந்தியப் படைகள் ஆக்கிரமித்துக்கொண்டதாலும், அப்படைகளை விரட்டியடிக்கப் போதிய நிதி தேவைப்பட்டதாலும், அந்நிதியுதவியைப் பாராளுமன்றம் நிச்சயம் செய்யும் என்ற நம்பிக்கையாலும்தான் இம்மசோதாக்களுக்கு அரசர் ஒப்புதல் அளித்தார்.

இங்ஙனம் அரசரின் தனிச் சிறப்பதிகாரங்களைப் பறித்துக் கொண்ட பாராளுமன்றம் அடுத்து சமயத் துறை பற்றிய சிக்கல்களைத் தீர்க்கமுற்பட்டது. அப்போதுதான் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் தலை தூக்கின. பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் மேலும் பல சீர்திருத்த மசோதாக்களைக் கொணர வேண்டும் என வாதிட்டனர். மற்றும் பலர் இதுவரை கொணர்ந்த சீர்திருத்தங்கள் போதுமானவை என்றும், மேலும் அரசருடைய அதிகாரங்களைக் குறைக்கக் கூடாதென்றும் கூறினர். இக்கருத்து வேறுபாடுகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே இரு பிரிவுகள் தோன்றின. அப்போது வேரோடு அழிக்கும் மசோதா (Root and Branch Bill) என்ற ஒரு மசோதா விவாதத்திற்குப் பொதுமக்கள் சபையில் கொண்டுவரப்பட்டது. இம் மசோதாவை 'பிஷப்புகளின் ஆட்சி முறையை ஒழித்துவிட்டு திருச்சபையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்' என்ற பியூரிட்டன் பிரிவினர் கொண்டு வந்தனர். ஆனால் இதை எதிர்த்தவர்கள் திருச்சபையில் ஓரளவு கட்டுப்பாட்டுடன் கூடி பிஷப்புகளின் ஆட்சி முறையை விரும்பியவர்கள். டிக்பி (Digby) எட்வர்ட் ஹைட் (Edward Hyde), ஃபாக்லந்து (Falkland) போன்ற இப்பிரிவைச் சார்ந்தவர்களிடமிருந்து இம்மசோதவிற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதால் 'வேரோடு அழிக்கும் மசோதா' நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டது. ஆகவே இம்மசோதாவை ஆதரித்தவர்கள் ஒரு கட்சியாகவும் எதிர்த்தவர்கள் மற்றொரு கட்சியாகவும் மாறினர்.

இந்நேரத்தில்தான் சார்லஸ் ஸ்காட்லாந்திற்குப் பயணமானார். அங்கே சார்லஸ் அமோகமாக வரவேற்கப்பட்டார். அரசரின் அதிகாரங்களை மேலும் குறைக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த (Pym) போன்றவர்கள் இச்செயலை

விரும்பவில்லை. அத்துடன் தரைப்படை, கப்பற்படை போன்ற வைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசரிடமிருந்து நீக்க வேண்டும் என்றும் இவர்கள் விரும்பினர். தமக்கு வேண்டிய அறிவுரையாளர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் நியமிக்கும் அதிகாரத்தையும் அரசரிடமிருந்து எடுத்துவிட வேண்டுமென்றும் இவர்கள் நினைத்தார்கள்.

1641 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அயர்லாந்தில் ஒரு பெருங்கலகம் (Rebellion) ஏற்பட்டது. அக்கலகத்தை ஒடுக்க ஒரு பெரும் படையைத் திரட்டவேண்டுமென்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டபோதிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்படை அரசரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடாது என்று வற்புறுத்தினர்கள். அயர்லாந்தில் ஏற்பட்ட கலகத்தை ஒடுக்கத் திரட்டப்பட்ட படை பாராளுமன்றத்தை ஒடுக்கப் பயன் படுத்தப்பட்டு விடுமோ என்று பிம் போன்றவர்கள் அஞ்சினர். அத்துடன் படையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசரிடமிருந்து எடுத்துவிட வேண்டும் என்று பிம் பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். இதற்கிணங்க கண்டனப் பேரறிக்கை (Grand Remonstrance) ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்குரியவர்களையே அரசர் தம் அமைச்சர்களாக நியமித்துக் கொள்ள வேண்டுமென்றும், திருச்சபையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தது. இக்கண்டனப் பேரறிக்கையின் மீது பொதுமக்கள் சபையில் விவாதம் நடைபெற்ற போது பெருங்குழப்பம், ஏற்பட்டது. இரத்தக் களரியில் கூட முடிவடையலாமென அஞ்சப்பட்டது. கண்டனப் பேரறிக்கையை மிதவாதிகள் ஹைட், ஃபாக்லந்து போன்றவர்களின் தலைமையின்கீழ் எதிர்த்தனர். இருந்த போதிலும் இம்மசோதாவை 159 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர். 148 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். ஆகவே பதினொரு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் இம்மசோதா சபையில் நிறைவேறியது. இம்மசோதாவை எதிர்த்து வாக்களித்தவர்கள் அரசரை ஆதரிக்கும் கட்சியெனவும், ஆதரித்து வாக்களித்தவர்கள் பாராளுமன்றத்தை ஆதரிக்கும் கட்சியெனவும் அழைக்கப்பட்டனர். அரசரை ஆதரிக்கும் கட்சிக்கு ஹைட், ஃபாக்லந்து தலைமை தாங்கினர். பாராளுமன்றத்தை ஆதரிக்கும் கட்சிக்கு பிம் தலைமை வகித்தார்.

அரசர் தம்முடைய தனிச் சிறப்புரிமைகளை (Prerogatives) யும் மற்றும் பெரும்பான்மையான அதிகாரங்களையும் இழந்தார் என்பது உண்மையே. இருந்தாலும் ஸ்காட்லாந்தில் தமக்கு அளிக்கப்பட்ட

பெரும் வரவேற்பினாலும், இங்கிலாந்தில் பலர் தம்மை ஆதரிப்ப தாலும் அரசர் தைரியமாய் இருந்தார். இச்சமயத்தில் இராணி யாரை அரசியல் துரோகக் குற்றம் சாட்டப் பாராளுமன்றம் முயற்சி செய்கிறது என்ற வதந்தி கிளம்பியதால், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்து வரும்படி இராணி சார்லஸைத் தூண்டினார். உடனே அரசர் அட்டார்னி ஜெனரலை அனுப்பிப் பாராளுமன்றத்தில் ஐவர்மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டும்படி கட்டளையிட்டார். பிரபுக்கள் சபையில் அட்டார்னி ஜெனரல் எழுந்து பிம் (Pym), ஹாம்ப்டன் (Hampden) ஹேஸ்லிரிக் (Haylerigg), ஹோல்ஸ் (Holles), ஸ்டிரோட் (Strode) ஆகிய ஐந்து உறுப்பினர்களின் மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டினார். பிரபுக்கள் சபையின் உறுப்பினர்கள் இவ்வறிவிப்பால் திகைப்படைந்தனர். அதற்கடுத்த நாளே, மனைவியால் தூண்டப் பட்டு அரசர் பொதுமக்கள் சபையில் நுழைந்து பிம்மையும் அவர் நண்பர்களையும் கைது செய்யப் போவதாகக் கூறினார். ஆனால் அவர்கள் அன்று சபைக்கு இச்செய்தி தெரிந்ததினால் வரவே யில்லை. அரசர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. அரசரின் இச்செயல் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோபத்தை மேலும் கிளறியது. பாராளுமன்றத்தின் உரிமைகளில் அரசர் தலையிடுகிறார் என்றும், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்ய அரசருக்கு உரிமையில்லை என்றும் பாராளுமன்றம் குரல் எழுப்பியது. மக்கள் பாராளுமன்றத்திற்கு உதவி செய்ய முன் வந்தனர். அதனால் அரசர் லண்டனை விட்டு வெளியேறினார். அத்துடன் தம் மனைவியை ஹாலந்து நாட்டுக்கு அனுப்பி விட்டார்.

அரசரின் அதிகாரங்களை மேலும் குறைக்க எண்ணிப் பாராளு மன்றத்திலுள்ள தீவிரவாதிகள் (Extremists) இரண்டு மசோதாக் களைக் கொணர்ந்தனர். ஒன்று பிஷப்புகளின் விலக்கு மசோதா (Bishops Exclusion Bill) மற்றொன்று நாட்டுப்படை மசோதா (Militia Bill) ஆகும். பிஷப்புகள் பிரபுக்கள் சபையின் உறுப் பினர் ஆவதைத் தடுக்கும் 'பிஷப்புகளின் விலக்கு மசோதாவிற்கு' அரசர் ஒப்புதல் அளித்தார். ஆனால் நாட்டுப்படை மசோதாவை ஏற்க மறுத்தார். அதனால் பாராளுமன்றம் இம்மசோதாவை அவசரச் சட்டம் (Ordinance) மூலம் அமுலாக்கியது. அதன் மூலம் படை திரட்டும் அதிகாரம் தனக்கே உரியது எனப் பாராளு மன்றம் நிலைநாட்டியது. அத்துடன் அவசரச் சட்டத்தைத் தனிப் பட்ட முறையில் பாராளுமன்றம் இயற்றியதும் இதுதான் முதல் தடவையாகும்.

பாராளுமன்றம் மேலும் ஒரு படி உயரச் சென்றது. பத்தொன்பது அறிவுரைகள் (Nineteen Proposition) என்ற

தலைப்பில் பாராளுமன்றம் ஒரு அரசியல் திட்டத்தை அரசர் முன் வைத்து அரசர் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தியது. இதை ஒரு முழுமையான அரசியல் அமைப்பு (Constitution) என்று கூற முடியாவிட்டாலும், சுலபமாக ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்குரிய ஒரு அடித்தளம் எனக் கூறலாம். இதன்படி பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்புதான் எல்லாப் பிரிவு கவுன்சிலர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும், நீதிபதிகளும் நியமிக்கப்பட வேண்டும். அரச குமாரர்களின் கல்வி, அவர்களது திருமணம் போன்றவைகள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். கத்தோலிக்கர்களுக்கெதிராகச் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும். திருச்சபை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட வேண்டும். படை பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தில் இருக்க வேண்டும். பிரபுக்கள் சபையில் பாபிஷ் பிரபுக்கள் தங்கள் உறுப்பினர் பதவிகளை இழக்கவேண்டும் இக்கருத்துக்கள் அரசரின் அதிகாரங்களைக் குறைக்க விரும்புவதோடு நிற்காமல் அழிக்கவும் முற்பட்டன. அதனால் சார்லஸ் இதை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு கண்டிக்கவும் செய்தார். அரசரின் இச்செயல் உள்நாட்டுப் போர் நிகழ ஏதுவாயிற்று.

4. உள்நாட்டுப் போர்

(Civil War)

முதலாம் சார்லஸ் அரசர் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மதியாது புறக்கணித்து மக்களின் உரிமைகளையும் சுதந்திரங் களையும் நசுக்க முற்பட்டதால்தான் உள்நாட்டுப் போர் ஏற்பட நேர்ந்தது. சார்லஸ் தம்முடைய தனிச்சிறப் பதிகாரங்களை நாட்டுச் சட்டத்திற்கு மேலானதாக நினைத்தார். தம்முடைய சிறப்பதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டத்திற்குப் புறம்பான முறை யில் மக்களிடம் வரிகளை வசூலித்தார். வரிகள் கொடுக்க விரும்பாத வர்கள் தண்டிக்கப்பட்டுச் சிறையி லடைக்கப்பட்டார்கள். அத் துடன் காரணமின்றியும் பலர் துன்புறுத்தப் பட்டார்கள். பாராளு மன்றத்தின் உரிமைகளில் அரசர் தலையிட்டார். பாராளுமன்றம் தனது உரிமைகளைக் காக்கப் பல சட்டங்களை இயற்றியது. பாராளு மன்றத்தின் வற்புறுத்தலினால் அரசர் பெரும்பான்மையான சட்டங் களுக்குத் தமது ஒப்புதலை அளித்தார். ஆனால் கடைசியாக அரசர் மேற்கொண்ட செயலே பெரும் புரட்சிக்கு (Great Revolution) அடிப்படையாக அமைந்தது. பாராளுமன்ற உறுப்பினர் களான பிம் என்பவரையும் அவருடைய நண்பர்களையும் கைது செய்ய முற்பட்டதும், பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட நாட்டுப்படை மசோதாவை (Militic Bill) அரசர் ஏற்க மறுத் ததும்தான் முக்கியமாக உள்நாட்டுப் போருக்குக் காரணமா யிருந்தன. அரசர் படையின்மீது தமக்குள்ள அதிகாரத்தை விட்டுக்கொடுக்க முன் வரவில்லை. பாராளுமன்றத்தின் தலைவரான பிம் என்பவர் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசரிடம் இருக்கக் கூடாது என்ற தம் கொள்கையிலிருந்தும் பின்வாங்க விரும்பவில்லை. இவர்களில் ஒருவராவது தம்முடைய கொள்கைகளை விட்டுக்கொடுக்க முன்வரவில்லை. இவர்களிடம் காணப்பட்ட முரட்டுப் பிடிவாதமும் பரஸ்பர சந்தேகமும் சேர்ந்து நாட்டில் போரைத் தோற்றுவித்தன.

இப்போர் அரசியல் காரணமாக ஏற்பட்டதா? அல்லது சமயம் காரணமாக ஏற்பட்டதா? என்ற கருத்து வேறுபாட்டிற்குப் பதில் அளிக்க வேண்டுமானால், அரசியலும் சமயமும் ஆகிய இரண்டும் உள்நாட்டுப்போர் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தன என்றே

கூற வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களும் பியூரிட்டன்களும் அரசரின் அதிகாரத்திற்கு இணங்க மறுத்தனர். நாட்டுச் சட்டங்களிலும் சமயத் துறையிலும் அரசர் தலையிடக் கூடாதென வாதிட்டனர். இறைமை அரசரிடமா? அல்லது அரசரை உட்கொண்ட பாராளுமன்றத்திடமா? என்ற பிரச்சினைதான் வாதத்தின் அடிப்படையாக அமைந்தது. அப்பொழுது அரசியல் வழியாக சமரசம் ஏற்பட வாய்ப்புகள் இருந்தன. ஆனால் அவ்வாய்ப்புகள் அனைத்தும் சமயத்தினால் ஏற்பட்ட சிக்கல்களினால் சீர்குலைந்தன. அரசியல் சிக்கல்களும் சமயத்துறையில் ஏற்பட்ட சிக்கல்களும் ஒன்றோடொன்று கலந்து விட்டதனால் பிரிப்பதும் கடினமாயிற்று.

அரசரை ஆதரிப்பவர் எனவும் பாராளுமன்றத்தை ஆதரிப்பவர் எனவும் இங்கிலாந்து முழுவதும் இரண்டு கூடாரங்களாக்கப்பட்டது. அநேகமாக பிரபுக்கள் எல்லாரும், உயர்தர வகுப்பாரும், பழமை விரும்பிகளும், ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகத்தினரும் அரசரை ஆதரித்தனர். பாமர மக்களின் பாசறையாகப் பாராளுமன்றத்தின் கட்சி திகழ்ந்தது. பெருநிலக் கிழார்கள் அரசரையும் பெரும்பான்மையான சிறுநிலக் கிழார்கள் பாராளுமன்றத்தையும் ஆதரித்தனர். பிரபுக்களில் சிலரும் பாராளுமன்றத்தை ஆதரித்தனர். பிரபுக்கள் சபையில் 30 பேர் தவிர மற்ற அனைவரும் அரசர் கட்சியில் சேர்ந்தனர். பொதுமக்கள் சபையில் 175 உறுப்பினர்கள் அரசரை ஆதரிக்க எஞ்சிய 300 உறுப்பினர்கள் பாராளுமன்றக் கட்சியை ஆதரித்தனர். சமயத் துறையில் பெரும்பான்மையான ஆங்கிலிக்கன்களும் பெரும்பான்மையான ரோமன் கத்தோலிக்கன்களும் அரசரை ஆதரித்தனர். பியூரிட்டன்கள் பாராளுமன்றத்தை ஆதரித்தனர். இவ்வாறு இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு நகரமும், கிராமமும், குடும்பமும்கூட இரு கட்சிகளாயின.

பொதுவாகப் பார்க்குமிடத்து, இங்கிலாந்தின் வடக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் அரசரை ஆதரித்தன. தெற்குப் பகுதியும் கிழக்குப் பகுதியும் பாராளுமன்றத்தை ஆதரித்தன. ஆனாலும் இப்பகுதிகளில் சில விதிவிலக்குகளும் இருந்தன. எங்கு அரசரின் கோட்டைகள் என மதிக்கப்பட்டனவோ அங்கேயும் சிலர் பாராளுமன்றத்தை ஆதரித்தனர். எங்குப் பாராளுமன்றத்திற்கு ஆதரவு அதிகம் என எண்ணப்பட்டதோ அங்கேயும் சிலர் அரசரை ஆதரித்தனர்.

சமூக, பொருளாதார நோக்கங்களை வைத்துப் பார்க்கும்போது பெரும்பான்மையாக, துறைமுகப் பகுதிகளும், வியாபாரிகளும், துணி வியாபார நகரங்களும் பாராளுமன்றத்தை ஆதரித்தன.

மத்தியதர வகுப்பாரும் பாராளுமன்றத்தை ஆதரித்தனர். ஆனால் அரசருக்குக் கிராமப்புறங்களிலும், பெரும்நிலக்கிழார்களிடமும், பெரும் வரி செலுத்துபவர்களிடமும், தனிச்சலுகைகளை அனுபவித்து வருபவர்களிடமும் ஆதரவு இருந்தது. இருப்பினும் பொருள் பலமும் ஆள் பலமும் அரசரைவிட பாராளுமன்றத்திற்கு அதிகமாய் இருந்தது. போர் வீரர்களைப் பொறுத்த வரையில் இரு தரப்பிலும் போர்ப்பயிற்சி அதிகம் பெறாதவர்கள்தான் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். ஆனால் பெரும் பிரபுக்களும் அவர்களின் பணியாட்களும் நல்ல குதிரை வீரர்களாக இருந்ததால் அரசரின் குதிரைப் படை மிகவும் திறமை வாய்ந்ததாக இருந்தது. பாராளுமன்றத்திடம் காலாட் படை மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. பாராளுமன்றத்தின் உதவிக்கு வந்த ஸ்காட்லாந்துப் படை போரில் கலந்துகொண்ட அனுபவம் பெற்றிருந்ததால் பாராளுமன்றப் படைக்கு மிகவும் பக்கபலமாய் இருந்தது. அத்துடன் கப்பற்படை முழுவதும் பாராளுமன்றத்திற்கு உதவி செய்தன. சார்லஸின் மைத்துனரான பிரடரிக்கின் மகன் ரூபர்ட் இளவரசர் (Prince Rubert) அரசரின் படைக்குத் தலைமை தாங்கினார். இவர் அவசரப் புத்திக்காரர். அறிவுரையாளர்களின் ஆலோசனையை மதிக்காதவர். பாராளுமன்றப் படைகளுக்கு எஸ்ஸெக்ஸ் பிரபு (Earl of Essex) தலைமை தாங்கினார். அத்துடன் வார்விக் எர்ல் (Early of Warwick) என்ற கப்பற் படைத் தலைவர் அரசருக்கு வெளிநாட்டு உதவி யாதும் வராமல் துறைமுகங்களைப் பாதுகாத்துக் கொண்டார்.

முதல் உள்நாட்டுப் போர்.

1642-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் நாள் உண்மையான போர் ஏற்பட்டது. எட்ஜ்கில் (Edge hill) என்ற இடத்தில்தான் முதல்போர் மூண்டது. இப்போரில் இருதரப்பினர்க்கும் வெற்றி தோல்வி இல்லாவிட்டாலும் அரசரின் படைகள் கை ஓங்கியிருந்தது. அதன் பிறகு பாராளுமன்றப் படைகள் சரல்குரோவ் (Charal Grove) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டு ஹாம்டன் (Hampton) கொல்லப்பட்டார். அரசரின் படைகளுக்கு ஸ்ட்ராட்டன் (Stratton) என்ற இடத்திலும் அட்வால்டன் மூர் (Adwalton Moor) என்னும் இடத்திலும் வெற்றி கிட்டியது. பின்னர் அரசர் கிளவுசெஸ்டர் (Gloucestor) நகரை முற்றுகையிட்டார். இவருடைய முற்றுகை தகர்த்தெறியப்பட்டது. 1643ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அரசரின் படைகளுக்கு நியூபரி (Newbury) என்ற இடத்தில் நடந்த போரில் பெரும் சேதம் ஏற்பட்டது. இதே மாதத்தில் ஸ்காட்லாந்திற்கும் 'பிம்'க்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி இங்கிலாந்தில்

4

பிரஸ்பிடீரியன் திருச்சபை (Presbyterian Church) ஏற்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் பாராளுமன்றத்திற்கு உதவியாக 20,000 போர் வீரர்களை ஸ்காட்லாந்து அனுப்பு வதாகவும் உறுதி கூறியது. ஸ்காட்லாந்தோடு இத்தகைய உடன்பாடு செய்துகொண்டதின் பயன் தெரிய ஆரம்பித்தது.

1644ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் நாள் மார்ஸ்டன் மூர் (Marston Moor) என்ற பெரும் போர் மூண்டது. அலக்ஸாண்டர் லிஸ்லி (Alexander Leslie), டேவிட் லிஸ்லி (Devid Leslie) ஆகியோரின் தலைமையில் ஸ்காட்லாந்துப்படை 27,000 போர் வீரர்களுடன் எல்லையைக் கடந்து வந்தது. கிராம்வெல்லும் (Cromwell) ஃபேர்ஃபாக்ஸும் Fairfoxe) படைகளுடன் ஸ்காட் லாந்துப் படைகளோடு சேர்ந்து கொள்ள வடக்கு நோக்கிப் புறப் பட்டனர். அப்பொழுது ஏற்பட்ட போரில் அரசர் படைகள் வீழ்ச்சியடைந்தன. அதனால் வடக்குப்பகுதி முழுவதையும் அரசர் கட்சி இழந்தது. இருந்தாலும் பாராளுமன்றப் படைகளுக்கு முழுப் பயன் கிட்டவில்லை. 1644ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் நாள் பாராளுமன்றப் படைகள் கார்ன்வால் (Cornwall) பகுதியிலும் அக்டோபரில் நியுபரி (Newbury) என்ற இடத்திலும் தோல்வியுற்றன. இத்தோல்விகள் பாராளுமன்றப் படைக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தன. படைகளைப் புதிய முறையில் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்று கிராம்வெல் பாராளுமன்றத் தைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் எஸ்ஸெக்ஸ், மான்ச் செஸ்டர் போன்ற பிரபுக்கள் அரசரை அரை மனத்தோடுதான் எதிர்க்கிறார்கள் என்றும், அவர்களைப் படையினின்று நீக்கின லொழிய நம் படைகளுக்கு வெற்றி கிட்டுதல் அரிது என்றும் வாதா டினார். கிராம்வெல்லின் ஆலோசனையை ஏற்றுப் பாராளுமன்றம் இரண்டு அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. ஒன்று தன்னல மிழப்பு அவசரச் சட்டம் (Self denying Ordinance) மற் றொன்று புது மாதிரிப்படை (New Model Army)யைத் திரட்டும்படி கூறும் அவசரச் சட்டமாகும். தன்னலமிழப்பு அவசரச் சட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது படை யில் தமக்கிருக்கும் பதவிகளை விட்டுவிட வேண்டும் என்றும், பிறகு பதவிகள் அளிக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் கூறியது. அதனால், எஸ்ஸெக்ஸ், மான்ச்செஸ்டர் பிரபுக்களும் கிராம்வெல்லும் படையில் பதவி யிழந்தனர். பிறகு ஃபேர்ஃபாக்ஸ் (Fairfax) படைத் தளபதியாகவும், கிராம்வெல் ஃபேர்ஃபாக் ஸுக்கு ஆலோசனை கூறுபவராகவும் உதவிப்படைத் தளபதியாக வும் நியமிக்கப் பட்டார்கள். இரண்டாவது அவசரச் சட்டப்படி புது மாதிரிப் படை ஏற்படுத்தப் பட்டது. அதில் 80,000போர் வீரர்கள் இடம் பெற்றார்கள். இப் படைக்கு ஸ்கிப்பன் என்பவர்

தலைமை தாங்கினர். இப் படைதான் இங்கிலாந்தின் முதல் படைக்குரிய படையாகக் (Professional Army) கருதப்பட்டது. இப் படையில் இடம் பெற்றவர்கள் பெரும்பாலோர் சுயேச்சைகள் தான். அரசரின் படை விரர்கள் பலர் இப் படையில் வந்து சேர்ந்து கொண்டனர். இப் புதுப் படை 1645ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் தேதி அரசர் படைகளை நேஸ்பி (Nascby)ப் போரில் தோற்கடித்தது. மேலும் பல பகுதிகளை அரசரிடமிருந்து பாராளுமன்றப் படைகள் கைப்பற்றின. ஃபேர்ஃபாக்ஸ் லேங் போர்ட் (Lang Port) என்னும் இடத்தில் அரசர் படைகளைத் தோல்வியுறச் செய்தார். வில்ட்-ஷையர் (Wiltshire) படைகளையும் பேஸிங்கிலிருந்த (Basing) படைகளையும் கிராம்வெல் தோற்கடித்தார், ரூபர்ட் இளவரசர் பிரிஸ்டல் (Bristol) நகரில் சரணடைந்தார். அதன்பின் பாராளுமன்றப் படைகள் ஆக்ஸ்ஃபோர்டு (Oxford) நகரை முற்றுகையிட முடிவெடுத்தது. பிறகு பாராளுமன்றப் படைகள் ஆக்ஸ்ஃபோர்டு நகரை நெருங்க நெருங்கச் சார்லஸுக்கு அச்சம் ஏற்பட்டது. உடனே அங்கிருந்து தப்பிப் பிழைத்து நாட்டிங்ஹாமில் இருந்த தமது ஆதரவாளர்களிடம் சேர்ந்தார். பிறகு ஆக்ஸ்ஃபோர்டு நகரம் சரண் அடைந்தது. சார்லஸின் மகன் வேல்ஸ் இளவரசர் அங்கிருந்து பிரான்சுக்குத் தப்பிச் சென்று விட்டார். தம் படைகள் எங்கு பார்த்தாலும் தோற்றதனால் சார்லஸ் வேறு வழியில்லாமல் 1646ஆம் ஆண்டில் நிவார்க் (Newark) நகரில் இருந்த ஸ்காட்லாந்துப் படைகளிடம் சரண் அடைந்தார். இத்துடன் முதல் உள்நாட்டுப் போர் முடிவடைந்தது.

சார்லஸ் ஸ்காட்லாந்துப் படைகளிடம் சரணடைந்த பின் பாராளுமன்றம் சார்லஸ் அரசரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பியது. அப்பொழுது இங்கிலாந்தில் முடியாட்சி (Monarchy) ஒழிக்கப்பட வேண்டியதில்லை என்றும், திருச்சபையில் புரட்சிகரமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதில்லை எனவும் பொதுக்கருத்து நிலவியது. சார்லஸ் மதிக்கத்தக்க வகையில் பாராளுமன்றத்துடன் ஒத்துழைத்திருந்தால் நிச்சயம் தமது பேச்சுவார்த்தைகளில் வெற்றி பெற்றிருப்பார். ஆனால் தாம் பிடித்த முயலுக்கு எட்டு கால்கள் என்று வாதாடியதினால்தான் பேச்சுவார்த்தை தோல்வியுற்றது. ஸ்காட்லாந்துப் படையினர் கேட்டுக்கொண்டும் சார்லஸ் பாராளுமன்றம் கொடுத்த நியூகாஸில் உடன்படிக்கையை (Treaty of Newcastle) ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். எனவே, ஸ்காட்லாந்துப் படையினர் சார்லஸைப் பாராளுமன்றத்திற்கு 400,000 பவுன்களுக்கு விற்றுவிட்டுத் தம் நாடு திரும்பினர். சார்லஸ் பாராளுமன்றத்தால் ஹோலம்பி ஹவுஸ் (Holmby House) என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டார்.

இச் சமயத்தில் பாராளுமன்றத்திற்கும் போர்ப் படைக்கும் இடையே ஒரு பூசல் ஏற்பட்டது. இப் பூசல் சமயத் துறையைப் பற்றியேதான் எழுந்ததே அல்லாமல் வேறொன்றுமில்லை. பெரும் பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரஸ்பிடீரியன் சமயத்தைச் சார்ந்தவர்கள். அரசர் பிரஸ்பிடீரியனிஸத்தை இங்கிலாந்தில் ஏற்படுத்தினால் அவருக்கு அதிகாரங்கள் அனைத்தையும் கொடுத்துவிடுவதாகக் கூறினார்கள். ஆனால் படையிலுள்ள பெரும்பான்மையோர் சுயேச்சைகளாய் இருந்தனர். அவர்கள் பிரஸ்பிடீரியனிஸத்திற்கு (Presbyterianism) ஆதரவு தர முன்வரவில்லை. பாராளுமன்றத்திற்கும் படைக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளை சார்லஸ் பயன்படுத்த நினைத்தார். அதன்படி இவ்விரு பிரிவுகளையும் ஒன்றோடொன்று மோதத் தூண்டி விட்டார். அதனால் பாராளுமன்றம் படை வீரர்களுக்கு மீதி சம்பளத்தைக் கொடுக்காமலேயே படையைக் கலைத்து விட்டது. போரில் பாராளுமன்றத்திற்கு வெற்றியைத் தேடித் தந்த போர் வீரர்கள் பாராளுமன்றம் இத்தகைய நடவடிக்கை எடுத்ததை எதிர்பார்க்கவேயில்லை. உடனே சார்லஸைக் கடத்திக் கொண்டு வரும்படி கிராம்வெல் (Cromwell) கார்னெட் ஜாய்ஸ் (Cornet Joyce) என்பவருக்குக் கட்டளை யிட்டார். அவரும் அவ்வாறே செய்தார். படையின் தலைமை யிடமான நியூ மார்க்கெட் (New Market) என்ற இடத்திற்கு சார்லஸ் கொண்டு போகப்பட்டார்.

சார்லஸ் அரசருடன் ஓர் உடன்பாடு செய்துகொள்ளப் படையானது முடிவெடுத்தது. அதன்படி முன் மொழித் தலைப்புகள் (Heads of Proposals) என்ற தொரு திட்டத்தை அரசர் முன் வைத்தது. இத் திட்டத்தை 1647-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கிராம்வெல்லின் மருமகனான ஐயர்டன் (Ireton) என்பவர் வரைந்தார். இத் திட்டத்தின்படி, நாட்டுப் படையின் மீதும், கடற்படை மீதும் பெரிய அதிகாரிகள் மீதும் பாராளுமன்றம் 10 ஆண்டுகளுக்கு ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்றும், கத்தோலிக்கர்களைத் தவிர மற்ற எல்லாப் பிரிவினருக்கும் சமயப் பொறை வழங்கப்பட வேண்டுமென்றும், பாராளுமன்றம் இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், பல தேர்தல் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், பொதுமக்கள் சபைக்குத் தான் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அடிக்கடி பாராளுமன்றக் கூட்டத் தொடரைக் கூட்ட வேண்டுமென்றும், பத்து ஆண்டுகட்கு அதிகாரம் வகிக்கின்ற ஒரு அரசுக் குழுவை (Council of State) ஏற்படுத்தி அதனிடம் வெளிநாட்டு விவகாரம், நாட்டுப்படை இவற்றைக் கவனிக்கும் பொறுப்பை அளிக்க வேண்டுமென்றும், அரசரைக் கேட்டுக்

கொண்டனர். ஆனால் அரசர் முட்டாள்தனமாக இவற்றை ஏற்க மறுத்துவிட்டார். ஸ்காட்லாந்தின் உதவியுடனும், ஒரு கட்சியை மற்றொரு கட்சியின்மீது ஏவிவிடுவதின் மூலமும் தமது பதவியைக் கைப்பற்றி விடலாம் என சார்லஸ் நம்பினார். இந் நம்பிக்கையின் அடிப்படையில்தான் சார்லஸ் ஸ்காட்லாந்தியரோடு ஓர் உடன்பாடு (Engagement) செய்துகொண்டார். அதில், இங்கிலாந்தில் மூன்று ஆண்டுகளுக்குப் பிரஸ்பிடீரிய மதத்தை ஏற்படுத்த இசைந்தால், சார்லஸை மீண்டும் தாங்கள் இங்கிலாந்தின் அரசராக்குவதாக ஸ்காட்லாந்தியர் வாக்களித்தனர். இதை யறிந்த பாராளுமன்றம் இனி சார்லஸோடு எத்தகைய பேச்சு வார்த்தையும் வைத்துக்கொள்ளக் கூடாது என முடிவெடுத்தது. பின் சார்லஸை ஆதரித்த ஸ்காட்லாந்துப் படைகள் போரில் குதித்ததால் நாட்டில் இரண்டாம் முறையாகப் போர் தொடங்கியது.

இரண்டாவது உள்நாட்டுப் போர்

1648ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இரண்டாவது உள்நாட்டுப் போர் தொடங்கியது. இப்போர் வெகு நாட்கள் நீடிக்கவில்லையாயினும் மிகவும் கொடூரமாக இருந்தது. கென்டிலும் (Kent) எஸ்ஸெக்ஸிலும் அரசருக்கு ஆதரவாய்க் கலகங்கள் ஏற்பட்டன. இக்கலகங்களை ஃபேர்ஃபாக்ஸ் தம் படையைக் கொண்டு அடக்கிவிட்டார். ஸ்காட்லாந்திலிருந்து 10,000 போர் வீரர்களடங்கிய படை யொன்று இங்கிலாந்தில் புகுந்தது. சார்லஸுக்காக ஸ்காட்லாந்துப் படைகளும் பிரஸ்பிடீரியன்களும் பாராளுமன்றத்திற்காகப் புதுமாதிரிப் படையும் போரில் குதித்தன. ஹாமில்டன் (Duke of Hamilton) பிரபு ஸ்காட்லாந்துப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். 1648ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கிராம்வெல் தம் படைகளுடன் பிரெஸ்டன் (Preston) என்னுமிடத்தில் ஹாமில்டன் படைகளைத் தோல்வியுறச் செய்தார். இத்துடன் இரண்டாவது உள்நாட்டுப் போர் முடிவுற்றது.

பிரெஸ்டன் வெற்றிக்குப் பின்பு பாராளுமன்றம் அரசரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பியது, ஆனால் படையானது இச் சமாதான முயற்சிகளைக் கண்டித்தது. இரண்டாவது உள்நாட்டுப் போர் ஏற்பட சார்லஸ்தான் காரணம் எனச் சுட்டிக்காட்டி அரசியல் துரோகக் குற்றத்திற்காக அவரைத் தண்டிக்க வேண்டுமென வற்புறுத்தியது. பாராளுமன்றம் இக் கூற்றை ஏற்றுக் கொள்ளத் தயங்கியதால், அப் பாராளுமன்றத்திலுள்ள 153 பிரஸ்பிடீரிய உறுப்பினர்கள் 1648ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதி கர்னல் பிரைடு (Colonel Pride) என்பவரால் பாராளுமன்றத்தி

னின்று வெளியேற்றப் பட்டார்கள். இந் நிகழ்ச்சி "பிரைடின் கழிப்பு" (Prid's Punge) என அழைக்கப்படுகின்றது. பிறகு அரசர் படை வீரர்களால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப் பட்டார். பாராளுமன்றத்திலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்கள்போக அப் பாராளுமன்றத்தில் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். எஞ்சிய பாராளுமன்றம் (Rump Parliament) என அழைக்கப்பட்ட அப் பாராளுமன்றம் சார்லஸ்மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டியது. இக் குற்றச்சாட்டை விசாரிக்க ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டது. அதில் 135 ஆணையாளர்கள் நியமிக்கப் பட்டார்கள். அந்த ஆணையாளர்களில் 50 பேர் நியமனத்தை ஏற்க மறுத்து விட்டார்கள். ஜான் பிரேட்ஷா (John Bradshaw) என்பவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இந் நீதிமன்றத்தை ஒரு உண்மையான நீதிமன்றம் என ஒப்புக்கொள்ள சார்லஸ் மறுத்து விட்டார். ஸிட்னி என்பவர் அரசரை விசாரிக்க இந் நீதிமன்றத் திற்கு உரிமையில்லை என வாதிட்டார். அதற்கு கிராம்வெல் 'அரசருடைய தலையை மட்டுமன்று, அத் தலையின்மீது வைக்கப் பட்டுள்ள மகுடத்தையும் சேர்த்து நாங்கள் வெட்டி யெறியப் போகின்றோம்' என்று மிக ஆத்திரத்துடன் கூறினார். இந் நீதி மன்றம் 1649ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதி விசாரணையை ஆரம்பித்தது. ஜனவரி மாதம் 27ஆம் தேதி அரசருக்கு அரசியல் தேசக் குற்றத்திற்காக மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அப்போது கடைசி வரையில் நீதிமன்றத் திற்கு 35 நீதிபதிகளே வந்திருந்தனர். சார்லஸ் இக் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஜனவரி 30-ஆம் தேதி அவரது அரண் மனையான வெண்மாளிகைக்கு எதிரிலேயே அவரது சிரம் துண்டிக் கப்பட்டது.

சார்லஸ் உயிர் நீத்ததை யறிந்த மக்கள் திடுக்கிட்டனர். பாராளுமன்றம் இத்தகைய முடிவிற்குப் போனதை மக்கள் விரும்ப வில்லை. இறக்கும்போது அரசர் காட்டிய வீரமும் கண்ணியமும் மக்களின் உள்ளத்தை உருக்கின. இங்கிலாந்தின் திருச்சபைக்காக உயிர் நீத்த உத்தமன் என்றும் தியாகி என்றும் பலராலும் போற்றப் பட்டார். ஆங்கிலேயர்களின் சட்டத்திற்காகவும் சுதந்திரத்திற் காகவும் தன் உயிரைத் தந்த உயர்ந்தோன் என மற்றும் பலராலும் புகழப்பட்டார்.

முதலாம் சார்லஸ் கொல்லப்பட்டது நேர்மையானதா? என்ற வினா கேட்கப்படலாம். சட்ட வழியாகப் பார்க்கும்போது அவரைக் கொன்றது சரியெனக் கூறமுடியாது. ஆனால் அறநெறி வழியாகவும் அரசியல் வழியாகவும் பார்க்கும்போது அவரைக் கொன்றது சரி யெனவே தோன்றுகின்றது. சார்லஸ் மக்களின் உரிமைகளை மதிக்க

வில்லை நாட்டின் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தம்முடைய தனிச் சிறப்பதிகாரங்களே சட்டத்தைவிட மேலானவை என்று நினைத்தார். அவரைக் கொல்ல வேண்டியது உரிமைகளை விரும்பும் ஆங்கிலேயர்களுக்குக் கடமையாகி விட்டது. ஆனால் பாராளுமன்றமும் சேனையும் அரசருக்கு எத்துணையோ வாய்ப்புகள் அளித்தன. அவ்வாய்ப்புக்களை அரசர் நல்ல முறையில் பயன்படுத்தியிருந்தால் கண்டிப்பாய்ப் பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் சமாதானம் ஏற்பட்டிருக்கும். ஆனால் சார்லஸ் அரசரோ இறக்கும் வரை பிடிவாதமாகவே இருந்தார். அவருடைய பிடிவாத குணமே அவருக்கு ஒரு எமனாக மாறியது.

5. காமன்வெல்த்

(Commonwealth)

முதலாம் சார்லஸ் கொல்லப்பட்ட பின்பு எஞ்சிய பாராளு மன்றம் (Rump Parliament) ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் 1649ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் நாள் இங்கிலாந்தை ஒரு காமன்வெல்த்தாக (Commonwealth) பிரகடனப்படுத்தியது. அந்த எஞ்சிய பாராளுமன்றம் நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியேயாகும். அதில் சுமார் 56 சுயேச்சை உறுப்பினர்களே இடம் பெற்றிருந்தனர். இவ்வெஞ்சிய பாராளுமன்றம் 1649-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17ஆம் தேதியும் 19ஆம் தேதியும் இரண்டு சட்டங்களை இயற்றியது. அதன்படி அரச பதவியும், பிரபுக்கள் சபையும் பயனற்றவையென்றும், வேண்டாத்தகாதவையென்றும், இவைகள் மக்களின் உரிமைகளுக்கும், சுதந்தரங்களுக்கும், பாதுகாப்புக்கும் அபாயகரமானவை என்றும் அறிவிக்கப்பட்டு அவைகள் ஒழிக்கப்பட்டன. அதன்பின்பு எஞ்சிய உறுப்பினர் களைக் கொண்ட பொதுமக்கள் சபை (House of Commons) முழு பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றது.

காமன்வெல்த்தின் நிருவாகத்தை மேற்கொள்ள அரசுக் கவுன்சில் (Council of State) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக் கவுன்சிலில் 41 உறுப்பினர்கள் இடம் பெற்றுர்கள். அவர்களில் 31 உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாவார்கள். இக் கவுன்சிலில் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தால் ஆண்டுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக்கவுன்சிலில் இடம் பெற்ற வர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும், படையிலிருந்து வந்தவர் களுமேயாவார்கள். இக்கவுன்சில் பல நிரந்தரக் குழுக்களின் மூலமாகச் செயல்பட்டது. இந்நிரந்தரக் குழுக்களில் படைக்குழு, கப்பற்படைக் குழு, வெளிநாட்டுத் தொடர்புக் குழு போன்ற வைகள் முக்கியமானவைகளாகும். இக்குழுக்கள் பயமின்றி நேர்மையான முறையில் செயல்பட்டன. இங்ஙனம் ஏற்படுத்தப் பட்ட நிருவாக அமைப்பில் செல்வாக்குடன் விளங்கியவர்கள் சிலரேதான். அரசுக் கவுன்சிலின் தலைவரான பிராட்ஷா (Bradshaw) என்பவரும், படைத் தளபதியான ஃபேர்ஃபாக்ஸ் Fairfoxe) என்பவரும், உதவிப்படைத்தளபதியான கிராம்வெல்

(Cromwell) லும் கப்பற்படைத் தலைவரான வேன் என்பவரும், வெளிநாட்டுச் செயலாளரான மில்டன் (Milton) என்ற கவிஞரும் தான் உண்மையில் அரசாங்கத்தை நடத்தி வந்தார்கள்.

1649ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாராளுமன்றம் இராசத் துரோகக் குற்றச் சட்டம் (Treason Act) என்ற ஒரு சட்டத்தை இயற்றியது. அரசாங்கத்தைக் கவிழ்க்க யாராவது சதி செய்தாலும் அல்லது இவ்வரசாங்கம் சட்ட முறையானதல்ல என்று கூறினாலும் அல்லது பாராளுமன்றத்துக்கு அதிகாரமில்லை யென்று தவருகப் பிரச்சாரம் செய்தாலும் அல்லது கெடு நோக்கத்தோடு எழுதி வெளியிட்டாலும் அவர்கள் கடுமையான இராசத் துரோகக் குற்றம் சாட்டப்படுவார்கள் என அறிவித்தது. செப்டம்பர் மாதத்தில் 'பத்திரிகைச் சட்டம்' (Press Act) என்ற ஒரு சட்டத்தை இயற்றி பத்திரிகைச் சுதந்திரத்தை அழித்தது. அரசாங்கத்தின் அனுமதியின்றி எதையும் அச்சிட்டு வெளியிடக் கூடாது என்று பாராளுமன்றம் கட்டளையிட்டது. சட்டத்தைச் சீர்திருத்த மாத்தியூஹேல் (Mathew Hale) என்ற சட்ட நிபுணர் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. இப்பாராளுமன்றம் கப்பற் படையைப் புதியதாய் உருவாக்கியது. ஒழுங்கீனங்கள் தண்டிக்கப்பட்டன. மிகத் திறமையான வரிவிதிப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய மிகச் சிறந்த பணிகளைப் பாராளுமன்றம் மேற்கொண்டது.

ஆனல் சமயத்துறையில் அப்பொழுது கருத்து வேறுபாடுகள் தோன்றின. இப்பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு குழு ஏற்படுத்தப் பட்டது. அக்குழுவின் ஆலோசனையால் திருச்சபையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதனுல் திருச்சபை தன் சுயாட்சியை இழந்து அரசுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இச்சமயத்தில் தான் நாட்டில் ஜனநாயக, சமதர்மக் கொள்கைகளைப் பற்றி பிரச்சாரம் நடைபெற்றது, இப் பிரச்சாரத்தை ஜான் லில்பர்ன் (John Lilburne) என்பவர் பொறுப் பேற்று நடத்தினர். இவர் எஞ்சிய பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இவருடைய பிரச்சாரத்திற்கு மக்கள் மட்டுமல்லாமல் போர் வீரர்களும் ஈர்க்கப்பட்டார்கள். அதனுல் 1649ஆம் ஆண்டு மே மாதத்தில் சாலஸ்பரியில் (Salisbury) ஒரு பெருங் கலகம் ஏற்பட்டது. மக்களும் நூற்றுக் கணக்கான போர் வீரர்களும் 'இறைமை மக்களிடமே' என்று முழக்கமிட்டார்கள். இதைக் கண்ட அரசாங்கம் அச்சமுற்றது. இருந்த போதிலும் கிராம்வெல்லும், ஃபேர்ஃபாக்ஸும் பெரும் பாடுபட்டு இக்கலகத்தை அடக்கினர்கள் இக்கலகத்திற்குக் காரணமானவர் எனக் கருதப்பட்ட ஜான்லில்பர்ன் 1649ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கைது செய்யப்பட்டார். ஆனல்

ஜூரிகள் அவர் குற்றமற்றவரெனக் கூறி அவரை விடுதலை செய்தனர். ஆனால் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி அவரை நாடு கடத்தியது.

பொதுநல அரசு திருச்சபைக்குச் சொந்தமான நிலங்களையும் அரசருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் சொந்தமான நிலங்களையும் பறிமுதல் செய்தது, அதனால் இங்கிலாந்தில் ஒரு புது வகையான நிலச் சொந்தக்காரர்கள் தோன்றினார்கள். அவர்களிடையே முக்கியமானவர்கள் வியாபாரிகளும், தொழில் செய்வோரும். கப்பற்படையையும், தரைப் படையையும் சார்ந்தவர்களும் ஆவார்கள். அத்துடன் நாட்டில் தனியுரிமைகள் ஒரு சாராருக்கு வழங்கப்படுவதும் ஒழிக்கப்பட்டது. அத்துடன் எஞ்சிய பாராளுமன்றம் வெளிநாட்டு வாணிகத்தையும் மேற்கொண்டது. ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் சரக்குகள் இங்கிலாந்து கப்பல்கள் மூலமும், ஐரோப்பாவிலிருந்து அனுப்பப்படும் சரக்குகள் இங்கிலாந்து கப்பல்கள் மூலமுமாகவோ அல்லது சரக்குகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கப்பல்கள் மூலமாகவோ, வர வேண்டுமென்றும் எஞ்சிய பாராளுமன்றம் 1651-ல் நாவாய்ச் சட்டம் (Navigation Act) என்ற ஒரு சட்டத்தையும் இயற்றியது. இத்தகைய பல சீர்திருத்தங்களோடு எஞ்சிய பாராளுமன்றம் திறனோடு செயல்பட்டது.

காமன்வெல்த்தும் வெளிநாட்டுக் கொள்கையும்

காமன்வெல்த்தின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெறவில்லை என்று கூறமுடியாது. இவ்வரசின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெற்றதனால்தான் இங்கிலாந்து ஐரோப்பாவிலேயே ஒரு, வல்லரசாகத் திகழ முடிந்தது.

அயர்லாந்து :

சார்லஸின் மரணத்திற்குப் பின் அயர்லாந்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆர்மாண்ட் (Ormonde) என்ற தலைவர் அயர்லாந்தில் அரசர் ஆதரவாளர் கட்சியை மீண்டும் உயிர்பெறச் செய்தார். அத்துடன் அங்கிருந்த கத்தோலிக்கர்களிடமும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதனால் கத்தோலிக்கர்களும் ஓநில் (Oneil) தலைமையில் இவருடன் ஒத்துழைத்தனர். இவர்கள் அயர்லாந்தில் ஒரு பெருங்கலகத்தைத் தோற்றுவித்தனர். இதன் காரணமாய் வாக்ஸ்ஃபோர்டு (Waxford) ட்ரோகிடா (Drogheda) என்ற இடங்களிலிருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறினர். அதனால் பொதுநல

அரசின் நிலை அயர்லாந்தில் மிகவும் பலவீனமாக்கப்பட்டது. இத்தகைய நெருக்கடியான நிலையில்தான் அயர்லாந்தை மீட்கும் பணி கிராம்வெல்லிடம் ஒப்படைக்கப்பட்டது. 1649ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவர் 10,000 போர் வீரர்களுடன் ட்ரோகிடா என்ற இடத்தை அடைந்தார். தமக்குப் பணிந்துவிடும் படி கிராம்வெல் போர் வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்தும் அவ்வீரர்கள் பணிய மறுத்துவிட்டார்கள். அதனால் ஆத்திர மடைந்த கிராம்வெல் டிடோகிடா, வாக்ஸ்ஃபோர்டு ஆகிய இடங்களைத் தாக்கி, தம் எதிரிகளை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தார். மற்றப் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு கிராம்வெல் அயர்லாந்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினார். மற்ற எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றும்படி தம்முடைய மருமக னாகிய ஐர்டன் (Ireton) மற்றும் லட்லோ (Ludlow) என்ற தளபதிகளுக்கு ஆணையிட்டுவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பினார். அங்ஙனமே ஐர்டனும், லட்லோவும் லிமெரிக், வாட்டர்ஃபோர்டு கால்வே போன்ற இடங்களைக் கைப்பற்றினார்கள். அத்துடன் அயர்லாந்துப் போர் ஓய்ந்தது. பிறகு தமக்கு உதவி செய்த ஆங்கிலேயப் படை வீரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் கிராம் வெல் அயர்லாந்து நிலங்களைத் தாராளமாய் வழங்கினார். அயர் லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி, அயர்லாந்துப் பாராளுமன்றம் ஒழிக்கப்பட்டது. இங்கிலாந்துப் பாராளுமன்றமே அயர்லாந்தின் பாராளுமன்றம் ஆயிற்று. அயர் லாந்து 30 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவது என்றும் ஒப்புக் கொள்ளப் பட்டது. பின் கிராம்வெல்லின் மருமகன் ஐயர்டன் (Ireton) அயர்லாந்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

ஸ்காட்லாந்து :

ஸ்காட்லாந்தில், முதலாம் சார்லஸின் மகன் இரண்டாம் சார்லஸை இங்கிலாந்தின் அரசராக்க வேண்டுமென்று மான்ட் ரோஸின் (Montrose) தலைமையில் பலர் கலகம் செய்தார்கள். மான்ட்ரோஸ் என்பவர் முதலாம் சார்லஸிடம் மதிப்போடும் பக்தி யோடும் பணிபுரிந்தவர். இவருடைய உதவியால் தம் பதவியைப் பெற்றுவிடலாம் என இரண்டாம் சார்லஸ் நினைத்தார். ஆனால் மான்ட்ரோஸ் ஸ்காட்லாந்திய ஒப்பந்தக்காரர்களால் தோற் கடிக்கப்பட்டு அவர்கள் கையில் பிடிபட்டார். இவருக்கு மிகக் கொடுமையான தண்டனை கிடைத்தது. இவர் ஸ்காட்லாந்திய நகரங்களின் வீதிகளிலே இழுத்துச் செல்லப்பட்டார். இவருடைய உடல் சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு மக்களுக்கு விநி யோகிக்கப்பட்டது. பிறகு வேறுவழியின்றி இரண்டாம் சார்லஸ்

ஸ்காட்லாந்து பிரஸ்பிடீரியர்களுக்குத் தன் ஆதரவைத் தந்தார். இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து ஆகிய முந்நாடுகளிலும் பிரஸ்பிடீரிய மதத்தை நிலைநாட்டுவதாக ஒப்புக் கொண்டார். 1650 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வீத் (Weeth) என்னுமிடத்தில் அவர் வந்திறங்கினார். ஸ்காட்லாந்தியர் அவரைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொண்டு ஸ்கோன் என்னுமிடத்தில் அவருக்கு முடி சூட்டினார்கள்.

அதன்பின் ஸ்காட்லாந்தியர் இங்கிலாந்தின்மீது படையெடுக்க ஆயத்தம் செய்தனர். இதையறிந்த கிராம்வெல் ஸ்காட்லாந்தின்மேல் படையெடுக்கும்படி ஃபேர்ஃபாக்ஸைக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஃபேர்பாக்ஸ் தம் மனைவியின் தூண்டுதலால் ஸ்காட்லாந்தின்மீது படையெடுக்க விரும்பாது தம் பதவியையே ராஜிநாமாச் செய்துவிட்டார். அதனால் கிராம்வெல் தாமே படையுடன் ஸ்காட்லாந்திற்குப் புறப்பட்டுச் சென்றார். போரில் கிராம்வெல் 1650ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் நாள் தன்பார் (Dunbar) என்ற இடத்தில் பெரு வெற்றி பெற்றார். இப்போரில் பல ஸ்காட்லாந்தியப் போர் வீரர்கள் மாண்டனர். சுமார் 9000 போர் வீரர்கள் சிறைப்பட்டனர். இதையறிந்த இரண்டாம் சார்லஸ் ஹாமில்டன் பிரபுவின் உதவியுடன் இங்கிலாந்தின் மீது படையெடுத்தார். இதையறிந்த கிராம்வெல் உடனே இங்கிலாந்திற்குப் புறப்பட்டுவந்து சார்லஸின் படைகளை ஓர் செய்டர் (Worcester) என்னுமிடத்தில் போரிட்டுத் தோற்கடித்தார். ஹாமில்டன் பிரபு இப்போரில் மாய்ந்தார். சார்லஸும் பிரான்சுக்குத் தப்பி ஓடிவிட்டார். இங்ஙனம் ஸ்காட்லாந்திய முயற்சி தோல்வியுற்றது. 1652ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தும் இங்கிலாந்தும் ஒரே நாடென அறிவிக்கப்பட்டது. அயர்லாந்தைப்போல் ஸ்காட்லாந்தும் பாராளு மன்றத்திற்கு 30 உறுப்பினர்கள் அனுப்ப அனுமதிக்கப்பட்டது. இரு நாடுகளிடையே சுயேச்சையான வியாபாரத் தொடர்பு ஏற்பட்டது.

டச்சுப் போர் :

இப்போர் ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. 1623-ஆம் ஆண்டில் அம்பாய்னு (Amboyna) என்னுமிடத்தில் பல ஆங்கிலேயர்களை ஈவு இரக்கமின்றி டச்சுக்காரர்கள் கொலை செய்தனர். அத்துடன் பொதுநல அரசின் தூதுவர் ஒருவர் ஹாலந்தில் கொல்லப்பட்டார். உள்நாட்டுப் போர் நடந்துகொண் டிருந்தபோது ஹாலந்து அரசர் படைகளுக்கு உதவி செய்தார். இவைகளால் ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரர்களுக்கும் பகைமை இருந்து கொண்டே வந்தது. அத்துடன் பொதுநல அரசு இங்கிலாந்தில்

ஏற்பட்டவுடன் 1651ஆம் ஆண்டில் எஞ்சிய பாராளுமன்றம் நாவாய்ச் சட்டம் (Navigation Act) ஒன்ற ஒரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தினுல் டச்சுக்காரர்களின் வியாபாரம் பாதித்தது. இதற்காக டச்சுக்காரர்கள் இங்கிலாந்துடன் போர் செய்ய ஆயத்தமானுர்கள். இவர்களால் பல துன்பங்களை அனுபவித்த ஆங்கிலேயர்களும் பழிக்குப் பழி வாங்க இத்தகைய ஓர் சூழ்நிலையை எதிர்பார்த்திருந்தார்கள். 1652ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்குமிடையே போர் மூண்டது. பிளேக் (Blake) என்னும் தளபதி ஆங்கிலக் கப்பற் படைக்குத் தலைமை தாங்கினுர். வான்ட்ராம்ப் (Van Tromp) என்பவர் டச்சுக்காரர்களின் கப்பற் படைக்குத் தலைமை தாங்கினுர். இரு தரப்பிலும் 200க்கு மேற்பட்ட போர்க் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. பிளேக் முதலில் தோல்வியுற்ற போதிலும், 1653ஆம் ஆண்டு பிப்ரவரியில் போர்ட்லாண்டு (Portland) என்ற இடத்திலும் மே மாதம் கேப்பார்டுஸ் (Gabbards) என்ற இடத்திலும் டச்சுக் கப்பற் படைகளை வியத்தகும் விதத்தில் தோற்கடித்தார். பிறகு டெக்ஸல் (Texel) என்னுமிடத்தில் டச்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டு அதன் தளபதி வான்ட்ராம்ப் கொல்லப்பட்டார். பிறகு 1654ஆம் ஆண்டு இரு நாடுகளிடையே ஓர் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி அம்பாய்னு படுகொலைக்குத் தக்க நஷ்ட ஈடு கொடுப்பதாகவும், நாவாய்ச் சட்டத்தை ஒப்புக் கொள்வதாகவும், ஆங்கில அரசரை ஆதரித்தவர்களுக்கு உதவி செய்வதில்லை எனவும் டச்சுக்காரர்கள் ஒப்புக் கொண்டனர்.

இங்ஙனம் காமன்வெல்த்துக்கு எதிரியாகச் செயல்பட்ட அயர்லாந்து, ஸ்காட்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகள் ஒடுக்கப்பட்டன. ஆகவே காமன்வெல்த்தின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெற்றது என்பதில் சந்தேகமில்லை.

எஞ்சிய பாராளுமன்றத்தின் கலைப்பு :

இங்கிலாந்தில் எஞ்சிய பாராளுமன்றத்தின் மதிப்பும் செல்வாக்கும் குறைய ஆரம்பித்தன. அப் பாராளுமன்ற உறுப்பினர்கள் லஞ்ச ஊழல் பேர்வழிகளாகவும், பதவி ஆசை பிடித்தவர்களாகவும் மாறியதால்தான் குறை கூறப்பட்டனர். நெருக்கடிகள் பல தீர்ந்துவிட்டபடியால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்தி, புதுப் பாராளுமன்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், நாட்டில் நிருவாகத் துறையிலும், சமயத் துறையிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் படைவீரர்களும் எண்ணினர். ஆகவே இவ்வெஞ்சிய பாராளுமன்றம் படைவீரர்களின் ஆதரவையும் மதிப்பையும் பெறத் தவறி விட்டது. ஆகவே, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி படை வீரர்கள் வற்புறுத்தினர்.

இவர்களின் வற்புறுத்தலுக்கிணங்கி 1654ஆம் ஆண்டு நவம்பர் 3இல் 'எங்களது கடைசிக் கூட்டத்தை வைத்துக் கொள்கின்றோம்' என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறினர். இப்பாராளுமன்ற உறுப்பினர்களின் திறமையின்மையாலும், லஞ்ச ஊழல்களாலும் மேலும் மேலும் பல குற்றங்கள் ஏற்படும் என்று கிராம்வெல்லும் மற்றவர்களும் நினைத்துப் பொதுத்தேர்தல் தேதியை முந்தி வைத்துவிட்டார்கள். பொதுத் தேர்தலில் தாங்கள் வெற்றியடைய முடியாது என நினைத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளைக் காத்துக் கொள்ள ஒரு சட்டம் கொண்டுவர முன்வந்தார்கள். புதிய பாராளுமன்றமானது தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அதில் பழைய எஞ்சிய பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அப்படியே இடம் பெறவேண்டும் என்றும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களைத் தீர்மானிக்கும் உரிமை அவ்வெஞ்சிய பாராளுமன்றத்துக்கே இருக்க வேண்டுமெனவும், கூறும் மசோதாவைத் தயாரித்தார்கள். இதையறிந்த கிராம்வெல் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஒரு கூட்டம் கூட்டினார். அக்கூட்டத்தில் அத்தகைய மசோதாவைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார். கிராம்வெல்லின் இந்நடவடிக்கை வரம்பிற்கு மீறியது தான். உடனே மறுநாளே இம்மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதையறிந்த கிராம்வெல் சில படைவீரர்களுடன் பாராளுமன்றத்திற்குச் சென்றார். அங்கு நடக்கும் விவாதத்தையும் சிறிது நேரம் கவனித்தார். சபாநாயகர், இம்மசோதா நிறைவேறியது என்று கூற எழும்போது, கிராம்வெல் எழுந்து பாராளுமன்றத்தின் சேவைகளை முதலில் புகழ்ந்துவிட்டு, பிறகு ஒவ்வொரு உறுப்பினரையும் சுயநலக்காரர்களென்றும், வஞ்சகர்களென்றும், லஞ்சப் பேர்வழிகளென்றும் திட்டினார். அதன்பின் கலைந்துபோகும்படி பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். அதற்குப் பாராளுமன்றம் இணங்க மறுத்ததால் தன் போர் வீரர்களைக் கொண்டு பாராளுமன்றத்தைக் கலைத்தார். அத்துடன் எஞ்சிய பாராளுமன்றத்தின் காலம் முடிந்தது. எஞ்சிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் அரசுக் கவுன்சிலும் (State Council) வேண்டியதில்லை என்று கூறி அதையும் கலைத்துவிட்டார்.

இவ்வாறு தாமாகவே கலைய மறுத்த எஞ்சிய பாராளுமன்றம் கட்டாயத்தின் மூலம் கலைக்கப்பட்டவுடன் படைத்தலைவர்கள் மற்றொரு பிரதிநிதிகள் அமைப்பை ஏற்படுத்த நினைத்தார்கள். தேர்தல் நடைபெற்றால் தம்முடைய பிரதிநிதிகள் வெற்றிபெற முடியாமற் போய்விடுமோ என எண்ணிய ஒவ்வொரு திருச்சபைக்கும் 'புதிய பிரதிநிதிகள் அமைப்பிற்கு யார் தகுதியானவர்கள் என்று நினைக்கிறீர்களோ அவர்களுடைய பெயர்களை எழுதி அனுப்புங்கள் எனக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவர்

களுடைய பதில்கள் வந்தவுடன் படைக்குழு (Council of the army) உட்கார்ந்து ஆராய்ந்து இங்கிலாந்திலிருந்து 129 பிரதிநிதிகளையும். ஸ்காட்லாந்திலிருந்து ஐந்து பிரதிநிதிகளையும், அயர்லாந்திலிருந்து ஆறு பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்தது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 140 உறுப்பினர்களைக் கொண்ட இப் பாராளுமன்றம் சில சமயங்களில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றம் (Nominated Parliament) என்றும் மற்றும் சில சமயங்களில் பார்போன் பாராளுமன்றம் (Barbones Parliament) என்றும் அழைக்கப்படுகின்றது.

இப்பாராளுமன்றத்தின் செயல்கள் இதைக் கூட்டுவித்தவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. இப்பாராளுமன்றத்திலிருந்த உறுப்பினர்கள் திறமையற்றவர்களாகவும், பொது வாழ்வு அனுபவமற்றவர்களாகவும் இருந்தனர். முயற்சி செய்து சிலசட்டங்களை இவர்கள் இயற்றினார்கள். ஆனால் அச்சட்டங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகள் அல்ல. இதனால் இப்பாராளுமன்றத்தின் மதிப்பு குறைந்தது. தங்களுடைய தேவைகளுக்கேற்றவாறு இப்பாராளுமன்றம் செயல்படவில்லை என்று படைத் தலைவர்கள் எண்ணினர். பாராளுமன்றத்திலுள்ள தம்முடைய ஆதரவாளர்களை அழைத்து, 'ராஜிநாமா செய்துவிட்டு கிராம்வெல்லிடம் அதிகாரத்தை ஒப்படைத்து விடுங்கள்' என்று படைத் தலைவர்கள் கூறினர். அதன்படியே பாராளுமன்றம் தானாகவே கலைந்துவிட்டது. இதன் பின்னர் சில படைத்தலைவர்கள் அரசாங்க அமைப்புப் பத்திரம் (Instrument of Government) என்னும் ஓர் அரசியல் திட்டத்தை வகுத்தனர். இதில் பெரும் பங்கேற்றவர் ஜான் லாம்பர்ட் (John Lambert) என்னும் படைத் துறைப் பணித்தலைவராவார். பிறகு இதை ஏற்றுக் கொள்ளும்படி கிராம்வெல் வற்புறுத்தப்பட்டார். இது இங்கிலாந்தின் முதன்மையானதும் கடைசியானதுமாகிய 'எழுதிய அரசியல் அமைப்பு' (Written Constitution) என அழைக்கப்படுகின்றது.

இவ்வரசாங்க அமைப்புப் பத்திரமானது இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் ஒரே காப்பாளர் (Protector) ஆட்சியின் கீழ் வரவேண்டுமென்றும், அக் காப்பாளர் கிராம்வெல்லாக இருக்கவேண்டுமென்றும், அவருக்கு ஆலோசனை கூறவும் நிர்வாகத்தை நடத்தவும் பதினைந்து பேர்களடங்கிய ஓர் அரசுக் கவுன்சில் (Council of State) நிறுவப்படவேண்டுமென்றும், சட்டங்களை இயற்றுவதற்கு 460 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் மூன்றாண்டுகளுக்கொரு முறை கூட்டப்பட வேண்டுமென்றும், குறைந்தது ஐந்து மாதம் முடியுமுன்னர் இப்பாராளுமன்றம் கலைக்கப்படக் கூடாதென்றும்,

அரசு கவுன்சிலில் ஓர் இடம் காலியாகும்போது, இக்காலி யிடத்தை நிரப்பப் பாராளுமன்றம் ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமென்றும், அவர்களில் இருவரை அரசுக் கவுன்சில் தெரிவு செய்து அந்த இருவரில் ஒருவரைக் காப்பாளர் இறுதியாகத் தேர்ந்தெடுப்பார் என்றும் கூறுகின்றது.

ஆங்கில அரசியல் அமைப்பின் தன்மையை மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சி இப்பத்திரத்தின் முக்கியத்துவமாகும். எழுதா அரசியலமைப்பாகவும் நெகிழும் அரசியலமைப்பாகவும் இருந்த இங்கிலாந்து அரசியலமைப்பை எழுதிய அரசியலமைப்பாகவும் நெகிழா அரசியலமைப்பாகவும் மாற்ற இப்பத்திரம் முயற்சி செய்தது. இப்பத்திரத்தின்படி 1653ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாள் கிராம்வெல் காப்பாளர் பிரபுவாக (Lord Protector) பதவியேற்றார்.

6. காப்பாளரின் ஆட்சி.

(Protectorate)

அரசாங்க அமைப்புப் பத்திரத்தின்படி கிராம்வெல் 1653ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாள் இங்கிலாந்தின் காப்பாளர் பிரபுவாக (Lord Protector) அமர்த்தப்பட்டார். இவரே உண்மையில் நாட்டையாளும் தலைவராக விளங்கினார். நாட்டிற்குத் தம்மாலான தொண்டினையும் செய்தார். தாம் இறப்பதற்குள் இங்கிலாந்தின் மதிப்பையும் பெருமையையும் உலகில் நன்கு நிலை நாட்டினார்.

ஆங்கில வரலாற்றிலேயே மிக முக்கியமானவர்களில் கிராம்வெல்லும் ஒருவராக மதிக்கப் படுகின்றார். 1599ஆம் ஆண்டில் ஹன்டிங்டம் (Huntingdom) என்ற நகரில் ஒரு நிலக்கிழாருக்கு மகனாகப் பிறந்த அவர் கேம்பிரிட்ஜ் கல்லூரி ஒன்றில் பயின்றார். அதன் பிறகு ஒரு வணிகர் மகளை மணம்புரிந்து ஒரு விவசாயியாகவே வாழ்ந்து வந்தார். 1628ஆம் ஆண்டு தமது 29ஆவது வயதில் ஹன்டிங்டமிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தாம் ஒரு பியூரிட்டனாக இருந்ததால் 'உரிமைகள் பத்திரத்தை'ப் பாராளுமன்றத்தில் ஆதரித்தார். இங்கிலாந்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்தான் இவரை முன்னிலைக்குக் கொண்டு வந்தது. உள்நாட்டுப் போரில் இவர் மேற்கொண்ட வீரமிக்க செயல்கள் இவரை ஒரு தலைவராக்கியது. 'இதுவரை இங்கிலாந்தில் இருந்திராத ஒரு சிறப்புமிக்க தலைவர்' என ராம்சே மொயர் (Ramsay Muir) என்பவர் இவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். உள்நாட்டுப் போர் இவர் இல்லாமல் வெற்றி பெற்றிருக்க முடியுமா என்பது சந்தேகம்தான். இவருடைய ஆலோசனையால் திறமையற்ற பாராளுமன்றத் தளபதிகள் பதவியிழந்தனர். திறமைமிக்க 'புது மாதிரிப் படையை' உருவாக்க நல்ல முயற்சி எடுத்துக் கொண்டார். இப்படையினால்தான் பல வெற்றிகளைப் பெற்றார். 1649ஆம் ஆண்டில் அரசரின் தலையைத் துண்டிக்க ஆதரவு அளித்தார். முதலாம் சார்லஸின் கொலைக்குப் பின்பு, இவர் அங்கிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தலைவரானார். முடியரசை ஒழித்துக் குடியரசை நிறுவினார். அதிகாரத்தின் உச்சநிலையை அடைந்தபோது இவர் தலை கிறு

கிறுக்கவில்லை. நெப்போலியன் இவரது நிலையை அடைந்தபோது தன்னைப் பேரரசராக அறிவித்துக் கொண்டான். ஆனால் கிராம்வெல் மக்களே அரச மகுடத்தை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்திய போதும் அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அதனால் தாம் ஒரு கொள்கைவீரர் என நிரூபித்துக் காட்டினார். அத்துடன் நாட்டின் நன்மையைக் கருதி, கைம்மாறு சிறிதும் கருதாது அல்லும் பகலும் உழைத்தார்.

கிராம்வெல்லும் சமயமும்

கிராம்வெல் இங்கிலாந்தின் காப்பாளராகப் பதவியேற்றவுடன் மதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைந்தார். கிராம்வெல் பியூரிட்டன் கொள்கைகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர். ஆகவே, அதிகாரம் கையில் கிடைத்தவுடன் அவர் தம்முடைய கொள்கைகளைச் செயலாக்க முயன்றார். பாபிஸ்டுகள் (Papists), எபிஸ்கோபாலியன்ஸ் (Episcopalians) போன்றவர்களைத் தவிர மற்ற கிறித்துவர்கள் அனைவரையும் சகித்துக்கொண்டார். யூதர்களுக்குக்கூட சில சலுகைகள் கொடுக்கப்பட்டன. அதனால் பல யூதர்கள் லண்டனுக்குத் திரும்பிவந்து வியாபாரத்தைச் செய்யத் தொடங்கினார்கள். திருச்சபைகளில் பல குருமார்கள் பதவியிழந்தனர். அவர்களுக்குப் பதிலாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பல பியூரிட்டன்களும், பிரஸ்பிடீரியர்களும் சுயேச்சையாளர்களும் குருமார்களாக அமர்த்தப்பட்டனர். கத்தோலிக்கர்கள், குருமாராட்சிவாதிகள் போன்றோரைத் தவிர மற்ற அனைவருக்கும் தொழுகைச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. மக்களின் தனி வாழ்வில் பல சீர்திருத்தங்களைச் செய்து அவர்களைத் தூய்மை செய்து விடலாம் என கிராம்வெல் நினைத்தார். அதற்காக கிறிஸ்துமஸ் விழாக்கள் நிறுத்தப்பட்டன. நாடகக் கொட்டகைகள் மூடப்பட்டன. குதிரைப் பந்தயங்கள், கோழிச் சண்டைகள் போன்ற உல்லாசப் பொழுது போக்குகள் தடை செய்யப்பட்டன. அத்துடன் குடிப் பழக்கத்தையும் பிறர்மனை நயத்தலையும் தடை செய்தார். திருச்சபைகளில் உள்ள குருமார்கள் அறநெறிகளுக்குப் புறம்பாக நடந்தாலும் அல்லது பொதுநல அரசுக்கு நன்றியற்ற முறையில் செயல்பட்டாலும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள். இத்தகைய வகையில் கிராம்வெல் சமயத்துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். இச்சீர்திருத்தங்கள் பலருக்குப் பிடிக்காவிட்டாலும் அவர்கள் வேறு வழியின்றிப் பின்பற்றி வந்தார்கள்.

கிராம்வெல்லும் பாராளுமன்றமும்

கிராம்வெல் தமது முதல் பாராளுமன்றத்தை அரசாங்க அமைப்புப் பத்திரத்தின்படி 1654 ஆம் ஆண்டு செப்டம்பர்

மாதம் 3ஆம் நாள் கூட்டினார். கத்தோலிக்கர்களும் அரச ஆதரவாளர்களும் இப் பாராளுமன்றத்தில் இடம் பெறவில்லை. இப் பாராளுமன்றத்தில் பிரஸ்பிடீரியர்களே பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருந்தனர். இப் பாராளுமன்றத்தில் ஸ்காட்லாந்திலிருந்தும் அயர்லாந்திலிருந்தும் வந்த பிரதிநிதிகள் இடம் பெற்றார்கள். ஆகவே, இப்பொழுது இம் மூன்று நாட்டுப் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு 'பாராளுமன்ற ஒன்றியம்' உதயமாயிற்று. இப் பாராளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் அரசரை ஆதரித்தவர்கள் வாக்குரிமை இழந்தார்கள். பாராளுமன்றத்திற்கெதிராக அயர்லாந்தில் கலகம் செய்தவர்கள் வாக்குரிமையையும் உறுப்பினராகும் உரிமையையும் இழந்தார்கள்.

இப் பாராளுமன்றத்திற்கு நடந்த தேர்தல்களின் முடிவுகள் கிராம்வெல்லுக்கு ஏமாற்றத்தை அளித்தன. பெரும்பான்மையோர் தமக்கு ஆதரவு அளிப்பவர்களாகவே தேர்ந்தெடுக்கப்படுவர் என நினைத்த அவரின் எண்ணத்திற்கு மாறாக முடிவுகள் இருந்தன. இருந்தபோதிலும் கிராம்வெல் தமது முதல் பாராளுமன்றத்தைக் கூட்டினார். பாராளுமன்றத்தின் ஆரம்பக் கூட்டத்திலேயே உறுப்பினர்கள் அரசாங்க அமைப்புப் பத்திரத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி எடுத்துக் கொள்ள மறுத்தார்கள். கிராம்வெல் எல்லா உறுப்பினர்களையும் தமக்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் உறுப்பினர்களோ அரசாங்க அமைப்புப் பத்திரத்தின் விதிகளைப் படித்து, அந்தப் பத்திரத்தின் விதிகளுக்குத் திருத்தம் கொண்டுவர தங்களுக்கு சுதந்திரம் இருப்பதுபோல் நினைத்து, விவாதிக்க எண்ணினர். ஆனால் கிராம்வெல் அரசாங்க அமைப்புப் பத்திரத்தின்படி நீங்கள் செயல்பட வேண்டுமே யொழிய அதைப் பற்றியே விவாதிக்கக் கூடாது என உறுப்பினர்களை எச்சரித்தார். இருந்தும் பாராளுமன்றம் பல வகையிலும் அவருக்கு இடையூறுகள் கொடுக்க ஆரம்பித்தது. காப்பாளராகிய கிராம்வெல்லின் அதிகாரத்தை இப் பாராளுமன்றம் குறைக்க முயற்சி செய்தது. போர் வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படியும் அரசாங்கச் செலவை மட்டுப் படுத்தும்படியும் கிராம்வெல்லை வற்புறுத்தியது. 57,000 போர்வீரர்களை 30,000 போர்வீரர்களாகக் குறைத்தாலொழிய நிதியுதவி தர முடியாது என இப் பாராளுமன்றம் கிராம்வெல்லைப் பயமுறுத்தியது. இவற்றை யெல்லாம் கண்ட கிராம்வெல் இப் பாராளுமன்றத்தைக் கலைத்தார். பாராளுமன்றத்தைக் கலைக்கும்போது உறுப்பினர்களைப் பார்த்து 'நீங்கள் இந்த ஐந்து மாதங்களில் செய்த (கலகம்) தகராறுகள் நாட்டில் இதற்குமுன் இருந்ததைவிட இப்போது அதிருப்தியையும் உட்பிளவையும் ஏற்படுத்தி விட்டது' என ஏளனமாகப் பேசினார்.

கிராம்வெல் தமது முதல் பாராளுமன்றத்தைக் கலைத்தபின் ஓர் இராணுவ வல்லாட்சியாளராக ஆட்சி செய்ய ஆரம்பித்தார். இங்கிலாந்தைப் பதினேரு இராணுவ மாவட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு மேஜர் என்னும் இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்தார். இங்ஙனம் நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் அந்தந்த மாவட்டத்தில் கொடுங் கோன்மை புரிந்தனர். அந்தந்த மாவட்டத்திலுள்ள அரச ஆதரவாளர்களிடமிருந்து இவர்கள் அவர்களது வருமானத் திலிருந்து 10 சதவிகிதம் வரியாக வசூலித்தார்கள். அத்துடன் அரச விசுவாசமுள்ளவர்கள் பல வகையிலும் துன்புறுத்தப் பட்டார் கள். அவர்களிடமிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் அவர்கள் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையிலும் பெரிதும் குறுக்கிட்டார்கள். குதிரைப் பந்தயங்கள், கோழிச் சண்டைகள், காளைப்போர்கள் முதலியவைகளைத் தடுக்கும் கட்டளைகளை யிட்டார்கள். அத்துடன் பந்தயக் கொட்டகை களையும், விபசார விடுதிகளையும் மூடிவிட உத்தரவிட்டார்கள். அரசர் ஆதரவாளர்கள் என்று பலர் தண்டிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இத்தகைய கொடுமை காரணமாக கிராம் வெல்லுக்கு எதிராகப் பல சதிகள் செய்யப்பட்டன. அவருடைய உயிரை வாங்கவும் பலர் முயன்றனர். இந்நிலையில் மக்களைத் திருப்திப்படுத்த வேண்டி அவர் பாராளுமன்றத் தேர்தலுக்குக் கட்டளையிட்டார்.

பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தலின் முடிவுகள் இராணுவத் துரைத்தனத்துக்கு வியப்பூட்டும் நிலையில் இருந்தன. உள்நாட்டுப் போரின்போது பாராளுமன்றக் கட்சியை ஆதரித்த பகுதிகளான இங்கிலாந்தின் தென்கிழக்குப் பகுதியி லிருந்தும், கிழக்குப் பகுதியிலிருந்தும் காப்பாளரின் ஆட்சியைக் கடுமையாக எதிர்க்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். உள்நாட்டுப் போரின்போது அரசர் கட்சியை ஆதரித்த இங்கிலாந் தின் மேற்கு, வடக்குப் பகுதிகளிலிருந்துதான் காப்பாளரின் ஆட்சியை வரவேற்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆகவே பாராளுமன்றக் கட்சியை ஆதரித்த உறுப்பினர்களே இப்போது கிராம்வெல்லின் ஆட்சிக்கு எதிராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். காரணம், மக்கள் கிராம்வெல்லின் இராணுவ ஆட்சி யில் நம்பிக்கை யிழந்ததே யாகும்.

தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வுடனே, இராணுவ அதிகாரிகளின் தூண்டுதலினால் அரசுக் கவுன்சில் உறுப்பினர் களின் பட்டியலைக் கவனத்துடன் ஆராய்ந்தது. இவ்வரசுக் கவுன்சில் எந்தெந்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்ததோ அவர்

களுக்கு மட்டும் பாராளுமன்றத்தில் நுழைய இசைவுச் சீட்டுகள் கொடுக்கப்பட்டன. இசைவுச் சீட்டுகள் பெருத உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நுழையா வண்ணம் இராணுவ வீரர்கள் பாராளுமன்ற வாயிலில் காவல் காத்தனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 100 உறுப்பினர்கள் கட்டாயத்தின்பேரில் விலக்கப்பட்டனர். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுமார் அறுபது உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பங்கேற்கவேயில்லை. பிறகு எஞ்சிய பாராளுமன்ற உறுப்பினர்கள் 1656 ஆம் ஆண்டில் கூடினர். அவர்களின் செயல்களும் இராணுவ அதிகாரிகளின் விருப்பத்திற்கு மாருகத்தான் இருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்த மேஜர் ஜெனரல்களின் ஆட்சியை இப் பாராளுமன்றம் ஒழிக்கச் செய்தது. அத்துடன் இராணுவ அதிகாரிகளின் சார்பில் கொண்டு வரப்பட்ட இராணுவ மசோதா (Militia Bill) இப் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதன்பின் இப் பாராளுமன்றம் கிராம்வெல்லுக்கு டச்சுப் போருக்காக (400,0000) நாற்பது லட்சம் பவுன்கள் நிதியுதவி செய்தது. இப் பாராளுமன்றம் கிராம்வெல்லின் விரோதிகளைத் தண்டிக்க ஓர் உயர்நீதி மன்றத்தையும் நிறுவியது.

அதன்பின் இப்பாராளுமன்றம் கிராம்வெல்லிடம் தாழ்மையான விண்ணப்பமும் அறிவுரையும் (Humble Petition and Advise) என்ற ஒரு பத்திரத்தைத் தயாரித்து அளித்தது. இப் பத்திரத்தின் முக்கிய நோக்கம், இப்பொழுதுள்ள ஏகதேச்சாதிகார அரசாங்கத்தை ஒழித்துவிட்டு ஆங்கில மக்களுக்கு வெகுநாட்களாகப் பழக்கமுள்ள ஓர் அரசை ஏற்படுத்த வேண்டுமென்பதேயாகும். கிராம்வெல் இங்கிலாந்தின் அரசராக வேண்டுமென்றும், சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை விலக்கக் கூடாதென்றும், விலக்கப்பட்டவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டுமென்றும், பாராளுமன்றத்திற்கு இரண்டாவது சபை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும், அச் சபையில் 40 இலிருந்து 70 வரை உறுப்பினர் எண்ணிக்கை இருக்க வேண்டுமென்றும், அவ்வுறுப்பினர்களை, கிராம்வெல்லே நியமிக்க வேண்டுமென்றும், இவ்வுறுப்பினர்கள் உயிர் உள்ளவரை பதவியில் இருக்கவேண்டுமென்றும், கிராம்வெல்லும் பாராளுமன்றமும் சேர்ந்து நாட்டுக்குகந்த சமயக் கொள்கையை உருவாக்க வேண்டுமென்றும் இப்பத்திரத்தில் கூறப்பட்டிருந்தது. அத்துடன் கிராம்வெல்லே தமது வாரிசை நியமித்துக் கொள்ளவும் இப் பத்திரம் வகை செய்தது. ஆனுல் கிராம்வெல் 1657 ஆம் ஆண்டு மே மாதத்தில் இப்பத்திரத்தில் கூறப்பட்ட அரசர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அத்துடன் அதற்கான காரணத்தையும் அவர்

வெளியிடவில்லை. ஆனால் அப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள மற்றவைகளை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டார். அதன்படி இரண்டாவது சபையை ஏற்படுத்தினார். இச்சபைக்கு 63 உறுப்பினர்களை நியமித்தார். இவர்களில் 42 உறுப்பினர்களே உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இவர்களில் இருவர் மட்டுமே பிரபுக்கள். மற்றவர்களில் கிராம்வெல்லின் குடும்பத்தைச் சார்ந்த 7 உறுப்பினர்களும் இராணுவ அதிகாரிகளில் 17 உறுப்பினர்களும் இடம் பெற்றனர்கள்.

பாராளுமன்றத்தின் இவ்விரு சபைகளும் கூட்டப்பட்டன. விலக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்பு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதனால் கிராம்வெல்லுக்கு எதிர்ப்பு வலுத்தது. அப் பாராளுமன்றத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட சபையை 'இரண்டாவது சபை' என்றழைப்பதா? என்ற விவாதமே நீண்டிருந்தது. இதைக் கண்ட கிராம்வெல் குறுக்கிட்டு 'வெளிநாடு உள்நாடு ஆபத்துக்கள் இருக்கும் இச்சமயத்தில் நேரத்தை வீணாக்காமல் நல்ல பயன்படக்கூடிய சட்டங்களை இயற்ற முன் வாருங்கள்' என்று கேட்டுக் கொண்டார். ஸ்காட் (Scot), ஹிசில்ரிட்ஜ் (Hesilrige) போன்றவர்கள் கிராம்வெல்லின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவேயில்லை. அத்துடன் அவர்கள் சுறுசுறுப்பாக இராணுவ அதிகாரிகள் சிலருடனும் ஓர் உடன்பாடு செய்துகொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். பொதுமக்கள் சபையில் சமர்ப்பிக்க ஒரு விண்ணப்பத்தையும் தயாரித்தார்கள். குடியரசை நிலைக்கச் செய்து நீண்ட பாராளுமன்றத்தைக் கூட்டக் கூறும் அவ்விண்ணப்பத்தைப் பொதுமக்கள் சபையில் நிறைவேற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில், தங்களுடைய ஆதரவாளர்களைச் சபையில் இருக்கும்படி அவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. இச்சதி துரதிருஷ்டவசமாய் கிராம்வெல்லுக்கு எட்டியது. உடனே அவ்விண்ணப்பத்தைச் சபையில் சமர்ப்பிக்கும் நாளன்று கிராம்வெல் பாராளுமன்றத்திற்குச் சென்று 1658ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒருவருடைய ஆலோசனையுமின்றி அப்பாராளுமன்றத்தைக் கலைத்தார், ஆகவே கிராம்வெல்லின் கடைசிப் பாராளுமன்றம் முடிவுற்றது.

அதன்பின் கிராம்வெல் பாராளுமன்றமின்றி ஆட்சி செய்தார். ஆனால் அவ்வாட்சியோ அவருக்கு மனச்சோர்வு அளிப்பதாய் அமைந்தது. அவரின் உயிருக்கும் அடிக்கடி ஆபத்துகள் வந்தன. அதனால் அவர் போர்க்கவசமில்லாமல் வெளியில் வருவதேயில்லை. மக்கள் தம்முடைய ஆட்சியை விரும்பவில்லை என்பதை உணர்ந்திருந்தார். பெரும்பான்மையான பியூரிட்

டன்கள் கூட இவரை எதிர்த்தனர். இவர் தாம் இறக்கும்வரை இராணுவத் துணைகொண்டு ஆட்சி செய்தார் என்பது உண்மை தான். ஆனால் தமக்குப் பின் இவ்வரசாங்க அமைப்பு வீழ்ச்சி யடைந்துவிடும் எனவும் அஞ்சினர். கிராம்வெல் (Richard Cromwell) என்பவரைத் தமது வாரிசாக நியமித்தார். கடைசியில் 1658ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் தேதி கிராம்வெல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

கிராம்வெல்லும் வெளிநாட்டுக் கொள்கையும்

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில், கிராம் வெல் முக்கியமாக ஐந்து கோட்பாடுகளைக் கொண்டிருந்தார். முதலாவதாக கத்தோலிக்க நாடுகளுக்கு எதிராக ஐரோப்பியப் பிராடெஸ்டெண்டு நாடுகளிடையே கூட்டுறவு ஒன்றை ஏற்படுத்த விரும்பினர். இரண்டாவதாக ஸ்டூவர்ட்டு அரசர்கள் வெளிநாடு களின் உதவியைப் பெற்று மீண்டும் இங்கிலாந்தின் அரசர்களா வதைத் தடுக்கவேண்டுமெனக் கருதினர். மூன்றாவதாகக் குடி யேற்ற நாடுகளை வளர்க்கவேண்டும் என விரும்பினர். நான்கா வதாக ஆங்கிலேய வியாபாரத்தை வெளிநாடுகளில் செழிக்கச் செய்ய வேண்டுமென்று எண்ணினர். ஐந்தாவதாக இங்கிலாந்தின் கப்பற்படையைப் பெருக்க வேண்டுமெனவும் விரும்பினர்.

கிராம்வெல், ஐரோப்பா முழுவதுமுள்ள பிராடெஸ்டெண்டு களின் நலனைக்காக்கும் ஒரு காப்பாளராக வரவேண்டும் என எண்ணினர். இவ்வெண்ணத்தின் அடிப்படையில்தான் பிராடெஸ் டெண்டு நாடுகளின் ஒரு புனிதக் கூட்டுக் காப்புக் கழகத்தை (Holy League of the Protestant Powers) ஏற்படுத்த முயற்சி செய்தார். இம் முயற்சியில் கிராம்வெல் தோல்வியைத் தான் கண்டார். ஏனெனில் பிராடெஸ்டெண்டு நாடுகளான பிரான்டன் பர்க் (Brandenburg), ஹாலந்து, டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகள் ஒன்றுக்கொன்று பகைமையுடன் செயல்பட்டுக் கொண் டிருந்தன. கிராம்வெல் எவ்வளவோ முயன்று பார்த்தும் இந்நாடு களிடையே யிருந்த பகைமையை நீக்க முடியவில்லை. பிரான்டன் பர்க்கும் டென்மார்க்கும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு ஸ்வீடனை எதிர்த்தன. ஹாலந்தும் ஸ்வீடன் நாட்டை சந்தேகக் கண்ணுடனே பார்த்து வந்தது. இதன் காரணமாய் கிராம்வெல் கனவு கண்ட புனிதக் கூட்டுக் காப்புக் கழகம் நனவாகாமலே போய்விட்டது. இது வெளிநாட்டுக் கொள்கையில் தமக்கு ஏற்பட்ட ஒரு தோல்வி என்பதை கிராம்வெல்லும் ஒப்புக் கொண்டார்.

பின்னர் கிராம்வெல் ஸ்பெயின் நாட்டின்மீது தம் கவனத்தைத் திருப்பினர். அப்போது ஸ்பெயினுக்கும் பிரான்சுக்குமிடையே போர் நடந்துகொண் டிருந்தது. இங்கிலாந்திற்கும் பிராடெஸ் டெண்டுகளுக்கும் பழைமையான எதிரி ஸ்பெயின் என்பதை கிராம்வெல் நன்கு அறிவார். அதனுல் ஸ்பெயின்நாடு இங்கிலாந்தின் உதவியை நாடிய பொழுது அந்நாட்டினுல் நிறைவேற்ற முடியாத அளவிற்கு அரசியல் முறையற்ற பல கோரிக்கைகளை விடுத்தார். முதலாவதாக ஸ்பெயின்நாடு இங்கிலாந்திற்கு டன்கிர்க் (Dunkirk) என்ற துறைமுக நகரத்தைக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக ஸ்பெயின் நாட்டிலுள்ள ஆங்கிலேய வியாபாரிகளுக்கு, தொழுகைச் சுதந்திரம் தரவேண்டும். மூன்ருவதாக ஸ்பெயின்நாட்டு அமெரிக்கக் காலனிகளில் சுதந்திரமாக வாணிபம் செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும். என்ற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால் உதவி செய்வதாகக் கூறினர். எந்தவொரு சுயமரியாதையுள்ள நாடும் இக் கோரிக்கைகளை ஏற்காது. ஆகவே ஸ்பெயின் நாடு கிராம்வெல்லின் இக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே கிராம்வெல் பிரான்சின் பக்கம் திரும்பினர். சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால் தாம் பிரான்சை ஆதரிப்பதாகக் கூறினர். முதலாவதாகப் போரில் ஏற்படும் செலவுகளைப் பிரான்சு ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக டன்கர்க் துறைமுகமும், மார்டைக் துறைமுகமும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட வேண்டும். மூன்ருவதாக பிரான்சு நாட்டில் வாழும் பிராடெஸ்டெண்டுகள் துன்புறுத்தப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டும், என்று கிராம்வெல் விடுத்த கோரிக்கைகளை பிரான்சு ஏற்றுக் கொண்டது. ஆகவே கிராம்வெல் தம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள ஸ்பெயின் நாட்டுடன் 1655 ஆம் ஆண்டில் போரில் இறங்கினர். முதலில் ஸ்பெயினுடன் நேரடியாக மோதாமல் தமது கப்பற் படையை பின் (Penn) என்ற அட்மிரல், வினேபல்ஸ் (Venables) என்ற ஜெனரல் ஆகியோரின் தலைமையில் 1654 ஆம் ஆண்டு செப்டம்பரில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு (West Indies) அனுப்பினர். இதனுல் 1655 ஆம் ஆண்டில் ஜமைக்கா (Jamaica) என்ற தீவு கிட்டியது. ஜமைக்காவைக் கைப்பற்றியது வெட்ட வெளிச்சமான ஆக்கிரமிப்பு என்று ஸ்பெயின் குற்றம் சாட்டியது. இதனுல் இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் போர் ஏற்பட்டது. உடனே கிராம்வெல் மார்ஷல் டுரீன் (Marshall Turenne) தலைமையில் ஆருயிரம் ஆங்கிலேயப் போர் வீரர்களை அனுப்பி ஸ்பெயின் நாட்டுப் போர் வீரர்களைத் தோற்கடித்து டன்கிர்க் நகரைக் கைப்பற்றினர். அத்துடன் பிளேக் என்னும் ஆங்கிலக் கப்பற் படைத் தலைவர் ஸ்பானிய அமெரிக்காவிலிருந்து ஏராளமான தங்கத்தையும் வெள்ளியையும்

கொண்டுவந்த ஸ்பானியக் கப்பல்களைத் தோற்கடித்து அவற்றை யெல்லாம் கைப்பற்றினர். இதனால் இங்கிலாந்தின் வெளிநாட்டு வாணிகம் வளர்ந்தது. இங்கிலாந்தின் கப்பற்படையும் சிறந்தது எனப் பெயர் பெற்றது.

கிராம்வெல்லின் வெளிநாட்டுக் கொள்கையைச் சிலர் குறை கூறுகின்றனர். ஏனெனில் கிராம்வெல் ஸ்பெயின் நாட்டின் அதிகார சக்தி குறைந்து கொண்டே வருவதையும் பிரான்சின் அதிகார சக்தி பெருகி வருவதையும் முன்னேக்கவில்லை என்று கூறுகின்றனர். ஸ்பெயினேடு தாம் போர் செய்ததால் மேலும் ஸ்பெயினை ஆற்றலிழக்கச் செய்து விட்டார். அதனுடைய விளைவு அங்கே அரசுகளின் சமநிலை வலிமை (Balance of Power) இல்லா மற்போய்விட்டது. அதனுல் பிரான்சின் பலம் அதிகரித்தது. கிராம் வெல் ஸ்பெயின் நாட்டுக்கு உதவி செய்திருந்தால் அங்கே சமநிலை வலிமை இருந்திருக்கும். ஸ்பெயினும் பிரான்சை எதிர்த்து நிற்கும் வலிமை பெற்றிருக்கும்.

கிராம்வெல்லின் வெளிநாட்டுப் பெருமைதான் உள்நாட்டில் நிழலாக இருந்தது என்று கூறப்படுகின்றது. இக்கருத்து உண்மை தான். இங்கிலாந்தின் பெயரையும் பெருமையையும் தம் வெளி நாட்டுக் கொள்கையால் வெளியில் கிராம்வெல் நிலைபெறச் செய் தார். ஆனல் இவருடைய சாதனை உள்நாட்டில் அற்பமானதாகத் தான் இருந்தது.

புதிய காப்பாளர்

ஆலிவர் கிராம்வெல் தாம் இறக்கும் தறுவாயில் தம் மூத்த மகனுகிய ரிச்சர்டு கிராம்வெல் (Richard Cromwell) என்பவரைத் தம் வாரிசாக நியமித்தார். 1658 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் நாள் கிராம்வெல் இறந்தவுடன் ரிச்சர்டு கிராம்வெல் இங்கிலாந்தின் புதிய காப்பாளராகப் பதவி ஏற்ருர். இவர் தம் தந்தையைப் போன்று திறமை வாய்ந்தவரல்லர். எதையும் சுலப மாக எடுத்துக்கொள்ளக் கூடியவர். அதனுல் தம் அதிகாரத் தைத் திறமையோடு பயன்படுத்தும் ஆற்றலை இவர் பெற்றிருக்க வில்லை. அத்துடன் அரசியல் அறிவும் அனுபவமும் இவருக்கு அதிகம் கிடையாது. தமக்குப் பலவகையிலும் அறிவுரை கூறும் ஆலோசகர்களையும் இவர் பெற்றிருக்கவில்லை. ஆனல் பியூரிட்டன் மதத்தில் இவருக்கு ஈடுபாடு இல்லாததினல் பொதுமக்கள் இவரை விரும்பினர். அதே நேரத்தில் இராணுவ வீரர்கள் இவரை எதிர்த்தனர். ஆகவே தம் நிலையைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு பாராளுமன்றத்தை ரிச்சர்டு கிராம்வெல் கூட்டினர், இப்பாராளு

மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் ரிச்சர்டு கிராம்வெல்லை ஆதரித்தனர், அத்துடன் இவரை இராணுவத் தலைவராகவும் நினைத்தனர். இதை இராணுவ வீரர்கள் எதிர்த்தனர். அத்துடன் ஃபிலீட்வுட் (Fleatwood) என்பவரைத்தான் நிரந்தர இராணுவத் தலைவராக்க வேண்டுமென்றும், அவருடைய அதிகாரங்களும் காப்பாளரின் அதிகாரங்களும் தனித்தனியே இருக்க வேண்டு மென்றும் வற்புறுத்தினர். அதனால் ரிச்சர்டு கிராம்வெல் ஃபிலீட்வுட் என்பவரை இராணுவத் தலைவராக்கினார். அதன்படி இராணுவத்தினர் பாராளுமன்றச் செயல்களில் தலையிடக் கூடாதென்று பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதைக்கண்ட இராணுவ வீரர்கள் வெகுண்டு இப் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி ரிச்சர்டை வற்புறுத்தினர். வேறு வழியின்றி இப் பாராளுமன்றமானது 1659 ஆம் ஆண்டு ஏப்ரலில் கலைக்கப்பட்டது.

அதன்பின் 1659ஆம் ஆண்டு மே மாதத்தில் நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியான எஞ்சிய பாராளுமன்றம் இராணுவத்தின் வற்புறுத்தலினால் கூட்டப்பட்டது. இப்பாராளுமன்றமும் பாராளுமன்றத்தின் உரிமைகளை வற்புறுத்தியது, அத்துடன் பாராளுமன்றத்தின் இணக்கமின்றி வசூலித்த வரிகளை மக்களுக்கே திருப்பித் தந்துவிட வேண்டுமென்றும், கிராம்வெல் காலத்திய சட்டங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட வேண்டுமென்றும் கோரியது. இதைக் கண்ட இராணுவத்தினர் ஆத்திரமடைந்தனர். இராணுவமும் பாராளுமன்றமும் இத்தகைய வகையில் மோதிக் கொள்வதை விரும்பாத ரிச்சர்டு மனம் நொந்து 1659ஆம் ஆண்டு மே 25ம் தேதி தம் பதவியை இராஜிநாமா செய்து விட்டு பாரிஸுக்குச் சென்று விட்டார். பிறகு 1680ஆம் ஆண்டில் தான் இங்கிலாந்திற்குத் திரும்பினார். 1712ஆம் ஆண்டில் தமது 86ஆவது வயதில் இறந்தார்.

ரிச்சர்டு கிராம்வெல் தமது காப்பாளர் பதவியை இராஜிநாமா செய்த பிறகு இங்கிலாந்தில் ஓர் 'அரசற்ற ஆட்சிதான்' நிலவியது எனக் கூறலாம். இராணுவத்தில் ஒற்றுமை கிடையாது. அத்துடன் எதிர்காலத்தைப் பற்றி இராணுவம் ஒரு குறிப்பிட்ட முடிவு எடுக்கவில்லை. ஜெனரல் லாம்பர்டு (General Lambert) தன்னை மற்றொரு 'கிராம்வெல்' என்று நினைத்துக் கொண்டார். பிரீட்உட் (Freetwood) என்பவருக்கும்தாம் இராணுவத்தின் தலைவர் பதவியை வகிக்கவேண்டும் என்ற ஆசையிருந்ததால் லாம்பர்ட்டின் ஆதிக்கத்தை அங்கீகரிக்கவில்லை. அத்துடன் இருவரும் எஞ்சிய பாராளுமன்றத்தின் கட்டளைகளை ஏற்கவில்லை. ஆகவே, பாராளுமன்றமும் இராணுவமும் ஒன்றையொன்று எதிர்த்துக்

கொண்டு ஒருங்கிணையவில்லை. அதனால் 1659ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் லாம்பர்ட் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். அதன்பின் புது குடியரசின் அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப் பட்டது. இந்நிலையில் 1659ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஒரு உள்நாட்டுக் கலகம் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டது. ஏனெனில் ஜெனரல் லாம்பர்ட்டின் கொள்கைகளையும், செயல்களையும் ஸ்காட்லாந்து கவர்னரும் ஸ்காட்லாந்து படைகளின் தலைவரு மான ஜார்ஜ் மான்க் (George Monk) என்பவர் எதிர்த்தார். இவர் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தைக் கூட்டு வதற்கு ஆதரவு தெரிவித்தார். 1659ஆம் ஆண்டின் கடைசியில் இவருடைய படைகள் லண்டனை நோக்கிப் புறப்பட்டன. அப் பொழுது லாம்பர்டின் படை வீரர்களில் பலர் இவருடன் சேர்ந்து கொண்டனர். அதனால் இவர் லாம்பர்ட்டை சுலபமாகத் தோற்கடித்து, சிறை செய்தார். உடனே நீண்ட பாராளு மன்றத்தின் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் கூடி இவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்தனர். இம்மன்றமானது வேறொரு புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தானே 1660ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 16ஆம் தேதி கலைந்தது. 1640ஆம் ஆண்டு முதலாம் சார்லஸால் கூட்டப்பட்ட இப் பாராளுமன்றம் இருபது ஆண்டுகள் பணி புரிந்தபின் கலைந்தது. அதன் பின் ஜார்ஜ் மான்க் புதுத் தேர்த லுக்கு ஆணை பிறப்பித்தார். இப் புதுத்தேர்தல் பழைய முறைப் படியே நடந்தது. இத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களைக்கொண்ட பாராளுமன்றம் அரசர் அழைப்புப் பெருத பாராளுமன்றம் (Convention Parliament) எனப் பெயர் பெற்றது. இப்பாராளுமன்றம் இரண்டாம் சார்லஸை இங்கிலாந்தின் அரச ராக்க விரும்பியது. ஜார்ஜ் மான்க் பாராளுமன்றத்தின் சார்பாக சார்லஸோடு பேச்சுவார்த்தை தொடங்கினார். அதன் பயனாக சார்லஸ் 1660ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் தேதி ஹாலந் திலிருந்து ஆங்கிலேயருக்கு ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதற்கு பிரேடா அறிவிப்பு (Declaration of Breda) எனப் பெயர். இவ்வறிவிப்பில் அரசரை எதிர்த்த அனைவருக்கும் மன்னிப்பு அளிப்பதாகவும், படையினருக்குப் பாதுகாப்பும், பாக்கி சம்பளமும் கொடுப்பதாகவும், நிலவுடைமைப் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தின் இசைவோடு தீர்ப்பதாகவும், எல்லாச் சமயத் தினருக்கும் சமயப்பொறை வழங்குவதாகவும், குறிப்பிட்டிருந்தார். இதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மக்கள் இவரை இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக் கொள்ள அழைப்பு விடுத்தனர். இவ் வழைப்பை ஏற்றுக் கொண்டு 1660ஆம் ஆண்டு மே மாதம்

29ஆம் தேதி சார்லஸ் லண்டன் நகருக்குள் நுழைந்தார். மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த மக்கள் சார்லஸை உள்ளன் போடும் பெருமிதத்தோடும் வரவேற்றனர். இங்கிலாந்தில் மீண்டும் முடியாட்சி ஏற்பட்டது. வாள்முனையில் மக்களைப் பயமுறுத்தியே பதினொரு ஆண்டுகள் நிலைத்த பியூரிட்டன்களின் ஆட்சி ஒழிந்தது. 1649ஆம் ஆண்டிற்கும் 1660ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைப் பற்றி கீத்பையிலின் (Keith Fieling) என்பவர் குறிப்பிடும்போது 'இக் காலத்தில் முடியாட்சி ஒழிக்கப் பட்டது. பயனற்றது, அபாயகரமானது எனக் கூறி பிரபுக்கள் சபை அகற்றப்பட்டது; பியூரிட்டன் ஜனநாயகம் நிறுவப்பட்டது; அதன்பின் இராணுவ எதேச்சாதிகார ஆட்சி ஏற்பட்டது; கடைசியில் உட்கலகத்தால் அதுவும் ஒழிக்கப்பட்டது' எனக் கூறுகின்றார்.

7. முன்னிலை மீட்சி

(Restoration)

இங்கிலாந்தில் இரண்டு முன்னிலை மீட்சிகள் (Restoration) நடைபெற்றன என்று ட்ரெவெல்யன் (Trevelyan) என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முதல் முன்னிலை மீட்சி 1660ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன்படி அரசரும், பாராளுமன்றமும், சட்டமும், உயர்வகுப்பாரும், தலத்தாபன ஆட்சியும் பழைய நிலைக்கு மீண்டன. இரண்டாவது முன்னிலை மீட்சி 1661ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஆங்கிலிக்கானிசம் மேற்றிராணியார் (Bishops) ஆட்சி, வழிபாட்டுநூல் ஆகியவை மீட்சி பெற்றன.

முடியாட்சியின் முன்னிலை மீட்சி

முதலாம் சார்லஸ் அரசர் கொல்லப்பட்ட பின்பு இங்கிலாந்தில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு, பொதுநல அரசு ஏற்பட்டது. அத்துடன் பிரபுக்கள் சபையானது பயனற்றது என்பதுடன் அபாயகரமானது என்றும் கூறப்பட்டு ஒழிக்கப்பட்டது. பின்பு நாட்டை ஆளுவதற்கு நாற்பத்தோர் உறுப்பினர்களடங்கிய 'அரசுக் கவுன்சில்' ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் நீதிமன்றங்கள் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. இங்கிலாந்து கண்ட இம்முதல் குடியரசு சிறப்பு வாய்ந்தது என்று கூறலாம். ஏனெனில் ஐரோப்பாவில் அன்று விளங்கிய பல குடியரசுகளும் உண்மையான குடியரசுகளாக இல்லை. இத்தாலியக் குடியரசுகள் ஒரு பேரரசரைத் தங்களின் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தன. நெதர்லாந்துக் குடியரசும் ஓர் அரசரைத் தலைவராகப் பெற்றிருந்தது. ஆனால் இங்கிலாந்து மட்டுமே அரசரும், பிரபுக்கள் சபையுமில்லாத ஓர் உண்மையான குடியரசாக இருந்தது. ஆனால் ஆங்கிலேயர்களுக்கு இக்குடியரசின் ஆட்சி பிடிக்கவில்லை, அத்துடன் இவ்வாட்சியை அவர்கள் விரும்பவுமில்லை, தொன்றுதொட்டு வந்த அரசாட்சியே அவர்களுக்குப் பிடித்திருந்தது.

பின்பு ஆலிவர் கிராம்வெல் இங்கிலாந்தின் காப்பாளராகப் பதவி ஏற்றார். இவர் காலத்தில் இராணுவத்தினர் கொடுங்

கோன்மை புரிந்தனர். அரசரை ஆதரித்தவர்கள் இரக்கமின்றித் துன்புறுத்தப்பட்டார்கள். அத்துடன் தனிப்பட்டவர்கள் வாழ்க்கையில் பெரிதும் நெருக்கிட்டனர். மக்கள்மீது பல வரிகள் போடப்பட்டன. வரிகளைச் செலுத்தாதவர்கள் தண்டிக்கப்பட்டனர். பிராடெஸ்ட்டெண்டுகளும் கத்தோலிக்கர்களும் துன்புறுத்தப்பட்டனர். சமயத் துறையில் பியூரிட்டன்களுக்கே அதிக சலுகைகள் கொடுக்கப்பட்டன. இராணுவத்தினருக்கும் பாராளுமன்றத்திற்கும் பெரும் போராட்டமாகவே இருந்தது. ஆனால் கிராம்வெல் தமது வெளிநாட்டுக் கொள்கையில் வெற்றி பெற்றார். கிராம்வெல் இறந்த பின்பு அவரின் மூத்த மகன் ரிச்சர்டுகிராம்வெல் இங்கிலாந்தின் காப்பாளராகப் பதவியேற்றார். இவருடைய காலத்திலும் இராணுவத்தினருக்கும் பாராளுமன்றத்திற்கும் பெரும் போராட்டமாகவே இருந்தது. இதைக்கண்டு மனம்நொந்து இவர் தம்முடைய பதவியை இராஜிநாமா செய்துவிட்டு பாரிஸுக்குச் சென்று விட்டார். அதன் பின்பு இங்கிலாந்தில் இராணுவத்தினரிடையே பிளவு ஏற்பட்டது. அதனால் அங்கு ஆட்சி நிலையற்றதாகி விட்டது. இந்நிலையில் ஸ்காட்லாந்து கவர்னராயிருந்த ஜார்ஜ் மான்க் என்பவர் இங்கிலாந்தில் ஒரு நிலையான ஏற்பாட்டைச் செய்ய விரும்பித் தமது படையுடன் இங்கிலாந்தில் நுழைந்தார். அப்பொழுது இவரை எதிர்த்த லாம்பர்டு என்பவர் தோற்கடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். அதன் பின்பு புதிய பாராளுமன்றம் ஒன்று தேர்தல் நடத்தப்பட்டு கூட்டுவிக்கப்பட்டது. இப்பாராளுமன்றம் இரண்டாம் சார்லஸை இங்கிலாந்தின் அரசராக்க விரும்பியது. இப்பாராளுமன்றத்தின் விருப்பப்படியே ஜார்ஜ் மான்க் இரண்டாம் சார்லஸிடம் தொடர்பு கொண்டு அவரை இங்கிலாந்திற்கு வந்து அரசராக முடிசூட்டிக் கொள்ளும்படி பணிந்து வேண்டினார். இவரின் தூண்டுதலின் பேரில் சார்லஸ் பிராடா என்னுமிடத்திலிருந்து ஆங்கிலேயருக்கு ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அவ்வறிவிப்பில் அரசரை எதிர்த்த அனைவருக்கும் மன்னிப்பு வழங்குவதாகவும், இராணுவத்தினருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், நிலப்பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும், எல்லாச் சமயத்தினருக்கும் சமயப்பொறை வழங்குவதாயும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதைக் கண்ட ஆங்கிலேயர் மகிழ்ச்சியில் மூழ்கினர். சார்லஸை வந்து முடிசூட்டிக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தனர். மக்களின் வேண்டுகோளை ஏற்று சார்லஸ் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அவரை மக்கள் குதூகலமாக வரவேற்றனர். பின்பு இரண்டாம் சார்லஸுக்கு முடிசூட்டப்பட்டது. இங்ஙனம் சில மாற்றங்களுடன் இங்கிலாந்தில் முடியாட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் முன்னிலை மீட்சி

பாராளுமன்றத்தின் அமைப்பு பொதுநல அரசில் பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. பாராளுமன்றத்தின் மற்றொரு சபையெனக் கருதப்பட்ட பிரபுக்கள் சபை பயனற்றது, அபாயகரமானது என அறிவிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டது. அதன் பின்பு பொது மக்கள் சபையில் பொதுநல அரசுக்கெதிராகச் செயல்பட்டவர்களும் வாதிட்டவர்களும் கட்டாய முறையில் வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் போக எஞ்சிய உறுப்பினர்களைக் கொண்ட பொதுமக்கள் சபையானது 'எஞ்சிய பாராளுமன்ற' மென அழைக்கப்பட்டது. இப்பாராளுமன்றம் இராணுவத்தினருக்கெதிராகப் பல சட்டங்களை இயற்றியது. அதனால் இராணுவத்தினரின் மதிப்பை இப்பாராளுமன்றம் இழந்தது. அதனால் 1653ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் நாளன்று இப்பாராளுமன்றத்தை கிராம்வெல் கலைத்தார்.

எஞ்சிய பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு கிராம்வெல் ஒவ்வொரு கவுன்டியிலும் இருந்த பியூரிட்டன் திருச்சபையினரைப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள் என்று கட்டளையிட்டார். அவர்களும் தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் பெயர்களை அனுப்பினர். அவர்களில் கிராம்வெல் இங்கிலாந்திலிருந்து 129 உறுப்பினர்களையும் ஸ்காட்லாந்திலிருந்து ஐந்து உறுப்பினர்களையும் அயர்லாந்திலிருந்து ஆறு உறுப்பினர்களையும் தெரிந்தெடுத்தார். இவ்வுறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு பார்போன் பாராளுமன்றம் எனப் பெயர் சூட்டப்பட்டது. தன்னால் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இப்பாராளுமன்றம் தனக்குத் துணையாகச் செயல்படும் என கிராம்வெல் எண்ணினர். ஆனால் இப்பாராளுமன்றம் கிராம்வெல்லின் எண்ணங்களுக்கேற்பச் செயற்படாமற் போனதால் இவரிடம் பெற்ற அதிகாரங்களைத் திருப்பி இவருக்கே கொடுத்துவிட்டுத் தானாகவே கலைந்துவிட்டது. அதன் பின் கிராம்வெல் இங்கிலாந்தின் காப்பாளராக்கப் பட்டார். தமது முதல் பாராளுமன்றத்தை 1654ஆம் ஆண்டில் கூட்டினர். இப்பாராளுமன்றத்தில் பிரஸ்பிடீரியர்கள் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றனர். இவர்கள் அரசாங்க அமைப்புப் பத்திரத்தை முழுமையாக ஒப்புக் கொள்ள மறுத்தனர். அதனால் பலர் பாராளுமன்றத்தினின்றும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். பின்னரும் இப்பாராளுமன்றம் பலவகையிலும் இவருக்கு இடைஞ்சல்கள் தரவே இதையும் கலைத்துவிட்டார். பிறகு தமக்கு நிதி வேண்டி மற்றொரு பாராளுமன்றத்தைக் கூட்டுவித்தார். அப்பாராளுமன்றத்திலும் தமக்கு எதிரிகள் எனக் கருதப்பட்ட 100 உறுப்பினர்கள்

வெளியேற்றப்பட்டனர். மீதியுள்ள உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் 'தாழ்மையான விண்ணப்பமும் அறிவுரையும்' என்ற விண்ணப்பத்தை கிராம்வெல்லிடம் சமர்ப்பித்து. சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை விலக்கக் கூடாதென்றும், வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களை மீண்டும் அழைத்துக் கொள்ளும்படியும், பாராளுமன்றத்திற்கு 40 உறுப்பினர்களிலி ருந்து 70 உறுப்பினர் வரை கொண்ட மற்றொரு சபையை ஏற்படுத் தும்படியும் கேட்டுக் கொண்டது. அதன்படி கிராம்வெல்லும் மற்றொரு சபையை ஏற்படுத்தித் தமக்கு வேண்டியவர்களையே அச்சபையில் உறுப்பினர்களாக்கினர். இந் நியமனத்தைப் பொது மக்கள் சபை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் பிரபுக்கள் சபையைக் கண்டிக்கத் தொடங்கினர். இதைக் கண்ட கிராம்வெல் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

கிராம்வெல் இறந்தபிறகு 1659ஆம் ஆண்டு அவர் மகன் ரிச்சர்டு கிராம்வெல் ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டினர். அதில் இவருக்குப் பெரும்பான்மையோர் ஆதரவாளர்களாய் இருந்தனர். அவர்கள் இவரை இராணுவத் தளபதியாக்க முன் வந்தனர். இதை இராணுவத்தினர் விரும்பவில்லை. அதனால் இப்பாராளு மன்றத்தைக் கலைக்கும்படி இராணுவம் ரிச்சர்டைக் கட்டாயப் படுத்தியது. அதன் பின்னர் நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியான எஞ்சிய பாராளுமன்றம் கூட்டுவிக்கப்பட்டது. இப் பாராளுமன்றமும் தன் உரிமைகளைப் பெரிதும் வற்புறுத்தியது. இதைக் கண்ட இராணுவ வீரர்கள் ஆத்திரமடைந்தனர். இராணுவமும் பாராளுமன்றமும் சச்சரவு விடுவதைக்கண்டு மனம் நொந்து ரிச்சர்டு தம் பதவியைத் துறந்தார். அதன்பின்பு ஜார்ஜ் மான்க் என்ற ஸ்காட்லாந்து கவர்னர் இலண்டனில் நுழைந்து இராணுவத்தைத் தோற்கடித்து லாம்பர்டைக் கைது செய்து சிறையிலடைத்தார்.

அதன்பின்னர் பழைய நீடித்த பாராளுமன்றத்தை இவர் கூட்டுவித்தார். அதில் வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், அனை வரும் இடம் பெற்றனர். இப்பாராளுமன்றம் புதிய பாராளுமன்றத் தைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்துவிட்டு 1660ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 16ஆம் தேதி கலைந்தது. அதன் பின்பாராளுமன்றத்தின் தேர்தல் பழைய முறைப்படியே நடை பெற்றது. இதில் அரசர் ஆதரவாளர்கள் பெரும்பான்மையோர் இடம்பெற்றனர். இப்பாராளுமன்றம் இரண்டாம் சார்லஸை இங்கி லாந்தின் அரசராக்க விரும்பியது. அவ்வாறே இரண்டாம் சார்லஸ் இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டப்பட்டார். இவ்வாறு பழைய படியே முடியாட்சி இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது. முடியாட்சி

முன்னிலை மீட்சி பெற்றதுபோலவே பாராளுமன்றமும் மீட்சி பெற்றது. பொதுநல அரசிலும், காப்பாளர் ஆட்சியிலும் பல மாறுதல்களைப்பெற்ற பாராளுமன்றம் இரண்டாம் சார்லஸ் காலத்தில் அவர் அரசரானவுடனேயே தன் பழையநிலையை யடைந்தது.

பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளும் முன்னிலை மீட்சி யடைந்தன. பொதுமக்கள் சபை பிரபுக்கள் சபையைக் காட்டிலும் மேலும் அதிக அதிகாரங்களைப் பெற்றது. பொதுமக்கள் சபை 1649ஆம் ஆண்டிலிருந்து 1660ஆம் ஆண்டு வரை பலவகை களிலும் போற்றத்தக்க அனுபவம் பெற்றது. உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் பிரபுக்கள் சபையைக் காட்டிலும் பெரியதாக இருந்தது. பொதுமக்கள் சபையில் 513 உறுப்பினர்கள் இருக்கும் போது, பிரபுக்கள் சபையில் 180 உறுப்பினர்கள்தான் இருந்தார்கள். பொதுமக்கள் சபை நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றது. பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை இரண்டாம் சார்லஸ் குறைக்கவேயில்லை. இவ்வாறு முன்னிலையை யடைந்த பாராளுமன்றம் நிமிர்ந்த பார்வையுடன் செயலாற்றத் துவங்கியது.

சட்டத்தின் முன்னிலை மீட்சி

பொதுநல அரசிலும், காப்பாளர் ஆட்சியிலும் அரசரின்றியே பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அத்துடன் பொது வழக்கு நீதி மன்றம் (Court of Commonplea), நிதி வழக்கு நீதிமன்றம் (Court of Exchequer), உயர் துணை நீதி மன்றம் (Court of High Commission), அரச நீதிமன்றம் (Court of Knig's Bench) போன்ற நீதி மன்றங்கள் ஒழிக்கப்பட்டன. ஆனால் இரண்டாம் சார்லஸ் அரியணை ஏறியவுடனே சட்டம் இயற்றப்படுவதிலும் பழைய முறையே கையாளப்பட்டது. பாராளுமன்றம் இயற்றிய மசோதாக்களுக்கு அரசர் ஒப்புதலை அளித்தால் தான் சட்டங்களாக முடியும் என்ற பழைய நிலை ஏற்பட்டது. அத்துடன் பொதுவழக்கு நீதி மன்றமும், நிதி வழக்கு நீதி மன்றமும், உயர் துணை நீதிமன்றமும், அரச நீதிமன்றமும் முன்னிலை மீட்சியடைந்தன. அதனால் நீதி மன்றங்களின் சுதந்திரத்தில் இப்போது குறுக்கீடு கிடையாது. அவைகள் சுதந்திரமாக, தைரியத்துடனும், பாரபட்சமின்றியும் செயல்படத் தொடங்கின.

தலத்தாபன ஆட்சியின் முன்னிலை மீட்சி

தலத்தாபனங்களில் 1649ஆம் ஆண்டிலிருந்து 1660ஆம் ஆண்டுவரை அமைதி காண் நடுவர்கள் (Justices of Peace)

பணியாற்ற அனுமதிக்கப்பட்டபோதிலும், அவர்களுடைய அதிகாரங்கள் அடிக்கடி இராணுவச் சட்டத்தினுல் குறைக்கப்பட்டன. ஆனுல் 1660 ஆம் ஆண்டிற்குப் பிறகு அணுக்க முதன்மையர் பிரபுக்களும் (Lord Lieutenant) அமைதி காண் நடுவர்களும் தலத்தாபனங்களில் பரந்த அதிகாரங்களைப் பெற்றனர். அத்துடன் அவர்களை மேற்பார்வை செய்வதற்குக் கூட மத்திய அதிகாரிகள் வருவதில்லை. ஆகவே, தலத்தாபன ஆட்சியும், இரண்டாம் சார்லஸ் காலத்தில் முன்னிலை மீட்சி பெற்றது.

உயர்வகுப்பாரின் மீட்சி

பொதுநல அரசிலும், காப்பாளர் ஆட்சியிலும் சமுதாயத்தில் செல்வாக்குடன் விளங்கிய பிரபுக்களும், கனவான்களும், வழக்கறிஞர்களும், மதகுருமார்களும் தம் நிலையிழந்து தலைமறைவாய் வாழ்ந்து வந்தனர். அப்பொழுது எங்கு நோக்கினும் சாதாரண மக்களின் ஆதிக்கமே காணப்பட்டது. பிரபுக்களும், கனவான்களும், நிலக்கிழார்களும் அரசரின் ஆதரவாளர்கள் என்று கூறித் தண்டிக்கப்பட்டனர். அத்துடன் இவர்களைச் சாதாரண மக்களும் வெறுத்தனர், எங்கு பார்த்தாலும் சாதாரண மக்கள், ஜனநாயகவாதிகளாகவும், குடியரசு வாதிகளாகவும் இருந்தனர். பரம்பரையாக வழங்கிய சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மறைந்து, சமத்துவக் கொள்கை எங்கும் பரவியிருந்தது. இரண்டாம் சார்லஸின் வருகையால் தலைமறைவாய் வாழ்ந்த பிரபுக்களும், கனவான்களும், மதக்குருக்களும் வெளியே வந்தனர், அதனுல் பழைய பிரிட்டிஷ் சமுதாயம் தழைத்தது. உயர் வகுப்பாரெல்லாம் மீண்டும் உயர்வு பெற்றுச் சமுதாயத்தில் தலைதூக்கி உலவினர்.

இங்கிலாந்துத் திருச்சபையின் முன்னிலை மீட்சி

பேராசிரியர் ஆடம்ஸ் முன்னிலைமீட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது இங்கிலாந்துத் திருச்சபை மீண்டும் பழைய நிலையை அடைந்ததைப் பற்றிக் கூறுகின்ருர், கிராம்வெல்லின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலிக்கன்கள் ஒடுக்கப்பட்டனர். அத்துடன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கும் தடுக்கப்பட்டனர். அழைப்புப் பெருத பாராளுமன்றம் (Convention Parliament) கலைக்கப்பட்டவுடன் 1661ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில் பெரும்பான்மையோர் ஆங்கிலிக்கானிசத்தில் நம்பிக்கை உடையவர்களாகவே இருந்தனர். பிரஸ்பிடீரியானிசத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் மறைந்தனர். கவாலியர் பாராளுமன்றம் எனப்படும் இப்பாராளுமன்றம் மீண்டும் இங்கிலாந்துத் திருச்சபையை (Church of England) பிரஸ்பிடீரியன் பெரும்பான்மையைக் குறைத்து புதுப்பித்தது. அதனுல் இத்திருச்சபை

பழைய நிலையை அடைந்தது. அத்துடன் முன்பு இருந்த தன்மையைக் காட்டிலும் இப்பொழுது இத்திருச்சபை மேலும் பலம் வாய்ந்த அமைப்பாக மாறியது. 1661ஆம் ஆண்டிலிருந்து 1665ஆம் ஆண்டு வரை இப்பாராளுமன்றம் நான்கு சமயச் சட்டங்களை இயற்றியது. 1661ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மாநகராட்சி சட்டப்படி (The Corporation Act) மாநகராட்சி மன்றங்களில் பதவி வகிப்போரெல்லாம் ஆங்கிலிக்கத் திருச்சபையின் சடங்குகள் படியே புனிதத்திருவிருந்தை (Holly Communion) ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அரசரை எதிர்ப்பதில்லை என்ற வாக்குறுதியும் எடுத்துக்கொள்ள வேண்டும். 1662ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சமய ஒருமைச் சட்டத்தின்படி (The Act of Uniformity) குருமார்கள் அனைவரும், ஆசிரியர்களும் பொதுவழிபாட்டின் போது ஆங்கிலிக்கன் ஜெபப் புத்தகத்தைப் பயன் படுத்தவேண்டும். 1664 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இரகசியத் தொழுகைக் கூட்டத் தடைச் சட்டத்தின்படி (The Conventicle Act) ஆங்கிலிக்கன் ஜெபப் புத்தகத்தின்படி வழிபாடு நிகழ்த்தாத நான்குபேருக்கு மேற்பட்டவர்கள் (ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லாதார்) தொழுகைக்காக ஒன்று கூடுதல் கூடாது. 1665 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் இயற்றிய ஐந்து மைல் சட்டம் (Five miles Act) ஒரே வழிபாட்டு முறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எந்த நகருக்கும் ஐந்து மைல் எல்லைக்குள் வந்து பிரச்சாரம் செய்யக் கூடாது எனக் கூறுகின்றது. இத்தகைய வகையிலே பல சட்டங்கள் இயற்றப்பட்டு ஆங்கிலிக்கானிசம் பழைய நிலைக்கு மீட்சி பெற்றது.

8. இரண்டாம் சார்லஸ்
(1660—1685)

இங்கிலாந்தில் படையின் வல்லாட்சி இருந்த இடத்தில் 1660ஆம் ஆண்டில் மீண்டும் முடியாட்சி நிலைபெற்றது. இரண்டாம் சார்லஸ் இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டப்பட்டார். முடியாட்சி முன்னிலைமீட்சி அடைந்தவுடன் பாராளுமன்றமும், பிரபுக்கள் சபையும், சமுதாய நிலையும், சட்டங்களும், நீதிமன்றங்களும், தலத்தாபன ஆட்சியும் முன்னிலை மீட்சி யடைந்தன. அதற்குக் காரணம் இரண்டாம் சார்லஸின் குணமும் பண்பும் நேர்மையும்தான். இரண்டாம் சார்லஸ் அரசராக முடிசூட்டிக் கொள்ளும்போது 30 வயதே நிரம்பிய இளைஞர். அவரிடம் ஆங்கிலப் பண்புகள் இருந்ததைக் காட்டிலும் வெளிநாட்டுப் பண்புகளே அதிகம் காணப்பட்டன. வெளிநாட்டில் வெகுகாலம் வாழ்ந்ததனால் அவர் ஓர் அன்னியர் போலவே தோற்றமளித்தார். சார்லஸ் பார்வைக்கு அழகிய தோற்றமுடையவர். மகிழ்வான வாழ்க்கையில் விருப்பமுள்ளவர். நல்ல அறிவாற்றலும் நகைச் சுவையும் நிரம்பியவர். இதனால் மக்களின் அன்பால் ஈர்க்கப்பட்டார். தாம் ஒரு கத்தோலிக்கர் என்பதை வெளிப்படையாக அவர் அறிவிக்காவிட்டாலும், மனதார ஓர் கத்தோலிக்கராக வாழ்ந்தார். இறக்கும்போது ஓர் கத்தோலிக்கராகவே இறந்தார். இவ் வகையில் தம் மக்களையும், தம்முடைய பாராளுமன்றங்களையும், தம்முடைய அமைச்சர்களையும் ஏமாற்றி விட்டார். மக்களுக்குப் புரிந்திருந்தால் இவருடைய சகோதரர் இரண்டாம் ஜேம்ஸ் நிச்சயமாய் அரசராகி யிருக்கமாட்டார். மக்கள் பழிவாங்கி யிருப்பார்கள்.

இரண்டாம் சார்லஸ் தம் பாட்டனைப் போல் சண்டையிடும் குணமுடையவரல்லர், தம் சகோதரனைப் போல் கோட்பாட்டுறுதி மிக்கவரும் அல்லர். மிகச் சுலபமாக அணுகத் தக்கவர். வெளி வாழ்க்கையில் பற்றுடையவர். டென்னிஸ் ஆடுவதிலும் வேட்டையாடுவதிலும் மிக விருப்ப முடையவர். இதைக் கண்ட மக்கள் இவரை மிகவும் விரும்பினார்கள்.

ஆனால் இரண்டாம் சார்லஸ் ஒரு சுயநலக் காரர். ஓர் அரசியல் பச்சோந்தி; அத்துடன் புத்திசாலித் தனத்துடன் காலத்திற்கேற்ப

நடப்பவர் (Clever Temporiyer). எப்பொழுதும் தம் நிதானத்தை இழக்காதவர். இவருடைய உண்மையான மனத்தை யாராலும் அறிந்துகொள்ள முடியாது. எதையும் நிதானத்துடன் கணக்கிட்டுச் செய்யக் கூடியவர். எதை எப்பொழுது செய்யவேண்டும், எதை ஒன்றும் செய்யாமலே விட்டுவிட வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர். இவர் சூழ்ச்சியாகக் காரிய மாற்றுவதில் வல்லவர். தாம் அரசாங்க நடவடிக்கைகளில் பற்றில்லாதவர் போலவும் கேளிக்கைகளிலேயே பற்றுடையவர் போலவும் நடித்து மக்களை ஏமாற்றியவர். ஆனால் இவர் தம்முடைய விருப்பமுள்ள கொள்கைகளையே செயல்படுத்தினர். தம் நம்பிக்கைக் குரியவர்களையே தம்முடைய அமைச்சர்களாகவும் நியமித்தார்.

பாராளுமன்றம்

இரண்டாம் சார்லஸை அரசராக்கிய பாராளுமன்றம் அரசர் அழைப்புப் பெருத பாராளுமன்றமாகும். (convention Parliament) இது பிரத்தியேகப் பாராளுமன்ற மென்றும் அழைக்கப் படுகின்றது. இப் பாராளுமன்றம் அரசரின் பிரடா வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முனைந்தது. 1660 ஆம் ஆண்டில் பொது மன்னிப்பும், அரசியற்குற்ற முழு மன்னிப்பும் (Act of Indemnity and Oblivion) என்ற ஓர் சட்டத்தை இயற்றியது. இதன் மூலம் அரசருக்கு விரோதமாய்ப் போரிட்ட அனைவருக்கும், பொதுநல அரசில் பங்கெடுத்துக் கொண்ட யாவருக்கும் பூர்ண மன்னிப்பு வழங்கப் பட்டது. ஆனால் அரசரைக் கொல்வதற்குக் காரணமாய் இருந்த அனைவரும் கடுமையாய்த் தண்டிக்கப் பட்டனர். இருபத்தைந்து பேர் ஆயுள் சிறைத்தண்டனை பெற்றனர். பத்து பேர் தூக்குத் தண்டனை பெற்றனர். முதலாம் சார்லஸைக் கொல்ல மூல காரணமாயிருந்த கிராம்வெல், இவரின் மருமகன் அயர்ட்டன், பிராட்ஷா, பிரைட் போன்றோரின் உடல்கள் அவர்களது சவக் குழிகளிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு அவைகளுடைய தலைகள் வெட்டப் பட்டன. இங்ஙனம் அரசரைக் கொன்றவர்கள் மீது பிரத்தியேகப் பாராளுமன்றம் பழி தீர்த்துக் கொண்டது.

அதன் பின்னர் இப்பாராளுமன்றம் போர் வீரர்களுக்குச் சேர வேண்டிய சம்பளப் பாக்கிகள் யாவையும் தந்த பிறகு இராணுவத்தின் பல பகுதிகளைக் கலைத்து விட்டது. இரண்டு காலாட் படைப் பகுதிகளையும் சில குதிரைப் படைப் பகுதிகளையும் அரசர் கலைக்கவில்லை. இவைகளைத் தம்மைக் காப்பதற்கென வைத்துக் கொண்டார். இதிலும் இருந்த பியூரிட்டன் வீரர்கள் பிறகு அகற்றப்பட்டார்கள். அதன்பின் அரசரை முழுமையாக ஆதரிக்கும் இராணுவமாக இப்படை மாறியது.

காப்பாளர் ஆட்சியில் தங்களுடைய நிலங்களையிழந்த அரசரின் ஆதரவாளர்களுக்கு இப் பாராளுமன்றம் மீண்டும் அந் நிலங்களை அவர்களிடமே ஒப்படைத்தது. அத்துடன் நில மானியக் கட்டணங்களை ஒழித்தது. இந்நிலமானியத் தொகையை ஒழித்ததால் அரசரின் வருமானம் பாதிக்கப்படும் என நினைத்து நிரந்தரமாகக் கலால் வரி (Excise duty) வசூலித்துக் கொள்ளும் உரிமையை அரசருக்கு இப்பாராளுமன்றம் அளித்தது. 1651 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நாவாய்ச் சட்டம் (The Navigation Act) மேலும் ஆங்கில வாணிபம் பெருகப் பல திருத்தங்களுடன் மறுபடியும் 1660 ஆம் ஆண்டில் இப் பாராளுமன்றத்தால் புதுப் பிக்கப்பட்டது. இவ்வாறு இப் பாராளுமன்றம் பல சிக்கல்களைத் தீர்த்தது. ஆனால் மதத்துறையில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. அவ் வேலையைத் தனக்குப் பின் முறைப்படி கூடப்போகும் பாராளுமன்றத்திற்கு விட்டு விட்டு, 1660 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அது கலைந்தது.

பிரத்தியேகப் பாராளுமன்றம் கலைந்த பின்பு நாட்டில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலால் தோன்றிய புதுப் பாராளு மன்றம் 1661 ஆம் ஆண்டில் இரண்டாம் சார்லஸால் கூட்டு விக்கப்பட்டு 18 ஆண்டுகள் பதவி வகித்தது. இப் பாராளு மன்றத்தில் அரசரை முழுவதும் ஆதரித்த இளைஞர்கள் பெரும் பான்மையோர் இடம் பெற்றிருந்தனர். இப்பாராளுமன்றம் அரசி யலில் அரசருக்கு ஆதரவாகவும் சமயத்தில் ஆங்கிலிக்கானிசத் திற்கு ஆதரவாகவும் இருந்தது. அத்துடன் பியூரிட்டன்களை இப்பாராளுமன்றம் வெறுத்தது. இங்கிலாந்துத் திருச்சபையைப் பலம் வாய்ந்ததாகச் செய்யவும், மேம்படுத்தவும் இப் பாராளு மன்றம் உறுதி பூண்டது. இப்பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கவலியர் மனப்பாங்கு காணப்பட்டதால் கவலியர் பாராளு மன்றம் (The Cavalier Parliament) எனப் பெயர் பெற்றது.

இரண்டாம் சார்லஸ் மத ஏற்பாட்டை நாட்டில் நிர்ண யிக்கும் பொறுப்பைக் கவலியர் பாராளுமன்றத்திடம் ஒப்படைத் தார். இப்பாராளுமன்றம் நாட்டில் ஆங்கிலிக்க மத ஏற்பாட்டை நிலைப்படுத்த நான்கு சட்டங்களை இயற்றியது. இச்சட்டங்கள் பாராளுமன்றத் தலைவராயிருந்த கிளாரண்டன் பிரபுவின் பெயரால் நிறைவேற்றப்பட்டதால் கிளாரண்டன் சட்டத் தொகுப்பேடு (Clarendon Code) எனப் பெயர் பெற்றது.

முதலாவது சட்டம் 1661 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மாநகராட்சிச் சட்டமாகும் (The Corporation Act). இச் சட்டப்படி மாநகராட்சி மன்றங்களில் பதவி வகிப்போரெல்லாம் இங்கிலாந்துத்

திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அத்துடன் அவர்கள் ஆங்கிலிக்கத் திருச்சபையின் சட்டங்களின்படியே புனிதத் திருவிருந்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே நகராட்சிமன்றங்களில் பிரஸ்பிடீரியர்கள் உறுப்பினர்களாகும் தகுதியை இழந்து விடுகின்றனர். இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு மாநகராட்சி மன்றங்களில் பிரஸ்பிடீரியர்கள்தான் பெரும்பான்மை இடங்களைப் பெற்றிருந்தனர். அதனால் மாநகராட்சி மன்றங்களில் பெருஞ் செல்வாக்கும் பெற்றிருந்தனர். மாநகராட்சி மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரஸ்பிடீரியர்களாகத்தான் இருந்தனர். ஆனால் இப்பொழுது இச்சட்டத்தின் மூலம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராவது தடுக்கப்பட்டது.

இரண்டாவது சட்டம் 1662ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரே வழிபாட்டு முறைச் சட்டமாகும் (The Act of Uniformity). இச்சட்டம் ஒரே வழிபாட்டு முறையை நாடெங்கும் புகுத்தியது. குருமார்கள் அனைவரும் கட்டாயமாக வழிபாட்டின்போது புது ஜெபப் புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றும், இப் புது ஜெபப் புத்தகத்தின் விதிகளுக்கு மாறாகச் செயல்படும் குருமார்களும், அரசரையும் இங்கிலாந்துத் திருச்சபையையும் எதிர்ப்பதில்லையென்று சபதம் எடுக்க மறுக்கும் குருமார்களும் இங்கிலாந்துத் திருச்சபையினின்று வெளியேற்றப்படுவார்கள் என்றும் இச்சட்டம் கூறியது. அதன்படி சுமார் இரண்டாயிரம் குருமார்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் "நிறுவப்பட்ட நாட்டுத் திருச்சபையை ஏற்க மறுப்பவர்கள்" அல்லது இணங்காதார் (Dissenters or Non-Conformists) என அழைக்கப்பட்டனர்.

மூன்றாவது சட்டம் 1664ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இரகசியத் தொழுகைக் கூட்டத் தடைச் சட்டமாகும் (The Conventicle Act). இச்சட்டம் புது ஜெபப் புத்தகத்தைப் பயன்படுத்தாமல் நடத்தப்படும் தனித்தொழுகைக் கூட்டத்திற்குத் தடைவிதிக்கின்றது. இச்சட்டமானது ஆங்கிலிக்கத் திருச்சபையினின்று விலக்கப்பட்ட குருமார்கள் இரகசியமாகத் தொழுகைக் கூட்டம் நடத்துவதைத் தடுத்தது. இச்சட்டத்தை மீறினால் முதன் முறையாக அபராதம் விதிக்கப்படும் என்றும், இரண்டாம் முறையாக மீறினால் அரசாங்கம் அவர்களுக்குத் தண்டனை விதிக்குமென்றும் மூன்றும் முறையும் மீறினால் அவர்கள் நாடு கடத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு பலருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. பலர் சிறையிலடைக்கப்பட்டனர்.

நான்காவதாக 1665ஆம் ஆண்டு ஐந்து மைல் சட்டம் (The Five Miles Act) என்ற சட்டம் இயற்றப்பட்டது. திருச்சபையிலிருந்து நீக்கப்பட்ட குருமார்கள் முக்கியமான நகரங்களின் ஐந்து மைல் எல்லைக்குள் வந்து சமயப் பிரச்சாரம் செய்வதை இச் சட்டம் தடுத்தது. அதனால் பல குருமார்கள் பாதிக்கப் பட்டார்கள்.

இச் சட்டங்களுக்குப் பிறகு 1673ஆம் ஆண்டில் இப்பாராளு மன்றம் சோதனைச் சட்டம் (The Test Act) என்ற ஒரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி அனைத்து அரசாங்கப் பணியா ளர்களும் ஆங்கிலிக்க மதச் சடங்குகளின்படி 'மறைநிலை மெய்ம்மை' எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், திருச்சபை வழிபாட்டு அப்பமும் மதுவும் முழுதுமே இயேசுவின் திருவுடல் குருதிகளாக மாறிவிடுகிறதென்ற கோட்பாட்டை (transubstantiation) துறந்துவிட வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. 1679ஆம் ஆண்டு பாராளுமன்றச் சோதனைச் சட்டம் (The Parliament Test Act) என்ற மற்றொரு சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி இங்கிலாந்துத் திருச்சபையின் உறுப்பின ரல்லாதவர் பாராளுமன்றத்தின் உறுப்பினராக முடியாது

இத்தகைய சட்டங்கள் ஸ்காட்லாந்து பாராளுமன்றத்தாலும் இயற்றப்பட்டன. இதனால் பல பிஷப்புகள் ஆங்காங்கே நியமிக்கப்பட்டனர். இத்தகைய பிஷப்புகளை ஏற்றுக் கொள்ளும் படி ஸ்காட்லாந்தியர்கள் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். ஷார்ப் (Sharp) என்பவர் தூய ஆண்ட்ரூஸ் நகர் ஆர்ச் பிஷப்பாக நியமிக்கப்பட்டார். லாடர்டேல் எர்ல் பிரபு (Earl ef Lauderdale) ஸ்காட்லாந்தின் அமைச்சராகவும், மிடில்டனின் எர்ல் பிரபு (Earl of Middleton) ஸ்காட்லாந்தின் உயர் ஆணைப் பிரபுவாகவும் (Lord Commissioner) நியமிக்கப்பட்டனர். இம்மூவரும் ஸ்காட் லாந்தில் பிரஸ்பிடீரிய மத ஏற்பாட்டை ஒழித்துக்கட்ட பல முயற்சிகளை மேற்கொண்டனர். அடக்குமுறை எங்கும் தாண்டவ மாடியது. இதை எதிர்த்து பியூரிட்டன்கள் கலகம் செய்தனர். தங்களுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள 1679 ஆம் ஆண்டில் ஆர்ச்பிஷப் ஷார்ப்பைக் கொலை செய்தனர். இக் கலகக்காரர்கள் அரசர் கட்சியினரை டிரம்க்ளாக் (Drumclog) என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள். ஆனால் மான்மவுத் கோமகன் (Duke of Monmouth) கலகக்காரர்களை இறுதியாக போத்வெல் (Bothwell) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அதன் பிறகு யார்க் கோமகன் ஸ்காட்லாந்தின் ஆணையாளராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில்தான் கலகம்

செய்வோர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அதனால் தான் இவரது ஆட்சிக் காலம் கொலைக்காலம் (Killing Time) என அழைக்கப்பட்டது.

ஸ்காட்லாந்தைப் போலவே அயர்லாந்தும் முன்னிலை மீட்சிக்குப் பின்பு இங்கிலாந்திலிருந்து பிரிந்தது. அயர்லாந்திற்கென்று தனியான பாராளுமன்றமும் ஏற்படுத்தப்பட்டது. அயர்லாந்திலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதிஆகும் பொருள்கள் தடுக்கப்பட்டன. இதனால் அயர்லாந்தின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

கவலியர் பாராளுமன்றத்தின் சமயக் கொள்கையை இரண்டாம் சார்லஸ் மனதார விரும்பவில்லை. மதச் சகிப்புத்தன்மையால் கத்தோலிக்கர்களுக்குச் சிறிதளவாவது பயன் கிடைக்கும் என எண்ணினார். ஆனால் பியூரிட்டன், கத்தோலிக்கர் எதிர்ப்பு உணர்ச்சி மக்களிடையே அதிகம் காணப்பட்டதால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எல்லாச் சமயத்தாருக்கும் சமயப் பொறை வழங்கப்படும் என்று பிரெடா அறிவிப்பில் இரண்டாம் சார்லஸ் அறிவித்திருந்த போதிலும், அவர் அரசரானவுடன் இவ்வுறுதிமொழி மறக்கப்பட்டது.

கிளாரண்டன் பிரபுவின் ஆட்சி (1660—1667)

இரண்டாம் சார்லஸின் முக்கிய அறிவுரையாளராகவும் ஆலோசகராகவும் கிளாரண்டன் பிரபு ஏழாண்டு காலம் விளங்கினார். இவர் பழமையில் பெரிதும் பற்றுள்ளம் கொண்டவர். இங்கிலாந்தில் மீண்டும் முடியாட்சியையும் ஆங்கிலிக்கன் திருச்சபையையும் நிலைநாட்டிவிட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார். இவர் நீண்ட பாராளுமன்றத்தின் உறுப்பினராவார். நீண்ட பாராளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் முதலாம் சார்லஸின் உள்நாட்டுக் கொள்கையையும் வெளிநாட்டுக் கொள்கையையும் தாக்கிப் பேசியவர். ஆனால் உள்நாட்டுப் போரின் போது அவருடைய நிலைக்காகப் போராடியவர். உள்நாட்டுப் போரின்போது இரண்டாம் சார்லஸ் இங்கிலாந்தை விட்டு வெளியேறினார். அப்போது அவருடன் கிளாரண்டனும் சென்றிருந்தார். அதனால் இரண்டாம் சார்லஸ் இவரைத் தம் முதன்மை ஆலோசகராக நியமித்துக் கொண்டார்.

சார்லஸின் வெளிநாட்டுக் கொள்கை பெரிதும் கிளாரண்டன் பிரபுவால் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் சார்லஸும் கிளா

ரண்டன் பிரபுவும் பிரான்சோடு நட்புரிமை கொண்டாடினர். அப்போது பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் போர் நடந்துகொண்டிருந்தது. போர்ச்சுக்கலும் ஸ்பெயினுக்கு எதிராகச் செயல்பட்டது. அதனுல் சார்லஸுக்குப் போர்ச்சுகல் இளவரசியை மணமுடித்தால் இங்கிலாந்தின் உதவியும் தமக்குக் கிடைக்குமென்று பிரான்சின் அரசர் பதினுன்காம் லூயி நினைத்தார். இவருடைய விருப்பத்திற்கிணங்க இரண்டாம் சார்லஸ் காத்தரைன் என்ற போர்ச்சுகல் இளவரசியை மணந்தார். இத் திருமணம் அரசியல் காரணங்களுக்காக நடந்ததால் இரண்டாம் சார்லஸுக்கு இவ் விளவரசியின் மூலம் சீதனமாகப் பம்பாய் நகரமும், டான்ஜியர் (Tangier) என்ற நகரமும் வந்தன. அத்துடன் 80,000 பவுன்களும் வந்து சேர்ந்தது. பின்னர் பம்பாய் நகரைக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வருடம் 10 பவுன் வாடகைக்கு சார்லஸ் விட்டுவிட்டார். டான்ஜியர் நகரில் 1684 வரை ஆங்கிலத் துருப்புகள் இருந்தன. அதன் பின்னர் இந் நகரம் கைவிடப் பட்டது. கிராம்வெல் காலத்தில் கைப்பற்றிய டன்கிர்க் நகரினுல் இங்கிலாந்திற்கு வருடம் 100,000 பவுன்கள் செலவாயின. அதனுல் இந் நகரம் பிரான்சு அரசர் பதினுன்காம் லூயிக்கு 400,000 பவுன்களுக்கு விற்கப்பட்டது. இதனுல் இங்கிலாந்திற்கு லாபமேயன்றி நஷ்டமில்லை. பிரான்சிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு இந்நகரைப் பிரான்சுக்கு விற்றுவிடும்படி அரசருக்கு ஆலோசனை கூறியதாக கிளாரண்டன் பிரபுமீது புகார் செய்யப்பட்டது. அதனுல்தான் கிளாரண்டன் பிரபு கட்டிய புது வீட்டை டன்கிர்க் வீடு என்று மக்கள் அழைத்தனர். அத்துடன் ஹாலந்து நாட்டின் வியாபாரப் போட்டியைக் குறைக்க வேண்டுமானுல் பிரான்சின் உதவி தமக்குத் தேவை என்று சார்லஸ் எண்ணினுர். அதை இரண்டு திருமணங்கள் மூலமாய்ப் பெற்றுவிடலாம் என்று நினைத்து பிரான்சின் பதினுன்காம் லூயி அரசர் விருப்பப்படி போர்ச்சுகல் இளவரசியைத் தாம் மணந்து கொண்டு, தம்முடைய சகோதரியாகிய ஹென்றி யட்டாவை பிரான்சு பதினுன்காம் லூயி அரசரின் சகோதரன் ஆர்லின்ஸ் கோமகனுக்கு (Duke of Orleans) மண முடித்தார்.

அதன் பிறகு இங்கிலாந்திற்கும் ஹாலந்திற்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. 1651 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நாவாய்ச் சட்டம் பல திருத்தங்களுடன் மீண்டும் இயற்றப்பட்டது. டச்சு வியாபாரிகள் ஆங்கிலக் குடியேற்றப் பகுதிகளில் குடியிருக்க இத் திருத்தப்பட்ட நாவாய்ச் சட்டம் தடை விதித்தது. இருந்தும் டச்சு வியாபாரிகளின் போட்டி அதிகரித்தது. அதனுல் ஆங்கிலேய வியாபாரிகள் இரண்டாம் சார்லஸிடம் ஹாலந்தினுல் ஏற்படும்

போட்டியைப் பற்றிப் பல விண்ணப்பங்களைக் கொடுத்தனர். அதன் காரணமாக ஏற்கெனவே இருந்த பூசல் முற்றி ஒரு போராக உருவெடுத்தது. 1665 ஆம் ஆண்டு இங்கிலாந்து ஹாலந்தின்மீது போர்ப் பிரகடனம் செய்தது. இப்போர் 1667 ஆம் ஆண்டுவரை நீடித்தது. இது இரண்டாம் டச்சுப் போர் என அழைக்கப்பட்டது. இப்போரானது பெரும்பாலும் கடலிலேயே நடைபெற்றது. ஆங்கிலக் கப்பற் படைக்கு யார்க் கோமகன் தலைமை தாங்கி நடத்தினர். மான்க், ரூபர்ட், போன்றவர்கள் தங்களுடைய திறமையைக் கடலில் காட்டினர்கள். ஆங்கிலக் கப்பற்படையின் கை ஓங்கியிருந்தது. 1665 ஆம் ஆண்டு ஆங்கிலக் கப்பற்படை நியூ ஜெர்சி (New Jersy), நியூ ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) என்ற நகரங்களைக் கைப்பற்றியது, இதற்கிடையில் 1665 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பெருந் தீவிபத்து ஒன்றும் ஏற்பட்டது. இதன் காரணமாய்க் கப்பற்படைக்கு மிகமிகத் தேவையான பொருள்களின் விநியோகம் தடைப்பட்டது. அத்துடன் பண நெருக்கடியும் ஏற்பட்டது. அதனல் ஆங்கிலப் போர்க் கப்பல்கள் துறைமுகங்களிலேயே முடங்கிக் கிடந்தன. இந் நிலையில் டச்சுப் போர்க் கப்பல்கள் தேம்ஸ் நதி வரை வந்து பல கப்பல்களில் சூறையாடியும் பதினெரு கப்பல்களைக் கொளுத்தியும் நாசம் விளைவித்தன. லண்டன் நகரைக்கூட கைப்பற்றி விடுவார்களோ என்ற பயம் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. இறுதியில் பிரடா சமாதானத்தின் மூலம் 1667 ஆம் ஆண்டு போர் நிறுத்தப்பட்டது. அதன்படி அந்த அந்த நாடு பிடித்த இடங்களை அந்த அந்த நாடே தன் கை வசம் வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. நியூ ஜெர்ஸி, நியூ ஆம்ஸ்டர்டாம் என்ற இரண்டு இடங்களும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. பிரான்சு நாடு இதற்கு முன்பு ஹாலந்தை ஆதரித்து வந்தபோதிலும் இப் போரில் தலையிடவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கிளாரண்டன் பிரபுவின் கொள்கையினலும், சட்டத்தினலும் தான் டச்சுப் போரில் பயங்கர விளைவுகளும், 1665இல் இங்கிலாந்தில் பிளேக் நோயும் 1666ஆம் ஆண்டில் தீவிபத்தும் ஏற்பட்டதாக மக்கள் கருதினர். மேலும் அரசருக்கும் இவருடைய கொள்கைகளில் வர வர வெறுப்பு ஏற்பட்டது. ஏனெனில் ஒழுக்க சீலரான கிளாரண்டன் அடிக்கடி சார்லஸின் ஒழுக்கமில்லா வாழ்க்கையைக் கண்டித்தார். அத்துடன் பாராளுமன்றமும் இவருடைய செயல்களையும் கொள்கைகளையும் கண்டித்தது. டச்சுப் போர்க் கப்பல் தேம்ஸ் நதியில் புகுந்ததற்கும் கிளாரண்டனே காரணம் என்று கூறி, அவர்மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்க வேண்டும் என்று மக்களும் பாராளுமன்றமும் கூக்குரலிட்டனர். இவைகளுக்கெல்லாம் உண்மையில் கிளா

ரண்டன் பொறுப்பல்லர். ஆனாலும் இக்குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டன. இந்நிலையில் இரண்டாம் சார்லஸ் கிளாரண்டனை வெளிநாட்டிற்குப் போய்விடும்படி கேட்டுக் கொண்டார். ஸ்டிராஃபோர்டின் கதிதான் நமக்கும் ஏற்படும் என்று கருதி கிளாரண்டன் பிரபு 1667ஆம் ஆண்டு பிரான்சுக்குப் போய்விட்டார். இதைத்தான் அனைவரும் விரும்பினர். அவர் மறுமுறையும் இங்கிலாந்திற்கு வராதபடி பாராளுமன்றம் அவருக்கெதிராக மரண தண்டனைச் சட்டம் ஒன்றையும் இயற்றியது. கிளாரண்டன் பிரான்சில் தம்முடைய வாழ்நாளை அமைதியாகக் கழித்தார். பெரும் புரட்சியின் வரலாற்றைத் (History of Great Rebellion) தொகுப்பதில் தம்முடைய இறுதிக் காலத்தைச் செலவழித்தார். 1674ஆம் ஆண்டில் பிரான்சிலேயே கிளராண்டன் இறந்தார். கெயித்ஃபெயிலிங் (Keith Failing) என்பவர் கிளாரண்டனைக் குறிப்பிடும்பொழுது " இவர் வன்முறையை வெறுத்தவர். சட்டத்தையும் சொன்ன சொல்லையும் மதித்தவர். தம்முடைய நேர்மைக்காகப் பெருமிதமடைந்தவர். இவருடைய வீழ்ச்சிக்குக் காரணம் இவருடைய தவறுகள் மட்டுமல்ல, இவருடைய நற்குணங்களும், பண்புகளும் தான் " என்று கூறுகின்றார்.

கெபால் குழு (1667 - 1673)

கிளாரண்டன் வீழ்ச்சிக்குப் பின்பு இரண்டாம் சார்லஸ் அரசர் தமக்கு ஆலோசனை கூற ஒரு குழு ஏற்படுத்திக் கொண்டார். அக்குழுவில் ஐந்து அமைச்சர்கள் இடம் பெற்றனர். கிளிஃபோர்டு, ஆர்லிங்டன், பக்கிங்ஹாம், ஆஷ்லி கூபர், லாடர்டேல் (Clifferd, Arlington, Buckinham, Ashley Cooper, Lauderdale) ஆகிய ஐவரது ஆங்கிலப் பெயர்களின் முதலெழுத்துக்களைச் சேர்த்துக் கெபால் (Cabal) என்ற பெயருடன் அக்குழு வரலாற்றில் இடம் பெறுகிறது. ஆனால் இக் குழுவைத் தற்கால அமைச்சர் குழுவிற்கு ஒப்பிடுவது பொருந்தாதாகும். ஏனெனில்: தற்கால அமைச்சர் குழுவிலுள்ள ஒருங்கிணைவும் கட்டுப்பாடும் கெபால் குழுவில் இல்லை. இக்குழுவிலுள்ள ஒவ்வொருவரும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். கிளிஃபோர்டும், ஆர்லிங்டனும் கத்தோலிக்க மத ஏற்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். ஆஷ்லி கூப்பர் என்பவர் ஆங்கிலிக்க திருச்சபையை ஏற்க மறுப்பவர்களிடம் கருணையுடையவராயிருந்தார். லாடர்டேல் ஸ்காட்லாந்து அரசியல் நடவடிக்கைகளிலேயே பற்றுடையவராய் இருந்தார். பக்கிம்ஹாம் ஒழுக்கமும் கொள்கையுமற்றவராய் இருந்தார். அத்துடன் இவர்களை சார்லஸ் ஒரு குழுவாக சந்திப்பதுமில்லை. இவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துதான் ஆலோசனையும் பெற்றுவந்தார்.

இந்தக் கெபால் அமைச்சர்குழு ஐரோப்பாவில் அமைதிகாண விரும்பியது. அதனால் சார்லஸை ஸ்வீடனுடனும், ஹாலந்துடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள ஆலோசனை கூறியது. அதன்படி இங்கிலாந்து, ஸ்வீடன், ஹாலந்து ஆகிய நாடுகளிடையே 1668ஆம் ஆண்டில் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் (A Triple Alliance) ஏற்பட்டது. இவ் வொப்பந்தத்தினால் பிரான்சு அரசர் பதினான்காம் லூயியின் பெருகிவரும் அதிகாரச் சக்தி குறையும் எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் சார்லஸ் இம் முக்கூட்டு ஒப்பந்தத்தை விரும்பாமல் பிரான்சிடம் நட்பாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்காகத் தன் சகோதரியான ஹென்ரியட்டாவின் உதவியை நாடினார். இம் முயற்சியில் சார்லஸ் வெற்றி பெற்றார். 1670ஆம் ஆண்டில் சார்லஸ் பதினான்காம் லூயியிடம் டோவர் இரகசிய உடன்பாட்டை (Treaties of Dover) செய்து கொண்டார். இவ் வுடன்பாட்டின்படி சார்லஸ் தக்க தருணம் வாய்க்கும்போது கத்தோலிக்க மதத்தைத் தழுவ வேண்டுமென்றும், டச்சுக்காரர்களுக்கெதிராக சார்லஸ் லூயிக்கு உதவி செய்ய வேண்டுமென்றும், அதற்கு ஈடாக சார்லஸுக்கு லூயி அரசர் 166,000 பவுன்கள் வழங்க வேண்டுமென்றும், அத்துடன் மேலும் 60,000 பவுன்கள் வழங்க உறுதிமொழி கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வுடன்பாட்டின் விவரங்கள் கெபால் அமைச்சர் குழுவிலுள்ள அனைவருக்கும் தெரியாது. கத்தோலிக்க மத ஏற்பாட்டை விரும்பும் கிளிஃபோர்டுக்கும் அர்லிங்டனுக்கும் மட்டும்தான் தெரியும்.

ஸ்பேனிய நெதர்லாண்ட்ஸைக் கைப்பற்ற பதினான்காம் லூயி ஸ்பெயினோடு போர் செய்து கொண்டிருந்தார். பிரான்சின் படைகள் தம் எல்லைக்கருகில் இருப்பதைக்கண்ட ஹாலந்து பயந்து இங்கிலாந்திடமும் ஸ்வீடனிடமும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அவ் வொப்பந்தம் தான் முக்கூட்டு ஒப்பந்தமாகும். இதையறிந்த லூயி ஸ்பேனிய நெதர்லாண்ட்ஸைக் கைப்பற்றும் முடிவைத் தள்ளி வைத்தார். இருந்தாலும் டச்சுக்காரர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார். அதனால் தான் 1670 ஆம் ஆண்டில் சார்லஸுடன் டோவர் இரகசிய உடன்பாட்டைச் செய்து கொண்டார்.

1672ஆம் ஆண்டில் மூன்றாம் டச்சுப்போர் துவங்கியது. சார்லஸ் தமது கப்பற்படையை ஹாலந்திற்கு எதிராக அனுப்பினார். இதைக்கண்ட டச்சுக்காரர் திடுக்கிட்டனர். பதினான்காம் லூயியும் தம் படைகளுடன் ஹாலந்திற்குள் நுழைந்தார். ஜான், கார்னிலியஸ் டி விட் (Jan, and Cornelius De Witt) போன்ற தலைவர்களை வென்று கொன்றார். அதன்பின் ஹாலந்தில் வில்லியம்

ஆப் ஆரஞ்சு என்பவர் நாட்டின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் லூயியை எதிர்த்து தீரத்துடன் போரிட்டார். இவர் இரண்டாம் வில்லியத்தின் மகனும், முதலாம் சார்லஸின் பேரனும் ஆவார். அதனால் ஆங்கிலேய மக்கள் டச்சுக்காரர்களோடு போர் புரிய விரும்பவில்லை. அதனால் பாராளுமன்றமானது டச்சுப் போரை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டது. ஆஷ்லி கூப்பர் என்ற அமைச்சர் எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டு அரசரை எதிர்த்தார். அத்துடன் கிளிஃபோர்டும், அர்லிங்டனும் சோதனைச் சட்டப்படி தமது பதவிகளை இராஜிநாமா செய்தனர். இங்ஙனம் 1673ஆம் ஆண்டில் கெபால் அமைச்சர் குழு சிதறடிக்கப்பட்டது. அதன்பின்பு பாராளுமன்றத்தின் தலைவரான டான்பி (Danby) யைத் தமக்கு ஆலோசகராக நியமித்துக் கொண்டால் பாராளுமன்றத்தைச் சரிக்கட்டி விடலாம் என்று சார்லஸ் நினைத்து டான்பியைத் தம் முக்கிய ஆலோசகராக அமர்த்தினார்.

டான்பியின் ஆட்சி (1673 - 1678)

கெபால் அமைச்சர் குழு வீழ்ச்சியடைந்த பிறகு டான்பி இரண்டாம் சார்லஸின் முக்கிய ஆலோசகராகவும் முதல் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இவர் ஆங்கிலிக்கானிசத்திலும் முடியாட்சியிலும் பற்றுடையவர். இவர் சமய ஒறுப்புக் கொள்கையை எதிர்ப்பவர். இவருக்குப் பொதுமக்கள் சபையில் நல்ல ஆதரவு இருந்தது. அதைக்கொண்டு. இவர் தமக்கென்று ஒரு கட்சியை உருவாக்கினார். அக் கட்சி அரண்மனைக் கட்சி (Court Part) என அழைக்கப்பட்டது. இக் கட்சிதான் அரசரை ஆதரிக்கும் டோரிக் (Tory) கட்சியாகப் பின்னர் மலர்ந்தது. இதே சமயத்தில் பாராளுமன்றத்தில் டான்பிக்கு எதிராக ஷாஃப்டஸ்பரி பிரபு (Shaftesbury) நாட்டுக் கட்சி (Country Party) என்ற ஒரு கட்சியை ஆரம்பித்தார். இக் கட்சிதான் பாராளுமன்ற உரிமைகளுக்குப் போராடிய விக் (Whig) கட்சியாக உருவெடுத்தது.

வெளிநாட்டுக் கொள்கையில் சார்லஸ¹க்கும் டான்டிக்கும் அதிக வேறுபாடு இருந்தது. பிரான்சின் வளரும் அதிகாரச் சக்தியைத்தடுக்க வேண்டும் என்று டான்பி விரும்பினார். ஆனால் சார்லஸோ பிரான்சோடு உறவுகொள்ள வேண்டும் என எண்ணினார். பிரான்சின் அதிகார சக்தியைக் குறைக்க வேண்டுமானால் டச்சுக் காரர்களிடம் நட்புஉடன்படிக்கை செய்துகொள்ள டான்பி விரும்பினார். பாராளுமன்றமும் இதை வரவேற்றது. எனவே, 1674ஆம் ஆண்டில் டான்பி பிரபு டச்சுக்காரர்களோடு வெஸ்ட்மின்ஸ்டர் உடன்பாடு செய்துகொண்டார். அதனால் இரண்டு நாடுகளிடையே

போரிடுவது நின்றது. ஆனால் ஹாலந்து லூயியிடம் தொடர்ந்து போரிட்டுவந்தது. இச்சமயத்தில் ஹாலந்தின் உதவிக்கு இங்கிலாந்து வந்து விடுமோ என, பதினான்காம் லூயி பயந்தார். அதனால் லூயி இங்கிலாந்துப் பாராளுமன்றம் டச்சுக்காரர்களோடு சேரும்படி வற்புறுத்தினாலும் சேராமல் இருக்கும்படி சார்லஸைக் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தைக் கலைத்து விடும்படியும் அதனால் ஆண்டொன்றுக்கு சார்லஸுக்கு ஒரு லட்சம் பவுன்கள் கொடுப்பதாகவும் லூயி XIV கூறினார். சார்லஸ் ஓராண்டு பாராளுமன்றத்தைக் கூட்டாமலேயே காலம் கடத்தினார். சார்லஸ் இவ்வாறு லூயி அரசரோடு தொடர்பு கொண்டபோதும், டான்பி டச்சுக்காரர்களோடு மேலும் நட்பை வளர்த்தார். 1677 ஆம் ஆண்டு சார்லஸின் தம்பியான யார்க் கோமகனார் ஜேம்ஸின் மகளான மேரிக்கும் ஹாலந்து அரசரான வில்லியத்துக்கும் திருமணத்தை முடித்துவைத்தார். இதையறிந்த பிரான்சு நாட்டரசர் லூயி பெரிதும் அஞ்சினார். சார்லஸை பிரான்ஸுக்கும் ஹாலந்திற்கும் நடக்கும் போரில் நடுநிலை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். இதற்காக ஏராளமாகப் பணமும் கொடுக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் இரகசியமாகவே இருந்தது. டான்பிக்கு இவ்வொப்பந்தம்சிறிதுகூடப் பிடிக்கவில்லை. இருந்தாலும் அரசரின் கட்டளையை ஏற்காமலும் இருக்க முடியவில்லை.

அரசரைக் கொலை செய்துவிட்டு இங்கிலாந்தில் கத்தோலிக்க மதத்தை ஏற்படுத்த கத்தோலிக்கர்கள் சதி செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு புரளியை 1678ஆம் ஆண்டில் டைடஸ் ஓட்ஸ் என்ற ஒரு திருச்சபை சமயக் குரு கிளப்பிவிட்டார். இப் புரளி ஒரு விசித்திர பாணியில் அமைந்திருந்தது. அத்துடன் முன்னுக்குப் பின் முரணாகவும் இருந்தது. ஒரு சமயம் அரசரின் மனைவி இராணி காத்திரையனே தம் கணவனைக் கொல்லும் சதியில் ஈடுபட்டுள்ளார் என்று கூறினார். மற்றொரு சமயம் யார்க் கோமகனாகிய ஜேம்ஸே இச் சதியை உருவாக்கினார் என்று அறிவித்தார். பிறிதொரு சமயம் இச் சதி ஜெசூட்டுகளால் செய்யப்படுகின்றது எனப் பிதற்றினார். மற்றொரு சமயத்தில் இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கர்களால் இச் சதி தீட்டப்படுகின்றது என்று சொன்னார். ஆங்கில மக்கள் இவர் கூறியவைகளை யெல்லாம் நம்பினர். ஆனால் சார்லஸ் அரசருக்கு இது ஓர் கட்டுக்கதை என்பது தெரிந்திருந்த போதிலும் மக்களைச் சமாதானப்படுத்த முடியவில்லை. இச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்று ஷாஃப்டஸ்பரி பிரபு போன்றவர்கள் நினைத்தனர். சார்லஸுக்குப் பின் யார்க் கோமகனை ஜேம்ஸை இங்கிலாந்தின் அரசராக்கக் கூடாது என்ற தம்முடைய பிரச்சாரத்திற்கு இதை ஒரு பயனுள்ள ஆயுதமாகப் பயன்படுத்த ஷாஃப்

டஸ்பரி பிரபு நினைத்தார். துரதிருஷ்டமாக ஓட்ஸ் கிளப்பிய புரளி உண்மைதான் என்று கூறுமளவுக்கு இங்கிலாந்தில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 'லண்டன் அமைதி காப்பு நடுவரான சர் எட்மண்ட் காட்ஃபிரி (Sir Edmund Godfrey) யிடம் (Magistrate) நான் பிரமாணம் செய்து சில உண்மைகளைக் கூறியிருந்தேன்' என்று ஓட்ஸ் கூறியிருந்தார். திடீரென்று அந்த அமைதி காப்பு நடுவர் கத்தியால் குத்தப்பட்டுப் பிணமாகச் சாக்கடைக் குழியில் கிடந்தார். உடனே இதையறிந்த ஆங்கில மக்கள் ஓட்ஸ் கூறியதற்கும் இவர் கொல்லப்பட்டதற்கும் உடன்பாடு உள்ளதென்று கூறி ஓட்ஸ் கூறியவைகள் உண்மைதான் என்று நம்பினர். அதனால் இங்கிலாந்தில் பேரச்சம் நிலவியது. பல கத்தோலிக்கர்கள் கொல்லப்பட்டனர். இச்சமயத்தில் ஷாஃப்டஸ்பரி பிரபுவுக்குப் பாராளுமன்றத்தில் அதிக ஆதரவு திரண்டது. ஆங்கில மக்கள் இவரை ஒரு தெய்வம் எனக் கூட வாழ்த்தினர்.

இச் சமயத்தில் டான்பி, பாரிஸிலுள்ள ஆங்கிலப் பிரதிநிதியான ரால்ப்மாண்டேகு (Ralph Montague) என்பவர் மூலம் சில இகசியக் கடிதங்களை பதினான்காம் லூயியின் அமைச்சர்களுக்கு அனுப்பினார். அக் கடிதங்களில் டோவர் இரகசிய உடன்படிக்கையின்படி சார்லஸுக்குச் சேரவேண்டிய பணத்தைப்பற்றிக் கேட்டிருந்தார். இக் கடிதங்களை சார்லஸ் அரசரின் கட்டளைக் கிணங்கித் தாமே கையொப்பமிட்டு அனுப்பினார். டான்பியால் கீழ்த்தரமாக நடத்தப்பட்ட மாண்டேகு, தம் வஞ்சகத்தைத் தீர்க்க இதுதான் சமயம் என எண்ணிப் பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர்களிடம் டான்பிக்கும் பிரான்சு அமைச்சர்களுக்கும் இடையேயுள்ள இரகசியக் கடிதப் போக்கு வரத்தைப் பற்றித் தெரிவித்து விட்டார். தங்களை ஆதரித்தவர்போல் காணப்பட்ட டான்பி பிரான்சோடு பேரம் பேசினார் என்பதை அறிந்த பாராளுமன்றத்தார் துணுக்குற்றனர். உடனே டான்பிமீது அரசியல் துரோகக் குற்றச்சாட்டைப் பாராளுமன்றம் கொண்டுவந்தது. இச் சமயத்தில் டான்பியைக் காப்பாற்ற வேண்டி சார்லஸ் 1679 ஆம் ஆண்டில் கவலியர் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

மீண்டும் சார்லஸின் மூன்ருவது பாராளுமன்றம் 1679 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கூடியது. இப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் பிராடெஸ்ட்டெண்டு மதப் பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்களை யெல்லாம் சேர்த்து ஷாஃப்டஸ்பரி பிரபு பாராளுமன்றத்தில் ஒரு பெரும்பான்மையான கட்சியைத் தோற்றுவித்தார். இப் பாராளுமன்றம் கூடியவுடனே மீண்டும் டான்பியின்

மீது அரசியல் துரோகக் குற்றச்சாட்டு கொண்டுவரப் பட்டது. சார்லஸ் தன் இறுதி மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் (Pardon) பயன்படுத்தி டான்பியைக் காக்க விரும்பினூர். இருந்தும் பாராளு மன்றம் பிடிவாதமாக டான்பியைச் சிறைப்படுத்தியது. இவர் சிறையில் ஆறுண்டுகள் இருந்து பின்னர் விடுதலை செய்யப்பட்டார். டான்பியின்மீது நடவடிக்கை எடுத்ததின் மூலம் பாராளுமன்றம் ஆங்கில அரசியலில் ஒரு முக்கிய உண்மையை நிலைநாட்டியது. அரசர்கள் செய்யும் குற்றத்திற்கு அவர்களின் அமைச்சர்களே பொறுப்பானவர்கள் என்பதையும், அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கை யிழந்தால் பதவியினின்றும் நீக்கப்படுவர் என்பதையும் இந் நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது.

பின்னர் இப் பாராளுமன்றம் ஆட்கொணர் ஆணை (The Habeas Corpus Act) என்ற சட்டத்தை 1679ஆம் ஆண்டில் இயற்றியது. இச்சட்டம், குற்றவாளி ஒருவனை விசாரணை இன்றிப் பல நாட்கள் காவலில் வைப்பதைத் தடுத்தது. குற்றவாளி ஒருவன் தான் அநியாயமான முறையில் சிறை செய்யப்பட்டதாக நீதிபதிகளிடம் மனுச் செய்தால் நீதிபதிகள் ஆட்கொணர் ஆணையின் மூலம் சிறைப்பட்டவரை உடனே நீதிமன்றத்திற்குக் கொணரும்படியும், அவரைச் சிறைப்படுத்தியதற்குக் காரணம் காட்டும்படியும் ஜெயிலர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கலாம். அத்துடன் இவ்வாணையை விடுமுறை நாட்கள் உள்பட எல்லா நாட்களிலும் பொதுவழக்கு நீதிமன்றமும், நிதிவழக்கு நீதிமன்றமும் அரச நீதி மன்றமும் பிறப்பிக்கலாம் என்றும் இச் சட்டம் கூறுகின்றது. ஆகவே சிறைப்பட்டவர்கள் உடனேயே விசாரிக்கப்படவும், விசாரிக்கத் தவறினூல் விடுதலை செய்யப்படவும் இச் சட்டம் வழி செய்தது. ஆகவே இச் சட்டத்தின்மூலம் மக்களின் உரிமைகள் காக்கப்பட்டன. அதனூல்தான் இங்கிலாந்தின் வரலாற்றில் இது ஒரு பெரும் நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

இதற்கடுத்து (அரசுரிமை) விலக்கு மசோதா (The Exclussion Bill) ஒன்று ஷாஃப்ட்ஸ்பரி பிரபுவின் கட்சியான நாட்டுக் கட்சி (Country Party) பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. இரண்டாம் சார்லஸ் இறந்தவுடன் அவருடைய தம்பியான ஜேம்ஸை (யார்க் கோமகன்) இங்கிலாந்தின் அரசராக்கக் கூடாது என இம் மசோதா கூறியது. இம் மசோதாவை நிறைவேற்றுவதிலேயே ஷாஃப்ட்ஸ்பரி பிரபு கண்ணும் கருத்துமாய் இருந்தார். உடனே சார்லஸ் தம் சகோதரனின் நலனைக் காக்கக் கருதிப் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

பிறகு 1679ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புதுப் பாராளுமன்றத்திற்காகத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்

தலில் ஷாஃப்ட்ஸ்பரியின் ஆதரவாளர்கள் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனால் சார்லஸ் பாராளுமன்றத்தைக் கூட்டாமலே காலம் கடத்தினார். அதனால் பாராளுமன்றத்தை உடனே கூட்டும்படி பலர் விண்ணப்பங்களை அரசருக்கு அனுப்பினர். மற்றும் பலர் பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டாம் என்றும் அரசருக்கு விண்ணப்பித்தார்கள். பாராளுமன்றத்தைக் கூட்டும்படி விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பதாரர்கள் (Petitioners) என்றும் வேண்டாம் என்று கூறியவர்கள் வெறுப்பவர்கள் (Abhorrers) என்றும் அழைக்கப்பட்டனர். பின்னர் வெறுப்பவர்கள் டோரிகள் (Tories) எனவும், விண்ணப்பதாரர்கள் விக்குகள் (Whigs) எனவும் பொதுவாக அழைக்கப்பட்டனர்.

இரண்டாம் சார்லஸ் ஓராண்டு காலம் கடத்தியபின் 1680ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாராளுமன்றத்தைக் கூட்டினார். பாராளுமன்றம் கூடியவுடனேயே பொதுமக்கள் சபை அரசுரிமை விலக்கு மசோதாவை நிறைவேற்றியது. ஆனால் பிரபுக்கள் சபை இம்மசோதாவை நிராகரித்தது. பொதுமக்கள் சபையிலிருந்த விக்குகள் இதையறிந்ததும் ஆத்திரம் கொண்டனர். உடனே அரசருக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்று அவர்கள் கூறினர் அதனால் சார்லஸ் 1681ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இப் பாராளுமன்றத்தைக் கலைத்தார். மீண்டும் 1681ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சார்லஸ் தம்முடைய பாராளுமன்றத்தை ஆக்ஸ்ஃபோர்டில் கூட்டினார். ஏனெனில் ஆக்ஸ்ஃபோர்டில் தம்முடைய ஆதரவாளர்களாகிய டோரிகள் பெருமளவில் இருந்தனர். விக்கு கட்சியினர் தங்களைக் கைது செய்வதற்குத்தான் ஆக்ஸ்ஃபோர்டில் பாராளுமன்றம் கூட்டப்படுகின்றது என நினைத்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கென்று பலவகையான ஆயுதங்களுடன் வந்து சேர்ந்தனர். இதைக்கண்ட ஆங்கிலேயர்கள் மறுமுறையும் உள்நாட்டுப் போர் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சினர். ஆங்கில மக்கள் வன்முறையைத் தூண்டிவிடும் ஷாஃப்ட்ஸ்பரியையும் விக்கு கட்சியினரையும் இப்பொழுது வெறுக்க ஆரம்பித்தனர். பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபையும் பிரபுக்கள் சபையும் இணைப்புக் கூட்டத்திற்காக கிறிஸ்து சர்ச் மண்டபத்தில் கூடியது. அரசர் உடனே அம் மண்டபத்தில் நுழைந்து பாராளுமன்றத்தைக் கலைத்தார். இத் துணிச்சலுக்குக் காரணம் பதினான்காம் லூயி இவருக்குப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடும்படி கூறிப் பெரும் நிதியுதவி செய்ததேயாகும். பாராளுமன்றத்தைக் கலைத்தவுடனே ஷாஃப்ட்ஸ்பரி ஹாலந்துக்கு ஓடிவிட்டார். அடுத்த ஒரு வருடத்தில் அவர் அங்கேயே இறந்துவிட்டார்.

1681ஆம் ஆண்டிலிருந்து 1685ஆம் ஆண்டுவரை சார்லஸ் பாராளுமன்றமின்றியே ஆட்சி செய்தார். பிரான்சு நாட்டுப் பேரரசர் பதினான்காம் லூயியிடமிருந்து நிதியுதவி கிடைத்ததால் பாராளுமன்றத்தின் உதவி இவருக்குத் தேவைப்படாமல் போயிற்று. இக்காலத்தில் இவர் புது நீதிபதிகளை நியமித்தார். தம்முடைய ஆதரவாளர்களைப் பெரும் பெரும் பதவிகளில் அமர்த்தினர். நாட்டில் பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. விக்கு கட்சியினர் பல வகைகளிலும் துன்புறுத்தப்பட்டனர். அதனால் அரசரைக் கொல்ல ஒரு சதி தீட்டப்பட்டது. ரம்போல்டு (Rumbold) என்பவர் மற்றும் சிலரைச் சேர்த்துக் கொண்டு ஒரு சதித்திட்டத்தைத் தீட்டினர். அதன்படி அரசர் நியூ மார்க்கெட் குதிரைப் பந்தயத்திலிருந்து திரும்பி வரும்போது அவரைக் கொலை செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. மோசமான வானிலை காரணமாய் அரசர் தம்முடைய திட்டத்தை மாற்றிக் கொண்டதனால், இச்சதி நடைபெறாமல் போய்விட்டது. இச் சதி 'ரை மாளிகைச் சதி' (Rye-House Plot) என அழைக்கப்படுகின்றது. இச் சதிக்கு விக்குகள்தான் உடந்தையானவர்கள் என டோரிக் கட்சியினர் குற்றஞ் சாட்டினர். அதனால் பல விக்குகள் சதிகாரர்களுடன் சிறையிலடைக்கப்பட்டனர். ரஸ்ஸெல் பிரபு, சிட்னி போன்ற விக் தலைவர்களுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. இதன் காரணமாய் விக்கு கட்சி உடைந்து பலவீனமாயிற்று, அதன்பிறகு யார்க் கோமகனான ஜேம்ஸுக்கு எதிர்ப்பே இல்லாமல் போயிற்று. அதனால் சார்லஸ் டோரிக் கட்சியுதவியுடன் எதிர்ப்பில்லா வல்லாட்சியை நடத்தினர். தாம் இறக்கும் வரையில் மகிழ்ச்சியாகவும் கேளி கிண்டலுடனும் வாழ்ந்தார். 1685ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ஆம் நாள் இரண்டாம் சார்லஸ் அரசர் இறந்தார்.

இரண்டாம் சார்லஸ் காலத்தின் முக்கியத்துவம்

இரண்டாம் சார்லஸ் ஆட்சிக் காலத்தில் தான் இங்கிலாந்தில் சிறிதளவு அரசியலமைப்பு முன்னேற்றம் ஏற்பட்டது. அவைகளாவன :

(1) அரசருக்கு நிதியுதவி அளிக்கும் போது, பாராளுமன்றம் எதற்காக நிதியுதவி அளிக்கப்படுகின்றது என்பதை விளக்க ஆரம்பித்தது.

(2) அமைச்சர்கள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள் என்பதைப் பாராளுமன்றம் நிரூபித்துக் காட்டியது.

(3) கிளாரண்டன் டான்பி போன்றவர்கள் மக்களின் மதிப்பை இழந்ததாலும், அவர்களுடைய கொள்கைகளைப் பாராளுமன்றம் ஏற்காததாலும் சார்லஸ் அவர்களை அமைச்சர் பதவிகளினின்று நீக்கினர்.

(4) இரண்டாம்சார்லஸ் காலத்தில் குறிப்பிட்ட அரசியல் திட்டங்களுடைய இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. டோரிக் கட்சி அரசரை ஆதரித்தது. விக்கு கட்சி பாராளுமன்றத்தை ஆதரித்தது.

(5) இரண்டாம் சார்லஸ் காலத்தில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஆட்கொணர் ஆணைச் சட்டம் (The Habeas Corpus Act) இங்கிலாந்து வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றது.

(6) இவருடைய காலத்தில் ஆங்கிலிக்கானிசம் முன்னிலை மீட்சியடைந்தது.

(7) இவருடைய காலத்தில் மதிப்பிழந்திருந்த பிரபுக்களும். நிலக்கிழார்களும், கனவான்களும், குருமார்களும் மீண்டும் சமூகத்தால் மதிக்கப்பட்டனர்.

(8) இவருடைய காலத்தில் லஞ்ச ஊழல்கள் தாண்டவமாடியபொழுதும் கலை, இலக்கியம், அறிவியல் போன்றவைகள் வளர்ந்தன. சர் ஐசக் நியூட்டன் இவர் காலத்தில் வாழ்ந்தவர்தான்.

9. இரண்டாம் ஜேம்ஸ்

(1685—1688)

இரண்டாம் சார்லஸ் இறந்தவுடன் அவருடைய சகோதரர் இரண்டாம் ஜேம்ஸ் 1685ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இங்கி லாந்தின் அரசராக முடிசூட்டப்பட்டார். இச் சமயத்தில் இவரை எதிர்த்த விக்கு கட்சியினர் பலவீனமடைந்திருந்தனர். அரசரை எதிர்த்தவர்கள் ஒடுக்கப்பட்டு வலிமை இழந்து போயிருந்தனர் அரசரை ஆதரித்து வந்த டோரிகள் செல்வாக்குடன் விளங்கினர். இவர்கள் ஜேம்ஸ் அரசரானதை வரவேற்றனர். ஜேம்ஸ் அரசரான வுடனே பிரிவி கவுன்ஸிலில், நாட்டில் சட்ட ரீதியாக ஏற்படுத்தப் பட்ட அரசாங்கத்தையும், மத ஏற்பாட்டையும் தாம் பாதுகாப்ப தாக உறுதி யளித்தார். அதனால் ஆங்கிலிக்கத் திருச்சபையினர் ஜேம்ஸை முழு மனதோடு ஆதரித்தனர். இத்தகைய வகையில் தமக்கு ஆதரவு இருப்பதை யறிந்த ஜேம்ஸ் அரசர் தம்முடைய கொள்கைகளை எந்தவித எதிர்ப்பின்றியும் நிறைவேற்றிவிடலாம் எனக் கனவு கண்டார். அக் கனவு பகற் கனவாகும் என்பதைப் பின்னர்தான் அறிந்தார்.

ஜேம்ஸ் தமது முதல் பாராளுமன்றத்தை 1685ஆம் ஆண்டு மே மாதத்தில் கூட்டினார். இப்பாராளுமன்றத்தில் டோரிகள் பெரும பான்மை பலம் பெற்றிருந்தனர். ஆகவே இப் பாராளுமன்றம் ஜேம்ஸுக்குத் தடையின்றி ஆயுள் மானியத்தை அளித்தது. அத்துடன் பட்டமேற்றவுடனே பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி வசூலித்துக் கொண்ட நிதித்தொகையையும் சட்டத்தின் மூலம் புதுப்பித்தது. இவ்வாறு பாராளுமன்றம் செய்தது ஆங்கில வரலாற்றிலேயே முதல் தடவையும் கடைசி தடவையுமாகும். அத் துடன் எட்டு ஆண்டுகளுக்கு ஒயின், புகையிலை, சர்க்கரைக்காகவும் கூடுதலாக நிதியுதவி செய்தது. இவ்வாறு பாராளுமன்றம் ஜேம்ஸுக்கு நல்ல நிதியுதவி அளித்ததால் பாராளுமன்றம் தமக்கு நல்ல ஆதரவு தருவதாக நினைத்துத் தமக்கு ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றுமுள்ள கத்தோலிக்க மதத்தை இங்கிலாந்தின் தேசிய மதமாக்கிவிட வேண்டும் என நினைத்தார். அதற்கு முதற்படி யாகத் தான் கத்தோலிக்கர்மீது விதிக்கப்பட்ட தண்டனைச் சட்டங் களை ரத்து செய்ய முயன்றார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் மான்மவுத் பிரபுவால் (Manmouth) ஒரு கலகம் ஏற்பட்டது. மான்மவுத் இரண்டாம் சார்லஸ் காலத்தில் கலகம் செய்து தோற்று ஹாலந்திற்கு ஓடியவர். ஜேம்ஸ் அரியணை ஏறியவுடனே இங்கிலாந்தின் மகுடத்தைக் கைப்பற்ற ஒரு படையுடன் இங்கிலாந்திற்குள் புகுந்தார். இவர் ஒரு பிராடெஸ்டெண்டு. ஆகவே பிராடஸ்டெண்டுகள் நிறைந்த இங்கிலாந்தின் மேற்குப் பகுதியில் இவர் நுழைந்ததால் இவருக்கு அங்கு ஆதரவு ஏற்பட்டது. விக்கு கட்சியினரும் இவரை ஆதரித்தனர். ஆகவே இவர் தம்மை இங்கிலாந்தின் அரசரென்று பிரகடனப் படுத்திக் கொண்டார். உடனே ஜேம்ஸ் படையுடன் சென்று இவரை செட்ஜ் மூர்ப்போரில் தோற்கடித்தார். பாராளுமன்றம் மான்மவுத்தின்மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டியது. அதன்படி இவர் கொல்லப்பட்டார். இவ்வாறு கலகங்கள் தோன்றுவதால் அரசருக்கு ஒரு நிரந்தரப் படை தேவையெனக் கருதிப் பாராளுமன்றம் அரசருக்கு ஒரு நிரந்தரப் படையை ஏற்படுத்த 70,00,000 (எழுபது லட்சம்) பவுன்களை நிதியுதவியாக அளித்தது. அதன்பின்பு மான்மவுத்தின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் பலவகையில் துன்புறுத்தப்பட்டனர். ஜெஃப்ரீஸ் (Jeffreys) என்பவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் மிகக் கொடூரமான முறையில் மான்மவுத்தின் ஆதரவாளர்களைத் தண்டித்தது. பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் சிறையிலடைக்கப்பட்டனர். மேலும் பலர் நாடு கடத்தப்பட்டனர். இவ்வாறு பலர் கொடுமைப் படுத்தப்பட்டதை அரசரின் ஆதரவாளர்களான டோரிக் கட்சியினர்கூட வெறுத்தனர். ஜேம்ஸின் வீழ்ச்சிக்கு இதுவொரு காரணமாகவும் கருதப்படுகின்றது. இதைப்பற்றி வில்லியம்சன் (Williamson) என்பவர் குறிப்பிடும்பொழுது ‘இது இரண்டாம் ஜேம்ஸ் செய்த பெரும் தவறாகும். மான்மவுத்தைக் கொன்றதற்குப் பதில் சிறையிலடைத்திருந்தாலோ அல்லது நாடு கடத்தியிருந்தாலோ நன்மையாயிருந்திருக்கும். இவரைக் கொலை செய்ததனால் விக்கு கட்சியினருக்குத்தான் ஆதரவு ஏற்பட்டது. இரண்டாம் ஜேம்ஸ் இடத்தில் மான்மவுத்து தான் இருக்கவேண்டும் என்று விக்கு கட்சியினர் கூறி வந்ததால் அவர்களுக்கு மக்களிடையே வெறுப்புதான் ஏற்பட்டிருந்தது. மான்மவுத் உயிருடன் இருந்திருந்தால் அதையேதான் கூறிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர் கொல்லப்பட்டதனால் விக்கு கட்சியினர் மீதிருந்த கறை மறைந்துவிட்டது. அதனால் விக்குகளின் பலம் உயர்ந்தது. அவர்களுக்கு மக்களிடையேயும் மதிப்பு வளர்ந்தது. அதனால் அவர்களாலேயே 1688இல் ஜேம்ஸ் மகுடத்தைத் துறக்க நேர்ந்தது. ஆகவே ஜேம்ஸ் கண்மூடித்தனமாகச் செயல்படாமல் அரசியல் முறையாகச் செயல்பட்டிருந்தால்

விக்குகள் மேன்மை நிலை யடைந்திருக்க மாட்டார்கள்' எனக் கூறுகின்றார். மானமவுத் கொல்லப்பட்ட பின்பு விக்குகள் செல்வாக்குப் பெற்றதினால் அவர்கள் ஆரஞ்சு நாட்டு வில்லி யத்தை ஆதரிக்க ஆரம்பித்தனர்.

ஜேம்ஸ் தமது பாராளுமன்றத்தை 1685ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் தேதி மீண்டும் கூட்டினார். சோதனைச் சட்டத்தையும், ஆட்கொணர் ஆணைச் சட்டத்தையும் ரத்து செய்துவிடும்படி பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றம் அரசருக்கு ஆதரவாக இருந்தபோதிலும், ஜேம்ஸ் சோதனைச் சட்டத்தையும், ஆட்கொணர் ஆணைச் சட்டத்தையும் ரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டதை யறிந்தவுடனே திடுக் கிட்டது. ஜேம்ஸ் கத்தோலிக்கர்களுக்கு உயர் பதவிகளை வழங் கவும், கத்தோலிக்க மதத்தை நாட்டில் ஏற்படுத்தவுமே இவ்வாறு செயல்படுகின்றார் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணினர். அவர்களின் எண்ணத்திற்குத் தகுந்தாற்போலவே ஜேம்ஸ் நிலப்படையில் பல கத்தோலிக்கர்களை உயர் பதவிகளில் நியமித் திருந்தார். இதே நேரத்தில் பிரான்சில் பதினான்காம் லூயி அரசர் பிராடெஸ்டெண்டுகளுக்கு வழங்கியிருந்த உரிமைகளை யெல்லாம் பறித்துக் கொண்டு அவர்களைப் பலவகையிலும் துன் புறுத்த ஆரம்பித்தார். இதையறிந்த ஆங்கிலேயர்கள் ஜேம்ஸும் தங்களை அவ்வாறு துன்புறுத்தக் கூடும் என எண்ணிப் பயந்தனர். அதனால் பாராளுமன்றம் ஜேம்ஸின் கொள்கைகளை எதிர்க்க ஆரம் பித்தது. தம்மை ஆதரித்துவந்த பாராளுமன்றமே தம்மை எதிர்க்க ஆரம்பித்துவிட்டதால், அப்பாராளுமன்றமே வேண்டிய தில்லை எனக் கருதி ஜேம்ஸ் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடனே ஜேம்ஸ் தம் விருப்பப் படி ஆட்சி செய்தார். இராணுவத்திலும், நிருவாகத்திலும் பல கத்தோலிக்கர்களை உயர் அதிகாரிகளாக நியமித்தார். இவ்வாறு நியமிப்பது சோதனைச் சட்டத்திற்குப் புறம்பானதாகும். இச்சட் டப்படி அரசாங்கப் பதவிகளில் நியமிக்கப் படுபவர்கள். தாங்கள் ஆங்கிலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவர்களென்று சபதம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு சபதம் செய்ய மறுப்பவர்களைக் கூட ஜேம்ஸ் உயர் பதவிகளில் அமர்த்தினார். அத்துடன் ஆங்கி லிக்கத் திருச்சபையில் கூட கத்தோலிக்கர்கள் பதவியில் நியமிக் கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் ஹேல்ஸ் (Hales) என்பவரும் ஒருவர். சோதனைச் சட்டப்படி ஹேல்ஸ் என்பவரை இராணுவ அதிகாரியாக நியமித்தது செல்லாது என்று காட்டன் (Godden) என்பவர் நீதிமன்றத்தில் அறிவித்தார். உடனே இவ்

வழக்கு 1686ஆம் ஆண்டில் நீதிமன்றத்தின் முன் வந்தது. ஹேல்ஸ் இந் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். உடனே ஹேல்ஸ் அரச நீதி மன்றத்தில் அரசரின் விலக்கிவிடும் அதிகாரத்தின் (Dispensing Power) கீழ் முறையிட்டார். ஒரு சட்டத்திற்குப் பணிய மறுப்பவர்களுக்கு முன் கூட்டியே கொடுக்கப்படும் அதிகாரத்திற்கு விலக்கிவிடும் அதிகாரமெனப் பெயர். இந் நீதிமன்றத்தில் அரசருக்கு விலக்கி விடும் அதிகாரம் உண்டா? இல்லையா? என்பதுபற்றி விவாதம் நடைபெற்றது. முடிவில் சட்டங்கள் அரசருடைய சட்டங்களென்றும், இவைகளில் அரசர் எதையும் தன்னுடைய செய்யலாமென்றும், பாராளுமன்றம் இந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முடியாதென்றும் கூறிப் பன்னிரண்டு நீதிபதிகளில் பதினொரு நீதிபதிகள் ஹேல்ஸுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கூறினர். பிற்காலத்தில் இத் தீர்ப்பு ஒழிக்கப்பட்டது.

இத் தீர்ப்புக்குப் பின் ஜேம்சுக்குத் துணிவு அதிகமாயிற்று. நாட்டில் கத்தோலிக்க மத ஏற்பாட்டை முழுவடிவில் புகுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பல பிராடெஸ்டெண்டுகளைக் கட்டாயப்படுத்தி, கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்தார். அவ்வாறு மதம் மாறியவர்களுக்குப் பதவிகள் கொடுக்கப்பட்டன. மதம்மாறிய பலருக்குப் பதவிகளை நீட்டித்தார். பார்க்கர் என்னும் கத்தோலிக்கர் ஆக்ஸ்ஃபோர்டுக்கு பிஷப்பாக நியமிக்கப்பட்டார். இதை யறிந்த ஆங்கிலிக்க குருமார்கள் கத்தோலிக்கானிசத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர். இப் பிரச்சாரங்களுக்கு ஜேம்ஸ் தடை விதித்தார். இத்தடையை எதிர்த்து லண்டன் குருவான ஷார்ப் (Sharp) என்பவர் பிரச்சாரம் செய்தார். உடனே இவரைப் பதவியிலிருந்து நீக்கும்படி லண்டன் மேற்றிராணியாராகிய காம்ப்டனுக்கு (Compton) கட்டளையிடப்பட்டது. காம்ப்டன் இக் கட்டளையை நிராகரித்தார். உடனே சமய உயர் ஆணை நீதிமன்றம் (Ecclesiastical High Commission Court) லண்டன் மேற்றிராணியாரான காம்ப்டனை தற்காலிகப் பதவி நீக்கம் செய்தது. அத்துடன் அல்பன் பிரான்சிஸ் (Alban Francis) என்பவர் பிரமாணம் எடுக்காததால் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூறியதால் அவரின் பதவியும் பறிக்கப்பட்டது. நாட்டில் இராணுவ, சிவில் துறைகளில் ஜேம்ஸ் கத்தோலிக்கர்களை நிரப்பினார். பிராடெஸ்டெண்டு போர் வீரர்கள் பலர் இராணுவத்தினின்று நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக கத்தோலிக்கர்கள் நியமிக்கப்பட்டனர். அரசரின் பிரிவு கவுன்சிலிலும் கத்தோலிக்கர்களே இடம் பெற்றனர். மன்னர் இங்கிலாந்தில் மட்டுமின்றி

ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும் கூட, கத்தோலிக்க மதத்தைப் புகுத்தப் பல ஏற்பாடுகளைச் செய்தார். அதனால் டோரிக் கட்சியினரும் அரசரை எதிர்க்க ஆரம்பித்தனர். பிறகு ஜேம்ஸ் டோரிக் கட்சியினரையும் விரட்ட ஆரம்பித்தார். மாநகராட்சி மன்றங்களில் இருந்த டோரிகள் பதவிகளையிழந்தனர். அவர்களுக்குப் பதிலாக கத்தோலிக்கர்களும், ஆங்கிலிக்கானிசத்தை எதிர்ப்போரும் அங்கு அமர்த்தப்பட்டனர். சோதனைச் சட்டத்தை ரத்து செய்ய மறுத்த அமைதிகாண் நீதிபதிகளும், லெப்டினண்ட் பிரபுக்களும் மாநகராட்சி மன்றங்களின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இத்தகைய செயல்களால் ஆங்கிலிக்கன்கள் அரசர் மீது வெறுப்படைந்தனர்.

ஆங்கிலிக்கன்களின் ஆதரவைப் பெறமுடியாது என்று எண்ணிய அரசர் ஆங்கிலிக்கானிசத்தை இணங்காதாரின் (Dissenters) ஆதரவைப் பெற முயற்சி செய்தார். அதற்காக 1687ஆம் ஆண்டில் அரசர் பொறுத்தல் அறிக்கையை (Declaration of Indulgence) வெளியிட்டார். கத்தோலிக்கர்களையும் இணங்காதாரையும் பதவியமர்த்துவதிலிருந்து விலக்கி வைக்கும் சட்டங்களையும், இவர்களுக்குத் தண்டனை விதிக்கும் சட்டங்களையும் இவ் வறிக்கை நீக்கியது. அதனால் ரோமன் கத்தோலிக்கர்கள் மகிழ்ந்தனர். பின்னர் வெளிப்படையாகப் பொது வழிபாடு செய்ய ஆரம்பித்தனர். ஆனால் இணங்காதார் பொது வழிபாட்டுரிமையைப் பயன்படுத்திக்கொள்ள முன்வரவில்லை. ஏனெனில், கத்தோலிக்கர்களுக்கு உதவ வேண்டுமென்பதே அரசரின் நோக்கம் என்பதை இவர்கள் அறிவார்கள். அத்துடன் பாராளுமன்றம் தங்களுக்குச் சமயப்பொறை வழங்குவதையே அவர்கள் விரும்பினர்கள். அவர்கள் விருப்பம் போலவே பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்குச் சமயப்பொறை வழங்குவதாக வாக்குறுதியளித்தனர். ஜேம்ஸின் இப்பொறுத்தல் அறிக்கை ஆங்கிலிக்கத் திருச்சபையில் பற்றுடைய டோரிகளுக்கு எரிச்சலூட்டியது. விக்குகளுக்கும் வெறுப்பூட்டியது. இவ் வறிக்கை இங்கிலாந்தில் கத்தோலிக்கானிசத்தை ஏற்படுத்த முயலும் பாதையாகுமென அவர்கள் அஞ்சினர்.

1688 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் இரண்டாவது பொறுத்தல் அறிக்கையை வெளியிட்டார். அதன்படி இவ்வறிக்கையை எல்லாத் திருச்சபைகளிலும் கட்டாயமாகப் படிக்கவேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது. அதனால் மேற்றிராணியார்கள் இப்பொழுது இக்கட்டான நிலைக்குள்ளானர்கள். உடனே சான்கிராப்ட் (Sancroft) என்ற காண்டர்பரியின் மேற்றிராணியாரும் மற்றும் ஆறு மேற்றிராணியார்களும் சேர்ந்து தங்களை அறிக்கையைத்

திருச்சபைகளில் படிக்கும் பணியிலிருந்து விடுவித்துவிடும்படி அரசருக்கு விண்ணப்பித்தனர். உடனே அரசர் தமக்கு விண்ணப்பம் செய்ய மேற்றிராணியார்களுக்கு உரிமையில்லை என்றும், அவர்கள் அவ்வாறு செய்தது அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றமாகும் என்றும் கூறி அந்த ஏழு மேற்றிராணியார்களையும் சிறையிலடைக்கக் கட்டளையிட்டார். பின்னர் இந்த ஏழு மேற்றிராணியார்களும் நீதிமன்றத்தில் அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டனர். மேற்றிராணியார்கள் அரசருக்குச் சமர்ப்பித்த விண்ணப்பம் பொய்யானதுமன்று; கெடுநோக்கானதுமன்று; அத்துடன் அரசாங்கத்தை அவதூறு செய்யும் குறிக்கோளுடையதுமன்று என்று மேற்றிராணியார்களின் வழக்கறிஞர் வாதாடினர், விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்இடம் பாராளுமன்றமேயொழிய அரசர் அல்ல என்று அரசர் தரப்பில் வாதிக்கப்பட்டது. கடைசியில் வழக்கு நீதிபதிகளின் தீர்ப்புக்கு விடப்பட்டது. இரண்டு நீதிபதிகள் மேற்றிராணியாளர்களுக்குச் சாதகமாகவும் மற்ற இரண்டு நீதிபதிகள் அவர்களுக்குப் பாதகமாகவும் தீர்ப்புக் கூறினர், அதனால் ஜூரிகளின் முடிவுக்கு விடப்பட்டது. ஜூரிகள் அனைவரும் மேற்றிராணியார்கள் செய்தது குடிமக்களின் பிறப்புரிமையெனக் கூறி அவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்புக் கூறினர். அதனால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கோக் என்பவர் காலத்திற்குப் பின்பு இப்பொழுதுதான் நீதிமன்றம் அரசருக்கெதிராகத் தீர்ப்பு வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்றிராணியார்களின் விடுதலை ஆங்கில மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க வைத்தது. இதை ஒரு விழாவாகவும் கொண்டாடினர். அப்பொழுதுதான் ஜேம்ஸ் அரசருக்கு மகன் ஒருவன் பிறந்தான் என்ற செய்தி அவர்களுக்கு எட்டியது. அச்செய்தி அவர்களுக்கு வேதனையைத்தான் அளித்தது. ஏனெனில் ஜேம்ஸ் அரசர் சந்ததியின்றி இறந்துவிடுவார் என்றும், அவருக்குப் பிறகு ஜேம்ஸ் அரசரின் மகளும் பிராடெஸ்டெண்டு அரசரான ஆரஞ்சு நாட்டு வில்லியத்தின் மனைவியுமான மேரி பட்டத்திற்கு வருவார் என்றும் ஆங்கில மக்கள் நம்பிக்கையுடன் இருந்தனர். அத்துடன் ஜேம்ஸ் அரசருக்கு வயதானதால் வெகுநாட்கள் உயிருடன் இருக்கமாட்டாரென்றும் கருதினர். இத்தகைய எண்ணம் மக்களுக்கு இருந்ததால்தான் ஜேம்ஸின் வல்லாட்சியைக்கூட அவர்கள் பொறுத்திருந்தார்கள். அதனால் ஜேம்சுக்கு மகன் பிறந்தான் என்ற செய்தி அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஜேம்சின் மகன் கத்தோலிக்க ஆசிரியர்களின் போதனையால் வளர்க்கப்பட்டு, பிற்காலத்தில் கத்தோலிக்க மத வெறியனாகத்தான் இருப்பான் என

மக்கள் அஞ்சினர். அத்துடன் இங்கிலாந்து எப்பொழுதும், கத்தோலிக்க அரசர்களின் ஆதிக்கத்தில்தான் இருக்க நேரும் என்றும் அப்பொழுது கத்தோலிக்கர்களின் கீழ் தங்களுடைய துன்பங்களுக்கு முடிவு இருக்காதென்றும் மக்கள் எண்ணினர். இத்தகைய எண்ணம் மக்களுக்குத் துணிந்து போராடும் சக்தியை அளித்தது. உடனே படையுடன் வந்து பிராடெஸ்டெண்டு மதத்தையும் இங்கிலாந்தின் அரசியலமைப்பு சுதந்திரங்களையும் காப்பாற்றும்படி வில்லியமுக்கும், மேரிக்கும் மக்கள் அழைப்பு விடுத்தனர். டோரிகளும் விக்குகளும் ஒன்று சேர்ந்து வில்லியம்மையும் மேரியையும் இங்கிலாந்தின் அரியணையில் அமர்த்தப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டனர். இதையறிந்த ஜேம்ஸ் மக்களின் ஆதரவைப் பெற, பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் அம்முயற்சிகள் யாவும் வீணாயின. ஆங்கில மக்களின் உரிமைகளைக் காப்பதாகவும், சுயேச்சையான பாராளுமன்றத்தைக் கூட்டுவதாயும். பிராடெஸ்டெண்டு மதத்தைக் காப்பதாயும் உறுதியளித்த வில்லியம் 1668ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெரும்படையுடன் டோர்பே (Torbay) துறைமுகத்தில் வந்து இறங்கினார். இந்நிலையில் ஜேம்சுக்கு எதிரிகளோடு போரிட விருப்பமில்லை. இவருடைய போர் வீரர்கள் பலரும் எதிர்க் கட்சியில் சேர்ந்தனர். ஜேம்சின் செல்வாக்கும் சீர்குலைந்தது. அதனால் ஜேம்ஸ் திடீரென்று பொறுமையிழந்து டிசம்பர் மாதம் 9ஆம் தேதி தம் மனைவி மக்களை பிரான்சுக்கு அனுப்பினார். அதைத் தொடர்ந்து தாமும் நாட்டை விட்டு வெளியேறி பிரான்சுக்குப் போய்ச் சேர்ந்தார்.

இரண்டாம் ஜேம்ஸ் பிரான்சுக்கு ஓடிவிட்ட பின்பு வில்லியம் தம் படை வலிமையைப் பயன்படுத்தி இங்கிலாந்தின் அரசரா யிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இங்கிலாந்தின் அரசியல் சட்டங்களைக் காப்பாற்றுவதாயும், ஆங்கிலிக்கானிசத்தைப் பாதுகாப்பதாகவும், சுயேச்சையான பாராளுமன்றத்தைக் கூட்டுவதாயும் வில்லியம் ஆங்கில மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தார். அவ்வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டியது அவர் பொறுப்பாயிற்று,

ஜேம்ஸ் நாட்டைவிட்டு வெளியேறியதும், பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களும், இரண்டாம் சார்லஸ் காலத்திய பொது மக்கள் சபையின் உறுப்பினர்களும், லண்டன் நகரின் நகர முதுவர்களும், மாநகராட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் கொண்ட ஒரு பேரவை கூட்டப்பட்டது. இப் பேரவை புதிய பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை கூறியது. அதன்படி 1689-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு பிரத்தியேகப் பாராளுமன்றம்

தேர்ந்தெடுக்கப்பட்டது. பொதுமக்கள் சபையில் விக்கு கட்சியினர் பெரும்பான்மை இடங்களைப் பெற்றனர். ஆனால் பிரபுக்கள் சபையில் டோரிக் கட்சியினர் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். இப் பாராளுமன்றத்தின் முதற்பணி அங்கு அப்பொழுது இருந்த நிலையை வரையறை செய்யவேண்டியதாக இருந்தது. இதை இப் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தால் முடிவு செய்தது. இரண்டாம் ஜேம்ஸ் நாட்டின் அடிப்படையான சட்டங்களை மீறியதாலும், அரசருக்கும் மக்களுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை முறித்ததாலும், நாட்டை விட்டுத் தாமே ஓடி அரசு துறந்ததாலும், அரியணை காலியாக இருக்கிறதென்பதே அத் தீர்மானமாகும். டோரிகளும் விக்குகளும் இத் தீர்மானத்தால் திருப்தியடைந்தனர். ஆகவே அரசர் பதவி காலியாய் இருக்கின்றது என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. அதன் பிறகு அக் காலியான இடத்தில் யாரை அமர்த்துவது என்ற பிரச்சினை எழுந்தது. டோரிக் கட்சியினர் "ஜேம்ஸ் வெளிநாட்டில் பெயரளவில் அரசராக இருக்கட்டும் என்றும், வில்லியம் இடைக்காலப் பாதுகாப்பாளராக ஆட்சி செய்யலாம்" என்றும் கூறினர். இவர்களின் யோசனை பல உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் பிடிக்கவில்லை. மற்றும் பலர் ஜேம்ஸ் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டதால் அவருக்கு ஆங்கிலேயர்கள் கீழ்ப் பணிய வேண்டியதில்லை என்றும், அவருடைய மகள் மேரி அரசியாரே இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டப்படவேண்டுமென்றும் கூறினர். தம் கணவரின்றித் தாம் அரியணை ஏறுவதை மேரி அரசியாரும் விரும்பவில்லை. ஆகவே வில்லியம் காப்பாளராக இருக்க மறுத்ததாலும், தம் கணவரின்றி மேரியும் அரசியாக இருக்க மறுத்ததாலும், ஓர் உடன்பாடு செய்வது அவசியமாயிற்று. இதன்படி வில்லியமும் மேரியும் இணையாக ஆட்சி செய்வது என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி இருவரும் இங்கிலாந்தின் இணையரசர்கள் என்று அறிவிக்கப்பட்டது. வில்லியத்திற்கும் மேரிக்கும் அரசுரிமை அளிப்பதற்கு முன், 'ஓர் உரிமைகள் அறிக்கை' அரசருக்கு அளிக்கப்பட்டது. அதன்பின் வில்லியமும் மேரியும் 1689ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் நாள் முடி சூட்டப்பட்டனர். வில்லியமும் மேரியும் இணைந்து இங்கிலாந்தை ஆட்சி செய்ய ஆரம்பித்தனர்.

10. மேதகு புரட்சி

(Glorious Revolution)

ஆங்கில மக்களின் அழைப்பை ஏற்று வில்லியம் தம் படை வீரர்களுடன் இங்கிலாந்தின் டோர்பே துறைமுகத்தில் 1688ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வந்து இறங்கினர். வில்லியம் இங்கிலாந்தில் அடியெடுத்து வைத்ததிலிருந்து இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. அரசியலிலும், அரசியலமைப்பிலும், ஆட்சியிலும், குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் ஏற்பட்டன. வில்லியத்தின் வருகையால் இங்கிலாந்தில் ஏற்பட்ட விளைவுகள் அனைத்தும் சேர்ந்து, மேதகு புரட்சி அல்லது மாண்பு மிகு புரட்சி அல்லது புகழ்பெற்ற புரட்சி எனப் பெயர் பெற்றன.

இப் புரட்சிக்கு முக்கிய காரணம் இரண்டாம் ஜேம்ஸின் வரம்பு மீறிய செயல்களேயாகும். இரண்டாம் ஜேம்ஸ் அரியணையில் அமர்ந்ததிலிருந்து மக்களின் விருப்பங்களை மதித்து நடந்தாரில்லை. அரசரின் சிறப்பதிகாரங்களான சட்ட விலக்கதிகாரம் (Dispensing Power) சட்ட நிறுத்ததிகாரம் (Suspending Power) ஆகிய இரண்டையும் முறையற்ற வழிகளில் கையாண்டதால் அவர் நாட்டின் அரசியலமைப்பையும் அவமதித்தார். சமயத் தொடர்பான உயர் ஆணை நீதிமன்றத்தை (Ecclesiastical Commission Court) ஏற்படுத்தியதன் மூலம் நாட்டின் சட்டத்தையே மீறினர். நாட்டில் எல்லாத் துறைகளிலும் கத்தோலிக்க மதத்தைப் புகுத்த முயன்றதால் திருச்சபைகளையும், பல்கலைக் கழகங்களையும் டோரிகளையும் பகைத்துக் கொண்டார். நிலைப் படை வைத்துக் கொண்டு மக்களை அச்சுறுத்தியதின் மூலம் பொதுமக்களின் நன்மதிப்பையும் இழந்தார். தமது வெளிநாட்டுக் கொள்கையிலும் அவர் உறுதியாக இருக்கவில்லை. இவருடைய இத்தகைய கொள்கைகளே இவரின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும். இவர் மட்டுமல்லாமல் ஏனைய ஸ்டூவர்டு அரசர்களின் சமயக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கையுமே அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே சச்சரவுகளை ஏற்படுத்தின. இச் சச்சரவுகள் முற்றிக் கடைசியில் 1688ஆம் ஆண்டு புரட்சியாக உருவெடுத்தது. அதனால் இரண்டாம் ஜேம்ஸ்

நாட்டை விட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஹாலந்து நாட்டு அரசரான வில்லியமும் மேரியும் இணையாட்சி செய்ய வேண்டிய சூழ்நிலை உருவானது. இச் சூழ்நிலையில்தான் இங்கிலாந்தின் அரசியலிலும் அரசியலமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்களே மேதகு புரட்சியின் வெற்றிகளாக அமைந்தன.

புரட்சியால் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் போரின்றி, இரத்தம் சிந்தாமல் ஏற்பட்டவைகளாகும். அதனால் தான் இப் புரட்சி இரத்தமில்லாப் புரட்சி (Bloodless Revolution) என அழைக்கப்படுகின்றது. ஆனால் ஜேம்ஸ் வீரத்துடனும், தீரத்துடனும் செயல்பட்டிருந்தால் இப் புரட்சிக்கு இப் பெயரே வந்திருக்காது. நாட்டில் பெரும்போர் ஏற்பட்டிருக்கும். இரத்த ஆறு ஓடியிருக்கும். ஆனால் ஜேம்ஸ் ஒரு கோழையாக, போரில் விருப்பமில்லாதவராக இருந்ததனால்தான் அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஆனால் ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் இப் புரட்சியின் காரணமாகப் பெருங் கலகங்கள் ஏற்பட்டன. இரத்த ஆறுகள் ஓடின. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இருந்தும் புரட்சிக்கேற்ற வன்மை குறைந்து நன்மை அதிகம் பெற்றதால் இப் புரட்சி இங்கிலாந்தின் வரலாற்றிலே சிறந்த ஒரு இடத்தைப் பெறுகின்றது.

வில்லியத்திற்கும் மேரிக்கும் அரசுரிமை அளிப்பதற்கு முன் உரிமைகள் பற்றி ஓர் அறிக்கையைத் தயாரிக்கப் பாராளுமன்றக் குழு ஒன்று அமர்த்தப்பட்டது. அக்குழுவானது ஜேம்ஸ் மக்கள் உரிமைகளை மீறியதை அடிப்படையாக வைத்து ஓர் அறிக்கையைத் தயாரித்தது. இவ்வறிக்கையை முடி சூட்டப் பெறுமுன் வில்லியமிடமும் மேரியிடமும் அளித்து இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் நிறைவேற்ற வேண்டுமெனக் கோரினர். அவர்களும் இக் கோரிக்கைகளை ஒப்புக் கொண்டனர். அதன் பின்னர் அவர்களுக்கு ஆங்கில அரியணை அளிக்கப்பட்டது. அரசரால் அழைக்கப்படாத பாராளுமன்றமாகிய பிரத்தியேகப் பாராளுமன்றம் சட்ட வழியான பாராளுமன்றமென அறிவிக்கப்பட்டது. இப் பாராளுமன்றம் முதல் வேலையாக உரிமைகள் அறிக்கையைச் சட்டமாக்கியது. இச் சட்டமே உரிமைகள் மசோதா எனப்படும்.

உரிமைகள் மசோதா (Bill of Rights)

உரிமைகள் மசோதா ஆங்கிலேய அரசியலமைப்புச் சட்டங்களில் மிக முக்கியமானவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது-

இம்மசோதா 1689ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் நாள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அரசருக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட ஓர் உன்னத ஒப்பந்தம் எனவும் இது கருதப்படுகின்றது. இம் மசோதா ஆங்கில அரசர்களின் கொடுங் கோன்மையான அதிகாரங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கின்றது. இம் மசோதாவில் இடம் பெறும் முக்கிய செய்திகளாவன:

(1) இங்கிலாந்தின் அரசர் சட்டங்களை நிறுத்திவைக்கும் அதிகாரத்தையும் (Suspending power) விலக்கிவிடும் அதிகாரத்தையும் (Dispensing power) இரண்டாம் ஜேம்ஸ் அரசர் பயன்படுத்தியது போல் பயன்படுத்தக் கூடாது.

(2) திருச்சபை வழக்குகளுக்காக ஏற்படுத்தப் பட்ட உயர் ஆணை நீதிமன்றம் (Ecclesiastical Commission court) சட்டத்திற்குப் புறம்பானது.

(3) அரசருக்கு விண்ணப்பிக்க மக்களுக்கு உரிமையுண்டு.

(4) பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அமைதிக் காலத்தில் அரசர் நிலப்படையை வைத்துக்கொள்ளக்கூடாது.

(5) அரசர் எதேச்சாதிகாரமாக ஆட்சி செய்யக் கூடாது.

(6) பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசர் வரிகளை விதிக்கக் கூடாது.

(7) அரசர் பாராளுமன்றக் கூட்டங்களை அடிக்கடி முறைப்படி கூட்ட வேண்டும்.

(8) அரசர் பாராளுமன்றத்திற்கு நடக்கும் தேர்தல்களில் தலையிடக் கூடாது.

(9) பாராளுமன்றத் தேர்தல்களில் தமக்கு வேண்டியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட அரசர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாது.

(10) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திரமாக விவாதிக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

(11) அரசர் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளில் தலையிடக் கூடாது.

(12) இங்கிலாந்தின் அரசர் ஓர் கத்தோலிக்கராக இருக்கக் கூடாது.

(13) மிதமிஞ்சிய பிணையப் பணத்தையும், கொடிய தண்டனையளிப்பையும் தடை செய்தல்.

(14) தண்டிக்கப் படுவதற்கு முன் விதிக்கப்படும் தண்டங்கள், பறிமுதல்கள் ஆகியவை சட்ட முரணானவை.

ஆகவே இம் மசோதா அரசர்களின் கொடுங்கோன்மைக்குக் கட்டுப்பாடு விதித்து மக்களின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் பாதுகாப்பு அளித்தது. அரசரின் தெய்வீக உரிமைக் கொள்கை இம்மசோதாவால் மீண்டும் உயிர்பெற முடியா வண்ணம் மாண்டது. அரசரின் அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் வர நேர்ந்தது. இம் மசோதாவுடன் 'கத்தோலிக்கரும் கத்தோலிக்கரை மணந்தவரும் இங்கிலாந்தின் அரசராக முடியாது' என்ற பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி வில்லியமும் மேரியும் அவர்கள் வாழ்நாள் வரை இங்கிலாந்தை ஆள வேண்டுமென்றும், அவர்களில் ஒருவர் முன்னதாக இறந்தால் மற்றவர் தொடர்ந்து ஆட்சி செய்ய வேண்டு மென்றும், இருவரும் இறந்த பின்பு மேரியின் மக்களும், அவர்களுக்குப் பிறகு மேரியின் தங்கையான ஆன் இராணியும் அவருடைய மக்களும், அவர்களுக்குப் பின் வில்லியம் மறுமணம் செய்திருந்தால் இரண்டாம் மனைவியின் மக்களும் ஆங்கில அரியணையில் அமர வேண்டுமென்றும் அப்பிரிவு கூறியது.

புரட்சியின் நன்மைகள்

அரசர்—பாராளுமன்றப் போராட்டத்தின் முடிவு

பாராளுமன்றத்திற்கும் ஸ்டூவர்ட்டு அரசர்களுக்கு மிடையே இடைவிடாது நடைபெற்று வந்த போராட்டம் 1688ஆம் ஆண்டில் ஏற்பட்ட இப் புரட்சியால் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது. அரசர் இறைமையாளரா? அல்லது பாராளுமன்றம் இறைமையுடையதா? என்ற கேள்வியுடன் தான் இங்கிலாந்தில் 17ஆம் நூற்றுண்டு ஆரம்பமானது. இக் கேள்வியின் பதிலுக்காக இங்கிலாந்து நாட்டு மக்கள் பல கொடுமைகளை அனுபவித்தனர். உள் நாட்டுப் போரினால் பலர் உயிர் இழந்தனர். இரத்த ஆறு ஓடியது. இங்கிலாந்து இதற்காகத் தன்னுடைய அரசர்களில் ஒருவரைத் தியாகமும் செய்தது. பின்னர் இரண்டாம் ஜேம்ஸ் தன் சக்தியுள்ள வரை போராடினார். முடியாமல் நாட்டை விட்டே ஓடினார். மக்களும், டோரிகளும், விக்குகளும், வில்லியத்திற்கும் மேரிக்கும்

அழைப்பு விடுத்தனர். நாட்டின் சட்டங்களையும், மக்களின் உரிமைகளையும், பிராடெஸ்டெண்டு மதத்தையும், பாராளுமன்றத்தையும் பாதுகாப்பதாக வில்லியம் வாக்குறுதி கொடுத்த பின்பு அவர்களை அரியணையில் அமர்த்தினர்கள். இதனால் பாராளுமன்றச் சட்டங்களுக்கு அரசர் கட்டுப்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. அதனால் சட்டங்களுக்கு மேம்பட்டவர் அரசர் என்ற தெய்வீக உரிமைக் கொள்கையும் மாண்டது. இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி நிறுவப் பட்டது. அரசரிடம் மட்டும் பொதிந்து கிடந்த இறைமை, பாராளுமன்றத்தோடு கூடிய அரசருக்கு (King in Parliament) மாற்றப்பட்டது.

கத்தோலிக்கானிசத்தின் முடிவு

இப் புரட்சியால் கத்தோலிக்க மதம் வளர்ச்சியில் தோல்வி கண்டது. கத்தோலிக்க மதத்தை இங்கிலாந்தில் எல்லாத் துறைகளிலும் நுழைத்து விட முயற்சிகள் பல செய்த அரசர்கள் இறந்ததாலும், பதவி துறந்ததாலும், அம் மதம் நசுக்கப்பட்டது. ஒரு வேளை ஜேம்ஸ் அரசராகத் தொடர்ந்து நீடித்திருந்தால் இங்கிலாந்தில் கத்தோலிக்க மதம் உச்ச நிலையடைந்திருக்கும். ஆனால் அவர் நாட்டை விட்டே ஓடியதால் கத்தோலிக்கர்களின் எண்ணம் ஈடேறவில்லை. மற்றப் பிரிவினர்க்கும், மதங்களுக்கும் சமயப் பொறை வழங்கப்பட்டது. 1689ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சமயப் பொறைச் சட்டம் (Toleration Act) கிளாரண்டன் சட்டத் தொகுதியால் துன்புறுத்தப்பட்டு வந்த அனைவருக்கும் விடுதலையளித்தது. ஆனால் கத்தோலிக்கானிசத்திற்கு மட்டும் சமயப் பொறை வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் அவதியுற வேண்டியதாயிற்று.

மக்களின் உரிமைகளும் சுதந்திரங்களும்

ஸ்டூவர்ட்டு அரசர்களிடம் மக்கள் போராடியது தங்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெறுவதற்காகத் தான். அச் சுதந்திரங்களையும் உரிமைகளையும் இப்புரட்சி மக்களுக்கு வழங்கியது. வில்லியமும்-மேரியும் இணைந்த ஆட்சியில் பாராளுமன்றம் உரிமைகள் மசோதாவைச் சட்டமாக்கியது. அரசரும் அரசியாரும் இம்மசோதாவிற்குத் தங்களது ஒப்புதலை அளித்தார்கள். இம் மசோதா, அரசர் தமது சட்டங்களை நிறுத்தி வைக்கும் அதிகாரத்தையும் விலக்கிவிடும் அதிகாரத்தையும் பயன்படுத்தக் கூடாதென்றும், மக்கள் நேரடியாக அரசருக்கு விண்ணப்பிக்கலாமென்றும், அரசர் தம் விருப்பப்படி செயல்படக் கூடாதென்றும், பாராளுமன்றச் செயல்களில் அரசர் தலையிடக் கூடாதென்றும், பாராளுமன்றத் தேர்தல் சுயேச்சையாக நடைபெறுமென்றும்,

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பேச்சுரிமை உண்டென்றும், சமய வழக்குகளை விசாரிக்க ஜேம்ஸால் ஏற்படுத்தப்பட்ட உயர் துணை நீதிமன்றம் சட்ட வழியானதன்று என்றும் கூறுகின்றது. அதனால் இம் மசோதா மக்களின் உரிமைகளையும், பாராளுமன்றத்தின் சுதந்திரங்களையும் காப்பாற்றியது. அத்துடன் பாராளுமன்றம் அரசரை அரியணையில் அமர்த்தும் உரிமையையும் பெற்றது. பாராளுமன்றம் அரசரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றது. அத்துடன் இப்புரட்சி அரசரை மக்களின் பணியாளனாகவும் ஆக்கியது.

அரசரின் வரவு, செலவு வரையறுப்பு

இப்புரட்சியால் அரசரின் அதிகாரத்திற்குப் பலவகையில் வரம்பு கட்டப்பட்டது. பாராளுமன்றம் ஒரு குறிப்பிட்ட தொகையை அரசரின் ஆயுள் முழுவதுக்கும் அளித்தது. அத்துடன் மற்றைய அரசாங்கச் செலவுகளுக்காகப் பாராளுமன்றம் அவ்வப்போது அரசருக்குப் பணம் அளித்து வந்தது. ஆண்டிற்கு ஒருமுறை இங்ஙனம் நிதியுதவி வழங்கும் முறை நாளடைவில் ஏற்பட்டது. மேலும் இங்ஙனம் அளிக்கப்படும் நிதி எவ்வாறு செலவு செய்யப் பட்டுள்ளது என்று தணிக்கை செய்யும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அரசரின் வரவு செலவு கணக்குகள் பாராளுமன்றத்தின் சோதனைக்குட்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட காரியத்திற்காக அளிக்கப்பட்ட நிதியுதவி அக் காரியத்திற்காகவே செலவு செய்யப் பட்டதா என்பதைத் தணிக்கை செய்யும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் பெற்றது.

படைக் கலகச் சட்டம்

பாராளுமன்றம் - படைக் கலகச் சட்டத்தை (Mutiny Act) 1689ஆம் ஆண்டு இயற்றியது. இச்சட்டம் ஆறு மாத காலத்திற்கு இயற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தை ஆண்டுதோறும் புதுப்பிக்க, பாராளுமன்றத்திற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இச் சட்டப்படி அரசர் நிலப்படையை ஏற்படுத்த பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும். அத்துடன் இச்சட்டம் படை வீரர்கள் ஒழுங்கின்றிச் செயல் பட்டால், அவர்களை இராணுவ நீதிமன்றங்களின் மூலம் தண்டிப்பதற்கும் வழி செய்தது. இங்ஙனம் அரசர் மீதும், படை வீரர்கள் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்க, பாராளுமன்றம் உரிமை பெற்றது.

பாராளுமன்றக் கூட்டம்

இப் புரட்சிக்கு முன்பு அரசர்கள் பாராளுமன்றங்களைக் கூட்டாமலேயே வல்லாட்சி செய்து வந்தனர். அதனால் பாராளுமன்றங்

களின் உரிமைகள் பாதிக்கப்பட்டன. ஆனால் இப் புரட்சியினால் பாராளுமன்றக் கூட்டங்கள் ஒழுங்காக, முறையாகக் கூட்ட, வழி ஏற்பட்டது. 1694ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் மூவாண்டுச் சட்டம் (Triennial Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டப்படி குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையாவது பாராளுமன்றம் கூட்டப் படவேண்டும். இதனால் பாராளுமன்றமின்றி அரசர்களால் நடத்தப்படும் வல்லாட்சி ஒழிக்கப்பட்டது.

நீதிபதிகளின் உரிமைகள்

இப் புரட்சியால் நீதி மன்றங்களின் உரிமைகள் நிலைநாட்டப் பட்டன. நீதிபதிகளைப் பதவியிலிருந்து அரசர் விலக்கும் அதி காரத்தை 1701ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசுரிமை நிர்ணயச் சட்டம் (Act of Settlement) அகற்றியது. ஒழுக்கக் கேட்டுக்கன்றி வேறு காரணங்களுக்காக அரசர் பேருரையைப் பயன்படுத்தி நீக்கலாகாதென விதி செய்யப்பட்டது. அதனால் இங்கிலாந்தில் நீதிபதிகள் சுதந்தரமாகச் செயல்படலாயினர். அதனால் நீதியும் நியாயமும் அரசர்களின் யதேச்சாதிகாரத்தி னின்றும் காப்பாற்றப்பட்டன. விசாரணைகள் ஒழுங்காகவும் பார பட்சமின்றியும் நடைபெற்றன. கடுங் குற்ற விசாரணைக்குட்பட்ட வர்கள் அரசரால் மன்னிக்கப் படுவதும் இச் சட்டத்தால் நீக்கப் பட்டது.

தல ஆட்சி உரிமை

இரண்டாம் சார்லஸ் காலத்திலும் இரண்டாம் ஜேம்ஸ் காலத் திலும் தல ஆட்சி உரிமைகள் பறிக்கப்பட்டன. அமைதிகாண் நீதிபதிகள் பலர் பதவியினின்று நீக்கப்பட்டனர். அரசர்களின் தலையீடு நகராட்சி மன்றங்களில் அடிக்கடி இருந்தது. அதனால் இவைகள் சுயேச்சையாக மக்களின் நலன்களுக்குச் செயல்பட முடியாத நிலையிருந்தது. ஆனால் இப்புரட்சிக்குப் பின் தல ஆட்சி யின் உரிமைகள் தழைத்தோங்கின. அரசர்கள் தல ஆட்சி விவகாரங்களில் தலையிடுவது நின்றது. நகராட்சி மன்றங்கள் அரசர்களின் தலையீடின்றிச் செயல்பட்டன. அமைதிகாண் நீதிபதிகள் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் தம் அதிகாரத் தைச் செலுத்தினர். ஆனால் அதே நேரத்தில் அரசரின் தலையீடு இல்லாததனால் நகராட்சி மன்றங்களில் ஊழல்கள் ஏற் பட்டன. அந்த ஊழல்களைக் கூட நசுக்க அரசர் முன் வரவில்லை யெனில் நகராட்சி மன்றங்கள் அரசரின் தலையீடின்றி எவ்வளவு சுதந்திரமாகச் செயல்பட்டன என்பதை அறியலாம்.

பத்திரிகைச் சுதந்திரம்

இப்புரட்சிக்கு முன்பு யாரும் தங்கள் விருப்பப்படி கருத்துகளை வெளியிடவோ அல்லது அக் கருத்துகளைப் பிரசுரிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. அனுமதிச் சீட்டுச் சட்டத்தின் படி அரசாங்கத்தின் அனுமதியின் மீதுதான் மக்கள் தங்களின் கருத்துகளைப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். ஆனால் இப் புரட்சிக்குப் பின்பு 1695ஆம் ஆண்டு இச்சட்டம் உயிர்ப்பிக்கப் படாமல் விடப்பட்டதன் மூலம் பத்திரிகைச் சுதந்திரம் ஆங்கிலேய மக்களுக்குக் கிடைத்தது. அத்துடன் இங்கிலாந்தில் துரோகக் குற்றச் சட்டத்திலும் மாறுதல் செய்யப்பட்டது. இச் சட்டத்தைக் காலத்திற்கேற்ப நீதிபதிகள் விளக்கம் செய்து, அதன் கடுமைத் தன்மையை நீக்கினார்கள்.

மேதகு புரட்சியைப் பற்றி அறிஞர் பர்க் (Burke) குறிப்பிடும் போது '1688-89ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விளைவுகள் ஒரு மகிழ்ச்சியான மாண்புமிகு புரட்சியாகும். கொடுங்கோலாட்சியிலிருந்து அரசியலமைப்புக்குட்பட்ட அரசாட்சி, உள்நாட்டுப் போரின்றி, இரத்தக்களரியின்றி ஏற்பட்டது இங்கிலாந்தின் அதிர்ஷ்டமாகும். இது ஒத்துழைப்பாலும் உடன்பாட்டினாலும் ஏற்பட்ட ஒரு புரட்சியாகும். மாறுபட்ட கருத்துகளைக்கொண்ட கட்சிகளும் தங்களது வேற்றுமைகளை மறந்து அரசரை எதிர்த்தன. இப் புரட்சியானது தனிப்பட்ட ஒரு கட்சியின் செயலன்று. நாடே இதற்குப் பொறுப்பானதாகும்' என்று கூறுகின்றார்.

11. மூன்றும் வில்லியம்-மேரி இணையாட்சி
(1689-1702)

இரண்டாம் ஜேம்ஸ் அரியணையைத் துறந்தவுடனே விக்கு கட்சியினரும் டோரிக் கட்சியினரும் சேர்ந்து ஹாலந்து நாட்டு அரசரான வில்லியத்திற்கும் அவர்தம் மனைவியான மேரிக்கும் இங்கிலாந்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தனர். இவர்களின் அழைப்பை ஏற்று வில்லியம் இங்கிலாந்திற்கு வந்தார். வில்லியமும் மேரியும் இங்கிலாந்து நாட்டின் அரியணையில் இணையாக அமர்த்தப்பட்டனர். வில்லியத்தின் மனைவியான இராணிமேரி 1694 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். அதன்பிறகு வில்லியம் தனியாகத் தாம் இறக்கும்வரை இங்கிலாந்தின் அரசராக ஆட்சி செய்தார்.

வில்லியத்தையும் மேரியையும் இங்கிலாந்தின் அரியணையில் இணையாக அமர்த்தியது ஒரு அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும், இந்நிகழ்ச்சி பாராளுமன்றத்தின் உச்ச உயர்நிலையை நிலை நாட்டியது. வில்லியமும் மேரியும் இங்கிலாந்தின் இணையரசர்களாகியது அவர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வெற்றி பெற்றதின் உரிமையினால் அன்று. அவர்களைப் பாராளுமன்றம் நியமித்ததனால் தான் அப்பதவிகளைப் பெற்றனர். இச்செயல் பாராளுமன்றத்தின் சக்தியையும் மதிப்பையும் உயர்த்தியது.

மூன்றும் வில்லியம் காலத்தில்தான் பாராளுமன்றம் தேசிய நிதிநிலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றது. ஒவ்வொரு வருடமும் அரசருக்கு நிதியுதவி செய்யவும் அந்நிதி தக்க முறையில் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதைத் தணிக்கை செய்யவும் பாராளுமன்றம் ஆரம்பித்தது. இதனால் பாராளுமன்றத்தை ஒவ்வொரு வருடமும் கூட்ட வேண்டிய நிலை அரசருக்கு ஏற்பட்டது. அவ்வாறு பாராளுமன்றம் ஒவ்வொரு வருடமும் கூட்டப்படவில்லையெனில் நிதியின்மையால் அரசாங்கத்தை நடத்தமுடியாத நிலைமை அரசருக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவானது. அச்சூழ்நிலை ஒவ்வொரு வருடமும் பாராளுமன்றத்தைக் கூட்ட அரசரைக் கட்டாயப்படுத்தியது. அத்துடன் பாராளுமன்றம் 1689-ஆம் ஆண்டு படைக்கலகச் சட்டத்தை

(Mutiny Act) இயற்றியது. இச்சட்டப்படி அரசர் ஒழுக்கத்தையும் அமைதியையும் நிலைநாட்ட நிலப்படையை வைத்துக் கொள்ளலாம். இச்சட்டமானது ஒரு வருட காலத்திற்குத் தான் செல்லும். ஒரு வருடத்திற்குமேல் நிலப்படையை வைத்துக் கொள்ள அரசர் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும். வில்லியம் ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டிருந்ததனால் அவருக்கு ஒவ்வொரு ஆண்டும் படையுதவி வேண்டியிருந்தது. அதனால் இச்சட்டத்தைப் புதுப்பிக்க ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டிய நிலைமை அரசருக்கு ஏற்பட்டது. அதனால் பாராளுமன்றத்தின் நிலை மேம்பட்டது.

மூன்றும் வில்லியத்தின் காலத்தில் பத்திரிகைச் சுதந்திரமும் ஏற்பட்டது. இவர் காலத்திற்கு முன்பு அனுமதிச் சீட்டுச் சட்டம் (Licensing Act) அமுலில் இருந்தது. அதனால் அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்தவொரு கருத்தையும் செய்தித் தாள்களிலோ அல்லது வேறு வெளியீடுகளிலோ வெளியிட முடியாது. அதனால் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருந்தது. 1695ஆம் ஆண்டு இச்சட்டம் புதுப்பிக்கப்படாமல் கைவிடப் பட்டதனால் பத்திரிகைச் சுதந்திரம் மீண்டது. அதனால் ஆங்கிலேய அறிஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் விருப்பப்படி தங்களின் கருத்துகளை வெளியிடும் உரிமையைப் பெற்றனர்கள். ஆனால் அக்கருத்துகள் கெடுநோக்கமாகவோ, அவதூறானவையாகவோ, ஆட்சிக்கு எதிர்ப்பானவையாகவோ இருக்கக் கூடாதெனச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

முன்னிலை மீட்சிக் காலத்திய நீடித்த பாராளுமன்றம் பதினெட்டாண்டுகள் பதவியில் இருந்தது. அரசரின் கொள்கைக்கு இப்பாராளுமன்றம் பணிந்து செயல்பட்டிருந்தால், மேலும் சில ஆண்டுகள் பதவியில் இருந்திருக்கும். வருங்காலத்தில் பாராளுமன்றத்தின் இத்தகைய பதவிக்கால நீடிப்பு இருக்கக்கூடாது என 1693ஆம் ஆண்டு மூவாண்டுச் சட்டம் (Triennial Act) ஒன்று இயற்றப்பட்டது. பாராளுமன்றம் மூன்றுண்டிற்குமேல் பதவியில் இருக்க இச்சட்டம் தடைவிதித்தது. அதனால் எல்லையின்றிப் பல்லாண்டுகளுக்குப் பாராளுமன்றங்களைக் கூட்டாமலேயே அரசர்கள் அரசாட்சி புரிவது இதனால் தடுக்கப்பட்டது. ஆனால் இம் மூவாண்டுச் சட்டம் 1716ஆம் ஆண்டுவரை தான் செயற்பாட்டிலிருந்தது. அதன்பிறகு பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை அதிகரித்துப் பாராளுமன்றம் ஏழாண்டுச் சட்டத்தை (Septennial Act) நிறைவேற்றியது.

வில்லியம் இங்கிலாந்தின் அரசராவதற்கு முன்பும், அரசரான பின்பும், பிரான்சு நாட்டு அரசரான பதினான்காம் லூயியை எதிர்த்துப் போரிட்டுவந்த நாடுகளுக்கு நண்பராக அல்லது தலைவராகத் திகழ்ந்தார். அதனால் இங்கிலாந்து ஐரோப்பாவில் அரசுகளின் சமநிலை வலிமை (Balance of Power) நிலை நிறுத்தப் பட்டது.

வில்லியம் இங்கிலாந்தில் மதச்சகிப்புத் தன்மைக் கொள்கையை ஆரம்பித்து வைத்தார். ரோமன் கத்தோலிக்கர்கள், தனியுரிமைக் கோட்பாளர்கள் ஆகியோரைத் தவிர மற்ற, பிராடெஸ்டெண்டுத் திருச்சபையை ஏற்க மறுப்போருக்கும் கூட தொழும் சுதந்திரம் அளிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இக் கொள்கை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் வில்லியம் இங்கிலாந்தின் அரசரானவுடன் அவருக்குக் கீழ்ப்படிவதாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள குருமார்கள் ஒப்புக்கொள்ள வில்லை. ஜேம்ஸ் உயிரோடு இருக்கும்போது, வேறொருவருக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அதனால் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள மறுத்த அனைவரும் பதவிகளினின்றும் நீக்கப்பட்டனர். அதனால் கான்டர்பரியின் அதிமேற்றிராணியார் (Arch Bishop) சான்கிராஃப்ட் உள்பட்ப் பல நூற்றுக்கணக்கான குருமார் வேலையிழந்தனர். இங்ஙனம் விசுவாசப் பிரமாண மறுப்போர் (Non-Jurors) இயக்கம் ஒன்று இங்கிலாந்தில் ஏற்பட்டது. அவர்களின் எண்ணிக்கை இங்கிலாந்தில் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. இவர்களில் பெரும்பாலோர் இரண்டாம் ஜேம்ஸை ஆதரிக்கத் தொடங்கினர். கொடால்பின், ரஸ்ஸெல், மார்ல்பரோ போன்ற தலைவர்கள் ஜேம்ஸை இரகசியமாய் ஆதரித்து அவரோடு பேச்சுவார்த்தைகூட ஆரம்பித்தனர். ஜேம்ஸை மீண்டும் இங்கிலாந்தின் அரசராக்க இவர்கள் ஜேம்ஸிடம் உறுதியளித்தனர்.

வில்லியமும் ஸ்காட்லாந்தும்

இரண்டாம் ஜேம்ஸ் இங்கிலாந்தை விட்டு ஓடியபிறகு, ஸ்காட்லாந்தின் அரசராக வில்லியத்தையும் இராணியாராக மேரியையும் ஸ்காட்லாந்து மக்கள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் ஸ்காட்லாந்தின் திருச்சபையானது பிரஸ்பிடேரிய மதச் சார்புடையதாகவே இருக்க வேண்டுமென அவர்கள் வில்லியத்தைக் கேட்டுக் கொண்டனர். இதை வில்லியமும் ஏற்றுக் கொண்டார். இருந்த போதிலும் டண்டீ இளங்கோமகர் (Viscount Dundee)

தொடர்ந்து இரண்டாம் ஜேம்ஸையே ஆதரித்து வந்தார். இவர் ஸ்காட்லாந்தியர் பலரைத் தூண்டிவிட்டு, பெருங் கலகத்தை ஏற்படுத்தினர். 1689ஆம் ஆண்டு கிள்ளி கிராங்கி (Killie Crankie) போரில் ஆங்கிலேயப் படைகளை இவர் தோற்கடித்தார். ஆனால் டன்டீ இளங்கோமகர் இப்போரில் மாண்டார். அதனால் இவருடைய ஆதரவாளர்கள் கலைந்தனர்.

ஸ்காட்லாந்து மக்களை மனநிறைவு படுத்த வில்லியம் 1689ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதிக்கு முன் தனக்குக் கீழ்ப் பணிவதாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளிப்பதாக அறிவித்தார். இதைப் பயன்படுத்தி எல்லோரும் விசுவாசப் பிரமாணம் குறிப்பிட்ட தேதிக்கு முன்பே எடுத்துக் கொண்டார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக மாக்லன் (Maclan) என்ற மாக்டனல்டுகள் தலைவர் குறித்த நேரத்தில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை. சில தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால் அவரால் குறித்த நேரத்தில் வர இயலவில்லை. ஆனால் உண்மையில் வில்லியத்திற்குப் பணிந்துவிடவே நினைத்தார். இதைப் பயன்படுத்தி மாக்லன் விரோதிகள் வில்லியத்திடம் மாக்லனைப்பற்றிக் குறை கூறினர். அதனால் உடனே மாக்லனின் குலமரபை (Maclan's Clan) அழித்துவிட கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஸர் ஜான் டார்லிம்பிள் என்ற அதிகாரி அரசரின் அனுமதி பெற்று மாக்லன் குடும்பத்தினர் பலரை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தார். இந்நிகழ்ச்சிதான் கிளன்கோ படுகொலை (Massacre of Glencoe) என அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சியால் இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்கும் இடையே மனக் கசப்பு ஏற்பட்டது. அதனால் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

வில்லியமும் அயர்லாந்தும்

அயர்லாந்தில் பெரும்பான்மையோர் ரோமன் கத்தோலிக்கர்களாதலாலும், அவர்கள் இரண்டாம் ஜேம்ஸின் ஆதரவாளர்களாக இருந்ததினாலும், வில்லியம் அரசரானவுடனே அயர்லாந்து பல இடர்ப்பாடுகளை நோக்கவேண்டியதாயிற்று. அயர்லாந்தை இரண்டாம் ஜேம்ஸால் நியமிக்கப்பட்ட ரிச்சர்டு டால்பட் (Richard Talbot) என்ற கவர்னர் ஆட்சி செய்து வந்தார். அவரும் கத்தோலிக்கராவார். தம் பதவியை மீண்டும் கைப்பற்ற ஜேம்ஸ் அயர்லாந்தியரையே நம்பினர். அதனால் சில பிரான்சு போர் வீரர்களுடன் ஜேம்ஸ் அயர்லாந்தில் வந்திறங்கினர். உடனே டப்ளின் நகருக்குச் சென்று கத்தோலிக்கர்களடங்கிய ஒரு பாராளு

மன்றத்தைக் கூட்டினார். அதைக் கொண்டு 1661-ஆம் ஆண்டு அங்கு ஏற்படுத்தப்பட்ட நிலவுரிமைச் சட்டத்தை ரத்து செய்தார். அதனால் பல ஆங்கிலேய பிராடெஸ்டெண்டு குடியேறிகள் நிலமிழந்தனர் அத்துடன் ஆயிரக்கணக்கான பிராடெஸ்டெண்டுகள் மீது மரண தண்டனைச் சட்டம் விதிக்கப்பட்டது. அப் பிராடெஸ்டெண்டுகள் அனைவரும் அல்ஸ்டர் மாகாணத்திற்கு ஓடிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றும்படி வில்லியத்திற்கு அழைப்பு விடுத்தனர். வில்லியம் தம் படைகளுடன் 1690ஆம் ஆண்டு அயர்லாந்திற்குச் சென்று ஜேம்ஸை பாயின் (Boyne) போரில் தோற்கடித்தார். அதனால் ஜேம்ஸ் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து பிரான்சுக்கே மறுமுறையும் ஓடிவிட்டார். அதன்பிறகு அயர்லாந்தில் அமைதி ஏற்பட்டது. வில்லியமும் மேரியும் அயர்லாந்தின் அரசராகவும் அரசியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அயர்லாந்தின் பிராடெஸ்டெண்டுகள் இச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ரோமன் கத்தோலிக்கர்களுக்கு எதிராகப் பல தண்டனைச் சட்டங்களை இயற்றினார்கள். இச் சட்டங்களினால் கத்தோலிக்கர்கள் தங்களுடைய அரசியல் உரிமைகளை இழந்தனர். தங்களுடைய சொத்துக்களை இழந்ததனால் அவர்கள் ஏழ்மை நிலையையடைந்தனர். பலர் அயர்லாந்தை விட்டு பிரான்சு நாட்டுக்குக் குடியேறினர். அங்குப் பலர் லூயியின் படையில் சேர்ந்தனர். பின்பு அயர்லாந்தின் வாணிகத்திற்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதனால் இருநாடுகளுக்கும் பரஸ்பர உறவு ஏற்படவில்லை. இருநாடுகளும் ஐக்கியம் அடைய ஒரு நூற்றாண்டு கழிய வேண்டியதாயிற்று.

வில்லியமும் பொருளாதார ஏற்பாடும்

வில்லியம் ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டதால் அரசாங்கத்திற்குப் பெருஞ்செலவு ஏற்பட்டது. ஆனால் வருவாயோ போதிய அளவில் இல்லை. அதனால் வில்லியம் மானியத் தொகையை அதிகரிக்கும்படி பாராளுமன்றத்தைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் வில்லியத்தின் நிதி அமைச்சர் சார்லஸ் மாண்டேகு 1692 ஆம் ஆண்டில் ஓர் நிலவரிச் சட்டத்தை உருவாக்கிப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தார். ஒவ்வோர் ஆண்டும் நிலத்திலிருந்து வரும் வருவாயில் பவுனுக்கு நான்கு ஷில்லிங்கு வீதம் வரிவிதிக்க அச்சட்டம் வகை செய்தது. நிலக்கிழார்களான டோரிகள் முதலில் இச்சட்டத்தை எதிர்த்தாலும் பின்னர் ஏற்றுக் கொண்டனர். இதன்மூலம் கிடைத்த பணமும் வில்லியத்தின் நிதி நிலையைச் சீர் செய்யவில்லை. எனவே, அடுத்தாற்போல் குடிமக்களிடம் ஏராளமாகக் கடன் வாங்கப்பட்டது. இக்கடனுக்கு வட்டி மட்டும்

ஒழுங்காகச் செலுத்துவதாகப் பாராளுமன்றம் உறுதியளித்தது. இதுவே நாட்டுக் கடனின் ஆரம்பமாகும். 1693ஆம் ஆண்டு எட்டு சதவீத வட்டி கொடுப்பதாக வாக்களித்து ஒரு மில்லியன் பவுன்கள் சேர்க்கப்பட்டன. 1694ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்களெல்லாம் சேர்ந்து இங்கிலாந்தின் வங்கி (Bank of England) ஒன்றை ஏற்படுத்த உரிமை பெற்றார்கள். அரசாங்கத்திற்குக் கடன் வழங்கும் அதிகாரம் இவ் வங்கிக்கே தனியுரிமையாகக் கொடுக்கப்பட்டது. நாளடைவில் இவ் வங்கி நல்ல முறையில் வளர்ச்சியடைந்தது. இவ் வங்கியில் பணம் போட்டவர்களுக்குப் பாதுகாப்புமிருந்தது. அரசாங்கத்திற்கு வேண்டிய பணமும் கிடைத்தது.

மூன்றாம் வில்லியத்தின் காலத்தில் நாணயத்தின் நிலை மோசமான நிலையிலிருந்தது. அதனால் 1695ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஓர் நாணயச் சீர்திருத்தம் (Reform of Coinage) கொண்டுவரப்பட்டது. அதன்படி பழைய தேய்ந்துபோன நாணயங்களெல்லாம் அரசாங்கத்தால் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிய நாணயங்கள் யாவருக்கும் அளிக்கப்பட்டன. இதனால் நாளடைவில் இங்கிலாந்தின் வணிகரின் வாணிபமும் நல்லமுறையில் வளர்ந்தது. ஓரங்கள் வெட்டப்பட்ட நாணயங்களை வாங்க மறுத்த வணிகர்கள் இப்போது அவைகளைத் தடையின்றி வாங்க முற்பட்டார்கள்.

இப்பொழுது ஆங்கிலேய மக்கள் வில்லியத்தின் தீவிர ஆதரவாளர்களாக மாறினர். அதற்குக் காரணம் அவர்களின் சுயநலம்தான். மீண்டும் ஜேம்ஸ் அரசராக்கப்பட்டால் தாங்கள் கடனாகக் கொடுத்த பணத்தையும் வங்கியில் போட்ட பணத்தையும் திரும்பப் பெறமுடியாது என்று எண்ணி வில்லியமே அரசராக நீடிக்க நினைத்தனர்.

வரிகளையும், கடன்களையும் பெற்றும்கூட வில்லியத்தின் நிதிநிலை மோசமாகத்தான் இருந்தது. அதிகாரிகளுக்கும், தூதுவர்களுக்கும் மற்ற மாதாந்திர சம்பளம் பெறுவோருக்கும் சம்பளம் கொடுக்க முடியாத நிலையுமிருந்தது. 1695ஆம் ஆண்டில் (பதின்மூன்று இலட்சம்) 13,00,000 பவுன்கள் வில்லியத்திற்குக் கடன் இருந்தது. ஆகவே, பாராளுமன்றம் நிதியைப் பொறுத்தவரையில் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது. 1697ஆம் ஆண்டில் வில்லியத்திற்குப் படைச் செலவுபோக ஏனைய செலவுகளுக்கு ஏழு இலட்சம் (7,00,000) பவுன்களைப் பாராளுமன்றம் கொடுத்தது. இந்த நிதியுதவிகூட வில்லியத்திற்குப் போதாமல் மேலும் அவர் கடனாளியாக இருந்தார். அதனால் பாராளுமன்றத்

தின் உதவியை மேலும் நாடவேண்டிய தாயிற்று. ஆகவே, அரசர் தம் சொந்த நிதியை வைத்து வாழலாம் என்ற நம்பிக்கை மேதகு புரட்சிக்குப் பின் முடிந்தது.

பொறுப்பான அமைச்சர் குழுவின் தோற்றம்

வில்லியத்தின் ஆட்சிக் காலம் இங்கிலாந்தில் கட்சி யாட்சியின் தோற்றத்தைக் கண்டது. வில்லியம் இங்கிலாந்தின் அரசராவ தற்கு விக்குகளும் டோரிகளும் சேர்ந்தே உதவி புரிந்தார்கள். எனவே வில்லியம் தமது ஆட்சியின் தொடக்கத்தில் தமது அமைச்சர்களை இரு கட்சியினின்றும் தெரிந்தெடுத்துக் கொண்டார். ஆகவே அமைச்சர் குழுவில் டோரிகளும் விக்குகளும் இடம் பெற்றனர். இரு கொள்கைகளைக் கொண்டவர்கள் ஒரு குழுவில் இருந்ததனால் அக்குழுவால் ஒத்துழைப்புடன் செயல்பட முடியவில்லை. டோரிக் கட்சியினர் வில்லியத்தின் போர்க் கொள்கையை வன்மையாகக் கண்டித்தனர். அதனால் தமது ஐரோப்பியப் போர்களை ஆதரிக்காத டோரி அமைச்சர்களால் பயனில்லை என வில்லியம் உணர்ந்தார். அத்துடன் நிதியுதவி பெறப் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்ட வேண்டிய நிலையிருந்த தாலும், பாராளுமன்றத்தில் விக்குகள் செல்வாக்குடன் இருந்த தாலும், விக்குகளின் ஆதரவைப் பெற முயன்றார். எனவே, தமது ஐரோப்பியப் போர்களை முழுமனதுடன் ஆதரித்த விக்குகளையே 1694ஆம் ஆண்டிற்குப் பிறகு அமைச்சர்களாக நியமிக்க ஆரம் பித்தார். நிருவாகம் திறம்பட நடைபெற வேண்டுமானால் ஒரே கட்சியிலிருந்தே அமைச்சர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்ற ஆலோசனையை ஏற்று அதன்படியே தம் அமைச்சர்கள் அனைவரை யும் விக்கு கட்சியிலிருந்தே தெரிந்தெடுத்துக் கொண்டார். ஒரே கட்சியினின்று அமைச்சர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது இங்கிலாந் தின் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். அமைச்சர் குழுவிலுள்ள அனைவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாதலால் அவர்களிடையே ஒற்றுமையிருந்தது.


1697ஆம் ஆண்டிற்குப் பிறகு பொதுமக்கள் சபையில் டோரிகள் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றினர். அதனால் வில்லியம் டோரிகளையே தமது அமைச்சர்களாக நிய மித்தார். ஆகவே பொதுமக்கள் சபையில் எந்தக் கட்சி பெரும் பான்மை இடங்களைப் பெறுகின்றதோ, அதே கட்சியின் உறுப் பினர்கள்தான் அமைச்சர் குழுவில் இடம் பெறவேண்டும் என்ற கொள்கையும் உருவானது. அதன் பிறகு நடந்த தேர்தலில்

டோரிக் கட்சியினர் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை இடங்களைப் பிடித்தனர். அதனால் விக்கு கட்சி அமைச்சர்களை நீக்கி விட்டு, டோரிக் கட்சி உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமிக்க வில்லியம் உந்தப்பட்டார். அதன்படியே அரசர் 1700ஆம் ஆண்டு தம் விக்கு அமைச்சர்களை நீக்கிவிட்டு, டோரி அமைச்சர்களை நியமனம் செய்தார். 1702ஆம் ஆண்டு வரை டோரி அமைச்சர் குழுவின் உதவிகொண்டு அவர் நாட்டை ஆண்டார். வில்லியம் இறப்பதற்கு முன்பு பொதுமக்கள் சபையில் டோரிகளும் விக்குகளும் சரிசமமான இடங்களைக் கைப்பற்றியதனால், டோரி அமைச்சர்கள் சிலரை நீக்கிவிட்டு, அவர்கள் இடத்தில் சில விக்கு உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமித்தார். இங்ஙனம் வில்லியம் தம்மையறியாமலேயே நாட்டில் கட்சியாட்சியை உருவாக்கினார். பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்ற கட்சியிலிருந்து அரசர் அமைச்சர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்சி யாட்சி முறைக்கு வில்லியம் காலத்தில் அடித்தளம் போடப்பட்டது என்று கூறுவது மிகையாகாது.

அரசுரிமை நிருணயச் சட்டம்

அரசுரிமை நிருணயச் சட்டம் (Act of Settlement) 1701ஆம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. 1689ஆம் ஆண்டு வில்லியமும் மேரியும் இணையாக இங்கிலாந்து நாட்டு அரியணையில் அமர்த்தப்பட்டனர். 1694ஆம் ஆண்டு மேரி அரசியார் இறந்ததனால் வில்லியமே தனித்து ஆட்சி செய்தார். 1700ஆம் ஆண்டில் ஆன் அரசியின் கடைசியாகப் பிழைத்த மகன் கிளாஸ்செஸ்டர் கோமகனும் இறந்தார். அதனால் ஆன் அரசிக்குப் பிறகு இங்கிலாந்தில் யார் பட்டத்திற்கு வருவது என்ற பிரச்சினை எழுந்தது. வில்லியம் மிகவும் வயதானவராததலால் மறுமுறையும் மணம் செய்தால் கூட குழந்தை பிறப்பது நிச்சயமில்லை. அத்துடன் ஆன் அரசிக்கு இனியும் குழந்தை பிறப்பது கேள்விக்குறிதான். இந்நிலையில் தான் 1701ஆம் ஆண்டில் டோரி உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றம் அரசுரிமைப் பிரச்சினையைத் தீர்க்க எண்ணி அரசுரிமை நிருணயச் சட்டத்தை இயற்றியது. ஆன் அரசிக்குப் பிறகு இங்கிலாந்தின் அரசுரிமை ஹனோவர் இளவரசியான ஸோஃபியா என்பவருக்கும் அவருடைய சந்ததியினருக்கும் உரியதாக வேண்டுமென இச்சட்டம் வற்புறுத்தியது.

வமிசாவளிப் பட்டியல் (Genealogical Chart)



இச்சட்டப்படி ஆன் அரசியார் இறந்தவுடனே 1714ஆம் ஆண்டில் முதலாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசரானார். சோபியா இளவரசி முன்னமேயே இறந்ததனால்தான் முதலாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வர நேர்ந்தது.

பிராடெஸ்டெண்டுகள் மட்டும்தான் இங்கிலாந்தின் அரியணையில் அமரவேண்டுமென இச்சட்டம் கூறுகின்றது. புதிதாக அரசராக வருபவர் ஆங்கிலத் திருச்சபையைச் சார்ந்தவராக இருக்கவேண்டுமென்றும், இங்கிலாந்தின் அரசராகவோ அல்லது அரசியாகவோ முடிசூட்டப்பட்டபின்பு கத்தோலிக்கராக மாறினாலோ அல்லது கத்தோலிக்கரை மணந்தாலோ அரசரோ அல்லது அரசியாரோ மகுடத்தைத் துறக்கவேண்டுமென்றும், அரசரோ அரசியாரோ இங்கிலாந்துத் திருச்சபையின் சடங்குகளின்படி பிரமாணம் எடுத்துக்கொண்ட பின்புதான் முடிசூட்டப்படவேண்டுமென்றும் இச்சட்டம் மேலும் குறிப்பிடுகின்றது.

வாரிசு உரிமையை நிர்ணயிக்கத்தான் இப்பாராளுமன்றம் கூட்டப்பட்டபோதிலும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற டோரிக் கட்சியினர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசரின் அதிகாரத்தின்மேல் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிக்கவும் மக்களின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் மேலும் பாதுகாப்பு கொடுக்கவும் விரும்பினர். அதனால் அரசுரிமை நிருணயச் சட்டத்துடனேயே மேலும் சில பிரிவுகள் சேர்க்கப்பட்டன. அவைகளின்படி:

இங்கிலாந்தின் அரசர் வெளிநாட்டவராயிருந்தால், அந் நாட்டின் பாதுகாப்புக்காகப் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இங்கிலாந்தைப் படையெடுப்பில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. இப் பிரிவு மூன்றும் வில்லியம் ஹாலந்திற்காகப் போரில் இங்கிலாந்தை ஈடுபடுத்திய செயலை விரும்பவில்லை என்பதைக் குறிப்பிடுகிறது.

மேலும் இச்சட்டத்தின்படி, பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இங்கிலாந்தின் அரசர் இங்கிலாந்தை விட்டும் ஸ்காட்லாந்தை விட்டும். அயர்லாந்தைவிட்டும் வெளியில் செல்லக் கூடாது.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து அல்லது ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் பிறக்காத ஒருவரைப் பொதுமக்கள் சபையின் உறுப்பினராகவோ அல்லது பிரபுக்கள் சபையின் உறுப்பினராகவோ நியமிக்கக் கூடாதென்றும், அவரை அரசாங்

கத்தின் நிருவாகத் துறையிலோ அல்லது இராணுவத்துறையிலோ நியமிக்கக் கூடாதென்றும் இச்சட்டம் கூறுகின்றது. அத்துடன் பாராளுமன்றம் வில்லியம் தம் டச்சு நண்பர்களை அரசாங்கத் துறையில் நியமித்ததைக் கண்டித்தது. இப் பிரிவு கண்மூடித்தனமானது எனக் கருதப்பட்டதால் விக்டோரியா மகாராணியார் காலத்தில் இது நீக்கப்பட்டது,

இச் சட்டம் நீதிபதிகளின் சுதந்திரத்தை நிலைநாட்டியது. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு அரசரே தம் விருப்பப்படி நீதிபதிகளை நியமிப்பார். அரசரே எந்நேரத்திலும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிடுவார். அதனால் அரசர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதிபதிகள் பாரபட்சமின்றித் தீர்ப்புக் கூற முடியாமல் தவித்தனர். நீதிபதிகளின் இத்தகைய நிலையை அரசுரிமை நிருணயச் சட்டம் நீக்கியது. பாராளுமன்றத்தின் இருசபைகளும் சேர்ந்து மனுச் செய்தாலன்றி ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க அரசருக்கு உரிமையில்லை என இச் சட்டம் கூறியது. அதனால் நீதிபதிகள் அரசரின் குறுக்கீடின்றி சுதந்திரமாகச் செயல்பட்டு, மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்க முடிந்தது.

மேலும் பாராளுமன்றத்தால் அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை அரசர் தமது இறுதி மன்னிப்பு வழங்கு மதிகாரத்தால் விடுதலை செய்யக்கூடாது என இச் சட்டம் குறிப்பிடுகின்றது. இப் பிரிவு எல்லோரும் சட்டத்தின்முன் சமம் என்ற கொள்கையை வலியுறுத்துகின்றது. அத்துடன் குற்றம் செய்தவரை அரசரும் தலையிட்டுக் காப்பாற்ற முடியாது என்ற நிலையும் இதனால் ஏற்படுகின்றது.

மேலும் இச்சட்டம், மக்கள் தங்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெறுவதற்காக இயற்றப்பட்ட சட்டங்களையும், இங்கிலாந்துத் திருச்சபையை மீட்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களையும் உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் நாட்டிலுள்ள எல்லாச் சட்டங்களையும் அரசர் செல்லத்தக்கதாக்க வேண்டுமெனவும் இச்சட்டம் கூறுகின்றது.

மேலும், நாட்டைப்பற்றிய பெரும் பிரச்சினைகள் முழுமையான பிரிவு கவுன்ஸிலில்தான் விவாதிக்கப்படவேண்டுமென்றும், அரசாங்கத்தின்கீழ் வேலை பார்ப்பவர்களும், அரசாங்கத்திடம் உதவித்தொகை பெறுபவர்களும் பொதுமக்கள் சபையின் உறுப்பினராவதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் இச்சட்டம் குறிப்பிடுகின்றது.

வில்லியம் மேற்கண்ட குற்றங்களில் பலவற்றைச் செய்துவந்தார். அவர் மேலும் அங்ஙனம் செய்யக் கூடாதென்பதை இச் சட்டம் கூறாமற் கூறியது. அதே சமயத்தில் இங்கிலாந்திற்கு அரசராக வரப்போகும் ஹெனோவர் அரசர்களும், வில்லியம்போல் நடந்துகொள்ளாமலிருக்கவும் இச்சட்டம் வழி செய்தது.

வில்லியமும் வெளிநாட்டுக் கொள்கையும்

பிரான்சின் அரசர் பதினான்காம் லூயியை எதிர்த்துப் போரிடுவதிலேயே வில்லியம் தமது வாழ்நாளைச் செலவழித்தார். ஹாலந்து நாட்டு அரசராக இருந்தபோதும் இதையேதான் செய்தார். இங்கிலாந்தின் அரசரான பின்பும் இதையேதான் தொடர்ந்து செய்தார். நாளொரு மேனியும் வளரும் பிரான்சின் ஆதிக்கத்தைத் தடுத்து ஐரோப்பாவில் அரசுகளின் சமநிலையை ஏற்படுத்தக் கங்கணம் கட்டினார். அதன்படி லூயிக்கு எதிராகஅவர் ஐரோப்பிய நாடுகளின் கூட்டுறவு ஒன்றை 1689ஆம் ஆண்டில்ஏற்படுத்தினார். அது ஆக்ஸ்பர்க் கூட்டுறவு (League of Augsburg) எனப்பட்டது. இக் கூட்டுறவில் ஸ்பெயின், ஹாலந்து, ஸ்வீடன், பிராண்டன்பர்க் முதலிய நாடுகள் இடம்பெற்றன. இக் கூட்டுறவின் மூலம் பிரான்சோடு தொடர்ந்து போர் நடைபெற்றது, அத்துடன் லூயி வில்லியத்திற்கு எதிராக இரண்டாம் ஜேம்ஸை இங்கிலாந்தின் அரசராக்க விரும்பியதால் 1697ஆம் ஆண்டுவரை தொடர்ந்து இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் போர் நடைபெற்றது. பிரான்சு கப்பற்படை 1690ஆம் ஆண்டு ஆங்கில டச்சுக் கப்பற்படைகளை பீச்சி ஹெட் (Beachy Head) என்னுமிடத்தில் தோற்கடித்தது, அதனால் ஆங்கிலக் கால்வாயில் பிரான்சின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. ஆங்கிலேயக் கப்பற்படையின் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டது. ஆனால் 1692ஆம் ஆண்டில் ஆங்கிலக் கப்பற்படை ரஸ்ஸல் பிரபுவின் தலைமையில் பிரான்சுக் கப்பற்படையை லாஹோக் (La Hogue) முனைக்கருகில் தோற்கடித்தது. அதன்பின் பிரான்சுக் கப்பற்படை பின் வாங்கியது. ஆனால் ஸ்டீன்கிர்க் (Steinkirk) என்னும் போர்க்களத்தில் ஆங்கிலப் படைகள் பிரான்சுப் படைகளிடம் தோல்வியுற்றன. 1692ஆம் ஆண்டு பிரான்சுப் படைகள் நாமூர் (Namur) என்ற நகரைக் கைப்பற்றின. ஆனால் 1695ஆம் ஆண்டு வில்லியம் நாமூர் நகரை மீண்டும் கைப்பற்றினார். இத்தகைய முறையில் மேலும் இரண்டு ஆண்டுகள் போர் நீடித்தது. அதனால் இரண்டு நாடுகளும் சோர்வடைந்தன. அதனால் இரண்டு நாடுகளிடையே ரஸ்விக் சமாதான உடன்பாடு (Treaty of Ryswick) ஒன்று ஏற்பட்டது. அதன்படி லூயி போரின்போது தான் பிடித்த இடங்களைத் திருப்பிக்

கொடுத்துவிட சம்மதித்தார். இவ்வுடன் படிக்கை லூயியின் நாடு பிடிக்கும் கொள்கைக்கு ஓர் முற்றுப் புள்ளி வைத்தது.

மூன்றும் வில்லியம் காலத்தில், ஸ்பானிய வாரிசுரிமை பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட பங்கீட்டு உடன்படிக்கைகளைப் (Partition Treaties) பற்றி இங்குக் குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும். ஸ்பெயின் நாட்டரசர் இரண்டாம் சார்லஸுக்குக் குழந்தைகள் கிடையாது. அவர் உடல் நலமின்றி இருந்ததால் எந்த நேரத்திலும் இறப்பதற்கு வாய்ப்புகள் இருந்தன. ஆகவே அவருக்குப்பின் ஸ்பெயின் நாட்டை ஆளுவது யாரென்ற கேள்வி எழுந்தது. அவருக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு அத்தையும் இருந்தனர். மூத்த சகோதரி மாரியா தெரீசா (Maria Thersa) பிரான்சு அரசர் பதினான்காம் லூயியின் மனைவியாவார். இளைய சகோதரி மார்கிரெட் தெரீசா (Margret Thersa) ஜெர்மனி அரசர் முதலாம் லியோ போல்டு (Leopold I of Germany) என்பவரை மணந்திருந்தார். இரண்டாம் சார்லஸின் அத்தையான மாரியா (Maria) என்பவர் லியோபோல்டின் தாயாராவார். எனவே, இம் மூவரின் வாரிசுகளும் இரண்டாம் சார்லஸுக்குப் பின்பு ஸ்பெயின் நாட்டு அரியணையில் அமர ஆசைப்பட்டனர். பிரான்சு அரசர் பதினான்காம் லூயி தம் மூத்த மகன் டாபின் (Dauphin) தான் ஸ்பெயின் நாட்டு அரசராக வரவேண்டும் என வற்புறுத்தினார். டாபின் ஸ்பெயின் நாட்டு அரசரானால் பின்பு பிரான்சு, ஸ்பெயின் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் சேர்ந்து அரசராக வேண்டி வருமென்றும், அப்பொழுது ஐரோப்பிய அரசுகளின் வலிமைச் சமநிலை பாதிக்கப்படும் என்றும் எண்ணி லூயியின் யோசனையை ஹாலந்து, இங்கிலாந்து அரசரான மூன்றும் வில்லியம் போன்றோர் முழு மூச்சுடன் எதிர்த்தனர். இதைக்கண்ட லூயி தம் மூத்தமகன் பிரான்சுக்கும், தம் பேரனை பிலிப் என்னும் ஆஞ்சோ கோமகன் (Philip Duke Anjou) ஸ்பெயினுக்கும் அரசர்களாக வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

அடுத்தபடியாக ஸ்பானிய அரியணைக்கு உரிமையுடையவர் இரண்டாம் சார்லஸின் இளைய சகோதரியின் கணவரான லியோ போல்டு அரசராவார். இவரும் ஸ்பெயின் நாட்டிற்கு அரசரானால் ஐரோப்பிய அரசுகளின் வலிமைச் சமநிலை (Balance of Power) பாதிக்கப்படுமெனக் கருதி மற்றைய ஐரோப்பிய நாட்டினர் எதிர்த்தனர். லியோபோல்டு அவர்களைச் சமாதானம் செய்ய வேண்டி, ஸ்பானிய பட்ட உரிமை தமக்கு வேண்டாமெனக் கூறி தம் இரண்டாம் மகன் ஆர்ச்ட்யூக் சார்லஸுக்குக் கொடுக்கும்படி கூறினார். இதற்கும் பலத்த எதிர்ப்பு இருந்தது.

லியோ போல்டுக்கு அடுத்து ஸ்பானிய மகுடத்திற்கு உரிமையுடையவர் பவேரிய இளவரசர் ஜோஸப் பெர்டினண்டு என்பவராவார். இவரின் தாயார் மார்கிரெட் தெரீசாவின் புதல்வியாவார். எனவே தம்முடைய தாயார் மூலம் பவேரிய இளவரசர் ஸ்பானிய மகுடத்திற்கு உரிமை கொண்டாடினார். இவருக்கு ஸ்பானிய மகுடத்தை அளித்தால் ஐரோப்பிய அரசுகளின் வலிமைச் சமநிலை அதிகமாகப் பாதிக்கப்படாது என அனைவரும் உணர்ந்தனர். எனவே, அரசியல் கொள்கைப்படி பவேரிய இளவரசரும், சட்டப்படி முதலாம் லியோபோல்டும், பரம்பரை வாரிசுரிமைக் கொள்கைப்படி டாபினும் ஸ்பானிய பட்ட வாரிசுரிமைக்குத் தகுதியானவர்களாகக் காணப்பட்டனர்.

ஆகவே, இவ்வாரிசுரிமைச் சிக்கலைத் தீர்க்க வில்லியமும் லூயியும் தங்களுக்குள் 1698ஆம் ஆண்டு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதற்கு 'முதல் பங்கீட்டு உடன்படிக்கை' (First Partition Treaty) எனப்பெயர். இவ் வுடன்படிக்கையின்படி, பவேரியா இளவரசர் ஸ்பெயின் நாட்டு அரசராக வேண்டுமென்றும், ஆர்ச்ட்யூக் சார்லஸுக்கு மிலான் நாடும், பிரான்சு இளவரசரான ஆஞ்சு கோமகன் பிலிப்புக்கு நேபில்ஸ் நாடும் அளிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இப்பங்கீட்டு உடன்படிக்கை, பவேரியா இளவரசர் இறந்து விட்டதனால் பயனில்லாமல் போய் விட்டது.

வில்லியமும் லூயியும் மறுமுறையும் 1700ஆம் ஆண்டில் ஸ்பானிய பட்ட வுரிமை பற்றித் தம்முள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அது இரண்டாம் பங்கீட்டு உடன்படிக்கை யாகும். இவ் வுடன்படிக்கைப்படி ஆர்ச்ட்யூக் சார்லஸ் ஸ்பானிய நாட்டு அரசராக வேண்டுமென்றும், அவருக்கு நெதர்லேண்டும் ஸ்பானிய அமெரிக்காவும் சேர வேண்டுமென்றும், லூயியின் பேரன் ஆஞ்சு கோமகன் பிலிப்புக்கு நேபில்ஸ், சிசிலி, மிலான் நாடுகளை அளிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இப் பங்கீட்டு உடன்படிக்கையால் ஐரோப்பிய அரசுகளின் சக்திச்சம நிலை ஏற்படும் எனக் கருதப்பட்டது. ஆனால் இதைக் கேள்வியுற்ற இரண்டாம் சார்லஸ் அரசர் கோபமுற்று தம் மரணப் படுக்கையில், தமக்குப்பின் தம்முடைய நாடுகளனைத்தும் ஆஞ்சு கோமகன் பிலிப்புக்கே சேர வேண்டுமென்றும், ஆஞ்சு கோமகன் மறுத்து விட்டால் ஆர்ச்ட்யூக் சார்லஸுக்கே சேர வேண்டுமென்றும், உயில் எழுதி வைத்துவிட்டு இறந்தார். சார்லஸின் உயிலைப் பற்றிக் கேள்விப்பட்ட லூயிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. வில்லியத்தோடு அவர் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், தம்முடைய பேரன் பிலிப்பை ஸ்பெயின் நாட்டு அரசரென அறிவித்து, ஐந்தாம்

பிலிப் என்ற பட்டத்தையும் அளித்தார். இங்கிலாந்தின் அரசர் வில்லியம் இதையறிந்து கோபமுற்றார். லூயி இரண்டாம் பங்கீட்டு உடன்படிக்கையைத் தகர்த்தெறிந்துவிட்டுத் தம் பேரனை ஸ்பானிய அரசராக்கியதோடல்லாமல் ரிஸ்விக் சமாதான வுடன்படிக்கைக்கு எதிராக 1701ஆம் ஆண்டில் இரண்டாம் ஜேம்ஸ் இறந்த பிறகு அவருடைய மகனை இங்கிலாந்தின் அரசராகவும் அறிவித்தார். இதனால் வில்லியம் லூயியை எதிர்த்துப் போரிட நினைத்து இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிடையே ஒரு மாபெரும் கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். அத்துடன் ஸ்பானிய பட்டத்தை யடைய ஆர்ச்ட்யூக் சார்லஸுக்கு உதவி செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதைச் செய்வதற்கு முன்பே 1702ல் வில்லியம் இறந்து விட்டார், இருந்தபோதிலும் ஸ்பானிய வாரிசு உரிமைப் போர் ஆன் அரசியார் காலத்தில் 1713ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. தம்முடைய விரோதியான லூயி ஒழிக்கப்படுவதைக் கண்டு களிக்க வில்லியம் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் லூயியின் கொட்டம் அடங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வைத்து விட்டே அவர் இறந்தார்.

வில்லியம் மிகவும் நிதானமானவர்; கொள்கையில் பற்றுடையவர்; வீரத்தில் சிறந்தவர். இவர் தம்முடைய வாழ்க்கையை நாட்டின் முன்னேற்றத்திற்கே அர்ப்பணித்தவர். கேளிக்கைகளில் பற்றில்லாதவர். இவருடைய வாழ்க்கையே பெரும் போராட்டமாகும். உள் நாட்டிலே அரசியல் வாதிகளை எதிர்த்துப் போராட வேண்டி யிருந்தது. வெளி நாட்டில் பிரான்சு அரசர் லூயியை எதிர்த்துப் போராடவேண்டி யிருந்தது. இவர் இங்கிலாந்து நாட்டு மக்களுக்கு எல்லா சீரியல் சுதந்திரங்களையும், உரிமைகளையும் அளித்தார். இதற்காக இங்கிலாந்து நாட்டு மக்கள் இவருக்கு நன்றிகூறக் கடமைப் பட்டவர்களாவார்கள். இவர் இறக்கும்போது மக்களின் அன்பைப் பெறவில்லை யெனினும், மக்கள் இவருக்கு மதிப்பும், மரியாதையும் அளித்தனர்.

12. ஆன் அரசியாரின் ஆட்சி
(1702—1714)

மூன்ரும் வில்லியத்திற்குப்பின், அரசுரிமை நிருணயச் சட்டப்படி இரண்டாம் ஜேம்ஸின் இளைய மகளான ஆன் இளவரசி இங்கிலாந்தின் பட்டமெய்தினர். எலிஸபெத் அரசிக்குப்பின் ஆங்கில அரியணையை அலங்கரித்த அரசியார் ஆன் அரசியார் தான். ஆனல் எலிஸபெத்திடம் காணப்பட்ட திறமை இவரிடம் இல்லை. அத்துடன் மனவுறுதியும், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் இவரிடம் அதிகமாகக் காணப்படவில்லை. இருந்த போதிலும், இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ந்தது. எனினும் அவ்வப்போது இவர் தம் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தத் தவறவில்லை. இவருக்குப் பல குழந்தைகள் பிறந்தும், ஒன்றுகூடப் பிழைக்கவில்லை. தம் கணவரை மிக்க பிரியத்துடன் நேசித்தார். தம் கணவருக்கு வாழ்நாள் முழுவதும் ஓர் ஆண்டுக்கு 100,000 (இலட்சம்) பவுன்கள் வீதம் நிதியுதவி வழங்க உதவி செய்தார். இவருக்கு ஆங்கிலேயத் திருச்சபையில் பெரிதும் ஈடுபாடு உண்டு. ஆங்கிலிக்கானிசத்தை முழுமனத்தோடு ஆதரித்தார். இரண்டு கட்சிகளிலுள்ள ‘கருணையற்ற மனிதர்களுக்குத் தாம் ஒரு அடிமையாக இருக்க முடியாது’ என்று வெளிப்படையாக அறிவித்தவராவார். என் விருப்பப்படியே அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பேன் என்று உறுதியாகக் கூறியவருமாவார். ஆனல் மக்களின் விருப்பங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் எப்போதும் ஆதரவும், மதிப்பும் கொடுத்து வந்தார். சர்ச்சில் இவரைப்பற்றிக் குறிப்பிடும் போது “இவரிடம் பல குறைகள் இருந்தபோதிலும். சரித்திரத்தில் ‘நல்ல ஆன் அரசியார்’ என்ற சிறப்புப் பெயரைப் பெறத் தகுதியானவரே” என்று கூறுகின்றார்.

ஆன் அரசியாரும் அமைச்சரவைகளும்

ஆன் அரசியார் டோரிக் கட்சியினரையே பெரிதும் விரும்பினர். அதனல் வில்லியம் அரசரின் இறுதிக் காலத்தில் ஆட்சியை நடத்திவந்த விக்கு அமைச்சர்களை இவர் நீக்கிவிட்டு அவர்கள் இடங்களில் டோரி அமைச்சர்களை நியமித்தார். இந்த டோரி

அமைச்சரவையானது 1702 ஆம் ஆண்டிலிருந்து 1710 ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தது.

டோரி அமைச்சரவையில் மார்ல் பரோ பிரபும் (The Duke of Marlborough). கொடால்பின் பிரபும் (Godolphin) மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஸ்பானிய வாரிசு உரிமைப் போரில் மார்ல்பரோ மிக முக்கியப் பங்கேற்றவர். இவர் நல்ல ஆட்சித் திறன் பெற்றவர். மிகச் சிறந்த இராணுவ வீரர். மக்களிடையே நல்ல மதிப்பைப் பெற்றவர். பொறுமையானவர், அதேசமயத்தில் சூழ்ச்சித் திறமுடையவர். போர்த் துறையிலும் ஆட்சித் திறத்திலும் வல்லுநர். இவருடைய மனைவி சாரா ஜென்னிங்ஸ் (Sarah Jennings) ஆன் அரசியாரின் மிக நெருங்கிய தோழியாவார். இவர் மூலம் மார்ல்பரோ ஆன் அரசியாரிடம் மிக்க செல்வாக்கைப் பெற்றார். அதனால் மார்ல்பரோவுக்கு எர்ல் பட்டமும், கோமகன் பட்டமும் கடைசியில் தலைமைத் தளபதி பதவியும் வழங்கப்பட்டன. கொடால்பின் பிரபு கருவூலத் தலைமைப் பிரபுவாக (Lord High Treasurer) நியமிக்கப்பட்டார்.

மார்ல்பரோ டோரிக் கட்சியைச் சார்ந்தவராகையால் ஆரம்பத்தில் டோரிகளுக்கே மிக முக்கிய பதவிகளையளித்தார். மார்ல்பரோவும் கொடால்பினும் ஐரோப்பியப் போரைத் தொடர்ந்து நடத்தி வெற்றி பெறவேண்டுமென விரும்பினர். இதைப் பல டோரிகள் ஆதரிக்கவில்லை. ஆனால் விக்குகள் தொடர்ந்து போரை நடத்த வேண்டுமென்று கூறினர். அதனால் தமது போர்க் கொள்கைக்காக மார்ல்பரோ விக்குகளின் தயவை நாட வேண்டியிருந்தது. அதற்காக விக்குகளுக்கு முக்கியமான பதவிகளை அளித்தார். அதனால் பல டோரிகள் பதவிகளை யிழக்க நேர்ந்தது.

1689 ஆம் ஆண்டு பாராளுமன்றம் சமயப்பொறைச் சட்டம் ஒன்றை இயற்றியிருந்தது. இச்சட்டம் பல மதப்பிரிவினருக்குத் தொழுகைச் சுதந்திரம் அளித்தது. அத்துடன் ஆங்கிலிக்க மதக் கோட்பாட்டிற்கேற்பப் புனிதச் சடங்கினை மேற்கொள்பவர்களுக்கே பதவிகளை வழங்க வேண்டுமென்றும் இச்சட்டம் வலியுறுத்தியது. அதனால் பதவிகளைப் பெறும் ஆசையில் இணங்காதார்கள் (Dissenters) ஆங்கிலிக்க மதக் கோட்பாடுகளுக்கேற்ப புனிதச் சடங்கினை மேற்கொண்டு பதவிகளைப் பெற்ற பின்னர் தங்கள் விருப்பம்போல் வாழ்ந்தனர். ஒழுங்காகத் தொழுகையும் செய்வதில்லை. புனிதச் சடங்கினையும் தொடர்ந்து மேற்கொள்வதில்லை. இவர்களில் விக்கு கட்சியினரே பெரும்பாலோர் இருந்தனர். இவர்களின் திருச்சபை மீறல்களைத் தடுக்க டோரிகள் விரும்பினர்.

ஆன் அரசியாரும் அவ்வாறே நினைத்தார். அதனால் 1703ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் 'சிலவேளை இணக்க மசோதா" (Occasional Conformity Bill) ஒன்று கொண்டுவரப்பட்டது. டோரிக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பொதுமக்கள் சபையில் பெற்றிருந்ததனால் இம் மசோதா இங்கு நிறைவேறியது. ஆனால் பெரும்பான்மை விக்குகளைக் கொண்ட பிரபுக்கள் சபை இம் மசோதாவை நிராகரித்தது. அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் இம் மசோதா மறுமுறையும் கொண்டுவரப்பட்டது. பிரபுக்கள் சபையில் மீண்டும் இம்மசோதா தோல்வியுற்றது. அரசியாரின் வற்புறுத்தலினால்தான் மார்ல்பரோவும் கொடால்பினும் இதற்கு ஆதரவாக வாக்களித்தார்களே தவிர, அவர்களுக்கு உள்ளூர இம்மசோதாவில் விருப்பமில்லை. அதனால் இம்மசோதா தோல்வி யடைந்ததால் அவர்கள் கவலைப்படவில்லை.

மார்ல்பரோவின் ஐரோப்பியப் போர்க் கொள்கையை அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த டோரிகளான ராச்செஸ்டர் கோமகனும், நாட்டிங்ஹாம் பிரபுவும் பலமாக எதிர்த்தனர். அதனால் மார்ல்பரோ இவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டார். இவர்களுக்குப் பதிலாக மிதவாத டோரிகளாகக் கருதப்பட்ட ஹார்லி (Harley) என்பாரும், செயின்ட் ஜான் (St. John) என்பாரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். ஹார்லி பாராளுமன்றத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றவர். செயின்ட் ஜான் பாராளுமன்றத்தில் சிறந்த பேச்சாளராக விளங்கியவர். இவர்கள் மார்ல்பரோவின் போர்க் கொள்கையை ஆதரித்தவர்களாவர்.

இங்கிலாந்துடன் ஸ்காட்லாந்தின் ஐக்கியம்

தனித்தனிப் பாராளுமன்றங்களையும், தனித்தனி அமைச்சரவைகளையும், தனித்தனிச் சட்டங்களையும், தனித்தனித் திருச்சபைகளையும் கொண்டு இயங்கிவந்த இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் கிராம்வெல் இணைத்தார். அதனால் இரண்டு நாடுகளுக்கும் ஒரே பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் முன்னிலை மீட்சிக்குப்பின் இரண்டு நாடுகளும் தனித்தனி நாடுகளாகச் செயல்பட்டன. அதன் பிறகு இரண்டு நாடுகளுக் கிடையே, மத வேறுபாடுகளினாலும், வாணிபப் போட்டிகளாலும், பல சச்சரவுகள் ஏற்பட்டன. அதனால் ஸ்காட்லாந்தோடு வாணிபத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஸ்காட்லாந்தின் எல்லையில் துருப்புகள் நிறுத்தப்பட்டன. இரண்டு நாடுகளுக்கிடையே போர் ஏற்படும் சூழ்நிலையும் நிலவியது. ஸ்காட்லாந்திற்கும் இங்கிலாந்துக்குமிடையே போர் ஏற்பட்டால் பிரான்சின் பதினான்காம் லூயிக்குத்தான் அனுகூலம் ஏற்படும் என்று அறிவாளிகளான ஸ்காட்லாந்தியர் நினைத்தனர்.

இரண்டு நாடுகளிடையே போர் ஏற்பட்டால், அதைப் பயன்படுத்தி லூயி அரசர் ஸ்டுவர்ட் அரசர்களை இங்கிலாந்தின் அரியணையிலும் ஸ்காட்லாந்தின் அரியணையிலும் அமர்த்திவிடுவார் எனப் பயந்தனர். அதனால் போரைத் தவிர்த்து ஒரு பயன் தரத்தக்க முடிவை ஏற்படுத்த முன் வந்தனர், உடனே ஆன் அரசியார் இரண்டு நாடுகளின் ஐக்கியத்தை ஆராய ஒரு குழுவை நியமித்தார். இங்கிலாந்து தனது வாணிபத்தின் ஏக போகத் தனியுரிமையை (Monopoly of trade) விட்டுவிட வேண்டுமென்றும், ஸ்காட்லாந்து தனது சுதந்திரத்தைக் கைவிட வேண்டுமென்றும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. 1707ஆம் ஆண்டில் ஐக்கியச் சட்டம் (Act of Union) ஒன்று இயற்றப்பட்டது. இச்சட்டத்திற்கு ஸ்காட்லாந்தின் பாராளு மன்றமும் தனது ஒப்புதலை யளித்தது. 1707ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஸ்காட்லாந்திய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பின்பு மே மாதம் 1ஆம் தேதி பிரிட்டிஷ் கூட்டரசு (United Kingdom of Great Britain) உருவானது.

ஆன் அரசியாரின் கலப்பு அமைச்சரவை

இங்கிலாந்தோடு ஸ்காட்லாந்து ஐக்கியமடைந்ததால் பாராளு மன்றத்தின் பொது மக்கள் சபையில் பல விக்குகள் இடம் பெற்றனர். விக்கு கட்சியானது மேலும் மேலும் வளர்ச்சி யடைந்தது. இதைக் கண்ட மார்ல்பரோவும், கொடால்பினும் விக்குகளை ஆதரிக்கத் தொடங்கினர். அதனால் அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக விக்குகளின் ஆட்சிக்கு மாறியது. கௌபர் (Cowper) என்னும் விக்கு கட்சியைச் சார்ந்தவர் சான்ஸலர் பிரபுவாக நியமிக்கப்பட்டார். மார்ல்பரோவின் மருமகனை ஸண்டர்லாண்டு உள்நாட்டு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இச்சமயம் ஒரு முக்கியமான அரசியல் பிரச்சினை தோன்றியது. ஐரோப்பியப் போரை வெற்றியுடன் நடத்த ஒரே கருத்துடைய விக்கு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர் குழுவை நியமிக்க வேண்டும் எனக் கோரினர். அமைச்சர்களைத் தெரிந்தெடுப்பது தமக்கே யுரிய அதிகாரமென்றும், இரண்டு கட்சி களிலுமுள்ள மிதவாதிகளைத் தெரிந்தெடுத்து ஒரு கலப்பு அமைச்சர் குழுவை ஏற்படுத்துவதே நல்லது எனவும் ஆன் அரசியார் கூறினர். இதற்கு ஹார்லி பிரபு தமது முழு ஆதரவைத் தந்தார். இதனால் விக்குகளால் இவர் விரட்டியடிக்கப்பட்டார். இவருடன் செயின்ட் ஜானும் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார். உடனே மார்ல்பரோவும், கொடால்பினும் தங்களை விக்குகளென அறிவித்துக் கொண்டனர்.

1708ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் விக்கு கட்சி யினரே பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். அமைச்சரவையும்

விக்குகளைக் கொண்டதாகவே மாறிவிட்டது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியே அமைச்சரவையை அமைக்க லாம் என்ற அரசியலமைப்புக் கொள்கை உறுதியாக்கப்பட்டது. இச் சமயத்தில் ஸ்பானிய வாரிசு உரிமைப்போர் நீண்டு கொண்டே போவதை மக்கள் விரும்பவில்லை. இப்போரினால் வரிச் சுமை அதிகமாகிக் கொண்டே போனதை மக்கள் பொறுக்கவில்லை. அதனால் மக்கள், போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற விக்குகளின் கொள்கையை எதிர்த்தனர். அதனால் விக்குகளின் செல்வாக்கு மக்களிடையே குறைய ஆரம்பித்தது. இதே சமயத் தில்தான் விக்குகளின் செல்வாக்கு மேலும் குறைவதற்குரிய ஓர் நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் சாக்கிவெரல் (Dr. Sacheverral) என்ற டோரிப் பேராசிரியர் ஒருவர் இலண்டனில் சமயச் சொற் பொழிவொன்றில், தெய்வீக உரிமைக் கொள்கையை உயர்த்தியும் இணங்காதவர்களைக் கண்டித்தும், சமயப்பொறைக் கொள் கையைப் பழித்தும் பேசினார். அதனால் விக்கு அமைச்சரவை இவர் மீது அரசியல் துரோகக் குற்றத்தைச் சாட்டியது. ஆனால் பிரபுக்கள் சபை சமயச் சொற்பொழிவை மூன்றாண்டுகளுக்குச் செய்யக் கூடாது என்று இவருக்குக் கட்டுப்பாடு விதித்தது. விக்கு களின் இச்செயலால் இவருக்கு மேலும் மேலும் மக்களிடையே புகழ் ஏற்பட்டது. இவரின் புகழ் ஏறஏற விக்குகளின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. இச்சமயத்தில் ஆன் அரசியார் விக்கு அமைச்சரவையைக் கலைத்துவிட்டு டோரிகளை அமைச்சரவை யமைக்கும்படி கேட்டுக் கொண்டார். இதற்குத் தகுந்தாற் போலவே 1710ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் டோரிக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றனர். அதனால் முற்றிலும் டோரிகளையே கொண்ட அமைச்சரவையானது அமைக்கப்பட்டது.

இந்த அமைச்சரவையில் ஹார்லியும், செயின்ட் ஜானும் இடம் பெற்றார்கள். ஹார்லி கருவூலத் தலைவராகவும், செயின்ட்ஜான் உள்துறை அமைச்சராகவும் அமர்த்தப்பட்டார்கள். இவ்வமைச் சரவையானது மார்ல் பரோவைப் படைத்தளபதி பதவியிலிருந்து நீக்கியது. அத்துடன் மார்ல்பரோவின்மீது லஞ்ச ஊழல் குற்றச் சாட்டையும் சுமத்தியது. பின்னர் மார்ல்பரோ பிரான்சுக்குச் சென்றுவிட்டார். இந்த அமைச்சரவை எவ்வாறாகிலும் ஐரோப் பியப் போரை நிறுத்திவிட எண்ணியது. அதன்படி 1713ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் இசைவின் பேரில் யுட்ரெக்ட் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையால் போர் நின்றது. அதன்பிறகு இணங்காதாருக்கு எதிராக டோரிக் கட்சியினர் இரண்டு சட்டங்களை இயற்றினர். ஆங்கிலிக்கத் திருச்

சபைக் கோட்பாடுகளைப் பின்பற்ருத இணங்காதாருக்குப் பெருந் தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

ஆன் அரசியாருக்குப் பின் யார் பட்டத்திற்கு வரவேண்டு மென்பதில் டோரிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தமது மதத்தை மாற்றிக்கொண்டாலொழிய மூத்த போலி இங்கி லாந்தின் அரியணையில் அமரக்கூடாது என ஹார்லி வாதிட்டார். மதத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையெனக் கூறி மூத்த போலியைப் பட்டத்திற்குரியவராக்க செயின்ட் ஜான் முயன்ருர். ஆன் அரசியாரின் முன்னிலையிலேயே இவர்கள் இருவரும் மரியாதையின்றி நடந்துகொண்டனர். அதனுல் ஹார்லி 1714 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் தேதி அமைச்சர் பதவியிலி ருந்து நீக்கப்பட்டார். இதைப் பயன்படுத்தி செயின்ட் ஜான் மூத்த போலியை அரசராக்க முயன்ருர். இச்சமயத்தில் அரசியார் நோய்வாய்ப்பட்டார். அவர் இறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு ஸ்ரூஸ்பரி கோமகனை கருவூலத் தலைமைப் பிரபுவாக நியமித் தார். இவர் அரசியார் இறந்தவுடனேயே ஹனேவர் நாட்டின் தேர்வாளரான ஜார்ஜை இங்கிலாந்தின் அரசரென அறிவித்தார். செயின்ட் ஜான் இதையறிந்து மனமுடைந்து பிரான்சுக்குப் போய் விட்டார், தேர்வாளர் ஜார்ஜ், முதலாம் ஜார்ஜ் என்னும் பட்டப் பெயருடன் இங்கிலாந்தின் அரசராஞர்.

ஆன் அரசியாரும் ஐரோப்பியப் போரும்

மார்ல்பரோ பிரபு நேச நாடுகளின் படைக்குத் தலைமை தாங் கிஞர். இராணுவ தந்திரத்தில் இவர் புதிய முறைகளைக் கையாண் டார். பெருத்த அளவில் திட்டமிட்டுப் போரை நடத்துவதில் சிறந்தவராகத் திகழ்ந்தார். கடலிலும். தரையிலும் போர்களை ஒரே சமயத்தில் தொடங்கி அவைகளின் கூட்டு முயற்சியால் எப்படி வெற்றி பெறுவது என்னும் முறையை இவர் நன்கு அறிந் திருந்தார். ஆன் அரசியார் இவர்மீது முழு நம்பிக்கை வைத்திருந் தார். போரை நடத்தும் முழுப் பொறுப்பையும் இவரிடத்திலே அரசியார் ஒப்படைத்தார்.

இப்போரானது நிலத்திலும் கடலிலும் ஐரோப்பாக் கண்டத் திலும் அமெரிக்கக் கண்டத்திலுமாக உலகின் பல பாகங்களில் நடைபெற்றது. ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து முதலிய நாடுகள்தான் முக்கிய போர்க் களங்களாகத் திகழ்ந்தன, 1704 ஆம் ஆண்டில் பிளென்ஹிம் (Blenhem) என்னுமிடத்தில் நடந்த போரில் பிரான்ஸ், பவேரியா படைகள் தோல்வியுற்றன. இவர்கள் படையில் 25.000 போர் வீரர்கள் இறந்தனர்.

பிரான்சுப் படையின் தளபதி கைது செய்யப்பட்டார். அதனால் பிரான்சுப் படைகள் ஜெர்மனியிலிருந்து பின்வாங்கின. இப் போர் பிரான்சு இராணுவத்தின் மதிப்பைப் பெரும் அளவில் குறைத்தது. 1706 ஆம் ஆண்டில் ராமில்லீஸ் (Ramillies) என்னுமிடத்தில் நடந்த போரில் பிரான்சுப் படைகளை மார்ல்பரோ தோற்கடித்தார். ஸ்பேனிய நெதர்லாண்டுப் பகுதியிலிருந்து பிரான்சுப் படைகள் துரத்தப்பட்டன. 1708 ஆம் ஆண்டில் ஊடனூர்ட் (Oudenarde) என்னுமிடத்திலும் பிரான்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. 1709 ஆம் ஆண்டில் மால்பிளாக்கத் (Malplaquet) என்னுமிடத்தில் நடைபெற்ற கடும்போரிலும் பிரான்சுப் படைகள் தோல்வியுற்றன. இத்தாலியில் ஆஸ்திரியா வுக்குச் சொந்தமான சில நாடுகளைக் கைப்பற்ற எண்ணி பிரான் சுப் படைகள் இத்தாலிக்குள் நுழைந்தன. ஆனால் அவைகள் டியூரின் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டன. நேபில்ஸும், மிலானும் ஆஸ்திரியப் படைகளால் கைப்பற்றப்பட்டன. ஆகவே பிரான்சுப் படைகள் இத்தாலியிலிருந்தும் துரத்தப்பட்டன. கப்பற்படைத் தளகர்த்தர் ரூக் (Admiral Rooke) 1704 ஆம் ஆண்டில் ஜிப்ரால்டர் துறைமுகத்தைக் கைப்பற்றினார். அதி லிருந்து இத்தீவானது ஆங்கிலேய ஆதிக்கத்திலேயே இருக் கின்றது.

இப்போர் தொடர்ந்து நடைபெற்று வந்ததால் மக்கள் அவதி யுற்றனர். போர் இனியும் நீடிக்க அவர்கள் விரும்பவில்லை. அதே சமயத்தில் போரை ஆதரித்த விக்குகள் அமைச்சர் பதவி களிலிருந்து இறக்கப்பட்டனர். டோரிகள் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை பெற்றதால் அவர்களே அமைச்சரவையை அமைத்தனர். முற்றிலும் அவர்களே அமைச்சரவையில் இடம் பெற்றனர். ஆகவே இவர்களும் போரை நிறுத்தும் முயற்சியில் ஈடு பட்டனர். பிரான்சின் பதினான்காம் லூயியும் போரை நிறுத்தத்தக்க சூழ்நிலையை நோக்கியிருந்தார். இச்சமயத்தில் மார்ல்பரோவும் பதவி யிலிருந்து நீக்கப்பட்டார். பெரும் பேரப் பேச்சுக்குப்பின் யுட் ரெக்ட் சமாதான உடன்படிக்கை (Treaty of Utrecht) இருதரப்பின ரிடையே 1713 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதனால் ஐரோப் பாவில் அரசுகளின் வலிமைச் சமநிலை நன்கு நிலைநாட்டப்பட்டது. இவ்வுடன்படிக்கை, உலகிலேயே இங்கிலாந்தின் கப்பற் படை வலிமை உயர்ந்ததென நிரூபித்தது.

13. அரசியலமைப்பின் சிறப்புமிகு காலம் (1714-1760)

இங்கிலாந்தின் வரலாற்றில் அரசியல் உறுதியின்மை நிலவிய காலம் பதினேழாம் நூற்றுண்டாகும். அக்காலத்தில்தான் உள் நாட்டுப் போரின் கடுஞ்சோதனைக்கு இங்கிலாந்து இலக்காகியது. அதே காலத்தில்தான் அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்கு மிடையே ஏற்பட்ட பெரும் போராட்டங்களையும் இங்கிலாந்து கண்டது. அப்போராட்டங்களின் பயனை ஆங்கில மக்கள் பதினெட்டாம் நூற்றுண்டில் நுகர்கின்றனர். எந்தக் கொள்கை களுக்காக இங்கிலாந்தில் போராட்டங்களும், புரட்சியும் ஏற் பட்டனவோ, அக்கொள்கைகள் நன்கு வேரூன்றிப் பின்னர் விரிவடைந்த காலமும் பதினெட்டாம் நூற்றுண்டேயாகும். இங்கி லாந்தின் வரலாற்றில் பதினெட்டாம் நூற்றுண்டு நன்கு பொலிவு பெற்றுக் காணப்படுகின்றது.

இந் நூற்றுண்டில் இங்கிலாந்து பொருளாதாரத் துறையில் பெரு முன்னேற்றமடைந்தது. குடியேற்ற நாடுகளிடமிருந்து இங்கிலாந்து மூலப் பொருள்களை ஏராளமாகப் பெற்று அவற்றைச் செய்பொருள்களாக்கி விற்றுப் பெரும் இலாபம் அடைந்தது. அத் துடன் வணிகர்களும் அரசியலில் செல்வாக்குப்பெற ஆரம்பித்தனர். தொழிற்புரட்சியினுலும், விவசாயப் புரட்சியினுலும் இங்கிலாந்தில் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பெரும் முன்னேற்ற மான மாற்றம் ஏற்பட்டது.

இந் நூற்றுண்டில் தான் இங்கிலாந்தில் மெத்தாடிஸ்டுகள் (Methodists) என்ற கூட்டத்தினர் தோன்றி சமயத்தில் விழிப் புணர்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றனர். சமூக, மதத் துறைகளில் இந் நூற்றுண்டில்தான் பகுத்தறிவும் பயன்படுத்தப்படு கின்றது. அதனுல் தான் அறிவு செறிந்த ஒரு நடுநிலை வகுப்பு இங்கிலாந்தில் வளர்ச்சியடைந்தது.

பொருளாதாரத் துறையிலும், சமூக சமயத் துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் போலவே இந்நூற்றுண்டில் அரசியல் கட்சிகளின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் திட்டங்களிலும்

பற்பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய முன்னேற்றங்கள் அனைத்தும் நாட்டின் அரசியலமைப்பின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

முதலாம் ஜார்ஜ் (1714–1727)

ஆன் அரசியார் இறந்தவுடன், ஆங்கில அரசுரிமை நிர்ணயச் சட்டத்தின்படி 1714ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் ஐம்பத்து நான்கு வயது நிரம்பிய முதலாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசரானர். இங்கிலாந்தை இன்றுவரை ஆண்டு வருகின்ற ஹெனேவர் அரச குடும்பத்தினருள் முதன்முதல் அதையாண்ட பெருமை முதலாம் ஜார்ஜுக்குரியதாகும். இவரிடம் இங்கிலாந்தின் அரசருக்குரிய ஆட்சித் திறன் சிறிதும் காணப்படவில்லை. இருந்தபோதிலும் இவர் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர் ஆங்கில மொழியையோ அல்லது ஆங்கிலப் பழக்க வழக்கங்களையோ சிறிதும் அறியாதவர். சமயச் சார்பான விவகாரங்களில்கூட இவருக்குச் சிறிதேனும் உற்சாகமில்லை. இங்கிலாந்தின் அரியணையில் அமரும் வாய்ப்பு தமக்குக் கிடைக்கும் என்று அறிந்திருந்தபோதிலும்; முதலாம் ஜார்ஜ் ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்வோம் என்று எண்ணவேயில்லை, இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்த பின்புகூட அவர் ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ளவோ ஆங்கிலப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளவோ, ஆங்கில நிருவாக முறையை அறிந்துகொள்ளவோ முற்படவில்லை. இதற்கு அவரின் முதிர்ந்த வயது ஒரு காரணமாக இருந்தபோதிலும், உண்மையிலேயே இக்குறைகளைப் போக்க அவர் சிறிதேனும் முயற்சி எடுத்துக்கொள்ளவுமில்லை. இங்கிலாந்தின் அரசுரிமை தமக்குக் கிட்டியதற்கு மூலகாரணமானவர்கள் விக்கு கட்சியினரே என்பது முதலாம் ஜார்ஜின் எண்ணமாகும். டோரிக் கட்சியினரை அவர் மிகவும் வெறுத்தார். இங்கிலாந்திற்கு வரும் முன்பே டோரி அமைச்சர்களையெல்லாம் பதவியினின்று நீக்கும்படி உத்தரவிட்டார். விக்கு கட்சியினரே அமைச்சர்களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டனர்.

விக்கு கட்சியின் குழு ஆட்சி

முதலாம் ஜார்ஜ் அரசருக்கு ஆங்கில மொழி தெரியாததாலும், ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களிலும், அரசியலிலும், நிருவாகத்திலும் அனுபவமில்லாததாலும், நாட்டின் உள் விவகாரங்களில் அக்கறையில்லாததாலும், நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தமக்குப் பெற்றுத்தந்த விக்கு கட்சியிடம் ஒப்படைத்தார்.

அதனால் விக்கு கட்சியினரே முக்கிய அரசாங்கப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர். டோரிகள் அதிகார பீடத்தினின்றும் விரட்டியடிக்கப்பட்டனர். டோரிகளான ஆக்ஸ்போர்டு பிரபு, பாலின் புரூக் பிரபு, ஆர்மாண்ட் பிரபு, ஸ்டாரா போர்டு பிரபு போன்றவர்களின் மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. அதையறிந்த பாலின் புரூக்பிரபுவும், ஆர்மாண்ட் பிரபுவும் நாட்டைவிட்டே ஓடிவிட்டார்கள். ஆக்ஸ்போர்டு பிரபு மட்டும் மனவுறுதியுடன் விசாரணையை ஏற்று இரண்டாண்டு சிறைத் தண்டனை பெற்றார். இதனைத் தொடர்ந்து டோரிக் கட்சி சிதைய ஆரம்பித்தது. அதே சமயத்தில் விக்கு கட்சியின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. அந்தச் சூழ்நிலையில் நாட்டின் தலைமையை விக்கு கட்சி பெற்று ஓர் குழு ஆட்சியை (Oligarchy) அமைத்தது. இது இங்கிலாந்து வரலாற்றில் விக்கு குழு ஆட்சி (Whig Oligarchy) என அழைக்கப் படுகின்றது. விக்கு கட்சியினரின் செல்வாக்கு மேலோங்கியதால் இக்கட்சியானது 1714 ஆம் ஆண்டிலிருந்து மூன்றும் ஜார்ஜ் காலம் வரை ஆட்சிப் பொறுப்பிலிருந்தது.

விக்கு கட்சி தொடர்ந்து நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவைகளாவன :

ஸ்டூவர்ட்டுகளின் அரசுரிமை வாரிசை ஒழித்துவிட்டு ஹனோவர் வம்சத்திற்கு அரசுரிமை வாரிசு வழங்கப் பட்டதற்கு விக்கு கட்சியினரே முழுப் பொறுப்பானவர்கள். ஆனால் டோரிகள் ஸ்டூவர்ட்டு வம்சத்தினரைத் தான் அரியணையில் அமர்த்த வேண்டுமென்று கூறி ஹனோவர் வம்சத்தவர்கள் அரசராவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஹனோவர் அரசர்கள் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்த பிறகு கூட, அவர்களை இங்கிலாந்தை விட்டுத் துரத்த டோரிகள் பல முயற்சிகளை எடுத்தார்கள் என்பதற்கு அவர்கள் 1715 இலும் 1745 இலும் தோற்றுவித்த ஜேகோபியர்களின் கலகங்களே எடுத்துக் காட்டுகளாகும். டோரிகளின் இத்தகைய வன்முறைச் செயல்களைக் கண்டு வெறுத்து தங்களை ஆதரித்த விக்குகளையே ஹனோவர் அரசர்களாகிய முதலாம் ஜார்ஜும், இரண்டாம் ஜார்ஜும் ஆதரித்தனர். 1715 ஆம் ஆண்டிலும் 1745 ஆம் ஆண்டிலும் விக்குகள் ஹனோவர் அரசர்களுக்கு உதவி செய்யாமலும், ஆதரவு கொடுக்காமலும் இருந்திருந்தால் நிச்சயமாய் ஹனோவர் அரசர்களுக்கு இங்கிலாந்தை விட்டு அவர்கள் நாட்டிற்கு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். 1745 ஆம் ஆண்டு வரை டோரிகள் ஹனோவர் அரசர்களை எதிர்க்கும் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லையாகையால் அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் வினாவே

எழவில்லை. ஆனால் 1745ஆம் ஆண்டிற்குப் பிறகு டோரிகள் தங்களின் எதிர்ப்புக் கொள்கையை மாற்றிக் கொண்டது உண்மை யானாலும், விக்கு கட்சியினரைப் பதவியை விட்டு நீக்கிவிட்டு டோரிகளை அப் பதவிகளில் அமர்த்த இரண்டாம் ஜார்ஜ் விரும்ப வில்லை. அதனால் டோரிகளின் நிலை இவ்வாறே 1760 ஆம் ஆண்டு வரை இருந்தது. இரண்டாம் ஜார்ஜ் இறந்த பிறகு மூன்றும் ஜார்ஜ் அரியணையில் அமர்ந்தவுடனே விக்குகளின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

முதலாம் ஜார்ஜ் அரசருக்கு ஆங்கிலமொழி தெரியாததனால் ஆங்கில அரசியலைப் பற்றி நல்ல முறையில் தெரிந்து கொள்ள முடியவில்லை. மொழி தெரியாத காரணத்தால் அமைச்சர் குழு கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்தார். பிறகு அமைச் சர்களிடமே எல்லா நிருவாகப் பணிகளையும் ஒப்படைத்தார். அதனால் விக்குகள் இச்சூழ்நிலையைப் பயன்படுத்தித் தங்களை ஆதரிப்பவர்களையே அமைச்சர்களாகவும், அரசாங்க உயர் அதிகாரி களாவும் நியமித்தனர். அதனால் இவர்களின் செல்வாக்கு நல்ல முறையிலே வளர்ந்தது, பாராளுமன்றத்திலே உறுப்பினராய் இருந்த பலர் அரசாங்கப் பதவிகளைப் பெற்றதனால் கட்டாயமாக விக்கு ஆட்சியை ஆதரிக்கும் சூழ்நிலைக்கு அவர்கள் ஆளானார்கள். ஆகவே, இத்தகைய வகையிலே பாராளுமன்றத்திலும் விக்கு களுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தது. நிருவாகத் துறை யிலும் பலருக்கு இவர்கள் பதவிகளை அளித்தனர். அதனால் அவர் களும் இவர்களை ஆதரித்தனர். இவைகள் மட்டு மல்லாமல், அங்கு எராளமாக உதவிப் பணம், ஓய்வுகால ஊதியம் ஆகிய வைகள் அளிக்கப்படுதலும் இருந்துவந்தன. தங்கள் ஆட்சிக்கு யாரெல்லாம் ஆதரவு தருவதாக வாக்களித்தார்களோ அவர்களுக்கெல்லாம் உதவிப் பணமும், ஓய்வு கால ஊதியமும் விக்குகள் அளித்தனர். ஆகவே இத்தகைய சலுகைகளை விக்குகள் அளித்ததனால், இவர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு இருந்துவந்தது. அவ் வாதரவினால் இவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தனர்.

ஆங்கிலிக்கத் திருச்சபைகளில் அரசர்களே பல நியமனங் களைச் செய்து வந்தனர். ஆனால் முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் அரசர்களின் காலத்தில் இந் நியமனங்களைச் செய்யும் பொறுப்பை விக்கு கட்சியினரே அனுபவித்து வந்தனர். அதனால் விக்குகள் தமக்கு ஆதரவு தருபவர்களையே திருச்சபையில் பதவி களில் அமர்த்தினர். அதன் காரணமாய்த் திருச் சபையின் ஆதரவும் விக்குகளுக்குக் கிடைத்தது. ஆங்கிலிக்கத் திருச்சபை யின் ஆதரவு கிடைத்ததால் பாராளுமன்றத்தைச் சமாளிப்பது

இவர்களுக்கு மிக எளிதாகி விட்டது. அத்துடன் பாராளுமன்றத் தேர்தல்களில் தங்களுடைய ஆதரவாளர்களையே தேர்ந்தெடுப்பதில் பல முயற்சிகளை மேற்கொண்டனர். நாட்டின் பெருநிலக் கிழார்கள் பலர் இக் கட்சியில் இருந்தனர். பல நகரத் தொகுதிகள் இவர்களின் சொந்தத் தொகுதிகளாக இருந்ததால், இவர்களின் விருப்பிற்கு உகந்தவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்ப முடிந்தது. கையூட்டைப் பயன்படுத்தி மற்ற நகரத் தொகுதிகளையும் இவர்கள் கைப்பற்றினுர்கள். தேர்தலைக் கட்டுப்படுத்த அரசரின் செல்வாக்கும் பயன்படுத்தப்பட்டது. அதனுல் பாராளுமன்றத்தில் இவர்களின் ஆதரவாளர்களே தொடர்ந்து உறுப்பினர்களாக வரமுடிந்தது.

விக்குகள் சமய ஏற்பாட்டில் சகிப்புத் தன்மை, நடுநிலைத் தன்மை, ஆகிய கொள்கைகளைப் பின்பற்றினர். இணங்காதார் போன்றோர் சோதனைச் சட்டத்தை எதிர்த்தனர். இச் சட்டத்தை நீக்க இவர்களுக்குத் துணிவு இல்லாததனுல் இணங்காதார் போன்றோரைச் சமாதானப் படுத்தும் வகையில் ஆண்டுதோறும் சட்ட விலக்குரிமை (Act of Indeminity) அளிப்பதாக வாக்குறுதியளித்தார்கள். அதனுல் மக்கள் இவர்களை ஆதரிக்கத் தொடங்கினுர்கள். அத்துடன் மட்டுமல்லாமல் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் இவர்கள் குறுக்கிடவில்லை. அவர்கள் விருப்பப்படி செயல்பட ஆதரவு அளித்தார்கள். செயின்ட் ஜான் போன்றோர் திரும்பவும் இங்கிலாந்திற்கு வர அனுமதித்தார்கள். ஆகவே விக்குகள் மற்றவர்களைத் துன்புறுத்தாமையால், அவர்களும் இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததைப் பொறுத்துக் கொண்டார்கள்.

விக்குகளின் ஆட்சியில் ஆங்கிலேயப் பேரரசு விரிவடைந்தது என்பதை மறுக்க முடியாது. இவர்களின் ஆட்சியின்போதுதான் இந்தியாவில் மூன்று கர்னுடகப் போர்கள் ஏற்பட்டு அப்பகுதிகளிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். இவர்களின் ஆட்சியின் போதுதான் இந்தியாவிலுள்ள வங்காளத்தில் ஆட்சியைப் பிடித்தார்கள். அப்போதுதான் ஏழாண்டுப் போரினுல் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து கனடா கைப்பற்றப்பட்டது. இத்தகைய வகையிலே விக்குகள் ஆங்கிலேயப் பேரரசை விரிவுபடுத்தியதால் மக்களின் ஆதரவு இவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்தது.

விக்குகளின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேய வாணிபம் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடைந்தது. புதுக்குடியேற்ற நாடுகளினுல் இங்கிலாந்தின் செல்வம் சிறப்பெய்தியது. ஆங்கி

லேயர்களும் ஸ்காட்லாந்தியர்களும் உலகின் பல பாகங்களுக்குச் சென்று பொருள் திரட்டி வந்ததனால் இங்கிலாந்தின் பொருளாதாரம் மேம்பாடடைந்ததுடன் மக்களும் இனிய வாழ்க்கையை மேற்கொண்டனர். இவ்வாறு விக்குகளின் ஆட்சி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தியதால். மக்கள் தடையின்றித் தங்களின் ஆதரவை இவர்களுக்கு வழங்கினார்கள்.

இவர்களின் காலத்தில் இங்கிலாந்தில் மக்கள் பெருக்கம் மிக வேகமாக வளர்ந்தது. மக்களிடையே ஆதரவும் பெருகியது.

விக்குகள் 'தூங்கும் நாய்கள் தூங்கட்டும்' என்ற கொள்கையைப் பின்பற்றினார்கள். மக்களின் விருப்பங்களுக்கு எதிராக எதையும் இவர்கள் செய்ய விரும்பவில்லை. தீர்வை வரி மசோதா ஒரு நல்ல பயன்தரும் வகையில் இருந்த போதிலும், மக்கள் இதை எதிர்த்ததால் வால்போல் இதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். அத்துடன் மட்டுமல்லாமல் குடியேற்ற நாடுகளின் விவகாரங்களில் விக்குகளின் அரசாங்கம் தலையிடுவதேயில்லை. அதனால் குடியேற்ற நாடுகளும் விக்குகளின் ஆட்சியை எதிர்க்கவில்லை.

இத்தகைய காரணங்களினால் முதலாம் ஜார்ஜ் இரண்டாம் ஜார்ஜ் அரசர்களின் காலத்தில் விக்குகள் ஆட்சி செய்ய முடிந்தது. ஆனால் மூன்றாம் ஜார்ஜ் அரியணையில் அமர்ந்தவுடன் இங்கிலாந்தில் சூழ்நிலை மாறியதால் இவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முடியாநிலை ஏற்பட்டுவிட்டது.

ஜேகோபியர்களின் கிளர்ச்சி (1715)

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹெனோவரிய அரச குலத்துக்கெதிராக இங்கிலாந்தில் இரு கிளர்ச்சிகள் ஏற்பட்டன. கி. பி. 1668ஆம் ஆண்டில் ஆட்சியைத் துறந்து, பிரான்சு நாட்டுக்கு ஓடியிருந்த இரண்டாம் ஜேம்ஸின் மகன் ஜேம்ஸ் எட்வர்டு அல்லது மூத்தபோலி (Old Pretender) என்பவரை ஆங்கில அரியணையில் அமர்த்தும் முயற்சியிலேயே அக்கிளர்ச்சிகள் 1715ஆம் ஆண்டிலும், 1745ஆம் ஆண்டிலும் ஏற்பட்டன.

ஆங்கிலேயர் பலர் பழைய ஸ்டுவர்ட்டு அரசர்களிடையே மாறாத நன்றியுடையவர்களாயிருந்தனர். அந்நிய மொழி பேசிக்கொண்டு ஆங்கிலேயரை அலட்சியம் செய்யும் முதலாம் ஜார்ஜைக் காண அவர்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அவர் ஒரு பிராடெஸ்டெண்டு மதத்தவர் என்பதைத் தவிர, வேறு எந்த வகையிலும்

அவரை ஆங்கில மக்களுக்குப் பிடிக்கவில்லை. இங்ஙனம் ஹனோவரிய அரச குலத்தை வெறுத்த ஆங்கில மக்கள் இரண்டாம் ஜேம்ஸின் மகனை ஜேம்ஸ் எட்வர்டு அல்லது மூத்தபோலி என்பவரை ஆங்கில அரியணையில் அமர்த்த ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினர்.

ஜேம்ஸ் என்ற பெயர் இலத்தின் மொழியிலே ஜேகோப் என அழைக்கப்பட்டதால் ஜேம்ஸ் எட்வர்டைப் பின்பற்றியவர்களும், அவரை ஆங்கில அரியணையில் அமர்த்த சதித்திட்டத்தை உருவாக்கியவர்களும் ஜேகோப்பியர்களென அழைக்கப்பட்டனர்.

கி. பி. 1688ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் நாளில் அரசர் இரண்டாம் ஜேம்ஸின் இளைய மனைவி மொடினா மேரிக்குப் (Mary of Modena) பிறந்தவரே ஜேம்ஸ் எட்வர்டு. மேதகு புரட்சி உச்ச கட்டத்தை அடைவதற்கு முன்பாகவே எதுவும் ஆபத்து ஏற்படாதிருக்கத் தம் மனைவியையும், பிள்ளையையும் இரண்டாம் ஜேம்ஸ் ஃபிரான்சு நாட்டுக்குக் கப்பலேற்றிவிட்டார். மேதகு புரட்சியினால் இங்கிலாந்தின் நிலைமை மோசமாகிவிடவே, அதே ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் ஜேம்ஸ் அரசரும் ஃபிரான்சுக்குச் சென்று தஞ்சம் புகுந்தார். அப்போது ஃபிரான்சு நாட்டு அரசராயிருந்த பதினான்காம் லூயி (Louis XIV) தம் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த ஸ்டுவர்ட்டு அரச குடும்பத்தினருக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களைப் பாதுகாத்துவந்தார்.

இரண்டாம் ஜேம்ஸை மீண்டும் ஆங்கில அரியணையில் அமர்த்த ஃபிரான்சு நாட்டின் அரசர் பதினான்காம் லூயி எடுத்துக் கொண்ட போர் முயற்சிகளும், இழந்த அரசைப் பெற இரண்டாம் ஜேம்ஸ் செய்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

ஆன் அரசியார் தாம் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், எப்படியும் தமக்குப் பின்னர் தம் ஒன்றுவிட்ட சகோதரன் ஜேம்ஸ் எட்வர்டு, பட்டத்தைப் பெறுவதற்கான இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால் அரசியாரின் முயற்சி வெற்றியடையவில்லை. சில மாதங்களுக்குள்ளாகவே அவர் இறந்துவிட்டார். அவருக்குப் பின் இங்கிலாந்தில் ஹனோவரியர்களின் ஆட்சி தொடங்கியது. இரண்டாம் ஜேம்ஸும் அப்போது இறந்துவிட்டார். இங்கிலாந்திலிருந்து விரட்டப்பட்ட ஜேகோப்பியர்கள் ஃபிரான்சை அடைந்து, பதினான்காம் லூயியின் உதவியுடன் இரண்டாம் ஜேம்ஸின் மகனை ஜேம்ஸ் எட்வர்டை ஆங்கில அரியணையில் அமர்த்தத் திட்டமிட்டனர். ஆனால்

பதினான்காம் லூயி 1715ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திடீரென்று இறந்துபோனார்.

பதினான்காம் லூயிக்குப் பின்னர் அவருடைய கொள்ளுப் பேரன், பதினைந்தாம் லூயி என்ற பட்டப் பெயருடன் ஃபிரான்சின் அரசரானார். பதினைந்தாம் லூயி விவரம் அறியாத சிறு பிள்ளையாக இருந்ததால் அவருக்கு இடைக்காலப் பாதுகாப்பாளராக (Regent) ஆர்லியன்ஸ் கோமகன் என்பவர் அமர்த்தப்பட்டார். அவர் இங்கிலாந்துடன் நட்புறவோடு இருக்க விரும்பியதால் ஜேகோப்பியர்களுக்கு உதவ மறுத்துவிட்டார். இனி வெளிநாடுகளின் உதவி தங்களுக்குக் கிடைக்காதென்ற முடிவுக்கு ஜேகோப்பியர்கள் வந்தனர்.

ஜேகோப்பியர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்காத நிலையில் ஆங்கில மக்களையாவது வசப்படுத்திக்கொள்ளவேண்டி ஜேம்ஸ் எட்வர்டைப் பிராடஸ்டெண்டு மதத்தைத் தழுவும்படி பாலிஸ்பரோக் பிரபு வலியுறுத்தினார். ஆனால், ஜேம்ஸ் எட்வர்டு கத்தோலிக்க மதத்தைவிட்டு பிராடஸ்டெண்டாக மாற விரும்பவில்லை. அத்துடன் முதலாம் ஜார்ஜின் ஆட்சியை ஓர் அன்னியரின் ஆட்சியாகக் கருதிவந்த ஆங்கில டோரிக் கட்சியினருக்குச் சில உறுதி மொழிகள் கொடுத்து அவர்களின் உதவியையும் ஆதரவையும் பெறலாமென்று பாலிஸ்பரோக் பிரபு கொடுத்த அறிவுரையையும் ஜேம்ஸ் எட்வர்டு உதறினார். அதனால் ஆங்கில ஜேகோப்பியர்கள் ஜேம்ஸ் எட்வர்டுக்காகக் கிளர்ச்சியில் ஈடுபடத் தயாராயில்லை.

கிளர்ச்சியை ஜேகோப்பியர்களின் உதவியுடன் வெற்றிகரமாக நடத்தி இங்கிலாந்தின் மணிமகுடத்தைப் பெற்றுவிடலாமென்ற ஆசைமட்டும் ஜேம்ஸ் எட்வர்டுக்கு இருந்ததேயொழிய, கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்தக் கூடிய திறமையோ, ஆங்கில மக்களைக் கிளர்ச்சிக்கு ஆதரவாகத் தட்டி யெழுப்பக் கூடிய தகுதியோ அவருக்கு இல்லாமலிருந்தது. இருந்தபோதிலும் அவருக்கு ஸ்காட்லாந்தில் ஓரளவு ஆதரவு இருந்தது.

1707ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இணைப்புச் சட்டத்தினால் (Act of Union) இங்கிலாந்தோடு ஸ்காட்லாந்து இணைக்கப்பட்டது. இதனைப் பல ஸ்காட்லாந்தியர் வெறுத்தனர். தங்கள் மீது அன்னிய ஆதிக்கம் திணிக்கப்பட்டுவிட்டதாகப் பல ஸ்காட்லாந்தியர்கள் குமுறிவந்தனர். அந் நிலையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய ஜேம்ஸ் எட்வர்டு ஆங்கில அரசுக்கெதிராகக் கிளர்ச்சியில் இறங்கும்படி ஸ்காட்லாந்தியருக்கு ஆணையிட்டார்.

இங்கிலாந்திற்கெதிராக நடத்தப்படும் கிளர்ச்சிகளில் எப்போதுமே முன்னணியில் இருந்த மேல் நிலத்தார் அல்லது மலை நாட்டு மக்கள் (Highlanders) வழக்கம்போல் மார் எர்ல் (Earl of Mar) என்பவரது தலைமையில் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ப்ரேமார் (Braemar) என்னுமிடத்தில் அவர் ஜேம்ஸ் எட்வர்டை இங்கிலாந்து-ஸ்காட்லாந்து அரசரென அறிவித்தார். மார் பிரபு சிறந்த வீரரெனினும், சுறுசுறுப்புடன் செயல்படாமல் பெர்த் (Perth) நகரைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது ஹெனேவரியர்களுக்கு விசுவாசம் காட்டிய ஆத்தோல் (Atholl) என்ற ஹைலாந்து பிரமுகர் மார் பிரபுவுக்குப் பல இன்னல்களைக் கொடுத்து வந்தார். ஆனாலும், ஸ்காட்லாந்து எல்லைப்புறத்திலிருந்த நார்த்தம்பர்லாந்து, டெர்லெண்ட் வாடர் ஆகிய இரு பெருநிலக்கிழார்களின் தலைமையில் சில கிளர்ச்சிவாதிகள் மார் எர்லுக்கு உதவ முன்வந்தனர். கென்மியுர் (Kenmure), நித்ஸ்டேல் (Nithssdale) என்ற பிரபுக்களின் தலைமையில் சில தாழ்நில (Low lands) ஸ்காட்லாந்திய கலகக்காரர்களும் கிளர்ச்சியில் பங்கு கொள்ள முன்வந்தனர். இரண்டாயிரம் பேர் கொண்ட அக் கூட்டுப் படையினர் மார் பிரபுவுக்கு உதவி செய்ய வடக்கு நோக்கிப் புறப்பட்டபோது, பிரஸ்டன் (Preston) என்ற இடத்தில் 1715ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் நாளில் ஆங்கிலப் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டு, சிதறியடிக்கப்பட்டனர்.

அதே நாளில் மார் பிரபு பெர்த் நகரைவிட்டு வெளியேறி, டம்ப்ளேன் (Dumblane) என்ற நகரைக் கைப்பற்றச் சென்று கொண்டிருந்த பொழுது வழியில் ஷெரிஃப்மியூர் (Sheriffmuir) என்னுமிடத்தில் ஹெனேவர் அரசகுல விசுவாசியான ஆர்கைல் கோமகனுல் தாக்கப்பட்டார். இப் போரில் எக் கட்சியினருக்கும் வெற்றி கிட்டவில்லை. ஆகவே, மேற்கொண்டு முன்னேற முடியாத நிலையில் மார் பிரபு பெர்த் நகரை நோக்கிப் பின் வாங்கினர். அதுவரை அவரைப் பின்பற்றி வந்த மலை நாட்டினர் மனமுடைந்து தங்களின் இல்லங்களுக்குத் திரும்பிவிட்டனர். இச் சமயத்தில்தான் ஜேம்ஸ் எட்வர்டு, பீடர்ஹெட் (Peterhead) என்னுமிடத்தில் வந்து இறங்கி, பெர்த் நகருக்குச் சென்று மார் பிரபோடு ஒன்று சேர்ந்தார். பின்னர் 1716ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்கோன் (Scone) என்னுமிடத்தில் அவர் இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டப்பட்டார்.

மார் பிரபுவோடு சேர்ந்து இங்கிலாந்தை நோக்கிப் படையெடுக்க ஜேம்ஸ் எட்வர்டு விரும்பினர். ஆனல் மார் பிரபு ஜேகோப்பியர்களுக்கு இனி வெற்றி எதுவும் கிடைக்காதென்று

திட்டவட்டமாகக் கூறிவிட்டார். ஒரு மாதம் அங்குமிங்கும் ஜேம்ஸ் எட்வர்டு சுற்றிப் பார்த்து விட்டு, தமக்கு இனி வெற்றி கிடைப்பது அரிது என்று உணர்ந்தார். இந்நிலையில், இங்கிலாந்தின் படை தம்மை நோக்கி வருகின்றதைக் கேள்விப்பட்டு ஜேம்ஸ் எட்வர்டு மனமுடைந்தவராக, ஃபிரான்சு நாட்டுக்குத் திரும்பி விட்டார். இதைத் தொடர்ந்து கலகத்திற்குத் தயாராக இருந்த எஞ்சிய ஒரு சில ஜேகோப்பியர்களும் சிதறிவிட்டனர். ஆங்கிலப் படைகள், பலரைத் துரத்திப் பிடித்துக் கொன்றன. கிளர்ச்சியில் பங்கு எடுத்துக்கொண்ட டெர்லெண்ட் வாட்டர், கென்மியுர் என்ற இரு முக்கியத் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களுடன் சுமார் முப்பது சாதாரணக் கிளர்ச்சிக்காரர்களும் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்பட்டனர். இங்ஙனம் முதல் ஜேகோப்பியர்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. ஜேகோப்பியர்களென்றால் கத்தோலிக்கர்களென்றும் இராசத்துரோகிகளென்றும் அதன் பின்னர் இங்கிலாந்தில் ஓர் அபிப்பிராயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஓரளவு ஆதரவு அளித்த டோரிகளும் மக்களிடையே செல்வாக்கை இழந்தனர்,

ஜேகோப்பியர்களின் கிளர்ச்சி தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, இரண்டாம் ஜேம்ஸின் மகன் ஜேம்ஸ் எட்வர்டு கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர். ஆகவே பிராடெஸ்டென்டுகளான ஆங்கிலேயர் அவர் ஆங்கில அரியணையில் அமர மனதார விரும்பவில்லை. ஆதலால் ஆங்கில மக்கள் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டாவதாக, ஜேகோப்பியர்கள் கிளர்ச்சியில் வெற்றியடைந்து, ஜேம்ஸ் எட்வர்டு ஆங்கில அரியணையில் அமர்ந்துவிட்டால் தங்களுக்கு வரவேண்டிய கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்துவிடுவார் என்று மக்கள் பயந்தனர். அதனால் முதலாம் ஜார்ஜ் அரசரே தொடர்ந்து அரசராக இருக்கட்டுமென எண்ணலாயினர். மூன்றாவதாகத் தங்கள் பணத்திற்கு எட்டு சதவிகித வட்டியை ஒழுங்காகக் கொடுத்து வரும் அரசாட்சியைக் கவிழ்க்க வியாபாரிகளும் விரும்பவில்லை. அதனால் வியாபாரிகளும் ஜேகோப்பியர்களுக்குத் தங்கள் ஆதரவையளிக்க முன்வரவில்லை.

நான்காவதாக, ஜேகோப்பியர்கள் ஃபிரான்சு நாட்டின் அரசர் பதினான்காம் லூயியின் உதவியைப் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர் 1715ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இறந்து விட்டதனால், எந்தவித உதவியும் கிடைக்கவில்லை.

ஆகவே இனி வெளிநாடுகளின் உதவியும் தங்களுக்குக் கிடைக்கா தென உணர்ந்து மனம் தளர்ந்தனர்.

ஜேகோப்பியர்களின் கிளர்ச்சியால், இங்கிலாந்தில் புதிதாகச் சில சட்டங்களை இயற்ற வேண்டிய நிலையும் ஏற்பட்டது. மேலும் இத்தகைய கிளர்ச்சிகள் ஏற்படாமல் தடுக்க 1715ஆம் ஆண்டில் கலகச் சட்டம் (The Riot Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டம் அமைதி காப்பு நடுவர்களுக்கு (Magistrates) மேலும் அதிக அதிகாரங்களை அளித்துப் பன்னிரண்டு பேருக்குமேல் கூட்டம் கூடுவது சட்ட விரோதமெனவும், அங்ஙனம் கூடுபவர்களைக் கலைந்து போகச்சொல்லி அறிவித்த பின்பும் கலைந்து போகா மலிருந்தால், மரண தண்டனை விதிக்கப்படுவரென்றும் அச் சட்டம் கூறியது.

1715ஆம் ஆண்டில் நிகழ்ந்த இக் கிளர்ச்சியால் மற்றொரு முக்கியமான பலனும் ஏற்பட்டது. அதுதான் 1716ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஏழாண்டுச் சட்டமாகும் (Septennial Act). இச் சட்டம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மூன்றாண்டிலிருந்து ஏழு ஆண்டிற்கு உயர்த்தியது. இங்கிலாந்தில் மற்றொரு ஜேகோப் பியர்களின் கிளர்ச்சி ஏற்படும் நிலைமை இருந்ததாலும், இத்தகைய சூழ்நிலையில் பொதுத் தேர்தல் நடைபெற்றால் மிகவும் அபாயகர மான நிலை உருவாகிவிடும் என்ற காரணத்தினாலும், நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறமுடியுமா என்பது பற்றி விக்குகள் ஐயமுற்றதாலும் இச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டத்தினால், தங்களின் அதிகாரத்தைத் தொடர்ந்து நடத்தவும் தங்களது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் விக்கு களுக்கு ஒரு வாய்ப்புக்கிட்டியது. இச் சட்டத்தைப் பேராசிரியர் டைசி (Prof. Dicey) போன்றோர் மிகவும் வன்மையாகக் கண்டித் தனர். 'இச் சட்டம் இயற்றியதனால் பாராளுமன்றம் ஒரு தீய சம்பிரதாயத்தை ஏற்படுத்திவிட்டது. எதிர் காலத்தில் வரும் பாராளுமன்றம் மற்றொரு சட்டத்தை இயற்றித் தம் ஆயுட்காலத்தை மேலும் நீட்டித்துக் கொள்ள வாய்ப்புள்ளது. அங்ஙனம் பாரா ளு மன்றத்தின் ஆயுட் காலம் நீட்டித்துக் கொண்டே போகுமானால், நாட்டில் பொதுத் தேர்தலே நடைபெறாது' என்று டைசி அச் சட்டத்தைப் பற்றிக் குறை கூறும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார். இருந்தபோதிலும் இச் சட்டம் 1911ஆம் ஆண்டுவரை மாற்றப் படவே இல்லை.

ஸ்டான்ஹோப்பு அமைச்சரவை

முதலாம் ஜார்ஜ் காலத்தில் ஸ்டான்ஹோப்பு (Stanhope) என்பவர் 1717ஆம் ஆண்டிலிருந்து 1721ஆம் ஆண்டு வரை

பிரதம அமைச்சராகப் பணியாற்றினர். இவர், நாட்டில் அனைவருக்கும் சமயப்பொறை வழங்க ஆதரவு அளித்தார். அதன்படி ஆன் அரசியார் காலத்தில் இயற்றப்பட்ட சிலவேளை இணக்க மசோதாவையும் (Occational Conformity Act, 1711), பிளவுச் சட்டத்தையும் (Schism Act, 1714) தள்ளுபடி செய்தார். அதனால் இணங்காதார் போன்றோரின் குறைகள் நீக்கப்பட்டன.

1719ஆம் ஆண்டில் ஸ்டான்ஹோப்பு அமைச்சரவையால் பாராளுமன்றத்தில் பிரபுத்துவ மசோதா (Peerage Bill) ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. பிரபுக்கள் சபையில் தற்பொழுதிருக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கைக்குமேல் ஆறு உறுப்பினர்களை மட்டும் அரசர் நியமிக்கலாமென்றும், அதற்குமேல் அரசர் உறுப்பினர்களை அச் சபைக்கு நியமிக்கலாகாதென்றும் அம் மசோதா கூறியது. விக்கு கட்சியே பிரபுக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியாக இடம் பெற்றிருந்தது. அக் கட்சியே நிரந்தரமாகப் பிரபுக்கள் சபையில் பெரும்பான்மையும், செல்வாக்கும் பெற்றுத் திகழ விரும்பியது. 1712ஆம் ஆண்டில் தமக்கு வேண்டியவர்களை ஆன் அரசியார் பிரபுக்கள் சபையில் உறுப்பினர்களாக நியமித்துத், தமது செல்வாக்கை அச் சபையில் பெருக்கிக் கொண்டதுபோல் மற்ற அரசர்களும் அங்ஙனம் செய்யாமல் தடுக்கவேண்டி, விக்கு கட்சியானது இம் மசோதாவைக் கொண்டு வந்தது. இம் மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. ஆனால் பொதுமக்கள் சபையில் வால்போல் (Walpole) போன்றோர் இம் மசோதாவை வன்மையாகக் கண்டித்தனர். அதன் காரணமாக இம் மசோதா பொதுமக்கள் சபையில் தோல்வியைத் தழுவியது. இம் மசோதா பொதுமக்கள் சபையில் வெற்றியடைந்திருந்தால் பிரபுத்துவம் என்பது ஒரு சிலருக்கே உரிய பரம்பரைச் சொத்தாகப் போயிருக்கும்; அரசர்கள், நற்பணியாற்றிய பெருமக்களுக்குப் பிரபுப் பட்டம் கொடுக்கும் வழக்கம் நின்று போயிருக்கும்; பிரபுக்களை நியமனம் செய்யும் அரசரது தனிச் சிறப்பதிகாரம் மாண்டுபோயிருக்கும்; விக்கு கட்சியே எப்பொழுதும் பிரபுக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்திருக்கும். அத்துடன் பல சீர்திருத்தச் சட்டங்களை இயற்ற வாய்ப்பில்லாமல் போயிருந்திருக்கக் கூடும். ஏனெனில் பிரபுக்கள் சபை வலிமை பெற்று ஆதிக்கம் செலுத்தியிருக்கும்.

இத்தகைய தவறைச் செய்த ஸ்டான்கோப்பு அமைச்சரவை மேலும் ஒரு தவறைச் செய்தது. அதுதான் தென் கடல் குமிழி (The South Sea Bubble) என்ற விபத்தாகும். 1689ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்து பல போர்களில் ஈடுபட்ட காரணத்தால்

செலவு ஏராளமாக அதிகரித்தது. அதைச் சமாளிக்க, அரசாங்கம் அவ்வப்பொழுது மக்களிடமிருந்து கடன் வாங்கியிருந்தது. அக் கடன் தொகை 1719ஆம் ஆண்டில் ஐம்பத்துநான்கு மில்லியன் பவுன்களாக உயர்ந்தது. அக் கடன்களை அரசாங்கம் உடனடியாகத் திருப்பித் தரவேண்டிய நிர்ப்பந்தமில்லாவிடினும் அவற்றுக்குரிய வட்டிகளைக் கொடுப்பது அவசியமாயிற்று. வட்டித் தொகை கொடுப்பதற்கே முடியாமல் அரசாங்கம் திணறியது. இச் சமயத்தில் தான் 'தென் கடல் கம்பெனி' எனும் ஒரு வியாபாரச் சங்கம் அரசாங்கத்திற்கு உதவி செய்ய முன்வந்தது.

தென் கடல் கம்பெனியானது 1711ஆம் ஆண்டில் ஹார்லி (Harley) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. யுட்ரெக்ட் சமாதானத்தால் இங்கிலாந்துக்குக் கிடைத்த வியாபாரத் தனிச் சிறப்புரிமையானது அக் கம்பெனிக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டது. ஸ்பானிய குடியேற்ற நாடுகளுக்கு நீக்ரோ அடிமைகளை விற்றும், ஆண்டொன்றுக்கு ஒரு கப்பல் பொருள்களை போர்ட்டோ பெல்லோ என்ற தென்அமெரிக்க துறைமுகத்துக்கு அனுப்பியும் அக்கம்பெனி ஏராளமான இலாபத்தைப் பெற்றது. மேலும், தனது செல்வாக்கை வளர்த்துக்கொள்ள அக் கம்பெனி விரும்பியது. தனக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை மேலும் அதிகமாக்கும்படி அக் கம்பெனி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. அங்ஙனம் சிறப்புரிமைகளை மேலும் அதிகமாக்கினால் அதற்குக் கைம்மாறாக ஐந்து சதவிகித வட்டியில் அரசாங்கத்திற்கு வேண்டிய கடன் அனைத்தையும் தான் தருவதாக அக் கம்பெனி வாக்கு அளித்தது. அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்களெல்லாம் தாங்கள் கொடுத்த கடன் தொகைக் கேற்ற பங்குகளை அக் கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாமென்றும் அதை விரும்பாதவர்கள் பணத்தையே பெற்றுக்கொள்ளலாமென்றும் அக் கம்பெனி அறிவித்தது. பணத்தைக் கேட்பவர்களுக்கு அதைத் திருப்பித் தருவதற்காக அக் கம்பெனி, அரசாங்கத்திடம் ஏழரை மில்லியன் பவுன்களை ஒப்படைத்தது. அரசாங்கத்திற்கு அக் கம்பெனியின் திட்டம் மிக நல்ல திட்டமாகவே காணப்பட்டது. அதனால் அரசாங்கம் அக் கம்பெனியின் திட்டத்தை ஒப்புக்கொண்டது. ஆனால், பாராளுமன்றத்தில் வால்போல் போன்றவர்கள் இத் திட்டத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் தென்கடல் கம்பெனியில் பங்குதாரர்களாகச் சேர ஆவலோடு முன்வந்தனர். அத்துடன் கம்பெனியின் நல்ல இலாபத்தில் தங்களுக்கும் பங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் மகிழ்ந்தனர். அதிக சிறப்புரிமைகளால் தனது இலாபமும் அதிகரிக்குமெனக் கம்பெனி

நம்பியது. ஆனால், நாளடைவில் அவர்களின் ஆசைகள் நிராசைகளாக மாறின.

தென்கடல் கம்பெனியின் இலாப நிலை மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது. அதில் பங்குதாரர்களாகச் சேர்ந்தால் பெரும் செல்வந்தர்களாகி விடலாமென மக்கள் நினைத்து, அதிக அளவில் பங்குகளை வாங்க முற்பட்டனர். அதன் காரணமாக அக் கம்பெனியின் பங்குகளின் மதிப்பு நாளுக்கு நாள் ஏறியது. 1720ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், நூறு பவுனாக இருந்த பங்கின் மதிப்பானது ஆயிரத்து அறுபது பவுனாக உயர்ந்தது. ஒருவித சூதாட்டப் பைத்தியம் மக்களைப் பிடித்தது. இதைக் கண்ட சிலர் அரசாங்கத்திடம் உரிமைச் சாசனம் பெறாமலேயே கம்பெனிகளை ஆரம்பித்தனர். இத்தகைய கம்பெனிகள் யாவும் சட்டத்திற்கு விரோதமாக ஆரம்பிக்கப்பட்டதாகையால், உரிமைச்சாசனம் பெற்ற தென்கடல் கம்பெனியானது அவைகளின் மீது சட்ட நடவடிக்கைகளை எடுத்தது. அதனால் பல கம்பெனிகள் மறைந்தன. அக் கம்பெனிகளின் பங்குதாரர்களெல்லாம் பெரும் நஷ்டமடைந்தனர். அதனால் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந் நெருக்கடி தென் கடல் கம்பெனியையும் பாதித்தது. மக்களிடையே ஓர் அச்சம் ஏற்பட்டுவிட்டது. அதனால் தென்கடல் கம்பெனியின் பங்குகளின் மதிப்பும் விரைவாக இறங்கியது. ஜூன் மாதத்தில் ஆயிரத்து அறுபது பவுனுக்கு விற்ற பங்கின் மதிப்புக் குறைந்து நவம்பரில் 135 பவுனுக்கே விற்கப்பட்டது. அதனால் பலர் பெரும் நஷ்டமடைந்தனர். எங்குப் பார்த்தாலும் ஒரே அமளியாயிருந்தது. எல்லோரும் அரசாங்கத்தின்மீது குறை சொல்ல ஆரம்பித்தார்கள். இதில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மீதும் கம்பெனியின் இயக்குநர்களின் மீதும் அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் வற்புறுத்தினர். அதனால் கடும் நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டது. கருவூலத் தலைவரான அய்ஸ்லபி (Aislabie) சிறையிலடைக்கப்பட்டார். தபால் துறைத்தலைவரான கிரேக்ஸ் (Craggs) என்பவர் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டார். அமைச்சர் ஸ்டான்ஹோப்பு மனமுடைந்து வலிப்பு கண்டு இறந்து போனார். கம்பெனியின் இயக்குநர்களுக்குச் சொந்தமான சொத்துகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன.[1]

அமைச்சர்கள் தென்கடல் கம்பெனியின் ஊழலில் ஈடுபட்டிருந்ததனால் ஸ்டான்ஹோப்பு அமைச்சரவை வீழ்ந்தது. வால்போல், நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்ததனால்

[1] பிரிட்டன் வரலாறு — கி. ர. அநுமந்தன்.

அச் சமயத்தில் முன்னணியில் நின்ருர். 1721ஆம் ஆண்டில் தென்கடல் கம்பெனியின் பெரும் விபத்திஞல் ஸ்டான் ஹோப்பு அமைச்சரவை கவிழ்ந்தவுடன், வால்போல் பிரதம அமைச்சராஞர். வால்போல் 21 ஆண்டுகள் இங்கிலாந்தின் பிரதமராகவே பணியாற்றி 1742ஆம் ஆண்டில் தம் பதவியை ராஜிநாமா செய்தார்.

இரண்டாம் ஜார்ஜ் (1727—1760)

முதலாம் ஜார்ஜ் அரசர் ஹெனேவர் நாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் வழியில் திடீரென இறந்துவிட்டார். அதனுல் 1727ஆம் ஆண்டில் அவருடைய மகன் இரண்டாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டப்பட்டார். இரண்டாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தபொழுது அவருக்கு வயது நாற்பதாகும். இரண்டாம் ஜார்ஜ் ஒரு திறமையான போர்வீரர். போர்க் களத்தில் காட்டிய தைரியத்தை அரசியலில் அவரால் காட்ட முடியவில்லை. அரசியலில் ஒரு கோழையாகவே காணப்பட்டார். ஆனுல் அவருடைய மனைவியான கரோலின் (Caroline) அரசியல் அறிவும், அரசியலில் பற்றும் பெற்று விளங்கினுர். இரண்டாம் ஜார்ஜ் அத்தகைய தம் மனைவியிடம் அளவுக்கு மீறிய பற்றும், பாசமும், அன்பும் வைத்திருந்தார். அதனுல் மனைவியின் சொற்களுக்கு அவர் பெருமதிப்பு அளித்தார். தம் மனைவியின் விருப்பத்திற்கிணங்கியே அவர் வால்போலைத் தொடர்ந்து பிரதம அமைச்சராக வைத்துக் கொண்டார். இரண்டாம் ஜார்ஜ் ஆட்சிக் காலத்து அரசியல் கலத்தைச் சிறப்புடன் செலுத்திய மாலுமிகளுள் சர் ராபர்ட் வால்போல், மூத்த பிட் என்ற இருபெரும் அரசியல் நிபுணர்களும் சிறந்தவர்களாவர்.

சர் ராபர்ட் வால்போல்

1769ஆம் ஆண்டு நார்ஃபோக் (Norfolk) மாகாணத்துப் பெருநிலக்கிழார் குடும்பத்தில் ராபர்ட் வால்போல் பிறந்தார். அவர் கேம்பிரிட்ஜின் ஈடன் (Eton) கல்லூரியில் நற்கல்வியைப் பெற்ருர். தம் தந்தையும், தம் மூத்த இரண்டு சகோதரர்களும் இறந்தவுடன் குடும்பத்தின் பூர்வீகச் சொத்துகளுக்கு உரியவராஞர்.

வால்போல் பார்வைக்குக் கம்பீரமான தோற்றமுடையவர். வேட்டையாடுவதிலும், திறந்தவெளியில் விளையாடுவதிலும் அவருக்கு வேட்கை அதிகம். உரத்த குரலும், சிரித்த முகமும்,

பருத்த உடலும் கொண்ட ராபர்ட் வால்போல் மனித இயல்பைப் பற்றி மிக மட்டமான கருத்தைக் கொண்டிருந்தார். உயர்ந்த ஒழுக்கத்தில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. பணத்தினலும், பதவியாலும், ஆடம்பரத்தாலும் எதையும் சாதிக்கலாமென நினைத்தாரே தவிர இலட்சியங்களைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. ஆயினும் நாட்டின் நல்வாழ்வில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

ராபர்ட் வால்போல் தமது 25ஆவது வயதில் விக்கு கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தின் உறுப்பினரானார். தமது பேச்சாற்றல் மூலம் அவர் பாராளுமன்றத்தில் நற்பெயர் பெற்றார். 1708ஆம் ஆண்டில் மார்ல்பரோ பிரபு அமைச்சரவையில் போர் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது ஆழ்ந்த கட்சிப் பற்றினைக் கண்டு பொறாமை கொண்ட டோரிகள், வால்போலை ஒழித்துக்கட்ட முயன்று வந்தனர். 1710ஆம் ஆண்டில் விக்கு கட்சி பதவியிழந்தபோது வால்போலின்மீது பொய்க்குற்றம் சாட்டிப் பொது மக்கள் சபையிலிருந்து விலக்கிச் சிறையிலடைத்தனர். ஆனால் பின்பு, அக்குற்றங்கள் பொய்யென நிரூபிக்கப்பட்டதால் விடுதலை செய்யப்பட்டார்.

முதலாம் ஜார்ஜ் ஆங்கில அரியணையில் அமர்ந்ததும் விக்கு கட்சியினர் செல்வாக்குப் பெற்றதால், ராபர்ட் வால்போல் மீண்டும் நன்மதிப்பைப் பெற்றார். உடனே செல்ஸா மருத்துவமனையின் (Chelsa Hospital) சம்பளப் பட்டுவாடா அதிகாரியாக (Pay Master) நியமிக்கப்பட்டார். விரைவிலேயே அவர் சம்பளப் பட்டுவாடாத் தலைமை அதிகாரியாக (Pay Master General) நியமனம் பெற்றார். பின்னர் 1715ஆம் ஆண்டில் கருவூல முதற் பிரபுவாக (First Lord of the Treasury) நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னர் ஸ்டான்ஹோப்பு அமைச்சரவையில் கருவூலத் தலைவராக (Chancellor of Exchequer) அமர்த்தப்பட்டார். தென்கடல் கம்பெனி என்ற வியாபார நிறுவனம் ஸ்டான்ஹோப் அரசாங்கத்தை நம்பவைத்து, நாட்டுக் கடனைத் தான் தீர்ப்பதாகச் சொன்னபோது அக் கம்பெனியின் நிலையை நன்குணர்ந்த ராபர்ட் வால்போல் அத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைச்சரவையிலிருந்து 1719ஆம் ஆண்டில் விலகினார். ராபர்ட் வால்போல் அச் சமயம் தெரிவித்ததைப் போலவே அக் கம்பெனி பின்னர் திவாலாகியது. கம்பெனியில் பங்குகளை வாங்கியிருந்த மக்கள் நஷ்டமடைந்தனர். நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகவே அக் கம்பெனி, அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்க முன்வந்த மோசடி, மக்களுக்குத் தெரியவந்தது. அதனல் மக்கள் அரசாங்கத்திற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் காரணமாக ஸ்டான்ஹோப்பு,

அமைச்சரவைக் கவிழ்ந்தது. முன்பு அத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டுமக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த ராபர்ட்வால் போல் 1721 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் தலைவரானார்.

ஆங்கிலம் தெரிந்திராத முதலாம் ஜார்ஜ், காபினெட் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாததால் ராபர்ட் வால்போலிடமே எல்லா அதிகாரங்களையும் அளித்திருக்க, அதைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு ஏறக்குறைய பிரதம அமைச்சரைப்போன்றே அவர் நடந்துகொண்டார். முதலாம் ஜார்ஜ் இறந்தவுடன் ஆங்கில மகுடம் சூட்டப்பட்ட இரண்டாம் ஜார்ஜ் காலத்திலும் தொடர்ந்து 1742 ஆம் ஆண்டு வரை அமைச்சரவையின் தலைவராகவே ராபர்ட் வால்போல் பணியாற்றினார்.

வால்போலும் கேபினெட் வளர்ச்சியும்

ராபர்ட் வால்போலின் பதவிக் காலத்தில்தான் பிரதம அமைச்சர் பதவியே ஏற்பட்டதெனக் கூறலாம், ராபர்ட் வால்போலை இங்கிலாந்தின் முதல் பிரதம அமைச்சர் என்று பெயர் சூட்டி அழைத்தால் அதில் தவறில்லை. இப் பதவியின் வளர்ச்சி சில சூழ்நிலைகளால் ஏற்பட்டதாகும். அமைச்சரவையின் கூட்டங்களுக்கு அரசர்கள்தான் தலைமை தாங்கி வந்தனர். ஆங்கில மொழியையும், ஆங்கில அரசியலையும் அறியாத முதலாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்ததால், அமைச்சரவைக் கூட்டங்களில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. முதலாம் ஜார்ஜுக்கு ஆங்கில மொழி தெரியாத காரணத்தினால் அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதைத் தவிர்த்தார். அவருக்கு ராபர்ட் வால்போலின்மீது முழு நம்பிக்கையிருந்ததால், ராபர்ட் வால்போலையே அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். அதனால் ராபர்ட் வால்போலே அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி வந்தார். அத்துடன் அவர் அமைச்சரவைக் கூட்டங்களில் நடந்தவைகளை அரசருக்கும் தெரிவித்து வந்தார்.

அமைச்சரவைக் கூட்டங்களில் அரசர் கலந்து கொள்ளாதது கேபினெட் முறை வளர்ச்சிக்கு முதல் படியாயமைந்தது. ராபர்ட் வால்போல் அன்றிலிருந்து அமைச்சர்களின் தலைவராகக் கருதப்பட்டார். நாட்டின் கொள்கைக்கும் தமது கொள்கைக்கும் ஒருமித்த ஆதரவு தருபவர்களையே அமைச்சர்களாக நியமிக்க அவர் முயற்சி செய்தார். தமது கொள்கையை ஏற்காத அமைச்சர்களைக் கட்டாயப்படுத்தி ராஜிநாமா செய்ய வைத்தார். ஆகவே,

அவர் காலத்தில்தான் முதன் முதலில் அமைச்சர் குழுவின் ஒரினத் தன்மைக் கொள்கை(Principle of Homogeneity) நிரூபிக்கப் பட்டது. அத்துடன் 1742 ஆம் ஆண்டில் பொதுமக்கள் சபையில் அவருடைய ஒரு சாதாரணக் கொள்கை தோற்றதனுல் தம் பதவியை ராஜிநாமா செய்தார். அதனுல் பொதுமக்கள் சபைக்கு அமைச்சரவைப் பொறுப்பானது என்ற கொள்கையை நிலைநிறுத்தினுர்.

வால்போலின் உள்நாட்டுக் கொள்கை

நாட்டின் பழைய நிறுவனங்களை முடிந்தவரை மாற்றக் கூடாதென ராபர்ட் வால்போல் நினைத்தார். ஆனுல் அவசியம் ஏற்படும்போது சீர்திருத்தங்களைக் கொண்டுவரவும் அவர் தயங்கியதில்லை. மத ஏற்பாடுகளில் அவர் நிடுநிலை வகிப்பதை விரும்பினுர். இணங்காதாருக்குத் துணிந்து நன்மை செய்ய அவர் முன்வரவில்லை. ஆனுல், அதே சமயத்தில் அவர்களுக்கு உதவி செய்யவும் அவர் விரும்பினுர். நாட்டில் எதிர்ப்புக் குரல்கள் எழும் என்ற அச்சத்தால் சோதனைச் சட்டத்தையும் (The Test Act), மாநகராட்சிச் சட்டத்தையும் (The Corporation Act) இணங் காதார் நன்மையைக் கருதித் தள்ளுபடிசெய்ய அவர் முன்வர வில்லை. இருந்தபோதிலும், 1727ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் உத்தரவாதமளிப்புச் சட்டத்தை (Act of Indemnity) இயற்றி சோதனைச் சட்டத்திலிருந்தும், மாநகராட்சிச் சட்டத் திலிருந்தும் இணங்காதார்களுக்கு விலக்கு அளித்து வந்தார். ஆகவே, இணங்காதார் சமயத்துறையில் ஓரளவு சுதந்திரம் பெற்றனர். இணங்காதார்களுக்குப் பதவிகளைக் கொடுத்து உத்தர வாதமளித்த அச் சட்டம் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு வந்ததால் அதை எவரும் நிரந்தர ஏற்பாடு என எண்ணி எதிர்க்க முடியாதபடி வால்போல் சமாளித்தார். இங்ஙனம் வால்போல் தமக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்வதில் கூட எதிர்ப்பில் லாமல் பார்த்துக் கொண்டார். தமது விட்டுக் கொடுக்கும் தன்மையினுல் போர்ட்டியஸ் (Portious) எனும் காவலர் தலைவர் கொலையை யொட்டி ஸ்காட்லாந்தில் ஏற்படவிருந்த கலகத்தைத் தடுத்தார். தாம் கடமையைச் செய்யும்போது போர்ட்டியஸ் எனும் காவலர்தலைவர் இரு குற்றவாளிகளைச் சுட்டுக் கொல்ல நேர்ந்தது. அதற்கு அவருக்கு எடின்பர்க் நீதிமன்றத்தினுல் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தபோதிலும், அரசரின் கருணை பெற்று விடுதலை செய்யப்படும் தறுவாயில் எடின்பர்க் நகர மக்கள் அவரைப் பிடித்துத் தூக்கிலிட்டுக் கொன்றனர். அந் நகர மக்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டு

மென்று பாராளுமன்றத்தில் வற்புறுத்தப்பட்டது. இருந்தபோதிலும் அங்ஙனம் செய்யாது 2000 பவுன்களை அம் மக்கள் மீது கூட்டு அபராதமாக விதித்து, அத் தொகையைப் போர்ட்டியஸ் மனைவிக்கு நஷ்டஈடாக அளிக்க ராபர்ட் வால்போல் ஏற்பாடு செய்தார். இங்ஙனம் 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்பதற்கேற்ப மக்களின் எதிர்ப்புகளுக்கு மதிப்புக் கொடுத்தார். தம் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் எந்தவொரு காரியத்தையும் வால்போல் செய்து வந்தார்.

பொருளாதாரத் துறையில் ராபர்ட் வால்போல் கடைப்பிடித்த கொள்கை சிறப்புக்குரியதாகும். 'தென்கடல்குமிழி' விபத்தையொட்டி ஏராளமான பங்குதாரர்கள் நஷ்டம் அடைந்தபோது. அக் கம்பெனியின் உரிமையாளர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து, முடிந்தவரை எல்லோருக்கும் நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்க வால்போல் ஏற்பாடு செய்தார். ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அரசாங்க வருமானத்திலின்றும் தனியாகப் பிரித்து, அத் தொகையைக் குறிப்பிட்ட அளவுக்கு உயர்த்தி நாட்டுக் கடனை (National Debt) தீர்க்கக், கடன் கழிவு நிதியையும் (Sinking Fund) வால்போல் ஏற்படுத்தினர்.

வியாபாரத் துறையிலும் வால்போல் நாட்டின் நலனை மனத்திற் கொண்டு பல பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை நீக்கியும், குறைத்தும் வர்த்தக வளர்ச்சிக்கு வகை செய்தார். 1733ஆம் ஆண்டு வரி ஏய்ப்பைத் தடுக்கவும், கள்ளக்கடத்தலை ஒழிக்கவும் கலால் வரியைக் (Excise Duty) கொண்டுவந்தார். வால்போல் கொண்டுவந்த இத் திட்டத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாத மக்கள் கண்டனக் குரலை எழுப்பினர். எதிர்ப்புக்கிடையில் எதையும் செய்ய விரும்பாத வால்போல் அத் திட்டத்தைக் கைவிட்டார். அதேபோல் இன்னொரு சந்தர்ப்பத்திலும் வால்போல் மக்களின் எதிர்ப்புக்குப் பணிய வேண்டியிருந்தது. 1724ஆம் ஆண்டில் நாட்டின் நாணயப் பற்றுக் குறையைப் போக்கப் புதிய செப்பு அரைப் பென்னி நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டபோது, அந் நாணயங்கள் இலேசாக இருப்பதாக மக்கள் கண்டனம் தெரிவித்தனர். உடனே புதிய நாணய முறையை வால்போல் கைவிட்டார்.

வால்போலின் குடியேற்ற நாட்டுக் கொள்கை

குடியேற்ற நாட்டுக் கொள்கையில் வால்போல் தலையிடாக் கொள்கையையே பின்பற்றினர். தம் அமைச்சரவையில் குடியேற்ற நாடுகளின் விவகாரங்களைக் கவனித்துவந்த நியூகாசல் கோமகன்

(Duke of New Castle) குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் தபால்களைப் பிரித்துப் பார்க்காததனால், அக் குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கும் வினாவே எழவில்லை. வால்போலுக்கு உள் நாட்டிலேயே எதிர்ப்பு இருந்ததால், குடியேற்ற நாடுகளின் எதிர்ப்பையும் சேர்த்துக் கொள்ள விரும்பாமல் அவைகளின் பிரச்சினைகளில் தலையிடாமல் இருந்தார். குடியேற்ற நாடுகளில் ஆளுநர்களுக்கும் (Governors), நீதிபதிகளுக்கும் (Judges) சம்பளம் கொடுப்பதில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. வால்போல் அப் பிரச்னைகளில் தலையிட விரும்பாமல் 'குடியேற்ற நாடுகள் என்ன கொடுக்க விரும்புகின்றனவோ, அவற்றை ஏற்றுக்கொண்டு பிரச்சினையைத் தவிருங்கள்' என்று 1729ஆம் ஆண்டில் ஆளுநர்களுக்குக் கட்டளையிட்டார்.

குடியேற்ற நாடுகளில் நாவாய்ச் சட்டங்களையும் கண்டிப்பாக அவர் அமல் நடத்தவில்லை. கள்ளக் கடத்தலையும் அவர் கண்டு கொள்ளவில்லை. 1730ஆம் ஆண்டில் ஜார்ஜியாவிலிருந்து (Georgia) நேரிடையாக அரிசியையும் சர்க்கரையையும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யவும் அனுமதியளித்தார். ஆயினும், 1733ஆம் ஆண்டில் வாணிபத்தைப் பெருக்கவும், குடியேற்ற நாடுகளைத் திருப்தி செய்யும் பொருட்டும் 'வெல்லப்பாகுச் சட்டத்தை' (Molasses Act) அவர் கொண்டுவந்தார். அதன்படி ஃபிரெஞ்சு மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து வெல்லம் இறக்குமதி செய்யாது பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து அமெரிக்கர்கள் வெல்லத்தை இறக்குமதி செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர்.

வால்போலின் வெளிநாட்டுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ராபர்ட் வால்போல் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பினார். வெளிநாட்டுப் போர்களினின்றும் இங்கிலாந்தைத் தப்பவைக்க வேண்டுமென்பதே அவரின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. முக்கியமாக ஃபிரெஞ்சு நாட்டுடன் நல்லுறவை வளர்க்க வால்போல் அரும்பாடுபட்டார். ஃபிரெஞ்சு நாட்டின் அரசரான பதினைந்தாம் லூயியின் பாதுகாப்பாளர் ஆர்லியன்ஸ் கோமகனும் இங்கிலாந்தின் நட்பை விரும்பவே, இரு நாடுகளுக்கு மிடையே நட்பு வளர்ந்தது. அத்துடன் வால்போல் பிரஷ்யாவின் அரசரோடும் நட்பை வளர்த்து வந்தார். 1725ஆம் ஆண்டில் வால்போல் ஃபிரான்சுடனும், பிரஷ்யாவுடனும் ஹெனோவர் உடன்படிக்கை (Treaty of Hunover) செய்து கொண்டு நட்பை மேலும் வலுவாக்கினார். போலந்து நாட்டு

அரசர் இரண்டாம் அகஸ்டஸ் 1733ஆம் ஆண்டில் இறந்ததைத் தொடர்ந்து அங்கு வாரிசு உரிமைப் போர் ஏற்பட்டது. அப் போரில் மற்ற ஐரோப்பிய நாடுகள் கலந்து கொண்டிருந்தும், வால் போல் தம் நாட்டை அதில் ஈடுபடுத்த மறுத்து விட்டார். அச் சமயத்தில்தான் ஐம்பதாயிரம் போர் வீரர்கள் இந்த ஆண்டில் ஐரோப்பாவில் கொல்லப்பட்டிருக்க, அதில் ஓர் ஆங்கில வீரரும் இறக்கவில்லை என்று பெருமையாக வால்போல் தம் அரசியாரிடம் சொல்லிக் கொண்டார். ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக அமைதியான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த வால்போலுக்கு 1739ஆம் ஆண்டில் ஒரு சோதனை வந்தது. அதுவே ஜென்கின்ஸ் காது சண்டை (Jenken's Ear War) என அழைக்கப்பட்ட போராகும்.

1713ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசியண்டோ உடன்படிக் கைக்குப் புறம்பாகப் பல ஆங்கிலக் கப்பல்கள் ஸ்பானிய அமெரிக்கா வுடன் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. அங்ஙனம் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஜென்கின்ஸ் (Jenkins) என்ற ஓர் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவரை, ஸ்பானியர்கள் பிடித்துக் காதை அறுத்துவிட்டனர். தமது அறுபட்ட காதுடன் இங்கிலாந் துக்கு வந்து சேர்ந்த ஜென்கின்ஸ் ஸ்பெயின் நாட்டின்மீது இங்கி லாந்து போர் தொடுக்க வேண்டுமென்று சொல்லிவந்தார். அவரின் அறுபட்ட காது ஒரு பெட்டியில் வைத்துப் பாராளுமன்றத்தில் காண்பிக்கப்பட்டது. உடனே பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சிவயப்பட்டு ஸ்பெயின்மீது உடனடியாக இங்கிலாந்து போர் தொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். சமாதான முறையில் ஸ்பெயின் நாட்டிட மிருந்து நஷ்டஈடு பெறலாம் என்று வால்போல் கூறியது போர்வெறி கொண்ட பாராளுமன்ற உறுப் பினர்களிடையே சிறிதும் எடுபடவில்லை. நாட்டில் ஸ்பானிய எதிர்ப்புணர்ச்சி வெகு வேகமாகவும் பரவியது. வேறு வழியின்றி வால்போல் 1739ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் மீது போரை அறிவித்தார். போர்ப் பிரகடன அறிவிப்பைத் தெரிவிக்க லண்டன் நகர மணிகள் ஒலித்தபோது 'மணியடிக்கும் கைகளுக்கு விரைவில் நடுக்கம் ஏற்படும்' என்று வால்போல் வேதனையுடன் குறிப்பிட்டார். பிற்காலத்தில் அவரது வாக்குப் பலித்ததை நாம் காணலாம். ஸ்பெயின் நாட்டுடன் நடைபெற்ற அப் போர் சரிவர நடைபெற வில்லை. போரைச் சரிவர நடத்தவில்லை என்ற குறையை வால்போல் மீது பாராளுமன்றம் சுமத்தியது. 1741ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலின்போது வால்போல் இதற்காக வன்மை யாகக் கண்டிக்கப்பட்டார். இருந்தபோதிலும் தேர்தலில் பெரும் பான்மையுடன் வெற்றி பெற்றார். பின்னர் 1742ஆம் ஆண்டில்

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையோரின் நம்பிக்கையை யிழந்த வால்போல் தேர்தலை நடத்த சிபார்சு செய்யாமல் தம் பதவியை ராஜிநாமா செய்தார்.

ராபர்ட் வால்போல் தமது பதவியை ராஜிநாமா செய்த உடனே கார்ட்டரெட் பிரபு (Lord Carteret) பிரதம அமைச்சராக நியமிக்கப் பட்டார். கார்ட்டரெட் பிரபு இரண்டாம் ஜார்ஜ் அரசரின் வெளி நாட்டுக் கொள்கையை மிகவும் ஆதரித்தார். அத்துடன் அவர் வெளிநாட்டுக் கொள்கையிலேயே ஆழ்ந்த பற்றுதல் கொண் டிருந்தார். அவர் தம் சிந்தனையை யெல்லாம் வெளிநாட்டுக் கொள்கையிலேயே கொண்டிருந்ததனால் உள்நாட்டுப் பிரச்சினை களைப் பற்றிக் கவலைப்படவில்லை. கார்ட்டரெட் பிரபு காலத்தில் தான் இங்கிலாந்து ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் (The War of Austrian Succession) பங்கெடுத்துக் கொண்டது. 1744ஆம் ஆண்டில் அவர் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

கார்ட்டரெட் பிரபு தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தவுடனே பெல்ஹாம் (Pelham) பிரதம அமைச்சராக நியமிக்கப் பட்டார். அவர் 1744ஆம் ஆண்டிலிருந்து 1753 ஆம் ஆண்டு வரை பிரதம அமைச்சராகப் பணியாற்றினர். அவரும் வால் போலைப் போலவே திடீர் மாறுதல்களை விரும்பாதவர். அவர் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரையும் பண்போடும் கண்ணியத் தோடும் நடத்தினர். அவருடைய காலத்திலும் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. குறிப்பாக ஆங்கிலக் காலண்டரில் (English Calender) ஒரு மகத்தான சீர்திருத்தம் கொண்டுவரப் பட்டது, ஜூலியஸ் சீசரால் (Julius Caesar) அறிமுகப்படுத்தப்பட்ட பழைய ஜூலியன் காலண்டருக்குப் பதிலாக 1582ஆம் ஆண்டில் பதின்மூன்றும் போப் கிரிகோரியால் (Pope Gregory XIII) அறிமுகப்படுத்தப் பட்ட கிரிகோரியன் காலண்டர் அமலுக்குக் கொண்டுவரப் பட்டது.

பெல்ஹாம் காலத்தில் ஏற்பட்ட மற்ருெரு மாற்றம் நாட்டுக் கடனுக்குக் கொடுக்கப்பட்டு வந்த வட்டி விகிதத்தைக் குறைத்த தாகும். நாட்டுக் கடனுக்குக் கொடுக்கப்பட்டு வந்த வட்டி விகிதம் 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

1753ஆம் ஆண்டில் பெல்ஹாம் அமைச்சரவை, தகாத முறையில் நிகழும் திருமணங்களைத் தடுக்க ஒரு சட்டம் கொணர்ந்தது. அது ஹார்டுவிக் மணவினைச் சட்டம் (Hardwick's Marriage Act) எனப் பெயர் பெறும். அதன்படி பெண்களை வாலிபர்கள் அபகரித்துச் சென்று, இரகசியமாகத் திருமணம் செய்து

கொள்வது தடுக்கப்பட்டது. பின்னர் 1754 ஆம் ஆண்டில் பெல்ஹாம் இறந்து விடவே, அவருடன் பிறந்தவரும் விக்கு கட்சியின் பெரும் புள்ளியுமான நியூகாசில் பிரபு (Duke of New Castle) பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் பெல்ஹாமைப் போல் அவ்வளவு அறிவும் ஆற்றலும் பெற்றிருக்கவில்லை. 1756ஆம் ஆண்டில் ஏழாண்டுப் போர் (Seven Years' War) ஏற்பட்டபோது அவருடைய திறமையின்மை நன்கு வெளிப்பட்டது. அதனால் அவர் அவ் வாண்டு விலகிக் கொண்டார். பின்னர் டெவன்ஷயர் கோமகன் (Duke of Devonshire) தலைமையில் அமைச்சரவை அமைக்கப்பட்டது. பிட் (Pitt) என்பாரும் அவ் வமைச்சரவையில் இடம் பெற்றார். நியூகாசில் பிரபு பாராளுமன்றத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்ததால். அமைச்சர்கள் கோரிய மானியங்களைப் பாராளுமன்றம் கொடா வண்ணம் தடைசெய்து வந்தார். தாமும் அதிகாரத்தைச் செலுத்தாது மற்றவர்களையும் அதைச் செலுத்த விடாது நியூகாசில் பிரபு முட்டுக்கட்டை போட்டு வந்தார். கடைசியாக நியூகாசில் பிரபுவும் பிட்டும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி நியூகாசில் பிரபு மீண்டும் 1757ஆம் ஆண்டில் பிரதமரானார். பிட் உள்நாட்டு அமைச்சரானார். ஏழாண்டுப் போரை வெற்றிகரமாகச் சமாளிப்பதில் பிட் ஓயாது பாடுபட்டார். நியூகாசில்—பிட் கூட்டு முயற்சியால் போரில் நல்ல வெற்றி கிட்டியது.

போரில் வெற்றிகள் பெற்ற இங்கிலாந்தின் புகழ் ஓங்கி நின்றது. அச் சமயத்தில்தான் இரண்டாம் ஜார்ஜ் இறந்தார். அவருடைய மகனை மூன்றாம் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசரானார். விக்குகளின் ஆட்சியை ஒழிக்கத் திட்டமிட்டுச் செயல்பட்ட அந்த அரசர் முதற் கண் பிட்டைப் பதவியிலிருந்து 1761ஆம் ஆண்டில் நீக்கினார் பின்னர் 1762ஆம் ஆண்டில் நியூகாசில் பிரபுவும் பதவியை ராஜிநாமா செய்தார். இங்ஙனம் மூன்றாம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தவுடன் விக்குகளின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. டோரிகள் மீண்டும் பதவிக்கு வந்தார்கள்.

ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (1740—1756)

ஆஸ்திரியப் பேரரசரான ஆறாம் சார்லஸுக்கு ஆண் மகவு அல்லது சகோதரர் ஒருவருமில்லை. அவருக்கு இரண்டு பெண் மகவுகள் மட்டும் இருந்தனர். அதனால் தமக்குப்பின் யார் பட்டத்துக்கு வருவதென்பதுபற்றி மிகவும் கவலை கொண்டார். எனினும் ஆஸ்திரியப் பட்ட உரிமையானது. ஹாப்ஸ்பர்க் குலத்துக்கே (Habsburg family) சேரவேண்டுமென்பதில் அவர் மிகவும்

அக்கறை கொண்டார். எனவே 1724 ஆம் ஆண்டில் பேரரசரின் தனிக்கட்டளை (Pragmatic Sanction) என்ற ஒரு பத்திரத்தில் தமக்குப் பின் தம் மகளான மரியா தெரிஸாவுக்கே (Maria Theresa) பட்டம் உரியதாகுமென அவர் அறிவித்தார். அதன் பின்னர் இத்தகைய தம் அறிவிப்பை ஏற்றுக் கொள்ளும்படி அவர் பல ஐரோப்பிய நாடுகளைக் கேட்டுக்கொண்டார். பிரான்சு நாட்டைத் திருப்திப் படுத்த வேண்டி லொரையின் (Lorraine) பகுதியை அவர் அந் நாட்டிற்குக் கொடுத்தார். இங்கிலாந்து நாட்டைத் திருப்திப்படுத்த வேண்டி, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் போட்டியாகச் செயல்பட்டுவந்த தமது நாட்டு ஆஸ்டெண்டு கம்பெனியை (Ostend Company) அவர் கலைத்தார். இங்ஙனம் தம் மரபினரே ஆஸ்திரிய அரியணையில் அமர வேண்டுமென்பதற்காக அவர் நெதர்லாண்டினுடைய வாணிக நலனையே தியாகம் செய்தார். அவருடைய முயற்சியால் பவேரியா நாட்டுத் தேர்வாளரைத் (Elector of Bavaria) தவிர, மற்ற ஐரோப்பிய அரசர்களெல்லாரும் தனிக் கட்டளையை ஏற்றுக் கொண்டனர். எனவே ஸ்பெயினில் வாரிசுரிமைப் போர் தோன்றியதைப் போன்று, தாம் இறந்த பிறகு இங்கு ஒரு வாரிசுரிமைப் போர் தோன்ருது என்று ஆரும் சார்லஸ் மன நிறைவு அடைந்தார். அத்தகைய மனநிறைவுடனும் அமைதியுடனும் ஆரும் சார்லஸ் 1740ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

ஆரும் சார்லஸ் இறந்தவுடனே, அவருடைய மகளான மரியா தெரிஸா எந்தவித எதிர்ப்புமின்றி அரியணையில் அமர்ந்தார். பிரஷ்யா நாட்டு அரசரான இரண்டாம் பிரடரிக் (Frederick II) 'எந்தவிதத் தொல்லைகள் வந்தாலும் எமது உதவி உங்களுக்கு உண்டு' என்று மரியா தெரிஸாவுக்கு வாக்களித்தார். ஆனுல் வாக்களித்த ஒரு மாதத்திற்குள்ளேயே தமது மனத்தை அவர் மாற்றிக் கொண்டு ஆஸ்திரியாவைச் சேர்ந்த சைலீஷியா (Silesia) மாகாணம் தமக்குச் சேர வேண்டுமென்று உரிமை கொண்டாடினுர். 'பேரரசரின் தனிக்கட்டளையை' ஒப்புக் கொண்டவர்களில் அவரும் ஒருவர். ஆனுல் பேரரசர் இறந்தவுடன் அவரின் தனிக் கட்டளையை ஒப்புக் கொண்ட பலர் பருந்துகள் போல் ஆஸ்திரியப் பேரரசின் மீது பாய்ந்தனர். அங்ஙனம் பாய்ந்தவர்களில் முதன்மையானவர் பிரஷ்யா நாட்டு அரசரான இரண்டாம் பிரடரிக் ஆவார்.

பிரஷ்யாவின் அரசரான இரண்டாம் பிரடரிக் எந்தவொரு பேச்சு வார்த்தைக்கும் இடம் தராமல், தம் படையைக் கொண்டு சைலீஷியாவைக் கைப்பற்றினுர். பிரஷ்யாவின் இச் செயலைக்

கண்டு மற்றவர்களுக்கும் ஆசை ஏற்பட்டது. ஃபிரான்சு நெதர் லாந்தை அடைய விரும்பியது. ஐந்தாம் பிலிப் மிலானைப் பயமுறுத் தினர். பவேரியத் தேர்வாளர் பொஹிமியா மீது படையெடுத்தார். இச் சமயத்தில் இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் ஜார்ஜ் ஹெனேவர் நாட்டுப் பாதுகாப்புக்குக் கெடுதல் ஏற்படுமோ என்று கவலைப்பட்டதால், இங்கிலாந்து மரியா தெரிஸாவுக்கு உதவி செய்ய முன் வந்தது. ஆகவே ஆஸ்திரியாவும் இங்கிலாந்தும் ஒரு தரப்பிலும், பிரஷ்யா, பிரான்சு, பவேரியா போன்ற நாடுகள் ஒரு தரப்பிலும் நின்று போரிட்டன.

ஆங்கிலப் படையும் ஃபிரெஞ்சுப் படையும் போரில் கை கலந்தன. ஆங்கிலப் படையை இரண்டாம் ஜார்ஜ் அரசரே தலைமை தாங்கி நடத்தினர். 1743ஆம் ஆண்டில் அவர் டெட்டிஞ்சன் (Dettigen) என்னும் போர்க்களத்தில் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தார். அதன் பிறகு இங்கிலாந்தும், ஃபிரான்சும் ஒன்றையொன்று எதிரியாகக் கருதி உலகின் பல பாகங்களிலும் போரிட ஆரம்பித்தன. 1745ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுப் படைகள் ஆங்கிலப் படைகளை ஃபான்டிநாய் (Fontenoy) என்னுமிடத்தில் தோற்கடித்தன. இந்தியாவில் ஃபிரெஞ்சுக் கவர்னராயிருந்த ட்யூப்ளே (Dupleix) ஆங்கிலேய ருக்குச் சொந்தமான மதராஸ் நகரை 1746ஆம் ஆண்டில் கைப் பற்றினர்.

ஐரோப்பாவில் பிரடரிக் 1744ஆம் ஆண்டில் பொஹிமி யாவைத் தாக்கினர். ஆனல் அவருக்கு அங்கு தோல்வியே ஏற்பட்டது. 1745ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஜேகோப்பியர் களின் கிளர்ச்சி மீண்டும் ஏற்பட்டதால் ஆங்கிலப்படைகள் பெருமளவில் நாட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. அதனல் இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் பிரஷ்யாவோடு சமாதானம் செய்து கொண்டன. அதன்படி சைலீஷியாவை பிரடரிக் பெற்ருர் அத்துடன் அவர் மரியா தெரிஸாவின் கணவரான பிரான்ஸிஸ் என்பவரைப் பேரரசராகவும் ஒப்புக் கொண்டார்.

ஆஸ்திரிய உரிமைப் போர் 1748ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடந்து வந்தது. ஆனல் இறுதியில் ஆங்கிலேயர் அப் போரில் அதிக அக்கறை காட்டவில்லை. அப்பொழுது இங்கி லாந்தின் பிரதமராயிருந்த பெல்ஹாம் அமைதியையே விரும்பினர். அத்துடன் மரியா தெரிஸாவும் தம் படையைப் பலப்படுத்தினு லொழிய சைலீஷியாவைக் கைப்பற்ற முடியாது என்று எண்ணி, போரை நிறுத்த ஒத்துக் கொண்டார். அதன்படி 1748ஆம்

ஆண்டில் எய்க்-ஸ்லா-சேப்பெல் (Aix-la-Chapelle) எனுமிடத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு போர் நிறுத்தப்பட்டது.

அவ் வுடன்படிக்கைப்படி, ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் அவரவர் போரில் இழந்த நாடுகளைத் திரும்பப் பெற்றனர். மரியா தெரிஸாவின் வாரிசுரிமை அங்கீகரிக்கப்பட்டது. ஃபிரான்சு நாடும் ஆங்கில அரியணையில் அமர எட்வர்ட் ஜேம்ஸுக்கு உதவுவதில்லையென்றும், ஹெனோவரின் வாரிசு உரிமையை அங்கீகரிப்பதாகவும் ஒப்புக் கொண்டது.

ஜேகோப்பியர்களின் கிளர்ச்சி (1745)

1715ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் ஜேகோப்பியர்களின் கிளர்ச்சி தோல்வியைத் தழுவிய போதிலும் தாம் எப்படியும் இங்கிலாந்தின் அரசராகி விடலாமென்ற நம்பிக்கையை மட்டும் எட்வர்டு ஜேம்ஸ் இழக்கவில்லை. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் இங்கிலாந்தும் ஃபிரான்சும் எதிர் நாடுகளாகப் போரிட்டுவந்த சமயத்தில், ஜேம்ஸ் எட்வர்டு மீண்டும் தம் நப்பாசையைச் செயலாக்க நினைத்தார். அதற்காக இம் முறையும் அவர் ஸ்காட்லாந்தியர்களையே நம்பினார். தமக்கு ஆதரவாக ஸ்காட்லாந்திய மக்கள் வீரத்துடனும், தீரத்துடனும் கிளர்ச்சியில் ஈடுபடுவர் என எதிர்பார்த்தார். அது மட்டுமின்றி ஹனோவரியர்களின் ஆட்சியில் வெறுப்புற்ற ஆங்கில மக்களும் அக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு தமக்கு வெற்றியைத் தேடித் தருவர் என உறுதியாக நம்பினார். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் போரிட்டு வருவதால், தமக்கு உதவியாக அந் நாடும் தன் கப்பற் படையை இங்கிலாந்திற்கெதிராக ஏவிவிடக் கூடுமென்றும் ஜேம்ஸ் எட்வர்டு எண்ணினார். எல்லாவற்றிற்கும் மேலாக இம் முறை கிளர்ச்சியை முன்னின்று நடத்த வேண்டியதற்கான திறமையுள்ள ஒருவரையும் அவர் தயாராக வைத்திருந்தார். அவர் தான் சார்லஸ் எட்வர்டு என்னும் அவர் மைந்தராவார்.

சார்லஸ் எட்வர்டு நல்ல திறமையும், இளமைத் துடிப்பும் கொண்டவராக இருந்தார். அவரையே மக்கள் இளைய போலி என்று அழைத்தனர். சார்லஸ் எட்வர்டு எப்படியும் ஒரு கிளர்ச்சியைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்று உறுதி பூண்டார். இத்தகைய மனோதிடமும், தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் கொண்டிருந்த சார்லஸ் எட்வர்டு 1745ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தம் ஒருசில ஆதரவாளர்களுடன் ஸ்காட்லாந்தின் மேற்கு மலைப் பகுதியில் மாய்டார்ட் (Moidort) என்னுமிடத்திற்கு

வந்து சேர்ந்தார். தம் தந்தைக்கு உதவி செய்த ஸ்காட்லாந்தியர்களின் உதவியுடன் ஆங்கில அரியாசனத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதே அவரின் குறிக்கோளாகும்.

ஸ்காட்லாந்திய மலைநாட்டு மக்களிடையே சார்லஸுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஆயிரக் கணக்கில் ஸ்காட்லாந்திய மக்கள் அவர் தலைமையில் அணிவகுத்து நின்றனர். வீரம் செறிந்த காளையாகிய இளைய போலி என்னும் சார்லஸைக் கண்ட சில பிரபுக்களும் வலிய வந்து அவருக்கு ஆதரவு தந்தார்கள். ஸ்காட்லாந்து முழுவதுமே சார்லஸுக்கு அடிபணிந்ததென்றுகூடக் கூறலாம். எடின்பர்க் நகரில் சார்லஸுக்கு அரசருக்குரிய முறையில் வரவேற்பும் கொடுக்கப்பட்டது.

க்ளென்பின்னன் (Glenfinnan) என்னுமிடத்தில் தான் முதன் முதலில் கிளர்ச்சி தொடங்கியது. அக் கிளர்ச்சியை அடக்க சர் ஜான் கோப் (Sri John Cope) என்ற தளபதியின் கீழ் ஆங்கிலப் படை ஒன்று அனுப்பப்பட்டது. அப் படை பிரெஸ்டன் பேன்ஸ் (Preston Pans) எனுமிடத்தில் சார்லஸின் தலைமையில் இயங்கிய ஜேகோப்பியர்களால் படுதோல்வி யடைந்தது.

பிரெஸ்டன் பேன்ஸ் போரில் ஆங்கிலேயர் படுதோல்வி யுற்றதை அறிந்த ஆங்கில அரசாங்கம் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போருக்காக ப்ளாண்டர்ஸ் நாட்டில் குவித்து வைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயப் படைகளை இங்கிலாந்துக்கு வரவழைத்தது. அப் படைகளில் நல்ல பயிற்சி பெற்ற வீரர்களும் இருந்தனர்.

வெற்றிநடை போட்டுவந்த சார்லஸ் தம் படையுடன் நவம்பர் மாதத்தில் இங்கிலாந்திற்குள் நுழைந்தார். கோர்லிஸ்லி (Corlisle), மான்செஸ்டர் (Manchester), டெர்பி (Derby) ஆகிய நகரங்களைத் தம் வசமாக்கினர். லண்டன் மாநகருக்குள் நுழைய இன்னும் சிறிது தூரமே எஞ்சியிருந்தது. அதனல் லண்டன் மாநகரில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டன. மக்கள் தாங்கள் வங்கிகளில் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுக்கலாயினர். இரண்டாம் ஜார்ஜ் அரசரும் கூட, தலைநகரை விட்டுப் பாதுகாப்பான வேறு இடத்திற்குச் செல்ல சித்தமானர். டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே ஜேகோப்பியர்களின் கிளர்ச்சி வெற்றி பெறலாமென்று நம்பப் பட்டது.

இந் நிலையில் சார்லஸ் எதிர்பார்த்ததற்குப் புறம்பாக ஆங்கிலேய ஜேகோப்பியர்கள் கிளர்ச்சியில் கலந்துகொள்ள முன்வர வில்லை. அடுத்தபடியாக ஃபிரான்சு நாட்டிலிருந்தும் உதவி எதுவும்

கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. அத்துடன் ஆங்கிலேயரின் படைவலிமை அதிகமாயிருப்பதால் ஸ்காட்லாந்துக்குத் திரும்பி விடுவதே நல்லது என்று சார்லஸின் ஆதரவாளர்கள் சார்லஸை வற்புறுத்தினர். வேறு வழியின்றிச் சார்லஸ் மனமுடைந்தவராக ஸ்காட்லாந்துக்குத் திரும்பினர். திரும்பும் வழியில் தங்களை வழிமறித்த ஆங்கிலப் படைகளை 1746ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஃபால்கிர்க் (Falkirk) என்னுமிடத்தில் சார்லஸ் தோற்கடித்தார்.

ஜேகோப்பியர்களை விரட்டியடிக்க இரண்டாம் ஜார்ஜின் மைந்தரும் கம்பர்லாந்து கோமகனுமான வில்லியம் என்பவரின் தலைமையில் பெரிய ஆங்கிலப்படை அனுப்பப்பட்டது. 1746ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்படை கல்லோடன் மூர் (Calloden Moor) என்னுமிடத்தில் சார்லஸின் ஆதரவாளர்களைச் சிதறடித்தது. போர்க்களத்திலிருந்து தப்பிவிட்ட சார்லஸ் சில மாதங்கள் பதுங்கி வாழ்ந்திருந்து, ஃபிரான்சு நாட்டுக்குத் தப்பிவிட்டார். அத்துடன் இரண்டாம் ஜேகோப்பியர்களின் கிளர்ச்சியும் தோல்வியில் முடிந்தது.

ஜேகோப்பியர்களின் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட ஸ்காட்லாந்திய மலைச் சாதியினர் ஈவு இரக்கமின்றி ஆங்கிலப் படைகளால் கொல்லப்பட்டனர். ஸ்காட்லாந்திய மலைப் பகுதியில் இனியும் ஆங்கில அரசுக்கெதிராக கிளர்ச்சிகள் எக்காலத்திலும் ஏற்படாவண்ணம் பல கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

ஜேகோப்பியர்களின் இரண்டாவது கிளர்ச்சியும் தோல்வியடைந்ததால், டோரிக் கட்சியினருக்கு ஸ்டூவர்டுகளின் முன்னிலை மீட்சியிலிருந்த சிறிதளவு நம்பிக்கையும் மறைந்துவிட்டது. இங்கிலாந்தின் ஆட்சிப்பீடத்தை இனி எக்காலத்திலும் ஸ்டூவர்டுகள் பிடிக்க முடியாதென்ற நிலை தெளிவாக ஏற்படவே, டோரிகள் தங்கள் விசுவாசத்தையும், ஆதரவையும் ஹனோவரியர்களுக்குக் கொடுக்க முன் வந்தனர்.

ஏழாண்டுப் போர் (1756—1763)

ஏழாண்டுப் போர் (Seven Years' War) ஆஸ்திரியா (Austria), பிரஷ்யா (Prussia) ஆகிய இரு நாடுகளிடையே இருந்து வந்த கடும் பகையினால் ஏற்பட்டது என்றே கூறலாம். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரஷ்யா ஆஸ்திரியாவின் பிரதேசமான சைலீஷியாவைக் (Silesia) கைப்பற்றிக் கொண்டது. ஆஸ்திரியாவின் அரசியான

மரியா தெரிஸா எப்படியும் சைலீஷியாவைத் திரும்பவும் பெற்று விடவேண்டுமென்று தீர்மானித்தார், அத் தீர்மானத்தை நடைமுறையில் கொணர வேண்டுமானால் வெளிநாடுகளின் உதவி அவசியம் தேவையென அவர் கருதினார். அதற்காக மரியா தெரிஸாவின் பிரதம அமைச்சரான கௌனிட்ஸ் (Caunity) என்பவர் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார். அவர் மிகவும் திறமையானவர். சிறந்த இராஜதந்திரியும் கூட. அவர் அரசியாருக்கு ஃபிரான்சுடன் கூட்டு சேர்வதின் அவசியத்தை எடுத்துக் கூறினார். ஆனால் பல நூற்றாண்டுகளாகவே இரு நாடுகளுக்கு மிடையே பகைமை இருந்து வந்ததால் கூட்டு சேருவது முடியாத காரியமென மரியா தெரிஸா ஐயமுற்றார். ஆனால் கௌனிட்ஸ் தம் எண்ணத்தைச் செயலாக்குவதில் முனைந்தார். பிரஷ்யாவுக்கும் ஃபிரான்சுக்கும் இடையே வளர்ந்து வந்த மனக் கசப்பை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஃபிரான்சு நாட்டு அரசர் பதினைந்தாம் லூயியின் ஆசை நாயகியான மேடம் டி பாம்பதர் (Madam de Pompadour) என்பவளை பிரஷ்யா நாட்டு அரசர் பிரடரிக் ஏளனமாகப் பேசி வந்தார். அதனால் அம் மங்கை பிரஷ்யாவுக்கெதிராக ஆஸ்திரியாவை ஆதரிக்க பதினைந்தாம் லூயியை வற்புறுத்தினார். அவளது தூண்டுதலின் பேரில் ஃபிரான் சுக்கும் ஆஸ்திரியாவுக்கு மிடையே 1756ஆம் ஆண்டு மே மாதத்தில் உடன்படிக்கை ஏற்பட்டது. அவ் வுடன்படிக்கையின் படி ஆஸ்திரியாவுக்கு ஃபிரான்சு நாடு ஆயுதங்களைக் கொடுத்து உதவுவதென்றும், மரியா தெரிஸா ஐரோப்பாவில் எத்தகைய போரில் ஈடுபட்டாலும், அவருக்கு உதவியாக ஃபிரான்சு போரில் ஈடுபடவேண்டுமென்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது. அவ்வுடன் படிக்கை ஏற்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின் பதினைந்தாம் லூயியின் பேரனுக்கும் மரியா தெரிஸாவின் மகளுக்கும் திருமணமும் நடந்தேறியது.

ஆஸ்திரியாவுக்கு ஃபிரான்சோடு கூட்டு சேர்வதில் ஏற்பட்ட சிரமங்கள் ரஷ்யாவோடு நட்பை ஏற்படுத்திக் கொள்வதில் இல்லை. ரஷ்யாவைப் பொறுத்தவரை, கௌனிட்ஸின் வேலை சுலபமாகவே முடிந்து விட்டது. ரஷ்யா நாட்டு ஜார் அரசரின் மனைவியான எலிஸபெத் பிரஷ்யா நாட்டு அரசரை வெறுத்ததால், ரஷ்யா பிரஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரியாவுடன் சேர்ந்தது. பின்னர் ஸ்பெயினும் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து கொண்டது. மற்றும் சில சிறு நாடுகளும் ஆஸ்திரியாவுடன் சேர்ந்தன.

இங்கிலாந்தில் 1754ஆம் ஆண்டு வரை, பெல்ஹாம் பிரதம அமைச்சராயிருந்தார். அவர் போரைத் தவிர்த்து அமைதிக்

கொள்கையையே பின்பற்றி வந்தார். அவர் இறந்த பிறகு, அவர் சகோதரரான நியூகாசில் பிரபு இங்கிலாந்தின் பிரதம அமைச்சரானர். நியூகாசில் பிரபும் தன் சகோதரரைப் போலவே அமைதிக் கொள்கையையே விரும்பினர். ஆனல் அதே சமயத்தில் ஹனேவர் நாட்டின் பாதுகாப்புக்குத் தீங்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் எண்ணினர். ஒருவேளை பிரஷ்யா நாடு ஹனேவர் நாட்டைத் தாக்கிக் கைப்பற்றி விடுமோ என்ற அச்சமும் அவருக்கு இருந்தது. அதனல் ஹனேவர் நாட்டின் அண்டை நாடான ஆஸ்திரியா நாட்டுடன் ஹனேவர் நாட்டுப் பாதுகாப்பைப் பற்றி நியூகாசில் பிரபு பேச்சு வார்த்தை நடத்தினர். சைலீஷியாவை பிரஷ்யாவிடமிருந்து திரும்பவும் கைப்பற்ற ஆஸ்திரியா பிரஷ்யாவை எதிர்த்துப் போரிட்டால், ஆஸ்திரியாவுக்கு இங்கிலாந்து உதவ உத்தரவாதமளிக்க வேண்டுமென்றும். அங்ஙனம் உத்தரவாதம் அளித்தால்தான் ஹனேவர் நாட்டுக்கு ஆஸ்திரியா பாதுகாப்பு அளிக்குமென்றும் இங்கிலாந்திடம் ஆஸ்திரியா கூறியது. ஆனல் இங்கிலாந்து அத்தகைய உத்தரவாதமளிக்க விரும்பாததால் பேச்சு வார்த்தைகள் கைவிடப்பட்டன.

அதன் பின்னர், நியூகாசில் பிரபுவுக்கு ஹனேவர் நாட்டுப் பாதுகாப்பு பற்றி மேலும் பயம் ஏற்படலாயிற்று. அதனல் ரஷ்யாவுடன் அவர் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி பிரஷ்யா நாடு ஹனேவர் நாட்டைத் தாக்கினல், அந் நாட்டை ரஷ்யா தாக்குவதாக ஒப்புக் கொண்டது. இருந்த போதிலும் ஹனேவர் நாட்டுக்கு நல்ல பாதுகாப்பு வேண்டுமானல் பிரஷ்யாவோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதுதான் சாலச் சிறந்தது என்று இங்கிலாந்தில் கருதப்பட்டது. அதை பிரஷ்யா நாட்டு அரசரும் வரவேற்றார். அதனல் 1756ஆம் ஆண்டில் வெஸ்ட்மினிஸ்டரில் பிரஷ்யாவுக்கும், இங்கிலாந்துக்குமிடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதனல் இங்கிலாந்து மட்டும் பிரஷ்யாவுக்கு நட்பு நாடாக அமைந்தது.

சைலீஷியாவைத் திரும்பப் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் ஆஸ்திரியா இருந்ததாலும், அதை எப்படியும் இழக்கக்கூடாதென்று பிரஷ்யா ஒரே பிடிவாதமாக இருந்ததாலும் 1756ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் போர் ஏற்படலாயிற்று. இங்கிலாந்து ஃபிரான்சு நாட்டோடு அமெரிக்காவிலும், இந்தியாவிலும் போர் செய்ய நேர்ந்ததால் ஐரோப்பியப் போர்க்களத்தில் அதிக அளவில் போர்ப்படைகளை வைத்திருக்க முடியவில்லை.

வட அமெரிக்காவில் இங்கிலாந்தும், ஃபிரான்சும் போட்டி போட்டுக் கொண்டு குடியேற்ற நாடுகளை அமைத்ததனல்தான்

இரண்டு நாடுகளுக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டு முடிவில் போரில் முடிந்தது. ஃபிரான்சு நாட்டுக் குடியேற்ற நாடுகள் செயின்ட் லாரன்சு (St Lawrence) மிசிசிப்பி (Mississipi) போன்ற ஆற்றுக் கரையோரங்களிலும், கிரேட் லேக்ஸின் (Great Lakes) கடற்கரை யோரங்களிலும் அமைந்திருந்தன. இத்தகைய குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த பிரெஞ்சு மக்களின் நலன்களைப் ஃபிரான்சு நாடு பாதுகாத்து வந்தது.

அட்லாண்டிக் கடலோரப் பகுதிகளில் ஆங்கிலக் குடியேற்ற நாடுகள் அமைந்திருந்தன. மதக் கசப்பு காரணமாக அவ்வப் பொழுது இங்கிலாந்தை விட்டு வெளியேறிய ஆங்கிலேயர்கள் இத்தகைய குடியேற்ற நாடுகளை அமைத்திருந்தனர். அவர் களின் வாழ்க்கை மெச்சத்தகுந்த வகையில் அங்கு அமைந் திருந்தது. ஆங்கில அரசாங்கமும் அவர்களது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடா வண்ணம் இருந்து வந்தது.

இத்தகைய வட அமெரிக்க குடியேற்ற நாடுகளில் பிரெஞ்சு மக்களைக் காட்டிலும் ஆங்கிலேயர் அதிக அளவில் குடியேறி யிருந்தனர். அங்கு வாழ்ந்த ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கி லேயருக்குமிடையே இரண்டு மாகாணங்களைப் பற்றி சச்சரவுகள் ஏற்பட்டன. 1713ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுட்ரெக்ட் சமாதான உடன்படிக்கைப்படி (Treaty of Utrecht, 1713) நோவஸ்காட்டியா (Novascotia) மாகாணத்தை ஃபிரான்சு நாடு இங்கிலாந்துக்குக் கொடுத்திருந்தது. ஆனால் 1713ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குப் பின்போ அம் மாகாணத்தின் எல்லைகள் செவ்வனே வரையறை செய்யப்படாமலேயே இருந்து வந்தன. அதனால் அம் மாகாணத்தின் தெற்குப் பகுதி மட்டுமே 1713ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இங்கிலாந்துக்குச் சொந்தமான தென்று ஃபிரான்சு நாடு கூறியது. ஆனால் ஆங்கில அரசாங்க மானது அம் மாகாணம் முழுவதுமே தமக்கு அளிக்கப்பட்டதாகு மென வலியுறுத்தியது.

மற்றொரு சச்சரவு ஒகியோ பள்ளத்தாக்கைப் (Ohio Valley) பற்றியதாகும். தங்களின் குடியேற்ற நாடுகளை விரிவுபடுத்த இரண்டு நாடுகளும் இப்பள்ளத்தாக்கை முக்கியமெனக் கருதின. கனடாவிலுள்ள தன் குடியேற்ற நாடுகளை வட அமெரிக்கா விலுள்ள மிசிசிப்பிப் பகுதியுடன் இணைப்பதற்காக பிரான்சு ஒகியோ பள்ளத்தாக்கை விரும்பியது. ஆனால் ஆங்கிலேயர் அத்தகைய திட்டத்தை வன்மையாகக் கண்டித்தனர். அதன் காரணமாக ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே

அங்கு தாக்குதல்கள் நிலவி வந்தன. அத்தகைய தாக்குதல்களில் இருதரப்பாரிடையேயும் பல உயிர்கள் சேதமடைந்தன. இதைத் தடுப்பதற்காக இங்கிலாந்தும் ஃபிரான்சும் சேர்ந்து எல்லையை நிர்ணயிக்க ஒரு குழுவை நியமித்தது. ஆனுல் அக் குழு தன் முயற்சியில் தோல்வியைத்தான் கண்டது. ஒகியோ பள்ளத் தாக்கில் குடியிருக்கும் ஆங்கிலேயரின் கையைப் பலப்படுத்த ஆங்கில அரசாங்கம் தளபதி பிரேடாக் (General Braddock) தலைமையில் ஓர் படையை அனுப்பியது. அவர் டியூகிஸன் கோட்டையை (Fort Duquesne) முற்றுகையிட்டார். ஆனுல் அவர் அப் போரில் கொல்லப் பட்டதால் அவரது படையை ஜார்ஜ் வெல்லிங்டன் என்பவர் காப்பாற்றினுர். ஃபிரான்சு நாடு தனது படைகளை மேலும் அமெரிக்காவுக்கு அனுப்பாவண்ணம் தடுக்க கடற்படை தளபதி பாஸ்கோவென் (Boscawen) தலைமையில் ஓர் கப்பற் படையை இங்கிலாந்து அனுப்பியது. அவர் நியூஃபவுண் லாந்து அருகில் பிரெஞ்சுக் கப்பற்படையைச் சார்ந்த இரண்டு போர்க் கப்பல்களை நாசப்படுத்தினுர். இத்தகைய நிகழ்ச்சிகள் இங்கிலாந்தும் ஃபிரான்சும் நேரடியாகப் போரில் ஈடுபடாததற்கு முன்பே நிகழ்ந்தன.

இத்தகைய சமயத்தில் தான் இந்தியாவிலும் இரண்டு நாட்டுக் கிழக்கிந்திய கம்பெனிகளுக்குமிடையே போட்டியும் பூசலும் ஏற்பட்டன. 1756ஆம் ஆண்டுக்கு முன்பு நடந்த இரண்டு கர்னுடகப் போர்களிலும் (Carnatic Wars) ஆங்கிலக் கிழக் கிந்திய கம்பெனியும் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனியும் தங்கள் குறிக்கோள்களைப் பரிசோதித்துப் பார்த்தன. ஆனுல் அதில் எதற்கும் வெற்றி கிடைக்கவில்லை. இருந்த போதிலும் தமக்குத் தான் வெற்றியென்று இரண்டு கிழக்கிந்திய கம்பெனிகளும் பறை சாற்றிக் கொண்டன. ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி எப்படியா கிலும் ஃபிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவை விட்டு விரட்ட வேண்டுமென்று கங்கணம் கட்டியது. இந் நிலையில் பிரெஞ்சு அரசாங்கம் குறித்த நேரத்தில் இந்தியாவை யடைய கௌண்டிலாலியை (Count Lally) இந்தியாவிற்கு அனுப்ப முடி வெடுத்தது.

போர் நிகழ்ச்சிகள்

ஏழாண்டுப் போர் ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நடைபெற்றது. ஐரோப்பியப் போரைப் பொறுத்த வரையில், ஆரம்பத்தில் இங்கிலாந்துக்குத் தோல்வியே ஏற் பட்டது. 1756ஆம் ஆண்டில் பிரெஞ்சு கப்பற்படையும் நிலப் படையும் திடுமென மினுர்காவின் (Minorca) மீது பாய்ந்து

அதைக் கைப்பற்றிக் கொண்டன. அதை மீட்கச் சென்ற ஆங்கிலக் கப்பற்படை தளபதி பிங் (Byng) என்பார் ஃபிரெஞ்சுக் காரர்களின் வலிமை அதிகமாயிருப்பதையறிந்து ஜிப்ரால்டருக்குப் பின் வாங்கினூர். அவருடைய தோல்விக்கு நியூகாசில் பிரபுவின் திறமையின்மையே காரணமாகும். நியூகாசில் பிரபு தம் குறையை மறைக்க பிங் என்பாரைச் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டார். பின்னர் இரண்டாம் ஜார்ஜின் மகனுன கம்பர்லாந்து கோமகன் (The Duke of Cumberland) ஃபிரெஞ்சுப் படையால் ஹேஸ்டன் பெக் (Hastenback) எனுமிடத்தில் 1757ஆம் ஆண்டில் தோல்வி யுற்றூர். தோல்வியுற்ற அவர் தமது படைகளைக் கலைத்துவிடுவ தாகவும் ஹெனேவர் நாட்டை ஃபிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்து விடுவதாகவும் ஒரு கேவலமான உடன்படிக்கையை எதிரிகளுடன் செய்து கொண்டார். அதற்கு க்ளாஸ்டர் செவன் (Kloster Seven) உடன்படிக்கை என்பது பெயராகும். அவ் வுடன் படிக்கையால் ஹனேவர் நாட்டை இங்கிலாந்து இழந்தது.

இச் சமயத்தில்தான் மூத்தபிட் (Pitt the Elder) என்பவர் இங்கிலாந்தில் 'நாட்டைக் காப்பாற்ற நானிருக்கிறேன்' என்று கூறிக்கொண்டு மார்தட்டி முன் வந்தார். அவர் க்ளாஸ்டர் செவன் உடன்படிக்கையை வன்மையாகக் கண்டித்து, ஹனேவர் நாட்டை எப்படியும் திரும்பப் பெற வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டார். அவர் பிரஷ்யாவுக்கு ஏராளமான பணத்தை அனுப்பிப் போரைத் தீவிரமாக நடத்தக் கேட்டுக் கொண்டார். பின்னர் பிரஷ்யா நாட்டரசர் பிரடரிக் பிரெஞ்சுக்காரரை ராஸ்பெக்கிலும் (Rossback), ஆஸ்திரியர்களை லியூதெனிலும் (Leuthen) தோற்கடித்தார். 1759ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் காரர்கள் மிண்டனிலும் (Minden) தோற்கடிக்கப்பட்டனர். இவ் வெற்றிகளால் ஹெனேவர் நாடு ஃபிரெஞ்சுக்காரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

'1759ஆம் ஆண்டில் ஃபிரான்சு இங்கிலாந்தின் மீது படை யெடுக்க டூலோன் (Toulon), ப்ரெஸ்ட் (Brest) என்ற துறைமுகங் களில் இரண்டு கப்பற் படைகளைத் திரட்டியது. இவ்விரு கப்பற் படைகளும் சேர்ந்து கொண்டால் ஆங்கிலக் கப்பற்படையை ஆங்கிலக் கால்வாயில் எளிதில் தோற்கடித்து விடலாம். ஆனூல் அவைகள் ஒன்று சேராவண்ணம் ஆங்கிலக் கப்பற்படை தடுத்து விட்டது. டூலோன் துறைமுகத்தினின்றும் புறப்பட்ட ஃபிரெஞ்சுக் கப்பற் படையை, ஆங்கிலக் கப்பற் படைத் தலைவரான பாஸ் கோவென் (Boscowen) என்பவர் லோகாஸ் (Lagos) முனைக் கருகில் தோற்கடித்தார். ப்ரெஸ்ட் துறைமுகத்தினின்றும் புறப்

பட்ட பிரெஞ்சுக் கப்பற் படையை ஹாக் (Hawke) எனும் ஆங்கிலக் கடல் தளகர்த்தர் குவிபெரான் குடாவில் (Quiberon Bay) தோற்கடித்தார். இவ்விரு தோல்விகளாலும் பிரெஞ்சுக் காரர்களின் கடலாதிக்கம் ஒழிந்தது.'[1] அதன் காரணமாக வட அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பிரெஞ்சுப் படைகள் அனுப்பப் படாமல் தடுக்கப்பட்டன.

இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்குமிடையே நேரடியாகப் போர் துவங்கு முன்பே, வட அமெரிக்காவில் பிரெஞ்சுக் குடியேறிகளுக் கும் ஆங்கிலக் குடியேறிகளுக்குமிடையே தொடர்ந்து சண்டை நடந்து வந்ததாக நாம் முன்னமேயே பார்த்தோம். பின்னர் இருநாடுகளும் போரில் நேரடியாகக் குதித்தன. ஆங்கிலத் தளகர்த்தரான ஆம்ஹெர்ஸ்ட் லூயிபர்க் நகரைப் பிடித்தார். கியூபெக் (Quebec) என்ற கனடாவின் தலைநகருக்குப் போகும் வழியிலிருந்த இந் நகர் பிடிபட்டது மிகச் சிறந்ததொரு வெற்றி யாகும். அடுத்து டியூகிஸன் கோட்டையை ஆங்கிலேயர் பிடித்தனர். இங்ஙனம் ஓகியோ பள்ளத்தாக்கு முழுவதும் ஆங்கிலேயர் வசமாயிற்று. இதன் பின்னர் வுல்ஃப் (wolfe) என்னும் ஆங்கில தளகர்த்தர் லாரன்ஸ் நதி வழியே சென்று 1759 ஆம் ஆண்டில் ஆப்ரஹாம் குன்றுகளில் (Heights of Abraham) நடைபெற்ற போரில் வெற்றிவாகை சூடி கியூபெக் நகரத்தைத் தாக்கிக் கைப்பற்றினர். ஆனல் அப் போரில் வுல்ஃப் கொல்லப்பட்டார். இவ் வெற்றியடைந்த எட்டு மாதங் களுக்குப் பின்னர், பிரெஞ்சுக்காரர்கள் கியூபெக் நகரை நோக்கி முன்னேறினர். அப்பொழுது ஆப்ரஹாம் குன்றுகளிலிருந்த ஆங்கிலத் துருப்புகளை அவர்கள் தோற்கடித்து கியூபெக் நகரை முற்றுகையிட்டனர். ஆனல் ஆங்கிலக் கப்பற் படையின் திறமையால் அந் நகரம் பிரெஞ்சுக்காரர்களின் தாக்குதலினின் றும் காப்பாற்றப்பட்டது. பின்னர் 1760 ஆம் ஆண்டில் அம் ஹர்ஸ்ட் (Amherest) எனும் ஆங்கிலத் தளபதி மாண்ட்ரீல் (Montreel) என்னும் நகரைக் கைப்பற்றினர். இதனல் கனடா முழுவதும் ஆங்கிலேயர் வசமாயிற்று. ஆகவே வட அமெரிக் காவில் நடந்த போரும் முடிவுற்றது.

இந்தியாவில் நடந்த போரிலும் ஆங்கிலேயருக்கே வெற்றி கிடைத்தது. 1759 ஆம் ஆண்டில் ப்ளாசிச் சண்டையில் (Battle of Plassey) கிளைவ் (Clive) எனும் ஆங்கில தளகர்த்தர் பிரெஞ்சு தளபதியான சிராஜ்உத் தௌலாவைத் தோற்கடித்ததனல் வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

[1] பிரிட்டன் வரலாறு கி. ர. அநுமந்தன்.

1760 ஆம் ஆண்டில் சர் அயர்கூட் (Sir Eyre Coote) எனும் ஆங்கிலக் கடல் தளகர்த்தர் பிரெஞ்சுத் தலைவராகிய கௌண்டி லாலியை (Count Lally) வந்தவாசி (Wandevash) எனுமிடத்தில் தோற்கடித்தார். அத்துடன் கௌண்டிலாலியையும் அவர் தம் துணைவரான ஃபுசி (Bussy) என்பவரையும் அவர் சிறைப் படுத்தினர். இதனால் கர்நாடகத்திலும் ஆங்கில ஆட்சி நிலை பெற்றது. பிறகு ஆங்கிலேயர்களால் பாண்டிச்சேரியும் கைப் பற்றப்பட்டதால் இந்தியாவிலிருந்த பிரெஞ்சு ஆதிக்கம் நசுக்கப் பட்டது.

1733 ஆம் ஆண்டில் ஸ்பெயின் ஃபிரான்சோடு ஓர் குடும்ப ஒப்பந்தம் (Family Compact) செய்துகொண் டிருப்பதனால். ஃபிரான்சுக்கு உதவியாக ஸ்பெயின் போரில் ஈடுபடலாமென மூத்தபிட் எண்ணினர். ஆகவே ஸ்பெயின் இங்கிலாந்தின் மீது போர்ப் பிரகடனம் செய்வதற்கு முன்பே அதன்மீது (இங்கிலாந்து) போர்ப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று மூத்தபிட் வற்புறுத் தினர். மூன்றும் ஜார்ஜும் பாராளுமன்றமும் அவரின் திட்டத் திற்கு மறுப்புத் தெரிவித்ததால் அவர் தம் பதவியை 1761 ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். அவர் கூற்றுப்படியே ஸ்பெயின் 1762 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின்மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆகவே போர் தொடர்ந்து நடந்து வந்தது. ஆங்கிலப் படைகள் ஸ்பானியக் குடியேற்ற நாடுகளைத் தாக்கி மணிலா (Manila), ஹவானா (Havannah) முதலிய இடங்களைக் கைப்பற்றின.

பின்னர் ஃபிரான்சும், ஸ்பெயினும் போரில் சலிப்புற்றன. இங்கிலாந்தில் ஆட்சி புரிந்த பூட் அமைச்சரவையும் சமாதா னத்தை விரும்பியது. அதனால் 1756 ஆம் ஆண்டிலிருந்து 1763 ஆம் ஆண்டுவரை நடந்து வந்த ஏழாண்டுப் போர் 1763 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின்படி முடிவுற்றது.

பாரிஸ் உடன்படிக்கை (1763)

இங்கிலாந்தில் ஆட்சி செய்துவந்த பூட் அமைச்சரவை பாரிஸ் உடன்படிக்கை ஏற்பாட்டிற்குத் தனது நட்பு நாடான பிரஷ்யாவைக் கலந்தாலோசிக்காமலேயே தனது ஆதரவை யளித்துவிட்டது. இங்கிலாந்தின் இத்தகைய நடவடிக்கை நட்பு நாட்டிற்குச் செய்த துரோகமெனவும் கூறலாம்.

பாரிஸ் உடன்படிக்கையின்படி இங்கிலாந்துக்கு ப்ரெட்டன் முனைத்தீவு. செனிகல். மினர்க்கா, டொபேகோ, டாமினிகா,

செண்ட் வின்ஸெண்ட், க்ரெனடா, கனடா ஆகிய பிரதேசங்கள் கிடைத்தன. ஃபிரான்சு பாண்டிச்சேரியையும், பெல்காடலூப், மார்டினிக் முதலிய பிரதேசங்களையும் பெற்றது. ஸ்பெயினுக்கு கியூபா, பிலிப்பைன் தீவுகள் கிடைத்தன.

ஏழாண்டுப்போர் பிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவிலும் அமெரிக்காவிலும் ஒழித்தது. ஆங்கிலச் செல்வாக்கையும் அதிகாரத்தையும் உலகின் பல பாகங்களில் அதிகரித்தது. உலகில் ஆங்கில நாட்டின் கடல்வன்மை நன்கு நிலைநாட்டப்பட்டது. இப் போரினால் பிரஷ்யா நாடும் ஐரோப்பாவில் ஓர் வல்லமை வாய்ந்த நாடாக மாறியது. ஏழாண்டுப் போரில் இங்கிலாந்து வெற்றிக்குமேல் வெற்றி பெற்றதற்குக் காரணம் மூத்த பிட்டின் திறமையும் அவரது போர்க் கொள்கைகளுமேயாகும்.

மூத்த பிட் (Pitt The Elder)

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலப் பெருமக்களில் முக்கியமானவர்களில் ஒருவராகக் கருதப்படும் வில்லியம் பிட் என்பார் 1708 ஆம் ஆண்டில் ராபர்ட் என்பவரின் மைந்தனாக வெஸ்ட்மின்ஸ்டர் நகரில் பிறந்தவர். அவர் சென்னை கவர்னராயிருந்து புகழ்பெற்ற தாமஸ் பிட்டின் பேரனாவார். அவர் ஈடன், ஆக்ஸ்போர்டு ஆகிய இடங்களில் கல்வி பயின்று, சொற்பொழிவு ஆற்றும் கலையில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். அதனால்தான் 'பொதுமக்கள் பெருமகன்' என்று புகழக்கூடிய நிலையையடைந்தார்.

1735 ஆம் ஆண்டில் பழைய சாரம் (Old Sarum) எனும் பரோவின் பிரதிநிதியாக அவர் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பாராளுமன்றத்தில் நுழையும்போது விக்குகளின் ஆட்சியில் லஞ்ச ஊழல்கள் மலிந்திருந்தன. ஆகவே அவர் லஞ்ச ஊழல் [மலிந்த விக்குகளின் ஆட்சியைத் தமது சொல் வன்மையாலும், தைரியத்தாலும் கண்டித்தார். வால்போல் நாட்டை ஆட்சி செய்யும் விதத்தை மிகவும் குறை கூறினார். அதனால் விரைவிலேயே அவர் பொதுமக்கள் சபையின் நன்மதிப்பைப் பெற்றார். அத்துடன் மக்கள் இடையிலும் அவர் மிகவும் புகழ் பெற்றார்.

வால்போலின் தலைமையில் விக்குகள் செல்வாக்குப்பெற்று அதிகாரத்திலிருந்த அந்த நேரத்தில், பிட் நினைத்திருந்தால் மற்றவர்களைப்போல் பட்டம், பதவி பெற்று ஆளும் கட்சியின்

கையாளாக இருந்திருக்கலாம். அரசியலிலே நேர்மையையும் ஒழுக்கத்தையும் விரும்பிய பிட், எதிர் வரிசையிலே அமர்ந்து வால்போலின் நேர்மையற்ற அரசியல் முறைகளைச் சாடினுர். பொதுமக்கள் சபையில் அவர் ஆற்றிய முதற் சொற்பொழி விலேயே மற்றவர்கள் தங்களை மறந்த நிலையை அடைந்தனர். அதைப்பற்றி லிட்டெல்டன் பிரபு (Lord Lyttelton) என்பவர் குறிப்பிடும்பொழுது 'பிட்டின் உணர்ச்சிகரமான பேச்சு தம் இரத்தத்தையே உறையவைத்தது' எனப் பெருமைப்படக் கூறினுர். வால்போலின் 'தூங்கும் நாய்கள் தூங்கட்டும்' என்ற கொள் கையைக் 'கோழைகளின் கோட்பாடு' என பிட் நையாண்டி செய்தார். ஜென்கின்ஸின் அறுபட்ட காது பாராளுமன்றத்தில் காட்டப்பட்டபோது, அது நம் நாட்டுக்கு ஏற்பட்ட அவமானம் எனக் குமுறினுர். அவருடைய சொற்பொழிவுகளால்தான் வால் போல் ஸ்பெயினேடு போர் தொடுத்தாரென்று கூறலாம்.

ஸ்பெயினேடு நடத்தப்பட்ட போரை வால்போல் சரிவர நடத்தவில்லையெனப் பாராளுமன்றம் குறை கூறியது. அதனுல் பாராளுமன்றத்தின் ஆதரவையிழந்த வால்போல் தமது பதவியை 1742 ஆம் ஆண்டில் இராஜிநாமா செய்தார். அதைத் தொடர்ந்து வில்மிங்டன் பிரபுவின் (Lord Wilmington) தலைமையில் மற்ருெரு விக்கு அமைச்சரவை அமைக்கப்பட்டது. அப் பொழுதும் பிட் எதிர்க்கட்சியிலேயே இருந்தார். அவருக்கென்று தனிக்கட்சி எதுவுமில்லையெனினும் அரசாங்கத்தின் குறைகளை அவ்வப்போது எடுத்துரைத்து வந்தார். வில்மிங்டன் அமைச்ச ரவையில் வெளிவிவகார அமைச்சராயிருந்த கார்ட்டரெட் பிரபு இரண்டாம் ஜார்ஜ் அரசரைத் தூண்டிவிட்டு இங்கிலாந்தை ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் ஈடுபடுத்தியதை பிட் பொது மக்கள் சபையில் எதிர்த்தார். ஆஸ்திரிய வாரிசுரிமைப்போரில் இங்கிலாந்து இறங்கவேண்டிய அவசியமேயில்லையென்றும், தம் குடும்ப சொத்தான ஹனேவர் நாட்டைக் காக்கவே அரசர் இங்கிலாந்தை அப் போரில் ஈடுபடச் செய்தாரென்றும் பிட் எடுத்துக் காட்டியதால், கார்ட்டரெட் பிரபுவுக்கு எதிராகக் கண்டனங்கள் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டன. அதனுல் கார்ட்டரெட் பிரபு பதவியிலிருந்து விலக வேண்டியதாயிற்று.

1743ஆம் ஆண்டில் வில்மிங்டன் இறந்துவிடவே பெல்ஹாம் தலைமையில் மற்ருெரு அமைச்சரவை அமைக்கப்பட்டது. அரசாங் கத்தை எதிர்ப்பதையே முக்கிய தொழிலாகக் கொண்டிருந்த பிட்டைத் தம் வயப்படுத்த பெல்ஹாம் முயன்ருர். அரசர் இரண்டாம் ஜார்ஜிடம் வேண்டி சம்பளப் பட்டுவாடா (Pay

Master) அதிகாரியாக பிட்டை அமர்த்தும்படி வேண்டிக் கொண்டார். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் தாம் கலந்து கொண்டதைக் குறை கூறிவந்த பிட்டை வேலையிலமர்த்துவதை அரசர் விரும்பாவிடினும் இறுதியில் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன்படி பிட் அந்த வேலையில் அமர்த்தப்பட்டார். அதில் பல வகைகளில் இலஞ்சம் பெறுவதற்கு சந்தர்ப்ப மிருந்தும் அவர் எதையும் வாங்காமல் தம் கடமையை உண்மையுடன் செய்தார். சீர்கேடுகள் நிறைந்தும் இலஞ்ச ஊழல்கள் நிரம்பியுமிருந்த அக் கால அரசியலில் பிட்டின் செய்கை பெரிதும் போற்றப்பட்டது. பதவியைப் பெற்றுக் கொண்ட பிட் அதன் பின்னர் அரசாங்கத்தைக் கண்டிப்பதை நிறுத்திக் கொண்டார்.

1754ஆம் ஆண்டில் பெல்ஹாம் இறந்துவிடவே, அவருடைய சகோதரரும், விக்கு கட்சியில் செல்வாக்குப் பெற்றவரும் ஆகிய நியூகாசில் பிரபு அமைச்சரவையை அமைத்தார். அச் சமயம் பிட் தமக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்குமென எதிர் பார்த்தார். ஆயின், நியூகாசில் பிரபு அவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. அதனால் பிட் சமயம் கிடைத்த போதெல்லாம் அவரது ஆட்சியைக் கண்டிக்க முனைந்தார். அதனால் வெகுண்ட நியூகாசில் பிரபு அரசரின் துணைகொண்டு பிட்டைப் பதவியிலிருந்து விரட்டினார். ஏழாண்டுப் போர் இச் சமயத்தில் தான் ஏற்பட்டது. அதைச் சரிவர நடத்த முடியாமல் 1756ஆம் ஆண்டில் நியூகாசில் பிரபு ராஜிநாமா செய்தார்.

அடுத்து, 1756ஆம் ஆண்டில் டெவன்ஷயர் கோமகன் (Duke of Devonshire) அமைச்சரவையை அமைத்தார். அதில் பிட் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அப்பொழுது தான் பிரஷ்யா நாட்டரசர் பிரடரிக் 'நெடுங்காலமாக அல்லல்பட்டு வந்த இங்கிலாந்து, கடைசியில் ஒரு திறமைவாய்ந்த மனிதரைக் கண்டுள்ளது' என்று கூறினார். பிட் அமைச்சரவையில் சேர்ந்தவுடனே தம் திறமையை எடுத்துக்காட்ட முற்பட்டார். போரிலே ஈடுபட்டிருக்கும் தம் தாய் நாட்டிற்கு உதவும் வகையில் அவர் சில ஏற்பாடுகளைச் செய்ய முயன்றார். ஆனால் அரசரும் நியூகாசிலும் சேர்ந்துகொண்டு பிட்டின் செல்வாக்கைப் பலவகையிலும் குறைத்தனர். அதனால் ஆரம்பத்தில் அவரால் ஏழாண்டுப் போரைச் சரிவர நடத்த முடியவில்லை. அத்துடன் பாராளுமன்றத்திலும் நியூகாசில் பிரபுவின் முயற்சியால் அவருக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு கிடைக்கவில்லை. ஆகவே பிட் 1757ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தம் பதவியைத் துறந்தார்.

1757 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நியூகாசில் பிரபு மறுபடியும் அமைச்சரவையை அமைக்கும்படி அழைக்கப்பட்டார்.

இம் முறை அவர் பிட்டைத் தமது அமைச்சரவையில் போர் அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார். இச் சமயம் நியூகாசில் பிரபு தமது செல்வாக்கையும், செல்வத்தையும் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு ஆதரவு தேடிக் கொடுக்க, பிட் ஏழாண்டுப் போரை வெற்றியுடன் நடத்தினர். அதனால் பிட் தம் புகழின் உச்சநிலையிலிருந்தார். அவரை ஆரம்பத்தில் வெறுத்த அரசர் இரண்டாம் ஜார்ஜ் பின்னர் அவரின் போர்ச் சேவைகளை மிகவும் பாராட்டினர்.

பிட்டின் போர்ச் சேவைகளினல் பெரும் வெற்றிகளைப் பெற்ற இங்கிலாந்தின் புகழ் உலக முழுவதும் ஓங்கிப் பரவி நின்றது. ஆனல், அதே சமயத்தில் அந்நாட்டின் புகழுக்குக் காரணமாயிருந்த பிட் பதவியிலிருந்து வீழ்ச்சியடைவதற்கான தொடக்க நிலையும் ஏற்பட்டது.

1760ஆம் ஆண்டில் இரண்டாம் ஜார்ஜ் அரசர் இறந்துவிடவே, மூன்றும் ஜார்ஜ் அரசர் இங்கிலாந்தின் அரச பீடத்தில் அமர்ந்தார். மூன்றும் ஜார்ஜ் அரசர் எல்லா அதிகாரங்களையும் தாமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். அதற்காக எப்படியாகிலும் பிட்டைப் பதவியினின்று விலக்க வேண்டுமென்று அவர் கருதினர். பிட்டின் புகழ் உச்சக் கட்டத்தில் இருந்ததனல் உடனடியாக அவரைப் பதவியிலிருந்து விலக்க முடியாத நிலை இருந்தது. ஆனல் 1761ஆம் ஆண்டில் அதற்குத்தகுந்த வாய்ப்பு ஏற்பட்டது. ஏழாண்டுப் போரில் ஃபிரான்சுக்கு உதவியாக ஸ்பெயின் ஈடுபடாததற்கு முன்பே அதன் மீது போர்ப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று பிட் அரசருக்கு ஆலோசனை கூறினர். ஆனல் அரசர் மூன்றும் ஜார்ஜ் பிட்டின் திட்டத்தை ஏற்கவில்லை. அதன் காரணமாக, பிட் தம் பதவியை 1761ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். பின்னர் 1762ஆம் ஆண்டில் நியூகாசில் பிரபுவும் பதவியைத் துறந்தார். அதன் பின்னர் பூட் பிரபு என்பாரை மூன்றும் ஜார்ஜ் அரசர் அமைச்சரவைத் தலைவராக நியமித்தார். அவர் ஏழாண்டுப் போரை முடித்து பாரிஸ் உடன்படிக்கையின் மூலம் சமாதானம் செய்து கொண்டார்.

பூட் அமைச்சரவையால் செய்துகொள்ளப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையை பிட் வன்மையாகக் கண்டித்தார். அத்துடன் பூட் அமைச்சரவைக்குப் பின் அமைக்கப்பட்ட க்ரென்வில் (Grenville), ராக்கிங்ஹாம் (Rockingham) அமைச்சரவைகளையும் அவர் கண்டித்து வந்தார். மூன்றும் ஜார்ஜ் அமைச்சர் ராக்கிங்

ஹாம் அமைச்சரவையை 1766ஆம் ஆண்டு கலைத்து விட்டு பிட்டை அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். அச் சமயத்தில் அவர் வட அமெரிக்காவில் நிகழ்ந்துகொண்டிருக்கும் கடும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. பிட் அப்பொழுது வயது முதிர்ச்சியினுல் உடலும் உள்ளமும் சோர்ந்தவராயிருந்த போதிலும், ஓர் அமைச்சரவையை அமைத்தார். அப்பொழுது உடல் நல மின்மையால் அவர் எல்லாப் பொறுப்புகளையும் தம் அமைச்சர்களிடமே ஒப்படைத்திருந்தார். ஆனுல் பொதுக் கொள்கையின்மையால் அவ் வமைச்சரவை திறம்படச் செயல்பட முடியவில்லை. அதனுல் பிட் 1768ஆம் ஆண்டில் தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டார். இருப்பினும், அவர் ஏற்கனவே நாட்டிற்குச் செய்திருந்த உயர்ந்த சேவைகளைப் பாராட்டி, அவருக்கு சாத்தாம் எர்ல் (Earl of Chatham) என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

பிட் ராஜிநாமா செய்த பின்னர் கிராஃப்டன் (Grafton) அமைச்சரவையை ஏற்படுத்திஞர். ஆனுல் விரைவிலேயே அவரின் அமைச்சரவை வீழ்ச்சியுற்றது. அதன் பின்னர் நார்த் பிரபு அமைச்சரவையை அமைத்தார். அவர் காலத்தில்தான் அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்டது. பிட் பதவியிலிருந்து ஒதுங்கியிருந்த போதிலும் அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டிக்கத் தவறவில்லை. அமெரிக்க குடியேற்ற நாடுகளின் மீது இங்கிலாந்து அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்த போது பிட் வன்மையாகக் கண்டித்தார். அமெரிக்க சுதந்திரப் போர் நடந்துகொண்டிருந்த நேரத்தில் தாம் கட்டிக்காத்த ஆங்கிலப் பேரரசு சிதைந்து கொண்டிருப்பதைப் பார்த்து நொந்து கொண்டே 1778ஆம் ஆண்டில் அவர் இறந்தார்.

சிறந்த பேச்சாளராகவும், ஒழுக்க சீலராகவும் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய பிட், தோல்விகளால் சோர்ந்திருந்த இங்கிலாந்தைத் தமது அரிய போர்ச் சேவைகளினுல் வெற்றிப்பாதையில் வீரநடை போடச் செய்தது அவரின் பெரும் சாதனையாகும். அவர் தம் புகழை விரும்பாது, தாய் நாட்டின் நலனையே மனத்திற்கொண்டு ஓயாது உண்மையுடனும் திறமையுடனும் உழைத்ததாலேயே இங்கிலாந்தின் வரலாற்றில் அவர் அழியாததொரு இடத்தைப் பெற்ருர்.

அரசியலமைப்பின் வளர்ச்சி

முதல் இரண்டு ஹனேவரிய அரசர்கள் தங்களை அறியாமலேயே ஆங்கில அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு

அரியதொரு பணியைச் செய்துவிட்டுச் சென்றார்கள். அதனால் தான் இவர்கள் காலம், ஆங்கில அரசியலமைப்பின் சிறப்பு மிக்க காலமெனக் கருதப்படுகின்றது. இவர்கள் காலத்தில் ஏற்பட்ட முக்கியமான அரசியலமைப்புக் கோட்பாடுகளாவன :

(1) காபினெட் என்னும் அமைச்சர் குழுவுக்குப் பெருமளவு சுதந்தரம் கொடுக்கப்பட்டது.

(2) ஒரே கட்சியிலிருந்து எல்லா அமைச்சர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை நிலைநாட்டப்பட்டது.

(3) அமைச்சர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கை வேரூன்றியது.

(4) பிரதம அமைச்சரின் கொள்கைகளை ஏற்காதவர்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை என்ற கொள்கை உருவானது.

(5) அமைச்சரவை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இழந்தவுடன் ராஜிநாமா செய்யவேண்டும் என்ற மரபு ஏற்படுத்தப்பட்டது.

(6) அமைச்சரவை பொதுமக்கள் சபைக்குப் பொறுப்பானதாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

(7) பிரதம அமைச்சரின் முதன்மை நிலைநாட்டப்பட்டது.

(8) காபினெட் கூட்டங்களில் அரசர் கலந்துகொள்ளக் கூடாதென்ற மரபு ஏற்படுத்தப்பட்டது.

(9) பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே பிரதமராக அமர்த்தப்பட வேண்டுமென்ற மரபு ஏற்படுத்தப்பட்டது.

(10) அமைச்சர் குழுவில் நிறைவேறும் தீர்மானங்கள் ஏகோபித்த தீர்மானங்களாக இருக்கவேண்டும் என்ற மரபு உருவானது.

(11) பிரதம அமைச்சர் லண்டனில் 10, டௌனிங் தெருவில் வசிக்கும் மரபு ஏற்படுத்தப்பட்டது.

(12) காபினெட் அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் நம்பிக்கையிழந்தவுடன் கூட்டாகப் பதவி துறக்கவேண்டும் என்ற கூட்டுப்பொறுப்பு (Collective responsibility) என்ற கொள்கை ஏற்படுத்தப்பட்டது.

14. மூன்றும் ஜார்ஜின் ஆட்சியும் அரசியலும் (1760-1820)

மூன்றும் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசராக 1760 ஆம் ஆண்டு முடிசூட்டப்பட்டார். அப்பொழுது அவர் 22 வயது அடைந்த இளைஞராகத்தான் இருந்தார். இருந்தபோதிலும் முதல் இரண்டு ஜார்ஜுகளைவிட அவர் பலவகையிலும் மேம்பட்டவராகக் காணப்பட்டார். இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்ததால் தோற்றத்திலும், எண்ணங்களிலும், மொழியிலும் ஆங்கிலேய ராகவே காணப்பட்டார். அவர் ஹெனோவர் நாட்டுக்குச் சென் றதுமில்லை; ஜெர்மானிய மொழியை அறியவுமில்லை. அதனுல் அவருக்கு உண்மையிலேயே இங்கிலாந்தின்மீது பற்றும் பாசமும் இருந்தது. ஆங்கிலேயரைப் போலவே அவரும் உழைப்பும், உண் மையும், பிடிவாதமும் உடையவராயிருந்தார். அதனுல் ஆங்கி லேயர் அவரை நேசித்தனர்.

வீரமும், தீரமும், கடின உழைப்பும், கடமைப்பற்றும், தேச பக்தியும், அவரிடம் இருந்தபோதிலும், சில குறைகளும் அவரிடம் காணப்பட்டன. அவைகளில் அவரின் பிடிவாதகுணம் ஒன்ருகும். தன்னுடைய எண்ணங்களும் செயல்களும்தான் நல்லவைக ளென்றும் மற்றவர்களின் எண்ணங்களும், ஆலோசனைகளும், அறி வுரைகளும் தகுதியற்றவைகள் என்றும் முட்டாள்தனமானவைகள் என்றும் எண்ணினுர். அத்துடன் மற்றவர்கள் கூறும் ஆலோச னைகள் நல்லவைகளாக இருந்தாலும், அவைகளை வரவேற்க மாட்டார். நல்ல பல சீர்திருத்தங்களுக்கு அவர், எதிர்ப்புத் தெரிவித்தார், பாராளுமன்றச் சீர்திருத்தத்தை எதிர்த்தார். ரோமன் கத்தோலிக்கர்களுக்கு சட்டத் தடைநீக்கம் செய்வதை எதிர்த்தார். ஆனுல் அதே நேரத்தில் அடிமை வாணிபத்தை ஆதரித்தார். அவருடைய பிடிவாத குணத்தினுல் நாட்டிற்குப் பல இன்னல்கள் நேர்ந்தன.

முதல் இரண்டு ஜார்ஜ் அரசர்களைப்போல் பெயரளவில் அரசராக இருக்க அவர் விரும்பவில்லை. உண்மையிலேயே இங்கிலாந்தின் அரசராயிருக்கவும், அரசருக்குரிய அதிகாரங்களைச் செலுத்தவும் அவர் விரும்பினுர். அதற்குத் தகுந்தாற்போல்

'ஜார்ஜ்! நீ அரசனுயிரு' என்ற தம் தாயின் அறிவுரை அவருடைய காதில் ரீங்காரமிட்டவண்ணம் இருந்தது. சமயம் வாய்த்தவுடன் அவர் தமது விருப்பத்தைச் செயலாக்க முனைந்தார்.

மூன்றும் ஜார்ஜின் தனியாட்சி

1760 ஆம் ஆண்டில் மூன்ரும் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்தவுடன், நாட்டில் தம் தனியாட்சியைச் செலுத்த விருப்பம் கொண்டார், நாட்டில் அனைத்து அதிகாரங்களையும் தாமே செலுத்தவேண்டுமென்ற ஆசை அவரிடம் தோன்றியது. அதற்காக 1714 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பதவியிலிருந்த விக்குகளை ஒழிக்க விரும்பினுர். அவருடைய விருப்பத்திற்கு டோரிகள் தங்களுடைய ஆதரவை அளிக்க முன் வந்தனர். டோரிகளின் உதவியைக் கொண்டு மட்டும் விக்குகளின் செல்வாக்கைப் பாராளுமன்றத்தினின்றும் நீக்கிவிட முடியாது என்று நினைத்து மூன்ரும் ஜார்ஜ் பாராளுமன்றத்தில் தமக்கென ஒரு கட்சியை ஏற்படுத்திக்கொண்டார். பணமும் பட்டமும் அளித்து விக்குகள் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றதைப்போன்று மூன்ரும் ஜார்ஜும் பதவிகளையும் பட்டங்களையும் தாராளமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க ஆரம்பித்தார். அதனுல் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜார்ஜிடம் பதவிகளையும், பட்டங்களையும், பணவுதவிகளையும் பெற்றுக்கொண்டு அவரை ஆதரிக்கத் தொடங்கினர். அவர்கள் அரசரின் நண்பர்கள் (King's friends) என அழைக்கப்பட்டனர். அரசரின் நண்பர்களும், டோரிகளும் அரசரை ஆதரித்ததனுல் பாராளுமன்றத்தில் அரசரின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பலம் பெற்றனர். எனவே, அரசருக்குப் பிடிக்காத அமைச்சர்களைப் பதவியினின்று நீக்குவதிலும், அவருக்கு வேண்டியவர்களை அமைச்சர்களாக நியமிப்பதிலும் அவர்கள் ஜார்ஜுக்கு உறுதுணையாய் அமைந்தனர்.

உரிமைகள் மசோதா (Bill of rights), அரசுரிமை நிருணயச் சட்டம் (Act of Settlement) ஆகிய இரண்டு சட்டங்கள் அரச அதிகாரத்திற்கு விதித்த வரம்புகளைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் மற்றவைகளையெல்லாம் தாம் ஏற்க முடியாதெனவும் அறிவித்தார். அத்துடன் விக்குகளின் ஆட்சியில் அமைச்சர் குழு பெற்ற அதிகார வளர்ச்சி வழக்காறேயல்லாமல் சட்டமுறையானதல்ல என்று வாதிட்டு, அமைச்சர் குழுவிடம் எல்லா அதிகாரங்களையும் ஒப்படைக்கத் தாம் கடமைப்பட்டவர் அல்லர் எனவும் தெளிவுபடுத்தினுர்.

பாலிங்ப்ரோக் (Bolingbroke) என்பாரின் எழுத்துக்கள் மூன்றும் ஜார்ஜை மிகவும் கவர்ந்தன. அவர் எழுதிய 'தேச பக்த அரசர்' (Patriot King) என்ற நூல் ஜார்ஜின் தனியாட்சி விருப்பத்திற்கு உறுதுணையாக நின்றது. பாலிங்ப்ரோக் தமது தேசபக்த அரசர் என்ற நூலில் 'இங்கிலாந்திற்கு ஒரு தேச பக்த அரசர் தேவைப்படுகின்றார். அவர் கட்சிக்குக் கட்டுப் படாதவராகவும், மக்களிடம் நேரடி தொடர்பு உடையவராகவும் தம் அமைச்சர்களைத் தாமே தெரிந்தெடுத்துக் கொள்பவரா கவும் அத்தகைய அமைச்சர்கள் கட்சியினின்று அல்லாமல் அரசரின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டு'மென்றும் கூறுகின்றார். மூன்றும் ஜார்ஜ் அரசர் அத் தகைய தேசபக்த அரசராகத் திகழ முடிவெடுத்தார்.

மூன்றும் ஜார்ஜ் தனியாட்சி செய்ய நினைத்தபோது, ஸ்டூவர்டுகளைப் போலவோ அல்லது டியூடர்களைப் போலவோ அடக்குமுறை ஆட்சி செலுத்த விரும்பவில்லை. அத்துடன் பாராளுமன்றத்தின் இறைமைத் தன்மையை இவர் குறைகூற வில்லை. வரம்புக்குட்பட்ட முடியாட்சியை இவர் செலுத்த விரும்பினார். பாலிங்ப்ரோக் எழுதிய நூலில் கண்டபடி இவர் கட்சிகளின் ஆதிக்கத்தை நாட்டில் ஒழித்துவிட எண்ணினார். அமைச்சர்கள் கட்சிகளின் கைப்பாவைகளாக இருக்கக் கூடா தென்பதும் அரசரின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டுமென்பதும் இவரின் விருப்பமாகும். ஆனால் இவரின் அத்தகைய விருப்பம் ஈடேறவில்லை. தமது விருப் பத்தில் இவர் வெற்றி பெற்றிருந்தால், இங்கிலாந்தில் கட்சியாட் சியும் காபினெட் ஆட்சிமுறையும் புதையுண்டு அழிந்து போயிருக்கும்.

மூன்றும் ஜார்ஜ் தம்முடைய தனியாட்சியை இங்கிலாந்தில் உடனேயே ஏற்படுத்த நினைத்தார். ஆனால் அவ்வாறு ஏற்படுத்த நாட்டின் சூழ்நிலை அவருக்குச் சாதகமாக அமையவில்லை. 1760 ஆம் ஆண்டில் மூத்த பிட் (Pitt the Elder) நாட்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். அதனால் அவரைப் பதவியினின்று விலக்க முடியாத நிலை இருந்தது. தகுந்த சூழ்நிலையை மூன்றும் ஜார்ஜ் எதிர்பார்த் திருந்தார். 1761 ஆம் ஆண்டில் அத்தகைய நல்ல வாய்ப்பு மூன்றும் ஜார்ஜுக்குக் கிடைத்தது. மூத்த பிட், ஸ்பெயின் மீது போர்ப் பிரகடனம் செய்யும்படி ஜார்ஜைக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஜார்ஜ் அவரின் ஆலோசனையை நிராகரித்தார். அதனால் மூத்த பிட் பதவியை ராஜிநாமா செய்தார். இதைத்தான் மூன்றும் ஜார்ஜும் எதிர்பார்த்திருந்தார்.

1762 ஆம் ஆண்டில் நியூகேஸில் கோமகனும் (Duke of Newcastle) தமது பதவியை ராஜிநாமா செய்தார். ஆகவே ஜார்ஜ் தம் ஆசிரியரான 'பூட்' (Bute) என்பவரைப் பிரதம அமைச்சராக நியமித்தார். பின்னர் பூட் தலைமையில் கூடிய அமைச்சரவை, 1763ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிஸ் சமாதானத்தால் (Peace of Paris) ஏழாண்டுப் போரை முடித்தது. இச் சமாதானம் மக்களுக்குப் பிடிக்காததனால், மக்கள் பூட் என்பவரைக் குறை கூறினர். அதனால் பூட் தம் செல்வாக்கை இழந்தார். எனவே, இவர் 1763ஆம் ஆண்டில் தம் பதவியை ராஜிநாமா செய்தார்.

தாம் நண்பர்கள் மூலமாக மட்டும் அரசாங்கத்தை நடத்த முடியாது என்று மூன்றும் ஜார்ஜ் நினைத்து, சில வேளைகளில் விக்குகளின் உதவியையும் நாடினர். இதன் மூலமாய்த் தம் நண்பர்களும் ஆட்சிக் கலையைக் கற்றுக்கொள்ள முடியும் என எண்ணினர். இதை மனத்திற் கொண்டுதான் 1763ஆம் ஆண்டில் கிரென்வில் (Grenville) என்பவரை அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். கிரென்வில் காலத்தில் மூத்திரைக் காகிதச் சட்டம் (Stamp Act) கொண்டு வந்ததால் நாட்டில் பெரும் போராட்டம் ஏற்பட்டது. வில்க்ஸ் (Wilkes) என்பாரைப் பற்றிய வழக்குகளும் இவர் காலத்தில் தான் தோன்றின. அதனால் இவரும் மக்களிடையே செல்வாக்கிழந்தார். அதன் காரணமாய் இவரது அமைச்சரவையும் கலைக்கப்பட்டது.

கிரென்வில்லுக்குப் பிறகு ராக்கிங்ஹாம் (Rockhingham) என்ற செல்வாக்கு மிக்க பிரபுவைக் கொண்டு அமைச்சரவையை மூன்றும் ஜார்ஜ் அமைத்தார். அவர் உயர்ந்த கொள்கையுடையவர். பத்திர முத்திரைச் சட்டத்தையும், வில்க்ஸ் மேலிருந்த வழக்குகளையும் ரத்து செய்தார். இவருடைய இத்தகைய செயல்கள் ஜார்ஜுக்குப் பிடிக்கவில்லை. அதனால் இவரையும் தம் நண்பர்களின் உதவியால் பதவியைவிட்டு ஓட்டி விட்டார். அதன் பின் அவர் மூத்த பிட்டினை அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். அவரும் கட்சிச் சார்பற்ற ஓர் அமைச்சரவையை ஏற்படுத்தினர். நோய் காரணமாகப் பிட் அரசியல் விவகாரங்களில் அதிகப் பங்கு ஏற்க முடியவில்லை. அவருக்குப் பிடிக்காத பல செயல்கள் அவர் பெயரால் செய்யப்பட்டன. அதனால் அவர் மனம் நொந்து தமது பதவியை 1768ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். அவருக்குப்பின், கிராப்டன் கோமகன் (Duke of Graften) தலைமை அமைச்சரானர். அவர் அரசியல் விவகாரங்களில் அதிக ஊக்கம் காட்டவில்லை. அதனால்

பல கண்டனக் குரல்கள் இவரை எதிர்த்து எழுந்தன. 1770ஆம் ஆண்டில் இவரும் தமது பதவியை ராஜிநாமா செய்தார்.

கிராப்டன் கோமகன் தமது பதவியை ராஜிநாமா செய்த பின்புதான் ஜார்ஜின் எண்ணம் கை கூடியது. தம்முடைய சொந்த ஆட்சியைச் செலுத்த இதுவே நேரம் என நினைத்தார். அத்துடன் பிட் அரசியலிலிருந்து விலகியது ஜார்ஜின் தனியாட்சிக்கு உதவியாயிருந்தது. டோரித் தலைவரான நார்த் பிரபு (Lord North) தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் அரசர் ஆட்டியபடி எல்லாம் ஆடினர். எல்லாக் கொள்கைகளையும் அரசரே வகுத்தார். நீதி, சிவில், இராணுவம், சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் பதவி வழங்கும் அதிகாரத்தை ஜார்ஜ் தம்மிடமே வைத்துக் கொண்டார், ஆகவே நார்த் பிரபு அரசரின் கைப் பொம்மையாக விளங்கினர். அத்துடன் விக்கு கட்சியும் ஒற்றுமையின்றிப் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. விக்கு கட்சியின் இரண்டுபட்ட நிலையின் காரணமாக நார்த் பிரபுவைப் பன்னிரண்டாண்டுகள் அரசரால் பதவியில் வைத்திருக்க முடிந்தது.

மூன்றும் ஜார்ஜின் தனியாட்சி 1770ஆம் ஆண்டிலிருந்து 1782ஆம் ஆண்டு வரை நிலவியது. இக்காலத்தில் ஜார்ஜ் தாம் நினைத்ததையெல்லாம் செயல்படுத்தினர். பாராளுமன்றத்தின் மூலம் தாம் விரும்பிய சட்டங்களைக் கொணர்ந்தார். தாம் விரும்பியவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கொண்டுவந்தார் இதற்கு முன்பு விக்குகள் பதவியிலிருக்க எந்தெந்த முறைகளைக் கையாண்டார்களோ அவைகளையே இவரும் பின்பற்றினர். பிறகு இவருடைய தனியாட்சிக்கு நாட்டில் எதிர்ப்பு தோன்றியது. பர்க் (Burke), வில்க்ஸ் (Wilkes), சார்லஸ் ஜேம்ஸ் ஃபாக்ஸ் (Charles James Fox), சாத்தம் (Chatham), ஷெல்பர்ன் (Shelbourne) போன்றவர்கள் தங்களுடைய எழுத்துக்களாலும், பேச்சுகளாலும் ஜார்ஜின் தனியாட்சியைக் கண்டித்தனர். இக் காலத்தில் தான் வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் பிரச்சினைகளும் எழுந்தன. குடியேற்ற நாடுகளின்பால் இங்கிலாந்து தன் அதிகாரத்தைச் சுமத்த முயற்சி செய்தது. அதனல் கொள்கைகளின் அடிப்படையில் சச்சரவுகள் ஆரம்பமாயின. ஜார்ஜினுடைய பிடிவாதத்தினுல் சூழ்நிலை மிகவும் மோசமடைந்தது. அதன் பிரதிபலிப்பாகத்தான் அமெரிக்க சுதந்திரப் போர் ஆரம்பமானது. அதனுல் இங்கிலாந்தில் ஜார்ஜின் தனியாட்சிக்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அவரால் நாட்டின் உதவியைப் பெற முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஹனே

வரியிலிருந்து படை வீரர்களைத் திரட்டவேண்டிய கட்டாயம் ஜார்ஜுக்கு ஏற்பட்டது. இப்படை வீரர்கள் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் பெரும் அட்டூழியங்களைச் செய்தனர். வட அமெரிக்காவில் போர் செய்வதற்குத் தகுந்த தளபதிகளைத் தேர்ந்தெடுப்பதில் ஜார்ஜுக்குத் தோல்விதான் ஏற்பட்டது. இங்கிலாந்தின் விரோதிகள் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை ஆதரித்தனர். கடைசி முடிவாக 1781ஆம் ஆண்டில் யார்க் டவுனில் (York-Town) ஆங்கிலப் படைகள் சரணடைந்தன. அரசரையும் நார்த் பிரபுவையும் எதிர்ப்பதில் ஈடுபட்ட ஆங்கில மக்களில் பெரும் பகுதியினர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குப் பரிவுணர்வு காட்டினர். 'அரச பதவியின் அதிகாரம் அதிகரித்துள்ளது, அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அதைக் குறைக்கவேண்டுவதவசியம்' என்ற தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் டன்னிங் (Dunning) என்பவர் கொண்டுவந்தார். இத் தீர்மானத்தைப் பொதுமக்கள் சபை நிறைவேற்றியது. அதனால் 1782ஆம் ஆண்டில் நார்த் பிரபு தமது பதவியை ராஜிநாமா செய்தார். விக்கு கட்சியினர் மீண்டும் தலையெடுத்தனர்.

பின்னர் விக்கு கட்சியின் தலைவரான ராக்கிங்ஹாம் இரண்டாம் தடவையாகத் தம் அமைச்சரவையை உருவாக்கினர். இதில் ஷெல்பர்ன், ஃபாக்ஸ், பர்க் ஆகியோரும் உறுப்பினர்களாக இருந்தனர். ராக்கிங்ஹாம் பல நடவடிக்கைகளால் அரசரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முயன்றார். 1782 ஆம் ஆண்டில் ராக்கிங்ஹாம் கொண்டுவந்த சிவில் பட்டியல் சட்டத்தால் (Civil List Act) அரசரின் ஆதரவில் உள்ள பல பதவிகள் ஒழிக்கப்பட்டன. மேலும் இச் சட்டத்தால் வருவாய்த்துறை, தபால்துறை அலுவலர்கள் பொதுமக்கள் சபையில் இடம் பெறாததோடு, தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையையும் இழந்துவிட்டார்கள், ஒப்பந்தக்காரர்களின் சட்டத்தால், ஒப்பந்தக்காரர்கள். சபையில் அமரும் தகுதியிழந்தனர். பர்க் கொண்டுவந்த பதவிச் சட்டத்தால் (Place Act) அரசரின் ஊழல்கள் பெருமளவுக்குக் குறைந்தன. பதவியிலிருந்த பலருக்கு வாக்குரிமை இச் சட்டத்தால் மறுக்கப்பட்டது. 1782 ஆம் ஆண்டில் ராக்கிங்ஹாம் இறந்ததும் ஷெல்பர்ன் (Shelbourne) பிரதமரானர். இவருடைய அமைச்சரவையில் இளையபிட் (Pitt the Younger) நிதித்துறைத் தலைவராக அமர்த்தப்பட்டார். ஓராண்டிற்குள், விக்கு கட்சியில் மீண்டும் பிளவு ஏற்பட்டது. விக்கு கட்சியின் ஒரு பிரிவினர் நார்த்தைப் பிரதம அமைச்சராக்க முடிவெடுத்தனர். அதன் காரணமாக ஷெல்பர்ன் அமைச்சரவை நீக்கப்பட்டு, ஃபாக்ஸ், நார்த் ஆகியோரைக் கொண்ட ஒரு கலப்பு

அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டது. இக் கலப்பு அமைச்சரவையை மக்கள் வெறுத்தனர். அரசர் தமது சொந்த செல்வாக்கைப் பயன் படுத்தி ஃபாக்ஸின் இந்திய மசோதாவை (The Fox India Bill) பிரபுக்கள் சபையில் தோற்கடிக்கச் செய்து அமைச்சரவையைப் பதவியிலிருந்து நீக்கினர். பின்னர் 1783 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆட்சியை ஏற்று நடத்துமாறு இளையபிட் அரசரால் கேட்டுக் கொள்ளப்பட்டார். இவர் மக்களிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்றிருந்தார். அரசரும் இவரிடம் அதி காரங்கள் அனைத்தையும் ஒப்படைத்தார். அதனால் மூன்றும் ஜார்ஜின் தனியாட்சியும் முடிந்தது. இங்கிலாந்தில் மூன்றும் ஜார்ஜின் தனியாட்சியால் பல விளைவுகள் ஏற்பட்டன. முத லாவதாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இழக்க நேர்ந்தது. இரண்டாவதாக விக்குகளின் அதிகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. விக்குகளின் செல்வாக்கைக் குறைத்ததால் மூன்றும் ஜார்ஜ் இங்கிலாந்தில் ஜனநாயகத்திற்கு வழி வகுத் தார். மூன்றுவதாக நாட்டில் கட்சிமுறை திருத்தி அமைக்கப் பட்டது. விக்கு கட்சியினர் தமது லஞ்ச ஊழல் முறையி னைக் கைவிட்டு, நாட்டிற்கு நல்ல ஒரு ஜனநாயக முறையி லான திட்டத்தைக் கொடுக்க முன்வந்தனர். ஆகவே ஜார்ஜின் தனியாட்சி ஒரு புதிய விக்கிஷத்தை (New Whiggism) ஏற்படுத்த வழிவகுத்தது. கிரீன் (Green) என்ற அறிஞர் 'மூன்றும் ஜார்ஜின் தனியாட்சி ஜனநாயகக் குடியரசு ஏற்பட முதற்படியாக அமைந்தது' என்று கூறுகின்றார்.

ஜான் வில்க்ஸ் (John wilkes) என்பவரோடு தொடர்புடைய பல்வேறு அரசியல் பிரச்சினைகளைப்பற்றிய விளக்கமின்றி, இக் கால த்தில் அரசியலமைப்பு வரலாறு நிறைவு பெறாது. இவர் மூன்றும் ஜார்ஜ் காலத்தில் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்த ஒருவ ராவார். இவர் கூடா ஒழுக்கமுடையவர். ஆனால் மிகவும் கெட்டிக்காரர், புத்திசாலியானவர். எதைப்பற்றியும் வெட்கப்படா தவர், அரசியலில் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையுடையவர். இவர் மூன்றும் ஜார்ஜ், பூட் ஆகியோரின் கொள்கைகளை எதிர்ப் பவர். மூத்த பிட் பதவி விலக்கப்பட்டதனாலும், 1763 ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதனாலும் மூன்றும் ஜார்ஜும் பூட்டும் மக்களின் வெறுப்புக்குள்ளானார்கள். இத்தகைய சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத் தைத் தாக்குவதற்கென்றே ஜான் வில்க்ஸ் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அதன் பெயர் 'நார்த் பிரிட்டன்' (The North Briton) ஆகும். பூட்டின் கொள்கையை 'தி பிரிட்டன்' (The Briton) என்னும் பத்திரிகை ஆதரித்தது. நார்த் பிரிட்டனின்

45 வது இதழில், அமைச்சரவையையும், அரசரின் அரியணைச் சொற்பொழிவையும் ஜான் வில்க்ஸ் வன்மையாகத் தாக்கியிருந்தார். அத்துடன் பாரிஸ் உடன்படிக்கையைப்பற்றி அதில் சொல்லப்பட்டவை பொய்யானவையென அவர் எடுத்து எழுதியிருந்தார். அரசர் அதையறிந்தும், தமக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாகக் கருதி வில்க்ஸ் மீது வழக்குத் தொடரும்படி உத்தர விட்டார். அப்போது பிரதம அமைச்சராயிருந்த கிரன்வில்லி, வில்க்ஸின் தாக்குதலைப் பொய்க்குற்றச்சாட்டெனக் கண்டனம் செய்தார். அப்போது உள்நாட்டு அமைச்சராக (Secretary of State) இருந்த ஹாலிபாக்ஸ் பிரபு உடனே ஒரு பொது பற்றாணையை (General warrant) பிறப்பித்து, அதன்மூலம் வில்க்ஸ் உள்பட 50 பேர்களைக் கைது செய்து விசாரணைக்குக் கொணர்ந்தார். வில்க்ஸ் பாராளுமன்ற உறுப்பினராகையால் அரசாங்கத்தின் இந் நடவடிக்கை இரு பிரச்சினைகளை எழுப்பியது. அவை பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்படலாகாதெனும் சிறப்புரிமைப் பிரச்சினையும், பொதுப் பற்றாணையின் முறைமையும் ஆகும். பொதுப் பற்றாணை என்பது தனிப்பட்ட எந்த நபரையும் குறிப்பிடாமல் பொதுவாக ஒரு குறிப்பிட்ட ஒரு காரியத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்யும்படியும், அவர்கள் வீட்டைச் சோதனை செய்யும்படியும் பிறப்பிக்கப்படும் உத்தரவாகும். இங்ஙனம் ஓர் அதிகாரிக்கு உத்தரவிட உள்நாட்டு அமைச்சருக்கு உரிமையுண்டு. இதன்படிதான் ஹாலிபாக்ஸ் பிரபு தம் உதவி அமைச்சரான வுட் என்பவருக்கு மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். ஒரு காலத்தில் நாட்டில் சதிகள், கலகங்கள் ஆகியவைகளை ஒடுக்க, இவ் வதிகாரம் உள்நாட்டு அமைச்சருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அமைதிக்காலத்தில் இவ் வதிகாரத்தைப் பயன்படுத்தலாமா? என்ற கேள்வியும், பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்யலாமா? என்ற கேள்வியும் நீதிமன்றத்தில் எழுந்தன. பாராளுமன்றச் சிறப்புரிமையின்படி, பாராளுமன்ற உறுப்பினரைக் கைது செய்யக் கூடாதெனக் கூறப்பட்டதால் வில்க்ஸ் சிறையினின்றும் விடுதலை பெற்றார். பின்னர் நடைபெற்ற விசாரணையில் தலைமை நீதிபதி பிராட் (Pratt) என்பவர் பொதுப் பற்றாணையைச் சட்டவிரோதமெனக் கூறியதோடு வில்க்ஸுக்கு அவரைச் சட்ட விரோதமாகச் சிறையிட்டதற்கும் பெரும் இழப்பீட்டுத்தொகை கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

ஜான் வில்க்ஸ் வழக்கில் அரசாங்கம் நீதிமன்றத்தில் தோல்வியடைந்தபோதிலும், கிரன்வில்லி வில்க்ஸை மன்னிக்க விரும்பவில்லை. அதற்காக அவர் பொதுமக்கள் சபையின் உதவியை நாடினார். பொதுமக்கள் சபையும் நார்த் பிரிட்டனின்

45 வது இதழை அவதூருன பொய்க் குற்றச்சாட்டு என அறிவித்து, அதை வெளியிட்ட ஆசிரியர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதிலும், அவருக்குப் பாராளுமன்றச் சிறப்புரிமையில்லையெனக் கூறியது. அதனுல் வில்க்ஸ் சபையினின்றும் வெளியேற்றப்பட்டார்.

ஜான்வில்க்ஸின் மீது 'பெண்ணைப்பற்றிய கட்டுரை' (Essay on Woman) என்ற ஒரு அவதூறு நூலை எழுதியதற்காகப் பொதுமக்கள் சபை மீண்டும் ஒரு வழக்குத் தொடர்ந்தது. சபையின் முன் வரும்படி அது வில்க்ஸுக்கு ஆணையிட்டது. ஆனுல் வில்க்ஸ் வராமல் ஃபிரான்சுக்கு ஓடிவிட்டார். அவர் இல்லாதவேளையில் அவர் பொதுமக்கள் சபையினின்றும் நீக்கப்பட்டார். அத்துடன் சமூக விலக்கம் (Contlawed) செய்யப்பட்டார்.

1768 ஆம் ஆண்டில் வில்க்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பினுர். மிடில் செக்ஸ் (Middle sex) தொகுதியில் தேர்தலில் நின்று பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனுல் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சமூக விலக்கம் செய்யப்பட்டதற்காக வில்க்ஸ் கைது செய்யப்பட்டார். இதன் எதிரொலியாக நாடெங்கும் பல கலகங்கள் ஏற்பட்டன. நீதிமன்றம் வில்க்ஸுக்கு 22 மாத சிறைத்தண்டனையும் (ஆயிரம்) 1000 பவுன் அபராதமும் விதித்து தீர்ப்புக் கூறியது.

வில்க்ஸ் வெய்மவுத் பிரபு (Lord Waymouth) என்ற இன்னெரு உள்நாட்டு அமைச்சரைத் தாக்கி எழுதியதற்காக மறுமுறையும் பொதுமக்கள் சபையினின்றும் வெளியேற்றப்பட்டார். 1769ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் வில்க்ஸ் மீண்டும் பொதுமக்கள் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனுல் பொதுமக்கள் சபை இவரைச் சபையில் அமர மறுத்தது. மறுபடியும் நான்காவது முறையாக இவர் தேர்தலில் வெற்றி பெற்றுர். ஆனுல் பொதுமக்கள் சபை இவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற காலனல் லட்டரால் (Colonel Luttrell) என்பவரைத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவித்தது. பொதுமக்கள் சபையின் இச் செயல் ஒரு பெரிய அரசியலமைப்புப் பிரச்சினையை எழுப்பியது. பாராளுமன்றத்தில் உறுப்பினராகும் தகுதியை நிர்ணயிப்பது வாக்காளர்களா ? அல்லது பொதுமக்கள் சபையா ? என்ற கேள்வி எழுந்தது. வாக்காளர்களின் விருப்பத்தைப் புறக்கணித்து, அவர்களின் அடிப்படை உரிமைகளையே அவமதித்து, உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பொதுமக்கள் சபையானது கைக்கொள்ள முன்வந்ததைப் பொதுமக்கள் கண்டித்தனர். இலண்டன் தெருக்களில் பல கலகங்கள்

நடைபெற்றன. வில்க்ஸ் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார். வில்க்ஸ் சிறையில் இருந்த போதிலும், அவருக்கு மக்களின் செல்வாக்கு அதிகரித்தது. வில்க்ஸ் லண்டனில் நகரத் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1774ஆம் ஆண்டு மீண்டும் அவர் மிடில் செக்ஸிலிருந்து பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைக்கண்ட பாராளுமன்றம் அவரைப் பொதுமக்கள் சபையினின்றும் விலக்கி வைத்த தீர்மானத்தைத் திருப்பிப் பெற்றுக் கொண்டது. பொதுமக்கள் சபையில் அமரவும் அனுமதியளித்தது. வில்க்ஸின் வழக்கு இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். பாராளுமன்றச் சீர்திருத்தக் கோரிக்கையை எழுப்ப இது மிகவும் உதவியது. அமைச்சரவையோ அல்லது பொதுமக்கள் சபையோ அல்லாமல் மக்களே தமக்கு விருப்பமானவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றவர்கள் என்ற கொள்கை நிலைநிறுத்தப்பட்டது. அத்துடன் பொதுமக்கள் போராட்டம் அரசாங்கத்தையும் பொதுமக்கள் சபையையும் வில்க்ஸைப் பாராளுமன்றத்தில் அமர்த்த வற்புறுத்தியது. பொதுமக்கள் போராட்டத்திற்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இதிலிருந்துதான் மக்கள் குரல் நாட்டின் அரசியலில் சிறப்பிடம் பெற்றது. வில்க்ஸின் வழக்கு இங்கிலாந்தில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உதவியது. அத்துடன் இங்கிலாந்தின் சட்ட வரலாற்றிலே பொது பற்றுணையைச் சட்ட விரோதமாக்கியது குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

பொதுமக்கள் சபையின் நடவடிக்கைகளைச் செய்தித் தாள் வெளியிடும் உரிமைக்காகவும் வில்க்ஸ் போராடினார். பல இலண்டன் செய்தித்தாள்களைப் பாராளுமன்ற விவாதத்தை வெளியிடுமாறு இவர் கேட்டுக் கொண்டார். விவாதங்களைச் செய்தித் தாள்களில் வெளியிட்ட ஆசிரியர்களைச் சபையின் முன் வரவேண்டுமெனப் பொதுமக்கள் சபை பணித்தது. வர மறுத்தவர்களைச் சிறைப்படுத்த கட்டளை பிறப்பித்தது. இவ் வழக்கு நகரத் தந்தையான வில்க்ஸ் முன் கொண்டு வரப்பட்டது. இவர் ஆசிரியர்களை விடுதலை செய்தார். பின்னர் சபையின் விவாதங்கள் வெளியிடப்படுவதைத் தடுக்கும் முயற்சியைப் பொதுமக்கள் சபை கைவிட்டு விட்டது.

இளைய பிட் (Pitt the Younger)

இவர் மூத்த பிட்டின் இரண்டாவது மகனுவார். இவர் தமது 21ஆவது வயதிலேயே பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்

தெடுக்கப்பட்டார். 1782ஆம் ஆண்டில் ஷெல் பர்ன் பிரபுவின் அமைச்சரவையில் நிதித் துறை முதல்வராக (Chancellor of Exchequer) அமர்த்தப்பட்டார். பிறகு 1783ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மூன்றும் ஜார்ஜ் அரசரால் இளைய பிட் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1783ஆம் ஆண்டிலிருந்து 1801ஆம் ஆண்டுவரை இளைய பிட் தொடர்ந்து பதவி வகித்தார். 1801ஆம் ஆண்டிலிருந்து 1804ஆம் ஆண்டுவரை இவர் பதவி வகிக்கவில்லை. 1801ஆம் ஆண்டில் இளைய பிட்டுக்குப் பதிலாக ஆடிங்டன் (Addington) என்பவர் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவரால் நாட்டின் பல சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் போகவே பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இவருக்குப் பின் பிரதம அமைச்சராக யாரை நியமிப்பது என்ற பிரச்சினை எழுந்தது. இளைய பிட் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்ற பொதுக் கருத்து மக்களிடையே நிலவியது. ஆகவே, 1804ஆம் ஆண்டில் இளைய பிட் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். நெப்போலியப் போர்களை நிர்வகித்ததில் ஏற்ற சிரமத்தால் அவர் 1806ஆம் ஆண்டிலேயே மரணமடைந்தார்.

இளைய பிட்டின் உள்நாட்டுக் கொள்கை

1783இல் பிட் பதவியேற்றது கேபினெட் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும். பிட் வெளிப்படையாகப் பிரதம அமைச்சரின் நிலையைக் கோரிப் பெற்றார். தற்கால அமைச்சரவையின் தந்தையெனப் பிட்டை அழைக்கலாம். கேபினெட் ஆட்சி முறை அவர் காலத்து நன்கு உறுதியுற்றது. கேபினெட்டில் அவரது தலைமையைக் கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இளைய பிட்டுக்கு, 'பொதுமக்கள் பெருமகன்' (Great Commoner) என்று புகழ்பெற்ற தம் தந்தையைப் போலவே பொதுமக்கள் சபையின் பெரும் ஆதரவும் செல்வாக்கும் இருந்தன. பொதுமக்கள் சபையில் முன்பெல்லாம் இருந்தது போன்ற சுயநலக் கும்பல்களும் கோஷ்டிகளும் மறைந்தன. அவைகளுக்குப் பதிலாக 'விக்குகள்', 'டோரிகள்' என்ற இரு தெளிவான கட்சிகள் தோன்றின. டோரிக் கட்சியின் தலைவராக இளையபிட் விளங்கினார். இவர் டோரி கட்சியைச் சேர்ந்தவராயினும் இங்கிலாந்தில் பல முற்போக்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயற்சி செய்தார்.

பாராளுமன்றத்தைச் சீர்திருத்த இவர் பெரிதும் விரும்பினார். அதற்காக 1785 ஆம் ஆண்டில் நலிந்துபோன தொகுதிகளுக்கான வாக்குரிமையை நீக்கும் மசோதாவைக் கொண்டுவந்தார்.

இம் மசோதாவை பர்க் போன்ற அறிஞர்கள் எதிர்த்தனர். எனவே பிட் பாராளுமன்றச் சீர்திருத்த முயற்சியைக் கைவிட்டார்.

பாராளுமன்றத்தின் அதிகாரம் எவ் வகையிலும் குறைக்கப்படலாகாதென்ற கொள்கையை பிட் கொண்டிருந்தார். 1788ஆம் ஆண்டில் மூன்றும் ஜார்ஜ் மனநோய்க்குள்ளானர். அப்பொழுது, யார் பாதுகாப்பாளராக இருப்பதென்ற வினு எழுந்தது. ஃபாக்ஸ், பர்க் போன்ற விக்கு கட்சியினர் பாதுகாப்பாளர் (Regent) பதவியை யாருடைய அனுமதியுமின்றி வேல்ஸ் இளவரசர் பெறலாமென்றும், அது அவருடைய பிறப்புரிமை என்றும் வாதாடினர். ஆனல் பாதுகாப்பாளரை அமர்த்துவதும், அவருடைய அதிகாரங்களை நிர்ணயிப்பதும் பாராளுமன்றத்தின் பணியாகுமென பிட் வலியுறுத்தினர். அரசியலில் முற்போக்குக் கொள்கையினர் என எண்ணப்பட்ட விக்கு கட்சியினர் அரசரின் தெய்விக உரிமைக் கொள்கையை ஆதரித்து, பாராளுமன்றத்தின் அடிப்படை உரிமைக்கே கேடு விளைவிக்க எண்ணியபோது, பிற்போக்கு டோரிக்கட்சியின் தலைவரான பிட் அதைக் காக்க முன்வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் ஒருவரின் உதவியுமின்றிப் பிரச்சினை தானகவே தீர்ந்துவிட்டது. எப்படியெனில் அரசர் அதற்குள் குணமடைந்துவிட்டார். ஆனல் இந் நிகழ்ச்சியின் அடிப்படையில் 1840 இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இக் காலத்தின் முக்கிய சட்டங்களில் ஃபாக்ஸ் நிறைவேற்றிய பொய்க்குற்றச்சாட்டுச் சட்டம் (Libel Act, 1792) தனியுரிமைப் பாதுகாப்பிற்கான ஒரு சிறப்பு நடவடிக்கையாகும். இச் சட்டத்தின்படி, அவதூறு வழக்குகளில் தீர்ப்பு வழங்க ஜூரர்கள் உரிமை பெற்றனர். ஓர் அவதூறு வழக்கில் குற்றத்தின் தன்மையை முடிவு செய்யும் உரிமை நீதிபதிகளுக்கேயுரியதென்பது இச் சட்டத்தால் மாற்றப்பட்டது. இச் சட்டத்திற்கு எதிர்ப்பு தோன்றியது. இம் மசோதாவைக் கொண்டுவந்தவர் தம் எதிரியாக இருந்தபோதிலும், நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் பிட் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மசோதா சட்டமாவதற்கு உதவி செய்தார்.

இங்ஙனம் முற்போக்குக் கொள்கைகளை ஆதரித்துவந்த பிட் சூழ்நிலை காரணமாக சீர்திருத்த எதிர்ப்பு வாதியாக மாறினர். ஃபிரஞ்சுப் புரட்சியின் காரணமாய் ஏற்பட்ட விளைவுகளால் அச்சமுற்றுப் பல அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்தினர். தொழிலாளர்கள் கழகங்கள் நிறுவும் உரிமை, கூட்டங்கள் கூட்டு

முரிமை முதலியன தடை செய்யப்பட்டன. 1795இல் கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலியன மக்களுக்கு மறுக்கப்பட்டன. 1794 ஆம் ஆண்டில் ஆட்கொணர் ஆணைச்சட்டத்தை (Habeaus Corpus Act) நிறுத்தி வைக்கும் சட்டம் இயற்றப்பட்டது. பல ஆயிரக் கணக்கானவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

பொருளாதாரக் கொள்கையில் பிட் ஒரு சிறந்த நிபுணராகத் திகழ்ந்தார். நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க அவர் துணிவோடு புதிய கொள்கைகளைக் கடைப்பிடித்தார். அதற்காக நிதித்துறையைத் தம்மிடத்திலேயே வைத்துக் கொண்டார். 1784ஆம் ஆண்டில் தாம் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் பல பொருள்களின் மீதான உச்ச வரியைக் குறைத்தார். உதாரணமாக தேயிலை மீது விதித்திருந்த 50 சதவிகித வரியை 12½ சதவீதமாகக் குறைத்தார். இதன் காரணமாக இலாபம் குறைந்ததால் கடத்தல் வியாபாரம் குறைந்தது. அவர் பதவியேற்ற போது நாட்டின் கடன் பெருகியிருந்தது. அதைக் கண்டு அவர் அஞ்சவில்லை. நாட்டின் வருமானத்தைப் பெருக்க அவர் சில நேர்முக வரிகளை (Direct Taxes) விதித்தார். சாராயம், புகையிலை போன்ற பொருள்களின் மீது கலால் வரி (Excise duty) விதித்தார். சுங்க வரிகளை வசூலிக்கும் முறைகளையும் அவர் எளிமையாக்கினுர். நாட்டுக் கடனைக் கழிக்க பிட் 1786ஆம் ஆண்டில் ஒரு கழிவு நிதியை (Sinking Fund) ஏற்படுத்தினுர். அதன்படி ஆண்டு ஒன்றுக்கு ஒரு மில்லியன் பவுன்கள் கடனைக் கழிப்பதற்கென ஒதுக்கப்பட்டது. இவ்வாறு செய்வதால் நாட்டுக் கடனை 28 ஆண்டுகளில் அடைத்துவிடலாம் என எண்ணினுர். ஆனுல் இங்கிலாந்து ஃபிரான்சுப்போரில் ஈடுபட்டதனுல் அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை. கடன்களைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் கடன் வாங்கும் சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டு விட்டது.

1786ஆம் ஆண்டில் பிட் ஃபிரான்சோடு ஒரு வியாபார உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இதனுல் இங்கிலாந்தின் வியாபாரம் பெருகும் என நினைத்தார். அவ்வுடன்படிக்கைப்படி ஃபிரான்சினுடைய ஒயின், பிராந்தி முதலியவைகளின்மீது விதிக்கப்பட்டிருந்த சுங்கவரி குறைக்கப்பட்டது. ஃபிரான்சு அரசாங்கமும் இங்கிலாந்தின் பருத்தி, கம்பளி, இரும்பு முதலிய பொருள்களின் மீது விதித்திருந்த சுங்க வரியைக் குறைத்தது. இவ் வுடன்படிக்கையால் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் ஃபிரெஞ்சுப்போர்களால் தடைப்பட்டன. பலகாலமாய் இங்கிலாந்தின்

எதிரியாகச் செயல்பட்ட ஃபிரான்சோடு பிட் உடன்படிக்கை செய்துகொண்டதைப் பலர் வன்மையாகக் கண்டித்தனர். அவர்களுக்கெல்லாம் பிட் ஒரே வார்த்தையில் பதிலளித்தார். அங்ஙனம் கூறுவது 'சிறுபிள்ளைத்தனம்' (Childish) என வர்ணித்தார்.

இளைய பிட்டின் வெளிநாட்டுக் கொள்கை

இளைய பிட்டின் வெளிநாட்டுக் கொள்கையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி அவர் பதவியேற்றதிலிருந்து 1793ஆம் ஆண்டு வரையாகும். இரண்டாம் பகுதி 1793ஆம் ஆண்டிலிருந்து 1801ஆம் ஆண்டு வரையிலும், 1804ஆம் ஆண்டிலிருந்து 1806ஆம் ஆண்டு வரையிலுமாகும். முதற் பகுதியில் பிட் அமைதியையும் சமாதானத்தையுமே கடைப்பிடித்தார். இக் காலத்தில் இங்கிலாந்தின் பலம் உறுதியாயில்லையென பிட் உணர்ந்தார். 1783ஆம் ஆண்டில் இங்கிலாந்து வட அமெரிக்காவில் தனது குடியேற்ற நாடுகளை இழந்து பாரிஸ் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. ஃபிரான்சும் ஸ்பெயினும் குடும்பப்பற்றுக் காரணமாய் ஒன்ருகச் சேர்ந்து கொண்டன. ஏழாண்டுப் போரிலிருந்து ஃபிரான்சும் ஆஸ்திரியாவும் கூட்டு சேர்ந்து கொண்டன. பிரஷ்யா நாட்டரசர் ஃபிரடிரிக் (Frederick the Great) நடுநிலை வகித்தார். ஆனாலும் மூன்ரும் ஜார்ஜ் 1783ஆம் ஆண்டில் தன்னைக் கலந்தாலோசிக்காமல் பாரிஸ் உடன்படிக்கை செய்து கொண்டதால் இங்கிலாந்தின் மீது கோபமுற்றிருந்தார். இந்நிலையில் ரஷ்யாவின் ஆதிக்கம் மத்திய தரைக் கடலில் வளர்ந்தது. இது இங்கிலாந்தின் கப்பற் படைக்குச் சவால் விடும் சூழ்நிலையை உருவாக்கியது.

இத்தகைய கடினமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டிய நிலையில் பிட் இருந்தார். அவர் மிகவும் அதிருஷ்டசாலிதான். ஏனெனில் சர்வதேசச் சூழ்நிலைகள் இங்கிலாந்திற்குச் சாதகமாக மாறிக் கொண்டிருந்தன. 1786 ஆம் ஆண்டில் பிரஷ்யாவில் பிரடரிக் இறந்ததால் அவர் மகன் இரண்டாம் ஃபிரடரிக், வில்லியம் அரியணையில் அமர்ந்தார். இவர் தம் தந்தையைப் போலல்லாமல் இங்கிலாந்துடன் நட்புறவாக இருக்க விரும்பினர். ஹாலந்தில் கூட சில மாறுதல்கள் ஏற்பட்டன. அப்பொழுது ஐந்தாம் வில்லியம் ஹாலந்தின் அரசராக இருந்தார். அதே சமயத்தில் ஹாலந்தில் குடியரசுக் கட்சி (Republican Party). ஆரஞ்சு கட்சி (Orange Party) என்ற இரண்டு கட்சிகள் இருந்தன. ஃபிரான்சின்

தூண்டுதலினால் குடியரசுக் கட்சி ஐந்தாம் வில்லியத்தை எதிர்த்தது. அத்துடன் ஐந்தாம் வில்லியத்தின் மனைவி பிரஷ்யா நாட்டு ஃபிரடரிக் இரண்டாம் வில்லியத்தின் தங்கையாக இருந்த தனால் ஐந்தாம் வில்லியத்தைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்றும் குடியரசுக் கட்சி திட்டம் தீட்டியது. அதன்படியே செய்தது. அத்துடன் ஐந்தாம் வில்லியத்தின் மனைவி குடியரசுக் கட்சியால் குறை கூறப்பட்டார். பிரஷ்யா நாட்டரசர் தம் தங்கையைக் குறை கூறியதற்காக குடியரசுக் கட்சி மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்தினார். மறுக்கவே, அவர் இங்கிலாந்துடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். இதனால் ஐந்தாம் வில்லியத்தை மறுபடியும் ஹாலந்து நாட்டு அரியணையில் அமரவைக்கலாம் என நினைத்தார். பிரஷ்யா நாட்டுப் படைகள் ஹாலந்து நாட்டிற்குள் நுழைந்து ஐந்தாம் வில்லியத்தை அரியணையில் அமர்த்தியது. அதன் காரணமாய் ஃபிரான்சு நாட்டின் செல்வாக்கு ஹாலந்தில் குறைந்தது. பிறகு ஹாலந்து இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டாடியது. 1781ஆம் ஆண்டில் பிட் ஹாலந்து, பிரஷ்யா ஆகிய நாடுகளுடன் முக்கூட்டுறவு (Triple Alliance) செய்து கொண்டார்.

ஐரோப்பாவில் ரஷ்யாவின் வளரும் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென பிட் முயன்றார். ஸ்வீடனில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்தபோது முக்கூட்டுறவு நாடுகள் அதைத் தடுத்து விட்டன. 1791ஆம் ஆண்டில் டர்க்கிக்கும் (Turkey) ஆஸ்திரியா (Austria) வுக்கு மிடையே சமாதானம் செய்து வைத்ததால் மத்திய தரைக்கடலில் ரஷ்யாவின் செல்வாக்கு குறைக்கப்பட்டது.

இரண்டாவது பகுதியின், ஆரம்ப காலத்தில் பிட் ஃபிரான்சைப் பொறுத்தவரையில் சமநிலையை வகித்தார், 1793ஆம் ஆண்டில் ஃபிரான்சு ஆஸ்திரியா (Austria) மீதும் பிரஷ்யா (Prussia) மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. இந் நிலையில் (to Keepquiet) வாளா இருப்பது கடினம் என பிட் நினைத்தார். இதே ஆண்டில் ஃபிரான்சு இங்கிலாந்தின் மீதும் ஹாலந்து மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. ஆகவே இங்கிலாந்திற்குப் போர் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. அப் போர் 1795ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நீடித்தது. ஃபிரான்சோடு பிட் வேண்டா வெறுப்பாகப் போரிட்டார். ஃபிரான்சின் ஆற்றலை அவர் குறைத்து மதிப்பிட்டு விட்டார். அவர்தம் படைகள் பல குறைகளினால் ஃபிரான்சில் தோல்வியுற்றன. எனினும் மிக நெருக்கடியான நிலையில் பிரிட்டனைக் காப்பாற்றிய பெருமை அவரைச் சார்ந்ததாகும்.

குடியேற்ற நாடுகளில் அமைதியும் ஒழுங்கும் நிலவவேண்டுமென்பதே பிட்டின் ஆசையாகும். கனடாவில் ஆங்கிலேயரும் ஃபிரான்சுக்காரர்களும் போரிடுவதைத் தடுக்க அவர் 1791ஆம் ஆண்டில் கனடாச் சட்டத்தைக் (Canada Act) கொண்டு வந்தார். அதன்படி கனடா ஆங்கிலக் கனடா, ஃபிரெஞ்சுக் கனடா என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஆங்கிலக் கனடாவில் (British Canada) ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையினர் இருந்தனர். ஃபிரெஞ்சுக் கனடாவில் ஃபிரெஞ்சுக்காரர்கள் அதிகம் இருந்தனர். அவர்கள் தம்முள் சச்சரவிடாமல் தனித்தனி ஆளுநர்களால், தனித்தனி சட்டசபைகளைக் கொண்டு தம்மைத்தாமே ஆண்டுகொள்ள மேற்படி சட்டம் வழி செய்தது. அதே போன்று, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் (East India Company) ஆட்சியில் விளைந்த குழப்பத்தை ஒழுங்கு படுத்த அவர் 1784ஆம் ஆண்டில் பிட் இந்தியச் சட்டத்தைப் (Pitt's India Act) பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். அதன் மூலம் கம்பெனியின் ஆட்சி முறையானது பாராளுமன்றத்தின் கண்காணிப்பிற்குள் கொண்டு வரப்பட்டது. கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பைக் கண்காணிக்க கட்டுப்பாட்டுக் குழு (Board of Control) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்பின் கம்பெனியானது வியாபாரத் துறையில் மட்டுமே சுதந்திரமாக இயங்க முடிந்தது. அரசாங்க அலுவல்களைப் பொறுத்தவரை கம்பெனியானது கட்டுப்பாட்டுக் குழுவின் ஆணைகளுக்கேற்பவே இயங்க வேண்டியதாயிற்று.

இளையபிட்டின் அயர்லாந்துக் கொள்கை

இளையபிட்டின் அயர்லாந்துக் கொள்கை வெற்றியடையவில்லை. அயர்லாந்திற்கும் இங்கிலாந்திற்குமிடையே தடையற்ற வாணிபத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர் விரும்பினார். ஆனால், தமது கட்சியிலேயே அதற்கு எதிர்ப்பு இருந்ததனால் அவர் அதைச் செயல்படுத்தவில்லை. கத்தோலிக்கர்களுக்குள்ள தடைகளை நீக்கவேண்டுமென்ற எண்ணங் கொண்ட பிட்ஜ் வில்லியம் என்ற பிரபுவை பிட் அயர்லாந்தின் லெப்டினெண்ட் பிரபுவாக நியமித்தார். இதனால் அயர்லாந்தின் கத்தோலிக்கர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். பிட்ஜ் வில்லியம் கத்தோலிக்கர்களின் தடைகளை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபொழுது பிட்டினால் திருப்பி அழைக்கப்பட்டார். இதனால் அயர்லாந்தின் கத்தோலிக்கர்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. இருந்த போதிலும் இங்கிலாந்தும் அயர்லாந்தும் ஐக்கியமடைந்த பிறகு தாம் கத்தோலிக்கர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக பிட் வாக்குறுதியளித்தார். அதன்படி அயர்லாந்தின் சிக்கலைத் தீர்க்க,

1801ஆம் ஆண்டில் ஐக்கியச் சட்டத்தைக் (Act of Union) கொணர்ந்தார். இரு நாடுகளும் ஐக்கியமடைந்துவிட வேண்டுமென்றும், அயர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்கர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் யாவும் நீக்கப்பெற வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. கத்தோலிக்கர்களுக்கு விடுதலையளிப்பது தாம் இங்கிலாந்தின் மத ஏற்பாட்டைக் காப்பதாக எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணத்துக்கே விரோதமாகுமெனக் கூறி மூன்றும் ஜார்ஜ் அந்த ஐக்கியச் சட்டம் அமுலுக்கு வராமற் செய்தார். இதனுல் மனமுடைந்த பிட் 1801ஆம் ஆண்டில் தமது பதவியை ராஜிநாமா செய்தார்.

பிட் தமது பதவியை 1801ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்த பிறகு அரசரின் நெருங்கிய நண்பரான ஆடிங்டன் (Addington) என்பவர் பிரதம அமைச்சராகப் பதவியேற்ருர். ஃபிரான்சுடன் போரை மீண்டும் தொடங்க வேண்டியிருந்ததால், ஒரு வலிமையான பிரதம அமைச்சர் உடனடியாகத் தேவையென்ற கருத்து நிலவியது. அதனுல் 1804ஆம் ஆண்டில் மே மாதத்தில் ஆடிங்டன் பதவியிலிருந்து விலகினுர். உடனே பிட் மறுமுறையும் பிரதமராக்கப்பட்டார். ஆனுல் அவர் 1806ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மரணமடைந்து விட்டார். பின்பு, ஃபாக்ஸ் என்பவரை வெளிநாட்டு அமைச்சராகக் கொண்ட ஒரு திறமையாளர்களின் கலப்பு அமைச்சரவை பதவியேற்றது. 1806ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஃபாக்ஸ் இறந்ததால் அமைச்சரவை வலிவிழந்தது. அதனுல் இதை அரசர் பதவி நீக்கம் செய்தார். இது விக்குகளின் மீதான இறுதி வெற்றியாகும். இவருடைய ஆட்சிக் கால இறுதிவரை டோரிகளின் அமைச்சரவை தொடர்ந்து பதவியிலிருந்து வந்தது. பிட் இறந்ததும் கிரன்வில்லி (Grenville) பிரதமரானுர். இவரோடு சச்சரவிட்ட அரசர் இவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு போர்ட்லாண்டைப் (Portland) பிரதமராக்கினுர். போர்ட்லாண்டு இறந்ததும் பேர்சிவலின் தலைமையில் அமைச்சரவை உருவாகியது. 1812 இல் இவர் இறந்ததும் லிவர்பூல் பிரபு (Lord Liverpool) அமைச்சரவையை உருவாக்கினுர். இந்த அமைச்சரவை 15 ஆண்டுகள் பதவியிலிருந்தது. ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவால் மக்களாட்சிக் கருத்துகள் நாட்டில் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக நாட்டில் அமைதியின்மையும் சூழ்நிலையில் மாற்றமும் காணப்பட்டன.

15. இங்கிலாந்தும் அமெரிக்க சுதந்திரப் போரும்

மூன்ரும் ஜார்ஜின் காலத்தில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது அமெரிக்க சுதந்திரப் போராகும். மக்களாட்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய், மக்களின் அடிப்படை உரிமைகளின் இருப்பிடமாய், சுதந்திர நிதித்துறையைக் கொண்டதாய் இன்று அமெரிக்கா சிறந்து விளங்குவதற்குக் காரணம், அது சுதந்திர நாடாய் விளங்குவதேயாகும். அச் சுதந்திரத்தை அமெரிக்க மக்கள் பல தியாகங்களுக்குப்பின் பெற்றனர். அமெரிக்க மக்களின் உள்ளங்களில் புகைந்துகொண்டிருந்த சுதந்திர நெருப்பானது, மூன்ரும் ஜார்ஜின் பிடிவாத குணத்தாலும் ஆதிக்க ஆசையாலும் நன்கு கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து ஒரு போராக உருவெடுத்தது. அப் போரில் இங்கிலாந்து தோல்வியடைந்தது. அமெரிக்காவின் மக்களாட்சிக் கொள்கை வெற்றியடைந்து வேரூன்றியது. அவ் வெற்றியின் எதிரொலியாகத்தான் ஃபிரஞ்சுப் புரட்சியும் மற்றும் ஐரோப்பாவில் பல உரிமைக் கிளர்ச்சிகளும் ஏற்பட்டன.

அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கான காரணங்கள்

மக்களின் மனநிலை

அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவைகளில் அமெரிக்காவின் பதின்மூன்று குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களின் மனநிலை ஒன்ருகும். வரலாற்றை நோக்குமிடத்து, இங்கிலாந்திலிருந்து வெளியேறிய ஆங்கிலேயர் பலர் அமெரிக்காவில் குடியேற்ற நாடுகளை அமைத்தனர். அவர்கள் பல தொல்லைகளையும் கொடுமைகளையும் இங்கிலாந்தில் அனுபவித்ததனுல்தான் அந் நாட்டைவிட்டுச் சென்றனர். அதனுல் அவர்களுக்குத் தங்கள் தாய்நாட்டின்மீது பற்றும் பாசமும் கிடையாது. முதலாவது ஜேம்ஸ் காலத்தில் அவர்கள் மத அடிப்படையில் தண்டிக்கப்பட்டார்கள். அத்துடன் அவர்களுக்கு மதச்

சுதந்திரமும் வழங்கப்படவில்லை. சோதனைச் சட்டம், மாநகராட்சிச் சட்டம் போன்ற பல சட்டங்களால் தமக்குப் பல தீமைகள் ஏற்படும் என நினைத்துப் பல கத்தோலிக்கர்களும் இங்கிலாந்தை விட்டு வெளியேறி அமெரிக்காவில் குடிபுகுந்தனர். இங்கிலாந்தில் தண்டிக்கப்பட்ட பலர் கட்டாயமாக இக் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அத்துடன் இங்கிலாந்தில் தீய நடத்தைகளைக் கொண்ட பெரும்பாலோரும் இங்குக் குடியேற்றப்பட்டனர். 17 ஆம் நூற்றுண்டில், இங்கிலாந்தை விட்டுச் செல்லும் ஒவ்வொரு கப்பலும் சோதனை செய்யப்பட்டுதான் அனுப்பப்பட்டது. நல்லவர்கள் நாட்டை விட்டுச் சென்றுவிடக் கூடாது என்ற காரணத்தினால் தான் அவ்வாறு சோதனை செய்யப்பட்டது. ஆகவே இக் குடியேற்ற நாடுகளில் இருசாரார் குடியேறியிருந்தனர். அவர்கள் மதக் கோரிக்கைகளுக்காகக் குடியேறியவர்களும், தீய நடத்தையுள்ளவர்களும் ஆவார்கள். இந்த இருசாராருக்கும் இங்கிலாந்தின் மீது பற்றும் பாசமும் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. இவை மட்டுமல்லாமல், குடியேற்ற நாடுகளில் பெரும் அளவில் விவசாயம் செய்ய நிலமிருந்தது. ஆனால் விவசாயம் செய்யத்தான் போதிய ஆட்கள் அங்கு இல்லை. அதனால் ஆங்கில அரசாங்கம் வெளி நாட்டவர்களையும் குடியேற அங்கு அனுமதித்தது. அதன் காரணமாய்ப் பல டச்சுக்காரர்கள் பதின்மூன்று குடியேற்ற நாடுகளிலும் குடியேறினர். இவர்களுக்கும் இங்கிலாந்திடம் இயற்கையாகவே பற்று கிடையாது. செய்தி, போக்குவரத்துச் சாதனங்கள் அக் காலத்தில் மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் இக் குடியேற்ற நாடுகளுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நல்லதொரு தொடர்பு கிடையாது. ஆகவே இங்கிலாந்து இக் குடியேற்ற நாடுகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்வதில் வெற்றிபெறவில்லை. குடியேற்ற நாடுகளில் இங்கிலாந்திற்கு எதிராகக் கிளர்ச்சி ஏற்பட்டபொழுது, இங்கிலாந்திற்கு உறுதுணையாக நிற்க அங்கு யாரும் முன்வரவில்லை. அதற்குக் காரணம் இங்கிலாந்தின்மீது அவர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும் பற்றின்மையுமாகும்.

மக்களின் சுதந்திர வேட்கை

ஆங்கிலேயரைக் காட்டிலும் அமெரிக்க குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களுக்கு சுதந்திர மோகம் அதிகமிருந்தது. அமெரிக்கர் பலரும் நல்ல சட்ட ஞானமுள்ளவர்கள். அவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் செயல்கள் சட்டப்படி முறையற்றவை என முழக்கமிட்டனர். அவர்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அதிகம் காணப்படவில்லை. சமத்துவம் என்னும் சூழ் நிலையில் வசித்துப் பழகிவிட்டார்கள். ஒருசில செல்வந்தரும்

அங்கு ஜனநாயகக் கருத்துகளையே ஆதரித்தனர், நல்ல அறிஞர்களும் நாட்டில் தோன்றினர். பெஞ்சமின் ஃபிராங்கிலின் (Benjamin-Franklin), தாமஸ் ஜெஃபெர்ஸன் (Thomas Jefferson) போன்ற அறிஞர்கள் தங்கள் எழுத்தாற்றலைப் பயன்படுத்தி மக்களின் உரிமை வேட்கையை வளர்த்தனர். குடியரசுக் கொள்கை, உரிமை, சுதந்திரம் பற்றிய கருத்துக்களை அவர்கள் நூல்கள் வாயிலாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், சொற்பொழிவுகள் வழியாகவும் பரப்பினர். அத்துடன் இங்கிலாந்திலும் விக்கு கட்சியினர் அமெரிக்காவின் விருப்பங்களை ஆதரித்தனர். ஜான் லாக் (John Locke) என்பவருடைய நூல்கள் அமெரிக்கருக்கு மேலும் எழுச்சியூட்டும் முறையில் அமைந்தன.

ஏழாண்டுப் போரின் விளைவுகள்

ஏழாண்டுப் போருக்கு முன்பு அமெரிக்க குடியேற்ற நாடுகள் இங்கிலாந்தையே நம்பியிருக்கவேண்டியிருந்தது. ஏனெனில் அப்பொழுது கனடாவில் அவர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களை எதிர்த்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில் இல்லை. தங்களின் பாதுகாப்பிற்காகத் தாய் நாடாகிய இங்கிலாந்தையே நம்பினர். அந்த அபாயமும் 1760 ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் வெளியேறியதால் நீங்கியது. அதன்பிறகு தங்கள் தாய் நாடாகிய இங்கிலாந்தையே நம்பியிருப்பதில் பயனில்லை என அமெரிக்கர் எண்ணினர். மேலும் ஏழாண்டுப் போரின்போது அமெரிக்காவின் பல மாநிலத்தவரும் சேர்ந்து ஒற்றுமையாகப் போரிட்டனர். அதன் காரணமாய் அவர்களிடையே சகோதரத்துவமும் ஒற்றுமை மனப்பான்மையும் வளர்ந்தன. பல மாநிலங்களையும் ஒன்றாக இணைக்கும் எண்ணமும் அப்பொழுது அவர்களிடையே உண்டாயிற்று. இத்தகைய எண்ணம்தான் அமெரிக்கா ஒரே நாடு என்ற ஒருமைக் கருத்து மக்களின் மனத்தில் வேரூன்றப் பெரிதும் உதவி செய்தது. அத்துடன் ஏழாண்டுப் போரில் அமெரிக்கர் நல்ல இராணுவப் பயிற்சி பெற்றனர். அவர்கள் போரின்போது தங்களின் திறமையை நன்கு அறிந்ததனால் அவர்களிடையே ஒரு தன்னம்பிக்கை வளர்ந்தது. அத்துடன் இங்கிலாந்தையும் எதிர்த்து வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அமெரிக்கர்களிடையே வேரூன்றியது.

ஏழாண்டுப் போரின்போது வட அமெரிக்காவில் குடியேற்ற நாடுகளைக் காப்பாற்றவேண்டி இங்கிலாந்து ஏராளமான பணத்தைச் செலவிட்டது. இதன் காரணமாய் இங்கிலாந்திற்குப் பெரும் பணநெருக்கடி ஏற்பட்டது. இச் சூழ்நிலை 1763 ஆம் ஆண்டில் மேலும் மோசமடைந்தது. இந் நிலையில் குடியேற்ற நாடுகள் தங்களின் தாய்நாடாகிய இங்கிலாந்திற்கு உதவி செய்ய

வேண்டுமென வற்புறுத்தப்பட்டன. ஆனால் அமெரிக்க குடியேற்ற நாடுகள் உதவி செய்ய முன்வராததனால் இங்கிலாந்து அமெரிக்கர் மீது பல வரிகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவே இறுதியில் அமெரிக்கருக்கும் ஆங்கிலேயருக்கும் போரை மூட்டி விட்டது.

பாதுகாப்புப் பிரச்சினை

குடியேற்ற நாடுகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதிலும் பல பிரச்சினைகள் எழுந்தன. வட அமெரிக்காவில் வசிக்கும் சிவப் பிந்தியர்கள் குடியேறும் ஆங்கிலேயரை விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் எங்கு வருகின்றார்களோ அங்கெல்லாம் மரங்களை வெட்டி நிலத்தைச் சீர்திருத்தி விவசாயம் செய்ய முற்பட்டனர். சிவப் பிந்தியர்கள் காடுகளில் வாழும் விலங்குகளை நம்பித்தான் வாழ்ந் தனர். ஆங்கிலேயர் மரங்களை எல்லாம் வெட்டுவதனால் ஏற்படும் ஓசையால் விலங்குகள் பயந்து ஓடலாயின. அதன் காரணமாய்ச் சிவப்பிந்தியர்களுக்குப் பசியால் வாடவேண்டிய நிலை ஏற்பட்டது. சிவப்பிந்தியர் ஆங்கிலேயரை வெறுத்துப் ஃபிரெஞ்சுக்காரர்களை நேசித்தனர். அதற்குக் காரணம் ஃபிரெஞ்சுக்காரர்கள் அவர் களிடமிருந்து விலங்குகளின் தோல்களைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தேவையான பொருள்களைக் கொடுத்தனர். ஏழாண்டுப் போரில் ஃபிரெஞ்சுக்காரர்கள் தோல்வியுற்றதனால் வட அமெரிக்கா முழுவதும் ஆங்கிலேயர் வசமாகியது. அதனால் சிவப்பிந்தியர்கள் தங்கள் இனமே ஆங்கிலேயர் வருகையால் அழிந்துவிடும் என எண்ணத் தொடங்கினர். இத்தகைய அச்சத் தினால் தான் 1763ஆம் ஆண்டிலும் 1764ஆம் ஆண்டிலும் அவர்கள் பெரும் கலவரங்களை உண்டு பண்ணினர். ஆங்கிலத் துருப்புகள் இருந்ததனால் கலகங்கள் ஒடுக்கப்பட்டன. இருந்த போதிலும் மேலும் கலகங்கள் தோன்றலாம் எனக் கருதப் பட்டது; ஆகவே சிவப்பிந்தியர்களுக் கெதிராகக் குடியேற்ற நாடுகளைக் காப்பாற்ற, பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று இங்கிலாந்து தீர்மானித்தது. இப்பிரச்சினையைச் சமாளிக்க ஆண்டொன்றுக்கு 350,000 பவுன்கள் தேவைப்படுமெனக் கணக்கெடுக்கப்பட்டது. இதில் குடியேற்ற நாடுகள் 100,000 பவுன்களை வரியாக அளிக்க வேண்டுமென்று ஆங்கில அரசாங்கம் கோரியது. இதன்படி 1765 ஆம் ஆண்டில் முத்திரைக் காகிதச் சட்டமானது (Stamp Act) ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இயற்றப் பட்டது. அமெரிக்கப் பிரதிநிதிகள் இல்லாத ஆங்கிலப் பாராளு மன்றத்திற்கு அமெரிக்கர்மீது வரியிடும் உரிமை கிடையாது என அமெரிக்கர் வாதித்தனர். 'பிரதிநிதித்துவமில்லையேல் வரியுமில்லை'

என அவர்கள் முழக்கமிட்டனர். ஆகவே இப் பிரச்சினையும் அமெரிக்க சுதந்திரப் போருக்குக் காரணமாய் அமைந்தது.

ஃபிரான்சின் தூண்டுதல்

ஏழாண்டுப் போரில் ஃபிரான்சு தோல்வியடைந்ததால் அதன் மதிப்பு உலக அரங்கில் மங்கியது. அத்துடன் பல இன்னல்களையும் ஏற்க வேண்டிய நிலை ஃபிரான்சுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாய் எப்படியாகிலும் இங்கிலாந்தை வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று ஃபிரான்சு காத்துக்கொண்டிருந்தது. அதற்காக அமெரிக்க குடியேற்ற நாடுகளை இங்கிலாந்திற்கு எதிராகப் போராட ஃபிரான்சு தூண்டிவிட்டது. இப் போராட்டத்தில் எத்தகைய உதவியையும் குடியேற்ற நாடுகளுக்குச் செய்ய ஃபிரான்சு தயாராய் உள்ளதென்றும் வாக்களித்தது. இத்தகைய ஃபிரான்சின் தூண்டுதல் அமெரிக்கர்களுக்கு இங்கிலாந்தை எதிர்த்துப் போரிட ஊக்கமூட்டியது.

சமயத் துறையில் வேறுபாடு

அமெரிக்க குடியேற்ற நாடுகளில் பெரும்பான்மையோர் பியூரிட்டன்களாக இருந்தனர். அவர்கள் ஆங்கிலத் திருச்சபையின் கட்டுப்பாடுகளை வெறுத்தனர். அரசாங்க மத அமைப்புக்காக வரிகளைக் கட்டுவதைப் பல குடியேற்ற நாட்டுமக்கள் எதிர்த்தனர். அத்துடன் ஆங்கிலத் திருச்சபையைச் சார்ந்த அதிகார வர்க்கத்தைப் பலர் விரும்பவில்லை. ஆகவே இரு சாராருக்கிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

பொருளாதாரச் சுரண்டல்

'தாய்நாட்டிற் காகத்தான் குடியேற்ற நாடுகள் ஏற்பட்டன' என்ற கொள்கையின் அடிப்படையில் குடியேற்ற நாடுகள் சுரண்டப்படுவதை அமெரிக்க குடியேற்ற நாடுகள் விரும்பவில்லை. இங்கிலாந்திற்குச் சாதகமான முறையில் தொழில்களும் வாணிகமும் குடியேற்ற நாடுகளில் திருத்தி அமைக்கப்பட்டன. 1651, 1660, 1689 ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட நாவாய்ச் சட்டங்கள் (Navigation Acts) குடியேற்ற நாடுகளின் வாணிபம், உற்பத்தி ஆகியவைகளின்மீது பல கட்டுப்பாடுகளை விதித்தன. குடியேற்ற நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவைகளின் மீதும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இவைகளைக் குடியேற்ற நாடுகள் எதிர்த்தன. அத்துடன் மற்ற நாடுகளுடன் நேரடியாகவே வாணிபம் செய்ய விரும்பின. இங்கிலாந்தின் மூலமாய்ப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதைக்

குடியேற்ற நாடுகள் விரும்பவில்லை. தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களினால் இங்கிலாந்து பணம் சம்பாதிப்பதைக் குடியேற்ற நாடுகள் விரும்பவில்லை.

இத்தகைய சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் அமெரிக்க குடியேற்ற நாடுகள் வெறுத்தபோதிலும், 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவைகள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் இத்தகைய சட்டங்களும், கட்டுப்பாடுகளும் எழுத்து வடிவில் இருந்தனவேயொழிய அரசாங்கத்தால் செயல்படுத்தப்படவில்லை. அதனால் குடியேற்ற நாடுகளுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. வெளிநாடுகளுடன் நேரடியாகவே வாணிபம் செய்து வந்தன. 1733 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட வெல்லப்பாகுச் சட்டத்திற்கு (Molasses Act) ஆரம்பத்திலிருந்தே குடியேற்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அத்துடன் அச் சட்டத்தையும் மீறி வாணிபம் செய்தன. இதன் காரணமாய் ஆங்கில அரசாங்கத்திற்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. ஆங்கில அரசாங்கம் இச் சட்டங்கள் அனைத்தையும் நீக்க வேண்டும், அல்லது சட்டங்கள் அனைத்தையும் அமுல்படுத்த வேண்டும். சட்டங்கள் இருந்தும் அவைகளை எதிர்த்தும் மீறியும் வருவது நாட்டிற்கு உகந்ததல்ல. அவ்வாறு இருப்பின் நாட்டில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் இருக்க முடியாது. மக்களும் அரசாங்கத்திற்குப் பணிந்து கட்டுப்பாட்டோடு நடக்க முடியாது என்று கருதியது. அதனால்தான் மூன்றாம் ஜார்ஜ் காலத்தில் இத்தகைய சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாய்க் குடியேற்ற நாடுகளில் பல தொல்லைகள் ஏற்பட்டன. பல ஆண்டுகளாகச் சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் மீறிப் பழக்கப்பட்டவர்களா இப்பொழுது அச்சட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் பணியப்போகிறார்கள் !

அரசாங்க முறை

குடியேற்ற நாடுகளின் அரசாங்க முறையும் அவர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் அமைக்கப்படவில்லை. ஆளுநர்களும், கர்னல்களும் (Colonels) குடியேற்ற நாடுகளில் ஆட்சி செலுத்தினர். இவர்கள் அனைவரும் ஆங்கில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள். குடியேற்ற நாடுகளில் சட்டமன்றங்கள் இருந்த போதிலும், அவைகளுக்கு ஆளுநர்கள் (Governors) பொறுப்பானவர்களாக இல்லை. ஆளுநர்களைக் குடியேற்ற நாடுகளின் சட்டமன்றங்களுக்குப் பொறுப்பானவர்களாக ஆக்க எவ்வளவோ முயற்சி செய்தும் குடியேற்ற நாடுகளால் முடியவில்லை. அத்துடன் குடியேற்ற நாடுகளின் தலைவர்களுடைய சம்பளத்தைப் பற்றியும்

அங்குச் சிக்கல்கள் ஏற்பட்டன. சட்டமன்றங்கள் ஆளுநர்களின் சம்பளத்தைத் தங்கள் விருப்பப்படி குறைத்தன. இதைத் தடுத்து நிறுத்த ஆங்கில அரசாங்கத்தால் முடியவில்லை. குடியேற்ற நாடுகள் எவ்வளவு சம்பளமாகக் கொடுக்கின்றனவோ அதைப் பெற்றுக் கொள்ளும்படி ஆளுநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இதே போல்தான் நீதிபதிகளுக்கும் கொடுக்கப்பட்டன. இச் செயலால் இரு சாராரிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

சட்டமியற்றுதல், வரிவிதித்தல் ஆகியவைகளைப் பற்றியும் பல பிரச்சினைகள் எழுந்தன. ஆங்கிலப் பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளுக்காகச் சட்டமியற்றத் தகுதி வாய்ந்ததா? குடியேற்ற நாடுகளில் வரி விதிக்கும் அதிகாரம் அதற்கு உண்டா? என்ற வினாக்கள் பரவலாக எழுப்பப்பட்டன. இப் பிரச்சினைகள் நேரடியாகத் தீர்வு காணப்படாமல் ஆங்கில அரசாங்கத்தால் தள்ளி வைக்கப்பட்டே வந்தன. இதன் காரணமாய்க் குடியேற்ற நாடுகளுக்குத் தாய்நாட்டின்மீது வெறுப்பு ஏற்பட்டு தனித்து ஒரு சுதந்திரக் கூட்டரசாக இயங்க வேண்டுமென்ற எண்ணம் வளர்ந்தது. அந்த எண்ணமே முழு வளர்ச்சியடைந்து ஒரு சுதந்திரப் போராக உருவெடுத்தது.

பத்திர முத்திரைக் கட்டணம்

மூன்றும் ஜார்ஜின் கொள்கையாலும் அவருடைய அமைச்சர்களின் செயல்களாலும் தான் அமெரிக்க குடியேற்ற நாடுகளில் கொந்தளிப்பு ஏற்பட்டது என்று கூறலாம். 1763ஆம் ஆண்டில் கிரென்வில் (Grenville) பிரதம அமைச்சரானவுடனே, கள்ள வியாபாரத்தை அறவே ஒழிக்க விரும்பினார். நாவாய்ச் சட்டங்களைக் கடுமையாக அமுல் நடத்த முனைந்தார். பல ஆண்டுகளாகச் சட்டங்களை மீறி நடந்த அமெரிக்கர்கள் இப்பொழுதும் சட்டங்களுக்குப் பணிய விரும்பவில்லை. அதன் காரணமாய்ப் பல சிக்கல்கள் ஏற்பட்டன. நாவாய்ச் சட்டம், வாணிபச் சட்டங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க அமெரிக்காவில் கப்பற் படைத் துறை நீதிமன்றம் (The Court of Admiralty) ஒன்று நிறுவப்பட்டது. 1764ஆம் ஆண்டில் கிரென்வில் அமெரிக்கா மீது பத்திர முத்திரைக் கட்டணமொன்றை (Stamp Duty) விதித்தார். எல்லாப் பத்திரங்களுக்கும் முத்திரை வாங்கும் போது இவ்வரியை வசூலிப்பதால் 100,000 பவுன் ஆண்டொன்றுக்கு வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இவ் வருமானம் குடியேற்ற நாடுகளின் பாதுகாப்பிற்குமட்டுமே செலவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்டபோதிலும் பல குடியேற்ற நாடுகளில் இதை எதிர்த்துப்

போராட்டங்கள் ஏற்பட்டன. பதின்மூன்று குடியேற்ற நாடுகளில் ஒன்பது குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவிக்க வர்ஜீனியாவில் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக் கூட்டம், ஆங்கிலப் பாராளுமன்றம் அமெரிக்கரின் சம்மத மின்றி அவர்கள் மீது வரிவிதித்ததைக் கண்டித்தது. பத்திர முத்திரைச் சடடத்தை உடனே ரத்து செய்யும்படியும் கோரியது.

அறிவிப்புச் சட்டம்

1766ஆம் ஆண்டில் ராக்கிங்ஹாம் பிரபுவின் அமைச்சரவை முத்திரைச் சட்டத்தை ரத்து செய்தது. அத்துடன் ஆங்கிலப் பாராளுமன்றம் அறிவிப்புச் சட்டம் (The Declaratory Act) என்ற ஒரு சட்டத்தையும் இயற்றியது. ஆங்கிலப் பாராளுமன்றமே இறைமை வாய்ந்ததென்றும், குடியேற்ற நாடுகளின்மீது வரி விதிக்க அதற்கு முழு உரிமை உண்டென்றும் அச் சட்டம் கூறியது. இச் சட்டம் அமெரிக்கர்களுக்கு அதிருப்தியையே ஏற்படச் செய்தது. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவமின்றி வரியுமில்லை (No taxation without representation) என்று அமெரிக்கர்கள் முழக்கமிட்டனர். ஆகவே ராக்கிங்ஹாம் பிரபுவும் குடியேற்ற நாடுகளைத் திருப்திப் படுத்துவதில் தோல்வியடைந்தார்.

பாஸ்டன் படுகொலை

அமெரிக்க குடியேற்ற நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க கருவூலத் தலைவராயிருந்த டவுன் ஷெண்டு (Town Shend) பல முயற்சிகளை மேற்கொண்டார். 1767ஆம் ஆண்டில் இவர் தேயிலை, காகிதம், கண்ணாடி, ஓவியர்களின் வண்ணங்கள் ஆகியவைகள் மீது வரி விதித்தார். இதன் மூலமாய் வரும் வருமானம் குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்குச் செல விடப் படுவதாய்த் திட்டமிடப்பட்டது. இதுவும் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. இவ் வரிவிதிப்பை எதிர்த்துப் பல இடங்களில் கலகங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயப் பொருள்களை அமெரிக்கர் வாங்க மறுத்தனர். பாஸ்டன் நகரத்தில் ஏற்பட்ட கலகத்தில் ஆங்கிலேயத் துருப்புகள் செய்த துப்பாக்கிப் பிரயோகத் தால் மூவர் இறந்தனர். இது 'பாஸ்டன் படுகொலை' (Boston Massacre) என அழைக்கப்பட்டு ஆங்கிலேயர் மீது அமெரிக்க ருக்குப் பெருங் கோபத்தை வளர்த்தது.

பாஸ்டன் தேநீர் விருந்து

1770ஆம் ஆண்டில் நார்த் பிரபு பிரதமரானவுடன் அமெரிக்க குடியேற்ற நாடுகளைத் திருப்திப் படுத்த முனைந்தார். டவுன்ஷெண்டு விதித்த வரிகளை எல்லாம் இவர் நீக்கினார். ஆனால்

தேயிலைமீது விதித்திருந்த வரியை மட்டும் இவர் நீக்கவில்லை. இந்தியாவிலிருந்து நேரடியாக அமெரிக்காவுக்குத் தேயிலையை அனுப்ப பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அனுமதியளித்தார். அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்குக் குறைந்த விலையில் தேயிலை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் நார்த் பிரபு அவ்வாறு செய்தார். இவ்வாறு இறக்குமதி செய்யும் தேயிலையின் மீது குறைந்த வரியே விதிக்கப்பட்டது. அமெரிக்கர் மீது வரி விதிக்கும் உரிமை இங்கிலாந்திற்கு உள்ளது என்னும் உரிமையை வற்புறுத்த வேண்டியே ஆங்கில அரசாங்கம் தேயிலை மீது மிகக் குறைந்த வரியை விதித்திருந்தது. தேயிலையை அனுப்புவதில் ஏதோ சூழ்ச்சி இருக்கின்றதென்று அமெரிக்கர் நினைத்தனர். அதனால் ஒவ்வொரு துறைமுகத்திலும் கம்பெனியின் தேயிலைக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. 1773ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி இரவு, பாஸ்டன் துறைமுகத்தில் வந்திருந்த கப்பலுக்குள் அமெரிக்கர் புகுந்து 340 தேயிலைப் பெட்டிகளை உடைத்து எல்லாச் சரக்கையும் கடலில் எறிந்து விட்டனர். இந் நிகழ்ச்சி தான் பாஸ்டன் தேநீர்விருந்து (Bostan Tea Party) எனப் பட்டது.

இந் நிகழ்ச்சி ஆங்கில அரசுக்கு ஒரு சவாலாக அமைந்ததால் அது பாஸ்டன் துறைமுகச் சட்டம் ஒன்றை இயற்றி அதன் மூலம் அத்துறைமுகத்தை மூடிவிட்டது. அதே சமயத்தில் மஸாச்சுசெட்ஸ் அரசாங்கச் சட்டம் (The Massachussetts Government Act) என்ற ஒரு சட்டத்தால் அக் குடியேற்ற நாட்டின் சுய-அரசாங்கச் சட்டத்தை ரத்து செய்து அதை அரசர் குடியேற்ற நாடாக (Crown Colony) மாற்றியது. இச் சமயத்தில் மற்றக் குடியேற்ற நாடுகளைச் சார்ந்தவர் ஃபிலெடெல்ஃபியா (Philadelphia) நகரில் கூடினர். இக் கூட்டத்தில், குடியேற்ற நாடுகளின்மீது வரிவிதிக்க ஆங்கில அரசாங்கத்திற்கு உரிமையில்லை எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஆங்கில அரசாங்கம் இயற்றிய சட்டங்களுக்கும் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 1763 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆங்கிலப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பதின்மூன்று சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று ஆலிவ் கிளை விண்ணப்பம் (Olive Branch Petition) மூலம் தெரிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆங்கில அரசாங்கம் இதற்கு இணங்காததால், போர் ஏற்படும் சூழ்நிலை உருவாகிவிட்டது,

போர் நிகழ்ச்சிகள்

அமெரிக்கப் படையினர் போதிய பயிற்சியற்றவர்கள். போர்க் கருவிகளும் போதிய அளவில் அவர்களிடத்தில் இல்லை.

இருந்தபோதிலும் தன்னம்பிக்கை பெற்றிருந்தார்கள். அத்தகைய தன்னம்பிக்கையால் தான் 1775 ஆம் ஆண்டில் லெக்ஸிங்டனில் (Lexington) நடந்த முதல் போரிலேயே வெற்றி பெற்றனர். அதன் பின் பாஸ்டன் நகரை முற்றுகையிட்டார்கள். அப்படைக்கு ஜார்ஜ் வாஷிங்டன் (George Washington) தளபதியாக இருந்தார். அப் படை பங்க்கர் குன்றில் (Bunker's Hill) வந்து இறங்கியது. ஆங் கிலத்தளபதி கேஜ், அப்படையை எதிர்த்துப் போர் புரிந்தார். பங்க்கர் குன்றுப் போரில் அமெரிக்கர் 1775ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் மெச்சத்தக்க வெற்றியைப் பெற்றனர். இவ் வெற்றி யால் அமெரிக்கர் மேலும் தன்னம்பிக்கை பெற்றனர். பிரிட்டிஷ் படைத் தலைவர் கேஜ் நாடு திரும்பினர். அவருக்குப் பின் ஹவ் (Howe) என்பவர் பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைமை தாங்கினர்.

பங்க்கர் குன்றுகளில் பெற்ற வெற்றியினுல் நம்பிக்கையடைந்த அமெரிக்கர்கள் கனடா மீது படையெடுத்தனர். மாண்ட்கோமரி என்பவர் மாண்ட்ரீல் (Montreal) நகரைக் கைப்பற்றினர். 1775ஆம் ஆண்டில் அவர் இறந்துவிடவே, கார்லிடென் (Carleton) என்பவர் கனடியர்களின் உதவியோடு கியூபெக்கைக் கைப்பற்றினர். தெற்கே வர்ஜினிய மக்கள் டன்மோர் பிரபு என்னும் ஆளுநரை வெறுத்தனர். அவர்கள் இங்கிலாந்திற்கு எதிராக ஒன்று திரண்டனர். 1776 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் தேதி 'சுதந்திர அறிவிப்பு' (Declaration of Independence) ஒன்றை வெளியிட்டனர். தாமஸ் பெயின் (Thomas Paine) என்பவரால் வெளிடப்பட்ட 'பொது அறிவு' (Common Sense) என்ற நூலே அவ் வறிவிப்புக்கு மூல காரணமாகும். அதில் அமெரிக்கா சுதந்திர நாடு என்று அறிவிக்கப்பட்டதோடு சுதந்திரத்தின் இலட்சியங்களும் விளக்கப்பட்டிருந்தன.

1776ஆம் ஆண்டில் ஆங்கிலத் தளபதி ஹவ், வாஷிங்டனை புரூக்லின் (Brooklyn) எனும் போர்க் களத்தில் தோற்கடித்தார். லாஸ் ஐலண்ட் பகுதி அவர் வசமாயிற்று. எனினும் வாஷிங்டன் தம் படையுடன் அங்கிருந்து தப்பி யார்க் டவுனுக்குச் சென்று விட்டார். பின்னர்த் தளபதி ஹவ் நியூயார்க் நகரத்திற்குச் சென்று அதைத் தம்முடைய முக்கிய தளமாகக் கொண்டார். ஹவ் நான்கு வாரங்கள் நியூயார்க் நகரத்திலேயே தங்கிக் காலம் கழித்ததால், வாஷிங்டன் டிரென்ட்டன் (Trenton). பிரின்ஸ்டன் (Princeton) என்ற இடங்களில் வெற்றி பெற்று நியூஜெர்ஸியை மீட்டார்.

1777ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பர்காய்ன் (Burgoyne) என்ற ஆங்கிலத் தளபதி 'சாரடோகா' (Saratoga) என்னுமிடத்தில் அமெரிக்கர்களிடம் சரணடைந்தார். சாரடோகா

வெற்றி அமெரிக்கச் சுதந்தரப் போரில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது. ஃபிரான்சு அமெரிக்க சுதந்திரத்தை அங்கீகரித்தது. அத்துடன் இங்கிலாந்தின் மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. ஸ்பெயினும், ஹாலந்தும் ஃபிரான்சுடன் சேர்ந்து கொண்டன. ரஷ்யா, பிரஷ்யா டென்மார்க், ஸ்வீடன் ஆகிய நாடுகள் 'படையேந்திய நடுநிலைக் கூட்டுறவு (Armed Neutrality) என்ற ஓர் ஒப்பந்தத்தைத் தம்முள் ஏற்படுத்திக் கொண்டு, தங்கள் கப்பல்கள் அமெரிக்காவுக்கு உதவியாக இராணுவத் தளவாடங்களைத் தாங்கிச் செல்கின்றனவா என்பதைச் சோதிக்க இங்கிலாந்துக்கு உரிமையில்லை என்று அறிவித்தன. இதனால் வெகுண்ட இங்கிலாந்து ஹாலந்து மீது படையெடுத்தது. ஸ்பெயின், ஃபிரெஞ்சுக் கப்பற் படைகள் ஜிப்ரால்டரை முற்றுகையிட்டன. ஃபிரெஞ்சுக்காரர் மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கினர். இந்தியாவில் அவர்கள் ஆங்கிலேயருக்கெதிராக ஹைதர் அலிக்கு உதவி செய்தனர்.

1778ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தென்பகுதியில் ஆங்கிலேயர் ஸவானா என்ற கடலோரப் பகுதியைக் கைப்பற்றினார்கள். 1779ஆம் ஆண்டில் ஜார்ஜியாவிலும், தென் கரோலினாவிலும் பல பகுதிகளைப் பிடித்தனர். சாரடோகாவில் வெற்றி பெற்ற அமெரிக்கத் தளபதி கேட்ஸை, கார்ன்வாலிஸ் எனும் ஆங்கிலத் தளபதி காம்ட்டன் போர்க் களத்தில் தோற்கடித்தார். அதன்பின் நதானியேல் கிரீன் என்பவர் அமெரிக்கப் படைகளுக்குத் தளபதியானார். அவரும் கில்ஃபோர்ட், கோர்ட்ஹௌஸில் தோற்றார். கடைசியில் சார்லஸ்டவுனையும், ஸவானாவையும் பிடித்தார். இங்ஙனம் கிரீன் தெற்கிலும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு அவர்களை அங்கிருந்து விரட்டினார்.

கார்ன்வாலிஸ் என்னும் ஆங்கிலத் தளபதி வடக்கில் யார்க்டவுனில் முகாமிட்டிருந்தார். அச்சமயம் வாஷிங்டன் நியூயார்க் நகரில் 6000 பேர் கொண்ட படையைத் திரட்டினார். அப்பொழுது ஃபிரான்சும் உதவி செய்ய முன்வந்தது. அதைப் பயன்படுத்தி வாஷிங்டன் 16,000 பிரெஞ்சு அமெரிக்கப் போர் வீரர்களடங்கிய ஒரு படையுடன் சென்று யார்க்டவுனை முற்றுகையிட்டார். வேறுவழியின்றி 1781ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் தேதி கார்ன்வாலிஸ் வாஷிங்டனிடம் சரணடைந்தார். பின்பு சார்லஸ்டவுனையும் அமெரிக்கர் பிடித்தனர். நியூயார்க்கைத் தவிர மற்றப் பகுதிகள் யாவும் அமெரிக்கர் வசம் வந்தன. இச்சமயத்தில் நார்த் பிரபு பிரதமர் பதவியிலிருந்து விலகினார். 1783ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கு இடையில் வெர்சேல்ஸில் சமாதான உடன்பாடு (Treaty of Versailles)

ஏற்பட்டது. இதன்படி அமெரிக்க சுதந்திரத்தை இங்கிலாந்து ஒப்புக் கொண்டது. ஸ்பெயினுக்கு மினோர்க்காவும் (Minorca), பிளாரிடாவும் (Florida) கிடைத்தன. ஃபிரான்சுக்கு டொபேகோ (Tobaco), செனிகல் (Senegal), செண்ட் லூசியா (St. Lucia) இந்தியாவில் கைப்பற்றிய இடங்கள் யாவும் கிடைத்தன. இங்கிலாந்து கனடாவையும், நோவாஸ்காஷ்யாவையும், நியூபவுண்லாந்தையும் தன் கையகத்தே வைத்துக் கொண்டது. அமெரிக்காவில் ஒரு கூட்டரசாட்சி ஏற்பட்டது. மக்களாட்சி அங்கு வளர்ச்சியுற்றது.

16. இங்கிலாந்தும் ஃபிரெஞ்சுப் புரட்சியும்

ஐரோப்பாவின் வரலாற்றிலேயே தலைசிறந்து விளங்குவது 1789 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஃபிரெஞ்சுப் புரட்சியாகும். அப் புரட்சிதான் ஐரோப்பாவில் முதன்முதலாக மக்களின் சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளுக்காகவும், ஜனநாயகக் கொள்கைகளுக்காகவும் பாடுபட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் (Liberty. Equality, and Fraternity) என்ற முப் பெருங் கொள்கைகளே அப் புரட்சியின் அடிப்படையாகத் திகழ்ந் தன. அமெரிக்க சுதந்திரப் போர் இப் புரட்சி ஏற்படுவதற்கு ஊக்கமூட்டியது. 'ஃபிரான்சின் மூலமாகத்தான் சுதந்திரம். சமத்துவம், பொது இறைமைபோன்ற கொள்கைகளை ஐரோப்பா கண்டது' என்று சர்ச்சில் கூறுகின்றார்.

புரட்சிக்குக் காரணங்கள்

சமூக ஏற்றத் தாழ்வுகள்

புரட்சி ஏற்படுவதற்கு முன்பு ஃபிரான்சின் சமூகத் துறையில் ஏற்றத்தாழ்வுகள் மல்கிக் கிடந்தன. அச் சமூகம் சாதாரண மக்கள் என்ற ஒரு பிரிவையும் செல்வந்தர் என்ற ஒரு பிரிவையும் கொண்டு திகழ்ந்தது. மதப் பிரபுக்களும், லௌகிகப் பிரபுக்களும் செல்வந்தர் பிரிவைச் சேர்ந்தவர்களாவார்கள். பிரபுக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருந் தது. செல்வந்தர் மக்கள் தொகையிலே ஒரு சதவிகிதம்தான் இருந்தனர். இவர்கள் சிறுபான்மையோராக இருந்த போதிலும், எல்லா வகையிலும் மேம்பட்டு வாழ்ந்தனர். செல்வத்திலும், சுகபோக வாழ்க்கையிலும் அவர்கள் மூழ்கிக் கிடந்தனர். ஃபிரான்சு நாட்டில் அவர்கள்தான் பெரும் செல்வந்தர்கள். அவர்கள்தான் நிலப் பிரபுக்கள். அவர்கள்தான் பெரும் தொழில் அதிபர்கள். அவர்களிடம்தான் மாடமாளிகைகள் இருந்தன. மக்கள் தொகை யில் ஒரு சதவிகிதமே இருந்த அவர்களிடம் நாட்டின் நாற்பது சதவிகித சொத்து இருந்தது. அவர்கள் நாட்டில் எல்லாச் சலுகை களையும் பெற்று மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொண்டிருந் தனர். அவர்களுக்குச் சாதாரண மக்கள் தலைவணங்க வேண்டும்.

அங்ஙனம் தலைவணங்கும் அவர்களோ வறுமையாலும், நோயாலும் வாடிக் கிடந்தனர். அவர்கள் திருச்சபைக்கு டைத் என்ற வரியையும், பிரபுக்களுக்கு நிலமானியக் கட்டணங்களையும் அரசருக்கு உடைமை வரி, உப்பு வரி போன்ற வரிகளையும் செலுத்த வேண்டியிருந்தது. அவர்கள் பிரபுக்களின் நிலங்களில் சூரியன் உதித்து மறையும் வரை உழைக்கவேண்டியிருந்தது. அங்ஙனம் உழைத்தும் அதற்குத் தகுந்த ஊதியத்தை அவர்கள் பெறவில்லை.

அரசியல் சலுகைகளும், உத்தியோகங்களும் பிரபுக்களின் தனியுரிமைகளாய் விளங்கின. அவர்களுக்குப் பணி செய்து கிடப்பதே பாமர மக்களின் கடமையாயிருந்தது. அவர்களின் தொல்லைகளையும் பிரச்சினைகளையும் கவனிப்பாரில்லை. பட்டினியால் வாடினர். அதனால்தான் 'ஃபிரான்சு நாட்டு மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பங்கு பட்டினியால் இறக்கின்றனர். பத்தில் ஒரு பங்கு மக்கள் அஜீரணத்தால் தவிக்கின்றனர்' என்று கூறப் பட்டது. ஃபிரான்சு நாட்டிலுள்ள நடுநிலை வகுப்பாரும் இப் பிரிவைச் சார்ந்தவர்களாகவே கருதப்பட்டார்கள். அவர்கள் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், வியாபாரிகள் ஆகியோராவார்கள். செல்வந்தர்களும், பிரபுக்களும், மதகுருமார் களும் செய்யும் ஊழல்களையும், அட்டூழியங்களையும், இவர்கள் கண்டித்தனர். இதற்குத் தகுந்தாற்போல் ரூஸோ, வால்ட்டேர் போன்ற அறிஞர்கள் புரட்சிக் கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் தூவினர். இக் கருத்துக்களால் உந்தப்பட்ட ஃபிரான்சின் நடுநிலை வகுப்பார் புரட்சியின் தலைவர்களாய் விளங்கினர்.

சீரழிந்த நிருவாக முறைகள்

ஃபிரான்சில் புரட்சி தோன்றுவதற்கு மற்றொரு காரணம் அங்குச் சீரழிந்த ஊழல் மலிந்த நிருவாகம் நடைபெற்றதாகும். அரசர்தான் நாட்டின் தலைவராக இருந்தார். அவர் தம் விருப்பம் போல் எதேச்சாதிகாரமாய் ஆட்சி செய்தார். ஃபிரான்சு நாட்டின் அரசர் பதினான்காம் லூயி கூறும்போது 'தம்மிடம்தான் இறைமை அதிகாரம் உள்ளதென்றும், சட்டமியற்றும் அதிகாரமும் தம்மைச் சார்ந்ததே என்றும், மக்கள் அவைகளுக்குக் கீழ்ப் பணிந்தே வாழவேண்டுமென்றும் கூறினார். இம் முறை திறமை யாகச் செயல்படவில்லையாதலால், மக்கள் மிகவும் துன்புற்றார்கள். அரசர் மக்களின் தேவைகளைக் கவனிப்பதில்லை. மக்களின் விருப் பங்களை அறிய அவர்களிடம் தொடர்பு கொள்வதில்லை.

நிருவாகத்திற்காக ஃபிரான்சு பல பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தபோதிலும், எங்கும் நிருவாகம் திறமையாகவும் செம்மை யாகவும் நடைபெறவில்லை. ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்கும்

எல்லை வரம்பை நல்ல முறையில் நிர்ணயிக்கவில்லை. அதனால் துறைகளுக்கிடையே எல்லைவரம்பைப் பற்றிய வேற்றுமைகள் இருந்ததனால் எந்தத் துறையும் நிருவாகத்தை மக்களுக்கு நன்மை பயக்கும் முறையிலே மேற்கொள்ளவில்லை. அத்துடன் நாட்டில் சட்ட முறைமையும் பல குழப்பங்களை விளைவித்தன. அனைத்து நாட்டிற்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் அங்கு இல்லை. சில பகுதிகளுக்குச் சில மாதிரியான சட்டங்களும் மற்றும் சில பகுதிகளுக்கு வேறுவிதமான சட்டங்களும் இருந்ததனால் பல குழப்பங்கள் தான் ஏற்பட்டன. ஓர் இடத்தில் ஜெர்மன் சட்டம் செயலில் இருந்தால், மற்றோர் இடத்தில் ரோமன் சட்டம் செயல்பட்டன. சட்டங்கள் இலத்தீன் மொழியிலே எழுதப்பட்டிருந்ததனால் மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. சட்டங்கள் மிகவும் கொடூரமான முறையிலும், தகாத முறையிலும் இருந்தன. அச்சட்டங்களால் சாதாரண தவறுக்காகவும் கொடுமையாக மக்கள் தண்டிக்கப்பட்டார்கள். இந்தத் தவறுகளுக்காக மக்களின் கைகளும், காதுகளும்கூட துண்டிக்கப்பட்டன. செல்வாக்கு மிக்க ஒருவர் நினைத்தால் யாரையும் சிறையிலடைக்கும் நிலைமை அங்கு நிலவியது. ஆட்கொணர் ஆணை (Habeas Corpus) பிறப்பிக்க அங்கு விதி கிடையாது. மற்றவர்களைப் போலவே வால்டேர் (Voltaire) மிராபியோ (Mirabeau) போன்றவர்கள் சிறையிலடைக்கப் பெற்றார்கள். சட்டத்தைப் பொறுத்தமட்டிலில்லாமல் நீதிமன்றங்கள் பொறுத்தவரையிலும் அங்குக் குழப்பங்கள் நிலவின. நீதிமன்றங்களில் பல பிரபுக்களும், குருமார்களும் கூட நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் விருப்பப்படி மக்களின் மீது அபராதங்கள் விதிக்கப்பட்டன.

மக்களிடம் வரிகள் வசூலிப்பதிலும் பெரும் ஊழல்கள் நடைபெற்றன. அங்கு அரசாங்கம் வரிகளை வசூலிப்பதில்லை. அச்சலுகை ஏலத்திற்கு விடப்பட்டு யார் அதிகமாகப் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த வரி வசூலிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் விருப்பம்போல் மக்களிடம் வரி வசூலித்தார்கள். வசூலிக்கப்பட்ட வரிப் பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்திவிட்டு, மீதியை அவர்களே வைத்துக்கொண்டார்கள். இவ்வாறு மக்கள் குறிப்பிட்ட ஒரு சிலரால் சுரண்டப்பட்டார்கள். பிரபுக்களும், குருமார்களும், செல்வந்தர்களும் வரிச் சலுகை பெற்றதனால், சாதாரண குடிமக்களே வரிகளையெல்லாம் செலுத்த வேண்டிய நிலையிருந்தது. இத்தகைய அட்டூழியங்களையும், கொடுமைகளையும், சுரண்டலையும் பொறுக்க முடியாத மக்களுக்குப் புரட்சியைத் தவிர வேறு வழி இல்லாமற் போய்விட்டது.

பதினான்காம் லூயிக்குப் பிறகு ஆட்சி செய்தவர்கள்

பதினான்காம் லூயிக்குப் பின் அரசரானவர்களின் திறமையின்மையும் பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும். பேரரசர் இறக்கும்போது பெரும் பணநெருக்கடி நாட்டில் நிலவியது. அவர் இறக்கும்போது பதினைந்தாம் லூயிக்கு 'மற்ற நாடுகளுடன் சமாதானத்தை மேற்கொள், என்னைப் போல் போர் வெறி கொள்ளாதே, என்னைப் போல் ஆடம்பரத்தையும், வீண் பண விரயத்தையும் செய்யாதே, மக்களை விரைவில் தொல்லைகளிலிருந்து விடுதலை செய், அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்று' என்று அறிவுரை கூறினார். இந்த அறிவுரை செவிடன் காதில் சங்கு ஊதியது போல்தான் அமைந்தது. பதினைந்தாம் லூயி மக்களின் துயரங்களை நீக்குவதற்குப் பதிலாக மேலும் மேலும் போர்களினாலும், ஆடம்பரங்களினாலும் மக்களின் துயரங்களைப் பெருக்கினார். இவருக்குப் பிறகு பதினாறும் லூயி பட்டத்திற்கு வந்தார். இவர் காலத்தில் தான் ஃபிரான்சில் புரட்சியே ஏற்பட்டது. அமெரிக்க சுதந்திரப் போரில் ஃபிரெஞ்சு வீரர்கள் கலந்து கொண்டதனால் நாட்டின் பொருளாதார நிலை சீரழிந்தது. அதே சமயத்தில் அமெரிக்கப் புரட்சிக் கருத்துகளைக் கொண்ட வீரர்கள் ஃபிரான்சுக்கு வந்து, அமெரிக்கரைப் போல் ஃபிரெஞ்சுக்காரரும் சுதந்திரம் பெறவேண்டுமென்ற எண்ணத்தை மக்களிடையே வளர்த்தனர். இத்தகைய சூழ்நிலையில் அரசரும் பொறுப்பற்ற முறையில் நடந்துவந்தார். அவர் ஆட்சி செய்வதில் முழுக்கவனத்தைச் செலுத்தாமல் மற்றவைகளிலே தம் கவனத்தை வைத்திருந்தார். அத்துடன் அவர் மனைவியான மரியா அந்துவானெத் (Maria Antoinette) என்பவர் அளவுக்கு மீறி ஆடம்பரங்களிலீடுபட்டு நாட்டின் பணத்தை விரயம் செய்தார். அத்துடன் தகாத முறையில் நாட்டின் ஆட்சியிலும் தலையிட்டு வந்தார். ஆகவே மக்கள் இவரை வெறுத்தனர். அரசர் டர்கோட், நிக்கர் போன்ற பல நிபுணர்களை நியமித்து நாட்டின் செல்வ நிலையைச் சீர்திருத்த முயன்றார். ஆனால் முடியவில்லை. பொருள் முட்டுப்பாடு 1789ஆம் ஆண்டளவில் உச்ச நிலையை அடைந்துவிட்டது.

பொருளாதார நிலை

ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் பணநெருக்கடியும் புரட்சி ஏற்படுவதற்கு அடித்தளமாக அமைந்தது. பேரரசர் இறக்கும் தறுவாயில் அறிவுரை கூறியும் பதினைந்தாம் லூயியின் மனத்தில் படியவில்லை. அவர் ஆடம்பரங்களில் செலவழித்ததோடல்லாமல் பல போர்களிலும் பங்கெடுத்து நாட்டின் பொருளாதாரத்தைச்

சீரழித்தார். ஸ்பானிய வாரிசு உரிமைப் போரிலும் ஆஸ்திரியா வாரிசு உரிமைப் போரிலும் பங்கெடுத்துக் கொண்டதல்லாமல் ஏழாண்டுப் போரிலும் கலந்து கொண்டார். அதனுல் பதினாரும் லூயி (Louis XVI) அரியணையில் அமரும்போது ஃபிரான்சு திவாலாகும் நிலையில்தான் இருந்தது. இத்தகைய நிலையில் இருந்தும், ஃபிரான்சு அமெரிக்க சுதந்திரப் போரில் கலந்து கொண்டது. அமெரிக்க சுதந்திரப் போரில் கலந்துகொண்டதனுல் ஃபிரான்சின் பொருளாதார நிலை மேலும் மோசமடைந்தது. இந் நிலை பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது எனக் கூறுவதில் தவறில்லை.

நாட்டின் நாற்பது சதவிகித சொத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் மதப் பிரபுக்களும், லௌகிகப் பிரபுக்களும் அரசாங்கத்திற்கு உதவ முன்வரவில்லை. சாதாரண மக்களின் மீது தான் நாட்டின் வரிச்சுமை வீழ்ந்தது. ஆகவே, சாதாரண பாமர மக்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்படுவது இயற்கையே. அப்பொழுது நாட்டுக் கடன் 4,467,478,000 லிவ்ரஸாக (Livres) இருந்தது. 1788 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு 472,415,549 லிவ்ரஸ் வருமானம் வந்ததில் கடனுக்கு வட்டியாக ஆண்டிற்கு 236,999,999 லிவ்ரஸ் கட்டவேண்டிய நிலையிருந்தது. கட்டவேண்டிய வட்டியைவிட நாட்டு வருமானம் குறைவாக இருந்ததனுல் நிதி நிலையைச் சமாளிக்க முடியவில்லை.

பண நெருக்கடியைச் சமாளிக்க பதினாரும் லூயி அரசர் 1787 ஆம் ஆண்டில் பிரபுக்கள், மதகுருமார்கள் அடங்கிய சபையைக் கூட்டினார். செல்வர் மீது வரி விதித்தலை இவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில் அரசர் இங்ஙனம் பிரபுக்கள், மத குருமார்கள் அடங்கிய சபையைக் கூட்டினார். ஆனால் இவர்கள் அரசர் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்ததால் சபை கலைக்கப்பட்டது. மக்கள் எஸ்டேட்ஸ் ஜெனரலைக் (Estate-General) கூட்டவேண்டுமென்று குரல் எழுப்பினர். வேறுவழியின்றி அரசர் எஸ்டேட்ஸ் ஜெனரலுக்கு தேர்தல் நடத்த உத்தரவிட்டார். தேர்தலும் நடைபெற்றது. 1614 ஆம் ஆண்டில் எஸ்டேட்ஸ் ஜெனரலுக்கு நடந்த தேர்தலுக்குப்பின் 1789 இல் தான் தேர்தல் நடைபெற்றது. ஆகவே 174 ஆண்டுகள் தேர்தல் நடத்தப்படாமலேயே அரசர்களால் ஒத்திப் போட்டுக்கொண்டே வரப்பட்டது.

தேர்தல் நடந்து முடிந்தபிறகு எஸ்டேட்ஸ் ஜெனரல் கூடியது. அதில் அப்போது பிரபுக்கள், மத குருமார்கள்,

சாதாரண மக்கள் ஆகியோருக்குத் தனித்தனியே ஒவ்வொரு சபை இருந்தது. மூன்று சபைகளும் தனித்தனியே கூடித்தான் சட்டங்களைச் செய்வது வழக்கம். ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு வாக்குத்தான் உண்டு. தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு வாக்குரிமை கிடையாது. எனவே பிரபுக்கள் சபையும் குருமார்கள் சபையும் சேர்ந்து கொண்டால் எளிதில் பொதுமக்கள் சபையைத் தோற்கடித்துவிடலாம். இம் முறையை மாற்றப் பொதுமக்கள் சபை விரும்பியது. மற்ற இரு சபைகளோடு சேர்ந்து பொதுமக்கள் சபையும் உட்கார வேண்டுமென்றும், சட்டங்கள் பெரும்பான்மையான தனிப்பட்ட உறுப்பினரின் வாக்குகளால் இயற்றப்பட வேண்டுமெனவும் பொதுமக்கள் சபை உறுப்பினர்கள் அரசரிடம் வற்புறுத்தினர். அரசர் அவர்களது விருப்பத்தை மறுக்கவே புரட்சி ஏற்பட்டது. பிறகு அரசரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தேசிய சபை (National Assembly) என்ற பெயரில் முச்சபைகளும் ஒன்று சேர்ந்து பணிபுரியத் தொடங்கின.

ஃபிரெஞ்சு தத்துவ ஞானிகள்

ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு மற்றொரு முக்கிய காரணம் அந் நாட்டு தத்துவ ஞானிகள் மக்களிடம் பரப்பிய புரட்சிக் கருத்துகள்தான். மாண்டெஸ்கு (Montesquieu), வால்டேர் (Voltaire), ரூஸோ (Rousseau) போன்றவர்கள் அக் காலத்தில் மக்களின் மனத்திலே புரட்சிக் கருத்துகளை வளர்த்தனர். மாண்டெஸ்கு ஒரு சிறந்த அறிஞர், வழக்கறிஞர், நல்ல எழுத்தாளர். அவருடைய எழுத்துக்கள் ஆக்க பூர்வமான முறையில் இருந்தன. அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் ஏற்படவேண்டும் என முழக்கமிட்டார். அரசாங்கத்திடம் அதிகாரப் பிரிவினையில்லையேல் சுதந்திரம் கிடையாது என வலியுறுத்தினார். சட்டமியற்றுதல், நிருவாகம் செய்தல், நீதி வழங்குதல் போன்ற அதிகாரங்களைத் தனித்தனி துறைகளிடம் ஒப்படைத்தாலன்றி மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காது என அறிவுரை கூறினார். இத்தகைய மூன்று அதிகாரங்கள் ஒரே துறையிடமோ அல்லது ஒரே மனிதனிடமோ குவிக்கப்பட்டால் கொடுங்கோன்மைதான் ஏற்படும் என்று மக்களிடையே விளக்கினார்.

வால்டேர் தம்முடைய எழுத்துகளாலும், பேச்சாலும், மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்தினார். அரசாங்கம் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டினார். செல்வந்தர் செய்யும் கொடுமைகளைச் சாதாரண மக்களுக்கு எடுத்துக் கூறினார். குருமார்கள் செய்யும் அட்டூழியங்களையும், திருச் சபைகள் மேற்கொள்ளும் தகாத செயல்களையும் மக்களிடம் பரப்பினார். கிறித்துவ

மத வெறித்தனத்தையும், விடாத்தன்மையையும் கண்டித்தார். மக்களுக்கு மதச் சகிப்புத் தன்மை இருக்கவேண்டுமென்று போதித்தார். இவருடைய எழுத்துகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.

'மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாகத்தான் பிறக்கின்றான். ஆனால் பிறகுதான் எங்கு பார்த்தாலும் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றான்' என்று ரூஸோ மக்களிடையே சுதந்திரவேட்கையை ஏற்படுத்தினார். இவர் 'மக்களிடம்தான் இறைமை உள்ளது' என்ற கோட்பாட்டை மக்களிடையே பரப்பினார். இவர் தமது 'சமூக உடன் பாட்டில்', பொதுக் கருத்தை அல்லது பொது விருப்பைப் (General will) பற்றி வலியுறுத்தினார். மக்களுக்கு அரசாங்கத்தை எதிர்த்துப் போராட உரிமை உண்டு என்று அவர்களுக்குத் தெளிவு படுத்தினார்.

இம் மூவர் மட்டுமல்லாமல் ஹெல்விடியஸ் (Helvetius) ஹோல்பாக் (Holbach), க்யூஸ்நே (Quesnai), டர்கோட் (Turgot) போன்றவர்களும் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தினர். நாட்டின் பொருளாதாரச் சீர்கேடுகளைக் கலைக்களஞ்சிய எழுத்தாளர்கள் (Encyclopaedists) எடுத்து விளம்பினர். இக் கருத்துகளால் உந்தப்பட்ட ஃபிரெஞ்சு நாட்டு மக்கள் புரட்சி என்ற ஆயுதத்தை அச்சமின்றிக் கையேந்தினர்.

ஃபிரெஞ்சுப் புரட்சி இங்கிலாந்தைப் பாதித்த விதம்

கருத்துப் புரட்சி

ஃபிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டவுடனேயே ஆங்கில மக்கள் அதை வரவேற்றனர். தங்கள் நாட்டிலிருப்பதுபோலவே ஐரோப்பாவிலும் ஒரு பாராளுமன்ற முறை அரசாங்கம் ஏற்படுவதற்கான ஒரு முயற்சி நடைபெறுகின்றது என்ற எண்ணத்தால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஃபிரெஞ்சு மக்களின்பால் அவர்களுக்கு இரக்கம் ஏற்பட்டது. ஃபிரான்சில் அறிவித்த 'உரிமைகள் பிரகடனம்' ஆங்கில இளைஞர்களைக் கவர்ந்தது. வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth), கோல்ரிட்ஜ் (Coleridge), பைரன் (Byron), ஷெல்லி (Shelly), கீட்ஸ் (Keats), சவுத்தி (Southey) லேண்டர் (Landor) போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் புரட்சியால் உந்தப்பட்டுப் பல வீரக் கவிதைகளை இயற்றினர். ஸ்காட்லாந்தின் கவிஞர் பர்ன்ஸ் (Burns) ஃபிரெஞ்சுப் புரட்சியால் ஈர்க்கப்பட்டார். சுதந்திரம், நாட்டுப்பற்று, வீரம், உரிமைகள் போன்ற உயர்ந்த இலட்சியங்கள் அவர்களுடைய கவிதைகளில் ஒளிவீசின. இங்ஙனம்

ஃபிரெஞ்சுப் புரட்சியானது இங்கிலாந்தில் இலட்சியக் கவிதைகள் பல தோன்றுவதற்கு வகைசெய்தன. ஃபாக்ஸ் (Fox) என்ற அரசியல் அறிஞரும் ஃபிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தார். இங்கிலாந்தில் பல கழகங்களும், சங்கங்களும் ஃபிரெஞ்சுப் புரட்சியை வரவேற்றன. அவைகளெல்லாம் தங்கள் வாழ்த்துக் களைப் ஃபிரான்சு நாட்டுச் சமூகக் கழகங்களுக்கும் சங்கங்களுக்கும் தெரிவித்தன. இங்கிலாந்தில் மேலும் சுதந்திர எண்ணங்கொண்ட பல சங்கங்கள் தோன்றின. ஃபாக்ஸும் சார்லஸ் கிரே (Charles grey) என்னும் இளைஞரும் சேர்ந்து 1792 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 'மக்களின் நண்பர்கள்' (Friends of the people) என்ற ஒரு கட்சியை இங்கிலாந்தில் உருவாக்கினர். ஜனநாயகக் கொள்கைகளை இங்கிலாந்தில் வளர்ப்பதற்காகவே அக் கட்சி துவக்கப் பட்டது. 1830 ஆம் ஆண்டில் சார்லஸ் கிரே இங்கிலாந்தில் பிரதமராகவும் ஆக்கப்பட்டார். 1792 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தாமஸ் ஹார்டி (Thomas Hardy) என்பவர் 'லண்டன் கழகத் தொடர்பு சங்கம்' (London Corresponding Society) என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். இவ்வாறு இங்கிலாந்தில் பல சங்கங்கள் ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஃபிரெஞ்சுப் புரட்சியால் உந்தப்பட்டு ஏற்பட்டன.

இங்கிலாந்தில் ஃபிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்த கூட்டம் ஒருபுறமிருக்க, அதைக் கண்டிக்கும் கூட்டம் மற்றொரு புறம் தோன்றியது. ஃபிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தவர்கள் கூட, பிறகு அங்கு நடந்த கொலைகளையும் அட்டூழியங்களையும் கொடுமைகளையும் கண்டு அதைக் கண்டிக்கத் தொடங்கினர். பர்க் (Burke) என்ற அறிஞர் ஃபிரெஞ்சுப் புரட்சியைக் கண்டித்து 'ஃபிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள்' (Reflections of the-French Revolution) என்ற நூலை வெளியிட்டார். புரட்சி மிகவும் கொடுமையானதென்றும் முடிவில் அது இராணுவ ஆட்சியில்தான் போய் முடியுமென்றும் தம் நூலில் கூறினர். அதன்படியே புரட்சிக்குப் பின்பு நெப்போலியனின் வல்லரசுதான் ஏற்பட்டது. பர்க் என்பார் விக்கு கட்சியைச் சார்ந்தவர். அக் கட்சியோ பணக்காரர்களைக் கொண்டதாகும். அவர்களின் சொத்துகளுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில்தான் பர்க் புரட்சியை எதிர்த்தார். பர்க்கின் இத்தகைய கூற்றைப் பல ஆங்கில ஏழுத்தாளர்கள் எதிர்த்தனர். பர்க்கின் கருத்துகளுக்குச் சவால் விடும் முறையில் டாம் பெயின் (Tom Paine) என்ற அறிஞர் 'மனிதனின் உரிமைகள்' (Rights of man) என்னும் நூலை 1791 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதில் அமெரிக்கா, ஃபிரெஞ்சுப் புரட்சிகளைப் புகழ்ந்திருந்தார். இங்கிலாந்தும், ஃபிரான்சைப்போல் ஊழல்

மலிந்த அரசியல் அமைப்புகளைத் தகர்த்தெறிய வேண்டுமென்று வாதித்தார். அரசாங்கங்கள் மக்களின் நன்மைக்கே ஏற்பட்டன என்றும், மக்களுக்கு அவற்றைத் தங்கள் விருப்பம்போல் மாற்றிக் கொள்ள உரிமையுண்டென்றும் அந்நூலில் அவர் சுட்டிக் காட்டினார். இதேபோலத்தான் 1793 ஆம் ஆண்டில் வில்லியம் காட்வின் (William Godwin) என்ற அறிஞர் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட ''அரசியல் நீதி' (Political Justice) என்ற தமது நூலை வெளியிட்டார்.

அரசியல் விளைவு

ஃபிரெஞ்சுப் புரட்சியால் இங்கிலாந்தின் அரசியலிலும் பல விளைவுகள் ஏற்பட்டன. ஃபிரான்சில் புரட்சியால் பல கொலைகள், கொடுமைகள் ஏற்பட்டதாலும் இங்கிலாந்தில் ஓர் அச்சம் ஏற்பட்டது. அதே போன்ற பயங்கர நிகழ்ச்சிகள் இங்கிலாந்திலும் நடைபெறாமல் தடுக்க பிரதமர் பிட் பல முன் நடவடிக்கைகளை எடுத்தார். புரட்சியாளர்கள் என்று சந்தேகப்பட்டவர்கள் அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர். ஜனநாயகக் கொள்கைகளைப் பற்றிப் பேசியவர்கள்கூட சிறையிலடைக்கப்பட்டனர். ஸ்காட்லாந்தில் தாமஸ் மியூர் (Thomas Muir) என்ற இளம் வழக்கறிஞர் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். அவர் ஃபிரான்சுக்குப் போய் வந்ததாலும், 'சீர்திருத்த சங்கம்' (Reforms Society) ஒன்றை ஆரம்பித்ததாலும் தான் அவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது, தாமஸ் பால்மர் (Thomas Palmer) என்பவர் பாராளுமன்றச் சீர்திருத்தம் கோரியதாலும், சுதந்திரம் இங்கிலாந்தில் குறைந்துகொண்டே வருகின்றது என்று கூறியதாலும் 7 ஆண்டுகளுக்கு நாடு கடத்தப்பட்டார். பாராளுமன்றச் சீர்திருத்தம் ஏற்படவேண்டும் என்று கோரி 1793 ஆம் ஆண்டில் எடின்பரோ நகரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் 50 சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அம் மாநாடு அமைதியாக சட்டமுறை வழியாக நடைபெற்றபோதிலும் அரசாங்கம் அதைத் தடை செய்தது. அம் மாநாட்டில் கலந்துகொண்ட முக்கியப் பிரதிநிதிகள் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 14 ஆண்டுகளுக்கு நாடு கடத்தப்பட்டார்கள்.

இதேபோன்று 1794 ஆம் ஆண்டில், லண்டன் கடிதத் தொடர்பு சங்கம், அரசியலமைப்புத் தகவல் சங்கம் போன்ற சங்கங்களின் தலைவர்கள் மீது ஆங்கில அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடிவெடுத்தது. தாமஸ் ஹார்டி (Thomas Hardy) ஹார்ன்டூக்

(Horntooke), ஜான் தெல்வில் (John Thelwell) போன்றவர்களின் மீது அரசியல் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. தாமஸ் ஹார்டியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படாததனால் விடுதலை செய்யப்பட்டார். ஹார்ன்டுக் வழக்காடும் போது 'தாம் பிரதமர் பிட் சில ஆண்டுகளுக்கு முன்பு கூறியதையேதான் கூறினேன்' என்று கூறியதால் விடுதலை செய்யப்பட்டார். அதே போல் தெல்வில்லும் விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறு அரசாங்கம் நீதி மன்றங்களில் தோற்றதனால், புரட்சி இயக்கத்தை ஒடுக்கப் பல சட்டங்களை இயற்றியது. 1794ஆம் ஆண்டில் ஆட்கொணர் ஆணை (Habeas Corpus) சட்டத்தை நிறுத்தி வைக்க ஓர் சட்டம் இயற்றப்பட்டது. 1795ஆம் ஆண்டில் 'தேசத் துரோகச் செயல், ஆட்சி எதிர்ப்புக்கான கூட்டத்தின் சட்டம் (The Treasonable Practice and Seditious meetings Act) என்ற ஒரு சட்டத்தையும் இயற்றியது. 1799ஆம் ஆண்டில் நாட்டிலிருக்கும் சங்கங்களைக் கலைப்பதற்கான ஒரு சட்டமும் இயற்றப்பட்டது. பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் தாங்கள் எழுதி வெளியிடுவதற்கு முன்பு அரசாங்கத்திடம் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் இங்கிலாந்தில் மக்களின் ஒத்துழைப்பும், பொதுக் கருத்தும் அரசாங்கத்தின் பக்கம்தான் இருந்தன. அதற்குக் காரணம் ஃபிரான்சு நாட்டின் ஜனநாயக வாதிகள் செய்த கொடுமைகள் தான். 1797ஆம் ஆண்டில் சார்லஸ் கிரே பாராளுமன்றச் சீர்திருத்தத்திற்காகப் பொதுமக்கள் சபையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். ஃபாக்ஸ் ஆங்கில மக்களின் சுதந்திரத்திற்காக வாதாடினார். அரசாங்கம் எடுத்த கடுமையான நடவடிக்கைகளைக் கண்டித்தார். இருந்தபோதிலும் இவரது விக்கு கட்சியைச் சார்ந்த மற்றவர்கள் பர்க்கின் தலைமையில் 1794ஆம் ஆண்டில் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டனர்.

பொருளாதார விளைவு

ஃபிரெஞ்சுப் புரட்சி காரணமாக இங்கிலாந்தில் பணவீக்கம் (Inflation) ஏற்பட்டது. அதனால் பொருள்களின் விலைகள் ஏறின. நாட்டில் விளைச்சல் குறைந்து பஞ்சங்கள் ஏற்பட்டன. ஏழ்மையும் வேலையின்மையும் எங்கும் தாண்டவமாடின. போர்ச் செலவை ஈடுகட்டப் பல வரிகள் விதிக்கப்பட்டன. இங்கிலாந்தின் தொழிலாளிகள் புரட்சியில் இறங்கிவிடுவார்களோ வெனப் பயந்து 1799-1800இல் அரசாங்கம் பல சட்டங்களை இயற்றித் தொழிலாளிகளின் உரிமைகளைப் பறித்தது. சம்பள உயர்வுக்காகத் தொழிலாளிகள் சங்கங்களை நிறுவக் கூடாதென ஆணைகள் பிறப்

பிக்கப்பட்டன. ஆனால் தொழிலாளிகளின் துயரங்களை நீக்க அவர்களுக்கு தினப்படி கொடுக்க அரசாங்கம் முன் வந்தது. முதலாளிகள் கொடுக்கத் தவறியதை அரசாங்கம் தொழிலாளி களுக்குக் கொடுக்க முன் வந்ததால் முதலாளிகள் வேண்டுமென்றே கூலிகளைக் குறைத்துக் கொடுக்கத் தலைப்பட்டனர். இதனால் அரசாங்கத்திற்குப் பெரும் பண விரயம் ஏற்பட்டது.

இங்ஙனம் பிரெஞ்சுப் புரட்சியானது இங்கிலாந்தின் சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் பல பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது.

ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்களில் இங்கிலாந்தின் பங்கு

ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்களில் இங்கிலாந்து கலந்துகொண்ட தற்குப் பல காரணங்கள் உண்டு. 1792ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பல ஃபிரெஞ்சுப் பிரபுக்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த ஆங்கிலேயர் வெகுண்டனர். புரட்சியை வளரவிடுவது ஆபத்து என அவர்கள் உணர்ந்தனர். அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் ஃபிரெஞ்சுப் புரட்சிப் படையானது ஆஸ்திரிய நெதர்லாந்து மீது படையெடுத்து அதைச் சூறை யாடியது. அத்துடன் கோனாட்சியை நீக்கிக் குடியாட்சியை நிறுவ முயலும் எந்த நாட்டுக்கும் உதவி செய்யத் தயாராயிருப்ப தாக ஃபிரெஞ்சு அரசாங்கம் அறிவித்தது. முடியாட்சி நிலவும் இங்கிலாந்துக்கு இவ்வறிவிப்பு ஒரு சவாலாகத் தோன்றியது. ஃபிரான்சால் எந்நேரத்திலும் இங்கிலாந்திற்கு ஆபத்து நேரக் கூடுமென ஆங்கிலேயர் எண்ணினர். இந் நிலையில் 1793ஆம் ஆண்டு பதினாறும் லூயியை, ஃபிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் கொன்றுவிட்டதைக் கேட்ட ஆங்கிலேயருக்கு மேலும் கோபம் அதிகரித்தது. 1793ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி யன்று பிரிட்டன் மீதும் ஹாலந்து மீதும் போர் தொடுத்துள்ள தாகப் ஃபிரான்சு அறிவித்தது. எனவே, இங்கிலாந்து போரில் இறங்கவேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. இங்கிலாந்து ஃபிரான்சைத் தோற்கடிக்க நான்கு கூட்டுறவுகளை (Coalitions) அமைத்தது. நெடுநாளைக்குப்பின் இங்கிலாந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது.

முதல் கூட்டுறவு

இங்கிலாந்தின் மீது ஃபிரான்சு போர்ப் பிரகடனம் செய்த வுடனே ஐரோப்பிய நாடுகளைக் கூட்டு சேர்த்து, ஃபிரான்சை எதிர்க்கும் முறையை பிரதமர் இளையபிட் பின்பற்றினர்.

அவரது முயற்சியால் 1793ஆம் ஆண்டில் முதல் கூட்டுறவு (First Coalition) ஏற்பட்டது. அதில் இங்கிலாந்து, பிரஷ்யா, ஆஸ்திரியா, ரஷ்யா, ஸ்பெயின். ஹாலந்து, சார்டினியா ஆகிய நாடுகள் சேர்ந்தன. ஆரம்பத்தில் கூட்டுறவு நாடுகள் எல்லா முனைகளிலும் வெற்றி பெற்றன. ஃபிரெஞ்சுப் படைகள் படு தோல்வியடைந்தன. 1793ஆம் ஆண்டில் ஃபிரான்சின் இராணுவபலம் மங்கிய நிலையிலிருந்தது. எல்லாப் பக்கங்களிலி ருந்தும் ஃபிரான்சுக்கு இராணுவ எதிர்ப்பு தொடங்கியது. இத் தகைய நெருக்கடியான சூழ்நிலையைச் சமாளிக்க ஃபிரான்சின் தேசிய சபை பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாட்டில் சில இடங்களில் இரத்த ஆறு ஓடியது. அதன் காரணமாய்ப் புரட்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்பு நசுக்கப்பட்டது. அதன் பிறகு கார்நாட் (Carnot). டேன்டன் (Danton), செயின்ட் ஜஸ்டு (St. Just) ஆகியோரின் தலைமையில் ஃபிரான்சு மக்கள் தன்னம் பிக்கையுடனும், வீரமுடனும், நாட்டுப் பற்றுடனும் போர்புரிந்து கூட்டுறவு நாட்டுப் படைகளைப் பின்னடையச் செய்தனர். பெல்ஜி யத்தையும், ஹாலந்தையும் திரும்ப அவர்கள் கைப்பற்றினர். பிரஷ்யாவும், ஸ்பெயினும் 1795ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாஸ்ஸல் உடன்படிக்கையால் (Treaty of Basle) கூட்டுறவினின்று பிரிந்தன. பின்னர் 1796ஆம் ஆண்டில் நெப்போலியன் என்ற ஃபிரெஞ்சுத் தளபதி இத்தாலியில் பலசீரிய வெற்றிகளைப் பெற்று சார்டினியாவைக் கூட்டுறவினின்றும் பிரித்துவிட்டார். ஆஸ் திரியா நெப்போலியனுடன் நடந்த போர்களில் தோல்வியடைந்த தால், வேறு வழியின்றி ஃபிரான்சோடு 1797ஆம் ஆண்டில் கேம்போ ப்ரோமியோ உடன்படிக்கை (Treaty of Campo Fromio) செய்து கொண்டு பெல்ஜியத்தை பிரான்சுக்கு விட்டுக் கொடுத் தது. அதே சமயத்தில் போர்ச்சுகலும் ஃபிரான்சோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டது.

இங்ஙனம் 1797ஆம் ஆண்டில் இங்கிலாந்து நட்பு நாடுகள் உதவியேதுமின்றித் தனித்து நின்றது. ஐரோப்பாக் கண்டத்தில் ஃபிரான்சுக்கு இப்போது எதிரி யாரும் கிடையாது. அதே சமயத்தில் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கு உதவி செய்யும் நாடு எதுவும் கிடையாது. இந் நிலையில் இங்கிலாந்து தனிமையில் ஃபிரான்சை எதிர்க்க வேண்டியதாயிற்று. இங்கிலாந்திற்குள் நுழைய ஃபிரான்சு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. இங்கி லாந்திற்குள் நுழையும் பொறுப்பு நெப்போலியனிடம் ஒப்படைக்கப் பட்டது. 1798ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆங்கிலக் கால் வாயைத் தாண்டுவது கடினம் எனக் கருதப்பட்டதால் இங்கிலாந் துக்குள் நுழையும் எண்ணம் கைவிடப்பட்டது. ஆனால் ஆங்கில

சாம்ராஜ்ஜியத்தை மற்ற முனைகளில் தாக்க வேண்டுமென்று தீர்மானித்து நெப்போலியன் 1798ஆம் ஆண்டில் எகிப்தை நோக்கிப் புறப்பட்டார்.

1798ஆம் ஆண்டில் நெப்போலியன் ரோம் நகரைக் கைப் பற்றி ரோம் குடியரசை அங்கு நிறுவினார். வட இத்தாலி முழு வதும் ஃபிரெஞ்சு வசமாகியது. இங்கிலாந்திடம் மிகப் பலம் வாய்ந்த கப்பற்படை இருந்ததால் அதை நேரில் தாக்க முடியாது என்று எண்ணி முதலில் துருக்கியைப் பிடித்து அதன்பின் இந்தி யாவைக் கைப்பற்ற ஃபிரான்சுக்காரர் நினைத்தனர். நெப்போ லியன் இத் திட்டத்தை நிறைவேற்ற முன் வந்தார். படையுடன் நெப்போலியன் எகிப்தை நோக்கிப் புறப்பட்டார். அங்கு நெல்சன் தலைமையில் ஓர் ஆங்கிலக் கப்பற்படை காத்திருந்தது. அதை ஏமாற்றிவிட்டு நெப்போலியன் எகிப்திற்குள் நுழைந்து எகிப்தியப் படைகளை பிரமிட்டுகள் போரில் தோற்கடித்தார். நெப்போலியன் எகிப்தில் இருப்பதை அறிந்த நெல்சன் கப்பற்படையுடன் நைல் நதிக்குள் நுழைந்தார். நெப்போலியன் எகிப்தியர்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அபுகிர் விரிகுடாவில் நங்கூரம் பாய்ச்சியிருந்த அவரது கப்பற் படைகளை நெல்சனின் கப்பற்படை அழித்தது. 1798ஆம் ஆண்டில் நெல்சன் பெற்ற இந் நைல்நதி வெற்றியானது நெப்போலியனின் திட்டத்தைத் தகர்த்தது. இவ் வெற்றியால் இங்கிலாந்தின் புகழ் ஓங்கியது. அதன் மீது நம்பிக்கையின்றி இருந்த ஆஸ்திரியா, ருஷ்யா, துருக்கி போன்ற நாடுகள் இப்போது தைரியமாக அதனுடன் கூட்டு சேர முன் வந்தன.

இரண்டாவது கூட்டுறவு

1798ஆம் ஆண்டில் இரண்டாவது கூட்டுறவு ஏற்படுத்தப் பட்டது. இதில் இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரியா, துருக்கி, நேபில்ஸ் ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. ஃபிரான்சில் உள்ள புரட்சி அரசாங்கத்தை நீக்கிவிட்டுப் பழைய நிலையை அங்கு உருவாக்குவது என்பதுதான் இக் கூட்டுறவின் முக்கிய நோக்க மாகும். நெப்போலியன் இல்லாதபோது கூட்டுறவுப் படைகள் ஐரோப்பாவில் பல வெற்றிகளைப் பெற்றன. 1799ஆம் ஆண்டில் நெப்போலியன் எகிப்திலிருந்து திரும்பினார். ஃபிரான்சு நாட்டில் அவர் கோலாகலமாக வரவேற்கப்பட்டார். அவர் டைரக்டரி அரசாங்கத்தைக் (Directory Government) கவிழ்த்து கான்சல் (Consul) ஆட்சியை ஃபிரான்சில் ஏற்படுத்தினார். தாமே அதில் முதல் கான்சலாக இருந்து கொண்டு எல்லா அதிகாரங்களையும்

செலுத்தினர். போரில் ஃபிரான்சுக்கு வெற்றியை வாங்கித் தருவ தாகக் கூறி ஒரு படையைத் திரட்டினர்.

நெப்போலியனின் வருகையால் கூட்டுறவு நாடுகளுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. ஆஸ்திரியாவுடனும் இங்கிலாந்துடனும் ஏற்பட்ட சில வேறுபாடுகளால் ரஷ்யா கூட்டுறவினின்று விலகியது. மூன்றும் ஜார்ஜ் அரசருக்கு நெப்போலியன் சமாதானம் செய்து கொள்வதாக ஒரு கடிதம் எழுதினர். ஆனல் இங்கிலாந்து அச் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பழைய நிலையை ஃபிரான்சில் உருவாக்கினல் தான் சமரசம் செய்துகொள்ள முடியும் என இங்கிலாந்து அறிவித்தது. இவ் வறிவிப்பு ஃபிரெஞ்சு மக்களைக் கோபமுறச் செய்தது. உடனே நெப்போலியன் ஆஸ் திரியா மீது படை எடுத்தார். ஆஸ்திரியப் படைகளை மாரெங்கோ (Marengo) என்னுமிடத்தில் 1800ஆம் ஆண்டில் தோற்கடித்தார். 1801ஆம் ஆண்டில் லூனிவில் (Luneville) என்னுமிடத்தில் ஆஸ்திரியா ஃபிரான்சோடு உடன்படிக்கை செய்து கொண்ட தால் கூட்டுறவினின்று விலகியது. 1801ஆம் ஆண்டிற்குப் பிறகு இங்கிலாந்து தனித்து விளங்கியது. இங்கிலாந்தில் பிரதம அமைச்சராயிருந்து ஃபிரெஞ்சுப் போர்களை நடத்திவந்த பிட் மூன்றும் ஜார்ஜோடு சச்சரவிட்டுக் கொண்டு தம் பதவியை இராஜிநாமா செய்தார். அவருக்குப் பின் ஆடிங்டன் (Addington) என்பவர் பிரதமராக்கப்பட்டார். அவர் மிகவும் தைரியமில்லாதவர். ஃபிரான்சோடு சமாதானம் செய்துகொள்ள அவர் பெரிதும் விரும்பினர். பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 1902ஆம் ஆண்டில் ஆமியன்ஸ் (Amiens) என்னுமிடத்தில் இரு நாடுகளுக்கும் சமாதானம் ஏற்பட்டது. ஆனல் ஆமியன்ஸ் சமாதானம் ஒரு போர் நிறுத்தமாகத்தான் மாறியது. ஏனெனில் 1803ஆம் ஆண்டில் மறுபடியும் இரு நாடுகளுக்கிடையே போர் துவங்கியது.

1804ஆம் ஆண்டில் நெப்போலியன் ஃபிரான்சின் பேரரசர் என முடிசூட்டிக் கொண்டார். அவர் எந்த நேரத்திலும் இங்கி லாந்தின் மேல் படையெடுக்கக் கூடுமென்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். நெப்போலியனும் தாம் ஐரோப்பாவில் தனித் தலைமை பெறவேண்டுமானல் முதலில் ஆங்கிலேயரை ஒழிக்க வேண்டும் என எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஆனல் இங்கிலாந்து முந்திக் கொண்டு 1803ஆம் ஆண்டு மே மாதத்தில் ஃபிரான்சின் மீது போர் தொடுத்தது. போர் ஆரம்ப காலத்தில் ஆடிங்டன் என்பவரே பிரதமராயிருந்தார். ஆனல் போரில் நெப்போலியனைத் தோற்கடிக்க வேண்டுமானல் அவரை

விட திறமை வாய்ந்த பிட் என்பவரே மறுமுறையும் பிரதமராக்கப் படவேண்டும் என்று பலரும் நினைத்தனர். மூன்றாம் ஜார்ஜும் நெருக்கடியை உணர்ந்து பிரதமராகப் பணியாற்றும்படி பிட்டுக்கு அழைப்பு விடுத்தார். தம் மதிப்பைவிட நாட்டின் நலனே பெரிதெனக் கருதிய பிட் 1804ஆம் ஆண்டில் அரசரின் அழைப்பை ஏற்றுப் பிரதமரானார்.

மூன்றாம் கூட்டுறவு

இங்கிலாந்தின் பிரதமர் பிட் நெப்போலியனுக்கு எதிராக 1805 ஆம் ஆண்டில் ஒரு கூட்டுறவை ஏற்படுத்தினார். இது பிட்டால் ஏற்படுத்தப்பட்ட மூன்றாவது கூட்டுறவாகும் (Third Coalition). இதில் இங்கிலாந்தோடு ரஷ்யா, ஆஸ்திரியா, ஸ்வீடன் முதலிய நாடுகள் சேர்ந்தன. பிரஷ்யா நெப்போலியனுக்கு அஞ்சி இக் கூட்டுறவில் சேர மறுத்துவிட்டது. நெப்போலியன் சுவிட்சர்லாந்து நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டதால், ஐரோப்பிய நாடுகள் அவர்மீது வெறுப்புற்றிருந்தன. ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் சேர்ந்து ஃபிரான்சின் நட்பு நாடான பவேரியாவைத் தாக்க வேண்டுமென நினைத்தன. அப் படை எடுப்புக்காகும் செலவுக்குப் பணம் தர இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. வட ஜெர்மனியிலிருந்து ஃபிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றவும், ஹாலந்திற்கும், சுவிட்சர்லாந்திற்கும் சுதந்திரம் வாங்கித்தரவும், சார்டீனியாவில் பிட்மாண்டை (Piedmont) மறுபடியும் அரசராக்கவும் இக் கூட்டுறவு நாடுகள் நினைத்தன. இவற்றையெல்லாம் நெப்போலியன் அறிந்தவுடன், இங்கிலாந்திற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். அதற்காக வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய நெப்போலியன் முற்பட்டார்.

அவர் இங்கிலாந்தின்மீது படையெடுக்க 1,50,000 படை வீரர்களைக் கொண்ட "இங்கிலாந்தின் படை" (The Army of England) ஒன்றைத் திரட்டினார். அத்துடன் மூன்று கப்பற்படைகளையும் உருவாக்கினார். ஆங்கிலக் கால்வாய் பற்றிய பிரச்சினைதான் நெப்போலியனைக் குழப்பியது. முப்பது மைல் அகலமுள்ள அக் கால்வாயை எப்படிக் கடப்பது என்பதுதான் நெப்போலியனின் பெரும் பிரச்சினை. ஆங்கிலக் கால்வாயை நெல்சன் கான்வாலிஷ் போன்ற திறமைமிக்க ஆங்கிலக் கப்பற்படைத் தளபதிகள் காத்துக்கொண்டிருந்தனர். ப்ரெஸ்ட் (Brest) துறைமுகத்தைத் தளபதி கான்வாலிஷ் முற்றுகையிட்டிருந்தது நெப்போலியனின் திட்டத்திற்கு இடையூறு விளைவித்தது. நெல்சனிடம் மோதிக்கொள்ளாமல் இங்கிலாந்தைத் தாக்க நெப்போலியன் திட்டம் தீட்டினார். ஆனால் 1805 ஆம் ஆண்டில் நடந்த

டரப்பால்கர் போரில் (Battle of Trafalgar) ஃபிரான்சும் தோற்கடிக்கப்பட்டது. இவ் வெற்றி இங்கிலாந்தைக் காப்பாற்றியதோடல்லாமல் இங்கிலாந்தின் கப்பற்படை வலிமையையும் உலகத்திற்குக் காட்டியது.

கடலில் நெப்போலியன் தோற்றபோதிலும், நிலப்பகுதிகளில் நடந்த போரில் தம் படைகளின் வலிமையைக் காட்டினர். ஆஸ்திரியாவின் தளபதி நெப்போலியனிடம் சரணடைந்தார். 1805 ஆம் ஆண்டில் ஆஸ்திரிய, ரஷ்யப் படைகளை ஆஸ்டர்லிட்ஜ் (Austerlitz) என்னும் பகுதியில் தோற்கடித்தார். அதனல் ஆஸ்திரியா கூட்டுறவினின்று விலகி ஃபிரான்சுடன் பிரஷ்பர்க் உடன்படிக்கை (Treaty of Pressburg) செய்து கொண்டது. ரஷ்யாவும் கூட்டுறவினின்று விலகியது. ஆகவே மூன்ருவது கூட்டுறவும் தோல்வியுற்றது. இக் கூட்டுறவை ஏற்படுத்திய இங்கிலாந்தின் பிரதமரான பிட்டும் ஆஸ்டர்லிட்ஜ் (Austerlitz) தோல்வி காரணமாய் மனமொடிந்து இறந்தார்.

நான்காம் கூட்டுறவு

1812 ஆம் ஆண்டில் நெப்போலியன் ரஷ்யாவின் மீது படையெடுத்துத் தோற்றதனல் அவருடைய மற்றைய எதிரிகளுக்கு மனவலிமை ஏற்பட்டது. அதன் காரணமாக 1813 ஆம் ஆண்டில் இங்கிலாந்து, ரஷ்யா. பிரஷ்யா இவைகளடங்கிய நான்காம் கூட்டுறவு ஏற்படுத்தப்பட்டது. இக் கூட்டுறவுக்குக் காரணமாயிருந்தவர் அப்போது இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த காஸில்ரே (Castlereagh) என்பவராவார். இக் கூட்டுறவில் பிறகு ஆஸ்திரியாவும் சேர்ந்து கொண்டது. இக் கூட்டுறவு நாடுகளுக்குப் போர் செய்ய ஆகும் செலவை ஏற்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. கூட்டுறவு நாடுகளின் படைகள் முதலில் டிரஸ்டென் (Dresden) போரில் தோற்றபோதிலும் மற்ற இடங்களில் பல வெற்றிகளைப் பெற்றது. 1813 ஆம் ஆண்டில் நெப்போலியன் லிப்ஜிக் (Leipzig) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். அதனல் நெப்போலியனின் படைகள் வலிமையிழந்தன. கூட்டுறவு நாடுகளின் படைகள் மேலும் மேலும் வலிமையும் உற்சாகமும் பெற்றன. 1814 ஆம் ஆண்டில் நெப்போலியன் வீழ்ச்சியுற்ருர். ஃபிரான்சு நாட்டை விட்டும் ஓடிவிட்டார். 1815 ஆம் ஆண்டில் ஃநெப்போலியன் மீண்டும் ஃபிரான்சுக்கு வந்தார். ஆனல் வாட்டர்லூ (Waterloo) போரில் படுதோல்வி யடைந்தார். அவர் எல்பா (Elba) என்ற தென் அட்லாண்டிக் தீவு ஒன்றில் சிறை வைக்கப்பட்டார். 1821 ஆம் ஆண்டில் அவர் அத் தீவிலேயே இறந்தார். ஆகவே நான்காம்

கூட்டுறவு நெப்போலியனை வீழ்ச்சியடையச் செய்வதில் முழு வெற்றி யடைந்தது. மீண்டும் ஃபிரான்சில் பார்பான் (Bourbons) வம்சத்து அரசர்கள் அரியணை ஏறினர்.

வியன்னு ஏற்பாடு

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் ஐரோப்பிய நாடுகள் வியன்னுவில் கூடித் தமக்குள் ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்டன. அதற்கு வியன்னு ஏற்பாடு (The Vienna Settlement) எனப் பெயராகும். பல அரசர்களும், வெளி நாட்டு அமைச்சர் களும், அரசியல் அறிஞர்களும் வியன்னு மாநாட்டில் கலந்து கொண்டனர். இங்கிலாந்தின் சார்பாக காஸில்ரே பிரபு கலந்து கொண்டார். மாநாட்டில் பல பிரச்சினைகள் எழுந்தன. பேச்சு வார்த்தைகள் முறிகிற அளவுக்குக் கூட பூசல் முற்றியது. அவை களை எல்லாம் காஸில்ரே பிரபுதான் தீர்த்து வைத்தார்.

வியன்னு உடன்பாட்டில் ஃபிரான்சின் எல்லையானது 1791 ஆம் ஆண்டில் இருந்தது போன்றே வரையறுக்கப்பட்டது. போர்ச் செலவுக்கு ஃபிரான்சு நஷ்ட ஈடுகொடுக்க வேண்டு மெனவும் வற்புறுத்தப்பட்டது. ஃபிரான்சின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் அதற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டன. இவ் வுடன் பாட்டால் ஐரோப்பியப் பெருநாடுகள் நல்ல இலாபமடைந்தன, இங்கிலாந்துக்கும் பல இடங்கள் கிடைத்தன. ஹாலந்து தான் இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றது. பிரஷ்யாவுக்கும் பல பகுதி கள் தரப்பட்டன. ரஷ்யாவும் போலந்தின் பெரும் பகுதியையும் பின்லாந்தையும் பெற்றது. ஸ்விட்சர்லாந்து ஒரு குடியரசு நாடாக அமைக்கப்பட்டது.

17. விவசாயப் புரட்சியும் தொழிற் புரட்சியும்

பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் இரு பெரும் இயக்கங்கள் தோன்றி வளர்ந்தன. அவைகள் ஆங்கில மக்களின் வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய தோடல்லாமல் உலக மக்களின் வாழ்க்கையிலும் ஒரு புதுமையையும் மேம்பாட்டையும் ஏற்படச் செய்தன. அந்த இரு பெரும் இயக்கங்கள் தான் விவசாயப் புரட்சியும் தொழிற் புரட்சியுமாகும்.

மற்ற ஐரோப்பிய நாடுகளில் இப் புரட்சிகள் முதலில் ஏற்படாமல் இங்கிலாந்தில் மட்டும் ஏன் ஏற்பட்டன என்ற விஞ எழுகின்றது. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. மற்ற நாடுகளை விட இங்கிலாந்தில் மக்கள் பல சுதந்திரங்களைப் பெற்றிருந்தனர். சுயமாக எண்ணுவதற்கும் தாம் எண்ணியதை வெளியிடவும், தாம் விரும்பியதைச் செயலாக்கவும் சுதந்திரங்களைப் பெற்றிருந்தனர். அதனுல் மக்கள் புதிய முறைகளைக் கண்டு பிடித்து அவைகளைச் செயலாக்க முனைந்தனர். அத்துடன் அரசாங்கமும் தகாத கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. இத்தகைய சூழ்நிலை இங்கிலாந்தில் நிலவியதால் தான் அங்கு இப் புரட்சிகள் ஏற்பட்டன. ஆனுல் மற்ற நாடுகளில் இத்தகைய சூழ்நிலை உருவாகவில்லை.

விவசாயப் புரட்சி

பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்தின் விவசாயத் துறையில் ஏற்பட்ட மாபெரும் மாறுதல்களும், அதன் விளைவாக ஏற்பட்ட விவசாய முன்னேற்றமும் சேர்ந்து விவசாயப் புரட்சி (Agrarian Revolution) எனும் பெயர் பெறுகின்றது. விவசாயப் புரட்சி ஏற்படுவதற்கு முன்பு, இங்கிலாந்தின் விவசாய முறை பலவகைகளில் பிற்போக்கான நிலையிலேயே இருந்தது. 'வேலியில்லா வேளாண்மை' முறை பண்டைக் காலத்திலிருந்தே நடைபெற்று வந்தது. அதன்படி ஒவ்வொரு கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் மூன்று பெருவயல் வெளிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் ஆண்டிலும் மூன்று பெருவயல்களுள் இரண்டு விவசாயம் செய்யப்படும்போது ஒன்று தரிசாகக் கிடக்கும். விவசாயம் செய்வதால்

இழந்துபோன சத்தை அந் நிலம் தரிசாக இருக்கும் போது, பெற்றுக் கொள்ளும். இங்கிலாந்தில் விவசாயம் செய்யும் முறை, மத்திய காலத்திலிருந்தே ஒரே மாதிரியாக முன்னேற்றம் ஏதுமில்லாமல் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதனால் காலமும் நிலமும் விரயமாயின.

வேலியில்லா வேளாண்மை முறையில் பல குறைபாடுகள் இருந்தன. ஒவ்வோர் ஆண்டிலும் கிராமத்திலிருந்த மூன்றில் ஒரு பகுதி நிலங்கள் தரிசாகக் கிடக்க நேர்ந்ததால், வேளாண்மையின் அளவு மிகவும் குறைந்தது. ஒவ்வோர் உழவரின் நிலங்கள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்ததால் அவர் வெகு தூரம் நடந்து சென்று பயிரிட வேண்டியிருந்தது. அதனால் காலம் வீணானதோடு, உழவர்களின் உழைப்பும் வீணாயிற்று. அத்துடன் நீர்ப்பாசன வசதிகள் மிகவும் குறைவாகவே இருந்தன. வயல்களைச் சுற்றி வேலியில்லாத காரணத்தால் ஆடுமாடுகள் வயல்களுக்குள் நுழைந்து சேதம் விளைத்தன. இத்தகைய குறைகள் இருந்தபோதிலும் இம் முறையினால் ஒரு முக்கிய நன்மையும் இருந்தது. குடும்பத்திலுள்ள அனைவரும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்ததனால் அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. அதனால் அங்கு சோம்பேறிகளையும், பிச்சைக்காரர்களையும் பார்ப்பது அரிது. இருந்தபோதிலும் அங்கு உற்பத்தி மிகக் குறைந்திருந்ததனால் வாழ்க்கைத் தரம் உயரவில்லை.

இங்ஙனம் பல இடர்ப்பாடுகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த விவசாயத் தொழிலில் பதினெட்டாம் நூற்றாண்டில் தான் ஒரு சில மாற்றங்கள் நிகழ்ந்தன. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், ஒவ்வொருவருக்கும் சொந்தமான நிலங்கள் பல இடங்களில் சிதறிக் கிடக்காமல் ஒரே இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதை அறிஞர்கள் உணர்ந்தனர். அவ்வாறு ஒருவருடைய நிலம் ஒரே இடத்தில் இருந்தால் அவர் அதற்கு வேலியிட்டு நல்ல முறையில் வேளாண்மை செய்ய முடியும். அதற்காக நார்த் பிரபுவோ 'கிராம மக்கள் தங்களுக்குள் ஓர் ஏற்பாடு செய்து கொண்டு அதன்படி நிலங்களைப் பிரித்துக் கொள்ளலாம்' என்று ஒரு வாய்ப்பினை நல்கினார். ஆனால் மக்கள் தங்கள் நிலப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முன் வரவில்லை. எனவே பாராளுமன்றமே அதில் தலையிட வேண்டியதாயிற்று. 1760ஆம் ஆண்டிலிருந்து 1800ஆம் ஆண்டு வரை 1500 நில அடைப்புச் சட்டங்கள் (Enclosure Acts) பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டன. இதனால் மூன்று மில்லியன் ஏக்கர் நிலம் வேலியிடப்பட்டது. வேலியில்லா வேளாண்மை ஒழிந்தது. நில அடைப்புச்

சட்டங்களை அமுல் நடத்த ஆணையாளர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு விவசாயிக்கும் பல்வேறிடங்களில் சொந்தமாக இருந்த நில அளவுக்கு இணையாக ஒரே இடத்தில் நிலங்களைக் கொடுத்து அவற்றை வேலியிட்டு அடைத்துக் கொள்ளும்படி செய்தனர்.

பின்பு, ஒரே இடத்தில் பெரும் பண்ணைகள் இருந்ததால் விவசாயத்தில் பல சோதனைகளை நடத்த வாய்ப்பு ஏற்பட்டது. அச்சோதனைகளால் பல புதிய வேளாண்மை முறைகள் கண்டுபிடிக்கப் பட்டன. 1645-ஆம் ஆண்டில் சர் ராபர்ட் வெஸ்டர்ன் (Sir Robert Western) என்பவர் வேளாண்மையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். அவர் ப்லேண்டர்ஸுக்குச் (Flanders) சென்று அந் நாட்டின் விவசாய முறையைக் கண்டறிந்து வந்தார். 'வேளாண்மை பற்றிய ஆய்வுரை (Discourse on Husbandry) என்னும் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அப்புத்தகத்தில் நிலத்தை வளமாக்குவது எங்ஙனம் என்று விளக்கியிருந்தார். நிலத்தைத் தரிசாகப் போடாமல் அந்நிலத்தில் மணப்புல்லையும் (Clover), கிழங்கு வகைகளையும் (Turnips) பயிரிட்டால் நிலத்திற்கு வளமேற்படும் என்றும், இத்தகைய மணப்புல்லும் கிழங்கு வகைகளும் கால் நடைகளுக்கு உணவாகுமென்றும், இங்ஙனம் கால் நடைகளுக்கு உணவு கிடைப்பதால் குளிர் காலங்களில் உணவு இல்லாத காரணங்களால் கால் நடைகளைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், கால் நடைகள் அதிகமாவதால் அதன் மூலம் நிலத்திற்கு வேண்டிய உரம் கிடைக்குமென்றும் அவர் விளக்கி எழுதியிருந்தார். இவருடைய கருத்துரைகள் விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்பட்டன.

விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மற்றொருவர் ஜெத்ரோடல் (Jethro tull) என்பவராவார். இவர் பெர்க்ஷயரின் (Berkshire) முக்கிய விவசாயியாவார். இவர் 1701-ஆம் ஆண்டில் டிரில் (Drill) என்னும் ஒரு புதிய விதை விதைக்கும் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அந்த இயந்திரமானது நிலத்தில் துவாரம் செய்து, ஒவ்வொரு துவாரத்திலும் ஒரு விதையை ஊன்றிப் பின் அதன் மீது மண்ணைத் தூவிற்று. இதனால் விதைகள் சேதமின்றி ஒழுங்காக விதைக்கப்பட்டன. ஆகவே, இக் கருவி விவசாயத்தில் சிக்கனத்தையும் நன்மையையும் வளர்த்தது. டல் விவசாயத்தில் நல்ல விதைகளை உபயோகப்படுத்துவதை வலியுறுத்தினார். இவர் மேலும் உரத்தில் பல சோதனைகளைச் செய்தார். விவசாயத்திற்கு நல்ல பல சிபார்சுகளைச் செய்து ஒரு நூலையும் வெளியிட்டார். அவருடைய கூற்றுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாமல் அவரைப்

பார்த்துச் சிரித்தனர். பின்னர் அவர் கூறியவைகளை விவசாயிகள் கடைப்பிடித்ததனுல் தான் விவசாயத்தில் ஓர் புரட்சியே ஏற்பட்டது.

சர் ராபர்ட் வால்போலின் மைத்துனர் டவுன்செண்ட் பிரபு (Lord Townshend) ஆவார். இவர் அரசியலைத் துறந்து விவசாயத்தை மேற்கொண்டார். நார்போல்க் (Norfolk) என்னும் தன்னுடைய விவசாயப் பண்ணையில் வேளாண்மை பற்றிய பல செய்முறைகளை (Experiments) செய்து பார்த்தார். இவர் மாற்றுப் பயிர் வேளாண்மை முறை (Rotation of Crops) என்னும் ஒரு முறையை முதன் முதலில் கையாண்டார். கிழங்குப் பயிர்களை நிலத்தில் விளைப்பதன் மூலம் மண்ணின் வளம் அதிகமாகின்றது என்ற உண்மையை அவர் கண்டு பிடித்தார். எனவே நிலத்தைத் தரிசாகப் போடுவதற்குப் பதிலாக அதில் கிழங்குப் பயிர்களைச் சாகுபடி செய்தார். முதல் ஆண்டில் கோதுமை போன்ற பயிர்களையும், இரண்டாவது ஆண்டில் மணப் புல்லையும், மூன்றும் ஆண்டில் பார்லியையும் நான்காம் ஆண்டில் கிழங்குப் பயிர்களையும் ஒரு நிலத்தில் பயிரிடுவதால் அதன் சத்துக் குறைவு தில்லையென்பதை நிரூபித்துக் காட்டினுர். இம்முறையால் கால் நடைகளுக்கு வேண்டிய உணவு அதிகமாய்க் கிடைத்தது. குளிர் காலத்தில் உணவின்றி மாண்டுபோகும் கால்நடைகள் காப்பாற்றப் பட்டன. நிலங்களைத் தரிசாகப் போடுவது கைவிடப்பட்டது.

கால்நடை அபிவிருத்தியிலும் பலர் கவனம் செலுத்தினர். ராபர்ட் பேக்வெல் (Robert Bakewell) என்பவர் ஆடுகளை வளர்ப்பதில் ஒரு நல்ல முறையைக் கையாண்டு அவைகளின் எடையைப் பெருக்கினுர். ஆடுகள் மெலிந்தும் நோயுற்றும் இருந்ததை மாற்றி மிகவும் எடையுள்ளதாகச் செய்தார். இவர் செய்த இன அபிவிருத்தியால் நல்ல ஆடுகள் உற்பத்தியாயின. நியூலிசெஸ்டர் (NewLei cester) என்னும் இனத்தை இவர் உண்டாக்கினுர். இதற்கு முன்பு 21 பவுண்டு எடையாக இருந்த ஆடுகள் பின்பு 60 பவுண்டுகள் கொண்டதாக மாறின. சார்லஸ் கூலிங் என்பவர் மேற்படி முறையை மாடுகள் வளர்ப்பதில் கையாண்டு நல்ல பலனைப் பெற்றுர். இத்தகைய மாறுதல்களால், அதிகமான இறைச்சி உற்பத்தி செய்ததோடல்லாமல் ஏராளமான கம்பளியும் கிடைக்கச் செய்தனர்.

தாமஸ் குக் (Thomas Cook) என்பவர் ஒரு புதிய உரத்தை உபயோகிக்கும் முறையைக் கையாண்டதால் மணற்பாங்கான தம் நிலத்தை வளமான பண்ணையாக மாற்றினுர். இவர் அவ்வாறு மாற்ற 5 லட்சம் ஸ்டெர்லிங் செலவு செய்த,

போதிலும், வருமானமோ ஏராளமாய்க் கிடைத்தது. அதனுல் இவர் தம் 90 ஆவது வயதில் இறக்கும்போது பெருஞ் செல்வந்தராகத்தான் இறந்தார். இவருடைய பண்ணையே ஒரு மாதிரிப் பண்ணையாக (Model Farm) அமைந்தது.

மூன்ரும் ஜார்ஜ் அரசரும் விவசாயத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தார். இவர் அரண்மனைக்கருகிலேயே ஒரு மாதிரிப் பண்ணையை உருவாக்கினுர், இவர் விவசாயத்தில் அதிக விருப்பம் கொண்டிருந்ததால் வேளாண் ஜார்ஜ் (Farmer George) என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டார்.

விவசாயத் துறையிலே சர் ஆர்தர் யெங் (Sir Arthur Young) என்பவரும் சீரிய தொண்டாற்றினுர். இவர் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்து அதனுல் பெற்ற அனுபவத்தைப் புத்தகமாக எழுதி விவசாயிகளுக்கு வழங்கினுர். இவருடைய முக்கிய நோக்கம் வேளாண்மை பற்றிய முக்கிய செய்திகளை மக்களுக்குக் கொடுப்பதேயாகும். விவசாயிகள் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுகள் ஆகியவைகள் ஏற்படுத்துவதில் இவர் முக்கிய பங்கேற்ருர். வேளாண்மை பற்றி மக்களுக்கு விளக்கிக் கூற ஆசிரியர்களைக் கூட இவர் அமர்த்தினுர். இவர் வேளாண்மையில் பெற்றிருந்த அறிவாற்றலால் விவசாயக் குழுவின் (Board of Agriculture) முதல் செயலாளராக நியமிக்கப்பட்டார். நிலங்கள் சிறிது சிறிதாகப் பிரிக்கப்பட்டிருந்தால் நவீன முறையில் விவசாயம் செய்ய முடியாது எனக் கருதிப் பல நில அடைப்புச் சட்டங்களைக் கொணர்ந்தார்.

விவசாயப் புரட்சியின் விளைவுகள்

1. விவசாயத்தில் ஏற்பட்ட புரட்சியானது விவசாயத்தில் ஓர் மாறுதலைத் தோற்றுவித்தது. பழைய விவசாய முறைகள் கைவிடப்பட்டு, புதிய முறைகள் கையாளப் பட்டன. உற்பத்தி பெருகியதோடல்லாமல் நாட்டின் செல்வமும் வளர்ந்தது. நல்ல கால்நடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அதிக அளவில் இறைச்சியும் கம்பளியும் கிடைத்தன. ஆகவே நகரங்களில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப் பட்டன.

2. பல காரணங்களால் நிலம் வாங்குவதற்குக் கோரிக்கைகள் அதிகமாயின. அதிகம் விளைவித்துச் செல்வந்தர்களாவோம் என்ற காரணம்மட்டுமின்றி நிலம்

வாங்குவதற்கு அரசியல் காரணங்களும் இருந்தன. ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் சொந்தமாக இருந்தால் தான் பாராளுமன்ற உறுப்பினராக முடியும் என்ற சட்டம் அமுலில் இருந்தது. ஆகவே பணம் படைத்தோர் அரசியலில் இறங்க நிலம் வாங்க முன் வந்தனர். அமைதிகாண் நடுவர்களாக (Justices of Peace) வர வேண்டுமானாலும் அவர்களுக்குச் சொந்தமாக 100 பவுண்ட் மதிப்புள்ள நிலம் இருந்தாக வேண்டும். அதற்காகவும் பணக்காரர்கள் நிலத்தை வாங்க முன் வந்தனர். ஆகவே நிலத்தை வாங்க ஏராளமாகப் பணம் கொடுக்க, பணக்காரர்கள் முன் வந்தனர். ஆகவே சிறிதளவு நிலம் வைத்திருந்தவர்கள் நவீன முறையில் விவசாயம் செய்ய முடியாததாலும், அரசியலில் ஈடுபட முடியாததாலும் தங்கள் நிலத்தை விற்று விட்டு நகரத்தை நோக்கிச் சென்றனர். ஏனெனில் நகரங்களில் தொழிற் புரட்சியினால் கூலியாட்களுக்கு அதிக வரவேற்பிருந்தது.

3. விவசாயப் புரட்சியால் பட்டினிப் பிரச்சினை அதிகரித்தது. பழைய முறைப்படி ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால் வேலையின்மை கிடையாது. ஆனால் விவசாயப் புரட்சிக்குப் பின்பு, விவசாயத்திற்காக இயந்திரங்கள் பயன்படுத்துவதால் ஒரு குடும்பத்திலுள்ள அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிட்டவில்லை. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது.

4. விவசாயப் புரட்சியால் பயனடைந்தவர்கள் பெரும் நிலச்சுவான்தார்களே யாவர். சிறு நிலக்கிழார்களின் நிலை வர வரக் கேவலமாயிற்று. அவர்களில் சிலர் தங்கள் நிலங்களை விற்றுவிட்டு நகரங்களுக்குச் சென்று விட்டனர், வேறு சிலர் அடிமைகளாய் வாழ்ந்தனர். சுதந்திர மானியதாரர்கள், பத்திர மானியதாரர்கள். உழவர்கள் என்கிற வகுப்புகள் மாறி நிலப்பிரபுக்கள், குத்தகைச் சாகுபடியாளர்கள், கூலியாட்கள் என்ற வகுப்புகள் வந்து முளைத்தன.

5. நெப்போலியப் போர்களால் நாட்டில் மக்களின் தொல்லைகள் அதிகரித்தன. உணவுப் பொருள்களின் விலைகள் ஏறின. தானியங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த தானியச் சட்டங்கள் (Corn laws)

பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டன. அதனுல் வெளிநாட்டுத் தானியம் இங்கிலாந்தில் இறக்குமதியாவது தடுக்கப்பட்டது. இங்கிலாந்தின் நிலப்பிரபுக்கள் தங்கள் தானியங்களுக்குப் போட்டியில்லாததால் பெரும் இலாபமடைந்தனர். ஆனுல் சாதாரண மக்கள் பெரும் அவதிக்குள்ளானுர்கள். சாதாரண ஒரு ரொட்டியைக் கூட சாதாரண மக்கள் ஒரு இன்ப வாழ்க்கைப் (Luxury) பொருளாகக் கருதினர்.

தொழிற் புரட்சி

'தொழிற் புரட்சி' என்ற சொற்றெடர் ஆர்னல்டு டாயின்பி (Arnold Toynbee) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகுமென்று பேராசிரியர் போலார்டு (Prof. Pollard) கூறுகின்ருர், இங்கிலாந்தில் தொழில் துறையில் ஏற்பட்ட வியத்தகு மாற்றங்களையே 'தொழிற் புரட்சி' (Industrial Revolution) எனக் கூறினர். இங்கு 'தொழிற் புரட்சி' என்ற சொற்றெடருக்குப் பதில் 'தொழில் வளர்ச்சி' என்ற சொற்றெடரைப் பயன் படுத்தியிருக்கலாம் எனச் சில வரலாற்ருசிரியர்கள் கூறுகின்றனர். ஏனெனில் உற்பத்தியில் புரட்சிகரமான மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. அத்துடன் பழையன கழிந்து புதியன புகுதலுக்குச் சுமாராக ஒரு நூற்ருண்டு காலம் பிடித்தது என வாதாடுகின்றனர். இருந்தபோதிலும் 'தொழிற் புரட்சி' என்ற சொற்றெடர் தான் பொருத்தமாயிருக்கின்றது. ஏனெனில் இங்கிலாந்தின் பழைய தொழில் முறை முழுவதும் புரட்சிகரமான மாறுதலைப் பெற்றது. மனிதனே எல்லாத் தொழில்களையும் செய்வது என்பது மாறி, இயந்திரங்கள் அவற்றைச் செய்வது என்ற முறை ஏற்பட்டது. வீடுகளிலே செய்துவந்த தொழில்கள் தொழிற்சாலைகளுக்கு மாற்றப்பட்டன. அதனுல் இங்கிலாந்தில் இயந்திரயுகம் ஏற்பட்டது. ஆகவே இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சிகரமான தொழில் மாறுதலைத் தொழிற் புரட்சி யெனவே அழைக்கலாம். அவ்வாறே தான் அழைக்கவும் படுகின்றது.

பதினெட்டாம் நூற்ருண்டின் இடைப்பகுதி வரை இங்கிலாந்தானது விவசாயத்தையே தனது பெருந் தொழிலாகக்கொண்டிருந்தது. நெசவுத் தொழிலை விவசாயிகள் ஓர் உப தொழிலாகத்தான் கொண்டிருந்தனர். இரும்புத் தொழில் ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தது, ஆனுல் இரும்பை உருக்க வெறும் மரக் கட்டைகளையே மக்கள் நம்பியிருந்ததால் இரும்புத் தொழில் அதிகம் வளரவில்லை. அத்துடன் இரும்பை உருக்க மரக்கட்டைகள்

பயன்படுத்தப்பட்டதால் பல காடுகள் அழிந்தன. அதனுல் அரசாங்கம் காடுகளைக் காப்பாற்ற வேண்டிச் சில சட்டங்களை இயற்றியது. எனவே இரும்புத் தொழில் நசிக்க ஆரம்பித்தது. ஆண்டொன்றுக்குச் சில ஆயிரம் டன் இரும்பே உற்பத்தி செய்யப் பட்டது.

மட்பாண்டம் செய்தல், கம்பளியாலான பொருள்களைச் செய்தல் போன்றவைகள் வீடுகளிலேயே உற்பத்தி செய்யப் பட்டன, இம்முறை 'இல்லத் தொழில் முறை' (Domestic System) என்று பெயர் பெற்றது. இம்முறை 18ஆம் நூற்றுண்டின் பிற் பகுதியில் ஏற்பட்ட பல புதுமைப் படைப்புகளால் (Inventions) தொழிற்சாலை முறையாக (Factory System) வலிவுற்றது. குடியேற்ற நாட்டுப் பெருக்கத்தாலும், பிற நாடுகளில் ஆங்கிலே யரின் துணிமணிகளுக்கு நல்ல வரவேற்பு இருந்ததாலும் உற்பத்தி யைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே நூற்புத் தொழிலில் ஒரு புரட்சி தேவைப்பட்டது. அப் புரட்சியை 1765 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் ஹார்க்ரீவ்ஸ் (James Hargreaves) என்பவர் தோற்றுவித்தார். இவர் நூற்கும் ஜேன்னி (The Spinning Jenny) என்று ஒரு நூற்பு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அவ் வியந்திரம் எட்டு நூற்கதிர்களை (Spindles) ஒரே சமயத்தில் சுழற்றியது. அதனுல் இதன்மூலம் உற்பத்தி சிறிதளவு பெரு கியது. இந்த இயந்திரம் மரத்தினுல் செய்யப்பட்டதாலும், கைகளாலேயே இயக்க முடிந்ததாலும் வீடுகளில் வைத்துக் கொள்ளப்பட்டது. அதனுல் பழைய இல்லத் தொழில் முறை மாருமல் இருந்தது. ஆனுல் நூல் உற்பத்தி மட்டும் பெருகியது.

1769 ஆம் ஆண்டில் ஆர்க்ரைட் (Arkwright) என்பவர் நீர்ச் சட்டம் (Water Frame) என்ற இயந்திரத்தை உண்டாக் கினுர். இது நீரின் ஆற்றலால் இயங்கக் கூடிய இயந்திரமாகும். இவ் வெந்திரமானது மொற மொறப்பானதும் உறுதியும் கொண்ட நூலை உற்பத்தி செய்தது. இந்த இயந்திரம் சிறு வீடுகளில் இயங்க முடியாததால் தொழிற்சாலை முறையை உருவாக்கியது.

1779 ஆம் ஆண்டில் சாமுவேல் கிராம்ப்டன் (Samuel Crompton) என்பவர் 'மியூல்' (The Mule) என்ற ஓர் இயந்திரத் தைக் கண்டுபிடித்தார். அதில் ஜென்னி, நீர்ச் சட்டம் என்ற இரண்டு பொறியந்திரங்களில் காணப்பட்ட நுட்பங்கள் இணைக்கப் பட்டன. எனவே, நூல்கள் மென்மையாகவும் உறுதியாகவும் நூற்கப்பட ஏதுவாயிற்று. அதன் காரணமாய் மெல்லிய மஸ்லின்கள் நெய்ய முடிந்தது.

1785 ஆம் ஆண்டில் எட்மண்ட் கார்ட்ரைட் (Edmund Cartwright) என்பவர் விசைத்தறி (Powerloom) என்னும் நெய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் தறியானது கையினுல் இயக்கப் படுவதற்குப் பதிலாக விசையின் மூலம் உந்தப்பட்டது. அதனுல் நெய்தல் வேகமாகச் செய்யப்பட்டது.

1793 ஆம் ஆண்டில் ஒயிட்னி (Whitney) என்பவர் ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அந்த இயந்திரம் பருத்தியையும் விதைகளையும் தனித் தனியே பிரித்தது. இப் பணி இதற்கு முன்பு கைகளாலேயே செய்யப்பட்டு வந்தது. அதனுல் கால தாமதம் ஏற்பட்டது. இத்தகைய இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதால் இப் பணியை மிக வேகமாகச் செய்ய முடிந்தது.

பொறிகளை இயக்குவதற்கு ஆரம்பத்தில் நீர்விசை (Water Power) மட்டுமே பயன்படுத்தப்பட்டது. சில சமயங்கள் நீர் விசை அளவுக்கு மீறிக் கிடைத்ததாலும், சில சமயங்களில் அளவுக்குக் குறைவாகக் கிடைத்ததாலும் தொழில் பாதிக்கப் பட்டது. இதைத் தடுக்க பிற்காலத்தில் நீராவி சக்தி பயன்படுத் தப்பட்டது. நியூ கோமன் (New Comen) என்பவர் தான் முதன் முதலில் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார், இந்த இயந் திரம் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நீர் இறைக்கவே பயன்பட்டது. இவருக்குப் பின் ஜேம்ஸ் வாட் என்பவர் ஒரு நீராவி இயந்திரத் தைக் கண்டுபிடித்தார். இவருடைய இயந்திரம் சிக்கனமுடைய தாயும், திறமை மிக்கதாயும் விளங்கியது. அதனுல் இதன் மூலம் நூற்பு ஆலைகளும் இரும்புத் தொழிற்சாலைகளும் பெரும் பயனடைந்தன.

1800ஆம் ஆண்டில் இரசாயனப் பொருள்களின்மூலம் துணிகளைச் சலவை செய்யவும், சாயங்கட்டவும் பல பொறிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

மேற்கூறிய பல்வேறு இயந்திரங்களும் இரும்பால் செய்யப்பட வேண்டியதால், இரும்புத் தொழில் வளர்ச்சியடைய வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இரும்பை உருக்க மரக் கட்டைகளை உபயோகிப்பதை அரசாங்கம் தடுத்தது. நிலக்கரி பயன்படுத்திய போது அதில் கந்தகம் கலந்திருந்ததால் பயன் ஏற்படவில்லை. ஆப்ரஹாம் டெர்பி (Abraham Derby) என்பவர் மரக் கட்டைக்குப் பதிலாக சுட்ட நிலக்கரியை (Coke) இரும்பை உருக்கப் பயன் படுத்தினுல் இரும்பு கெடாது எனக் கண்டு பிடித்தார். அதன் பின்பு இரும்புத் தொழிலில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. நிலக்

கரியும் இரும்பும் சேர்ந்தாற்போல் கிடைக்கும் இடங்களில் இரும்புத் தொழிற்சாலைகள் வளர்ந்து ஓங்கின.

சுரங்கங்களில் பல விபத்துக்கள் ஏற்பட்டு வந்தன. அவற்றைத் தடுக்க 1815ஆம் ஆண்டில் ஹம்ப்ரிடேவி (Humphrey Davy) என்பவர் அபாயந்தவிர் விளக்கு (Safety Lamp) ஒன்றைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் சுரங்கங்களில் தொழிலாளிகள் தங்களுடைய பணியை அபாயமின்றிச் செய்யமுடிந்தது.

தொழிற் புரட்சியைத் துரிதப்படுத்தவும் ஊக்குவிக்கவும் போக்குவரத்து வசதிகள் பெரிதும் தேவைப்பட்டன. இங்கிலாந்தின் பாதைகள் மிகவும் கேவலமான நிலையிலிருந்தன. ஜான் மெகாடம் (John Macadam) என்ற ஸ்காட்லாந்தின் பொறியாளர் சிறு கற்களின் மூலம் நல்ல சாலைகளை அமைக்கலாம் என்ற முடிவுக்குவந்தார். டெல்போர்டும், (Telford)மெகாடமும் சாலைகள் அமைக்கும் கலையிலே பல வியத்தகு சாதனைகளைச் செய்தனர். ஆகவே நாடு முழுவதும் நல்ல முறையில் சாலைகள் போடப்பட்டன. இச் சாலைகள் இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவின.

வெகு தொலைவிலுள்ள இடங்களுக்குச் சாலைகளின் மூலம் துரிதமாகப் பொருட்களை ஏற்றிச் செல்வது கடினம் என நினைத்துக் கால்வாய்கள் பயன்படுத்தப்பட்டன. கால்வாய்களின் உபயோகத்தை முதன் முதலில் இங்கிலாந்தில் வெளிப்படுத்தியவர் பிரிட்ஜ்வாட்டர் கோமகனாவார்.

ஜார்ஜ் ஸ்டீபென்சன் (George Stephenson) என்பவர் நீராவி ரயிலின் தந்தையென அழைக்கப்பட்டார். 1830ஆம் ஆண்டில் இவர் வெற்றிகரமாக நீராவி ரயிலைக் கட்டி முடித்தார். 19ஆம் நூற்றாண்டில் நாடு முழுவதும் பல ரயில்வேக்கள் கட்டி முடிக்கப்பட்டன. இதனால் நாட்டில் போக்குவரத்துச் சாதனங்கள் பெருகின. நீராவிக் கப்பல்களும் போக்குவரத்திற்காகப் பெரிதும் உதவின. அத்துடன் 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மின்சாரத் தந்தியும் கண்டு பிடிக்கப்பட்டது. சார்லஸ் வீட்ஸ்டோன் (Charles Wheatstone) என்பவர் இதற்காகப் பெரிதும் பாடுபட்டார். 1866ஆம் ஆண்டில் அட்லாண்டிக் கடலில் தந்திக்காக கம்பி வடம் (Cable) பதிக்கப்பட்டது. தொலைபேசியும் (Telephone) கண்டு பிடிக்கப்பட்டு பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

தொழிற் புரட்சியின் விளைவுகள்

1. தொழிற் புரட்சியினால் இங்கிலாந்தின் செல்வநிலை பெருகியது. நூற்பு ஆலைகளும், கம்பளி ஆலைகளும். இரும்புத் தொழிற்சாலைகளும் பெரும் அளவில் இங்கிலாந்தில் ஏற்பட்டன. இத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் உலகின் மூலைமுடுக்குகளில் விற்கப்பட்டன. இங்கிலாந்தின் நிலக்கரி உலகத்தின் பல பாகங்களுக்கு அனுப்பப்பட்டது. அதற்காக இங்கிலாந்தின் கப்பல்கள் உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டன.

2. பல தொழில்கள் பெருகியதாலும், அவற்றுக்காகப் பெரிய பெரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படவேண்டி நேர்ந்ததாலும் பெரிய தொழிற்சாலைகளை நிறுவவேண்டியதாயிற்று. அதனால் தொழில் நகரங்கள் உருவெடுத்தன. லங்காஷையர், யார்க்ஷையர், மான்செஸ்டர், ஷெபீஸ்டு போன்ற தொழிற் பட்டணங்கள் தோன்றலாயின. பழைய நகரங்கள் நலிவுற்றன.

3. தொழிற் புரட்சியின் விளைவாக நாட்டின் ஜனத்தொகை பெருகிற்று. வாழ்க்கை வசதிகள் அதிகரித்த காரணத்தால் இங்கிலாந்தில் இறப்புக் குறைந்து, பிறப்பு அதிகமாயிற்று.

4, தொழிற் புரட்சியினால் மக்கள் தொகையில் ஒரு மாற்றமும் ஏற்பட்டது. இங்கிலாந்தின் தெற்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து மக்கள் வடக்கு, மேற்குப் பகுதிகளில் குடியேறினர். ஆகவே, இங்கிலாந்தின் வடக்கு மேற்குப் பகுதிகள் மக்கள்தொகை மிகுந்த இடங்களாக மாறின. மேலும் தொழிற் புரட்சிக்கு முன்பு கிராமப் புறங்களில் மிகுதியாய் வாழ்ந்து வந்த மக்கள் தொழிற் புரட்சிக்குப்பின் நகரங்களில் மிகுதியும் குடியேறி வாழலாயினர்.

5. நெப்போலியனிடம் இங்கிலாந்து நீண்ட போரைத் தொடுத்து முடிவில் வெற்றி கண்டது. நெப்போலியனைத் தோற்கடிக்க தொழிற்புரட்சி பெரிதும் உதவியது. எவ்வாறு எனில் நெப்போலியனால் அழிக்கப்பட்டதற்கு அதிகமாகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்

பட்டன. அத்துடன் ஐரோப்பிய நாடுகளிற் பல இங்கிலாந்தை நம்பியிருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

6. தொழிற்சாலை முறை தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே பல போராட்டங்களை ஏற்படுத்தி விட்டது. அதன் காரணமாக சோஷலிஸம் அல்லது பொதுவுடைமைக் கொள்கையானது இங்கிலாந்தில் தோன்ற ஆரம்பித்தது.

7. தொழிற் புரட்சியானது சர்வ தேசத் தொடர்பையும் ஏற்படுத்தியது. பல புதிய கண்டுபிடிப்புகள் உலக நாடுகளை இணைத்தன. ஆகவே ஒரு நாடு மற்றொரு நாட்டை நம்பியிருக்க வேண்டிய நிலை உருவானது.

8. தொழிற் புரட்சியால் பொருள்களின் தரம் உயர்ந்தது. அதே நேரத்தில் உற்பத்தி பெருகியதால் அவற்றின் விலையும் மலிந்தது. ஆனால் பலர் செய்யும் வேலையை ஓர் இயந்திரம் செய்ததால் நாட்டில் ஆரம்பத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாயிற்று. அதனால் பல கலகங்கள் ஏற்பட்டன. ஆனால் நாளடைவில் எல்லோருக்கும் வேலை கிடைத்தது. பொருள்கள் மலிவானதால், தேவை பெருகிற்று. அத் தேவையைப் பூர்த்தி செய்ய மேலும் பல தொழில்கள் பெருக்கமடைந்தன. அவற்றுக்கு ஏராளமான ஆட்கள் தேவைப்பட்டனர். அதனால் வேலையின்மை குறைந்தது.

9. தொழிற்சாலைகள் பெருகியதால் அரசாங்கத்திற்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. தொழிற் பட்டணங்களில் பல நகர அமைப்புத் திட்டம் (Town-Planning) வளர்ந்தது. அதனால் அங்கு சுகாதாரம் சீர்கெட்டது. ஆகவே பொதுச் சுகாதாரத்தை ஏற்படுத்த அரசாங்கம் பல சட்டங்களை இயற்ற வேண்டியதாயிற்று.

10. தொழிற் புரட்சியினால் மிகுந்த அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டதாலும் பல பிரச்சினைகள் தோன்றின. உலகச் சந்தைகளில் போட்டிகள் அதிகமிருந்ததால், எப்படியாயினும் பொருள்களை விற்க உலகச் சந்தைகளைக் கவரக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

11. தொழிற் புரட்சியானது இங்கிலாந்தில் முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்கியது. அதனுல் முதலாளிகள் மேலும் பணம் படைத்தவர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாறினர். முடிந்த அளவு தொழிலாளிகள் முதலாளிகளால் சுரண்டப்பட்டனர். முதலாளிகள் பணம் சேர்ப்பதிலே முழுமூச்சாக இருந் தார்களேயொழிய தொழிலாளிகளின் நலன்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் கூட தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். தொழி லாளிகள் இடைவெளியின்றி ஒருநாளில் 16 மணி நேரம் வேலை செய்ய வேண்டியதாயிற்று. அத்துடன் அவர்களுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப் படவில்லை. ஆகவே நாளடைவில் தொழிலாளிகளும் முதலாளிகளும் பகையாளிகளாக மாறினர்.

இங்ஙனம் தொழிற் புரட்சியால் இங்கிலாந்தில் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டபோதிலும் பல தீமைகளும் உண்டாயின. இருப்பினும் தொழிற் புரட்சியால் இங்கிலாந்து ஒரு செல்வம் மிக்க நாடாக மாறியது. அதனுல் இங்கிலாந்தின் புகழ் உலக அரங்கில் ஓங்கியது. அத்துடன் இங்கிலாந்து உலகிலேயே ஒரு வலிமை படைத்த நாடாகவும் விளங்க ஏதுவாகியது.

18. மெத்தாடிஸ்ட் இயக்கம்

இங்கிலாந்தில் டியூடர்கள் காலத்திலும், ஸ்டூவர்ட்டுகள் காலத்திலும் மக்களிடம் காணப்பட்ட தெய்வபக்தியும், மத உணர்ச்சியும், அறநெறியும் ஹனோவரியர்கள் காலத்தில் குறைந்துவிட்டன. கிறிஸ்துவ மத நம்பிக்கையில் பற்றில்லாதவர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. மதக் குருக்கள் தங்கள் கடமையை மறந்து, இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். கோயில்களில் வழிபாடு நிகழ்த்து வோர், ஏதோ கடனுக்குச் சடங்குகளைச் செய்தனரேயன்றி, அவர் களிடம் சிறிதேனும் பக்தியில்லை. பெரிய பிஷப்புகள் அரசியல் வாதிகளாகவும், இன்பப்பிரியர்களாகவும் பொழுது போக்கினரே யன்றி, மதப் பிரசாரம் செய்ய அவர்கள் சிறிதேனும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. திருச்சபை அதிகாரிகள் ஒழுக்கமும், பண்பும், அறநெறியும், கடமையுணர்ச்சியும் அற்றவராய் வாழ முற்பட்டனர். அதே சமயத்தில் பாலிங்ப்ரோக் போன்றோர் தங்களை நாத்திகர்கள் என்று கூறிவந்தனர். ஆகவே மக்களிடம் மத நம்பிக்கை குறைந்தது.

மக்களிடையே தெய்வ பக்தியும், மத நம்பிக்கையும் குறைந்த தால், அவர்களிடம் ஒழுக்கமும் குறைந்தது. அவர்கள் இன்பக் கடலில் நீந்துவதிலேயே காலம் கழித்தனர். குதிரைப் பந்தயங் கள், சேவல் பந்தயங்கள், எருது வேட்டைகள், பெண்களைக் கற்பழித்தல் போன்றவைகளிலேயே ஈடுபட்டிருந்தனர். பெண் கள் தெருக்களிலே மானபங்கம் செய்யப்பட்டார்கள். குடித்து விட்டுத் தெருக்களில் ஆடுவதென்பது சர்வ சாதாரணமாய் இருந்தது. குடிப் பழக்கத்தோடு சூது, விபசாரம் போன்ற தீய பழக்கங்கள் நாட்டில் மலிந்ததால், கொலைகளும், கொள்ளைகளும் பெருகின. விக்கு கட்சியினர் தங்களை ஆட்சிப் பீடத்தில் நிலைக்கச் செய்வதற்காக நாட்டில் லஞ்சத்தையும், ஊழலையும் பரப்பினர். வால்போல் போன்றோர் முன்னேற்றத்திற்காக எதையும் எப்படியும் செய்யலாம் என்ற கொள்கையை வளர்த்தனர்.

நாட்டில் இங்ஙனம் தலைவிரித்தாடிய ஒழுக்க மின்மைக்கும் மதப் பற்றின்மைக்கும் மூன்று ஆக்ஸ்போர்டு சீர்திருத்தவாதிகள்

சேவாலிட்டனர். அவர்கள் தான் மெத்தாடிஸ்ட் இயக்கம் (The Methodist Movement) நாட்டில் ஏற்படுவதற்குப் பொறுப்பானவர்கள். அவர்கள் ஜான் வெஸ்லி (John Wesley), சார்லஸ் வெஸ்லி (Charles Wesley), ஜார்ஜ் ஒயிட்ஃபீல்டு (George Whitefield) போன்றோராவர்.

மெத்தாடிஸ்டுகள் (Methodists) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒழுங்கு முறைவாதிகள் என்பது பொருளாகும். நாட்டில், ஒழுக்கமின்மை, மதப் பற்றின்மை, அறநெறியின்மை ஆகியவைகளை ஒழித்து, ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்த இயங்கிய இயக்கம் தான் மெத்தாடிஸ்ட் இயக்கமாகும்.

ஜான் வெஸ்லி (1703—1791)

ஜான்வெஸ்லி மெத்தாடிஸம் என்ற கொள்கைக்குத் தந்தையாவார். இவரும் இவர் சகோதரரான சார்லஸ் வெஸ்லியும் இக் கொள்கையைப் பரப்பியவர்களாவார்கள். இவர்கள் லின்கால் ஷையரில் சமய நிறுவன முகவராகப் (Rector) பணிபுரிந்த சாமுவேல் வெஸ்லி (Samuel Wesley) என்பவரின் புதல்வர்களாவார்கள். இவர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பயின்றவர்கள். அப்பொழுது இவர்கள் அதிகாலையில் எழுந்து ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். இவர்களுடைய செயல்கள் அனைத்தும் ஒழுங்காகவும் வரையறைக்குட்பட்டனவாயும் இருந்ததால் மற்ற இளைஞர்கள் இவர்களை ஒழுங்குமுறை வாதிகள் அல்லது மெத்தாடிஸ்டுகள் எனக் கேலியாக அழைத்தனர். ஒழுங்கீனமும், கெட்ட நடத்தைகளும் குடிகொண்டிருந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இவர்களின் நடத்தைகள் மற்றவர்களுக்கு விசித்திரமாகவே தோன்றின. 1735ஆம் ஆண்டில் தம் படிப்பு முடிந்தவுடன் ஜான்வெஸ்லி அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியாவுக்கு (Georgia) அழைப்பின் பேரில் சென்றார். அங்கு இவர் சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். ஆனால் அங்குள்ளவர்களிடம் இவர் தகராறு செய்து கொண்டு 1737ஆம் ஆண்டு மனமுடைந்து இங்கிலாந்திற்குத் திரும்பினார். இவர் லண்டனில் குடியமர்ந்தார். இச் சமயத்தில் இவருக்கு ஜெர்மன் நாட்டைச் சார்ந்த மொராவியர்கள் (Moravians) என்னும் கூட்டத்தினரிடம் தொடர்பு கிட்டியது. அவர்களின் சமயப்பற்றும், சமயப் பிரச்சாரமும் இவருக்குப் பெரிதும் பிடித்தன. அவர்களது துணைகொண்டு நல்ல ஆன்மீக அனுபவத்தை இவர் பெற்றார்.

1738ஆம் ஆண்டில் லண்டன் மாநகரில் ஜான்வெஸ்லி தமது முதல் மெத்தாடிஸ்ட் சங்கத்தை ஆரம்பித்தார். இச் சங்

கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் தினமும் கூட்டங்களை நடத்தினர். சில கூட்டங்கள் இரவு முழுவதும்கூட நடைபெறும். தம் சகோதரரான சார்லஸ் வெஸ்லி, தம் நண்பரான ஒயிட்ஃபீல்டு (Whitefield) ஆகியோரின் துணைகொண்டு ஜான்வெஸ்லி இங்கிலாந்திலும் வேல்ஸிலும் ஓர் அறப் போராட்டத்தையே துவக்கினர். இம் மூவரும் எந்த நேரத்திலும் எங்கும் சமயப் பிரச்சாரம் செய்துகொண்டே யிருந்தனர். கிராமப் புறங்களிலும், நகரங்களிலும் திருச்சபைகளிலும், இவர்கள் சமயப் பிரச்சாரங்களைச் செய்தனர். சில சமயங்களில் இவர்களின் கூட்டத்திற்குச் சிறு கூட்டமே சேரும். மற்றும் சில சமயங்களில் 30,000 முதல் 40,000 வரை மக்கள் கூட்டம் கூடும். அதிகாலையிலேயே தங்கள் பிரச்சாரத்தை ஆரம்பித்து இரவு வரையில் சோம்பலின்றிச் செய்தார்கள். ஜான்வெஸ்லி ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றி 50 ஆண்டுகள் பிரச்சாரம் செய்தார். அத்துடன் பல புத்தகங்களை எழுதியும் வெளியிட்டார். இவர் இசை, விளையாட்டுப் போட்டிகள், விடுமுறை நாட்கள் முதலியவைகளை எதிர்த்தார். தாம் இறந்த பிறகும் இவ் வியக்கம் அழிந்துபோகாமல் வெற்றிநடைபோடுமளவுக்கு இவ் வியக்கத்தை அமைத்தார். இவருடைய வழித்துணையால் பல பள்ளிக்கூடங்களும், சமயக் கூடங்களும், அறநிலையங்களும் தோன்றின.

ஜான்வெஸ்லியின் சமயப் பிரச்சாரத்தால் மக்களில் சிலர் ஈர்க்கப்பட்டனர்.

‘ உன்னால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்
உன்னால் முடிந்த வழிகளில் செய்
உன்னால் முடிந்த இடங்களில் செய்
உன்னால் முடிந்த நேரங்களில் செய்
உன்னால் முடிந்த எல்லா மக்களுக்கும் செய்
உன்னால் முடியும் வரையும் செய்க ’

என்பதே இவருடைய பிரச்சாரத்தின் மையமாக அமைந்திருந்தது.

சார்லஸ் வெஸ்லி

இவரும் தம் சகோதரரான ஜான் வெஸ்லியுடன் சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். பிரச்சாரம் செய்வதிலே இவர் வல்லவர். கவிதைகள் மூலமாகவே இவர் பிரச்சாரத்தை மேற்கொண்டார். இவருடைய பிரச்சாரக் கவிதைகள் நேரடியாகவும், எளிமையாகவும், உணர்ச்சியைத் தூண்டும் விதத்திலும் அமைந்திருந்தன. இவருடைய கவிதைகளால் ஆங்கில மக்கள் ஈர்க்கப்

பட்டனர். அதனுல் சமயப் பிரச்சாரத்திற்குப் புதுத்தெம்பு ஏற்பட்டது.

ஜார்ஜ் ஒயிட்ஃபீல்டு

இவர் சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லமை படைத்தவர். இவர் மக்களை உணர்ச்சிவசப் படுத்துவதில் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்தார். கூட்டத்தினர் உணர்ச்சிவசப்பட்டு அழக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விடுவார். பிரச்சாரம் செய்யும்போது இவரையறியாமலேயே இவரின் கண்களில் நீர்மல்கும். இத்தகைய திறமையால் தம் கருத்துகளை மக்களிடையே இவர் பரப்பினுர்.

இந்த ஆக்ஸ்போர்டு சீர்திருத்தவாதிகளின் இயக்கம் லண்டன், பிரிஸ்டால் போன்ற நகரங்களை மையமாகக் கொண்டிருந்தது. இருந்தபோதிலும் இவர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றி நாடு முழுவதும் ஒவ்வொரு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்தனர். ஆண்டுக் கொருமுறை ஒரு மாநாட்டைக் கூட்டி விழா நடத்தப்பட்டது. 1784ஆம் ஆண்டில் மெத்தாடிஸ்டு இயக்கத்தின் முதல் மாநாடு நடைபெற்றது.

இயக்கத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பு

மத குருமார்கள் இவர்களின் பிரச்சாரத்தை விரும்பாததால், இவர்களைத் தங்கள் சமய உரை மேடைகளில் (Pulpits) பிரச்சாரம் செய்ய அனுமதிக்க மறுத்தனர். ஆகவே மெத்தாடிஸ்டுகள் திறந்த வெளிகளில் தான் பிரச்சாரம் செய்ய முடிந்தது. ஆங்கிலிக்க குருமார்கள் மெத்தாடிஸ்டுகளுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டனர். மக்கள் மெத்தாடிஸ்டுகளின் மீது கல்லும், மண்ணும் சில வேளைகளில் மலமும் வீசினர். நாய்கள் அவர்கள் மீது அவிழ்த்து விடப்பட்டன. அவர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தனர். அவர்களின் வீடுகளில் புகுந்து சாமான்களைக் கண்டபடி நொறுக்கினர். அத்துடன் சிலரைக் கொல்லவும் செய்தனர். இத்தகைய கொடுமைகளையும் அட்டூழியங்களையும் மெத்தாடிஸ்டுகள் பொறுத்தனர். இன்னு செய்தார்க்கும் இனியவே செய்து, நாளடைவில் அவர்களின் நன்மதிப்பைப்பெற்றனர்.

திருச்சபை பற்றிய கொள்கை

மெத்தாடிஸ்டு இயக்கத்தை ஆரம்பித்த ஜான்வெஸ்லி, சார்லஸ்வெஸ்லி, ஒயிட்ஃபீல்டு போன்றவர்கள் ஆங்கிலிக்கத் திருச்சபையை எதிர்க்கவில்லை. ஜான்வெஸ்லி தம்மைக் கடைசிவரை ஆங்கிலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவரென்றே சொல்லிக்

கொண்டிருந்தார். இருந்தும் ஆங்கிலிக்கத் திருச்சபை மெத்தாடிஸ்டு இயக்கத்தை வெறுத்தது. மெத்தாடிஸ்டு இயக்கம் அமெரிக்காவிலும் பரவியது. அங்கு ஒரு பிஷப்பை அனுப்ப ஜான்வெஸ்லி விரும்பினர். அப் பிஷப்புக்கு ஞான ஸ்நானம் வழங்கும்படி அவர் ஆங்கிலேயப் பிஷப்புகளைக் கேட்டும் பயனில்லாமல் போகவே, அவரே ஒரு பிஷப்புக்கு ஞானஸ்நானம் செய்து அமெரிக்காவுக்கு அனுப்பினர்.

இயக்கத்தினல் ஏற்பட்ட விளைவுகள்

மெத்தாடிஸ்டு இயக்கம் மக்களிடையே குறிப்பாக ஏழை மக்களிடையே பக்தி உணர்ச்சியையும், சமயப் பற்றையும், ஒழுக்கத்தையும், அறநெறியையும், பண்பையும், கடமை யுணர்ச்சியையும் ஏற்படுத்தியது. இவ் வியக்கத்தின் போதனையால் நாட்டில் ஒழுக்கநிலை பெரிதும் உயர்ந்தது. குடி, கொலை, கொள்ளை முதலியன நாட்டில் குறைந்தன. கண்ணியம், கட்டுப்பாடு போன்ற பண்புகள் சாதாரண மக்களிடமும் மலர ஆரம்பித்தன. எங்கும் ஓர் ஆன்மீக உணர்வு ஏற்பட்டது. கடமை மறந்திருந்த குருமார்கள் சமயப் பிரச்சாரத்திலே ஈடுபட்டனர். பல சங்கங்கள் தோன்றி ஆங்காங்கே சமயக் கொள்கைகளைப் பரப்பின. உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டுமென்பதையும் துன்புறும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதையும் மக்கள் உணரத் தொடங்கினர். ராபர்ட்ரெய் என்பவர் ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி புகட்ட வகுப்புகள் நடத்தினர். ஹன்னமோர் என்பவர் உழவர்களின் நிலை மேம்பட உழைத்தார். ஜான் ஹாவர்டு என்பவர் சிறைச்சாலைகளைச் சீர்திருத்தப் பாடுபட்டார். அவரது முயற்சியால் சிறு குற்றங்களுக்கும் பெரும் தண்டனைகளை விதிப்பது கைவிடப்பட்டது. எலிஸபெத் பிரை என்ற பெருமாட்டி பெண் கைதிகளின் நிலை உயரப் பெரிதும் உழைத்தார். வில்லியம் வில்பர் போர்ஸ் என்பார் அடிமை வியாபாரத்தை ஒழிக்க அரும்பாடு பட்டார். ஆகவே இவ் வியக்கம் மக்களுக்கு ஓர் புதிய பொறுப்பை உண்டாக்கியது. கடவுள் முன் எல்லோரும் சமம் என்று கருத மக்களை இவ் வியக்கம் தூண்டியது. அதே சமயத்தில் நாட்டில் நடக்கும் காட்டுமிராண்டித்தனமான இன்ப நிகழ்ச்சிகளை ஒழித்துக்கட்ட இவ் வியக்கம் போராடியது.

இயக்கத்தினல் ஏற்பட்ட தீமைகள்

பல நன்மைகளுக்கு வித்திட்ட மெத்தாடிஸ்டு இயக்கம் சில தீமைகளுக்குக் காரணமாயிற்று. இவ் வியக்கத்தைச் சார்ந்தவர்கள்

கொள்கை விடாப்பிடியர்களாக இருந்தனர். 'எம்முடைய அறிவுரைகளை யார் பழிக்கின்றனரோ அவர் மிக மோசமான விளைவுகளை ஏற்க நேரிடும்' என்று கூறும் அளவுக்கு ஜான் வெஸ்லி போய்விட்டார். அதனுல் பலர் இவ் வியக்கத்தை வெறுக்க ஆரம்பித்தனர். எல்லா விதமான பொழுதுபோக்குகளையும், விளையாட்டுகளையும் மெத்தாடிஸ்டுகள் எதிர்த்தனர். ஆகவே மகிழ்ச்சியால் துள்ளித் திரிந்த மக்களிடம் ஓர் அச்சவுணர்ச்சி ஏற்பட்டது. கலை, நாடகம் போன்ற துறைகளில் ஒருவித மந்தம் நிலவியது. ஆகவே 18ஆம் நூற்ருண்டில் இன்ப மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த இங்கிலாந்தை மகிழ்ச்சியற்ற இங்கிலாந்தாக மாற்றியதற்கு இவ் வியக்கமே முழுப் பொறுப்பாகும்.

பொதுவாகப் பார்க்குமிடத்து இவ் வியக்கத்திஞல் இங்கிலாந்தில் தீமையை விட நன்மையே பெரிதும் ஏற்பட்டதெனக் கூறலாம்.

19. நான்காம் ஜார்ஜ்
(1820—1830)

நெப்போலியனை எதிர்த்து வாட்டர்லூ போர்க்களத்தில் இங்கிலாந்து வெற்றிக்கொடியை நாட்டியபொழுது இங்கிலாந்தின் அரசராயிருந்த மூன்றும் ஜார்ஜ் அவ் வெற்றியைப் பாராட்டி மகிழ்ச்சியடைய முடியாத நிலையில் இருந்தார். 1810 ஆம் ஆண்டிலிருந்தே அவர் தம் சுய நினைவை இழந்திருந்தார். எனவே, ஆட்சிப் பொறுப்பெல்லாம் அவரின் மூத்த மகனை நான்காம் ஜார்ஜின் (George IV) மீது விழுந்தது. 1820 ஆம் ஆண்டில் மூன்றும் ஜார்ஜ் இறக்கும் வரை அவர் காப்பாளராகவும் (Regent), அதன்பின்னர் 1830 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தின் அரசராகவும் ஆட்சி புரிந்தார்.

நான்காம் ஜார்ஜ் திறமை மிக்கவர். வெளிநாடுகளில் அவருக்கு நல்ல புகழ் இருந்தது. ஆனல், உள்நாட்டில் அவர் பெருமை குன்றியது. ஏனெனில் அவர் ஓயாது குடித்தார் ; சூதாடினர் ; காமக் களியாட்டங்களில் ஈடுபட்டார் ; ஆடம்பரங்களில் காலத்தைக் கழித்தார். பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்தார்; பெற்ற தந்தையை அசட்டை செய்தார்; கட்டிய மனைவியைப் பழிவாங்கினர்; இங்கிலாந்து அரசர்கள் காப்பாற்றி வந்த கண்ணியம், கௌரவம் முதலியனவற்றைக் காற்றில் பறக்க விட்டார். ஆகவே நான்காம் ஜார்ஜ் மக்களால் வெறுக்கப்பட்டார்.

நான்காம் ஜார்ஜ் அரியணையில் அமர்ந்தவுடன், அவரையும் அவருடைய அமைச்சரவை உறுப்பினர்களையும் கொல்ல ஒரு சதி நடந்தது. ஆர்தர் திரிஸ்டில்உட் (Arthur Thristlewood) என்பவர் மற்றும் சிலருடன் சேர்ந்து இச் சதித் திட்டத்தில் இறங்கினர். இதற்கு காடோ தெரு சதித் திட்டம் (Cato Street Conspiracy) எனப் பெயராகும். இங்கிலாந்தில் ஒரு குடியரசை ஏற்படுத்துவதே, இச் சதித் திட்டத்தின் நோக்கமாகும். இச் சதித் திட்டம் வெளிப்படவே அதனுடைய உறுப்பினர்கள் பிடிக்கப்பட்டு 1820 ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்டார்கள்.

நெப்போலியப் போர்களை வெற்றியுடன் நடத்திய டோரிக் கட்சியினர் (Tory Party), போர் முடிந்த பின்பும் தொடர்ந்து பதவியிலிருந்தனர். புகழ்பெற்ற வாட்டர்லூ வெற்றிக்குப்பின். நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் பொறுப்பையும் அவர்களே மேற்கொண்டனர். விக்கு கட்சியினர் (Whig Party) இக் காலத்தில் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தனர். அதன் தூண் போன்று விளங்கிய க்ரென்வில் (Grenville) என்பவர் 1818 ஆம் ஆண்டில் டோரிக் கட்சியில் சேர்ந்து விட்டார். விக்குகளின் தலைவராயிருந்த க்ரே பிரபு உற்சாக மிழந்து அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். புதிய தலைவராக வந்த லான்ஸ் டவுன் (Lands doune) என்பவரும் திறமையற்றவ ராயிருந்தார். ஆகவே விக்கு கட்சி தக்க தலைவர்களின்றித் தவித்ததால் டோரிக் கட்சியினரே மேலும் சில காலம் செல்வாக் குடன் விளங்கினர்.

லிவர்ப்பூல் அமைச்சரவை

1812ஆம் ஆண்டில் பெர்சிவல் (Perceval) என்னும் பிரதமர் கொல்லப்பட்ட பின், லிவர்ப்பூல் பிரபு (Lord Liverpool) பிரதம ராக நியமிக்கப்பட்டார். இவரது அமைச்சரவை அடுத்து 15 ஆண்டுகள் நீடித்தது. இவர் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் இயல்புடையவர். எதிரிகளை மடக்கி வாயுடைக்கும் திறமை பெற்றவர். தம் அமைச்சரவை உறுப்பினர்களை ஒன்று சேர்த்து வழி நடத்துவதில் வல்லவராயிருந்தார். இவருடைய முதல் அமைச்சரவையில் மிதவாதிகளே அதிகம் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் உள்நாட்டு அமைச்சராயிருந்த சிட்மவுத் பிரபுவும் (Lord Sidmouth), வெளிநாட்டு அமைச்சரா யிருந்த காசில்ரே பிரபுவும் (Lord Castlereagh), கருவூல அமைச்ச ராயிருந்த எல்டன் பிரபுவும் (Lord Eldon) ஆவர்.

சிட்மவுத் பிரபு நிதானப் போக்கினர்; தைரிய மிக்கவர்; நெருக்கடியான நேரங்களில் அவர் காட்டிய உறுதியும் வீரமும் மெச்சத்தக்கவை.

காஸில்ரே பிரபு ஒழுக்கமும் சீலமும் கொண்டவர். இவர் அயர்லாந்தின் செயலாளராக இருந்த பொழுதுதான் 1800ஆம் ஆண்டில் இங்கிலாந்தும் அயர்லாந்தும் ஐக்கியம் அடைந்தன. (Union of England and Ireland) ஐக்கியத்திற்கு ஆதரவு தரும்படி இவர் அயர்லாந்தைத் தூண்டி விட்டவர். இவர் போர்ச் செயலா ளராகவும் பணியாற்றினர், 1807ஆம் ஆண்டில் படையைச் சீர் திருத்தி அமைத்ததற்கு இவர்தான் பொறுப்பானவர். 1809ஆம்

ஆண்டில் இப்பதவியை ராஜிநாமா செய்தபின் 1812ஆம் ஆண்டில் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்பதவியை 1822ஆம் ஆண்டு வரை வகித்தார்.

1812ஆம் ஆண்டில் காஸில்ரே பிரபு வெளிநாட்டு அமைச்சராகப் பதவியேற்றபோது நெப்போலியனை எதிர்த்து நின்ற ஐரோப்பிய நாடுகள் வலிமையின்றி இருந்தன. இச் சூழ்நிலையில் காஸில்ரே பிரபு, ஐரோப்பா முழுவதும் சென்று நாடுகளிடையே கூட்டுறவுகளை (Coalitions) ஏற்படுத்தினார். அதன் காரணமாய்த் தான் 1814ஆம் ஆண்டில் நெப்போலியனைத் தோற்கடிக்க முடிந்தது. பிறகு வியன்னு காங்கிரஸில் நடைபெற்ற சமாதான ஏற்பாட்டில் காஸில்ரே பெரிதும் பணியாற்றினார். பிரான்சு மீண்டும் வலிமை பெற்று ஐரோப்பிய அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத வண்ணம் அதை ஒடுக்கக் காங்கிரஸ் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் காசில்ரே ஒப்புக் கொண்டார். ஆனால் சில சமயங்களில் ஆஸ்திரியாவோடும் பிரான்சோடும் சேர்ந்து கொண்டு, அவர் பிரஷ்யாவையும் ரஷ்யாவையும் எதிர்த்தார். இவ் வெதிர்ப்பின் காரணமாக ரஷ்யா, போலந்தின் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. ஜெர்மனியும் இத்தாலியும் பிரிக்கப்படாத ஐக்கிய நாடுகளாக விளங்கவேண்டுமென்ற கொள்கையை அவர் ஆதரிக்கவில்லை, இதனால் காஸில்ரே பிரபு தாராளக் கொள்கையுடையவரல்லர் என்றும் பிற்போக்கு வாதியென்றும் சிலர் கருதினர்.

வியன்னு மாநாட்டில், கிறித்துவ மதக் கொள்கைக்கு ஏற்ப ஐரோப்பிய விவகாரங்களைத் தீர்க்க வேண்டுமென்றும், அதற்காக எல்லா கிறித்துவ நாடுகளையும் உட்கொண்ட புனிதக் கூட்டுறவு (Holly Alliance) ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் ரஷ்யா நாட்டு அரசர் அலெக்சாந்தர் எடுத்துக் கூறினார். அவரது கருத்தை கிறித்துவ நாடுகளான ஐரோப்பிய நாடுகளால் மறுக்க இயலவில்லை. மெட்டர்னிக் (Metternich) என்னும் ஆஸ்திரியா அமைச்சர் (மாநாட்டின் தலைவர்,) அரசர்களைக் காப்பதும் அவர்களுக்கெதிராகக் கிளம்பும் புரட்சிகளை ஒடுக்குவதுமே புனிதக் கூட்டுறவின் நோக்கமாக இருக்கவேண்டுமென வற்புறுத்தினார். மக்களது இயக்கங்களை நசுக்கும் கொள்கையை காஸில்ரேயால் ஒப்புக் கொள்ள இயலவில்லை. அதே நேரத்தில் இங்கிலாந்து ஒரு கிறித்துவ நாடாக இருந்தமையால் புனிதக் கூட்டுறவைக் கண்டிக்கவும் முடியவில்லை. ஆனால் அவர் ஒரு தந்திரமான வழியைக் கண்டுபிடித்தார். மூன்றும் ஜார்ஜ் அரசர் சுயநினைவை இழந்திருப்பதால் கூட்டுறவில் சேர முடியாத நிலையுள்ளதென்றும், ஆனால் ஐரோப்பிய பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டப் பெறும்

மாநாடுகளுக்கு இங்கிலாந்து தன் பிரதிநிதிகளை அனுப்பும் என்றும் கூறினர் : வியன்னு காங்கிரசில் காஸில்ரே பிரபு சாதித்தவை களுள் மிக முக்கியமானது அடிமை வியாபார ஒழிப்புக்கு பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து முதலிய நாடுகளின் சம் மதத்தைப் பெற்றதாகும். இவ்வாறு வியன்னு காங்கிரஸில் பங்கெடுத்துக் கொண்டு ஐரோப்பிய அமைதியை நிலைநாட்ட காஸில்ரே அரும்பாடு பட்டதை ஆங்கில மக்கள் போற்றினர். ஆனால் இங்கிலாந்தில் 1820இல் கரோலின் அரசுக்கு விரோதமாக நடைபெற்ற செயல்களை அவர் பெரிதும் கண்டித்ததாலும், அடக்கு முறைக் கொள்கைகளுக்கு ஆதரவு காட்டியதாலும் மக்கள் அவரைப் பிற்போக்குவாதியெனக் கண்டித்தனர். இவரிடம் பேச்சுத் திறமையின்மையாலும், மக்களைச் சமாதானப் படுத்தும் திறமை யில்லாததாலும் தம்முடைய கொள்கைகளைச் சரியென எடுத்துக் கூற முடியவில்லை. ஆகவே 1822ஆம் ஆண்டில் அவர் தம் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஐரோப்பாவுக்குச் சென்று விட்டார். ஆனால் அதே ஆண்டில் அவர் தற்கொலையும் செய்து கொண்டார்.

லிவர்ப்பூல் அமைச்சரவையின் மாற்றம்

1822ஆம் ஆண்டில் லிவர்ப்பூல் அமைச்சரவை முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. கானிங் பிரபு (Canning) வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். சிட்மவுத் பிரபுவுக்குப் பதிலாக பீல் என்னும் அறிஞர் உள்நாட்டு அமைச்சரானர். தாராளக் கொள்கையினரான வில்லியம் ஹங்கிஸன் வாணிபக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். வேன் சிட்டார்ட் என்பவருக்குப் பதிலாக ராபின்ஸன் கருவூலத் தலைவரானர். வெல்லெஸ்லி பிரபு அயர்லாந்தின் ஆட்சிப் பொறுப்பாளராகவும், பிளங்கெட் என் பவர் அட்டர்னி ஜெனரலாகவும் நியமிக்கப்பட்டனர். ஆகவே புதுமையில் பற்றுக் கொண்ட தாராளக் கொள்கையினர் ஆட்சி செய்ய ஆரம்பித்ததால், கொள்கையில் ஒரு புதிய ஊக்கம் ஏற் பட்டது. டோரி அமைச்சரவை சீர்திருத்தப் பாதையில் சீரடி எடுத்து வைக்க ஆரம்பித்தது. பல ஆண்டுகளுக்குப்பின், நாட்டில் அமைதி நிலவியதாலும், பணநெருக்கடி தீர்ந்ததாலும், சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தப் பட்டதாலும், வாணிபக் கொள்கை சீர்பட்டதாலும் சீர்திருத்தத்திற்கு வேண்டிய சட்டங்களை இயற்றிச் செயல் படுத்தும் சூழ்நிலை உண்டாகியது.

கிரிமினல் சட்டத்தொகுதி சீர்திருத்தம்

'குற்றவியல் சட்டத் தொகுதி சீர்திருத்தத்திற்கு சர் சாமுவேல் ரொமில்லி (Sir Samuel Romilli) என்பவர் வித்திட்டு,

அதற்கு மாக்கின்டோஷ் (Mackintosh) என்பவரால் நீர்பாய்ச்சப்பட்டு விளைந்ததை பீல் (Peal) என்பவர் அறுவடை செய்தார்" என்று மாரியாட் (Marriott) என்பவர் அழகாக வர்ணிக்கின்றார். இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாகக் கிரிமினல் குற்றங்களுக்குக் கொலைத் தண்டனையளிக்கும் முறையே கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. கிரிமினல் சட்டங்கள் தவறு உடையனவாயும், காலத்திற்குத் தகுந்தாற்போல இல்லாமலும் இருந்தன. சாதாரண குற்றங்களுக்கும் கொடூரமான குற்றங்களுக்கும் வேறுபாடில்லாமலேயே ஒரேமாதிரியாகத் தண்டனையளிக்கப்பட்டு வந்தது. சில சமயங்களில் ஒன்றும் அறியாதவர்கள் தண்டிக்கப்பட்டனர், குற்றவாளிகள் தப்பிப் பிழைத்தனர். சாதாரண குற்றங்களுக்காகவும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சட்டங்களின் கடுமை காரணமாக ஜுரிகள் பல குற்றவாளிகளை நிரபராதிகள் எனக் கூறிவிடலாயினர். தண்டனை விதிக்கப் பெற்றபோதும், பல சமயங்களில் நிறைவேற்றப்படாமலேயே விடப்பட்டன. 1805 முதல் 1807 வரை 655 பேர் ஆடு திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்களில் 113 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் ஒருவராவது தூக்கிலிடப்படவில்லை. ஆனால் 1811 முதல் 1818 வரை பத்திரத்தில் போலிக் கையெழுத்திட்ட குற்றத்திற்காக 100 பேருக்கு மேல் தூக்கிலிடப்பட்டனர். வெகு நாட்களாக இச் சட்டங்கள் மாற்றப்படாமல் இருந்தபோதிலும், பொதுக் கருத்தின் எதிர்ப்பால் அவைகளைச் செயல்படுத்த முடியாத நிலையிருந்தது. இவ்வாறு பல குறைகளைக் கொண்ட கிரிமினல் சட்டங்களைத் திருத்த பொதுமக்கள் சபை பலமுறை முயன்றது. ஆனால் பிரபுக்கள் சபை அதற்குத் தடையாக இருந்தது. பீல் உள்நாட்டு அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே பல சீர்திருத்த மசோதாக்களைக் கொண்டு வந்தார். சுமார் 278 சட்டங்களை மாற்றினார். 100 வகையான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பதைத் தவிர்த்தார். திருமணச் சட்டங்களிலுள்ள பல குறைகளையும், அவதூறுகளையும் நீக்கினார். மதக் குருக்கள் கிரிமினல் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முறையை நீக்கினார். ஜுரிகளின் அமைப்பு திருத்தி அமைக்கப்பட்டது. இத்தகைய சீர்திருத்தங்களால் கிரிமினல் சட்டங்களை இங்கிலாந்தில் சகித்துக்கொள்ளும் நிலை உருவாயிற்று.

நிதித்துறைச் சீர்திருத்தங்கள்

லிவர்ப்பூல் பிரபுவின் அமைச்சரவையில் கருவூலத் தலைவராயிருந்த ராபின்ஸன் என்ற பொருளியல் அறிஞரும், நிதித் துறையிலே நல்ல அனுபவம் பெற்ற ஹஸ்கிஸன் என்ற வாணிபக் குழுவின் தலைவரும் நிதித்துறையிலே பல சீர்திருத்தங்களைச்

செய்தனர். ராபின்சன் தமது முயற்சியினால் நாட்டின் வரவு, செலவு கணக்குகளை ஒழுங்கு படுத்தினர். வரி வசூலிப்பதில் ஏற்பட்ட வீண் செலவுகளைக் குறைத்தார். கடன் கழிவு நிதியின் கண் (Sinking Fund) காணப்பட்ட ஊழல்கள் பலவற்றைக் களைந்தார். வரிகளில் பலவற்றை நீக்கினர். இச் சீர்திருத்தங்களினால் நாட்டுக் கடனை ஆண்டுக்கு ஆறு மில்லியன் பவுன்கள் வீதம் குறைத்தார்.

வாணிபத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கி, உற்பத்தியைப் பெருக்கி, வாணிபம் நல்ல முறையில் நடைபெற ஹஸ்கிஸன் பெரிதும் முயன்றார். 1651, 1660, 1672ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட நாவாய்ச் சட்டங்களே (Navigation Acts) 200 ஆண்டுகளாக இங்கிலாந்தின் வாணிபக் கொள்கையின் அடிப்படையாக இருந்துவந்தன. இச் சட்டங்கள் நாட்டின் செல்வத்தைப் பெருக்க வழி செய்யாமல் நாட்டின் பாதுகாப்பையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இந்த நாவாய்ச் சட்டங்கள் தான் அமெரிக்கச் சுதந்திரப் போர் ஏற்படுவதற்கு ஒரு காரணமாகவும் இருந்தன. சுதந்திரம் பெற்ற அமெரிக்கா, நாவாய்ச் சட்டங்களுக்கு எதிராகப் பல சட்டங்களை இயற்றியது. இங்கிலாந்தின் பொருள்கள் அமெரிக்காவில் இறக்குமதியாகும்போது, அவைகளுக்குக் கடுமையான காப்புவரிகள் விதிக்கப்பட்டன. இதைக் கண்டு அஞ்சிய இங்கிலாந்து 1814 ஆம் ஆண்டில் அமெரிக்காவோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி அமெரிக்கப் பொருள்களுக்கு இங்கிலாந்திலும், இங்கிலாந்தின் பொருள்களுக்கு அமெரிக்காவிலும், விதிக்கப்பெற்ற காப்பு வரிகள் நீக்கப்பட்டன. 1822ஆம் ஆண்டில் குடியேற்ற நாடுகளுக்கு இங்கிலாந்து சட்டமியற்றி ஓரளவு வியாபாரச் சுதந்திரம் அளித்தது. 1825ஆம் ஆண்டில் ஹஸ்கிஸன் 'பரஸ்பர வரி விலக்குச் சட்டம்' (Reciprocity Act) எனப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி, இங்கிலாந்தின் பொருள்களின்மீது இறக்குமதி வரி விதிக்காத நாடு எதுவாயினும், அந் நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்குக் காப்பு வரி விதிப்பதில்லை என ஆங்கில அரசாங்கம் ஒப்புக் கொண்டது. இச் சட்டத்தின்படி உலகின் பல முக்கிய நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன.

தடையிலா வாணிபக் கொள்கை

வாணிபக் குழுவின் தலைவராயிருந்த ஹஸ்கிஸன் ஆடம் ஸ்மித் (Adam Smith) என்ற அறிஞர் எழுதிய 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்ற நூலில் விவரிக்கப்பட்டி

ருந்த தடையிலா வாணிபக் கொள்கையில் பெரிதும் நம்பிக்கை யுள்ளவர். வாணிபத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு களை நீக்கி உற்பத்தியையும் வியாபாரத்தையும், பொருளாதாரத் தையும் மேம்படுத்த வேண்டும் என்று நினைத்தார். நாட்டின் வளத்தைப் பெருக்க வேண்டுமானுல் நாட்டில் கட்டுப்பா டற்ற வாணிபப் போட்டி இருக்க வேண்டுமென்றும், அப் போட்டியை முடிந்தவரை உலகின் மற்ற நாடுகளுக்கும் பரப்ப வேண்டு மென்றும் நினைத்தார். இக் குறிக்கோள்களைச் செயலாக்கும் முயற்சியில் எச்சரிக்கையோடு இறங்கினுர். சில பொருள்களின் மீது 30 சதவிகிதத்திற்கு மேலாக விதிக்கப்பட்டிருந்த காப்பு வரியை நீக்கினுர். பட்டு போன்றவைகள் இறக்குமதி செய்யப் படுவதற்கு 30 சதவிகிதமே காப்புவரி விதிக்கப்பட்டது. 50லிருந்து 70 சதவிகிதம் வரை பருத்தித் துணிகளுக்கு விதிக்கப் பட்டுவந்த காப்பு வரி ஒரே சீராக 10 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டது. அதன் காரணமாக 'ஹங்கிஸன் காப்பு வரி சீர்திருத்தக் காரரேயொழிய, காப்புவரியை ஒழித்தவரல்லர்' என்று கூறப் பட்டார்.

ஹங்கிஸன் நல்ல முறையில் அரசாங்கத்திற்கு வருமானம் வரும் முறையில் காப்புவரி முறையை மாற்றியமைத்தார். கள்ள வாணிபத்தை அறவே ஒழிக்கப் பாடுபட்டார். சட்டங்களின் பிடியைத் தளர்த்திய ஹங்கிஸன் தடையிலா வாணிபத்தை வளர்க்கப் பல வழிகளையும் மேற்கொண்டார். இத்தகைய ராபின்ஸன், ஹங்கிஸன் சீர்திருத்தங்களால் நாட்டில் வளம் பெருகியது. தொழில்கள் மேலும் மேலும் வளர்ந்தன. 1820-லிருந்து 1830ஆம் ஆண்டுவரை நாட்டின் ஏற்றுமதி 48,952,537 பவுண்டிலிருந்து 69,691,303 பவுண்டாக உயர்ந்ததெனக் கணக் கிடப்பட்டது.

தொழிலாளி-முதலாளி உறவுபற்றிய சீர்திருத்தங்கள்

தொழிலாளிகள் ஒன்றுகூடி சங்கங்கள் அமைத்துக் கொள் வதைத் தடுக்க பல சட்டங்கள் இங்கிலாந்தில் இருந்தன. பிட் என்ற பிரதமர் ஏற்படுத்திய 'ஒன்று கூடல் தடைச் சட்டங்கள்'. (Combination Laws) தொழிற்சங்க வளர்ச்சியைத் தடுக்க முடிய வில்லை. அதனுல் முதலாளி-தொழிலாளி உறவுகள் மிக மோசமாக மாறின. ஆகவே முதலாளி-தொழிலாளி உறவுகளை ஆராயப் பாராளுமன்றம் ஒரு குழுவை நியமித்தது. அக் குழு 1824ஆம் ஆண்டில் ஒன்றுகூடல் தடைச் சட்டங்கள் பல வகையிலும் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கின்றன எனக் கூறியது. அதனுல் 1824ஆம் ஆண்டில் ஒன்று கூடல் தடைச் சட்டங்களை

ஒழிப்பதற்காக ஒரு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனால் நாட்டில் தொழிற்சங்கங்கள் குறைவதற்குப் பதிலாகப் பெருக ஆரம்பித்தன. வேலை நிறுத்தங்களும், கலகங்களும் வளர்ந்தன. இதைத் தடுக்க 1825ஆம் ஆண்டில் ஒன்று கூடி சங்கம் அமைப்பது வாணிபத்திற்கும், நாட்டிற்கும், அதில் சம்பந்தப் பட்டவர்களுக்கும் அபாயமெனக் கூறி, ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் தொழிலாளர்களுக்குச் சில சலுகைகளும் கொடுக்கப்பட்டன. சங்கங்கள் அமைத்துக் கொள்ள வரையறுக்கப்பட்ட உரிமைகள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டன. அச் சங்க உறுப்பினர்கள் முதலாளிகளையோ, உடன் தொழிலாளிகளையோ பயமுறுத்தவோ, அடிக்கவோ, வேலைக்குப் போவதைத் தடுக்கவோ கூடாதென்றும், அத்தகைய வன்முறை வழிகளில் ஈடுபட்டால் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்களெனவும் அச் சட்டம் கூறியது.

கானிங் பிரபுவின் அமைச்சரவை

இங்கிலாந்தில் சீர்திருத்தங்கள் பல ஏற்பட்டதனால், நாட்டில் வளமும், மகிழ்ச்சியும் நிலவின. விவசாயமும் தொழிலும் வளர்ந்தன. மக்களிடையே பணப் புழக்கம் அதிகமாயிற்று. அதற்குத் தகுந்தாற்போல் அரசாங்கமும் தாள் நாணயங்களை ஏராளமாக வெளியிட்டது. அதனால் சொத்துக்களின் விலை உயர்ந்தது. பணத்தின் மதிப்பு அதற்கு ஏற்பக் குறைந்தது. புதிய தொழிலில் ஈடுபட நினைத்தோருக்கு ஏராளமான பணம் கிடைத்தது. வங்கிகள் தாராளமாகக் கடன் கொடுத்தன. அதனால் பல போலிக் கம்பெனிகளும் தோன்றலாயின. பல மோசடிகளில் அக் கம்பெனிகள் இறங்கியதால் மக்களுக்கு அவைகளின் மீது நம்பிக்கை குறைந்தது. அதனால் பல கம்பெனிகள் சீர்குலைந்தன. அக் கம்பெனிகளுக்கெல்லாம் கடன் உதவி செய்த வங்கிகளும் முறிந்தன. நாட்டில் கடன் கொடுப்பாரின் எண்ணிக்கை குறைந்தது. அதனால் பொருள்களின் விலை குறைந்தது. பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது. அதே சமயத்தில் தானியச் சட்டங்களுக்கும் நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டது. கத்தோலிக்கர் விடுதலை போன்ற பிரச்சினைகளும் நாட்டில் உருவெடுத்தன. இந் நிலையில்தான் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. தானியச் சட்டங்கள், கத்தோலிக்கர் விடுதலை போன்ற பிரச்சினைகளே தேர்தல் பிரச்சினைகளாக விளங்கின. 1827ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி புதிய பாராளுமன்றம் கூடியது. அது கூடிய சில நாட்களில் லிவர்ப்பூல் பிரபு வாதநோயால் பிடிக்கப்பட்டார். அதனால் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டது. யார் பிரதமராக வருவது என்பது பற்றிப் பலத்த விவாதங்கள் நடந்தன. பல பேச்சு வார்த்தை

களுக்குப் பின் நான்காம் ஜார்ஜ் அரசர் கானிங்பிரபுவைப் பிரதமராக நியமித்தார். பழைய அமைச்சரவையிலிருந்த பீல், எல்டன், மெல்வில்பிரபு போன்றோர் கானிங்பிரபுவின் கீழ் அமைச்சர்களாகப் பணியாற்ற மறுத்தனர். ஆகவே கானிங் பிரபு ஆதரவு வேண்டி லான்ஸ் டவுன் பிரபு, டீர்னி பிரபு போன்ற விக்குகளைத் தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார்.

கானிங் அமைச்சரவையில், ராபின்ஸன் பிரபுக்கள்சபைத் தலைவராகவும், குடியேற்ற நாட்டு அமைச்சராகவும், டல்லி பிரபு அயல்நாட்டு அமைச்சராகவும், ஹஸ்கிஸன் வாணிபக் குழுத் தலைவராகவும் பாமர்ஸ்டன் பிரபு போர் அமைச்சராகவும் நியமிக்கப் பட்டார்கள்.

கானிங் பிரபு 1770ஆம் ஆண்டில் பிறந்தார், தம்முடைய படிப்பாலும், உழைப்பாலும், திறமையாலும் உயர்ந்தார். 1807 லிருந்து 1809ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சராக இருந்தார். பிறகு ஏழு ஆண்டுகள் எப்பதவியுமின்றி இருந்தார். 1816ஆம் ஆண்டு கட்டுப்பாட்டுக் குழு (Board of Control) வின் தலைவரானார். 1821ஆம் ஆண்டில் அப் பதவியை ராஜிநாமா செய்தார். காஸில்ரே பிரபு இறந்ததால் 1822ஆம் ஆண்டில் இவர் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றினார். இப் பதவியைத் தாம் 1827ஆம் ஆண்டில் பிரதமர் ஆகும் வரை பெற்றிருந்தார்.

காஸில்ரேவுக்கும் கானிங் பிரபுவுக்கும் பல கருத்து வேறு பாடுகள் இருந்தபோதிலும், உண்மையில் கானிங் பிரபு காஸில் ரேயின் கொள்கையையே தொடர்ந்து கடைப் பிடித்து வந்தார். அக் கொள்கைகளைச் செயல்படுத்தும் முறையில் தான் இருவருக் கும் வேறுபாடிருந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் சிறு நாடுகளின் சுதந்திரத்தையும், மக்களின் புரட்சிகளையும் ஒடுக்க முயன்ற போதெல்லாம் காஸில்ரே எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் கானிங் பிரபுவோ வல்லரசுகளுக்கு எதிராகவும், குடிமக்களுக்குச் சாதக மாகவும் இராணுவ உதவி செய்யவே முன் வந்தார்.

' இங்கிலாந்திற்கு ஆபத்து நேர்ந்தாலொழிய, ஐரோப்பிய அரசியலைப் பற்றி இங்கிலாந்து கவலைப்படக் கூடாதென்றும், இங்கிலாந்து ஆக்கிரமிப்பை ஏற்கக் கூடாதென்றும், இங்கிலாந்தை யாராவது ஆக்கிரமிப்புச் செய்ய நினைத்தால், இங்கிலாந்து உடனடியாக வீரத்துடனும், தீரத்துடனும் செயலில் இறங்கும் எனவும், கானிங்பிரபு உறுதியாகக் கூறி வந்தார். ஆகவே

ஐரோப்பிய விவகாரங்களில் இங்கிலாந்து வீணுகத் தலையிட்டு நஷ்டம் அடைவதை அவர் சிறிதும் விரும்பவில்லை.

வெரோஞ காங்கிரஸில், மக்கள் அரசரை எதிர்த்து நடத்தும் உரிமைப் போராட்டங்களை நசுக்க எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதன்படி பிரான்சு தனது துருப்புகளை அனுப்பி ஸ்பெயினில் நடைபெற்ற உரிமைக் கிளர்ச்சியை அடக்கியது. கானிங்பிரபு பிரான்சின் இத் தலையிடுதலை வன்மையாகக் கண்டித் தார். அதனுல் இச் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து இங்கிலாந்து இக் காங்கிரஸிலிருந்து வெளியேறியது.

ஏழாம் பெர்டிஞண்டு (Ferdinand VII) ஸ்பெயினின் அரசராக 1823ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டபோது ஸ்பெயினின் குடி யேற்ற நாடுகளான தென் அமெரிக்க நாடுகள் அவரைத் தங்கள் அரசராக ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், இனி சுயேச்சை பெற்ற நாடுகளாகவே இருக்கப் போவதாகவும் அறி வித்தன. இதைக் கேட்ட பெர்டிஞண்டு புனிதக் கூட்டுறவு நாடு களின் ஆதரவை நாடிஞர். இச் சமயத்தில் கானிங்பிரபு தென் அமெரிக்க நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகத் துணி வுடன் அறிவித்தார். அதே சமயத்தில் அமெரிக்காவின் ஜனுதி பதியாக இருந்த மன்ரோ (Manroe) என்பவர் தமது புகழ் பெற்ற மன்ரோ கொள்கையை வெளியிட்டார். ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் குடியேற்றங்களை (Colonies) ஏற்படுத்துவதை நிறுத்த வேண்டுமென்றும், அமெரிக்காவின் விவகாரங்களில் அவை தலையிடக்கூடாதென்றும், தலையிட்டால் அதைத் தடுக்க அமெரிக்காவுக்கு உரிமை உண்டு எனவும் அவ் வறிக்கை கூறியது. இதை எதிர்க்க ஐரோப்பிய நாடுகளுக்குத் துணிவில்லை. அதனுல் தென் அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றன. இது கானிங்பிரபுவின் வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி யாகும்.

போர்ச்சுகலின் விவகாரத்தில் கானிங்பிரபு மிகவும் கடுமை யான நடவடிக்கை எடுத்தார். போர்ச்சுகலின் விவகாரத்தில் ஸ்பெயின் நாட்டு அரசரான பெர்டிஞண்டு தலையிட்டபோது, போர்ச்சுகல் அரசாங்கம் இங்கிலாந்தின் உதவியை நாடியது. நான்கு நாட்களிலேயே கானிங்பிரபு போர்ச்சுகலுக்குப் படையை அனுப்பி உதவி செய்தார். பாராளுமன்றத்தில் இதைப்பற்றி கானிங்பிரபு அறிவிக்கும்போது 'அங்கு ஆட்சி செய்யவோ, அங்குள்ளவர்களுக்கு ஆணையிடவோ, அவர்களுக்கு அரசிய லமைப்பைக் குறித்துக் கொடுக்கவோ நாம் செல்லவில்லை. நமது

நட்பு நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், பேணிக் காப்பாற்றவும் தான் அங்குச் சென்றோம்' என்று கூறினர்.

கானிங்பிரபு வெளிநாட்டு அமைச்சராக இருந்தபோது இத்தகைய கொள்கைகளைத் துணிவோடு செயல்படுத்தினர். அவருடைய பெருமையெல்லாம் அவரின் வெளிநாட்டுக் கொள்கைகளையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. 1827 இல் தான் வெகு நாட்களாக விரும்பிய பிரதமர் பதவி கானிங்பிரபுவுக்குக் கிடைத்தது. அப் பதவியிலேயே அதிக நாட்கள் அவரால் இருக்க முடியவில்லை, 1827 ஆம் ஆண்டு ஜனவரியில் அவர் பிரதமராகி அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்திலேயே மரணமடைந்தார்.

வெலிங்டன் பிரபுவின் அமைச்சரவை

கானிங் பிரபு மரணமடைந்த பிறகு காடரிச் பிரபு (Lord Goderich) 1827ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிரதமராக்கப்பட்டார். அப்பொழுது அமைச்சர்களிடையே ஒற்றுமை காணப்படவில்லை. அவர்களிடையே போட்டியும் பொருமையுமே காணப்பட்டன. இதைக்கண்ட காடரிச் தமது பதவியை 1828ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் தேதி ராஜிநாமா செய்தார். அதன்பின் வெலிங்டன் பிரபு பிரதம அமைச்சராகப் பதவி யேற்றார். உடனே ஹஸ்கிஸன் தமது பதவியை ராஜிநாமா செய்தார். இவரைத் தொடர்ந்து மற்றும் சில அமைச்சர்கள் ராஜிநாமா செய்தனர். அதனால் வெலிங்டன் அமைச்சரவை பலவீனமடைந்தது.

வெலிங்டன் பிரபு அரசரின் சொற்படி நடப்பதே தமது கடமையென நினைத்தார். அத்துடன் அரசருக்குத் தொண்டு செய்வதே தமது கொள்கையாகவும் வைத்துக் கொண்டார். அதனால் மற்ற எந்தக் கொள்கையைப் பற்றியும் அவர் கவலைப்படவில்லை. ஆகவே கொள்கையற்றவர் என அழைக்கப்பட்டார். இருந்த போதிலும் தாம் பதவி வகித்த இரண்டு ஆண்டுகளில் மூன்று சீர்திருத்தச் சட்டங்களை இயற்றிப் பெருமை தேடிக் கொண்டார்.

தானியச் சட்டங்களைத் தளர்த்தல்

இங்கிலாந்தில் அப்போது தானியச் சட்டங்களை எதிர்த்துப் பல போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தன. வறட்சியால் ஏற்படும் அபாயத்தைப் போக்க பாராளுமன்றம் 1826ஆம் ஆண்டில் சில சட்டங்களை இயற்றியது. அதன்படி இறக்குமதி வரி

கொடுக்கும் வரை வைத்திருக்கும் பண்டகசாலைகளிலிருந்து (Bonded warehouses) கோதுமை (டன்னுக்கு 10 ஷில்லிங்குகள் காப்பு வரி கொடுத்த பின்பு) வெளிக் கொணரப்பட்டது. பின்பும் பாராளுமன்றம் ஒரு தானியச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி தானியங்களின் விலை குறையும்போது அதிகமான சுங்க வரியும், உயரும்போது குறைவான சுங்க வரியும் விதிக்கப்பட்டது. இதற்கு 'வரி வகைகளில் படிப்படியாக ஏறியிறங்கிச் செல்லும் திட்ட வீத அளவு முறை' (Sliding Scale System) எனப் பெயராகும். இந் நடவடிக்கை நல்லதென நிரூபிக்கப்பட்டது.

சோதனைச்சட்டங்கள், மாநகராட்சிச் சட்டங்களின் நீக்கம்

இரண்டாம் சார்லஸ் அரசர் காலத்தில் ஆங்கில மத ஏற்பாட்டை நாட்டில் நன்கு நிலை நாட்ட வேண்டி சோதனைச் சட்டங்களும் (Test Acts) மாநகராட்சிச் சட்டங்களும் (Corporation Act) இயற்றப்பட்டன. அவைகளின்படி அரசாங்கப் பதவிகளை வகிப்பவர்கள். தாங்கள் ஆங்கிலிக்க மத ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்கின்றோம் என்று உறுதியளிக்க வேண்டும். இவைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அத்துடன் பொது மக்கள் சபையில் இதை எதிர்த்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. ஆகவே பொதுமக்கள் குரலுக்கு மதிப்பளிக்க வெலிங்டன் பிரபு முன்வந்தார். ஆகவே 1828ஆம் ஆண்டு இச் சட்டங்கள் நீக்கம் செய்யப்பட்டன.

கத்தோலிக்க விடுதலைச் சட்டம்

வெலிங்டன் காலத்தில் கத்தோலிக்கர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. கத்தோலிக்கர்களுக்கு மத சுதந்திரம் அளிப்பதில் இளைய பிட் (Pitt, the younger) தோல்வி கண்டார். ஆகவே, டேனியல் ஓ கானல் (Daniel O' Connel) என்பவரால் இப் பிரச்சினை சிக்கலாகியது. இவர் 1823 ஆம் ஆண்டில் கத்தோலிக்க சங்கம் (Catholic Association) ஒன்றை அமைத்தார். அரசாங்கம் இச் சங்கத்திற்குத் தடை விதித்தும், மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. அச் சமயத்தில் அயர்லாந்தில் பாராளுமன்றத்திற்கு வேண்டிய தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் கிளேர் என்ற கவுன்டியில் டேனியல் ஓ' கானல் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சட்டப்படி பாராளுமன்றத்தில் உறுப்பினராக அமருவோர் தாம் ஆங்கிலிக்க மத ஏற்பாட்டைச் சார்ந்தவர்களென்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். இவர் கத்தோலிக்கராகையால் அவ்வுறுதி மொழியை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இவரின் செல்

வாக்கைக் கண்ட யாவரும், இவருக்குப் பாராளுமன்றத்தில் இடம் தராமற்போனால், இவரிடம் கட்டுப்பட்டுக் கிடக்கும் கத்தோலிக்கர் யாவரும் புரட்சியில் இறங்கக் கூடும் என அஞ்சினர். அச் சமயத்தில் அயர்லாந்தில் லெப்டினன்ட் பிரபுவாக இருந்த ஆங்கில்சே பிரபு (Lord Anglesey), அயர்லாந்தில் ஓர் உள் நாட்டுப் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமானால், கத்தோலிக்கர்களுக்கு விடுதலையளிப்பதைத் தவிர வேறு வழி இல்லை யெனத் திட்டவட்டமாக அறிவித்தார். ஆகவே இப்பிரச்சினை நாட்டில் முற்றியது. நன்கு ஆலோசித்த பின்பு, பீலும், வெலிங் டனும் கத்தோலிக்கர்களுக்கு விடுதலையளிப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தனர். ஆகவே 1829 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம் (Catholic Emancipation Act) பாராளுமன்றத்தில் பலத்த எதிர்ப்புக்கிடையே நிறை வேறியது. இச் சட்டம் கத்தோலிக்கர்களுக்குப் பல உரிமைகளை அளித்தது. அவர்கள் அயர்லாந்தின் பாதுகாப்பாளர் (Regent), லெப்டினன்ட் பிரபு, சான்சலர் பிரபு என்ற மூன்று பதவிகளைத் தவிர மற்ற எல்லா அரசாங்க வேலைகளுக்கும் தகுதியைப் பெற்றனர்.

கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம் நிறைவேற்றிய பின்பும் அயர்லாந்தியர் திருப்தியடையவில்லை. இங்கிலாந்திலிருந்து பிரிந்து விடவேண்டுமென்ற உணர்ச்சி நாளுக்குநாள் அவர் களிடையே வளர ஆரம்பித்தது.

1830ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் நாள் நான்காம் ஜார்ஜ் மரணமடைந்தார். அவருடைய சகோதரர் நான்காம் வில்லியம் என்ற பட்டத்தோடு முடி சூட்டப்பட்டார். நான்காம் ஜார்ஜ் இறந்ததால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல் மீண்டும் நடைபெற்றது. மக்களிடையே உற்சாகமும் பரபரப்பும் காணப்பட்டன. டோரிக் கட்சியினர் பலர் தேர்தலில் தோல்வியுற்றனர். 1830 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் நாள் புதிய பாராளுமன்றம் கூடியது. அரசரின் செலவுத் தொகையை (Civil List) நிர்ணயிக்க அரசாங்கம் கொண்டுவந்த மசோதா பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. உடனே வெலிங்டன் தமது அமைச்சரவையைக் கலைத்தார். அமெரிக்க சுதந்திரப் போர், நெப்போலியப் போர்கள், அயர்லாந்து ஐக்கியம், கத்தோலிக்கர் விடுதலை போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட டோரிகளின் ஆட்சி 1830ஆம் ஆண்டில் முடிவுற்றது. கடந்த அறுபது ஆண்டுகளாகப் பதவியில் வீற்றிருந்த டோரிக் கட்சியானது வீழ்ச்சியுற்றது. விக்கு கட்சியினர் அரசைக் கைப்பற்றினர்.

20. நான்காம் வில்லியம் காலத்து ஆட்சியும் அரசியலும் (1830-1837)

நான்காம் வில்லியம் நான்காம் ஜார்ஜின் சகோதரராவார். 1830ஆம் ஆண்டில் நான்காம் ஜார்ஜ் இறந்தவுடன் நான்காம் வில்லியம் (William IV) அரியணை ஏறினார். இவர் இங்கிலாந்தை ஏழாண்டுகள் மட்டுமே ஆட்சி செய்தார். இங்கிலாந்தில் அரசராவதற்கு முன்பு இவர் இங்கிலாந்தின் கப்பற்படையில் பணியாற்றியதால் இவர் 'மாலுமி அரசர்' (Sailor King) என அழைக்கப்பட்டார். இவர் மக்களிடையே தமக்கு நல்ல விளம்பரம் கிடைக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டவர். இவர் மக்களிடையே நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும் எனக்கருதி பாதயாத்திரை கூட செய்தார்.

சீர்திருத்தக்காரர் என்று பெயரெடுக்க நான்காம் வில்லியம் விரும்பினார். இவர் விருப்பப்படியே இவரது ஆட்சிக்காலம் உண்மையில் பல சீர்திருத்தங்களால் புகழ்பெற்று விளங்கியது.

பாராளுமன்றச் சீர்திருத்தம்

ஆங்கிலப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் பழைய முறைப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். அதில் நிலப்பிரபுக்களே பிரதிநிதியாக இருந்தனர். அத்துடன் மக்கள்தொகைக்கும் பிரதிநிதித்துவத்துக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. கார்ன்வால் என்ற சிறு மாநிலம் 45 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தில் பெற்றிருக்க, அதை விட எட்டுமடங்கு பரப்பளவுள்ள ஸ்காட்லாந்து 45 உறுப்பினர்களையே பெற்றிருந்தது. 658 உறுப்பினர்களைக் கொண்ட ஆங்கிலப் பொதுமக்கள் சபையில் இங்கிலாந்து 513 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் அயர்லாந்து 100 உறுப்பினர்களையும் ஸ்காட்லாந்து 45 உறுப்பினர்களையும் மட்டுமே தேர்ந்தெடுத்தன. இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 513 உறுப்பினர்களில் 419 பேர் பரோக்களிலும், 94 பேர் கவுன்டிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கவுன்டிகளே பரோக்களை விட பரப்ப

ளவிலும் மக்கள் தொகையிலும் பெரியவை. இருந்தபோதிலும் பரோக்களைவிட கவுன்டிகளின் பிரதிநிதித்துவம் பொதுமக்கள் சபையில் மிகமிகக் குறைவாய் இருந்தது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் பெரும் நிலப்பிரபுக்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாகவே இருந்தனர்.

பிரதிநிதித்துவ முறையில் மேற்கூறிய குறைகள் இருந்தது போலவே வாக்குரிமையில் பல குறைபாடுகள் இருந்தன, 1832 ஆம் ஆண்டிற்கு முன்பு இங்கிலாந்தில் வாக்குரிமை பெற்றவர்கள் சிலரேதான். சொந்த நிலம் படைத்தவர்களே வாக்கு உரிமை பெற்றிருந்தனர். சொந்த நிலமில்லாத குத்தகைச் சாகுபடியாளர்களும், வியாபாரிகளும், ஆலைத்தொழிலதிபர்களும் தொழிலாளிகளும் வாக்குரிமை பெற்றிருக்கவில்லை.

தேர்தல் முறையிலும் பல ஊழல்கள் காணப்பட்டன. பயமுறுத்தியும், லஞ்சம் கொடுத்தும் வாக்குகள் பெறுவது சாதாரணமாக இருந்தது. வாக்குகள் வெளிப்படையாக வழங்கப்பட்டதால். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களால், வாக்காளர்கள் யாருக்கு வாக்குகளை வழங்குகிறார்கள் என்பதை அறிய முடிந்தது.

இங்ஙனம் ஊழல் நிறைந்த பாராளுமன்றத்தைச் சீர்திருத்தப் பல முயற்சிகள் நடைபெற்றன. 1780ஆம் ஆண்டில் ரிச்மண்ட் பிரபு என்பவர் சமமான தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் கூறினார். 1785 இல் பிட் நசிந்து போன பல பரோக்களின் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க முயன்றார். ஆனால் முடியவில்லை, அதன் பின் பிரெஞ்சுப் புரட்சி காரணமாகவும், நெப்போலியப் போர்களாலும் பாராளுமன்றச் சீர்திருத்த முயற்சியானது தடைப்பட்டது. 1820 க்குப் பின் இவ்வியக்கம் தழைத்தது. பர்டட் (Burdett) ஜான்ரஸ்ஸல் (John Russell) போன்றோர் இவ் வியக்கத்திற்குப் புத்துயிரூட்டினர், 1830 ஆம் ஆண்டில் பிரான்சில் ஏற்பட்ட ஜூலை மாதப் புரட்சியானது சீர்திருத்த முயற்சிகளுக்கு ஒரு புதிய உற்சாகத்தை ஊட்டியது. பத்தாம் லூயி என்னும் கொடுங்கோலரசரை ஃபிரெஞ்சு மக்கள் அரியணையிலிருந்து அகற்றி, அவர்களின் அன்புக்குப் பாத்திரமான லூயிபிலிப் என்னும் மக்கள் அரசரை (Citizen King) அரசராக்கியது போலவே அமைதி முறையில் ஆங்கிலேயரும் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முயன்றனர். பாராளுமன்றச் சீர்திருத்தம் செய்வதே நோக்கமாகக்

கொண்ட சங்கங்கள் இங்கிலாந்தில் ஏற்பட்டன. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும் என்று காபெட் (Cobbett) போன்றோர் ஓயாது கூறிவந்தனர்.

இச் சமயத்தில் சீர்திருத்தத்தை எதிர்த்துவந்த நான்காம் ஜார்ஜ் இறந்து, சீர்திருத்தங்கள் செய்வதை விரும்பும் நான்காம் வில்லியம் பட்டமெய்தினர். ஆகவே சீர்திருத்தவாதிகள் மகிழ்ந்தனர். அதற்குத் தகுந்தாற்போல் 1830ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சீர்திருத்தவாதிகள் பெருவாரியாக வெற்றியடைந்தனர். தேர்தலுக்குப் பின் கூட்டப்பட்ட பாராளு மன்றத்தில் அரசரின் செலவுத் தொகையை நிர்ணயிக்க அரசாங்கம் கொண்டுவந்த மசோதா தோல்வியுற்றதால், வெல்லிங்டன் பிரபுவின் பிற்போக்கு அமைச்சரவை ராஜிநாமா செய்தது. அத்துடன் டோரி ஆட்சியும் முடிவுற்றது. அதற்குப்பின் விக்கு கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றினர். கிரே (Grey) என்னும் விக் பிரபு பிரதமராக்கப்பட்டார். இவர் தாராளக் கொள்கையுடையவர். பாராளுமன்றத்தைச் சீர்திருத்தியே தீருவோம் என்று கூறித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் தலைவராய்த் திகழ்ந்தார். அவர் விக்குகளையும் சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்ட டோரி களையும் சேர்த்து ஒரு கலப்பு அமைச்சரவையை ஏற்படுத்தினர். அதில் இடம்பெற்ற அனைவரும் ஏறக்குறைய இவருடைய சீர்திருத்தக் கருத்துகளை ஏற்றுக் கொள்பவர்களாகவே இருந்தனர்.

பாராளுமன்றத்தில் நிலையான சில சீர்திருத்தங்களைச் செய்து மக்களை மகிழ்விக்க வேண்டுமென கிரே நினைத்தார். அதற்காக டர்ஹாம் என்பவரின் தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தினர். இக் குழுவின் சிபார்சுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட மசோதா ஒன்று 1831 ஆம் ஆண்டில் பொதுமக்கள் சபையில் ரஸ்ஸல் பிரபுவால் கொண்டுவரப்பட்டது. 60 சிறு பரோக்களின் பிரதி நிதித்துவத்தை அறவே நீக்க வேண்டுமென்றும், 46 பரோக்களி லிருந்து ஒவ்வொரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்றும், எஞ்சிய பாராளுமன்ற இடங்களைத் தொழிற் பட்டணங் களுக்கும், கவுன்டிகளுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் அம் மசோதா கூறியது. அத்துடன் பரோக்களில் ஒரே மாதிரி தகுதியுள்ளவர்தான் வாக்களிக்கவேண்டுமென்றும் கவுன்டிகளில் 40 ஷில்லிங் குத்தகை மதிப்புள்ள நிலங்களைச் சொந்தமாக உடைய வர்களேயன்றி, 10 பவுன் மதிப்புள்ள பத்திரமானியதாரர் களுக்கும், 50 பவுன் மதிப்புள்ள குத்தகைச் சாசுபடியாளர் களுக்கும் வாக்குரிமையளிக்கப்பட வேண்டுமென்றும் அம்

மசோதா கூறியது. ஆனால் இம் மசோதாவை வெல்லிங்டன் போன்ற டோரிகள் எதிர்த்தனர். எதிர்ப்புக்கிடையே இம் மசோதா பொதுமக்கள் சபையில் ஒரே ஒருவாக்கினை அதிகம் பெற்று நிறைவேறியது. ஆனால் குழுவில் (Committee) பரிசீலனை செய்யப்பட்டபோது இம் மசோதா நிராகரிக்கப்பட்டது. இதைக் கண்ட பிரதமர் கிரே பொது மக்கள் சபையைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தும்படி அரசருக்கு ஆலோசனை கூறினார். அரசர் அவ்வாறே செய்து பொதுத் தேர்தலுக்கு ஆணை பிறப்பித்தார். வாக்காளர்களிடையே பெரும் பரபரப்பும் உணர்ச்சியும் ஏற்பட்டன. தேர்தலில் சீர்திருத்த வாதிகளே பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டாம் முறையாகப் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா சிலதிருத்தங்களுடன் 1831 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ரஸ்ஸல் பிரபுவால் பொதுமக்கள் சபையில் கொண்டு வரப்பட்டது. பொதுமக்கள் சபையில் சீர்திருத்தவாதிகள் பெருவாரியாக இருந்ததால் 136 வாக்குகள் அதிகம் பெற்று நிறைவேறியது. ஆனால் பிரபுக்கள் சபையினர் இம் மசோதாவைத் தோற்கடித்து விட்டனர். இதைக் கண்ணுற்ற மக்கள் கோபமுற்றனர்; கொதித்தெழுந்தனர்; வன்முறையிலும் ஈடுபட்டனர், நாட்டில் பல கலகங்கள் தோன்றின. இக் கலவரங்களைக் கண்டு கிரே பிரபு மீண்டும் இம் மசோதாவைப் பொது மக்கள் சபையில் கொணர்ந்தார். 1832ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 23ஆம் நாள் அது பொது மக்கள் சபையில் நிறைவேறியது. ஆனால் பிரபுக்கள் சபை அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. இதைக் கண்ட கிரே பிரபு, 50 புதிய விக் பிரபுக்களை பிரபுக்கள் சபையில் உடனே நியமித்து அங்கு மசோதா நிறைவேறச் செய்யும்படி அரசரைக் கேட்டுக் கொண்டார். அரசர் இதற்கு இணக்கம் கொடுக்காததால் கிரே தன் அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்.

நான்காம் வில்லியம் அரசர் உடனே வெல்லிங்டனை அழைத்து, ஆட்சியமைக்க வேண்டிக் கொண்டார். நாடெங்கும் வெல்லிங்டனை எதிர்த்துப் போராட்டங்கள் தோன்றின. வெல்லிங்டன் பதவியேற்றால் வரி கொடுப்பதை நிறுத்தப் போவதாயும், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கப் போவதாயும், வன்முறையில் இறங்கப்போவதாகவும் சீர்திருத்த வாதிகள் கூறினர். இத்தகைய சூழ்நிலையில் பொது மக்கள்சபை கிரே பிரபுவை மீண்டும் அமைச்சரவையை அமைக்கும்படி கேட்டுக் கொண்டது. புதிய பிரபுக்களை நியமிக்க அரசர் ஒப்புக் கொண்டாலன்றிப் பதவியேற்க முடியா

தென கிரே பிரபு அறுதியிட்டுக் கூறிவிட்டார். நான்காம் வில்லியம் புதிய பிரபுக்களை நியமிப்பதாக வாக்குறுதியளித்தார். அதன் பின் ஜூன் மாதம் 4 ஆம் தேதி சீர்திருத்த மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேறியது. அப்போது டோரிக் கட்சியினர் பிரபுக்கள் சபையில் யாரும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ஜூன் மாதம் 7ஆம் நாள் அம் மசோதா அரசரின் ஒப்புதலைப் பெற்று நாட்டில் சட்டமாகியது.

இச் சட்டம் நிறைவேறியதால், இங்கிலாந்தில் நிலப்பிரபுக்கள் பாராளுமன்றத்தின் மீது கொண்டிருந்த கட்டுப்பாடுகளை இழந்தனர். அதனால் நடுத்தரமக்கள் வெற்றியடைந்தனர். இப் புதிய சட்டத்தால் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒரு புதிய ஊக்கம் காணப்பட்டது. பொதுமக்கள் விருப்பத்தைப் புறக்கணித்த அரசருக்கோ அல்லது பிரபுக்கள் சபைக்கோ எந்தவித உரிமையும் இல்லை என்பது நன்கு நிலைநாட்டப்பட்டது. அத்துடன் அமைச்சரவை அரசரின் விருப்பப்படியோ அல்லது அவரின் ஆணைகளை நிறைவேற்றும் ஓர் அமைப்பாகவோ செயல்படாமல் பொதுமக்கள் சபையின் ஆதரவு பெற்றதாயும், அதன் விருப்பத்தையே நிறைவேற்றுவதாகவும் இருக்க வேண்டுமென்பதும் நிலைநாட்டப்பட்டது. பொதுமக்கள் சபையே பிரபுக்கள் சபையைக் காட்டிலும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டது. பொதுமக்கள் சபையும், அமைச்சரவையும் சேர்ந்து அரசரையும் பிரபுக்கள் சபையையும் கட்டுப்படுத்தமுடியும் என்பது இச்சட்டத்தின் வெற்றியால் தெளிவு படுத்தப்பட்டது. இச் சீர்திருத்தச்சட்டம் நாட்டில் மேலும் பல துறைகளில் சீர்திருத்தம் ஏற்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியது.

அடிமை முறை ஒழிப்புச் சட்டம் (1833)

மனிதன் மனிதனுக்கு இழைத்து வந்த தீங்குகளில் தலையாயது அடிமை வியாபாரமாகும். இங்கிலாந்தில் வில்லியம் வில்பர்ஃபோர்ஸ் [Willam Wilberforce (1759-1833)] தாமஸ் கிளார்க்சன் [Thomas Clarkson (1760-1846)] மெக்காலே பிரபு [Lord Macaulay (1768-1838)] போன்றவர்களின் அடிமையொழிப்பு பிரச்சாரங்களினால் அடிமை வியாபாரம் ஒழிந்தது. அதற்காக 1807 ஆம் ஆண்டில் அடிமை வியாபார ஒழிப்பு மசோதா பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. ஆனால் அச் சட்டம் அடிமை வியாபாரத்தை மட்டுமே ஒழித்ததேயன்றி, அடிமைத் தனத்தை ஒழிக்கவில்லை. ஆகவே 1833 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அடிமைமுறை ஒழிப்புச்சட்டம் (Emancipation Act) என்ற ஓர் உன்னத சீர்திருத்தச் சட்டம்

பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இச்சட்டத்தினால் ஆங்கிலப் பேரரசிலேயே அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. இச் சட்டத்தின் படி, ஆறு வயதிற்குட்பட்ட அடிமைக் குழந்தைகள் அனைவரும் உடனேயே விடுதலை பெற்றனர். ஏனையோர் 12 ஆண்டுகள் தம் எஜமானர்களிடம் ஊழியம் செய்த பின் விடுதலை பெறுவர் எனக் கூறப்பட்டது. இதற்கு அடிமைகளை வைத்திருக்கும் சொந்தக்காரர்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனால் அரசாங்கம் அவர்களுக்கு இழப்பீடாக 100 மில்லியன் பவுன்களைக் கொடுத்தது. ஏனைய அடிமைகள் 12 ஆண்டுகள் தமது எஜமானர்களிடம் ஊழியம் செய்த பிறகே விடுதலை பெறுவர் என்ற நிபந்தனையை அடிமைகளே ஏற்றுக்கொள்ளாததனால் 1838 ஆம் ஆண்டில் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப் பட்டனர். இதைக் கேள்வியுற்ற சீர்திருத்தவாதிகளின் மனம் குளிர்ந்தது. இழப்பீட்டுத் தொகையின் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டபோதிலும், சுயநலம் கருதாது நல்லெண்ணம் காரணமாகவே ஆங்கிலேயர் இதைச் செய்தனர்.

தொழிற்சாலைச் சட்டம் (1833)

இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளில் சிறுவர்களை ஏராளமாக வேலையிலமர்த்தி, அவர்களுக்குக் குறைந்த ஊதியம் வழங்குவது வழக்கமாயிருந்தது. இந் நிலையை மாற்ற 1802 ஆம் ஆண்டில் முதன் முதலில் ‘ சுகாதார ஒழுங்குச் சட்டம் ’ (Health and Morals Act) என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இச் சட்டப்படி சிறுவர்கள் 12 மணி நேரத்திற்குமேல் ஆலைகளில் வேலை செய்வது தடுக்கப்பட்டது. 1819 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மற்றொரு சட்டம் 9 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தொழிற்சாலை களில் சேர்க்கப் படுவதைத் தடுத்தது. 1825 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ‘ ஹாப் ஹவுஸ் சட்டம் ’ (Hob House Act) சிறுவர்கள் உணவருந்த, குறிப்பிட்ட நேரங்களில் வெளியில் விடப் படவேண்டுமென்றும், அவர்களுக்கு சனிக்கிழமைகளில் ஓய்வ ளித்தல் வேண்டுமென்றும் கூறியது. இச் சட்டங்களினால் மாறு தல்கள் ஏற்படாமல் போகவே, 1833 ஆம் ஆண்டில் இச் சட்டங் களையெல்லாம் திருத்தும் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு, சட்ட மாக்கப்பட்டது. இப் புதுச் சட்டப்படி, 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும், 13 வயதுக்குட்பட்ட சிறுமிகளும் தொழிற்சாலை களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்வது தடுக்கப்பட்டது. 18 வயதுக்குட்பட்டவர்கள் இரவில் வேலை செய்யக் கூடாதெனவும் இச் சட்டம் கூறியது. அத்துடன் சிறுவர்கள் சிறுமியர்கள் வேலை செய்யும் நேரங்களும் திருத்தியமைக்கப்பட்டன. இச் சட்டத்தைத்

தொழிலதிபர்கள் கடைப்பிடிக்கின்றனரா என்பதைக் கண்காணிக்க அரசாங்கம் பல மேற்பார்வையாளர்களை நியமித்தது. தனி மனிதர்களின் வாழ்வில் அரசாங்கம் இங்ஙனம் துணிந்து தலையிட ஆரம்பித்தது இதுவே முதல் தடவையாகும்.

கல்விச் சீர்திருத்தச் சட்டம் (1833)

இச் சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்பு, ஆங்கில அரசாங்கம் மக்களுக்குக் கல்வி புகட்டுவதைத் தன் கடமை என்று எண்ணவில்லை. ஆனால் சீர்திருத்தப் பாராளுமன்றமானது கல்வித் துறையிலும் தனது கவனத்தைச் செலுத்தியது. 1833 ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளுமன்றம் கல்வியில் கவனம் செலுத்தி வந்த சங்கங்களுக்கு 20,000 பவுன்களை மானியமாக ஒதுக்கியது. இதைக் கொண்டு புதிய கல்விக் கூடங்களைக் கட்டலாமென்றும் அச் சட்டம் கூறியது. பெரும்பாலான பள்ளிகள் அப்பொழுது சமயக் கழகங்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. பிறகு பள்ளிகளைத் தணிக்கை செய்ய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அதனால் கல்வி முறை நாட்டில் மேலோங்கியது,

வங்கி தனியுரிமைச் சட்டம் (1833)

1800ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட இங்கிலாந்து வங்கியின் (Bank of England) தனியுரிமை 1833ஆம் ஆண்டில் நீங்கியது. அதனால் 1833ஆம் ஆண்டில் வங்கியின் தனியுரிமைச் சட்டம் (Bank Charlei Act) ஒன்று இயற்றப்பட்டு, இங்கிலாந்து வங்கிக்குத் தனியுரிமை மீண்டும் 21 ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது. இச் சட்டப்படி, இங்கிலாந்தின் வங்கி அரசாங்க வங்கியாகவே நீடித்தது. தாள் நோட்டுகளை விநியோகிக்கும் உரிமை இவ் வங்கிக்கே கொடுக்கப்பட்டது.

சட்டச் சீர்திருத்தங்கள்

1833 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் பிரிவு கவுன்சிலில் நீதிக் குழு (Judicial Committee) ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது மத வழக்குகள், கப்பற் படை வழக்குகள் முதலானவற்றை விசாரிக்கும் உச்ச மேல்முறையீட்டு நீதிமன்றமாக (Highest Court of Appeal) அமைக்கப்பட்டது. இதுவே குடியேற்ற நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் உச்சமேல் முறையீட்டு நீதிமன்றமாகச் செயல்பட்டது. அத்துடன் நீதிபதிகள் லஞ்சம் வாங்குவதும், பொதுச் சட்டம் அமுல் நடத்தப் பெறும் போது ஏற்படும் பல ஊழல்களும் நீக்கப்பட்டன. இந்திய

அரசாங்கமே இந்தியா முழுவதுக்கும் சட்டம் இயற்றலாம் என்றும் விதி செய்யப்பட்டது.

வறியோர் சட்டத்திருத்தம் (1834)

இங்கிலாந்தில் முதலாம் எலிசபெத் காலத்திலிருந்து வறியோரின் துயரங்களை நீக்குவதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டு வந்தன. மக்களின் தேவைகளுக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் அவ்வப்போது தகுந்த திருத்தங்கள் அச் சட்டங்களிலேயே செய்யப்பட்டு வந்தன. 1782 ஆம் ஆண்டில் புகழ்பெற்ற கில்பர்ட் சட்டம் (Gilbert Act) இயற்றப்பட்டது. 1796 ஆம் ஆண்டில் மற்றொரு சட்டமும் இயற்றப்பட்டது. இச் சட்டத்தினால் ஏழ்மையில் வாழ்ந்த தொழிலாளர்களுக்குப் பண வுதவி செய்யுப்பட்டது. இவ்வாறு குறைந்த ஊதியம் பெறும் ஏழைகளுக்கு, அவர்தம் குடும்பத்தேவைகளுக்கேற்ப உதவிப் பணம் அளிக்கப்பட்டு வந்ததனால், அவர்கள் கவலையின்றிக் காலங்கடத்தினர். உழைத்தாலும், உழைக்காவிட்டாலும் வேண்டிய அளவு பணம் கிடைக்கிறது என்ற எண்ணத்தால் அவர்களில் பலர் சோம்பேறிகளாக மாறினர். முதலாளிகளும் ஊதியம் கொடுப்பதில் பல ஊழல்களைச் செய்தனர். அதனால் அரசாங்கத்திற்குப் பெரும்பணம் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே ஊழல் மலிந்த வறியோர் சட்டத்தைத் திருத்த கிரே அமைச்சரவை முயன்றது. 1834 ஆம் ஆண்டு இரவலர் சட்டச் சீர்திருத்த மசோதா (Poor Law Reform Act) கொண்டுவரப்பட்டு சட்ட மாக்கப்பட்டது. இதனால் உடலுரம் உள்ள ஏழைகளுக்குப் புற வுதவி (Outdoor Relief) வழங்குவது நிறுத்தப்பட்டது. உண்மை யாக யாரால் வேலை செய்ய முடியாதோ அவர்களுக்கே தகுதியின் அடிப்படையில் உதவியளிக்கப்பட்டது. இதற்காக நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது, வறியோர் சட்ட நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாவட்டமும் பாதுகாப்பாளர் குழுவைத் தேர்ந்தெடுத்தது. இச் சட்டத்திற்கு அஞ்சியாவது சோம்பேறிகள் வெளியில் சென்று வேலை செய்யட்டுமே என்ற நோக்கத்திற்காகத்தான் சட்டம் சற்று கடுமையாகக் கொண்டு வரப்பட்டது.

கிரே பிரபுவின் ராஜிநாமா

கிரே பிரபு இங்கிலாந்தின் பிரதமராக 1834 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார். 1834 ஆம் ஆண்டில் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார். இவருக்குப் பின் விக்கு கட்சியைச் சார்ந்த மெல்போர்ன் பிரபு (Lord Melbourne) அட்

பதவியில் அமர்த்தப்பட்டார். மெல்போர்ன் பிரபு பிரதமர் பதவியில் சில மாதங்கள் மட்டுமே பணியாற்றினர். பிறகு 1834 ஆம் ஆண்டிலேயே சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) பிரதமராக்கப்பட்டார். சர் ராபர்ட் பீல் தமது கட்சியான டோரிக் கட்சியை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று எண்ணி ஒரு புதிய திட்டத்தை ஏற்படுத்தினர். அத்துடன் டோரிக் கட்சியின் பெயரை கன்சர்வேடிவ் கட்சி (Conservative Party) யென மாற்றினர். டாம்வொர்த் (Tomworth) தொகுதியில் இவர் தேர்தலில் போட்டியிடும் பொழுது, தம் கட்சியின் கொள்கை விளக்க அறிக்கையில் சில புதிய சீர்திருத்தங்களை முன் வைத்தார். இவருடைய கொள்கை விளக்க அறிக்கை (Manifesto) பரவலாகப் படிக்கப்பட்டது. இக்கொள்கை விளக்க அறிக்கை டாம்வொர்த் கொள்கை விளக்கஅறிக்கையெனப் பெயர் பெற்றது. சர் ராபர்ட் பீல் தமது பிரதமர் பதவியை 1835 ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார். இவருக்குப் பின் மெல்போர்ன் பிரபுவே மீண்டும் பிரதமராக்கப்பட்டார். இவர் இப் பதவியில் தொடர்ந்து 1841 ஆம் ஆண்டுவரை பணியாற்றினர்.

நகராட்சி மன்றங்களின் சீர்திருத்தச் சட்டம் (1835)

1835 ஆம் ஆண்டிற்கு முன்பு, நகராட்சி மன்றங்களில் ஊழல்கள் மலிந்திருந்தன. திறமையின்மையும், லஞ்சமும் அங்குத் தாண்டவமாடிக்கொண் டிருந்தன. ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் வாழ்நாள் முழுவதும் பதவி வகித்தனர். அதனுல் சாதாரண மக்கள் யாவரும் நகராட்சி மன்றங்களின் நிர்வாகத்திலே பங்கேற்க முடியவில்லை. ஆகவே 1835 ஆம் ஆண்டில் நகராண்மைக் கழகச் சட்டமானது (The Municipal Corporation Act, 1835) பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. அதன்படி நகரமன்ற உறுப்பினர்கள் வரி செலுத்தும் குடிமக்களால் மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அவர்கள் மீண்டும் தேர்தலில் நிற்கலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தங்களிலேயே ஒருவரை மேயராகவும் (Mayor) தேர்ந்தெடுத்துக் கொள்ளல் வேண்டும். பழைய முறைகளையே போற்றி வந்த பலர் இத்தகைய தேர்தல் முறையை எதிர்த்தனர். அவர்களை மகிழ்விக்க வேண்டி, சபையின் நான்கில் ஒரு பங்கினரை உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கலாம் என்ற திருத்தம் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நகர முதுவர்கள் (Alder Men) எனப்படுவர். ஆறு ஆண்டுகளுக்கு அவர்கள் பதவி வகிப்பார். இம் முறை இங்கிலாந்தில் நல்ல பலனையே அளித்தது.

ஆகவே இச் சட்டத்தால் தான் இங்கிலாந்தில் உண்மையிலேயே நகர சுயாட்சி முறை ஏற்பட்டது எனக்'கூறலாம்.

பிறப்பு இறப்புக் கணக்குச் சீர்திருத்தம் (1836)

இங்கிலாந்தில் 1836ஆம் ஆண்டில் பிறப்பு இறப்பு கணக்கெடுக்கும் முறை சீர்திருத்தப்பட்டது. சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்வதைத் தடுக்க வேண்டுமானுல் அவர்களின் வயது சரியாகத் தெரிய வேண்டும். அதற்காகப் பிறந்த குழந்தைகள் எல்லோருடைய பிறந்த தேதிகளையும் பதிவு செய்யும் முறை கையாளப்பட்டது. மேலும் திருமணமான தேதிகளையும், இறந்த தேதிகளையும் பதிவு செய்யும் முறை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் முதலாளிகள் கூலிக்குப் பதிலாகப் பண்டங்களை அதிக விலையில் தொழிலாளிகளுக்குக் கொடுக்கும் பழக்கமும் நிறுத்தப்பட்டது. அத்துடன் நாட்டில் வேட்டைச் சட்டங்களும் சீர்திருத்தப்பட்டன.

இணங்காதார் பற்றிய சட்டம் (1836)

1836ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருமணச் சட்டப்படி ஆங்கிலிக்கத் திருச்சபைக்கு இணங்காதார் (Dissentors) தங்கள் திருச்சபைகளிலேயே திருமணம் செய்து கொள்ளவும், பதிவு அதிகாரிகள் முன்னிலையிலும் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டார்கள்.

சமய ஆணைக்குழு

1836 ஆம்ஆண்டில் பதில் மாற்றுச் சட்டம் (Commutation Act.) ஒன்று பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இதன்படி குருமார்கள் மக்களிடம் வசூலித்த தைத் வரியை தானியங்களுக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகையாகக் கொடுக்கலாமென மாற்றப்பட்டது. மேலும் சமய ஆணைக்குழு Ecclesiasslical Commission) ஒன்றும் இச்சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டது. இக் குழு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும், அவ் வருமானத்தைக் கல்வி சமயம் அறிவு முதலியவற்றைப் பரப்பப் பயன் படுத்தவும் அதிகாரம் பெற்றது. ஆகவே திருக்கோயில்களும், அவற்றின் வருமானங்களும் இக் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

நான்காம் வில்லியம் காலத்தில் ஏற்பட்ட இத்தகைய சீர்திருத்தங்களால் நாட்டில் மக்களின் வாழ்வு மேன்மையடைந்தது, நாட்டில் தொழிலாளர்களின் ஊதியங்கள் உயர்ந்தன. வேலை

யில்லாத் திண்டாட்டம் பெரிதும் குறைந்தது. தொழிலும், விவசாயமும் முன்னேறின. சமயத் துறையிலே அமைதி நிலவியது.

1837 ஆம் ஆண்டில் நான்காம் வில்லியம் இறந்தார். அவருக்கு வாரிசு இல்லாமற் போகவே, மூன்றும் ஜார்ஜின் நான்காவது மகளின் மகள் விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்தின் அரசியாக அரியணையில் அமர்ந்தார்.

21. விக்டோரியா மகாராணியாரின் ஆட்சியும் அரசியலும்

(1837-1901)

நான்காம் ஜார்ஜுக்கும், நான்காம் வில்லியத்திற்கும் வாரிசுகள் இல்லாமற்போகவே 1837ஆம் ஆண்டில் நான்காம் வில்லியம் இறந்தவுடன், விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்தார். இவர் மூன்றும் ஜார்ஜின் நான்காவது மகனாகிய கென்ட் கோமகன் என்னும் எட்வர்டின் ஒரே புதல்வியாவார். இவர் 1819ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதியன்று பிறந்தார். மிக இளவயதிலேயே இங்கிலாந்தை ஆளும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்தை ஆண்ட அரசர்களுக்குள்ளேயே மிக நீண்ட காலம் ஆட்சிப் பொறுப்பை வகித்தவர் விக்டோரியா மகாராணியாவார்.

விக்டோரியா மகாராணியார் மிகுந்த அழகு வாய்ந்தவரல்லர். அத்துடன் நல்ல உயரமான உடலமைப்பைப் பெற்றவருமல்லர். ஆனால் பல அருங்குணங்களுக்கு எடுத்துக் காட்டாய் விளங்கினர். அடக்கமே உருவானவர். பொறுமைக்கோர் இருப்பிடமாய்த் திகழ்ந்தார். உண்மைக்கோர் உறைவிடமாகக் காணப்பட்டார். அரசியல் சிக்கல்களை எளிதில் புரிந்துகொள்ளும் திறமை பெற்றிருந்தார். அடக்கம், அன்பு, கருணை போன்ற பெண்மைக் குணங்களோடு நேர்மை, கண்டிப்பு, சுயமாகச் சிந்தித்தல், அமைச்சர்களைக் கட்டுப்படுத்தும் திறன் ஆகிய ஆண்மைக் குணங்களும் அவரிடம் காணப்பட்டன. 1840ஆம் ஆண்டில் விக்டோரியா சாக்ஸிகோபர்க் (Saxe-Coburg) இளவரசரான ஆல்பர்டைத் திருமணம் செய்து கொண்டார். அவரை அரசியார் உளமார நேசித்து வந்தார். நான்கு ஆண் மக்களுக்கும், ஐந்து பெண்களுக்கும் தாயானர். விக்டோரியா மகாராணியார் மெல்போர்ன் பிரபுவிடம் நல்ல அரசியற் பயிற்சிகளைப் பெற்றார். அவரும் விக்டோரியா மகாராணியைத் தம் மகளெனவே பாவித்து வந்தார்.

விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலம் பல சிறப்பியல்புகளைக் கொண்டதாகும். இவருடைய ஆட்சிக் காலத்தில்

தான் ஆங்கிலப் பேரரசு விரிவடைந்தது. இங்ஙனம் பேரரசு விரிவடைந்ததால் பல புதிய பிரச்சினைகள் நாட்டில் எழுந்தன. அவற்றை இராணியாரும் அவர் அமைச்சர்களும் திறமையுடன் சமாளித்தனர். மகாராணியாரின் காலத்தில் இங்கிலாந்தின் அரசியல் துறையிலும் சில சீரிய கொள்கைகள் பேணப்பட்டன. வாணிபத் துறையில் இவர் காலமானது தடையிலா வாணிபக் கொள்கையின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தது.

விக்டோரியா மகாராணியார் இங்கிலாந்தை நீண்டகாலம் ஆண்டதால், அவரது ஆட்சியில் ஏறத்தாழ இருபது அமைச்சரவைகள் பதவியேற்றன. ஆனால் பொதுவாக நோக்குமிடத்து, இராணியாரின் ஆட்சி எனும் அருங்கலத்தைச் செவ்வனே செலுத்திய மாலுமிகள் மெல்போர்ன், பீல், ரஸ்ஸெல், பாமர்ஸ்டன், கிளாட்ஸ்டன், டிஸ்ரேலி, சாலிஸ்பரி என்னும் அறிஞர்களே யாவர்.

மெல்போர்ன் பிரபுவின் அமைச்சரவை (1837—1841)

விக்டோரியா மகாராணியார் பதவியேற்றவுடன் நாட்டில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. உள் நாட்டில் சார்ட்டிஸ்டுகள் (The Chartists) என்ற தீவிரவாதிகளும், தானியச் சட்ட எதிர்ப்பு வாதிகளும் வன்முறைகளில் ஈடுபடும் நிலை உருவாகியிருந்தது. கனடாவில் புரட்சி ஏற்படும் நிலை இருந்தது. அயர்லாந்தில் அதிருப்தி உச்சநிலையை எட்டிக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் முடியாட்சியின்மீது பக்தியையும் மரியாதையையும் வளர்க்கவும், மக்களின் ஆதரவைப் பெறவும் இராணியார் பாடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில் அரசியாருக்கு அவர் கணவர் ஆல்பர்ட் பெரிதும் உதவினார். அத்துடன் பல பிரச்சினைகளைக் கூடியவரை சமாளித்து இராணியாருக்கு உறுதுணையாயிருந்த பெருமை மெல்போர்ன் பிரபுவையே சாரும். இராணியார் அவரைத் தம் தந்தையைப் போல் கருதிப் போற்றினார். பொதுவாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவுரைகளை வழங்கி வந்தார். 1837 முதல் 1841ஆம் ஆண்டு வரை மெல்போர்ன் பிரபு இங்கிலாந்தின் பிரதமராய்ப் பணியாற்றினார்.

அரசியார் பட்டமெய்தியவுடன் ஆங்கிலப் பாராளுமன்றம் கூடியது. அது அரசியாரின் செலவுத் தொகையை 3,85,000 பவுன்களாக நிர்ணயித்தது. அதன்பின் அப் பாராளுமன்றம் கலைந்தது. ஆனால் கனடாவில் ஏற்பட்ட பிரச்சினைகளால் அது மீண்டும் கூட்டப்பட்டது. 1763ஆம் ஆண்டில் கனடா ஆங்கி

லேயருக்குக் கிடைத்தபோது அங்கு ஃபிரெஞ்சுக்காரர்களே இருந்தனர். அதன்பின் அமெரிக்காவிலிருந்து பலர் குடியேறினர். இங்ஙனம் குடியேறிய பிராட்டஸ்டெண்ட் ஆங்கிலேயருக்கும் ஏற்கனவே அங்கு வாழ்ந்துவந்த கத்தோலிக்க ஃபிரெஞ்சுக்காரர் களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டுவந்தன. அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்த அப்பொழுது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த பிட் 1791ஆம் ஆண்டில் கனடா அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்படுத்தினர். அதன்படி கனடா இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஃபிரெஞ்சுக்காரர்கள் அதிகமாக வாழ்ந்த தென் பாகமும், ஆங்கிலேயர் அதிகமாக வாழ்ந்த வடபாகமும் தனித் தனியே ஒவ்வொரு ஆளுநரால் (Governor) ஆளப்பட்டன. அவருக்கு உதவியாக ஒரு நிருவாக சபையும், இருவகைச் சட்ட மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. நிருவாக சபைகள் சட்ட மன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்தவையாக இல்லாததால், இரு சபைகளுக்கிடையே அடிக்கடி வேறுபாடுகள் தோன்றின. இச் சமயத்தில் கனடாவின் தெற்குப் பாகத்திலும், வடக்குப் பாகத் திலும் சுதந்திரக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. மெல்போர்ன் பிரபுதீவிர நடவடிக்கைகளை எடுத்து அக் கிளர்ச்சிகளை ஒடுக்கினர். எனினும், மெல்போர்ன் அமைச்சரவை கனடாவின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண முயன்றது. அதன்படி 1838ஆம் ஆண்டில் கனடாவில் அரசியல் சட்டமானது செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. டர்ஹாம் பிரபு (Lord Durham) கனடாவின் உயர் ஆணையாளராக (High Commissioner) நியமிக்கப்பட்டார். டர்ஹாம் பிரபு கனடாவின் நிலையை ஆராய்ந்து ஓர் அறிக்கையை அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அவரும் அவ்வாறே ஓர் அறிக்கையை அளித்தார்.

டர்ஹாம் அறிக்கை

கனடாவின் பிரச்சினைகளை நன்கு அறிந்து, ஆராய்ந்து டர்ஹாம் பிரபு 1839ஆம் ஆண்டில் ஓர் அறிக்கையை மெல்போர்ன் பிரபுவிடம் சமர்ப்பித்தார். அவ் வறிக்கையில் கனடாவுக்குச் சுயஆட்சி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். கனடாவின் இரண்டு பகுதிகளும் இணைக்கப்பட வேண்டுமென்றும், சட்டமன்றங்களின் உறுப்பினர் தொகை அதிகப்படுத்தப்பட வேண்டுமென்றும், நிர்வாக சபை சட்டமன்றத் திற்குப் பொறுப்புடையதாயிருக்க வேண்டுமென்றும், தல ஆட்சி சீர்திருத்தப்பட வேண்டுமென்றும், ஆங்கில அரசாங்கம் கனடாவின் ஆட்சியில் தலையிடக்கூடாதென்றும், டர்ஹாம் பிரபு தமது அறிக்கையில் சிபாரிசு செய்திருந்தார். ஆகவே இவ் வறிக்கை குடியேற்ற நாடுகளின் சுயாட்சிக்கு ஒரு

மகாசாசனமாகக் (Magna Carta of Colonial Self-Government) கருதப்பட்டது. அவரது அறிக்கையில் காணப்பட்ட சிபார்சுகளை ஆங்கில அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அதன்படி 1840 ஆம் ஆண்டில் கனடா ஐக்கியச் சட்டம் (Act of Union) ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது, அதன்படி பொறுப்பாட்சியும் சுயாட்சியும் கனடாவில் ஏற்பட்டன.

தொழிலாளர் இயக்கம்

மெல்போர்ன் அமைச்சரவைக்கு உள் நாட்டிலும் தொழிலாளர் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பேற்பட்டது. தொழிற்புரட்சியின் காரணமாக இங்கிலாந்தின் சமுதாயத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. முதலாளிகள் தொழிலாளிகள் என்ற இரு சாரார் தோன்றினர். இவர்களுக்கிடையே ஒற்றுமை குறைந்தது. அதனால் பூசல்கள் எங்கும் தாண்டவமாடின. முதலாளிகள் மேலும் செல்வத்தைச் சேர்த்தனர். தொழிலாளிகள் மேலும் ஏழைகளாயினர். நாட்டில் கூலிகள் குறைந்தன. விலைவாசிகள் ஏற்றமுற்றன. அதனால் பஞ்சமும் பிணியும் ஏழைத் தொழிலாளிகளை வாட்டின. இக் குறைகள் நீங்கத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு கிளர்ச்சிகள் செய்தனர். தொழிலாளர்களின் நிலையை உயர்த்த இங்கிலாந்தில் முதன்முதலாகப் பாடுபட்டவர் ராபர்ட் ஓவன் (Robert Owen) என்பவராவார். அவர் கூட்டுறவு முறையில் வாழ வேண்டுமென்று தொழிலாளர்களுக்குப் போதித்தார். தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானல் அவர்கள் ஒன்று கூடித் தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினர். அவர் 'ஒன்று படுத்தப்பட்ட மகத்தான தேசிய தொழிற் சங்கம்' (The Grand National Consolidated Trade Union) என்ற ஒரு தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினர். தொழில் துறையில் முதலாளித்துவத்தை ஒழித்துத் தொழிலாளரின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதே இச் சங்கத்தின் நோக்கமெனக் கூறினர். ஆனல் முதலாளிகளின் சூழ்ச்சியால் அத்தகைய நோக்கம் நிறைவேறவில்லை. அச் சங்கமும் சிதைந்தது. ஆனல் ஓவனின் கொள்கைகள் இங்கிலாந்தில் சமதர்மத்திற்கு (Socialisam) வித்திட்டன. பின்னர் தொழிற் சங்கங்கள் ஆங்காங்கே தோன்றலாயின. அதோடு நாட்டில் கூட்டுறவு இயக்கமும் (Co-Operative Movement) வளர்ந்து வந்தது.

சார்ட்டிஸ இயக்கம்

விவசாயப் புரட்சியினலும், தொழிற் புரட்சியினலும் நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அம் மாற்றங்களால் ஏழை மக்கள்

தான் அதிகம் அவதியுற்றார்கள். நாட்டில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கூலி விகிதம் மிகவும் குறைந்தது. அதே சமயத்தில் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருந்தன. இத் தருணத்தைப் பயன்படுத்தி முதலாளிகள் கொள்ளை இலாபத்தை அடித்தனர். அதனால் அவர்கள் மேலும் மேன்மையடைந்தனர். அதே நேரத்தில் ஏழைகள் பசியாலும் பட்டினியாலும் வாடினர். இத்தகைய மக்களை நாட்டிலிருந்த தானியச் சட்டங்களும், (Corn Laws) கொடுமைப் படுத்தின. 1834 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட இரவலர் சீர்திருத்தச்சட்டமும் (Poor Law Reform Act) ஏழை மக்களின் இடுக்கண்களை மேலும் உயர்த்தின. மேலும் பாராளுமன்றத்தைச் சீர்திருத்த வேண்டி நடத்தப்பட்ட போராட்டங்களிலே நடுத்தர வகுப்பாரோடு இவர்களும் பல இன்னல்களை அனுபவித்தனர். சிறையில் அடைக்கப்பட்டனர். நாடு விட்டும் கடத்தப்பட்டனர். சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். 1832 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் இவர்களின் அரசியல் உரிமைகளைப் புறக்கணித்தது. இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை. இச் சட்டம் இவர்களுக்குத் தலையில் விழுந்த இடியெனப்பட்டது.

ஆகவே, இத்தகைய அதிருப்தி மிக்க தொழிலாளிகளும் ஏழைகளும் ஒன்று பட்டு சங்கங்கள் அமைத்தனர். வில்லியம் லவட் (William Lovett) ஃபியர்கஸ் ஓ கானர் (Feargus O Connar) போன்றவர்கள் இத்தகையோருக்குத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களே சார்ட்டிஸ வாதிகள் எனப்பட்டனர். அவர்களுடைய இயக்கமே சார்ட்டிஸ இயக்கம் (The Chartist Movement) என அழைக்கப்பட்டது.

சார்ட்டிஸ இயக்கம் ஓர் அரசியல் இயக்கமாகத் திகழ்ந்தது. தொழிலாளர்களுக்கு அரசியலில் பங்கு கிடைத்தாலன்றி, அவர்கள் தங்களது நிலையை உயர்த்திக் கொள்ள இயலாதென்பது இதன் கொள்கையாகும். முதலாளிகளோடு சரி நிகராகப் பாராளுமன்றத்தில் இடம் பெறவேண்டுமென்பதும் இவ் வியக்கத்தைச் சார்ந்தவர்களின் நோக்கமாகும். வில்லியம் லவட், பியர்கஸ் ஓ கானர் ஆகியோரின் தலைமையில் ஒரு திட்டத்தை உருவாக்கி அதில் தங்கள் ஆறு கோரிக்கைகளை (Six Demands) சார்ட்டிஸ்டுகள் வெளியிட்டனர். அக் கோரிக்கைகளடங்கிய திட்டம் 'மக்களின் சாசனம்' (People's Charter) எனக் கூறப்பட்டது.

வயது வந்தோருக்கு வாக்குரிமை, இரகசிய வாக்கெடுப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் கொடுத்தல், ஆண்டு

தோறும் பாராளுமன்றத்தைக் கூட்டல், சமமான தேர்வாளர் தொகுதிகள், பாராளுமன்ற உறுப்பினராவதற்குள்ள சொத்து தகுதியை நீக்குதல் போன்ற ஆறு கோரிக்கைகளடங்கியதுதான் அவர்கள் தொகுத்த திட்டமாகும்.

சார்ட்டிஸ்டுகளில் ஒரு பிரிவினர், அமைதியாகவும், ஒழுங்கு முறையிலும் கூட்டங்களை நடத்தி, அதன் மூலம் தம் கோரிக்கைகளை அரசாங்கத்திடமிருந்து பெற விரும்பினர். அவர்கள் 'ஆன்ம பலச் சார்ட்டிஸ்டுகள்' (Moral Force Chartists) எனப் பட்டனர். மற்றொரு பிரிவினர் வன்முறையில்தான் தம் கோரிக்கைகளைப் பெற முடியும் எனக் கருதினர். அவர்கள் புய பலச் சார்ட்டிஸ்டுகள் (Physical Force Chartists) எனக் கூறப் பட்டனர். ஆரம்பத்தில் ஆன்ம பலச் சார்ட்டிஸ்டுகளின் கை, இயக்கத்தில் ஓங்கியிருந்தது. அமைதியான முறையில் அவர்கள் செய்த போராட்டங்களை அரசாங்கம் கவனிக்காமல் போகவே, தோள்வலிமைச் சார்ட்டிஸ்டுகளின் கை அவ் வியக்கத்திலே ஓங்கியது.

1838 ஆம் ஆண்டில் சார்ட்டிஸ்டுகள் நாட்டில் பெருங் கலகங்களை உண்டாக்கினர். பல கடைகள் சூறையாடப்பட்டன. நியூபோர்ட் என்னும் நகரைக் கூட கைப்பற்ற முயன்றனர். ஆனால் அரசாங்கம் எடுத்த கடுமையான நடவடிக்கையினால் பல சார்ட் டிஸ்டுகள் கொல்லப்பட்டனர். அதன் பின்னரே அவர்கள் நகரை விட்டகன்றனர். 1839 ஆம் ஆண்டில் சார்ட்டிஸ்டுகள் பாராளுமன்றத்திடம் அவர்களின் கோரிக்கைகளடங்கிய பெரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தனர். ஆனால் பாராளுமன்றம் அவ் விண்ணப்பத்தை நிராகரித்தது. அதனால் மீண்டும் பெருங் கலகம் ஏற்பட்டது. மெல்போர்ன் பிரபு எடுத்த நடவடிக்கை களாலும், சார்ட்டிஸ்டு தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்ட தாலும் நாடு கடத்தப் பட்டதாலும் சார்ட்டிஸ்டுகள் இயக்கம் சிறிது மங்கியது. ஆனால் மீண்டும் சர் ராபர்ட் பீல் பிரதமராக இருந்தபோது அவ் வியக்கம் தலை தூக்கியது.

தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்

சார்ட்டிஸ்டு இயக்கத்தைப் போன்று தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம் (Anticorn Law League) ஒன்று இங்கிலாந்தில் தோன்றி மெல்போர்ன் அமைச்சரவைக்குத் தொந்தரவு கொடுத்தது. 1839 ஆம் ஆண்டில் வில்லியர்ஸ், காப்டன் போன்றோர் தானியச் சட்டங்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இதை ஒடுக்க மெல்போர்ன் பிரபு பல நடவடிக்கைகளை எடுத்தார்.

மெல்போர்ன் பிரபுவின் ராஜிநாமா

இங்கிலாந்தில் 1833 ஆம் ஆண்டில் அடிமை முறை ஒழிப்புச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தை எதிர்த்து ஜமைக்கா தீவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அக் கிளர்ச்சியை ஒடுக்க மெல்போர்ன் அமைச்சரவை ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. அத் தீவின் அரசியல் திட்டம் 5 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கவும், எல்லா அதிகாரமும் கொண்ட ஓர் ஆளுநரை அத் தீவுக்கு நியமிக்கவும் அம் மசோதா வகை செய்தது. அம் மசோதா பாராளுமன்றத்தில் ஐந்தே வாக்குகள் அதிகம் பெற்று நிறைவேறியது. ஆனால் குழு பரிசீலனையில் அம் மசோதாவிற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அதனால் மெல்போர்ன் தமது அமைச்சரவையைக் கலைத்தார். தம் தந்தையைப் போல் இருந்து கனிவுடன் நடந்து வந்த மெல்போர்ன், பதவியை ராஜிநாமா செய்தது அரசியாருக்குப் பெரும் வருத்தத்தை உண்டாக்கியது. உள்ள நிலையை விளக்கி பீல் என்பாரை அழைத்து அமைச்சரவை அமைக்குமாறு அரசியாருக்கு மெல்போர்ன் பிரபு ஆலோசனை கூறினார். வேறு வழியின்றி அரசியாரும் அவ்வாறே செய்தார். பீல் என்பவர் கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்தவர். எனவே அரண்மனை உத்தியோகங்களில் ஏற்கனவே இருந்த விக்குகளை நீக்கிவிட்டு டோரிகளை அமர்த்தினார். அடுத்து மெல்போர்ன் ஆட்சியில் நியமிக்கப்பட்ட இராணியின் பள்ளியறைச் சீமாட்டிகளைப் பதவியினின்றும் நீக்குமாறு அரசியாரைக் கேட்டுக் கொண்டார். இது தான் 'பள்ளியறை வினா' (The Bed-Chamber Question) என்று அழைக்கப்படுகிறது. ஆனால் விக்டோரியா மகாராணியார் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே பீல் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார். பீல் ராஜிநாமா செய்ததைக் கண்டு விக்டோரியா மகாராணியார் உள்ளூர மகிழ்ந்தார். மெல்போர்ன் பிரபுவை மீண்டும் அமைச்சரவை அமைக்கும்படி அரசியார் கேட்டுக் கொண்டார். அரசியாரின் கௌரவத்தைக் காக்க வேண்டி மெல்போர்ன் மீண்டும் பதவியில் அமர்ந்தார். பின்னர் 1839 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 1841 ஆம் ஆண்டு வரை அவர் அப் பதவியில் பணியாற்றினார்.

1840 ஆம் ஆண்டில் விக்டோரியா மகாராணியார் ஆல்பர்ட் என்ற சாக்ஸ் கோபர்க் இளவரசரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். இத் திருமணம் ஆங்கில மக்களுக்குப் பிடிக்கவில்லை. அரசாங்கம் ஆல்பர்ட்டுக்கு அளிக்க முன் வந்த உதவித் தொகையை எதிர்க் கட்சியினர் முயன்று

குறைத்தனர். அத்துடன் அரசாங்கத்தால் யூதர்களுக்குப் பொது மக்கள் சபையில் இடமளிக்கக் கொண்டு வரப்பட்ட மசோதாவை பிரபுக்கள் சபை நிராகரித்தது. அரசாங்க நிதிநிலை அறிக்கையை (Budget) பொது மக்கள் சபை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அமைச்சரவையின் மீது பீல் என்பவரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதுமக்கள் சபையில் நிறைவேறியது. ஆகவே மெல்போர்ன் தமது அமைச்சரவையைக் கலைத்து விட்டு, பொதுத் தேர்தல் நடத்தும்படி அரசியாரை வேண்டிக் கொண்டார். அத் தேர்தலில் மெல்போர்ன் கட்சியைச் சார்ந்த விக்கு கட்சியினர் தோல்வியடைந்தனர். ஆகவே பீல் என்பாரை அழைத்து அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக் கட்டுப்பாடு அரசியாருக்கு ஏற்பட்டது. மெல்போர்ன், பீல் அமைச்சரவையோடு ஒத்துப் போகும்படி இராணியாரைப் பெரிதும் கேட்டுக் கொண்டார்.

சர் ராபர்ட் பீலின் அமைச்சரவை (1841—1846)

சர் ராபர்ட் பீல் 1778ஆம் ஆண்டில் லங்காஷயரில் வாழ்ந்த ஒரு பெரும் பஞ்சாலை அதிபருக்கு மகனாகப் பிறந்தார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே கல்வி பயின்றார். இவர் சிறுவயதிலேயே பொதுமக்கள் சபையில் நடக்கும் விவாதங்களைக் கூர்ந்து கவனித்து வந்தார். அப்பொழுது முதற்கொண்டே இவருக்கு அரசியலில் ஒரு பற்று ஏற்பட்டது. இவருக்கு 21 வயதான பொழுது, இவர் தந்தை அயர்லாந்தில் இவருக்கு பரோவை (Borough) விலைக்கு வாங்கிக் கொடுத்தார். ஆகவே இவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரானார். ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இவரால் புகழ் பெற முடிந்தது. பாராளுமன்றத்தில் இவருடைய கன்னிப் பேச்சு (Maiden Speech) 'பிட்டுக்குப் பிறகு பேசப்பட்ட ஒரு நல்ல சொற்பொழிவு' எனக் கூறப்பட்டது. ஒரு வருடத்திற்குள்ளேயே இவர் உதவி வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். தமது 24வது வயதில் இவர் அயர்லாந்தின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். பின்னர், அயர்லாந்தின் ஆட்சியாளராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். பிறகு 1822ஆம் ஆண்டில் உள்நாட்டு அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டார். 1828ஆம் ஆண்டில் பொதுமக்கள் சபையின் தலைவரானார். 1830ஆம் ஆண்டிலிருந்து 1841ஆம் ஆண்டிற்குள் இவர் கன்சர்வேடிவ் கட்சி தம் தலைமையை ஏற்கும்படி செய்தார். டிஸ்ரேலி (Disraeli), கிளாட்ஸ்டன் (Gladstone) போன்ற திறம் படைத்த இளைஞர்களைத் தெரிந்தெடுத்துத் தம் தலைமையின் கீழ்ப் பணியாற்ற ஊக்குவித்தார்.

1837ஆம் ஆண்டு மெல்போர்ன் அமைச்சரவை கொண்டு வந்த ஒரு மசோதா பொதுமக்கள் சபையின் குழுவின் பரிசீலனையில் தோற்கடிக்கப்பட்டதால், அவர் தம் விக்கு அமைச்சரவையுடன் ராஜிநாமா செய்தார். உடனேயே பீல் அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் இராணியின் பள்ளியறை பிரச்சினை (Bedchamber Question) எழுந்ததால் தம் பதவியை இராஜிநாமா செய்தார். பின்னர் மெல்போர்ன் அமைச்சரவையே மீண்டும் பதவியேற்றது. 1941 ஆம் ஆண்டில் பொதுமக்கள் சபையில் மெல்போர்ன் அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், அவர் தம் அமைச்சரவையைக் கலைத்துவிட்டு தாமும் ராஜிநாமா செய்து பொதுத் தேர்தல் நடத்தும்படி அரசியாருக்கு ஆலோசனை கூறினார். பொதுத் தேர்தலில் பீலின் கட்சியான கன்சர்வேடிவ் கட்சி வெற்றி கண்டது. அதனால் 1941ஆம் ஆண்டு பீல் அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

சர் ராபர்ட் பீல் ஓர் உறுதியான, திறமைமிக்க அமைச்சரவையை அமைத்தார். அவ் வமைச்சரவை வெல்லிங்டன் பிரபு, அபர்டீன் பிரபு, ஸ்டேன்லி பிரபு, கிளாட்ஸ்டன் போன்ற திறமைமிக்க நிர்வாகிகளைக் கொண்டு, சிறந்து விளங்கியது. பீலின் அறிவு, திறமை, அனுபவம் ஆகியவைகள் பொதுமக்கள் சபையைத் திறம்படச் செயல்பட வைத்ததோடல்லாமல், பலதரப்பட்ட துறைகளின் செயல்களையும் மேற்பார்வையிடச் செய்தன. பீலினுடைய அமைச்சரவைபற்றி கிளாட்ஸ்டன் கூறும்போது 'அது நிச்சயமாகத் திறம்பட அமைக்கப்பட்ட நிர்வாகமே' என்று கூறுகின்றார்.

பீல் தம்முடைய அமைச்சரவையைத் திறம்படச் செயல்படச் செய்தார். தம்முடைய துணைவர் அனைவரையும் விருப்பம்போல் ஆட்டிப்படைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவரைக் கண்டு அஞ்சாத அமைச்சர்களும் அதிகாரிகளும் இல்லையெனக் கூறலாம். அவரது தலைமையில் காபினெட் முறை அரசாங்கம் தனித் திறமையுடன் இயங்கியது. அமைச்சரவையின் உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டார்கள். ஆகவே பீல் சிறந்த சீர்திருத்தவாதியாகக் கருதப்படாமல் ஒரு சிறந்த நிர்வாகியாகக் கருதப்பட்டார். இவர் பதவியேற்ற நேரத்தில் பெரிய பெரிய போராட்டங்களும், கலகங்களும் உருவெடுத்தன. பீல் தம்முடைய நிர்வாகத் திறமையாலும், கொள்கையாலும் அவைகளை நசுக்கினார்.

அயர்லாந்து பிரச்சினை

பீல் ஆட்சிக் காலத்தில் அயர்லாந்தில் ஒரு பெருஞ் சிக்கல் ஏற்பட்டது. டேனியல் ஓ கானல் (Daniel O' Connell) என்பவர்

அயர்லாந்தில் தம் தலைமையை நிலைக்கச் செய்ய, அயர்லாந்து இங்கிலாந்தினின்று பிரிய வேண்டுமென்று கூறிக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார். இக் கிளர்ச்சிக்கு அயர்லாந்தில் நல்ல ஆதரவு பெருகியது. இங்கிலாந்து-அயர்லாந்து ஐக்கியத்தைப் பிரிக்க வன்முறையைப் பயன்படுத்தலாம் என ஒரு சாரார் கூறினர். ஆனால் டேனியல் ஓ கானல் அக் கருத்தை ஏற்கவில்லை. அயர்லாந்தை இங்கிலாந்தினின்று பிரிக்கப் பாடுபடும் சங்கம் ஒன்றை அயர்லாந்தில் கானல் அமைத்தார். அச் சங்கம் மக்களிடமிருந்து நிதியை வசூலித்தது. டேனியல் ஓ கானல் மிகப்பெரிய கூட்டங்களைக் கூட்டித் தம் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துரைத்தார். 1843ஆம் ஆண்டுதான் அயர்லாந்து இங்கிலாந்தினின்று பிரியும் ஆண்டு என, கூட்டத்தில் ஆண்டையும் நிர்ணயித்தார். ஆகவே 1843ஆம் ஆண்டில் கிளான்டார்ப்ஃ (Clantorf) என்னுமிடத்தில் அயர்லாந்து-இங்கிலாந்து ஐக்கியத்தை எதிர்த்து ஒரு பெரிய கூட்டத்தை டேனியல் ஓ கானல் கூட்ட ஏற்பாடு செய்தார். ஆனால் அரசாங்கம் அந்தக் கூட்டம் நடைபெறக் கூடாதென்று உத்திர விட்டது. அதற்காக ஒரு படையும் தயார் செய்யப்பட்டது. தமது அமைதியான நடவடிக்கைக்கு எடுத்துக்காட்டாக, டேனியல் ஓ கானல் அக் கூட்டத்தை ரத்து செய்துவிட்டார். இவருடைய இந் நடவடிக்கை அயர்லாந்து மக்களுக்கு எரிச்சலை ஊட்டியது. அத்துடன் இவருடைய தலைமையை ஏற்கவும் மறுத்தனர். எனினும், பீலின் உத்தரவுப்படி அவர் கைது செய்யப் பட்டார். அரசாங்கத்தை அவதூறு செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். ஆனுல் பிரபுக்கள் சபை அத் தண்டனையை ரத்து செய்தது. பீல் படைக்கலச் சட்டம் (Arms Act) ஒன்றை இயற்றி அயர்லாந்தியர் அரசின் அனு மதியின்றிப் படைக்கலன்களை வைத்துக் கொள்வதைத் தடுத்தார்.

அயர்லாந்தில், வில்லியம் ஸ்மித் ஓ பிரியன், (William Smith O Brien), தாமஸ் டேவிஸ் (Thomas Davis) போன்றோர் 'இள அயர்லாந்து' (Young Ireland) என்ற ஒரு புரட்சிக் கழகத்தை ஆரம்பித்தனர். அவர்கள் ஓ கானல் என்பவருடைய அமைதி முறையைக் கண்டித்து வன்முறையைக் கடைப் பிடிப்பதின் அவசியத்தைப் பறைசாற்றினர். அத்துடன் ஜான் மிட்சல் (John Mitchell) என்பார். 'ஐக்கிய அயர்லாந்து' (United Ireland) என்ற புதிய புரட்சிக் கழகத்தையும் அமைத்தார். இதையறிந்த பிரதமர் பீலின் அரசாங்கம் மிட்சலையும், ஓ பிரியனையும் நாடு கடத்தியது. அதனுல் அயர்லாந்தில் புரட்சிக் கருத்துக் கழகங்களும் ஓய்ந்தன.

இவ்விதம் பீல் அயர்லாந்தில் அடக்குமுறைக் கொள்கைகளைப் பின்பற்றிய போதிலும், அந் நாட்டு அமைதியின்மைக்குரிய

காரணங்களைக் கண்டறிவதற்காக டெவன் கமிஷன் (Devon Commission) என்ற ஒரு குழுவை நியமித்தார். அக் குழு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. நிலக் குத்தகை முறையினால் தான் அயர்லாந்தில் அமைதியின்மை நிலவியதாக அவ் வறிக்கை கூறியது. ஆகவே பீல் அக் குழு கூறிய சில சிபார்சுகளைச் செயல்படுத்த எண்ணினார். அதற்காக ஒரு மசோதா பாராளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டது. ஆனால் அம் மசோதாவைப் பிரபுக்கள் சபை நிராகரித்தது.

அயர்லாந்தில் கத்தோலிக்கர்களைக் கவருவதற்காகவும், சமாதானப் படுத்த வேண்டியும் கத்தோலிக்க குருமார்கள் பயிற்சி பெற்றுவந்த மாய்னூத் கத்தோலிக்கக் கல்விக் கூடத்திற்கு (Catholic Seminary of Maynooth) அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகையை உயர்த்தினார். பெல்பாஸ்ட் (Belfast) கார்க் (Cork), கால்வே (Galway) போன்ற இடங்களில் கல்லூரிகள் ஆரம்பிக்கப் பணவுதவி செய்யப்பட்டது. ஆனால் அயர்லாந்தியர்கள் 'கடவுளில்லாக் கல்லூரிகள் (Godless Colleges) எனக் கூறி, அக் கல்லூரிகளுக்குச் செல்ல மறுத்தார்கள். அயர்லாந்து மக்களின் துயர்நிலைக் கேற்றாற்போல், 1845இலும் 1846இலும் உருளைக் கிழங்கு சாகுபடி தோல்வியடைந்தது. அதனால் அங்குக் கொடுமையான வறட்சிநிலை ஏற்பட்டது. ஆயிரக் கணக்கினர் பட்டினியால் இறந்தனர். வேறு வழியின்றிப் பலர் அமெரிக்காவுக்குக் குடியேறினர். ஆகவே 1845ஆம் ஆண்டில் 83,00,000 (எண்பத்து மூன்று லட்சமாக) இருந்த மக்கள் தொகை 1851ஆம் ஆண்டில் 66,00,000 (அறுபத்தாறு லட்சமாக)க் குறைந்துவிட்டது

சார்ட்டிஸ இயக்கம்

சார்ட்டிஸ இயக்கம் (Chartist Movement) பிரதமர் பீல் காலத்திலும் மீண்டும் தலை தூக்கியது. டேனியல் ஓ கானல் என்பவர் 3 மில்லியன் கையெழுத்துக்கள் நிரம்பிய பெரிய விண்ணப்பத்தைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறினார். அவ் விண்ணப்பத்தை ஏந்திய கூட்டம் வழியிலேயே தடுக்கப்பட்டது. ஆனால் விண்ணப்பத்தை மட்டும் ஒரு சிலரால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டது. அவ் விண்ணப்பத்தைப் பாராளுமன்றம் நிராகரித்ததால், பெரியதொரு வேலை நிறுத்தம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் பெரியதொரு புரட்சி ஏற்படப் போவதாகவும் சொல்லப் பட்டது. ஆகவே பிரதமர் பீல் அவ் வியக்கத்தை ஒடுக்க,

கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். 1500 பேர் கைது செய்யப்பட்டார்கள். 500 பேர் சிறையிலடைக்கப் பட்டனர். 79 பேர் நாடு கடத்தப்பட்டார்கள். பீலின் இத்தகைய கடும் நடவடிக்கையால் அவ் வியக்கம் மாய்ந்தது.

தானியச் சட்ட ஒழிப்பு

இங்கிலாந்தில் தானியச் சட்டங்களை ஒழிக்கப் போராட்டங்கள் நடத்தும் நோக்கத்தோடு 1839ஆம் ஆண்டில் தானியச் சட்ட எதிர்ப்பு சங்கம் ஒன்று (Anti-Corn Law League) நிறுவப்பட்டது. ரிச்சர்டு காப்டன் (Richard Cobden). ஜான் பிரைட் (John Bright) போன்றோரே அதைத் தோற்றுவித்தனர். தானியங்களின் விலை குறையாமல் தானியச் சட்டங்கள் பாதுகாத்ததால், நிலப் பிரபுக்கள் அதை ஆதரித்தனர். ஆனால், குறைந்த விலைக்குத் தானியங்களை வாங்க விரும்பிய ஏழை எளியவர்களும், நடுநிலை வகுப்பாரும் அச் சட்டங்களை ரத்து செய்யக் கோரினர். ஆகவே இவர்களின் கோரிக்கை நாளுக்குநாள் வலுத்துக் கொண்டே வந்தது. தானியச் சட்டங்களால் தானிய விலைகள் ஏறிக் கொண்டே சென்றதால், தானிய உற்பத்தி செய்வோரும் வேலையாட்களுக்கு அதிக கூலி கொடுக்க வேண்டியதாயிற்று. அதிக கூலியால் உற்பத்திவிலை கூடியது. ஆகவே அதிக விலையின் காரணமாக ஆங்கிலேய உற்பத்தியாளர்களால் வெளி நாட்டுச் சந்தைகளின் போட்டியில் கலந்துகொள்ள முடியவில்லை. 1840ஆம் ஆண்டில் நடைபெற்ற மிகவும் மோசமான வாணிபத்தால் உற்பத்தியாளர்களும் தானியச் சட்டங்களை ரத்து செய்யக் கோரினர். ரிச்சர்டு கோமகனின் ஆலோசனையின்படி அவர்கள் தானியச் சட்ட எதிர்ப்பு சங்கத்திற்குப் பெரும் அளவில் பணவுதவி செய்தனர்; 1843ஆம் ஆண்டில் அவர்கள் அச் சங்கத்திற்கு 500 பவுன்களை அளித்தனர். 1844ஆம் ஆண்டில் 80,000 லிருந்து 90,000 பவுன் வரை அளித்தனர். 1845ஆம் ஆண்டில் மான்செஸ்டரில் நடந்த கூட்டத்தில் இரண்டு மணி நேரத்திலேயே அவர்கள் 60,000 பவுன்களைக் கொடுத்தனர். 1842ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் லண்டன் மாநகரில் ஓர் ஊர்வலத்தை நடத்தினர். அப்பொழுது பிரதமர் சர் ராபர்ட் பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்யக் கோரும் அவர்களின் கோரிக்கைகளைக் கேட்க மறுத்து விட்டார். அதனால் அவர்கள் தெருத் தெருவாக 'தானியச் சட்டங்களை ரத்து செய்க. தனியுரிமை ஒழிக. வேலை கொடு. உணவு கொடு', என்று முழக்கமிட்டுச் சென்றனர். உற்பத்தியாளர்களுடன் விவசாயத் தொழிலாளிகளும், சிறு விவசாயிகளும் 1843ஆம் ஆண்டில் சேர்ந்து கொண்டனர்.

நிலப் பிரபுக்களும், அதிக வருமானம் பெறுபவர்களும் தான் தானியச் சட்டங்களை வரவேற்றனர். அவர்கள் தங்கள் வேலையாட்களைத், தானியச் சட்ட எதிர்ப்பு சங்கம் நடத்தும் கூட்டங்களுக்குப் போக முடியாமல் தடுத்தனர். ஆகவே, இக் கருத்து வேறுபாடு நாட்டில் ஒரு வர்க்கப் போராட்டமாக (Class Struggle) உருவெடுத்தது. நாட்டின் மூலை முடுக்குகளிலும் தானியச் சட்டங்களை எதிர்த்துப் பிரச்சாரங்கள் நடைபெற்றன. பெரும் பெருங் கூட்டங்கள் கூட்டப்பட்டன. 12 வாரங்களில் மட்டும் லண்டன் மாநகரில் 150 கூட்டங்கள் நடைபெற்றன. பாராளுமன்ற உறுப்பினர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். பாராளுமன்றத்திலும் இதைப் பற்றி விவாதங்கள் நடைபெற்றன.

இச் சமயத்தில் அயர்லாந்தில் உருளைக்கிழங்கு சாகுபடி தோல்வியடைந்தது. வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கு அயர்லாந்திற்குள் நுழையாவண்ணம் தானியச் சட்டங்கள் தடுத்தன. உருளைக் கிழங்கையே உணவாய்க் கொண்ட அயர்லாந்தியரை, தானியச் சட்டங்களை ரத்து செய்தாலன்றிக் காப்பாற்ற முடியாது என்று உணர்ந்த சர் ராபர்ட் பீல், 1845ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தானியச் சட்டத்தை ரத்து செய்யத் தமக்கு ஆதரவு தரும்படி தம் அமைச்சரவையைக் கேட்டுக் கொண்டார். ஆனால், அவரது அமைச்சரவை அவருடைய கோரிக்கைக்கு ஆதரவு அளிக்க மறுத்தது. நவம்பரில் ரஸ்ஸல் என்னும் விக்கு கட்சித் தலைவர் 'தானியச் சட்டத்தை ரத்து செய்வதே எமது கட்சியின் கொள்கை'யென அறிவித்தார். இதைக் கண்ட பீல் மீண்டும் அமைச்சரவையின் உதவியை நாடினார். ஆனால் மீண்டும் அமைச்சரவை அவரது கோரிக்கையை நிராகரிக்கவே, பீல் தமது பதவியை 1845ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ராஜிநாமா செய்தார். அதன் பின் ரஸ்ஸல் பிரபு (Lord Russel) அமைச்சரவையை அமைக்க முயன்று தோற்றதால், சர் ராபர்ட் பீலே மீண்டும் பிரதமரானார். தானியச் சட்டத்தை ரத்து செய்வதென்ற உறுதியுடன் பதவியேற்றார். 1846ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அதற்கான மசோதா ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ஜூன் மாதத்திற்குள் அம் மசோதா பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் நிறைவேறியது. ஆகவே பிரதமர் பீலின் முயற்சியால் இங்கிலாந்தில் 1846ஆம் ஆண்டில் தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

பீலின் நிதிநிலை அறிக்கைகள்

சர் ராபர்ட் பீல் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டங்கள் அவரது பொருளியல் நிபுணத்துவத்தைப் பெரிதும் புலப்படுத்து

வனவாக அமைந்தன. வாணிபம் வளர்ந்தாலொழிய நாட்டின் செல்வநிலை வளராதென உணர்ந்த அவர், வாணிபத்தை வளர்க்கக் கூடிய வகையில் பல சுங்க வரிகளை ரத்து செய்தார். 1842ஆம் ஆண்டில் தமது வரவு செலவு அறிக்கையில் (Budget) 400 பொருள்களின் மீதிருந்த சுங்க வரிகளைக் குறைத்தார். அதனால் உள் நாட்டுக் கைத்தொழில்கள் வெளிநாட்டுப் போட்டியினின்றும் காக்கப்பட்டு வளர்ந்தன. ஆனால் வரி குறைப்பால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு கட்ட வருமான வரியை விதித்தார். அதன் காரணமாக 1845ஆம் ஆண்டில் நாட்டின் செலவை விட வருமானம் அதிகரித்தது. இதைக் கண்ட பீல் மேலும் பல சுங்க வரிகளை ரத்து செய்தார். அத்துடன் ஏற்றுமதி வரிகள் அனைத்தும் நீக்கப்பட்டன. பல இறக்குமதி வரிகளும் நீக்கப்பட்டன. அதனால் நாட்டின் வாணிபம் வளர்ந்தது. இங்ஙனம் தடையில்லா வாணிபக் கொள்கையை (Principle of Free Trade) சர் ராபர்ட் பீல் கடைப்பிடித்தார். இக் கொள்கையின் மூலம் வாணிபம் வளருமென்றும், அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் தீருமென்றும், ஏழை எளிய மக்களால் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த முடியுமென்றும் பீல் நினைத்தார். அவரது நினைப்பு வீண் போகவில்லை.

அமெரிக்காவின் எல்லைப் பிரச்சினை

அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு வெகு நாட்களாக இருந்து வந்த எல்லைப் பிரச்சினை பிரதமர் பீல் காலத்தில் தீர்க்கப்பட்டது. 1783 ஆம் ஆண்டிலிருந்து மைனி (Maine) எல்லைப் பிரச்சினை இருந்து வந்தது. 1831 ஆம் ஆண்டில் இப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு (Arbitration) விட அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏற்றுக் கொண்டன. அதன் பின்பு அத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டன. ஆனால் 1842 ஆம் ஆண்டில் ஆஷ்பர்டன் உடன்படிக்கையால் (Ashburten Treaty) அப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் மற்றொரு எல்லைத் தகராறு இருந்து வந்தது. அத் தகராறும் பீலின் முயற்சியால் 1846ஆம் ஆண்டில் ஆர்கான் உடன்படிக்கையால் (OregonTreaty) தீர்க்கப்பட்டது.

சுரங்கச் சட்ட சீர்திருத்தம்

1842 ஆம் ஆண்டில் சுரங்கத் தொழிலாளர் நிலையை ஆராய பீல் ஒரு குழுவை நியமித்தார். பெண்களும், சிறுவர்களும் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர் என அக் குழு தமது அறிக்கையில் கூறியது. எனவே

1842ஆம் ஆண்டில் சுரங்கச் சட்டம் (Mines Act) ஒன்றை பீல் நிறைவேற்றினர், அதன்படி பெண்களும், சிறுவர்களும் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவது நிறுத்தப்பட்டது.

தொழிற்சாலைச் சட்ட சீர்திருத்தம்

1844ஆம் ஆண்டில் சர் ராபர்ட் பீல் தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) ஒன்றைக் கொணர்ந்தார். அதன்படி பெண்கள் வேலை செய்யும் நேரம் 12 மணியாகவும், சிறுவர்கள் வேலை நேரம் 6½ மணியாகவும் குறைக்கப்பட்டது. அத்துடன் சிறுவர்கள் ஒரு நாளைக்கு 3 மணி நேரமாவது கல்வி கற்க வேண்டுமென பீல் வற்புறுத்தினர். நகரங்களில் சுகாதார வசதிகளை ஆராய்ந்து அதற்காக சிபார்சுகளைச் செய்ய 1845ஆம் ஆண்டில் பீல் ஒரு குழுவையும் நியமித்தார்.

பீல் அமைச்சரவையின் வீழ்ச்சி

தானியச் சட்டங்களை ரத்து செய்ததால் பீலுக்குத் தம் கட்சியிலேயே எதிர்ப்பு ஏற்பட்டது. டிஸ்ரேலி போன்றோர் ‘கன்சர்வேடிவ் கட்சிக்குத் துரோகம் செய்தவர்களில் பீல் முதன்மையானவர்’ என்று அவரைத் தூற்றினர். அத்துடன் பாதுகாப்பாளர்கள் (Protectionists) என்ற ஓர் பிரிவை கன்சர் வேடிவ் கட்சியிலேயே டிஸ்ரேலி ஏற்படுத்தினர். தானியச் சட்டத்தை விரும்பியவர்கள் இவரைத் தங்கள் கருவியாகப் பயன் படுத்திக் கொண்டனர். 1846ஆம் ஆண்டில் அயர்லாந்தில் கொலையும் கொள்ளையும் தாண்டவமாடின. ஆகவே இத்தகைய அடக்கு முறைகளை ஒடுக்கி, அமைதியை நிலைநாட்ட அடக்கு முறைச் சட்டங்களை (Coercian Bill) பீல் கொண்டு வந்தார். விக்குகளோடும், அயர்லாந்தியரோடும் பாதுகாப்புவாதிகள் எனப் பட்ட கன்சர்வேடிவ் கட்சியினரும் சேர்ந்து, அச் சட்டங்களை எதிர்த்ததால் பாராளுமன்றத்தில் பீல் கொண்டு வந்த அடக்கு முறைச் சட்டங்கள் தோல்வியுற்றன. எனவே பீல் 1846ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் தேதி தம் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார். பின்னரும் பொதுமக்கள் சபையில் தமது அரசியல் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். 1850ஆம் ஆண்டில் அவர் உயிர் நீத்தார்.

ரஸ்ஸெல் பிரபுவின் அமைச்சரவை (1846—1852)

ஆருவது பெட்போர்டு கோமகனின் மூன்ருவது மகனுக 1792ஆம் ஆண்டு ரஸ்ஸெல் பிரபு பிறந்தார். வெஸ்மின்ஸ்டரிலும், எடின்பர்க்கிலும் கல்வி பயின்ருர். 1813ஆம் ஆண்டில்

ஒரு விக்கு கட்சி உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். 1828ஆம் ஆண்டில் சோதனைச் சட்டம், மாநகராட்சிச் சட்டங்களை ரத்து செய்யக் கோரும் மசோதாக்களைப் பாராளுமன்றத்திலே கொணர்ந்தார். 1834ஆம் ஆண்டில் அயர்லாந்துத் திருச்சபையைச் சீர்திருத்த, தம் ஆதரவை அளித்தார். மெல்போர்ன் அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சராகவும், பொதுமக்கள் சபையின் தலைவராகவும் பணியாற்றினர். 1835 ஆம் ஆண்டில் செய்த சில குற்றங்களுக்காகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன்பின் 1839ஆம் ஆண்டு வரை மெல்போர்ன் அமைச்சரவையில் குடியேற்ற நாடுகளின் அமைச்சராகப் பணியாற்றினர். இவர் தானியச் சட்டங்களை ரத்து செய்வதற்குத் தம் ஆதரவை அளித்தார். அத்துடன் தடையில்லா வாணிப முறையை ஆதரித்தார். சர் ராபர்ட்பீல் தம் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்த பிறகு முதன் முதலாக ரஸ்ஸெல் பிரபு (Lord Russell) பிரதமராக நியமிக்கப்பட்டார். 1846ஆம் ஆண்டிலிருந்து 1852 ஆம் ஆண்டுவரை பிரதமராக இவர் பணியாற்றினர். பின்னர் 1852ஆம் ஆண்டிலிருந்து 1853ஆம் ஆண்டு வரை அபர்டீன் அமைச்சரவையில் (Aberdeen Ministry) வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றினர். அப்பொழுது கிரிமியப் போரைப் (Crimean War) பெரிதும் ஆதரித்தார். 1855ஆம் ஆண்டில் வியன்னுவில் இங்கிலாந்தின் முழு அதிகாரம் பெற்ற தூதராகப் (Plenipotentiary) பணியாற்றினர். 1859ஆம் ஆண்டிலிருந்து 1865ஆம் ஆண்டு வரை பாமர்ஸ்டன் பிரபு (Lord Palmerston) அமைச்சரவையில் வெளிநாட்டு அமைச்சராகப் பணிபுரிந்தார். 1865ஆம் ஆண்டிலிருந்து 1866ஆம் ஆண்டுவரை மீண்டும் பிரதமராகப் பதவி வகித்தார். 1878ஆம் ஆண்டில் ரஸ்ஸெல் பிரபு மறைந்தார்.

சீர்திருத்தவாதி

ஜான் ரஸ்ஸெல் பல துறைகளில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்று உழைத்ததால் 'சீர்திருத்தவாதி ஜான்' (John the Reformer) என்ற சிறப்புப் பெயரெடுத்தார். அத்துடன் இங்கிலாந்தின் வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தையும் பெற்றுர். முதலில் அவருடைய முயற்சிகள் தோல்வியடைந்த போதிலும் 1832ஆம் ஆண்டில் அவர் கொணர்ந்த பாராளுமன்றச் சீர்திருத்த மசோதா வெற்றி கண்டு சட்டமாகியது. மீண்டும் பாராளுமன்றச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அவர் கருதினர். அதற்காக 1852, 1854ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாக்களை மீண்டும் அவர் கொண்டுவந்தார். ஆனல் கீழைச் சிக்கல் (The Eastern Question) காரணமாக அவர் தமது மசோதாக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். 1860ஆம்

ஆண்டில் மீண்டும் ஒரு சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால் அம் மசோதா தோல்வியடைந்தது. இருந்தும் அவர் பொறுமையிழக்கவில்லை. 1866ஆம் ஆண்டிலும் ஒரு சீர்திருத்த மசோதா கொண்டு வந்தார். ஆனால், அவரது முயற்சி மீண்டும் தோல்வி யடைந்தது. அதன்பின் அவர் அரசியலி னின்றும் ஓய்வு பெற்றார்.

ரஸ்ஸெல் அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கை

1846ஆம் ஆண்டில் ரஸ்ஸெல் அமைச்சரவை அமைக்கும் பொழுது, பாமர்ஸ்டன் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப் பட்டார். 1847ஆம் ஆண்டில் நடுநிலை நாடான சுவிட்சர் லாந்தில் பிராடஸ்டெண்டு காண்டன்களுக்கும், கத்தோலிக்க காண்டன்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது, ஆஸ்திரியா அதில் தலையிட விரும்பியது. ஆனால் பாமர்ஸ்டன் அதைத் தடுத்துவிட்டார். 1848ஆம் ஆண்டு புரட்சிகளின் ஆண்டாகவே கருதப்படுகின்றது. இவ்வாண்டில் பிரான்சில் ஒரு புரட்சி ஏற்பட்டு அதன் அரசரான லூயி பிலிப் அரியணையினின்று நீக்கப்பட்டார். அவருக்கு இங்கிலாந்து புகலிடமளித்தது. பிரான்சு ஒரு குடியரசு நாடாகவும் மாறியது. பிறகு வியன்னாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது. ஆஸ்திரியாவின் அரசராக விளங்கிய சான்சலர் மெட்டர்னிக் தம் பதவியை இழந்து, இங்கிலாந்திற்கு ஓடிவந்தார். புரட்சி ஹங்கேரியிலும் பரவியது. ஆஸ்திரியா பிடியினின்று ஹங்கேரியை விடுவிக்கவே இப் புரட்சி ஏற்பட்டது. இத்தாலியிலும் புரட்சி ஏற்பட்டு ஆஸ்திரியா பிடியினின்று வெனிஸ், லம்பார்டி போன்ற நகரங்கள் சுதந்திரமடைந்தன. கரிபால்டி, மாஜினி போன்ற இத்தாலிய சுதந்திர வீரர்கள் ரோம் நகரைக் கைப்பற்றி ரோம் குடியரசை நிறுவினர். ஜெர்மனியிலும் அரசருக்கெதிராக ஒரு புரட்சி ஏற்பட்டது. இத்தகைய மக்களின் புரட்சிகளை ரஸ்ஸெலினுடைய வெளிநாட்டு அமைச்சர் பாமர்ஸ்டன் வரவேற்றார். பாமர்ஸ்டனின் இத்தகைய கொள்கைக்கு மக்கள் வரவேற்பு இருந்தது. பாராளுமன்றமும் அவருடைய கொள்கை களை ஏற்றுக் கொண்டது.

ஆனால் 1849-51ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியப் புரட்சி கள் யாவும் ஒடுக்கப்பட்டன. மக்கள் தலைவர்களை அரசர்கள் நடத்திய விதத்தையும், அவர்களைக் கொன்று குவித்ததையும் பாமர்ஸ்டன் கண்டு குமுறினார். ஆனால் விக்டோரியா மகாராணி யார் முடியாட்சிகள் மீண்டும் புதுப்பிக்கப் பட்டதைக் கண்டு மகிழ்ந்தார். அதனால் பாமர்ஸ்டனுக்கும் அரசியாருக்கும் இங்கி

லாந்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பாமர்ஸ்டன் வெளி நாட்டுக் கொள்கையில் தம் விருப்பம்போலவே நடந்து வந்தார். இவைகளைக் கண்ட அரசியார் கோபமுற்றார். அதனால் 1850ஆம் ஆண்டில், தம்மைக் கலக்காமல் எந்தவொரு வெளிநாட்டுக் காரியங்களிலும் ஈடுபடக் கூடாதென்றும், வெளிநாட்டுக் கொள் கையில் என்ன செய்யப் போகின்றார் என்பதை முன் கூட்டியே தம்மிடம் தெரிவித்துவிட வேண்டுமென்றும் அரசியார் பாமர்ஸ் டனைக் கேட்டுக் கொண்டார். பாமர்ஸ்டனும் அவ்வாறே நடந்து கொள்வதாக வாக்களித்தார். ஆனால் அவர் நடந்து கொண்டதோ வேறுவிதமாக இருந்தது. 1850ஆம் ஆண்டில் ஹாய்னு என்னும் ஆஸ்திரிய தளகர்த்தர் இங்கிலாந்திற்கு வந்தார். ஹங்கேரியில் புரட்சி ஏற்பட்டபோது, இவர்தான் புரட்சியிலீடுபட்ட மக்களைக் கொன்று குவித்தவர். இவரை எதிர்த்து மக்கள் இங்கிலாந்தில் மூழக்கமிட்டனர். காவல் துறையினரின் தலையீட்டால் அவரது தலை தப்பியது. இந் நிகழ்ச்சியைக் கண்ட பாமர்ஸ்டன் உள்ளூர மகிழ்ந்தார். அடுத்த ஆண்டிலேயே ஹங்கேரியப் புரட்சித் தலைவர் கோசுத் (Kossuth) லண்டனுக்கு வந்தார். அப்பொழுது அவரைத் தம் இல்லத்திற்கு அழைத்து வரவேற்பளிக்க பாமர்ஸ்டன் விரும்பினார். இதையறிந்த ரஸ்ஸல் பிரபு அவரை அங்ஙனம் செய்யாமல் தடுத்தார்.

டான் பஸிபிகோ (Don Pacifico) என்ற சிறு வியாபாரியின் வீடு சில கிரேக்கர்களால் 1850ஆம் ஆண்டில் சூறையாடப் பட்டது. அதற்குரிய நஷ்ட ஈட்டை கிரேக்க அரசாங்கம் தர மறுத்ததால், அவர் பாமர்ஸ்டனிடம் முறையிட்டார். டான் பஸிபிகோ மால்டாவில் பிறந்தவராகையால் இங்கிலாந்தின் குடி மகனென்றும், அவரைக் காப்பாற்றுவது ஆங்கில அரசாங்கத்தின் கடமையென்றும் கூறி, 1850ஆம் ஆண்டில் பாமர்ஸ்டன் கிரேக்க அரசுக்கெதிராகக் கப்பற்படை ஒன்றை அனுப்பினார். அதனால் ஃபிரான்சு, ரஷ்யா போன்ற நாடுகள் வெகுண்டன. போர் ஏற்பட்டு விடுமோ எனப் பலரும் அஞ்சினர். பாமர்ஸ்டனின் இச் செயலுக்குப் பிரபுக்கள் சபையில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இருந்தும் தம் செயல் சரியானதே என்று பாமர்ஸ்டன் வாதாடினார். 1851ஆம் ஆண்டில் ஃபிரான்சில் லூயி நெப்போலியன் என்னும் தலைவர் அதிகாரத்தைக் கைப்பற்றித் தம்மை நாட்டின் பேரரசர் என அறிவித்தார். உடனே பாமர்ஸ்டன் நெப்போலியனின் இச் செயலை ஆதரிப்பதாக ஃபிரான்சு தூதரிடம் அறிவித்தார். அறிவிப் பதற்கு முன்பு பாமர்ஸ்டன் அரசியாரிடமோ அல்லது பிரதமர் ரஸ்ஸெலிடமோ கலந்தாலோசிக்கவில்லை. ஆகவே ரஸ்ஸெல் பிரபு பாமர்ஸ்டனை உடனே பதவியினின்று நீக்கி விட்டார்.

ரஸ்ஸெல் காலத்து இயற்றப்பட்ட முக்கிய சட்டங்கள்

ரஸ்ஸெல் பிரபு பதவியேற்ற ஓர் ஆண்டிலேயே தொழிலாளர்களின் நன்மையைக் கருதி ஒரு தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) 1847ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அதன்படி தொழிலாளர்களின் வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு நாளில் தொழிலாளிகள் 10 மணி நேரம் வேலை செய்தால் போதும் எனச் சட்டம் கூறியது. இம் மசோதாவை பீல்டன் என்பவர் பாராளுமன்றத்தில் கொண்டு வந்ததால், இது பீல்டனின் தொழிற்சாலைச் சட்டமெனக் கூறப்படுகிறது.

பிறகு 1848ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சாட்விக் என்பவரால் ஒரு பொது ஆரோக்கிய மசோதா கொண்டு வரப்பட்டது. அம் மசோதா சட்டமாவதற்கு ரஸ்ஸெல் பிரபு தம் முழு ஆதரவையளித்தார். அதனால் அம் மசோதா 1848ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டு சாட்விக்கின் பொது ஆரோக்கியச் சட்டம் (Public Health Act) எனக் கூறப்படுகிறது. பின்னர் 1850ஆம் ஆண்டில் கிரே பிரபுவால் ஓர் தொழிற்சாலை மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாகியது. அதன்படி தொழிலாளிகள் மேலும் பயனடைந்தனர்.

ரஸ்ஸெல் அமைச்சரவையின் வீழ்ச்சி

பாமர்ஸ்டன் பிரபு ரஸ்ஸெல் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டதால், அவ் வமைச்சரவையின் பலம் குறைந்தது. எதிர்க் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் முயற்சியினால் 1852ஆம் ஆண்டு ரஸ்ஸெல் பிரபுவின் அமைச்சரவை கவிழ்க்கப்பட்டது. அதன் பின் டெர்பி என்ற கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் அமைச்சரவை ஏற்படுத்தினார். ஆனால் அந்த அமைச்சரவை 1852ஆம் ஆண்டு இறுதி வரைதான் நீடித்தது. அதன் பின்னர் அபெர்டீன் என்ற விக்கு தலைவர் 1852ஆம் ஆண்டு இறுதியில் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவரின் அமைச்சரவையில் ஜான் ரஸ்ஸெல் பிரபு வெளிநாட்டு அமைச்சராகவும், பாமர்ஸ்டன் உள்நாட்டு அமைச்சராகவும் பணியாற்றினர். இவ் வமைச்சரவையும் 1855ஆம் ஆண்டில் பொது மக்கள் சபையின் நம்பிக்கையை இழந்ததால், அபெர்டீன் ராஜிநாமா செய்தார். பாமர்ஸ்டன் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

பாமர்ஸ்டனின் அமைச்சரவை

பாமர்ஸ்டன் 1784ஆம் ஆண்டில் பிறந்தார். 1807ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் உறுப்பினரானார். 1865ஆம்

ஆண்டில் தாம் இறக்கும் வரை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகவேயிருந்தார். கானிங் பிரபுவுக்குப் பிறகு இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் பாமர்ஸ்டன் சிறந்து விளங்கினர். இவர் இரண்டு நாட்டின் தலைவர்களிடமும் 10 பிரதமர்களுடனும் பணியாற்றியிருக்கிறர். அத்துடன் இங்கிலாந்தின் பிரதமராக இரண்டு முறையும் பதவி வகித்திருக்கிறர். தம்முடைய அரசியல் வாழ்க்கையை ஒரு டோரியாக ஆரம்பித்த இவர், பிறகு ஒரு டோரியாகவோ அல்லது ஒரு விக்காகவோ இல்லாமல் பணியாற்றினர்.

பாமர்ஸ்டன் தம்முடைய தளரா உழைப்பாலும். வெளிநாட்டுக் கொள்கையில் திறமையும் மேன்மையும் படைத்ததாலும் ஆங்கில அரசியலில் ஓர் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தார். மக்களிடையே இவர் பெரும் புகழைப் பெற்றிருந்தார். நாட்டிற்கும் நாட்டின் வாணிபத்திற்கும் பாதுகாப்பு கொடுப்பதே இவரின் நோக்கமாயிருந்தது. சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இங்கிலாந்தை ஒரு (நடுவராக) ஆக்க வேண்டுமென்ற ஆசை இவரிடம் இருந்தது. கொடுங்கோலாட்சியையும், பிற்போக்குவாதிகளையும் இவர் வெறுத்தார். வெளிநாடுகளில் ஏற்பட்ட உரிமைப் போராட்டங்களையும், சுதந்திர இயக்கங்களையும் ஊக்குவிக்க முயற்சி செய்தார். இவருடைய எண்ணங்கள் முற்போக்கானவைகளாக இருந்த போதிலும், இவருடைய செயல்கள் நல்லவைகளாக அமையவில்லை. வெளிநாட்டு அமைச்சருக்குரிய பொறுமையும் சாமர்த்தியமும் இவரிடம் காணப்படவில்லை. அதனுல் இவர் வெளி நாட்டவரால் வெறுக்கப்பட்டார். ‘பிசாசுக்கு (Davil) ஒரு மகன் ‘இருப்பானேயாகில் அவனுடைய பெயர் நிச்சயமாக பாமர்ஸ்டனுகத் தான் இருக்கும்’ என்ற எண்ணத்தை பாமர்ஸ்டனைப் பற்றி வெளி நாட்டவர் கொண்டிருந்தனர்.

‘நமக்கிருப்பது போலவே, அவரிடம் பல தீய குணங்கள் இருந்த போதிலும், பல பெரும் மதிப்பு வாய்ந்த அருங்குணங்களும் இருந்தன. ஆனுல் வெளி நாட்டுக் கொள்கையில் அவரால் ஏற்பட்ட கடுமையான தொல்லைகளைக் கடவுள் தான் அறிவார். என்று பாமர்ஸ்டனைப் பற்றி விக்டோரியா மகாராணியாரே கூறியுள்ளார். 1830ஆம் ஆண்டிலிருந்து அவர் விக்குகளிடம் தொடர்பு கொண்டிருந்த போதிலும், உள்ளத்தால் அவர் ஒரு விக்காகவோ. டோரியாகவோ அல்லது பீலைப் பின்பற்றுபவராகவோ (Peelite) இல்லை. ஆனுல் அவர் கானிங் பிரபுவின் கொள்கைகளைப் பின்பற்றுபவராகவே இருந்தார். பாமர்ஸ்டன் ஒரு சுதந்திர விரும்பியாய் இருந்தார். அதனுல் தான் அவர்

வெளிநாட்டுக் கொள்கையில் இராணியோடும், உள்நாட்டுக் கொள்கையில் அமைச்சர்களோடும் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தார்.

பாமர்ஸ்டனின் முதல் அமைச்சரவை (1855-58)

அபெர்டீன் பிரபுவின் அமைச்சரவையால் கிரிமியப் போரைச் சரிவர நடத்த முடியாமற் போகவே, பாமர்ஸ்டன் ஒருவரே கிரிமியப் போரை வெற்றியுடன் முடிக்கக்கூடியவர் என்று ஆங்கில மக்கள் கருதினர். அதனால் பொதுமக்கள் சபையில் அபெர்டீன் அமைச்சரவை நம்பிக்கையை இழந்தது. ஆகவே அவ் வமைச்சரவை கலைக்கப்பட்டு பாமர்ஸ்டன் அமைச்சரவை 1855ஆம் ஆண்டில் பதவியேற்றது. மக்களின் எண்ணம் போலவே பாமர்ஸடன் கிரிமியப் போரை வெற்றியுடன் முடித்தார். கிரிமியப் போருக்குப் பின் பத்து ஆண்டுகள் வரை இங்கிலாந்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் நிகழவில்லை. ஆனால் வெளிநாடுகளில் பல முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தேறின. இக் காலத்தில் தான் இத்தாலியானது ஆஸ்திரியாவோடு போரிட்டுத் தன் சுதந்திரத்தைப் பெற்றது. பிரஷ்யாவும் ஆஸ்திரியாவோடு போரிட்டுத் தன் தலைமையை நிலைநாட்டிக் கொண்டது. உள் நாட்டுப் போரின் மூலம் அமெரிக்கா தன் ஐக்கியத்தைக் காப்பாற்றிக் கொண்டது. இந்தியாவில் 1857ஆம் ஆண்டு சிப்பாய் கலகம் எனப்படும் இந்தியரின் முதல் சுதந்திரப் போர் ஏற்பட்டது. ஆனால் இந்தியரின் ஒற்றுமையின்மையாலும், ஆங்கில அரசாங்கத்தின் கடுமையான நடவடிக்கையாலும் அக் கலகம் ஒடுக்கப்பட்டது. நெப்போலியன் பாரிஸின் தெரு ஒன்றில் போய்க் கொண்டிருந்த போது, அவரது வண்டியின் மீது ஆர்ஸினி என்பவன் குண்டு ஒன்றை வீசினான். அவ் விபத்திலிருந்து நெப்போலியன் தப்பித்துக் கொண்டார். ஆனால் ஆர்ஸினி என்பவன் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது, இச் சதித் திட்டம் இங்கிலாந்தில் உருவானதென்றும், அக் குண்டும் இங்கிலாந்திலேயே செய்யப்பட்டதென்றும் கூறினான். அதனால் ஃபிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சர் இங்கிலாந்தைக் குறை கூறினார். அவர் இங்கிலாந்தைக் கேவலமாகக் குறை கூறிப் பேசியதற்காக ஆங்கில மக்கள் ஃபிரான்சை வெறுத்தனர். ஆனால், பாமர்ஸ்டன் அரசாங்கமோ ஆர்ஸினி போன்ற கொலைச் சதிகாரர்கள் இங்கிலாந்திற்குள் புகுவதைத் தடுக்கவும் அதே சமயத்தில் நெப்போலியனைச் சமாதானப் படுத்தவேண்டியும் 1858ஆம் ஆண்டில் கொலை சூழ்ச்சி மசோதா (Conspiracy to Murder Bill) ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. இம் மசோதாவிற்கு எதிராகப் பொதுமக்கள் சபை ஒரு தீர்மானத்தை

நிறைவேற்றியது. அதனால் பாமர்ஸ்டன் அமைச்சரவை பதவியை ராஜிநாமா செய்தது.

பாமர்ஸ்டனின் இரண்டாவது அமைச்சரவை (1859-65)

பாமர்ஸ்டன் பதவியிழந்த பிறகு, டெர்பி பிரபுவின் தலைமையில் ஓர் அமைச்சரவை நிறுவப்பட்டது. இவ் வமைச்சரவை ஓராண்டு வரை ஆட்சி செய்தது. இக்காலத்தில்தான் பாராளுமன்றத்தில் யூதர்களுக்கு இடமளிக்கும் மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டி, இந்திய அரசாங்கத்தை ஆங்கிலப் பாராளுமன்றத்தின் நேர்முகக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்குரிய 'இந்திய மசோதா' ஒன்றும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1859ஆம் ஆண்டில் டெர்பி பிரபு பதவியிழக்கவே, பாமர்ஸ்டன் மீண்டும் பிரதமராக்கப்பட்டார். அவரின் அமைச்சரவையில் கிளாட்ஸ்டன் (Glaestone) கருவூலத் தலைவராகவும், ஜான் ரஸ்ஸெல் பிரபு வெளிநாட்டு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். திறமை மிக்க இம் மூவர் அடங்கிய அமைச்சரவை 1865ஆம் ஆண்டு வரை சிறப்பாக ஆட்சி செய்தது.

இத்தாலிய ஐக்கியம்

பாமர்ஸ்டன் இங்கிலாந்தின் பிரதமராயிருந்த காலத்தில்தான் இத்தாலியில் ஐக்கிய இயக்கம் உச்ச நிலையடைந்தது. அவ் வியக்கத்திற்கு பாமர்ஸ்டன் தம் முழு ஆதரவை அளித்தார். மாஜினி, சார்டினியா முதலமைச்சர் கெவூர் கரிபால்டி போன்றோர் இத்தாலியில் சுதந்திரத்தை நிலைநாட்டப் பெரும் போராட்டம் நடத்தினர். சார்டினிய முதலமைச்சர் கெவூர் ஃபிரெஞ்சு அரசர் மூன்றும் நெப்போலியனின் உதவி பெற்று 1859ஆம் ஆண்டில் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தார். ஆனால் ஆஸ்திரியா ஃபிரான்சோடு உடன்படிக்கை செய்து கொண்டதால், இத்தாலியை ஐக்கியமாக்கும் கெவூரின் எண்ணம் நிறைவேறவில்லை. ஆகவே, இத்தாலிய சுதந்திரப் போர் சிறிது காலம் ஓய்ந்தது. பிறகு திடீரென்று கரிபால்டி சிவப்பு உடையணிந்த தம் வீரர்களுடன் சென்று, சிசிலித் தீவை நேப்பிள்ஸ் அரசரிடமிருந்து கைப்பற்றினார். அதன்பின் அவர் நேப்பிள்ஸ் நாட்டின் மீதும் படையெடுத்து அதையும் கைப்பற்றினார். ஆஸ்திரியாவை எதிர்த்து இத்தாலியில் நடந்த கலகங்களுக்கு கெவூர் தலைமை தாங்கினார். ஆகவே, ஆஸ்திரியா இத்தாலியினின்றும் பிரிந்தது. போப்பாண்டவருக்குரிய நாடுகளும் விடுதலையடைந்தன. இந் நாடுகளெல்லாம் சேர்ந்து சார்டினிய அரசர் விக்டர் எமானுவேல் என்பவரை

அரசராக ஏற்றுக் கொண்டன. 1860ஆம் ஆண்டில் ரோம், வெனிஸ் தவிர ஏனைய நாடுகளெல்லாம் ஐக்கியமடைந்தன. ஐக்கியமடைந்த இத்தாலியை பாமர்ஸ்டன் அங்கீகரித்தார்.

இரண்டாவது சீனப் போர்

பாமர்ஸ்டன் பிரதமராக இருந்த பொழுது 1856ஆம் ஆண்டில் சீனாவின் மீது இரண்டாவது முறையாக நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் 1842ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை சீனா மீறியதேயாகும். ஆரோ என்ற கப்பல் 1855இல் ஓராண்டிற்கு பிரிட்டிஷ் கப்பலாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 1856ஆம் ஆண்டில் கொள்ளையடித்த குற்றத்திற்காக அக் கப்பலை சீனர்கள் கைப்பற்றி அதிலிருந்த சில ஆங்கிலேயரைக் கைது செய்தனர். ஓராண்டு கழிந்தும் அக் கப்பலில் பிரிட்டிஷ் கொடிதான் பறந்துகொண்டிருந்தது. ஹாங்காங் துறைமுக அதிகாரியாய் இருந்த சர் ஜான் பௌரிஸ். கைது செய்யப்பட்ட ஆங்கிலேயரை விடுதலை செய்யும் படியும், கைது செய்ததற்காக மன்னிப்பு கேட்கும் படியும் கான்டன் நகர் கமிஷனருக்கு உத்தரவிட்டார். அவர் ஆரோ கப்பல் ஆங்கிலேயரது அன்று என்று நிரூபித்த பின்னர் ஆங்கிலேயரை விடுதலை செய்தார். அத்துடன் 1842ஆம் ஆண்டில் ஏற்பட்ட நான்கிங் உடன்படிக்கையை மீறி, ஆங்கில வியாபாரக் கப்பல்களை ஹாங்காங் துறைமுகத்தில் நுழையா வண்ணம் தடுத்தார். ஆகவே, பௌரிஸ் கான்டன் நகர் மீது படையெடுத்தார். கான்டன் நகர் கைப்பற்றப்பட்டது. அதன் கமிஷனரும் கைது செய்யப்பட்டார். பின்னர் ஆங்கிலப் படைகள் பீக்கிங்கை நோக்கி முன்னேறின. இதைக் கண்ட சீனர்கள் சமாதானத்திற்கு இணங்கினர். 1861ஆம் ஆண்டில் டியன்ட்சின் உடன்படிக்கை (Tientsin Treaty) செய்து கொள்ளப்பட்டதால் இரண்டாவது சீனப் போர் முடிவடைந்தது. அதனால் இங்கிலாந்தின் வியாபாரச் சலுகைகள் அங்கு அதிகரித்தன. பாமர்ஸ்டன் பௌரிங்கின் செயலைப் பாராட்டினார். ஆனால் பாராளுமன்றத்தில் பௌரிங்கின் செயல் சரியன்று என்றும், ஆரோ கப்பல் இங்கிலாந்தின் கப்பல் அன்று என்றும் பலர் குற்றம் சாட்டினர். அத்துடன் பௌரிங்கைக் கண்டித்துப் பொதுமக்கள் சபையில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதனால் பாமர்ஸ்டன் பொதுமக்கள் சபையைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தும் படி அரசியாரை வேண்டிக்கொண்டார். பொதுத் தேர்தலில் பாமர்ஸ்டன் ஆதரவாளர்கள் பெரும் வெற்றியடைந்தனர். பின்னர் டியன்ட்சின் உடன்படிக்கையை சீனா அமுல் நடத்த காலந்தாழ்த்தியதால் ஆங்கிலப் படை ஃபிரெஞ்சுப் படைகளோடு

சேர்ந்து கொண்டு சீனவைத் தாக்கின. அதனல் 1860ஆம் ஆண்டில் சீனர்கள் ஆங்கிலேயரோடு பீக்கிங் உடன்படிக்கை (Treaty of Peking) செய்து கொண்டு டியன்ட்சின் உடன் படிக்கையை அமுல் நடத்த ஒப்புக் கொண்டனர்.

அமெரிக்க உள்நாட்டுப் போர்

1861 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அமெரிக்காவின் தென் பகுதியில் வாழ்ந்தவர் வட பகுதியினரோடு சேர்ந்து வாழமுடியாதெனக் கூறி அமெரிக்க ஐக்கிய நாட்டினின்றும் பிரிந்து தனித்து வாழ விரும்பினர். அப் பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனதிபதியாயிருந்த ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஐக்கியத்தைக் காக்க கங்கணம் பூண்டார். பிரிவினை விரும்பிய தெற்குப் பகுதியினரை எதிர்த்து அவர் போர் செய்தார். கெட்டிஸ்பர்க் போர்க்களத்தில் இறந்தவர் களைச் சவ அடக்கம் செய்யும்போது, அவ் வீரர்களைப் பாராட்டிப் பேசும்போது ‘மக்களுக்காக மக்களால் ஆளப்படும் மக்களுடைய அரசாங்கமே எமது குறிக்கோள்’ எனப் புகன்ருர். இதை ஆங்கிலத் தாராளவாதிகள் வரவேற்றனர். அத்துடன் ஜனநாய கத்தைக் காக்கவும், அடிமை முறையை ஒழிக்கவும் போரிட்ட வட பகுதியினரை ஆதரித்தனர். ஆனல் பாமர்ஸ்டன் அரசாங்கம் இப் பிரச்சினையில் நடுநிலை வகித்தது. அலபமோ என்ற போர்க் கப்பல் அமெரிக்கத் தென் பகுதியினருக்காக இங்கிலாந்தின் லிவர்ப்பூல் (Liverpool) துறைமுகத்தில் கட்டப்பட்டது. அதை அமெரிக்காவின் தென் பகுதியினருக்குக் கொடுப்பது இங்கி லாந்தின் நடுநிலையாகாதென வடபகுதியினர் கூறினர். இருந்த போதிலும் அக் கப்பல் கட்டப்பட்டு தென்பகுதியினருக்குக் கொடுக்கப்பட்டது. அக் கப்பல் வடபகுதியினரின் பல வியாபாரக் கப்பல்களை நாசம் செய்தது. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நின்றபின், அமெரிக்கர்கள் இங்கிலாந்தை அக் கப்பலால் விளைந்த நாசத்திற்கு நஷ்டஈடு கொடுக்கும்படி கேட்டனர். இங்கிலாந்தும் அதற்காகப் பத்து ஆண்டுகள் கழித்து நஷ்ட ஈட்டுத் தொகை யைக் கொடுத்தது. அமெரிக்காவின் உள்நாட்டுப் போரில் நடுநிலை வகிப்பதாகக் கூறிய பாமர்ஸ்டன் அரசாங்கம் போர்க் கப்பலைக் கட்டி அமெரிக்காவின் தென் பகுதியினருக்குக் கொடுத்தது விந்தைதான்.

பாமர்ஸ்டனின் உள்நாட்டுக் கொள்கை

பாமர்ஸ்டன் வெளிநாட்டுக் கொள்கையில் கொண்டிருந்த பரந்த மனப்பான்மையை உள்நாட்டுக் கொள்கையில் கொண்டி ருக்கவில்லை. இவர் பாராளுமன்றச் சீர்திருத்தங்களை வெறுத்தார்.

1832ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தச் சட்டமே நாட்டிற்குப் போதுமானதென்று கூறிவந்தார். வாக்குரிமையை மேலும் பல சாராருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ரஸ்ஸெல் பிரபுவின் கொள்கையை எதிர்த்தார். கிளாட்ஸ்டனின் சில கொள்கைகளையும் இவர் எதிர்த்தார். குடியேற்ற நாடுகளைப் பற்றியும் பாமர்ஸ்டன் அதிக அக்கறை காட்டவில்லை. 1861ஆம் ஆண்டில் அரசியாரின் கணவர் ஆல்பர்ட் இறந்தவுடன் இவர் 1865ஆம் ஆண்டு வரை அரசியாருக்கு உறுதுணையாய் இருந்தார். இவர் 'நமக்கு உலகில் சாசுவதமான நண்பர்களும் கிடையாது, நிலையான எதிரிகளும் கிடையாது' எனக் கூறி வெளி நாட்டுக் கொள்கையில் முக்கியமாகத் தலையிடாக் கொள்கையே (Isolationism) பின்பற்றினார். இக் கொள்கையின் படியே பாமர்ஸ்டன் செயல்பட்டார். இவர் தம்முடைய திறமையாலும், அறிவாற்றலாலும், கொள்கைப் பிடிப்பாலும், உழைப்பாலும், ஆங்கில மக்களிடையே பெரும் புகழடைந்தார். 1865ஆம் ஆண்டு பிரதமராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே இவ் வுலகை விட்டுப் பிரிந்தார்.

கிளாட்ஸ்டனின் அமைச்சரவை

புகழ்பெற்ற பாமர்ஸ்டன் பிரபுவின் மரணத்திற்குப் பின், இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் ரஸ்ஸெல் பிரபு ஆவார். அவரது ஆட்சி 1865ஆம் ஆண்டிலிருந்து 1866 ஆம் ஆண்டு வரை ஓராண்டுதான் நீடித்தது. அதன் பின்னர் 1866ஆம் ஆண்டிலிருந்து 1868ஆம் ஆண்டு வரை டெர்பியின் அமைச்சரவை இங்கிலாந்தை ஆண்டது. 1868ஆம் ஆண்டில் டெர்பி பிரபு பிரதமர் பதவியினின்று ஓய்வு பெற்றபோது டிஸ்ரேலி பிரபு பிரதமரானார். ஆனால், ஒரு சில மாதங்கள் மட்டுமே டிஸ்ரேலி பிரபு பிரதமராகப் பணியாற்ற முடிந்தது. ஏனெனில் கிளாட்ஸ்டன் அரசியலரங்கில் டிஸ்ரேலிக்குப் போட்டியாகத் தலையெடுத்தார். 1868ஆம் ஆண்டிலேயே கிளாட்ஸ்டன் இங்கிலாந்தின் பிரதமராகவும் நியமிக்கப்பட்டார்.

1809ஆம் ஆண்டு லிவர்ப்பூலில் பிறந்த கிளாட்ஸ்டன் ஈட்டன், ஆக்ஸ்போர்டு போன்ற பல்கலைக் கழகங்களில் படித்தார். சர் ராபர்ட் பீலைப் போலவே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சிறந்து விளங்கினார். நியூகாசல் கோமகனால் நியமிக்கப்பட்ட உறுப்பினராக கிளாட்ஸ்டன் பாராளுமன்றத்தில் நுழைந்தார். 1832ஆம் ஆண்டிலிருந்து இவர் சர் ராபர்ட் பீலைப் பின்பற்றி

வந்தார். சர் ராபர்ட்பீல் இறக்கும் வரை அவரது கொள்கையைப் பின்பற்றுபவராகவே கிளாட்ஸ்டன் விளங்கினர். அதன் பிறகு இவர் சிறிது சிறிதாகத் தாராளக் கொள்கையுடையவராக (Liberal) மாறினர். பின்னர் கிளாட்ஸ்டன் 1846ஆம் ஆண்டில் தாராளக் கொள்கையுடைய 'லிபரல்' கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றர்.

ஆரம்பத்தில் கிளாட்ஸ்டன் கன்சர்வேடிவ் கட்சியை ஆதரித்தார். அக் கட்சியின் தலைவரான பீலின் நன்மதிப்பைப் பெற்றதால் 1841ஆம் ஆண்டில் அவரால் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் கிளாட்ஸ்டனுல் ஓர் இடத்தைப் பெற முடிந்தது. பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்ததால் கன்சர்வேடிவ் கட்சியில் பிளவு ஏற்பட்டது. டிஸ்ரேலி போன்ற கன்சர்வேடிவ் கட்சியினர் பீலை எதிர்த்துப் பிரிந்தனர். கிளாட்ஸ்டன் பீலை ஆதரித்தார். பீலின் கட்சி தாராளக் கொள்கையிரை (Liberals) ஆதரித்தது. 1852ஆம் ஆண்டில் அபெர்டீன் என்ற விக்கு கட்சித் தலைவரின் தலைமையில் பீலைட்டுகளும், தாராளக் கொள்கையினரும் ஒன்று கூடி ஓர் அமைச்சரவையை அமைத்தனர். அதில் கிளாட்ஸ்டன் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1853ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் தமது வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அத் திட்டம் பெரும் புகழ் பெற்றது. அதனுல் அடுத்துவந்த பாமர்ஸ்டன். ரஸ்ஸெல் ஆகியோரின் அமைச்சரவைகளிலும் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார். தாராளக் கொள்கையுடைய ரஸ்ஸெல் அமைச்சரவை பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவை 1866ஆம் ஆண்டில் கொண்டுவந்ததால் வீழ்ச்சியுற்றது. அதன்பின்னர் கன்சர்வேடிவ் கட்சி டெர்பி பிரபுவின் தலைமையில் அமைச்சரவையை அமைத்தது. 1868ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் தோற்றனர். தாராளக் கொள்கையினர் வெற்றி பெற்றனர். அதன் தலைவரான கிளாட்ஸ்டன் அப்பொழுதுதான் தன் முதல் அமைச்சரவையை அமைத்தார்.

இங்கிலாந்தின் பிரதமராக கிளாட்ஸ்டன் நான்கு முறை பணியாற்றினர். இவரது முதல் அமைச்சரவை 1868இலிருந்து 1874ஆம் ஆண்டு வரையிலும், இரண்டாவது அமைச்சரவை 1880இலிருந்து 1885 ஆம் ஆண்டு வரையிலும், மூன்றுவது அமைச்சரவை 1886ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையிலும், நான்காவது அமைச்சரவை 1892 இலிருந்து 1894ஆம் ஆண்டு வரையிலும் இங்கிலாந்தில் ஆட்சி செய்தது.

முதல் அமைச்சரவை

இங்கிலாந்தின் வரலாற்றில் இரண்டாவது சீர்திருத்த சகாப்தம் (Second Era of Reform) என்று கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவையின் காலம் அழைக்கப்படுகின்றது. ஏனெனில் கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவையில் தாராளக் கொள்கையுடையோர் பலர் இடம் பெற்றிருந்ததால் நாட்டில பல்வகைச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. கார்டுவெல் (Cardwell) என்னும் திறமை மிக்க போர் அமைச்சர் பீல் கட்சியைச் சார்ந்தவர். ராபர்ட் லவே (Robert Lowe) என்ற கருவூலத் தலைவர் விக்கு கட்சியைச் சார்ந்தவர். ஜான் பிரைட் (John Bright) என்னும் வாணிபக் குழுத் தலைவர் தீவிர சீர்திருத்தவாதிகளுள் ஒருவர். கிளாரண்டன் (Lord Clarenden) எனும் பிரபுவும் தாராளக் கொள்கையுடையவரே. இவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து லிபரல் அல்லது தாராளக் கட்சியை உருவாக்கினுர்.

கிளாட்ஸ்டன் தன்னுடைய முதல் அமைச்சரவையை அமைத்தவுடனேயே அயர்லாந்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டார். ஏனெனில் அயர்லாந்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதே தமது குறிக்கோளாகும் என்று கூறிக் கொண்டுதான் பிரதமர் பதவியேற்றுர். அயர்லாந்தை உபாஸ் (Upas) என்ற நச்சுமரத்துக்கு ஒப்பிட்டு மத நிறுவனம், கல்வி முறை, நிலவுடைமை ஆகிய மூன்றுமே அம் மரத்தின் கிளைகளாகுமென்றும், அவற்றை வெட்டி வீழ்த்துவதே தமது கடமையென்றும் கூறி வந்தார். ஆகவே, முதலில் ஐரிஷ் மத அமைப்பை மாற்றியமைக்க முனைந்தார். அயர்லாந்திலிருந்து ஆங்கிலிக்கத் திருச் சபை மட்டுமே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சபையாக விளங்கியது. அச் சபையில் சேராதார் டைத் என்ற வரியை அத் திருச்சபைக்குச் செலுத்த வற்புறுத்தப்பட்டனர். அயர்லாந்தின் மக்கள் தொகையில் ஐந்தில் நான்கு பங்கினர் கத்தோலிக்கர்கள். ஆனுல் சிறுபான்மையினரான ஆங்கிலிக்க பிராட்டஸ்டெண்டுகள் தான் பல உரிமைகளை அனுபவித்து வந்தனர். இதைக் கண்ட பெரும்பான்மையோரான கத்தோலிக்கர் வெகுண்டெழுந்தனர். அதனுல் கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம் ஒன்று ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. அதன்படி அவர்கள் டைத் வரி செலுத்துவதிலிருந்து தான் விடுவிக்கப்பட்டனர். அச் சட்டம் ஆங்கிலிக்கத் திருச்சபையின் உரிமைகளைக் கட்டுப்படுத்தவில்லை. ஆங்கிலிக்கத் திருச்சபை ஆங்கிலேயரின் ஆதிக்கச் சின்னமாகத்தான் அயர்லாந்தினருக்குப் பட்டது. அயர்லாந்தியரின் இக் குறையைப் போக்க கிளாட்ஸ்டன் 1869ஆம் ஆண்டில் ஐரிஷ் திருச் சபை

மசோதா (Irish Church Bill) ஒன்றைப் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றினார். அச் சட்டம் அயர்லாந்திலிருந்த ஆங்கிலிக்கத் திருச் சபையின் உரிமைகளைப் பறித்துக் கொண்டது. ஆங்கில அரசாங்கத்திற்கும், ஐரிஷ் மத நிலையத்திற்கு மிருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஐரிஷ் திருச் சபையானது பிரிட்டிஷ் உதவியின்றித் தன்னைத் தானே நிர்வகித்துக் கொள்ள வேண்டுமென்றும், நிர்வாக சபை உறுப்பினர்களை அது தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. அத்துடன் ஐரிஷ் மத நிலையப் பிரபுக்கள் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இடம் பெறும் உரிமையை இழந்தனர். அதன் பின்னர் அச் சபையின் நிதி நிலையைக் குலைக்கவும் கிளாட்ஸ்டன் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதன்படி அயர்லாந்து மக்களைச் சுரண்டி அச் சபை சேர்த்து வைத்திருந்த பெருஞ் செல்வத்தை அரசாங்கம் கைப்பற்றியது. அச் செல்வத்தை கிளாட்ஸ்டன் அயர்லாந்து மக்களின் துயர் துடைக்கப் பயன் படுத்தினார். இங்ஙனம் அயர்லாந்து மக்களை ஆட்டிப் படைத்த ஆங்கிலிக்கத் திருச்சபையின் உரிமையை கிளாட்ஸ்டன் பறித்த தால் அயர்லாந்தியர் கிளாட்ஸ்டனைப் போற்றினர், ஆங்கிலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், பொது நோக்கோடு தான் கிளாட்ஸ்டன் இப் பிரச்சினையில் செயல் பட்டார்.

அயர்லாந்தின் மதப் பிரச்சினையைத் தீர்த்த கிளாட்ஸ்டன் அடுத்து நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டார். அயர் லாந்து விவசாயத்தை நம்பி வாழும் ஒரு நாடாகும். அங்கு வாழும் மக்கள் அனைவரும் விவசாயத்தில் ஈடுபட்டனர். தொழில்கள் அங்கு வளரவேயில்லை. அதனால் விவசாயத்தைத் தவிர வேறு ஊதியம் அம் மக்களுக்குக் கிடையாது, இத்தகைய அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நிலச் சொந்தக்காரர்கள் விவசாயிகளைப் பல வகையிலும் சுரண்டித் துன்புறுத்தி வந்தனர். அவர்கள் நினைத்த போது உழவர்களை நிலத்திலிருந்து நீக்கினர். நிலத்தில் அவர்கள் கட்டிய வீடுகளையும் கொடுக்க மறுத்தனர். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் அம் முதலாளிகள் முன் வரவில்லை. அயர்லாந்து விவசாயிகளை இத்தகைய கொடுமை களிலிருந்து காப்பாற்றத்தான் கிளாட்ஸ்டன் 1870ஆம் ஆண்டில் நிலச்சட்டம் (Land Act) ஒன்றை இயற்றினார். காரணமின்றி முதலாளி உழவனை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாதென்றும், உழவன் வெளியேற்றப்பட்டால் அவனுக்குரிய நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டுமென்றும் அச் சட்டம் கூறியது. உழவர் களுக்கு நீதி வழங்கவும், சரியான நஷ்ட ஈட்டைத் தீர்மானிக்கவும்

சிறப்பு நீதிமன்றங்கள் அங்கு நிறுவப்பட்டன. அதனால் அயர்லாந்தில் உழவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

அயர்லாந்தின் இரண்டு பிரச்சினைகளை வெற்றியுடன் சமாளித்த கிளாட்ஸ்டன், மூன்றாவது பிரச்சினையாகிய கல்விப் பிரச்சினையை நோக்கினார். அயர்லாந்தில் பிராட்டஸ்டெண்டுகளின் கல்லூரிகள் கத்தோலிக்கர்களைக் கல்வி கற்க அனுமதிக்கவில்லை. கத்தோலிக்கர்களுக்கென்று தனியாக அரசாங்கக் கல்லூரியும் அங்கு இல்லை. ஆனால் அவர்களுக்கென்று தனியார் ஒருவரால் நடத்தப்படும் கல்லூரி மட்டும்தான் அங்கு இருந்தது. ஆகவே, கத்தோலிக்கர்களின் குறைகளைப் போக்க கிளாட்ஸ்டன் 1873ஆம் ஆண்டில் ஐரிஷ் பல்கலைக்கழக மசோதா (Irish University Bill) ஒன்றைக் கொண்டுவந்தார். டப்ளினில் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படவும், அப் பல்கலைக் கழகத்தில் யார் வேண்டுமானாலும் சேர்ந்து கல்வி கற்கலாமென்றும், அங்கு சமயச் சார்பற்ற கல்வியே புகட்டப் படுமென்றும் அம் மசோதா கூறியது. தங்களுக்கென்றே அரசாங்கம் தனியாக ஒரு கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கோரிய கத்தோலிக்கர்களும் இம் மசோதாவை விரும்பவில்லை. மற்றும் பலரும் விரும்பவில்லை. முடிவில் இம் மசோதா தோல்வியுற்றது. அதன் விளைவாக, கிளாட்ஸ்டனும் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார்.

கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவையின் காலத்தில் இங்கிலாந்திலும் பல துறைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. 1870 ஆம் ஆண்டில் கல்விச் சட்டம் (The Education Act) ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி அரசாங்கம் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட அப் பள்ளிகள் அந்தந்த வட்டாரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் (Boards) கட்டுப்பாட்டிற்குள் இயங்கின. இத்தகைய பள்ளிகள் அரசாங்க உதவித் தொகையையும் பெற்றன. ஆகவே குறிப்பிட்ட சிலர் மட்டும் ஆங்கிலிக்கத் திருச்சபையால் நடத்தப்பட்ட பள்ளிகளில் படிக்கும் நிலைமாறி, பலரும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் சில ஆண்டுகளிலேயே தொடக்கக் கல்வி முறை (Elementary Education) இங்கிலாந்தில் கட்டாயப்படுத்தப்பட்டது.

இங்கிலாந்தின் இராணுவத் துறையிலும் கிளாட்ஸ்டன் சில சீர்திருத்தங்களைச் செய்தார். இங்கிலாந்தின் இராணுவத்தில் ஒருவர் தம் பதவியை மற்றொருவர்க்கு விற்கும் நிலையிருந்தது. அத்துடன்

இராணுவப் பதவிகள் ஏலத்திற்கு விடப்பட்டு யார் அதிகப் பணத்திற்கு ஏலத்தில் (Auction) கேட்கிறார்களோ அவர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்தது. ஆகவே, இந்நிலை மாற 1871ஆம் ஆண்டில் இராணுவப் பதவிகளை விலை கொடுத்து வாங்குவதைத் தடுக்க கார்டுவெல் என்ற இராணுவ அமைச்சர் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். பிரபுக்கள் சபையில் அதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டதால் அம் மசோதா கைவிடப்பட்டது. ஆனால் கிளாட்ஸ்டன் தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. அரசரது ஒரு சாதாரண ஆணையால் (Simple Warrant) தான் இராணுவப் பதவியை விலைக்கு வாங்கும் முறை கொண்டு வரப்பட்டதென அறிந்தார். ஆகவே, கிளாட்ஸ்டனின் முயற்சியால் 1871ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் தேதியன்று அம் முறையை ஒழிக்க வேண்டி விக்டோரியா மகாராணியால் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1870ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தால் அரசு ஊழியர்களை நியமிக்கும் முறை போட்டித் தேர்வின் மூலம் (Public Competition) நிர்ணயிக்கப் பட்டது. ஆனால் வெளி நாட்டுறவுத் துறை அலுவலகங்களுக்கு மட்டும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இச் சட்டத்தால் அதிகார நலக் கும்பலின் (Vested Interests) ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, நிர்வாகத் திறமை ஏற்படுமெனக் கருதப் பட்டது.

1871ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத் தேர்வுச் சட்டம் (University Test Act) ஒன்று கொண்டு வரப்பட்டது, இதன்படி ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்களில் ரோமன் கத்தோலிக்கர்கள் சேர்ந்து படிக்க வகை செய்யப்பட்டது. அத்துடன் இப் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக நடத்தப்பட்ட சமயத் தேர்வு முறையும் (Religious Test) ஒழிக்கப்பட்டது.

1871ஆம் ஆண்டிலேயே தொழிற் சங்கச் சட்டம் (The Trade Union Act) ஒன்றும் இயற்றப்பட்டது. இச் சட்டம் ஆங்கிலத் தொழிற் சங்க இயக்கத்தின் உரிமைகளடங்கிய சாசனமாக (Chater of Liberties of the English Trade Union Movement) கருதப்பட்டது; இச் சட்டத்தால் ஒன்று கூடல் தடைச் சட்டங்கள் (The Anti-Cambination Laws) முழுவதுமாக ரத்து செய்யப்பட்டன. தொழிலாளர்கள் சங்கங்கள் அமைப்பது சட்ட ரீதியாக்கப்பட்டது. வேலை நிறுத்தங்கள் குற்றமற்றவைகள் எனக் கூறப்பட்டன. ஆகவே, தொழிற் சங்க இயக்கம் நாட்டில் பலம் பொருந்திய அமைப்பாகத் திகழ்ந்தது.

1872ஆம் ஆண்டில் தகுதிச் சான்றிதழ் சட்டம் (The Licensing Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டத்தால் நாட்டில் குடிப் பழக்கம் சீரமைக்கப்பட்டது, இதே ஆண்டிலேயே வாக்களிக்கும் சட்டம் (Ball of Act) ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதனுல் தேர்தல்களில் இரகசிய வாக்களிக்கும் முறை நாட்டில் ஏற்படுத்தப் பட்டது. அதனுல் திறந்த வெளியில் வாக்களிக்கும் போது வாக்காளர்களைப் பயமுறுத்தும் தீமை ஒழிக்கப்பட்டது.

1873ஆம் ஆண்டில் புகழ்பெற்ற நீதித் துறைச் சட்டம் (Judicature Act) ஒன்று இயற்றப்பட்டது; இச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு இங்கிலாந்தில் நீதித் துறையாட்சி மிகவும் மோசமான நிலையிலிருந்தது. அரச நீதிமன்றம் (Kings Bench), பொதுவழக்கு நீதிமன்றம் (Court of Common Pleas), நிதி வழக்கு நீதிமன்றம் (Court of Exchequer), பொது நேர்மைத் தனி நீதி மன்றம் (Chancery Court), கப்பல்துறை நீதிமன்றம் (Court of Admirality), பொருளக முறிவு நீதிமன்றம் (Court of Bankruptey), மணமுறிவு, திருமண வழக்கு நீதிமன்றம் (Court of Divorce and Matrimonial Cases) போன்று பல நீதிமன்றங்களால் நாட்டில் குழப்பம்தான் ஏற்பட்டது. ஆகவே, 1873ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நீதித் துறைச் சட்டத்தால் மேற்கூறப்பட்ட நீதி மன்றங்கள் இணைக்கப்பட்டு ஓர் தலைமை நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டது. அந் நீதிமன்றம் உயர்நீதி மன்றம் (High Court of Justice) எனவும். மேல் முறையீட்டு நீதிமன்றம் (Court ot Appeal) எனவும் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. நாட்டில் இரண்டாவது மேல் முறையீட்டு நீதிமன்றம் இருக்கக் கூடாதென்பதற்காகவே இச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனுல் பிரபுக்கள் சபையின் ஒரு குழு மேல் முறையீட்டை விசாரிக்கும் உரிமையைப் பிறகு பெற்றது.

கிளாட்ஸ்டனின் முதல் அமைச்சரவை மேற்கொண்ட இத் தகைய சீர்திருத்தங்களால், நிலப் பிரபுக்களும், இராணுவத் தினரும் திருச் சபையினரும், மது வியாபாரிகளும் பாதிக்கப் பட்டனர். அதனுல் அவர்களின் பகைமையை கிளாட்ஸ்டனின் அமைச்சரவை தேடிக் கொண்டது. அத்துடன் அதன் வெளி நாட்டுக் கொள்கையும் யாருக்கும் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே கிளாட்ஸ்டன் 1874ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தைக் கலைத்தார். அடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர் வேடிவ் கட்சி வெற்றி பெற்றது. அதன் தலைவர் டிஸ்ரேலி இரண்டாவது தடவையாகப் பிரதமரானுர். அவர் அமைச்சரவை 1880ஆம் ஆண்டு வரை பதவி வகித்தது. 1880ஆம் ஆண்டில்

கிளாட்ஸ்டன் மீண்டும் இரண்டாவது முறையாக அமைச்சரவையை அமைத்தார்.

இரண்டாம் அமைச்சரவை

1880ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கிளாட்ஸ்டனின் இரண்டாவது அமைச்சரவைக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. உள்நாட்டில் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் மந்தம் முதலிய பிரச்சினைகள் எழுந்தன. அதே நேரத்தில் குடியேற்ற நாடுகளிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

அயர்லாந்து

அயர்லாந்து மக்களைச் சமாதானப் படுத்த கிளாட்ஸ்டன் தமது முதல் அமைச்சரவை காலத்தில் செய்த முயற்சிகள் வீணாயின. 1879-80ஆம் ஆண்டுகளில் அங்கு ஏற்பட்ட உருளைக் கிழங்கு பஞ்சம் நிலைமையை மேலும் மோசமாக்கியது. பஞ்சத்தால் குத்தகைப் பணம் கொடுக்கமுடியாத குடியானவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேற்றப் பட்டவர்கள் வேலையின்றிப் பட்டினி கிடந்தனர். பசி ஆற்றாது அவர்கள் கொள்ளைகளில் ஈடுபட்டனர். ஆகவே அயர்லாந்தில் அமைதியின்மை நிலவியது. இச் சமயத்தில் 1881ஆம் ஆண்டில் அயர்லாந்து கலகக்காரர்களை ஒடுக்க அடக்குமுறைச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டது. 1879ஆம் ஆண்டில் பெஸ்பரோ பிரபுவின் (Earl of Bessborough) தலைமையில் அயர்லாந்துக் குடியானவர்களின் குறைகளை அறிந்து ஆராய அமைக்கப்பட்ட குழு தமது அறிக்கையை 1881ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அவ் வறிக்கையில், குத்தகைக் கால நிர்ணயம், சீரான குத்தகைப் பணம், சுய விற்பனை முதலியவைகளைப் பற்றி, குழு சிபார்சு செய்திருந்தது. அக் குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு 1881ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் இரண்டாவது நிலச் சீர்திருத்தச் சட்டம் (Second Irish Act of 1881) கொண்டு வந்தார். அதன்படி, குத்தகைப் பணத்தைத் தனிப்பட்ட நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டுமென்றும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட குத்தகைப் பணத்தை 15 ஆண்டுகளுக்கு மாற்றக் கூடாதென்றும், தீர்மானிக் கப்பட்ட குத்தகைப் பணத்தைச் செலுத்தும் வரையில் பிரபுக்கள் குடியானவர்களை நிலத்தைவிட்டு விரட்டக் கூடாதென்றும், குத்தகை உரிமைகளை விற்கக் குடியானவர்களுக்கு சுதந்திரம் உண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய சீர்திருத்தங்கள்

குடியானவர்களின் தலைவரான பார்னலுக்கு (Parnel) பிடிக்க வில்லை. ஆகவே, அயர்லாந்து மக்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தனர். இதையறிந்த கிளாட்ஸ்டன் பார்னலையும் அவருடைய துணைவர்களையும் சிறையிலடைக்கும்படி அப்பொழுது அயர்லாந்தின் ஆளுநராயிருந்த ஃபார்ஸ்டருக்கு உத்தரவிட்டார். ஃபார்ஸ்டரும் அங்ஙனமே அவர்களையெல்லாம் சிறையிலடைத்தார். அதனால் வெகுண்ட மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர். கலகத்தை விரும்பாத கிளாட்ஸ்டன் பார்னலோடு கில்மெயின்ஹாம் உடன் படிக்கை செய்து கொண்டார். அதன்படி, குத்தகைப் பண பாக்கி களைத் தரமுடியாத குடியானவர்களுக்கு ஆதரவு அளிக்கும் சட்டமொன்றை இயற்ற கிளாட்ஸ்டன் ஒப்புக்கொண்டார். கலகத்தை நிறுத்துவதாகப் பார்னலும் ஒப்புக்கொண்டார். அதனால் பார்னல் விடுதலை செய்யப்பட்டார். இதை விரும்பாத ஃபார்ஸ்டர் தமது பதவியை ராஜிநாமா செய்தார். அவருக்குப் பதிலாக காவண்டிஷ் பிரபுவாகிய பிரடரிக் அங்கு நியமிக்கப் பட்டார்.

தென் ஆப்பிரிக்கா

டிஸ்ரேலியின் காலத்தில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ் வால் (Trans Vaal) நாடு இங்கிலாந்தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டது. ஆனால் அந்நாட்டு மக்களாகிய போயர்கள் (Boers) குருஜர் (Kruger) என்பவரின் தலைமையில் 1880ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதியன்று சுதந்திரப் பிரகடனம் செய்தார்கள். ஆகவே, இரு நாடுகளுக்கும் போர் ஏற்பட்டது. சர் ஜார்ஜ் கோலே (Sir George Colley) என்பவரது தலைமையில் போரிட்ட ஆங்கிலப் படைகள் போயர்களால் மஜுபா குன்று (Majuba Hill) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டன. இதை யறிந்த கிளாட்ஸ்டன் இந்தியாவிலிருந்து சர் பிரடெரிக் ராபர்ட்ஸ் என்பவரது தலைமையில் போயர்களை முறியடிக்க அனுப்பினார். அவர் அங்குப் போய்ச் சேருவதற்குள் கிளாட்ஸ்டன் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். போயர்கள் எப்படியும் சுதந்திரம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதால், ஆங்கிலப் படையின் மதிப்பைக் காப்பாற்றுவதற்காக மட்டுமே வீணாகப் போர்க்களத்தில் அவர்களைக் கொன்று குவிப்பது சிறந்த தன்று என்று கிளாட்ஸ்டன் நினைத்தார். ஆகவே, 1881ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ஆம் தேதியன்று போயர்களோடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இங்ஙனம் கிளாட்ஸ்டன் சிறு நாடுகளின் சுய நிர்ணய உரிமையை மதித்து நடந்து கொண்டார்.

எகிப்து

கிளாட்ஸ்டன் எகிப்து நாட்டின் பிரச்சினைகளிலும் தலையிட வேண்டியதாயிற்று. அப்பொழுது இங்கிலாந்து - ஃபிரான்சு ஆகிய இரு நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள் எகிப்து இருந்தது. இந் நிலையில் எகிப்தில் அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க அராபி பாஷா (Arabi Pasha) என்பவரின் தலைமையில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சியால் பல ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். அதனால் அப் புரட்சியை ஒடுக்க, தன்னோடு ஒத்துழைக்கும்படி இங்கிலாந்து பிரான்சைக் கேட்டுக் கொண்டது. ஆனால் பிரான்சு இங்கிலாந்தை சந்தேகித்து அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. இந் நிலையில் இங்கிலாந்து 'தன் கையே தனக்குதவி' என்ற எண்ணத்தில் தனியாகவே அப் புரட்சியை ஒடுக்க எழுந்தது. 1882 ஆம் ஆண்டில் அராபி பாஷா டெல் எல் கபீர் (Tel-El-Kabir) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். ஆகவே, எகிப்து இங்கிலாந்தின் கையிலே சிக்கியது. அங்கு ஆங்கில ஆதிக்கம் தொடர்ந்தது.

இங்ஙனம் கிளாட்ஸ்டனின் இரண்டாவது அமைச்சரவை வெளி நாட்டு விவகாரங்களைக் கவனித்ததோடல்லாமல் உள்நாட்டிலும் சில சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியது. 1880ஆம் ஆண்டில் தொழிலதிபர்கள் பிணைப்பாடு சட்டம் (The Employer's Liability Act) ஒன்று இயற்றப்பட்டது. அச் சட்டம் தொழிலாளர்கள் பணியாற்றும்போது அவர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டால், அவ் விபத்துகளுக்குத் தகுந்த நஷ்டஈடுகளைக் கொடுக்க தொழிலதிபர்களைக் கட்டாயப்படுத்தியது. 1880ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இழவு வினைச் சட்டம் (The Burial Act) எந்த வித மதச் சடங்குமின்றி திருச்சபை பகுதியில் தங்களது பிணங்களைப் புதைக்க இணங்காதார்களுக்கு அனுமதி அளித்தது. அத்துடன் அவர்கள் விரும்பினால், அவர்களின் எண்ணப்படியே எந்தவிதச் சடங்குகளையும் அச் சமயத்தில் செய்து கொள்ளலாம் என்றும் அச் சட்டம் கூறியது.

1881 ஆண்டில் இயற்றப்பட்ட கல்விச் சட்டம் (Education Act) எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் படிக்கக் கட்டாயப் படுத்தியது. எல்லா மக்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமானால், அவர்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று கருதப்பட்டதுதான் அதற்குக் காரணமாகும்.

1882 ஆம் ஆண்டிற்கு முன்பு திருமணமான பெண்களின் சொத்துக்களெல்லாம் அவர்களின் கணவர்களையே சார்ந்ததாகும்.

ஆகவே, பெண்களுக்குள்ள இத்தகைய அநீதியை நீக்க 1882ஆம் ஆண்டு 'திருமணமான பெண்களின் சொத்துச் சட்டம்' (The Married Women Property Act) ஒன்று கொண்டு வரப்பட்டது.

1883 ஆம் ஆண்டு குத்தகைக்காரர்களுக்கு வேண்டி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. 'விவசாய நில உடைமைச் சட்டம், (The Agriculture Holdings Act) என்ற அச் சட்டம் 'குடியான வர்கள் தாம் உழும் நிலங்களில் ஏதாவது நிரந்தரமான மேம்பாடு செய்திருந்தால், அதற்கு வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை நிலப்பிரபுக்கள் கொடுக்க வேண்டும்' என்று நிபந்தனையை விதித்தது.

1884 ஆம் ஆண்டில் மூன்றாவது சீர்திருத்தச் சட்டம் (Third Reform Act) இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி இங்கிலாந்தில் எல்லா வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் (House holders) வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அத்துடன் இங்கிலாந்து முழுவதும் சமமான வாக்காளர் தொகுதிகளாக (equal electoral Districts) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வாக்காளர் தொகுதியி லிருந்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது.

மூன்றும் அமைச்சரவை

1885 ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் பதவியை விட்டு விலகினார். கிளாட்ஸ்டன் ஏற்படுத்திய புதிய வாக்காளர் தொகுதி களில் சட்டப்படி வாக்காளர் பட்டியல் தயாராகவில்லை. உடனேயே பொதுத் தேர்தல் நடைபெறவில்லை. அவ் இடைவேளையில் சாலிஸ்பரி பிரபு (Salisbury) எனும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பிரதமராக்கப்பட்டார். பின்பு 1886ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் தாராளக் கொள்கையினர் (Liberals) அமோக வெற்றி பெற்றதால் கிளாட்ஸ்டன் மீண்டும் மூன்றும் முறையாக பிரதமரானார். அயர்லாந்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் அதற்கு சுயாட்சி வழங்குவதல்லாமல் வேறு வழியில்லை எனக் கூறினார். இதை எதிர்த்து அவருடைய சில அமைச்சர்கள் ராஜினாமா செய்தும், தம் கொள்கையில் கிளாட்ஸ்டன் உறுதியாய் இருந்தார். 1886ஆம் ஆண்டில் அவர் ஐரிஷ் சுயாட்சி மசோதா (Irish Home Rull Bill) ஒன்றைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். அயர்லாந்திற்கு இரு மன்றங்களைக் கொண்ட ஒரு சட்டசபையை ஏற்படுத்த வேண்டு மென்றும், முதல் மன்றம் கவுன்டிகளாலும், நகரங்களாலும்

தேர்ந்தெடுக்கப்பட்ட 206 உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இரண்டாவது மன்றம் அயர்லாந்திய குருமார்கள் 28 பேரையும் 200 பவுன் மதிப்புள்ள சொத்துகளைக் கொண்ட 75 பேரைக் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்றும், நிலப்படை, கப்பற் படை, அயல் நாட்டு விவகாரங்கள், வாணிபச் சட்டம் ஆகியவை களைத் தவிர, மற்றவைகளையெல்லாம் அயர்லாந்து சட்டசபையின் ஆளுகைக்கே விட்டுவிட வேண்டுமென்றும் அம் மசோதா கூறியது. அம் மசோதாவிற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. 'லிபரல்' கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்கூட அதற்கு ஆதரவு கொடுக்க மறுத்தனர். ஆகவே, அம் மசோதா பொது மக்கள் சபையில் தோல்வியுற்றது. கிளாட்ஸ்டன் பொதுமக்கள் சபையைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்தினார். ஆனால், தேர்தலில் கிளாட்ஸ்டனின் கட்சி தோல்வியுற்றது. கன்சர்வேடிவ் கட்சி வெற்றிபெற்றது. கிளாட்ஸ்டன் தமது பிரதமர் பதவியை மூன்றும் முறையாக 1886ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தார்.

நான்காவது அமைச்சரவை

1886ஆம் ஆண்டிலிருந்து 1891ஆம் ஆண்டு வரை கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரான சாலிஸ்பரி பிரபுவே பிரதமராக ஆட்சிசெய்தார். 1892ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியும், கன்சர்வேடிவ் கட்சியும் சமமான இடங்களைப் பெற்றன. அயர்லாந்து கட்சியினரின் ஆதரவைப் பெற்று கிளாட்ஸ்டன் நான்காம் முறையாக பிரதம ரானார். அவர் மீண்டும் அயர்லாந்தின் சிக்கலைத் தீர்க்க முயன்றார். அதற்காக 1893ஆம் ஆண்டில் இரண்டாவது ஐரிஷ் சுயாட்சி மசோதா (Second Home Rule Bill, 1893) ஒன்றை ஆங்கிலப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். இம் மசோதாவும் முதல் ஐரிஷ் சுயாட்சி மசோதாவைப் போலவேதான் இருந்தது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு மட்டும் இரண்டாவது மசோதாவில் இருந்தது. அயர்லாந்து பிரதிநிதிகளுக்கு ஆங்கிலப் பாராளு மன்றத்திலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதுதான் அவ் வேறு பாடாகும். இம் மசோதாவிற்கும் எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும், பொதுமக்கள் சபையில் 34 உறுப்பினர்களின் அதிக ஆதரவு பெற்று நிறைவேற்றப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபை இம் மசோதாவை நிராகரித்துவிட்டது. ஆகவே கிளாட்ஸ்டன் 1894ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தம் பதவியை ராஜிநாமா செய்தார். அரசியலை ஒரு விளையாட்டாகவும், ஒரு தொழி லாகவும், பிழைப்புக்கு உதவும் ஒரு செயலாகவும் கருதாமல், தம் கடமையாகவே கொண்ட கிளாட்ஸ்டன் அரசியல் வாழ்வி

னின்றும் நிரந்தரமாகவே ஓய்வு பெற்றுர். 1899ஆம் ஆண்டில் அவர் மண்ணுலகை விட்டுப் பிரிந்தார்.

பிரதமர் டிஸ்ரேலி

19ஆம் நூற்றுண்டின் தலைசிறந்த அரசியல் அறிஞர்களிலே பென்ஜமின் டிஸ்ரேலியும் (Benjamin Disraeli) ஒருவராகக் கருதப் படுகின்றுர். இவர் 1804 ஆம் ஆண்டில் பிறந்தார். முதலில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்த இவர், அதைத் துறந்து தம் கவனத்தை இலக்கியத்தில் செலுத்தினுர். பல புனைகதைகளை (Novels) எழுதினுர். இவருக்குச் சுற்றுப் பயணத்தில் அதிக அக்கறையிருந்ததால் 1828 ஆம் ஆண்டி லிருந்து 1831ஆம் ஆண்டு வரை ஸ்பெயின், இத்தாலி, பாலஸ்தீன் போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். அதன் பின்னர் இவரை ஆங்கில அரசியல் கவர்ந்தது.

ஆரம்பத்தில் இவர் எக்கட்சியிலும் சேராமல் சுயேச்சை யாகவே இருந்தார். இவர் சுயேச்சையாகப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதனுல் தோல்வியுற்றுர். அதன் பின் இவர் டோரிக் கட்சியில் சேர்ந்தார். 1835ஆம் ஆண்டில் டோரிக் கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் குதித்தார். அத் தேர்தலிலும் இவர் தோல்வியைத்தான் கண்டார். அதன் பின் தம் 33ஆம் வயதில்தான் இவர் பாராளுமன்ற உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். இவருடைய கன்னிப் பேச்சு ஆர்வம் (Ambitious) நிரம்பியதாகவும், இயற்கைக்குப் புறம்பான தாகவும் (Eccentric), ஆரவார ஒலியுடையதாகவும் (Bombastic) இருந்தமையால் எள்ளி நகையாடப்பட்டார். 'நீங்கள் என் பேச்சைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டிய நேரம் வரும்' என்று சபையிலேயே கூறினுர். அவருடைய கூற்று நிறை வேருமல் போகவில்லை. 1839ஆம் ஆண்டு அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவ் வாண்டில் அவர் லீவிஷ் (Mrs. Lewis) என்ற சீமாட்டியை மணந்தார். அவரோ பெருஞ்செல்வம் படைத்தவர். அவர் டிஸ்ரேலியின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டார்.

1841ஆம் ஆண்டு வரை டிஸ்ரேலி சர் ராபர்ட் பீலை ஆதரித்து வந்தார். 1841ஆம் ஆண்டில் பீல் பிரதமரானபோது இவருக்கு அவரின் அமைச்சரவையில் இடம் கிடைக்கவில்லை. தாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் பதவி கிடைக்காததாலும், பீல் தானியச் சட்டங்களை ரத்து செய்ததாலும் 1842ஆம் ஆண்டிலிருந்து பீலை எதிர்க்க ஆரம்பித்துவிட்டார்.

ஆகவே, டோரிக் கட்சியில் பிளவு ஏற்பட்டது. கன்சர்வேடிவ்கள் என்ற புதுக் கட்சிக்கு டிஸ்ரேலி தலைவரானார். அத்துடன் அக் கட்சியின் திட்டங்களை வகுத்து அதை நாட்டில் செல்வாக்கு அடையச் செய்தார். மக்களிடத்திலே தம் கொள்கைகளுக்கு நம்பிக்கை யூட்டினார். இவரை எதிர்த்தவர்கள் இவருடைய கட்சி, திட்டங்கள் இல்லாதது எனக் குறை கூறினர். 'திருச்சபையை அழிப்பதும், நிலப் பிரபுக்களைக் கொள்ளையடிப்பதும், நாட்டிலுள்ள எல்லா வகுப்பாரையும் அமைப்புகளையும் அச்சுறுத்துவதும்தான் திட்டங்கள் என்றால், எங்களுக்குத் திட்டங்கள் இல்லைதான்' என்று அவர்களுக்கு டிஸ்ரேலி பதில் கூறினார். 'நாட்டில் இப்பொழுது அரசர் இருந்தும் அவருக்குரிய இலக்களவு (Standard) இல்லை. பிரபுக்கள் சபை இருந்தும் அங்கு உயர்குடி இயல் புடையவர்கள் இல்லை; பொதுமக்கள் சபையிருந்தும் அங்கு ஜனநாயக உரிமைகள் இல்லை' என்று டிஸ்ரேலி நாட்டின் நிலைமையைப் பற்றிக் குறை கூறிவந்தார்.

1865ஆம் ஆண்டில் சீர்திருத்தங்களை வழிமறித்து வந்த பாமர்ஸ்டன் என்னும் பிரதமர் இறந்ததால் ரஸ்ஸெல் பிரபு பிரதமரானார். கிளாட்ஸ்டன் அவரது கொள்கைக்கு உறுதுணையாய் நின்றார். அத்துடன் 1866ஆம் ஆண்டில் இரண்டாவது சீர்திருத்த மசோதா கொண்டுவந்தார். அம் மசோதா பெரிதும் மிதவாதத் தன்மை வாய்ந்ததாயிருந்தது. மேலும் 2,00,000 தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அம் மசோதா அமைந்திருந்தது. ஆனால், அம் மசோதாவை ஆளுங் கட்சியினரும் மற்றும் பலரும் எதிர்த்தனர். பாராளுமன்றத்திலும் அம் மசோதா தோல்வியுற்றது. அமைச்சரவையும் பதவி இழந்தது. டெர்பி பிரபு பிரதமரானார். இரண்டாவது சீர்திருத்த மசோதா தோற்றதால் நாட்டில் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. 'தாராளக் கொள்கையினர் செய்யத் தவறிய சீர்திருத்தங்களைத் தாம் செய்து, அதனால் பெரும் புகழும் அடைந்து, ஏன் தன் கட்சியைப் பலப் படுத்தக் கூடாது' என்று டிஸ்ரேலி நினைத்தார். டெர்பி பிரபு அமைச்சரவையில் டிஸ்ரேலி பேராற்றலோடு விளங்கியதால் டிஸ்ரேலியின் அத்தகைய யோசனையை டெர்பி பிரபு ஏற்றுக் கொண்டார். டிஸ்ரேலி 1867ஆம் ஆண்டில் ஒரு சீர்திருத்த மசோதாவைக் கொண்டுவந்தார். இம் மசோதாவை எதிர்த்துச் சில அமைச்சர்கள் ராஜிநாமா செய்தனர். அதனால் டெர்பி பிரபு மசோதா தோற்றால் தாம் அமைச்சரவையைக் கலைத்துவிடப் போவதாக அச்சுறுத்தினார். அமைச்சரவை கலைக்கப்பட்டால் தாராளக் கொள்கையினர் பதவியில் அமர்ந்துவிடுவர் என நினைத்த கன்சர்வேடிவ் கட்சியினர் மசோதாவைச் சட்டமாக்க உதவினர்.

ஆதலால் வரி செலுத்தும் எல்லா வீட்டுச் சொந்தக்காரர்களும் 10 பவுனும் அதற்கு மேலும் வாடகை கொடுக்கும் எல்லாக் குடிக் கூலிக்காரர்களும், 12 பவுன் மதிப்புள்ள வாடகை வீடுகளில் குடியிருப்போரும் வாக்குரிமை பெற்றனர். 1868ஆம் ஆண்டில் டெர்பி பிரபு தமது பதவியிலிருந்து ஓய்வு பெறவே, டிஸ்ரேலி முதன் முதலாகப் பிரதமரானார். ஆனால் ஒரு சில மாதங்களே அவர் அப் பதவி வகித்தார். அயர்லாந்தில் இருந்த திருச்சபை ஆதிக்கத்தை டிஸ்ரேலி ஆதரித்ததால் 1868ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் தோற்றார். ஆகவே, 1868ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் தமது முதல் அமைச்சரவையை அமைத் தார். அவ் வமைச்சரவை செய்த பல சீர்திருத்தங்களால் நிலப் பிரபுக்கள், மதுவியாபாரிகள், திருச்சபையோர் போன்றவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆகவே, அவர்களின் ஆதரவைக் கிளாட்ஸ்ட னின் முதல் அமைச்சரவை இழந்தது. அத்துடன் சில வெளிநாட்டுக் கொள்கையாலும் கிளாட்ஸ்டனின் புகழ் நாட்டில் மங்கியது. அதே சமயத்தில் டிஸ்ரேலியின் புகழ் வளர ஆரம்பித்தது. 1874ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் டிஸ்ரேலிக்குப் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை ஆதரவு ஏற்பட்டது. ஆகவே, அவர் 1874ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக பிரதமர் பதவியை ஏற்றார்.

பிரதமராக இருந்தபோது டிஸ்ரேலி தமது தாராள முன்னேற்றக் கருத்துகளை எல்லாம் செயலாக்குவதில் முனைந்தார். அவருக்கு உறுதுணையாய் நின்றவர் ரிச்சர்டு கிராஸ் (Richard Cross) என்ற அவருடைய உள்நாட்டமைச்சராவார். டிஸ்ரேலி பல சட்டங்களை இயற்றி நாட்டில் அரசியல், பொருளாதாரத் துறைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

உள்நாட்டுக் கொள்கை

டிஸ்ரேலி தமது வெளிநாட்டுக் கொள்கையில் சிறந்து விளங் கினார். அதனுடன் உள்நாட்டிலும் பல சீர்திருத்தச் சட்டங்களை இயற்றினார். 1875ஆம் ஆண்டில் ‘நிர்ணயிக்கப்பட்ட நிலபுலங் களின் குத்தகை, விற்பனைச் சட்டம்’ (Leases and Sales of Settled Estates Act) ஒன்று கொண்டுவரப்பட்டது. நிலபுலங்களை எளிதில் விற்கவும் குத்தகை விடவும் இச் சட்டம் வகை செய்தது. அத்துடன் நிலவுரிமைகள் ஆவணப்பதிவு பெறுதலை (Registration) இச் சட்டம் ஊக்குவித்தது. இச் சட்டத்தை விருப்பமுள்ள வட்டாரங்கள் மட்டும் அமல் நடத்தினால் போதுமானதென அறிவிக்கப்பட்டதால், பலன் விளையவில்லை. ஆகவே 1882ஆம் ஆண்டில் நிர்ணயமான நிலச் சட்டம் (Settled Land Act) ஒன்று

கொண்டு வரப்பட்டதால் நில விற்பனைகளும், நிலங்களைக் குத்தகைக்கு விடுதலும் எளிதானது.

1875ஆம் ஆண்டில் 'விவசாய நிலவுடைமைச் சட்டம்' (Agriculture Holdings Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டத்தால் குடியானவர்கள் நிலத்தில் போட்ட முதலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இச் சட்டமும் நாட்டில் கட்டாயமாக அமல் நடத்தப்படவில்லை. விருப்பமுள்ளவர்கள் மட்டுமே அதை அமல் நடத்தினர்.

1875ஆம் ஆண்டில் 'தொழிலாளர் குடியிருப்புச் சட்டம்' (Artisans Dwelling Act) என்ற ஒரு சட்டமும் இயற்றப்பட்டது. இச் சட்டம் மிக முக்கியமான சட்டமாகவும் கருதப்படுகின்றது. மக்கள் தொகை 25,000-க்கு மேற்கொண்ட நகராட்சி மன்றங்கள், தொழிலாளர் வாழும் சுகாதாரமற்ற பகுதிகளைக் கட்டாயமாக விலைக்கு வாங்கி, அவ் விடங்களில் சுகாதார முறையில் வீடுகளைக் கட்டி நியாயமான குடிக்கூலிக்குத் தொழிலாளர்களுக்கு விட அச் சட்டம் வகை செய்தது. மற்றும் இதேயாண்டில் 'பொதுச் சுகாதார சட்டம்' (Public Health Act) ஒன்று இயற்றப்பட்டு தல அதிகாரிகள் ஆங்காங்கே மருத்துவர்களை நியமித்து மக்களின் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். மேலும் குடிநீர் அளித்தல், கழிவுநீர் அகற்றல், தொத்து நோய்களை நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்படியும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

1875ஆம் ஆண்டில் டிஸ்ரேலியால் இயற்றப்பட்ட 'சதிச் சட்டமும் உடைமைப் பாதுகாப்புச் சட்டமும்' (Conspiracy and Protection of Property Act), 'முதலாளிகள் தொழிலாளிகள் சட்டமும்' (Employers and Employees Act), 1876ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'தொழிற்சங்க சட்டமும்' (Trade Union Act) தொழிற் சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவைகளாகும்.

கிளாட்ஸ்டன் காலத்தில் நட்புரிமைக் கழகங்களின் நிலையைக் கண்டறிய ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக் குழு, பல நட்புரிமைக் கழகங்கள் திறமையற்ற, ஊழல் மலிந்த மேலாண்மையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன என்று கண்டறிந்தது. ஆகவே, 1875ஆம் ஆண்டில் 'நட்புரிமைக் கழகங்கள் சட்டம்' (The Friendly Societies Act) ஒன்று டிஸ்ரேலி அமைச்சரவையால் கொண்டு வரப்பட்டது. அக் கழகங்கள் தங்களை ஆவணப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என்று அச் சட்டம் கூறியது. அதன் பிறகு

அக் கழகங்களுக்கு வரவு செலவு அட்டவணைகளை வழங்கவும், அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வசதி செய்து தரவும், அரசாங்கம் முன்வந்தது. 'இச் சட்டம் பயப்படக்கூடிய நிலையில் இல்லாமல் பணிவு நயமுடையதாய் உள்ளது' என்று டைம்ஸ் ஆப் இலண்டன் (The Times of London) என்ற பத்திரிகை அப்பொழுது எழுதியிருந்தது.

1876ஆம் ஆண்டில் 'பொது நிலங்களின் வேலியிடல் சட்டம்' (The Enclosures of Commons Act) ஒன்று டிஸ்ரேலியின் அமைச்சரவையால் கொண்டு வரப்பட்டது. இச் சட்டம் பெருநிலப் பிரபுக்கள் பொது நிலங்களைத் தங்கள் நிலங்களோடு சேர்த்துக் கொள்வதைத் தடுத்தது. பொது மக்களுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதேபோலத்தான் அவர்களுக்கு நல்ல காற்றும், சுகாதாரமும் அவசியம் என்று கருதப்பட்டு அவர்கள் ஓய்வு நாட்களைச் சுகாதார முறையில் கழிக்கவும் விளையாடவும் பல இடங்கள் இச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டன.

1876ஆம் ஆண்டில் 'வியாபாரக் கப்பல் ஏற்றுமதிச் சட்டம்' (The Merchant Shipping Act) ஒன்று கொண்டு வரப்பட்டது. சில கப்பல் முதலாளிகள் கப்பல் மூழ்கினாலும் காப்புறுதிப் பணம் (Insurance) கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் நைந்துபோன கப்பல்களில் அளவுக்கு மீறிய பண்டங்களை ஏற்றிக் கடலில் விட்டார்கள். அதன் காரணமாகச் சில கப்பல்கள் கடலில் மூழ்கியதால் பலர் உயிர் துறந்தனர். அத்துடன் சில கப்பல் அதிபர்கள் காப்புறுதி செய்வதிலும் பல மோசடிகளைச் செய்தனர். ஆகவே, சாமுவேல் பிளிம்சால் (Samuel Plimsoll) என்பவர் அரசாங்கம் இத்தகைய மோசடிகளைத் தடுத்தே ஆகவேண்டுமென்று 25 ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தார். கடைசியில் அரசாங்கம் 1876ஆம் ஆண்டில் இச் சட்டத்தை இயற்றியது. இச் சட்டம், நைந்துபோன கப்பல்களைத் துறைமுகங்களிலிருந்து வெளியேறாமல் தடுக்க வாணிபக் குழுவுக்கு (Board of Trade) அதிகாரம் கொடுத்தது. அத்துடன் கப்பல்களில் வரையப்பட்டுள்ள கோட்டிற்கு மேல் பண்டங்களை ஏற்றக் கூடாதென்றும் இச் சட்டம் வற்புறுத்தியது.

1878ஆம் ஆண்டில் டிஸ்ரேலியின் அரசாங்கம் 'தொற்று நோய்ச் (பிராணிகள்) சட்டம்' (Contagious Diseases Animals Act) ஒன்றை இயற்றியது. 'தொற்றுநோய்கள் பரவியுள்ள நாடுகளிலிருந்து இங்கிலாந்திற்குள் இறக்குமதியான கால்நடைகள் அனைத்தையும் அவை நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டவுடன் கொன்றுவிட வேண்டும்' என அச் சட்டம் கூறியது. அதனால்

இங்கிலாந்திலுள்ள குடியானவர்களின் கால்நடைகள் தொத்து நோயினின்று காப்பாற்றப்பட்டன.

1878ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'தொழிற்சாலை தொழிற்கூடங்கள் சட்டம்' (Factory and Workshop Act) தொழிற்சாலைகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலை பார்த்துவந்த பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலங்களைப் பேணியது. 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலையிலமர்த்தப்படுவது இச் சட்டத்தால் நீக்கப்பட்டது. பெண்களின் வேலை செய்யும் நேரமும் குறைக்கப்பட்டது. நெசவுத் தொழிற்சாலைகளில் பெண்கள் வாரத்திற்கு 56½ மணிக்குமேலும், மற்றத் தொழிற்சாலைகளில் வாரத்திற்கு 60 மணி நேரத்திற்கு மேலும் வேலை செய்யக் கூடாதென இச் சட்டம் வற்புறுத்தியது. பழைய தொழிற்சாலைச் சட்டங்களை எல்லாம் சீர்திருத்தி இச் சட்டம் ஒன்ருகப் பிணைத்தது.

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக்கழகங்களின் நடத்தைகளை ஆராய இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அக் குழுக்களுடைய சிபார்சுகளின்படி 1878ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அச் சட்டப்படி ஒருவர் அவர் ஆயுள் முழுவதுக்கும் அப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி உறுப்பினராக (Fellowship) நியமிக்கப்படக் கூடாதென்றும், திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கும் ஆட்சி உறுப்பினரை நம்பியிருக்க வேண்டியதில்லை என்றும் வற்புறுத்தப்பட்டது. அத்துடன் வரிகளிலிருந்து ஒரு சிறு பங்கைப் பெறவும் பல்கலைக்கழகங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது.

இங்ஙனம் டிஸ்ரேலியின் அமைச்சரவை பல நல்ல சீர்திருத்தங்களை நாட்டில் புகுத்தியது. விக்கு கட்சியைப் போல் சீர்திருத்தங்களை விரும்பாத இவரது கட்சியின் அமைச்சரவை இத்தகைய சீர்திருத்தச் சட்டங்களை இயற்றி முன்னேற்றப் பாதையில் நடைபோட்டது உண்மையிலேயே போற்றுதற்குரியதாகும்.

பேரரசுக் கொள்கை

டிஸ்ரேலி ஒரு பேரரசுக் கோட்பாட்டு ஆதரவாளராவர். ஒரு பெரும் பரந்த பேரரசின் நடுநாயகமாக இங்கிலாந்து திகழ வேண்டும் என்பது டிஸ்ரேலியின் ஆசையாகும். அதே சமயத்தில் குடியேற்ற நாடுகளைப் புறக்கணிக்கவும் அவர் விரும்பவில்லை. பேரரசுக் கொள்கையின் காரணமாகவே அவர் சூயஸ் கால்வாயின் பங்குகளை (Shares) வாங்கினார். 1866—1869-ல் சூயஸ் கால்வாய் கம்பெனி அக் கால்வாயைக் கட்டியது. அக் கம்பெனியின்

4,00,000 பங்குகளில் கெடீவ் இஸ்மாயில் (Khedieu Ismail) என்ற எகிப்தியர் 1,76,000 பங்குகளைப் பெற்றிருந்தார். 1875 ஆம் ஆண்டில் அவர் தம் பங்குகளை விற்பதாக டிஸ்ரேலி அறிந்தார். ஆகவே, டிஸ்ரேலி பாராளுமன்றத்தின் அனுமதிக்காகக் காத்திருக்காமல், அரசாங்கத்தின் சார்பில் அப் பங்குகளை 39,76,582 பவுன்களுக்கு வாங்கினார். பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக அவர் காத்திருந்தாரேயானால் அப் பங்குகளை ஃபிரான்சு வாங்கியிருக்கும். இவர் ஃபிரான்சுக்கு முந்திக் கொண்டது இவரது சமயோசித புத்தியையே காட்டியது. இப் பங்குகளைப் பெற்றதனாலேயே 1882ஆம் ஆண்டில் இங்கிலாந்தால் எகிப்தைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முடிந்தது.

அதேபோல்தான் இந்தியாவிலும் ஓர் உத்தியைக் கையாண்டார். 'கோனாட்சி முறையில் நன்கு பழக்கப்பட்ட இந்தியர்கள், பாராளுமன்ற முறையைவிட அரசர் அல்லது அரசியைப் பெரிதும் விசுவாசிப்பார்கள்' என நினைத்து விக்டோரியா அரசியாரை இந்தியாவின் பேரரசியாக (Empress of India) 1876 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அறிவித்தார். இவ் வறிவிப்பு இந்தியரின் ராஜவிசுவாசத்தை மேலும் அதிகரித்தது.

வெளிநாட்டுக் கொள்கை

டிஸ்ரேலியின் வெளிநாட்டுக் கொள்கையே அவரின் உள்நாட்டுக் கொள்கையைக் காட்டிலும் அவருக்குப் பெயரையும் புகழையும் இங்கிலாந்தில் ஏற்படுத்தியது. கிளாட்ஸ்டனின் சமாதானக் கொள்கையில் பழகி சலிப்படைந்த (Fed up) ஆங்கில மக்கள் ஓர் உறுதியான வெளிநாட்டுக் கொள்கை நாட்டிற்குத் தேவையென வற்புறுத்தினர். ஆகவே, வெளிநாட்டுக் கொள்கையில் சில முக்கிய மாறுதலைச் செய்த டிஸ்ரேலி மக்களால் புகழப்பட்டார்.

டிஸ்ரேலி, இங்கிலாந்தின் பெருமையை வெளிநாடுகளில் நன்கு நிலைநாட்ட ஓயாது உழைத்தார். அயல்நாடுகள் பார்த்துப் பெருமைப்படத்தக்க வகையில் ஓர் ஆங்கிலப் பேரரசை உருவாக்கவும் அவர் பெரிதும் விரும்பினர். தென் ஆப்பிரிக்காவிலுள்ள எல்லா நாடுகளையும் ஓர் ஐக்கியமாக்கி, அதை ஆங்கில ஆதிக்கத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று டிஸ்ரேலி நினைத்தார். டிரான்ஸ்வால் (Transvaal) நாட்டைச் சார்ந்த போயர்களும் இவ் வைக்கியத்தில் சேரவேண்டும் என்று அவர் விரும்பினர். அவர்கள் இணங்காமல் போகவே படைகளுடன் சர் பார்டல் பிரிரி (Sir Bartel

Frere) அனுப்பப்பட்டார். பல போர்கள் நடைபெற்றன. அதன் பின் போயர்கள் தோற்கடிக்கப்பட்டதால் டிரான்ஸ்வால் நாட்டை இங்கிலாந்து கைப்பற்றியது.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரையில் ஓர் உறுதியான (Vigorous) வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டு மென்று டிஸ்ரேலி விருப்பம் கொண்டார். இவருடைய கொள் கையை நார்த் புருக் (North Brook) என்பவர் செயல்படுத்த மறுக்கவே அவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு, லிட்டன் பிரபுவை (Lord Lytton) அனுப்பி ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலும்படி அவரை டிஸ்ரேலி கேட்டுக் கொண்டார். லிட்டன் பிரபு ஆப்கான் அமீரை 'வெளிநாட்டுக் கொள்கைகளை ஆங்கில அதிகாரியின் ஆலோசனைகளுக்கேற்பவே நிர்ணயிக்க வேண்டுமென' வற்புறுத்தினார். அத்தகைய ஆங்கில அதிகாரி லிட்டன் பிரபுவால் வற்புறுத்தப்பட்டு காபூலில் நியமிக்கப் பட்டிருந்தார். ஆனால். அந்த அதிகாரியும் அவருடைய துணைவர் களும் அங்கு நடந்த கலகத்தில் கொல்லப்பட்டனர். இதனால் வெகுண்ட லிட்டன் பிரபு போரில் குதித்தார். அதுவே இரண் டாவது ஆப்கானியப் போர் என அழைக்கப்படுகிறது. அப் போரில் ஆப்கானியர் தோற்றனர். ஆகவே, டிஸ்ரேலியின் இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையால் இங்கிலாந்தின் மதிப்பு மேலும் உயர்ந்தது. அங்கு ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்குத் தடை விதிக்கப்பட்டது. அத்துடன் அங்கு அமைதியும் நிலைபெறச் செய்தது. ஆனால் சில மாதங்களிலேயே அங்கு லாரன்சு (Lawrence) என்பவரால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளால் பெருங் கலகங்கள் ஏற்பட்டன. அதனால் ஆங்கிலப் படைகள் வேறு வழியின்றிப் பின்வாங்கின.

தென் ஆப்பிரிக்காவில் போயர்களின் நாடான டிரான்ஸ்வால் ஆங்கில ஆதிக்கத்திற்குள் வந்தவுடன், அந் நாட்டோடு மோதிக் கொண்டிருந்த ஜுலு என்ற சுதேச மக்கள் ஆங்கிலேயரிடம் தங்கள் வழக்குகளை எடுத்துரைத்துத் தீர்க்கும்படி கூறினர். ஜுலு மக்களின் வேண்டுகோளை இங்கிலாந்து மறுக்கவே இரு தரப் பாருக்கும் போர் விளைந்தது. இசாண்டில்வானா என்னு மிடத்தில் ஜுலுக்கள் ஆங்கிலப் படைகளை முறியடித்தனர். ஆனால், இறுதியில் ஜுலுக்கள் தோற்கடிக்கப்பட்டு அவர்களுடைய தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதன் பின்னர் ஜுலுக்களின் பயம் தீர்ந்த போயர்கள் ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தனர். எனவே, போயர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் மீண்டும் போர் ஏற்பட்டது.

ஜுலுப்போர், ஆப்கானியப்போர் போன்றவைகளால் டிஸ்ரேலியின் அரசாங்கத்திற்கு மிகுதியான செலவுகள் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக நாட்டில் பணவறட்சி, வாணிப மந்தம், விவசாய நலிவு போன்றவைகள் ஏற்பட்டன. அதனால் ஆங்கில மக்கள் டிஸ்ரேலியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர், இதை கிளாட்ஸ்டன் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டார். 1880ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் டிஸ்ரேலியின் கட்சியினர் தோற்றனர். லிபரல் கட்சியினர் வெற்றி பெற்றனர். ஆகவே கிளாட்ஸ்டன் பிரதமராக்கப்பட்டார். கிளாட்ஸ்டனுக்குப் பிறகு 1885ஆம் ஆண்டு சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) பிரதமராக்கப்பட்டார். சாலிஸ்பரி பிரபு மூன்று முறை பிரதமர் பதவியை வகித்தார். 1885ஆம் ஆண்டிலிருந்து 1886ஆம் ஆண்டு வரையிலும் 1886ஆம் ஆண்டிலிருந்து 1892ஆம் ஆண்டு வரையிலும்; 1895ஆம் ஆண்டிலிருந்து 1902ஆம் ஆண்டு வரையிலும் சாலிஸ்பரி பிரபு இங்கிலாந்தை ஆட்சி செய்தார். சாலிஸ்பரியின் ஆட்சிக் காலத்தில்தான் 1901ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் விக்டோரியா மகாராணியார் காலமானார். இங்கிலாந்தும், பேரரசு நாடுகளும் மகாராணியாரின் மரணத்தைக் கேள்வியுற்று துயரக் கடலில் மூழ்கின. உண்மையில் விக்டோரியா மகாராணியார் ஒரு வல்லரசியாகவும் அதே நேரத்தில் மக்களின் ஆதரவைப் பெற்ற நல்லரசியாகவும் திகழ்ந்தார்.

விக்டோரியா மகாராணியார் காலத்தில் ஏற்பட்ட முக்கியச் சீர்திருத்தங்கள் :

1. ஒரே மதம்தான் நாட்டிலிருக்க வேண்டுமென்ற நிலை மாறிப் பல மதப் பிரிவுகள் பாதுகாப்புடன் இங்கிலாந்தில் வாழ வழியேற்பட்டது.

2. சோதனைச் சட்டங்களும் மாநகராட்சி சட்டங்களும் ஒழிக்கப்பட்டன.

3. தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

4. அயர்லாந்து மக்களுக்கு மத உரிமைகள் அளிக்கப்பட்டன.

5. பல தொழிலாளர் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

6. பல குடியானவர்கள் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

7. பல தொழிற் சங்கச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

8. பல தொழிற்சாலைச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

9. 1832ஆம் ஆண்டிலும் 1867ஆம் ஆண்டிலும் 1884ஆம் ஆண்டிலும் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

10. கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட்டது.

11. பல வாணிபச் சட்டங்களால் நாட்டின் வாணிபம் வளர்ச்சியடைந்தது.

12. பல சீர்திருத்தச் சட்டங்களால் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் சபை ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக மாறியது.

13. நாட்டில் இரு கட்சி முறை நன்கு உருவாயிற்று.

14. இரு கட்சி முறையினால் நாட்டில் கேபினெட் ஆட்சி வலுப் பெற்றது.

15. பல குடியேற்ற நாடுகள் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன.

16. தடையிலா வாணிபக் கொள்கை உருவாக்கப்பட்டது.

17. ஏழைகள் நலம் காக்க, பல சட்டங்கள் இயற்றப் பட்டன.

18. கேபினெட் யதேச்சாதிகாரம் இங்கிலாந்தில் நிலவிய போதிலும், உண்மையான பாராளுமன்ற ஆட்சி முறை இங்கிலாந்தில் ஏற்பட்டது.

19. சில குடியேற்ற நாடுகளுக்கு சுயாட்சி கொடுக்கப் பட்டது.

ஆகவே, விக்டோரியா மகாராணியார் காலத்தில் ஆக்கத் தொழில்கள் சிறப்புற்றன. விஞ்ஞானம் வளர்ந்தது; முடியரசின் மேன்மை பெருகியது; கட்சியாட்சியும் காபினெட் ஆட்சியும் வளர்ந்தன. குறைகளைவிட நிறைகளே அதிகம் காணப்பட்டதால் விக்டோரியா மகாராணியார் காலத்தை ஒரு பொற்காலம் எனவும் கூறலாம்.

22. ஏழாம் எட்வர்டு கால ஆட்சியும் அரசியலும்

(1901—1910)

விக்டோரியா மகாராணியார் 1901ஆம் ஆண்டில் இறந்த வுடன், அவர் மைந்தரான ஏழாம் எட்வர்டு ஆங்கில அரியணையில் அமர்ந்தார். அவர் 1841ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் ஆங்கில மகுடத்தை அடையும்போது 60 வயது நிரம்பியவரா யிருந்தார். 'அரசியலமைப்புக்குட்பட்ட அரசராகப் பணியாற்று வேன்' என்றும், 'எனது மூச்சு உள்ள வரை மக்களின் நன்மைக் காகவும் மேன்மைகளுக்காகவுமே செயல்படுவேன்' என்றும் அவர் பதவி யேற்கும்போது கூறியதால் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெரிதும் பெற்றார். எனவே, அவரது ஆட்சியை மக்கள் விரும்பி வரவேற்றனர்.

ஏழாம் எட்வர்டு வேல்ஸ் இளவரசராயிருந்தபோதே உலக முழுவதையும் சுற்றிப் பார்த்தவர். உலகத்தின் மூலை முடுக்கு களிலெல்லாம் அவர் தொடர்பு வைத்திருந்தார். 1874ஆம் ஆண்டு அவர் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது இங்கி லாந்தின் பிரதமராக இருந்த டிஸ்ரேலியின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்தார். 1876 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அவர் கல்கத்தாவில் ஒரு பெருந் தர்பாரை நடத்தினார். இந்த தர்பார் இந்தியரின் இராஜ விசுவாசத்தை மேலும் அதிகரித்தது. ஏழாம் எட்வர்டு ஐரோப்பியச் சுற்றுப் பயணங்களில் அடிக்கடி ஈடுபட் டார். மக்களிடையே அடிக்கடி தோன்றி அவர்களை மகிழ்வித் தார். ஆகவே, ஏழாம் எட்வர்டை 'ஐரோப்பாவின் மாமா' (Uncle of Europe) என்று மக்கள் அன்போடு அழைத்தனர். ஏழாம் எட்வர்டு உலகத்தில் அமைதியை நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டார். ஆகவேதான் அவர் 'அமைதியை ஏற்படுத்துபவர்' (Peace Maker) எனவும் அழைக்கப்பட்டார்.

விக்டோரியா மகாராணியார் இறக்கும்போது பிரதமராகப் பணியாற்றி வந்த சாலிஸ்பரி பிரபுவே ஏழாம் எட்வர்டு 1901ஆம்

ஆண்டில் அரியணை ஏறிய போதும் பிரதமராயிருந்தார். அப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் போர் கடுமையாக நடை பெற்று வந்தது. போயர்கள் கொரில்லாப் போர் முறையில் இறங்கலாயினர். போரிட்ட போயர் வீரர்களுக்குப் பண்ணைகளி லிருந்த போயர்கள் உதவி செய்ததால் அவர்களைத் தோற்கடிப்பது ஆங்கிலப் படைகளுக்கு மிகவும் கடினமாயிருந்தது. ஆகவே, ஆங்கிலப் படைகளின் துணைத் தலைவராயிருந்த கிச்சனர் என்பவர் ஒவ்வொரு பண்ணையாக அழித்தார். அப் பண்ணைகளி லிருந்த மக்களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பாசறைகளில் அடைத்தார். 14 மாதங்களில் சுமார் 20,000 போயர்களைக் கொன்றார். இக் கொடுமைகளைப் பொறுக்க முடியாத போயர்கள் ஆங்கிலேயருக்குப் பணிந்தனர். ஆகவே, அப் போர் 1902ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிந்தது. சாலிஸ்பரி பிரபுவின் தென் ஆப்பிரிக்காவின் கொள்கையை மக்கள் குறை கூறினர். அவரது பேரரசுக் கொள்கையும் கடுமையான எதிர்ப்புக்குட்பட்டது. ஆகவே, சாலிஸ்பரி பிரபு தம் பதவியை 1902ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ராஜிநாமா செய்தார். அத்துடன் அரசியலிலிருந்தும் நீங்கினார். அவருக்குப் பின் அவர் மைத்துனரான சர் ஜேம்ஸ் பால்ஃபர் (Sir James Balfour) என்பவர் இங்கிலாந்தில் பிரதமரானார்.

பால்ஃபரின் அமைச்சரவை (1902—1905)

சர் ஜேம்ஸ் பால்ஃபர் ஒரு திறமையான எழுத்தாளர்; தத்துவ அறிஞர்; கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்தவர். அவர் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றலைப் பெற்றிருந்தார். தன் கட்சிக் கொள்கைகளையும் மீறி நல்ல சில சட்டங்களையும் கொணர்ந் தார். மற்றக் கட்சியினரோடும் நல்ல முறையிலே பழகினார். ஆஸ்க்வித், ஹால்டேன் போன்ற தாராளக் கொள்கையினரின் நண்பராகத் திகழ்ந்தார். பால்ஃபர் பாரபட்சமற்ற முறையில் நிர்வாகத்தை மேற்கொண்டார்.

சமதர்மக் கொள்கை

பால்ஃபர் காலத்து இங்கிலாந்தில் சமதர்மக் கொள்கை (Socialism) வளர ஆரம்பித்தது. சமதர்மக் கொள்கையை வரை யறுப்பது என்பது மிகவும் கடினமாகும். சமதர்மக் கொள்கையைப் பலர் பலவிதமாக இடத்திற்குத் தகுந்தாற்போல் விவரித்திருக் கிறார்கள். டாக்டர் ஸ்சேடுவெல் (Dr. Schadwell) என்பவர் 'சமதர்மக் கொள்கை சூழ்நிலைகளுக் கேற்றவாறு மாறுபடும்' என்று கூறியிருக்கின்றார். இருந்தபோதிலும் கார்ல்மார்க்ஸ்

(Karlmarx), ஏஞ்சல்ஸ் (Engles) போன்ருேர் சமதர்மக் கொள்கையைப் பற்றித் தங்களது கொள்கை விளக்க அறிக்கையில் (Manifesto) வரையறுத்துக் கூறியிருக்கின்றனர்.

சமதர்மக் கொள்கை பல இன்றியமையாத கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. (1) தனி மனிதனின் நலத்தைக் காட்டிலும் சமூகத்தின் நலனையே பெரிதும் சமதர்மக் கொள்கை வற்புறுத்துகின்றது. (2) சமதர்மக் கொள்கையின் நோக்கம் முதலாளித்துவத்தை (Capitalism) ஒழிப்பதே யாகும். முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரியாகக் கருதப்படுகின்றது. முதலாளித்துவத்தை வேரோடு அழித்தால்தான் அதன் கொடுங்கோன்மையிலிருந்து மக்கள் காப்பற்றப்படுவார்கள் என்று சமதர்மக் கொள்கை கூறுகின்றது. (3) சமதர்மக் கொள்கைப் போட்டியை (Competition) ஒழிக்கும் நோக்கமுடையது. (4) அது சமத்துவத்தை ஏற்படுத்தும் குறிக்கோளுடையது. (5) தனியார் சொத்துகளை ஒழித்து அவைகளை நாட்டுடைமையாக்கும் நோக்கமுடையது. இயற்கையால் அளிக்கப்பட்ட நிலத்தைத் தனி மனிதன் தன் சொந்த தேவைக்காக அனுபவிக்க உரிமையற்றவன் என சமதர்மக் கொள்கை செப்புகின்றது. (6) சமதர்மக் கொள்கை தனியார் தொழில் நிறுவனங்களை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்று கூறுகின்றது. ஆகவே, உற்பத்திக்குக் காரணமான எல்லாவற்றையும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமென்று சமதர்மக் கொள்கை கூறுகின்றது. இத்தகைய கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமானுல் அரசு தயங்காமல் வன்முறையையும் பயன்படுத்த வேண்டுமென்று கார்ல்மார்க்ஸ் போன்ற அறிஞர்கள் கூறிவந்தனர்.

இங்கிலாந்தில் சர் ராபர்ட் ஓவன் (Sir Robert Owen) என்பவர் சமதர்ம இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவ்வியக்கம் நாளுக்கு நாள் வலுப் பெற்று வந்தது. ஆகவே, சர் ராபர்ட் ஓவன் 'ஆங்கில சமதர்மக் கொள்கையின் தந்தை'யென அழைக்கப்பட்டார். இவர் ஒரு குதிரைத் தளவாடப் பணியாளரின் மகனுவார். தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிப் படிக்க இவர் பெருவிருப்பம் கொண்டிருந்தார். தமது ஒன்பதாவது வயதிலேயே பள்ளியை விட்டகன்ருர். தொழிற் புரட்சியின் காலத்தில் உழைத்துச் சம்பாதித்தார். பின்னர் பஞ்சாலையின் அதிபரானுர். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் நல்ல ஊதியங்களை அளித்தும் நல்ல இலாபத்தையடைந்தார். கூட்டுறவுக் கிராமங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வேலையில்லாதோரின் துயர்களைத் துடைக்கலாம் என்பதைப் பெரிதும் ஆதரித்து வந்தார். சமூகத்தில்

காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு மனம் வருந்தினர். தனிப்பட்டோரது உடைமைகளை எல்லாம் ஒழித்து அவற்றை யெல்லாம் அரசாங்க உடைமையாக்கிவிட வேண்டுமென்றும், அப்பொழுதுதான் நாட்டில் காணும் ஏற்றத் தாழ்வுகள் நீங்கும் என்றும் பிரச்சாரம் செய்தார். ஆகவே, நாட்டில் சமதர்மக் கொள்கையாளர்கள் பெருகினர். கார்ல் மார்க்ஸ் என்பார் கூறிய படி தனி உடைமைகளை வன்முறை மூலம் கைப்பற்றும் கொள் கையை ஆங்கில சமதர்மவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை,

சிட்னி வெப் (Sydney Webb), ஜார்ஜ் பெர்னட் ஷா (George Barnard Shaw), சிட்னி ஆலிவர் (Sydney Oliver), கிரஹாம் வாலஸ் (Graham Wallas), அன்னி பெசன்ட் (Mrs. Anne Besent) போன்றோர் இங்கிலாந்தில் 1884ஆம் ஆண்டில் ஃபேபியன் சமூகம் (Fabian Society) என்ற ஓர் அமைப்பை நிறுவினர். அச் சமூகம் சமதர்மக் கொள்கையாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. ஃபேபியன் சோஷலிஸ்டுகள் என்ற ஆங்கில சமதர்ம வாதிகள் புரட்சியை நம்பாமல் வளர்ச்சியில் (Evolution) நம்பிக்கை கொண்டிருந்தனர். வன்முறைகளைத் (Violent Methods) தவிர்த்து சட்ட வழியான அரசாங்கத்தின் மூலம் படிப்படியாக சமதர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதே அவர்களின் குறிக்கோளாகும்.

தொழிற் கட்சியின் தோற்றம்

சமதர்மத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டுமானால் அரசாங் கத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென சமதர்ம வாதிகள் நினைத்தனர். அதற்காக 'சுதந்திரத் தொழிற்கட்சி' (Independent Labour Party) என்ற கட்சியை அவர்கள் ஆரம் பித்தனர். கேர் ஹார்டி (Keir Harde) என்பவர் அக் கட்சியின் தலைவராயிருந்தார். 1899ஆம் ஆண்டில் நடைபெற்ற தொழிற் சங்க மாநாட்டில், தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டி அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆகவே 1900ஆம் ஆண்டில் தொழிற் கட்சியானது (Labour Party) தோற்றுவிக்கப்பட்டது. கேர் ஹார்டி அக் கட்சியின் முதல் தலைவரானார். பிலிப் ஸ்நோடன் (Philip Snowdern), ஜேம்ஸ் ராம்சே மாக்டனால்டு (James Ramsay Macdonald) போன்றவர்கள் அக் கட்சியின் சிறந்த உறுப்பினர்களாகத் திகழ்ந்தனர். தொழி லாளர்களின் நலன்களுக்கென்றே தனிப்பட்ட கட்சி தோன்றியது இக் காலத்திலேயேயாகும்.

பிரதமர் பால்ஃபரின் உள்நாட்டுக் கொள்கை

பிரதமர் பால்ஃபர் தம் உள்நாட்டுக் கொள்கையை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலே வகுத்தார். அதற்காகத் தம் கட்சிக் கொள்கைகளைக் கூட அவர் சரிவர கடைப்பிடிக்க வில்லை. 1902ஆம் ஆண்டில் பிரதமர் பால்ஃபர் கல்வியைச் சீர்திருத்தவேண்டி கல்விச் சட்டம் (Education Act) ஒன்றைக் கொண்டு வந்தார். 1870ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் தமது கல்விச் சட்டத்தால் 'ஆரம்பக் கல்வி' நாடெங்கும் பரவு வதற்கு ஏற்பாடு செய்தபோதிலும் உயர்தரக் கல்வியை அவர் தொடாமலேயே விட்டுவிட்டார். அதனால் ஆங்கிலேயர் ஸ்விட்சர் லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் காணப்பட்ட உயர்தரக் கல்வியைப் போல் தங்கள் நாட்டிலும் உயர்தரக் கல்வியைச் சீர்திருத்தியமைக்க வேண்டுமெனக்கருதினர். சமய நிறுவனங்கள் நடத்திய பள்ளிகளும், பொதுப் பள்ளிகளும் பணம் படைத் தோருக்கே கல்வி அளித்து வந்தன. வசதியற்ற ஏழைகள் உயர்தரக் கல்வி பெற இயலாமல் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். இத்தகைய கல்விமுறை சீர்திருத்தப்பட வேண்டுமெனப் பலர் கூறி வந்தனர். ஆகவே, 1902ஆம் ஆண்டில் துணிவுடன் பிரதமர் பால்ஃபர் உயர்தரக் கல்விச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இச் சட்டம் 1810ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக் குழுக்களை (School Boards) ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக உயர்தரக் கல்வியைக் கவுன்டி கவுன்சில் (County Council), பரோ கவுன்சில் (Borough Council) போன்ற தல ஆட்சி சபைகளிடம் ஒப்படைத்தது. அரசாங்க உதவி பெற்ற பள்ளிகள் அனைத்தும் தல ஆட்சி சபைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. ஆகவே, மத வேறுபாடு இன்றியும் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இன்றியும் எல்லோருக்கும் உயர்தரக் கல்வி அளிக்கப் பட்டது. அத்துடன் கல்வி புகட்டும் பல்கலைக்கழகம் ஒன்றும் பால்ஃபரால் இலண்டனில் ஏற்படுத்தப்பட்டது.

1904ஆம் ஆண்டில் பால்ஃபரின் அமைச்சரவை 'தகுதிச் சான்றிதழ் சட்டம்' (Licensing Act) என்ற ஒரு சட்டத்தையும் இயற்றியது. இச் சட்டம் மதுபானம் அருந்தும் வழக்கத்தைக் கட்டுப்படுத்தியது. ஒழுங்காக நடைபெறாத பல மதுபானச் சாலைகள் இச் சட்டத்தால் மூடப்பட்டன. மதுபானச் சாலைகளைத் திறக்க அனுமதி வழங்கும் அதிகாரம் குவார்ட்டர் செர்ஷன்கள் (Quarter Sersions) என்ற தல நீதிமன்றங்களுக்கு அளிக்கப் பட்டன. மது உற்பத்தி செய்யும் பல செல்வாக்கு மிக்க பணக் காரர்களின் எதிர்ப்பை பால்ஃபரின் அமைச்சரவை இச் சட்டத்

தால் தேடிக் கொண்ட போதிலும். மதுபானச் சாலைகளால் ஏற்பட்ட ஊழல்கள் ஒடுக்கப்பட்டன.

1903ஆம் ஆண்டில் நிலம் வாங்கும் சட்டம் (Land Purchase Act) ஒன்று அயர்லாந்தில் கொண்டு வரப்பட்டது. அயர்லாந்தில் நிலம் வாங்கும் குடியானவர்களுக்குக் கடன் வழங்க 100 மிலியன் பவுன்களை பால்ஃபரின் அரசாங்கம் அயர்லாந்துக்குக் கடனாக வழங்கியது.

பிற ஐரோப்பிய நாடுகளினால் ஏற்படக் கூடிய அபாயத்திலிருந்து இங்கிலாந்தைக் காப்பாற்ற வேண்டுமானால் தாய் நாட்டையும், குடியேற்ற நாடுகளையும் நெருக்கமாகப் பிணைக்க வேண்டுமென்று பால்ஃபரின் அமைச்சரவையில் திறமையும் செல்வாக்கும் மிக்க சேம்பர்லின் (Chamberlain) என்பார் பால்ஃபருக்குக் கூறி வந்தார். அதற்காக அவர் ஒரு திட்டத்தை வகுத்தார். குடியேற்ற நாடுகளுக்குப் பேரரசு தனிச் சலுகைகள் (Imperial Preferences) என்ற சுங்க வரிச் சலுகைகள் அளிப்பதே அத் திட்டமாகும். பேரரசு நாடுகளுக்குச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமானால் வெளிநாட்டுத் தானியங்களின் மீது ஒரு சிறு இறக்குமதி வரியை விதிக்க வேண்டுமென்று சேம்பர்லின் கூறினார். தடையிலா வாணிபக் கொள்கைக்குக் கேடு வரும் என்று கருதி இதைத் தாராளவாதிகள் எதிர்த்தனர். ஆனால் அமைச்சரவையில் அனைவரும் இதை ஏற்றுக் கொண்டதால் 1902 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தானியங்கள்மீது ஒரு சிறு வரி விதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு சேம்பர்லின் வெளிநாட்டிற்குச் சென்றார். அப்பொழுது பீச் (Beach) என்னும் அமைச்சர் ராஜிநாமா செய்தார். அவருக்குப் பதிலாக ரிட்சி (Ritchie) என்பவர் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் உடனேயே தானியங்கள் மீது விதித்திருந்த வரியை ரத்து செய்தார். வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த சேம்பர்லின் இதையறிந்து மிகவும் கோபமுற்றுத் தமது பதவியை ராஜிநாமா செய்தார். சுங்கவரித்திட்டம் சீர்திருத்தப்பட்டால்தான் தாம் பதவியில் நீடிக்க முடியும் என்று சேம்பர்லின் கூறிவிட்டார். சேம்பர்லினுடைய சுங்கவரி சீர்திருத்தத்தைப் பலர் எதிர்த்தனர். ஆகவே, பால்ஃபர் சேம்பர்லின் ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டார். உணவுப்பொருட்களன்றி மற்றவைகளின்மீது சுங்க வரி விதிக்க, தாம் யோசிப்பதாக பிரதமர் பால்ஃபர் கூறினார். அதைக்கேளாது இறக்குமதியாகும் எல்லாப் பொருட்களின் மீதும் வரி போட வேண்டுமென்று கூறிக் காப்பு வரி சீர்திருத்தக் கழகம் (Tariff Reform League) ஒன்றை சேம்பர்லின் ஆரம்

பித்தார். நாளுக்கு நாள் அவருக்கு ஆதரவு பெருகிக் கொண்டே வந்தது.

பால்ஃபரின் வெளிநாட்டுக் கொள்கை

'கண்ணியமிக்க தனிமை' (Splendid Isolation) என்ற கொள்கையை இதுகாறும் பின்பற்றி வந்த இங்கிலாந்து, அது ஒரு அபாயமிக்க கொள்கை என்பதை உணர ஆரம்பித்தது. பால்ஃபரின் காலத்தில்தான் அக் கொள்கை 1902ஆம் ஆண்டில் முதன் முதலாக ஜப்பானேடு ஒரு கூட்டுறவு உடன்படிக்கையைச் (Treaty Alliance) செய்து கொண்டதால் கைவிடப்பட்டது. அக் கூட்டுறவு உடன்படிக்கையின்படி

1. இங்கிலாந்தும் ஜப்பானும், சீனு கொரியா ஆகிய நாடுகளில் ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்று ஒப்புக் கொண்டன. அத்துடன் அந்த இரு நாடுகளிலும் இதுகாறும் உள்ள நிலையையே (Status Quo) நிலை நிறுத்துவதாக இங்கிலாந்தும் ஜப்பானும் ஏற்றுக் கொண்டன.

2. இங்கிலாந்துக்கு சீனுவிலும், ஜப்பானுக்கு சீனு கொரியா ஆகிய இரு நாடுகளிலும் பற்றுகள் (Interests) இருப்பதாக இங்கிலாந்தும் ஜப்பானும் ஏற்றுக் கொண்டன. அப் பற்றுகளுக்கு வெளிநாட்டு ஆக்கிர மிப்பாலோ அல்லது உள்நாட்டுக் குழப்பங்களாலோ ஆபத்து நேர்ந்தால், அவைகளைப் பாதுகாக்க வேண்டி தக்க நடவடிக்கைகளை ஒவ்வொரு நாடும் எடுத்துக் கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டது.

3. அப் பற்றுகளைக் காப்பாற்ற வேண்டி இங்கிலாந்தோ அல்லது ஜப்பானே மற்ற எந்த நாட்டோடு போர் செய்ய நேர்ந்தாலும், போர் செய்யும் நாடு தவிர மற்ற நாடு நடுநிலை வகிக்க வேண்டுமென்றும், அப் போரில் மற்ற எந்த நாடும் கூட்டுறவு நாட்டிற்கு எதிராகச் செயல்படாமல் தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. ஒரு கூட்டுறவு நாட்டிற்கு எதிராக அப் போரில் மற்ற நாடுகள் கலந்து கொண்டால், மற்றக் கூட்டுறவு நாடு அக் கூட்டுறவு நாட்டின் உதவிக்கு வரவேண்டு மென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5. இங்கிலாந்தும் ஜப்பானும் மற்ற எந்த நாட்டோடும் தனியான உடன்படிக்கை, ஒன்று மற்றொன்றோடு கலக்காமல். செய்து கொள்ளக் கூடாதென்றும் ஒப்புக் கொண்டன.

6. ஒரு நாட்டின் பற்றுக்கு அங்கு ஆபத்து நேரக் கூடிய நிலைமை ஏற்பட்டால் மற்ற நாடு உடனடியாக அவ் வாபத்தைப்பற்றி அந் நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டு மென்றும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

இவ் வுடன்படிக்கை உடனடியாகச் செயலுக்கு வரும் என்றும் ஐந்து ஆண்டுகளுக்கு அது செயல் முறையில் இருக்குமென்றும் இரு நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

1902ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வாங்கிலோ - ஜப்பானிய உடன்படிக்கை 1905ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. இக் கூட்டுறவு 1923ஆம் ஆண்டு வரை நீடித்தது. இந்தக் கூட்டுறவு உடன்படிக்கையால் இங்கிலாந்து பல நன்மைகளை யடைந்தது. தூரக் கிழக்கில் ரஷ்யா முன்னேறாமல் தடுக்க இங்கிலாந்திற்கு வசதியேற்பட்டது. அத்துடன் பசிபிக் மகா சமுத்திரத்தில் ஜெர்மனி தனது கப்பற் படையை மேலும் வெகு வேகமாகப் பெருக்கிக் கொண்டிருப்பது இங்கிலாந்திற்கு அச்சத்தை உண்டாக்கியது. ஆனால் ஜப்பானோடு உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு அந்த அச்சம் நீங்கியது. ஏனெனில் பசிபிக்கில் ஜப்பான் ஒரு வலிமை மிக்க நாடாக விளங்கியது. இக் கூட்டுறவு உடன்படிக்கை ஜப்பானுக்கும் பெரிதும் உதவியது. ஜப்பா னுடைய நிலையை இவ் வுடன்படிக்கை உயர்த்தியது. இவ் வுடன்படிக்கையால் உலகத்தின் வலிமைமிக்க நாடுகளின் சம நிலையை ஜப்பான் அடைந்தது எனக் கூறலாம். ஆகவே, ஜப்பானின் நாடுபெருக்கும் எண்ணத்திற்கு இவ் வுடன்படிக்கை உற்சாக மூட்டியது.

பால்ஃபரின் அரசாங்கம் ஜப்பானோடு மட்டும் உடன்படிக்கை செய்து கொண்டதனால் முழு திருப்தியடையவில்லை. ஜெர்மனியின் அச்சுறுத்தல் அதிகமாகவே, நண்பர்களைத் தேடும் முயற்சியில் இங்கிலாந்து பெரிதும் ஈடுபட்டது. 1903ஆம் ஆண்டில் ஏழாம் எட்வர்டு அரசர் ஃபிரான்சுக்குச் சென்றார்; அப்பொழுது அவர் மகத்தான முறையில் அங்கு வரவேற்கப்பட்டார். எட்வர்டும் ஃபிரான்சை நேசித்தார். ஆகவே, இரு நாடுகளும் நட்புக் கொள் வதற்கேற்ற ஒரு மனநெகிழ்ச்சியான சூழ்நிலை உருவானது.

அதற்குத் தகுந்தாற்போல் ஃபிரான்சு நாட்டின் ஜனாதிபதி லேபெட்டும் (Loubet) இங்கிலாந்திற்கு வருகை தந்தார். இரு நாடுகளுக்குமுள்ள வேற்றுமைகளைப் பற்றி இரு நாட்டு பிரமுகர்களுக்கிடையேயும் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பால்ஃபரின் வெளிநாட்டமைச்சராயிருந்த லான்ஸ்டௌன் (Lands, downe) பிரபுவின் அரிய முயற்சியால் 1904ஆம் ஆண்டில் ஆங்கில - ஃபிரெஞ்சு நேச ஒப்பந்தம் (Anglo-French Entente) ஏற்பட்டது. இவ் வொப்பந்தத்தின்படி குடியேற்ற நாடுகளில் ஆங்கிலேயருக்கும் ஃபிரெஞ்சுக்காரருக்கும் இருந்த எல்லைத் தகராறுகள் தீர்க்கப்பட்டன. இத்தகைய பால்ஃபரின் வெளி நாட்டுக் கொள்கைகளால் இங்கிலாந்து நல்ல பலன்களைப் பெற்றது.

பால்ஃபர் அமைச்சரவையின் வீழ்ச்சி

பால்ஃபர் அமைச்சரவைக்கு நாளுக்குநாள் எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வந்தது. சேம்பர்லின் காப்புவரி சீர்திருத்தக் காரர்கள் பால்ஃபரைச் சாடினர், அத்துடன் கன்சர்வேடிவ் கட்சியில் சிலரும் காப்புவரி சீர்திருத்தத்தை ஆதரித்தனர். தொழிலாளர்களின் எதிர்ப்பும் பால்ஃபர் அமைச்சரவைக்குத் தொல்லை கொடுத்து வந்தது. இவைகளைக் கண்ட பால்ஃபர் 1905ஆம் ஆண்டில் ராஜினாமா செய்தார். 1906ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பால்ஃபரின் கட்சியான கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வி யடைந்தது. தாராளக் கட்சியினர் (Liberals) மகத்தான வெற்றியைப் பெற்றனர். அக் கட்சியின் தலைவர் கேம்பல் பானர்மென் பிரதமராக நியமிக்கப் பட்டார்.

கேம்பல் பானர்மேனின் அமைச்சரவை (1905-1908)

1906ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி பெரும் வெற்றி பெற்றதால், அக் கட்சியின் தலைவர் கேம்பல் பானர்மேன் (Campbell Bannerman) பிரதமராகப் பதவியேற்றார். பொதுமக்கள் சபையில் மற்றக் கட்சிகளைக் காட்டிலும் 84 உறுப்பினர்களை அதிகமாக லிபரல் கட்சி பெற்றிருந்ததனால், கேம்பல் பானர்மேன் ஓர் வலிமைமிக்க அமைச்சரவையை ஏற்படுத்தினார். அவ் வமைச்சரவையில் ஆஸ்க்வித் (Asquith) என்ற அறிஞர் கருவூலத் தலைவராகவும், சர் எட்வர்டு கிரே (Sir Edward Grey) என்ற தாராளக் கொள்கையில் பிடிப்புள்ளவர் வெளிநாட்டமைச்சராகவும், ஹால்டேன் போர் அமைச்சராகவும், லாயிட் ஜார்ஜ் (Lloyd George) வாணிபக் குழு

அமைச்சராகவும், பர்ன்ஸ் (Burns)என்ற தொழிற் கட்சித் தலைவர் தல ஆட்சிக் குழு தலைவராகவும், மார்லி (Marley) என்பவர் இந்திய அமைச்சராகவும் இடம் பெற்றிருந்தனர். கேம்பல் பானர் மேனுக்குத் தன் கட்சியின் முழுஆதரவு இருந்ததோடல்லாமல் தொழிற்கட்சி, ஐரிஷ் கட்சி ஆகியவைகளின் ஆதரவும் இருந்து வந்தது. இப் பெரும் ஆதரவு அவருக்கு இருந்ததனால் நம்பிக்கை யோடு பல சீர்திருத்தங்களைச் செய்ய முன் வந்தார். அச் சீர்திருத் தங்களால் மக்களின் பொதுநலம் வளர்ந்தது.

1906ஆம் ஆண்டில் தொழில் தகராறுகள் சட்டம் (The Trade Dispute Act) ஒன்றை கேம்பல் பானர்மேனின் அமைச் சரவை கொண்டுவந்து நிறைவேற்றியது. 1871, 1875ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் தொழிற்சங்க உரிமைகளை வளர்த்தன வென்றாலும், அவைகளை நீதிபதிகள் திரித்துப் பொருள் செய்ததன் விளைவாகப் பல தொழிற் சங்கங்கள் தொல்லைகளை அனுபவிக்க நேரிட்டது. வேலை நிறுத்த நஷ்ட ஈட்டிற்குத் தொழிற்சங்கங்கள் பொறுப்பாளிகளல்ல என்று அச் சட்டங்கள் கூறியபோதிலும் நீதிபதிகள் தொழிற் சங்கங்களே பொறுப்பாளிகள் எனத் திரித்துத் தீர்ப்புக் கூறினர். அதனால்தான் இவ் வித அநீதியைப் போக்க பானர்மேன் இச் சட்டத்தைக் கொணர்ந்தார். எந்தவித நீதிமன்றமும் தொழிற்சங்கங்களைச் சதிக் குற்றங்களுக்கும் அவற்றிற்குரிய தண்டனைகளுக்கும் உட்படுத்தக் கூடாதென்றும், வேலை நிறுத்தங்களால் ஏற்படும் சேதங்களுக்குத் தொழிற் சங்கங்களிடமிருந்து நஷ்டஈடு கேட்க லாகாதென்றும் இச் சட்டம் கூறியது. ஆகவே, தொழில் தகராறு களால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து தொழிற்சங்கங்கள் இச் சட்டத்தால் காப்பாற்றப்பட்டன.

1906ஆம் ஆண்டிலேயே தொழிலாளர் நலன் கருதி தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் (The Workman's Compensation Act) ஒன்றும் அவரது அமைச்சரவையால் கொண்டுவரப் பட்டது. தொழிலாளிகள் பணி செய்யும்போது விபத்துக்கள் ஏற்பட்டால் அதற்கு வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை முதலாளிகள் அளிக்க வேண்டுமென்று இச் சட்டம் கூறியது.

1906ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மற்றொரு சட்டம் முறைப்படி உற்பத்தியின் புள்ளி விவரத்தைச் சேகரிக்க வகை செய்தது. இதேயாண்டு இயற்றப்பட்ட உணவுக்கு வகை செய் யும் சட்டத்தால் (The Provision of Meals Act) பள்ளிக்கு வரும் குழந்தைகள் அனைவருக்கும் உணவளிக்க வகை செய்யப்பட்டது.

1907ஆம் ஆண்டு பானர்மேனின் அமைச்சரவையால் மருத்துவ மேற்பார்வைச் சட்டம் (Medical Inspection Act) ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி இங்கிலாந்திலுள்ள குழந்தைகள் அனைவரும் மருத்துவ வழியாகப் பரிசோதிக்க வகை செய்யப் பட்டது. 1908ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குழந்தைகள் சட்டம் (The Children's Act) குழந்தைகளுக்குப் பல வகையிலும் பாதுகாப்பு அளித்தது. அத்துடன் இளங் குற்றவாளிகளைப் (Juvenile Criminals) பற்றிய பிரச்சினைகளை ஆராயவும் வகை செய்யப்பட்டிருந்தது. 1908ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மற்றொரு சட்டத்தால் சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர் களின் வேலை நேரம் ஒரு நாளைக்கு எட்டு மணியாக நிர்ணயிக்கப் பட்டது.

1907ஆம் ஆண்டில் படையைத் திருத்தியமைக்க வேண்டி படைச் சட்டம் (The Army Act) ஒன்று கொண்டுவரப்பட்டது. அதன்படி சேனைக்கென்று ஒரு நிரந்தரமான பொது சிப்பந்திகளின் நிறுவனம் (General Staff) ஏற்படுத்தப்பட்டது அத்துடன் ஆறு காலாட்படைகளோடு ஒரு குதிரைப்படைப் பிரிவினையும் சேர்த்து ஒரு படையெடுப்புச் சேனையானது (Expeditionary Force) அமைக்கப்பட்டது. ஆங்காங்கே இருந்த தொண்டர் படையையும் சிறு நிலக்கிழார்களையும் ஒன்று சேர்த்து பிராந்தியப் படை (Territorial Force) உண்டாக்கப்பட்டது. இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிப் படைகளை (Officer Training Corps) பல்கலைக் கழகங்களிலும், உயர்தரப் பள்ளிகளிலும் தோற்று விக்கப்பட்டது. போர் அமைச்சருக்கு ஆலோசனை கூற இராணுவ நிபுணர்களடங்கிய படைக் கவுன்சில் (Army Council) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. 1907ஆம் ஆண்டில் சிறு நில வுடைமைச் சட்டம் (The Small Holdings Act) ஒன்று பானெர் மேனின் அமைச்சரவை கொண்டுவந்து நிறைவேற்றியது. அதன்படி சிறு விவசாய நிலங்களை யாராவது வாங்க விரும்பினால், அவைகளை அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும்படி கவுண்டி கவுன்சில்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதற்காக கட்டாயப் படுத்தி நிலத்தை வாங்கும் அதிகாரம் இக் கவுன்சில்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதன் காரணமாக நாட்டில் சிறுசிறு விவசாய நிலவுடைமைகள் ஏற்படலாயின.

பானர்மேன் அமைச்சரவை மேலும் பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொணர்ந்து பிரபுக்கள் சபையின் எதிர்ப்பால் கைவிட நேர்ந்தது. 1906ஆம் ஆண்டில் மத நிறுவனங்களால் நடத்தப் பெற்ற பள்ளி நிறுவனங்களை அரசாங்கத்தின் கட்டுப்

பாட்டிற்குள் கொண்டு வர ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் பிரபுக்கள் சபை அதைத் தோல்வியுறச் செய்தது. 1908ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பன்மை வாக்களிப்பு ஒழிப்பு மசோதாவும் (The Abolition of Plural Voting Bill) அதே கதியடைந்தது. 1907ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஸ்காட்லாந்து நிலச்சட்ட மசோதாவையும் பிரபுக்கள் சபை நிராகரித்தது. சீர்திருத்தச் சட்டங்களுக்குப் பிரபுக்கள்சபை முட்டுக்கட்டை போடுவதையறிந்த பிரதமர் பானர்மேன், 'சட்டங்களை நிறுத்தி வைக்கும் உரிமை மட்டுமே (Suspensory Veto) பிரபுக்கள் சபைக்கு இருக்கவேண்டு மென்ற ஒரு தீர்மானத்தை 1907ஆம் ஆண்டில் கொண்டுவந்தார். ஆனால் அத் தீர்மானம் நிறைவேறவில்லை.

கேம்பல் பானர்மேன் பிரதமராயிருந்தபோதுதான் ஆப்பிரிக்க போயர் நாடுகளுக்கு சுயாட்சி வழங்கினார். மேலும் பல சீர் திருத்தக் கருத்துக்களைக் கொண்ட பானர்மேன் 1908ஆம் ஆண்டில் திடீரென மரணமடைந்தார். ஆகவே, அதேயாண்டில் பானர்மேன் அமைச்சரவையில் கருவூலத் தலைவராயிருந்த ஆஸ்க்வித்தே பிரதமரானார்.

ஆஸ்க்வித் அமைச்சரவை (1908-1911)

ஆஸ்க்வித் அமைச்சரவையை அமைத்தவுடனேயே முதி யோருக்கு உதவிப் பணம் அளிக்கும் சட்டம் (The Old Age Pensioner's Act) ஒன்றைக் கொண்டு வந்தார். இச் சட்டத்தின் படி 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர் அனைவரும் வாரம் ஒன்றுக்கு 5 ஷில்லிங்குகள் வீதம் உதவிப் பணம் பெற்றனர். இங்ஙனம் அளிக்கப்படும் உதவியால் ஏற்படும் செலவு அனைத் தையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. ஆனால் வறியோர் சட்ட துயர் துடைப்பு (Poor Law Relief Fund) நிதியிலிருந்து உதவி பெறுவோர் இச் சட்டத்தின்படி உதவி பெறுவதிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆஸ்க்வித் அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சராக விளங்கிய வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) 1909ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தைக் கொணர்ந்தார். அத் திட்டத்தின் படி வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நிலையங்கள் (Labour Exchanges) நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டன. இங்கிலாந்து 10 மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் அத்தகைய

நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அவைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடும் மத்திய நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது, இந் நிலையங்களுக்கு உதவி செய்ய நாடு முழுவதும் பல நிலையங்கள் நிறுவப்பட்டன. இந் நிலையங்கள் நாட்டில் வேலையின்மையைப் போக்கப் பெரிதும் உதவின.

1909ஆம் ஆண்டில் வீட்டுவசதி, நகர அமைப்புச் சட்டம் (The Housing and Town Planning Act) ஒன்று இயற்றப்பட்டது. சுகாதார வசதியின்றிக் கட்டப்பட்டிருந்த வீடுகளை இடித்துவிட்டு சுகாதார முறையில் வீடுகளை மக்களுக்குக் கட்டிக் கொடுக்க தல ஆட்சி நிறுவனங்களுக்கு இச் சட்டம் அதிகாரமளித்தது. ஆகவே, நாட்டில் நல்ல முறையில் திட்டங்கள் தீட்டப்பட்டு சுகாதார வசதியோடு மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. சுகாதார வசதியின்றியும் நல்ல காற்றேட்டமின்றியும் அவதியுற்று வாழ்ந்த மக்கள் இத் திட்டத்தால் நற் பயன்களை அடைந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களும், தல ஆட்சி சபையின் உறுப்பினர்களும் ஊதியமின்றிப் பணியாற்றி வந்தனர். அவ்வாறு ஊதியமின்றிப் பணியாற்றுவதே அப்பொழுது கௌரவமாகவும் கருதப்பட்டு வந்தது. பணம் படைத்த பிரபுக்களும் செல்வந்தர்களும் ஆட்சி புரிந்து வந்ததால் அவர்களுக்கு ஊதியம் தேவையில்லாமலிருந்தது. ஆனால் பல சீர்திருத்தச் சட்டங்களால் சாதாரண மக்களும், தொழிலாளர்களும் அச் சபைகளுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களின் அன்றாடத் தேவைகளையாவது பூர்த்தி செய்து கொள்ள தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களிடம் ஒரு கட்டணம் வசூலித்து அவர்களுக்கு மாத ஊதியம் கொடுத்து வந்தன. ஆனால் ஆஸ்பர்ன் வழக்கில் இதற்கு எதிராகத் தீர்ப்புக் கூறப்பட்டதால் தொழிற் சங்கங்கள் இத்தகைய உறுப்பினர்களுக்கு வழங்கும் ஊதியம் நிறுத்தப்பட்டது. ஆகவே இக் குறையைப் போக்க ஆஸ்க்வித் அரசாங்கம் முன் வந்தது. பொதுமக்கள் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 400 பவுன்கள்வீதம் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது,

1909ஆம் ஆண்டில் ஆஸ்க்வித் அமைச்சரவை கடின உழைப்புத் தொழிற்சாலைகள் சட்டமொன்றை (The Sweated Industries Act) இயற்றியது. மிகவும் கீழ்த்தரமாக ஊதியம் அளிக்கும் தொழிற்சாலைகளில். ஊதியமளிக்கும் முறையும் இச் சட்டத்தால் சீர்திருத்தப்பட்டது. இப் பணியைச் சீரிய

முறையில் கவனிக்க முதலாளிகளேயும் தொழிலாளிகளேயும், வாணிபக் குழுவால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களேயும் கொண்ட குழுக்களிடம் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இக் குழுக்களின் தீர்ப்பே சட்ட வழியாக அமுல் படுத்தவும் வகை செய்யப்பட்டது. ஆகவே, இச் சட்டம் தொழிற்சாலே அமைப்பிலே ஒரு திருப்பு முனேயாக அமைந்தது. முதலாளிகள் - தொழிலாளிகள் உறவு இதனுல் மேம்பட்டது.

லாயிட் ஜார்ஜின் துணிகர வரவு செலவு திட்டம்

ஆஸ்க்வித் அமைச்சரவையில் கருவூலத் தலேவராயிருந்த லாயிட் ஜார்ஜ் 1909ஆம் ஆண்டில் துணிகரமான வரவு செலவு திட்டத்தைக் கொணர்ந்தார். இவ் வரவு செலவு திட்டம் ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் மிக முக்கியத்துவம் அடைகின்றது. லாயிட் ஜார்ஜ் இவ் வரவு செலவு திட்டத்தைப் போர்க்கால வரவு செலவு திட்டமெனவே (War Budget) கூறுகின்ருர். சாதாரண மக்களின் முன்னேற்றத்தை இவ் வரவு செலவு திட்டம் அடிப் படையாகக் கொண்டிருந்ததால் யாவரும் அத் திட்டத்தை 'மக்கள் வரவு செலவு திட்டம்' (People's Budget) எனவே அழைத் தனர். நாட்டில் காணப்படும் வறுமை, தொழிலாளர்களின் இன்னல்கள், அறியாமை ஆகியவற்றைப் போக்கவே இவ் வரவு செலவு திட்டம் கொண்டுவரப் பட்டதென பிரதமர் ஆஸ்க்வித் கூறுகின்ருர். நாட்டில் பற்பல சீர்திருத்தங்களே நிறைவேற்று வதற்காக 200 மிலியன் பவுன்கள் அரசாங்கத்திற்குத் தேவைப் படுகிறதென்றும், அதன் அடிப்படையிலே இத் திட்டம் கொண்டு வரப்பட்டதென்றும் பாராளுமன்றத்தில் ஆஸ்க்வித் கூறினுர்.

லாயிட் ஜார்ஜ் இவ் வரவு செலவு திட்டத்தைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்த போது, அதன் புரட்சிகரமான அம்சங் களேக் கண்டு பலரும் துணுக்குற்றனர். அரசாங்கத்தின் வரு மானத்தை உயர்த்துவதற்காகப் புகையிலே மதுபான வகைகளின் மீது மிக அதிகமான வரிகள் விதிக்கப்பட்டன. மதுபான அனுமதிச் சான்றிதழ்களின் கட்டணம் பெரிதும் உயர்த்தப்பட்டது. மரணவரி விகிதம் உயர்த்தப்பட்டது. வருமான வரியும் உயர்த்தப்பட்டது. உழைப்பிலா வருமானத்தில் (Unearned Income) அரசாங்கத்திற்கு 20 சதவிகிதம் வர வேண்டுமென்று அத் திட்டத்தில் கூறப்பட்டது. 3000 பவுன்களுக்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு மீவரி (Super Tax) விதிக்கப்பட்டது. இங்ஙனம் புகையிலேயின் மீது விதிக்கப்பட்ட வரியால் அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு 1.9 மிலியன் பவுன்களும் மதுபானங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளால் 1.6 மிலியன் பவுன்களும், மதுபான

அனுமதிச் சான்றிதழ்களின் கட்டணம் உயர்த்தப்பட்டதால் 2.6 மிலியன் பவுன்களும், வருமான வரியால் 3 மிலியன் பவுன்களும், மீ வரியால் 0.5 மிலியன் பவுன்களும். ஆவண வரி (Stamp Duty) யால் 16,50,000 பவுன்களும், கடன் கழிவு நிதியிலிருந்து (Sinking Fund) 30,00,000 பவுன்களும், உழைப்பிலா வருமானத்திலிருந்து 5,00,000 பவுன்களும், மரண வரியிலிருந்து 25,00,000 பவுன்களும் வருமானம் வருமெனக் கணக்கிடப்பட்டிருந்தது.

மேற்படி வருமானங்கள் பல சீர்திருத்தங்களைச் செய்வதற்காக ஒதுக்கப்பட்டதோடல்லாமல் நாட்டில் மிக மோசமான நிலையிலிருந்த பாதைகளைச் செப்பனிடுவதற்குப் பணவுதவி செய்ய பாதைக்குழு (Road Board) ஒன்று ஏற்பட வகை செய்யப்பட்டது. அதற்காக ஆண்டொன்றுக்கு 60,000 பவுன்கள் ஒதுக்க அவ் வரவு செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. நாட்டின் இயற்கை வளங்களைப் பெருக்குவதற்காக ஒரு வளர்ச்சிக் கழகம் (Development Commission) 200,000 பவுன்கள் மூலதனத்தில் ஏற்படவும் அத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது.

ஆகவே, இப் புரட்சிகரமான திட்டத்தைப் பலர் எதிர்த்தனர். கன்சர்வேடிவ் கட்சியினர் இத் திட்டத்திற்குப் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். காப்பு வரி சீர்திருத்தவாதிகளும் இதை எதிர்த்தனர். நாட்டிலிருந்த செல்வந்தர்களும், ஆலை முதலாளிகளும், தொழிலதிபர்களும் இத் திட்டத்திற்குக் கண்டனம் தெரிவித்தனர். பொதுமக்கள் சபையில் இத் திட்டத்திற்கெதிராகப் பெரும் எதிர்ப்பு எழுந்தது. பட்ஜெட்டை ஆதரித்தவர்கள் 'பட்ஜெட் காப்பிணைவு கூட்டுறவு' (Budget League) என்றும் பட்ஜெட்டை எதிர்த்தவர்கள் 'பட்ஜெட் எதிர்ப்பு காப்பிணைவு கூட்டுறவு' (Anti-Budget League) என்றும் இரு கட்சிகளை ஏற்படுத்தி ஒன்றையொன்று மிகவும் காரசாரமான முறையில் தாக்கிக் கொள்ள ஆரம்பித்தனர். நாட்டில் பிரபுக்கள் ஆட்சி வேண்டுமா? அல்லது மக்கள் ஆட்சி வேண்டுமா ? (Shall Peers or People Rule) என்ற குரல் நாட்டில் எங்கும் கேட்க ஆரம்பித்தது.

1909ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொதுமக்கள் சபையில் இவ் வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது. சாதகமாக 379 வாக்குகளும் எதிர்த்து 149 வாக்குகளும் பதிவாயின. ஆனால், அதே மாதத்தில் இரண்டாவது வாசிப்பின் போது பிரபுக்கள் சபையில் இத் திட்டத்திற்குச் சாதகமாக 75 வாக்குகளும்

எதிர்த்து 350 வாக்குகளும் பதிவானதனுல் இத் திட்டத்தை பிரபுக்கள் சபை நிராகரித்தது. ஆகவே, 1909ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் தேதி பொதுமக்கள் சபையில் 'பொதுமக்களின் நன்மைக்காகக் கொண்டுவரப்பட்ட இத் திட்டத்தை பிரபுக்கள் சபை நிராகரித்தது. அரசியலமைப்புக்குப் புறம்பானது என்றும், அச் செயல் பொதுமக்கள் சபையின் உரிமைகளைப் பறிப்பதாகுமென்றும் ஆஸ்க்வித் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இரண்டாம் சார்லஸ் காலத்திலிருந்து பிரபுக்கள் சபை பண மசோதாக்களில் தலையிடுவதில்லை. ஆனுல், வழக்கத்திற்கு மாருக அச் சபையினர் இப்போது நடந்து கொண்டனர். 'இச் சமயத்தில் இங்ஙனம் பிரபுக்கள் சபையினர் நடந்து கொண்டது அறிவுடையதாகாது' என்று டிரிவில்யன் (Trevelyan) என்னும் ஆசிரியர் கூறுகின்ருர்.

பிரபுக்கள் சபையினருக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க வேண்டுமென்று எண்ணி ஆஸ்க்வித் பாராளுமன்றத்தைக் கலைத்தார். 1910ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாட்டில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. 'பிரபுக்கள் சபையின் செயல் நியாயமா? இல்லையா? என்பதை மக்களே தங்கள் வாக்குகளின் மூலம் தெரிவிக்கட்டும் என ஆஸ்க்வித் அறிவித்தார். இத் தேர்தலில் பிரதமர் ஆஸ்க்வித் கட்சியான லிபரல் கட்சி 275 இடங்களையும், பட்ஜெட்டை எதிர்த்த இணைவாளர்கள் 273 இடங்களையும், ஐரிஷ் தேசிய !வாதிகள் 82 இடங்களையும், தொழிற்கட்சி உறுப்பினர்கள் 40 இடங்களையும் பெற்றனர். இத் தேர்தலில் லிபரல் கட்சி முன்பைவிட 120 இடங்களைக் குறைவாகவே பெற்றது. அயர்லாந்துக்கு சுயாட்சி வழங்குவதாக ஆஸ்க்வித் கூறியதால் ஐரிஷ் தேசியவாதிகள் இவரை ஆதரித்தனர். அத்துடன் தொழிற்கட்சி உறுப்பினர்களும் ஆஸ்க்வித்துக்கு ஆதரவு அளித்தனர். ஆகவே, அவ் வரவு செலவு திட்டத்தைப் பொதுமக்கள் சபையில் ஒரு மசோதாவாக நிறைவேற்ருமல், அக் கொள்கைகளடங்கிய சில தீர்மானங்களாக நிறைவேற்றலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, பண மசோதாக்களைப் பற்றிய இரண்டு தீர்மானங்களும், பாராளுமன்ற ஆயுட்காலத்தை 7 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைக்க வகை செய்யும் ஒரு தீர்மானமும் 1910ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி நிறைவேற்றப்பட்டன. 1910ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் தேதி 1909ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம் (Budget) பொதுமக்கள் சபையில் 93 வாக்குகள் அதிகம் பெற்று நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாள் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டது. அச் சபையும் அத் திட்டத்தை நிறைவேற்றியது.

ஆகவே, தங்களது வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவதில் லிபரல் கட்சியினர் வெற்றியடைந்தனர்.

அதன் பின்னர் பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் கட்டுப் படுத்தும் ஒரு மசோதாவை ஆஸ்க்வித் பொதுமக்கள் சபையில் கொணர்ந்தார். பொதுமக்களின் விருப்பப்படி பிரபுக்கள் சபை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று அம் மசோதா கூறியது. இச் சமயத்தில் இங்கிலாந்தின் அரசர் ஏழாம் எட்வர்டு (Edward VII) இறந்துவிடவே இப் பிரச்சினை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கப் பட்டது.

23. ஐந்தாம் ஜார்ஜ் காலம்
(1910—1936)

ஏழாம் எட்வர்டு இறந்தவுடன் ஐந்தாம் ஜார்ஜ் 1910ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அரசராக அரியணை ஏறினர். இளவரசராக இவர் இருந்தபொழுதே உலகின் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தார். ஆகவே, உள்நாட்டு அரசியலைப் பற்றி மட்டுமல்லாமல் அனைத்துலக அரசியலையும் ஐந்தாம் ஜார்ஜ் நன்கு அறிந்திருந்தார். இவர் இங்கிலாந்தின் அரசராகப் பதவி யேற்கும் போது நாட்டில் அரசியலமைப்பு பிரச்சினைகள் பற்றிய கருத்து வேறுபாடுகள் உச்ச நிலையிலிருந்தன.

ஏழாம் எட்வர்டு இறந்ததனால் பிரதமர் ஆஸ்க்வித் பொது மக்கள் சபையில் கொண்டுவந்த 'பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா' சிறிது காலத்திற்கு ஒத்திப் போடப்பட்டது. இதற்கிடையில் லிபரல் கட்சி உறுப்பினர்கள் சிலரும் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் சிலரும் சேர்ந்து பேசிப் பிரச்சினைகளுக்கு முடிவுகாண முற்பட்டார்கள். அதற்காக ஒவ்வொரு கட்சியினின்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட 'கலந்தாய்வுக்குழு' ஒன்று உருவாக்கப்பட்டது. அக் குழுவில் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் சில திட்டங்களைக் கூறினர். சாதாரண சட்டங்களைப் பழைய முறைப்படியே இயற்றலாம் என்றும், அரசியலமைப்புத் திருத்தங்கள் மட்டும் மக்களின் தீர்ப்புக்கு விடலாம் என்றும் அவர்கள் யோசனை கூறினர். இத்தகைய யோசனைகளை லிபரல் கட்சியானது ஏற்றுக் கொள்ள வில்லை. ஆகவே, 1910ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அக் கலந்தாய்வுக் குழு கலைக்கப்பட்டது.

இப் பிரச்சினையை மீண்டும் மக்களின் தீர்ப்புக்கே விடுவதென்று பிரதமர் ஆஸ்க்வித் முடிவு செய்தார். ஆகவே, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. மசோதாக்களை நிராகரிக்கும் உரிமை பிரபுக்கள் சபைக்கு உண்டா? இல்லையா? என்ற பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் 1911ஆம் ஆண்டில் நாட்டில் ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அத் தேர்தலில்

ஆஸ்க்வித் அதே பெரும்பான்மையைத் தான் பெற்ருர். லிபரல் கட்சி 272 இடங்களையும், ஐரிஷ் தேசியவாதிகள் 84 இடங்களையும், தொழிற்கட்சியினர் 42 இடங்களையும் இணைவாளர்கள் (Unionists) 272 இடங்களையும் பெற்றனர். மக்கள் தங்களின் அதே கருத்துக்களையே திரும்பவும் கொண்டுள்ளனர் என்ற உண்மையை இத் தேர்தலின் முடிவுகள் தெரிவித்தன. இத் தேர்தலுக்குப் பின் ஆஸ்க்வித் தமது மசோதாவைப் பொது மக்கள் சபையில் மீண்டும் 1911ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கொண்டு வந்தார். அம் மசோதா 1911ஆம் ஆண்டு மே-மாதம் 15ஆம் தேதி பொதுமக்கள் சபையில் நிறைவேறியது. பின்னர் பிரபுக்கள் சபைக்கு அம் மசோதா அனுப்பப்பட்டது. பிரபுக்கள் சபையினர் அம் மசோதாவில் பல திருத்தங்களைச் செய்து பொதுமக்கள் சபைக்கு அனுப்பினர். ஆனல் பொதுமக்கள் சபை அத் திருத்தங்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் பழைய வடிவத்திலேயே அம் மசோதாவை மீண்டும் பிரபுக்கள் சபைக்கு அனுப்பியது. இச் சமயத்தில் பிரபுக்கள் சபை தனது திருத்தங்களை வற்புறுத்துமானல், தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக் கிணங்க, ஐந்தாம் ஜார்ஜ் அரசர், லிபரல் கட்சியைச் சார்ந்த 300 பிரபுக்களைப் புதிதாக பிரபுக்கள் சபையில் நியமித்து அம் மசோதா அங்கு நிறைவேற வழி செய்வாரென்று பிரதமர் ஆஸ்க்வித் அறிவித்தார். இதைக் கேட்ட பிரபுக்கள் பலர் பின்வாங்கினர். பிரபுக்கள் சிலர் பிடிவாதமாயிருந்தனர். ஆகவே, பிரபுக்களை ஒன்றுபடுத்தி இம் மசோதா நிறைவேறுவதற்கு வகை செய்யும்படி கர்சன் பிரபு (Lord Curzon) கேட்டுக் கொள்ளப்பட்டார். கர்சன் பிரபுவின் முயற்சியால் இம் மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

1911ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இப் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் (Parliament Act of 1911),. மசோதாக்களில் பண மசோதாக்கள் எவையெவை என்று கூறி அவைகளுக்குப் பண மசோதாக்கள் என்று அத்தாட்சி வழங்கும் அதிகாரத்தைப் பொது மக்கள் சபையின் சபாநாயகருக்கு வழங்கியது. அத்துடன் பொது மக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட பண மசோதா பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டு, பிரபுக்கள் சபை ஒரு மாதத்திற்குள் அம் மசோதாவின்மேல் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அம் மசோதா நேராக அரசருக்கு அனுப்பப்பட்டு அவரின் ஒப்புதலின் பேரில் சட்டமாகுமெனவும் அச் சட்டம் கூறியது. ஆகவே, பிரபுக்கள் சபையின் ஒப்புதலின்றியும் பண மசோதா சட்டமாகும் தன்மையை 1911ஆம் ஆண்டுச் சட்டத்தால் பெற்றது. இதனல் பிரபுக்கள் சபையின் ரத்துசெய்யும் அதிகாரம் மாய்ந்தது. அத்

துடன் இச் சட்டம் பாராளுமன்றத்தின் பதவி காலத்தை 7 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டாகவும் குறைத்தது, கடைசியில் இச் சட்டத்தால் மசோதாக்களை இரண்டு முறை நிறுத்தி வைக்கும் அதிகாரமே பிரபுக்கள் சபையினிடம் எஞ்சியது. அத்துடன் இச் சட்டம் சாதாரண பொது மசோதாக்கள் நிறைவேற்றப்படும் முறைகளைப் பற்றியும் விளக்கியது. 'ஒரு சாதாரண பொது மசோதாவை பிரபுக்கள் சபையானது நிராகரித்தால், அம் மசோதாவை மீண்டும் பொதுமக்கள் சபை மூன்று கூட்டத் தொடரில் நிறைவேற்றினாலோ, அல்லது முதற் கூட்டத் தொடரின் போது வாசிக்கப்பட்ட இரண்டாவது வாசிப்பிற்கும் (Second Reading) மூன்றாவது கூட்டத் தொடரில் வாசிக்கப்பட்ட மூன்றாவது வாசிப்பிற்கும் (Third Reading) இடையே இரண்டாண்டுகள் கழிந்திருந்தால், அம் மசோதா நேரடியாக அரசருக்கு அனுப்பப்பட்டு அவரின் கையெழுத்தானவுடன் சட்டமாகும்' எனவும் 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம் கூறுகிறது. ஆகவே, இச் சட்டத்தால் பிரபுக்கள் சபையின் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டு அச் சபை இரண்டாம்தர சபையாக மாற்றப் பட்டது.

தொழிலாளர் நலங்கருதி 1911ஆம் ஆண்டு ஆஸ்க்வித் அமைச்சரவையால் காப்புறுதிச் சட்டம் (Insurance Act) ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டபோதும், அவர்கள் வேலையினின்று நீக்கப்படும் போதும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்ய இச் சட்டத்தால் வகை செய்யப்பட்டது. இதற்காக உதவிநிதி (Benifit Fund) ஒன்றை அரசாங்கம் திரட்டியது. இந் நிதிக்கு காப்புறுதி (Insurance) செய்து கொண்ட தொழிலாளர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தொகையை சந்தாவாகச் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதே போல் அரசாங்கமும் ஒரு குறிப்பிட்ட தொகையை உதவிநிதிக்கு அளித்தது. இவ் வுதவிநிதியை நிருவகிக்கும் பொறுப்பைக் காப்புறுதிக் கழகங்களும், தொழிற் சங்கங்களும். தபால் நிலையங்களும் மேற்கொண்டன. ஆகவே இச் சட்டத்தால் தொழிலாளர்கள் பெரும் பயனையடைந்தனர்.

பிரதமர் ஆஸ்க்வித் அயர்லாந்தியருக்கு சுயாட்சி வழங்குவதாக ஐரிஷ் தேசியவாதிகளிடம் வாக்குறுதியளித்திருந்தார். அவ் வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டி 1911ஆம் ஆண்டில் அயர்லாந்து சுயாட்சி மசோதா (Home Rule Act) ஒன்றை ஆஸ்க்வித் கொண்டு வந்தார். அம் மசோதாவைப் பிரபுக்கள் சபை நிராகரித்தது. அதனால் 1911ஆம் ஆண்டு சட்டப்படி

அம் மசோதா பொதுமக்கள் சபையால் மும்முறை நிறைவேற்றப் பட்டதால், இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப் பட்டது. இச் சட்டம் அமுலுக்கு வருமுன் அயர்லாந்தின் வட பகுதியான அல்ஸ்டர் மாநிலத்திலிருந்து இதற்குப் பெரும் எதிர்ப்புத் தோன்றியது. அதனால் வட மாநிலத்தினர் பொறுமை யிழந்து புரட்சியில் இறங்கினர். இதையறிந்த ஆஸ்க்வித் அரசாங்கம் செய்வதறியாது திகைத்தது. இச் சமயத்தில் முதல் உலகப் போர் (First World War) மூண்டு விடவே, அனைவரும் தங்கள் வேற்றுமைகளை மறந்து இங்கிலாந்தின் சுதந்தரத்தைக் காக்கப் பாடுபடலாயினர்,

முதல் உலகப் போரும் இங்கிலாந்தும்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி ஒரு மாபெரும் உலகப் போரைக் கண்டது. அப் போர் பல அரசியல் தலைவர்களின் பொறுமையாலும், பகைமையாலும், காழ்ப்புணர்ச்சியாலும், தேசிய வெறியாலுமே ஏற்பட்டது என்று கூறுவது மிகையாகாது. அத் தகைய தீய உணர்ச்சிகள் உலக நாடுகளிடையே ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் உள்ளன. அக் காரணங்களாலேயேதான் முதல் உலகப் பெரும் போரும் ஏற்பட்டது.

காரணங்கள்

பொருளாதாரப் போட்டிகள்

பொருளாதாரத் துறையில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற் பட்ட போட்டியே முதல் உலகப் போர் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். தொழிற் புரட்சியால் இங்கிலாந்து செல்வம் மிகுந்த நாடாக வளர்ச்சியடைந்தது. இதைத் தொடர்ந்து மற்ற நாடுகளிலும் தொழில் துறைகளில் பல மாற்றங்கள் ஏற் பட்டன. ஃபிரான்சும், ஜெர்மனியும் தொழில் வளர்ச்சியில் இங்கி லாந்தையும் மிஞ்சி விடுகின்ற அளவுக்குப் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறின. உற்பத்திப் பெருக்கம் வேகமாக வளர்ந்து கொண்டே சென்றதால் அவற்றை விற்பதற்காகச் சந்தைகள் அவற்றிற்குத் தேவைப்பட்டது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் உலகின் பல பாகங்களில் குடியேற்ற நாடுகளை (Colonies) ஏற் படுத்திக் கொண்டு அத் தேவையை ஓரளவிற்கு நிறைவேற்றிக் கொண்டன. ஆனால் இருபதாம் நூற்றாண்டு வரையில் வாளா விருந்த ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, குடியேற்ற நாட்டுப் போட்டியில்

நுழைய ஆரம்பித்தன. ஜெர்மனி, போர்ச்சுகல், போலந்து, இத்தாலி போன்ற நாடுகள் ஆப்பிரிக்காவில் போட்டி போட்டுக் கொண்டு குடியேற்ற நாடுகளை அமைத்தன. ஜெர்மன் தொழில் அதிபர்களும், வியாபாரிகளும் மேலும் பல குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த விரும்பினர். ஜெர்மன் கெய்ஸரான இரண்டாம் வில்லியம் (William II) துருக்கி போன்ற நாடுகளில் ஜெர்மன் செல்வாக்கைப் பரப்ப முயன்ருர். ஆசிய நாடுகளில் தமது ஆதிக்கத்தைப் பரப்ப ஜெர்மனி மட்டுமல்லாமல் ரஷ்யாவும், ஜப்பானும் முயன்றன. அதனுல் தான் ரஷ்யா - ஜப்பான் போர் ஏற்பட்டது. அதன் விளைவாக ஜெர்மனி, ரஷ்யா இங்கிலாந்து போன்ற நாடுகள் ஜப்பானிலும் சீனுவிலும் பல வியாபாரக் கிடங்குகளைப் பெற்றன. இங்ஙனம் தொழிற்புரட்சியால் ஏற்பட்ட உற்பத்திப் பொருள்களை விற்க ஏற்பட்ட குடியேற்ற நாட்டுப் போட்டி ஆகியவைகள் முதல் உலகப் போரின் முக்கிய காரணங்களாகும்.

ஆயுத உற்பத்தி

குடியேற்ற நாடுகள் பெருக்கத்திற்கு ஆயுத உற்பத்தி அவசியம் என்று ஒவ்வொரு நாடும் எண்ணியது. ஜெர்மனி போர்க் கப்பல்களை உற்பத்தி செய்யத் தொடங்கியது. இதைக் கண்ட இங்கிலாந்து தனது போர்க் கப்பல் உற்பத்தியை இரு மடங்காக்கியது. ஃபிரான்சும் இம் முயற்சியில் பெரிதும் அக்கறை காட்டியது. ஆகவே, வல்லரசுகளின் ஆயுத உற்பத்தியும், போர்க்கப்பல் உற்பத்தியும் ஆண்டிற்கு ஆண்டு வளர்ந்து கொண்டே சென்றன. ஆயுத உற்பத்தி, பெருகப் பெருக அதைப் பயன்படுத்திப் பார்க்க ஒவ்வொரு நாடும் எண்ணியது. அத்தகைய எண்ணமே உலகப் போராக உருவெடுத்தது.

தேசிய உணர்ச்சி

உலகப் போருக்கு மற்ருெரு காரணம் ஒவ்வொரு நாட்டிலும் தேசியம் (Nationalism) வளர்ந்ததாகும். தன் தாய் நாட்டின் மீது பற்று வைத்த ஒருவன் வேறு நாட்டை வெறுக்க ஆரம்பித்தான். ஜெர்மனியை நேசித்தவன் ஃபிரான்சை வெறுத்தான். ஃபிரான்சை நேசித்தவன் ஜெர்மனியை வெறுத்தான். இதே போல்தான் ஒரு நாடு மற்ருெரு நாட்டை வெறுக்க ஆரம்பித்தது. சர்பியாவின் (Serbia) தீவிரமான தேசிய உணர்ச்சி தான் சர்பியாவுக்கும் ஆஸ்திரியா-ஹங்கேரிக்குமிடையே பெரும் கசப்புத் தன்மையை ஏற்படுத்தியது, அதே தேசிய உணர்ச்சியால் தான் ஆஸ்திரியா-ஹங்கேரியின் அரியணையில் அமரக் கூடிய ஃபிரான்சிஸ்

பெர்டினண்டு (Francis Ferdinand) 1914 ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

ஏகாதிபத்திய உணர்ச்சி

தேசிய உணர்ச்சி அளவுக்கு மீறி வளர்ந்ததால் ஒவ்வொரு நாட்டிடமும் ஏகாதிபத்திய உணர்ச்சி வளர ஆரம்பித்தது. 'உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்' என்று ஜெர்மானியர் கூறினர். உலகமே பெருமைப்படும் அளவுக்கு இங்கிலாந்து ஒரு சிறந்த பேரரசாகத் திகழவேண்டுமென்று ஆங்கிலேயர் விரும்பினர். ஃபிரான்சும் தனக்கு மிகப் பல குடியேற்ற நாடுகள் இருக்கவேண்டுமென்றும், அங்கெல்லாம் தன் கலாச்சாரத்தைப் பரப்ப வேண்டுமென்றும் எண்ணியது. ஜப்பானும் தன் நாட்டைப் பெருக்க வேண்டுமென்று நினைத்தது. ரஷ்யாவும் அங்ஙனமே எண்ணியது. உலக நாடுகளின் இத்தகைய ஏகாதிபத்திய உணர்ச்சியே பெரும் போருக்குக் காரணமாயிற்று.

இரகசியக் கூட்டுறவுகள்

1914ஆம் ஆண்டிற்கு முன்பு ஐரோப்பா இரண்டு இராணுவ கூடங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 1879ஆம் ஆண்டில் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் கூட்டுறவு கொண்டது. 1882ஆம் ஆண்டில் இத்தாலி இக் கூட்டுறவில் சேரவே இது முக்கூட்டுறவாக (Triple Alliance) மாறியது. 1894ஆம் ஆண்டில் ஃபிரான்சும் ரஷ்யாவும் ஒரு கூட்டுறவை அமைத்தன. கண்ணியமிக்க தனிமையை (Splendid Isolation) கடைப்பிடித்து வந்த இங்கிலாந்து, தனிமையை எண்ணிப் பயந்தது. அதற்காக ஜெர்மனியோடு முதலில் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்தது. அம் முயற்சி தோல்வியடையவே, 1902ஆம் ஆண்டில் இங்கிலாந்து ஜப்பானோடு கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டது. 1904ஆம் ஆண்டில் இங்கிலாந்து ஃபிரான்சோடு சமாதானம் செய்து கொண்டது. 1907ஆம் ஆண்டில் இங்கிலாந்து ரஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொண்டது. இச் சமயத்தில் துருக்கி (Turkey) ஜெர்மனியோடு சேர்ந்தது. ஆகவே, ஐரோப்பா இரண்டு இராணுவக் கூடாரங்களாக மாறியது. இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா, ஜப்பான் ஒரு கூடாரத்திலும், ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி, துருக்கி ஆகிய நாடுகள் மற்றொரு கூடாரத்திலும் இருந்தன. ஆகவே, இவ் விரண்டு கூடாரங்களுக்கிடையே பொறாமை மட்டுமல்லாமல் பகைமையும் நிலவியது. இப் பொறாமையும் பகைமையுமே கடைசியில் உலகப் போருக்கு ஊக்கமளித்துவிட்டன.

இரண்டாம் வில்லியத்தின் குணம்

ஜெர்மன் நாட்டு அரசரான இரண்டாம் வில்லியத்தின் குணத்தாலும் இப் போர் ஏற்பட்டதெனக் கூறலாம். இரண்டாம் வில்லியம் ஒரு பிடிவாத குணமுடையவர். அத்துடன் இறுமாப்புக் கொண்டவருமாவார். பேராசை பிடித்த அவர் ஜெர்மனிதான் உலக நாடுகளிலேயே வலிமை மிக்க நாடாகத் திகழ வேண்டு மென்று விரும்பினர். 'ஜெர்மனி உலக வலிமை பெற வேண்டும்; அல்லது வீழ்ந்து விட வேண்டும்' என்ற கொள்கையின் இருப்பிட மாக அவர் திகழ்ந்தார். உலக விவகாரங்களில் அவர் சமரசத் தையே விரும்பாதவர். தம் கொள்கையே சிறந்ததென வாதாடு பவர். இங்கிலாந்தைப் பற்றிக் குறுகிய கருத்தே அவர் வைத்தி ருந்தார். தன்னுேடு போர் செய்வதைக் காட்டிலும். தம்முடைய எல்லாக் கோரிக்கைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று ஆங்கிலேயரைப் பற்றி எண்ணியிருந்தார். ஆங்கிலேயர்களை எடை போடுவதில் அவர் தவறு செய்து விட்டார். அமைதியைக் காக்க இங்கிலாந்து விரும்பியது. அதனுடைய கோழைத் தனத்தாலோ அல்லது வலுக் குறைவாலோ அல்ல என்பதை இரண்டாம் வில்லியம் தெரிந்து கொள்ளவில்லை. இத்தகைய மாறுபட்ட கருத்தினுல்தான் அவர் இங்கிலாந்தோடு மோத ஆரம்பித்தார். அம் மோதலே உலகப் போராக மாறியது.

ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆவல்

1871ஆம் ஆண்டில் ஜெர்மன் ஃபிரான்சிடமிருந்த அல்சேஸ் லொரைய்ன் (Alsace-Lorraine) என்ற பகுதியைக் கைப்பற்றி யிருந்தது. அப் பகுதியை மீண்டும் தாம் கைப்பற்ற வேண்டு மென்று ஃபிரெஞ்சு மக்கள் ஆவல் கொண்டிருந்தனர். ஃபிரெஞ்சு மக்களின் அத்தகைய ஆவலே கடைசியில் உலகப் போருக்கு இட்டுச்சென்றுவிட்டது. பாரிஸிலுள்ள ஸ்ட்ராஸ்பர்கின் (Strasbourg) சிலை, இழந்த அப் பகுதியை மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டேயிருந்தது. அத்துடன் அந் நாட்டுக் கவிஞர்கள் குழந்தைகளின் உள்ளங்களிலே ஜெர்மனியைப் பழி வாங்கும் உணர்ச்சியை ஊட்டி வளர்த்தனர். அத்துடன் பால் டிரொவ்லெட்ஜ் (Paul Derouledge) கவிதைகள் இளைஞர்களின் உள்ளங்களிலே பழி வாங்கும் எண்ணத்தை ஏற்படுத்தின. அப் பகுதியை ஃபிரான்சு இழந்ததால் பொருளாதாரத் துறையிலும் ஃபிரான் சுக்கு நஷ்டமேற்பட்டது. ஃபிரான்சின் இரும்புத் தொழிற் சாலை அதிபர்கள் அப் பகுதியிலுள்ள இரும்புச் சுரங்கங்களை இழந்ததால் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று அரசாங்கத் திடம் கூறி வந்தனர். ஜெர்மனி தொழில் வளம் பெற்றதற்கு

அவ் விருப்புச் சுரங்கங்கள் தான் காரணம் என நினைத்து ஃபிரெஞ்சு மக்கள் கொதிப்புற்றுர்கள். இந் நிலையில்தான் ஜெர்மனி மொராக்கோவில் (Morocco) தலையிட்டது. மொராக்கோவில் ஃபிரான்சுக்குப் பலவித உரிமைகள் இருந்தன. ஆகவே, ஜெர்மனி மொராக்கோவில் தலையிட்டதால் மேலும் ஃபிரான்சு ஜெர்மனி மீது பகைமை கொண்டது. அப் பகைமை உலகப் போர் ஏற்படுவதற்கு உறுதுணையாயிருந்தது.

சர்வதேச அமைப்பு இன்மை

சர்வதேசப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த ஓர் அமைப்பு இல்லாமையும் முதல் உலகப் போருக்கு ஒரு முக்கிய காரணமாகும். சர்வதேசத் தொடர்புகளும் நல்ல முறையில் அப்போது இல்லை. எல்லாமே இரகசியமாகவே ஒவ்வொரு நாட்டிலும் வைத்துக் கொள்ளப்பட்டன. அந்தந்த நாட்டு மக்களுக்குக் கூட, தெரியாமல் பல சர்வதேசப் பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டன. சில இரகசியங்கள் அந்தந்த நாட்டு அமைச்சரவையிலிருந்த சில அமைச்சர்களுக்கும் கூட தெரியாமல் மூடி மறைக்கப்பட்டன. 1906ஆம் ஆண்டு இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சரான சர் எட்வர்டு கிரே என்பவர் ஃபிரான்சோடு இராணுவப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார். அச் செயலே அமைச்சரவைக்கு 1912 ஆம் ஆண்டில் தான் தெரிவிக்கப்பட்டது. 1914ஆம் ஆண்டில் அதைப்பற்றிப் பாராளுமன்றத்திடமும் கூறப்பட்டது. இத்தகைய இரகசிய முறை நயம் (Secret Diplomacy) மக்கள் மனத்திலே ஓர் குழப்பத்தை உண்டாக்கியது. இவ்வாறு மூடி வைக்கப்பட்ட இரகசியங்கள் வெடித்ததால்தான் உலக நாடுகளிடையே பொருமையும் பூசலும் ஏற்பட்டன. அப் பொருமையும் பூசலுமே உலகப் போராக உருவெடுத்தது. அத்துடன் ஒவ்வொரு நாடும் தாமே இறைமை பெற்ற நாடு என்று கருதிக் கொண்டு சர்வதேச மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களையும் புறக்கணிக்க ஆரம்பித்தது. இத்தாலி முக்கூட்டுறவில் சேர்ந்திருந்த போதிலும் 1902ஆம் ஆண்டில் ஃபிரான்சோடும் 1909ஆம் ஆண்டில் ரஷ்யாவோடும் தனியாக உடன்படிக்கைகள் செய்து கொண்டது.

டிரின்டிநோ நெருக்கடி

ஆஸ்திரியா - ஹங்கேரி பிடியினின்று இத்தாலியர்கள் வாழ்ந்த டிரின்டிநோ (Trentino) என்ற பகுதியையும், டிரிஸ்டி துறை முகத்தைச் (Port of Trieste) சுற்றியுள்ள பகுதியையும் பிடிக்க வேண்டுமென்று இத்தாலியர் விரும்பினர். இத்தகைய அவர்களின் விருப்பமும் உலகப் போருக்கு ஒரு காரணமாகும். அதற்காக

இத்தாலிய அமைச்சர்களும் கூட போராட்டங்களில் கலந்து கொண்டனர். அத்துடன் அட்ரியாடிக் கடலில் (Adriatic Sea) ஆஸ்திரியாவுக்குப் போட்டியாக இத்தாலி தன் ஆதிக்கத்தை ஏற் படுத்த ஆரம்பித்தது. இதனுல் இரு நாடுகளுக்கிடையே பகைமை ஏற்பட்டது. இப் பகைமை உலகப் போர் ஏற்பட சாதகமாகவும் இருந்தது.

செராஜிவோ நெருக்கடி

ஆஸ்திரியப் பட்டத்திற்குரியவரான இளவரசர் ஆர்ச் டியூக் ஃபிரான்சிஸ் பெர்டினுண்டு என்பவரை செர்பிய நாட்டு (Serbia) வெறியன் ஒருவன் 1914 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் நாள் செராஜிவோ என்னுமிடத்தில் சுட்டுக் கொன்ருன். இச் செயலை ஆஸ்திரியா மிகக் கடுமையாகக் கண்டித்தது. குற்றத்தை ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி ஆஸ்திரியா, செர்பியா நாட்டிற்கு எச்சரிக்கை செய்தது. செர்பியா நாடு அவ்வாறு செய்தும், ஆஸ்திரியா திருப்தியடையாமல் செர்பியா நாட்டின்மீது போர் தொடுத்தது. உடனே செர்பியா நாடு ரஷ்யாவின் உதவியை நாடியது. ரஷ்யா உதவி செய்ய ஒப்புக் கொண்டது. இதைக் கண்ட ஜெர்மனி ஆஸ்திரியாவுக்குத் தன் முழு ஆதரவைத்தர முன்வந்தது. அத்துடன் செர்பியாவுக்கு உதவ வேண்டாம் என்று ஜெர்மனி ரஷ்யாவைக் கேட்டுக் கொண்டது. ரஷ்யா இணங்காமல் போகவே, ஜெர்மனி ரஷ்யா மீது போர் தொடுத்தது. ஃபிரான்சு ரஷ்யாவின் தோழமை நாடாகையால் ஜெர்மனி ஃபிரான்சு நாட்டின் மீதும் படை யெடுத்தது. இதற்காக நடுநிலை நாடான பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மன் துருப்புக்கள் செல்லலாயின. பெல்ஜியத்தின் நடு நிலையைக் காப்பாற்றுவதாக இங்கிலாந்து பெல்ஜியத்திற்கு வாக் குறுதியளித்திருந்ததனுல் இங்கிலாந்து ஜெர்மன் மீது போர் தொடுத்தது. இங்ஙனம் 'செராஜிவோ படுகொலை' என்னும் ஒரு சிறு நிகழ்ச்சி உலகப்போர் என்னும் ஒரு பெரும் நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

போரின் போக்கு

ஜெர்மனியைச் சார்ந்த நாடுகள் அச்சு நாடுகள் (Central Powers) என்றும் இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யாவுடன் சேர்ந்த நாடுகள் நேசநாடுகள் (Allies) என்றும் அழைக்கப்பட்டன. அச்சுநாடுகள் கூடாரத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, பல்கேரியா, கிரீஸ், ருமேனியா, ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்தன. நேச நாடுகள் கூடாரத்தில் இங்கிலாந்து, பிரான்சு,

ரஷ்யா, ஸ்பெயின், போர்ச்சுகல், டென்மார்க், நார்வே, பெல்ஜியம், செர்பியா. இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் இருந்தன. 1917ஆம் ஆண்டு இக் கூட்டுறவில் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்கும் ஏற்பட்ட சிறு தகராறு ஐரோப்பாவை இரு இராணுவக் கூடாரங்களாக்கி அக் கூடாரங்களுக்கிடையே பெரும் போராக உரு வெடுக்கச் செய்து விட்டது. இப் போரில் பல நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. வானவூர்திகள், பீரங்கிகள், நச்சுப் புகை ஆகியவைகள் உபயோகப்படுத்தப்பட்டன. சாதாரண மக்களும் இப் போரினால் கொல்லப்பட்டார்கள். எழுபத்தைந்து லட்சம் மக்கள் இப் போரில் உயிர் துறந்தனர். நூற்றைம்பது லட்சம் மக்கள் இப் போரினால் காயமுற்றனர்.

ஜெர்மெனியின் படைகள் நடுநிலை நாடான பெல்ஜியத்தின் வழியாகச் சென்றதனால் இங்கிலாந்து தலையிட்டது. 1914ஆம் ஆண்டில் ஆங்கிலப் படையினரும் பெல்ஜியத் துருப்புகளும் ஜெர்மன் படைகளை எதிர்த்தன. ஜெர்மன் படைகளிடம் ஆங்கிலப் படைகளும் பெல்ஜியத் துருப்புகளும் நாமூர் (Namur) என்னுமிடத்தில் தோற்றன. ஆகவே, ஜெர்மன் படைகள் ஃபிரான்சை நோக்கிப் புறப்பட்டன. அப் படைகளுக்கு வான் கிளக் (Van Kluck) என்னும் ஜெர்மானியத் தளபதி தலைமை வகித்தார். ஃபிரான்சு நாட்டின் மண்ணிலே கடும் போர் ஏற்பட்டது. மிகக் கொடூரமான முறையில் மார்ன் (Marne) என்னுமிடத்தில் போர் நடந்தது. இப் போரினால் ஜெர்மன் படைகள் மேலும் ஃபிரான்சுக்குள் ஊடுருவாமல் தடுக்கப்பட்டது. எனினும் பெல்ஜியம் முழுவதும், ஃபிரான்சின் செல்வமிக்க வடபகுதியும் ஜெர்மனியின் வசமாயின.

1917ஆம் ஆண்டு வரை ரஷ்யா நேச நாடுகளின் பக்கம் இருந்து ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டு வந்தது. 1917ஆம் ஆண்டில் ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு ஜார் அரசர் தூக்கி எறியப்பட்டார். லெனினும் (Lenion) அவர் தோழர்களும் அரசைக் கைப்பற்றினர். அவர்கள் சமரசத்தை விரும்பினர். அதனால் ரஷ்யா ஜெர்மனியோடு பிரிஸ்டு லிட்வாஸ்க் சமாதான உடன் படிக்கை (Treaty of Brest Litvosk) செய்து கொண்டது.

ரஷ்யா நேச நாடுகளிலிருந்து பிரிந்த பிறகு, ஜெர்மனியின் பலம் மேலும் ஓங்கியது. வான் ஹின்டன்பர்க் (Von Hindenburg) லூடன்டார்ஃப் (Ludondroff) என்ற இரு ஜெர்மானிய தளபதிகள் நேச நாடுகளை எதிர்த்தும் பல இடங்களில் பல வெற்றிகளைப் பெற்றனர். நேச நாடுகள் தோற்றுவிடுமோ என்று எண்ணக்

கூடிய சூழ்நிலைதான் அப்போது நிலவியது. ஆனால் நேச நாடுகளுக்கு அமெரிக்கா உதவி செய்ய முன் வந்ததால் நிலைமை வேறு விதமாக மாறியது, லூசிடானியா (Lusitania) என்ற கப்பலை ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கடித்தது. அக் கப்பலிலிருந்த 1198 பேர் இறந்தனர். அவர்களுள் பலர் அமெரிக்கர். ஜெர்மானிய 'யு' படகுகளால் சில அமெரிக்கக் கப்பல்களும் அழிவுற்றன. அதனால் அமெரிக்காவில் இதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆகவே, ஜனாதிபதி வில்சன் ஜெர்மனியின் மீது போர்ப் பிரகடனம் செய்தார். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குள் ஏராளமான துருப்புகள் புகுந்தன. ஜெர்மனி எவ்வளவோ முயன்றும் முடியாமல் கடைசியில் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நேச நாடுகளிடம் சரணடைந்தது.

துருக்கி அச்சு நாடுகளோடு சேர்ந்து நேச நாடுகளை எதிர்த்துப் போரிட்டு வந்தது. மெசபொடாமிய (Mesopotamia) கள்ளிபோலி (Gallipoli) போன்ற இடங்களில் துருக்கி நேசநாடுகளின் படைகளைத் தோற்கடித்தது. கடைசியில் துருக்கியால் போரில் சமாளிக்க முடியாமல் போகவே வேறு வழியின்றிச் சரணடைந்தது.

1914ஆம் ஆண்டு ஜப்பான் அச்சு நாடுகளுக்கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்திருந்தது. கைசோ (Kaichow) மாகாணத்தையும் ஜெர்மனிக்குச் சொந்தமான சில இடங்களையும் ஜப்பான் பிடித்தது. நேச நாடுகளோடு சீனா சேர்ந்திருந்தபோதிலும், கடுமையான போருக்குப் பின் சீனா முழுவதையும் ஜப்பான் கைப்பற்றியது. ஜப்பானின் இச் செயல் பாரிஸ் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ் வுலகப் போரின் போது இங்கிலாந்து 6000 மிலியன் பவுன்களைச் செலவு செய்தது. 1500 மிலியன் பவுன்களை நேச நாடுகளுக்குக் கடனாக அளித்தது. இப் போரில் இங்கிலாந்து 6மிலியன் டன் பொருள்களை இழந்தது. மிதமீறிய இச் செலவுகளால் நாட்டில் பல வரிகள் உயர்த்தப்பட்டன. நாட்டில் விலைவாசிகள் பெரிதும் உயர்ந்தன. இப் போரில் இங்கிலாந்து ஒரு மிலியன் துருப்புகளை இழந்தது. ஒரு ஜெர்மன் இராணுவ வீரர்க்கு ஈடாக ஐந்து ஆங்கில வீரர்கள் கொல்லப்பட்டனர். 1915ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குப் பிறகு மேற்குப் பகுதியில் மட்டும் இங்கிலாந்து 1,15,000 இராணுவ அதிகாரிகளை இழந்தது.

இங்கிலாந்தின் உள்நாட்டு அரசியல்

முதல் உலகப் போரின் போது இங்கிலாந்தை ஆட்சி செய்தவர்கள் ஆஸ்க்வித், லாயிட் ஜார்ஜ் என்னும் இரு பிரதமர்களாவார்கள். போர் ஆரம்பமானவுடனே ஆஸ்க்வித் கிச்சனர் பிரபுவை (Lord Kitchener) போர் அமைச்சராக நியமித்தார். அவர் திறம்படப் பணி புரிந்தார். அவர் படைகளைத் திறமையுடன் திரட்டினார். அப் படைகளில் 5,00,000 வீரர்கள் சேர்ந்தனர். போரைத் திறம்பட நடத்த நாட்டில் எல்லோருடைய ஆதரவும் தேவை எனக் கருதி 1915ஆம் ஆண்டில் ஆஸ்க்வித் ஒரு கூட்டு அமைச்சரவையை (Coalition Ministry) அமைத்தார். அதில் போனர்லா (Bonarlaw), பால்ஃபர் என்னும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். போனர்லா என்பவர் குடியேற்ற நாட்டமைச்சராகவும் பால்ஃபர் கடற்படைத் தலைவராகவும் நியமனம் பெற்றனர். மெக்கென்னா (Mekenna) என்பவர் கருவூலத் தலைவராக நியமிக்கப்பட்டார்; இவருடைய முயற்சியால் போருக்கு வேண்டிய குண்டுகளும், துப்பாக்கிகளும் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. போர் அமைச்சர் கிச்சனரின் முயற்சியால் 7 அணியாக இருந்த படை 70 அணியாக மாறியது. ஆஸ்க்வித்தின் இக் கூட்டு அமைச்சரவை போர்த் தேவையைக் கருதி 1916ஆம் ஆண்டில் கட்டாய இராணுவ சேவையை வற்புறுத்த சட்டம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் இயற்றியது. சர் ஜான் சைமன் என்ற உள்நாட்டு அமைச்சர் இச் சட்டத்தை எதிர்த்துத் தமது பதவியை ராஜிநாமா செய்தார். 1916ஆம் ஆண்டில் போர்அமைச்சர் கிச்சனர் இறக்கவே, லாயிட்ஜார்ஜ் போர் அமைச்சர் பதவியை ஏற்றார்.

போர் நடத்துவதில் லாயிட் ஜார்ஜுக்கும் பிரதமர் ஆஸ்க்வித்துக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. அதனால் லாயிட் ஜார்ஜ் தமது போர் அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார். இவரைத் தொடர்ந்து வேறு சில அமைச்சர்களும் ராஜிநாமா செய்தனர். எனவே, ஆஸ்க்வித் அமைச்சரவை கலைந்தது. ஆஸ்க்வித் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதால் லாயிட் ஜார்ஜ் அப் பதவியை ஏற்றார். 1916ஆம் ஆண்டிலிருந்து 1922ஆம் ஆண்டு வரை லாயிட்ஜார்ஜ் பிரதமராகப் பணியாற்றினார். லாயிட் ஜார்ஜ் பிரதமரானவுடனே ஒரு கூட்டு அமைச்சரவையை அமைத்தார். அதில் போனர்லா, பால்ஃபர் போன்ற கன்சர்வேடிவ் கட்சியினரும், வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற தாராளக் கொள்கையினரும் இடம் பெற்றனர். லாயிட்ஜார்ஜின் அமைச்சரவை போரைத் திறம்பட நடத்தி

வெற்றிவாகை சூடியது. அதனால் 1918ஆம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லாயிட்ஜார்ஜ் பெரும் வெற்றி பெற்ருர். அதன் பின்னரும் லாயிட்ஜார்ஜ் ஒரு கூட்டு அமைச்சரவையை ஏற்படுத்தினர். அவ் வமைச்சரவை 1922ஆம் ஆண்டு வரை பதவி வகித்தது. முதல் உலகப் போர் நடந்து முடிந்தவுடனே சமாதானப் பேச்சுகளில் லாயிட் ஜார்ஜ் பெரிதும் பங்கு கொண்டார்.

சமாதான உடன்படிக்கைகள்

ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி ஆகிய அச்சு நாடுகள் சரணடைந்த பிறகு, ஐரோப்பாவில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்ட நேச நாடுகளின் பிரதிநிதிகள் பாரிஸ் நகரில் கூடினர். வெற்றிபெற்ற நாடுகளில் ஜப்பானும், இத்தாலியும் சிறிது காலத்திற்குள் மாநாட்டிலிருந்து விலகிக் கொண்டன. ஆகவே, அமெரிக்க ஜனுதிபதி வில்சனும், இங்கிலாந்து பிரதமர் லாயிட்ஜார்ஜும், ஃபிரான்சு நாட்டின் பிரதமர் க்ளெமென்ஷா (Clemenceau) ஆகிய முப்பெரும் தலைவர்களே முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர்.

சமாதான மாநாட்டில் லாயிட் ஜார்ஜ் பெரும் பங்கேற்ருர். அம் மாநாட்டில் அமெரிக்க ஜனுதிபதி வில்சனுக்கும் பிரெஞ்சு பிரதமர் க்ளமென்ஷாவுக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றின. வில்சன் அமைதி என்னும் கொள்கையின் அடிப்படையில் சமாதான உடன்படிக்கை இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனல் க்ளெமென்ஷா வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கூடிய வகையில் சமாதான உடன்படிக்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தினர். இவர்கள் இருவரையும் சமாதானம் செய்வதில் லாயிட் ஜார்ஜ் பெரும் பங்கேற்ருர்.

1918ஆம் ஆண்டு அமெரிக்க ஜனுதிபதி வில்சன் போரின் நோக்கங்களைத் தெளிவுபடுத்தி ஓர் அறிக்கை வெளியிட்டார். அவ் வறிக்கையில் 14 அடிப்படைக் கொள்கைகளை விவரித்திருந்தார். அக் கொள்கைகளிற் பல சமாதான உடன்படிக்கையில் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அக் கொள்கைகளாவன:-

1. நாடுகளிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும். இரகசிய முறை நயம் (Secret Diplomacy) கூடாது.

2. அமைதி காலத்திலும், போர்க் காலத்திலும் கப்பல் போக்குவரத்துத் தடையின்றி சுதந்திரமாக நடைபெற வேண்டும்.

3. சர்வதேச வாணிபத்தின் மீதிருந்த கட்டுப்பாடுகள் முழுவதுமாக நீக்கப்பட வேண்டும்.

4. போர்த் தளவாடங்களின் உற்பத்தியை ஒவ்வொரு நாடும் குறைக்க வேண்டும்.

5. குடியேற்ற நாடுகளின் உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் சமாதான முறையில் தீர்க்கப்படல் வேண்டும். தாய் நாடு, குடியேற்ற நாடு ஆகிய இரண்டு நாடுகளின் பிரச்சினைகளும் சமமாகக் கருதப்பட வேண்டும்.

6. ரஷ்யா தமது எதிர்கால சமூக அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள அதற்கு முழு வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும்,

7. பெல்ஜியத்திலிருந்து நேச நாடுகளின் துருப்புக்கள் வெளியேற்றப்பட்டு, அதன் பழைய நிலையே உருவாக வேண்டும்.

8. ஃபிரான்சிலிருந்து நேச நாடுகளின் துருப்புக்கள் வெளியேற்றப்பட்டு, அதன் பழைய நிலையை உருவாக்கி அதனிடம் அல்சேஸ், லோரெய்ன் (Alsace, Lorraine) என்ற இரண்டு இடங்களை ஒப்படைக்க வேண்டும்.

9. இத்தாலியின் எல்லைகள் மீண்டும் வரையறுக்கப்பட வேண்டும்.

10. ஆஸ்திரியா-ஹங்கேரி நாட்டு மக்களுக்கு சுய நாடுகளை அமைத்துக் கொள்ள உதவ வேண்டும்.

11. பால்கன் தீபகற்ப நாடுகளின் எல்லைகள் வரலாற்று முறைப்படி தீர்மானிக்கப்பட வேண்டும்.

12. துருக்கிய பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகள் சுயேச்சையாக வாழ வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

13. போலந்து நாட்டை சுதந்திர நாடாக ஏற்படுத்த வேண்டும். அத்துடன் கடலைப் பயன்படுத்தவும் அதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

14. உலகிலுள்ள சிறிய-பெரிய நாடுகளின் சுதந்திரத்திற்கும், எல்லைகளுக்கும் உத்தரவாதமளிக்கக் கூடிய வகையில் ஒரு சர்வதேச அமைப்பை (International Organisation) ஏற்படுத்த வேண்டும்.

வெர்சேல்ஸ் உடன்படிக்கை

1919ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் தேதியன்று ஜெர்மனிக்கும் நேச நாடுகளுக்கிடையேயும் வெர்சேல்ஸ் உடன்படிக்கை (Treaty of Versailles) கையெழுத்தாயிற்று. இவ் வுடன்படிக்கை கையெழுத்தாவதற்குள் பல பிரச்சினைகள் எழுந்தன. உடன்படிக்கையின் நகல் தயாரானவுடனே பிரதிநிதிகளை அனுப்பும்படி ஜெர்மனி கேட்டுக் கொள்ளப்பட்டது. ஜெர்மனி சில முக்கியமற்ற அதிகாரிகளை அனுப்பி அந் நகலை வாங்கி வரும்படி கூறியது. ஜெர்மனியின் இச் செயல் தங்களைப் பழிப்பது போலாகுமென்று நேசநாடுகள் கருதின. முழுமையான தகுதி படைத்த குழு ஒன்றை அனுப்பி உடன்படிக்கை நகலைப் பெற்றுக் கொள்ளும்படி நேச நாடுகள் கூறின. ஆகவே, ஜெர்மனி வெளி நாட்டமைச்சர் தலைமையில் ஒரு குழுவை அனுப்பியது. அக் குழு பாதுகாக்கப் பட்ட ஒரு விடுதியில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 1919ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதியன்று உடன்படிக்கை நகல் அக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ் வுடன்படிக்கையில் கடுமையான நிபந்தனைகள் ஜெர்மனி மீது விதிக்கப்பட்டிருந்தன. 230 பக்கங்களைக் கொண்ட அவ் வுடன்படிக்கைக்கு 443 பக்கங்களைக் கொண்ட குறிப்புத்தொகுதி ஒன்றை ஜெர்மனி அனுப்பியது. இதைக் கண்ட லாயிட் ஜார்ஜ் அவ் வுடன்படிக்கையில் சில மாறுதல்களைச் செய்தார். பின்னர் சில மாறுதல் செய்யப்பட்ட அவ் வுடன்படிக்கையை ஜெர்மனிக்கு அனுப்பி 5 நாட்களுக்குள் அதை ஏற்றுக்கொள்ளும்படியும், இல்லையேல் ஜெர்மனிமீது மீண்டும் படையெடுக்க நேரிடுமென்றும் பயமுறுத்தப்பட்டது. வேறு வழியின்றி ஜெர்மனி அவ் வுடன்படிக்கையில் கையெழுத்திட்டது. அவ் வுடன்படிக்கை, போரை ஆரம்பித்ததற்காக முழு பழியையும் ஜெர்மனி மீதே சுமத்தியது. அத்துடன் அப் போரால் விளைந்த சேதங்களுக்கு ஜெர்மனி 660 கோடி பவுன்களை நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தியது. ஜெர்மனி கைப்பற்றிய பிரதேசங்கள் அனைத்தும் அவ் வுடன்படிக்கைப் படி அந்தந்த நாடுகளுக்கே திருப்பித் தரப்பட்டன. ஜெர்மனி படை வீரர்களைக் குறைக்க வேண்டுமென்றும், 1,00,000 படை வீரர்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் அதன் கடற் படை அனைத்தும் பறிமுதல் செய்யப்படல் வேண்டுமென்றும் அவ் வுடன்படிக்கை

வற்புறுத்தியது, இங்ஙனம் ஜெர்மனி நாடானது பழி வாங்கப் பட்டது, தோல்வியடைந்த ஜெர்மனி படையிழந்து, நாடிழந்து, பணத்தையிழந்து, மானத்தையிழந்து நின்றது. ஜெர்மன் மக்களின் உள்ளங்கள் குமுறின. பழிவாங்கிய நாடுகளின் மீது பழிதீர்க்க அவர்கள் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

போரின் விளைவுகள்

முதல் உலகப் போரின் காரணமாக உலக மக்கள் பற்பல இன்னல்களுக்கு ஆளாயினர். போர்க் களங்களில் இலட்சக் கணக்கான போர் வீரர்கள் இறந்ததோடல்லாமல் இலட்சக்கணக்கான சாதாரண மக்களும் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் இழந்தனர். ஐரோப்பா முழுவதும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. போரினால் பல நாடுகளில் பணவறட்சி ஏற்பட்டது. அதனால் பல நாடுகள் தாள் நாணயங்களைக் கணக்கின்றி அச்சடித்தன. அதன் காரணமாக நாணயத்தின் மதிப்பு குறைந்து, விலைவாசிகள் உயர்ந்தன. உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. வியாபாரம் சீரழிந்தது. இங்கிலாந்தில் பல ஆலைகள் மூடப்பட்டன. பல நிலங்கள் தரிசாகக் கிடந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் அதிகரித்தது. ஆனால் உலக நாடுகளின் அரசியல் துறைகளில் சில நல்ல விளைவுகள் ஏற்பட்டன. ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி போன்ற நாடுகளில் குடியரசுகள் தோன்றின. போலந்து, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லாவியா, பின்லாந்து போன்ற புதிய குடியரசுகளும் தோன்றின. சர்வதேச வழக்குகள் சமாதான முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் சர்வதேச சங்கம் (League of Nations) ஒன்று 1919ஆம் ஆண்டில் தோன்றியது. அச் சங்கம் பொதுச் சபை, ஆலோசனைச் சபை, காரியாலயம், சர்வதேச நீதி மன்றம் போன்ற உறுப்புக்களைக் கொண்டு இயங்க ஆரம்பித்தது. இச் சங்கம் பல சர்வதேச சச்சரவுகளைத் தீர்த்தது. தம் முடிவுகளை அமுலாக்கத் தக்க படைபலம் இச் சங்கத்திடம் இல்லாததனால் வெறும் சிபார்சுகளை மட்டுமே செய்ய முடிந்தது. இச் சங்கத்திடம் இறைமை இல்லாமற் போகவே, வல்லரசுகள் வலுத் தாக்குதல்களில் இறங்கிய போது அவற்றைத் தடுத்து நிறுத்த இச் சங்கத்தால் முடியாமற் போயிற்று.

போருக்குப் பின் இங்கிலாந்தின் ஆட்சியும் அரசியலும்

முதல் உலகப் போரை வெற்றியுடன் நடத்திய லாயிட் ஜார்ஜின் கூட்டு அமைச்சரவையே தொடர்ந்து பதவி வகித்தது. அவ் வமைச்சரவை 1918ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதித்துவச்

சட்டத்தை (Representation of the People Act) இயற்றியது. அச் சட்டப்படி, நாட்டில் 21 வயது அடைந்த ஆண்களும், 30 வயதடைந்த பெண்களும் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். 44 பழைய பரோக்கள் ஏற்படுத்தப்பட்டன. 1920ஆம் ஆண்டில் 'வேலையின்மை காப்புநெறிச் சட்டம்' (Unemployment Insurance Act) ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி வேலையில்லாதோர் அரசாங்க உதவியைப் பெற்றனர். 1922ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐரிஷ் சுயாட்சிச் சட்டம் (Irish Home Rule Act) இயற்றப்பட்டது. அச் சட்டத்தால் அயர்லாந்து சுயாட்சி பெற்றது.

லாயிட் ஜார்ஜின் கூட்டு அமைச்சரவை போரினல் ஏற்பட்ட பல பிரச்சினைகளைச் சமாளிக்க இயலாமல் திகைத்தது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலை தூக்கியது. விலைவாசிகள் உயர்ந்தன. வாணிபத்தில் மந்தநிலை ஏற்பட்டது. தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி வேலை நிறுத்தங்களைச் செய்தனர். இத்தகைய சூழ்நிலையில் 1922ஆம் ஆண்டில் கூட்டு அமைச்சரவையிலிருந்த கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் அமைச்சரவையை விட்டு விலகினர். தாங்கள் கூட்டு அமைச்சரவையில் சேர்ந்ததன் நோக்கம் நிறைவேறிவிட்டதென்றும், இனி ஒரு கட்சியின் ஆட்சி நாட்டில் ஏற்பட வேண்டுமென்றும் அவர்கள் கூறினர். எனவே லாயிட் ஜார்ஜ் தம் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார். ஆண்ட்ரு போனர்லா (Andrew Bonarlaw) என்ற கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பிரதமராக்கப்பட்டார். உடனே 1922ஆம் ஆண்டிலேயே நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. அத்துடன் தொழிற்கட்சியும் 142 இடங்களைப் பிடித்தது. ஆனால், லிபரல் கட்சி இத் தேர்தலில் படுதோல்வி யடைந்தது. போனர்லா சில மாதங்கள் தான் பிரதமராய்ப் பணியாற்றினர். அதன் பின்னர் நோயின் காரணமாக அவர் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். உடனே கன்சர்வேடிவ் கட்சியில் யார் பிரதமராவதென்ற பிரச்சினை தோன்றியது. மார்க்விஸ் கர்ஸன் (Marquis Curzon) என்பவரும் சர் ஆஸ்டன் சேம்பர்லின் (Sir Austan Chamberlin) என்பவரும் பிரதமராக விரும்பினர். இவ் விருவரில் யார் பிரதமரானலும் கட்சியில் பிளவு ஏற்படும் என்று கருதி கன்சர்வேடிவ் கட்சியினர் ஸ்டான்லி பால்டுவின் (Stanley Baldwin) என்பவரைப் பிரதமராக்கினர். அவர் 1923-லிருந்து 1924ஆம் ஆண்டு வரை தான் பதவி வகித்தார். நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமானல் காப்புவரி முறையை மாற்ற

வேண்டுமென்று கூறினர். ஆனால், மக்களின் தீர்ப்பை யொட்டியே தாம் காப்புவரி சீர்திருத்தம் செய்யப் போவதாகக் கூறி அவர் பாராளுமன்றத்தைக் கலைத்து பொது தேர்தலுக்கு உத்தரவிட்டார். அத் தேர்தலில் அவரது கட்சி தோல்வியடைந்தது. அத் தேர்தலில் தொழிற் கட்சி 291 உறுப்பினர்களையும், லிபரல் கட்சி 155 உறுப்பினர்களையும். கன்சர்வேடிவ் கட்சியும் கூட்டணிகளும் 261 உறுப்பினர்களையும் பெற்றன.

தொழிற்கட்சியின் முதல் அமைச்சரவை

1924ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொழிற் கட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் அமைச்சரவையை அமைத்தது. அக் கட்சியின் தலைவர் ராம்சே மாக்டனல்டு (Ramsay MacDonald) பிரதமரானர். பொதுமக்கள் சபையில் 291 உறுப்பினர்களையே தொழிற்கட்சி பெற்றிருந்ததனல் லிபரல் கட்சியின் ஆதரவுடனேயே அது அமைச்சரவையை அமைத்தது. லிபரல் கட்சியும் தனது ஆதரவைச் சில மாதங்களுக்கு மட்டுமே தொழிற்கட்சிக்கு வழங்கியது. பிரதமர் ராம்சே மாக்டனல்டு கொள்கையின் காரணமாக லிபரல் கட்சி அமைச்சரவைக்குக் கொடுத்துவந்த தன் ஆதரவை நிறுத்தியது. ஆகவே, தொழிற்கட்சியின் அமைச்சரவை 1924ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வீழ்ச்சியுற்றது.

கன்சர்வேடிவ் கட்சியின் அமைச்சரவை

தொழிற் கட்சியின் அமைச்சரவை வீழ்ச்சியுற்ற பிறகு இங்கிலாந்தில் மீண்டும் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி 400 இடங்களையும், தொழிற் கட்சி 150 இடங்களையும், லிபரல் கட்சி 40 இடங்களையும் பெற்றன. கன்சர்வேடிவ் கட்சி பெரிய வெற்றி பெற்றதால் பால்டுவின் இரண்டாம் முறையாக இங்கிலாந்தின் பிரதமராக்கப்பட்டார். 1929ஆம் ஆண்டு வரை பால்டுவின் பிரதமர் பதவியை வகித்தார்.

பால்டுவினின் அமைச்சரவை தங்க நாணயத் திட்டத்தை (Gold Standard) மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்தது. அத்துடன் பவுன் விலையை 1914ஆம் ஆண்டில் இருந்த அளவுக்கே நிர்ணயித்தது. அதனல் நாட்டில் பண்டங்களின் விலை உயர்ந்தது; பொருள்களின் விற்பனை குறைந்தது; அத்துடன் தொழிலாளர்களின் கூலியும் குறைந்தது. ஆகவே, நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிற்று. தொழிலாளி-முதலாளி பகைமை வளர்ந்தது. 1924ஆம் ஆண்டில் பால்டுவின் அரசாங்கம் சுரங்கங்களின்மீது செலுத்தி வந்த கட்டுப்பாட்டை எடுத்து

விட்டது. ஆகவே, பல சுரங்கத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். ஆகவே, அவர்கள் அரசாங்கத்திடம் உதவிப் பணம் கேட்டனர். அது மறுக்கப்படவே 1926ஆம் ஆண்டு நாட்டில் பெரும் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. பால்டுவின் அரசாங்கம் அவ் வேலைநிறுத்தத்தை சமயோசித புத்தியோடு சமாளித்தது. அதனால் வேலை நிறுத்தப் தோல்வியடைந்தது. இதையொட்டி பால்டுவின் அரசாங்கம் 1927ஆம் ஆண்டில் தொழில் தகராறுகள் சட்டம் (Trade Dispute Act) ஒன்றை இயற்றியது. இச் சட்டம் வேலை நிறுத்தங்களையும், மறியல்கள் செய்யப்படுவதையும் சட்டத்திற்குப் புறம்பானவைகள் என்று கூறியது.

1928ஆம் ஆண்டில் பால்டுவின் அமைச்சரவை 'சம வாக்களிப்புச் சட்டம்' (Equal Franchise Act) என்ற ஒரு சட்டத்தை இயற்றியது. 21 வயது நிரம்பிய ஆண் பெண் இரு பாலாருக்கும் சமமான வாக்களிக்கும் உரிமை இச் சட்டத்தால் கொடுக்கப்பட்டது. தொகுதிகள் இச் சட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டன. 70,000 மக்களுக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க இச் சட்டம் வகை செய்தது. 1925ஆம் ஆண்டு 'விதவைகள், அனாதைகள், முதியோர் உதவிப் பணச் சட்டம் (Widows, Orphans and Old Age Contributory Pension Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டம், 70 வயதிற்குப் பதிலாக 65 வயதடைந்த முதியோர் உதவிப் பணம் பெற, வகை செய்தது. அத்துடன் இச் சட்டத்தால் விதவைகளும், அனாதைகளும் அரசாங்கத்திடமிருந்து உதவிப் பணம் பெற்றனர்.

1929ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மக்களும், தொழிலாளர்களும் பால்டுவின் அரசாங்கத்தின் மீது வெறுப்புற்றிருந்ததால் அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடைந்தது. அதிக உறுப்பினர்களைப் பெற்ற தொழிற்கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றியது. தொழிற் கட்சியின் தலைவர் ராம்சே மாக்டனால்டு இரண்டாம் முறையாக பிரதமராக்கப் பட்டார். இப்பொழுதும் லிபரல் கட்சியின் ஆதரவின்றி இயங்க முடியாத நிலையிலேயே அவர் இருந்தார். இருந்த போதிலும் 1931ஆம் ஆண்டு வரை அவர் பிரதமர் பதவியை வகித்தார்.

ராம்சே மாக்டனால்டு இரண்டாம் முறையாகப் பதவியேற்ற போது நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்தது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது.

வியாபார மந்தம் ஏற்படலாயிற்று. அரசாங்கத்திற்குப் பண நெருக்கடி அதிகமாயிற்று. அதனால் பொருளாதார நெருக்கடியைச் சீராக்க ஆலைகளின் மீது அரசாங்கம் மேலும் வரியை விதித்தது. மக்களுக்குக் கொடுக்கும் உதவிப் பணத்தைக் குறைத்தது. ஆகவே, ராம்சே மாக்டனால்டு மீது மக்களுக்கும், ஆலை அதிபர்களுக்கும் அதிருப்தி ஏற்பட்டது. இத்தகைய பொருளாதார நெருக்கடியில் பதவியை ராஜிநாமா செய்வதே சாலச் சிறந்த தென்று அவர் எண்ணினார். ஆகவே, தொழிற்கட்சி அமைச் சரவை கலைக்கப்பட்டது.

அதன் பிறகு ராம்சே மாக்டனால்டு ஒரு தேசிய அரசாங்கத்தை (Nationalist Government) அமைக்க ஒப்புக் கொண்டார். அக் கூட்டு அமைச்சரவையில் கன்சர்வேடிவ் கட்சி, தொழிற் கட்சி, லிபரல் கட்சி உறுப்பினர்கள் இடம் பெற்றனர். அவ் வமைச்சரவை பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கலாயிற்று. அரசாங்கம் பொதுச் செலவைக் குறைத்து, சிக்கனத்தை மேற்கொண்டது. வரிகள் யாவும் அதிகரிக்கப்பட்டன. வேலையற்றோருக்கு அளித்து வந்த உதவிப் பணம் மேலும் குறைக்கப்பட்டன. தடையிலா வாணிபக் கொள்கை கைவிடப்பட்டது. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி யாகும் பொருள்களின்மீது வரி விதிக்கப்பட்டன. தேசியக் கடனுக்காக அளிக்கப்பட்டு வந்த வட்டிவிகிதம் ஐந்து சத விகிதத்திலிருந்து மூன்றரையாகக் குறைக்கப்பட்டது. இங்கி லாந்து தங்க நாணயத் திட்டத்திலிருந்தும் (Gold Standard) விலகியது. இத்தகைய நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதார நிலை சீரடைய ஆரம்பித்தது. பழைய செல்வாக்கு மீண்டும் சிறிது சிறிதாகத் திரும்பியது. 1931ஆம் ஆண்டு ராம்சே மாக்டனால்டு அமைச்சரவை வெஸ்ட் மினிஸ்டர் சட்டம் (Statute of West Minister 1931) ஒன்றை இயற்றி எல்லா டொமினியன்கள் (Dominions) அல்லது சுயாட்சி பெற்ற நாடுகளுக்கு உள் நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் பூரண சுதந்திரத்தை வழங்கியது. அத்துடன் 1931ஆம் ஆண்டிலேயே அதற்காகக் குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் செல்லுபடி சட்டமானது (Colonial Laws Validity Act 1865) ரத்து செய்யப்பட்டது.

1935ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் ராம்சே மாக்டனால்டு கட்சி தோல்வியுற்றது. பெரும்பான்மை பலம் பெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பால்டுவின் பிரதமரானார். 1935ஆம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் அரசர் ஆட்சியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா ஆங்கிலப் பேரரசு முழுவதும் குதூகலமாகக்

கொண்டாடப்பட்டது. ஆனால் 1936ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் உயிர் நீத்தார்.

எட்டாம் எட்வர்டு

ஐந்தாம் ஜார்ஜ் அரசர் உயிர் நீத்த பின், அவர்தம் மூத்த மகன் எட்டாம் எட்வர்டு 1936ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்தார். 1894ஆம் ஆண்டில் பிறந்த இவர் மிகவும் அழகுடையவர். மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர். ஏழை எளிய மக்களுக்காக உழைப்பதே தமது வாழ்வின் குறிக்கோள் என்று கூறி வந்ததனால், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். ஏழை எளிய மக்களின் இல்லங்களுக்குத் தாமே நேரில் சென்று அவர்களுடைய குறைகளைக் கண்டறிந்தார். கனடா, இந்தியா போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அம் மக்களைப் பற்றியும் அவர்களுடைய அரசியலைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். ஆகவே, ஆங்கில மக்கள் மட்டுமல்லாமல் பேரரசு நாடுகளில் வாழ்ந்த மக்களும் இவரை நேசித்தனர். மக்கள் அனைவரும் இவரிடமிருந்து மாபெரும் சாதனைகளை எதிர் பார்த்துக் கொண்டிருந்த பொழுதுதான் அனைவரையும் திடுக்கிடச் செய்யும்படியான செய்தி ஒன்று வெளிப்பட்டது. வாலிஸ் சிம்சன் (Wallis Simpson) என்ற ஓர் அமெரிக்கப் பெண்ணை அரசர் திருமணம் செய்துகொள்ளப் போகின்றார் என்ற செய்தி பரவலாகப் பரவியது. எங்கு பார்த்தாலும் மக்கள் இதைப் பற்றியே பேசிக் கொண்டனர். கண்டனக் குரல்கள் ஆங்காங்கே எழுந்தன. செய்தித் தாள்கள் பல இதை எதிர்த்துச் செய்திகளை வெளியிட்டன. இரண்டுமுறை விவாகரத்து செய்துகொண்ட பெண்ணை அரசர் திருமணம் செய்து கொள்வது ஆங்கிலிக்கத் திருச்சபையின் கோட்பாட்டுக்குப் புறம்பானது என்றும் கூறப் பட்டது. அப்பொழுது இங்கிலாந்தின் பிரதமராயிருந்த பால்டுவின் டொமினியன் நாடுகளின் பிரதமர்களுக்கு இதைப்பற்றி எழுதி அவர்களது கருத்து என்ன என்பதை அரசருக்குத் தெரிவிக்கும் படி கேட்டுக் கொண்டார். அயர்லாந்தைத் தவிர மற்ற நாடுகள் அப் பெண்ணைத் தங்களின் அரசியாக ஏற்றுக்கொள்ள முடியாது என அறிவித்தன. இங்கிலாந்தின் அமைச்சரவையும் இத் திருமணத்திற்குத் தனது ஒப்புதலை அளிக்க மறுத்தது. ஆனால் அரசர் அப் பெண்ணை மணக்க உறுதியாய் இருந்தார். அதற்காக 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் தேதியன்று தாம் ஆங்கில அரியணையைத் துறந்து விட்டதாக அறிவித்தார். அதே நாளன்று அமைச்சரவை அவசர அவசரமாக முடி துறப்பு அறிவிப்புச் சட்டம் (Declaration of Abdication Act) ஒன்றைப்

பாராளுமன்றத்தில் இயற்றியது. யார்க் கோமகன் ஆறும் ஜார்ஜ் என்ற பட்டப் பெயரோடு ஆங்கில அரியணை ஏறினர்.

எட்டாம் எட்வர்டின் முடிதுறப்பானது ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெறுகின்றது. அமைச்சரவையின் வல்லமையை இந் நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது. அமைச்சரவைக்கும் அரசருக்குமுள்ள தொடர்பினை இந் நிகழ்ச்சி எடுத்துக் காட்டிவிட்டது. அமைச்சரவையின் விருப்பப்படியே அரசர் தமது சொந்த விவகாரங்களில்கூட நடந்து கொள்ள வேண்டும் என்பது நன்கு நிலைநாட்டப் பட்டது.

இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை (1919-1939)

இங்கிலாந்து 1919-20ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெர்சேல்ஸ் சமாதான உடன்படிக்கைக்காகப் பெரிதும் பாடுபட்டது. அவ்வுடன்படிக்கையால் இங்கிலாந்து பெரிதும் பயனடைந்தது. ஆகவே, இங்கிலாந்தின் நிலை உலகஅரங்கில் உச்சநிலையடைந்தது. இருந்த போதிலும் முதல் உலகப் போருக்குப் பின், இங்கிலாந்து தனது வெளிநாட்டுக் கொள்கையில் பல பிரச்சினைகளை ஏற்க வேண்டியிருந்தது.

ஃபிரான்சு

இங்கிலாந்தும் ஃபிரான்சும் முதல் உலகப் போரின்போது ஒன்றுபட்டுப் போர் செய்த போதிலும், ஃபிரான்சின் பாதுகாப்பைப் பற்றி இரு நாடுகளுக்கிடையே பின்னர் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. ஃபிரான்சில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு நடக்குமேயானல், இங்கிலாந்தும் அமெரிக்காவும் சேர்ந்து அவ் வாக்கிரமிப்பைத் தடுக்குமென்று இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஃபிரான்சுக்கு உறுதி கூறியிருந்தன. அமெரிக்கா அவ் வாக்குறுதியினின்றும் பின்வாங்கி விட்டது. ஃபிரான்சு ஜெர்மனியை எதிர்த்து என்னென்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றதோ அவைகளையெல்லாம் இங்கிலாந்து செய்யவும் தயாராயில்லை. ஏனெனில் இங்கிலாந்தின் பிரதமர் லாயிட்ஜார்ஜ் ஜெர்மனியிடமும் பரிவுணர்வு காட்டினர். ஜெர்மன் மக்களின் துயரங்களைப் போக்க வெர்சேல்ஸ் உடன்படிக்கையைத் திருத்தியமைக்க வேண்டுமென்றும் லாயிட்ஜார்ஜ் விரும்பினர். 'ஒரு சுதந்திர,

மன நிறைவு கொண்ட, செல்வமிக்க ஜெர்மனி உலக நாகரிகத்திற்குத் தேவை' என்று லாயிட்ஜார்ஜ் கூறிவந்தார். இங்கிலாந்து இத்தகைய எண்ணத்தை ஜெர்மனியின்பால் கொண்டிருந்ததால் ஃபிரான்சு இங்கிலாந்தின் உறவினின்றும் விலகியது. தன் சொந்தக் காலிலேயே நிற்க ஃபிரான்சு முடிவெடுத்தது.

ரஷ்யா

முதல் உலகப் போருக்குப்பின் இங்கிலாந்து ரஷ்யாவிடம் பரிவுணர்வு காட்டும் நிலையில் அமையவில்லை. ரஷ்யாவின் தாக்குதலினின்று எஸ்டோனிய அரசை (State of Estonia) காப்பாற்ற வேண்டி 1919-20 இல் ஆங்கிலத் துருப்புகள் வட ரஷ்யாவில் போரிட்டன. போலந்துக்குள் ரஷ்யா நுழைவது நிச்சயமாகத் தோன்றியதால், போலந்தைக் காப்பாற்ற வேண்டி இங்கிலாந்து தனது வலிமையையெல்லாம் காட்டுமென்று லாயிட் ஜார்ஜ் ரஷ்யாவை எச்சரித்தார். இருந்த போதிலும் ரஷ்யா போலந்தைத் தாக்கியபோது இங்கிலாந்து போலந்திற்கு உதவி செய்ய முன்வரவில்லை. அதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

இங்கிலாந்தை எதிர்த்து பிரச்சாரம் எதுவும் செய்வதில்லை என்று ரஷ்யா ஒப்புக் கொண்டதனால் 1921ஆம் ஆண்டு லாயிட் ஜார்ஜ் ரஷ்யாவோடு ஒரு வியாபார ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். 1924ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவுக்குச் சட்ட வழியான அங்கீகாரம் இங்கிலாந்தால் கொடுக்கப்பட்டது. 1929ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் தொழிற்கட்சி ஆட்சி அமைத்தவுடன், அது ரஷ்யாவுடன் ஒரு வாணிப ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. ஜெர்மனியில் ஹிட்லரின் ஆதிக்கம் ஏற்பட்டதாலும், அவர் ரஷ்யாவிலுள்ள ஆட்சியைக் கண்டனம் செய்ததாலும், மன்சூரியாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையாலும், ரஷ்யா மேற்கு ஐரோப்பிய ஜனநாயக நாடுகளுடன் ஒத்துப் போகும்படி உந்தப்பட்டது. இச் சமயத்தில் ரஷ்யா சர்வதேச சங்கத்தில் சேர விரும்பி, அச் சங்கத்தில் ஓர் உறுப்பு நாடாகவும் சேர்ந்தது. 1938ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து-ரஷ்யா உறவு சுமுகமாக இருந்தது. செக்கோஸ்லோவாக்கிய தகராறில், ஜெர்மனியை எதிர்த்துப் போரிட இங்கிலாந்தோடு ரஷ்யா சேர விரும்பியது. ஹிட்லரால் அதிக ஆபத்து நேருமெனக் கருதப்பட்டு இங்கிலாந்து-ரஷ்யா உறவை மேலும் வலுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் சில கருத்து வேறு

பாடுகளினால் இரு நாடுகளுக்கிடையே கூட்டுறவு ஏற்பட முடியாமற் போய்விட்டது. இரண்டாவது உலகப் போரின் காரணமாக ஜெர்மனி ரஷ்யாவோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. அவ் வுடன்படிக்கையின்மூலம் இரு நாடுகளும் ஆக்கிரமிப்பு செய்வதில்லை என ஒப்புக் கொண்டன. ஆனால் ஜெர்மனி அவ் வொப்பந்தத்தை மீறி ரஷ்யாவின் மீது படையெடுத்தது. ஆகவே, ரஷ்யா 1941ஆம் ஆண்டில் இங்கிலாந்தோடு சேர்ந்தது. 1941லிருந்து 1945வரை இரு நாடுகளும் ஒன்றுபட்டு ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டன.

துருக்கி

கமால் பாஷாவின் தலைமையில் வலிமை பெற்ற துருக்கி (Turkey) நாளடைவில் வெர்சேல்ஸ் உடன்படிக்கையைப் புறக்கணித்தது. ஸ்மிர்னாவையும், ஆசியா மைனரையும் துருக்கி கைப்பற்றியது. அதன்பின் நேசநாடுகளுக்கும் துருக்கிக்கும் 1922ஆம் ஆண்டில் லாசேன் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை (Treaty of Lawsane) ஏற்பட்டது. அதன்படி துருக்கிக்கு கான்ஸ்டான்டிநோபிள், ஸ்மிர்னா, ஆசியாமைனர் ஆகிய இடங்கள் கிடைத்தன. இங்கிலாந்தும், ஃபிரான்சும் சிமிர்நா (Smyrna) நகரத்தையும் அதனைச் சேர்ந்தாற் போலுள்ள ஐயோனியா (Ionia) நாட்டையும் எடுத்துக் கொள்ள கிரேக்கர்களுக்கு அனுமதித்தன. இதைக் கமால் பாஷாவின் தலைமையில் துருக்கியர்கள் கண்டனம் செய்தனர். அதனால் கிரீஸுக்கும் (Greece) துருக்கிக்கும் இடையே போர் ஏற்படக் கூடிய நிலைமை உருவானது. இப் போர் ஏற்படாவண்ணம் இங்கிலாந்தின் முயற்சியால் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் எகிப்தினுடைய (Egypt) சுதந்தரம் நிர்ணயிக்கப்பட்டது. ஈராக்கின் (Iraq) எல்லைகளை நிர்ணயிக்க துருக்கியும் இங்கிலாந்தும் ஒப்புக் கொண்டன. அதன்படி சர்வதேச சங்கம் (League of Nations) எல்லைகளை நிர்ணயித்தது. அதை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. அதிலிருந்து இங்கிலாந்தும் துருக்கியும் நட்பு நாடுகளாயின. இரண்டாவது உலகப் போரின்போது இரு நாடுகளின் நட்பு மேலும் வளர்ந்தது.

ஜெர்மனி

முதல் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்துக்கு ஜெர்மனியின் பால் கருணை ஏற்பட்டது. ஜெர்மனியை சர்வதேச சங்கத்திற்குக் கொண்டுவர இங்கிலாந்து முயற்சி செய்தது. ஆலோசனைச்

சபையில் ஜெர்மனிக்கு ஓர் நிரந்தர இடம் கொடுக்கப்பட்டதால் ஜெர்மனியும் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது. 1923ஆம் ஆண்டில் ஜெர்மனியின் 'ரூர் பள்ளத்தாக்கை (Ruhr Valley) ஃபிரஞ்சுத் துருப்புகள் ஆக்கிரமித்துக் கொண்டதை இங்கிலாந்து ஆதரிக்கவில்லை. 1933ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியில் தலையெடுத்த நாள் வரை இதே கொள்கையைத் தான் இங்கிலாந்து ஜெர்மனியின்பால் கொண்டிருந்தது. அதன் பிறகும் கூட 1935ஆம் ஆண்டில் இங்கிலாந்து ஜெர்மனியோடு ஓர் கப்பற் படை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. 1936ஆம் ஆண்டில் ரினிலாண்டையும் (Rhineland) 1938ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவையும் ஆக்கிரமித்துக் கொண்டதனால் இங்கிலாந்துக்கு ஜெர்மனியிடம் இருந்த நம்பிக்கை தகர்ந்தது. அத்துடன் இங்கிலாந்தின் விருப்பத்திற்கு மாருக ஹிட்லர் ஸ்பெயின் உள்நாட்டுப் போரின் போது பிரான்கோ (Francho) என்ற தளபதிக்கு உதவி செய்தார். செக்கோஸ்லோவேக்கியா பிரச்சினையில் இங்கிலாந்து ஒரு நெகிழ்வற்ற முடிவை எடுத்தது. ஆங்கில இராணுவம் தயார் படுத்தப்பட்டது. அத்துடன் ஹிட்லர் அந் நாட்டை விழுங்க எவ் வகையிலும் அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் இங்கிலாந்து எச்சரித்தது. ஆனல் பிரதமர் சேம்பர்லின் 1938ஆம் ஆண்டில் மியூனிச் நகரில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு செக்கோஸ்லோவேக்கியாவைத் தானம் செய்தார். சேம்பர்லினுடைய 'எதிரிக்கு விட்டுக் கொடுக்கும் கொள்கையை' (Policy of Appeacement) சர்ச்சில் வன்மையாகக் கண்டித்தார். மியூனிச் ஒப்பந்தத்தால் இங்கிலாந்து தன் எதிரியின்கையில் படு தோல்வி யடைந்துவிட்டது என்று அவர் குறைகூறினர். ஹிட்லரின் நாடு பிடிக்கும் பசி மேலும் வளர்ந்தது. அப் பசியைத் தீர்த்துக் கொள்ள ஹிட்லரின் படைகள் 1939ஆம் ஆண்டு போலந்துக்குள் சென்றன. அதனுலேயே இங்கிலாந்து போரில் குதித்தது.

1919ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரை ஆயுதக் குறைப்புக் கொள்கையை (Policy of Disarmament) நேர்மையான முறையில் கடைப்பிடித்து வந்தது. ஆயுதக் குறைப்பு மாநாட்டைக் கூட்டி அதில் பங்கெடுத்து அது வெற்றிகரமாக முடிய இங்கிலாந்து பெரிதும் பாடுபட்டது. 1930ஆம் ஆண்டில் லண்டனில் ஒரு கப்பற் படை மாநாடு கூட்டப்பட்டது. இத்தாலியும், ஃபிரான்சும் தங்கள் கப்பற் படையைக் குறைக்க முடியாது என்று கூறிய போதிலும் இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் நீர் மூழ்கிக் கப்பல்களின் அளவைக் குறைப்ப

தாகவும், போர்க் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைப்ப தாகவும் ஒப்புக் கொண்டன. அதன்படி இங்கிலாந்து 5 போர்க் கப்பல்களையும், அமெரிக்கா 3 போர்க் கப்பல்களையும் ஜப்பான் ஒரு போர்க் கப்பலையும் அழித்தன. இங்கிலாந்தின் முயற்சியால் உலகின் பல பாகங்களிலும் அமைதி ஏற்படுத்தப்பட்டது. பல சமரச உடன்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன.

24. ஆறும் ஜார்ஜ் காலத்திய அரசாங்கமும் அரசியலும்
(1936—1952)

இங்கிலாந்தின் அரசர் எட்டாம் எட்வர்டு 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடி துறக்கவே, ஐந்தாம் ஜார்ஜின் இரண்டாவது மகனுகிய யார்க் கோமகன் ஆறும் ஜார்ஜ் (George VI) எனும் பட்டப் பெயரோடு ஆங்கில அரியணை ஏறினுர். இவர் 1895ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜுக்கும் மேரி அரசியாருக்கும் இரண்டாவது மகனுகப் பிறந்தார். 1919ஆம் ஆண்டில் இவர் யார்க் கோமகன் என்ற பட்டத்தைப் பெற்றுர். 1923ஆம் ஆண்டில் எலிஸபெத் என்ற பெண்மணியை மணந்தார். இவர் இங்கிலாந்தின் அரசராக்கப்படுவார் என்ற எண்ணத்தில் வளர்க்கப்படவில்லை. எட்டாம் எட்வர்டு முடி துறந்ததாலேயே இவருக்கு ஆங்கில அரசராகும் வாய்ப்புக் கிட்டியது. இவரால் தாராளமாகப் பேச முடியாது. இருந்த போதிலும் இவர் மக்களின் அன்பையும், அமைச்சர்களின் ஆதரவையும் பெற்றுர். இவர் மிகவும் பண்பு மிக்கவர். மக்களின் நலன்களிலே அக்கறை கொண்டவர். இவர் தமது 16 ஆண்டு ஆட்சிக் காலத்தில் மக்களின் நலன்களுக்கும், உலக அமைதிக்கும் பாடுபட்டார். 1952ஆம் ஆண்டில் திடீரென்று இவர் இருதயக் கோளாறினுல் மாண்டார்.

ஆறும் ஜார்ஜ் ஆங்கில அரியணை ஏறியபோது பால்டுவின் அமைச்சரவை பதவியிலிருந்தது. அப்பொழுது வெளிநாட்டு விவகாரங்களே அவ் வமைச்சரவையின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. ஜெர்மனியிலும், இத்தாலியிலும் ஹிட்லர், முசோலினி போன்ற யதேச்சாதிகாரிகள் தோன்றி ஜனநாயகத்திற்குச் சாவுமணி அடிக்கப் போவதாகப் பறை சாற்றினர். ஜெர்மனியும், இத்தாலியும் இச் சமயத்தில் தான் ஏகாதிபத்தியப் பாதையில் விரைந்து நடை போட ஆரம்பித்தன. போரிடுவதன் மூலமே மக்கள், உயர் மக்களாக மாற முடியும் என்று ஹிட்லரும் முசோலினியும் கூறி வந்தனர். அதற்காக அவர்கள் போரிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.

இந் நிலையில் இங்கிலாந்தில் பால்டுவின் அமைச்சரவை பதவி விலகியது. ஆகவே, 1937ஆம் ஆண்டில் பால்டுவினுக்குப் பதிலாக நெவிலி சேம்பர்லின் (Neville Chamberlain) இங்கிலாந்தின் பிரதமராகப் பதவியேற்றுர். பிரதமரானவுடனே இவர் தொழிலாளர் நலங் கருதி 1937ஆம் ஆண்டில் தொழிற்சாலை சட்டம் (Factory Act) ஒன்றைக் கொண்டு வந்தார். நாட்டில் வேலையின்மைப் பகுதிகளில் புதிய தொழிற் சாலைகளை ஏற்படுத்தினுர், ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் சிறிது குறைந்தது, இவரது அமைச்சரவை அமைதியிலும், சமாதானத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தது. ஆகவே, சேம்பர்லின் ஹிட்லரோடு பேசி ஏற்படப் போகும் போரை நிறுத்த முயன்ருர். 1938ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் ஹிட்லரோடு மியூனிச் நகரில் இவர் பேச்சு வார்த்தைகளை நடத்தினுர். அதன் பயனுக இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. செக்கோஸ்லோவேகியாவின் ஒருபகுதியை ஜெர்மனிக்குக் கொடுத்துவிட இவர் இசைந்தார். இதன் காரணமாகப் போர் ஏற்படாது என்று நினைத்தார். சேம்பர்லினுடைய இக் கொள்கை நாட்டில் பலராலும் எதிர்க்கப்பட்டது. மியூனிச் ஒப்பந்தத்தை சர்ச்சில் போன்ருேர் மிகவும் கடுமையாகக் கண்டித்தனர். அதே சமயத்தில் ஹிட்லரின் நடவடிக்கைகள் போர் ஏற்படும் வகையிலே அமைந்திருந்தன. இதையறிந்த சேம்பர்லின் விழிப்புற்றுக் கட்டாய இராணுவ சேவையை நாட்டில் புகுத்தினுர். விரைவிலேயே நாட்டுப் படை ஒன்றையும் உருவாக்கினுர். எதிர்பார்த்தபடியே 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இரண்டாவது உலகப் போர் மூண்டது. இப் போரைச் சமாளிக்க சேம்பர்லின் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டார். கட்டாய இராணுவச் சேவையை 21 வயதடைந்த ஆண்களுக்கு மட்டுமின்றிப் பெண்களுக்கும் கொண்டு வந்தார். விலைக் கட்டுப்பாடு முறைகளையும், உணவுப் பங்கீட்டு முறைகளையும் நாட்டில் புகுத்தினுர். வரிகளை நாட்டில் அதிகப் படுத்தினுர். இத்துடன் போரில் ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைக்காததால் சேம்பர்லின் மீது மக்கள் நம்பிக்கை இழந்தனர். ஆகவே, 1940ஆம் ஆண்டு மே மாதத்தில் சேம்பர்லின் தமது பதவியை ராஜிநாமா செய்தார். வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமர் பதவியை ஏற்ருர்.

இங்கிலாந்தும் இரண்டாவது உலகப் போரும்

'தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்ட ஜெர்மன் நாட்டு மக்கள் தங்கள் பழியைத் தீர்த்துக் கொள்ளவே இரண்டாவது உலகப் போரை ஆரம்பித்தனர்' என்று சைரில் ஃபால்ஸ் (Cyrill Falls)

என்னும் அறிஞர் கூறுகின்றார். அது ஓரளவுக்கு உண்மையாயினும், இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டதற்கு மேலும் பல அடிப்படைக் காரணங்களும் உள்ளன.

வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் குறைகள்

இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்கு வெர்சேல்ஸ் உடன்படிக்கையே (Treaty of Versailles) காரணமாகும். நேச நாடுகளால் ஜெர்மனி மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டது. இவ் வுடன்படிக்கையில் கையெழுத்திட ஜெர்மனி நேச நாடுகளால் கட்டாயப்படுத்தப்பட்டது. அத்துடன் ஜெர்மனியின் மீது திணிக்கப்பட்ட இவ் வுடன்படிக்கை பழி வாங்கும் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. இவ் வுடன்படிக்கையால் ஜெர்மனி தனது குடியேற்ற நாடுகளை இழந்தது. வெளிநாடுகளிலிருந்த தனது பற்றுதல்களை இழந்தது; ஐரோப்பாவிலிருந்த தனது நிலப் பகுதிகளை இழந்தது; தனது கப்பற்படை முழுவதும் இழந்தது; தனது பெரும் இராணுவத்தை இழந்தது; தனது இரும்பு, நிலக்கரி சுரங்கங்களை இழந்தது; தனது செல்வத்தை இழந்தது; கடைசியில் தனது மானத்தையும் இழந்தது. இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டி வெளி நாட்டுத் துருப்புகள் ஜெர்மன் மண்ணிலே இருந்தன. இத் துருப்புகள் ஜெர்மன் நாட்டு மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் அவர்களின் உள்ளங்களிலே மறக்க முடியாத நினைவுகளை ஏற்படுத்தி விட்டன.

இத்தகைய சூழ்நிலையில் ஜெர்மனியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பஞ்சமும் பட்டினியும் மக்களை வாட்டின. வேலையின்மை எங்கும் தாண்டவமாடியது. ஆகவே, ஜெர்மன் குடியரசு பெரும் அவதிக்குள்ளானது. ஜனநாயகத்தின் அடித்தளமே ஆட்டம் கொள்ளும் நிலை ஏற்பட்டது. அத்துடன் சரிசம விகித பிரதிநிதித்துவ முறை (Proportional Representation) நாட்டில் கொண்டு வரப்பட்டதனால் ஏராளமான அரசியல் கட்சிகள் தோன்றின. அதன் காரணமாக நாட்டில் அமைச்சரவைகள் நிலையிலாத் தன்மையைப் பெற்றன. ஜெர்மன் நாட்டு அரசியல் கட்சிகளும், மக்களும் உடன்படிக்கையைத் திருத்தியமைக்கும்படி வற்புறுத்தினர். இச் சூழ்நிலையைச் சமாளிக்க வைமர் குடியரசால் (Weimer Republic) முடியாமற் போகவே நாஜிக் கட்சி ஜெர்மனியில் தலையெடுத்தது. அதன் தலைவரான ஹிட்லர் 'ஜெர்மன் மக்களின் அல்லல்களுக்கெல்லாம் மூல காரணமான வெர்சேல்ஸ் உடன்படிக்கையைக் குழிதோண்டிப் புதைப்பதும், அவ் வுடன் படிக்கையை ஜெர்மன்மீது திணித்த இங்கிலாந்து மீதும் ஃபிரான்சு

மீதும் பழிக்குப்பழி வாங்குவதும், நாட்டில் வேலையின்மையையும். பட்டினியையும் அறவே ஒழிப்பதும் தமது குறிக்கோள்' என்று முழக்கமிடவே, ஜெர்மன் நாட்டு மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். ஆகவே, 1933ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஹிட்லர் ஜெர்மனியின் சான்சலராக நியமிக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் ஹிட்லர் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். தமது நடவடிக்கைகள் மற்ற நாடுகளுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காக. தாம் அமைதியையே விரும்புவதாக ஹிட்லர் அறிவித்தார். அதற்காகவே தான் 1934ஆம் ஆண்டில் போலந்துடனும், 1935ஆம் ஆண்டில் இங்கிலாந்துடனும் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார். நாட்டில் தம்முடைய ஆதிக்கத்தை நிலைநாட்டி, இராணுவத்தை வலுப்படுத்திய பிறகு தான் ஹிட்லரின் உள்நோக்கங்களும், குறிக்கோள்களும் தெரிய ஆரம்பித்தன. 1936ஆம் ஆண்டில் ரினிலாண்டை (Rhineland) ஹிட்லர் கைப்பற்றினுர். 1938ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துக் கொண்டார். மியூனிச் உடன்படிக்கையால் இங்கிலாந்தால் செக்கோஸ்லோவேகியா நாடும் ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு ஜெர்மனிக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிட்டவே, அது மேலும் மேலும் தைரியமடைந்தது.

1939ஆம் ஆண்டில் ஜெர்மனி டான்ஜிக் (Danzig) துறைமுகத்தின் மீதும், போலந்தின் வழி (Polish Corridor) மீதும் தன் எண்ணத்தைத் திருப்பியது. அதன் அடிப்படையில் ஹிட்லர் தமது பழக்கமான வழியைப் பின்பற்றினுர். போலந்திலுள்ள ஜெர்மானியர்களை போலந்தியர் மிகவும் கொடுமைப்படுத்துகிருர்கள் என்று செய்தித் தாள்களின் மூலமாகப் பரப்பினுர். அதே சமயத்தில் போலந்தியர்களின் செயல்களைக் கண்டித்தார். போலந்தியர்கள் ஜெர்மானியர்களைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்தாவிடில், 'அதனுல் ஏற்படும் விளைவுகளைப் போலந்துதான் ஏற்க வேண்டுமென்று ஹிட்லர் எச்சரிக்கை விடுத்தார். 1939ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதியன்று இங்கிலாந்தின் பிரதமர் சேம்பர்லின் 'போலந்து ஜெர்மனியால் தாக்கப்பட்டால் இங்கிலாந்தும், ஃபிரான்சும் போலந்துக்கு உதவி செய்யும்' என்று அறிவித்தார். 1939ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி ஜெர்மனி இங்கிலாந்தோடு செய்து கொண்ட கப்பற்படை ஒப்பந்தத்தை முறிவு செய்தது. அத்துடன் 1934ஆம் ஆண்டில் போலந்தோடு செய்து கொண்ட ஆக்கிரமிப்பு செய்யாமை ஒப்பந்தத்தையும் ரத்து செய்து, டான்ஜிக் துறைமுகம்

ஜெர்மனிக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், போலந்தின் வழி (Polish Corridor) எனப்படும் பகுதியில் ரயில் பாதை அமைத்து கிழக்கு பிரஷ்யாவுடன் (East Prussia) தொடர்பு கொள்ள ஜெர்மனி வசதி பெற வேண்டுமென்றும் ஹிட்லர் அறிவித்தார். 1939ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி ஹிட்லருடைய கோரிக்கைகளைப் போலந்து நிராகரித்தது.

உடனே போலந்தோடு போரில் இறங்கினால், அதன் உதவிக்கு இங்கிலாந்தும் ஃபிரான்சும் வருமெனக் கருதி, ஹிட்லர் தம் நாட்டின் வலிமையை மேலும் பலப்படுத்த நினைத்தார். அதற்காக 1939ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி இத்தாலியோடு ஒரு நட்பு உடன் படிக்கையைச் செய்து கொண்டார். டென்மார்க், எஸ்டோனியா, லாட்வியா முதலிய நாடுகளுடனும் ஆக்கிரமிப்பு செய்யாமை (Non-Aggression) ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார். 1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரஷ்யாவோடும் ஒரு நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார். ரஷ்யாவோடு உடன் படிக்கை செய்து கொண்டது ஜெர்மனியின் மிக முக்கியமான அரசியல் செயலாட்சி (Diplomacy) நயமாகும். ஏனெனில் போர் ஏற்பட்டால் இரு பக்கங்களிலும் போர் செய்ய ஜெர்மனி பயப் பட்டது. ரஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொண்டால், ரஷ்யா பக்கம் போர் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று ஹிட்லர் கருதினார். இத்தகைய இலாபத்தைக் கருதியே ஹிட்லர் ரஷ்யா வோடு உடன்படிக்கை செய்து கொண்டார். பின்னர் அச்சமின்றி 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜெர்மனி துருப்புகள் போலந்து மீது படையெடுத்தன. போலந்திலிருந்து உடனே அகன்று விடும்படி ஜெர்மனிக்கு இங்கிலாந்து ஓர் இறுதி எச்ச ரிக்கை விடுத்தது. ஜெர்மனி அதை மதிக்கவில்லை. எனவே சேம்பர்லின் பொதுமக்கள் சபையில் செப்டம்பர் 3-ஆம் தேதியன்று 'இங்கிலாந்து ஜெர்மனி மீது போர் தொடுப்பதாக, அறிவித்தார். உடனே ஃபிரான்சும் ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆகவே 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானது.

ஜப்பானின் பேரரசுக் கொள்கை

ஜப்பானின் பேரரசுக் கொள்கை இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்கு மற்றொரு காரணமாகும். முதல் உலகப் போரினால் ஜப்பானின் நாடுபிடிக்கும் ஆசை மேலோங்கியது. முதல் உலகப் போரில் ஜப்பானும் சீனாவும் நேச நாடுகளின் பக்கமிருந்து போர் செய்த போதிலும் ஜப்பான் சீனாவின் பல பகுதிகளை ஆக்கிர மித்துக் கொண்டது. அதன் நடவடிக்கை சரியெனவே சமாதான

உடன்படிக்கையிலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் பின் ஜப்பான் தனது கப்பற் படையை மேலும் பலப்படுத்தியது. 1931ஆம் ஆண்டில் ஜப்பான் மன்சூரியாவில் (Manchuria) தலையிட்டது. சர்வதேச சங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும், அதைக் கவனியாது மன்சூரியாவை வென்று அதைத் தன்வசப் படுத்தியது. இதனால் ஜப்பானின் பேராவல் இன்னமும் பூர்த்தியாகவில்லை. 1937ஆம் ஆண்டில் போர்ப் பிரகடனம் செய்யாமலேயே ஜப்பானுக்கும் சீனுவுக்கும் போர் ஏற்பட்டது. ஒன்றன் பின் ஒன்ருகச் சீனுவின் நகரங்கள் ஜப்பான் கைவசமாயின. இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானபோது சீனு-ஜப்பான் போரும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது, அப்பொழுது பெர்லின் — ரோம் — டோக்கியோ உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது. ஆகவே, ஜப்பானும் 1941ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப் போரில் கலந்து கொண்டது.

ஐரோப்பாவில் சர்வாதிகாரிகள் ஆட்சி ஏற்படல்

ஐரோட்பாவின் பல நாடுகளில் சர்வாதிகாரியாட்சிகள் ஏற்பட்டதும் இரண்டாவது உலகப் போருக்கு மற்ருெரு காரணமாகும். ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகாரியாட்சி ஏற்பட்டது. அவ்வாட்சி ஆக்கிரமிப்பில் இறங்கியதால்தான் உலகப்போர் இரண்டாம் முறையாக ஏற்பட்டது. 1922ஆம் ஆண்டில் முசோலினி இத்தாலியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு சர்வாதிகாரியானுர். முசோலினியும் அவருடைய பாஸிச நண்பர்களும் மறுபடியும் பழைய ரோமாபுரிப் பேரரசைப் புதுப்பிப் பதாகப் பறை சாற்றினர். அந்த நோக்கத்துடனேயே இத்தாலி அபிசீனியாவைத் (Abyssinia) தாக்கித் தன் வசப்படுத்திக் கொண்டது. 1937ஆம் ஆண்டில் இத்தாலி எதிர்ப்பு கோமின்டர்ன் (Anti - Comintern) உடன்படிக்கையில் சேர்ந்ததால் பெர்லின்-ரோம்-டோக்கியோ கூட்டுறவு ஏற்பட்டது. ஆகவே, இத்தகைய சர்வாதிகாரிகளின் பேராவலாலும், அச்சு நாடுகளின் உடன்படிக்கைகளாலும் இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டது.

ஜனநாயக சர்வாதிகாரக் கொள்கைகளின் முரண்பாடு

ஜனநாயகக் கொள்கைகளும் சர்வாதிகாரக் கொள்கைகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதும் இரண்டாவது உலகப் போருக்கு ஒரு காரணமெனக் கூறலாம். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் ஒரு கொள்கையைக் கடைப் பிடித்தன. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகள் மற்ருெரு

கொள்கையைக் கடைப்பிடித்தன. இந்த இரு கொள்கைகளும் அரசியல், பொருளாதார, சமூக, எல்லைகள் பிரச்சினைகளில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவைகளாகும். ஜனநாயக நாடுகள் அரசியல் எல்லைப் பிரச்சினைகளில் இருந்த நிலையே இருக்கவேண்டுமென்றும் கருதின. அத்துடன் அவைகளுக்கு நாடு பிடிக்கும் நோக்கமும் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் அச்சு நாடுகள் பெருமைக்காகவும் மதிப்புக்காகவும் மேலும் நிலப்பரப்புகள் வேண்டுமென்று கருதின. ஜப்பான் தன் நிலப்பரப்பை அதிகமாக்கப் பேராவல் கொண்டது. தூரக் கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யவேண்டும் என்று கருதியது. எத்தகைய சமாதானத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் போர் செய்யவே ஜப்பான் விரும்பியது. அதேபோல் தான் ஜெர்மனியும் இத்தாலியும் இருந்தன. ஆகவே, சர்வாதிகாரக் கொள்கைகளுடைய நாடுகள் ஒரு பக்கமும் ஜனநாயகக் கொள்கைகளுடைய நாடுகள் மறு பக்கமும் பிரிந்தன. அவைகள் அச்சு நாடுகளென்றும். நேச நாடுகளென்றும் கருதப்பட்டன. இங்ஙனம் உலகம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட பிறகு சேர்ந்து வாழும் எண்ணம் மடிந்தது. பின் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது.

ஜனநாயக நாடுகளின் ஒற்றுமையின்மை

ஜனநாயக நாடுகளின் மாறுபட்ட கொள்கைகள் உலகப் போர் இரண்டாம் முறையாக ஏற்படக் காரணமாக அமைந்தன. 1919-20ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு இங்கிலாந்து ஃபிரான்சு உறவு பாதிக்கப்பட்டது. இங்கிலாந்து ஐரோப்பிய அரசியலைப் பற்றி அதிகம் கவலைப் படாமல் தனது செல்வத்தையும் வாணிபத்தையும் பெருக்க முயற்சி எடுத்துக்கொண்டது. அதற்காக ஜெர்மனியோடு உறவுகொள்ளவும் முயற்சி செய்தது. ஆனால், பிரான்சு ஜெர்மனியின் கொள்கைகளை எதிர்த்தது. ஜெர்மனி தன்னைப் பழிக்குப்பழிவாங்க நேரிடும் எனக் கருதி இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் அச்சமயத்தில் தன்னைப் பாதுகாக்க வேண்டுமென்று பிரான்சு அவைகளிடம் உறுதியளிக்கும்படி வேண்டியது. ஆனால், ஃபிரான்சின் இக் கோரிக்கை நிறைவேறாமல் போகவே, ஃபிரான்சு நாடானது போலந்து, செக்கோஸ்லோவேக்கியா பெல்ஜியம் போன்ற நாடுகளோடு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. 1919-20இல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையைத் திருத்தியமைக்க வேண்டுமென்று இங்கிலாந்து கூறியது. ஆனால், ஃபிரான்சு அதை அங்ஙனம் திருத்தியமைக்கக் கூடாதென்று பிடிவாதம் செய்தது. ஜனநாயக நாடுகள் ஒன்றுபட்டு அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பை

எதிர்த்திருந்தால் ஒரு வேளை இரண்டாவது உலகப் போர் ஏற்படாமல் இருந்திருக்கும்.

போர் மனப்பான்மை

ஆயுத உற்பத்தியும், போர் மனப்பான்மையும் முதல் உலகப் போர் ஏற்படுவதற்குச் சாதகமாயிருந்தன. அதை மனத்திற் கொண்டு தான் சர்வ தேச சங்கம் ஏற்படுத்தப்பட்டது. உலகில் அமைதியை நிலைநாட்டவும் போர் மனப்பான்மையைக் குறைக் கவுமே அச் சங்கம் நிறுவப்பட்டது. வெர்சேல்ஸ் உடன்படிக்கை யால் ஜெர்மனியின் போர் ஆயுதங்கள் அழிக்கப்பட்டன. அத்துடன் அதன் துருப்புகளும் குறைக்கப்பட்டன. இதையே மற்ற நாடுகளும் பின்பற்ற வேண்டுமென அவ் வுடன்படிக்கை கூறியது. அதன்படி இங்கிலாந்து தனது ஆயுதக் குறைப்பைச் செயல்படுத்தியது. அமெரிக்காவும் அதைத் தொடர்ந்தது. ஆனால், தனது பாதுகாப்புக்கு ஆயுதங்கள் தேவையெனக் கூறி ஃபிரான்சு ஆயுதக் குறைப்பைச் செய்ய மறுத்துவிட்டது. இதே போலத்தான் மற்ற நாடுகளும் கூறின. ஹிட்லர் ஜெர்மனியின் அதிபரானவுடன், ஜெர்மனியின் ஆயுத உற்பத்தி பெருகியது. ஆயுத உற்பத்திக்கேற்ப ஜெர்மானியர்களிடம் போர் மனப்பான்மை யும் வளர்ந்தது. அதே போலத்தான் இத்தாலியும் ஜப்பானும் தங்கள் ஆயுத பலத்தைப் பெருக்கின. அவைகளுக்கும் நாடுகளைப் பிடிக்க வேண்டுமென்ற பேராசையால் போர் மனப்பான்மை அதிகரித்தது. அச்சு நாடுகளின் ஆயுத உற்பத்தி, ஜனநாயக நாடுகளையும் ஆயுத உற்பத்தியைப் பெருக்கத் தூண்டியது. ஆகவே உலகின் இரு கூடாரங்களில் ஏற்பட்ட ஆயுத உற்பத்தி, போர் மனப்பான்மையை ஏற்படுத்தி விட்டது.

வலிமை மிக்க உலக நாடுகளின் அமைப்பின்மை

உலகின் இரு கூடாரங்களுக்கிடையே பகைமை வளர்ந்து வந்த நேரத்தில், அத் தலைவர்களை அழைத்து அவர்களிடையே சமரசம் செய்து வைக்கக்கூடிய ஒரு வலிமை மிக்க சர்வதேச அமைப்பு அப்பொழுது இல்லை. அப்பொழுதிருந்த சர்வதேச சங்கம் மன்சூரியா, அபிசீனியா பிரச்சினைகளில் தலையிட்டுத் தீர்க்க முடியாமல் போனதால் அது மதிப்பிழந்திருந்தது. அத்துடன் அச் சங்கம் இறந்ததாகவே கருதப்பட்டது. உலகின் பெரிய நாடுகளும், சிறிய நாடுகளும் அச் சங்கத்திடம் நம்பிக்கை யிழந்திருந்தன. ஆகவே. தங்கள் வலிமையைப் பரிசோதித்துப் பார்க்க இரு கட்சிகளும் போரில் இறங்கின.

போரின் போக்கு

போலந்தின் வீழ்ச்சி

ஜெர்மனி 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் போலந்தின்மீது படையெடுத்தது. போலந்து ஜெர்மனியின் படைகளை வீரத்துடனும் தீரத்துடனும் எதிர்த்த போதிலும், ஜெர்மனியால் போலந்து படைகள் நசுக்கப்பட்டுத் தோல்வி யடைந்தன. அதே சமயத்தில் போலந்தின் கிழக்குப் பகுதியில் ரஷ்யாவின் படைகள் நுழைந்தன. போலந்து தோற்கடிக்கப்பட்ட பின்பு, அதை ஜெர்மனியும் ரஷ்யாவும் பங்கு போட்டுக் கொண்டன.

பின்லாந்தின்மீது ரஷ்யா படையெடுப்பு

1939ஆம் ஆண்டில் ரஷ்யா பின்லாந்தைத் தாக்கியது. லெனின்கிராடின் பாதுகாப்புக்காக ரஷ்யா பின்லாந்தின் ஒரு பகுதியைக் கேட்டது. ஏனெனில் ரஷ்யா ஜெர்மனியின் நட்பையும் சமாதானத்தையும் நம்பாமல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை மேற்கொண்டது. பின்லாந்தை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டால் தனது பாதுகாப்புக்கு ஆபத்து என்று ரஷ்யா அஞ்சியது. அதற்காகவே ரஷ்யா பின்லாந்தின்மீது படை யெடுத்துத் தான் விரும்பிய பகுதியைக் கைப்பற்றியது. அதன் பிறகு ரஷ்யா, லாட்வியா, எஸ்டோனியா, லுத்தானியா நாடு களையும் கைப்பற்றித் தன்னோடு சேர்த்துக் கொண்டது

டென்மார்க்கின் வீழ்ச்சி

1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜெர்மானியத் துருப்புகள் டென்மார்க்கை வசப்படுத்தின. அதன்பிறகு நார்வேயைத் தாக்க ஜெர்மன் துருப்புகள் ஆரம்பித்தன. பலத்த எதிர்ப்புக்கிடையே ஜெர்மனி நார்வேயையும் கைப்பற்றியது. 1940ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜெர்மனி ஹாலந்தை யும் பெல்ஜியத்தையும் தாக்கியது. கடைசியில் ஹாலந்தும், பெல்ஜியமும் ஜெர்மனியின் வசம் வந்தன.

ஃபிரான்சின் வீழ்ச்சி

ஃபிரான்சு மேகினட் அரணையே (Maginot Line) தனது பாது காப்புக்காக நம்பியிருந்தது. ஜெர்மானியர் சீக்ஃபிரிட் அரணுக்குப் (Siegfried Line) பின்னும், ஃபிரெஞ்சுக்காரர்கள் மேகினட் அரணுக்குப் பின்னும் மறைந்து கொண்டு அவ்வப்போது வெளி

வந்து போர் செய்துகொண்டிருந்தனர். மேகினுட் அரண் பெல்ஜியத்தோடு நின்று விடவே, ஜெர்மனியின் படைகள், பெல்ஜியத்தின் வழியாகப் ஃபிரான்சுக்குள் நுழைந்தன. ஃபிரான்சுக்கு உதவி செய்யச் சென்றிருந்த தமது படைகள் அழிந்து விடுமென்று இங்கிலாந்து கருதி, நான்கு அல்லது ஐந்து நாட்களிலேயே தனது 300,000 துருப்புகளை டன்கர்க் கால்வாயின் மூலமாகத் தன் நாட்டிற்குக் கொண்டு வந்து விட்டது. இங்கிலாந்தின் துருப்புகள் அங்ஙனம் திரும்பும்போது எதிரி விமானங்களால் தாக்கப்பட்டன. ஆகவே, அவர்கள் அரும் பாடுபட்டுத் தமது போர்த் தளவாடங்களையும் இழந்து இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தனர். ஆங்கிலத் துருப்புகள் போய்விடவே, ஃபிரான்சால் ஜெர்மனியை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகவே. 1940ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஃபிரான்சு ஜெர்மனியிடம் சரணடைந்தது. ஆனால், ஃபிரான்சின் கப்பற்படை மட்டும் ஜெர்மனியிடம் சரணடையவில்லை.

கிரீஸின் வீழ்ச்சி

ஃபிரான்சு தோல்வியுற்ற பிறகு, இத்தாலியும் போரில் கலந்து கொண்டது. தென் ஆப்பிரிக்காவில் இத்தாலியத் துருப்புகளுக்கும் ஆங்கிலத் துருப்புகளுக்குமிடையே தாக்குதல்கள் ஆரம்பித்தன, முசோலினி கிரீஸைத் தம் படைகளுடன் தாக்கினார். ஆனால், கிரீஸின் எதிர்ப்பினால் இத்தாலி தோல்வியுற்றது. ஜெர்மானியர்களின் உதவியுடன் இத்தாலி மீண்டும் கிரீஸைத் தாக்கிக் கைப்பற்றியது. பின்னர் யுகோஸ்லோவியாவையும், கிரீடியையும் (Crete) ஜெர்மனி கைப்பற்றியது.

பிரிட்டன் போர்

ஃபிரான்சின் வீழ்ச்சிக்குப் பின் இங்கிலாந்து தனித்து நின்று ஜெர்மனியோடு போராடியது. அச் சமயத்தில்தான் ஆங்கில அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டது. நெவில் சேம்பர்லின் பிரதமர் பதவியினின்றும் விலகிக் கொண்டார். அவருக்குப் பதிலாக வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமர் பதவியை ஏற்றார். அவர் மிக்க தைரியத்துடனும் உற்சாகத்துடனும் ஜெர்மனியோடு போர் நடத்தினார். 1940ஆம் ஆண்டில் ஜெர்மனி இங்கிலாந்தைத் தாக்க ஆரம்பித்தது. வலிமை மிக்க இங்கிலாந்தின் விமானப் படையை முதலில் அழித்துவிட்டுப் பிறகு அந் நாட்டிற்குள் நுழையலாம் என்று ஜெர்மானியர்கள் நினைத்தனர். அதற்காக ஜெர்மனியின் ஏராளமான போர் விமானங்கள் இங்கிலாந்தின் விமானப் படையை நாசப்படுத்த அனுப்பப்பட்டன. லண்டன் மற்றுமுள்ள ஆங்கில

நகரங்கள் ஜெர்மனியின் போர் விமானங்களால் இரவு நேரங்களில் தாக்கப்பட்டன. அதன் காரணமாய் ஏராளமான ஆங்கிலேயர் கொல்லப்பட்டனர். அத்துடன் ஏராளமான சொத்துக்கள் நாச மாயின. ஆனால், சர்ச்சில் தளரவில்லை. ஆங்கில விமானப் படை பெர்லின், கோலோன், ஹாம்பர்க் போன்ற ஜெர்மானியத் தொழில் நகரங்களைக் குண்டுகள் வீசித் தாக்கின. அத்துடன் ஜெர்மனி படைபலத்துடன் இங்கிலாந்திற்குள் நுழையாமலிருக்க ஃபிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து, நார்வே போன்ற நாடு களின் துறைமுகங்களையும், கால்வாய்களையும் ஆங்கிலப் போர் விமானங்கள் தாக்கி ஜெர்மனியின் கப்பற்படை பலத்தைக் குறைத்தன. ஜெர்மனிக்கு இத் தாக்குதல்களினால் பெரும் சேதம் விளைந்தது.

இன்னும் சில நாட்களில் இங்கிலாந்து வீழ்ச்சியடைவது திண்ணம் என்று எண்ணிக் கொண்டிருந்த அமெரிக்க மக்கள், ஆங்கிலக் கப்பற்படை ஃபிரெஞ்சுக் கப்பற்படையைத் தோற் கடித்ததைப் பார்த்த பிறகு சர்ச்சிலுக்கு உற்சாகமூட்டினால் வெற்றியடைவார் என்று கருதினர். அத்துடன் இங்கிலாந்து ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட பிறகு, நம் நாட்டிற்கும் ஏன் அத்தகைய விதி ஏற்படாது என்று அவர்கள் எண்ணலாயினர். இச் சமயத்தில் அமெரிக்காவின் தலைவர் ரூஸ்வெல்ட் மக்களின் பொதுக் கருத்தை அறிந்தார். அவர்கள் இங்கிலாந்திற்குச் சாதகமாக இருக்கவே, அமெரிக்கக் கப்பற் படையிலிருந்து 50 நாசகாரிக் கப்பல்களை இங்கிலாந்தின் கப்பற் படைக்கு அனுப்பினர். 1941ஆம் ஆண்டில் அமெரிக்கக் காங்கிரசும் அச்சு நாடுகளை எதிர்த்துப் போர் செய்யும் நாடுகளுக்கு அமெரிக்கா உதவி செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை நிறை வேற்றியது. 1941ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அட் லாண்டிக் கடலில் ஓர் ஆங்கிலப் போர்க் கப்பலில் இங்கிலாந்தின் பிரதமர் சர்ச்சிலும் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டும் சந்தித் தனர். அவர்கள் அங்குப் போரின் நோக்கங்களடங்கிய ஒரு ஆவணத்தைத் தயாரித்தனர். அவ் வாவணமே அட்லாண்டிக் சாசனம் (Atlantic Charter) எனப் பெயர் பெற்றது. பயத் தினின்றும் விடுதலை; பட்டினியினின்றும் விடுதலை; அரசியல் விடுதலை; சமய விடுதலை ஆகிய நான்கு உரிமைகளுக்காகவே போர் நிகழ்வதாக அச் சாசனம் அறிவித்தது.

ரஷ்யா மீது படையெடுப்பு

1939ஆம் ஆண்டு ரஷ்யாவோடு செய்துகொண்ட உடன் பாட்டிற்கு மாறாக ஜெர்மனி 1941ஆம் ஆண்டு ஜூன் மாதம்

ரஷ்யாவைத் தாக்கியது. ரஷ்யாவைத் தாக்கி வசமாக்கிக் கொண்டால், அதனுடைய உணவு, எண்ணெய் ஆகியவைகளின் உதவியால் இங்கிலாந்தை எளிதில் பிடித்துவிடலா மென்று ஹிட்லர் எண்ணினர். ஆகவே, ரஷ்யாவை மாரிக் காலத்திற்குள் கைப்பற்ற வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் ஹிட்லர் தாக்கினர். ஜெர்மனிப் படை ரஷ்யாவை நோக்கிப் போகும் வழியில் ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகளின் படைகள் அதனுடன் சேர்ந்து கொண்டன. இங்ஙனம் சேர்ந்து கொண்ட பெரும்படையின் ஒரு பகுதி லெனின்கிராடை நோக்கியும், இன்னொரு பகுதி மாஸ்கோவை நோக்கியும், மூன்றும் பகுதி தெற்கேயிருந்த கிரிமியாவை நோக்கியும் புறப்பட்டன.

ஜெர்மனியின் படைகள் ரஷ்யாவைத் தாக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டமைச்சர் கிரிப்ஸ் (Cripps) ரஷ்யாவுக்குச் சென்று வெற்றிகரமாக 1941ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். நவம்பர் மாதத்தில் அமெரிக்காவின் தலைவர் ரூஸ்வெல்ட் ரஷ்ய மக்களுக்குத் தமது வாழ்த்துக்களை அனுப்பி 1000 மில்லியன் டாலர் ரஷ்யாவுக்குக் கொடுத்து உதவி செய்வதாயும் கூறினர். அதன்படி ரஷ்யா மிக அதிக அளவில் டாங்கிகளையும், விமானங்களையும், ஆயுதங்களையும், போர் வீரர்களுக்கு வேண்டிய காலணிகளையும் பெற்றது.

செப்டம்பர் மாதத்தில் ஜெர்மன் படைகள் லெனின்கிராடையும், அக்டோபரில் மாஸ்கோவையும் நெருங்கிவிட்டன. ஆனால், அதற்குமேல் ஜெர்மன் படைகளால் முன்னேற முடியவில்லை. ஏனெனில் அதற்குள் அங்கு மாரிக்காலம் வந்துவிட்டது. மாரிக் காலத்தில் ஏராளமான ஜெர்மன் வீரர்கள் குளிரைத் தாங்க முடியாமல் இறந்தனர். ஜெர்மானியர் ரஷ்யாவில் 6,15,000 சதுர மைல்களைப் பிடித்திருந்தும் பயனில்லை. ஏனெனில், ரஷ்யர்கள் பின்வாங்கிச் செல்லும்போது ஆங்காங்கேயிருந்த உணவுப் பொருள்களை அழித்தும், பயிர்களை நாசம் செய்தும், ஆலைகளைக் கொளுத்தியும், பாலங்களை இடித்தும் அவை யாவற்றையும் எதிரிக் குப் பயன்படாவண்ணம் செய்துவிட்டுச் சென்றனர். இதனால் ஜெர்மானியர்களுக்குப் பெரும்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல ஜெர்மானியர்கள் பட்டினியால் மாண்டனர். இங்ஙனம் அல்லலுற்ற ஜெர்மானியரை ரஷ்யர்கள் தாக்க ஆரம்பித்தனர். மாரிக்காலப் போருக்கெனப் பழக்கப்பட்ட ரஷ்யர்கள் அத்தகைய போருக்குப் பழக்கப்படாத ஜெர்மானியரை எளிதில் தோற்கடித்தனர். 3,30,000 பேர் கொண்ட ஜெர்மன் படை 12,000 ஆகக் குறைந்தது. அவர்களும் கடைசியில் ரஷ்யர்களிடம் சரணடைந்

தனர். ஆகவே, ஹிட்லரின் எண்ணம் நிறைவேருமல் போய் விட்டது.

ஜப்பானின் போர் முயற்சிகள்

சீனுவைக் கைப்பற்ற எண்ணிப் பெரும் முயற்சியிலிருந்த ஜப்பான் உலகப் போரில் கலக்காமலிருந்தது. ஆனல், பசிபிக் கடலிலிருந்த அமெரிக்காவின் பகுதிகளின்மீது தாக்குதல் நடத்த வேண்டுமென்று தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தது. இரு நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சினைகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு ஜப்பானியக் குழு ஒன்று வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றது. அங்குப் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண் டிருந்தபொழுதே ஜப்பான் ஒருவித எச்சரிக்கையுமின்றி 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெர்ல் ஹார்பர் என்னும் துறைமுகத்தின்மீது குண்டு வீச்சு நடத்தியது. உடனே அமெரிக்கா ஜப்பான்மீதும் மற்ற அச்சு நாடுகளின்மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. இங்கிலாந்தும் அவ்வாறே செய்தது. அமெரிக்கா போர் தொடுப்பதற்கு முன்னமேயே ஜப்பான், ஹாங்காங், பிலிப்பைன் தீவுகள், சிங்கப்பூர், மலாயா, பர்மா ஆகிய நாடுகளைக் கைப்பற்றியது. 1942ஆம் ஆண்டில் இந்தியாவிலிருக்கும் மணிப்பூர்வரை ஜப்பான் வந்துவிட்டது. ஆகவே இந்தியா, சிலோன் ஆகிய நாடுகள் பாதுகாப்பு குறைந்து அபாயகரமான நிலையில் இருந்தன. அச் சமயத்தில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் போருக்கு வேண்டிய தளவாடங்களையெல்லாம் தயார் செய்துகொண்டு போரில் இறங்கின. பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் தளபதி மாக் ஆர்தர் (General Mac Arthur) படைகளுக்குத் தலைமை வகித்தார். தென் கிழக்கு ஆசியா பகுதிக்கு மௌண் பாட்டன் பிரபு (Lord Mountbattan) தலைமை வகித்தார். மௌண் பாட்டன் ஜப்பானியர்களைப் பர்மாவிலிருந்து வெளியேற்றினுர். மாக் ஆர்தர் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றினுர். பின்னர் நேச நாடுகளின் படைகள் ஜப்பானை நோக்கிப் புறப்படலாயின.

வட ஆப்பிரிக்கா

1941ஆம் ஆண்டிலிருந்து 1943ஆம் ஆண்டு வரை ஆப்பிரிக்காவில் பலத்த போர்கள் நடை பெற்றன. அமெரிக்கப் படைகள் அபிசீனியாவைக் கைப்பற்றி, 1936ஆம் ஆண்டில் இத்தாலியால் துரத்தப்பட்ட ஹெய்லி சிலாசி (Haile Selassie) என்பவரை அந் நாட்டின் அரசராக மீண்டும் நியமித்தது. இத்தாலியிடமிருந்த சோமாலிலாண்டையும் (Somaliland) அமெரிக்கப் படைகள் கைப்பற்றின. ஜெர்மன்-இத்தாலியப் படைகள் ஜெர்மனி

தளபதியான ரோமெல் தலைமையில் எகிப்தைத் தாக்க முற்பட்டன. மாண்ட்கோமரி, அலெக்ஸாண்டர் என்ற இரு தளபதிகள் ரோமெலை முறியடித்தனர். லிபியாவிலிருந்து (Libya) ஜெர்மன் - இத்தாலியப் படைகளை மாண்ட்கோமரியின் படைகள் துரத்தியடித்தன. ஜெர்மன் தளபதி ரோமெல் பின் வாங்கிச் சென்றதால் ஆங்கிலப் படைகள் திரிபோலியைக் (Tripoli) கைப்பற்றின. பின்னர் ஆங்கிலப் படைகள் துனீசியாவை (Tunisia) நோக்கிப் புறப்படலாயின. 1942ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமெரிக்க ஆங்கிலப் படைகள் ஐசன் ஹோவர் (Eisen Hower) எனும் அமெரிக்கத் தளபதியின் தலைமையில் அல்ஜீரியாவைக் (Algeria) கைப்பற்றின. ஆகவே, 1943ஆம் ஆண்டில் வட ஆப்பிரிக்காவிலிருந்து ஜெர்மன் - இத்தாலியப் படைகள் முழுவதும் அகற்றப்பட்டன.

இத்தாலியின் மீது தாக்குதல்

வட ஆப்பிரிக்காவில் வெற்றி பெற்ற அமெரிக்க - ஆங்கிலப் படைகள் 1943ஆம் ஆண்டில் சிசிலித் தீவைக் கைப்பற்றின. சில நாட்களில் அப் படைகள் இத்தாலியைத் தாக்க ஆரம்பித்தன. அச் சமயத்தில் இத்தாலியில் ஓர் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு முசோலினி கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் சிறையினின்று தப்பிச் சென்று ஜெர்மன் படைகளிடம் தஞ்சம் புகுந்தார். பின்னர் மார்ஷல் படாக்லியோ (Marshall Badoglio) என்பவரின் தலைமையில் இத்தாலியில் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. 1943ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இத்தாலி அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தது. ஜெர்மன் வீரர்கள் மட்டும் அங்கு நேசப் படைகளை எதிர்த்துப் போராடி வந்தனர். நாளடைவில் அவர்களும் இத்தாலியினின்று விரட்டப்பட்டனர். 1944ஆம் ஆண்டு மே மாதம் நேசப் படைகள் ரோம் நகரைக் கைப்பற்றின. முசோலினி 1945ஆம் ஆண்டில் பிடிபட்டார். அவரை இத்தாலியர்களே சுட்டுக் கொன்றனர்.

ஜெர்மனியின் வீழ்ச்சி

1943-44ஆம் ஆண்டில் தளபதி ஐசன் ஹோவர் தலைமையில் படையெடுக்க இங்கிலாந்தில் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. அவருக்குத் தளபதி மாண்ட் கோமரியும், விமானப் படை தளபதி டிட்டரும் உதவி செய்தனர். அமெரிக்க - ஆங்கிலப் போர் விமானங்கள் ஜெர்மனியின் தொழிற்சாலைகளையும், ஆயுதக் கிடங்குகளையும் பகல் இரவு பாராமல் தாக்கின. அதனால் ஜெர்மனியின் ஆயுதத் தொழிற்சாலைகள் எல்லாம் சீர் குலைந்தன.

போக்கு வரத்து சாதனங்கள் அழிக்கப்பட்டன. பல நகரங்கள் அழிந்தன. இதனுல் ஜெர்மன் நாட்டு மக்கள் அச்சமுற்றனர். 1944ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் நார்மாண்டே தாக்கப் பட்டது. பல எதிர்ப்புகளுக்குப் பின் ஃபிரெஞ்சு மண்ணில் அமெரிக்க ஆங்கிலப் படைகள் காலெடுத்து வைத்தன. அப் படைகள் முதலில் பாரிஸ் நகரைக் கைப்பற்றின. அதன் பிறகு ஃபிரெஞ்சு மண்ணிலிருந்து ஜெர்மன் படைகள் விரட்டியடிக்கப் பட்டன. இத்தாலியை வென்ற பிறகு தளபதி அலெக்ஸாண்டர் தம் படைகளுடன் ஃபிரான்சின் தென்கிழக்குப் பகுதியில் நுழைந்தார். ஆகவே, தெற்கு ஃபிரான்சும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் தளபதி அலெக்ஸாண்டரின் படைகள் தளபதி ஐசன் ஹோவர் படைகளோடு சேர்ந்து கொண்டன. இப் படைகள் ரைன் நதியைக் கடந்து எல்ப் (Elbe) நதியை நோக்கிச் சென்றன. இச் சமயத்திலேயே ரஷ்யப் படைகள் கிழக்கிலிருந்து ஜெர்மனியில் நுழைந்தன. ஜெர்மனியின் படை களால் இரண்டு புறமும் போர்செய்ய முடியவில்லை. ஆகவே, ஹிட்லர் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தற்கொலை செய்து கொண்டார். 1945ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜெர்மனி நிபந்தனையற்ற சரணுகதியடைந்தது. ஜெர்மனியுடன் நேச நாடுகள் எத்தகைய உடன்படிக்கையும் இச் சமயத்தில் செய்து கொள்ளவில்லை. ஜெர்மனி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதி ரஷ்யாவிடமும், மற்ருெரு பகுதி இங்கிலாந்திடமும், மூன்ருவது பகுதி அமெரிக்காவிடமும், நான்காவது பகுதி ஃபிரான்சிடமும் ஒப்படைக்கப்பட்டன. ஜெர்மனியின் போர்த் தளவாடங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. ஜெர்மானியச் சிறைச்சாலைகளிலிருந்த போர்க் கைதிகள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர். போரைத் துவக்கிய குற்றத்திற்காகப் பல ஜெர்மன் தளபதிகள் இராணுவ நீதி மன்றங்களால் விசாரிக்கப்பட்டு தூக்கி விடப்பட்டனர்.

ஜப்பானின் சரணுகதி

ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவும் இங்கி லாந்தும் ஜப்பானைத் தோற்கடிக்க முழு கவனத்தைச் செலுத்த லாயின. 1945ஆம் ஆண்டில் ஆங்கிலப் படை ரங்கூனைக் கைப் பற்றியது. அமெரிக்கப் படைகள் ஜப்பானுக்கருகிலிருந்த பல தீவுகளைக் கைப்பற்றின. பிறகு ஜப்பானைச் சரணுகதியடையும்படி நேசநாடுகள் எச்சரிக்கை விடுத்தன. அதை ஜப்பானியர் மதிக்கவில்லை. ஆகவே, ஆகஸ்டு மாதம் 6ஆம் தேதியன்று ஹிரோஷிமா (Hiroshima) நகரின் மீது அணுகுண்டு ஒன்று வீசப்

பட்டது. அந்த ஒரே குண்டினால் 1,00,000 ஜப்பானியர் மாண்டனர். அந் நகரம் இருக்கும் இடம் தெரியாமல் அழிந்தது. பிறகும் ஜப்பான் சரண் அடையவில்லை. ஆகவே, ஆகஸ்டு மாதம் 9ஆம் தேதியன்று நாகசாகி (Nagasaki) என்னும் நகர் மீது மற்றொரு அணுகுண்டு வீசப்பட்டது. அந் நகரும் இருக்குமிடம் தெரியாமல் அழிந்தது. இதைக் கண்ட ஜப்பானியர் அஞ்சி 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதியன்று நேச நாடுகளிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தனர். இத்துடன் இரண்டாம் உலகப் பெரும்போர் முடிவடைந்தது. நேச நாடுகளின் படைகள் தளபதி மேக் ஆர்தர் தலைமையில் ஜப்பானில் நின்றன. மேக் ஆர்தர் மேற்பார்வையில் ஒரு புதிய ஜப்பானிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஜப்பான் சரணடைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு ரஷ்யா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்த போதிலும், ஜப்பானுக்குள் ரஷ்யப்படைகள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை

இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பிறகு ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகிய முப்பெரும் தலைவர்கள் உலக நாடுகளின் நிறுவனமொன்றை ஏற்படுத்த சான்ஃபிரான்சிஸ்கோ நகரில் 'பல நாடுகள் மாநாடு' ஒன்றை 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதியன்று கூட்டுவித்தனர். பல்வேறு நாடுகளைச் சார்ந்த பிரதிநிதிகள் அம் மாநாட்டில் கலந்து கொண்டனர். ஐக்கிய நாடுகளின் சாசனத்தை (United Nations Charter) அம் மாநாடு தயாரித்தது. அச் சாசனத்தைப் பல நாட்டு அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டன. உலக அமைதியைக் காப்பதும், சர்வதேசப் பொருளாதார, சமூக, கலாச்சாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும், பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்ற எல்லா நாடுகளின் ஒத்துழைப்பை வளர்ப்பதும், மக்களிடையே அவர்களது ஜீவாதார உரிமைகளின் மீது உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதும், ஆண், பெண், சிறியநாடு, பெரிய நாடு என்ற வேறுபாடின்றிச் சமமாக உரிமைகள் வழங்கப்படுதலை வற்புறுத்துவதும், சர்வதேச உடன்படிக்கைகள், சட்டங்கள் ஆகியவற்றைப் பல நாடுகளும் மதித்து நடப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும், ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகுமென அச் சாசனம் கூறுகின்றது. இவ் வித குறிக்கோள்களுடன் பிறந்த நிறுவனத்தில் ஆரம்பத்தில் 50 நாடுகளே இடம் பெற்றிருந்தன. ஆனால் இப்போது 146 நாடுகள் இடம் பெற்றிருக்கின்றன.

உறுப்பு நாடு ஒவ்வொன்றும் இறைமை பொருந்திய தென்பதையும், ஒன்றுக்கொன்று சமமானது என்பதையும் முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் சாசனத்தின் கோட்பாடுகளைக் கடைப் பிடிப்பதாயும், தமக்குள் ஏற்படும் வழக்குகளை அமைதி யான முறையில் தீர்த்துக் கொள்வதாயும், ஒரு நாட்டின் உள் நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லையெனவும் ஒவ்வொரு நாடும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையில் முக்கியமான 6 உறுப்புக்கள் உள்ளன. அவையாவன:—

1. பொதுச் சபை (General Assembly)
2. பந்தோபஸ்து சபை (Security Council)
3. பொருளாதார, சமுதாய சபை (Economic& Social Council)
4. தர்மகர்த்தா சபை (Trusteeship Council)
5. (International Court of Justice)
6. சர்வதேச காரியாலயம் (International Secretariat)

இவ் வுறுப்புக்களைத் தன்னகத்தே கொண்டு ஐக்கிய நாடுகள் சபை உலக அமைதிக்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகின்றது. இச் சபை தன் பணிகளை ஒழுங்காகச் செய்து வருவதனால்தான் மேலும் உலகப் போர்கள் ஏற்படாத நிலைமை நீடித்திருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்தின் ஆட்சியும் அரசியலும்

இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்தும் அதன் நேச நாடுகளும் வெற்றி பெற்றது உண்மையென்றாலும் அப் போரினால் இங்கிலாந்திற்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. 33,000 மில்லியன் பவுன்கள் அப் போரினால் இங்கிலாந்திற்குச் செலவு ஏற்பட்டது. அதில் 16,000 மில்லியன் பவுன்களைக் கடனாகப் பெற்றது. அத்துடன் ஐந்தில் மூன்று பங்கு வியாபாரக் கப்பல்களையும் இழந்தது. அப் போரின்போது உள்நாட்டுத் தேவைக்காக வெளி நாடுகளிலிருந்த ஏராளமான சொத்துக்களை இங்கிலாந்து விற்றது. அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு இங்கிலாந்து ஓரளவு உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தது.

இரண்டாம் உலகப்போர் நடை பெற்று வருகையில் இங்கிலாந்தை ஆட்சி செய்த சர்ச்சில் அமைச்சரவையானது போரினைத் திறம்பட நடத்துவதில் கண்ணும் கருத்துமாயிருந்ததென்றாலும், உள்நாட்டில் சில சீர்திருத்தங்களைச் செய்யவும் முற்பட்டது. போரின் விளைவாகச் சேதமுற்ற இல்லங்களைச் செப்பனிடவும் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும் தனிப்பட்ட ஒரு கிளை அமைச்சரவையானது நகர, நாட்டுப்புறத் திட்ட அமைச்சரவை (A Ministry of Town and Country Planning) என்னும் பெயரில் ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் நாட்டு மக்கள் அனைவருக்கும் நோய், வேலையின்மை, முதுமை இவைகளால் ஏற்படக் கூடிய இன்னல்களினின்றும் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கம் 'சமுதாயப் பாதுகாப்புறுதித் திட்டத்தை' (Scheme of Social Security) உருவாக்கியது. போர் முடிந்தவுடன் இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதாக அரசாங்கம் உறுதி கூறியது. 1944ஆம் ஆண்டில் அரசாங்கம் கல்விச் சட்டம் (Education Act) ஒன்றையும் இயற்றியது. போர் முடிந்தவுடன் ஒவ்வொரு குழந்தையும் பதினாறு வயதுவரை முழுநேரக் கல்வியையும் அதன்பின் இரண்டாண்டுகளுக்குப் பகுதி நேரக் கல்வியையும் பெறவேண்டுமென அச் சட்டம் கூறியது. 1945ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப் போர் முடிவுற்றது. சர்ச்சில் உடனே நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தத் தீர்மானித்தார். 1935ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றமானது போரின் காரணமாகக் கலைக்கப்படாமலேயே இருந்தது. கன்சர்வேடிவ் கட்சியினரும் தொழிற் கட்சியினரும் சேர்ந்து கூட்டு அமைச்சரவையை ஏற்படுத்தி ஆட்சி செய்து வந்தனர். 1945ஆம் ஆண்டு ஜுலை மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று நாட்டில் நடத்தப்பட்டது. அத் தேர்தலில் தொழிற்கட்சியினர் பெரும் வெற்றி பெற்றனர். 393 தொழிற்கட்சி உறுப்பினர்களும், 200 கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களும் பொதுமக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 393 தொழிற்கட்சி உறுப்பினர்களில் 230 உறுப்பினர்கள் ஃபேபியன் சமூகத்தைச் சார்ந்தவர்கள். ஆகவே, மக்கள் மிகவும் முற்போக்கானவர்களை விரும்பவில்லையென இத் தேர்தலின் மூலம் தெரிய வந்தது. இத் தேர்தலில் தொழிற்கட்சி 12 மில்லியன் வாக்குகளையும், கன்சர்வேடிவ் கட்சி 8,5 மில்லியன் வாக்குகளையும் பெற்றன. தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியுறவே சர்ச்சில் தமது பதவியை ராஜிநாமா செய்தார். தொழிற்கட்சியின் தலைவர் அட்லி (Attlee) பிரதமர் பதவியை ஏற்றார்.

அட்லியின் அமைச்சரவை (1945—51)

அட்லி தமது அமைச்சரவையை அமைக்கும்போது நாட்டின் நிலைமை மிகவும் கடுமையாயிருந்தது. ஆனால், அதே சமயத்தில் அவ் வமைச்சரவையிலிருந்த எர்னஸ்டு பிவின் (Ernest Bevin), டாக்டர் டால்டன் (Dr. Dalton), கிரிப்ஸ் (Cripps), அனியுரின் பிவன் (Aneurin Bevan) போன்றவர்களும் அந் நிலைமைக்கு சவால் விடும் வகையிலே திறமையும், ஆற்றலும் பெற்றிருந்தனர். 'போரின் போது சர்ச்சில் எதைச்செய்து வெற்றி பெற்றாரோ அதையே அமைதிக் காலத்தில் அட்லி செய்து வெற்றி பெற்றார்' என்று டேவிட் தாம்ஸன் (David Thomson) அட்லியின் திறமையைப் பற்றிக் கூறும்போது குறிப்பிடுகின்றார். எர்னஸ்டு பிவின் நல்ல பல சீர்திருத்தங்களைச் செய்து மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். வேலை வாய்ப்பைப் பெருக்கியதாலும், ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்ததாலும் கிரிப்ஸும் மக்களிடையே நற் பெயரைப் பெற்றார்.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன், 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்கா இங்கிலாந்துக்குக் கொடுத்து வந்த குத்தகைக் கடனை (Land Lease) ரத்து செய்தது. இதனால் இங்கிலாந்துக்குப் பெரும் பண நெருக்கடி ஏற்பட்டது. அதனால் வருடத்திற்கு இரண்டு சதம் வட்டி வீதம் அமெரிக்காவிடமிருந்து 11,000 மில்லியன் டாலர்களை இங்கிலாந்து கடனாகப் பெற்றது. அத்துடன் கனடாவிலிருந்து 1,250,000,00 டாலர்களையும் கடனாக வாங்கியது. 1948ஆம் ஆண்டிலிருந்து 1950ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து அமெரிக்காவிடமிருந்து மார்ஷல் உதவித் திட்டத்தின் (Marshall Aid Plan) அடிப்படையில் பெரும் நிதியுதவியையும், கடனையும் பெற்றது. இத்தகைய வகையில் இங்கிலாந்து அரசாங்கம் பண நெருக்கடியால் ஏற்படும் இடையூற்றை ஓரளவு நீக்கியது.

தேர்தலின்போது தொழிற்கட்சி சில சீர்திருத்தத் திட்டங்களை மக்களின்முன் வைத்ததால், மக்கள் அதற்காகத் தொழிற்கட்சிக்கு வாக்களித்து ஆட்சியில் அமர்த்தினர். ஆகவே, தொழிற்கட்சி அரசாங்கம் அத் திட்டங்களைச் செயலாக்கப் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டது. அதற்காகப் பல சட்டங்களை அவ் வரசாங்கம் கொண்டு வந்தது. 1945ஆம் ஆண்டில் அட்லியின் அமைச்சரவை புது நகரங்கள் சட்டம் (The New Towns Act) ஒன்றைக் கொண்டு வந்து அமுலாக்கியது. இச் சட்டம் புது நகரங்களை உருவாக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளித்தது.

அதனால் லண்டன் மாநகரத்திற்கு அருகில் பல புது நகரங்கள் உருவாயின. போரினால் லண்டன் மாநகரில் வீடிழந்தோர் அனைவரும் அங்குத் தங்கள் வீட்டு வசதிகளைப் பெற்றனர். 1946ஆம் ஆண்டில் 'வீடுகள் கட்டும் சட்டம்' (The Housing Act) ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இச் சட்டம் தல ஆட்சி நிறுவனங்களுக்கு வீடுகளைக் கட்டி மக்களுக்கு விநியோகிக்க அதிகாரம் வழங்கியது. அதனால் 1950ஆம் ஆண்டிற்குள் தல ஆட்சி நிறுவனங்கள் சுமார் 6,35,095 வீடுகளைக் கட்டி மக்களுக்கு விநியோகித்தன. அத்துடன் போரின்போது குண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட 41,982 வீடுகளும் புதுப்பிக்கப்பட்டன.

1946ஆம் ஆண்டிலேயே தேசிய 'சுகாதாரப் பணிகள் சட்டம்' (The National Health Services Act) ஒன்றையும் அட்லியின் அமைச்சரவை இயற்றியது. இச் சட்டத்தால் மருத்துவ முறையே தேசியமயமாக்கப்பட்டது. அதனால் இலவச மருத்துவப் பணி மேற்கொள்ளப்பட்டது. ஏழை, பணக்காரர் யாவரும் இலவசமாக அவசியமான மருந்துகள் பெற இச் சட்டத்தால் வகை செய்யப்பட்டது. இதை நிறைவேற்ற உதவிய மருத்துவர்களுக்கு அரசாங்கம் உதவிப்பணம் அளித்தது. இச் சட்டத்திற்கு வெளியில் தனிமையாகப் பணியாற்றும் மருத்துவர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசாங்கம் அவர்களுக்குப் பணியாமல் போகவே, அவர்களும் தங்கள் எதிர்ப்பினைக் குறைத்தனர். 'நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று வந்தாலும் கூட இச் சட்டத்தை அமுல் நடத்தத் தயங்க மாட்டோ'மென்று கன்சர்வேடிவ் கட்சியினரும் தெரிவித்தனர். இவ் வாண்டிலேயே 'தேசிய உதவிச் சட்டம்' (The National Assistance Act) ஒன்றும் கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தால் வேலையில்லாதோர், நோய்வாய்ப்பட்டவர்கள், முதியோர் ஆகியவர்கள் நிவாரணம் பெற்றனர். 1947ஆம் ஆண்டில் 'விவசாயச் சட்டம்' (The Agriculture Act) ஒன்று இயற்றப்பட்டது. இச் சட்டத்தினால் உற்பத்தியும், பொருள்களின் விலையும் திட நிலைப்படுத்தி விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

1927ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 'தொழிற் சங்கச் சட்டம்' 1946ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. ஆகவே, தொழிற் சங்கங்கள் 1913ஆம் ஆண்டுச் சட்டப்படியே தங்கள் உரிமைகளைப் பெற்றன. ஆகவே, தொழிற் சங்கங்களின் சந்தா மூலம் தொழிற்கட்சிக்கு ஏராளமான நிதி கிடைத்தது. இச் சட்டம் தொழிலாளர்கள் இயக்கம் மறுபடியும் வாழ்வடைய வகை செய்தது.

1948ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'மக்கள் பிரதிநிதித்துவ சட்டம்' (The Representation of the People's Act) பல்கலைக் கழகப் பிரதிநிதித்துவத்தையும் பட்டதாரிகளுக்கும் வியாபார நிறுவனங்களின் சொந்தக்காரர்களுக்குமிருந்த 'இரண்டு வாக்கு' முறையையும் (Double Vote) ஒழித்தது. அதன் காரணமாக 'ஒருவருக்கு ஒரே வாக்கு' என்ற கொள்கை நிறுவப்பட்டது. 1948ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'புதிய பாராளுமன்றச் சட்டம்' (The New Parliamentary Act) பிரபுக்கள்சபை மசோதாக்களை நிறுத்தி வைக்கும் காலத்தை இரண்டாண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைத்தது. அதனுல் பிரபுக்கள் சபையின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு அட்லியின் அமைச்சரவையால் பிரச்சினைக்குரிய 'இரும்பு எஃகுத் தொழிலை தேசிய மயமாக்கும் மசோதா' ஒன்று கொண்டுவரப்பட்டது. அமைச்சரவையின் உறுப்பினர்களிடையேயும் இம் மசோதாவைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருந்தது. 'வேண்டுமென்றே கொண்டு வரப்பட்ட இம் மசோதாவை, கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால் ரத்து செய்யும்' என்று சர்ச்சில் கூறினுர். பிரபுக்கள் சபையிலும் இம் மசோதாவிற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இருந்த போதிலும் 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இம் மசோதா சட்டமாகி அமுலுக்கு வந்தது. இச் சட்டத்தால் தொழிலாளர்கள் பயனடைந்த போதிலும் அவர்கள் எதிர்பார்த்த நற்பயன்கள் கிடைக்கவில்லை.

1945ஆம் ஆண்டிலிருந்து 1951ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை எர்னஸ்டு பிவின் (Ernest Bevin) இங்கிலாந்தின் வெளிநாட்டமைச்சராகப் பணியாற்றினுர். அப்பொழுது இங்கிலாந்தின் சிறந்த வெளிநாட்டு அமைச்சரென்பதை நிரூபித்துக் காட்டினுர். சோவியத் ரஷ்யாவோடு நல்லுறவை வைத்துக் கொள்ளப் பெரிதும் முயன்ருர்; ஆனுல், சில நிகழ்ச்சிகளால் அது முடியாத காரியம் என்னும் முடிவுக்குவந்தார். ஐரோப்பாவில் மார்ஷல் உதவியை விநியோகிக்கும் திட்டத்திற்கு ஒத்துழைக்க ரஷ்யா மறுத்துவிட்டது. அத்துடன் 1948ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செக்கோஸ்லோவாக்கியாவில் திடீர் அரசியல் புரட்சி (Coup d'etat) ஏற்பட்டதற்கு ரஷ்யா உதவி செய்தது. 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெர்லினின் மேற்குப் பகுதியை ஜெர்மனியின் கிழக்குப் பகுதியிலிருந்த சோவியத் ரஷ்யாவின் அரசு முற்றுகையிட்டது. அதனுல் இங்கிலாந்தும் அமெரிக்காவும் பகல் இரவு பாராமல் அந் நகரத்திற்குத் தேவைப்படும் பொருள்களை விமானங்கள் மூலம் அனுப்பின. 1949ஆம் ஆண்டு மே மாதத்தில் அம் முற்றுகை கைவிடப்பட்டது. இச் சமயத்தில்தான் எர்னெஸ்டு

பிவின் ஃபிரான்சோடு டின்கிர்க் நகரில் ஒரு கூட்டுறவு உடன் படிக்கையைச் செய்து கொண்டார். அத்துடன் அவர் தம்முடைய முயற்சியால் மேற்கு ஐரோப்பிய நாடுகளை சோவியத் ரஷ்யாவுக் கெதிராக ஒன்றுபடுத்தினர். அத்துடன் 1948ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இங்கிலாந்து, ஃபிரான்சு, பெல்ஜியம், நெதர்லாண்ட்ஸ், லக்ஸம்பர்க் ஆகிய நாடுகள் புரூஸல்ஸ் உடன் படிக்கை (Pact of Brussels) ஒன்றைத் தமக்குள்ளே செய்து கொண்டன. 1949ஆம் ஆண்டில் வட அட்லாண்டிக் உடன் படிக்கை அமைப்பு (North Atlantic Treaty Organization) ஏற்பட எர்னஸ்டு பிவின் பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டார். மேற்கு ஐரோப்பாவில் மேலும் கம்யூனிசம் பரவாமலிருக்க அவ் வமைப்பு பெரும் பங்கேற்றது. எர்னஸ்டு பிவின் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையையே பின் பற்றி வந்தார்.

1950ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கொரியாப் போர் (Korean War) வெடித்தது. வட கொரியாவின் படைகள் தென் கொரியாவுக்குள் நுழைந்தன. அமெரிக்கா தென் கொரியாவின் உதவிக்கு மிகவும் வலிமையான துருப்புக்களை அனுப்பியது. கம்யூனிச சீனு வட கொரியாவை ஆதரித்தது. இங்கிலாந்து உள்பட பல ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் அமெரிக்காவை ஆதரித்தன. தென் கொரியாவுக்கு இங்கிலாந்தும் சில உதவிகளைச் செய்தது. 1963ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று அங்குக் கையெழுத்தாயிற்று.

பாலஸ்தீனப் பிரச்சினையையும் தீர்க்க பிவின் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனுல் அவருடைய முயற்சி தோல்வி யையே கண்டது. பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களும் (Jewish) அரேபியர்களும் பெருங் கலகத்தில் ஈடுபட்டனர். அங்கு கட்டுப்பாடின்றி அவர்கள் மோதிக்கொள்ளவே, ஆங்கிலத் துருப்புகள் 1948ஆம் ஆண்டு மே மாதத்தில் அங்கிருந்து திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டன. யூதர்களுக்கும் அரே பியர்களுக்குமிடையே பெரும் போரும் ஏற்பட்டது. கடைசி யில் ஒரு சுதந்திர யூதர் நாடும் அங்கு ஏற்பட்டது, அந்த நாடு தான் இஸ்ரேலாகும்(Israel).

அட்லியின் அமைச்சரவை தன் கட்சியின் கொள்கைக்கேற்ப இந்தியா, சிலோன், பர்மா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கியது. இங்ஙனம் தொழிற் கட்சியினர் ஆங்கிலப் பேரரசை காமன் வெல்த் (CommonWealth) அல்லது பொது நலக் கூட்டுறவு நிறுவனமாக மாற்றியமைத்தனர்.

1945ஆம் ஆண்டிலிருந்து 1950ஆம் ஆண்டு வரை தொழிற் கட்சி அமைச்சரவை பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவைகளையெல்லாம் வெற்றியுடனேயே சமாளித்தது. ஆகவே, அக் கட்சி தைரியமாக 1950ஆம் ஆண்டு தேர்தலில் மக்களைச் சந்தித்தது. அத் தேர்தலில் தொழிற் கட்சி 315 இடங்களையும், கன்சர்வேடிவ் கட்சி 298 இடங்களையும், லிபரல் கட்சி 9 இடங்களையும் பெற்றன. கன்சர்வேடிவ் கட்சியினை ஆதரித்த சுயேச்சையாளர்கள் 17 இடங்களைப் பெற்றனர். ஆகவே அட்லி குறைந்த பெரும்பான்மையுடன் பிரதமராகத் தொடர்ந்து பணியாற்றினர். இத்தகைய குறைந்த பெரும்பான்மையைக் கொண்டு அவரால் பிரச்சினைக்குரிய சட்டங்களை இயற்ற முடியவில்லை. சர்க்கரை, சிமெண்டு, நீர் விநியோகம் போன்றவைகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற செயல் முறைகள் ஒத்திப் போடப்பட்டன. இந் நிலையில் அட்லியின் அமைச்சரவை நிலையுறுதியற்றதாய் விளங்கியது.

1951ஆம் ஆண்டில் எர்னஸ்ட் பிவினும், கிரிப்ஸும் உடல் நலமின்மையால் அமைச்சரவையினின்றும் விலகினர். அப்பொழுது நாட்டின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கொரியப் போரின் காரணமாக நாட்டின் பாதுகாப்புக்காக அரசாங்கம் மிகுந்த செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் நாட்டில் விலைவாசிகள் மேலும் உயர்ந்தன. சிக்கலைத்தை மேற்கொள்ள வேண்டி கிரிப்ஸுக்குப் பதிலாக கருவூலத் தலைவராக வந்த கெயிட்ஸ்கெல் (Gaitskell) என்பவர் மூக்குக் கண்ணாடிகள், பல் தொகுதிகள் (Dentures) முதலானவற்றின்மீது 50 சதவிகித வரியை உயர்த்தினர். அதை எதிர்த்து ஹெரால்டு வில்சன் (Harold Wilson), அனியுரின் பிவன் (Aneurin Bevan) ஆகிய இருவரும் அமைச்சரவையினின்று விலகினர். ஆகவே அட்லியின் அமைச்சரவைக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. அதே சமயத்தில் அட்லிக்கு உடல்நல மில்லாமலிருந்தது. இச் சூழ்நிலையில் 1951ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தும்படி அட்லி அரசரைக் கேட்டுக் கொண்டார். அதனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நாட்டில் பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது. அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி 321 இடங்களையும், தொழிற் கட்சி 295 இடங்களையும், லிபரல் கட்சி 6 இடங்களையும் பெற்றன. அட்லி தமது பதவியை ராஜிநாமா செய்தார். கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் சர்ச்சில் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

பிரதமர் சர்ச்சில்

1951ஆம் ஆண்டு தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்றதால் அதன் தலைவர் சர்ச்சில் பிரதமரானார். அப்பொழுது அவருக்கு வயது 76 ஆகும். இவருடைய கட்சி தொழிற்கட்சியை விட 26 இடங்களை அதிகம் பெற்றிருந்த போதிலும் தொழிற் கட்சி பெற்ற வாக்குகளைவிட 2,31,000 வாக்குகளைக் குறைவாகவே பெற்றிருந்தது. ஆகவே, இவரால் தைரிய மிக்க திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் அரசாங்கத்திற்குப் பண நெருக்கடியும் இருந்தது. இச் சூழ்நிலையில்தான் 1952ஆம் ஆண்டில் ஆறாம் ஜார்ஜ் அரசர் இறந்தார். உலகெங்குமிருந்த அவருடைய குடிமக்கள் துயரெய்தினர். அவர் மகளான இரண்டாம் எலிஸபெத் (Elizabeth II) இங்கிலாந்தின் அரசியானார்.

25. இரண்டாம் எலிஸபெத் அரசியார் காலம்

(1952 —)

இங்கிலாந்தின் அரசர் ஆரும் ஜார்ஜ் 1952ஆம் ஆண்டில் இறந்துவிடவே, அவர் மகள் இரண்டாம் எலிஸபெத் ஆங்கில அரியணையில் அமர்ந்தார். அவர் அன்பும் அடக்கமும் ஒருங்கே அமையப் பெற்றவர். மக்களிடம் அன்போடும், பண்போடும் நடந்து கொள்வதனுல்தான் இது காறும் அப்பதவியைச் சிறப்புடனும் சீருடனும் வகித்து வருகின்ருர்.

இரண்டாம் எலிஸபெத் இங்கிலாந்தின் அரசியாகப் பதவியேற்றபோது சர்ச்சில் அந் நாட்டின் பிரதமராகப் பணியாற்றி வந்தார். அவர் சில ஆட்சித் துறை மாற்றங்களைச் செய்தாரேயன்றி மக்கள் நலமடையும் வகையிலே புரட்சிகரமான சீர்திருத்தங்களைச் செய்யவில்லை. தொழிற் கட்சியினரால் தேசிய மயமாக்கப்பட்ட தொழில்களில், பெரும்பாலானவற்றை சர்ச்சில் அப்படியே விட்டு விட்டார். தொழிற் கட்சியினர் எஃகுத் தொழிலைத் தேசிய மயமாக்கியபோது சர்ச்சில் அதை வன்மையாகக் கண்டித்தார். தமது கட்சி ஆட்சிக்கு வருமேயானுல் கண்டிப்பாய் அதை ரத்து செய்யும் என்று கூறினுர். அதற்காகவே தான் சர்ச்சில் பிரதமரானவுடன் எஃகுத் தொழிலை மீண்டும் தனியார் துறைக்குக் கொண்டு வந்தார். 1946ஆம் ஆண்டில் ரயில்வேயைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று கூறிய சர்ச்சில் இப்பொழுது அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஆனுல் தொலைக் காட்சித் துறையில் (Television) பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனத்தின் (British Broadcasting Corporation) தனியுரிமையை ஒழித்தார். அதற்காக அவர் 1954ஆம் ஆண்டில் 'வாணிபத் தொலைக்காட்சிச் சட்டம்' (Commercial Television Act) ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினுர். சர்ச்சில் காலத்தில் நாடு வளம் பெறவில்லை. அதற்குமாருகத் தொழிலில் மந்தம் ஏற்பட்டது. ஊதிய உயர்வு வேண்டி 1955ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபடலாயினர். இதேயாண்டில் தமது 80ஆவது வயதில் உடல்நலமின்மையால் சர்ச்சில் தமது பதவியினின்று ஓய்வு பெற்ருர். அப்பொழுது அயல்நாட்டு அமைச்சராக இருந்த

சர் அந்தோணி ஈடன் (Sir Anthony Eden) என்பவரை எலிஸபெத் அரசியார் பிரதமராக்கினர். இவர் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அத்துடன் சர்ச்சிலும் இவர் பிரதமராவதை ஆதரித்தார். 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இவர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டவுடனேயே பாராளு மன்றத்தைக் கலைத்துவிடும்படி அரசியாருக்கு ஆலோசனை கூறினர். அவ்வாறே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1955ஆம் ஆண்டு மே மாதத்திலேயே பொதுத் தேர்தலும் நடத் தப்பட்டது. அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தொழிற் கட்சியைவிட 60 உறுப்பினர்களை அதிகமாகப் பெற்றது. அத்துடன் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் பாதி யளவு வாக்குகளையும் பெற்றது.

பிரதமர் ஈடனின் சூயஸ் கால்வாய்க் கொள்கை மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. 1959ஆம் ஆண்டில் எகிப்தின் தலைவரான நாசர் (Nasser) சூயஸ் கால்வாய் கம்பெனியை தேசிய மயமாக்கினர். 1956ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்29ஆம் தேதி இஸ்ரேல் எகிப்தியர்கள் மீது கடும் குற்றச்சாட்டைச் சாட்டியது. அப்பொழுது ஆங்கில-ஃபிரெஞ்சு அரசாங்கங்கள் இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் கடும் எச்சரிக்கையை விடுத்தன. இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் இஸ்ரேல் எகிப்தியப் படைகள் சூயஸ் கால் வாயிலிருந்து 10 மைல் தூரத்திற்குத் திருப்பி அழைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் தவறினல் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் அவ் விரு நாடுகளும் எச்சரித்தன. இங்கி லாந்தும் ஃபிரான்சும் விடுத்த காலக்கெடுவால் இஸ்ரேல் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் இஸ்ரேல் படைகள் சூயெஸ் கால்வாய்க்கு 10 மைல்களுக்கு அதிகமாகவே அப்பாலிருந்தன. ஆனல், எகிப்திய அரசாங்கம் அக் காலக் கெடுவை நிராகரித்தது. அதன் காரணமாக ஆங்கில - ஃபிரெஞ்சுப் போர் விமானங்கள் கெய்ரோ விமான தளத்தின் மீதும் மற்றுமுள்ள எகிப்திய விமான தளங்கள் மீதும் குண்டுகளை வீசின. அதன் பிறகு விமானங்களின் மூலமாகவும் கப்பல் மார்க்கமாகவும் ஆங்கில-ஃபிரெஞ்சுப் படைகள் சூயெஸ் கால்வாய்ப் பகுதியில் இறக்கப்பட்டன. 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் தேதியன்று செட் (Said) துறை முகத்தை அப் படைகள் கைப்பற்றின. எகிப்தியர்கள் சூயெஸ் கால்வாயிலிருந்த 40 கப்பல்களை மூழ்கடித்தனர். இங்கிலாந்தின் எண்ணெய்க் குழாய்கள் நாசமாக்கப்பட்டன. இச் சமயத்தில் நிலைமை மேலும் மோசமாகியது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் சூயஸ் கால்வாய்ப் பகுதியினின்று விலகாவிடில் தாம் தலையிட நேரிடும் என்று ரஷ்யா எச்சரிக்கை செய்தது. இந்தியாவும்,

கனடாவும் இச் செயலைக் கைவிடும்படி இங்கிலாந்தை வற்புறுத்தின. எகிப்தின் பக்கமே உலகப் பொதுக் கருத்தும் இருந்தது. ஐக்கிய நாடுகள்சபை இங்கிலாந்தையும் ஃபிரான்சையும் கண்டித்தது. அதன் காரணமாக 1956ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆங்கில-ஃபிரெஞ்சு துருப்புகளுக்குப் பதிலாக அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் துருப்புகள் நிறுத்தப்பட்டன. ஆங்கில-ஃபிரெஞ்சுப் படைகள் எகிப்தினின்று வெளியேறின. இச் சமயத்தில் உடல் நலமின்மையால் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் தேதியன்று சர் அந்தோணி ஈடன் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார்.

மாக்மில்லனின் அமைச்சரவை

சர் அந்தோணி ஈடன் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்த வுடனே, கன்சர்வேடிவ் கட்சியினர் ஹெரால்டு மாக்மில் லனையே (Harold Macmillan) பெரிதும் ஆதரிப்பதாய்த் தெரிந்த தால் எலிஸபெத் அரசியார் அவரையே பிரதமராக நியமித்தார். மாக்மில்லன் அறிவும் திறனும் ஒருங்கேயமையப் பெற்றவர்; 1942ஆம் ஆண்டிலிருந்து வட ஆப்பிரிக்காவின் அமைச்சரா யிருந்தவர். 1951லிருந்து 1954ஆம் ஆண்டு வரை வீட்டுவசதி அமைச்சராகத் திறம்படப் பணியாற்றினார். 1955 லிருந்து 1957ஆம் ஆண்டுவரை கருவூலத் தலைவராகப் பெரிதும் சிறந்த முறையில் பணியாற்றினார். 'மிகச் சிறந்த பிரதமரை நாம் இப்போது பெற்றுள்ளோம்' என்று பட்லர் (R.A. Butler) என்னும் பெருந்தகை மாக்மில்லனைப் பற்றிக் கூறுகின்றார். 1959ஆம் ஆண்டு அக்டோபரில் பொதுத்தேர்தல் ஒன்று இங்கிலாந்தில் நடை பெற்றது. அத் தேர்தலில் மக்கள், சூயெஸ் கால்வாய்ப் பிரச் சினையில் கன்சர்வேடிவ் கட்சி மேற்கொண்ட கடுமையான செயல் களையும் மறந்து அக் கட்சியையே ஆதரித்தனர். ஆகவே, தொழிற் கட்சியைக் காட்டிலும் கன்சர்வேடிவ் கட்சி இத் தேர்தலில் 100 இடங்களை அதிகமாகப் பெற்றது. இதற்குக் காரணம் மக்கள் மாக்மில்லனிடம் வைத்திருந்த நம்பிக்கையும் அன்புமேயாகும். மாக்மில்லன் தொடர்ந்து 1963ஆம் ஆண்டு வரை பிரதமர் பதவியை வகித்தார்.

மாக்மில்லனின் அமைச்சரவை வளமிக்க சமுதாயத்தைப் படைக்க பல வகையிலும் முயன்றது. பண வீக்கத்தைக் (Inflation) குறைக்க மாக்மில்லனின் அரசாங்கம் பல முயற்சிகளை மேற் கொண்டது. 'பணவீக்கமில்லாப் பெருக்கம்' (Expansion Without Inflation) என்பதே அவ் வரசாங்கம் கடைப்பிடிக்கும் பொன்

மொழியாக இருந்தது. அரசாங்கத்தின் செலவைக் குறைக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதே சமயத்தில் பாதுகாப்புக்காக (Defence) மட்டும் ஏராளமாகச் செலவிடப் பட்டது.

மாக்மில்லனின் அமைச்சரவை 1957ஆம் ஆண்டில் வாடகைச் சட்டம் (Rent Act) ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. இச் சட்டத்தினால் போர்க்காலத்தில் விதிக் கப்பட்டிருந்த வாடகைக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. அதனால் 11 மில்லியன் வீட்டுக்காரர்கள் பயனடைந்தார்கள். ஆனால், பலர் அதிக வாடகை செலுத்த நேர்ந்தது. அதற்காகக் கூக்குரல்கள் ஆங்காங்கே எழுந்தபோதிலும் பொதுவாகப் பெரும் பான்மையோர் திருப்தியடைந்தனர். கொலைக் குற்றச் சட்டம் (Homicide Act) ஒன்றை இவ் வமைச்சரவை நிறைவேற்றியது. அதன்படி ஐந்து வகைப் பெருங்கொலைக் குற்றங்களுக்கு மட்டும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. நாளடைவில் மரணதண்டனை முற்றிலும் அகற்றப்படுவதற்கும் இச் சட்டம் வகைசெய்தது. பிரபுக்கள் சபைக்கு ஆண்கள்மட்டுமே உறுப்பினர்களாக நியமிக் கப்பட வேண்டும் என்ற கொள்கையை மாற்றிப் பெண்களையும் நியமிக்க இவ் வரசாங்கம் வழி வகுத்தது. பொது நன்மைக்கு விரோதமாய்த் தனியுரிமையைப் (Monopoly) பயன்படுத்தும் தொழிலதிபர்களைத் தண்டிக்கும் உரிமையை இவ் வரசாங்கம் ஒரு தனிப்பட்ட 'கட்டுப் பாட்டு நடைமுறைகள் நீதிமன்றத்துக்கு' (Restrictive Practices Court) வழங்கியது. அத்துடன் சில்லரை வியாபாரிகளின் நலனைப் பாதுகாக்கும் ஒரு சட்டத்தையும் அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்தது. அந்த 'மறு விற்பனை விலை நிலைநாட்டுச் சட்ட'ப்படி (Resale Prices Maintenance Act) பொருள் உற்பத்தியாளர்கள் அப் பொருளை ஒரு குறிப்பிட்ட விலைக்கே விற்கவேண்டுமென்று சில்லரை வியாபாரிகள் வற்புறுத்தா வண்ணம் தடுக்கப்பட்டனர்.

1948ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப் பட்ட மருத்துவ மனைகள் மிகவும் மோசமான நிலையிலிருந்தன. ஆகவே, 1962ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சரான 'இனச் பவெல்' (Enoch Powell) என்பவர் ஒரு திட்டத்தைக் கொணர்ந்தார். அதன்படி பத்தாண்டுகளில் 500 மில்லியன் பவுன்களை மருத்துவ மனைகளுக்காக இங்கிலாந்திலும், வேல்ஸிலும் செலவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அத் தொகையிலிருந்து 94 புதிய மருத்துவமனைகள் கட்டப்பட்டன. அடுத்த ஆண்டே 500 மில்லியன் பவுன்கள் என்ற குறியிலக்கு 600 மில்லியன்

பவுன்களாக உயர்த்தப்பட்டது. போக்குவரத்து வசதிக்காக 6 ஆண்டுகளில் 1000 மில்லியன் பவுன்களைச் செலவிடுவ தென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ராபின்ஸ் பிரபு (Lord Robbins) தலைமையில் உயர்கல்வியை ஆராய ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அக் குழு முழு நேர உயர் கல்வி இடங்களை 2,16,000 லிருந்து 1973-க்குள் 3,90,000 இடங்களாகவும், பல்கலைக் கழக இடங்களை 1,18,000 லிருந்து 1973ஆம் ஆண்டிற்குள் 2,19,000 இடங்களாகவும் 1980ஆம் ஆண்டிற்குள் 3,50,000 இடங்களாகவும் உயர்த்த வேண்டு மென்று சிபார்சு செய்தது. அச் சிபார்சை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. ஆகவே, உயர்கல்விக்காக 17 ஆண்டுகளில் அர சாங்கத்திற்கு 1,420 மில்லியன் பவுன்கள் செலவு ஏற்படுமென்று கணக்கிடப்பட்டது.

மாக்மில்லனின் அரசாங்கம் நாட்டின் பாதுகாப்புக்காக மற்ற நாடுகளை நம்பியிருக்க விரும்பாமல், தானே பல ஆயுதங்களைச் செய்ய முன்வந்தது. அதற்காக ஏராளமான பணம் செலவிடப் பட்டது. விண்வெளியில் குண்டுகளை எடுத்துச் செல்ல ராக் கெட்டுகள் (Rockets) எனும் விண்வெளி விமானங்கள் செய்யும் முயற்சிகள் நடைபெற்றன. அரசாங்கம் புளு ஸ்டீரிக் (Blue Streak) என்னும் ஏவுகணைகளை (Missiles) செய்ய ஆரம்பித்தது. ஆனால், 1960ஆம் ஆண்டில் இத் திட்டம் கைவிடப்பட்டது. ஸ்கை-போல்டு (Sky-Bolt) என்னும் பொறியைத் தயாரிக்க அமெரிக்கா வோடு உடன்பாடு ஏற்பட்டதாக மாக்மில்லனின் அரசாங்கம் 1960ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிவித்தது. 1962ஆம் ஆண்டு இறுதியில் 'ஸ்கை போல்டு' தயாரிக்கும் பணியைக் கைவிடும்படி அமெரிக்கா இங்கிலாந்தைக் கேட்டுக் கொண்டது. 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இப் பிரச்சினை பற்றி ஆங்கிலப் பிரதமர் மாக்மில்லனும் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் நஸ்ஸார் (Nassar) என்னுமிடத்தில் விவாதித்தனர். ஸ்கைபோல்டு உற்பத்தி செய்வதைக் கைவிட்டுவிட வேண்டு மென்றும் அதற்குப் பதிலாக அமெரிக்கா போலாரிஸ் (Polaris) என்னும் ஆயுதத்தை ஆங்கில நீர்மூழ்கிக் கப்பலுக்கு விநியோகம் செய்யுமென்றும் இரு நாடுகளாலும் ஒத்துக் கொள்ளப்பட்டது. அணு ஆயுதங்களைச் செய்வதிலும், அவற்றை விண்வெளியில் அனுப்பும் சாதனங்களைச் செய்வதிலும் இங்கிலாந்து எந்த நாட்டையும் சார்ந்திருக்கக் கூடாதென்றும், சொந்தமாகவே அவற்றைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் கன்சர்வேடிவ்

கட்சியினர் பலர் கூறினர். அணுகுண்டுகளைச் செய்ய மிகுதியான பொருள் தேவைப்படுமாதலால் அவற்றைத் தாமே உற்பத்தி செய்வதைவிடப் பிறநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதே நல்லதெனத் தொழிற்கட்சியினர் கூறலாயினர். இப் பிரச்சினையில் தொழிற்கட்சிக்கே மக்களின் ஆதரவு பெருகியது.

இந் நிலையில் நாட்டில் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே சென்றன. வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகமாகிக் கொண்டே சென்றது. இத்துடன் இங்கிலாந்திற்கு மற்றொரு பிரச்சினையும் எழுந்தது. இந்தியா, பாகிஸ்தான், அயர்லாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், ஐரோப்பா முதலிய நாடுகளிலிருந்து மிகப் பலர் வந்து குடிபுக ஆரம்பித்தனர். 1961ஆம் ஆண்டில் மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்து மட்டும் 50,000 குடியேறிகள் இங்கிலாந்திற்கு வந்தனர். இவர்களின் வருகையால் வீட்டுப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், வேலைப் பிரச்சினைகள் முதலிய பிரச்சினைகள் நாட்டில் எழுந்தன. இப் பிரச்சினைகளைச் சமாளிக்க அரசாங்கம் 1962ஆம் ஆண்டில் காமன்வெல்த் குடியேறிகள் தடைச் சட்டம் (Commonwealth Immigrants Act) ஒன்றைக் கொணர்ந்து நிறைவேற்றியது. ஏதாவதொரு வேலைக்கு இங்கிலாந்தில் உறுதியளிக்கப்பட்டவர்கள் தவிர, ஏனைய காமன்வெல்த் குடிமக்கள் எவரும் இங்கிலாந்துக்குள் புகுவதை அச் சட்டம் தடை செய்தது. இச் சட்டத்தால் பலர் மனக் கசப்பை யடைந்தார்கள். காமன்வெல்த் நாடுகளின் பகைமையை வளர்க்கவே மாக்மில்லன் பாடுபடுகிறார் என்று தொழிற் கட்சியினர் குறை கூறினர்.

மாக்மில்லனின் அரசாங்கம் சைப்ரஸுக்கும் (Cyprus) நைஜீரியாவுக்கும் (Nigeria) 1960ஆம் ஆண்டில் சுதந்திரம் வழங்கியது. சைரா லியோனியும், (Sierra Leone) டங்கநிகாவும் (Tanga Nyika) 1961ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றன, யுகாண்டா (Uganda), ஜமைக்கா (Jamaica), டிரினிடாடு (Trinidad) ஆகிய நாடுகள் 1962ஆம் ஆண்டிலும், கென்யா (Kenya), ஜான்ஸிபார் (Zanzibar) ஆகிய நாடுகள் 1963ஆம் ஆண்டிலும். மால்டா (Malta), மாலாவி,(Malawi), ஜாம்பியா (Zambia) ஆகிய நாடுகள் 1964ஆம் ஆண்டிலும் ஆங்கிலப் பேரரசினின்று சுதந்திரம் பெற்றன. 1961ஆம் ஆண்டில் தென் ஆப்ரிக்கா (South Africa) காமன்வெல்த் நாடுகளின் அமைப்பினின்று விலகிக் கொண்டது. ஏனெனில் மற்ற காமன்வெல்த் நாடுகள் அந் நாட்டை அதனுடைய இன ஒதுக்கீடு (Apartheid) கொள்கையால் காமன்வெல்த்திலிருந்து விலக்கிவிடும்படி வற்புறுத்தியதால்தான், தென் ஆப்பிரிக்கா

அதினின்று விலகியது. அதன் பிறகு மாக்மில்லன் அரசாங்கம் தென் ஆப்பிரிக்காச் சட்டம் (The South African Act) ஒன்றை 1962 ஆம் ஆண்டில் இயற்றியது. அச் சட்டம் தென் ஆப்பிரிக்காவை நட்பு நாடென்றும் அதே சமயத்தில் காமன் வெல்த் நாடல்லவென்றும் கூறியது.

1963 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம் தேதி அணுகுண்டு பரிசோதனைத் தடை ஒப்பந்தம் ஏற்பட்டதில் மாக்மில்லன் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். இவ் வொப்பந்தத்தில் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகள் மாஸ்கோவில் கையெழுத்திட்டன. இவ் வொப்பந்தம் தரைஅடி பரிசோதனைகளைத் தவிர மற்ற எல்லா அணுகுண்டு பரிசோதனைகளுக்கும் தடை விதித்தது. இவ் வொப்பந்தத்தால் உலகிலிருந்த பயம் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டது.

ஐரோப்பியர் போட்டி உலகில் பங்கு கொள்வதால் மட்டுமே இங்கிலாந்தின் பொருளாதாரச் சிக்கல்கள் தீரும் என்று கன்சர் வேடிவ் கட்சியினர் விரும்பினர். அதனுல் 1961 ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (European Common Market) இங்கிலாந்தையும் ஓர் உறுப்பு நாடாகச் சேர்த்துவிட மாக்மில்லன் அதற்குரிய விண்ணப்பத்தைச் செய்து கொண்டார். ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்தின் கூட்டுறவை அவ்வளவாக விரும்பவில்லை. அத்துடன் ஐரோப்பியப் பொதுச் சந்தையில் இங்கிலாந்து சேருவதைக் குறித்து இங்கிலாந்திலும் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. இச் செயல் இங்கிலாந்து காமன்வெல்த் நாடுகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு விரோதமெனவும், அந் நாடுகளின் பொருளாதார நலன்களுக்குக் கேடு வராதென்ற உறுதி ஏற்பட்டாலொழிய இங்கிலாந்து அக் கூட்டுறவில் சேரக் கூடாதென்றும் தொழிற் கட்சியினர் கூறினர். இவ்வாறு கன்சர்வேடிவ் கட்சியும், தொழிற் கட்சியும் மோதிக் கொண்டிருக்கும் வேளையில் ஃபிரெஞ்சு ஜனுதிபதி டீகால் ஐரோப்பியப் பொதுச் சந்தையில் இங்கிலாந்துக்கு இடமில்லையென்று அறிவித்து விட்டார். இவ் வறிவிப்பு மாக்மில்லனின் அரசாங்கத்திற்கு ஒரு பேரிடியாக அமைந்தது.

இந் நிலையில் அமைச்சரவையின் மதிப்பை மேலும் குலைக்கக் கூடிய மற்ருெரு நிகழ்ச்சியும் இங்கிலாந்தில் நடந்தது. அதுவே புரோஃபியூமோ புரளி (Profumo Affair) என்னப்படுவதாகும். மாக்மில்லன் அமைச்சரவையில் போர் அமைச்சரான

புரோஃபியூமோ கிறிஸ்டியன் கீலர் (Christian Keeler) எனும் வேசியுடன் தொடர்பு கொண்டிருந்தார். அதே சமயத்தில் அவள் ரஷ்ய ஒற்றர் படையைச் சார்ந்த ஐவனோவ் (Ivanov) என்பவரோடும் தொடர்பு கொண்டிருந்தாள். இங்கிலாந்தின் இராணுவ இரகசியங்கள் அவள் மூலம் ரஷ்யாவுக்குத் தெரிந்திருக்கக் கூடுமா? என்ற ஐயம் ஆங்கில மக்களுக்கு ஏற்பட்டது. அதே சமயத்தில் அமைச்சரின் காதல் உண்மைதானா? என்ற பிரச்சினை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. அமைச்சர் இல்லவேயில்லை என்று பாராளுமன்றத்தில் கூறினார். ஆனால், அக் காதல் உண்மைதான் என்பது நாளடைவில் தெரிய வந்தது. அமைச்சர் தமது பதவியை ராஜிநாமா செய்தார், அத்துடன் மாக்மில்லன் அமைச்சரவையின் செல்வாக்கும் நாட்டில் சரியலாயிற்று. அச் சமயத்தில் மாக்மில்லன் உடல் நோய் அடைந்தார். அதன் காரணமாகத் தம் பதவியை அவர் 1963ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் தேதியன்று ராஜிநாமா செய்தார். அத்துடன் ஹியூம் பிரபுவை (Lord Hume) அழைத்து அமைச்சரவையை அமைக்கக் கேட்டுக் கொள்ளும்படி அரசியாருக்கு ஆலோசனை கூறினார்.

ஹியூம் பிரபு (Lord Hume) 1963ஆம் ஆண்டு பிரதிநிதித்துவச் சட்டப்படி தமது பிரபுப் பட்டத்தைத் துறந்து 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி உப தேர்தல் Bye-Election) ஒன்றில் நின்று பொதுமக்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் தமது பெயரை சர் அலெக் டக்ளஸ் ஹியூம் (Sir Alec Douglas Hume) என மாற்றிக் கொண்டார். ஆகவே, சர் அலெக் டக்ளஸ் ஹியூம் இங்கிலாந்தின் பிரதமரானார். இவர் மக்களிடையே செல்வாக்கும் பெறவில்லை. தொழிற் கட்சியின் தலைவர் ஹியூ கெய்ட்ஸ் கெல் (Hugh Gaits Kell) என்பவர் 1963ஆம் ஆண்டில் இறந்துவிடவே ஹெரால்டு வில்சன் (Harold Wilson) என்பவர் அக் கட்சியின் தலைவரானார். சாதாரண தொழிலாளியின் மகனாகப் பிறந்து வளர்ந்த வில்ஸன் தமது கட்சியின் ஒற்றுமையைக் கட்டிக் காத்தார். அவர் விரைவிலேயே ஒன்றுபட்ட தொழிற் கட்சியை உருவாக்கினார். 1964ஆம் அண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதியன்று இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அத் தேர்தலில் பிரதமர் ஹியூமின் கட்சியான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியுற்று தொழிற்கட்சி வெற்றி பெற்றது. அத் தேர்தலில் தொழிற்கட்சி 317 இடங்களையும், கன்சர்வேடிவ் கட்சி 304 இடங்களையும், லிபரல் கட்சி 9 இடங்களையும் பெற்றன. ஆகவே, தொழிற்கட்சியின் தலைவரான ஹெரால்டு வில்ஸன் இங்கிலாந்தின் பிரதமரானார்.

வில்ஸன் அமைச்சரவை

1964ஆம் ஆண்டில் தொழிற்கட்சியின் தலைவர் ஹெரால்டு வில்ஸன் தமது அமைச்சரவையை அமைத்தார். அப்பொழுது நாட்டில் பல பிரச்சினைகள் மலைபோல் நின்றன. அவற்றை அவர் சமாளித்தார், வில்ஸன் சாதாரண பெரும்பான்மையை வைத்துக் கொண்டு நல்ல பல திட்டங்களையும் சட்டங்களையும் தீட்டினர். நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்க தேசியத் திட்டம் (National Planning) நாட்டுக்குத் தேவையென்றும், வருவாய்க் கொள்கை (Income Policy) நன்கு வகுக்கப்பட வேண்டுமென்றும், நாணயத்தின் மதிப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் அவர் நினைத்துச் செயலாக்க முயன்றார். தேசியப் பொருளாதாரத் திட்டப்படி நாட்டின் உற்பத்தியைப் பெருக்க தொழிலக உற்பத்திக் கழகங்கள் (Factory Production Committees) அமைக்கப்பட்டன. அத்துடன் பிரதேச ரீதியான மன்றங்களும் (Regional Committees) ஏற்படுத்தப்பட்டன. பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வகுக்கவும், செயற்படுத்தவும் தனிப்பட்ட பொருளாதாரச் செயல் துறை (Department of Economic Affairs) ஒன்றையும், அத் துறைக்கு அமைச்சர் ஒருவரையும் 1966ஆம் ஆண்டில் வில்ஸன் உருவாக்கினர். அத்துடன் தேசியப் பொருளாதார வளர்ச்சிக் கழகத்திற்கு (National Economic Development Council) நாட்டின் வரிக் கொள்கை போன்ற முக்கிய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் உரிமையை அவர் அளித்தார். நாட்டின் வருவாய், விலைவாசி ஆகியவற்றை ஆராய்ந்து, ஒரு அறிக்கையிடுவதற்காக 1965ஆம் ஆண்டில் தேசிய விலைவாசிகள் வருவாய்கள் வாரியம் (National Board for Prices and Income) ஒன்றை வில்ஸன் அமைத்தார். உற்பத்தி பெருக்கத்திற்கான வழி முறைகளை ஆராய்ந்து அவ் வாரியம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. தொழிற்சங்கங்களும், தொழிலதிபர்களும், அரசாங்கமும் சேர்ந்து செயல்பட்டாலன்றி உற்பத்தி பெருகாதென அவ் வாரியத்தின் அறிக்கை கூறியது. விலைவாசிகளை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், கூலி நிர்ணயம் செய்வதில் தொழிலாளர் நலன்களை மட்டுமல்லாமல், பொது மக்களின் நலன்களையும் கவனிக்க வேண்டுமென்றும் அவ் வறிக்கை மேலும் கூறியது. இச் சிபார்சுகளுக்கேற்ப வில்ஸன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மக்கள் நலன் பேணும் செயல்களுக்கும் வில்ஸன் முக்கியத்துவம் கொடுத்தார். 1964ஆம் ஆண்டு தேசிய காப்புறுதிச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து செயலாக்கினர். அச் சட்டப்படி

1948ஆம் ஆண்டுக்குப்பின் ஊனமடைந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித்தொகை அதிகரிக்கப்பட்டது.

தேசிய சுகாதாரப் பணி (National Health Service) நல்ல முறையில் மக்களுக்குத் தொண்டாற்றி வந்தது. ஏழை எளியவர்கள் அதனால் இலவசமாகச் சிகிச்சை பெற்றனர். ஆனால், அதில் பணியாற்றிய மருத்துவர்கள் தாங்கள் அளவுக்கு மீறி வேலை வாங்கப்படுவதாயும் தங்களுக்குத் தகுந்த ஊதியம் அளிக்கப் படுவதில்லையென்றும் கூறி 1965ஆம் ஆண்டு வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தனர். அதனால் அவர்களின் குறைகளைப் போக்கும் வகையில் வில்ஸனின் அரசாங்கம் ஒரு சாசனத்தை (Doctor's Charter) வெளியிட்டது. அதன்படி மருத்துவர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டது. மருத்துவ சாதனங்களை வாங்குவற்குக் கடன் வழங்க 10 மில்லியன் பவுன்கள் கொண்ட ஒரு சேமநிதியை அரசாங்கம் ஏற்படுத்தியது.

நாட்டில் மேலும் பொருளாதாரப் பிரச்சினைகள் பெருகிக் கொண்டேயிருந்தன. நாட்டின் கடன்சுமை அதிகரித்துக் கொண்டே சென்றது. வேலையில்லாத் திண்டாட்டமும் வளர்ந்து கொண்டே போனது. விலைவாசிகள் ஏற்றமும் உயர்ந்து கொண்டே சென்றது. இப் பிரச்சினைகளை மிகக தைரியத்தோடு சமாளிக்க வேண்டுமானால் தமது அரசாங்கத்தின் நல்ல ஆதரவு இருக்க வேண்டுமென்று பிரதமர் வில்ஸன் நினைத்தார். ஆகவே, 1966ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடைபெற அவர் ஏற்பாடு செய்தார். அப்பொழுது கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராயிருந்த ஹியூம் அக் கட்சியின் தலைவர் பதவியினின்று விலகிக் கொண்டதால் எட்வர்டு ஹீத் (Edward Heath) என்பவர் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரானார். நடைபெற்ற அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோற்றது. தொழிற்கட்சி மற்ற கட்சிகளைக் காட்டிலும் 97 இடங்களை அதிகமாகப் பெற்றது. ஆகவே, பிரதமர் வில்ஸனுக்கு பொதுமக்கள் சபையில் நல்ல ஆதரவு கிட்டியது.

அப்பொழுது நாட்டில் வேலை நிறுத்தங்கள் பரவலாக ஏற்பட்டன. அதன் காரணமாக உற்பத்தி குறைந்தது. ஏற்றுமதிகள் குறைந்தன. விலைவாசிகள் மேலும் உயர்ந்து கொண்டே சென்றன. அதனால் 1966ஆம் ஆண்டில் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடி தோன்றிற்று. மக்கள் அச்சங்கொண்டு வங்கிகளில் சேர்த்து வைத்திருந்த பவுன்களையெல்லாம் திருப்பி வாங்க ஆரம்பித்தனர். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் பல வங்கிகள் மூடப்படும்

நிலைமைக்கு வந்து விட்டன. இந் நிலையில் நாணயத்தின் புழக்கத்தைத் தடுக்க வில்ஸன் பல வழிகளை மேற்கொண்டார். மறைமுக வரிகளை (Indirect Tax) பத்து சதவிகிதம் உயர்த்தினர். உபரிவரியை (Sur-Tax) மேலும் பத்து சதவிகிதம் அதிகமாக்கினர். முதலீடு செய்யப்படுவதைக் குறைத்தார். இங்ஙனம் பல வழிகளில் நாட்டின் செலவினங்களை அவர் தடை செய்தார். அதனுல் நாட்டில் பணச்சுருக்கம் (Deflation) ஏற்பட்டது. பெரும் தொழில்களில் முதலீடு செய்ய மக்கள் தயங்கினர். ஆகவே, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெரும் தடை ஏற்பட்டது.

பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க வில்ஸன் அரசாங்கம் பல வகையிலும் ஈடுபட்டது. ஆதாரபூர்வமான புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே அரசாங்கம் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்றும், நவீன பொருளாதார வளர்ச்சி முறைகளைக் கையாள வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி கொடுத்து உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றும் அரசாங்கம் முடிவு எடுத்தது. அம்முடிவின்படியே அரசாங்கம் செயல்படத் தொடங்கியது. அரசாங்கத்தின் திட்டமிட்ட பொருளாதாரமும், தனியார் முதலாளித்துவமும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இணைந்து செயல்பட வழி வகுக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் தொழில் மறு அமைப்பு கூட்டுரிமைக் குழு (Industrial Reorganisation Corporation) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், தனியார் தொழில்களை வாங்கவும், நலிவுற்ற தொழில்களை எடுத்துச் சீர்படுத்தவும், பல தொழில்கள் ஒன்று சேர்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் இக் குழுவுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு நல்ல பயிற்சியளித்து அவர்களின் திறமையைப் பெருக்க, பல வழிகளிலும் அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டது. தொழில் மறுபயிற்சி நிலையங்கள் (Industrial Retraining Centres) ஆங்காங்கே நிறுவப்பட்டு தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் பயிற்சியளிக்கப்பட்டன. தொழில் சச்சரவுகளைத் தீர்க்க ஒரு 'தொழிற்சங்க சச்சரவுகள் தீர்ப்பு நீதிமன்ற'த்தை அரசாங்கம் ஏற்படுத்தியது. அதனுல் வேலை நிறுத்தங்கள் குறைக்கப்பட்டு தொழில் சச்சரவுகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டன. பொருளாதாரத் திட்டத்தைச் செயற்படுத்த நாடெங்கும் 'வட்டாரத் திட்ட அமைவுகள்' ஏற்படுத்தப்பட்டன. இங்கிலாந்து எட்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 'திட்ட ஆலோசனை மன்றங்கள்', 'திட்டக் குழுக்கள்' முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டன.

பொருளாதாரத்தைச் சீர்திருத்த பல திட்டங்களைத் தீட்டிய வில்ஸன் மக்களின் சமூக நலங்களையும் மறக்கவில்லை. இங்கிலாந்தில் மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், எல்லோருக்கும் கல்வியறிவை வழங்கக் கூடிய பள்ளிகளைத் திடீரென்று கட்டி முடிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை. ஆகவே வில்ஸன் இந்நிலையைச் சமாளிக்க 'திறந்தவெளி பல்கலைக் கழகம்' (University of the air) என்னும் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்தார். வானொலி, (Radio) தொலைப்படக் காட்சி (Television) ஆகியவைகளின் மூலம் பயின்று பட்டம் பெறலாம் என்பதே அத் திட்டமாகும். வானொலி, தொலைப்படக் காட்சி ஆகியவைகளின் மூலம் கற்பதுமட்டுமல்லாமல், மாணவர்களுக்குத் தபால் மூலமாகவும் விரிவுரைகள் அனுப்பப்படும். அத்துடன் குறுகியகால கருத்தரங்குகளும், நேர்முகப் பயிற்சிகளும் அளிக்கப் படும். இங்ஙனம் நான்கு ஆண்டுகள் பயிற்சிக்குப் பின் அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படும் என்றார். இத்திட்டம் நல்ல ஒரு திட்டமாக அமைந்தது. குமாரி ஜென்னி லீ (Miss Jenniee Lee) என்னும் அமைச்சரிடம் இப்பணியை வில்ஸன் ஒப்படைத்தார். இத் திட்டத்தை இப்பொழுது உலகின் பல முக்கியமான பல்கலைக் கழகங்கள் பின்பற்ற ஆரம்பித்துள்ளன. தொழிற்கல்வி வளர வேண்டுமென்று தொழிற்கட்சி அரசாங்கம் பெரிதும் விரும்பியது. அதற்காக வில்ஸன் ஒரு தனிப்பட்ட துறையை ஏற்படுத்தினர். அத்துறைக்கு தொழில் நுண்ணியல் அமைச்சர், (Minister for Technology) ஒருவரை வில்ஸன் நியமித்தார். பொருளாதார வளர்ச்சிக்குரிய முறையில் கல்வித்திட்டங்களை வகுப்பதில் வில்ஸன் பெரிதும் ஆர்வம் காட்டினர்.

நாட்டில் உற்பத்திக்கேற்ப மக்கள் தொகையிருக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதியதால், குடும்பத் திட்ட முறையை அரசாங்கம் கொண்டு வந்தது. அதற்காக 1967 ஆம் ஆண்டில் வில்ஸன் அமைச்சரவை கருச்சிதைவு மசோதா (Termination of Pregnancy Bill) ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இச் சட்டத்தினுல் கருச்சிதைவு செய்து கொள்வது சட்ட வழியாகக் கொள்ளப்பட்டது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்கள் வீடுகளைச் சொந்த உபயோகத்திற்காக வாடகை செலுத்துவோரிடமிருந்து மீட்டுப் பெறவும், ஒழுங்காக வாடகைகளை வசூலிக்கவும், வாடகை செலுத்தாதவர்களை வெளியேற்றவும் வகை செய்யும் 'வாடகைச் சட்டம்' (Rent Act) ஒன்று 1965-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அதே சமயத்தில் வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்கள் விருப்பம்

போல் குடியிருப்போரை வெளியேற்றித் துன்புறுத்துவதைத் தடுக்கவும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

1967 - ஆம் ஆண்டில் மரண தண்டனை ஒழிப்புச் சட்டம் (Abolition of Death Penalty Act) ஒன்றை அரசாங்கம் கொண்டு வந்தது. அச் சட்டப்படி கொலைக் குற்றவாளிக்குக் கூட மரண தண்டனை விதிப்பது தடை செய்யப்பட்டது.

1968ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வில்ஸனின் அமைச்சரவை அவசர அவசரமாகப் பாராளுமன்றத்தில் காமன்வெல்த் மசோதாவை (The Commonwealth Immigration Bill) கொண்டு வந்தது. பிரிட்டிஷ் பயண இசைவுச் சீட்டைக் கொண்டுள்ள கென்யா ஆசிய நாட்டவர்கள் இங்கிலாந்திற்குள் அதிக அளவில் நுழையாவண்ணம் தடுப்பதற்காகவே இம் மசோதா கொண்டு வரப்பட்டது. இம்மசோதாவை எதிர்த்துப் பலர் வன்மையாகக் கண்டித்தனர். இது இன வேறுபாட்டைத் தூண்டும் மசோதா என்று காண்டர்பரி அதிமேற்றிராணியார் உள்படப் பலர் கூறினர். தொழிற்கட்சியைச் சார்ந்த 35 பொதுமக்கள் சபை உறுப்பினர்களும் இம் மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர். இருந்தபோதிலும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

அதே ஆண்டில் இன உறவுகள் மசோதாவும் (The Race Relations Bill) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இம் மசோதாவின் முக்கிய நோக்கம் வேலை வாய்ப்புகளிலும், உணவு விடுதிகளிலும், வீடுகள் ஒதுக்குவதிலும் இன வேறுபாடுகளை ஒழிப்பதேயாகும். இம் மசோதாவிற்கு கன்சர்வேடிவ் கட்சி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தபோதிலும், மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வில்ஸன் அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கை

1966ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரை வில்ஸன் அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கையில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. சூயஸ் கால்வாய்ப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதும், ஆங்கில வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதும், சீனாவின் ஆக்கிரமிப்புக்குத் தடை செய்வதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளைத் தன் வயப்படுத்துவதும் போன்ற கொள்கைகளில் பிரதமர் வில்ஸன் நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் கூடியச

சீக்கிரத்திலேயே அதில் மாறுதல் ஏற்பட்டது. ஏனெனில் ஐரோப்பாவிஞல்தான் இங்கிலாந்தின் நலன் மேம்படும் என்ற கருத்து அங்கு நிலவியதே அதற்குக் காரணமாகும். இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை ஐரோப்பாவின் பக்கம் திரும்பியதற்கு முக்கியமான காரணம் இங்கிலாந்தில் நிலவிய பொருளாதார நோக்கங்களேயாகும். எப்படியாவது ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தில் (European Economic Community) இங்கிலாந்தைச் சேர்த்து விடலாமென வில்ஸன் நினைத்தார். ஆனல் டிகால் இரண்டாவது முறையாகவும் முடியாதெனக் கூறிவிட்டார். அதனுல் இங்கிலாந்து ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தினின்றும் தனித்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது

ஆங்கிலோ - அமெரிக்கன் உறவுகள்

இக் காலத்தில்தான் இவ் விரண்டு நாடுகளின் உறவுகளில் மந்தம் ஏற்பட்டது. 1966 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் வில்ஸன் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். அமெரிக்க நாட்டுத் தலைவர் ஜான்சன் வில்ஸனைப் பற்றிப் புகழ்ந்தாரெனினும் பொதுவாக அங்கு அதிருப்தியே நிலவியது, ஏனெனில் அமெரிக்காவின் வியட்நாம் கொள்கையைப் பற்றிய இங்கிலாந்தின் கருத்து அமெரிக்கர்களுக்கு திருப்தி தரும் வகையில் அமையவில்லை. அத்துடன் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளைப் போல் இங்கிலாந்து அமெரிக்கர்களுக்கு வியட்நாம் போரில் படைகளை அனுப்பி உதவி செய்யவுமில்லை. அதற்கு இங்கிலாந்து கூறிய கூற்றை அமெரிக்கா ஏற்கவில்லை.

ஏடன், பர்சியவளைகுடா, தூரக்கிழக்குப் பகுதி போன்ற பிரதேசங்களிலிருந்து இங்கிலாந்து வெளியேற முடிவெடுத்ததற்கு அமெரிக்காவில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஏனெனில் அத்தகைய பகுதிகளில் இங்கிலாந்து தனது செல்வாக்கைத் தளர்த்தக்கூடாதென்று அமெரிக்கா 1962 ஆம் ஆண்டிலிருந்து கூறி வந்தது. இருந்தபோதிலும் இங்கிலாந்து அமெரிக்காவின் அத்தகைய எண்ணத்திற்கு ஆதரவு கொடுக்காததனுல் மனக் கசப்பு ஏற்பட்டது.

அத்துடன் வடவியட்நாமோடும், கியூபாவோடும் இங்கிலாந்து வர்த்தகத் தொடர்பை வைத்துக் கொண்டது அமெரிக்கர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே தான் அமெரிக்கத் தலைவர் ஜான்ஸன் தலைவர் கென்னடியைப்போல் இங்கிலாந்தை விரும்பவுமில்லை அத்துடன் நம்பவுமில்லை.

கம்யூனிச உலகம்

1966ஆம் ஆண்டில் பிரதமர் வில்ஸன் ரஷ்யாவுக்குப் போனார். 1967ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ரஷ்யாவின் பிரதமர் கோசிஜின் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். இருந்த போதிலும் ரஷ்யா வியட்நாம் கொள்கையில் மிகவும் பிடிவாதமாக இருந்தது. ஆனால் அதே சமயத்தில் 1968 ஆம் ஆண்டில் ரஷ்யா அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கையில் (Nuclear Non-Proliferation Treaty) கையொப்பமிட்டது ஒரு முன்னேற்ற மான ஏற்பாடாகும். இவ் வுடன்படிக்கையின் முக்கியமான சரத்துக் களாவன :—

1. இவ் வுடன்படிக்கையில் கையொப்பமிடும் சிறிய நாடு களை அமெரிக்க ஐக்கிய நாடுகளும், ரஷ்யாவும், இங்கிலாந்தும் பாதுகாக்கும்.

2. தற்பொழுது அணு ஆயுதங்களைக் கைவசம் பெற்றுள்ள நாடுகள் மற்ற நாடுகளுக்கு அணு ஆயுதங்களை விநியோகிக்கக் கூடாது. அல்லது அத்தகைய நாடு கள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்தால் அவை களுக்கு உதவவும் கூடாது.

3. அணு ஆயுதங்களில்லாத நாடுகள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லையென்றும், அல்லது அணு ஆயுதங்களை வாங்குவதில்லையென்றும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஃபிரான்சும், சீனாவும் இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட மறுத்துவிட்டன. ஜப்பானும் அதேபோல் உடன்படிக்கையில் கையொப்பமிடவில்லை. மேற்கு ஜெர்மனியும் மறுத்து விட்டது. இந்தியாவும் இவ் வுடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ் வுடன்படிக்கையை அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஏற்றுக் கொண்ட போதிலும் உலகின் பல நாடுகளில் அணுசக்தி பரிசோதனைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. 1968ஆம் ஆண்டில் ரஷ்யா செக்கோஸ்லோவேகியாவில் நுழைந்ததால் இவ் வுடன்படிக்கையில் கையொப்பமிட்ட நாடே உடன்படிக்கையை மதிக்கவில்லை என்பது தெரிகின்றது.

ஐரோப்பா

வில்ஸனின் வெளி நாட்டுக்கொள்கை ஐரோப்பாவைப் பொறுத்த வரையிலும்கூட திருப்திகரமாக இல்லை. ஐரோப்பிய

பொதுச்சந்தையில் இங்கிலாந்தை உறுப்பு நாடாக்க வில்ஸன் எவ்வளவோ முயன்றும் முடியாமற் போய்விட்டது.

NATO (North Atlantic Treaty Organization) நாடுகளைப் பொறுத்த வரையிலும்கூட சுமுகமான உறவுகள் ஏற்படவில்லை. 1966ஆம் ஆண்டில் NATO - விலிருந்து தமது படைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக பிரான்சு அறிவித்தது. ஐரோப் பாவில் நிலவிய மாறுபட்ட சூழ்நிலைக்கேற்ப NATO - படைகளைக் குறைப்பதற்காகக்கூட பேச்சுகள் அடிபட்டன. 1967ஆம் ஆண்டில் ஜெர்மனி தனது அந்நியச் செலாவணியை ஏற்காவிடில் அங்கிருந்து தனது படைகள் முழுவதையும் திரும்ப அழைத்துக் கொள்வதாக இங்கிலாந்தும் பயமுறுத்தியது. இருந்த போதிலும் 1968ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தனது நிதிநிலை அறிக் கையில் NATO படைகளுக்கென்று இங்கிலாந்து பணம் ஒதுக் கியது. 1968ஆம் ஆண்டில் ரஷ்யா செக்கோஸ்லோவேகி யாவின்மீது படை யெடுத்ததால் இங்கிலாந்து தனது அத்தகைய எண்ணத்தை மாற்றிக் கொண்டது.

காமன்வெல்த்

1966ஆம்ஆண்டில் போட்ஸ்வான (Botswana), லிசோதோ (Lesotho), கயாை (Guyana), பார்பதாஸ் (Barbados), போன்ற நான்கு புது நாடுகள் காமன்வெல்த்தின் உறுப்பு நாடுகளாயின. 1968ஆம் ஆண்டில் மொரிஷியஸ் (Mauritius) காமன்வெல்த்தில் ஒரு சுதந்திர நாடாக இடம் பெற்றது. இக் காலத்தில் காமன்வெல்த் நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வதா? வேண்டாமா? என்ற பிரச்சினை இங்கிலாந்தில் ஏற்பட்டது. அதே சமயத்தில் இங்கிலாந்துக்கும் சில காமன்வெல்த் நாடுகளுக்குமிடையே உறவுநிலை நல்ல நிலையில் இல்லாமல் இருந்தது. இங்கிலாந்தின் காமன்வெல்த் கொள்கையை பல காமன்வெல்த் நாடுகள் குறை கூறிவந்தன. ஏனெனில் இங்கிலாந்து காமன்வெல்த் நாடு களுக்குச் செய்வதாக ஏற்றுக்கொண்ட ஒருசில கடமைகளைச் செய்யாமல் தவறியது.

இங்கிலாந்தின் காமன்வெல்த் பிரச்சினைகளில் ரொடீஷியா (Rhodesia) பிரச்சினை வில்ஸன் அமைச்சரவைக்குத் தலைவலியைக் கொடுத்தது. கறுப்பர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டி ருக்கும் ரொடீஷியாவில் ஐயன்ஸ்மித் (Ian Smith) என்பவரின் தலைமையில் வெள்ளைக்காரச் சிறுபான்மையினர் நடத்தி வரும் நிறவெறி அரசாங்கத்தை வில்ஸன் அரசாங்கம் பலமாகக்

கண்டிக்க முன்வராததால் பல காமன்வெல்த் நாடுகள் இங்கிலாந்தைக் கண்டித்தன.

இங்ஙனம் வில்ஸனின் அரசாங்கம் பின்பற்றி வந்த வெளிநாட்டுக் கொள்கையை இங்கிலாந்தில் பலரும் குறைகூறி வந்தனர்.

பொதுத் தேர்தல் 1970

பொருளாதாரத் துறையில் மந்தநிலை ஏற்பட்டதாலும், தனது வெளிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவு குறைந்ததாலும் வில்ஸன் பொதுத்தேர்தலை நடத்த எண்ணினர். அதனல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1970ஆம் ஆண்டு ஜுன் மாதம் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலின் முடிவுகள் எதிர்பாராத வகையில் அமைந்திருந்தன. 630 தொகுதிகளின் முடிவுகள் பின் வருமாறு :

கட்சி	இடங்கள்	வாக்குகளின் சதவிகிதம்
கன்சர்வேடிவ் கட்சி	330	46.4
தொழிற் கட்சி	287	43.0
லிபரல் கட்சி	6	7.5
மற்றவர்கள்	7	3.1

1966ஆம் ஆண்டில் 253 இடங்களைப் பெற்றிருந்த கன்சர்வேடிவ் கட்சி இத் தேர்தலில் 330 இடங்களைக் கைப்பற்றியது. 363 இடங்களை 1966ஆம் ஆண்டுத் தேர்தலில் பெற்றிருந்த தொழிற்கட்சி இத் தேர்தலில் 287 இடங்களைத் தான் பெற்றது. 12 இடங்களைப் பெற்றிருந்த லிபரல் கட்சி இத் தேர்தலில் 7 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. ஆகவே தொழிற் கட்சி இத் தேர்தலில் படுதோல்வியடைந்தது.

வெற்றி பெற்ற கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் எட்வர்டு ஹீத் (Edward Heath) இங்கிலாந்தில் தமது புது அமைச்சரவையை அமைத்தார். அவர் 1970ஆம் ஆண்டிலிருந்து 1975ஆம் ஆண்டு வரை பிரதமராக ஆட்சி செய்தார். அவருடைய காலத்தில்தான் இங்கிலாந்து ஐரோப்பியப் பொதுச் சந்தையில் உறுப்பு நாடாகச் சேர்ந்தது. இங்கிலாந்து ஐரோப்பியப் பொதுச் சந்தையில் சேர்ந்ததால் பல காமன்வெல்த் நாடுகளிடையே அதிருப்தி நிலவியது. 1975ஆம் ஆண்டில் நடை

பெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அத்தேர்தலில் பெரிய வெற்றியைக் கண்ட தொழிற்கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றியது. தொழிற்கட்சியின் தலைவர் வில்ஸன் ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் பிரதமர் பதவியை ஏற்றார். ஆனால் அவர் 1976ஆம் ஆண்டில் தம் சொந்த காரணங்களுக்காக பிரதமர் பதவியை ராஜிநாமா செய்தார். அவருக்குப்பின் தொழிற் கட்சியைச் சார்ந்த ஜேம்ஸ் கால்லஹென் (James Callaghan) இங்கிலாந்தின் பிரதமரானார்.

26. ஆங்கிலப் பேரரசின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

குடியேற்ற நாடுகளின் பெருக்கத்தால்தான் ஆங்கில நாடு ஒரு ஆங்கிலப் பேரரசாக உருவெடுத்தது. டியூடர்களின் காலத்திலேயே குடியேற்ற நாடுகளையமைக்கப் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1583ஆம் ஆண்டில் சர் ஹம்பரி கில்பர்ட் (Sir Humphrey Gilbert) என்பவர் நியூபவுண்ட்லாண்டில் (New-foundland) ஒரு புது குடியேற்ற நாட்டையமைக்க ஐந்து கப்பல்களுடன் சென்றார். ஆனால், அங்கு வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்ததால், சில வாரங்களிலேயே தம் துணைவர்களுடன் அங்கிருந்து புறப்பட்டார். இங்கிலாந்துக்குத் திரும்பி வரும் வழியிலேயே அவர் பரிதாபமாக இறந்தார். அதன் பிறகு இராணி எலிஸபெத்தின் காலத்தில், வாணிபத்தைப் பெருக்கவும், குடியேற்ற நாடுகளை நிறுவவும் சில முயற்சிகள் நடைபெற்றன. அம் முயற்சிகளால் நிலையான பயன் ஒன்றும் ஏற்படவில்லை. இராணி எலிஸபெத் இறக்கும்போது இங்கிலாந்துக்கு வெளி நாடுகளில் ஒரு குடியேற்ற நாடேனும் இல்லை.

ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் தான் இங்கிலாந்து வாணிப வளர்ச்சியிலும், குடியேற்ற நாடுகள் பெருக்கத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையடைந்தது. ஸ்டுவர்ட்டு அரசர் முதலாம் ஜேம்ஸ் காலத்தில்தான் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதற்குரிய அடித்தளம் போடப்பட்டது.

குடியேற்ற நாடுகளின் வளர்ச்சிக்குக் காரணங்கள்

ஸ்டுவர்ட்டுகள் காலத்தில் ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் டியூடர்கள் அதற்காகச் செய்துவைத்துச் சென்ற முயற்சியும் ஒன்றாகும். அதனால் தான் ஸ்டுவர்ட்டுகள் அரியணை ஏறியவுடனே குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய சூழ்நிலைச் செயல்களை

விரைந்து செய்தனர். டியூடர்களின் இறுதிக் காலத்தில் மக்களும், அரசாங்கத்தினரும் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த விரும்பினர். அதற்காகத் திட்டங்களும் தீட்டப்பட்டன. எனவே, வெளி நாடுகளில் குடியேறும் இயக்கம் டியூடர்கள் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இங்ஙனம் டியூடர்கள் ஏற்படுத்திவிட்டுச் சென்ற திட்டம் ஸ்டூவர்ட்டுகளின் காலத்தில் நிறைவேற ஆரம்பித்தது. அத்துடன் ஹாக்லுட் (Hakluyt) பேகன் (Bacon) போன்றவர்களின் எழுத்துக்கள் குடியேற்ற நாடுகளினால் ஏற்படப் போகும் நன்மைகளைப்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்ததனால், மக்களிடையே அத்தகைய நாடுகளை அமைக்கும் எழுச்சி ஏற்பட்டது.

ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, ஃபிரான்சு போன்ற நாடுகள் செல்வத்தையும், வலிமையையும் பெற்றதற்குக் காரணம் அவைகள் குடியேற்ற நாடுகளை அமைத்து வாணிபத்தைப் பெருக்கியது தான் என்று ஆங்கிலேயரும் எண்ணினர். ஆகவே, இங்கிலாந்தும் குடியேற்ற நாடுகளை அமைக்க வேண்டுமென்று மக்களும் அரசாங்கத்தாரும் நினைத்தனர். அத்துடன் ஸ்பெயினோடு இங்கிலாந்து போரிட்டதால், அந் நாட்டின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் ஒழிக்க விரும்பி, இங்கிலாந்தும் அதற்கேற்பத் தன் குடியேற்ற நாடுகளைப் பெருக்கிக் கொள்ள முயன்றது.

ஸ்டூவர்ட்டுகள் பின்பற்றிய மதக் கொள்கையும் குடியேற்ற நாடுகளின் பெருக்கத்திற்கு உதவின. ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் குறிப்பாக முதலாம் ஜேம்ஸ் காலத்தில் கத்தோலிக்கர்களுக்கும், பியூரிட்டன்களுக்கும் அங்கு மதச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை. அதனால் வெறுப்புற்ற பல கத்தோலிக்கர்களும், பியூரிட்டன்களும் அந் நாட்டைவிட்டு வெளியே சென்று அமெரிக்காவில் குடியேற்ற நாடுகளை அமைத்தனர். அங்கு அவர்கள் சுதந்திரமாகத் தெய்வ வழிபாடுகளைச் செய்தனர்.

இங்கிலாந்திலிருந்த வாணிபர்கள் குடியேற்ற நாடுகள் இயக்கத்திற்குத் தங்களது முழு ஆதரவையளித்தனர். நாடு செல்வத்திலும் பொருளாதாரத் துறையிலும் முன்னேற வேண்டுமானால் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தி அங்கு வாணிபத்தைப் பெருக்குவதே சிறப்பாகும் என அவர்கள் கூறினர். அதற்காக வாணிபர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டனர்.

அத்துடன் ஆங்கிலேயர் பலர் ஏதாவதொரு வீரச்செயலைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டிருந்தனர். மதக் கொள்கையால் பலர் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்காவில் குடி

யேறினர் என்ருலும் பலர் வீரச்செயல் என்று நினைத்து இங்கி லாந்தைவிட்டு வெளியேறிக் குடியேற்ற நாடுகளையும் அமைத்தனர். அவ்வாறு அமைத்ததை அவர்கள் வீர விளையாட்டாகவே நினைத்தனர்,

குடியேற்ற நாடுகள் வளர்ந்ததற்கு மற்ருெரு காரணமும் உண்டு. ஆங்கில மக்கள் பலர் தங்கள் வாழ்க்கையை மேன்மைப் படுத்திக் கொள்ளவும், ஓர் உயர் வாழ்க்கைத் தரத்தைப் பெற்று வாழ வேண்டுமென்றும் நினைத்தனர். அங்ஙனம் செல்வந்தர்களா வதற்கு வெளிநாடுகளில் குடியேற்ற நாடுகளை அமைப்பது ஒரு வழியாகுமென நினைத்தனர். அந் நினைவின் காரணமாகப் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேற்ற நாடுகளை அமைத்தனர்.

விர்ஜினியா

இங்கிலாந்தின் முதல் குடியேற்ற நாடு வட அமெரிக்காவில் அமைக்கப்பட்டது. அந் நாட்டிற்குக் கன்னி எலிஸபெத் இராணி யாரின் (Virgin Elizabeth) பெயர் சூட்டப்பட்டு விர்ஜினியாவென அழைக்கப்பட்டது. ஆனுல் சில வாரங்களிலேயே அங்குக் குடி யேறியவர்கள் திரும்பிவிட்டனர். ஆனுல், முதலாம் ஜேம்ஸ் அரசர் காலத்தில் மீண்டும் அம் முயற்சி தொடங்கப்பட்டது. 1606ஆம் ஆண்டில் 'லண்டன் கம்பெனி' என்னும் குடியேற்றக் கம்பெனி 143 குடியேறிகளை நியூபோர்ட் (Newport) எனும் கப்பற்படைத் தளபதியின் தலைமையில் விர்ஜினியாவுக்கு அனுப் பியது. பல இன்னல்களுக்குப் பின்னர் அக் குடியேறிகள் அங்குத் தங்கலாயினர். அவர்களின் தலைவரான ஜான் ஸ்மித் (John Smith) என்பவர் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வந்தார். ஸ்மித் பின்பு விர்ஜினியாவின் ஆளுநராக (Governor) நியமிக்கப்பட்டார். குடியேறிகள் விர்ஜினியாவில் விவசாயம் செய்ய முற்பட்டனர். 1616ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல நீக்ரோ அடிமைகளைக் கொண்டுவந்து அங்குப் புகையிலை சாகுபடி செய்த பின்புதான் விர்ஜினியா ஓர் வளமிக்க நாடாக மாறியது. ஆகவே. 1621ஆம் ஆண்டில் முதலாம் ஜேம்ஸ் விர்ஜினியாவைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்.

நியூ இங்கிலாந்து

பதினேழாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஏராளமான பியூரிட்டன்கள் மதக் கொடுமையால் இங்கிலாந்திலிருந்து ஹாலந்துக்குச் சென்றனர். அவர்களில் 102 பேர் யாத்திரிகத் தந்தையர் (Pilgrims Fathers) எனப் பெற்றவர்கள் மே ஃப்ளவர் (May Flower) என்னும் கப்பலில் 1620ஆம் ஆண்டு பிளிமவுத்

(Plymouth) துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்று அமெரிக்கக் கடற்கரையையடைந்தனர். அங்கு அவர்கள் ஒரு குடியிருப்பை ஏற்படுத்தினர். அதற்கு நியூ இங்கிலாந்து என்று பெயரிட்டனர். அங்கு அவர்கள் ஒரு புதிய நகரத்தையும் உருவாக்கினார்கள். அதை அவர்கள் நியூ பிளிமவுத் (New Plymouth) என அழைத்தனர். நியூ பிளிமவுத் நியூ இங்கிலாந்து குடியேற்ற நாட்டின் மையமாகத் திகழ்ந்தது. விர்ஜினியாவில் குடியேறியவர்கள் செல்வம் படைத்தவர்கள். ஆனால், நியூ இங்கிலாந்தில் குடியேறியவர்கள் ஏழைகள். ஆனால், அதே சமயத்தில் நல்ல கடுமையான உழைப்பாளிகள். அவர்களாகவே அங்கு நிலத்தைப் பண்படுத்திப் பண்ணைகளை உண்டாக்கி அவைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். பண்ணைகளில் வீடுகளையமைத்து அங்குக் குடியிருந்தனர். அங்கு விவசாயத்தோடு மரத் தொழிலும் செய்யப்பட்டது. மூங்கில் அங்கு ஏராளமாகக் கிடைத்ததால் கப்பல் கட்டும் தொழிலும் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

மசாச்சுசெட்ஸ்

1629ஆம் ஆண்டில் ஏராளமான பியூரிட்டன்கள் சேர்ந்து வாணிபத்துக்காக மாசாச்சுசெட்ஸ் (Massachusatts) கம்பெனி ஒன்றை ஆரம்பித்தனர். அக் கம்பெனி வாணிபத்தைவிட மசாச்சுசெட்ஸ் குடியேற்ற நாட்டை அமைக்கவே பெரிதும் விரும்பியது. அதுபோலவே மசாச்சுசெட்ஸ் குடியேற்ற நாடும் ஏற்படுத்தப்பட்டது. பத்து ஆண்டுகளில் கனெக்டிகட் (Connecticut), நியூஹெவென் (New Heven), ரோட் தீவு (Rhode Island), நியூ ஹாம்ப்ஷயர் (New Hampshire) என்ற குடியேற்ற நாடுகள் மசாச்சு செட்ஸ் குடியேற்ற நாட்டைச் சுற்றிலும் ஏற்பட்டன. 1642ஆம் ஆண்டில் பியூரிட்டன் குடியேற்ற நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தின. அதுவே நியூ இங்கிலாந்து ஐக்கியக் குடியேற்ற நாடுகள் (United Colonies of New England) எனப் பெயர் பெற்றது.

மேரிலாண்டு

பால்டிமோர் (Baltimore) என்னும் ரோமன் கத்தோலிக்க பிரபு மேரிலாண்டு (Maryland) என்னும் கத்தோலிக்க குடியேற்ற நாட்டை 1633—34இல் அமைத்தார். இக் குடியேற்ற நாட்டில் உண்மையான மதச் சுதந்திரம் இருந்தது. அங்கு கத்தோலிக்கர்களுக்கும், பிராட்டஸ்டெண்டுகளுக்கும் வேறுபாடின்றி மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆனால் நியூ இங்கிலாந்து குடியேற்ற நாடுகளில் வேறு மதத்தினர் துன்புறுத்தப்பட்டனர்.

பெர்முதாத் தீவுகள்

1609ஆம் ஆண்டில் சர் ஜார்ஜ் சோமர்ஸ் (Sir George Somers) என்பவர் புயலால் பெர்முதாத் தீவுகள் (Bermuda Islands) என்னும் வெப்ப மண்டலப் பிரதேசத்திற்கு அடித்துச் செல்லப் பட்டார். அங்கு அவர் முதன் முதலில் ஒரு ஆங்கிலக் குடியேற்ற நாட்டை அமைத்தார். பதினேழாம் நூற்றாண்டில் மெக்ஸிகன் வளை குடா (Mexican Gulf) பகுதியில் மேலும் சில குடியேற்ற நாடுகள் ஏற்படுத்தப்பட்டன. 1623ஆம் ஆண்டில் செயின்ட் கிட்ஸ் (St. Kitts) தீவும் 1624ஆம் ஆண்டில் பார்படாஸ் (Barbados) தீவும், 1633ஆம் ஆண்டில் ஆன்டிகுவாவும், (Antigua) 1655ஆம் ஆண்டில் ஜமாய்க்காவும் (Jamaica) குடியேற்ற நாடுகளாயின. இந் நாடுகளில் ஆரம்பத்தில் புகையிலை சாகுபடி செய்யப்பட்டது. நீக்ரோ அடிமைகளும், இங்கிலாந்திலிருந்து குற்றங்களுக்காக நாடு கடத்தப்பட்டவர்களும் விவசாயம் செய்யப் பயன்படுத்தப்பட்டார்கள். அதன் பிறகு இந் நாடுகளில் கரும்பு சாகுபடி செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

கரோலினஸ்

முன்னிலை மீட்சிக்குப் பின் குடியேற்ற நாட்டு வளர்ச்சியில் மீண்டும் ஒரு வேகம் தென்படுகிறது. விர்ஜினியாவுக்குத் தெற்கே கரோலினஸ் (Carolinas) என்ற பகுதியில் ஆங்கிலேயர் பலர் குடியேறினர். இக் குடியேற்ற நாட்டை நிறுவும் பணி கிளாரண்டன், ஆஷ்லி பிரபு போன்றவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர்கள் வட கரோலினு, தென் கரோலினு என்ற இரண்டு குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தினர். தென் கரோலினு வின் தலைநகர் அரசரின் நினைவாக சார்லஸ் டவுன் என அழைக கப்பட்டது. இக் குடியேற்ற நாடுகளில் புகையிலை பெரிதும் பயிரிடப்பட்டது. அதன்மூலம் பெருஞ்செல்வமும் திரட்டப் பட்டது.

நியூநெதர்லாண்ட்ஸ்

முன்னிலை மீட்சிக்குப் பின் நடந்த முதலாவது டச்சுப் போரினுல் இங்கிலாந்துக்கு நியூ நெதர்லாண்ட்ஸ் (New Netherlands) கிடைத்தது. அத்துடன் நியூ ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) என்ற துறைமுகமும் கிடைத்தது. இக் குடியேற்ற நாட்டை டச்சுப் போரில் யார்க் கோமகன் கைப்பற்றி இங்கிலாந் துக்குக் கொடுத்ததால் அதன் பெயர் நியூயார்க் (New York) என மாற்றப்பட்டது. நியூ ஜெர்ஸியும் ஆங்கிலேயருக்கு டச்சுப் போரினுல் கிடைத்ததேயாகும்.

பென்ஸில்வேனியா

1681ஆம் ஆண்டில் வில்லியம் பென் (William Penn) என்பவரால் பென்ஸில்வேனியா (Pennsylvania) என்ற குடியேற்ற நாடு அமைக்கப்பட்டது. இதில் குடியேறிய பெரும்பான்மையோர் இங்கிலாந்தில் தண்டிக்கப்பட்ட "நண்பர்கள் கழகம்" (Friends Society) என்னும் சங்கத்தின் உறுப்பினர்களாவார்கள். இங்குக் குடிப் பழக்கத்தையும், சூதாட்டத்தையும் தடுக்க வேண்டிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. எல்லா மதத்தவர்களுக்கும் சமயப் பொறை வழங்கப்பட்டது. பிலடல்ஃபியா (Philadelphia) என்னும் நகரம் இக் குடியேற்ற நாட்டின் தலைநகரமாக்கப்பட்டது. இதுவே இரண்டாம் சார்லஸ் காலத்தில் நிறுவப்பட்ட கடைசி குடியேற்ற நாடாகும்.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி

1600ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியன்று ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியானது (English East India Company) எலிஸபெத் இராணியிடமிருந்து தனது முதல் உரிமைச் சாசனத்தை (Charter) பெற்றது. இக் கம்பெனியானது பதினேழாம் நூற்றாண்டில் பல முக்கிய வியாபாரத் தலங்களை இந்தியாவின் கடலோரங்களில் அமைத்தது. 1612ஆம் ஆண்டில் சூரத்திலும் (Surat), 1639ஆம் ஆண்டில் சென்னையிலும் (Madras), 1668ஆம் ஆண்டில் பம்பாயிலும் (Bombay), 1696ஆம் ஆண்டில் வில்லியம் கோட்டையிலும் (William Fort) தனது வியாபாரக் கிடங்குகளை இக் கம்பெனி அமைத்தது. இவைகளின் மூலமாகத்தான் ஆங்கிலப் பேரரசு பின்னர் இந்தியாவெங்கும் பரவியது. இக் கம்பெனி தென்கிழக்கு ஆசியாவிலும் தன் வியாபாரத் தொடர்பை வைத்துக் கொள்ள விரும்பியது. அங்கு 1602ஆம் ஆண்டிலேயே டச்சு கிழக்கு இந்தியா கம்பெனி நிறுவப்பட்டிருந்தது. அக் கம்பெனியின் பலத்த எதிர்ப்பு அங்கு ஏற்படவே ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவிலேயே தன் வியாபாரத்தை பலப்படுத்த முயற்சிகளை எடுத்துக் கொண்டது.

இக் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டின் சேவைக்கே முதலில் பயன்படுத்தப்பட்டன. அங்கிருந்து மூலப் பொருள்களைக் கொண்டு வந்து செய்பொருளாக்கி, இங்கிலாந்து அவைகளை மீண்டும் குடியேற்ற நாடுகளிடையேயும் மற்றும் பல நாடுகளிலும் விற்று வந்தது. பொதுநல அரசு இங்கிலாந்தில் ஏற்பட்டபொழுது 1651ஆம் ஆண்டில் நாவாய்ச் சட்டம் (Navigation Act) ஒன்று

இயற்றப்பட்டது. குடியேற்ற நாடுகள் தங்கள் பொருள்களை டச்சுக் கப்பல்களில் ஏற்றுமதி செய்ய இச் சட்டத்தால் தடுக்கப் பட்டன. 1661ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நாவாய்ச் சட்டப்படி குடியேற்ற நாடுகள் புகையிலை, சர்க்கரை, பருத்தி போன்ற முக்கிய பொருள்களை இங்கிலாந்துக்கு மட்டுமே அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் காரணமாகக் குடியேற்ற நாடுகள் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட வியாபாரம் தடை செய்யப்பட்டது. அதனால் குடியேற்ற நாடுகள் வாணிபத் தில் மிகவும் நஷ்டமடைந்தன. அதைச் சரி செய்ய எல்லாப் புகையிலையையும் சர்க்கரையையும் இறக்குமதி செய்துகொள்ள இங்கிலாந்து முன்வந்தது. இங்கிலாந்து தமது வாணிபத்தில் தலையிடுவதைக் குடியேற்ற நாடுகள் விரும்பவில்லை. ஆரம்பத்தில் நாவாய்ச் சட்டங்கள் கடுமையாகச் செயல்படுத்தப் படாததினால் குடியேற்ற நாடுகள் பொருள்களை இங்கிலாந்துக்கு அனுப்பாமல் வெளிநாடுகளுக்குக் கடத்திச் சென்று வந்தன. ஆனால் நாவாய்ச் சட்டங்களைக் கடுமையாகச் செயல்படுத்த இங்கிலாந்து முன் வந்ததால் குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டை எதிர்க்க ஆரம்பித்தன. அவ் வெதிர்ப்பினால்தான் கடைசியில் இங்கி லாந்து குடியேற்ற நாடுகளின்மீதிருந்த தன் ஆதிக்கத்தை இழந்தது.

ஒவ்வொருடி குயேற்ற நாட்டுக்கும் ஓர் ஆளுநரை (Governor) நியமித்து அவர்மூலம் இங்கிலாந்தானது பல குடியேற்ற நாடுகளை ஆண்டது. ஒரு சில குடியேற்ற நாடுகள் தாங்களே தங்கள் ஆளுநர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. அமைச்சர்களுக்குப் பதிலாக ஆளுநர்களுக்கு ஆலோசனை கூற அங்கங்கு கவுன்ஸில் கள் ஏற்படுத்தப்பட்டன. இக் கவுன்ஸிலின் உறுப்பினர்கள் ஆங்கில அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டனர். சில கவுன்ஸில் களின் உறுப்பினர்களை அக் குடியேற்ற நாடுகளே நியமித்துக் கொண்டன. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும், குடியேறி களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும் இருந்தது. ஆரம் பத்தில் இச் சட்ட மன்றங்கள் ஆளுநர்களுக்கும் கவுன்ஸில்களுக்கும் கட்டுப்பட்டிருந்தன. ஆனால், நாளடைவில் அவைகள் ஆளுநர் களைக் கட்டுப்படுத்த ஆரம்பித்தன. ஆளுநர்கள் அவைகளின் விருப்பப்படி நடக்க மறுத்தபோது, அவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதை நிறுத்திக் கொள்வதின் மூலம் அச் சபைகள் தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டன. பதினேழாம் நூற்றாண்டில் எங்ஙனம் பொதுமக்கள் சபை ஆங்கில அரசாங்கத்தின்மீது தன் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோ அங்ஙனமே குடியேற்ற நாடு களின் சட்டமன்றங்களும் தங்களின் அரசாங்கங்களின்மீது கட்டுப்

பாட்டைச் செலுத்தின. ஆகவே குடியேற்ற நாடுகளிலுள்ள சட்ட மன்றங்கள் அந் நாடுகளை உண்மையிலேயே ஆட்சி செய்யும் அதிகாரங்களைப் பெற்றன.

யுட்ரெக்ட் சமாதான உடன்படிக்கையால் கிடைத்த நாடுகள்

இங்கிலாந்தை ஆன் அரசியார் (Queen Anne) ஆண்டபோது ஸ்பானிய வாரிசு உரிமைப்போர் மிகவும் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. இரு தரப்பினரிடையேயும் போர் செய்யும் ஆர்வம் குறைந்து கொண்டே வந்தது. அமைதியை நிலைநாட்டவும் பகைமையைத் தீர்த்துக் கொள்ளவும் இங்கிலாந்தும் ஃபிரான்சும் நினைத்தன. அதன்படி இங்கிலாந்து ஃபிரான்சோடு இரகசியப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியது. அதன் பலனாக யுட்ரெக்ட் சமாதானமானது (Treaty of Utrecht) 1713ஆம் ஆண்டில் இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்டது. அந்தச் சமாதான உடன் படிக்கையின்படி இங்கிலாந்துக்கு ஐரோப்பாவில் ஜிப்ரால்டர் (Gibraltar), மினார்க்கா (Minorca) என்ற இரு இடங்கள் கிடைத்தன. வட அமெரிக்காவில் அகாடியா (Acadia) என்ற பகுதியும் இங்கிலாந்துக்குக் கிடைத்தது.

பாரிஸ் உடன்படிக்கையால் கிடைத்த நாடுகள்

ஐரோப்பிய சக்தி சமநிலையைக் (Balance of Power) காப் பாற்றவும், ஆங்கில-ஃபிரெஞ்சு குடியேற்ற நாட்டுப் போட்டியில் யார் வெற்றி பெறுவதென்பதைத் தீர்மானிக்கவுமே ஏழாண்டுப் போர் (Seven-years War) ஏற்பட்டதென்று கூறலாம். முக்கியமாக இந்தியாவிலும், அமெரிக்காவிலும் இரு நாடுகளுக்கிடையே போட்டி வளர்ந்தது. இந்தியாவில் டியூப்ளே சுதேச அரசர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார், ஃபிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் ஹைதாராபாத்திலும், கர்நாடகத்திலும் மாறு பட்ட கட்சியினரை ஆதரித்து அதன் விளைவாகப் போரிட்டு வந்தனர். வட அமெரிக்காவில் ஃபிரெஞ்சுக்காரர்கள் கோட்டை களைக் கட்ட ஆரம்பித்தனர். ஆகவே, ஆங்கிலேயர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களோடு போரிட வாய்க்கும் நேரத்தை எதிர் பார்த்திருந்தனர். ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டுப் போர் அவர்களுக்கு அத் தருணத்தை நல்கியது. இப் போரினால் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்குப் பல வெற்றிகள் கிடைத்தன. இந்தியாவிலும் ஆங்கிலேயருக்கே வெற்றி கிட்டியது. கிளைவ் என்னும் ஆங்கிலத் தளபதி 1759ஆம் ஆண்டில் பிளாசிச் சண்டையில் சிராஜ் உத்தௌலாவைத் தோற்கடித்தார். ஸர் அயர் கூட் எனும் ஆங்கிலக் கப்பல்படைத் தளபதி ஃபிரெஞ்சுக்

காரர்களை வந்தவாசி என்னுமிடத்தில் 1760ஆம் ஆண்டில் தோற்கடித்தார். ஆகவே, வங்காளத்திலும், கர்நாடகத்திலும் ஆங்கில ஆட்சி நிலை பெற்றது.

இந் நிலையில் ஃபிரான்சும், ஸ்பெயினும் போரில் சலிப்புற்றன. ஆகவே, அந் நாடுகள் இங்கிலாந்தோடு 1763ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அவ் வுடன்படிக்கையின்படி இங்கிலாந்துக்கு செனிகல் (Senegal) மினார்க்கா (Minorca). ப்ரெட்டன் முனைத் தீவு (Cape Breton Island). பிளாரிடா (Florida). கனடா (Canada), மற்றும் நான்கு மேற்கிந்தியத் தீவுகளும் கிடைத்தன.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரம்

இங்கிலாந்து அரசாங்கம் இயற்றிய நாவாய்ச் சட்டங்களால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் வாணிபம் தடைப்பட்டது. அதனால் அந் நாடுகள் பெரும் நஷ்டமடைந்தன. இங்கிலாந்து அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அக் குடியேற்ற நாடுகளை ஆட்சி செய்யும் ஆளுநர்கள் அம் மக்களைப் பெரிதும் துன்புறுத்தினர். அவர்களின் மீது பல வரிகள் சுமத்தப்பட்டன. அவர்களில் பலர் சிறையிலடைக்கப்பட்டார்கள். அக் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டால் பெரிதும் சுரண்டப்பட்டன. அத்துடன் அக் குடியேற்ற நாடுகளில் குடியேறியவர்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கர்களும், பியூரிட்டன்களுமேயாவார்கள். அவர்களுக்குத் தாய் நாட்டின் மீது பற்று கிடையாது. குடியேற்ற நாடுகளின் மக்கள் சுதந்திரத்திலும், சமத்துவத்திலும், சமயப்பொறையிலும் நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே, இத்தகைய காரணங்களினால் அந் நாடுகளின் மக்கள் இங்கிலாந்தின் ஆதிக்கத்தை விரும்பவில்லை. சுயமாகவும், சுதந்திரமாகவும் வாழ அவர்கள் விரும்பினார்கள். அதற்காகவே அவர்கள் அமெரிக்க சுதந்திரப் போரைத் துவக்கினார்கள். சுதந்திர வெறி பிடித்த அவர்களை இங்கிலாந்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சுதந்திரத்தை விரும்பிய அவர்களுக்கு ஃபிரான்சும், ஸ்பெயினும் உதவி செய்தன. ஆகவே, அமெரிக்கர்கள் இங்கிலாந்தை எதிர்த்து உற்சாகத்துடனும், உறுதியுடனும், விடாமுயற்சியுடனும், சுதந்திர வேட்கையுடனும், ஒருமை உணர்ச்சியுடனும் போரிட்டனர். அவர்களது உறுதியும், சுதந்திர வேட்கையும் வீண் போகவில்லை. 1783ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெர்சேல்ஸ் உடன்படிக்கையால் (Treaty of Versailles) அமெரிக்க சுதந்திரப் போர் நிறுத்தப்பட்டுப் பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரம் ஒப்புக் கொள்ளப் பட்டது. இவ் வுடன்படிக்கையால் மினார்க்காவும் (Minorca),

ப்ளோரிடாவும் (Florida) ஸ்பெயினுக்குக் கொடுக்கப்பட்டன. செயின்ட்லூசியா (St.Lucia), டெபோகோ (Tabago). செனிகல் (Senegal) ஆகியவைகளை ஃபிரான்சு பெற்றது. கனடா (Canada), நோவாஸ்காடியா (Novascotia), நியூ பவுண்ட்லாண்ட் (New-foundland) ஆகிய நாடுகளை மட்டும் இங்கிலாந்து தன்னிடமே வைத்துக் கொண்டது.

பதின்மூன்று அமெரிக்க குடியேற்ற நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்ட பிறகு அவைகள் தமக்கு ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்த விரும்பின. 1787ஆம் ஆண்டில் அந் நாடுகளின் பிரதிநிதிகள் பிலடல்பியா நகரில் கூடினர். அமெரிக்க அரசாங்க முறையை எங்ஙனம் திருத்தியமைப்பது என்று விவாதித்தனர். விவாதத்திற்குப்பின் அமெரிக்காவில் பதின்மூன்று நாடுகளும் சேர்ந்து ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துவதென்ற முடிவை எடுத்தனர்.

வியன்னு ஏற்பாட்டால் கிடைத்த நாடுகள்

மூன்ரும் ஜார்ஜ் அரசர் காலத்தில் இங்கிலாந்துக்கு சோதனைக்கு மேல் சோதனை ஏற்பட்டது. முதலில் அமெரிக்க சுதந்திரப் போரால் இங்கிலாந்து தனது குடியேற்ற நாடுகளை இழந்தது. அதனுல் நாட்டின் செல்வநிலை நலிந்ததோடு அதன் புகழுக்கும் ஓரளவு இழுக்கு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து இங்கிலாந்து ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர் எனும் புயலில் சிக்கித் தடுமாறியது. ஆமியாஸ் சமாதானத்தால் அது ஓய்ந்ததுபோல் காணப்பட்டது. ஆனுல், கூடிய விரைவிலேயே இங்கிலாந்து நெட்போலியப் போர்கள் என்னும் சூருவளியில் சிக்கிக் கொண்டது. நெட்போலியன் ஐரோப்பாவில் தனித்தலைமை பெற வேண்டுமென்று கருதியதால்தான் பல போர்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் நெப்போலியன் சில போர்களில் வெற்றிக் கொடி நாட்டியபோதிலும் முடிவில் படுதோல்வி அடைந்து ஆங்கிலத் துருப்புகளிடம் சரணடைந்தார். நெப்போலியன் வீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பிய நாடுகள் வியன்னுவில் கூடித் தமக்குள் ஓர் உடன்படிக்கையை (Vienna Settlement) 1815ஆம் ஆண்டில் செய்து கொண்டன. இவ் வுடன்படிக்கையால் இங்கிலாந்துக்கு செயின்ட்லூசியா (St. Lucia), டொபோகோ (Tobago), டிரினிடாட் (Trinidad), பிரிட்டிஷ் ஹாண்டுராஸ் (British Honduras), என்ற மேற்கிந்தியத் தீவுகளும், மால்டா (Malta) என்ற மத்திய தரைக்கடல் தீவும், மௌரீஷியஸ் (Mauritius) என்ற இந்துமாக்கடல் தீவும், டேனியருக்குச் சொந்தமான ஹெலிகோலாந்தும் (Heligoland), மத்தியதரைக் கடலிலிருந்த ஐயோனியத் தீவுகளும். டச்சுக்

காரருக்குச் சொந்தமான பிரிட்டிஷ் கயானாவும், நன்னம்பிக்கை முனை குடியேற்ற நாடும், இலங்கையும், சிங்கப்பூரும், மலாக்காவும் கிடைத்தன.

இந்தியா

இந்தியாவுக்குள் வியாபாரிகளாய் வந்த ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரர்களும் நாளடைவில் நாடு பிடிக்கும் கலையில் கை தேர்ந்தவர்களாயினர். அதற்குக் காரணம் அப்போது இந்தியாவில் நிலவிய சூழ்நிலையேயாகும். 1707ஆம் ஆண்டில் அவுரங்கசீப் என்ற மொகலாயப் பேரரசர் இறந்ததனால், அப் பேரரசு சீர் குலைந்தது. அப் பேரரசு பற்பல சிறு நாடுகளாய்ப் பிரிந்து சுயேச்சை நிலை பெற்றது. அச் சிறுசிறு நாடுகளுக்கிடையே ஓயாது போராட்டம் நடைபெற்று வந்தது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இங்கிலாந்து தனது படை வலிமையால் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை அமைத்தது. பாரிஸ் உடன்படிக்கைப்படி புதுச்சேரி, காரைக்கால், மாஹி போன்ற பகுதிகள் ஃபிரெஞ்சுக் காரர்களுக்குக் கொடுக்கப்பட்டன. கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளை போர்ச்சுகீசியர்கள் ஆக்கிரமித்துக் கொண் டனர். இங்ஙனம் இந்தியா வெளிநாட்டாரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

ஆஸ்திரேலியா

அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்கள் தோல்வி யுற்றதால், நாட்டில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை நாடு கடத்த அவர்களுக்கு வேறோர் இடத்தைத் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இச் சமயத்தில் தான் கேப்டன் குக் (Captain Cook) என்பவரை அரசாங்கம் தென்கடல் தீவுக்கு அனுப்பி விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும்படி பணித்திருந்தது. அவர் சில விஞ்ஞானி களுடன் புறப்பட்டுச் சென்று டாஹிதி (Tahiti) என்னுமிடத்தை யடைந்தார். பின்னர் அவர் நியூசிலாந்து தீவுகளை அடைந்தார். அங்கிருந்து மேற்கே திரும்பி அதுவரை கண்டுபிடிக்கப்படாத ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரையை ஆராய்ந்தார். அக் கடற்கரையோரத்தில் பவளப்பாறைகள் இருப்பதையும், அவைகள் மீது மோதிக் கொள்ளாமல் எங்ஙனம் கடற்கரையோரமாகச் செல்ல வேண்டுமென்பதையும் கண்டுபிடித்தார். அவருடன் சென்ற சர் ஜோஸப் பாங்க்ஸ் (Sir Joseph Banks) என்ற மற்றொரு விஞ்ஞானி ஓரிடத்தில் செடிகொடிகள் மிகச் செழுமையாக வளர்ந் திருப்பதைக் கண்டு பாடனி குடா (Botony Bay) என்று அவ்

விடத்திற்குப் பெயரிட்டார். அவ் விடத்தைச் சுற்றியிருந்த பிரதேசத்துக்கு நியூ சௌத் வேல்ஸ் என்ற பெயரைச் சூட்டினர். அதன் பிறகு விஞ்ஞானி குக் ஹாவாய் தீவிலிருந்த சில சுதேசிகளால் கொல்லப்பட்டார். பின்னர் சர் ஜோஸப் பாங்க்ஸ் நியூ சௌத் வேல்ஸில் ஒரு குடியேற்ற நாட்டை ஏற்படுத்தும்படி ஆங்கில அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது இதுகாறும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த கைதிகளை இனி அங்கு அனுப்பலாம் என்று அரசாங்கம் கூறியது. அதன்படி 1804ஆம் ஆண்டில் பல குற்றவாளிகள் அங்குக் குடியேற்றப்பட்டனர். நாளடைவில் கிழக்குக் கடற்கரையோரமாயிருந்த நீலமலைகளில் கணவாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அக் கணவாய் வழி சென்று பார்த்தோர் கண்ணுக் கெட்டிய தூரம் பசும் புல்வெளிகள் தென்பட்டன. பின்னர் பல ஆங்கிலேயர் அங்குக் குடியேறினர். அவர்கள் அங்கு ஆடுமாடுகள் வளர்க்கும் தொழிலில் ஈடுபடலாயினர். இங்ஙனம் ஆஸ்திரேலியா இங்கிலாந்தின் குடியேற்ற நாடாய் மாறியது.

பொறுப்பாட்சியின் தோற்றம்

விக்டோரியா மகாராணியார் காலம் வரை, இங்கிலாந்து தன் குடியேற்ற நாடுகளைச் சுரண்டுவதையே நோக்கமாய்க் கொண்டிருந்தது. அத்துடன் வியாபாரத் தனியுரிமையை அது வற்புறுத்தி வந்தது. இவ்விதத் தனியுரிமையை வற்புறுத்தவே நாவாய்ச் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால், அமெரிக்க சுதந்திரப் போருக்குப்பின் ஆங்கிலப் பேரரசுக் கொள்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. குடியேற்ற நாடுகள் வெறும் சுரண்டலுக்கு மட்டும் உரிய இடங்கள் அல்லவென்றும், அவைகளை அடிமைகள் போல் நடத்துவதை இங்கிலாந்து கைவிட்டு தன் சொந்தக் குழந்தைகள் போல் நடத்த வேண்டுமென்றும், அவைகள் ஓரளவு வளர்ச்சியடைந்தவுடன் அவைகளுக்குப் பொறுப்பாட்சி வழங்க வேண்டுமென்றும், நாட்டில் பல அறிஞர்கள் கூறி வந்தனர். அவர்களின் கூற்றுக்கேற்பவே அரசாங்கம் தனது பேரரசுக் கொள்கையைச் சிறிதுசிறிதாக மாற்றிக் கொண்டது. அதன்படி இங்கிலாந்து தன் குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பாட்சி வழங்க ஆரம்பித்தது.

கனடாவுக்குப் பொறுப்பாட்சி வழங்குதல்

ஏழாண்டுப் போரின் விளைவாக ஆங்கிலேயருக்குக் கிடைத்த கனடாவில், ஆரம்பத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மட்டும் வாழ்ந்து வந்தனர். அமெரிக்க சுதந்திரப் போருக்குப்பின் கனடாவில் ஆங்கிலேயரும் குடிபுகுந்தனர். இரு சாராருக்குமிடையே அடிக்கடி

சச்சரவுகள் எழுந்தன. ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் கனடாவில் ஒத்து வாழ முடியாதென்று நினைத்து 1791ஆம் ஆண்டில் 'பிட்' ஒரு சட்டத்தை இயற்றினர். அதன்படி கனடா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதியில் ஃபிரெஞ்சுக்காரர்களும், மற்றொரு பகுதியில் ஆங்கிலேயரும் தனித்தனி அரசாங்கங்களை அமைத்துக் கொண்டனர்.

பெரும்பான்மையான ஆங்கிலேயர் வாழ்ந்த மேல் கனடாவில் பிராட்டஸ்டெண்டுகளே பெரும்பான்மையினராய் இருந்தனர். ஆகவே, அங்கிருந்த ஏழில் ஒரு பகுதி நிலங்கள் ஆங்கிலிக்கத் திருச்சபைக்கே ஒதுக்கப்பட்டன, இதைக் கண்ட சிறுபான்மை யோரான கத்தோலிக்க ஃபிரெஞ்சுக்காரர்கள் மனம் வெதும்பினர். அதன் காரணமாக அவர்கள் ஆங்கிலேயரை வெறுக்க ஆரம் பித்தனர். கீழ்க் கனடாவிலும் மக்களிடையே அதிருப்தி அதிகரித்தது. ஏனெனில் அங்கிருந்த பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் ஃபிரெஞ்சுக்காரர்கள் பெரும்பான்மை பலம் பெற்றி ருந்ததனால் அவர்கள் ஆங்கிலேயரை நசுக்கினர். ஆனால் மேல் சபையின் உறுப்பினர்கள் கவர்னரால் நியமிக்கப்படுவதால், அங்கு ஆங்கிலேயர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். ஆகவே, இரு சபைகளுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் நேர்ந்து கொண்டி ருந்தன. மேல் கனடாவிலும், கீழ்க் கனடாவிலும் ஏற்பட்ட இத்தகைய சச்சரவுகள், கலகங்களாக மாறின.

இக் கலகங்களை அடக்குவதற்கு ஆங்கில அரசாங்கம் டர்ஹாம் பிரபுவை கனடாவுக்கு அனுப்பியது, அவர் அங்குச் சென்று நிலைமைகளை நன்கு ஆராய்ந்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் அவர் மக்களின் அதிருப்திக்குக் காரண மான இன வேற்றுமை, சட்டமன்றத்துக்கும் கவுன்சிலுக்குமுள்ள வேற்றுமை, நிலத் தகராறுகள் போன்றவைகளை விலக்கியபின் நாட்டில் அமைதி நிலவ இரு கனடாக்களும் ஐக்கியமடைய வேண்டு மென்றும், அதற்குப் பொறுப்பாட்சி வழங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுக் காட்டினர். அவருடைய சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு 1840ஆம் ஆண்டில் கனடாவுக்குப் பொறுப் பாட்சி வழங்கியது. 1840ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளு மன்றம் மறு இணைப்புச் சட்டம் (Re Union Act) இயற்றியது. அதன்படி இரு கனடாக்களும் ஒன்றுபட்டன. இரண்டு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மேல் சபையின் உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டனர். கீழ்ச்சபையின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமைச்சரவை பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ளதாக மாறியது.

கீழ்ச் சபையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியிலிருந்தே அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ்ச் சபையின் நம்பிக்கையிழந்தவுடன் அமைச்சரவை ராஜிநாமா செய்தது. இங்ஙனம் முதன்முதலாகக் கனடாவில் பொறுப்பாட்சி முறை ஏற்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்குப் பொறுப்பாட்சி வழங்குதல்

நியூ சௌத் வேல்ஸ் என்ற குடியேற்றம் முதலில் குவின்ஸ்லாந்து, விக்டோரியா என்ற இரு பகுதிகளை உட்கொண்டதாக விளங்கியது. அது அரசரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரால் ஆளப்பட்டு வந்தது. குற்றவாளிகள் வாழும் இடம் எனக் கருதப்பட்டதால் அங்குப் பலர் சென்று குடியேற விரும்பவில்லை. அதனால் 1840ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் குற்றவாளிகளை அங்கு அனுப்பும் பழக்கத்தைக் கைவிட்டது. 1842ஆம் ஆண்டில் அங்கு பிரதிநிதித்துவச் சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. அச்சட்டசபைகள் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டதாக விளங்கின. 1850ஆம் ஆண்டில் விக்டோரியா நியூசௌத்வேல்ஸினின்றும் பிரிக்கப்பட்டது. நியூசௌத்வேல்ஸில் தங்கம் தோண்டி எடுக்கப்பட்டதால் மக்கள் அங்கு வந்து ஏராளமாகக் குடியேறினர். அவர்களின் விருப்பத்திற்கிணங்க அரசாங்கம் அவர்களுக்கு 1852ஆம் ஆண்டில் பொறுப்பாட்சி வழங்கியது. அவர்களுக்கு வேண்டிய சட்டங்களை அவர்களாகவே இயற்றிக் கொள்ளும் உரிமை பெற்றனர். அதன் பின்னர் ஆங்கில அரசாங்கம் ஏனைய ஆஸ்திரேலிய பகுதிகளுக்கும் குற்றவாளிகளை அனுப்பும் பழக்கத்தைக் கைவிட்டது. அதனால் மக்கள் பரவலாகக் குடியேற ஆரம்பித்தனர். 1854ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் நியூசௌத்வேல்ஸ், விக்டோரியா, தென் ஆஸ்திரேலியா. டாஸ்மேனியா ஆகிய மாகாணங்களுக்குப் பொறுப்பாட்சியை வழங்கியது. அதன்பின்னர் மேற்கு ஆஸ்திரேலியாவும் பொறுப்பாட்சியைப் பெற்றது. இங்ஙனம் பொறுப்பாட்சியைப் பெற்ற மாகாணங்களை ஒன்று சேர்க்க வேண்டுமென்ற இயக்கம் ஆஸ்திரேலியாவில் வளர்ந்தது. அதற்காக 1897ஆம் ஆண்டில் ஓர் மாநாடு கூட்டப்பட்டது. அம் மாநாடு கூட்டரசுத் திட்டங்களை ஏற்றது. ஆகவே, 1900ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியக் காமன்வெல்த் சட்டம் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. அதிலிருந்து ஆஸ்திரேலியா ஒரு கூட்டரசாகத் திகழ்ந்து வருகின்றது.

நியூஸிலாந்துக்குப் பொறுப்பாட்சி வழங்குதல்

நியூஸிலாந்தை 1817ஆம் ஆண்டில் இங்கிலாந்து பெற்றது. அதிலிருந்து மவோரிகள் எனும் சுதேசிகளுக்கும் ஆங்கிலே

யருக்கும் போர் நடந்து வந்தது. இறுதியில் 1840ஆம் ஆண்டில் இருசாராருக்கிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி மவோரிகள் விக்டோரியாவைத் தங்களுடைய அரசியாக ஏற்றுக் கொண்டனர். ஆங்கிலேயரும் மவோரிகளின் நிலவுரிமையை ஏற்றுக் கொண்டனர். பின்னர் 1852ஆம் ஆண்டில் நியூஸிலாந்திற்குப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. அதனல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் நிறுவப்பட்டது. அந் நாட்டுச் சுதேசிகளான மவோரிகளும் அப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றனர். ஆஸ்திரேலியா காமன்வெல்த்தில் நியூஸிலாந்து சேர மறுத்து விட்டதனுல், 1907ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் நியூஸிலாந்துக்குத் தனியே டொமினியன் தகுதியை வழங்கியது.

தென் ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பொறுப்பாட்சி வழங்குதல்

தென் ஆப்பிரிக்காவில் முதன் முதலில் குடியேறியவர்கள் டச்சுக் காரர்களே யாவார்கள். அவர்களுக்குப் பின் ஹ்யூக்னேக்கள் என்னும் பல பிரெஞ்சு பிராட்டஸ்டெண்டுகளும் அங்குச் சென்று குடியேறினர். இவ்விரு இனத்தவரும் கலப்புற்றதால் தோன்றியவர்களே போயர்கள் (Boers) எனப்படுவர். இப் போயர்கள் விவசாயம் செய்வதற்கு நீக்ரோக்களை அடிமைகளாய்ப் பயன்படுத்தி வந்தனர். ஃபிரெஞ்சுப் புரட்சிப் போர்கள் நடைபெற்ற போது, ஆங்கிலேயர்கள் இக் குடியேற்றத்தைக் கைப்பற்றினர். ஆனல் ஆமியாஸ் உடன்படிக்கையின்படி அது மீண்டும் அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது. நெப்போலியன் போர்கள் நடைபெற்றபோது அக்குடியேற்ற நாடு மீண்டும் ஆங்கிலேயர் வசம் வந்தது. பாரிஸ் உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்கே அக் குடியேற்ற நாடு சொந்தமாகியது. நெப்போலியப் போரினல் இங்கிலாந்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பஞ்சத்தால் மக்கள் அவதியுற்றனர். இதன் காரணமாய் ஆங்கிலேயர் பலர் தாய் நாட்டை விட்டு இங்கு வந்து குடியேறினர். ஆங்லேயரின் வருகையால் போயர்கள் அதிருப்தியடைந்தனர். ஆங்கில ஆளுநர் ஒருவர் அங்கு நியமிக்கப்பட்டு ஆட்சி செய்ய ஆரம்பித்தார். அதன் பின்னர் அங்கு ஆங்கிலச் சட்டங்கள் அமுலுக்கு வந்தன. டச்சு மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் அரசாங்க மொழியாயிற்று. 1833ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் தென் ஆப்பிரிக்காவில் அடிமை முறையை ஒழித்தனர். நிலங்களைப் பயிரிடுவதற்கு நீக்ரோ அடிமைகளை நம்பியிருந்த போயர்களுக்கு அது ஓர் அநீதியாகத் தோன்றியது. அதிலிருந்து ஆங்கிலேயருக்கும் போயர்களுக்கும் பகைமை ஏற்பட்டது.

தென் ஆப்பிரிக்காவில் அடிமை முறையை ஒழித்த பின்னர், அதைச் செவ்வனே அங்கு அமுல் நடத்த ஆங்கில அரசாங்கம்

சர் பெஞ்சமின் டி அர்பன் (Sir Benjamin D' Urban) என்னும் ஆளுநரைத் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பியது. அங்குள்ள சுதேசிகளோடு சமாதானம் செய்து கொள்ளும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி அவர் கிரிகாக்கள் (Grigua) என்னும் சுதேச மக்களின் தலைவனான வாட்டர் போயர் என்பவரிடம் சமாதானம் செய்து கொண்டார். ஆனால் காபியர்கள் (Kafirs) எனும் சுதேசிகள் சமாதானத்துக்கு இணங்கவில்லை. ஆகவே, அவர்கள் கேப் நாட்டின்மீது படையெடுத்தனர். அப்படையெடுப்பை பெஞ்சமின் டி அர்பன் முறியடித்து கேப் நாட்டுக்கும் அவர்களின் நாட்டுக்குமிடையே ஓர் இடைத்தடை நாட்டை ஏற்படுத்தினர். அதையும் கடந்து மீண்டும் காபியர்கள் கேப் நாட்டைத் தாக்கினர். எனவே, பெஞ்சமின் டி அர்பன் துருப்புக்களை அனுப்பி கெய் நதி (Kei River) வரையுள்ள பகுதிகளைக் கைப்பற்றி கேப் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். அதன் பின்னர் காபியர்களின் தொல்லைகளை ஆராய ஒரு பாராளுமன்றக் குழு ஆங்கில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. அக்குழு காபியர்களின் தொல்லைகளுக்குப் போயர்களே காரணமென அறிவித்தது. இதையறிந்த போயர்கள் மனம் வருந்தினர். ஆங்கில ஆட்சியில் அவர்கள் வாழ விரும்பாமல் சுயேச்சையாக வாழ அவர்கள் அந் நாட்டை விட்டு 1836ஆம் ஆண்டு வெளியேற ஆரம்பித்தனர். இங்ஙனம் வெளியேறிய போயர்கள் பலர் ஆரஞ்சு (Orange River) நதியைக் கடந்து 'ஆரஞ்சு சுயேச்சை நாடு' என்ற புதிய நாட்டை ஏற்படுத்தினர்கள். மற்றும் பலர் வால் நதியைக் (Vall River) கடந்து சென்று 'ட்ரான்ஸ்வால்' நாட்டைத் தோற்றுவித்தனர். வேறு சிலர் 'நேடால்' என்னும் பகுதியில் குடியேறினர். நேடால் பகுதியிலிருந்த ஜுலு கூட்டத்தினர் பல போயர்களைக் கொன்று குவித்தனர். அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள பல போயர்கள் ஆண்ட்ரீஸ் பிரிடோரியஸ் (Andries pretorious) எனும் தலைவனுடன் சென்று இரத்த நதி போர்க் களத்தில் ஏராளமான ஜுலுக்களைக் கொன்று குவித்தனர். அதன் பின்னர் ஆங்கிலக் குடியேறிகள் பலர் நேடால் பகுதியில் சென்று குடியேறினர். ஆகவே 1843ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கம் நேடால் பகுதியை கேப் நாட்டின் ஒரு பகுதியாக அறிவித்தது. இதைக் கண்ட போயர்கள் நேடாலையும் விட்டகன்று ஆரஞ்சு சுயேச்சை நாட்டுக்கும் ட்ரான்ஸ்வாலுக்கும் போய்விட்டனர். அதன் பிறகு ஆங்கில அரசாங்கம் ட்ரான்ஸ்வால் நாட்டைப் போயர்களின் சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தியது. அத்துடன் ஆரஞ்சு நதி குடியேற்றத்தையும் அவர்களுக்கே உரிமைப்படுத்தியது.

ஆங்கிலப் பிரதமர் டிஸ்ரேலி தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஏல்லா நாடுகளையும் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் ஒன்று படுத்த நினைத்தார். அந்தக் கூட்டுறவில் ட்ரான்ஸ்வால் நாட்டையும் சேரும்படி கேட்டுக் கொண்டார். ட்ரான்ஸ்வால் நாட்டுப் போயர்கள் அதற்கு மறுக்கவே, பார்டல் பிரிரி (Bartal Frere) என்பவரைப் படைகளுடன் அனுப்பி அப் போயர்களைத் தோற்கடித்து ட்ரான்ஸ்வால் நாட்டை ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் அவர் கொண்டு வந்தார். 1880ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதியன்று போயர்கள் கிருகர் (Kruger) என்னும் தலைவனின் தலைமையில் தங்களது நாட்டை சுதந்திர நாடு என, பிரகடனப் படுத்தினார்கள். அதனால் போயர்களுக்கும் ஆங்கிலப் படைகளுக்கும் போர் மூண்டது. ஆங்கிலப் படைகள் பல இடங்களில் தோற்றன. அதனால் ராபர்ட்ஸ் என்னும் தளபதி படைகளுடன் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டார். அதற்குள்ளேயே ஆங்கில அரசாங்கம் தன் மனத்தை மாற்றிக் கொண்டது. ஆங்கிலப் படைகளின் பெருமையை நிலைநாட்ட வீணாக ஏன் சுதந்திரத்தைக் கோரும் போயர்களைக் கொன்று குவிக்க வேண்டும் என கிளாட்ஸ்டன் கருதினார். அதன் காரணமாக 1881ஆம் ஆண்டு மார்ச் மாதம் போயர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது.

எகிப்து சுதந்திரமடைதல்

1904ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையால், இங்கிலாந்து எகிப்தைத் தன் வசமாக்கிக் கொண்டது. ஆங்கிலப் படையினர் அங்குச் சென்று ஆக்கிரமித்துக் கொண்டனர். எனினும், துருக்கியின் மேலாதிக்கத்தின் கீழேதான் எகிப்து இருந்து வந்தது. உலகப் போரில் துருக்கி இங்கிலாந்துக்கு விரோதமாக அச்சு நாடுகளோடு சேர்ந்துகொண்டதனால், இங்கிலாந்து எகிப்தைத் தனது பாதுகாப்புக்குட்பட்ட நாடாக (Protoctorate) செய்து கொண்டது. 1936ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கிலோ-எகிப்திய உடன்பாட்டின்படி எகிப்து ஓர் சுதந்திர நாடாக இங்கிலாந்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டபோது ஆங்கிலப் படைகள் எகிப்தைக் காக்க அங்குச் சென்றன. 1940ஆம் ஆண்டில் எகிப்து தாக்கப்பட்டது. அங்கு நடந்த போரில் ஆங்கிலப் படைகள் விரோதிகளை விரட்டி அடித்தன. அதன் பின்னர் ஆங்கிலப் படைகள் அங்கேயே இருந்து வந்தன. 1954ஆம் ஆண்டில் நாஸர் (Nasser) என்பார் ஆட்சியைக் கைப்பற்றினார். அவர் ஆங்கிலப் படைகள் அங்கிருப்பதை விரும்பவில்லை. தன் படைகளைத் திருப்பி அழைத்துக் கொள்வதாக ஆங்கில அரசு 1954ஆம் ஆண்டில் ஒப்புக்

கொண்டது. நாஸர் 1956ஆம் ஆண்டு சூயெஸ் கால்வாயை நாட்டுடைமையாக்கினர். அதனுல் எகிப்துக்கும் இங்கிலாந்துக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. இந் நிலையில் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் சச்சரவு ஏற்பட்டது. இவைகளால் 1956ஆம் ஆண்டில் இங்கிலாந்து, பிரான்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் கூட்டுப்படைகள் எகிப்துமீது படையெடுத்தன. அமெரிக்காவும், ரஷ்யாவும் தலையிட்டுப் போரை நிறுத்தி விட்டன. பின்னர் இங்கிலாந்து தன் படைகளை எகிப்தினின்று விலக்கிக் கொண்டது. எகிப்து இப்பொழுது முழு சுதந்திர நாடாய் விளங்குகின்றது.

ஈராக் சுயேச்சையடைதல்

முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட செவ்ரஸ் உடன்படிக்கைப்படி (Treaty of Sevres, 1920) ஈராக், பாலஸ்தீனம் ஆகிய நாடுகள் இங்கிலாந்துக்குப் பாதுகாப்புக்குட்பட்ட நாடுகளாகத் (Mandated States) தரப்பட்டன. அதன்பின் இங்கிலாந்து எமிர்ஃபெய்சுல் (Emir Feisul) என்பவரை ஈராக்கின் அரசராக்கியது. நாளடைவில் ஈராக் சுயேச்சை பெற வேண்டுமென்றும் அதுவரை எமர்ஃபெய்சுலே அரசராக இருக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி 1932ஆம் ஆண்டில் இங்கிலாந்து ஈராக்குக்கு சுயாட்சி வழங்கியது. ஈராக் சுயாட்சியடைந்ததைக் கண்ட பாலஸ்தீன் மக்கள் தங்களது சுயாட்சிக்கும் கிளர்ச்சியில் இறங்கினர். இங்கிலாந்து அந் நிலையையறிந்து அங்கிருந்து வெளியேறிவிடுவதாக அறிவித்தது. பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் பல சிக்கல்கள் இருந்தன. அவற்றை ஐக்கிய நாடுகள் சபை ஆராய்ந்து பாலஸ்தீனத்தை இரு பகுதிகளாகப் பிரிக்க முடிவெடுத்தது. அதன்படி 1948ஆம் ஆண்டில் சுயேச்சை பெற்ற பாலஸ்தீனம் உதயமாயிற்று. யூதர்களுக்கென்று இஸ்ரேல் நாடு ஒன்றும் 1948ஆம் ஆண்டிலேயே ஏற்படுத்தப்பட்டது.

இந்தியா சுதந்திரமடைதல்

அன்னியர் ஆதிக்கத்தினின்று இந்தியா விடுதலையடைய வேண்டுமென்ற வேட்கை இந்தியாவில் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது. இந்திய மக்களிடையே ஒற்றுமையும், தேசிய உணர்ச்சியும் ஏற்படலாயின. அதே சமயத்தில் 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நாட்டில் மழையின்மையால் ஏற்பட்ட பஞ்சம் மக்களை வாட்டியது. அதனுல் மக்கள் ஆங்காங்கே சிறு கலகங்களில் ஈடுபடலாயினர். இக் கலகங்களை ஆங்கில அரசாங்கம் வன்மையாக ஒடுக்கியது. மேலும் கலகங்கள் ஏற்படக் கூடாது

எனவும், தங்களிடம் விசுவாசமுள்ள இந்தியரைக் கொண்டே கலகம் செய்யும் இந்தியரை அடக்கவேண்டுமெனவும் ஆங்கிலேயர் கருதினர். அக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே 1885ஆம் ஆண்டில் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் (Allen Octavian Hume) என்பவரால் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. பிற்காலத்தில் ஆங்கிலேயரை வெளியேறும்படி கூறும் நிறுவனமாக அது அமையுமென அவர்கள் கனவுகூடக் காணவில்லை. ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் ஆங்கிலேயரின் கைப்பொம்மையாகவே இருந்தது. ஆனால், நாளடைவில் அந் நிறுவனத்தில் தீவிரவாதிகள் கூட்டம் பெருகலாயிற்று. பாலகங்காதர திலகர் இத் தீவிரவாதிகளின் தலைவரானார். 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை' என்று கூறி மக்களைத் தட்டி எழுப்பினார். வன்முறையின் மூலம் தான் ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் விரட்டமுடியுமென இத் தீவிரவாதிகள் கருதினர். ஆனால் இவர்களுக்கு மாறாக, இந்தியா படிப்படியாக சுதந்திரப் பாதையில் முன்னேற வேண்டுமென்றும், டொமினியன் தகுதியே இந்தியரின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்றும், அத் தகுதியை வன்முறையற்ற சட்ட வழியான முறையிலே பெறவேண்டுமென்றும், கோகலே போன்ற மிதவாதிகள் கூறிவந்தனர். மோதிலால் நேரு, காந்திஜி போன்றோர் இக் கட்சியைச் சேர்ந்தவர்களே யாவார்கள். இந்த இரு சாராரிடையே பூசல் வளர்ந்தது. 1907ஆம் ஆண்டில் கூடிய சூரத் காங்கிரஸில் அவர்கள் தனித்தனியே பிரிந்தனர். இதைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் தீவிரவாதிகளைச் சிறையிலடைத்தனர். திலகருக்கு ஆறு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மிதவாதிகளைச் சமாதானப் படுத்தவே 1909ஆம் ஆண்டில் மிண்டோ - மார்லி சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. உறுப்பினர் பெரும்பாலோரை மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்க அச் சட்டம் வகை செய்தது. கோகலே இறந்தபின் காந்தியடிகளே காங்கிரஸின் தலைவரானார். சத்தியாக்கிரஹம், அஹிம்சை, உண்ணா விரதம், எதிரியை மனம்மாறச் செய்தல் போன்ற கொள்கைகளை அவர் அளித்தார். அக் கொள்கைகளின் அடிப் படையிலேதான் இந்தியா ஆங்கில ஆதிக்கத்தினின்றும் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி சுதந்திரமடைந்தது. அப்பொழுதே பாகிஸ்தானும் ஒரு தனிச் சுதந்திர நாடாக மலர்ந்தது.

அயர்லாந்து சுயேச்சை பெறுதல்

முதல் உலகப் போர் முடிந்த பின் லாயிட் ஜார்ஜ் அயர்லாந்தை இரு பிரிவுகளாகப் பிரித்ததால் அங்கு ஓர் உள்நாட்டுப் போர்

ஏற்பட்டது. தென் அயர்லாந்தின் தலைவரான டிவேலரா (De Valera) இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்குமிடையே யிருந்த தொடர்பைத் துண்டித்துவிட விரும்பினர். அதற்குத் தகுந்தாற் போலவே 1932ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி ஐரிஷ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. பின்னர் டிவேலரா வெஸ்ட் மின்ஸ்டர் நிலவரச் சட்டத்தையும், அதனுல் அயர்லாந்துக்கு வழங்கப்பட்ட டொமினியன் தகுதியையும் ஏற்றுக் கொள்ள மறுத்தார். ஆங்கில அரசரை ஐரிஷ் அரசராக ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்தார். அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரல் பதவியையும் 1936 ஆம் ஆண்டில் அவர் ஒழித்தார். அத்துடன் ஆங்கிலப் பிரிவு கவுன்சிலுக்கு ஐரிஷ் மக்கள் மேல் முறையீடு செய்து கொள்வதையும் தடுத்தார். 1937ஆம் ஆண்டில் அவர் அயர்லாந்துக்கு ஒரு தனியரசியல் திட்டத்தை வகுத்தளித்தார். அதன்படி அயர்லாந்து அயர் (Eire) என்ற 'பூரண இறைமை பெற்ற சுதந்திர ஜனநாயகக் குடியரசு' என அறிவிக்கப்பட்டது. ஆகவே, இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்குமிடையே இருந்துவந்த தொடர்பு முடிவு பெற்றது. 1949ஆம் ஆண்டில் அயர்லாந்து காமன்வெல்த்தினின்றும்கூட விலகிக் கொண்டது.

ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திரம்

சுதந்திரக் கனல் ஆப்பிரிக்க நாடுகளிலும் வீசத் தொடங்கியது. அதனுல் ஆப்பிரிக்க நாடுகளில் பல சுதந்திரக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அச் சுதந்திரக் கிளர்ச்சிகளுக்கு ஆங்கில அரசு மதிப்பளித்து அவ்வப்போது ஆப்பிரிக்க நாடுகளுக்கு சுதந்திரம் அளிக்க முன் வந்தது. 1959ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கானு (Ghana) என்னும் மேற்கு ஆப்பிரிக்க நாட்டினின்று வெளியேறியதால், அந் நாடு சுதந்திரக் குடியரசு நாடாக மாறியது. 1960இல் நைஜீரியா ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்று சுதந்திர நாடாகியது. 1961ஆம் ஆண்டில் சியராலியோன் (Sierra Leone) என்ற மேற்கு ஆப்பிரிக்க நாடு சுதந்திரம் பெற்றது. தங்கனிகா (Tanganika)வும் 1961ஆம் ஆண்டில் சுயேச்சையடைந்தது. அதற்கு அருகிலிருந்த ஸான்ஸிபார் தீவினின்றும் 1963ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் வெளியேறினர். 1965 ஆம் ஆண்டில் அவ் விரு நாடுகளும் ஒன்ருக இணைந்து டான்ஸானியா (Tanzania) என்ற பெயர் பெற்றன. 1962ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாதுகாப்பினின்றும் உகாண்டா (Uganda) சுயேச்சை பெற்றது. 1963ஆம் ஆண்டில் கென்யா (Kenya) ஆங்கில ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றது. வடக்கு ரொடேஷியா, ஸாம்பியா (Zambia) என்ற பெயரில் 1964ஆம்

ஆண்டில் சுயேச்சை பெற்றது. தெற்கு ரொடீஷியாவை 1965 ஆம் ஆண்டில் ஒரு சுதந்திர நாடென ஸ்மித் என்ற நிறவெறிக் கொள்கையுடைய அந் நாட்டு பிரதமர் அறிவித்தார். பெக்குவானா லாந்து என்ற நாடு 1964ஆம் ஆண்டில் பாட்ஸ்வானு (Botswana) குடியரசாக மாறியது. பசூட்டோலாந்து என்னும் நாடு 1966 ஆம் ஆண்டில் லெசாத்தோ (Lesotho) என்னும் பெயரில் சுயேச்சை பெற்றது. காம்பியா (Gambia) என்ற மேற்கு ஆப்பிரிக்க நாடு 1965ஆம் ஆண்டில் சுயேச்சை பெற்றது. டிரான்ஸ்வாலிலுள்ள ஸ்வாஸிலாந்து 1968ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது. உரிமை பெற்ற அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும் (தெற்கு ரொடீஷியாவைத் தவிர) காமன்வெல்த்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளன.

காமன்வெல்த் நாடுகள்

காமன்வெல்த் நாடுகள் அல்லது பொதுநலக் கூட்டுறவு நாடுகள் இன்று உலகில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. அது ஒரு குடும்பமாகத் திகழ்கின்றது. அக் குடும்பத்தின் தலைவியாக ஆங்கில அரசியார் விளங்குகின்றார். ஆங்கில காமன்வெல்த்தினின்றும் விடுதலை பெற்று சுதந்திரமடைந்த நாடுகள் அக் குடும்பத்தின் உறுப்புகளாகத் திகழ்கின்றன. சமூகப் பொருளாதார விவகாரங்களில் அந்நாடுகள் பெரிதும் ஒத்துழைக்கின்றன. அவ்வப்போது நடைபெறும் காமன்வெல்த் மாநாடுகளில் (Commonwealth Conferences) அந் நாடுகள் தங்களுடைய பொதுவான பிரச்சினைகளைப் பற்றி ஆராய்கின்றன. காமன்வெல்த் நாடுகள் பற்றிய விவகாரங்களைப்பற்றி ஆராய்ந்து கவனிக்க தனிப்பட்ட காமன்வெல்த் காரியாலயம் (Commonwealth Secretariat) ஒன்று 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. காமன்வெல்த் பற்றிய செய்திகள் அனைத்துக்கும் அது ஊற்றாகத் திகழ்கின்றது.

27. முடியாட்சி

அரசியலில் பல்வேறு வகையான ஆட்சி முறைகள் பற்றிப் பேசப்படுகின்றன. பழங்காலத்தில் அரிஸ்டாட்டில் (Aristotle) என்னும் அரசியல் அறிஞர் ஆட்சி முறைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தினர்.

ஆட்சி முறை	நல்லாட்சி	தீய ஆட்சி
ஒருவருடைய ஆட்சி	மன்னராட்சி	கொடுங்கோலாட்சி
சிலருடைய ஆட்சி	உயர் குடியாட்சி	குழு ஆட்சி
பலரின் ஆட்சி	அமைதி நிலையாட்சி	மக்களாட்சி

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஃபிரெஞ்சு சிந்தனையாளர் மாண்டெஸ்கு (Montesquieu) என்பவரும் ஆட்சிமுறைகளை மக்களாட்சி, மன்னராட்சி, கொடுங்கோலாட்சி என்று மூன்று வகையாகப் பிரித்தார். அவருக்குப்பின் வந்த ரூசோ (Rousseau) என்ற அறிஞரும் ஆட்சிமுறைகளைத் தனி வல்லாட்சி, கொடுங்கோலாட்சி, மக்களாட்சி என வகைப்படுத்தினர். ஆனால் இக்காலத்தில் ஒரு நாட்டின் தன்மை, அரசியலமைப்பின் தன்மை, சட்டமன்றத்தின் தன்மை, அரசாங்கத்தின் தன்மை, நீதித்துறையின் தன்மை ஆகியவைகளின் அடிப்படையில் ஆட்சி முறைகளை வகைப்படுத்துகின்றனர்.

பல்வேறு வகையான ஆட்சிமுறைகளில் முடியாட்சியும், குடியாட்சியும் மிக முக்கியமானவைகளாக இன்று கருதப்படுகின்றன. குடியாட்சி நிலவும் நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் நாட்டின் தலைவராகத் திகழ்கின்றார். முடியாட்சி நிலவும் நாடுகளில் பரம்பரையாகத் தொன்றுதொட்டு வருகின்ற அரசர்களோ அல்லது அரசியர்களோ ஆட்சி புரிகின்றார்கள். அவர்கள்தாம் அத்தகைய நாடுகளின் தலைவர்களாகவும் திகழ்

கின்றனர்கள். இவ்விரு ஆட்சிமுறைகளில் இங்கிலாந்தில் தொன்று தொட்டு வழக்காற்றிலிருந்து வருவது முடியாட்சியேயாகும். ஆனால், இடையில் தற்காலிகமாக ஆலிவர் கிராம்வெல் என்ப வரால் அங்கு 1649ஆம் ஆண்டில் குடியாட்சி தோற்றுவிக்கப் பட்டது. அவ் வாட்சி இங்கிலாந்தில் சில காலம்தான் நிலைபெற்றது. அதன் பின்னர் அங்கு மீண்டும் 1660ஆம் ஆண்டில் முடியாட்சி தோற்றுவிக்கப்பட்டது. இன்றளவும் இங்கிலாந்தில் முடியாட்சி தான் நடைபெற்று வருகின்றது.

பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் ஆங்கில அரசர்கள் எதேச்சாதிகாரத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். முதலாம் ஜேம்ஸ் அரசர் 'தெய்வத்தால் நியமிக்கப்படுபவர்களே அரசர்கள்; அவர்களுக்குப் பணிய வேண்டியதே மக்களின் கடமை' என்று தெய்வீக உரிமைக் கொள்கையைப்பற்றிப் பாராட்டி வந்தார். முதலாம் சார்லஸ் அரசர் பாராளுமன்றத்துடன் போராடி முதலாம் ஜேம்ஸ் கொள்கையினை நிலைநிறுத்த முயன்றார். ஆனால், அப் போராட்டத்தில் அவர் தோல்வியுற்றுத் தூக்குமேடை ஏறினார். இத்தகைய ஒரு நிகழ்ச்சியும் ஃபிரான்சு நாட்டில் நிகழ்ந்தது. ஃபிரான்சு நாட்டில் ஏற்பட்ட புரட்சியினால் பதினாறும் லூயி 1793ஆம் ஆண்டில் சிரச்சேதம் செய்யப்பட்டார். முடியாட்சியை ஃபிரான்சில் மட்டுமல்லாது ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளிலும் ஒழித்துவிட வேண்டுமென்று ஃபிரெஞ்சு புரட்சிக்காரர்கள் நினைத் தனர். 'முடியாட்சியைக் கவிழ்க்க விரும்பும் எல்லா நாடுகளுக்கும் நாங்கள் உதவி செய்யக் காத்திருக்கிறோம்' என்று அப் புரட்சிவாதிகள் அறிவித்தனர். இத்தகைய புரட்சி இயக்கத்தின் காரணமாக ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளில் முடியாட்சி ஆட்டம் கண்டது. மக்கள் அரசர்களைக் கடவுளின் பிரதிநிதிகளாகக் கருதாமல், தங்களின் விரோதிகளாகவே நினைக்க ஆரம்பித்தனர். இத்தகைய புரட்சி இயக்கம் ஃபிரான்சு நாட்டில் தொடர்ந்து 1830, 1848ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. முதலில் பத்தாம் சார்லஸ், பின்னர் லூயி ஃபிலிப் போன்ற அரசர்கள் அங்கு முடி துறந்தனர். ஆனால், மூன்றாம் நெப்போலியன் மீண்டும் ஃபிரான்சு நாட்டில் முடியாட்சியைக் கொண்டு வந்தார். ஆனால், அவர் 1870ஆம் ஆண்டில் தமது பேரரசர் பதவியைத் துறந்தார். அத்துடன் ஃபிரான்சு நாட்டில் முடியாட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு குடியாட்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதே போல் ரஷ்யாவிலும் புரட்சி ஏற்பட்டு ரஷ்ய அரசர் இரண்டாம் நிக்கலஸ் கொல்லப்பட்டார். 1918ஆம் ஆண்டிற்குப் பிறகு ரஷ்யாவில் சோஷியலிசக் குடியரசு நிறுவப்பட்டது. ஜெர்மனியிலும் முடியாட்சி முடிவுற்று, குடியாட்சி நிறுவப்பட்டது.

ஸ்பெயினிலும், ஆஸ்திரியாவிலும் முடியாட்சிகள் ஒழிந்து குடியாட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, ஐரோப்பாவில் பெரும்பான்மையான நாடுகளில் முடியாட்சிகள் ஒழிக்கப்பட்டுவிட்டன, ஆனால், இங்கிலாந்தில் மட்டும் முடியாட்சி தொடர்ந்து சிறப்பாக நடைபெறுவதற்குக் காரணம் என்ன?

மற்ற ஐரோப்பிய நாடுகளில் முடியாட்சி ஒழிக்கப்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஃபிரான்சு நாட்டில் அரசர்களின் ஆட்சியை மக்கள் வெறுத்தனர். அதன் காரணமாக அங்குப் புரட்சி ஏற்பட்டு முடியாட்சி ஒழிக்கப்பட்டது. உலகப் போர் ஏற்பட்டதனால் ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் பேரரசர்களின் ஆட்சி முடிவுற்றது. ரஷ்யாவில் ஜார் அரசர்கள் மக்களின் நலன்களைக் கவனியாது எதேச்சாதிகாரமாக ஆட்சி செய்ததால், மக்கள் துன்பங்களைத் தாங்க முடியாமல் கொதித்தெழுந்து புரட்சியில் இறங்கி, அங்கு முடியாட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தனர். ஆனால், இங்கிலாந்தில் இன்று டியூடர் அரசர்களும், ஸ்டூவர்ட் அரசர்களும் செலுத்தி வந்த வல்லாட்சியைக் காணமுடியாது. 1688ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட புகழ்பெற்ற புரட்சிக்குப்பின் அரசர்கள் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டே நடந்து வருகின்றனர். இப்பொழுது அங்கு தெய்விக உரிமைக் கொள்கை மாய்ந்துவிட்டது. அரசர் சட்டத்திற்கு மேம்பட்டவர் என்ற கொள்கை மாறி, பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவரே என்ற கொள்கை இங்கிலாந்தில் வேரூன்றிவிட்டது. ஹனோவரியர்கள் இங்கிலாந்தின் அரசர்களாக வந்த பின்னர், அவர்கள் அமைச்சர்களிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். அமைச்சர் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதைக் கூட அவர்கள் நிறுத்திக் கொண்டனர். வெறும் பெயரளவிற்கு மட்டுமே அரசர்களாக இருக்க அவர்கள் ஒப்புக் கொண்டனர். எனவே, அரசர்களின் பெயரில் அமைச்சர்களே நாட்டை ஆண்டனர். அத்தகைய அமைச்சர்களையும் பாராளுமன்றம் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இங்ஙனம் இங்கிலாந்தில் பாராளுமன்ற ஜனநாயகம் (Parliamentery Democracy) தோன்றியது. அத்துடன் மக்களின் சீர்திருத்த விருப்பங்களுக்கும், மக்கள் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் ஏற்படவும், மக்கள் ஆட்சி முறையில் பங்கு கொள்ளவும் ஆங்கில அரசர்கள் முட்டுக்கட்டையாக இல்லை. அவர்கள் நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் அவற்றை ஆக்கிச் செயல்படுத்தும் பாராளுமன்றத்திற்கும், அமைச்சர் குழுவுக்கும் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அமைச்சர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்பவே அவர்கள் பேசவும், செயலாற்றவும் முடியும். ஆகவே, இங்கிலாந்தில்

அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சியே (Constitutional Monarchy) நடைமுறையில் இயங்கி வருகின்றது. அதனுல் தான் பழமை விரும்பிகளான ஆங்கில மக்கள் இத்தகைய முடியாட்சியால் தீமைகள் இல்லை என்று நினைத்து அதையே தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர்.

அரசு - அரசர்

இங்கிலாந்தில் அரசு (Crown) என்ற சொல்லும், அரசர் (King) என்ற சொல்லும் வெவ்வேறு பொருளில் வழங்கப்படு கின்றன, 'ஹென்றி, எட்வர்டு, ஜார்ஜ் ஆகிய அரசர்கள் சாகலாம். ஆனுல் 'அரசு' என்ற நிறுவனம் இன்றும் நீடித்தே வருகின்றது' என்று பிளாக்ஸ்டோன் (Blackstone) கூறுகின்றுர். ஆகவே, அரசர் என்னும் சொல் ஒரு பொருளையும், அரசு என்ற சொல் வேறொரு பொருளையும் குறிக்கின்றன. அரசர் என்னும் சொல் நாட்டை ஆண்டு வருகின்ற ஒரு தனிப்பட்ட மனிதரையே குறிக்கின்றது. அவர் சாகலாம், அல்லது பதவி இழக்கலாம். ஆனுல், 'அரசு' என்ற சொல் நாட்டின் நிர்வாக நிறுவன மனைத்தையும் குறிப்பதொன்ருகும். ஆகவே, அரசர் இறப்பினும், அரசு இறப்பதில்லை. அது என்றும் நிலைத்து நிற்கும் ஒரு நிறுவன மாகும். 'அரசர் இறந்தார்; அரசர் நீடு வாழ்க' (The King is dead ; Long live the King) என்ற மூதுரையில் அரசர் என்ற மனிதருக்கும் அரசு என்ற நிறுவனத்திற்குமுள்ள வேறுபாடு தெளிவு பெறுகின்றது. ஒரு காலத்தில் அரசர் பெற்றிருந்த அதிகாரங்களும், சிறப்பதிகாரங்களும் படிப்படியாக இப்பொழுது அரசு என்ற நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

அரசருடைய முக்கியமான அதிகாரங்கள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் மாற்றப்பட்டுவிட்டன. அரசரின் பெயரால் அதிகாரங்கள் இப்பொழுது அமைச்சரவையால் செயல்படுத்தப் படுகின்றன. அமைச்சர்கள் செய்யும் தவறுகளுக்கு அரசரைப் பொறுப்பாக்க முடியாது. அதனுல் தான் 'அரசர் தவறு செய்ய முடியாது' (The King can do no wrong) என்று கூறப்படு கின்றது. எல்லாச் செயல்களையும் அமைச்சர்களே செய்வதனுல், அரசர் எங்ஙனம் தவறு செய்ய முடியும்? அத்துடன் தவறெதற்கும் அரசர் இசைவளிக்க முடியாதென்பதும் இதற்குப் பொருள் ஆகும். ஆகவே கொள்கை யளவில் அரசர் முழு அதிகாரமுடையவரா கவும், அதிகாரத்தின் பிறப்பிடமாகவும் இருக்கின்றுர். ஆனுல், உண்மையில் சட்டங்களாலும், மரபுகளாலும், வழக்காறுகளாலும் இவருடைய அதிகாரங்கள் வரையறைக்குள்ளாகின்றன. எனவே,

இங்கிலாந்தில் பெயரளவில் முடியாட்சியும் நடைமுறையில் பாராளுமன்ற ஜனநாயகமும் நடைபெறுகின்றன,

முடியாட்சி பற்றிய மரபுகளும் சட்டங்களும்

இங்கிலாந்தில் முடியாட்சியைப் பற்றிய மரபுகளும், சட்டங்களும் வளர்ச்சியடைந்துள்ளன. அங்குச் சூழ்நிலை மாறுதல்களுக்கேற்றபடி சட்டங்கள் தோன்றின. அவைகளில் மிகவும் முக்கியமானவை :

1. 1689ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட உரிமைகள் மசோதாவின்படி (Bill of Rights) அரசர் எவரும் கத்தோலிக்கராக இருக்கமுடியாது. அத்துடன் இங்கிலாந்தின் அரசராக இருப்பவர் எவரும் ரோமன் கத்தோலிக்கப் பெண்ணை மணம் செய்துகொள்ளலாகாது.

2. 1701ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசுரிமை நிருணயச் சட்டத்தின்படி (Act of Settlement) ஆங்கில அரியணையில் பிராட்டஸ்டெண்டுகள் மட்டுமே அரசராக அமரலாம். புதிதாகப் பட்டமேற்கும் அரசர் ஆங்கிலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். அத்துடன் ஆங்கில அரியணையில் அமர்ந்தபின், அவ் வரசர் கத்தோலிக்கராக மாறினாலோ அல்லது கத்தோலிக்கப் பெண்ணை மணந்தாலோ, அவர் தமது பதவியைத் துறக்க வேண்டும். அரசரோ அல்லது அரசியோ ஆங்கிலத் திருச்சபையின் கொள்கையின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆங்கில அரியணையில் அமரும் அரசர் வேறுநாட்டவரானல், அந் நாட்டின் பாதுகாப்புக்காக இங்கிலாந்தைப் போரில் ஈடுபடுத்தலாகாது.

3. 1701ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசுரிமைச் சட்டப்படி வழிமுறை உரிமை பெறப்படுகின்றது.

4. மரபின்படி அரசரோ அல்லது அரசியாரோ இறந்தால் அவர்களின் மூத்தமகன் பட்டமேற்க வேண்டும். அரசருக்கு மகனே இல்லையாயின் மூத்தமகள் பட்டமேற்க வேண்டும். அவருக்குச் சந்ததியில்லையெனில், பாராளுமன்றம் வேறு ஓர் அரச குடும்பத்தை நியமித்து அரசுரிமையை அளிக்கும்.

5. 1867ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மக்கள் பிரதி நிதித்துவச் சட்டப்படி பாராளுமன்றத்தின் பதவி காலத்திற்கும் அரசரின் மரணத்திற்கும் தொடர்பில்லை.

6. அரசர் 18 வயதிற்குட்பட்டவராக இருப்பாராயின், அரசரின் பணிகளை ஒரு காப்பாளர் (Regent) செய்ய வேண்டும். அக் காப்பாளர் 21 வயது நிரம்பியவரா கவும், வாரிசு வரிசையில் இருப்பவராகவும் இருக்க வேண்டும்.

7. அரசர் நோய்வாய்ப் படும்பொழுதும், நாட்டிற்கு வெளியே இருக்கும்போதும், உரிமைப் பட்டயத்தால் கொடுக்கப்பட்டுள்ள பணிகளை ஏற்றுச்செயல் படுத்தக் கூடிய கவுன்சிலர்களை அரசர் அமர்த்தலாம். இத் தகைய கவுன்சிலர்கள் அரசரின் மனைவியாகவும், அரசியாரின் கணவராகவும் இருக்கவேண்டும். அடுத்து வழி முறைப் பட்டியலில் உள்ள முதல் நான்கு பேர் களும் கவுன்சிலர்களாகச் செயல்படுவர்.

8. அரண்மனைச் செலவுகள், அரச குடும்பத்தினருக்குப் பாராளுமன்றம் அளிக்கும் படிகள் ஆகியவைகளோடு, அரசரின் சொந்த வருமானத்தையும் அரச மானியம் குறிப்பிடுகின்றது.

முடியரசரின் முக்கியப் பணிகள்

இங்கிலாந்தை ஆள்பவர் ஓர் அரசராகவோ அல்லது தற்போது இருப்பதுபோல் ஓர் அரசியாகவோ இருக்கலாம். அரசிய லமைப்பின்படி அவர்கள் தனித் தலைமை பெற்றவர்களாவார்கள். அத்துடன் அரசியலமைப்பின்படி அவர்களுக்குச் சில கடமைகளும் சில உரிமைகளும் உள்ளன.

இங்கிலாந்தின் பிரதம அமைச்சரை நியமிப்பது அரசரின் முக்கிய பணியாகும். அங்ஙனம் பிரதம அமைச்சரை நியமிப்பதில் அரசரின் சொந்த விருப்பத்திற்கு அதிக இடமில்லை. ஏனெனில் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவின்றி எந்த அமைச்சரவையும் பதவியில் நீடிக்க முடியாது. எனவே பெரும்பான்மைக் கட்சியின் தலைவரையே பிரதமராகத் தேர்ந் தெடுப்பது ஓர் அரசியல் மரபு ஆகிவிட்டது. ஆகவே, நாட்டில் பொதுத் தேர்தல் முடிந்தபின்பு, எக் கட்சி பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை வலிமை பெற்றுள்ளதோ, அக் கட்சியின் தலைவரை

அரசர் பிரதமராக நியமிக்கின்ருர். பிரதமர் பதவியிலிருக்கும் போது இறந்துவிட்டாலோ அல்லது நம்பிக்கையின்மையின் காரணமாக அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டாலோ அரசர் அந்த நிலைமைக் கேற்ப, தம் முடிவுகளைச் செய்யவேண்டும். அத்துடன் பாராளுமன்றத்தில் பொதுத் தேர்தலுக்குப்பின் எக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை யென்ருலும், பதவியிலிருந்து பிரதமர் விலகி அவருக்குப் பதில் வேருெரு தலைவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை யென்ருலும், அரசரே நிலைமைக்கேற்ப முடிவுசெய்ய வேண்டியுள்ளது. இவ்விதச் சூழ்நிலைகளில் அரசருடைய முடிவுகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

1923ஆம் ஆண்டில் போனர்லா (Bonar Law) என்னும் கன்சர்வேடிவ் கட்சி பிரதமர் நோய்வாய்ப்பட்ட காரணத்தால் பதவியை ராஜிநாமா செய்தார். அதனுல் ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியிலிருந்து ஒருவரைப் பிரதமராக நியமிக்க வேண்டியிருந்தது. கன்சர்வேடிவ் கட்சியிலும் கர்ஸன் பிரபுவைப் (Lord Curzen) பிரதமராக்க வேண்டுமென்று ஒரு சாராரும், ஸ்டான்லி பால்டுவின் (Stanley Baldwin) என்பவரைப் பிரதமராக்க வேண்டுமென்று மற்ருெரு சாராரும் கோரி வந்தனர். இச் சமயத்தில் பாராளுமன்றத்தின் எச் சபையினின்று பிரதமரைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வியும் எழுந்தது. ஏனெனில் கர்ஸன் பிரபு பிரபுக்கள் சபையின் உறுப்பினர். ஸ்டான்லி பால்டுவின் என்பவர் பொதுமக்கள் சபையின் உறுப்பினர். கர்ஸன் பிரபு பிரபுக்கள் சபையின் உறுப்பினரானதால் பிரதமர் பதவிக்குத் தகுதியற்றவர் எனப் பலரும் வாதித்தனர். பிரதமராக வருபவர் பொதுமக்கள் சபையின் உறுப்பினராக இருக்க வேண்டுமென்றும் பலர் கூறினர். இந் நிலையில் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் தம்முடைய தனிப்பட்ட கருத்தைச் செலுத்தி ஸ்டான்லி பால்டுவின் என்பவரையே பிரதமராக நியமித்தார். அன்றிலிருந்து பிரதமர் பொதுமக்கள் சபையின் உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற மரபு இருந்து வருகின்றது.

மேலும் பொதுமக்கள் சபையில் எக் கட்சிக்கும் பெரும்பான்மை யில்லாத போதும் அரசர் தம் சமயோசித புத்தியைப் பயன் படுத்திப் பிரதமரை நியமிக்கவேண்டும். இந் நிலையில்தான் அரசரின் நிலை சங்கடமாகிவிடும். 1923ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சிக்கு 261 இடங்களும், தொழிற் கட்சிக்கு 191 இடங்களும், லிபரல் கட்சிக்கு 155 இடங்களும் கிடைத்தன. தொழிற்கட்சியும் லிபரல் கட்சியும்

சேர்ந்தால், 261 இடங்களைப் பெற்ற கன்சர்வேடிவ் கட்சியைத் தோற்கடிக்கக்கூடிய நிலை இருந்தது. இம் மாதிரியான இக் கட்டான சூழ்நிலையில்தான் அரசருக்குத் தம் விருப்பப்படி நடக்க ஒரு வாய்ப்புக் கிட்டியது. அவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதைய அரசர் ஆரும் ஜார்ஜ், ராம்சே மாக்டனால்டு (Ramsay Macdonald) என்னும் தொழிற்கட்சித் தலைவரைப் பிரதமராக்கினர். தொழிற்கட்சி சிறுபான்மை கட்சியானாலும் லிபரல் கட்சியின் ஆதரவோடு அமைச்சரவையை அமைத்தது. ஆனால், ஓராண்டுக்குள் ராம்சே மாக்டனால்டுவின் அமைச்சரவை கவிழ்ந்தது. இச் சமயத்தில் அரசர் தம் விருப்பப்படி பால்டுவின் என்னும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரைப் பிரதமராக்கினர். 1929ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தொழிற் கட்சியினர் 284 இடங்களையும், கன்சர்வேடிவ் கட்சியினர் 260 இடங்களையும், லிபரல் கட்சியினர் 59 இடங்களையும் பெற்றனர். ஆகவே, இப்போது கூட எக்கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்கவில்லை. எனவே, அரசர் தம் விருப்பப்படி ராம்சே மாக்டனால்டு என்ற தொழிற்கட்சியின் தலைவரையே பிரதமராக்கினர். அவருக்கு லிபரல் கட்சி ஆதரவு அளித்தது. இங்ஙனம் சில சூழ்நிலைகளில் பிரதமரைத் தேர்ந்தெடுப்பது அரசரின் சொந்த விருப்பத்திற்கு விடப்படுகின்றது. அரசர் நன்கு யோசித்து, பலரைக் கலந்தாலோசித்த பின்னரே தம் முடிவையும் எடுப்பார்.

ஒவ்வொரு பாராளுமன்றம் தொடங்கும் போதும் 'அரியணைப் பேருரை' (Speech from the Throne) என்ற ஓர் உரையை அரசர் நிகழ்த்துவார். அவ் வுரையில் அரசாங்கத்தின் கொள்கைகளும், திட்டங்களும், செயல்முறைகளும் விளக்கப்பட்டிருக்கும். அப் பேருரையைப் பிரதமரே தயாரித்து வழங்குவது வழக்கமாகும், அரசர் பேருரை நிகழ்த்தும்போது பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளான பொதுமக்கள் சபையும், பிரபுக்கள் சபையும் சேர்ந்து இணைப்புச் சபையாக இருக்கும்; அப் பேருரை முடிவுற்ற பின்பு இரு சபைகளும் தனித்தனியே பிரிந்து அதன் மீது விவாதம் நடத்தும்.

பாராளுமன்றம் இயற்றும் ஒவ்வொரு மசோதாவுக்கும் அரசர் தமது ஒப்புதலை அளிக்க வேண்டும். அரசரின் ஒப்புதலைப் பெற்ற பின்புதான் மசோதா நாட்டில் சட்டமாகும். 17ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஆங்கில அரசர்கள் சில மசோதாக்களுக்குத் தங்கள் ஒப்புதலை அளிக்க மறுத்தனர். 1707ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்து நாட்டுப்படை மசோதாவுக்கு ஆன் அரசியார் தமது ஒப்புதலைத் தர மறுத்தார். அதன்பிறகு அரசர்களின் இச் சிறப்

பதிகாரம் வழக்காற்றிலிருந்து நழுவி விட்டது. அதனுல் அதற்குப் பின்பு அரசர்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக் களுக்குத் தடையின்றி ஒப்புதலை அளிக்க வேண்டியதாயிற்று. அரசருக்கே மரண தண்டனை வழங்கும் மசோதா பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டால் கூட அரசர் அம் மசோதாவிற்கு ஒப்பம் தர வேண்டும்.

பொதுமக்கள் சபையைக் கலைத்தல் அரசரின் மற்ருெரு முக்கிய பணியாகும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுமக்கள் சபை கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பது மரபு. ஆனுல், சில சமயங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே கூட பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய கட்டாயம் அரசருக்கு ஏற் படும். அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டாலோ, அமைச் சரவையின் கொள்கையைப் பொதுமக்கள் சபை ஏற்க மறுத்தாலோ, பிரதமர் தம் பதவியை ராஜிநாமா செய்து விடுவார். அங்ஙனம் அவர் தமது பதவியை ராஜிநாமா செய்யும் போது பொதுமக்கள் சபையைக் கலைத்து விட்டு மறு தேர்தல் நடத்தும்படி அரசரைக் கேட்டுக் கொள்ளலாம். இச் சமயத்தில்தான் அரசர் பொது மக்கள் சபையைக் கலைப்பது நல்லதா? இல்லையா? என்பதை யோசிக்க வேண்டியுள்ளது. பொதுமக்கள் சபையைக் கலைப்பது நல்லதன்று என்று அரசர் எண்ணினுல், அவர் வேருெருவரை அழைத்துப் பிரதமராக்கலாம். அவ்வாறு அவர் பிரதமரானுல், அவருக்குப் பொதுமக்கள் சபையில் ஆதரவு இருக்குமா? என்பதை யும் அரசர் சிந்திக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் பாராளு மன்றத்தைக் கலைத்து மறு தேர்தல் நடத்த வேண்டி வரும். 1950ஆம் ஆண்டில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி மற்ற கட்சிகளை விட 5 இடங்களையே அதிகம் பெற்று அமைச்சரவையை அமைத்தது. சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமானுல் தமக்குப் பாராளுமன்றத்தில் பெரும் பான்மை ஆதரவு இருக்க வேண்டுமென்று பிரதமர் கருதி சில மாதங்களிலேயே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும்படி அரசரைக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இருந்தபோதிலும், அரசர் பிரதமரின் ஆலோசனையை ஏற்றுப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தினுர். ஆகவே, பிரதமரின் ஆலோசனை யைத் தடையின்றி ஏற்பதே அரசரின் கடமையாயிற்று.

பிரபுப் பட்டங்களை வழங்க அரசருக்கு அதிகாரமுள்ளது. அப் பட்டங்களும் அமைச்சரவையின் ஆலோசனைப்படியே வழங்கப் பட்டு வருகின்றன. பொதுமக்கள் சபையின் விருப்பத்திற்கு

மாருகப் பிரபுக்கள் சபை நடந்து கொள்ளுமானுல், அமைச்சரவை தங்கள் கொள்கைகளை ஆதரிக்கும் சிலரைப் பிரபுக்களாக நியமிக்கும்படியும், அதன் மூலம் தங்கள் மசோதா பிரபுக்கள் சபையில் நிறைவேற உதவி செய்யும்படியும் அரசரைக் கேட்டுக் கொள்ளும். அதன்படி பிரபுக்கள் சபையில் மேலும் சில உறுப்பினர்கள் பிரபுக்களாக நியமிக்கப்படுவார்கள். அதனுல் அமைச்சரவை நினைக்கும் சாதாரணமானவர்களும் பிரபுக்களாக ஆக்கப்படும் சூழ்நிலை உள்ளது. 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தைப் பிரபுக்கள் சபை மறுத்துத் தள்ளியபோது, பிரதமரின் ஆலோசனைப்படி தாம் பிரபுக்களை நியமிக்கப் போவதாக ஐந்தாம் ஜார்ஜ் அரசர் அறிவித்தார். அதன் பின்னர் பிரபுக்கள் சபை பணிந்து அம் மசோதாவை நிறைவேற்றியது. எனவே, பிரபுக்கள் சபையைப் பொதுமக்கள் சபைக்குப் பணிந்து போகுமாறு செய்ய இவ் வதிகாரம் அரசருக்கு உதவுகின்றது.

ஒரு சமயத்தில் சட்டம் அரசரின் சட்டமாகவே (King's Law) பாவிக்கப்பட்டது. அச் சட்டம் அரசரின் நீதிமன்றங்களில் (King's Courts) பயன்படுத்தப் பெற்றது. அரசரின் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட முடிவுகளையும் சில சமயங்களில் அரசர் மாற்றியமைப்பதும் வழக்கமாயிருந்தது. ஆனுல், இப்பொழுதுள்ள நிலைமை முற்றிலும் மாருனது. பாராளுமன்றத்தின் அனுமதியின் மீது தான் நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன. அந் நீதிமன்றங்கள் செயல்பட வேண்டிய ஒழுங்கு முறைகளும் நிர்ணயம் செய்யப்படுகின்றன. நீதிபதிகளைப் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி நீக்க முடியாது. பாராளுமன்றத்துக்கு எல்லா அதிகாரங்களும் இருந்த போதிலும், இன்னமும் பெயரளவில் அரசர் அல்லது அரசியார்தான் நீதிபதிகளை நியமிக்கின்றுர். தவிர நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்துவிட்டு, மன்னிப்புக் கொடுக்கப்படும் (Pardon) அதிகாரமும் அரசருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசர்தான் இங்கிலாந்து ஆட்சித்துறையின் தலைவராவார். அரசரின் பெயரால்தான் எல்லா நிர்வாகச் செயல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லா சிவில், இராணுவ அதிகாரிகளும் அரசரால்தான் நியமிக்கப்படுகின்றனர். அரசர்தான் நாட்டின் முப்படைகளுக்கும் தலைவராவார். வெளிநாடுகளுக்குத் தூதுவர்களை நியமிப்பதும், வெளிநாட்டுத் தூதுவர்களை வரவேற்பதும் அரசர் தான். அரசரின் பெயரில்தான் வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படுகின்றன. அரசரின் பெயரால் தான் போர்ப் பிரகடனம் செய்வதும், அமைதியை ஏற்படுத்துவதும்

செய்யப்படுகின்றன. அத்துடன் அரசர் குடிமக்களுக்கு கௌரவப் பட்டங்களை அளிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் அரசர் ஆங்கிலிக்கத் திருச்சபையின் தலைவராவார், அவர்தான் ஆங்கிலிக்கத் திருச்சபையின் மேற்றிராணியார்களையும் (Bishops), அதிமேற்றிராணியார்களையும் (Arch-Bishop) நியமிக்கின்றார். அரசரின் இசைவோடு தான் காண்டர்பரி, யார்க் ஆகிய திருச்சபைகளின் திருக் கூட்டங்களும் நடைபெறுகின்றன.

பேஜ்ஹாட் (Bagehot) என்னும் ஆசிரியர் அரசருக்கு மூன்று உரிமைகள் இருப்பதாகக் கூறுகின்றார். அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறவும் (Right to be Consulted), உற்சாகமூட்டவும் (Right to Encourge), எச்சரிக்கை செய்யவும் (Right to Warn) அரசருக்கு உரிமை உண்டு என்று தமது 'ஆங்கிலேய அரசியல் அமைப்பு' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். இவ் வுரிமைகளை வெவ்வேறு அரசர்களும், அரசியார்களும் தங்கள் ஆற்றலுக்கும், செல்வாக்குக்கும் ஏற்ப, வெவ்வேறு விதமாய்ப் பயன்படுத்தி உள்ளனர்,

விக்டோரியா மகாராணியார் இத்தகைய உரிமைகளைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். 1839ஆம் ஆண்டில் மெல்போர்ன் தமது பதவியை ராஜிநாமா செய்தவுடன் வேறு வழியின்றித் தமக்குப் பிடிக்காத பீல் என்பவரை பிரதமராக்கும் நிலைமை விக்டோரியா மகாராணியாருக்கு ஏற்பட்டது. பீல் பிரதமராகப் பணியாற்றும்போது, பள்ளியறைச் சீமாட்டிகள் பற்றிய பிரச்சினை எழுந்தது. தற்போதுள்ள பள்ளியறைச் சீமாட்டிகளை நீக்கிவிட்டுத் தமது கட்சிக்குச் சாதகமானவர்களையே நியமிக்க வேண்டுமென்று பீல் வற்புறுத்தினர். அரசியார் தமது சொந்த உரிமையில் பீல் தலையிடுவதாகக் கூறி அவரது வேண்டுகோளை மறுத்துவிட்டார். பின்னர் கிளாட்ஸ்டன் பிரதமரானபோது, விக்டோரியா மகாராணியார் அடிக்கடி டிஸ்ரேலியைக் கலந்தாலோசிப்பது வழக்கம். ஆனுல், 'கேபினெட்' அமைச்சர்களை மட்டுமே அரசியார் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதே இன்று யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட மரபாகும். அமைச்சரவையின் வெளிநாட்டுக் கொள்கையிலும் விக்டோரியா மகாராணியார் அடிக்கடி தலையிட்டு வந்தார். ஐரோப்பாவில் பல அரசர்கள் இராணியாருக்கு உறவினர்களாக இருந்ததால் அவர்களோடு ஒத்துப்போகும்படி அரசியார் பாமர்ஸ்டனைக் கேட்டுக் கொண்டார், இதைக் கவனியாது பாமர்ஸ்டன் தம் விருப்பப்படி நடந்தார். அதனுல்

1850ஆம் ஆண்டில் இராணியார் பாமர்ஸ்டனுக்கு ஒரு குறிப்புரை அனுப்பினர். அதில் அமைச்சர்கள் தம்மைக் கலந்தாலோசித்த பின்பே வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டுமென்றும், அங்ஙனம் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளைத் தமது ஒப்புதலின்றி மாற்றக்கூடாதென்றும் வற்புறுத்தியிருந்தார். ஆனல், பாமர்ஸ்டன் அக் குறிப்பையும் பொருட்படுத்தாமல் ஃபிரான்சில் ஏற்பட்ட புரட்சி அரசாங்கத்தை இராணியின் அனுமதியின்றியே அங்கீகரித்தார். அதனல் கோபமுற்ற இராணியார் ரஸ்ஸெல் என்ற பிரதமரிடம் உடனே பாமர்ஸ்டனை வெளிநாட்டமைச்சர் பதவியினின்று நீக்கும்படி கோரினர். அவ்வாறே பாமர்ஸ்டன் வெளிநாட்டமைச்சர் பதவியினின்று நீக்கப்பட்டார். இவ்வாறு விக்டோரியா மகாராணியார் தம்மைக் கலந்தாலோசிக்கும் உரிமையை நன்கு நிலைநாட்டினர்.

அதேபோல் கிரிமியப் போரிலும், தென் ஆப்பிரிக்கப் போரிலும் தளர்ந்துபோ யிருந்த அமைச்சர்களையும் போர்வீரர்களையும் உற்சாகப்படுத்த இராணியார் தவறவில்லை. அதே சமயத்தில் அமைச்சரவைக்கு எச்சரிக்கை செய்யவும் இராணியார் மறந்து விடவில்லை. ரோஸ்பரி என்னும் அமைச்சர் பிரபுக்கள் சபை சீர்திருத்தம் பற்றிச் சில யோசனைகள் தெரிவித்தபோது, இராணியார் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாய் எச்சரிக்கை செய்தார். இங்ஙனம் விக்டோரியா மகாராணியார் தம்முடைய உரிமைகளை நிலைநாட்ட மிகவும் முயற்சி செய்தார்.

விக்டோரியா மகாராணியாருக்குப்பின் அரியணையில் அமர்ந்த அரசர்களின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டதால் அவர்கள் தங்களின் உரிமைகளைப்பற்றி அதிகமாய்க் கவலைப்பட்டதாய்த் தெரியவில்லை. அவர்கள் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நடந்து கொண்டனர். ஆனல், அமைச்சரவையில் நிகழும் விவரங்களைப் பற்றிய குறிப்புகள் அரசர்களுக்கு அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வந்துள்ளன. பிரதம அமைச்சரும் அடிக்கடி அரசரைச் சந்தித்து எல்லா விவரங்களையும் அவருடன் கலந்து ஆலோசிப்பது வழக்கமாக உள்ளது. அரசருக்கு ஆலோசனை யளிக்கும் உரிமை இருந்தபோதிலும், இறுதியான முடிவுகளை பிரதமர்தான் எடுக்கவேண்டும். அதனல் பிரதம அமைச்சர்கள் அரசர்களைக் கலந்து ஆலோசனை செய்யும் பழக்கத்தை விட்டு விடவில்லை. ஆனல், அதே சமயத்தில் அரசர்களின் அபிப்பிராயங்களுக்கு அமைச்சர்கள் மதிப்பளிக்கும் பழக்கத்தையும் முற்றிலும் புறக்கணித்து விடவில்லை.

ஆங்கில மக்கள் அரசரை தேசபக்தியின் சின்னமாகவும், ஒற்றுமையின் சின்னமாகவும் கருதி வருகின்றனர். அரசருடைய ஆட்சியில் தங்களுக்குப் பாதுகாப்பு உள்ளது என்று அவர்கள் நினைக்கின்றனர். 'அரசர் பக்கிங்காம் அரண்மனையில் இருந்தால் தான் தாங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்' என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. மேலும் அவர்கள் தங்களின் சமூக, அரசியல், பொருளாதார சுதந்திரங்களைத் தடையின்றி அனுபவிக்கின்றனர். ஆகவே, அங்கு முடிசூடிய குடியாட்சிதான் (Crowned Republic) நடைபெறுகின்றது. அங்ஙனம் இருக்கும்போது ஆங்கில மக்கள் முடியாட்சியை வெறுக்கவில்லை. அதற்கு மாறாக அதையே விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

28. கேபினெட் அமைச்சரவை

இங்கிலாந்தின் அரசர்கள் ஆரம்பத்திலிருந்தே தங்களுக்கு அரசாங்க காரியங்களைப்பற்றி ஆலோசனை கூறுவதற்கென ஒரு அவையை வைத்திருந்தார்கள், அத்தகைய அவை ஆங்கிலோ-சாக்சானியர்கள் (Anglo-Saxons) காலத்தில் விடனஜ்மூட் (Wite-nagemot) என்று அழைக்கப்பட்டது. அதில் நாட்டிலிருந்த அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். அவ் அவையின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். ஓர் அரசாங்க அதிகாரியோ அல்லது சாதாரண மனிதனோ அவ் அவையின் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது. இத்தகைய அவையின் ஆலோசனையை அரசர் அடிக்கடி பெற்று வந்தார். நார்மானிய அரசர்கள் காலத்து அது கியூரியா ரிஜிஸ் (Curia Regis) என்ற பெயரைப் பெற்றது. அதில் நாட்டிலிருந்த சிறந்த அறிஞர்களும், உயர் அரசாங்க அதிகாரிகளும், திருச்சபைத் தலைவர்களும் இடம் பெற்றிருந்தனர். அதன் பின்னர் அது பிரிவி கவுன்சிலாக (Privy Council) வளர்ச்சியடைந்தது.

பிரிவி கவுன்சில் ஓர் உறுதியான நிறுவனமாக இருந்து வந்தது. முக்கியமான பிரச்சினைகளை அரசர்கள் அக் கவுன்சிலின் ஆலோசனையைக் கேட்டே தீர்த்து வந்தனர். டியூடர்களின் ஆட்சியின்போது அது அதிகாரத்தின் உச்ச கட்டத்தை எய்தியது. சட்ட ஆக்க, நிருவாக, நீதி பரிபாலன நிறுவனமாக டியூடர்கள் அதைப் படைத்தனர். அப்பொழுது பிரிவி கவுன்சில் அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. அவசரச் சட்டங்களைச் செயல் படுத்தியது. அத்தகைய சட்டங்களுக்குப் பணியாதவர்களை கவுன்சில் தண்டித்தது. பிரிவி கவுன்சிலின் ஓர் அங்கமாக இருந்த விண்மீன் நீதிமன்றம் (Court of Star Chamber) அரசியல் குற்ற ஆய்விற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. கடும் சோதனை முறையைப் பயன்படுத்திக் குற்றவாளிகளிடமிருந்து உண்மையைப் பிழிந்தெடுத்தது ஆனால், பாராளுமன்றம் அரசரை உறுதியாக எதிர்த்ததால் பிரிவி கவுன்சிலின் அதிகாரம் குறைந்தது. 1641ஆம் ஆண்டில் விண்மீன் நீதிமன்றமும் ஒழிக்கப்பட்டது. உள்நாட்டுப் போரின்போதும். பொதுநல அரசு காலத்தின்போதும்

பிரிவி கவுன்சில் செயல் குன்றி மறைந்தது. 1660ஆம் ஆண்டில் இது மீட்டுயிர்ப்பு பெற்றபொழுது இதனுடைய அதிகாரங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன.

பிரிவி கவுன்சிலில் இன்று 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். கான்டர்பரி, யார்க் ஆகிய திருச்சபைகளின் மேற்றி ராணியார்களும் (Archbishops), முன்னுளைய கேபினெட் அமைச்சர்களும், இந்நாளைய கேபினெட் அமைச்சர்களும் பொது மக்கள் சபையின் தலைவரும், பல உயர்தர நீதிபதிகளும், மேல் முறையூட்டு நீதிபதிகளும், உயர்தர தூதுவர்களும் இங்கிலாந்திலும் காமன்வெல்த்திலுமுள்ள மற்ற முதன்மையானவர்களும் மற்றும் இலக்கியம், விஞ்ஞானம், கலை, அரசியல் போன்ற துறைகளில் சிறப்பாக உள்ள நிபுணர்களும், அரசியல் விருதுகள் வழங்கப் பெற்றவர்களும் பிரிவி கவுன்சிலில் இடம் பெற்றுள்ளார்கள். பிரிவி கவுன்சிலில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வழக்கமாக அவர் ஆயுட் காலம் முழுவதும் உறுப்பினராக இருக்கலாம். அரசர் அல்லது கவுன்சில் ஆணைப்படி, ஒரு பிரிவி கவுன்சிலரைப் பதவியிலிருந்து விலக்கலாம். இப்பொழுதுள்ள பிரிவி கவுன்சிலில் பழைய அமைச்சர்களும், புதிய அமைச்சர்களும் தான் பெரும்பான்மை உறுப்பினர்களாக உள்ளனர்.

கேபினெட் ஆட்சிமுறை வளர்ச்சியடைந்தபிறகு, பிரிவி கவுன்சில் ஒரு சாதாரண நிறுவனமாகிவிட்டது. அரசர் இறக்கும் பொழுதோ அல்லது அரசரின் திருமணத்தின் போதோ தான் இது ஒரு சபையாகக் கூடும். இருந்தபோதிலும் இக் கவுன்சிலின் கூட்டங்கள் நான்கு அல்லது ஐந்து வாரங்களுக்கொருமுறை கூட்டப்படுகின்றன. இக் கூட்டங்களுக்குக் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஆனால், வழக்கமாக நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்கள் இக் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள். இவர்கள் அனேகமாக கேபினெட் உறுப்பினர்களாக இருப்பர். இந்தப் பிரிவி கவுன்சிலுக்கு ஒரு தலைவர் (Lord President) உண்டு. பிரிவி கவுன்சிலின் கூட்டம் பக்கிங்காம் அரண்மனையில் அரசருடன் சேர்ந்து கூடுவது வழக்கமாகும். அப்பொழுது அந்த கவுன்சில் அரசரது கவுன்சில் (King-in-Council) என்று அழைக்கப்படும். ஆனால், அவசர காலங்களில், அரசரில்லாமலேயே அக் கவுன்சில் கூடுவதும் உண்டு.

அரசாங்க அலுவல்கள் அதிகமாகி வருவதால் சில முக்கியமான ஆணைகள், பிரிவி கவுன்சிலால் பிரகடனம் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் கவுன்சிலின் ஆணைகள் (Orders-in-

Council) என்று கூறப்படுகின்றன. பிரிவி கவுன்சிலுக்கு சட்டங்களை இயற்றும் உரிமை கிடையாது. அவ் வுரிமைகளை கேபினெட்டும் பாராளுமன்றமும் கைப்பற்றிக் கொண்டன. கேபினெட்டானது அரசாங்கக் கொள்கைகளை வகுத்து, அவற்றின் விதிமுறைகளை நிர்ணயம் செய்கின்றது. சில சமயங்களில் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் அவற்றை நிறைவேற்றிச் செயலாக்குவதற்குக் கால தாமதமாகிவிடும். அதனால் பிரிவி கவுன்சிலின் ஆணைகள் மூலமாகவே அவற்றைச் செயலாக்குவது அதற்கு வழக்கமாகிவிட்டது. பிரிவி கவுன்சிலின் ஆணைகளுக்கு சட்டங்களுக்குள்ள சக்தி அளிக்கப்பட்டுள்ளது.

பிரிவி கவுன்சிலில் சில குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளுள் 1833ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்படி ஏற் படுத்தப்பட்ட நீதிக்குழு (Judicial Committee) மிகச் சிறந்த குழுவாகும். திருச்சபை நீதிமன்றங்கள், கடற்படை நீதிமன்றங் கள், காலனி நீதிமன்றங்கள் ஆகிய நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்க இக் குழு அதிகாரம் பெற்றுள்ளது. இதைத்தவிர விஞ்ஞானத் தொழில்குழு, வைத்திய ஆய்வுக் குழு, வேளாண்மை ஆய்வுக்குழு போன்ற பல குழுக்களும் பிரிவி கவுன்சிலில் இடம் பெற்றுள்ளன.

கேபினெட்டின் வளர்ச்சி

ஆறும் எட்வர்டு (Edward VI) ஆட்சி செய்து கொண்டிருந்த பொழுது பிரிவி கவுன்சிலிலுள்ள ஒரு குழுவினரிடம் சில முக்கியமான அரசாங்கப் பொறுப்புகள் தரப்பட்டன. ஆனால் அக் குழுவுக்கு அரசாங்க அலுவல்களைப் பார்க்கும் குழு (Committee of State) என்று பெயர் தரப்பட்டது. 1667ஆம் ஆண்டில் இரண்டாம் சார்லஸ் (Charles II) தமது நம்பிக்கைக்குரியவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தார். அக் குழுவில் கிளிபோர்ட் (Clifford) ஆர்லிங்டன், (Arlington), பக்கிங்காம் (Buckingham), ஆஷ்லி (Ashley), லாடர்டேல் (Lauderdale) என்னும் ஐவர் இடம் பெற்றனர். இந்த ஐந்து ஆலோசனையாளர்களின் பெயர்களில் காணப்படும் முதல் எழுத்துக்கள் எடுத்துச் சேர்க்கப்பட்டு கபால் (Cabal) என்று இக் குழு அழைக்கப்பட்டது. இக் கபால்குழு அடிக்கடி இரகசியமான அறையொன்றில் (Cabinet) கூடியதால் பின்னர் 'கேபினெட்' என்ற பெயரில் இது அழைக்கப்பட்டது. இக் குழு பிரிவிகவுன்சிலின் ஒரு குழு அன்று. ஏனெனில் இக் குழுவின் உறுப்பினர்கள் அரசரின் விருப்பப்படியே நியமிக்கப் பட்டவர்கள். அத்துடன் அவர்கள் அரசரின் நம்பிக்கைக் குரியவர்கள்; பாராளுமன்றத்தில் செல்வாக்குப் படைத்தவர்கள்.

தாம் நினைத்ததைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்க அரசர் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டார். முக்கியமான பிரச்சினை பற்றி அரசர் அவர்களின் ஆலோசனையைப் பெற்றார், இக் குழுவின் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் வெறுத்தனர். ஆகையால், அவர்கள் தற்கால கேபினெட்போல் ஒரு குழுவாக இணைந்து செயல்படவுமில்லை. மேலும் கபால் ஒரு நிரந்தரமான நிறுவன மாகவும் இருக்கவில்லை. இரண்டாம் சார்லஸ் தம் அமைச்சர்களை நியமிக்கும்போது, அவர்களுக்குப் பாராளுமன்றத்தின் ஆதரவு இருக்கின்றதா? இல்லையா? என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அத்துடன் அவர்கள் எக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அத்தகைய அமைச்சர்கள் அரசருக்குத் தான் பொறுப்புள்ளவர்களாக இருந்தார்களேயொழிய, பாராளு மன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இல்லை, ஆகவே, தற்கால கேபினெட் முறை இரண்டாம் சார்லஸ் காலத்தில் இருக்கவில்லை. ஆனால், தற்கால கேபினெட் முறைக்கு அவர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டதாகக் கருதலாம்.

1688ஆம் ஆண்டில் ஏற்பட்ட புகழ்பெற்ற புரட்சிக்குப் பின்பு பாராளுமன்றம் அதிக அதிகாரங்களைப் பெற்றது, ஆகவே, கேபினெட் அமைச்சரவையின் வளர்ச்சி தவிர்க்க முடியாததாகி விட்டது. மூன்றும் வில்லியம் காலத்தில் எல்லா அமைச்சர்களும் அவராலேயே நியமிக்கப்பட்டனர். அத்துடன் அவரின் கட்டுப் பாட்டிலேயே அமைச்சர்களின் செயல்கள் இருந்தன. இருந்த போதிலும் மூன்றும் வில்லியம் காலத்தில் ஒரு முக்கியமான வழக்கம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அவர் தம் அமைச்சர்களை விக்கு, டோரி ஆகிய இரு கட்சிகளினின்றும் தேர்ந்தெடுத்துக்கொண்டார். இங்ஙனம் இரு கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை ஒழுங்காக நல்ல முறையில் செயல்படவில்லை என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே, 1693 - 96ஆம் ஆண்டுகளில் விக்கு கட்சியிலிருந்து மட்டுமே தம் ஆலோசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். தம் நன்மைக்காகவே மூன்றும் வில்லியம் இவ்வாறு ஒரே கட்சியிலிருந்து தம் ஆலோசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட போதிலும், நாளடைவில் அது 'பொது மக்கள் சபையில் எக்கட்சிக்குப் பெரும்பான்மை உள்ளதோ, அக் கட்சியின் உறுப்பினர்களே அமைச்சர்களாக வேண்டும்' என்ற மரபை ஏற்படுத்தியது.

நாட்டில் ஏற்படும் இத்தகைய வளர்ச்சியைப் பாராளுமன்றம் விரும்பவில்லை. கேபினெட்முறை வளர்ச்சியை அதன் ஆரம்ப காலத்திலேயே தடுத்து நிறுத்தக்கூட பாராளுமன்றம் முயன்றது. அதற்காக 1701ஆம் ஆண்டில் அரசுரிமை நிர்ணயச் சட்டத்

தையும் (Act of Settlement) இயற்றியது. அதன்படி அரசாங்கத்திடம் சம்பளம் வாங்கிக் கொண்டு பணியாற்றுபவர்கள் பொது மக்கள் சபையின் உறுப்பினராக இருக்கக் கூடாதென்றும், இனிமேல் எல்லா அரசாங்க விவகாரங்களையும் பிரிவி கவுன்சிலே தீர்மானிக்க வேண்டுமென்றும், அத் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டதாக பிரிவி கவுன்சிலின் உறுப்பினர்கள் கையொப்பமிட வேண்டுமென்றும் கூறப்பட்டது. ஆனால் இத்தகைய மாற்றங்கள் எல்லாம் ஆன் அரசியார் காலத்தில் ரத்து செய்யப்பட்டன. இது ரத்து செய்யப்படாமல் சட்டமாகவே இருந்திருக்குமானால், கேபினெட் முறையின் வளர்ச்சி நிச்சயமாக நின்றுபோயிருக்கும். எல்லா அரசாங்க விவகாரங்களைப்பற்றியும் பிரிவி கவுன்சிலே தீர்மானிக்குமானால், கேபினெட் செயல்படுவதற்குச் சூழ்நிலையே இல்லாமல் இருந்திருக்கும். தாங்கள் அரசருக்கு வழங்கும் ஆலோசனைகளுக்கு கேபினெட் அமைச்சர்கள் கையொப்பமிட வேண்டியிருந்ததால், அவர்கள் ஆலோசனை அளிக்கவே விரும்பியிருக்க மாட்டார்கள். அதனால் கேபினெட்டில் நடக்கும் சுதந்திர விவாதத்திற்கே இடமில்லாமல் போயிருக்கக் கூடும். நல்ல வேளையாக இது 1703ஆம் ஆண்டில் ஆன் அரசியார் காலத்தில் ரத்து செய்யப்பட்டது.

ஹனோவரியர் அரசர்களான முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் ஆட்சிக் காலங்களில்தான் கேபினெட் அமைச்சரவை முறை தடையின்றி நல்லமுறையிலே வளர்ந்தது. 1714ஆம் ஆண்டிலிருந்து 1770ஆம் ஆண்டுவரை விக்குகட்சியின் ஆட்சியே அங்கு நடைபெற்றதெனலாம். முதலாம் ஜார்ஜ் அரசருக்கு ஆங்கில மொழி தெரியாததால், அமைச்சர்குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதை நிறுத்திக் கொண்டார். அவருக்கு வயது அதிகமாகிவிடவே, ஆங்கில மொழியை அரியணை ஏறியதற்கு முன்னேயும் பின்னேயும் கற்க அவர் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அத்துடன் ஆங்கில நிருவாக முறைகள் சிக்கலுடையனவாய் இருந்ததனால் அதைப் புரிந்துகொள்ள அவரால் முடியவில்லை. அதனால் அவர் எல்லாவற்றையும் விக்கு கட்சியினிடமே ஒப்படைத்து விட்டார். இரண்டாம் ஜார்ஜும் அவரையே பின்பற்றினார், ஆகவே, அமைச்சரவையின் கூட்டங்களுக்கு மூத்த அமைச்சரான சர் ராபர்ட் வால்போல் (Sir Robart Walpole) என்பவரே தலைமை வகித்தார். அவர் பிரதம அமைச்சரென அழைக்கப்பட்டார். அன்றிலிருந்துதான் பிரதமர் என்ற பதவியே ஏற்பட்டது. சர் ராபர்ட் வால்போல் காலத்தில்தான் கேபினெட் முறை நன்கு வளர்ச்சியடைந்தது. அவர் காலத்தில் ஏற்பட்ட கேபினெட்முறை மரபுகளாவன:

1. எல்லா அமைச்சர்களும் ஒரே கட்சியினின்றும் நியமிக்கப்படுதல் (Same Party).

2. எல்லா அமைச்சர்களும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்க வேண்டுமென்பதாகும் (Homogenity).

3. எல்லா அமைச்சர்களும் பிரதமரின் தலைமையின் கீழ் பணியாற்ற வேண்டும். அத்துடன் பிரதமரின் கருத்துப்படியே எல்லா அமைச்சர்களும் செயல்பட வேண்டும். சர் ராபர்ட் வால்போல் தம் கருத்தை ஏற்றுக் கொள்ளாத டௌன்ஷென்ட் (Townshend) புல்டினி (Bulteny), கார்ட்டரெட் (Carterat) போன்றோரைப் பதவி நீக்கம் செய்தார்.

4. அமைச்சர்கள் பொதுமக்கள் சபைக்குப் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும் (Ministerial Responsibility), 1742ஆம் ஆண்டில் வால்போல் பொதுமக்கள் சபையில் தோல்வியுற்றதால் தம் பதவியை ராஜிநாமா செய்து இம் மரபை ஏற்படுத்தினர்.

1760ஆம் ஆண்டில் மூன்ரும் ஜார்ஜ் இங்கிலாந்தின் அரசரானர். நாட்டில் கேபினெட் முறையை ஒழித்துவிட்டுத் தம் தனியாட்சியை நாட்டில் ஏற்படுத்த முயன்ருர். உரிமைகள் மசோதா, அரசுரிமை நிர்ணயச் சட்டம் ஆகியவைகளைத் தவிர மற்ற எதுவும் தம்மைக் கட்டுப்படுத்தாது என்று அறிவித்தார். விக்குகளின் காலத்தில் வளர்ந்த கேபினெட் முறை சட்ட வழியானதன்று என்றும், அதையே தாமும் பின்பற்றப் போவதில்லை என்றும் அறிவித்தார். ஆங்கில மொழி தெரியாமையும், ஆங்கில அரசியலின் அறிவின்மையும்தான் முதல் இரண்டு ஜார்ஜ் அரசர்களின் காலத்தில் கேபினெட் அமைச்சரவை வளர்ச்சியடையக் காரணமாயின. ஆனால், மூன்ரும் ஜார்ஜ் அரசர் எல்லா அதிகாரங்களையும் தாமே பெற்றுச் செயல்படுத்த விரும்பினர். அதன்படியே விக்கு அமைச்சரவையை நீக்கிவிட்டு, நார்த் பிரபுவின் (Lord North) தலைமையில் தம் விருப்பத்திற்கு ஏற்றபடி அமைச்சரவையை ஏற்படுத்தினர். அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்டதனுலும், அதில் இங்கிலாந்து தோற்றதனுலும். மூன்ரும் ஜார்ஜின் எண்ணம் நிறைவேறவில்லை. 1842ஆம் ஆண்டில் நார்த் பிரபு பொதுமக்கள் சபையின் நம்பிக்கையை இழந்ததனுல், தம் அமைச்சரவையிலிருந்து கூட்டாக ராஜிநாமா செய்தார். அதனுல் கேபினெட்முறை வளர்ச்சியில் 'அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு' (Collective Responsibility) என்ற மரபு ஏற்படுத்தப் பட்டது. 1783 முதல் 1801ஆம் ஆண்டுவரை ஆண்ட

வில்லியம் பிட் என்னும் பிரதமரின் ஆட்சிக் காலத்தில் பிரதமர் இறைமையும், கேபினெட் ஆட்சிமுறையின் பல்வேறு இலக்கணங் களும் நன்கு நிறுவப்பெற்றன.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில்கூட கேபினெட்முறை அரசாங்கம் இங்ஙனம்தான் இருக்க வேண்டுமென்று தெளிவு படுத்தப்படவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசிய லமைப்பை ஏற்படுத்தியவர்கள் கூட கேபினெட் முறையைப்பற்றிக் கூறவில்லை. 1791ஆம்ஆண்டில் இயற்றப்பட்ட கனடா சட்டம் கூட கேபினெட் முறையை ஏற்படுத்தவில்லை. ஆங்கில அரசிய லமைப்பைப்பற்றிய விளக்கவுரையில்' கூட (Commentaries on the English Constitution) பிளாக்ஸ்டோன் (Blackstone) கேபினெட் முறையைப்பற்றிக் கூறவில்லை. ஆங்கில அரசிய லமைப்பைப்பற்றி விளக்கிய டி லால்மி (De Lolme) கேபினெட் ஆட்சிமுறையைப்பற்றிக் குறிப்பிடவில்லை, ஆனால், 1867ஆம் ஆண்டில்தான் பேஜ்ஹாட் (Bagehot) என்னும் அறிஞர் தமது புகழ்மிக்க 'ஆங்கில அரசியலமைப்பு' (British Constitution) என்னும் நூலில் கேபினெட் ஆட்சிமுறையைப்பற்றித் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதியுள்ளார்.


19ஆம் நூற்றாண்டில்தான் கேபினெட் ஆட்சிமுறை இங்கி லாந்தில் ஒரு முடிவான இலக்கணத்தைப் பெற்றது. இங்கி லாந்தில் வளர்ச்சியடைந்து முழுமை பெற்ற கேபினெட் ஆட்சி முறை உலகெங்கும் பரவியது. இம் முறை ஆங்கில டொமினியன் களில் புகுத்தப்பட்டது. ஃபிரான்சு, பெல்ஜியம், இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் இதைப் பின்பற்றின. முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனி, ஆஸ்திரியா, போலந்து, செக்கோஸ் லோவாக்கியா போன்ற நாடுகளில் இம் முறை புகுத்தப்பட்டது. இந்தியா கூட இக் கேபினெட் முறை ஆட்சியை ஏற்றுக் கொண்டது. இன்றும் பல நாடுகளும் இம் முறையை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆகவே, ஜனநாயக வளர்ச்சிக்கு ஆங்கில மக்களால் கொடுக்கப்பட்ட கேபினெட் அமைச்சரவைமுறை ஓர் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகிறது.

கேபினெட்டின் அமைப்பு

பொதுத் தேர்தலுக்குப்பின் பொதுமக்கள் சபையில் பெரும் பான்மை ஆதரவு பெற்றுள்ள அரசியல் கட்சித் தலைவரை, அரசர் அழைத்து பிரதம அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளச் செய்வார். பின்னர் பிரதம அமைச்சர் மற்ற அமைச்சர்களை நியமனம் செய்யும் பணியில் ஈடுபடுவார். பிரதம அமைச்சர் பிற

அமைச்சர்களை நியமனம் செய்வதற்கு முன்னர், கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை செய்வார். அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் பிரதம அமைச்சரின் விருப்பம்தான் மேலோங்கி நிற்கும். கட்சியில் செல்வாக்குமிக்கவர்கள், திறமை மிக்கவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள், போன்றோரை பிரதம அமைச்சர் தேர்ந்தெடுத்த பிறகு அவருடைய அமைச்சர் பட்டியலை வெளியிடுவார். அப்பட்டியலை அரசர் ஏற்றுக் கொண்டபிறகு அமைச்சர்கள் பெயர்கள் அரசாங்க கெஜட்டில் வெளியிடப்படும். சில சமயங்களில் எக் கட்சிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காமல் போனல் கூட்டு அமைச்சரவை ஏற்படுவதுண்டு. அப்பொழுது பல கட்சியிலுள்ள தலைவர்கள் கூட்டு அமைச்சரவையில் இடம் பெறுவர்.

இங்கிலாந்தில் அமைச்சர் அவைக்கும் (Council of Ministers) அமைச்சர் குழுவுக்கும் (Cabinet) வேறுபாடு உண்டு. பொதுத் தேர்தலுக்குப்பின், பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் பிரதமராகின்ருர். அவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட அமைச்சர்களை நியமிக்கின்ருர். இத்தகைய அரசாங்கத்திலுள்ள எல்லா வகை அமைச்சர்களைக் கொண்டதே அமைச்சர் அவை (Council of Ministers) ஆகும். இத்தனை அமைச்சர்களில் 20லிருந்து 23 அமைச்சர்களுக்கு அரசாங்கத்தின் முக்கியமான துறைகள் அளிக்கப்படும். அவர்கள் அக் கட்சியின் மூத்த தலைவர்களாகவும், திறமைமிக்கவர்களாகவும், அனுபவம் வாய்ந்தவர்களாகவும், பிரதம அமைச்சருக்கு மிகவும் வேண்டியவர்களாகவும் இருப்பார்கள். அத்தகைய அமைச்சர்களைக் கொண்ட அமைப்புதான் கேபினெட் அமைச்சர் குழுவாகும்.



படம் 1.

இங்கிலாந்து அமைச்சரவையில் நான்கு விதமாக அமைச்சர்கள் இடம் பெறுகின்ருர்கள்.

1. கேபினெட் அமைச்சர்கள்.
2. கேபினெட் தகுதியற்ற சாதாரண அமைச்சர்கள்,
3. உதவி அமைச்சர்கள்.
4. பாராளுமன்றச் செயலாளர்கள்.

ஒவ்வொரு அமைச்சருக்கும் பாராளுமன்றச் செயலாளர் உண்டு. பாராளுமன்றத்தில் அமைச்சரின் சார்பில் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும், துறைகளின் பணிகளில் உதவி செய்யவும் இவர்கள் துணையாக இருக்கின்றார்கள். ஆளும் கட்சியிலுள்ள இளம் தலைவர்களுக்கு அமைச்சர் பணியில் நல்ல பயிற்சியளிப்பதற்காகவே, அவர்கள் பாராளுமன்றச் செயலாளர்களாக நியமிக்கப்படுகின்றார்கள்.

இந்த நான்கு வகையான அமைச்சர்களும் அமைச்சரவையின் உறுப்பினர்கள். அவர்கள் அனைவரும் பெரும்பான்மைக் கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்கள் தனியாகவும், கூட்டாகவும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளவர்கள். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் வரையில் அவர்கள் ஆட்சி செய்யலாம். பாராளுமன்றத்தின் நம்பிக்கையிழந்தால், அவர்கள் கூட்டாகப் பதவி விலகவேண்டும். அமைச்சரவையிலுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் ஒன்றுகூடி நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதென்பது மிகவும் கடினமான காரியமாகும். அதனால்தான் கேபினெட் அமைச்சர்கள் மட்டும் ஒன்று கூடி எல்லாக் கொள்கைகளையும் உருவாக்குகின்றார்கள்.

பிரதம அமைச்சர் பிற அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அரசர் சில சமயங்களில் தம் விருப்பத்தைத் தெரிவிப்பார். அரசரின் விருப்பத்தை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் பிரதம அமைச்சரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் பிரதம அமைச்சர் முழுச் சுதந்திரத்தையும் பெற்றுள்ளார். ஆனால் சில சமயங்களில் அரசரின் விருப்பத்தை ஏற்க வேண்டி வரும். சில வேளைகளில் கட்சித் தலைவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டியிருக்கும். விக்டோரியா மகாராணியார் காலத்தில், கிளாட்ஸ்டனின் அமைச்சரவையில் ஹாலிபாக்ஸ் பிரபுவை (Lord Halifax) சேர்த்துக் கொள்ளும்படி இராணியார் கிளாட்ஸ்டனுக்குக் கடிதம் எழுதினார். ஆனால், பிரதமர் கிளாட்ஸ்டன் இராணியாரின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. 1886 ஆம் ஆண்டில் சாலிஸ்பரி பிரபு பிரதம அமைச்சரானபோது இராணியார் சர். இ. மாலட் (Sir. E. Mallet) என்பவரை வெளிநாட்டமைச்சராக நியமிக்கும்படி பிரதமரைக் கேட்டுக் கொண்டார். ஆனால், சாலிஸ்பரி பிரபு அப் பதவிக்கு வேறொருவரைத் தான் நியமித்தார். சில சமயங்களில் பிரதம அமைச்சர் நியமிக்கும் அமைச்சர்களை வேண்டாம் என்று அரசர் கூறலாம். 1868ஆம் ஆண்டில் கிளாரண்டன் பிரபுவை (Lord Clarendon) வெளி

நாட்டு அமைச்சராக நியமிக்க வேண்டாமென்று இராணியார் பிரதமரைக் கேட்டுக் கொண்டார். ஆனால், பிரதமராக இருந்த கிளாட்ஸ்டன் இராணியாரின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அரசரின் எதிர்ப்பைத் தவிர்க்கக் கூடிய முறையில் பிரதமர் அரசரின் விருப்பத்திற்கு ஏற்ப நடந்துகொள்ள லாம். ஆனால், அரசரின் விருப்பத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பிரதமருக்கு இல்லை. எனவே, அமைச் சரவையை ஏற்படுத்துவதில் பிரதமர் முழு சுதந்திரத்தைப் பெற்றுள்ளார்.

முன்னர் பெரும்பான்மையான கேபினெட் அமைச்சர்கள் பிரபுக்கள் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அப்படிச் செய்வதில் எந்தவித தடையும் இருந்ததில்லை. ஆனால், 1937ஆம் ஆண்டில் அரசின் அமைச்சர்களை நியமிக்கும் சட்டம் (Ministers of the Crown Act) நிறைவேற்றப்பட்ட பின், பிரபுக் கள் சபையிலிருந்து குறைந்தபட்சம் மூன்று கேபினெட் அமைச்சர் களும், மூன்று உதவி அமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்ற வழக்கம் ஏற்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படி கேபினெட் அமைச்சர்களாக :

1. பிரதம அமைச்சரும், கருவூலத்தின் முதல் பிரபுவும். (Prime Minister and First Lord of the Treasury)
2. நிதி அமைச்சர் (Chancellor of Exchequer)
3. உள்துறை அமைச்சர் (Secretary of State for Home Affairs)
4. காமன்வெல்த் அமைச்சர் (Secretary of State for Commonwealth)
5. வெளி நாட்டமைச்சர் (Secretary of State for Foreign Affairs)
6. காலனி அமைச்சர் (Secretary of State for Colonies)
7. போர்த்துறை அமைச்சர் (Secretary of State for War)
8. விமானத்துறை அமைச்சர் (Secretary of State of Air)
9. ஸ்காட்லாந்து அமைச்சர் (Secretary of State for Scotland)
10. கடல்துறை அமைச்சர் (First Lord of Admirality)

11. வர்த்தக அமைச்சர் (President of the Board of Trade)

12. வேளாண்மை, மீன் பிடிப்புத்துறை அமைச்சர் (Minister of Agriculture & Fisheries)

13. கல்வித்துறை அமைச்சர் (President of Board of Education)

14. சுகாதார அமைச்சர் (Minister of Health)

15. தொழில்துறை அமைச்சர் (Minister of Labour)

16. போக்குவரத்து அமைச்சர் (Minister of Transport)

17. கூட்டிணைப்பு அமைச்சர் (Minister of Co-ardination)

18. கவுன்சிலின் தலைவர் (Lord President of the Council)

19. பிரிவிசீல் பிரபு (Lord Privyseal)

20. அஞ்சல்துறைத் தலைவர் ((Post Master-General).

21. பொதுப் பணித்துறை அமைச்சர். (First Commissionar of Works)

22. பென்ஷன் (உதவித் தொகை) அமைச்சர் (Minister of Pensions).

இவர்களுடைய சம்பள விகிதங்களும் இச் சட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. பிரதம அமைச்சர், கருவூலப் பிரபு பதவி வகிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 10,000 பவுன்களும், மற்ற கேபினெட் அமைச்சர்களுக்கு ஆண்டொன்றுக்கு 5000 பவுன்களும், உதவி அமைச்சர்களுக்கு 3000 பவுன்களும், பாராளுமன்ற உதவிச் செயலாளர்களுக்கு 1500 பவுன்களும் ஆண்டொன்றுக்குத் தரப்பட வேண்டுமென்றும் இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவருக்கு (Leader of the Her Majesty's Opposition) ஆண்டொன்றுக்கு 5000 பவுன்களும் தரப்பட வேண்டும்.

இங்ஙனம் அமைக்கப்பட்ட அமைச்சரவை ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கும். ஆனால், இதுவே நிரந்தரமானது என்று கூறுவதற்கில்லை. பிரதமர் நினைத்தால் எப்பொழுது வேண்டுமானாலும் தம் அமைச்சரவையை மாற்றி அமைக்கலாம். ஐந்து ஆண்டுகளுக்குப்பின் பொதுத்தேர்தல் நடைபெறும். அத் தேர்தலில் ஆளும் கட்சியே வெற்றி பெற்றால், இவ் வமைச்சரவையே

தொடர்ந்து பதவி வகிக்கலாம். அல்லது பிரதமர் அமைச்சரவையை மாற்றி அமைக்கலாம். ஆனால், பொதுத்தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியடைந்துவிட்டால், பிரதமர் தம் அமைச்சரவையைக் கலைத்து விடுவார். வெற்றி பெற்ற கட்சியின் தலைவர் பிரதமராக்கப்படுவார். அவர் தம் புதிய அமைச்சரவையை ஏற்படுத்துவார். ஐந்தாண்டுகள் நிறைவேறுவதற்கு முன்பே அமைச்சரவை பாராளுமன்றத்தின் நம்பிக்கையையிழந்தால், பிரதமர் பொதுத்தேர்தலை நடத்தும்படி ஆலோசனை கூறுவார். அத்தேர்தலில் ஆளும் கட்சி வெற்றிபெற்றால் அதே அமைச்சரவை தொடர்ந்து நீடிக்கும். இல்லையேல் அந்த அமைச்சரவை கலைக்கப்பட்டு, வெற்றிபெற்ற கட்சி அமைச்சரவையை அமைக்கும்.

கேபினெட் அமைச்சர்குழுவின் பணிகள்

இங்கிலாந்தில் கேபினெட் அமைச்சர்குழுதான் நாட்டின் கொள்கைகளை உருவாக்குகிறது. உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை இக் கேபினெட் குழு நல்ல முறையில் ஆராய்ந்து விவாதித்து முடிவெடுக்கிறது. கேபினெட் குழுவில் எல்லா முடிவுகளும் ஒரு மனதாக எடுக்கப்படுகின்றன. யாரேனும் ஓர் அமைச்சர் கேபினெட் குழு எடுக்கும் முடிவுக்குப் புறம்பாகப் பேசினாலோ அல்லது அதை எதிர்த்தாலோ, அவர் தமது பதவியை ராஜிநாமா செய்யவேண்டியதுதான். கேபினெட் குழுவில் எடுத்த முடிவை, சரியான அரசாங்கத்துறை நிருவாகத்தின் மூலம் செயல்படுத்தவேண்டும். அம் முடிவு செயலிலுள்ள சட்டத்திற்குட்பட்டேயிருந்தால் அதைச் செயலாக்கப் புதிதாகச் சட்டம் இயற்றப்பட வேண்டியதில்லை. ஆனால், அம் முடிவு செயலிலுள்ள சட்டத்தின்படி செயலாக்க முடியாதெனக் கருதப்பட்டால், அதற்காகப் புதிதாக ஒரு சட்டம் இயற்றப்படும். புதிய சட்டம் செயல்முறைக்கு வந்த உடனே அந்த முடிவைச் சரியான அரசாங்கத் துறையானது செயல்படுத்தும். ஆகவே, கேபினெட்டானது அரசாங்கத்தின் ஆட்சித் துறையையும், சட்டத் துறையையும் இணைக்கும் ஒரு பாலமாகத் திகழ்கின்றது.

இங்கிலாந்தில் சட்டப்படி ஆட்சித்துறை அதிகாரம் அரசரிடம் உள்ளது. அரசர்தான் ஆட்சித்துறையின் தலைவர். ஆனால், உண்மையில் எல்லா ஆட்சித்துறை அதிகாரங்களையும் அமைச்சர் குழுதான் பெற்றுள்ளது. இங்கிலாந்தில் ஒவ்வொரு துறைக்கும் ஓர் அமைச்சர் தலைமை தாங்குகின்றார். அத்தகைய அமைச்சர்கள் தான் கேபினெட் எடுத்த முடிவுகளைப் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்த பின்பு தங்கள் துறைகளின் மூலம் செயல்படுத்த

வேண்டும். கேபினெட் எத்தகைய முடிவு எடுத்ததோ, அதை மாற்றுமல் உள்ளபடியே அமுல் நடத்த வேண்டும். அப் பாதையிலிருந்து அமைச்சர்கள் நழுவக் கூடாது. அங்ஙனம் செயல்படாவிடில் அவர்கள் தங்களது பதவியை இழக்க நேரிடும். ஆகவே, தேசிய ஆட்சித்துறை கேபினெட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அரசாங்கத்திலுள்ள ஒவ்வொரு நிருவாகத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் அங்குப் பணிகள் திறமையாகவும், உற்சாகத்துடனும், நன்மைபயக்கும் வகையிலும் நடைபெறும். ஆகவே, பல்வேறு நிருவாகத்துறைகளை ஒருங்கிணைப்பது கேபினெட் தான். எந்த ஒரு துறையும் தனித்தியங்க முடியாது. முக்கியமான பிரச்சினைகளைப் பல துறைகள் சேர்ந்து தீர்க்க வேண்டியிருக்கும். அப்பொழுது துறைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். அத்தகைய கருத்து வேறுபாடுகளை அத் துறைகளே சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுதல் நலம். அவ்வாறு தீர்க்க முடியாதபோது, பிரதமர் அவைகளைத் தீர்க்க முயல்வார். பிரதமரின் தீர்ப்பை அத் துறைகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடைசியில்தான் அதை கேபினெட்டின் மேல்முறையீட்டிற்கு அனுப்ப வேண்டும். கேபினெட் அக் கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து முடிவு எடுக்கும். அதன் முடிவுதான் முடிவானது. ஆகவே, கேபினெட் பல துறைகளை ஒருங்கிணைந்து செயல்பட வைக்கின்றது.

அரசாங்கத்தின் செலவுக்கும் வருவாய்க்கும் கேபினெட்தான் முழு பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றது. அரசாங்கத்தின் வரவு-செலவு திட்டத்தைத் தயாரிப்பது நிதி அமைச்சரானாலும், அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன்னர், அவர் கேபினெட் குழுவின் கூட்டத்தில் அதைப்பற்றி விவரிக்க வேண்டும். வரி விதிப்புக் கொள்கையில் மாற்றம் ஏதாவது இருந்தால் அதைப்பற்றி கேபினெட் விரிவாக விவாதிக்கும். அந்த வரவு-செலவு திட்டத்துக்கு கேபினெட் ஒப்புதல் அளித்த பின்பு, அது நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். வரவு-செலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு கூட, அதில் கேபினெட் மாறுதல் செய்ய விரும்பினுல், அத்தகைய மாறுதல் செய்யப்படும். இத்தகைய வரவு-செலவு திட்டம் பொதுமக்கள் கருத்துக்கு மாருக இருக்கும் என்று கேபினெட் கருதினுல், நிதி அமைச்சர் ராஜிநாமா செய்தாலும் கவலைப்படாமல் அதைத் தூக்கி எறிய அதற்கு அதிகாரம் உள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் முக்கியமான பதவிகளுக்கு கேபினெட்தான் நியமனம் செய்கின்றது. இத்தகைய பணிகளை

எல்லாம் கேபினெட் குழு அமைதியாகவும் பெரும்பாலும் இரகசியமாகவும் செய்கின்றது. 1916ஆம் ஆண்டுக்குமுன் கேபினெட் கூட்டங்களில் வெளியார் யாரும் அனுமதிக்கப் படுவதில்லை, கூட்டங்களில் நடைபெறுபவைகள் குறித்து வைக்கப் படுவதில்லை. ஆனால், முதல் உலகப் போரின்போது அமைச்சர்கள் கூறுவனவற்றைக் குறிப்பெடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனுக்குடன் செய்திகளைத் தெரிவிக்க வேண்டி கேபினெட் செயலாளர் (Cabinet Secretary) ஒருவர் கேபினெட் கூட்டங் களுக்கு அனுமதிக்கப்பட்டார். எனவே 1916ஆம் ஆண்டிற்குப் பிறகு கேபினெட் கூட்டங்களின் நடவடிக்கைகள் பல கேபினெட் செயலாளர்களுக்கும் அவர்களது செயலகத்தார்க்கும தெரியும் படியே நடக்கின்றன. அப்போதுகூட ஒரு சில முக்கிய கூட்டங்களில் அந்நியர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. கேபினெட் கூட்டங்கள் டௌனிங் தெருவிலுள்ள (Downing Street) 10ஆம் எண் வீட்டில் அதாவது பிரதமரின் வீட்டில்தான் நடைபெறும். அத்தகைய கூட்டங்கள் ஏறக்குறைய வாரம் ஒரு முறை நடைபெறும். பிரதமர் அக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை (Agenda) கேபினெட் செயலகம் முன்னதாகவே தயாரித்து அமைச்சர்களுக்கு அனுப்பி வைத்துவிடும். கேபினெட் கூட்டங்களில் அமைச்சர்கள் தம்முள் கருத்து மாறுபடலாம். வாதமிடலாம், ஆனால், கடைசியில் யாவரும் ஒருமனதான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். கேபினெட்டின் முடிவு ஒருமனதாக இருக்க வேண்டுமென்பது ஒரு மரபாகிவிட்டது. அதன் கொள்கையைப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமில்லை. இருந்த போதிலும் கேபினெட்டும் பாராளுமன்றமும் கூட்டாக ஒத்து ழைத்தே காரியங்களைச் செய்கின்றன.

இங்கிலாந்தில் கேபினெட்டின் ஆதிக்கம் அல்லது யதேச் சாதிகாரம் (Cabinet Dictatorship) தான் நடைபெறுகின்றதென்று ராம்சே மூர் (Ramsay Muir) என்னும் அறிஞர் கூறுகின்றார். அவரின் கூற்று கீழ்க்கண்ட காரணங்களால் உண்மையெனத் தான் தோன்றுகின்றது.

1. பொதுத் தேர்தலுக்குப்பின், எக்கட்சி பொதுமக்கள் சபையில் பெரும்பான்மை ஆதரவு பெறுகின்றதோ, அக் கட்சிதான் அமைச்சரவையை அமைக்கின்றது. அத் தகைய அமைச்சரவை பாராளுமன்றம் நீடிக்கும் வரை யில் பதவியிலிருக்கும். அத்துடன் கட்சிக்குள் கடுமை யான கட்டுப்பாடு இருப்பதால் எத்தகைய ஆளும் கட்சி உறுப்பினரும் ஆதரவு தர மறுக்க முடியாது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அமைச்சரவையினிடமிருப்பதால் அவ் வதிகாரத்தைக் காட்டியே உறுப்பினர்களை அமைச்சரவையானது அச்சுறுத்திக் கொண்டிருக்கும். அதனால் எந்த உறுப்பினரும் தேர்தலினால் ஏற்படும் விளைவை ஏற்கத் தயாராயிருக்க மாட்டார். ஆகவே, பெரும்பான்மைக் கட்சிக்குத் தன் உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதால், அப் பெரும்பான்மைக் கட்சியின் அமைச்சரவை எதை வேண்டுமானாலும் தன் விருப்பப்படி செய்யக் கூடும்.

2. பெரும்பான்மைக் கட்சியின் அசைக்கமுடியாத ஆதரவு இருப்பதாலும் தேர்தல் நடைபெற ஐந்து ஆண்டுகள் இருக்கிறதென்ற துணிவினாலும் அமைச்சர் குழுவானது பொதுத்தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் மீறி வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாம்.

3. பொதுமக்கள் சபைக்கு வேலைச்சுமை அதிகமாயிருப்பதனால், மசோதாக்களை விரைவாக இயற்ற நேரம் ஒதுக்குதல், விவாதங்களை முடித்தல் போன்ற முறைகள் கையாளப்படுகின்றன. இம் முறைகளினால் பாராளுமன்றத்தில் மசோதாக்களை விரிவாக விவாதிக்கவும், திறனாய்வு செய்வதற்கும் நேரம் இருப்பதில்லை. அமைச்சர் குழுவுக்குப் பெரும்பான்மையிருப்பதால், மசோதாக்களைப்பற்றி விரிவாக விவாதிப்பதைக் கூட இத்தகைய முறைகளைக் கையாண்டு தடுத்து விடுகின்றது. இது கேபினெட்டின் ஒருவகையான எதேச்சாதிகாரச் செயலாகுமென்று ராம்சே மூர் கூறுகின்றார்.

4. கொடுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் (Delegated Legislation) கேபினெட்டுக்கு இருப்பதால் கேபினெட் எதேச்சாதிகாரம் வளர வாய்ப்புள்ளது. இதன்படி பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்குத் துணைச் சட்டங்கள் இயற்ற அமைச்சர்களுக்கு அதிகாரமுண்டு. சட்டத்திற்கு என்ன செல்வாக்கும், அதிகாரமும் உண்டோ அவ்வளவும் துணைச் சட்டங்களுக்கும் உண்டு. இதனால் அமைச்சர்கள் எதேச்சாதிகாரமாகத் தங்களின் விருப்பப்படி துணைச் சட்டங்களை இயற்ற வாய்ப்பு உண்டு.

இங்ஙனம் கேபினெட்டின் ஆதிக்கம் இருப்பது உண்மைதான். ஆனால், கேபினெட்முறை அரசாங்கம் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமாகும். ஆகவே, இவ் வரசாங்கம் மக்களின் பொதுக் கருத்தை எதிர்த்துச் செயல்பட முடியாது. மக்களிடம்தான் தலையாய அதிகாரமுள்ளது. அவர்களிடம்தான் அரசாங்கத்தை மாற்றும் அதிகாரமும் உள்ளது. தவிர ஆங்கில மக்களின் பாராளுமன்ற முறை மரபுகள் கேபினெட் எதேச்சாதிகாரமாக நடப்பதற்கு ஒரு தடையாக உள்ளது. மேலும் பாராளுமன்றத்தின் நிலையான சட்ட திட்டங்களுக்கும் (Standing Orders) மரபுகளுக்கும் கேபினெட் கட்டுப்பட்டே செயலாற்ற வேண்டும். அத்துடன் அங்கு கேபினெட் எதேச்சாதிகாரமாக நடப்பதைக் கண்டிக்க எதிர்க்கட்சி ஒன்று உள்ளது. எதிர்க் கட்சியின் கருத்துக்களையும், கண்டனங்களையும் செவிமடுத்து, மதித்து நடக்க வேண்டியுள்ளது, ஏனெனில் இன்றைய எதிர்க் கட்சி நாளைய ஆளுங்கட்சியாக மாறலாம். ஆகவே, கேபினெட்டின் எதேச்சாதிகாரமென்பது உண்மையிலேயே நடக்கக் கூடியதன்று.

கேபினெட்டின் தலைவர்

கேபினெட்டின் தலைவர் பிரதம அமைச்சராவார். கேபினெட் என்னும் வளைவில் பிரதம அமைச்சர் மையக்கல் போன்றவர் (The Key stone of the Cabinet arch). இங்கிலாந்தில் அதிக அதிகாரங்களையும் செல்வாக்கையும் பெற்றவர் அவரேயாவார். அமைச்சரவையையும் அதன் முக்கிய அமைச்சர்களைக் கொண்ட கேபினெட்டையும் ஆக்குவதும் இவரே. அமைச்சர்குழு தொடர்ந்து செயலாற்றுவதும் வாழ்வதும் இவராலேதான். அமைச்சர்குழு அழிவதும் இவராலேயேதான். இது மட்டுமன்று, பொதுமக்கள் சபையைக் கலைக்கும் அதிகாரமும் இவரிடம்தான் உள்ளது. இத்தகைய அதிகாரங்களையும் செல்வாக்கையும் பெற்றுள்ள பிரதம அமைச்சரைப் பற்றியோ, அவருடைய அதிகாரங்களைப் பற்றியோ, தகுதியைப் பற்றியோ, எந்தச் சட்டத்திலும் 1937ஆம் ஆண்டுவரை குறிப்பிடவில்லை. 1721ஆம் ஆண்டிலிருந்து அவர் கருவூல முதல் பிரபுவாகத் தான் (First Lord of Treasury) சம்பளத்தைப் பெற்று வந்தார். 1937ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசின் அமைச்சர்கள் சட்டம் (Ministers of the Crown Act) தான் பிரதம அமைச்சருக்கு ஆண்டொன்றுக்கு 10,000 பவுன்கள் சம்பளம் என்று நிர்ணயித்தது. ஆகவே, பிரதமர் பதவி இச் சட்டத்தால்தான் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், பிரதம அமைச்சரின் அதிகாரங்களைப் பற்றியோ, தகுதியைப்

பற்றியோ இச் சட்டம் ஒன்றும் கூறவில்லை. பிரதம அமைச்சரின் அதிகாரங்களும், மதிப்பு நிலையும் வழக்காறுகளால் வந்தவைகளே யாகும். முதலாம் ஜார்ஜ் அரசருக்கு ஆங்கிலம் தெரியாதிருந்ததால், அவர் அமைச்சர்குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதில்லை. அவருக்குப் பதிலாக மூத்த அமைச்சரான சர் ராபர்ட் வால்போல் (Sir Robert Walpole) என்பவரே அமைச்சர்குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். அவரே முதன்மை அமைச்சர் அல்லது பிரதம அமைச்சரென அழைக்கப்பட்டார். அன்றிலிருந்துதான் பிரதமர் பதவியே உருவானதாகும். அதிலிருந்து நாட்டில் அரசியலில் அவர் முக்கிய இடம் வகித்தார். படிப்படியாக அவரது அதிகாரங்களும் வளர்ந்து கொண்டே வந்தன. இன்று அவரிடம் சர்வாதிகாரிக்குள்ளதுபோல் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன என்று கூறுவது மிகையானாலும், அவரின் அதிகாரங்கள் மிகவும் பரவலானவையேயாகும்.

நாட்டில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்தபிறகு, பொது மக்கள் சபையில் எக்கட்சிக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்கின்றதோ, அக் கட்சியின் தலைவரை அரசியார் பிரதமராக நியமிக்கின்றார். அத்துடன் அவரை அமைச்சரவை அமைக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றார். பிரதமராக நியமனம் செய்யப்படுவதற்கு ஒருவருக்கு முதலில் தம் கட்சியில் மிகுந்த செல்வாக்கு இருக்க வேண்டும். அவருக்கு அக் கட்சியில் ஆதரவாளர்களும் அதிகமாக இருக்கவேண்டும். அவருடைய ஆளுமையைத் தவிர அவருக்கு அரசியல் அனுபவமும், திறமையும், ஊக்கமும், அரசாங்கத்தை நடத்தும் சாதுரியமும் மிக முக்கியமாக வேண்டும். பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் பொதுமக்கள் சபையின் உறுப்பினராக இருக்கவேண்டும். 1923ஆம் ஆண்டில் பிரபுக்கள் சபை உறுப்பினரான கர்ஸன் பிரபுவை (Lord Curzon) பிரதமராக்க வேண்டுமா அல்லது பொதுமக்கள் சபையின் உறுப்பினரான ஸ்டான்லி பால்டுவின் (Stanley Boldwin) என்பவரைப் பிரதமராக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுந்தபொழுது, பொது மக்கள் சபையின் உறுப்பினரான பால்டுவின் என்பவரையே ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பிரதமராக நியமித்தார். அன்றிலிருந்து பிரதம அமைச்சர் மக்கள் சபையின் உறுப்பினராகவே இருந்து வருகின்றார். மாக்மில்லன் தாம் நோய்வாய்ப்பட்டதனால் தமது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்யும்போது ஹூம் பிரபுவை (Lord Home) பிரதமராக்க சிபார்சு செய்தார். உடனே ஹூம் பிரபு தமது பிரபு பட்டத்தைத் துறந்து, தேர்தலில் நின்று வெற்றி பெற்றுப் பொதுமக்கள் சபையின் உறுப்பினரான பிறகே பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பிரதம அமைச்சர் நியமிக்கப் பட்டதற்குப் பின்னர் அவர் மற்ற அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு அவர் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கட்சிச் செல்வாக்கும், கட்சியில் ஆதரவும் தவிர இயல்பான திறமை, சாதுரியம் ஆகிய இயல்புகளைக் கொண்ட உறுப்பினர்களை அமைச்சர்களாகத் தேர்ந்தெடுப்பார். அத்துடன் அவர்கள் அரசாங்கத்திற்கு முழு கூட்டுப் பொறுப்புணர்ச்சி யுடையவர்களாக இருப்பவர்களா என்பதையும் அறிந்து ஆராய்ந்து தேர்ந்தெடுப்பார். அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பிரதமர் கட்சியின் முக்கிய தலைவர்களோடு ஆலோசித்தபோதிலும், கடைசியில் அவருடைய விருப்பமே முடிவானதாகும். அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர் அவர்களுக்குரிய துறைகளைப் பிரித்துக் கொடுக்கின்றார். துறைகளை அமைச்சர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுப்பதிலும் இவர் விருப்பமே முடிவானதாகும். இவருடைய ஒதுக்கீட்டுத் துறையை ஏற்காதவர்கள் அமைச்சர் பதவியைத் துறக்க வேண்டியது தான்.

பிரதம அமைச்சர் பிற அமைச்சர்களை எங்ஙனம் ஏற்படுத்துகின்றாரோ அங்ஙனமே அவர்களை அமைச்சர் பதவியினின்றும் விலக்கலாம். எவ்வாறெனில் பிரதம அமைச்சர் ராஜிநாமா செய்தால், மற்ற அமைச்சர்களும் பதவி யிழப்பார்கள், அல்லது பிரதம அமைச்சர் ஒரு குறிப்பிட்ட அமைச்சரைக் கட்டாயமாகப் பதவி விலகும்படி கேட்டுக் கொள்ளலாம். 1931ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ராம்சே மாக்டனல்டு தனது அமைச்சரவைக்குக் கூட தெரிவிக்காமல் தமது பதவியை ராஜிநாமா செய்தார். பேராசிரியர் லாஸ்கி (Prof. Laski) குறிப்பிடும்பொழுது 'தேசிய அரசாங்கத்தை அறிவிக்கும்போதுதான் தாங்கள் பதவி துறந்ததை அந்த அமைச்சர்கள் அறிந்தனர்; என்று கூறுகின்றார். தமக்குப் பணியாமல் இருந்தாலோ அல்லது அறிவற்ற செயல்களைச் செய்தாலோ பிரதமர் ஒருவரைப் பதவி விலகும்படி கேட்கலாம். 1922ஆம் ஆண்டில் மாண்டேகு (Montague) என்பவரும், 1935ஆம் ஆண்டில் சாமுவேல் ஹோர் (Samuel Hoare) என்ற அமைச்சரும் அவ்வாறு பதவி விலக்கப்பட்டார்கள்.

கேபினெட் கூட்டங்களை பிரதம அமைச்சர் அடிக்கடி கூட்ட வேண்டும். அக் கூட்டங்கள் அவரின் இல்லமான டௌனிங் தெருவிலுள்ள 10ஆம் எண் வீட்டில் நடைபெறும். பிரதம அமைச்சருக்கு உதவி செய்யத் தனிப்பட்ட கேபினெட் அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் பிரதம அமைச்சரின்

துறையைச் சார்ந்ததாகும். இந்த அலுவலகத்தில் பிரதம அமைச்சரின் அன்றுடப் பொறுப்புகள் நிறைவேற்றப்படும். பொருளாதாரத் திட்டங்களையும், மற்ற அரசாங்கக் கொள்கை களையும் நிர்ணயம் செய்வதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும், கேபினெட் கூட்டங்களின் நடவடிக்கைகளை இணைத்தலும், மற்றும் பல கேபினெட் கமிட்டிகள், உப கமிட்டி கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்தி, அவற் றைச் சரியானபடி இணைத்து பிரதம அமைச்சருக்கு அறிவித்தலும், இந்த அலுவலகத்தின் முக்கியமான பணிகளாகும்.

கேபினெட் கூட்டங்களுக்கு, பிரதம அமைச்சர் தலைமை வகிப்பார். இப் பணி, அவருடைய முக்கிய பொறுப்பாகும். ஏனெனில் கேபினெட் கூட்டங்களில்தான் அரசாங்கத்தின் கொள்கைகளே உருவாக்கப்படுகின்றன. இக் கூட்டங்களில் அமைச்சர்களின் கருத்து வேறுபாடுகள் பரிமாறிக் கொள்ளப் படும். இக் கருத்து வேறுபாடுகளை அகற்றி ஒரு முகமான கொள்கையை நிர்ணயம் செய்வது பிரதம அமைச்சரின் பொறுப் பாகும். அமைச்சர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை பிரதம அமைச்சரால் அகற்ற முடியவில்லையெனில், தமது பதவி யைத் தொடர்ந்து வகிப்பது அவருக்குக் கடினமாகி விடும். அதனுல் கட்சியில் பிளவு ஏற்படவும், அரசாங்கம் வீழ்ச்சியுறவும் வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும். ஆகவே, பிரதம அமைச்சர் விழிப் பாகவே இருந்து அமைச்சர்களிடையே ஏற்படும் கருத்துவேறு பாடுகளைக் களைய முற்பட வேண்டியுள்ளது. கேபினெட் கூட்டங் கள் இரகசியமாகவே இருப்பதனுல் அமைச்சர்களிடையே எந்த வித கருத்துவேறுபாடுகள் இருந்தபோதிலும், அவற்றை மக்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லை. கேபினெட் கூட்டங்களில் விவாதங்கள் முடிந்தபிறகு, முடிவுகளை அறிவிப்பவர் பிரதம அமைச்சரே யாவார்.

பிரதம அமைச்சர் அவருடைய கட்சியின் தலைவராகவும் விளங்குகின்ருர். பொதுத் தேர்தலில் முக்கிய பங்கெடுத்து, கட்சிக்கு வெற்றி தேடித் தருகின்ருர். உண்மையில் சொல்லப் போனுல் பொதுத்தேர்தலே பிரதமர் தேர்தலாகத்தான் பாவிக்கப் படுகின்றது. கட்சிச் சார்பற்ற வாக்காளர், கட்சியையோ அல்லது அக் கட்சியின் கொள்கையையோ பார்த்து வாக்களிப்பதில்லை. அவர்கள் யார் பிரதமராக வந்தால் நல்லது என்று நினைத்துதான் வாக்களிக்கின்ருர்கள். ஆகவே, பிரதமர் பதவி மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தலைவரின் செல்வாக்கைப் பொறுத்து தான் கட்சியின் செல்வாக்கும் அமையும். ஆகவே, அவர் மக்களின் நாடி பார்த்துச் செயலாற்ற வேண்டியுள்ளது.

பிரதம அமைச்சர் கேபினெட்டை வழிநடத்திச் செல்வதோடு, பலவகையான துறைகளிடையே தொடர்புகளுண்டாக்கி, அவைகளின் பல்வேறு கொள்கைகளை ஒருமுகப்படுத்தி, அரசாங்கத்தின் கொள்கைகள் என உருவாக்குவதில் அவர் முக்கிய பங்கு வகிக்கின்றார். எல்லாத் துறைகளின் நடவடிக்கைகளுக்கும் அவரே மேலாளர் தலைவர் (Manager-in-Chief) போல் இயங்குகின்றார். அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, இவர் அவைகளைத் தீர்த்து வைக்கின்றார்.

பெரும்பான்மைக் கட்சியின் தலைவரான பிரதமர் பொதுமக்கள் சபையின் தலைவராகவும் (Leader of the House) திகழ்கின்றார். அவர் சபையில் ஒழுங்கு, அமைதி நிலவுவதற்கு சபாநாயகருடன் ஒத்துழைக்கின்றார். அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகளை அவர் சபையில் அறிவிப்பார். இரண்டாவது உலகப் போரின் போது பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தான் முக்கிய செய்திகளையும், நாட்டின் கொள்கைகளையும் சபையில் அறிவித்தார். பிரதமர் விவாதங்களில் குறுக்கிட்டு, அமைச்சர்கள் செய்த பிழைகளைத் திருத்தவும் செய்வார். ஆகவே, அவரை அரசாங்கக் கொள்கையின் பிறப்பிடம் என்று அழைக்கலாம். அவர் சபையின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கின்றார். கட்சிக் கொரடாக்களையும், எதிர்க்கட்சியையும் கலந்தாலோசித்து விவாதங்களைப் பற்றியும், அவற்றிற்கான நேரங்களைப் பற்றியும் அவர் முடிவு செய்கின்றார்.

பிரதம அமைச்சருக்குப் பொதுமக்கள் சபையைக் கலைக்கும் அதிகாரமும் உண்டு. அமைச்சரவைக்குப் பொதுமக்கள் சபையின் ஆதரவு குறைந்துவிட்டால் பிரதமர் தமது அமைச்சரவையைக் கலைத்துவிடுவார். அவர் தம் பதவியை ராஜிநாமா செய்யும்போது பொதுமக்கள் சபையைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தல் நடத்தும்படி அரசியாருக்கு ஆலோசனை கூறுவார். இத்தகைய ஆலோசனையை அரசியார் தள்ளிவிட முடியுமா? பொதுவாக வழக்கத்தின் காரணமாக இதுவரை பிரதமரின் ஆலோசனையை அரசியார் மறுத்ததில்லை. சபையைக் கலைக்கும்படி ஆலோசனை கூறுவது பிரதம அமைச்சரின் உரிமையாகும்.

அமைச்சரவைக்கும் அரசியாருக்கும் இடையே பிரதம அமைச்சர் ஓர் தொடர்புபாலம் போன்று இயங்குகின்றார். அரசியல் விவகாரங்களைப் பற்றியும் மற்றப் பொது விவகாரங்களைப் பற்றியும் பிரதம அமைச்சர் அடிக்கடி அரசியாரிடம் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. பல விவகாரங்களில் அவர் அரசியாருக்கு ஆலோசனை கூறவேண்டும். அரசியாருக்குள்ள சிறப்பதிகாரங்களைக்கூட, பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்தான்

அரசியார் பயன்படுத்துகின்ருர். அரச குடும்பத்தைச் சார்ந்தவர் களுடைய அரசியல் நடத்தைகளைப்பற்றி வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் பிரதமருக்கு உண்டு. அரசியாரின் உள்நாட்டு வெளி நாட்டுப் பயணங்களைப்பற்றிக் கூறவேண்டியுள்ளது. நாட்டைப் பாதிக்கக் கூடிய அரச குடும்ப நடவடிக்கைகளைப் பற்றியும் எடுத்துக்கூற வேண்டியுள்ளது. எட்டாம் எட்வர்டு அரசர் வாலிஸ் சிம்சன் (Wallis Simpson) என்ற அமெரிக்கப் பெண்ணைக் காதலித்தார். அதை எதிர்த்து நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. அதனுல் பிரதமர் பால்டுவின் (Baldwin) காதலைக் கைவிடும்படி அரசரைக் கேட்டுக் கொண்டார். ஆனுல், அரசர் காதலைவிட அரச பதவி தமக்கு உயர்ந்ததன்று என்று கூறவே, பிரதமரின் அறிவுரைக்குப் பின்னர், எட்டாம் எட்வர்டு தமது பதவியைத் துறந்தார்.

அரசியார் அமைச்சர்களையும், மதகுருமார்களையும், தூதுவர் களையும் மற்ற உயர்தர அதிகாரிகளையும் நியமனம் செய்வதும் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில்தான் நடக்கும். தவிர, காலனிகளின் ஆளுநர்களை நியமனம் செய்வதும் பிரதம அமைச்சர் தான். புதிய பிரபுக்களை உண்டாக்குவதிலும், விருதுகளை வழங்குவதிலும் பிரதம அமைச்சரை அரசியார் கலந்தாலோசனை செய்வார். அதனுல் பிரதம அமைச்சர் அரசியார் அல்லது அரசரிடம் நெருங்கிய தொடர்புகொண்டு, எல்லா அரசாங்க விவகாரங்களையும் அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும் என்ற வழக்கம் இருந்து வருகின்றது.

பிரதம அமைச்சர் உலக மாநாடுகளில் தம் நாட்டுப் பிரதி நிதியாகச் சென்று பங்கெடுத்துக் கொள்கின்ருர். 1929ஆம் ஆண்டு பிரதமர் ராம்சே மாக்டனுல்டு தாமே நேரில் டேவிஸ் (Dawes) என்பவருடன் ஆங்கிலோ-அமெரிக்க உறவுகளைப் பற்றிப் பேசினுர். அத்துடன் அமெரிக்காவுக்குச் சென்று அந் நாட்டுத் தலைவர் ஹுவர் (Hoover) என்பவருடன் ஆயுதக் கட்டுப்பாடு களைப் பற்றிப் பேசினுர். சேம்பர்லேன் என்ற பிரதமர் வெளி நாட்டு உறவுகள் துறையைத் தம்மிடமே வைத்துக் கொண்டார். இரண்டாம் உலகப் போரின்போது வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்க ஜனுதிபதியுடன் ஆறு முறையும், ரஷ்ய நாட்டுத் தலைவர் ஸ்டாலினுடன் இரு முறையும் பேச்சுகள் நடத்தியது புகழ்பெற்ற தாகும். இத்தகைய செயல்களினுல் இங்கிலாந்துப் பிரதமரின் புகழ் ஓங்கி வளர்ந்தது. அதன் காரணமாக அவருடைய அதிகாரங் களும் வளர்ந்தன.

இத்தகைய அதிகாரங்களையும் செல்வாக்கையும் பெற்ற பிரதம அமைச்சரை மற்ற அமைச்சர்களுடன் எங்ஙனம் ஒப்பிடுவது.

மோர்லி பிரபு (Lord Morley) பிரதம அமைச்சரை 'சமமானவர்களில் முதலிடம் பெற்றவர்' (First among the equals) என்று குறிப்பிடுகின்றார். பாராளுமன்றத்தைக் கலைக்கவும், அமைச்சர் குழுவை ஆக்கவும் அழிக்கவும் அதிகாரம் பெற்றுள்ள பிரதம அமைச்சரை இவ்வளவு எளிய முறையில் ஒப்பிடுவது சரியாகுமா? சர்வாதிகாரிக் குண்டான எல்லா அதிகாரங்களையும் பெற்றுள்ள பிரதமரைக் கதிரவனுக்குத்தான் ஒப்பிடவேண்டும். கதிரவனை எங்ஙனம் மற்ற எல்லாக் கோள்களும் சுற்றி வருகின்றனவோ அங்ஙனமே நாட்டின் மற்ற எல்லா நிறுவனங்களும் பிரதம அமைச்சர் என்னும் மையத்தைச் சுற்றிவந்து செயலாற்றுகின்றன.

29. ஜனநாயகப் பாராளுமன்றம்

இங்கிலாந்தில் இன்று பாராளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy) நடைபெற்று வருகின்றது. பாராளுமன்றமே அங்கு இறைமை (Sovereignty) பெற்ற நிறுவனமாகத் திகழ்கின்றது. அது இயற்றும் சட்டங்கள்தான் அங்கு முடிவானவைகளாகும். அதன் சட்டங்களுக்குக் கட்டுப்படாத நிறுவனம் எதுவும் அங்கு இல்லை. இங்ஙனம் சர்வ வல்லமை பொருந்திய ஆங்கிலப் பாராளுமன்றம் மக்களிடமிருந்துதான் தனது அதிகாரங்களைப் பெறுகின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே அப் பாராளுமன்றத்தில் செல்வாக்குடன் விளங்குகின்றார்கள். எனவே, மக்கள் ஆட்சி அங்குப் பாராளுமன்றத்தின் மூலமாகச் செயல்படுகின்றது. இத்தகைய ஆட்சிமுறை இன்று உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றது. உலகிலுள்ள பாராளுமன்றங்களுக்கெல்லாம் ஆங்கிலப் பாராளுமன்றமானது தாய் போன்று (Mother of Parliaments) விளங்குகின்றது. ஏனெனில் ஆங்கிலப் பாராளுமன்றம் மிகவும் பழமையானதாகும். மற்ற ஜனநாயக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும், பாராளுமன்ற ஆட்சி முறைக்கு ஒரு முன்னோடியாகவும் ஆங்கிலப் பாராளுமன்றம் இருந்து வருகிறது.

பதின்மூன்றும் நூற்றாண்டில் ஆங்கில அரசர்களால் ஆலோசனையும் அறிவுரையும் பெறக் கூட்டுவிக்கப்பட்ட பெரும் பேராயம் (Magnum Concillium or Great Council) இன்றைய பாராளுமன்றத்தின் மூதாதையெனக் கருதப்படுகின்றது. இப் பெரும் பேராயம் அரசருக்கு அவ்வப்போது தேவையான உதவித் தொகைகளை வழங்கியும், ஆலோசனை கூறியும் வந்தது. போர்களை நடத்த அதிகப்பணம் தேவைப்பட்ட போதெல்லாம் பெரும் பேராயத்தைக் கூட்டி அதன் ஒப்புதலைப் பெறுவது அன்றைய வழக்கமாயிருந்தது. சில சமயங்களில் பேராயத்தைக் கூட்டினாலும் சமயத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப, செய்து முடிக்க வேண்டிய வேலைக்கேற்ப அறிவுரையாளர்களைத் தெரிவு செய்து கொண்டு அரசர்கள் செயல்பட்டு வந்தார்கள். ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டே சென்ற அரசரின் செலவுகளை மேற்கொள்ளப் போதுமான வருவாயை அம் மன்றத்தால் வழங்க முடியவில்லை. அதன் உதவி கொண்டு வசூலிக்கப்பட்ட நிலமானியக் கட்டணங்கள் அரசருக்குப்

போதவில்லை. அடுத்தடுத்து வந்த அரசர்களுக்குப் போர்ச் செலவை ஈடுசெய்யப் புதிய வருவாயைத் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புதிய வருவாயைப் பெறுவதற்கு வரி விதிப்பு முறை விரிவுபடுத்த வேண்டியதாயிற்று. வரி விதிப்பை விரிவுபடுத்த பிரதிநிதித்துவ முறை தேவையாயிற்று. ஆகவே, அரசர்கள் சாதாரண மக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் உதவியைப் பெற முயன்றுர்கள், இதற்கொப்பான ஒரு செயலை இரண்டாம் ஹென்றி செய்தார். மூன்றுவது சிலுவைப் போரின் செலவுகளை ஈடுசெய்ய 1188இல் தனிப்பட்ட உடைமைகளின் மீது ஒரு வரி விதித்தார். வரி விதிப்பின் மதிப்பீட்டை ஏற்க மறுத்தோரின் குறைகளை அறிந்து நாட்டில் உள்ளவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அறங்கூறும் அவை முடிவு செய்தது. வரி செலுத்துவோரின் பிரதிநிதிகளைப் பேரவைக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் இதை முதல் நடவடிக்கையாகக் கொள்ளலாம்.

1213ஆம் ஆண்டில் ஜான் அரசர் அரசரவைக்கு, பிரபுக்கள் பெருமக்களையும் நகரத் தொகுதியிலிருந்து நான்கு வீரத் திருத்தகைகளையும் (Knights) அனுப்பி வைக்கும்படி அரசப் பேராளர்களுக்குக் (Sheriffs) கட்டளையிட்டார். ஆயினும் இவர்கள் கூடியதற்கான சான்று கிடையாது. மூன்றும் ஹென்றி ஃபிரான்சு நாட்டில் காங்கெனியில் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது, இவருடைய மனைவியாரும், கார்ன்வால் கோமகனும் பண உதவி பெறுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் (County) இரண்டு வீரத் திருத்தகைகளை (Knights) அழைத்தனர். இதையொட்டி 1254ஆம் ஆண்டில் கூடிய பிரதிநிதிகளின் கூட்டத்தை அதிகார முறையிலான முதல் நிகழ்ச்சியாகக் கொள்ளலாம். ஏனெனில் இவ் வீரத் திருத்தகைகள் மாவட்டப் பிரதிநிதிகளாவர். ஆகவே, இப் பிரதிநிதிகளின் கூட்டம் பாராளுமன்றமென அழைக்கப்பட்டது.

1261ஆம் ஆண்டில் மறுபடியும் வீரத் திருத்தகைகள் அரசரவைக்கு அழைக்கப்பட்டனர். அச் சமயம் நாட்டில் உள் நாட்டுக் கலகம் நடந்துகொண்டிருந்தது. தம் சொந்தப் பேரவையைக் கூட்ட புரட்சியாளர்கள் முடிவு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் (County) மூன்று வீரத் திருத்தகைகளை செயிண்ட் ஆல்பன்ஸ் (St. Albans) என்னுமிடத்தில் கூடுமாறு அழைத்தார்கள். இதே நாளில் எல்லா வீரத் திருத்தகைகளும் விண்ட்சோரில் கூடும் அரசவையில் கலந்து கொள்ள வேண்டுமென்று அரசர் கட்டளையிட்டார். உள்நாட்டுக் கலகத்தில் அரசர்

தோல்வியுற்றார். புரட்சி செய்த தலைவர்களில் ஒருவராகிய சைமன் டி மான்ட்போர்ட் (Simon De Monfort) பெரும் வலிமை பெற்றார். அவர் அரசப் பேராளர்களை (Sheriffs) நம்பாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்களுக்குப் பதிலாக 'புதிய அமைதிக் காவலர்களை' அமர்த்தினார். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் நான்கு வீரத் திருத்தகைகளைத் தேர்ந்தெடுப்பதைக் கண்காணிக்கும் அதிகாரம் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட வீரத் திருத்தகைகளைக் கொண்ட பேரவை 1264ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெற்றது. 1265ஆம் ஆண்டில் கூடிய மற்றொரு பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள வீரத் திருத்தகைகள் மட்டுமின்றி, நேர்மையான நகரத்தினர்களும், நகர உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். சைமன் கூட்டிய இப் புகழ்பெற்ற பாராளுமன்றத்தில் வரலாற்றிலேயே முதன்முதலாக மாவட்டப் பிரதிநிதிகளான வீரத் திருத்தகைகளுடன் நகரத் தொகுதி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர் எட்வர்டு சைமனின் முன் நிகழ்வுகளை உடனடியாகப் பின்பற்றவில்லை. பலவகையான சபைகளைப் பல சமயங்களில் எட்வர்டு கூட்டினார். சில சமயங்களில் பெருங்குடி மக்களின் பேரவைகளையும், சில வேளைகளில் வீரத்திருத்தகைகளின் கூட்டத்தையும், மற்றும் சில வேளைகளில் உயர் குருமார் தொகுதியினரையும் கூட்டினார். பிறகு 1275ஆம் ஆண்டில் எல்லா வகுப்பாரையும் அவர் அழைத்தார். அதன் பிறகு 1295ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட மன்றத்தில் 400 பிரதிநிதிகள் எல்லாப் பிரிவுகளின் சார்பிலும் கலந்து கொண்டார்கள். அதுவே மாதிரிப் பாராளுமன்றம் (Model Parliament) என அழைக்கப்படுகிறது. 1295ஆம் ஆண்டின் மாதிரிப் பாராளுமன்றத்தை 1296, 1300, 1305, 1307ஆம் ஆண்டு பாராளுமன்றங்கள் பின்பற்றின. இத்தகைய பாராளுமன்றத்தில் குருமார்கள், பிரபுக்கள், பொது மக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இடம் பெற்றனர்.

பதின்மூன்றும் நூற்றாண்டில் பாராளுமன்றம் தோன்றிய தென்றால், 14ஆம் நூற்றாண்டைப் பாராளுமன்றத்தின் வளர்ச்சிக் காலமெனலாம். இந் நூற்றாண்டில் பாராளுமன்றம் தன் முக்கியமான உரிமைகளைப் பெற்றது. அதற்கு அரசரின் நிதித் தேவை முக்கியமான காரணமாகும். நிலமானிய வருவாயை வைத்துத்தான் அரசர்கள் வாழ வேண்டியிருந்தது. ஃபிரான்சோடும், ஸ்காட்லாந்தோடும் போர் செய்ய ஏற்பட்டதனால் முதல் மூன்று எட்வர்டு அரசர்களுக்குப் பணநெருக்கடி ஏற்பட்டது. ஆகவேதான் அரசர்கள் அடிக்கடி பாராளுமன்றத்தை நாட வேண்டியிருந்தது.

குறைகளை அகற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பாராளு மன்றம் பண உதவியளித்தது. படிப்படியாகப் பாராளுமன்றம் அரசரிடமிருந்து எல்லா வருவாய் வளங்களையும் பற்றிக்கொண்டது. பின்னர் அரசர் தம் வருவாயைப் பெருக்க நேர்முக வரியை விதித்தார். இதற்குப்பின், பாராளுமன்றத்தில் கூடியுள்ள சமயப் பிரபுக்கள், கோமான்கள், பிரபுக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பொது இசைவினலன்றிப் பொருளுதவி கோரி அரசர் வரி விதிக்கக் கூடாதென்று 1340ஆம் ஆண்டில் பாராளுமன்றம் சட்டம் இயற்றியது. மக்களின்மீது நேர்முக வரிவிதிப்பு அதிகாரத்தை அரசர் இழந்த இந்த 1340ஆம் ஆண்டு வரலாற்றில் ஒரு திருப்பமாகும்,

அடுத்து பாராளுமன்றம் இரு சபைகளாகப் பிரிந்தது. சாதாரண மத குருமார்கள் நாளடைவில் பாராளுமன்றத்திற்குப் போவதையே நிறுத்திக் கொண்டனர். பின்னர் பணம் படைத்த பெரும் மத குருமார்கள், பிரபுக்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒரு சபையாக அமர்ந்தனர். அதுவே பிரபுக்கள் சபை (House of Lords) எனப்பட்டது. சாதாரண நிலப் பிரபுக்கள், வீரத் திருத்தகைகள், நகரவாசிகள் ஆகியோரின் குறைகள் ஒன்ருயிருந்ததால் அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சபையாக அமர்ந்தனர். அச் சபை பொதுமக்கள் சபை (House of Commons) என்று அழைக்கப்பட்டது. 14ஆம் நூற்ருண்டின் இறுதியில் பாராளு மன்ற உறுப்பினர்கள் இங்ஙனம் இரண்டு சபைகளாகக் கூடும் வழக்கம் மரபாக மாறிவிட்டது.

ஆரம்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை விண்ணப்பங்களின் மூலம் அரசருக்கு சமர்ப்பித்து வந்தனர். நாளடைவில் இக் கோரிக்கை விண்ணப்பங்கள் மசோதாக்களாக (Bills) வடிவெடுத்தன. பிரபுக்கள் சபையிலும், மக்கள் சபையிலும் மசோதாக்கள் இயற்றப்பட்டு அரசருக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இதுவே சட்டமியற்றுவதன் தொடக்க நிலையாகும்.

டியூடர்கள் காலத்தில் பாராளுமன்றம் நன்கு வளர்ச்சியுற்றது. ஆனல், அது அரசர்களின் கைப்பாவையாகவே பெரும்பாலும் இயங்கி வந்தது. அரசர்கள் பாராளுமன்றத்தின் மூலமாகத் தங்களின் வல்லரசைச் செலுத்தினர். பிறகு 17ஆம் நூற்ருண்டில் ஸ்டூவர்ட்டுகள் ஆட்சிக் காலத்தில் அரசர்களுக்கும் பாராளுமன் றத்திற்குமிடையே போராட்டம் ஆரம்பித்தது. அப் போராட்டம் 1642ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. அப்

போரில் முதலாம் சார்லஸ் அரசர் தோற்கடிக்கப்பட்டு தூக்கிலிடப் பெற்றார். உள்நாட்டுப் போர் பாராளுமன்றத்தின் இறைமையை அல்லது தலையாய அதிகாரத்தை முடிவாகத் தீர்த்து வைத்த தெனினும், இக் கருத்து 1689ஆம் ஆண்டுவரை இறுதியாகச் செயல்படுத்தப்படவில்லை.

1649 ஆம் ஆண்டிலிருந்து 1660ஆம் ஆண்டுவரை இங்கிலாந்தில் அரசர் ஆட்சி இல்லாமலிருந்தது. கிராம்வெல்லின் குடியாட்சியே நடைபெற்று வந்தது. அப்பொழுது கிராம்வெல்லும் பாராளுமன்றமும் சேர்ந்து இங்கிலாந்தை ஆட்சி செய்தனர். 1660ஆம் ஆண்டில் மீண்டும் அங்கு முடியாட்சி ஏற்படுத்தப் பட்டது. அப்பொழுதும் சட்டப்படி அரசரின் சிறப்பு அதிகாரங்கள் மாற்றப்படவுமில்லை. அவைகளை இனிமேல் எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்பதற்கான மரபுகளும் நிறுவப்படவில்லை. ஆகையால், மீண்டும் அரசருக்கும், பாராளுமன்றத்திற்கும் மோதல் ஏற்பட்டது. 1688ஆம் ஆண்டில் இரண்டாம் ஜேம்ஸ் பதவியிலிருந்து நீக்கப் பட்டார். ஆகவே, பாராளுமன்றத்தால் அரசர்களை ஆக்கவும், நீக்கவும், அழிக்கவும் முடியும் என்பது உறுதி செய்யப்பட்டது. பாராளுமன்றம் தலையாய அதிகாரத்தைப் பெற்றுவிட்டது. கட்சி யாட்சியும் கேபினெட் ஆட்சி முறையும் நன்கு உருப்பெற்றன.

இதுநாள்வரை பாராளுமன்றத்திற்கு வெளியே நடந்து வந்த போராட்டம் இப்பொழுது பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் புகுந்துவிட்டது. 1688ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரத்தமில்லாப் புரட்சிவரை பிரபுக்கள் சபையே மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்தது. அதன்பிறகு பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை இவை இரண்டில் எது வலிமை வாய்ந்தது? என்னும் போராட்டம் 17ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து 1949ஆம் ஆண்டில்தான் முடிவடைந்தது. இந்தப் போராட்டத்தின் முடிவில் பொதுமக்கள் சபையே வலிமை பெற்றது. பிரபுக்கள் சபையின் முக்கியத்துவம் குறைந்து அது ஒரு இரண்டாம்தர சபையாக மாறியது. பொது மக்கள் சபை வலிமை பெற்றதற்குக் காரணம் பல பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் (Reform Acts) இயற்றப்பட்டதேயாகும்.

முதல் சீர்திருத்தச் சட்டம் (1832)

1832ஆம் ஆண்டிற்கு முன்பு பாராளுமன்றத்தின் உறுப் பினர்கள் எப்போதோ ஏற்பட்ட பழைய முறையின்படியே தேர்ந் தெடுக்கப்பட்டனர். மக்கள் தொகைக்கும் பிரதிநிதித்துவத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. கார்ன்வால் என்ற சிறு பிரதேசம்

பாராளுமன்றத்தில் 45 பிரதிநிதிகளைப் பெற்றிருக்க, அதைவிட எட்டுப் பங்கு அதிக பரப்புள்ள ஸ்காட்லாந்து 45 பிரதிநிதிகளையே பெற்றிருந்தது. இங்கிலாந்தில் 419 உறுப்பினர்கள் பரோக்களிலிருந்தும் (Boroughs) 94 உறுப்பினர்கள் கவுன்டிகளிலிருந்தும் (County) தேர்ந்தெடுக்கப்பட்டனர். கவுன்டிகள் மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் பரோக்களைவிட பெரியவைகளாகும். அங்ஙனம் இருந்தும் கவுன்டிகளுக்கு பரோக்களைவிட பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் குறைவாகவே இருந்தது. கவுன்டிகள் பெரியனவாக இருந்தாலும், அல்லது சிறியனவாக இருந்தாலும் ஒவ்வொன்றும் இரண்டு உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அதே போலத்தான் பரோக்கள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது ஓர் உறுப்பினரை அனுப்ப வேண்டும். நாளடைவில் சில பரோக்களில் மக்கள் நடமாட்டமே இல்லாமல் போய்விட்டது. சில பரோக்களில் ஒரு சிலரே வாழ்ந்தனர். இத்தகைய பரோக்களும் உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பின. இத்தகைய நசிந்த பரோக்களைப் பெரும் பிரபுக்கள் பணம் கொடுத்து வாங்கித் தங்கள் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். ஆகவே, பாராளுமன்றத்தில் பெரும் பகுதியினர் இங்ஙனம் பெரும் பிரபுக்களால் நியமிக்கப்பட்டவர்களாகவேயிருந்தனர்.

இங்ஙனம் பிரதிநிதித்துவ முறையில் பல ஊழல்கள் இருந்ததோடல்லாமல் வாக்குரிமையிலும் பல குறைபாடுகள் இருந்தன. கவுன்டிகளில் ஆண்டொன்றுக்கு 40 ஷில்லிங்குகள் குத்தகை பெறத்தக்க நிலம் படைத்தவர்களுக்கே வாக்குரிமையிருந்தது, சொந்த நிலமில்லாத குத்தகைச் சாகுபடியாளருக்கும், வியாபாரிகளுக்கும், ஆலைத் தொழிலதிபருக்கும் வாக்குரிமையில்லை. தொழிற் புரட்சியின் காரணமாக மக்கள்தொகை நகரங்களில் வளர்ந்தன. 133,000 மக்கள் தொகை கொண்ட மான்செஸ்டருக்கும் (Manchester), 85,000 மக்கள் தொகை கொண்ட பிர்மிங்காமுக்கும் (Birmingham), 83,000 மக்கள் தொகை கொண்ட லீட்ஸுக்கும் (Leeds) பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதிகூட இல்லாத நிலையிருந்தது. அத்துடன் தேர்தல் காலங்களில் எங்கு பார்த்தாலும் லஞ்சமும், ஊழலும் தாண்டவமாடின. ஆகவே, இத்தகைய அநீதியைப் போக்கிப் பல சீர்திருத்தங்களைச் செய்ய 18ஆம் நூற்றுண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1766, 1770ஆம் ஆண்டுகளில் சாத்தம் பிரபு (Lord Chatham) நசிந்துபோன பரோக்களின் பிரதிநிதித்துவத்தை அகற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியுற்றன. 1766

ஆம் ஆண்டில் ஜான் வில்க்ஸ் என்பவர் சிறப்பான சீர்திருத் தங்களைக் கொண்ட தீர்மானம் ஒன்றைப் பொதுமக்கள் சபையில் கொணர்ந்தார். அதுவும் நிறைவேறவில்லை. பாராளுமன்ற முறையைச் சீர்திருத்த வேண்டும் என்று கருதி இளைய பிட் 1782, 1783ஆம் ஆண்டுகளில் சீர்திருத்த மசோதாக்களைக் கொணர்ந் தார். அவரும் தோல்வியைக் கண்டார். பின்னர் அவர் 1785ஆம் ஆண்டிலும் ஒரு சீர்திருத்த மசோதா கொண்டு வந்தார். அதற்கும் அதே கதிதான். ஃபிரெஞ்சுப் புரட்சியின் காரணமாகவும், உள்நாட்டுக் கலகம் ஏற்படும் சூழ்நிலையிருந்த தாலும், பாராளுமன்றத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற தம் எண்ணத்தை பிட் கைவிட்டார், 1815ஆம் ஆண்டில் நெப் போலியனைத் தோற்கடித்த பிறகு, மீண்டும் பாராளுமன்றச் சீர் திருத்த இயக்கம் இங்கிலாந்தில் வலுவடைந்தது. 1830ஆம் ஆண்டில் கிரே பிரபு (Lord Grey) பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் பாராளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கொணர்ந்தார். பொதுமக்கள் சபையில் அம் மசோதா மூன்று முறையும் நிறை வேறியது, ஆனால், பிரபுக்கள் சபை அம் மசோதாவை இரண்டு முறை நிராகரித்தது. உடனே கிரே பிரபு தம் பதவியை ராஜிநாமா செய்தார். பொதுமக்கள் சபை மீண்டும் கிரே பிரபுவை அழைத்து அமைச்சரவையை அமைக்குமாறு கேட்டுக் கொண்டது. அவசியமானால், புதிய பிரபுக்களை நியமிக்க அரசர் ஒப்புக் கொண்டாலன்றித் தாம் பதவியேற்க முடியாதென்று கிரே பிரபு கூறிவிட்டார். அதனால் அரசரும் அங்ஙனம் செய்வதாக வாக் குறுதி எழுதிக் கொடுத்தார். பிறகு அம் மசோதா பிரபுக்கள் சபைக்கு வந்தபொழுது அதை எதிர்த்த வெல்லிங்டன் பிரபு போன்றவர்கள் சபைக்கே வரவில்லை, ஆகவே, அம் மசோதா 1832ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் தேதி பிரபுக்கள் சபை யிலும் நிறைவேறிச் சட்டமாக மாறியது.

1832ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இப் பாராளுமன்றச் சீர் திருத்தச் சட்டம் இரண்டு குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

1. ஒரு சில மக்கள் வாழும் அல்லது மக்களே வாழாத பகுதிகளின் பிரதிநிதித்துவத்தை ஒழித்து, அதை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு அளித்தல்.

2. பெரும்பான்மையான மக்கள் வாக்குரிமை பெறும் விதத்தில் வாக்காளர் தகுதியைத் தளர்த்துதல்.

இத்தகைய குறிக்கோள்களையுடைய பரோக்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் பிரிவிலடங்கிய 56 பரோக்

களின் பிரதிநிதித்துவம் அறவே ஒழிக்கப்பட்டது. இரண்டாவது பிரிவிலடங்கிய 36 பரோக்கள் ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகள் அனுப்புவதற்குப் பதிலாக ஒரு பிரதிநிதியை அனுப்ப வகை செய்யப்பட்டது. மூன்ருவது பிரிவில் பிரதிநிதித்துவமே பெற்றிராத நகரங்கள் சேர்க்கப்பட்டன. அந் நகரங்கள் ஒவ்வொன்றும் இனி இரண்டு உறுப்பினர்களை அனுப்ப இச் சட்டம் ஏற்பாடு செய்தது. நான்காவது பிரிவில் இடம்பெற்ற நகரங்கள் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்பும் தகுதி படைத்தவைகளாகும். இச் சீர்திருத்தத்தால் 143 இடங்கள் மிஞ்சின. அவைகள் கவுன்டிகள், ஆலைத் தொழிற் பட்டணங்கள், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய தொகுதிகளிடையே பகிர்ந்து அளிக்கப்பட்டன. கவுன்டிகள் 65 உறுப்பினர்களை அதிகம் பெற்றன. ஸ்காட்லாந்து 8 உறுப்பினர்களையும் அயர்லாந்து 5 உறுப்பினர்களையும் அதிகமாகப் பெற்றன. 22 பெரிய நகரங்கள் பிரதிநிதித்துவம் பெற்றன. இச் சட்டம் கவுன்டிகளின் எண்ணிக்கையை 95-லிருந்து 159 ஆக உயர்த்தியது. சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 658-க்கு உயர்த்தப்பட்டது.

வாக்குரிமையைப் பொறுத்தவரையில் இச் சட்டம் பல்லாயிரம் மக்களுக்கு அவ் வுரிமையை விரிவுபடுத்தியது. பரோக்களில் ஆண்டுக்கு 10 பவுன் வாடகை மதிப்புள்ள வீட்டுடைமையாளர் இச் சட்டப்படி வாக்குரிமை பெற்றனர். கவுன்டிகளில் 10 பவுன் படியுரிமை நிலத்தவர்களும், 50 பவுன் செலுத்தும் குத்தகையாளரும், 60 ஆண்டுகளுக்குக் குத்தகை நிலம் எடுத்தவர்களும் வாக்குரிமையைப் பெற்றனர். ஆகவே, வாக்காளர்களின் எண்ணிக்கையில் 50% அதிகரிப்பு காணப்பட்டது.

1832ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் முழுமையான மக்களாட்சியை நிறுவிவிட வில்லையெனலாம். இக் காலத்திய பாராளுமன்ற முறையில் காணப்பட்ட பல ஊழல்களையும் குறைகளையும் அகற்றுவதே இச் சீர்திருத்தச் சட்டத்தின் நோக்கமாக இருந்தது. இருந்தபோதிலும் இச் சட்டம் இங்கிலாந்தில் ஓர் அரசியலமைப்புப் புரட்சியை (Constitutional Revolution) ஏற்படுத்தியது. மக்களின் விருப்பத்தைப் புறக்கணிக்க அரசருக்கோ அல்லது பிரபுக்கள் சபைக்கோ உரிமையில்லையென்பதை இச் சட்டம் நிரூபித்துக் காட்டியது. உயர்குடியோரிடமிருந்த அரசியல் அதிகாரம் இச் சட்டத்தால் நடுநிலை வகுப்பாரிடம் மாற்றப்பட்டு ஜன நாயகத்துக்கோர் வழி வகுக்கப்பட்டது.

இரண்டாவது சீர்திருத்தச் சட்டம் (1867)

நடுநிலை வகுப்பாரோடு வாக்குரிமைக்காகத் தோளோடு தோள் சேர்த்து நின்று போராடிய தொழிலாளர்களுக்கு 1832ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் பெரும் ஏமாற்றமாகவே அமைந்தது. ஏனெனில், தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காகப் போராட ஆரம்பித்தனர். லோவிட் (Lovett), அட்வுட் (Attwood), ஓ கானர் (O' Connor) முதலியவர்கள் அவர்களின் போராட்டங்களுக்குத் தலைமைதாங்கினர். வாக்குரிமையை விரிவாக்குதல், வாக்குரிமைக்குள்ள உடைமைத் தகுதியை நீக்குதல், இரகசிய வாக்கெடுப்பு, சமமான வாக்காளர் தொகுதிகள், ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றத்தைக் கூட்டுவித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியமளித்தல் முதலிய ஆறு கோரிக்கைகளை முன் வைத்துத் தொழிலாளர்கள் 1838ஆம் ஆண்டில் போராட்டத்தில் குதித்தனர். அப் போராட்டமே சார்ட்டிஸ்ட் இயக்கத்தினரின் (Chartist Movement) போராட்டம் எனப்பட்டது. இவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து பத்து ஆண்டுகள் நடத்தினர். அரசாங்கம் இவர்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காததால் ஆரம்பத்தில் ஒன்றும் பலனளிக்கவில்லை. ஆனல், ஆண்டுக்கொருமுறை பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டுமென்பதைத் தவிர இவர்களின் மற்றக் கோரிக்கைகள் நாளடைவில் அமலுக்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சீர்திருத்தச் சட்டங்களையெல்லாம் வழிமறித்துவந்த பிரதமர் பாமர்ஸ்டன் 1865ஆம் ஆண்டில் இறந்தார். அவர் இறந்தவுடன் சீர்திருத்தங்கள் செய்வதற்குரிய சூழ்நிலைகள் உருவாயின. ரஸ்ஸெல் பிரபு பிரதம அமைச்சரானுர். அவருடைய கொள்கைகளுக்கு கிளாட்ஸ்டன் உறுதுணையாய் நின்ருர். 1866ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் இரண்டாம் பாராளுமன்ற மசோதா ஒன்றைக் கொணர்ந்தார். அம் மசோதா பெரிதும் மிதவாதத் தன்மை பொருந்தியதாயிருந்ததால் பலரும் எதிர்த்தனர். எனவே, அம் மசோதா தோல்வியடைந்தது. அமைச்சரவையும் கலைந்தது. டெர்பி பிரபு பிரதமரானுர். இரண்டாம் சீர்திருத்த மசோதா தோல்வியடைந்ததனுல் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. இங்ஙனம் அத்துமீறிய செயல்களில் மக்கள் ஈடுபடுவதைக் கண்ட ஆளுங் கட்சியினர் திகிலடைந்தனர். இச் சமயத்தில் டெர்பி அமைச்சரவையிலிருந்த டிஸ்ரேலி ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அதுவும் மிதவாதத்தன்மை பொருந்தியதாக இருந்ததால் எதிர்க்

கட்சியிலிருந்த கிளாட்ஸ்டன் அதற்கு ஏராளமான திருத்தங்களைக் கொண்டுவந்தார். ஆகவே, டிஸ்ரேலி அதைக் கைவிட்டு, இரண்டாம் முறையாக ஒரு மசோதாவைக் கொணர்ந்தார். அதை விக்கு கட்சியினர் ஏற்றுக் கொண்டனர். ஆனால், கன்சர்வேடிவ் கட்சியிலிருந்த சில அமைச்சர்கள் அம் மசோதாவை எதிர்த்தனர். ஆகவே டிஸ்ரேலி, மசோதா தோற்றால் தாம் அமைச்சரவையைக் கலைத்து விடுவதாக அச்சுறுத்தினர். அதனால் கன்சர்வேடிவ் கட்சியினர் தங்களது எதிர்ப்பைக் கைவிட்டு 1867 ஆம் ஆண்டில் அம் மசோதாவைச் சட்டமாக்க உதவினர்.

டெர்பி பிரபுவின் கன்சர்வேடிவ் அமைச்சரவை நிறைவேற்றிய இச் சட்டம் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் மேலும் வாக்குரிமையை விரிவாக்கியது. சாதாரண மக்களான தொழிலாளர்களுக்கு இதனால் வாக்குரிமை கிடைத்தது. ஆகவே, உண்மையான ஜனநாயகப் பாராளுமன்றம் தோற்றுவிக்கப்பட்டதெனலாம்.

இச் சட்டத்தால் பரோக்களில் ஓராண்டு வசித்து இரவலர் வரி (Poor Rate) செலுத்திய எல்லாச் சொந்த வீட்டுக்காரர்களுக்கும், ஆண்டிற்கு 10 பவுன் வாடகையுள்ள வீடுகளில் தங்கியிருக்கும் எல்லாக் குடிக்கூலிக்காரர்களுக்கும் (Lodgers) வாக்குரிமையளிக்கப் பட்டது. கவுன்டிகளில் 12 பவுன் செலுத்திக் குடியிருப்பு மனை களில் வாழ்வோரும் வாக்குரிமை பெற்றனர்.

இச் சட்டத்தால், மக்கள் தொகை 10,000-க்குக் குறைவான பதினேரு பரோக்கள் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையை இழந்தன. இதற்குமுன் இரு உறுப்பினர்களைத் தேர்ந்தனுப்பும் உரிமை பெற்றிருந்த பரோக்களில் 35 பரோக்கள் ஓர் உறுப்பினரையே அனுப்ப வேண்டியதாயிற்று. இவ்வாறு கிடைத்த இடங்களில் 25-ஐ கவுன்டிகள் பெற்றன. பெரும் நகரங்களான லிவர்ப்பூல், பிர்மிங்ஹாம் போன்ற நகரங்கள் அதிக இடங்களைப் பெற்றன. இச் சட்டத்தின் பயனாக நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றார்கள். இதனால் வாக்காளர் களின் எண்ணிக்கை 4,55,000-லிருந்து பத்து லட்சமாக (10,00,000) உயர்ந்தது. ஆகவே, இச் சட்டம் நடுநிலை வகுப்பாரிடமிருந்த அரசியல் அதிகாரத்தைத் தொழிலாளர் வர்க்கத்திற்கு மாற்றியதெனக் கூறலாம்.

மேலும், இச் சட்டத்தால் பன்னிரண்டு புதிய பரோக்கள் படைக்கப்பட்டன. இலண்டன், எடின்பரோ, கிளாக்ஸோ பல்கலைக் கழகங்கள் பொதுமக்கள் சபையில் பிரதிநிதித்துவம் பெற்றன.

ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் சீர்திருத்தச் சட்டங்கள் உடனடியாக நிறைவேறின.

இரகசிய வாக்களிப்புச் சட்டம் (1872)

1832, 1867ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டங்களுக்குப் பின்னும் நாட்டில் இலஞ்சம், ஊழல், அமளி, வன்முறை போன்றவைகள் பொதுத்தேர்தலில் மலிந்து காணப் பட்டன. இத்தகைய தேர்தல் ஊழல்களை ஒழிக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலை இருந்தது. எனவே, 1872ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டன் இரகசிய வாக்களிப்புச் சட்டம் (The Secret Ballot Act) ஒன்றை நிறைவேற்றினார். அரசியல் அலுவல்கள் வெளிப்படையாக நடைபெற வேண்டுமென்று கூறி பிரபுக்கள் சபை இச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தது. ஆயினும் எதிர்ப்பிற்கிடையில் இச் சட்டம் நிறைவேறியது. குத்தகைநிலம் வைத்திருப்போர் நிலக்கிழார்களுக்கு அஞ்சி அவர்களின் விருப்பத்திற்கேற்ப வாக்களிக்க வேண்டிய நிலை யிருந்தது. இத்தகைய நிலக்கிழார்களின் அச்சுறுத்தலை இச் சட்டம் ஒழித்துக் கட்டியது. இச் சட்டம் தொகுதிக்கு ஒருவரை நியமனம் செய்யும் இக்கால முறையைப் புகுத்தியது. இதனால் பொதுக் கூட்டமொன்றில் வேட்பாளரை அறிவித்து அவருக்கு எதிர்ப்பில்லையெனில் அவரையே ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கும் பழையமுறை கைவிடப்பட்டது.

ஊழல் நடவடிக்கைகள் சட்டம் (1883)

இதற்குப் பின்பும், தேர்தலோடு தொடர்புடைய மற்ற ஒழுங் கீனங்கள் தொடர்ந்து வந்தன. தேர்தல்களில் ஊழலும், இலஞ்சமும் தாண்டவமாடின. தேர்தல்களில் பணம் பெரும் அளவில் செலவிடப் பட்டது. இது ஓர் ஒழுங்கீனமாகும். இதை நீக்க கிளாட்ஸ்டன் 1883ஆம் ஆண்டில் ஊழல் நடவடிக்கைகள் சட்டம் (Corrupt Practices Act) ஒன்றைக் கொண்டுவந்தார். இச் சட்டத்தின்படி தொகுதியின் அளவுக்கேற்பத் தேர்தல் செலவுகள் இருக்க வேண்டு மென்பதும் எந்த நோக்கத்திற்காகப் பணம் செலவிடப் படவேண்டு மென்பதும் வரையறை செய்யப்பட்டன. மேலும், ஊழல்கள் நுட்பமாக வரையறை செய்யப்பட்டன. தேர்தல் பதிலாள்கள் (Agents) சட்டப்படி கணக்குக் காட்ட வேண்டுமென்பது அவர்களு டைய (சட்டப்படியான) பொறுப்பாக்கப்பட்டது. இச் சட்டத்தை மீறியவர்கள்மீது கடினமான தண்டம் விதிக்கப்பட்டது. இச் சட்டத்தினால் ஓரளவு வசதியுள்ளவர்களும் தேர்தலில் போட்டியிட முடிந்தது. 1880ஆம் ஆண்டில் தேர்தல் செலவு ஒரு வாக்

காளருக்கு ஒரு பவுனாக இருந்தது. 1885ஆம் ஆண்டில் அது மூன்று ஷில்லிங்காகக் குறைந்தது. ஆகவே, இச் சட்டம் நெறி கேடான முறைகளைப் பெருமளவிற்கு அகற்றியது.

1884ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம்

1867ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சீர் திருத்தச் சட்டம் நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கு மட்டுமே வாக்குரிமையளித்தது. நாட்டுப்புறத் தொழிலாளர்கள் புறக் கணிக்கப்பட்டார்கள். ஆகவே, இக் குறையைப் போக்க 1884ஆம் ஆண்டில் ஒரு சீர்திருத்தச் சட்டம் (Act of 1884) கிளாட்ஸ்டன் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தால் நாட்டுப்புறத் தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றனர். இச் சட்டத்தால் நாட்டுப்புறத் தொழிலாளர்களுக்கும் நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும் ஒரே மாதிரியான வாக்குரிமைத் தகுதி முதன் முதலாக நிர்ணயிக்கப்பட்டது. இச் சட்டம் மூன்று மாற்றங்களைச் செய்தது.

1. நாட்டுப்புறத் தொகுதியில் வீடு உள்ளவர்களுக்கும் அறையில் தங்கி வசிப்பவர்களுக்கும் இச் சட்டம் வாக்குரிமையளித்தது.

2. நகர்ப்புறத் தொகுதியிலும், நாட்டுப்புறத் தொகுதியிலும், வீட்டிற்கும் நிலத்திற்கும் ஆண்டு மதிப்பு 10 பவுனாக இருக்க வேண்டும்.

3. வீட்டுவேலை செய்பவர்கள், வேலைக்கமர்த்துபவர்களிட மிருந்து தனித்து வாழ்ந்தால், அவர்கள் வாக்குரிமை பெற்றனர். ஆனால், வேலைக்கமர்த்துபவர்களின் வீட்டோடு வசிப்பவர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

இச் சட்டத்தின் பயனாக நாட்டுப்புறத் தொழிலாளர்கள் குறிப்பாக வேளாண்மைத் தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்றனர். இதன் விளைவாக வாக்காளர்களின் எண்ணிக்கை முப்பது லட்சமாக (30,00,000) உயர்ந்தது.

இடமாறு ஒதுக்கீட்டுச் சட்டம் (1885)

1884ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி வாக்காளர் எண்ணிக்கை உயர்ந்ததாலும், நாட்டுப்புறங்களிலிருந்து மக்கள் திரளாகச் சென்று நகர்ப்புறங்களில் குடியேறியதாலும் 1885ஆம் ஆண்டில் இடமாறு ஒதுக்கீட்டுச் சட்டம் (Redistribution of Seats Act) ஒன்று கிளாட்ஸ்டன் அமைச்சரவையால் கொண்டுவரப்பட்டது. இச்

சட்டத்தால் 15,000 பேருக்குக் குறைவாக உள்ள பரோக்கள் பிரதிநிதித்துவத்தை இழந்தன. ஓர் உறுப்பினர் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டன, 50,000 மக்களுக்குக் குறைவான பரோக்கள் ஓர் உறுப்பினரை இழந்தன. இலண்டன் இன்னும் குறிப்பிட்ட நகரங்களைத் தவிர மற்ற நகரங்கள் அனைத்தும் ஓர் உறுப்பினரையே பெற்றன. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த நகரங்களின் எண்ணிக்கை 302-லிருந்து 237ஆகக் குறைக்கப்பட்டது. இச் சட்டத்தின்படி கவுண்டிகள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றன. பன்னிரண்டு புதிய இடங்கள் பொதுமக்கள் சபையில் ஏற்படுத்தப்பட்டன. அதனுல் பொதுமக்கள் சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 670ஆக உயர்த்தப்பட்டது. இங்கிலாந்திலிருந்து 465 உறுப்பினர்களும், வேல்ஸிலிருந்து 30 உறுப்பினர்களும், ஸ்காட்லாந்திலிருந்து 72 உறுப்பினர்களும், அயர்லாந்திலிருந்து 103 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்க இச் சட்டம் வகைசெய்தது. ஆகவே, மக்கள் தொகைக்கேற்ப இப்பொழுது பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது.

பாராளுமன்றச் சட்டம் (1911)

1911ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டம் (Parliament Act of 1911) பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைத்து, கட்டுப்படுத்தியது. பொதுமக்கள் சபையின் அதிகாரத்தை இச் சட்டம் உயர்த்தியதால் இது ஒரு முக்கியமான சட்டமாகக் கருதப்படுகின்றது. இச் சட்டத்தால் பிரபுக்கள் சபையின் நிலை தாழ்ந்து பொதுமக்கள் சபையின் நிலை உயர்ந்தது. இச் சட்டத்தின் முக்கிய பகுதிகளாவன:

1. பண மசோதா (Money Bill) ஒன்றைப் பொதுமக்கள் சபை இயற்றி பிரபுக்கள் சபைக்கு அனுப்பி வைத்த பிறகு, பிரபுக்கள் சபை தன் ஒப்புதலையளிக்காமலோ அல்லது திருத்தமொன்றைக் கொண்டுவராமலோ காலம் தாழ்த்தினுல், ஒரு மாதத்திற்குப் பிறகு அம் மசோதா அரசியாருக்கு அனுப்பப்பட்டு, அவருடைய ஒப்புதலின் பேரில் சட்டமாகும்.

2. மசோதாவொன்று பண மசோதாவா, இல்லையா? என்று கருத்துக் கூறும் அதிகாரம் பொதுமக்கள் சபையின் சபாநாயகருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

3. மற்ற சாதாரண மசோதாக்களைப் பொறுத்தவரையில், பிரபுக்கள் சபை அவைகளை இரண்டாண்டு காலத்திற்குத் தடுத்து நிறுத்திக் காலம் தாழ்த்தலாம்.

சாதாரண மசோதாவொன்று பொதுமக்கள் சபையில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் இயற்றப்பட்டு பிரபுக்கள் சபைக்கு அனுப்பி அச் சபை மூன்று முறையும் அதை நிராகரித்தால், முதல் கூட்டத்தி லிருந்து மூன்ருவது கூட்டம் வரை இரண்டு ஆண்டுகள் கழிந்திருந்தால், அம் மசோதா நேரடியாக அரசி யாருக்கு அனுப்பப்பட்டு அவருடைய ஒப்புதலின் பேரில் சட்டமாகும். ஆகவே, பிரபுக்கள் சபை இரண்டாண்டுகளுக்குள் தன் ஒப்புதலேயோ அல்லது திருத்தத்தையோ தெரிவிக்க வேண்டும். இரண் டாண்டுக்குள் எந்தவித நடவடிக்கையையும் பிரபுக் கள் சபை எடுக்கவில்லேயென்ருல், இரண்டாண்டிற்குப் பிறகு அம் மசோதா சட்டமாகிவிடும். பிரபுக்கள் சபையின் இவ் வதிகாரம் 1949ஆம் ஆண்டில் மேலும் குறைக்கப்பட்டது. அச் சட்டத்தின்படி பிரபுக்கள் சபை சாதாரண மசோதாவை ஓராண்டுக் காலத்திற்குத்தான் தடுத்து நிறுத்தி வைக்க முடியும். ஆகவே, இச் சட்டத்தால் பிரபுக்கள் சபை தன் அதிகாரத்தையிழந்து, ஓர் இரண்டாந்தர சபையாக மாறிவிட்டது.

4. பாராளுமன்றத்தின் பதவி காலம் 5 ஆண்டுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1918)

ஆண்களேப்போல் பெண்களுக்கும் வாக்குரிமையளிக்கப்பட வேண்டுமென்ற இயக்கம் தோன்றியது. 1911ஆம் ஆண்டிற்குப் பிறகு தங்கள் வாக்குரிமைக்காகப் பெண்கள் போராட்டத்தைத் துவக்கினர். உண்ணுவிரதம், சிறை செல்லுதல் போன்ற செயல் களில் அவர்கள் ஈடுபட்டனர். இவர்களின் போராட்டம் உலகப் போரினுல் தடைப்பட்டது. உலகப் போரின்போது ஆண் களின் பணிகளேப் பெண்களும் ஏற்றுத் திறம்படச் செய்தனர். அதனுல் அவர்கள் நன்மதிப்பைப் பெற்றனர். ஆகவே, லாயிட் ஜார்ஜ் ஒரு மசோதாவைக் கொணர்ந்தார். அதுவே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமாகும். இச் சட்டத்தால் வாக்குரிமைத் தகுதிகள் மேலும் எளிதாக்கப்பட்டன. அவைகளாவன:

1. ஆறு மாதம் ஒருவர் ஓரிடத்தில் தங்கியிருந்தால், அல்லது தொழில் மனேயைப் பெற்றிருந்தால், அவர் வாக்குரிமை பெறுவார்.

2. இச் சட்டம் வாக்களிப்பதற்குரிய உடைமைத் தகுதியை ரத்து செய்தது.

3. 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டது.

4. ஏழ்மையின் காரணமாக உதவித்தொகை பெற்று வந்தவர்களுக்கிருந்த தகுதியின்மை அகற்றப்பட்டது.

5. பொதுத்தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் ஒரே நாளில் தேர்தல் நடைபெற வகை செய்யப்பட்டது.

6. வாக்காளர் இரு தொகுதிகளுக்கு மேல் வாக்களிக்க லாகாதெனவும் வகை செய்யப்பட்டது.

7. 21 வயதடைந்த ஆண்களுக்கும், 30 வயதடைந்த பெண்களுக்கும் வாக்காளர் பட்டியலில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வகை செய்யப்பட்டது.

8. வேட்பாளர் ஒருவர் 150 பவுனை ஈடாகத் தேர்தல் அதிகாரியிடம் செலுத்த வேண்டுமென்றும், அளிக்கப் பட்ட வாக்குகளில் $\frac{1}{8}$ பங்கு வாக்குகளைப் பெறத் தவறினால் அவர் ஈட்டுப் பணத்தை இழப்பாரென்றும் இச் சட்டம் கூறியது.

9. மக்கள் தொகையில் 70,000 பேருக்கு ஓர் உறுப் பினர் என்ற அடிப்படையில் இச் சட்டம் இடங்களை மறு ஒதுக்கீட்டு செய்தது.

இச் சட்டத்தினால் வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே அறுபது லட்சமாக (1,60,00,000) உயர்ந்தது. ஆகவே, பொதுமக்கள் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையும் 670-லிருந்து 707-க்கு உயர்ந்தது. இங்கிலாந்து, வேல்ஸிலிருந்து 528 உறுப்பினர்களும், ஸ்காட்லாந்திலிருந்து 74 உறுப்பினர்களும், அயர்லாந்திலிருந்து 105 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட இச் சட்டம் வகை செய்தது. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்தி லிருந்து 70,000 பேருக்கு ஓர் உறுப்பினரும், அயர்லாந்தில் 43,000 பேருக்கு ஓர் உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1928 ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம்

1928ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டத் தினால். ஆண்களும் பெண்களும் சம வாக்குரிமை பெற்றனர். 21 வயது நிரம்பிய ஆண்களும் பெண்களும் வாக்களிக்கும்

உரிமையைப் பெற்றனர். இதன் காரணமாக வாக்காளர்களின் எண்ணிக்கை இரண்டு கோடியே எண்பது லட்சம் (2,80,00,000) ஆகப் பெருகியது. இச் சட்டம் 'வயது வந்தோர்க்கு வாக்குரிமை' என்ற கொள்கையை நாட்டில் நிலை நாட்டியது. அதனால் இங்கிலாந்து முழுமையான ஜனநாயக நாடாகியது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1948)

1948ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (The Representation of the People Act) பல்கலைக் கழக இடங்களையும், வாக்களிப்பதற்கிருந்த தொழில்மனைத் தகுதியையும் அகற்றியது. அத்துடன் நாட்டில் இரு உறுப்பினர் தொகுதிகளும் ஒழிக்கப்பட்டன. இச் சட்டத்தால் 'ஒருவருக்கு ஒரு வாக்கே' (One Man One Vote) என்ற கொள்கை நிலை நாட்டப்பட்டது. இனி எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை யளிக்க முடியாது.

இட மறுஒதுக்கீட்டுச் சட்டம் (1949)

மக்களின் இடப்பெயர்ச்சி காரணமாக, தொகுதிகளை மாற்றியமைக்க வேண்டிய நிலை உண்டாயிற்று. அதற்காக 1949ஆம் ஆண்டில் இட மறு ஒதுக்கீட்டுச் சட்டம் (The Redistribution of Seats Act) ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி பொதுமக்கள் சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 625 ஆக நிர்ணயிக்கப் பட்டது. இங்கிலாந்திலிருந்து 506 உறுப்பினர்களையும், வேல்ஸி லிருந்து 36 உறுப்பினர்களையும், ஸ்காட்லாந்திலிருந்து 71 உறுப் பினர்களையும், வட அயர்லாந்திலிருந்து 12 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க இச் சட்டம் வகைசெய்தது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1969)

இங்கிலாந்தில் வாக்காளர்களின் வயது வரம்பைக் குறைக்க வேண்டுமென்ற கருத்து எழுந்தது. பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும், மாணவர்களும் அங்ஙனமே வேண்டினர். அதனால் 1969ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி வாக்காளர்களின் வயது வரம்பு 21-லிருந்து 18 வயதாகக் குறைக்கப்பட்டது.

ஆகவே, இங்கிலாந்தில் இயற்றப்பட்ட இத்தகைய சீர் திருத்தச் சட்டங்களால் சமுதாய பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக எண்ணிக்கைப் பிரதிநிதித்துவமும், சொத்துடைமைப் பிரதிநிதித்

துவத்திற்குப் பதிலாக எல்லாக் குடிமக்களின் பிரதிநிதித்துவமும் ஏற்பட்டன. எனவே, உயர்குடியாளர்களின் கைப்பாவையாக இருந்த பாராளுமன்றம் ஜனநாயகப் பாராளுமன்றமாகத் திகழ்கின்றது.

ஆங்கிலப் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை (House of Lords), பொதுமக்கள் சபை (House of Commons) என்ற இரு சபைகளை உட்கொண்டு விளங்குகின்றது. பொதுமக்கள் சபை பாராளுமன்றத்தின் கீழ் சபையாகவும், பிரபுக்கள் சபை மேல் சபையாகவும் திகழ்கின்றது. இங்கிலாந்தில் முடியாட்சியின் பிரதிநிதியாக அரசரும், பிரபுக்களின் பிரதிநிதியாக பிரபுக்கள் சபையும் பெயரளவில்தான் உள்ளன. மக்களாட்சியின் சின்னமாக விளங்கும் பொதுமக்கள் சபைதான் அங்கு முதன்மை பெற்றது.

பொதுமக்கள் சபை

பொதுமக்கள் சபை (House of Commons) ஆங்கிலப் பாராளுமன்றத்தின் கீழ் சபையாகும். இச் சபையில் இப்பொழுது 630 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இங்கிலாந்திலிருந்து 511 உறுப்பினர்களும், வேல்ஸிலிருந்து 36 உறுப்பினர்களும், ஸ்காட்லாந்திலிருந்து 71 உறுப்பினர்களும், வட அயர்லாந்திலிருந்து 12 உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுமக்கள் சபைக்கு அனுப்பப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் ஓரங்கத்தினர் தொகுதிகளிலிருந்து (Single Constituency) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இன்று நாட்டிலுள்ள 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டு உள்ள எல்லாக் குடிமக்களும், எந்தவித பாகுபாடின்றியும் வாக்களிக்கலாம். ஆனால், பைத்தியம் பிடித்தவர்களும் (Lunatics), திவாலானவர்களும் (Bankrupts), குற்ற தண்டனை பெற்றவர்களும், பிரபுக்களும், நீதிபதிகளும் தேர்தலில் வாக்களிக்க முடியாது. தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களும் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவைகளாவன :

1. வேட்பாளரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.
2. 21 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
3. ஆங்கிலக் குடிமகனாக இருக்கவேண்டும்.
4. எந்தச் சமயத்தின் அடிப்படையிலாவது ஓர் உறுதிமொழியை எடுக்கின்றவராயிருக்கவேண்டும்.

இத்தகைய தகுதியுள்ளவர்கள், அரசியாரின் தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் எட்டாவது நாளன்று வேட்பாளர் மனுக்களைத் தேர்தல் அதிகாரியின் முன்னிலையில் தாக்கல் செய்யவேண்டும். வேட்பாளரின் பெயரைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இரண்டு வாக்காளர்கள் முன்மொழியவும், வழிமொழியவும் செய்ய வேண்டும். அத்துடன் வேட்பாளரின் நியமனத்தை ஆதரித்து மற்ற எட்டு பேர் சம்மதிக்கவும் வேண்டும். வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்பாளர் 150 பவுன் வைப்புத் தொகையைக் கட்ட வேண்டும். வேட்பாளர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளில் $\frac{1}{8}$ பங்கு வாக்குகளுக்கு மேல் வேட்பாளருக்குக் கிடைத்தாலும் அவருடைய வைப்புத் தொகை திருப்பித் தரப்படும். இல்லையேல் வைப்புத் தொகையை இழந்தவராக அவ் வேட்பாளர் கருதப்படுவார்.

பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகளுக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், பதவிகாலம் முடியுமுன்பே பிரதமரின் ஆலோசனையின்படி சபையை அரசியார் கலைக்கலாம். இதற்கிடையில் ஓர் உறுப்பினர் இறந்தாலோ, அல்லது தமது உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தாலோ, அவ்வுறுப்பினரின் தொகுதியில் உப.தேர்தலை (By-Election) நடத்தி வெற்றிடத்தைப் பூர்த்தி செய்யலாம். வழக்காற்றின்படி பொதுமக்கள் சபை ஆண்டிற்கு ஒரு முறையாவது கூடியாக வேண்டும். பிரதம அமைச்சரின் அறிவுரைப்படி அரசியார் பொதுமக்கள் சபையைக் கூட்டுவிக்கிறார்.

பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் சில தனியுரிமைகளைப் பெற்றுள்ளார்கள், சபையில் பேச உறுப்பினர்கள் முழு சுதந்திரத்தைப் பெற்றுள்ளார்கள். சபை கூடுவதற்குமுன் நாற்பது நாள்களிலிருந்து, கூடிக் கலைந்த பின் நாற்பது நாள்கள் வரை உறுப்பினர்களைக் கைது செய்யக்கூடாது. சபையின் விவாதங்கள், நடவடிக்கைகள்பற்றிய சட்டதிட்டங்களைச் சபை, தானே முடிவுசெய்து கொள்கின்றது. சபையை அவமதிப்பவர்களைத் தண்டிப்பது அவர்களுடைய முக்கியமான தனியுரிமையாகும். தேர்தலுக்குப் பிறகு உறுப்பினர்கள், சபையின் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

சபாநாயகர்

பொதுமக்கள் சபையில் சபாநாயகரின் (Speaker) பதவி மிகவும் மதிப்பிற்குரியதாகும். 17ஆம் நூற்றாண்டு வரையிலும்

அரசர்களே சபாநாயகர்களை நியமித்துவந்தனர். அதன்பின்னர் பொதுமக்கள் சபையே சபாநாயகர்களைத் தேர்ந்தெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. புதிதாகப் பொதுமக்கள் சபை கூடும்பொழுது சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார். அந்தச் சபை கலைக்கப்படும் (Dissolution) வரையிலும் அவரே சபாநாயகராக இருப்பார். வழக்கமாகப் பலமுறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் மற்ற அரசியல் கட்சி உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கவராக இருக்கவேண்டுமென்பதே மரபாகும். ஆங்கில அரசியலமைப்பில் சபாநாயகர் தேர்தலைப்பற்றி ஒரு முக்கிய வழக்காறு நடைமுறையிலுள்ளது. எல்லாக் கட்சிக்கும் பொதுவான ஒருவர் போட்டியின்றி ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அதுமட்டுமன்றி, அவர் விரும்பினுல் அவரே மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். எந்த அரசியல் கட்சி பதவிக்கு வந்தாலும் சபாநாயகர் தேர்தலுக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. பொதுமக்கள் சபைக்கு சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினர் என்னும் தம்முடைய கட்சித் தொடர்பைத் துண்டித்துக்கொண்டு கட்சிச் சார்பற்ற தலைவராகி விடுகிருர். அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றிபெற்ருலும், மீண்டும் பழைய சபாநாயகரே ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர். ஆகவே, பொதுமக்கள் சபையின் சபாநாயகர் கட்சிச் சார்பற்ற முறையில் இயங்குவதால் அவருடைய தீர்ப்புகளும், முடிவுகளும் நடுநிலைமையானவையாக இருக்கின்றன. அவர் தனித்தியங்குவதால் நடுநிலைமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்ருர். அவர் விவாதங்களில் பங்கு கொள்வதில்லை. மக்கள் சபையில் மசோதாவின் மேலோ, தீர்மானங்களின் மேலோ சம வாக்களிப்பிருந்தால் (Equal Voting), அப்பொழுதுதான் அவர் தம்முடைய முடிவுகாட்டும் வாக்கை (Casting Vote) உபயோகித்து சிக்கலைத் தீர்த்துவைப்பார்.

சபாநாயகராகப் பதவியில் இருப்பவர் நன்கு கற்றறிந்தவராகவும், திறமைசாலியாகவும், அனுபவசாலியாகவும், சாதுர்யமுடையவராகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவரால் விதிகளுக்கு விளக்கம் கொடுக்கவும், உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவும் முடியும். பொதுமக்கள் சபையில் நடக்கும் கூட்டங்களுக்கு சபாநாயகர் தலைமை வகிக்கின்ருர். ஆனுல், பொதுமக்கள் சபை ஒரு குழுவாக (Committee of the Whole House) செயல்படும்பொழுது சபாநாயகர் தலைமை வகிக்கமாட்டார். அக்குழுவின் தலைவர்தான் அதற்குத் தலைமை வகிப்பார். சபாநாயகர்

பொதுமக்கள் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கும் போது சபாநாயகருக்கே உரித்தான உடையை அணிந்து கொண்டும், தலையில் செயற்கையான முடியைத் (Wig) தரித்துக் கொண்டும் உயர்ந்த சபாநாயகரின் நாற்காலியில் அமரவேண்டும். பொதுமக்கள் சபையில் ஓர் உறுப்பினர் பேச வேண்டுமென்றால் முதலில் அவர் சபாநாயகரை விளித்து, அவருக்குரிய மரியாதை யைச் செலுத்திவிட்டுதான் பேசவேண்டும். சபையில் யார் யார் எப்பொழுது பேச வேண்டுமென்பதை சபாநாயகரே தீர்மானிப் பார். உறுப்பினர்கள் ஒழுங்கில்லாமல் சபையில் நடந்துகொண்டால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கையை சபாநாயகர்தான் எடுப் பார். சபாநாயகரின் ஆணையின்படி அத்தகைய உறுப்பினர்கள் காவல் மூகவரால் வெளியேற்றப்படுவர். ஆகவே, சபையில் ஒழுங்கையும், அமைதியையும், மதிப்பையும் பாதுகாக்கும் பொறுப்பு சபாநாயகரைச் சார்ந்ததாகும். சபையில் அளவுக்கு மீறி ஒழுங்கீனம் பரவினால் அவர் சபையை ஒத்திவைப்பார். பாராளுமன்ற விதிமுறைகளைப் பயன்படுத்தி சமயத்திற்கேற்ப சபாநாயகர் முடிவுகளைச் செய்வார். தீர்மானங்களின்மீது அளிக்கப் படும் வாக்குகளைக் கணக்கெடுத்து முடிவுகளை அவர் அறிவிப்பார். சபையில் விவாதங்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ளபடிதான் நடைபெற வேண்டும். ஆனால், எதிர்க் கட்சியின் ஒத்திவைப்பு பிரேரணை (Adjournment of Motion) கொண்டுவரும்பொழுது அதை அனு மதிப்பதுபற்றி முடிவு எடுப்பதும் அவரையே சார்ந்ததாகும். ஆகவே, சபையின் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அவரு டைய முடிவே! முடிவானதாகும். உறுப்பினர்கள் அவர்மீது வைத்திருக்கும் உயர்ந்த நம்பிக்கைக்கு ஏற்ப சபையின் மதிப்பை மனதில் வைத்துக்கொண்டுதான் அவருடைய முடிவுகள் இருக்கும். ஆகவே, அவருடைய முடிவுகள் தவறில்லாதவைகள் என்று பாவிக்கப்படும். 1911ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டப்படி, ஒரு மசோதா நிதி மசோதாவா, இல்லையா என்பதை நிர்ணயம் செய்யும் பொறுப்பு சபாநாயகரையே சார்ந்ததாகும். சில சமயங்களில் குழுக்களை அமைக்கும் பொறுப்பு களும், மநாடுகளைக் கூட்டும் பொறுப்புகளும் சபாநாயகரையே சாரும். 1914ஆம் ஆண்டில் நடைபெற்ற பக்கிங்ஹாம் அரண்மனை மாநாடு, 1920ஆம் ஆண்டில் நடைபெற்ற சபாநாயகர்கள் மாநாடு போன்றவைகளுக்கு சபாநாயகர் தலைமை வகித்ததைப் போன்று சில சமயங்களில் அத்தகைய மாநாடுகளுக்கு அவரே தலைமை வகிப்பார். அத்துடன் உறுப்பினர்கள் அரசியாருடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்றால் சபாநாயகர் மூலமாகத்தான் தொடர்பு கொள்ளவேண்டும். சபாநாயகர் சபை உறுப்பினர் களின் தனியுரிமைகளைப் பாதுகாக்கப் பொறுப்புடையவர். ஆகவே,

சபாநாயகர் சபையில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் நடுவர்; சபை உறுப்பினர்களுடைய தனியுரிமைகளின் சிறந்த காப்பாளர்; சபையில் தலைசிறந்த பிரதிநிதி.

சபாநாயகர் ஆண்டொன்றுக்கு 5000 பவுன்களை வரியில்லாச் சம்பளமாகப் பெறுகின்றார். வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனையில் அவர் இருப்பிடம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றார். அவரின் அதிகார பூர்வமான அந்தஸ்து கவுன்சில் தலைவருக்கு (Lord President of the Council) அடுத்தபடியாக அமைக்கப் பட்டிருக்கின்றது. சபாநாயகர், பதவியிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொண்டால் அவருக்கு நல்ல ஓய்வுப் பணமும் கிடைக்கின்றது; அத்துடன் அவர் ஒரு பிரபுவாகவும் நியமிக்கப் படுகின்றார். ஆகவே, பொதுமக்கள் சபையின் சபாநாயகர் உலகிலேயே மிகவும் தலைசிறந்த மன்றத் தலைவராகக் கருதப் படுகின்றார். மற்ற மன்றத் தலைவர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றார்.

பொதுமக்கள் சபையின் பணிகள்

பொதுமக்கள் சபையின் பணிகளை மூன்று விதமாகப் பிரிக் கலாம். ஒன்று, சட்டமியற்றுதல்; இரண்டு, பணமசோதாக்களை இயற்றுதல்; மூன்று, அரசாங்கத்தைக் கண்டிப்பதும் அதன்மேல் அதிகாரம் செலுத்துவதுமாகும்.

சட்டமியற்றுதல்

இங்கிலாந்தில் அரசியார், பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை ஆகிய மூன்று அமைப்புகளின் ஒப்புதலுக்குப் பிறகே மசோதா சட்டமாகின்றது. பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் மசோதாக்கள் மூன்று வகைப்படும் அவை :

1. பொது மசோதாக்கள் (Public Bills): பொதுவாக இம் மசோதாக்கள் அரசாங்கத்தாலேயே கொண்டுவரப் படுகின்றன. இம் மசோதாக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு கேபினெட் கூட்டங் களில் விவாதிக்கப்படும். அதன் பிறகே பொதுவாகப் பொதுமக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படும். இம் மசோ தாக்கள் நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் பாதிப் பதாக இருக்கும்.

2. உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் கொண்டு வரும் பொதுமசோதாக்கள் (Private Member's Bills): பொது மசோதாக்களை அல்லது அரசாங்க

மசோதாக்களைத் தனிப்பட்ட உறுப்பினர்களும் கொண்டு வரலாம். அத்தகைய மசோதாக்களைக் கொண்டு வரும் உறுப்பினர்கள் அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு இருக்கின்றதா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அத்தகைய மசோதாக்கள் வெற்றி பெறுவது கடினமாகும்.

3. தனியார் மசோதாக்கள் (Private Bills): அரசாங்கத்தின் ஆதரவு பெற்றோ, இல்லாமலோ ஓர் உறுப்பினர் தனிப்பட்ட முறையில் தம் சொந்தப் பொறுப்பில் மசோதா கொண்டுவந்தால், அது தனியார் மசோதா எனப்படும். இம் மசோதா, நாட்டைப் பாதிக்கும் வகையில் இருக்காது. ஒரு தனி மனிதனையோ, தனி மன்றத்தையோ, தனிப் பகுதியையோ, அல்லது ஒரு வகுப்பாரையோ பாதிக்கும் வகையில்தான் இம் மசோதா இருக்கும்.

பொது மசோதாவொன்று நிறைவேற வேண்டுமாயின் மூன்று முறை சபையில் வாசிக்கப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அல்லது ஐந்து கூட்டங்களில் விவாதங்கள் நடந்த பிறகு, சபையால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(1) முதல் வாசிப்பு (First Reading)

முதலில் மசோதாவைக் கொண்டுவர விரும்பும் உறுப்பினரோ அமைச்சரோ தாம் ஒரு மசோதாவைக் கொண்டுவர விரும்புவதாக சபையில் அறிவிக்க வேண்டும். குறிப்பிட்ட நாளில் அலுவல் அட்டவணையில் (The Order of the day) இது இடம் பெறுகின்றது. அந்தக் குறிப்பிட்ட நாளில் சபாநாயகர் உறுப்பினர் பெயரைக் கூறுகின்றார். அப்பொழுது உறுப்பினரால் சபையின் எழுத்தருக்கு (Clerk) ஒரு 'வெற்று மசோதா' (Dummy Bill) கொடுக்கப்படும். அவர் மசோதாவின் குறுகிய பெயரை மட்டும் சபையில் வாசிப்பார். இதுவே மசோதாவைச் சமர்ப்பித்தலாகவும் (Introduction of the Bill), முதல் வாசிப்பாகவும் அமைகின்றது. பின்னர் இரண்டாவது வாசிப்பிற்கென ஒரு நாள் குறிக்கப்படும். அதன் பின்னர் அம் மசோதா அச்சடிக்கப்பட்டு இரண்டாம் வாசிப்பிற்குரிய நாளை எதிர்பார்த்திருக்கும். இத்துடன் மசோதா முதல் கட்டத்தைக் கடந்துவிட்டதெனலாம்.

(2) இரண்டாவது வாசிப்பு (Second Reading)

ஒரு மசோதாவின் பயணத்தில் இது மிகவும் நெருக்கடியான கட்டமாகும். இரண்டாவது வாசிப்புக்கான குறிப்பிட்ட நாளில்,

மசோதாவைச் சமர்ப்பித்த உறுப்பினர் எழுந்து மசோதாவின் பின்னணியையும், நோக்கங்களையும், அதனுள் அடங்கியுள்ள கொள்கைகளையும், குறிக்கோளையும் விளக்கி மசோதா இரண்டாவது முறையாக வாசிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்து முடிப்பார். பின்னர். மசோதாவைப்பற்றி விவாதம் தொடரும். மசோதாவை ஆதரிப்பவர்கள் அம் மசோதாவினால் ஏற்படும் நன்மைகளையும், அதன் குறிக்கோள்களையும் எடுத்துரைப்பார்கள். மசோதாவை எதிர்ப்பவர்கள் அம் மசோதாவினால் ஏற்படும் தீமைகளையும் அதன் குறைகளையும் எடுத்துக் கூறுவார்கள். 'ஆறு மாதங்களுக்குப்பின் இந் நாளில் இம் மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்படட்டும்' (The Bill be Read a Second Time this Day Six Months Hence) என்று எதிர்க்கட்சி ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டாலோ, 'இச் சபை இம் மசோதாவிற்கு இரண்டாவது வாசிப்பளிக்க மறுக்கிறது' என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டாலோ, அம் மசோதாவானது தோல்வியுறும். ஆனால், அத் திருத்தம் தோல்வியடைந்தால் மசோதா இரண்டாவது தடவையாக வாசிக்கப்பட்டுவிட்டதென சபாநாயகர் அறிவிப்பார். மசோதாவிற்கு எதிராக எதிர்க் கட்சி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தால், அதையொட்டி நீண்ட விவாதம் நடைபெறும். அதன்பின்பு அம் மசோதாவின்மீது வாக்கெடுப்பு நடைபெறும். மசோதாவிற்கு எதிராக அதிக வாக்குகள் கிடைத்தால், அம் மசோதா அரசாங்க மசோதாவாக இருந்தால், அமைச்சரவைக்குள்ள நம்பிக்கையின்மை வெளிப்படும். ஆகவே, அமைச்சரவை ராஜிநாமா செய்ய நேரிடும். இல்லையேல் அம் மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏதாவதொரு நிலைக் குழுவுக்கு (Standing Committee) அனுப்பி வைக்கப்படும். இத்துடன் இரண்டாவது கட்டம் முடிவுற்றது.

(3) குழுக் கட்டம் (Committee Stage)

மசோதாவின் இரண்டாவது வாசிப்பு முடிந்தவுடனே, 'இம் மசோதாவை ஓர் ஆய்வுக் குழுவுக்கோ (Select Committee), சபையின் முழு குழுவுக்கோ (Committee of the Whole House) அனுப்பப்படல் வேண்டும்' என்ற தீர்மானம் கொண்டு வரவில்லையெனில், அம் மசோதா நேராக ஒரு நிலைக்குழுவுக்கு (Standing Committee) அனுப்பப்படும். இங்கிலாந்தில் இக் கட்டத்தில்தான் மசோதாக்கள் விரிவாக ஆராயப்படுகின்றன. அக் குழு மசோதாவைப் பிரிவு பிரிவாக (Clause by Clause) ஆராயும். தேவையானால் சொல் சொல்லாகக்கூட (Word by Word) ஆராயும். ஆனால், மசோதாவிலுள்ள கொள்கையை

மாற்றவோ, திருத்தவோ அனுமதிக்கப்பட மாட்டாது. இக் குழுக் கூட்டங்களில் உறுப்பினர்கள் தடையின்றி எத்தனை முறை வேண்டுமானாலும் பேசலாம். மசோதா அமைப்பை அல்லது உருவத்தை மாற்றியமைக்கலாம்; திருத்தங்கள் கொண்டுவரலாம். பிறகு குழுவின் சிபார்சுகளடங்கிய ஓர் அறிக்கையை குழு சபைக்குத் திருப்பி அனுப்பும். இயல்பாக, பண மசோதாக்களைத் தவிர எல்லா மசோதாக்களும் நிலைக் குழுக்களுக்கு அனுப்பப் படுகின்றன. பண மசோதாவாக இருந்தால், இரண்டாவது வாசிப்புக்குப்பின் உடனே முழுச்சபை குழுவுக்கு அனுப்பப் படுகின்றது.

(4) அறிக்கைக் கட்டம் (Report Stage)

மசோதாக்கள் திருத்தப்பட்டோ. திருத்தப்படாமலோ குழுவால் சபைக்கு அனுப்பப்படுகின்றன. அவைகள் அச்சிடப்பட்டு சபைமுன் வைக்கப்படும்பொழுது, அவை அறிக்கை நிலையை அடைவதாகக் கொள்ளலாம். முழுச்சபை குழுவிற்கு ஒரு மசோதா அனுப்பப்பட்டு திருத்தங்கள் எதுவும் செய்யப்பட வில்லையெனில், மசோதாவின் அறிக்கை நிலையில் விவாதம் நடைபெறுவதில்லை. ஆனால், நிலைக்குழு திருத்தம் செய்திருந்தால், அதன் அறிக்கையின்மீது விவாதம் நடக்கும். குழுவின் சிபார்சுகள் சில சமயங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்; இல்லையேல் தள்ளப் படும். ஆனால், அறிக்கை நிலையில் சபை, மேலும் திருத்தங்களைச் செய்யலாம். புதிய பிரிவுகளைச் சேர்க்கலாம். மறுபடியும் மசோதா குழுக்களுக்கு அனுப்பப்படலாம்.

(5) மூன்றாவது வாசிப்பு (Third Reading)

அறிக்கை நிலைக்குப்பின் மசோதா உடனே மூன்றாவது வாசிப்பைப் பெறுகின்றது. இது இறுதியான விவாதமாகும், இரண்டாவது வாசிப்பின்போது அதன் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, குழு கட்டத்தில் அதற்கு மெருகு கொடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, மூன்றாவது வாசிப்பின்போது சாதாரண திருத்தங்களே கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்படும். விவாதத்திற்குப்பின் அம் மசோதா வாக்கெடுப்பிற்கு விடப்படும். இவ் வாக்கெடுப்பில் மசோதா வெற்றி பெற்றால், சபையால் மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். பொது மக்கள் சபையில் மசோதாவின் பயணமும் கடைசிக் கட்டத்தை அடைந்து முற்றுப்பெறுகின்றது.

பொதுமக்கள் சபையில் ஒரு மசோதா எல்லாக் கட்டங்களையும் கடந்துவிடுவதால் சபையின் எழுத்தாளரால் பிரபுக்கள் சபைக்கு

எடுத்துச் செல்லப்படுகின்றது. அச் சபையின் எழுத்தாளர் ஒருவர் அம் மசோதாவை ஏற்றுக் கொள்கிறார். பிரபுக்கள் சபையிலும் மசோதா அதே கட்டங்களின் வழியாகச் செல்கிறது. பண மசோதாக்களைத் தவிர பிரபுக்கள் சபை சட்டப்படி ஒரு மசோதாவைத் திருத்தலாம். அல்லது நிராகரிக்கலாம். பிரபுக்கள் சபையும் அம் மசோதாவிற்குத் தன் ஒப்புதலையளித்துவிட்டால், அம் மசோதா அரசியாரின் ஒப்புதலுக்குக்காக அனுப்பப்படு கின்றது. அரசியார் அம் மசோதாவிற்குத் தம் ஒப்புதலையளித்த வுடனே அம் மசோதா சட்டமாகின்றது. அரசியார் அம் மசோதாக்களுக்குத் தடையின்றித் தம் ஒப்புதலையளிப்பது அங்குள்ள மரபாகும்.

பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபை நிறைவேற்றியனுப்பிய மசோதாவை 1949ஆம் ஆண்டு சட்டப்படி ஓராண்டு தடுத்து நிறுத்தலாம். ஓராண்டிற்குள் அச் சபை அம் மசோதாவின்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால், அம் மசோதா அரசியாருக்கு அனுப்பப்பட்டு சட்டமாக்கப்படும். ஓராண்டிற்குள் அம் மசோதாவுக்கு பிரபுக்கள் சபை திருத்தம் கொண்டு வந்தால், திருத்தப்பட்ட மசோதாவை பிரபுக்கள் சபையின் எழுத்தர் பொதுமக்கள் சபைக்கு எடுத்துச் செல்லுவார். பொதுமக்கள் சபை ஒவ்வொரு திருத்தத்தையும் ஏற்றும், தள்ளியும் அல்லது திருத்தியும் விவாதிக்கும். பின்னர் மசோதா மீண்டும் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்படும். பிரபுக்கள் சபை ஏற்றுக் கொண்டால் அரசியாருக்கு அனுப்பப்பட்டுச் சட்டமாக்கப்படும். இல்லையேல் பொதுமக்கள் சபை அம் மசோதாவை மீண்டும் மும்முறை நிறைவேற்றி, பிரபுக்கள் சபையின் ஒப்புதலின்றியே அரசியாருக்கு அனுப்பும். அரசியார் தம் ஒப்புதலையளித்த பின்பு அம் மசோதா சட்டமாகி விடும்.

பண மசோதாக்களை இயற்றுதல் (Money Bills)

பண மசோதாக்களை இயற்றும் பணி பொதுமக்கள் சபையின் சிறப்புப் பணியாகும். எல்லாவிதமான பண மசோதாக்களும் பொதுமக்கள் சபையில்தான் முதலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நாட்டின் வரவு-செலவுத் திட்டம் (Budget), பண ஒதுக்கீடு மசோதாக்கள் (Appropriation Bills) போன்ற பண மசோதாக்கள் நிதி அமைச்சரால் (Chancellor of Exchequer) சபையில் சமர்ப் பிக்கப்படுகின்றன. மற்ற உறுப்பினர்கள் பண மசோதாக்களைக் கொண்டுவர முடியாது. வரவு செலவுத் திட்டம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்பொழுது, முழுச் சபையும் ஒரு குழுவாக உட்கார்ந்து அதை விவாதிக்கும். அப்பொழுது சபாநாயகர்

கூட்டத்திற்குத் தலைமை தாங்க மாட்டார். முழுக்குழுவின் தலைவரே தலைமை தாங்கி நடத்துவார். ஆனால், மசோதாக்களில் எவை பண மசோதாக்கள் என்று கருத்துத் தெரிவிப்பது சபாநாயகரின் பணியாகும். பொதுமக்கள் சபையில் நிறை வேற்றப்பட்ட பண மசோதாக்கள் பிரபுக்கள் சபையின் ஒப்பு தலுக்கு அனுப்பி வைக்கப்படும். பிரபுக்கள் சபை பண மசோதாக்களை 1911ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டப்படி ஒரு மாதத்திற்கு மேல் நிறுத்திக் காலதாமதம் செய்யக் கூடாது. பிரபுக்கள் சபை பண மசோதாக்களை ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், ஒரு மாதத்திற்குப் பிறகு அரசியாரின் ஒப்புதலைப் பெற்று சட்டமாகிவிடுகின்றது. ஆகவே, பண மசோதாக்களைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் சபை தலையாய அதிகாரத்தைப் பெற்று விளங்குகின்றது.

ஆட்சியாளர்களை அடக்கியாளும் பணி

பாராளுமன்றமுறை அரசாங்கத்தில் அமைச்சரவை பாராளு மன்றத்திற்குப் பொறுப்பானதாகும். இங்கிலாந்தில் அமைச்சரவை பொதுமக்கள் சபைக்குப் பொறுப்பானதாகும். அதனால் இச் சபை அரசாங்கத்தின்மீது கட்டுப்பாடு செலுத்துகின்றது. அமைச் சரவை ஒவ்வொரு கொள்கையையும், சட்டங்களையும், கட்டளை களையும், நடவடிக்கைகளையும் சபையின்முன்பு தெளிவாக்கி அதன் நம்பிக்கையைப் பெற வேண்டும். இல்லையேல் அமைச் சரவைக்கு ராஜிநாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லை. கேள்வி நேரத்தில், இச் சபையின் உறுப்பினர்கள் கேள்விகளையும், துணைக் கேள்விகளையும் கேட்டு அதன் மூலம் அரசாங்கத்தின் குறைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஆட்சியாளர்கள் குறையின்றிச் செயல்பட வேண்டி யதாய் உள்ளது. ஒத்திவைப்புப் பிரேரணை, கண்டனத் தீர்மானம் முதலியவைகளின் மூலம் அரசாங்கத்தை உறுப்பினர்கள் கண்டிப் பார்கள். அதனால் அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலை ஏற்படும். ஆகவே, பொதுமக்கள்சபை ஆட்சியாளர்களைக் கண்டித்து அவர்களைப் பொறுப்புள்ளவர்களாகச் செய்கிறது.

பொதுமக்கள் சபை மட்டும்தான் ஆட்சியாளர்களை அடக்கி யாளுகிறது என்று சொல்லிவிடவும் முடியாது. அமைச்சரவையும் சபையைச் சில வழிகளில் கட்டுப்படுத்துகிறது. சபையைக் கலைக்கும் அதிகாரம் பிரதமருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது, அதனால் சபையைக் கலைத்துவிடுவதாகக் கூறி, சபையைக் கட்டுப் படுத்தலாம். அத்துடன் உறுப்பினர்கள் எப்பொருள் பற்றியும் எந்நேரத்திலும் விவாதங்களை ஆரம்பிக்க முடியாது. சபையில்

நிகழ்ச்சி நிரலிலுள்ள பொருளைப் பற்றியோ, மசோதாக்கள் பற்றியோதான் கேள்விகள், விவாதங்கள் எழுப்ப முடியும். அதே சமயத்தில் விவாதங்களைச் சீக்கிரமே முடித்துக் கொள்வதற்காகக் கையாளப்படும் எளியமுறை, கில்லட்டின்முறை, கங்காருமுறை போன்றவைகள் உறுப்பினர்களின் பேச்சு நேரத்தை வெகுவாகக் குறைத்து வருகின்றன. அத்துடன் குறுகிய கால அளவிற்குள் அநேக மசோதாக்களை இயற்றவேண்டி யிருப்பதால், சட்டமியற்றும் பணியில் சிறிதளவு ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அத்தகைய கொடுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தினுல் (Delegated Legislation) ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பப்படி துணைச் சட்டங்களை இயற்றிக் கொள்கிருர்கள். ஆகவே, இத்தகைய காரணங்களால் அமைச்சரவையும் பொது மக்கள் சபையின்மேல் கட்டுப்பாடு செலுத்துகிறதெனக் கூறலாம்.

குழு முறை (The Committee System)

இன்றைய நாளில் சட்டமியற்றுவது மிகவும் சிக்கலான பணியாகும். குறிப்பிட்ட காலத்திற்குள் ஏராளமான மசோதாக்கள் விவாதிக்கப்பட்டு இயற்றப்பட வேண்டும். சில மசோதாக்கள் சிக்கலான பிரச்சினைகளைப் பற்றியதாகவும், விஞ்ஞானப் பொறி நுட்பம் பற்றியதாகவும் இருக்கும். அத்தகைய மசோதாக்களின் மீது நடைபெறும் விவாதங்களில் அனேக உறுப்பினர்களுக்குப் பங்குகொள்ள முடியாதநிலை ஏற்படும். தவிர ஒவ்வொரு மசோதாவிலும் உறுப்பினர்கள் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்த முடியாது. ஏனெனில் உறுப்பினர்களின் நேரமும் குறைவாயிருக்கும். ஆகவே, இத்தகைய காரணங்களுக்காகவும். சபையின் வேலைச் சுமையைக் குறைப்பதற்காகவும் குழுக்கள் ஏற் படுத்தப்படுகின்றன. முதலாம் எலிஸபெத் அரசியார் காலம் முதற்கொண்டே, மசோதாக்களின் இரண்டாவது வாசிப்பு பொது மக்கள் சபையில் முடிந்த பின்னர், அம் மசோதாக்களை ஒரு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்புவது வழக்கமாகிவிட்டது. 1919ஆம் ஆண்டிற்குப் பின்னர், குழுக்களின் சேவை மிகவும் அதிகரித்துவிட்டது.

பொதுமக்கள் சபையின் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் குழுக்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவைகளாவன:

1. பொதுமக்கள் சபையே முழுக் குழுவாகச் செயல்படுதல் (Committee of the Whole House).
2. ஆய்வுக் குழுக்கள் (Select Committees)

3. நிலைக் குழுக்கள் (Standing Committees).
4. கூட்டுக் குழுக்கள் (Joint Committees).
5. தனியார் மசோதாக்கள் குழு (Private Bills Committee)

சபையின் முழுக்குழு

பொதுமக்கள் சபையே ஒரு குழுவாக இருந்து சில சமயங்களில் பணியாற்றுகின்றது. பொதுமக்கள் சபை ஒரு குழுவாகச் செயல்படும்பொழுது சபாநாயகர் தலைமை தாங்கமாட்டார். அப்பொழுது அக் குழுவின் நடவடிக்கைகளை வழிமுறைகள் தலைவர் (The Chairman of Ways and Means) கவனித்துக் கொள்வார். பொதுப் பணத்தைப் பற்றிய தீர்மானங்களும், நாட்டின் வருமானத்தைப்பற்றிய தீர்மானங்களும், நாட்டின் செலவுகளைப்பற்றிய தீர்மானங்களும் சபையின் முழுக்குழுவில் விவாதிக்கப்படும். இத்தகைய மசோதாக்கள் விரிவாக இங்குப் பரிசீலனை செய்யப் படுவதால், ஒரே பிரச்சினையைப்பற்றி உறுப்பினர்கள் பலமுறையும் பேசுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். குழுவின் விவாதங்கள் முடிந்ததும், கூட்டமும் முடிகிறது. பிறகு சபாநாயகர் வந்து தலைமை தாங்க, சபையின் கூட்டம் ஆரம்பமாகிறது.

ஆய்வுக் குழுக்கள்

ஒவ்வொரு ஆய்வுக் குழுவிலும் 15 உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். இக் குழுக்கள் அவ்வப்பொழுது நியமனம் செய்யப்படுகின்றன. பிரச்சினைகள் எழும் பொழுது, அப் பிரச்சினைகளைப் பற்றியும், அதற்குரிய மசோதாக்களைப் பற்றியும் பரிசீலனை செய்ய இவ்வித ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப் படுகின்றன. அவைகளை ஆராய்ந்து, செய்திகளைச் சேகரித்து சாட்சிகளை விசாரித்துத் தகுந்த முடிவுகளை எடுத்து, பிறகு அறிக்கைகளை எழுதி இக் குழுக்கள் சபைக்கு அனுப்பி வைக்கின்றன. அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த சபை உறுப்பினர்களே இக் குழுக்களில் நியமிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு ஆய்வுக்குழுவும் அதனுடைய தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. அறிக்கைகளைச் சபைக்கு அளித்தவுடன் இக் குழுக்கள் கலைந்துவிடும். ஆனால் சில நிரந்தரமான சிறப்புக் குழுக்களும் உள்ளன. அவைகளைக் கூட்டத்தொடர் சிறப்புக் குழுக்கள் (Sessional Select Committees) என்று கூறலாம். தனியுரிமைக் குழு (Privileges Committee), பொதுக்கணக்கு குழு (Public Accounts Committee) போன்றவைகள் இவ்

வகையைச் சார்ந்தனவாகும், மற்றும் தற்காலிக ஆய்வுக் குழுக்கள் (Adhoc Select Committees), சிறப்பான ஆய்வுக் குழுக்கள் (Special Select Committees) போன்ற ஆய்வுக் குழுக்களும் அவ்வப்பொழுது ஏற்படுத்தப்படுகின்றன.

நிலைக் குழுக்கள்

இரண்டாவது வாசிப்பு முடிந்த பிறகு மசோதாக்கள் பொதுவாக அவற்றிற்குரிய நிரந்தரக் குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. பெரும்பான்மையான மசோதாக்கள் நிரந்தரக் குழுக்களுக்கே செல்லுகின்றன, ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 20 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். சில சமயங்களில் தனி மசோதாக்களைப் பரிசீலனை செய்வதற்காக 50 உறுப்பினர்கள் கூட ஒரு குழுவால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் சபையின் உறுப்பினர்களேயாவார்கள். இவர்கள் அனைவரும் சபாநாயகரால் கட்சியின் விகிதாச்சார முறையில் நியமிக்கப்படுகின்றனர். குழுத் தலைவர்கள் பட்டியலிலிருந்து ஒருவரை நிலைக் குழுவின் தலைவராக சபாநாயகர் நியமிப்பார். பெரும்பாலான சபைக் குழுவின் வேலைகளை, இந்த நிலைக் குழுக்கள்தான் செய்கின்றன. தேவைக்கேற்ப நிரந்தரக் குழுக்கள் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் ஏற்படுத்தப்படும். இதைத் தவிர ஸ்காட்லாந்து பற்றிய மசோதாக்களுக்குத் தனிக் குழுவும், வேல்ஸுக்குத் தனிக் குழுவும் ஏற்படுத்தப்படுகின்றன. இக் குழுக்கள் மசோதாக்களைப் பிரிவு, பிரிவாகவும், சொல், சொல்லாகவும் பரிசீலனை செய்கின்றன. இக் குழுக்களில் அறிஞர்களும், நிபுணர்களும் உறுப்பினர்களாக இருப்பதால், மசோதாக்கள் தெளிவாகவும், விளக்கமாகவும் பரிசீலனை செய்யப்படுகின்றன. பரிசீலனை செய்து விவாதித்த பின்பு இக் குழுக்கள் தங்களின் சிபார்சுகளடங்கிய அறிக்கைகளைத் தயாரிக்கும். அவ் வறிக்கைகள் சபைக்கு அனுப்பப்படும்.

கூட்டுக்குழுக்கள்

பத்தொன்பதாம் நூற்றுண்டு முதற்கொண்டு கூட்டுக் குழுக்கள் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றன. பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளிலிருந்தும் இக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். இரண்டு சபைகளுக்கும் பொதுவாகவுள்ள பிரச்சினைகளை இக் கூட்டுக் குழுக்கள் பரிசீலனை செய்யும். ஒவ்வொரு சபையிலிருந்தும் சமமான எண்ணிக்கையான உறுப்பினர்கள் இக் குழுக்களில் இடம் பெறுவர். வழக்கமாக இக் குழுக்களின் தலைவர்கள் பிரபுக்களாகத்தான் இருப்பர். இக் குழு மசோதாக்

களைப் பரிசீலனை செய்து அறிக்கையைத் தயாரிக்கும். இக் குழுவின் அறிக்கைகளை அந்தந்தச் சபை உறுப்பினர்கள் அவரவருடைய சபைக்கு அனுப்புவர்.

தனியார் மசோதாக் குழுக்கள்

தனியார் மசோதாக்களின் தேவையை நிர்ணயிப்பது இக் குழுக்களின் முக்கிய பணியாகும். இக் குழுக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. எதிர்ப்பின்றிக் கொண்டு வரப்படும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் குழு. 2. எதிர்ப்புடன் கொண்டுவரப்படும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் குழு. முதல்வகைக் குழுவில் குழுவின் தலைவரும், உதவித் தலைவரும் மற்றும் 4 உறுப்பினர்களும் இருப்பர். இரண்டாவது வகைக் குழுவில் ஒரு தலைவரும், 3 உறுப்பினர்களும் நியமனம் செய்யப் படுவர். இவர்களெல்லாரும் நியமனக்குழுவால் நியமனம் செய்யப் படுபவர்களாவர். இக் குழுக்கள் தனியார் கொண்டுவரும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும். இந்த மசோதாக்களைப் பற்றிப் பொதுமக்களும், அரசாங்கமும் அதிகமாக ஆர்வம் காட்டாததால், உறுப்பினர்களும் இக் குழுக்களில் பணியாற்றுவதில் ஆர்வம் காட்டுவதில்லை,

இத்தகைய குழுக்கள் பொதுமக்கள் சபையின் சுமையைக் குறைக்கவும், துணை செய்யவும் ஏற்படுத்தப்படுகின்றன. சட்டமியற்றும் பணியில் இக் குழுக்களைச் சபையின் துணைக் கருவிகள் என்று கூறலாம்.

பிரபுக்கள் சபை

பிரபுக்கள் சபை என்பது (House of Lords) ஆங்கிலப் பாராளுமன்றத்தின் மேல் சபையாகும். ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பு, பிரபுக்கள் சபை சீரும், சிறப்பும், மதிப்பும், முக்கியத்துவமும் பெற்று விளங்கியது. இப்பொழுது இச் சபை தன் வலிமை இழந்து, பொதுமக்கள் சபையின் நிழலில் நீடித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இச் சபை தன் அதிகாரங்களையெல்லாம் இழந்து இரண்டாம் சபையாக மட்டுமல்லாது ஓர் இரண்டாம்தர சபையாகவும் இப்பொழுது நீடித்து வருகின்றது. ஆகவே, அதன் எதிர்காலம் எப்படியிருக்குமென்று உறுதியாகச் சொல்ல முடியாத நிலை இப்பொழுது உள்ளது.

பிரபுக்கள் சபையில் அரசகுடும்பத்து இளவரசர்கள், பரம்பரைப் பிரபுக்கள், ஆயுட் காலப் பிரபுக்கள், சமயப் பிரபுக்கள்,

ஸ்காட்லாந்து பிரபுக்களின் பிரதிநிதிகள், அயர்லாந்து பிரபுக்களின் பிரதிநிதிகள், சட்டப் பிரபுக்கள் ஆகியோர் ஏறக்குறைய 1000 பேர் வரையிலும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் தங்கள் வாழ்நாள் முடியும்வரை பதவி வகிக்கின்றார்கள். அவர்களில் மிகவும் பெரும்பான்மையான எண்ணிக்கையில் பதவி வகிப்பவர்கள் பரம்பரைப் பிரபுக்கள் (Hereditary Peers) ஆவார்கள். பரம்பரைப் பிரபுத்துவம் குடும்பச் சொத்தாகும். தந்தைக்குப் பிறகு மூத்த மகன் என்ற வாரிசு முறையில் இக் கௌரவப் பதவி கிடைக்கின்றது. பரம்பரைப் பிரபுக்களில் இதுவரை ஆண்கள்தான் பதவி வகித்துள்ளார்கள். பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இப்பொழுது அரசியாரால் நியமிக்கப்பட்ட பெண்பிரபுக்கள் இருக்கின்றனர். அவர்கள் சபையில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

மக்கள் சபையால் இயற்றப்பட்ட முற்போக்கு மசோதாவொன்றை பிரபுக்கள் சபை எதிர்த்தால் உடனே அரசாங்கம் தனக்குச் சாதகமாயுள்ள புதிய பிரபுக்களை உண்டாக்குமாறு அரசியாருக்கு அறிவுரை கூறும். இதனால் அரசாங்கத்தை ஆதரிக்கும் பிரபுக்களின் எண்ணிக்கை உயரும். மசோதாவும் இயற்றப்படும். இவ்வாறுதான் இருபதாம் நூற்றாண்டில் அரசியாரால் பிரபுக்களாக நியமிக்கப்பட்டவர்கள் ஏறத்தாழ மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்டவர்களாக இருப்பர்.

பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களுக்கும் சில சிறப்புரிமைகள் உள்ளன. சபையில் முழு பேச்சுரிமையை அவர்கள் பெற்றுள்ளனர். சபை கூடியிருக்கும்பொழுது, சிறை செய்யப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள். தனியான முறையில் அரசியாரைச் சந்திக்க அவர்களுக்கு உரிமையுண்டு. சபையை அவமதித்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

அவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளும் உண்டு. அவர்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்கவோ, பொதுமக்கள் சபைக்குத் தேர்தலில் போட்டியிடவோ உரிமையில்லை. பழைய சட்டப்படி ஒருவர் தம் பிரபுத்துவத்தைத் துறக்க முடியாது. ஆனால், 1963ஆம் ஆண்டு சட்டத்தின்படி பிரபு ஒருவர் தம்முடைய பிரபு பதவியைத் துறந்து, பொதுமக்கள் சபைக்குப் போட்டியிடலாம். பிரதமர் மாக்மில்லன் ராஜிநாமா செய்தபொழுது அவர் ஹூம் பிரபுவை (Lord Home) பிரதமராக்க விருப்பப்பட்டார். அதனால் ஹூம் பிரபு சட்டப்படி தாமே பிரபு பதவியைத் துறந்து

தேர்தலில் போட்டியிட்டுப் பொதுமக்கள் சபையின் உறுப்பினரான வுடன் பிரதமரானர்.

பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒரு சேரக் கூட்டப் படுகின்றன. ஆனால், தனித்தனியாக ஒத்தி வைக்கப்படுகின்றன. பிரபுக்கள் சபையின் மொத்த உறுப்பினர்களில் 50 அல்லது 60 பிரபுக்களே சபைக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். குறைந்தது 3 பிரபுக்கள் இருந்தால் சபைக் கூட்டம் ஆரம் பிக்கப்படும். சபையில் 30 பிரபுக்களிருந்தால் மசோதாக்களின் மீது விவாதம் நடைபெற்று இயற்றப்படும். பொதுவாகப் பிரபுக்கள் சபையில் விவாதங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதில்லை.

பிரபுக்கள் சபையிலுள்ள அதிகாரிகள் அனைவரும் நியமனம் செய்யப்படுகின்றவர்களாவர். பிரபுக்கள் சபையின் கூட்டங் களுக்கு சான்சலர் பிரபு (Lord Chancellor) தலைமை தாங்கு கின்றார். அவர் அமைச்சர் குழுவிலும் பதவி வகிக்கின்றார். அமைச்சர் பதவியேற்கும்போது அவர் பிரபுவாக இல்லாதிருந்தால் பிறகு பிரபுவாக நியமிக்கப்படுவார். சான்சலர் பிரபு சபையில் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய அவசிய மில்லை. பிரபுக்கள் சபையே அப் பணியைச் செய்து கொள்ளும். மற்ற அரசியல் கட்சி உறுப்பினர்களைப்போல் சான்சலர் பிரபு பேசலாம். கட்சி உணர்வோடுகூட வாக்களிக்கலாம். ஆனால், அவருக்குப் பொதுமக்கள் சபையின் சபாநாயகருக்கு இருப்பது போல் முடிவு நிர்ணய வாக்கு (Casting Vote) கிடையாது.

பிரபுக்கள் சபையிலும் பல குழுக்கள் இருக்கின்றன. முழு சபையும் ஒரு குழுவாக (Committee of the Whole House) அமர்ந்து முக்கியமான மசோதாக்களை விவாதிக்கும். இச் சபையில் பொதுப்படையாக நிலைக் குழுக்களோ, ஆய்வுக் குழுக்களோ ஏற்படுத்துவதில்லை. சபை விரும்பினால் அவ் விதக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். இரண்டாவது வாசிப்பிற்கும் மூன்றாவது வாசிப்பிற்குமிடையே மசோதாக்களைப் பற்றிய அதிக விவரங்கள் தேவைப்பட்டால், மசோதாக்கள் இத்தகைய குழுக்களிடம் அனுப்பி வைக்கப்படும். ஆகவே, சில முக்கிய மசோதாக்களை இக் குழுக்கள் பரிசீலனை செய்கின்றன.

பிரபுக்கள் சபையின் பணிகள்

ஆங்கிலப் பாராளுமன்றத்தின் மேல் சபையான பிரபுக்கள் சபை பல முக்கியமான பணிகளையும் செய்கின்றது, சட்டமியற்றல்

விவாதித்தல், நீதி வழங்குதல் போன்ற அதிகாரங்களென இவைகளைப் பிரித்துக் கொள்ளலாம்.

சட்டமியற்றல்

பண மசோதாக்களைத் தவிர மற்ற மசோதாக்களைப் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் சமர்ப்பிக்கலாம். ஆனால், அனேகமாகப் பொது மசோதாக்கள் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையான பொதுமக்கள் சபையிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒரு மசோதா கீழ்ச் சபையால் நிறைவேற்றப்பட்ட பின்பு மேல்சபையாகிய பிரபுக்கள் சபையின் ஒப்புதலுக்காக அங்கு அனுப்பி வைக்கப்படும். பொதுமக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவைப் பொதுமக்கள் சபையின் எழுத்தர் பிரபுக்கள் சபைக்கு எடுத்துச் செல்வார். அவரிடமிருந்து அம் மசோதாவை பிரபுக்கள் சபையின் எழுத்தர்களில் ஒருவர் பெற்றுக் கொள்வார். பிரபுக்கள் சபையிலும் அம் மசோதா ஐந்து கட்டங்களைத் தாண்ட வேண்டியுள்ளது. முதல் வாசிப்பு, இரண்டாவது வாசிப்பு, குழுக் கூட்டம், அறிக்கை கட்டம், மூன்றும் வாசிப்பு ஆகிய ஐந்து கட்டங்களை அம் மசோதா தாண்டி நிறைவேற்றப்படுகின்றது. பிரபுக்கள் சபையில் அம் மசோதா நிறைவேற்றப்பட்டால், அதை அரசியாரின் ஒப்புதலுக்காக அனுப்புவர். அரசியார் அம் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தவுடன் அம் மசோதா சட்டமாகின்றது.

ஆனால், பிரபுக்கள் சபை மசோதாக்களைத் திருத்தவும், நிராகரிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால், பிரபுக்கள் சபையின் இவ்வதிகாரங்கள் 1911ஆம் ஆண்டிலும் 1949ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டங்களால் கட்டுப் படுத்தப் பட்டன. 1911ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்று கருத்துக் கூறும் அதிகாரம் பொதுமக்கள் சபையின் சபாநாயகருக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அத்துடன் பண மசோதாவொன்று பொதுமக்கள் சபை இயற்றிப் பிரபுக்கள் சபைக்கு அனுப்பி வைத்தபிறகு, பிரபுக்கள் சபை அம் மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்காமலோ, திருத்தமொன்று கொண்டுவராமலோ காலம் தாழ்த்தினால், ஒரு மாதத்திற்குப் பிறகு, அம் மசோதா அரசியாருக்கு அனுப்பப்பட்டு, அரசியாரின் ஒப்புதலின் பேரில் சட்டமாகும். சாதாரண மசோதாக்களைப் பொறுத்தவரையில் 1911ஆம் ஆண்டுச் சட்டப்படி பிரபுக்கள் சபை இரண்டாண்டுகளுக்குக் காலந்தாழ்த்தலாம். அந்த இரண்டாண்டுக்குள் பிரபுக்கள் சபை அம் மசோதாவின்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதிருந்தாலோ, அல்லது அம் மசோதாவை நிராகரித்து விட்டாலோ, முதல் கூட்டத்திலிருந்து

மூன்ருவது கூட்டம்வரை இரண்டு ஆண்டுகள் கழித்திருந்தால், அம் மசோதா நேரடியாக அரசியாருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவரின் ஒப்புதலின்பேரில் சட்டமாகும். ஆனல், 1949ஆம் ஆண்டின் சட்டப்படி பிரபுக்கள் சபை சாதாரண மசோதாவை இரண்டாண்டிற்குப் பதிலாக ஓராண்டுதான் தடுத்து நிறுத்தி வைக்கலாம். ஆகவே, பழைமைவாதிகள் நிறைந்த மேல்சபை முற்போக்கு அரசாங்கத்திற்கு முட்டுக் கட்டையாக இருப்பதை இச் சட்டம் நீக்கியது. 1911ஆம் ஆண்டிற்கு முன்பு பிரபுக்கள் சபை பொதுமக்கள் சபையோடு சம அதிகாரங்களைப் பெற்றிருந்தது. அத்துடன் பண மசோதாக்களைக் கூட நிராகரித்து வந்தது. ஆனல், 1949ஆம் ஆண்டிற்குப் பிறகு அதன் சட்டமியற்றும் அதிகாரங்கள் மிகவும் குறைக்கப் பட்டுவிட்டன.

விவாதித்தல்

மக்களுடைய கருத்துகளையும், அரசாங்கத்தின் கொள்கைகளையும் தூண்டிவிடும் வகையில் பிரபுக்கள் சபையின் விவாதங்கள் இருக்கும். மூதறிஞர்களும், முன்னுள் அமைச்சர்களும், முன்னுள் சபாநாயகர்களும், முன்னுள் கவர்னர் ஜெனரல்களும், குறிப்பிட்ட துறையில் நல்ல பயிற்சி பெற்ற பிரபுக்களும் சபையில் நடக்கும் விவாதங்களில் கலந்து கொள்வதால் விவாதம் நல்ல தரமுள்ள வகையில் இங்கு அமைகின்றது. இச் சபை உறுப்பினர்களின் கருத்துகள் பல நல்ல கொள்கைகளை உருவாக்கக்கூட பயன்படுகின்றன. பொதுமக்கள் சபையின் உறுப்பினர்களைவிட இச் சபையின் உறுப்பினர்கள் சுயேச்சையாகத் தம் கருத்துகளை வெளியிடுவர். அரசாங்கம் அதனுடைய பணிகளுக்கு முன்னுரிமை கோராததால் சபை அதன் விருப்பம்போல் எப்பொருளைப் பற்றியேனும் விவாதிக்கலாம். அத்துடன் இச் சபையின் விவாதங்கள் திடீரென்று பொதுமக்கள் சபையின் விவாதங்களைப்போல் முடிவிற்குக்கொண்டுவரப் படுவதில்லை. எனவே, இச் சபையில் உறுப்பினர்கள் பேச்சைத் தடையின்றி நிகழ்த்த வாய்ப்பு இருக்கின்றது. அதனல் பரவலான கருத்துகள் இங்கு வெளிப்படுகின்றன. பொதுமக்கள் சபையில் விவாதிக்காத சில கருத்துகளையும், மசோதாக்களிலுள்ள குறைகளையும் இங்கு உறுப்பினர்கள் தெளிவாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் ஆராய்கின்றனர். ஆகவே, பொதுமக்கள் சபையியற்றிய மசோதாக்களிலுள்ள குறைகளைப் போக்கிச் செப்பனிடுவதில் இச் சபை உறுப்பினர்களின் விவாதங்கள் மிகவும் பயன்படுகின்றன. இச் சபை உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பொதுமக்கள் சபையும், அமைச்சரவையும் பெரிதும் மதிக்கின்றன.

நீதி வழங்குதல்

பிரபுக்கள் சபை சில நீதித்துறை அதிகாரங்களையும் பெற்று விளங்குகின்றது. இச் சபையில் 23 சட்ட நிபுணத்துவம் வாய்ந்த பிரபுக்கள் நியமிக்கப்படுகின்றனர். இங்கிலாந்தில் பிரபுக்கள் சபைதான் தலையாய மேல் வழக்கு (Highest Court of Appeal) நீதி மன்றமாகும். பிரபுக்கள் சபை முழுவதுமாக இவ் வதிகாரத்தை உபயோகிப்பதில்லை. சான்சலர் பிரபு (Lord Chancellor) தலைமை தாங்க 23 சட்டப் பிரபுக்கள் மட்டும்தான் மேல் வழக்குகளை விசாரிக்கின்றனர். உலகின் வேறு எந்த நாட்டிலும் மேல்சபை இவ்வித நீதியதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. அத்துடன் இச் சபையின் சிறப்புரிமைகளை மீறியவர்களை சபை தண்டனை விதித்து அல்லது சிறைப்படுத்தித் தண்டிக்கலாம். ஆனால், கடுமையான குற்றங்களுக்காக விசாரணை செய்யும் வழக்கம் 1806ஆம் ஆண்டில் நின்று விட்டது. 1948ஆம் ஆண்டின் குற்றவியல் நீதிச் சட்டத்தின்படி பிரபுக்கள் சபை பிரபுக்களை விசாரிக்கும் சிறப்புரிமை நீக்கப்பட்டது.

பிரபுக்கள் சபை பற்றிய பிரச்சினைகள்

பிரபுக்கள் சபை சீர்திருத்தப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப் படவேண்டும் என்ற இயக்கம் இங்கிலாந்தில் பரவலாக இருந்து வருகின்றது. கன்சர்வேடிவ் கட்சியினர் அதை ஓரளவு சீர்திருத்தி அப்படியே வைத்திருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். தொழிற் கட்சியினர் பலர் அச் சபையை ஒழித்துவிடுவதே நல்லதெனக் கூறுகின்றனர். மக்களாட்சியும், சமதர்மமும் வளர்ந்து வரும் ஒரு நாட்டில் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக் காட்டும் வகையில் எந்த அமைப்பும் இருக்கக் கூடாதென்றும் பலர் கருது கின்றனர். பிரபுக்கள் சபை மக்களாட்சிக் கொள்கைக்கு முரண் பாடான ஒரு அமைப்பு என்பது மட்டுமின்றி, இன்றைய சூழ்நிலையில் அது தேவையற்றது எனவும் சிலர் கருதுகின்றனர். பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபை இருக்கும்போது, சுயநலக் கும்பலின் பிரதிநிதியாக இன்னொரு சபை வைத்திருப்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமையும் என்று மற்றும் சிலர் வாதிக்கின்றனர்.

பிரபுக்கள் சபையை முற்றிலும் அகற்றிவிட வேண்டும் அல்லது அதன் அமைப்பைச் சீர்திருத்த வேண்டும் என்பதற்காகக் கீழ்க் கண்ட காரணங்கள் கூறப்படுகின்றன.

1. பிரபுக்கள் சபையின் உறுப்பினர்கள் மக்களால் நேரடி யாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்

படுவதில்லை. அச் சபையில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பாலோர் பரம்பரை பிரபுக்கள். அதனுல் அச் சபை பிரபுக்களின் பரம்பரைச் சொத்தாகவே கருதப் படுகின்றது. அன்று தொட்டு இன்று வரையும் அச் சபை மாற்றமெதுவும் இல்லாமல் அவ்வாறே உள்ளது.

2. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரபுக்களில் 50 அல்லது 60 பிரபுக்கள்தான் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். 3 பிரபுக்கள் இருந்தாலே சபைக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. 30 பிரபுக்கள் இருந்தால் மசோதாக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகவே, பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கு சபை நடவடிக்கைகளில் அக்கறை யிருப்பதில்லை.

3. பிரபுக்கள் சபையில் பெரும்பான்மையோர் பரம்பரை பிரபுக்களாக இருப்பதாலும் அவர்கள் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும், பிரபுக்கள் சபையில் கன்சர்வேடிவ் கட்சியே பெரும்பான்மைக் கட்சியாக வேரூன்றி விட்டுள்ளது. இங்ஙனம் சபையில் ஒரே கட்சியே எப்பொழுதும் பெரும்பான்மையாக இருந்தால் அச் சபை யதேச்சாதிகாரமாகத்தான் செயல்படும்.

4. பிரபுக்கள் சபை முதலாளித்துவத்தின் கோட்டை யெனக் கருதப்படுகின்றது. முதலாளிகளின் நலன் களுக்காகவே அச் சபை செயல்படுகின்றது. ஏழை எளியவர்களின் நலன்களை உயர்த்தக் கொண்டு வரப்படும் முற்போக்கு மசோதாக்களை எதிர்க்கவே பிரபுக்கள் சபை பயன்படுத்தப்படுகின்றது. கன்சர் வேடிவ் கட்சியின் கொள்கைகளை ஆதரித்து, பிற் போக்குக் கொள்கைகளை அச் சபை கொண்டிருப்பதால், அச் சபை நீடித்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போய்விடுகின்றது,

5. பணம், சொத்து, சுகபோக வாழ்வு, தனியுரிமைகள் ஆகியவைகளைப் பாதுகாக்கும் கோட்டையாக பிரபுக்கள் சபை திகழ்கின்றது. சீர்திருத்தக் கொள்கைகளை இச் சபை வரவேற்பதில்லை. ஏழை, எளியவர்களின் நலன்களைப் பற்றி இச் சபை கவலைப்படுவதில்லை.

அத்துடன் மக்களின் கருத்துகளுக்கும் இச் சபை செவி சாய்ப்பதில்லை. ஆகவே, இச் சபை மக்களாட்சியின் கருத்துகளுக்குப் புறம்பானதாகும்.

இத்தகைய குறைகளைக் கொண்ட பிரபுக்கள் சபையானது அகற்றப்படாமல் அல்லது சீர்திருத்தப்படாமல் இன்னமும் இங்கிலாந்தில் நீடித்து வருகின்றதென்றால் அதனால் சில நன்மைகளும் உள்ளன என்பது புலனாகின்றது. அவைகளாவன.

1. ஆங்கில மக்கள் தீவிரவாதிகளல்லர். அவர்கள் மிகவும் பழமை விரும்பிகள். அதற்கோர் உதாரணம்தான் பிரபுக்கள் சபை. பிரபுக்கள் சபை சீர்திருத்தப்பட்டால் அதற்கும் கீழ்ச் சபைக்கும் போட்டி ஏற்பட்டு, இரண்டிற்குமிடையே போராட்டமும், கருத்து வேறுபாடுகளும், முட்டுக்கட்டைகளும் தோன்ற ஏதுவாகுமென அவர்கள் கருதுகின்றனர். அதனால் பிரபுக்கள் சபையை அழித்து விடுவதால் அதிகப் பயனுமில்லை. அது நீடித்து இயங்குவதாலும் நஷ்டமேதுமில்லை எனக் கருதுகின்றனர்.

2. பொதுமக்கள் சபையில் வரும் எண்ணற்ற தனியார் மசோதாக்களை அச் சபைக்கு ஒழுங்காகக் கவனிக்க நேரமில்லாததால், அவற்றை முதலிலேயே பரிசீலனை செய்யும்படி பிரபுக்கள் சபைக்கு அனுப்பி வைக்கின்றனர். பிரபுக்கள் சபை அவற்றை நல்லமுறையில் பரிசீலனை செய்து பொதுமக்கள் சபைக்கு அனுப்பி வைப்பதால், பொதுமக்கள் சபையின் பெரும்பாலான சுமை குறைகின்றது. அதனால் மக்கள்சபை விரைவாக அவற்றைச் சட்டங்களாக்குகின்றது

3 பிரபுக்கள் சபையில் மூதறிஞர்களும், முன்னாள் அமைச்சர்கள், சபாநாயகர்கள், அயல் நாட்டுத் தூதுவர்கள், இராணுவத் தளபதிகள், முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மசோதாக்களை நல்லமுறையில் ஆரஅமர, பரிசீலனை செய்கின்றனர். நேரம் கிடைக்காததனால் பொதுமக்கள் சபை மசோதாக்களை நல்ல முறையிலே பரிசீலனை செய்வதில்லை, ஆகவே, பிரபுக்கள் சபை அவைகளை நல்ல முறையில் ஆராய்ந்து பொதுமக்கள் சபைக்கு அனுப்பி ஆலோசனை கூறுகின்றது. பல,

பிரச்சினைகளில் இப்பொழுது பிரபுக்கள் சபை கட்சிச் சார்பற்ற ஆலோசனைகளையும், திருத்தங்களையும் கூறி வருவதால், அரசாங்கம் அவற்றைப் பெரும்பாலும் ஏற்றுக் கொள்கின்றது.

4. மக்களாட்சியுள்ள ஒவ்வொரு நாட்டிலும் இரண்டாவது சபை இருக்க வேண்டுமென்ற அவசியத்தை இது பூர்த்தி செய்கிறது.

5. பிரபுக்கள் சபை அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டவும், மக்களின் தேவைகளை எடுத்துச் சொல்லவும், ஆட்சித்துறையைப் பற்றி, கேள்வி கேட்கவும் சிறந்த மேல் சபையாகப் பயன்படுகின்றது.

6. சில மசோதாக்களைப் பிரபுக்கள் சபை தடுத்து நிறுத்திக் காலந்தாழ்த்துவதால் அம் மசோதாக்களைப் பற்றி ஆராய மக்களுக்கு வசதி ஏற்படுகின்றது. அம் மசோதாக்களில் குறைகள் இருப்பின் மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அரசாங்கமும் அக் குறைகளை உணர்ந்து அம் மசோதாவை விட்டுவிடும். ஆகவே, பிரபுக்கள் சபை மசோதாக்களைத் தடுத்து நிறுத்திக் காலந்தாழ்த்துவதால் சில சமயங்களில் நன்மையும் ஏற்படுகின்றது.

பலமுறை பிரபுக்கள் சபையைச் சீர்திருத்துவதற்கு வேண்டிய புது யோசனைகளும் திட்டங்களும் வெளியிடப்பட்டன. ஆனால், இதுவரை பிரபுக்கள் சபையின் அமைப்பு மாற்றியமைக்கப் படாமலுள்ளது. 1948ஆம் ஆண்டில் நடந்த அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் பிரபுக்கள் சபையைச் சீர்திருத்த, பல யோசனைகள் கூறப்பட்டன, 1953ஆம் ஆண்டில் பிரதமர் சர்ச்சில் மீண்டும் இப் பிரச்சினையைக் கிளப்பி முடிவு காண முயன்றார். ஆனால் முன்னேற்றம் எதுவும் காண முடியவில்லை. 1969ஆம் ஆண்டில் சபையைச் சீர்திருத்துவதற்காகத் தொழிற் கட்சி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட மசோதாவும் கைவிடப் பட்டது.

பாராளுமன்றம் பணியைத் துவக்கும் முறை

பாராளுமன்றம் கூடி, பின்னர் ஒத்திப் போடும் காலத்தை 'பாராளுமன்றக் கூட்டம்' (Session) என்று கூறுவது வழக்க மாகும். தேர்தல் முடிந்தபின்னர், இரண்டு அல்லது மூன்று

வாரங்களில் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டும். ஒவ்வொரு சபையும் அதன் விருப்பப்படி தள்ளிப் போடப்படுகின்றது. இரண்டு சபைகளையும் ஒன்ருகத் தள்ளி வைக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அரசியார் விரும்பினுல் அப்படியும் செய்யலாம். தள்ளிவைப்பது (Adjournment) என்பது சபையின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பது எனப் பொருள்படும். பாராளுமன்ற நடிவடிக்கைகளை ஒத்திப் போடுதலை (Prorogation) அரசியார்தான் அறிவிப்பார். ஒத்திப் போடுதல் என்பது பாராளுமன்றக் கூட்டம் முடிவடைகின்றது என்று பொருளாகும். ஒத்திப் போட்ட பின்பு மற்ருெரு கூட்டம் துவங்குகின்றபொழுது நிறைவேற்றப்படாத மசோதா மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்கப்படும். பாராளுமன்றம் கலைக்கப்படும் (Dissolution) பொழுது அரசியாரின் அறிவிப்பு வேண்டும். பிரதமரின் அறிவுரையின் பேரில் அவ்வறிவிப்பை அரசியார் வெளியிடுவார். பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படும். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு பொதுத் தேர்தல் நடத்தப்படும். அத் தேர்தலில் பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

தேர்தலுக்குப் பின்னர், பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளும் ஒரே நேரத்தில் கூட்டப்படும். முதலில் அந்தந்த சபை உறுப்பினர்கள் அந்தந்த சபையில் கூடுவர். அதற்குப் பிறகு பிரபுக்கள் சபையிலிருந்து ஒரு சேவகன் வந்து, மக்கள் சபை உறுப்பினர்களைப் பிரபுக்கள் சபைக்கு அழைப்பார். அங்கு இந்தப் பாராளுமன்றம் கூட்டப்பட்டிருப்பதாக அரசியாரின் அறிவிப்பை வாசிப்பார். அக் கூட்டத்தில் சான்சலர் பிரபு, பொதுமக்கள் சபையின் சபாநாயகரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறுவார். உடனே பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் பொதுமக்கள் சபைக்குச் சென்று சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்கள். அதற்கு அடுத்த நாள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர், மற்ற பொதுமக்கள் சபை உறுப்பினர்களுடன் மீண்டும் பிரபுக்கள் சபைக்குச் செல்வார். அங்கு சான்சலர் பிரபுவின் மூலமாக அவருடைய தேர்தலை அறிவிப்பார். அப்பொழுது அரசியாரின் பாராட்டுதல்கள் அவருக்குத் தெரிவிக்கப்படும். பிறகு சபாநாயகர், பொதுமக்கள் சபையின் பழைய மரபுகளைப் பாதுகாப்பதாக உறுதிமொழி அளித்தவுடன், அவரும் மற்ற சபை உறுப்பினர்களும் பொதுமக்கள் சபைக்கே திரும்புவர். அங்கு அவர்கள் உறுதிமொழி எடுத்து, பதவி ஏற்பர். பின்னர் பொதுமக்கள் சபை உறுப்பினர் பட்டியலில் அவர்கள் கையெழுத்திடுவர்.

அடுத்த நாளன்று, அரசியார் தகுந்த அரசாங்க மரியாதையுடன் பாராளுமன்றத்திலுள்ள பிரபுக்கள் சபைக்குச் செல்வார். அப்பொழுது பொதுமக்கள் சபையின் உறுப்பினர்களும் அங்குக் கூடியிருப்பார்கள். பிரதமரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அரசியார் அந்த இணைப்புக் கூட்டத்தில் படிப்பார். அவ்வறிக்கையில் அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகளும், திட்டங்களும் விளக்கப்பட்டிருக்கும். இதை அரசியாரின் பேருரை (Speech from the Throne) என்று கூறுவர். அரசியாரின் பேருரைக்குப்பின், பொதுமக்கள் சபையின் உறுப்பினர்கள் தங்கள் சபைக்குச் செல்வர். சபாநாயகர் அச் சபைக்குத் தலைமை தாங்குவார். பிறகு இரண்டு சபைகளிலும் மீண்டும் அப் பேருரை படிக்கப்படும். அதற்குப் பின்னர் அப் பேருரையின்மீது இரண்டு சபைகளிலும் விவாதங்கள் நிகழும். பின்னர், பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அதன் பின்னர் மசோதாக்கள் கொண்டு வரப்படுகின்றன. பொதுமக்கள் சபையின் நடவடிக்கைகள் அப்பொழுதிலிருந்து ஆரம்பமாகின்றன. பழங்கால மரபுகளை இன்னும் ஆங்கிலேயர் பின்பற்றி வருகின்றனர், ஆகவே, ஆங்கிலப் பாராளுமன்றம் ஒரு பழங்காலக் கண்காட்சியாகவே இன்னமும் விளங்குகின்றது.

30. ஆட்சித் துறை

ஆங்கில நாட்டில் அரசாங்கப் பொறுப்புடைய பணிகளை நிறைவேற்றப் பல துறைகள் செயல்படுகின்றன. அவைகள் பாராளு மன்றத்தின் அருகிலுள்ள 'ஒயிட் ஹால் (White Hall) என்னும் மாளிகையிலும் அதற்கு அண்மையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் ஆட்சி முறை ஓரளவிற்குக் காலப்போக்கில் ஏற்பட்ட மாறுதல்களுக்கேற்ப வளர்ந்துள்ளது. கடந்த நூற்றாண்டுக் காலத்தில் ஆட்சித் துறையில் வளர்ந்துள்ள அலுவல்கள் காரண மாக நிறைய ஆட்சித் துறைகள் தோன்றியுள்ளன. முதல் உலகப் போர், இரண்டாவது உலகப் போர், மற்றும் தொழிற்கட்சியின் தேசிய உடைமையாக்கிய திட்டங்கள், பொதுநலத் திட்டங்கள் காரணமாக ஆட்சித் துறையில் புதிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சில பழைய ஆட்சித் துறைகள் காலப் போக்கிலும் மாறாது அப்படியே உள்ளன. அண்மையில் தோன்றிய புதிய ஆட்சித் துறைகளுக்கும் பழைய துறைகளுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன.

இங்கிலாந்தில் உள்ள பல ஆட்சித் துறை நிறுவனங்கள் பல காரணங்களுக்காகவும், பல நோக்கங்களுக்காகவும் அமைக்கப் பெற்றன. எல்லா நிறுவனங்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் காங்கிரஸ் சட்டத்தின் மூலமாக ஏற்பட்டிருப்பதைப் போன்று இங்கிலாந்தில் ஏற்படவில்லை. கருவூலத்துறை (Treasury), கடற் படைத்துறை (Admiralty) ஆகிய துறைகள் பழைய கால சின்னங்களாகவே இன்றும் இருக்கின்றன. வெளிநாட்டு அலுவ லகம், உள்துறை அலுவலகம் ஆகியவைகள் பழங்கால அரசரின் செயலர்கள் அலுவலகத்திலிருந்து ஏற்பட்ட நிறுவனங்களாகும். வர்த்தக வாரியம் (Board of Trade). கல்வித்துறை அமைச்சு (Ministry of Education) முதலியன பிரிவி கவுன்சிலின் (Privi Council) குழுக்களிலிருந்து தோன்றிய துறைகளாகும். பொதுநல சுகாதார அமைச்சு (Ministry of Health), பாதுகாப்பு அமைச்சு (Ministry of Defence) ஆகிய துறைகள் பாராளுமன்றச் சட்டங்கள் மூலமாகத் தோன்றியவையாகும். இங்ஙனம் இங்கி லாந்தில் பல ஆட்சித் துறைகள் தோன்றிச் செயல்பட்டு வருகின்றன.

இங்கிலாந்தில் அனைத்துத் துறைகளுக்கும் ஒரே மாதிரியான பதவிப் பெயர்கள் கொடுக்கப்படவில்லை. சில நிறுவனங்கள் அரசாங்க அமைச்சர்களின் அலுவலகங்களாக (Offices of Secretaries of State) கருதப்படுகின்றன. மற்றும் சில நிறுவனங்கள் அமைச்சரவை நிறுவனங்களாக (Ministries) கருதப்படுகின்றன. மேலும் சில நிறுவனங்கள் வாரியங்களாகவும் (Boards) அழைக்கப் படுகின்றன. தவிர ஐக்கிய அரசு (United Kingdom) முழுவதற்கும் ஒரே மாதிரியான ஆட்சிமுறையும் அமைக்கப்படவில்லை ஸ்காட்லாந்தின் ஆட்சிமுறையை ஸ்காட்லாந்தின் அரசாங்க அமைச்சர் கவனித்துக் கொள்கின்றார். ஸ்காட்லாந்தின் ஆட்சிமுறை இங்கிலாந்து ஆட்சிமுறையோடு சரியாக இணைக்கப்படவில்லை. வட அயர்லாந்தின் ஆட்சிமுறை வட அயர்லாந்து பாராளுமன்றத்தின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது அத்துடன் அங்கு நடைபெறும் ஆட்சிமுறையும் மாறுபட்ட முறையில் அமைக்கப் பட்டுள்ளது. இங்ஙனம் இங்கிலாந்தின் ஆட்சிமுறை ஒரே தேக்க நிலையில் இல்லாது, அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களை ஏற்றுக் கொள்ளும் அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையும் அரசாங்கத்தின் குறிப்பிட்ட பணிகளோடு தொடர்பு கொள்ளுகின்றது. ஒவ்வொரு துறையும் ஓர் அமைச்சரைத் தலைவராகக் கொண்டு இயங்குகிறது. ஒவ்வொரு துறையின் தலைவரையும் பிரதம அமைச்சர் தேர்ந் தெடுப்பார். இங்ஙனம் பிரதம அமைச்சரால் தேர்ந்தெடுக்கப் படுகின்ற துறைத் தலைவர்கள் ஆளுங்கட்சியின் செல்வாக்குப் பெற்ற உறுப்பினர்களாக இருப்பர். அக் கட்சி பதவியில் இருக்கும் வரையில், அவர்களும் துறைத் தலைவர்களாகப் பதவி வகிப்பர். அவர்கள் அரசியல்வாதிகளே தவிர, அனுபவமிக்க ஆட்சியாளர்களல்லர். அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட துறைகளின் ஆட்சியைக் கண்காணித்து நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு அவர்களுடையதே என்றாலும், அதைக் காட்டிலும் அவர்களுடைய முக்கிய பொறுப்பு, அரசாங்கக் கொள்கைகளை நிர்ணயம் செய்வதும் அவர்களுடைய துறைகளைப் பற்றிய விவரங்களைப் பாராளுமன்றத்தில் பாதுகாத்துக் கொள்வதுமேயாகும். ஒரு துறைத் தலைவர்க்கு உதவியாக ஒரு பாராளுமன்றச் செயலரும் (Parliamentary Secretary) நியமனம் செய்யப்படுவார். வழக்கமாக இளநிலை அமைச்சர்கள் பாராளுமன்றச் செயலர்களாக அமர்த்தப் படுவர். ஒவ்வொரு பாராளுமன்றச் செயலரும் அவருடைய துறைக்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பார். அத்துடன் பாராளுமன்றச் செயலர் பாராளுமன்றத்திலும், துறையிலும் தன் துறைத் தலைவருக்கு உதவி செய்வார். துறையின்

அலுவல்களைக் கவனித்துக் கொள்ள அலுவலர்கள் கட்சிச் சார்பற்ற விதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நிரந்தரமாகத் துறையில் பணியாற்றுகிறவர்களாவர். அமைச்சர்கள் வரலாம், போகலாம். ஆனால், ஆட்சியாளர்கள் நிரந்தரமாக அன்றாடத் துறைப் பணிகளைக் கவனித்துக் கொள்வர்.

தம்முடைய துறையின் கொள்கையைத் துறைத் தலைவர் (அமைச்சர்) கேபினெட் அமைச்சரவைக்கு எடுத்துரைப்பார். பாராளுமன்றத்திற்கும் துறைக்கும் கேபினெட் ஓர் இணைப்பாகச் செயல்படுகின்றது. துறைத் தலைவரின் இயக்காற்றலின் கீழ் நிலையான அலுவலர்கள் நுட்பத் தகவலை அளிக்கின்றார்கள். கொள்கையை உருவாக்கவும், அக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வரவும் அவர்கள் உதவுகின்றனர். தம் துறையில் நடப்பவைகளுக்கெல்லாம் துறைத் தலைவரான அமைச்சர் பாராளுமன்றப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்றார்.

அரசாங்கத்திலுள்ள சில முக்கியமான துறைகள்

கருவூலம் (Treasury)

பாதுகாப்பு (Defence)

வெளிநாட்டுத் துறை (Foreign Affairs)

காமன்வெல்த்து துறை (Commonwealth Affairs)

உள் துறை (Home Affairs)

வர்த்தக வாரியம் (Board of Trade)

கல்வி அமைச்சவை (Ministry of Education)

விவசாய, மீன் அமைச்சவை (Ministry of Agriculture and Fisharies)

சுகாதார அமைச்சவை (Ministry of Health)

தொழில், தேசிய சேவை அமைச்சவை (Ministry of Labour and National Service)

போக்குவரத்து அமைச்சவை (Ministry of Transport)

மின்சார அமைச்சவை (Ministry of Power)

விநியோக அமைச்சவை (Ministry of Supply)

உணவு அமைச்சவை (Ministry of Food)

பணித்துறை அமைச்சவை (Ministry of Works)

விமானப் போக்குவரத்து அமைச்சவை (Ministry of Civil Aviation)

ஆயுள் பாதுகாப்பு, ஓய்வுகால ஊதிய அமைச்சவை (Ministry of National Insurance and Pensions)

குடியிருப்பு, உள்ளாட்சி அமைச்சவை (Ministry of Housing and Local Government)

நகர திட்ட அமைப்பு அமைச்சவை (Ministry of Town Planning)

முதலிய பல ஆட்சித்துறைகள் இங்கிலாந்தில் பணியாற்றுகின்றன. இங்கிலாந்திலுள்ள அனைத்துத் துறைகளும் ஒரே மாதிரியான அமைப்புகளை (Organisation) பெற்றுச் செயல்படவில்லை. ஒரு துறையின் அமைப்பு மற்றொரு துறையினின்றும் மாறுபட்டு இருக்கின்றது. ஒவ்வொரு துறையும் அதன் நோக்கங்கள், கொள்கைகள், செயலாற்றும் முறைகள், அலுவலர்கள் ஆகியவைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இத்தகைய ஆட்சித்துறைகள் சிறப்பாகப் பணியாற்ற அவ்வப்பொழுது ஆலோசனைக் குழுக்களும் (Advisory Bodies) நியமனம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் சரியான முறையில் திட்டங்களைத் தீட்டவும், கொள்கைகளை வகுக்கவும், சிறப்பான அம்சங்களைத் தெரிந்து கொள்ளவும் வல்லுநர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிதல் பழக்கமாக அமைந்துள்ளது. சில ஆலோசனைக் குழுக்கள் நிரந்தரமாகவும் நியமிக்கப்பட்டுள்ளன. சில குழுக்கள் அவ்வப்பொழுது விவரங்களைத் தெரிந்து, ஆராய்ந்து நன்மை தீமைகளை எடுத்துக் கூற நியமனம் செய்யப்படுகின்றன. இத்தகைய ஆலோசனைக் குழுக்களின் பணி ஆலோசனைகளை மட்டும் கூறுவதாகும். துறைகளின் ஆட்சியில் தலையிடவோ அல்லது அதிகாரம் செய்யவோ ஆலோசனைக் குழுக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் (Delegated Legislation)

பாராளுமன்றம்தான் சட்டமியற்றும் நிறுவனமாகும். ஆங்கில நாட்டில் பாராளுமன்றம்தான் இறைமை பெற்று விளங்குகிறது. ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றும் சட்டம்தான் நாட்டில் முடிவானது. அச் சட்டத்தைத்தான் நாட்டிலுள்ள நிறுவனங்கள் அனைத்தும் பின்பற்ற வேண்டும். ஆங்கிலப் பாராளுமன்றம்

இயற்றும் சட்டத்தைச் செல்லாது என்று கூற எந்த அமைப்பிற்கும் ஆங்கில நாட்டில் அதிகாரம் கிடையாது.

பாராளுமன்றம் முக்கியமான சட்டங்களை இயற்றவே நேரம் காணுமல் தவிக்கின்றது. அதனுல் ஆட்சித் துறையில் எழும் அன்ருட அலுவல்களையும், நடைமுறைகளையும் கவனித்துச் சட்டங்களை இயற்றிக் கொண்டிருக்க பாராளுமன்றத்திற்கு நேர மில்லை. தவிர, ஆட்சித்துறையில் அன்ருடப் பணிகளையாற்றும் பொழுது, சில விதிமுறைகளை அத் துறைகளே அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவற்றை அடிப் படையாக வைத்துத் தினசரி முடிவுகளைச் செய்ய வேண்டி யுள்ளது. அதனுல் பாராளுமன்றம் ஒரு துறை சம்பந்தப்பட்ட பொதுப்படையான சட்டத்தை மட்டும் இயற்றி, மற்ற விதி முறைகளை அன்ருட நடைமுறைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ளும் படி பாராளுமன்றம் ஆட்சித்துறையிடம் அதிகாரத்தையும் சட்ட மியற்றும் உரிமையையும் ஒப்படைக்கின்றது. அதுவே ஒப்படைக் கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரமாகும் (Delegation of Legislative Power). இவ் வதிகாரத்தைப் பயன்படுத்திப் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தைச் செயல்படுத்தும்பொழுது ஆட்சித்துறை சூழ்நிலைகளுக்கேற்ப, தேவையான துணைச் சட்டங்களை (By-Laws) ஏற்படுத்திக் கொள்ளுகிறது. பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு எவ்வளவு மதிப்பும் அதிகாரமும் உள்ளனவோ அவை போன்று ஆட்சித் துறை இயற்றும் துணைச் சட்டங் களுக்கும் உண்டு.

ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் ஆட்சித் துறைக்குக் கொடுக்கப்பட்டு இருப்பதால் ஆட்சியை அதனுல் ஒழுங்காக நடத்த முடிகின்றது. இல்லாவிடில் ஒவ்வொரு சட்டத்திற்கும் ஆட்சித்துறை பாராளுமன்றத்தை எதிர்நோக்கி யிருக்கநேரிடும். பாராளுமன்றம் கூட்டப்படாமல் இருக்கும் போது இத் துறைகள் மீண்டும் பாராளுமன்றம் கூட்டப்படும் வரையிலும் காத்துக் கொண்டிருந்தால் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெருது. அதனுல்தான் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் உரிமை ஆட்சித் துறைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்ற நூற்ருண்டிலிருந்து இத்தகைய ஒப்படைப்புமுறை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் மக்கள் கொண்டி ருந்த கருத்துக்களில் ஏற்பட்டுள்ள பெருமாற்றமே அதற்கு முக்கிய காரணமாகும். சமுதாய நலனை வளர்க்க ஏராளமான

சட்டங்கள் இயற்றப்படுகின்றன. தொழில் வளர்ச்சியின் விளைவால் ஏற்பட்டுள்ள பற்பல பிரச்சினைகளைத் தீர்க்க ஓயாமல் விதிமுறைகளையும் செய்ய வேண்டியுள்ளது. அவைகள் எல்லாவற்றையும் பாராளுமன்றமே ஆக்குவது என்பது உண்மையில் நடவாத காரியமாகும். அத்துடன் சட்டத்தைச் செயல்படுத்தும்போது எத்தனையோ புதுப்புதுப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அவற்றை எல்லாம் முன்கூட்டியே யூகித்தறிந்து அவற்றுக்கேற்ப, சட்டப் பிரிவுகளைப் பாராளுமன்றமே ஆக்குவதென்பது முடியாத காரியமாகும். அதனால்தான் சூழ்நிலைகளுக்கேற்பத் தேவையான துணைச் சட்டங்களை இயற்றிக் கொள்ளும் அதிகாரம் ஆட்சித் துறைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆட்சித் துறைகளினால் இயற்றப்படும் சட்டங்கள் எளிதில் மாற்றப்படத் தக்கவை. எனவே, நிலைமைக்கேற்ப, சூழ்நிலைக் கேற்ப, தேவைக்கேற்ப, மாற்றத்துக்கேற்ப அவற்றை அவ்வப் போது திருத்திக் கொள்ளலாம். இத்தகைய சட்டங்களை அரசியலமைப்புக் கொவ்வாதவை எனக் கூறி நிராகரிக்கும் உரிமை நீதிமன்றங்களுக்கு உண்டு. ஆனால், பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களைச் செல்லாது என்று கூற நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது. பாராளுமன்றமும் ஆட்சித்துறை இயற்றும் துணைச் சட்டங்களைக் கண்காணித்து வரும். அத்துடன் ஒருசில சட்டங்களை ஆக்குமுன்னர் அவற்றைப் பாராளுமன்றத்திடம் ஆட்சித்துறையினர் சமர்ப்பிக்க வேண்டுமென்ற மரபும் இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. மேலும் ஆட்சித்துறையினர் ஒரு சட்டத்தை இயற்றும் முன்னர் அதைப்பற்றிப் பொதுமக்களுக்கு அறிவித்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டுமென்றும் விதிமுறைகள் வெளியீட்டுச் சட்டம் (Rules Publication Act) திட்டமாகத் தெரிவிக்கின்றது. அத்துடன் ஆட்சித்துறையினால் இயற்றப்பட்ட சட்டங்கள் எவைகளாயினும் அவற்றை முழுவதுமாகவோ, அன்றிப் பகுதிபகுதியாகவோ ரத்து செய்யவும் பாராளுமன்றத்திடம் அதிகாரம் உள்ளது. எனவே, ஆட்சித் துறை பொறுப்பற்ற முறையில் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைக்கொண்டு துணைச் சட்டங்களை இயற்றிவிட முடியாது.

ஆட்சித்துறை இயற்றும் சட்டங்கள் அதிகரிக்கவே, ஆட்சித் துறைகளே சில சமயங்களில் அத் துறைகளின் சட்டங்கள் மீறப்படும்பொழுது நீதிமன்றங்களாகவும் பணியாற்றி, வழக்குகளில் தீர்ப்புக் கூறுகின்றன. இவ்விதம் இத்தகைய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் முறையை ஆங்கில மக்கள் கண்டிக்

கின்றனர். தனிமனிதனின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்றும் சட்டத்தின் ஆட்சி சீர்குலைகின்றது என்றும் கூறு கின்றனர். ஆட்சித்துறை நீதிமன்றமாகப் பணியாற்றும்போது இத்தகைய குறைபாடு இருக்கத்தான் செய்கின்றது. இருப்பினும் ஆட்சித்துறையினால் தீர்ப்பளிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்குக் காலதாமதமின்றித் தீர்ப்பு அளிக்கப்படு கின்றது. பணமும் அதிகமாக விரயம் ஆவதில்லை. மற்றும் பல சட்ட நுணுக்கங்கள் தேவைப்படுவதில்லை. இத்தகைய காரணங் களினால் ஆட்சித்துறைகள் தீர்ப்பளிக்கும் முறைகள் கைவிடப் படுவதற்கில்லை. ஆனால், இவை நீதிமன்றங்களுடன் தொடர்பை வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் சர் ஆலிவர் ஃபிராங்க் (Sir Oliver Frank) என்பவருடைய தலைமையில் ஆட்சித்துறை தீர்ப்புகளை ஆராய ஏற்படுத்தப்பட்ட குழு தன் அறிக்கையில் கூறுகின்றது.

ஆட்சித்துறைகளின் அலுவல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதற்கேற்பப் பல்வேறு ஆட்சித்துறைகளும் நிறுவப் பெற்றுள்ளன. இத்தகைய துறைகளுக்கிடையே முரண்பாடு களும், குழப்பங்களும் ஏற்படாமலிருக்க அவைகளிடையே ஒருங் கிணைப்பும் (Co-ordination) தொடர்பும் (Relationship) ஏற்பட வேண்டும். பல்வேறுபட்ட துறைகளிடையே இணைப்பை ஏற்படுத்த ஆங்கில அரசாங்கம் பல்வேறு துறைகளிடையே தொடர்பு கொள் ளும் குழுக்களை (Interdepartmental Committee) அமைக்கின்றது. அத்துடன் அதற்காகச் சில கேபினெட் குழுக்களையும், ஒருங் கிணைவு அமைச்சர்களையும் நியமிக்கின்றது. இத்தகைய குழுக் களும் அமைச்சர்களும் பல்வேறுபட்ட துறைகளிடையே சுமுக உறவையும், தொடர்பையும் ஏற்படுத்துகின்றனர். அதனால் ஆட்சி செலுத்துவதில் முரண்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன.

ஆட்சி முறை (Process of Administration)

கொள்கைகளை உருவாக்குவது அமைச்சர் குழுவாகும். அக் கொள்கைகளைப் பாராளுமன்றம் சட்டங்களாக இயற்றுகின்றது. அத்தகைய பாராளுமன்றச் சட்டங்களை ஆட்சித் துறையினர் செயல்படுத்துகின்றனர். அத்தகைய ஆட்சித் துறையினர்தான் அரசாங்கத்தின் நிரந்தரப் பொதுப் பணியாளர் ஆவர். ஒவ்வொரு துறையின் படிநிலை அமைப்பும் (Hierarchical System) அதனின் அமைப்பு, பணியாளர், அளவு, குறிக்கோள், தேவை ஆகிய வைகளுக்கேற்ப அமைந்திருக்கும். உதாரணமாகப் பொதுநலத்

துறையை எடுத்துக் கொண்டால், அத் துறையின் பழநிலை அமைப்பு கீழ்க்காணும்படி அமைந்திருக்கின்றது.[1]

அமைச்சர் (The Minister)

| → அந்தரங்கச் செயலாளர் (Private Secretary)

↓→ உதவி அந்தரங்கச் செயலாளர் (Assistant Private Secretary)

பாராளுமன்றச் செயலர் (The Parliamentary Secretary)

↓→ அந்தரங்கச் செயலாளர் (Private Secretary)

செயலாளர் (The Secretary)

↓→ அந்தரங்கச் செயலாளர் (Private Secretary)

2. துணைச் செயலாளர்கள் (Deputy Secretaries)

↓

10. நேருதவிச் செயலாளர்கள் (Under-Secretaries)

↓

29. உதவிச் செயலாளர்கள் (Assistant Secretaries)

↓

71. முதல்வர்கள் (Principals)

↓

30. உதவி முதல்வர்கள் (Assistant Principals)

இவர்களில் அமைச்சரும், பாராளுமன்றச் செயலரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவார்கள். செயலாளர் அத் துறையின் நிரந்தரமான தலைவராவார். அத்துறை இவரின் கட்டுப்பாட்டிற்குள் தான் செயல்படும். அத்துறையிலிருந்து புத்தாய்வுத் திட்டம் ஒன்று அமைச்சருக்குப் போக வேண்டுமானால் முடிவில் இவரிடம் வந்து தான் போகும். அதேபோல் அமைச்சரிடமிருந்து ஒரு புத்தாய்வுத் திட்டம் துறைக்கு அனுப்பப்பட வேண்டுமானால் முதலில் இவரிடம்தான் வந்து கீழே போகும். துணைச் செயலாளர்கள் செயலாளருக்குப் பொதுப்படையான வகையிலே உதவி செய்வர். அத்துடன் அவர்கள் துறையின் பணிகள் செவ்வனே நடைபெற ஆர்வம் எடுத்துக் கொள்வார்கள். நேருதவிச் செயலாளர்கள் துறையின் பல்வேறு பணிகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். உதாரணமாகப் பொதுநலத் துறையில் ஒரு நேருதவிச் செயலாளர் நிதியையும், மற்றொருவர் வீட்டு வசதியையும், மற்றொருவர் பணி

[1] The British Constitution by Sir Ivor Jennings.

யாளர் குழுவையும் மற்றும் சிலர் வேறுசில பணிகளையும் பொறுப் பேற்றுப் பார்த்துக் கொள்வர். உதவிச் செயலாளர்கள் நேருதவிச் செயலாளர்களுக்கு உதவி புரிவர், முதல்வர்கள் துறைக் குழுக்களுக் குச் செயலாளர்களாகப் பணியாற்றுவர். அத்துடன் அவர்கள் தாம் அறிக்கைகளைத் தயாரிப்பார்கள். புள்ளி விவரங்களைச் சேகரித்தல், மக்களுடைய விண்ணப்பங்களைப் படித்துப் பார்த்துக் குறிப்பு எழுதுதல், கோப்புகளிலுள்ள விவரங்களைச் சுருக்கி எழுதுதல் போன்ற பணிகளை மேற்கொள்வர். உதவி முதல்வர்கள் நல்ல அனுபவம் பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களுடைய முக்கிய பணி நிருவாக முறையை நன்ருகத் தெரிந்துகொள்வதே யாகும். அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் அனேகமாக முதல்வர் தகுதிபடைத்தவராகத் தான் இருப்பார். மற்ற அந்த ரங்கச் செயலாளர்கள் உதவி முதல்வர் தகுதி படைத்தவர்களாக இருப்பார்கள். இங்ஙனம் ஒவ்வொரு துறையிலும் நிரந்தரச் செயலாளர்களும், துணைச் செயலாளர்களும், நேருதவிச் செயலா ளர்களும், உதவிச் செயலாளர்களும், முதல்வர்களும், உதவி முதல் வர்களும் பணியாற்றுவர். அவர்கள் தாம் ஆட்சிமுறையைச் சிறப்பாக நடத்துபவர்கள் ஆவார்கள்.

நிரந்தர நிருவாகப் பொதுப் பணித் துறை (The Permanent Civil Service)

இங்கிலாந்திலுள்ள சிவில் சர்வீஸ் என்ற அரசாங்கப் பணி யாளர் அமைப்புமுறை உலகப் புகழ் பெற்றதோர் நிறுவனமாகும். தகுதிக்கும் திறமைக்கும் அது மற்ற நாடுகளுக்கோர் முன்மாதிரி யாக விளங்கி வருகின்றது. பல உலக நாடுகள் இங்கிலாந்தின் அரசாங்கப் பணியாளர் அமைப்பு முறையையே பின்பற்றி வருகின்றன. இங்கிலாந்தின் மற்ற நிறுவனங்கள் போலவேதான், இதுவும் நாளடைவில் தானகவே வளர்ந்து செம்மையுற்றதோர் அமைப்பு முறையாகத் திகழ்கின்றது.

அரசாங்க அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள், துறை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகியவர்களுக்கு அரசாங்கக் கொள்கைகளை நிர்ணயம் செய்வதும், அவர்களுடைய துறை அலுவல்கள் சரியாகச் செயலாற்றப் படுகின்றனவா என்று கண் காணிப்பதுமே முக்கிய அலுவல்களாக இருக்கின்றன. அவர்கள் வரிகளை வசூலிப்பதில்லை. கணக்குகளைத் தணிக்கை செய்வதில்லை, நிர்வாகப் பணிகளைச் செய்வதில்லை. இவை போன்ற எண்ணற்ற அரசாங்கப் பணிகளைச் செய்யப் பல ஆயிரக் கணக்கான நிரந்தரப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர் களே நிரந்தரப் பொதுத்துறை அலுவலர்கள் (The Permanent Civil Servants) என அழைக்கப்படுபவராவர்.

அமைச்சர்கள் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாவர். அவர்களின் கட்சி அதிகாரத்தில் இருக்கும் வரைதான் அவர்கள் பதவியில் இருக்க முடியும். அடுத்த தேர்தலில் ஓர் அரசியல் கட்சி தோற்ருல், மற்ருேர் அரசியல் கட்சி பதவியேற்கின்றது. ஆனுல், பொதுத் துறைப் பணியாளர்கள் அப்படி அல்லர். அவர்களுக்கும் அரசியல் கட்சிக்கும் தொடர்பு இல்லை. அவர்கள் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டவர்கள். நிரந்தரமாகப் பதவி வகிப்பதால் தான் அவர்கள் அனுபவம் பெற்றவர்களாகவும், சிறப்பான திறமை பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். ஆட்சித் துறைகளில் தலைவர்களாக நியமனம் செய்யப்படும் அமைச்சர்களுக்குப் போதிய அனுபவம் அல்லது திறமை அத் துறைகளைப் பற்றிய பணிகளில் இருக்காது. அதனுல் அத்துறையில் அனுபவம் பெற்றவர்களும் சிறப்பான திறமை பெற்றவர்களும், நீண்ட காலமாகப் பணிபுரிந்து வரும் பொதுத் துறைப் பணியாளர்களே யாவர். அவர்கள் தான் அமைச்சர்கள் உருவாக்கும் கொள்கைகளையும், பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களையும் நல்லமுறையில் அமுல் நடத்துபவர்களாவார்கள். ஆங்கிலேய ஆட்சித் துறையில் அமைச்சர்கள் அரசாங்கத்தை மக்கள் விரும்பத்தக்க முறையில் நடத்துகின்றனர்; ஆட்சித்துறைப் பணியாளர்கள் அதைத் திறம்படப் பின்பற்றி நடத்துகின்றனர்.

பொதுத் துறைப் பணியின் வளர்ச்சி

பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கிலாந்தில் அரசியல்வாதிக்கும் (Politician) அரசாங்கப் பணியாளருக்கும் (Official) வேறுபாடு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. பொதுத் துறைப்பணி பெரும்பாலும் அரசியல்வாதிகள், நிலப் பிரபுக்கள், அமைச்சர்கள் ஆகியோரின் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும் தான் கொடுக்கப்பட்டு வந்தது. அப்பொழுது திறமை, நாணயம், தகுதி ஆகியவற்றைப் பற்றி அரசாங்கம் கவலைப்படவில்லை. அரசியல் செல்வாக்குப் பெற்ற அதிகாரிகள் பணியாற்றிய விதமும் ஏதோ ஓய்வு நேர வேலையைப் பார்ப்பது போன்று தான் இருந்தது. தேர்தல் சமயங்களில் அவர்களும் அரசியல்வாதிகளுக்கு உதவி செய்வதில் முனைந்திருந்தனர். அமைச்சர்களாக இருந்தவர்களுக்கு ஆட்சித்துறைப் பணிகள் பற்றித் தெரியாமல் இருந்தது போலவேதான் ஆட்சித்துறை அதிகாரிகளும் ஆட்சித் துறைப் பணிகளைப்பற்றித் தெரியாமல் இருந்தனர். அதனுல் நிர்வாகத்தில் பல சீர்கேடுகள் நிலவின. அரசாங்க நிறுவனங்கள் எதிலும் வரவுசெலவு கணக்குச் சரியாக வைக்கப்படவில்லை. பொதுப் பணத்தைக் கையாடல் அல்லது அதிலிருந்து கடன் வாங்குதல் என்பது சர்வ சாதாரணமாக நடை

பெற்று வந்தது. ஓர் அதிகாரி பொதுப்பணத்தில் ஐந்து லட்சம் பவுன் (5,00,000) கடன் வாங்கியிருந்தது அவர் ஓய்வு பெற்ற போதுதான் தெரிய வந்ததாம். வேறு சில பதவிகளுக்குச் சம்பளம் இருக்கும். ஆனால், செய்யவேண்டிய பணியோ ஒன்றுமிருக்காது. மற்றும் சில அதிகாரிகள், தங்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை வைத்துக் குறைந்த செலவில் தங்களுடைய பணிகளை முடித்து விட்டு அரசாங்கத்திடமிருந்து பெருந் தொகைகளைச் சம்பள மாகப் பெற்று வந்தனர்.

இங்ஙனம் ஊழல் மலிந்து கிடந்த அரசாங்கப் பணியாளர் அமைப்பைச் சீர்திருத்த வேண்டுமென்று பலர் அவ்வப்போது எடுத்துக்கூறி வந்தனர். இருந்தபோதிலும் அரசாங்கப் பணி யாளர்களின் திறமையின்மையையும், இலஞ்ச ஊழலையும் போக்க ஒருவருமே முயற்சி செய்யவில்லை. 1833ஆம் ஆண்டுவரை பொதுத் துறைப் பணியில்இவ்வித நிலையே நீடித்து வந்தது. அதற்குப் பின்னர், இத் துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக, டிரவிலியான்-நார்த்கோட் (Trevelyan-Northcote) ஆகியோர் பொதுத் துறைப் பணிகளில் சீரமைப்புச் செய்வதைப் பற்றி ஆய்வு செய்து ஓர் அறிக்கையை வெளியிட்டனர். திறமையைப் பற்றியும் தகுதியைப் பற்றியும் கவலைப்படாமல், வேண்டியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் முறையே (Patronage) எல்லா ஊழல்களுக்கும் மூலகாரணம் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டி, போட்டித் தேர்வு (Competitive Examination) மூலம் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதே சரியான முறை என்பதை அவர்கள் வற்புறுத்தினர். சுதந் திரமான ஒரு நிறுவனத்தினிடம் அத்தகைய போட்டித் தேர்வுகளை நடத்தும் பணியை அரசாங்கம் ஒப்படைத்துவிட வேண்டு மெனவும், அவ்வப்போது அந் நிறுவனம் தேர்வுகளை நடத்த வேண்டுமெனவும், அத் தேர்வுகளில் நன்றாக வெற்றி பெற்றவர்கள் மட்டுமே அரசாங்கப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மெனவும், தேர்ந்தெடுக்கப்படுபவரின் உடல்நலம், குணம், வயது முதலியவைகளைச் சோதனை செய்ய வேண்டுமெனவும், ஒரு சில ஆண்டுகள் தற்காலிகமாகச் சோதனை நிலையில் (Probation) வைக்கப்பட்ட பின்பே அவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டுமெனவும், பின்னர் தகுதிக்கேற்ப அவர்களுக்குப் பதவி உயர்வு (Promotion) அளிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் அறிக்கையில் சிபார்சு செய்தனர்.

டிரவிலியான் – நார்த்கோட் அறிக்கையின் சிபார்சுகளுக் கேற்ப 1855ஆம் ஆண்டில் முதன்முதலாக இங்கிலாந்தில்

ஆட்சித்துறைப் பணிக்குழு (Civil Service Commission) ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அரசாங்கத்தின் தலையீடின்றிச் சுயேச்சையாகச் செயல்படக் கூடிய ஓர் நிறுவனம் அரசாங்கப் பணியாளர்களைப் பதவியிலமர்த்துவதற்காக அமைக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும். அக் குழுவில் மூன்று உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர். போட்டித் தேர்வுகளை இக் குழு ஆண்டுதோறும் நடத்தி வந்தது. அதன்மூலம் அரசாங்கப் பணியாளர்களில் சாதாரண பதவி வகித்தவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டனர். உயர்ந்த பதவிகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரம் பின்பும் அரசாங்கத்தின் கையிலேதான் இருந்தது. அதனால் உயர்ந்த பதவிகளுக்கு ஆட்களை அரசாங்கம் நியமனம் செய்த போது பல ஊழல்கள் நடந்தன. இத்தகைய குறைகளை ஆராய 1860ஆம் ஆண்டில் ஓர் பொறுக்குக் குழுவை (Select Committee) அரசாங்கம் அமைத்தது. போட்டித் தேர்வு எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமென்றும், சாதாரண அன்றாடப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளருக்கும், திறமை மிக்க பணிகளை ஆற்றுவோருக்கும் தனித்தனி தேர்வுகள் நடத்தப் பெற வேண்டுமென்றும், திறமை மிக்கவர்கள் நேரடியாகப் பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாமென்றும் அக் குழு சிபார்சு செய்தது. எனினும் இச் சிபார்சுகள் நடைமுறையில் செயலாக்கப் படவில்லை. ஆனால், அக் குழுவின் உறுப்பினரான லவே (Lowe) என்னும் நிதி அமைச்சர் முயன்று 1870ஆம் ஆண்டில் ஓர் சட்டத்தைக் கொணர்ந்தார். அதன்மூலம் அரசாங்கப் பதவிகள் யாவும் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலமே திரப்பப்பட வேண்டுமென்பதை அவர் நன்கு நிலை நாட்டினார். 1870ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கப் பதவிகளுக்கு (கீழ்க்கண்ட நான்கு வகையான பதவிகளைத் தவிர) போட்டித் தேர்வுகள் நடை பெற்று வருகின்றன.

1. அரசியாரால் நேரடியாக நியமனம் செய்யப்படும் பதவிகள்.
2. பதவி உயர்வால் (Promotion) நிரப்பப்படும் பதவிகள்.
3. கடைநிலை ஊழியர்கள் பதவிகள் (Menial Staff).
4. திறமை வாய்ந்த தொழில் நுட்பத் தகுதிகளுக்கேற்பப் பதவிகள்.

அரசாங்கப் பணியாளர் அமைப்பை ஆராய்ந்து சீர்திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் அவ்வப்பொழுது குழுக்கள் நியமிக்கப் பட்டன. ப்ளேஃபேர் குழு (Playfair Commission 1874-75),

மாக்டனல் குழு (Mac Donnel Commission 1912-15), டாம்லின் குழு (1929-31) போன்ற அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுக்கள் இத்தகைய ஆராய்ச்சியை நடத்திப் பல சிபார்சுகளைச் செய்துள்ளன. 1918ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஹால்டேன் குழு (Haldane Committee) அரசாங்க நிறுவனங்களை எங்ஙனம் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிப் பல யோசனைகளைத் தெரிவித்தது.

இன்றைய அமைப்பு

ஆட்சித்துறைகளின் தலைவர்களான அமைச்சர்களின் கீழ்ப் பணியாற்றும் எல்லாரும் அரசாங்கப் பணியாளர் அமைப்பைச் (Civil Service) சார்ந்தவர்களாவார்கள், அவர்கள் பாராளுமன்றத் தினால் வழங்கப்பெறும் மானியத்தினின்று மட்டுமே ஊதியம் பெறு கின்றனர். எனவே, தனிப்பட்ட ஒதுக்கு நிதியிலிருந்து சம்பளம் பெறுகின்ற நீதிபதிகளும், இராணுவ அதிகாரிகளும், அமைச்சர் களும் அரசாங்கப் பணியாளர் அமைப்பைச் சார்ந்தவர்களல்லர். அதேபோன்று தல ஆட்சி நிறுவனங்கள் (Local Governments), பொது நிர்வாக நிறுவனங்கள் (Public Corporation) ஆகிய வற்றில் பணியாற்றுபவர்களும் அரசாங்கப் பணியாளர் அமைப்பின் உறுப்பினர்கள் அல்லர். அரசாங்கப் பணியாளர் அமைப்பைச் சார்ந்த பணியாளர்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. ஆட்சித்துறை அதிகாரிகள் (Administrative Officials)

இவர்கள் ஆட்சித்துறை அமைப்பில் முக்கிய அங்கம் வகிக் கின்றனர். இவர்கள் அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறி அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பதில் அவர்களுக்கு உதவி செய்கின்றனர். பழுத்த அனுபவம் உடையவர்கள், வயதிலும் மூத்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய மூவாயிரம் (3000) வரையிலும் உள்ளது. செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், நேருதவிச் செயலாளர்கள், உதவிச் செயலாளர் கள், முதல்வர்கள், உதவி முதல்வர்கள் ஆகியோர் அனைவரும் இவ் வகையைச் சார்ந்தவர்களாவார்கள்.

2. அறிவியல், தொழில் நுணுக்கம், தனிப்பட்ட தொழில் ஆகியவற்றில் பணி புரிவோர் (Scientific, Technical and Professional)

அறிவியல் பயிற்சி பெற்றவர்கள், தொழில் பயிற்சி பெற்ற வர்கள், தொழில் நுணுக்கம் தெரிந்த வல்லுனர்கள், சமீப காலத்தில்தான் பொதுத்துறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்

பட்டனர். அவர்களுக்கு ஆட்சித்துறைத் தொடர்புடைய பணிகள் மிகவும் குறைவாகவே இருக்கும். மிகவும் தனியான தொழில் துறைகளில் அவர்களுடைய பணி பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றது, இவர்களுடைய எண்ணிக்கை ஆட்சித்துறை அதிகாரிகளைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. இத்தகையோர் ஓர் இலட்சத்துக்கும் (1,00,000) மேற்பட்டவர்கள் இருக் கின்றனர்.

3. நிர்வாக அதிகாரிகள் (Executives)

நிர்வாகப் பிரிவில் பணியாற்றுகிறவர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய அறுபதாயிரம் (60,000) பேர்கள் வரையிலும் உள்ளது. 18-19 வயதுகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படித்து முடித்த ஆண்களும் பெண்களும், அவர்களுக்கென்று நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெற்ற பின்னர், இப் பணிகளில் நியமனம் செய்யப்படுகின்றனர். எழுத்தர் (Clerks) பிரிவிலிருந் தும் பதவி உயர்வு பெற்று இப் பிரிவுக்கு வருகின்றனர். இவர்கள் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை ஆராயும் பணியினை மேற் கொள்ளுவார்கள். அத்துடன் அமைச்சர்களால் வகுக்கப்பட்ட கொள்கைகளை நடைமுறையில் கொண்டு செலுத்தும் பணியினையும் இவர்கள் மேற்கொண்டவர்களாவர்.

4. எழுத்தர், தட்டெழுத்தர், உதவியாளர் (Clerks, Typists and Assistants)

எழுத்தர்களும், தட்டெழுத்தர்களும், உதவியாளர்களும் மற்றும் பலரும் ஆயிரக்கணக்கான அளவில் உள்ளனர். இவர்கள் மேலதிகாரிகள் இடும் கட்டளைகளுக்கேற்பப் பணிகளை முறையாகச் செய்து வருபவர்கள். நாட்டின் அன்றாட நிர்வாக நடவடிக் கைகள் இத்தகையோரால்தான் நடக்கின்றன. அவர்களுடைய பணிகள் அதிக மாறுபாடின்றி ஒரே மாதிரியாக அமைந்திருக்கும். 16-17 வயதுள்ள ஆண்களும் பெண்களும் இத்தகைய பணிகளுக்குப் போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். பதவி உயர்வு பெற்றும் இப்பதவிகளுக்கு வருகின்றனர். இவர்களுடைய பணிகளைச் செய்யத் தனிப்பட்ட சிந்தனை தேவையில்லை.

5. உழைப்பாளிகள் (Manual Workers)

தபால் துறை, தொலைபேசித் துறை, துப்புரவு செய்வோர், பொருள்களைச் சுமந்து செல்வோர், மற்றும் பல சில்லறைப் பணிகளைச் செய்வோரெல்லாம் இதில் அடங்கியவர்களாவார்கள்.

6. தொழிலாளிகள் (Industrial Workers)

போர்க் கருவி உற்பத்தி சாலைகள், கப்பல் தளங்கள் போன்ற இடங்களில் பணி புரியும் தொழிலாளிகள் இந்த வகையைச் சார்ந்தவர்களாவார்கள்.

மேற்கண்ட பணியாளர்கள் யாவரும் வெவ்வேறு வகையான ஊதியங்களைப் பெறுகின்றவர்கள். ஒரே துறையில் தகுதிக்கேற்பவும், திறமைக்கேற்பவும் ஊதியங்கள் மாறுபடும். மேலதிகாரிகள் தங்களுக்குக் கீழே பணியாற்றுபவர்களைப் பற்றி நம்பகமான அறிக்கைகளை (Confidential Reports) அவ்வப்போது எழுதி வைப்பார்கள். அவைகளின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றன.

பணிகள் (Functions)

அரசாங்கப் பணியாளர் அமைப்புத்தான் நாட்டின் நிர்வாக இயந்திரமாகும். அமைச்சர்கள் ஐந்தாண்டுக்கு ஒரு முறை மாறுகின்றார்கள். ஆனால், அரசாங்கப் பணியாளர் அமைப்பு மாறாமல் நின்று செயல்படுகின்றது. அரசாங்கம் கட்டளையிடுகின்றபடி பணி புரிவதொன்றே அந்த அமைப்பின் கடமையாகும். அரசாங்கம் எக் கட்சியைச் சார்ந்திருந்தாலும், அதன் கொள்கைகளைச் செயல்படுத்துவதே அதன் நோக்கமாகும். வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் விதிமுறைகளுக்கேற்ப அவர்கள் நிர்வாகத்தை நடத்துகின்றனர். அமைச்சர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் கூறி, மரபுகளுக்கேற்பவும், மக்களின் நன்மைக்குகந்தவாறும் கொள்கைகளை வகுக்க உதவி செய்பவர்கள் அவர்களே. அங்ஙனம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும், பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களையும், நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் அமுல் நடத்துபவர்களும் அவர்களேயாவர். பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் தயாரித்துத் தருபவர்களும் அவர்கள்தான். பாராளுமன்றத்தில் அமைச்சர்களைக் கொண்டும் மசோதாக்களைத் தயாரிப்பவர்களும் நிர்வாகத்தினரேயாவர். அம் மசோதாக்கள் வெற்றியுடன் சட்டமாவதற்கான சகல உதவிகளையும் அவர்கள் அமைச்சர்களுக்கு வழங்குகிறார்கள். இங்ஙனம் உண்மையான நிர்வாகப் பணிகளை அரசாங்கப் பணியாளர் அமைப்பு மேற்கொண்டாலும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு முடிவான பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் அமைச்சர்களேயாவர்.

31. நீதித்துறை

நீதித்துறையின் முக்கியபணி நாட்டில் நீதியை நிலைநாட்டுவதாகும். இங்கிலாந்திலுள்ள நீதித்துறை சாக்ஸானியர் (Saxon) காலத்திலேயே தோற்றுவிக்கப் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளது. ஆங்கிலோ சாக்ஸானியர் காலத்தில் தல நீதிமன்றங்களாகிய (Local Courts) ஷையர் (Shire) நீதிமன்றங்களும், ஹன்ட்ரட் (Hundred) நீதிமன்றங்களும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கி வந்தன. அத்துடன் கிராமப்புறங்களில் பிரபுக்களால் நடத்தப் பெற்ற மேனர் நீதிமன்றங்களும் (Manorial Courts) அப் பகுதிகளிலுள்ள பிரபுக்களுக்குக் கட்டுப்பட்ட குடியானவர்கள் தொடர்புடைய வழக்குகளை மட்டும் விசாரணை செய்யும் அதிகாரங்களைப் பெற்றிருந்தன. நார்மானியர்கள் காலத்தில் இத்தகைய தல நீதிமன்றங்கள் முக்கியத்துவத்தை இழந்தன. நிலமானிய முறையும் சீர்குலைந்துவிட்டதனுல், 'மேனர் நீதிமன்றங்களும்' கலைக்கப் பட்டன. அரசரின் நீதிமன்றமே பெரும்பான்மையான வழக்குகளை விசாரிக்கத் தொடங்கியது. அரசரின் நீதி மன்றத்திலுள்ள நீதிபதிகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று வழக்குகளை விசாரித்து நீதி வழங்கி வந்தனர். இந்த நீதிபதிகள் வழக்குகளை விசாரணை செய்யப் பல இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்ய நேரிட்டதால் அரசரின் நீதிமன்றம் சரியாகச் செயலாற்ற முடியவில்லை. தவிர, வழக்குகளும் மிகவும் அதிகமாக வந்து குவிந்ததால் அரசரின் நீதிமன்றம் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. அதனுல் முதலாம் எட்வர்டு காலத்தில் அரசரின் நீதிமன்றம் மூன்று பொதுச் சட்ட நீதிமன்றங்களாகப் (Common Law Courts) பிரிந்து வழக்குகளை அதன் தன்மைகளுக்கேற்ப விசாரிக்கத் தொடங்கியது. அப் பிரிவுகளாவன:

1. அரசரின் நீதிமன்றம் (The Court of King's Bench)
2. பொது வழக்கு நீதிமன்றம் (The Court of Common Pleas)
3. நிதித்துறை நீதிமன்றம் (The Court of the Exchequer)

அரசரின் நீதிமன்றம்

பெருங் குற்ற வழக்குகளைத் தல நீதிமன்றங்கள் விசாரிக்கக் கூடாதென்று இரண்டாம் ஹென்றி உத்தரவிட்டதால், அரசரின் நீதிமன்றமே அத்தகைய குற்றவியல் வழக்குகளை விசாரிக்கத் தொடங்கியது. அத்துடன் மிகவும் சலுகைகள் பெற்ற பிரபுக்கள் மற்றும் பெரிய சீமான்கள் பற்றிய வழக்குகளையும், அரசரின் முக்கிய பிரச்சினைகளையும் அரசரே விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தவிர, பொதுச் சட்ட நீதிமன்றங்களிலிருந்து மேல் முறையீட்டு விண்ணப்பங்களும், வழக்குகளும் அரசரின் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. அதனால் நாளடைவில் இத்தகைய வழக்குகளை விசாரிக்க நீதிபதிகள் முறையாக வெஸ்ட் மினிஸ்டரிலேயே இருந்து பணியாற்ற நியமனம் செய்யப்பட்டனர். ஆகவே, அரசரின் நீதிமன்றம் எல்லாக் குற்றவியல் வழக்குகளையும், அரசருக்கான முறையீடுகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது.

பொது வழக்கு நீதிமன்றம்

பொதுமக்களின் வழக்குகள் நாளடைவில் மிகவும் அதிகரித்தன. அந்த வழக்குகளை விசாரணை செய்ய, இரண்டாம் ஹென்றி 1178ஆம் ஆண்டில் ஐந்து நீதிபதிகளை நிரந்தரமாக நியமித்தார். அத்துடன் அவர்களால் விசாரிக்க முடியாத வழக்குகளை மட்டும் அரசரின் முழு நீதிமன்ற (King's Full Court) விசாரணைக்கு அனுப்ப வேண்டுமென்று இரண்டாம் ஹென்றி ஆணையிட்டார். அப்பொழுதிலிருந்து பொதுமக்களின் வழக்குகளை விசாரணை செய்யும் தனி நீதிமன்றம் உருவாகியது. இந் நீதிமன்றத்தின் நீதி பதிகள் அடிக்கடி அரசரோடு சுற்றுப்பயணம் மேற்கொள்வதால், வழக்குகள் சரியாக விசாரிக்கப்படுவதில்லையென்று பிரபுக்கள் குறை கூறினர். அதனால் ஜான் அரசர், இந்த நீதிமன்றம் நிரந்தரமாக வெஸ்ட் மினிஸ்டரிலேயே நிறுவப்பட ஒப்புக் கொண்டார். இந்தப் பொது வழக்கு நீதிமன்றம், மக்களுக்கிடையிலான எல்லா வழக்குகளையும் விசாரித்தது.

நிதித்துறை நீதிமன்றம்

இந்த நீதிமன்றம்தான் முதலில் வளர்ச்சியடைந்தது. கியூரியா ரெஜிஸ் (Curia Regis) என்ற அரசரின் அவையிலுள்ள ஒரு பகுதியே நிதித்துறையாக (Exchequer) இருந்தது. இந்த நிதித் துறை அரச குடும்பத்தின் கணக்கு வழக்குகளைப் பார்த்துக்

கொண்டிருந்தது. வரி வசூல் செய்வதிலோ அல்லது நிதித்துறை அதிகாரிகளின் நடத்தையிலோ ஊழல்களோ அல்லது சந்தேகங்களோ ஏற்பட்டால், இந் நீதிமன்றம் அவ்வித வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறும். இந் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்படிப் படியாகவும், மறைமுகமாகவும் வருவாய்த் துறையில் எழுந்த சில வழக்குகளை விசாரணை செய்யும் அளவுக்கு வளர்ந்தன. இவ்விதம் வளர்ச்சியுற்ற இந் நீதிமன்றம் 1873ஆம் ஆண்டு வரையிலும் நீடித்தது.

பதினைந்தாம் நூற்ருண்டில் இத்தகைய பொதுச் சட்ட நீதிமன்றங்கள் வலுவிழந்து காணப்பட்ட பொழுது ஸ்டார் சேம்பர் நீதிமன்றத்தை (Star Chamber Court) ஏழாம் ஹென்றி நிறுவினர். இந்த நீதிமன்றம் அரசர்களின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த நீதிமன்றம் அரசருக்கு விரோதமாக வரும் சில வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளித்து வந்தது. இந்த நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிகள் வழக்கமாக அரசரின் விருப்பத்திற்கு மாருகச் செயல்படுவதில்லை. தவிர, அரசரின் விருப்பத்திற்கு முரணுகத் தீர்ப்புக் கூறும் நீதிபதிகள் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது. பதினும் நூற்ருண்டில் விண்மீன் நீதிமன்றம், எல்லைப்புற நீதிமன்றங்கள், வட எல்லை நீதிமன்றம் ஆகிய சிறப்புரிமை நீதிமன்றங்களைப் பயன்படுத்திக் கொண்டு நிருவாகத்தினர் நீதிச் செயற்பாட்டைக் கட்டுப் படுத்திஞர்கள். ஆகவே, நீதித்துறைப் பணிகளும் நிருவாகத் துறைப் பணிகளும் மோதிக்கொண்டிருந்தன. நீதித்துறையை நிருவாகத்துறையின் கீழ்க் கொண்டுவர ஸ்டூவர்ட்டுகள் முயன்ருர்கள். முதலாம் ஜேம்ஸும், முதலாம் சார்லஸும் விண்மீன் நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் விருப்பப்படி எதேச்சாதிகாரத்தை நிறுவ முயன்ருர்கள். இவர்களின் இத்தகைய கொள்கைகளைப் பாராளுமன்றம் வன்மையாக எதிர்த்தது. பின் நீடித்த பாராளுமன்றம் இத்தகைய நீதிமன்றங்களையெல்லாம் ஒழித்தது. 1679ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஆட்கொணர் ஆணைச் சட்டம் (Habeaus Corpus Act) குடிமக்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளித்தது. 1701ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட அரசுரிமை நிருணயச் சட்டம் (Act of Settlement) நீதிமன்றத்திற்கு உண்மையான சுதந்திரத்தை அளித்தது. நீதிபதிகளை அரசர்கள் தங்கள் விருப்பம்போல் பதவியிலிருந்து விலக்கக் கூடாதென்றும், அவ்விதம் நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்ருல் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளின் ஒப்புதலைப் பெறவேண்டுமென்றும் அச் சட்டம் வகை செய்தது.

நாளடைவில் நாட்டில் வாணிபம் மற்றும் தொழில் உற்பத்தி வளர்ச்சியுற்றன. அதனால் வாணிபத்தைப் பற்றிய வழக்குகள் வரலாயின. இத்தகைய வழக்குகளைப் பொதுச்சட்ட நீதி மன்றங்களில்தான் விசாரித்து வந்தனர். இந் நீதிமன்றங்களில் பணியாற்றிய பெரும்பாலான நீதிபதிகளுக்கு இப் புதிய வழக்குகள் அவர்களுடைய அனுபவங்களுக்கு மாறாக இருந்ததால், இவ் வழக்குகளை விசாரிப்பதில் அவர்களுக்குச் சில சிக்கல்கள் ஏற் பட்டன. அத்துடன் இவர்களின் தீர்ப்புகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லாதிருந்ததனால் இவ் வழக்குகளை அரசரிடத்தில் முறையிட்டனர். அரசரின் குழுவினால் எல்லா முறையீடுகளையும் விசாரிக்க முடியவில்லை. அதனால் அரசரின் முக்கிய ஆலோச கரான சான்சலர் பிரபுவுக்கு அனுப்பி, அவருடைய ஆலோசனை களைக்கேட்டுத் தீர்ப்பு அளித்து வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தகைய முறையீடுகள் சான்சலர் பிரபுவுக்கே நேரடியாக அனுப்பப்பட்டதால் அவரே வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளித்தார். இவ்விதம் சான்சரி நீதிமன்றம் (The Court of Chancery) வளர்ச்சியுற்றது. இந் நீதிமன்றம் பொதுச் சட்ட நீதிமன்றங்களுக்குத் துணையாகப் பணியாற்றி வந்தது. ஆனால், நாளடைவில் இந் நீதிமன்றத்திற்கும் பொதுச் சட்ட நீதிமன்றங் களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. பதினேழாம் நூற்றாண்டில் தலைமை நீதிபதி கோக் (Coke) என்பவருக்கும் சான்சலர் பிரபுவான எல்லஸ்மியர் பிரபுவுக்கும் (Lord Ellesmere) இடையே ஏற்பட்ட மோதலில் முதலாம் ஜேம்ஸ் தலையிட்டு சான்சலர் பிரபுவின் தீர்ப்பே முடிவானது என்று அறிவித்தார்,

இரண்டாம் ரிச்சர்டு காலத்திலிருந்தே கடற்படை நீதிமன்றம் (The Court of Admirality) இருந்து வந்துள்ளது. இங்கிலாந்தின் கப்பற்படை வளர்ச்சியுற்றதற்குப் பின்னர், கடற்படை சம்பந்தமான சில வழக்குகளைக் கடற்படைத் தளபதியே விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடற் கொள்ளைக்காரர்கள், மற்றும் கடற்படை அதிகாரிகளிடையே ஏற்படும் வழக்குகளை இந் நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பளித்தது. பத்தொன்பதாம் நூற் றாண்டில் இன்னும் மூன்று நீதிமன்றங்கள் புதியனவாய் முளைத்தன. அவை முறையே நொடிப்பு நீதிமன்றம் (Court of Bankruptcy), இறப்புறுதிச் சான்று நீதிமன்றம் (Court of Probate), மணமுறிவு, மணவினைகள் நீதிமன்றம் (Court for Divorce and Matrimonial Causes) எனப்பட்டன. இங்ஙனம் பல நீதிமன்றங்கள் இருந்ததால் எந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கைத் தொடுக்கலாமென்பதே மக்க ளுக்குப் புரியவில்லை. ஒவ்வொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பும் சரிவர நிச்சயிக்கப்படவில்லை. மேலும் நடவடிக்கை

எடுக்கும் முறையானது ஒவ்வொரு நீதிமன்றத்துக்கும் ஒவ்வொரு வகையாக இருந்தது. வழக்குகளைத் தீர்க்க, காலதாமதம் அளவுக்கு மீறிக் காணப்பட்டது. கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல் நீதிமன்றங்களுக்கு முறையீடு செய்து கொள்வதற்கும் சரிவர ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. நான்காம் ஜார்ஜ், நான்காம் வில்லியம் காலத்தில்தான் பொதுச்சட்ட நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் நிதி நீதிமன்றமொன்றில் விசாரிக்கப்படுவதற்கு வழி செய்யப்பட்டது. பொதுச் சட்ட நீதிமன்றங்களுக்கும், சான்சரி நீதிமன்றத்திற்கும் மேல் முறையீட்டு நீதிமன்றமாக பிரபுக்கள் சபை விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் நீதித்துறையில் ஓர் ஒழுங்கும் ஓர்மையும் ஏற்பட்டன. 1846ஆம் ஆண்டில் கவுன்டி நீதிமன்றங்கள் (County Courts) என்ற புதுவகை நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. இந் நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்க ஓர் நீதிபதியை சான்சலர் பிரபு நியமித்தார். இந் நீதிபதி பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே இருந்த கவுன்டி நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்கி வழக்குகளை நடத்திக் கொடுப்பார். இத்தகைய நீதிமன்றங்களில் சிறிய வழக்குகளே விசாரிக்கப்பட்டன. ஜூரி முறையை விசாரணையின்போது பயன்படுத்தவில்லை. இந் நீதிமன்றங்களிலிருந்து மேலே முறையீடு செய்து கொள்ளலாம். பழங்காலத்து ஷையர், ஹன்ட்ரட், பரோ நீதிமன்றங்கள் வழக்கிழந்து போய்விட்ட நேரத்தில் கவுன்டி நீதிமன்றங்கள் வந்து அவற்றின் பணிகளை மேற்கொள்ளலாயின.

பல நீதிமன்றங்கள் இருந்ததால், ஒன்றுடன் ஒன்று மோதவும் முரண்பட்ட தீர்ப்புகளைக் கூறவும் வாய்ப்பு இருந்தது. அதனால் நீதித்துறையைச் சீரமைக்கும் அவசியம் ஏற்பட்டது. 1873ஆம் ஆண்டில் நீதிமன்ற அமைப்புச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி பல்வேறு நீதிமன்றங்களையும் ஓர் உயர்நீதிமன்றத்தில் இணைத்து, தலையாய நீதிமன்ற அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டது. தலைமை நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகவும், மேல் முறையீட்டு நீதிமன்றமாகவும் பிரிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் மூன்று பகுதிகளை உட்கொண்டு விளங்கியது. அவை முறையே 1. அரசியார் நீதிமன்றம், 2. சான்சரி நீதிமன்றம், 3. இறப்புறுதிச் சான்று, அல்லது உயில், மணமுறிவு, மணவினைகள், கடற்படை நீதிமன்றமாகும். மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் மூன்று முக்கிய நீதிபதிகளும், வேறு சில முறையீட்டு நீதிபதி பிரபுக்களும் இருக்கின்றனர். பொதுமைச் சட்டம் பற்றிய வழக்குகளில் இந் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து

நீதித் துறையின் சீரமைப்பு

- தலைமை உயர் நீதிமன்றம் (Supreme Court of Judicature)
  - உயர் நீதிமன்றம் (High Court)
    - அரசியாரின் நீதிமன்றம் (Queen's Bench Division)
    - சான்சரி நீதிமன்றம் (Chancery Division)
    - உயில் அல்லது இறப்புறுதிச் சான்று, மணமுறிவு, மணவினைகள் நீதிமன்றங்கள் (Comp or Probate, Divorce, & Matrimonial Causes)
      கடற்படை நீதிமன்றம் (Court of Admirality)
  - மேல் முறையீடு நீதிமன்றம் (Court of Appeal)

கொள்ளலாம். அதற்கும் மேலே போக விரும்புகிறவர்கள் தலைமை நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய வேண்டும். அத்தகைய தலைமை நீதிமன்றம்தான் பிரபுக்கள் சபையாகும். பிரபுக்கள் சபை முழுமையாக அமர்ந்து வழக்குகளை விசாரிக்காது. அச் சபையில் ஒரு குழு உள்ளது. அக் குழுதான் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும். 1876ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்படி சட்ட வல்லுநர்களான நான்கு பிரபுக்கள், பிரபுக்கள் சபையில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் எண்ணிக்கை 1918ஆம் ஆண்டில் ஆறுகவும், இன்று ஒன்பதாகவும் உள்ளது. இத்தகைய சட்டப் பிரபுக்கள்தான் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். சான்சலர் பிரபுவே அதற்குத் தலைமை தாங்குகிருர். தலைமை நீதிமன்றத்தின் மற்றொரு பகுதி பிரிவி கவுன்சிலினுடைய சட்டக் குழுவாகும் (Judicial Committee of the Privy Council). காமன்வெல்த் நாடுகளிலிருந்து வரும் முறையீட்டு வழக்குகளை இதுவே விசாரிக்கின்றது. ஆனல், அத்தகைய வழக்குகள் வருவது இன்று பெரும்பாலும் நின்று போய்விட்டது.

இங்கிலாந்திலுள்ள நீதிமன்றங்கள் இரண்டுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1. சிவில் நீதிமன்றங்கள், அல்லது பொதுவியல் வழக்கு நீதிமன்றங்கள், 2. கிரிமினல் நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் வழக்கு நீதிமன்றங்கள். நீதித்துறையின் கீழ்மட்டத்தில் இத்தகைய இரண்டுவகையான வழக்குகளுக்குள்ள வேறுபாடுகள் பெரிதும் கடைப் பிடிக்கப்படுகின்றன. ஆனல், நீதித்துறையின் மேல் மட்டத்தில் பொதுவியல் குற்றவியல் வழக்குகளின் அதிகார வரம்பு மறைந்துவிடுகின்றது. தலைமை நீதிமன்றமான பிரபுக்கள் சபைதான் இவ் விரண்டு வழக்குகளின் மேல் முறையீட்டு நீதிமன்றமாகும்.

சிவில் நீதிமன்றங்கள் அல்லது பொதுவியல் வழக்கு நீதிமன்றங்கள் கவுன்டி நீதிமன்றங்கள்

பொருளின் மதிப்பு 500 பவுன்களுக்கு மேற்படாத பொதுவியல் வழக்குகள் (Civil Cases) முதலில் கவுன்டி நீதிமன்றத்திற்குத் (County Court) தான் செல்லும், கவுன்டி நீதிமன்றம்தான் இங்கிலாந்தின் மிகச் சிறிய நீதிமன்றமாகும். இவ் வகை நீதிமன்றங்களில் 80-க்கும் மேற்பட்ட நீதிபதிகள் இருக்கின்றனர்கள். 72 வயது நிரம்பியதும் இவர்கள் ஓய்வு பெறுகின்றனர். இவர்கள் தங்களின் சேவைக்காக ஊதியம் பெறுகின்றனர், இத்தகைய நீதிமன்றங்கள் 450-க்கும் அதிகமாக இருக்கின்றன. ஒரு நீதிபதி பல கவுன்டி நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தி

வைக்கின்றார். இந் நீதிமன்றங்கள் தொடர்ந்து ஓரிடத்திலிருந்து செயல்படுவதில்லை. இந்த கவுன்டி நீதிமன்றங்களின் வரம்பு மிகவும் குறுகியது. பொதுவியல் வழக்குகளில் 500 பவுன்கள் மதிப்பிற்கு மேற்படாத தொகையைப் பொறுத்த வழக்குகளில் இந்த நீதிமன்றங்களே தீர்ப்பளிக்கின்றன. கடற்படை சம்பந்தப்பட்ட 1000 பவுன்கள் முதற்கொண்டு 3500 பவுன்கள் வரையிலும் உள்ள சொத்துக்களைப் பற்றிய வழக்குகளையும் சமுதாய நலச் சட்டங்களை இயற்றும்பொழுது எழும் சில வழக்குகளையும், குழந்தைகளைப் பாதுகாத்தல், வாடகைச் சட்டங்கள், குடியிருப்புச் சட்டங்கள் ஆகியவை பற்றிய சில வழக்குகளையும் கவுன்டி நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன. இந் நீதிமன்றங்களில் கட்சிக்காரர்களுக்காக வாதாட வழக்கறிஞர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

உயர் நீதிமன்றம்

உயர்நீதிமன்றத்திற்கு மூல வழக்கு விசாரணை (Original Jurisdiction) அதிகாரமும் மேல் வழக்கு விசாரணை (Appellate Jurisdiction) அதிகாரமும் இருக்கின்றன. பொருளின் மதிப்பு 500 பவுன்களுக்கு மேலுள்ள பொதுவியல் வழக்குகளை உயர்நீதிமன்றம் நேரடியாகவே எடுத்துக் கொள்ளும். அதுவே மூல வழக்கு விசாரணை அதிகாரமாகும், கவுன்டி நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீட்டு வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும். அதுவே மேல் வழக்கு விசாரணை அதிகாரம் எனப்படும். உயர் நீதிமன்றத்திற்குச் செல்லும் வழக்குகள், அரசியாரின் நீதிமன்றம் (The Queen's Bench Division) அல்லது சான்சரி நீதிமன்றம் (The Chancery Division) அல்லது உயில்கள், மணமுறிவு, மணவினைகள், கடற்படை நீதிமன்றம் (Court of Probate, Court of Divorce and Matrimonial, Court of Admirality) ஆகிய மூன்று நீதிமன்றங்களில் ஏதாவது ஒரு நீதிமன்றத்திற்குச் செல்லும்.

(a) அரசியாரின் நீதிமன்றம்

பழைய மூன்று வகையான பொதுச் சட்ட நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டதற்குப் பின்னர், ஒரே நீதிமன்றமாக அரசியாரின் நீதிமன்றம் நிறுவப்பட்டது. இந் நீதிமன்றம் பொதுவியல், குற்றவியல் ஆகிய இரண்டு வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். இந் நீதிமன்றத்தின் தலைவர் பிரதம நீதிபதிப் பிரபு (Lord Chief Justice) ஆவார். இவரைத் தவிர மற்றும் 36 நீதிபதிகள் இந் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர்.

பொதுவியல் வழக்குகளில் ஒப்பந்தம் (Contract), பொருள் துறைக் குற்றங்கள் (Tort) ஆகியவற்றை இந் நீதிமன்றம் விசாரிக்கும். ஜுரி விசாரணையை ஏதாவது ஒரு கட்சிக்காரர் வேண்டுமென்றால் அதற்கு இந் நீதிமன்றம் வழி செய்து கொடுக்கும். ஆனால், ஜுரி முறை இப்பொழுது மிகவும் குறைந்து வருகின்றது,

(b) சான்சரிநீதிமன்றம்

சான்சரி நீதிமன்றம் பெரும்பாலும் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்றது. இந்த நீதி மன்றத்திற்குச் சான்சலர் பிரபு (Lord Chancellor) தலைமை தாங்குவார். ஆனால், சான்சலர் பிரபுவுக்கு ஏராளமான பணிகள் இருப்பதால், அவருக்குப் பதிலாக அவரின் உதவியாளரும் (Master of the Rolls) மற்றுமுள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகளும் வழக்கு களை விசாரணை செய்வர்.

(c) உயில், மண முறிவு, மணவினை, கடற்படை நீதிமன்றம்

உயர்நீதிமன்றத்தின் இப் பிரிவு உயில்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையும், விவாகரத்து, மண வாழ்வில் ஏற்பட்ட வழக்குகள் போன்றவைகளையும், கடற்படைச் சொத்து பற்றிய வழக்குகளையும் விசாரிக்கின்றது.

வியாபார ஒப்பந்த நீதிமன்றம்

வியாபார ஒப்பந்தம் தொடர்பாக வழக்குகள் எழுந்ததால் அவற்றை விசாரணை செய்யத் தனி நீதிமன்றப் பிரிவு ஒன்று 1956ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு வியாபார ஒப்பந்த நீதிமன்றம் (Restrictive Practices Court) என்று பெயராகும்.

மேல் முறையீட்டு நீதிமன்றம்

மேற்கூறிய நீதிமன்றங்களிலிருந்து எழுகின்ற மேல் முறையீட்டு வழக்குகள் (Appeals) மேல் முறையீட்டு நீதிமன்றத் திற்கு (Court of Appeal) செல்கின்றன. மேல்முறையீட்டு நீதி மன்றத்திற்குச் செல்லும் வழக்குகள் சான்சலர் பிரபுவின் உதவி யாளரான மாஸ்டர் ஆஃப் ரோல்ஸ் (Master of Rolls) என்பவராலும், மற்றும் 11 மேல் முறையீட்டு நீதிபதிகளாலும் விசாரிக்கப்படுகின்றன.

தலைமை உயர் நீதிமன்றம்

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பிரபுக்கள் சபைதான் இறுதியான மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். அதுவே தலைமை உயர்

நீதிமன்றமும் ஆகும். பிரபுக்கள் சபை மேல் முறையீட்டு நீதிமன்றமாகச் செயல்படும் பொழுது, சாதாரண பிரபுக்கள் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். அதற்கென்றே சட்டப் பிரபுக்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சான்சலர் பிரபுவேயாவார். குறைந்தது மூன்று நீதிபதிகள் இருந்தால் இந்த நீதிமன்றம் விசாரணையைத் தொடங்கலாம். இந்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

கிரிமினல் நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் வழக்கு நீதிமன்றங்கள்

அமைதிகாண் நடுவர் நீதிமன்றங்கள்

சிறிய குற்றவியல் வழக்குகளை அமைதிகாண் நடுவர் நீதிமன்றங்கள் (Courts of the Justices of the Peace) விசாரிக்கின்றன. இத்தகைய நீதிமன்றங்கள் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்களின் கீழ் மட்டத்தில் உள்ள நீதிமன்றங்களாகும். இங்கிலாந்தில் ஏறத்தாழ 20,000 அமைதிகாண் நடுவர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 3,700 பேர்கள் பெண்களாவார்கள். இவர்களில் சிலர் மதிப்புறு நீதிபதிகளாகவும், சிலர் படிச் சலுகை பெறும் நீதிபதிகளாகவும் இருக்கிறார்கள். இவர்களை கவுன்டி தளகர்த்தர் பிரபுவின் (Lord Lieutenant of the County) சிபார்சின் பேரில் சான்சலர் பிரபு நியமிக்கின்றார், உள்ளூர் வட்டாரங்களில் செல்வாக்குமிக்கவர்களே இப் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். சிறிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கவும், குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்களைச் சிறை செய்யவும் இந் நீதிபதிகள் அதிகாரம் பெற்றுள்ளனர். ஆனால், பெரும்பாலான வழக்குகளில் இத்தகைய நீதிமன்றங்கள் ஆறு மாதத்திற்கும் அதிகமாகச் சிறைத் தண்டனை அளிக்க முடியாது.

மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் அல்லது குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

பெரிய நகரங்களில் சிறிய குற்றவியல் வழக்குகளை விசாரிக்க குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (Magistrate Courts) நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவுன்டியிலும் நியமிக்கப்பட்டிக்கும் நீதிமன்றத்தில் சிறிய குற்றவியல் வழக்குகளை விசாரிக்க கௌரவ குற்றவியல் நடுவர்கள் (Honorary Magistrates) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சில கவுன்டிகளில் முழுநேர குற்றவியல் நடுவர் (Magistrate) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சான்சலர்

பிரபுவின் சிபார்சின்பேரில், அரசியார் இந்த நீதிபதியை நியமனம் செய்வார். அவருக்கு நீதிபதிக்குத் தரப்படும் சம்பளமே கொடுக்கப்படும். முழுநேர குற்றவியல் நடுவருக்கு உதவி செய்ய, கௌரவ குற்றவியல் நடுவர்களும் நீதிமன்றத்தில் பணியாற்றுவர். இலண்டன் நகரிலும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (Magistrate Court) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந் நீதிமன்றத்தில் சம்பளம் பெறுகின்ற முழுநேர நீதிபதிகள் ஏறத்தாழ 36 பேர் அரசியாரால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இளம் குற்றவாளிகளின் வழக்குகளை விசாரணை செய்யப் பிரத்தியேக குற்றவியல் நடுவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

காலாண்டுப் பருவ நீதிமன்றங்கள்

அமைதிகாண் நடுவர் நீதிமன்றங்களின் வரம்புக்கு மேற்பட்ட குற்றவியல் வழக்குகளை விசாரிக்கவும், அமைதிகாண் நடுவர் நீதிமன்றங்களிலிருந்தும், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலிருந்தும் வரும் மேல் முறையீட்டுக் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கவும் காலாண்டுப் பருவ நீதிமன்றங்கள் (Quarter-Sessions) அமைக்கப்பட்டுள்ளன. இந் நீதிமன்றங்கள் வருடத்திற்கு நான்குமுறை ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் கூடும். இந் நீதிமன்றங்கள் வருடத்திற்கு நான்குமுறை மட்டும் கூடுவதனால் தான் இதற்கு இப் பெயர் வந்தது. இவை தனி நீதிமன்றங்களாகவே இயங்குகின்றன. இந் நீதிமன்றங்களில் முக்கியமான குற்றவியல் வழக்குகளை விசாரிக்கவும் எடுத்துக் கொள்கின்றனர், ஆனால், மரணதண்டனை அல்லது ஆயுட்கால தண்டனை அளிக்கக் கூடிய வழக்குகளில் இத்தகைய நீதிமன்றங்கள் எத்தகைய அதிகார வரம்பையும் பெற்றிருக்கவில்லை. ஒன்பது நீதிபதிகளுக்கு மேல் செல்லாமல், குறைந்தது இரண்டு நீதிபதிகள் இத்தகைய நீதிமன்றங்களில் வீற்றிருந்து வழக்குகளை விசாரிப்பர். இந்த நீதிமன்றங்களில் சான்ருயர்முறை (Jury System) பின்பற்றப்படுகின்றது. 1962ஆம் ஆண்டில் குற்றவியல் நீதிச் செயற்பாட்டுச் சட்டம் (The Criminal Justice Act) இயற்றப்பட்டதற்குப் பின்பு, இந்த நீதிமன்றங்கள் நல்லமுறையில் சீரமைக்கப்பட்டு உள்ளன. இங்குப் பணியாற்றும் நீதிபதிகள் நல்ல அனுபவம் பெற்ற வழக்கறிஞர்களாவார்கள். ஆனால், அவர்கள் முழுநேர நீதிபதிகளாகப் பணியாற்ற வேண்டியதில்லை. இலண்டனில் உள்ள ஐந்து நீதிமன்றங்களில் மட்டும் முழுநேரத் தலைமை நீதிபதியும், துணைத் தலைமை நீதிபதியும் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஆணையாளர் நீதிமன்றங்கள்

எல்லா கவுன்டிகளிலும். முக்கியமான நகரங்களிலும் வருடத்திற்கு மூன்றுமுறை மாவட்ட ஆணையாளர் நீதிமன்றங்கள் (Assize Courts) கூடுகின்றன. ஆனால், மான்செஸ்டர், லீட்ஸ், லிவர்ப்பூல் போன்ற நகரங்களில் இந் நீதிமன்றம் வருடத்திற்கு நான்கு தடவைகள் கூடுகின்றது. ஒவ்வொரு மாவட்ட ஆணையாளர் நீதிமன்றத்திற்கும் இரண்டு சுற்றுலா நீதிபதிகள் வந்திருந்து வழக்குகளை விசாரணை செய்வார்கள். இந் நீதிமன்றங்களில் அரசியாரின் நீதிமன்றத்தைச் (Queen's Bench Division) சார்ந்த நீதிபதிகள் தலைமை வகிப்பர். நிறைய வழக்குகள் இருந்தாலும், அல்லது நீதிபதிகளுக்கு உடல்நலம் குறைந்தாலும், தனி நீதிபதிகள் நியமனம் செய்யப்படுவார்கள். இந் நீதிமன்றங்கள் கடுங்குற்றங்களை விசாரிக்கும். கொள்ளை, தீவைப்பு, பணக்கையாடல், ஆள்கடத்தல், கொலை போன்ற குற்றவியல் வழக்குகள் இந் நீதிமன்றங்களின் முன் விசாரணைக்கு வருகின்றன. இங்கு சான்றுயர் (Jury) முறையோடு விசாரணை செய்யப்படும். 1956ஆம் ஆண்டின் குற்றவியல் நீதிச் செயற்பாட்டுச் சட்டத்தின்படி, லிவர்ப்பூலிலும், மான்செஸ்டரிலும் நிலைபெற்றிருக்கும் அரச நீதிமன்றங்கள் மாவட்ட ஆணையாளர் நீதிமன்றங்களாகச் செயல்படத் தொடங்கின.

குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றம்

காலாண்டுப் பருவ நீதிமன்றங்கள், மாவட்ட ஆணையாளர் நீதிமன்றங்கள் ஆகியவைகளின் குற்றத்தீர்ப்பை மேல் முறையீடு செய்யக் குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு (Court of Criminal Appeal) கொண்டு போகலாம். இந் நீதிமன்றம் 1907ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் அரசியார் நீதிமன்றப் பிரிவிலிருந்து குறைந்தது மூன்று நீதிபதிகளாவது இந் நீதிமன்றத்தில் அமருவார்கள். இந் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகளை சாதாரணமாகக் குறைந்தது மூன்று நீதிபதிகள் விசாரிப்பார்கள்.

பிரபுக்கள்சபை

குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து முறையீடுகளைப் பிரபுக்கள் சபைக்கு எடுத்துச் செல்லலாம். வழக்கறிஞர் தலைவர் (Attorney General) அங்ஙனம் மேல்முறையீடு செய்வதற்குத் தம் ஒப்புதலை அளிக்கவேண்டும். அநேகமாகக் குற்றவியல் வழக்குகளில் பிரபுக்கள் சபைக்கு மேல்முறையீடு செய்யும் வாய்ப்பு எப்போதோ சிலமுறைதான் அளிக்கப்படுகின்றது.

அதுவும் அத்தகைய வழக்கில் சில சட்டக் கருத்துக்கள் உள்ளடங்கியிருக்கின்றனவென்று வழக்கறிஞர் தலைவர் சான்று கூறினால்தான் மேலே முறையிடலாம்.

தண்டிக்கப்பட்ட குற்றவாளி அரசியாரின் மன்னிப்பை (pardon) நாடுவது கடைசி முயற்சியாகும். குடிமக்களுக்கிடையிலான தகராறுகளில் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் குறைக்கவோ, நாட்டிற்கு வெளியே தண்டனை பெறுபவர்களை மன்னிக்கவோ அரசியாருக்கு அதிகாரமில்லை. வழக்கமாக உள்துறைச் செயலாளரின் அறிவுரையை அரசியார் ஏற்கிறார்.

மற்ற நீதிமன்றங்கள்

இங்கிலாந்திலும், வேல்ஸிலும் இன்னும் பலவகை நீதிமன்றங்கள் இருக்கின்றன. இரண்டு அல்லது மூன்றுக்கு மேற்படாத நீதிபதிகளைக் கொண்ட இளங் குற்றவாளிகளுக்கான நீதிமன்றங்கள் (Juvenile Courts) இருக்கின்றன. இந் நீதிபதிகளுள் ஒருவர் பெண்ணாக இருக்கவேண்டும். இந் நீதிபதிகள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருப்பர். இந் நீதிமன்றங்கள் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கெதிரான வழக்குகளையும் 17 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கெதிரான வழக்குகளையும் விசாரிக்கின்றன. விசாரணை சாதாரணமாக வழக்கு விசாரிக்கப்படும் மன்றத்திலல்லாது தனிப்பட்ட அறைகளிலேயே நடைபெறும். குற்றம் செய்யும் சிறுவர்களைத் திருத்தவேண்டுமென்பதே இந் நீதிமன்றங்களின் குறிக்கோளாகும். சூழ்நிலையின் காரணமாகவே சிறுவர்கள் குற்றமிழைக்கிறார்களாதலால் அவர்களுக்கு நல்ல சூழ்நிலையும் சில சமயங்களில் கல்வியும் அல்லது தொழிற்பயிற்சியும் தரப்படுகின்றன. இளைஞர்களைத் திருத்தி வழிக்குக் கொண்டுவரப் பலவகையான உளவியல் முறைகளும் இங்கிலாந்தில் கையாளப்பட்டு வருகின்றன.

பிண ஆய்வாளர்கள் நீதிமன்றங்களும் (Coronor's Court) அங்கு நிறுவப்பட்டுள்ளன. பிண ஆய்வாளர் நீதிமன்றத்திற்குக் கொரோனர் என்னும் பிண ஆய்வாளர் தலைமை தாங்குகிறார். பிண ஆய்வாளர்களைக் கவுன்டி கவுன்சில்கள் நியமிக்கின்றன. ஆனால், அவர்களை சான்சலர் பிரபுவால்தான் பதவியிலிருந்து நீக்க முடியும். இத்தகைய பிண ஆய்வாளர்கள் வழக்கறிஞர்களாகவோ அல்லது மருத்துவர்களாகவோ ஐந்தாண்டுகளாவது இருந்திருக்கவேண்டும். எதிர்பாராத மரணங்கள் ஏற்பட்டால், அவைகளைப்பற்றி இந் நீதிமன்றங்கள் விசாரணை செய்யும்.

7-ல் இருந்து 11 சான்ருேயர்களின் (Jury) துணை கொண்டு பிணை ஆய்வாளர் தீர்ப்புக் கூறவேண்டும்.

நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சட்டத்தின் மூலங்கள்

இங்கிலாந்தில் நீதிமன்றங்களின் வளர்ச்சி ஏற்பட்டபொழுது, அதற்குத் தகுந்த சட்டமும் உருவாக்கப்பட்டது. அங்ஙனம் ஆங்கிலேயச் சட்டம் உருவாக்கப்படுவதற்குப் பொதுச் சட்டமும், வழக்குச் சட்டமும் இயற்கை ஒப்புரவு விதிகளும், பாராளுமன்றச் சட்டங்களும் மூலங்களாக அமைந்தன.

பொதுச் சட்டம் (Common Law)

பரம்பரை பரம்பரையாக ஆங்கில மக்கள் சில மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றி வந்தனர். இங்கிலாந்தில் இத்தகைய பரம்பரை மரபுகளும், பழக்க வழக்கங்களும் எழுதி வைக்கப்படவில்லை. மரபுகளும், பழக்க வழக்கங்களும் எத்தகைய சட்ட நூலிலும் எழுதி வைக்கப்படவில்லையெனினும், ஆங்கில மக்கள் அவைகளை மதித்துப் பின்பற்றி வந்தனர். மக்கள் இத்தகைய மரபுகளை மதிக்கின்றபொழுது நீதிமன்றங்களும் அவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் தீர்ப்புகளை அளித்து வந்தன. இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் பழக்கத்தில் இருந்து வந்த இந்தச் சட்டங்களை ஒரே மாதிரியாகத் தொகுத்து நாடு முழுவதுக்கும் பயன்படுத்த வேண்டுமென்று இரண்டாம் ஹென்றி அரசர் விரும்பினர். அதனுல் பொதுச் சட்டம் தொகுக்கப் பட்டது. தொகுக்கப்பட்ட அந்தப் பொதுச் சட்டத்தின் அடிப் படையில் நீதிபதிகள் தீர்ப்புக் கூறிவந்தனர். அத்தகைய நீதிபதி களின் தீர்ப்புகளும் பொதுச் சட்டம் வளர்ச்சியுற உதவி செய்தன. இங்கிலாந்தில் இப்பொழுது பொதுச் சட்டம் கிளான்வில், பிளாக்ஸ்டோன் முதலியோர் எழுதிய சட்டநூல்களிலும், பரம்பரை பரம்பரையாக நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகளிலும் காணப்படுகின்றது.

வழக்குச் சட்டம் (Case Law)

உயர் நீதிமன்றங்களில் வழங்கப்பெற்ற தீர்ப்புகள், நாளடைவில் அதே மாதிரியான வழக்குகளை விசாரணை செய்யப்படுகின்ற பொழுது அடிப்படைச் சான்றுகளாக விளங்குகின்றன. அத்தகைய தீர்ப்புகள் சட்டத்தின் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. அத் தகைய தீர்ப்புகள் புதிய சூழ்நிலைக்கும், புதிய மாறுதல்களுக்கும்

ஏற்றவாறு அமையாமல் போவதும் உண்மையே. அதனால்தான் அறிஞர் பலர் பழைய தீர்ப்புகளையே அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளிக்காமல், புதிய மாற்றங்களுக்கு ஏற்றவாறு சட்டத்தைப் பயன்படுத்தித் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கூறுகின்றனர்.

இயற்கைநியதிகள் (Rules of Equity)

நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்படாத வழக்குகள் வரும் போதும், பொதுச் சட்டத்தைப் பயன்படுத்தி உண்மையான நீதி வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போதும் சான்சலர் பிரபுவும் மன்றச் சட்டப் பிரபுக்களும் பொது அறிவையும், இயற்கை நியதியையும் பயன்படுத்தித் தீர்ப்புக் கூறுகின்றனர். அத்தகைய தீர்ப்புகளை மற்ற நீதிமன்றங்கள் அடிப்படைச் சான்றுகளாக எடுத்துக் கொள்கின்றன. அவ்விதம் இயற்கை நியதியின் அடிப்படையில் சில சட்ட விதிமுறைகள் வளர்ச்சியடைந்துள்ளன.

பாராளுமன்றச் சட்டங்கள் (Statutes)

சில வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்குப் பொதுச் சட்டமும், இயற்கை நியதிச் சட்டமும் பொருந்தாமல் போய்விட்டால், புதிய சட்டங்களை உருவாக்க வேண்டியுள்ளது. அத்தகைய புதிய சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றும், அத்தகைய பாராளு மன்றச் சட்டங்கள் மற்ற எல்லாச் சட்டங்களைக் காட்டிலும் முடிவானதாகும். இங்கிலாந்தில் பாராளுமன்றம்தான் இறைமை பெற்றதாகும். அத்தகைய இறைமை பெற்ற பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களைச் செல்லாது என்று கூறஇங்கிலாந்தில் எந்த ஒரு அமைப்புக்கும் அதிகாரம் கிடையாது. அச் சட்டங்களை நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் பின்பற்றவேண்டும். அச் சட்டங்களின் அடிப்படையில்தான் நீதிபதிகளும் வழக்குகளில் தீர்ப்பளிக்க வேண்டும். அச் சட்டங்களே நாட்டில் தலையாய சட்டங்களாகும்.

சட்டத்தின் ஆட்சி (Rule of Law)

பிறப்பாலும், பதவியாலும், மொழியாலும், பணத்தாலும், மதத்தாலும் மக்களிடையே வேறுபாடு காட்டாமல், செய்த குற்றத் திற்குச் சட்டத்தின்படி தண்டனை விதிக்கும் ஆட்சியே சட்டத் தின் ஆட்சியாகும். அத்தகைய சட்டமே இறைமை பெற்றதும் ஆகும்.

ஆங்கில நாட்டின் அரசியல் அமைப்பின் அடிப்படையே சட்டத்தின் ஆட்சித் தத்துவமாகும். ஆங்கில நாட்டு அரசியல்

அமைப்பு எழுதப்படாத வொன்ருகையால், இத் தத்துவம் அதில் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. பண்டைய நாட்களில் இங்கிலாந்தில் அரசர்களிடமே எல்லா அதிகாரங்களும் குவிக்கப் பட்டிருந்தன. அவர்கள் பொதுவான சட்டத்தைப் புறக்கணித்து தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்துவந்தனர். தங்கள் மனம் போனபடி நீதி வழங்கி வந்தனர். மக்களின் உரிமைகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆகவே அங்குத் தனி மனிதனின் எதேச் சாதிகார ஆட்சி நடைபெற்று வந்தது. 1215ஆம் ஆண்டில் ஜான் என்பவருக்கும் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட போரில் அரசர் தோற்கடிக்கப்பட்டு, ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டார். அதுவே பேருரிமைப் பட்டயம் (Magna Carta) என்று அழைக்கப் படுகின்றது. அவ் வொப்பந்தத்தின்படி சட்டத்திற்குப் புறம்பாக எதேச்சாதிகாரமாக யாரையும் கைது செய்யக்கூடாது என்று அரசரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. 1628ஆம் ஆண்டில் உரிமைகள் விண்ணப்பத்தில் (Petition of Rights) அரசர் கையெழுத்திட்டு மக்களின் உரிமைகளை ஒப்புக் கொண்டார்; 1679ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளுமன்றம் ஆட்கொணர் ஆணைச் சட்டத்தை (Habeas Corpus Act) இயற்றியது. நாளடைவில் பாராளுமன்றம் அரசர்களின் அதிகாரங்களையெல்லாம் வரையறுத்து, மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இவை போன்ற அரசியல் அமைப்பு நிகழ்ச்சிகள் இங்கிலாந்தில் தனிமனிதன் ஆட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு பெற்றன. இந்தச் சட்டத்தின் ஆட்சியினுல் மக்கள் தங்களை அரசாங்கத்தின் கொடுமைகளி லிருந்து பாதுகாத்துக் கொள்வது மட்டுமின்றி, மற்றவர்களின் தொல்லைகள், கொடுமைகள் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வழி ஏற்படுகிறது. எந்தவிதப் பாகுபாடுமின்றிச் ‘சட்டத்தின்முன் எல்லோரும் சமம்’ என்ற மக்களாட்சிக் கருத்துத் தான் சட்டத்தின் ஆட்சி தத்துவத்தின் அடிப்படை யாகும்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஏ. வி. டைசி (A. V. Dicey) என்பவர் சட்டத்தின் ஆட்சியைப்பற்றிக் கூறும் பொழுது ‘ஆங்கில அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்தே சட்டத்தின் ஆட்சி அல்லது சட்டத்தின் இறைமையாகும்’ என்று கூறுகின்ருர். மேலும் அவர் சட்டத்தின் ஆட்சியை மூன்று வகையாகப் பிரிக்கின்ருர்.

I. ‘நாட்டின் ஆதார பூர்வமான சட்டத்தை ஒருவன் மீறுகின்றபொழுது, அவனைச் சட்டபூர்வமாக அமைக்கப் பெற்ற

நீதிமன்றங்கள்தான் விசாரணை செய்து தண்டிக்க வேண்டுமே யன்றி, வேறு எவராலும் எவ்வாற்றாலேனும் அவன் தண்டிக்கப் படவோ, கொடுமைப் படுத்தப்படவோ அல்லது பொருளை இழக்கவோ கூடாது.' டைசியின் இக் கூற்றுப்படி ஒருவனைத் தண்டிக்க மூன்று நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும். (1) ஒருவன் சட்டத்தை மீறியிருக்க வேண்டும். (2) அந்தக் குற்றச்சாட்டு சட்டப்படி நிரூபிக்கப்பட வேண்டும். (3) நாட்டிலுள்ள சாதாரண நீதிமன்றங்களில் அவனுடைய குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு உறுதிப்படுத்தப் படவேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளும் ஒரே காலத்தில் நிறைவேற வேண்டும்.

II. எந்தவித வேறுபாடுமின்றிஎல்லாக் குடிமக்களும் நாட்டின் சாதாரணச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவரே யாவர். அத்துடன் அவர்கள் சாதாரண நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டவரே யாவர்.' டைசியின் இக் கூற்றுப்படி இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன. (1) எந்தப் பதவி வகித்தாலும் அல்லது எந்த நிலையிலிருந்தாலும் மக்கள் அனைவரும் சட்டத்தின்முன் சமமானவர்களே. (2) மக்கள் அனைவரும் ஒரே விதமான சட்டத்தின் பிடிக்கு உட்பட்டவர்களே யாவர். ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி, பிரதம அமைச்சர், என்ற எந்தவொரு பாகுபாடு மின்றி எல்லோரும் சட்டத்தின்முன் சமமானவர்களே. ஒரே மாதிரியான குற்றத்திற்காக எல்லோரும் பாகுபாடின்றி ஒரே மாதிரியாகவே தண்டிக்கப்படுவர்.

III. 'நீதிமன்றங்களில் மக்கள் உரிமைகளை நிர்ணயம் செய்தும், விளக்கம் கூறியும், அவற்றைப் பாதுகாக்கும் சட்டத்தைத்தான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலமாகக் கருத வேண்டுமே தவிர, மற்ற நாடுகளில் உள்ளதுபோல் ஏற்கனவே எழுதப்பட்ட சட்டத்தை அரசியல் அமைப்பின் மூலம் என்று கருதக் கூடாது' என்று டைசி கூறுகின்றார். இங்கிலாந்தில் அரசியலமைப்பின்படி மக்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதில்லை. நீதிமன்ற முடிவுகளால்தான் அவர்கள் தங்களின் உரிமைகளைப் பெறுகின்றனர்.

'சட்டத்தின் ஆட்சி இங்கிலாந்தில் இருப்பதால் தான் மக்கள் தங்கள் உரிமைகளைத் தடையின்றி அனுபவிக்கின்றனர்' என்று டைசி கூறுகின்றார். அவர் சட்டத்தின் ஆட்சியைப் பெரிதும் விரும்புபவர். ஆனால், இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சித் தத்துவத்தை மீறக்கூடிய செயல்களும் நடைபெறுகின்றன. அந்தச் சட்டத்தின் ஆட்சி மீறல்களை (Violations) டைசியும்

ஒப்புக் கொள்கின்றார். அத்தகைய சட்டத்தின் ஆட்சி மீறல் களாவன :

1. சட்டத்தின் ஆட்சி தத்துவத்திற்கு அரசியார் கட்டுப் பட்டவரல்ல. அவர் சட்டத்திற்கும் மேம்பட்டவர். அவர் குற்றவியல், பொதுவியல் நடவடிக்கைகளி னின்றும் காப்புறுதி பெற்றவர் (Immune).

2. தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற அரசாங்க அதிகாரிகள் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளி னின்றும் காப்புறுதி (Immune) பெற்றுள்ளனர்.

3. அரசாங்க அதிகாரிகள் தவறு செய்தாலோ, தங்கள் கடமைகளிலிருந்து தவறினாலோ அல்லது அதிகார வரம்பிற்குமேல் செயல்பட்டாலோ ஆறு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆறு மாதங்கள் கழிந்த பிறகு அவர்களின்மீது நடவடிக்கை எடுக்க முடியாது.

4. நீதிபதிகள் தங்களின் அதிகாரச் செயல்களுக்காகச் சொந்தப் பொறுப்புள்ளவர்களாக ஆக்குவதிலிருந்து காப்புறுதி பெறுகின்றனர்.

5. தூதுவர்கள் அந்நாட்டுச் சட்டத்தினின்று காப்புறுதி பெறுகின்றனர்.

6. பயண இசைவுச் சீட்டை (Passport) அரசு கொடுக்க மறுத்தால், அதை எதிர்த்து யாரும் நீதிமன்றத்தில் வழக்காட முடியாது.

7. வெளிநாட்டினர்மீது உள்துறை அமைச்சர் நட வடிக்கை எடுத்தாலும், வெளிநாட்டினருக்குக் குடி யுரிமை வழங்க மறுத்தாலும், அதை எதிர்த்து நீதிமன் றத்தில் வழக்காட முடியாது.

8. நெருக்கடி (Emergency) காலத்தில் சட்டத்தின் ஆட்சி செயல்படாது.

9. சட்டத்தின் ஆட்சி தத்துவத்தின் முக்கிய எதிரி கொடுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் (Delegated Legislation) ஆகும்.

10. அமைச்சரவையில் பிறப்பிக்கப்படும் ஆணைகளை (Orders in-Council) எதிர்த்து வழக்காட முடியாது.

ஆகவே, சட்டத்தின் ஆட்சி பற்றிய டைசியின் கூற்றைப் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் டைசியின் கருத்துகள் பெரும்பாலும் அவர் வாழ்ந்த காலத்திலிருந்த சூழ்நிலையைப் பொறுத்தே உருவாக்கப்பட்டுள்ளன. அதனால்தான் தனி மனிதனின் உரிமைகளுக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார். தனிப்பட்டவர்களின் உரிமைகளில் அரசாங்கம் தலையிடக் கூடாதென்பது அவருடைய முக்கிய கருத்தாகும். ஆனால் இப்பொழுது அரசாங்கம் பல புதிய சமூக, அரசியல், பொருளாதாரக் கோட்பாடுகளுக்காகத் தனியார் உரிமைகளில் தலையிட வேண்டியுள்ளது. சமுதாயத்தின் நலன்களையும் அரசாங்கம் பாதுகாக்க வேண்டியுள்ளது. அதற்காக நடவடிக்கைகள் எடுக்கும்பொழுது ஒரு சிலர் தங்களது உரிமைகளை இழக்க நேரிடும், அதைப்பற்றி ஒரு பொதுநல அரசாங்கம் கவலைப்பட்டால், அவ்வரசாங்கம் தன் கொள்கைகளையே நிறைவேற்ற முடியாது.

32. உள்ளாட்சித் துறை

இங்கிலாந்து ஓர் ஒற்றையாட்சி (Unitary Government) நாடாகும். கூட்டாட்சி நாடுகளில் (Federal Governments) உள்ளதைப் போன்று, அங்கு மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பங்கீடு (Division of Powers) என்பது கிடையாது. அத்துடன் இங்கிலாந்தில் மத்திய அரசாங்கத்திற்கும் தல ஆட்சி நிறுவனங்களுக்குமிடையேயும் கூட அதிகாரப் பங்கீடு கிடையாது. அங்கு மத்திய அரசாங்கம் (Central Government) தான் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் பெற்றுத் திகழ்கின்றது. நிர்வாக வசதிக்காக இங்கிலாந்து பல பிரிவுகளாகப் (Units) பிரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கம் விரும்பினுல் அத்தகைய பிரிவுகளையும் அழித்துவிடலாம். இப் பிரிவுகளுக்கு மத்திய அரசாங்கம் விரும்பிதான் சில அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசாங்கம் நினைத்தால் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம். அல்லது மேலும் சில அதிகாரங்களைக்கூட அப் பிரிவுகளுக்குக் கொடுக்கலாம். அத்தகைய பிரிவுகள் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டுதான் செயல்பட வேண்டும். இங்கிலாந்திலுள்ள மத்திய அரசாங்கத்திற்கும் தல ஆட்சி மன்றங்களுக்கும் (Local Government) இடையே உள்ள உறவு ஒருமுகமானதாகும். மத்திய அரசாங்கம் எத்தகைய வகையான தல ஆட்சி மன்றத்தையும் ஏற்படுத்தலாம். அல்லது நிறுவப்பட்ட எந்தவொரு தல ஆட்சி மன்றத்தையும் அழித்துவிடலாம். தல ஆட்சி மன்றங்களின் அமைப்புகளையும், அதன் அதிகாரங்களையும், அதன் வரம்புகளையும் இங்கிலாந்தில் மத்திய அரசாங்கம் தான் நிர்ணயம் செய்கின்றது. மத்திய அரசாங்கம் நிர்ணயித்த அதிகார வரம்பிற்குள்தான் அந் நாட்டிலுள்ள தல ஆட்சி மன்றங்கள் செயல்படவேண்டும்.

இங்கிலாந்தில் தலையாய அதிகாரத்தைப் பெற்று விளங்கும் பாராளுமன்றத்திடமிருந்துதான் தலஆட்சி மன்றங்கள் தங்களுடைய பெரும்பான்மையான அதிகாரங்களைப் பெறுகின்றன. தலஆட்சி மன்றங்களின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் பற்றி அவ்வப்போது பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுகின்றது. உதாரணமாகப் பாராளுமன்றம் 1835ஆம் ஆண்டில் நகராட்சிச்

சட்டத்தையும் (The Municipal Corporation Act), 1888ஆம் ஆண்டில் தல ஆட்சிச் சட்டத்தையும் (Local Government Act) இயற்றியது. அடுத்து தல ஆட்சி நிறுவனங்கள் பொதுச் சட்டத்தின் (Common Law) மூலமாகவும் சில அதிகாரங்களைப் பெறுகின்றன. பொதுச் சட்டம் என்பது பாராளுமன்றத்தில் இயற்றப்படாதவொன்றாயினும், நீதிமன்றங்கள் அத்தகைய சட்டத்திற்கு நிர்ணயம் கொடுக்கின்றன. உதாரணமாக ஒரு தல ஆட்சி நிறுவனம், போக்குவரத்துச் சட்டத்தை மீறிய காரணத்திற்காக ஒருவருக்குத் தண்டம் விதிக்கலாம். அதற்கடுத்து, தல ஆட்சி நிறுவனங்கள் மத்திய அரசாங்கத்துறையிடமிருந்தும் சில அதிகாரங்களைப் பெறுகின்றன. அவ் வதிகாரங்களைக் கொண்டு தல ஆட்சி நிறுவனங்கள் சில பணிகளை மேற்கொள்கின்றன. உதாரணமாக மின்சார உற்பத்திநிலையத்தை யமைக்க மத்திய அரசாங்கத்துறை தல ஆட்சி நிறுவனத்திற்கு இசைவளித்தால், அந் நிலையத்தை யமைக்க தல ஆட்சி நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்யும். அடுத்து நீதிமன்றங்களின் சட்டவிளக்கத்தாலும் தல ஆட்சி மன்றங்களுக்குச் சில அதிகாரங்கள் கிடைக்கின்றன. தல ஆட்சிச் சட்டம் தகராறிலிருக்கும்போது, நீதிமன்றம் அத்தகைய பிரிவுக்கோ, சொல்லுக்கோ விளக்கம் தரும். நீதிமன்றத்தின் அவ் விளக்கம் தல ஆட்சி மன்றங்களுக்குச் சாதகமாய் இருப்பின் அதனால் தல ஆட்சி மன்றங்களின் அதிகாரங்கள் கூடுகின்றன. இத்தகைய முறைகளிலே தல ஆட்சி மன்றங்கள் இங்கிலாந்தில் தங்களின் அதிகாரங்களைப் பெறுகின்றன.

உள்ளாட்சித்துறையின் வளர்ச்சி

இங்கிலாந்தில் உள்ளாட்சித் துறையின் வளர்ச்சி, கால வளர்ச்சியால் ஏற்பட்டதாகும். இங்கிலாந்தை சாக்ஸன் (Saxon) பரம்பரையினர் ஆட்சி செய்தபொழுது, அந் நாட்டைப் பல ஷயர்களாகவும் (Shires), ஹன்ட்ரட்சுகளாகவும் (Hundreds), டவுன்ஷிப்புகளாகவும் (Townships), பரோக்களாகவும் (Boroughs) பிரித்திருந்தனர். நார்மானிய அரசர்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றியபின்பு, இத்தகைய அமைப்புகளை மாற்றியமைத்தனர். சாக்ஸன் காலத்திலிருந்த ஷயர்கள் கவுன்டிகளாக (Counties) மாற்றப்பட்டன, ஹன்ட்ரட்கள் அழிக்கப்பட்டன. பரோக்கள் அங்ஙனமே வைத்துக்கொள்ளப்பட்டன. டவுன்ஷிப்புகள் மேனர்களாக (Manors) மாற்றப்பட்டுப் பின்பு பேரிஷ்கள் (Parishes) என்று திருத்தியமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இத்தகைய பேரிஷ்கள் திருச்சபையின் தடவடிக்கைகளையே கவனித்து

வந்தன. சிறுகச்சிறுக அவைகள் மக்களின் நல்வாழ்வுப் பணிகளையும் செய்ய ஆரம்பித்து முடிவில் அவைகள் தல ஆட்சி நிறுவனங்களாகவும் மாறிவிட்டன.

இடைக்காலத்தின் இறுதியில் இங்கிலாந்தில் மூன்றுவிதமான தல ஆட்சி மன்றங்கள்தான் இருந்தன. அவைகள் கவுன்டிகள், பரோக்கள், பேரிஷ்கள் என்பவைகளாகும். கவுன்டிகளை அமைதி காண்நடுவர்கள் (Justices of Peace) நிர்வகித்து வந்தனர். அவர்கள் கவுன்டிகளில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி வந்ததோடு பாதைகள், பாலங்கள் முதலியவைகளை ஏற்படுத்துதல், அவைகளைப் பராமரித்தல் முதலிய பணிகளையும் செய்து வந்தனர். பரோக்கள் நகரமக்களின் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு செய்துவந்தன. பரோக்கள் கவுன்சில்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு கவுன்சிலிலும் மேயர் (Mayor), நகரமுதுவர் (Alderman), பல கவுன்சிலர்கள் (Councillors) இடம் பெற்றுவந்தனர். பேரிஷ்கள் என்ற அமைப்புகள் கிராமப்புறங்களில் இருந்தன. அவைகள் தெருக்களை ஏற்படுத்துதல், அவைகளைச் செப்பனிடுதல் முதலிய பணிகளைச் செய்துவந்தன. இத்தகைய உள்ளாட்சித் துறைகள்தான் டியூடர்கள், ஸ்டுவர்ட்டுகள், ஹனோவரிகள் போன்ற பரம்பரை அரசர்களின் காலத்திலும் செயல்பட்டு வந்தன.

இத்தகைய உள்ளாட்சித்துறைமுறை 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை செயல்பட்டு வந்தது. தொழிற்புரட்சியின் காரணமாக இங்கிலாந்தின் அமைப்பே மாற்றப்பட்டது, குறுகிய காலத்தில், பல தொழில் நகரங்கள் ஏற்பட்டன. அந் நகரங்களுக்கு மக்கள் ஏராளமாக வந்து குடியேறத் தொடங்கியதால் அந் நகரங்களில் மக்கள்தொகை அதிகரித்தது. ஆகவே, அந் நகரங்களிலெல்லாம் நல்ல சாலை வசதிகளும், சுகாதார வசதிகளும், மற்றும் பலவும் தேவைப்பட்டன. இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் சில சிறப்பு மாவட்டங்கள் (Special Districts) ஏற்படுத்தப்பட்டன. பின்பு தேவைகளுக்கேற்ப இத்தகைய மாவட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்தன. உள்ளாட்சித் துறைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே, அவைகளிடையே அதிகார வரம்பு பற்றிய பிரச்சினைகள் எழுந்து குழப்பம் விளைவித்தன. ஒரு நேரத்தில் இங்கிலாந்தில் 27,000 உள்ளாட்சி நிறுவனங்கள் இருந்ததாகவும், அவைகள் 18 வகையான வரிகளை மக்களிடம் வசூலித்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்தகைய குறைகளைக் கொண்டிருந்த உள்ளாட்சித்துறை நிறுவனங்களை ஒரேயடியாகக் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம்


வரை திருத்தியமைத்து, அவைகளின் அதிகார வரம்பை நிர்ணயம் செய்யப் பாராளுமன்றம் விரும்பாமல், மிக எச்சரிக்கையாக, சிறுகச்சிறுக, சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தது. உள்ளாட்சித் துறை நிறுவனங்களின் பிரச்சினைகளையெல்லாம் ஆராய்ந்து அறிந்தபின்பு பாராளுமன்றம் 1835ஆம் ஆண்டில் நகராட்சிச் சட்டத்தை (The Municipal Corporation Act) இயற்றியது. இச் சட்டம் பரோக்களின் அமைப்புக்களைப் பற்றியும், பணிகளைப் பற்றியும் நிர்ணயம் செய்தது. அதன் பிறகு 1888ஆம் ஆண்டில் தல ஆட்சிச் சட்டத்தையும் (Local Government Act) பாராளுமன்றம் இயற்றியது. இச் சட்டத்தால் கவுன்டிகளின் அமைதி காண் நடுவர்களிடமிருந்து அதிகாரங்கள் கவுன்டிகளின் கவுன்சில்களுக்கு மாற்றப்பட்டன. அதனால் கவுன்டிகளின் அமைப்புகளும், அதிகாரங்களும் திருத்தியமைக்கப்பட்டன. 1894ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மாவட்ட பேரிஷ் கவுன்சில்கள் சட்டத்தால் (The District of Parish Councils Act) சிறப்பு மாவட்டங்கள் (Special Districts) அழிக்கப்பட்டன. அத்துடன் மாவட்டங்கள் அனைத்தும் நகர மாவட்டங்கள் (Urban Districts). நாட்டுப்புற மாவட்டங்கள் (Rural Districts) என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அதன்பிறகும் தல ஆட்சித்துறைகளிலுள்ள குறைகளை நீக்க 1933ஆம் ஆண்டில் தல ஆட்சிச் சட்டம் (Local Government Act) ஒன்றும் இயற்றப்பட்டது. இச் சட்டத்தால் எல்லா வகையான தல ஆட்சி நிறுவனங்களின் அமைப்புகளும், அதிகாரங்களும், பணிகளும் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டன. ஆகவே, இச் சட்டமே எல்லாத் தல ஆட்சி நிறுவனங்களின் அமைப்புகள், அதிகாரங்கள் பணிகள் ஆகியவைகளைப்பற்றி ஒருங்கே அமையப்பெற்ற ஒரு விரிவான தல ஆட்சிச் சட்டமெனக் கருதப்படுகின்றது.

இப்போதைய அமைப்பு

பல சீர்திருத்தங்களுக்குப் பின்பு இங்கிலாந்தில் இப்பொழுதுள்ள ஆட்சித்துறை அமைப்புகள் ஆறுவகையாக அமைந்திருக்கின்றன, அவைகளாவன:

1. கவுன்டிகள் (Counties)
2. கவுன்டி பரோக்கள் (County Boroughs)
3. பரோக்கள் (Boroughs)
4. நகர மாவட்டங்கள் (Urban Districts)
5. நாட்டுப்புற மாவட்டங்கள் (Rural Districts)
6. பேரிஷ்கள் (Parishes)


இங்கிலாந்தும் வேல்ஸும்



இங்கிலாந்தும் வேல்ஸும் 1965ஆம் ஆண்டிற்குப் பிறகு 58 கவுன்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவுன்டியும் கவுன்டி பரோக்களாகவும், பரோக்களாகவும், நகர மாவட்டங் களாகவும், நாட்டுப்புற மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டுப்புற மாவட்டமும் பல பேரிஷ்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இலண்டன் இங்கிலாந்தின் தலைநகரமாக இருப்ப தாலும், அங்கு ஏறக்குறைய 80 இலட்சம் மக்கள் வாழ்வதாலும் அங்குத் தனிப்பட்ட உள்ளாட்சி அரசாங்கம் அமைக்கப் பட்டுள்ளது.

கவுன்டிகள்

இங்கிலாந்திலுள்ள கவுன்டி



படம் 2

இங்கிலாந்தில் இரண்டு வகையான கவுன்டிகள் இருக்கின்றன. அவைகள் வரலாற்றுக் கவுன்டிகள் (Historic Counties), நிர்வாகக் கவுன்டிகள் (Administrative Counties) எனப்படும். இங்கிலாந்து முழுவதும் 52 வரலாற்றுக் கவுன்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் சாக்ஸன் காலத்திய ஷயர்களின் (Shires) வழித் தோன்றலாகும். 1888ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய கவுன்டி களுக்கு தல ஆட்சி அதிகாரங்கள் கிடையாது. அத்துடன் அக் கவுன்டிகளில் கவுன்டி கவுன்சில்களோ அல்லது நிர்வாகக் குழுக் களோ கிடையாது. ஆகவே வரலாற்றுக் கவுன்டிகளைத் தல ஆட்சி நிறுவனங்களைச் சார்ந்ததாகக் கருதமுடியாது. எனவே, இவைகளைப்பற்றி ஆராயும் அவசியம் தேவையில்லை.

அடுத்து நிர்வாகக் கவுன்டிகள் எனப்படுபவை தல ஆட்சி நிறுவனங்களின் பிரிவுகளாகும். இத்தகைய நிர்வாகக் கவுன்டிகள் 1888ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டத் தால் உருவாக்கப்பட்டவைகளாகும். இவைகள் சாதாரணமாகக்

கவுன்டிகள் என்றே அழைக்கப்படுகின்றன. 1965ஆம் ஆண்டிற்குப்பிறகு இங்கிலாந்து முழுவதும் 58 கவுன்டிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவுன்டியிலும் நிர்வாகத்தை மேற்கொள்ள ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் உள்ளது. 1888ஆம் ஆண்டு சட்டத்தால் கவுன்டியின் நிர்வாக அதிகாரம் காலாண்டுப் பருவ மேல்வழக்கு மன்றத்திடமிருந்து (Quarter-Sessions) இத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலுக்கு மாற்றப்பட்டது.

கவுன்டி கவுன்சில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாகும். அதில் கவுன்சிலர்களும் (உறுப்பினர்கள்) நகர முதுவர்களும் (Aldermen), தலைவரும் (Chairman) இடம் பெறுகின்றனர். அவர்கள் அனைவரும் அக் கவுன்டியின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கவுன்டியும் பல அமைவுகளாகப் (Wards) பிரிக்கப்பட்டிருக்கும். (கவுன்டி பரோவைத் தவிர, ஏனெனில் கவுன்டியிலுள்ள, ஒவ்வொரு கவுன்டிபரோவும் சுய அதிகாரம் பெற்றதாகும். அவைகளுக்கென்று தனித்தனி கவுன்சில்கள் உள்ளன.) கவுன்டியின் ஒவ்வொரு அமைவிலிருந்தும் ஒவ்வொரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆகவே, ஒவ்வொரு அமைவும் ஒற்றை உறுப்பினர் தொகுதியாகும். ஒவ்வொரு அமைவிலுமுள்ள 18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலாரும் வாக்களிக்கலாம். கவுன்டி கவுன்சிலின் எல்லா உறுப்பினர்களும் 3 ஆண்டு பதவி காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர், கவுன்டிகளின் மக்கள் தொகைக்குத் தகுந்தவாறு கவுன்டிகளின் உறுப்பினர் எண்ணிக்கை இருக்கும். அதற்கடுத்த நகர முதுவர்கள் (Aldermen) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ, அவர்களின் எண்ணிக்கையில் நகர முதுவர்கள் ⅓ பங்கு இருக்கவேண்டும். உதாரணமாக 90 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் என்றால் 30 நகர முதுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களால் இத்தகைய நகரமுதுவர்கள் 6 ஆண்டு பதவிகாலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சாதாரணமாகக் கவுன்சிலர்களாலேயே நகரமுதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்றாண்டுக்கு ஒருமுறை பாதியளவு நகரமுதுவர்கள் பதவியிழப்பார்கள், ஆகவே, மூன்றாண்டுக்கு ஒருமுறை பாதியளவு நகர முதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களும், நகர முதுவர்களும் சேர்ந்து ஒரு தலைவரை ஓராண்டு பதவி காலத்திற்குத் தேர்ந்தெடுப்பார்கள். கவுன்சில் உறுப்பினர்களில் ஒருவரோ அல்லது வெளியிலிருந்து ஒருவரோ தலைவராகத் தேர்ந்

தெடுக்கப்படுவார். கவுன்சில் உறுப்பினர் ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் தமது கவுன்சில் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டியதில்லை. தலைவர் கவுன்டி கவுன்சில் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து நடத்துவார். ஒவ்வொரு கவுன்டி கவுன்சிலும் சட்டப்படி ஒரு வருடாந்திர கூட்டத்தையும் குறைந்தது மூன்று சாதாரண கூட்டங்களையும் நடத்தவேண்டும். அக் கூட்டங்களுக்கு கவுன்சில் தலைவர் தலைமை தாங்கிய போதிலும் அவர் கவுன்டிக்குத் தலைமை நிர்வாகி (Chief Excutive) அல்ல. கவுன்டி கவுன்சில் கவுன்டியின் சட்ட மியற்றும் அமைப்பாகவும் நிர்வாக அமைப்பாகவும் பணி யாற்றுகின்றது.

கவுன்டி கவுன்சில் பல தேவைகளுக்காகப் பல குழுக்களை நியமிக்கின்றது. அக் குழுக்களுக்குக் வுகன்சில் தன் அதிகாரங்களைச் சில கட்டுப்பாடுகளுடன் அல்லது எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல் பகிர்ந்து அளிக்கலாம். இரண்டு வகையான குழுக்களை கவுன்சில் நியமிக்கின்றது. ஒன்று சாதாரண குழுக்கள்; மற்றொரு வகை இணைக் குழுக்கள் (Joint Committee) ஆகும். பாராளுமன்றச் சட்டப்படி கட்டாயமாக சாதாரண குழுக்கள் (Ordinary Committee) நியமிக்கப்பட வேண்டும். உதாரணமாக, 1933ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டப்படி நிதிக் குழுவும் 1921 ஆம் ஆண்டில் இயற்றிய கல்விக் குழுவும் ஒவ்வொரு கவுன்டியிலும் நியமிக்கப்படவேண்டும். ஒரு கவுன்டியில், கவுன்டி கவுன்சிலும் பரோவும் சேர்ந்து ஒரு பொது நோக்கத்திற்காக இணைக் குழுக்களை நியமிக்கலாம். இக் குழுக்களில் காலாண்டுப் பருவ மேல் வழக்கு மன்றத்தால் (Quarter-Sessions) நியமிக்கப்பட்ட நடுவர்களும், கவுன்டி கவுன்சிலால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் சம அளவில் இடம் பெறுவார்கள். இக் குழு கவுன்டியின் காவல்துறைத் தலைவரை நியமிக்கின்றது. இந் நியமனத்திற்கு ஆங்கில அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகம் தன் ஒப்புதலையளிக்க வேண்டும். காவல்துறையை இக் குழு தன் கட்டுப்பாட்டிற்குள் வைத் திருக்கும்,

கவுன்டி கவுன்சிலின் அதிகாரங்கள்

கவுன்டி கவுன்சிலின் அதிகாரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. கவுன்டி தொடர்புடைய அதிகாரங்கள். 2. மற்ற தல ஆட்சி நிறுவனங்களின் மேல் செலுத்தும் அதிகாரங்கள் என இரண்டு வகை அதிகாரங்களாகும்.

கவுன்டி தொடர்புடைய அதிகாரங்கள்

1. நெடுஞ்சாலைகளை அமைத்துப் பராமரித்தல்.
2. வீடுகளைத் திட்டமிட்டு அமைத்தல். நகர்களுக்கும், கிராமங்களுக்கும் திட்டங்களை உருவாக்குதல்.
3. பாலங்களை அமைத்தல். பாலங்களைப் புதுப்பித்தல்.
4, பூங்காக்களை அமைத்தல், பராமரித்தல்.
5. அசுத்தத்தைக் களைதல்; குடிநீர் தூய்மை கெடுதலை அகற்றுதல்.
6. பறவைகளைக் காப்பாற்றுதல், மீன்வளத்தைப் பெருக்குதல்.
7. தீயணைக்கும் பணிகள்.
8. இளங் குற்றவாளிகளின் இல்லங்கள், அவர்களுடைய பாதுகாப்பு.
9. உள்நாட்டுப் பாதுகாப்பு.
10. எடைகளும், அளவுகளும்.
11. பல கேளிக்கைகளை நடத்த அனுமதியளித்தல். சினிமா, குதிரைப் பந்தயம் போன்றவைகள்.
12. மருத்துவ மனைகளைப் பராமரித்தல்.
13. மோட்டார் வாகனங்களுக்கு அனுமதி வழங்குதல்,
14. கல்வி, உணவு, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல்.
15. சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளித்தல்.
16. குருடு, செவிடு, ஊமை போன்றவர்களுக்கு உதவியளித்தல்.
17. உடல் நலம் குறைந்தோருக்கும், வயது வந்தோர்க்கும் உதவிகளை அளித்தல்.
18. குழந்தைகள், பெண்கள் மற்றும் எல்லோருடைய உடல் நலத்தையும் பேணுதல்.
19. நூலகங்களை ஏற்படுத்துதல்,
20. விவசாயம் செய்ய ஆதரவு அளித்தல்; சிறுபண்ணைகளை அமைத்தல்.

21. வீட்டு அடமானக் கடன் வசதிகளை அளித்தல்.

22. ஏழைகளுக்கு வழக்காட உதவி செய்தல்.

மற்ற தல ஆட்சி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள்

கவுன்டியிலுள்ள கவுன்டி பரோக்களைத்தவிர மற்ற நகர மாவட்டங்கள், நாட்டுப்புற மாவட்டங்கள், பேரிஷ்கள் ஆகிய வைகள் கவுன்டி கவுன்சிலின் கட்டுப்பாட்டிற்குள்தான் இயங்க வேண்டும். 1888ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டப்படி, கவுன்டிக்குள் ஒரு புது பரோவை ஏற்படுத்துவதிலும், மாவட்ட, பேரிஷ்களின் எல்லைகளைத் திருத்தி அமைப்பதிலும், நகர மாவட்டங்களின் அமைவுகளைப் பிரிப்பதிலும், நாட்டுப்புற மாவட்டங்களை நகர்ப்புற மாவட்டங்களாக மாற்றுவதிலும் கவுன்டி கவுன்சிலுக்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1894ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டத்தால் கவுன்டி கவுன்சிலின் அதிகாரங்கள் மேலும் விரிவடைந்தன. இச் சட்டப்படி,

1. கவுன்டியிலுள்ள பேரிஷ் கவுன்சில்களின் உறுப்பினர் களின் தொகையை நிர்ணயம் செய்தல்.
2. சிறு பேரிஷ்கள் கவுன்சில்களை வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா என்பதைப்பற்றி முடிவு செய்தல்.
3. பேரிஷ் கவுன்சில்களுக்குக் கடன் உதவி செய்தல்
4. பேரிஷ்களின் அமைவுகளைப் பிரித்தல் (Wards).
5. மாவட்ட கவுன்சிலுக்கெதிராகப் பேரிஷ் கவுன்சில்கள் முறையீடு செய்தால் அதைக் கவனித்தல்.

கவுன்டியின் அதிகாரிகள்

ஒவ்வொரு கவுன்டியிலும் நிர்வாகத்தை மேற்கொள்ளும் அதி காரிகள் நிலை இணைக் குழுவாலும், கவுன்டி கவுன்சிலாலும், அரசி யாராலும் (Crown) நியமிக்கப்படுகின்றனர்கள். நிலை இணைக்குழு (Standing Joint Committee) காவல் துறையின் தலைமைக் காவலரை உள்துறை அமைச்சகத்தின் ஒப்புதலின்பேரில் நியமனம் செய் கின்றது. அத்துடன் அமைதிகாண் எழுத்தரையும் (Clerk of the Peace) நியமனம் செய்கின்றது. கவுன்டிகவுன்சில், கவுன்டி எழுத்தர், பொருளாளர், கல்வி இயக்குனர் மருத்துவ அதிகாரி, பொது மாற்றியல் தேர்வாராய்ச்சியாளர் (Public Analysts),

அளவாயர்கள் (Surveyors). பிண ஆய்வாளர் (Coroner) ஆகியோரை நியமிக்கின்றது. அரசியார் ஒவ்வொரு கவுன்டியிலும் அரசப் பேராளர் (Sheriff) ஒருவரையும், அமைதிகாண் நடுவர் (Justice of Moce) ஒருவரையும், துணைநிலைப் பிரபு (Lord Lieutenant) ஒருவரையும் நியமிக்கின்றார்.

பரோக்கள்

இங்கிலாந்தில் பரோதான் மிகவும் பழமை வாய்ந்த தல ஆட்சி நிறுவனமாகும். இங்கிலாந்தை சாக்ஸன் பரம்பரையினர் ஆட்சி செய்த காலந்தொட்டு இந் நிறுவனம் தொடர்ந்து செயல் பட்டு வருகின்றது. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சியினால் நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்தது. ஆங்காங்கே நகரங்கள் திடீரென்று ஏற்பட்டன. அங்கெல்லாம் மக்களின் நல்வாழ்வு வசதிகளே இல்லாமலிருந்தது. அதை ஆராயும் பொருட்டு 1833ஆம் ஆண்டில் ஒரு குழு ஏற்படுத்தப் பட்டது. அக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில்தான் 1835ஆம் ஆண்டில் நகராட்சிச் சட்டம் (The Municipal Corporation Act) ஆங்கிலப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. அச் சட்டம் பரோக்களின் அமைப்புக்களையும், அதன் அதிகாரங்களையும் தெளிவாகக் கூறியது.

ஒவ்வொரு பரோவிலும் நிர்வாகத்தை மேற்கொள்ள ஒவ்வொரு கவுன்சில் உள்ளது. அக் கவுன்சிலில் மேயர், நகரமுதுவர்கள், கவுன்சிலர்கள் அல்லது உறுப்பினர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பரோவின் மக்கள்தொகைக்கு ஏற்றவாறு அதன் உறுப்பினர் (அ) கவுன்சிலர்கள் எண்ணிக்கை இருக்கும். கவுன்சிலர்கள் அந்தந்த பரோவிலுள்ள மக்களால் மூன்று ஆண்டுகளுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பரோவும் பல அமைவுகளாகப் (Wards) பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அமைவும் பல உறுப்பினர் தொகுதிகளாகும். ஒரு அமைவிலிருந்து மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். நகர முதுவர்கள் (Aldermen) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஆறு ஆண்டு பதவி காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு நகரமுதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நகரமுதுவர் மொத்த எண்ணிக்கையில் பாதியளவு பேர் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவியிழப்பார்கள். அவர்களுக்குப் பதிலாகப் புதிதாக நகரமுதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உறுப்பினர்களும் நகர முதுவர்களும் சேர்ந்து ஓராண்டுப் பதவி காலத்திற்கு

மேயர் (Mayor) ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். மேயர் கவுன்சில் உறுப்பினர்களிலிருந்து ஒருவரைத் துணை மேயராக நியமிப்பார். கவுன்சில் கூட்டங்களுக்கு மேயர் தலைமை தாங்கி நடத்துவார். பரோ கவுன்சில் வருடாந்திரக் கூட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 9ஆம் தேதியன்று கூட்டவேண்டும், அத்துடன் மேலும் மூன்று கூட்டங்களைக் கூட்டவேண்டும், மூன்று உறுப்பினர்கள் இருந்தாலே போதும். கவுன்சில் கூட்டம் ஆரம்பமாகும், கவுன்சில் கூட்டத்தை மேயரோ, அல்லது ஐந்து கவுன்சில் உறுப்பினர்களோ அல்லது மொத்த உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் $\frac{1}{4}$ பங்கு உறுப்பினர்களோ அழைக்கலாம்.

பரோ கவுன்சிலின் வேலையை முக்கியமாகக் குழுக்கள்தான் கவனிக்கின்றன. கண்காணிப்புக் குழு (Watch Committee), கல்விக் குழு (Education Committee) ஆகிய குழுக்களைச் சட்டப்படி கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும். மற்ற குழுக்களைக் கவுன்சில் தன் விருப்பப்படி நியமித்துக் கொள்ளலாம். குழுக்களிலுள்ள உறுப்பினர்களில் கவுன்சில் உறுப்பினரல்லாதவரும் இடம் பெறலாம். ஆனால், அவர்களின் எண்ணிக்கை குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமாக இருக்கக்கூடாது. கடன் திரட்டவோ வரி விதிக்கவோ ஆணை பிறப்பிக்கவோ இக் குழுக்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால், இக் குழுக்கள் முக்கியமான மசோதாக்களைப் பரிசீலனை செய்து, பரோ கவுன்சிலுக்குச் சிபார்சு செய்யவேண்டும்.

பரோ கவுன்சிலின் பணிகள் என்னென்ன என்பதைப்பற்றி 1933ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டம் கூறுகின்றது, அவைகளாவன :

1. பரோவுக்குத் தனியான காவல்துறையிருந்தால் அதை நிர்வகித்தல்.
2. கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களை நியமித்தல்.
3. சட்டங்களைப் பாதுகாத்தல், கட்டுப்படுத்தல்.
4. தங்கும் விடுதிகளை நிர்வகித்தல்.
5. சூதாட்ட இல்லங்களைக் கட்டுப்படுத்துதல், அனுமதி வழங்கல்.
6. பெட்ரோல், வாடகை வாகனங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்.

7. உணவு, மருந்து, பால் ஆகிய உணவுப் பொருள்களை மேற்பார்வையிடுதல்.
8. வாணிபச் சட்டங்களைச் செயலாக்குதல்.
9. சந்தைகளைக் கட்டுப்படுத்தல்.
10. மக்களுக்கு நல்ல காற்று வசதிகளைச் செய்தல்.
11. சுகாதார நலன்களைப் பாதுகாத்தல்.
12. குடியிருப்பு வழங்கல்; குடிசை ஒழிப்பு.
13. வீடுகளின்மேல் கடன் வழங்குதல்; மக்களுக்குக் கடன் கொடுப்பவர்களைக் கட்டுப்படுத்தல்.
14. குளிக்கும் அறைகள், நீந்தும் குளங்கள், கல்லறைகள் கட்டித்தரல்.
15. நிதிவசதி அளித்தல்.
16. சாலைகள், வீதிகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல்.
17. பூங்காக்கள், நடைபாதைகள் அமைத்தல்.
18. வீதி விளக்குகள் அமைத்தல்.
19. தண்ணீர் வசதிகளைச் செய்தல்.
20. வரிகளை விதித்தல், வரிகளை வசூல் செய்தல்.
21. வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களைப் பதிவு செய்தல்.
22. மின்சார உற்பத்தி நிலையம், சாதாரண புகைவண்டிகள் போன்றவற்றை நிர்வகித்தல்.
23. தொற்றுநோய்களைத் தடுத்தல்.

பரோ கவுன்சில் சட்டமியற்றல், நிர்வகித்தல் ஆகிய இரண்டு செயல்களையும் செய்கின்றது. மேற்கூறிய பணிகளைச் செய்ய பரோ கவுன்சில் துணைச் சட்டங்களை (Bye-Laws) இயற்றுகின்றது. இச் சட்டங்களுக்குப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்குள்ள மதிப்பு இருக்கின்றது. பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு தலஆட்சி நிறுவனம் சட்டமியற்றுவதால், அச் சட்டத்தைத் துணைச் சட்டமெனத்தான் கூற வேண்டும். இத்தகைய மக்களின் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள பரோ கவுன்சில் நிரந்தரமான அதிகாரிகளை நியமிக்-

கின்றது. வரி விதிப்பதின் மூலமும், மத்திய அரசாங்க நிதியுதவி மூலமும், கடன் திரட்டுவதின் மூலமும் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பரோ கவுன்சில் தன் பணிகளைச் செய்கின்றது.

கவுண்டி பரோக்கள்

1888ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டப்படி இங்கிலாந்தில் கவுண்டி பரோக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை பரோக்களைவிட அதிக அதிகாரங்களையும், மதிப்பையும் பெற்று விளங்குகின்றன. ஆரம்பத்தில் இச்சட்டப்படி 61 கவுண்டி பரோக்கள் (County Boroughs) ஏற்படுத்தப்பட்டன. 1965ஆம் ஆண்டில் அவைகளின் எண்ணிக்கை 82ஆக உயர்ந்தது. 1888ஆம் ஆண்டில் 50,000 மக்கள் தொகை கொண்ட பரோக்கள் அனைத்தும் கவுண்டி பரோக்களாக மாற்றப்பட்டன. 1945ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டப்படி 100,000 மக்கள் தொகை கொண்ட பரோக்கள்தான் கவுண்டி பரோக்களாக முடியும் எனக் கூறப்பட்டது. ஒரு பரோ கவுண்டி பரோவாக மாற்றப்பட வேண்டுமானால் அப் பரோ பாராளுமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். பாராளுமன்றம் அதற்கு ஒப்புதல் அளித்தால் அப் பரோகவுண்டி பரோவாக மாறலாம். பாராளுமன்றம் விரும்பினால் சட்டத்தின்மூலம் ஒரு கவுண்டிபரோவையும் ஏற்படுத்தலாம்.

கவுண்டி பரோ சுயாட்சி பெற்ற தலஆட்சி நிறுவனமாகும். கவுண்டி பரோவை கவுண்டியால் கட்டுப்படுத்த முடியாது. கவுண்டி பரோ, கவுண்டிக்குள்ள எல்லா அதிகாரங்களையும், பரோவுக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் பெற்று விளங்குவதால் தான் கவுண்டிபரோ என்று அழைக்கப்படுகின்றது.

கவுண்டிபரோவின் நிர்வாகத்தை மேற்கொள்ள ஒரு கவுன்சில் உள்ளது. அக் கவுன்சிலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் (Councillors) நகரமுதுவர்களும், மேயரும் இடம் பெற்றுள்ளனர். கவுண்டி கவுன்சிலும், பரோ கவுன்சிலும் என்னென்ன பணிகளை யாற்றுகின்றனவோ, அவைகளைப் போலவே கவுண்டி பரோகவுன்சிலும் மக்களின் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்கின்றது. அவைகளில், வீட்டு வசதியளித்தல், கல்வி வசதி ஏற்படுத்தல், குழந்தைகள் நலம்பேணல், மனநோய் குணப்படுத்தல், குருடு, இருமல் போன்ற வியாதிகளுள்ளவர்களைப் பேணல், அனுமதியளித்தல், பதிவு செய்தல் போன்றவைகள் முக்கியமானவைகளாகும்.

பேரிஷ்கள்

பேரிஷ்கள், நகர்ப்புற பேரிஷ்களென்றும் (Urban Parishes), நாட்டுப்புற பேரிஷ்கள் (Rural Parishes) என்றும் இரண்டு வகைகள் உள்ளன, நகர்ப்புற பேரிஷ்களின் தேவைகளை அவைகளைச் சார்ந்த நகர்ப்புற மாவட்டமோ அல்லது பரோவோ கவனித்துக் கொள்வதால், அவைகள் தலஆட்சி நிறுவனங்களாக இல்லை. ஆனால், நாட்டுப்புற பேரிஷ்கள் தலஆட்சி நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன. ஒரு நாட்டுப்புற பேரிஷ் ஒரு நாட்டுப்புற மாவட்ட (Rural District) எல்லைக்குள் அடங்கியிருக்கும். அந்த நாட்டுப்புற பேரிஷ், பேரிஷ் கூட்டத்தாலோ (Parish Meeting) அல்லது பேரிஷ்கவுன்சிலாலோ (Parish Council) நிர்வகிக்கப்பட்டு வரும்.

பேரிஷ் கூட்டம்

நாட்டுப்புற பேரிஷில், ஒருசில சாதாரண தலஆட்சிப் பணிகளைச் செய்ய பேரிஷ் கூட்டத்திற்கு (Parish Meeting) வகை செய்யப்பட்டுள்ளது. பேரிஷ் கூட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்றம் அல்ல. நாட்டுப்புற பேரிஷிலுள்ள அனைத்து வாக்காளர்களும் இதில் இடம் பெற்றுள்ளனர். நாட்டுப்புற பேரிஷில், பேரிஷ் கவுன்சில் இல்லாதிருந்தால் பேரிஷ் கூட்டம்தான் தலஆட்சி அதிகாரங்களைப் பெற்றுள்ளது. ஓராண்டில் இரண்டுமுறை பேரிஷ் கூட்டம் நடைபெறும். பேரிஷ் கூட்டத்தின் தலைவர் வருடாந்திர கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர்தான் பேரிஷ் கூட்டத்தின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். இங்கிலாந்திலும், வேல்ஸிலும் மொத்தம் 3300 பேரிஷ் கூட்டங்கள் இருக்கின்றன.

நாட்டுப்புற பேரிஷில், பேரிஷ் கவுன்சில் ஒன்று இல்லாதிருந்தால், பேரிஷ் கூட்டம்தான் கவுன்சிலுக்குள்ள பணிகளைச் செய்யும், பேரிஷ் கூட்டம் தர்மகர்த்தாக்களை நியமிக்கின்றது; பேரிஷ் சொத்துக்களை நிருவகிக்கின்றது. நடைபாதைகள், வீதி விளக்குகள், கல்லறைகள், பூங்காக்கள் ஆகியவற்றைப் பொறுத்த பணிகளை நிறைவேற்றுகின்றது. நாட்டுப்புற பேரிஷில் கவுன்சில் ஒன்று இருந்தால் பேரிஷ் கூட்டத்திற்கு முக்கியமான பணிகள் எவையும் இல்லை. ஆனால், பேரிஷ் சம்பந்தப்பட்ட விவகாரங்களைப்பற்றி விவாதித்துத் தீர்மானங்களை இயற்றும். கவுன்சிலுக்கு வேண்டிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்.

பேரிஷ் கவுன்சில்

நாட்டுப்புற பேரிஷின் நிர்வாக அமைப்பு பேரிஷ் கவுன்சிலாகும். நாட்டுப்புற பேரிஷின் மக்கள் தொகை 300ம் அதற்கு

மேலும் இருந்தால், அத்தகைய பேரிஷ் ஒரு பேரிஷ் கவுன்சிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மக்கள் தொகை 200-க்கு மேற்பட்டும் 300-க்குக் குறைவாகவும் இருந்தால், பேரிஷ் கூட்டம் விரும்பினால் ஒரு கவுன்சிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மக்கள் தொகை 200-க்கும் குறைவாயிருந்தால் கவுன்சிலை ஏற்படுத்த பேரிஷ் கூட்டம் விரும்பினாலும் அதற்கு கவுன்டி கவுன்சிலின் ஒப்புதல் வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்டுப்புற பேரிஷ்கள் சேர்ந்து கவுன்டி கவுன்சிலின் ஒப்புதலின் பேரில் ஒரு கவுன்சிலை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பேரிஷ் கவுன்சிலில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாமலும் பதினைந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். பேரிஷ் கவுன்சிலின் உறுப்பினர் எண்ணிக்கையை கவுன்டி கவுன்சில்தான் நிர்ணயம் செய்யும். பேரிஷ் கவுன்சிலின் உறுப்பினர்கள் பேரிஷ் கூட்டத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரிஷ் கவுன்சில் தலைவர் ஒருவரைத் தமக்குள்ளேயே தேர்ந்தெடுப்பார்கள். உறுப்பினரல்லாத ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் உடனே கவுன்சிலின் உறுப்பினராகிவிடுகின்றார். இத்தகைய பேரிஷ் கவுன்சில்கள் இங்கிலாந்தில் 7500 உள்ளன.

பேரிஷ் கவுன்சில் ஒரு வருடாந்திரக் கூட்டத்தையும், மற்றும் மூன்று சாதாரணக் கூட்டங்களையும் கூட்டவேண்டும். தலைவரோ அல்லது இரண்டு உறுப்பினர்களோ விரும்பினால் சில சிறப்புக் கூட்டங்களையும் கூட்டலாம். கவுன்சில் கூட்டங்களுக்கிடையே இடைவெளி அதிகமிருப்பதால் இக்கவுன்சிலின் பணிகளை முக்கியமாகக் குழுக்களே செய்கின்றன. இக் குழுக்களை கவுன்சில்தான் ஏற்படுத்தும்.

இத்தகைய பேரிஷ் கவுன்சிலின் அதிகாரங்களும், பணிகளும் குறைவேயாகும். ஏனெனில் நாட்டுப்புற பேரிஷில் முக்கிய பணிகளை நாட்டுப்புற மாவட்டக் கவுன்சிலும், கவுன்டி கவுன்சிலும் செய்துவிடுகின்றன. இருந்தபோதிலும், இத்தகைய பேரிஷ் கவுன்சில்கள் குளியல் அறைகளையும் துணிகளைத் துவைக்கும் அறைகளையும் அமைக்கின்றன. இவைகள் நடைபாதைகளை நிர்வகிக்கின்றன. ஆரம்பப்பள்ளிகளின் நிர்வாகக் குழுவில் சில உறுப்பினர்களை நியமிக்கின்றன. அத்துடன் நோய்கள் பரவாமல் தடுக்கப் பல வழிமுறைகளை மேற்கொள்கின்றன. ஒவ்வொரு பேரிஷ் கவுன்சிலும் அந்தந்த நாட்டுப்புற மாவட்ட

கவுன்சிலின் (Rural District Council) மேற்பார்வையில் செயல்படுகின்றது.

மாவட்டங்கள்

ஒரு கவுன்டியினுள் மூன்றுவிதமான தல ஆட்சி நிறுவனங்கள் உள்ளன. 1. பரோக்கள், 2. நகர்ப்புற மாவட்டங்கள் (Urban Districts) 3. நாட்டுப்புற மாவட்டங்கள் (Rural Districts). இங்கிலாந்தில் 547 நகர்ப்புற மாவட்டங்களும் 473 நாட்டுப்புற மாவட்டங்களும் உள்ளன. நாட்டுப்புற மாவட்டங்களைக் காட்டிலும் நகர்ப்புற மாவட்டங்களின் அதிகாரங்களும். மதிப்பும் அதிகமாகும், நகர்ப்புற மாவட்டங்களில் முக்கியமாகத் தொழிலும், வாணிபமும் நடைபெறுகின்றன. நாட்டுப்புற மாவட்டங்களிலுள்ள மக்கள் முக்கியமாக விவசாயத்தில்தான் ஈடுபட்டுள்ளார்கள். நகர்ப்புற மாவட்டங்கள், நகர்ப்புற மாவட்ட கவுன்சில்களாலும், நாட்டுப்புற மாவட்டங்கள் நாட்டுப்புற மாவட்ட கவுன்சில்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

நகர்ப்புற மாவட்ட கவுன்சில், நாட்டுப்புற மாவட்ட கவுன்சில் ஆகியவைகளின் அமைப்புகளில் வேறுபாடுகள் கிடையாது. ஒவ்வொரு கவுன்சிலிலும் ஒரு தலைவர், பல உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களை உட்கொண்ட கவுன்சில்தான் அந்த மாவட்டத் தல ஆட்சிப் பொறுப்புகளைப் பெற்றுள்ளது, கவுன்சிலிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் மாறும். கவுன்சிலின் உறுப்பினர்கள் அந்தந்த மாவட்ட வாக்காளர்களால் மூன்று ஆண்டுப் பதவி காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஆண்டுதோறும் பதவி விலகுவார்கள். அவர்களிருந்த இடத்திற்குப் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தங்களுள் ஒருவரையோ அல்லது உறுப்பினர் அல்லாத ஒருவரையோ ஓராண்டுப் பதவி காலத்திற்கு ஒரு தலைவராகத் தேர்ந்தெடுப்பர். உறுப்பினர் அல்லாத ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் பிறகு உறுப்பினர் தகுதியைப் பெற்றுவிடுகின்றார். உதவித் தலைவர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவார். தலைவர் இல்லாத போது உதவித் தலைவர் கவுன்சில் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். மாவட்ட கவுன்சில் தலைவர்தான் தன் பதவி காலத்தில் அமைதிகாண் நடுவராகவும் பணியாற்றுவார்.

மாவட்ட கவுன்சில் ஒரு வருடாந்திரக் கூட்டத்தையும் மூன்று சாதாரண கூட்டங்களையும் நடத்தும். தலைவரும் ஐந்து

கவுன்சில் உறுப்பினர்களும் விரும்பினுலோ அல்லது மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்கள் விரும்பினுலோ சிறப்புக் கூட்டங்கள் கூட்டப்படும். அதிக இடைவெளிக்குப் பின்பு மாவட்ட கவுன்சில் கூட்டங்கள் கூட்டப் படுவதால், அக் கவுன்சிலால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள்தான் கவுன்சிலின் முக்கிய பணிகளைச் செய்கின்றன.

நகர்ப்புற மாவட்ட கவுன்சிலுக்கும், நாட்டுப்புற மாவட்ட கவுன்சிலுக்கும் பொதுவான சில பணிகள் உள்ளன. அவை களாவன :

1. பொது சுகாதாரத்தையொட்டி துணைச் சட்டங்களை இயற்றுதல். பொது சுகாதார அமைச்சகம் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.
2. குடிநீர் வழங்குதல்.
3. தொற்றுநோய்களைத் தடுத்தல்.
4. கழிவு நீரை அகற்றுதல்.
5. மின்சார விளக்குகளை மேற்பார்வையிடல்.
6. மின்சார வசதியளித்தல்.
7. வரிகளை விதித்தல், வசூலித்தல்.

நகர்ப்புற மாவட்ட கவுன்சிலுக்கு மட்டுமுள்ள பணிகளாவன:

1. நூலகங்களை நிர்வகித்தல்.
2. பொருட்காட்சி சாலையை நிர்வகித்தல்.
3. கலைப்பொருள் மண்டபத்தைப் பராமரித்தல்.
4. போக்குவரத்து சாதனங்களை நிர்வகித்தல்.
5. குற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்.

நாட்டுப்புற மாவட்ட கவுன்சில்கள் சுகாதாரச் சட்டத்தின் கீழுள்ள பணிகளை மட்டும்தான் மேற்கொள்கின்றன.

இப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட கவுன்சில்கள் நிரந்தர அலுவலர்களை நியமிக்கின்றன. எழுத்தர், பொருளாளர், மருத்துவ அதிகாரி, சுகாதார அதிகாரி போன்றவர்கள் முக்கியமான அலுவ லர்களாவார்கள். ஆனுல், நகர்ப்புற மாவட்டங்களில் அளவா யர்கள் கட்டாயமாக நியமிக்கப்படவேண்டும்.

இலண்டன்

1963ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டம் இலண்டன் மாநகரத்தின் அமைப்பையும். நிர்வாக எல்லையையும் பெருமளவில் மாற்றம் செய்தது. அப் பகுதியில் இலண்டன் மாநகருக்கென்று தனியான எல்லையும், நிர்வாகமும் லண்டன் நகருக்கென்று தனியான எல்லையும் நிர்வாகமும், 32 லண்டன் பரோக்களுக்கென்று தனித்தனி எல்லைகளும் நிர்வாகங்களும் நிறுவப்பட்டன. 1963ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதியிலிருந்து அவைகள் தனித்தனியாகப் பணியாற்ற ஆரம்பித்தன.

இலண்டன் மாநகரம்

இலண்டன் மாநகரம் இலண்டன் மாநகரக் கவுன்சிலால் (Greater London Council) நிர்வகிக்கப்படுகின்றது. இக் கவுன்சிலில் 100 கவுன்சிலர்களும் கவுன்சிலர்களின் எண்ணிக்கையில் ஆறில் ஒரு பங்கு நகர முதுவர்களும் இடம் பெற்றுள்ளனர். கவுன்சிலர்கள் வாக்காளர்களால் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகரமுதுவர்களில் பாதி உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை பதவியிழப்பர். அவர்களிடத்திற்கு வேறு நகர முதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நகரமுதுவர்களைத் தங்களுக்குள்ளேயே கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கலாம். அல்லது கவுன்சிலர் அல்லாதவர்களையும் தேர்ந்தெடுக்கலாம். அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கவுன்சிலர் தகுதியைப் பெறுவார்கள். கவுன்சிலர்க்குள்ள அதிகாரங்களே நகரமுதுவர்களுக்கு இருந்த போதிலும், அவர்களின் பதவிகாலம் அதிகமாக இருப்பதாலும், அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் அவர்கள் கவுன்சிலர்களைவிட அதிக மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். கவுன்சிலர்களும், நகரமுதுவர்களும் சேர்ந்து ஆண்டுக்கொருமுறை கவுன்சில் தலைவரையும், துணைத் தலைவரையும், உப தலைவரையும் தேர்ந்தெடுப்பார்கள். கவுன்சில் தலைவர் கவுன்சிலின் உண்மையான ஆட்சித்துறைத் தலைவரல்லர். அவர் பெயரளவிற்குத்தான் தலைவர். அவர் கவுன்சிலின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். அத்துடன் முக்கியமான விழாக்களில் கவுன்சில் சார்பில் கலந்து கொள்வார்.

இலண்டன் மாநகரக் கவுன்சில் பதினைந்து நாட்களுக்கொரு முறை கூட்டங்களை நடத்தும். சாதாரணமாகச் செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்குத்தான் கவுன்சில் கூட்டம் ஆரம்ப

மாகும். கவுன்சிலில் கவுன்சில் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் இருப்பர். கவுன்சில் கூட்டங்களில் உறுப்பினர்கள் கவுன்சிலின் நிர்வாகத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்கலாம். அக் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட குழுவின் தலைவர் பதிலையளிப்பார். கவுன்சில் துணைச் சட்டங்களை இயற்றுகின்றது. அத்துடன் இயற்றிய சட்டங்களை அமுல் செய்கின்றது. ஆகவே சட்ட மியற்றல், நிர்வாகம் செய்தல் ஆகிய இரண்டு அதிகாரங்களையும் கவுன்சில் ஒருங்கே பெற்று விளங்குகின்றது.

கவுன்சிலின் முக்கியமான பணிகளை அதனால் நியமிக்கப்பட்ட குழுக்களே செய்கின்றன. கவுன்சிலின் முக்கிய பணிகள் கொள்கைகளை உருவாக்குவது, குழுக்களின் அறிக்கைகளைப்பற்றி விவாதிப்பது, விவாதித்து அவைகளை நிராகரிப்பது அல்லது ஏற்றுக் கொள்வது ஆகியவைகளேயாகும். கவுன்சிலில் பல நிலைக் குழுக்கள் (Standing Committees) இருக்கின்றன. உதாரணமாக சுகாதாரக் குழு, கல்விக் குழு, நிதிக் குழு ஆகியவைகளைக் கூறலாம். சில தற்காலிகக் குழுக்களும் நியமிக்கப்படுகின்றன. உதாரணமாக வயதடைந்தோர் நலக் குழுவைக் கூறலாம். குழுக் களில் நிபுணத்துவம் வாய்ந்த கவுன்சில் உறுப்பினரல்லாதவர் களையும் கூட நியமிக்கலாம். அத்தகையவர்கள் குழு உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இருக்கக் கூடாது.

இலண்டன் மாநகரக் கவுன்சிலுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளாவன:

1. பரந்த அளவில் கல்வி வசதிகளைச் செய்து கொடுத்தல்.
2. தீயணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
3. வீடுகளைக் கட்டிக் கொடுத்தல்.
4. குடிசை ஒழிப்புச் செய்தல்.
5. முக்கிய சாக்கடைகளை அமைத்தல்.
6. நகர அபிவிருத்தி திட்டங்களை வகுத்தல்.
7. பெரிய அளவில் பூங்காக்களையும், திறந்தவெளிகளையும் நிர்வகித்தல்.
8. முக்கிய பாதைகளையும் பாலங்களையும் அமைத்துப் பராமரித்தல்.
9. இலண்டன் நகர நெடுஞ்சாலைகளை மேற்பார்வையிடல்.

10. போக்குவரத்து கட்டுப்பாடு ஏற்படுத்தல்.

11. கழிவுநீர் அகற்றுதல்.

12. ஏழைகளுக்கு வழக்கு உதவியளித்தல்.

13. மோட்டார் மற்றும் இதர வாகனங்களுக்கு அனுமதி யளித்தல்.

14 திரைப்படக் கொட்டகைகளுக்கு அனுமதியளித்தல்.

15. கட்டிடச் சட்டங்களை அமுல்படுத்துதல்.

16. ஏழை எளியோருக்கான பலதரப்பட்ட நிறுவனங்களை நிர்வகித்தல்.

17. குழந்தைகள், தாய்மார்கள் நலங்களைப் பேணிக் காக்கும் நிலையங்களை நிர்வகித்தல்.

18. ஊனமுற்ற குழந்தைகள் குருடர்கள், சொந்த வீடு அற்ற கருவுற்ற பெண்கள் ஆகியோரைக் கவனித்தல்.

19. மாநகர மக்களின் நலனுக்காகப் பல சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளல்.

இலண்டன் மாநகரம் அடர்ந்த மக்கள் தொகையைப் பெற்றுள்ளதால் அம் மக்களுக்கு வேண்டிய நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள கவுன்சில் பெரிதும் பாடுபட வேண்டியுள்ளது. கவுன்சிலர்களும், நகரமுதுவர்களும் சுயநலமின்றி மக்களின் நலனுக்காகப் பெரிதும் உழைக்கின்றனர்,

இலண்டன் நகரம்

இலண்டன் நகரத்தின் தலஆட்சி நிறுவனத்திற்கு மாநகராட்சி (Corporation) என்று பெயராகும். இது இலண்டன் மாநகரத்தின் நடுவில் ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள பகுதியாகும், இது மிகவும் பழமை வாய்ந்ததாகும். இப் பகுதியில் பெரும் பணக்காரர்கள் குடியிருப்பதால் எந்தவொரு மாற்றமும் இல்லாமல் பழையபடியே உள்ளது. இம் மாநகராட்சியில் மூன்று அமைப்புகள் உள்ளன. அவைகளாவன:

1. பொது மண்டப மன்றம் (Court of Common Hall).
2. நகரமுதுவர் மன்றம் (Court of Aldermen).
3. பொது கவுன்சில் மன்றம்(Court of Common Council).

இவைகள் பாராளுமன்றத்திலுள்ள சபைகளைப் போன்றனவாகும். இந்த மூன்று சபைகளின் கூட்டங்களுக்கு லண்டன் மேயர் பிரபு (Lord Mayor of London) தலைமை வகிப்பார். பொது மண்டப மன்றத்தில் மேயர் பிரபுவும், நகர முதுவர்களும், நகரத் தொழிற் குழு உறுப்பினர்களும் (Liverymen) ஆண்டுக்கொருமுறை கூடுவர். பொதுவாக இது நகரக் கூட்டமெனப்படும். இம் மன்றத்தின் பணி இரண்டு நகர முதுவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். இந்த இரண்டு நகர முதுவர்களில் ஒருவரை நகரமுதுவர் மன்றம் மேயர் பிரபுவாக நியமிக்கும், அத்துடன் இம் மன்றம் ஷெரிப்புகள், அரண்மனை அகவிணைஞர் (Chamberlain) போன்ற அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும்.

நகரமுதுவர் மன்றம் மேயர் பிரபு, நகரமுதுவர்கள் ஆகியவர்களை உட்கொண்டதாகும். பொது மண்டப மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நகரமுதுவர்களில் ஒருவரை இம் மன்றம் மேயர் பிரபுவாகத் தேர்ந்தெடுக்கின்றது. இம் மன்றத்திற்குச் சில சாதாரண அதிகாரங்கள்தான் உள்ளன. உதாரணமாகத் தரகர்களுக்கு (Brokers) அனுமதி வழங்கலாகும். இம் மன்றம் பொதுவாக மாநகராட்சியின் இரண்டாவது சபையாகக் கருதப்படுகின்றது.

பொது கவுன்சில் சபைதான் மாநகராட்சியின் நிர்வாக சபையாகக் கருதப்படுகின்றது. அத்துடன் இச் சபை மாநகராட்சிக்குரிய சட்டங்களையும் இயற்றுகின்றது. 1965ஆம் ஆண்டிலிருந்து இச் சபையில் ஒரு மேயரும், 25 நகரமுதுவர்களும், 159 கவுன்சிலர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். கவுன்சிலர்கள் ஆண்டுக்கொருமுறை 13,000 லண்டன் நகர வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகரமுதுவர்கள் வாக்காளர்களால் நேரடியாக ஆயுள் முழுவதுக்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கவுன்சிலர்களுக்கும், நகரமுதுவர்களுக்கும் தேர்தலில் நிற்க சொத்து தகுதிவேண்டும். மேயர் பிரபு ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 29ஆம் தேதி நகரமுதுவர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். பொது மண்டப மன்றம் தேர்வு செய்த இரண்டு நகர முதுவர்களிலிருந்து ஒருவரை லண்டன் மேயர் பிரபுவாக நகரமுதுவர் மன்றம் தேர்ந்தெடுக்கின்றது. இவருக்கு உண்மையில் எந்தவிதமான ஆட்சித்துறை அதிகாரங்களும் கிடையாது. மூன்று சபைகளின் கூட்டங்களுக்கு இவர் தலைமை வகிப்பார். அத்துடன் முக்கியமான விழாக்களில் மாநகராட்சி சார்பில் கலந்து கொள்வார். இப் பதவி மிகுந்த மதிப்பும், பெருமையும், தகுதியும் வாய்ந்ததாகும்.

பொதுக் கவுன்சில் மன்றத்தின் கூட்டம் பதினைந்து நாட்களுக்கொருமுறை நடக்கும். ஆனால், இதன் முக்கியப் பணிகளை இதனால் நியமிக்கப்பட்ட குழுக்கள் மேற்கொள்கின்றன. இக் கவுன்சிலின் முக்கியப் பணிகளாவன:

1. தெருக்களை அமைத்தல் பராமரித்தல்.
2. தெரு விளக்குகளை அமைத்தல், நிர்வகித்தல்.
3. பொது சுகாதாரத்தைப் பேணுதல்.
4. கழிவுநீரை அகற்றுதல், சாக்கடைக் கால்வாய்களை ஏற்படுத்தல்.
5. இலண்டன் துறைமுகத்தில் சுகாதாரத்தைப் பேணுதல்.
6. இலண்டன் துறைமுகத்தில் பயணிகளையும், கப்பலோட்டிகளையும் கண்காணித்தல்.
7. தேம்ஸ் நதியின் குறுக்கேயுள்ள நான்கு பாலங்களை நிர்வகித்தல்.
8. எடைகள் அளவுகள் சட்டப்படி பல கடமைகளைச் செய்தல்.
9. கடைகள் சட்டப்படி சில கடமைகளைச் செய்தல்.
10. இறைச்சி மீன், கோழி, முட்டை, ஆடுகள் முதலியவற்றை விநியோகிக்கும் பெரிய கடைகளை நிர்வகித்தல்.
11. பல பூங்காக்களையும் திறந்தவெளிகளையும் நிர்வகித்தல்.
12. நல்ல திறமை வாய்ந்த காவல்துறையை நிர்வகித்தல்.
13. இசைப்பள்ளியை நிர்வகித்தல்.

இத்தகைய பணிகள் செவ்வனே நடைபெற மாநகராட்சி பலதரப்பட்ட நிரந்தர அலுவலர்களை நியமிக்கின்றது. நகர எழுத்தர், நகர நீதிமன்றங்களின் நீதிபதிகள், பிண ஆய்வாளர். கலைக் களஞ்சியத்தின் இயக்குனர், நூலகர், காவல்துறை ஆணையர் போன்ற அலுவலர்களை நியமிக்கின்றது. வரி விதித்தல், சுங்க வரி, தண்டங்கள், நிதியமைச்சரிடமிருந்து பெறும் உதவித் தொகை ஆகியவைகளின் மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு லண்டன் மாநகராட்சி செயல்பட்டு வருகின்றது.

இலண்டன் பரோக்கள்

1963ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டப்படி இலண்டன் மாநகரம் (இலண்டன் நகரைத் தவிர) 32 பரோக்களாகப்

பிரிக்கப்பட்டது. இந்த பரோக்களின் அமைப்பும், பணிகளும், அதிகாரங்களும் பொதுவாக மற்ற பரோக்களைப் போலவே உள்ளன. ஒவ்வொரு பரோவும் ஒரு தல ஆட்சி நிறுவனமாகும். ஒவ்வொரு பரோவை நிர்வகிக்க ஒவ்வொரு கவுன்சில் உள்ளது. மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களும், ஆறு ஆண்டுகளுக்குக் கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமுதுவர்களும், ஒரு மேயரும் அக் கவுன்சிலில் இடம் பெற்றுள்ளனர். நகரமுதுவர்களில் பாதிபேர் மூன்று ஆண்டு களுக்கு ஒருமுறை பதவியிழப்பர். காலியிடங்களுக்குப் புதிய நகரமுதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். கவுன்சிலர்கள், நகர முதுவர்கள், மேயர் ஆகியோர் சேர்ந்து அமர்ந்து பணியாற்று வதுதான் பரோ கவுன்சிலாகும்.

இலண்டன் மாநகர் கவுன்சிலுக்கும் பரோ கவுன்சில்களுக்கும் இடையே அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. இலண்டன் மாநகர் முழுவதுக்கும் பொதுவான முறையில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய இலண்டன் மாநகர் கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக இடுகாடு, சுடுகாடு முதலிய வைகளைப் பராமரித்தல். அத்துடன் இலண்டன் பரோ கவுன்சிலுக்கு மேலும் சில பணிகளைச் செய்ய அதிகாரங்கள் உள்ளன. அவைகளாவன:

1. தெருக்களைச் சுத்தம் செய்தல்.
2. தெருக்களை அமைத்தல்.
3. தெருக்களை அகலப்படுத்துதல்.
4. தெரு விளக்குகளை அமைத்தல், பராமரித்தல்.
5. பொது நூலகங்களையும், பொருட்காட்சி சாலைகளையும் நிர்வகித்தல்.
6. பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவைகளைப் பதிவு செய்தல்.
7. தொழிற்சாலைகளை மேற்பார்வையிடல்.
8. கடைகள், உணவு, பால், மருந்துகள் ஆகியவைகளை மேற்பார்வையிடல்.
9. எலும்புருக்கி நோய் மருத்துவமனைகளை அமைத்தல்.

தல ஆட்சி நிறுவனங்கள்—மத்திய அரசாங்கம்: உறவுகள்

உலகின் அனைத்து நாடுகளிலும் தல ஆட்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால், எந்த நாட்டிலும் தல ஆட்சி

நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதில்லை. பாராளுமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை ஆகியவைகள் தல ஆட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகின்றன. தல ஆட்சி நிறுவனங்களின் அமைப்புகள், அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை நிர்ணயித்துப் பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுகின்றது. உதாரணமாக இங்கிலாந்தில் 1888 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டத்தையும், 1963 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தல ஆட்சிச் சட்டத்தையும் கூறலாம். இத்தகைய சட்டங்களால் தல ஆட்சி நிறுவனங்கள் கட்டுட்படுத்தப்படுகின்றன. அச் சட்டங்களுக்கு மாருக சுயமாக அவைகள் செயல்பட முடியாது.

அடுத்து ஆட்சித் துறையால் தல ஆட்சி நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்தில் தல ஆட்சி நிறுவனங்களை ஏறத்தாழ ஆறு மத்திய அரசாங்கத் துறைகள் கட்டுப்படுத்துகின்றன. சிலவற்றை அத் துறைகளின் ஒப்புதலின் மீதுதான் தல ஆட்சி நிறுவனங்கள் செய்ய வேண்டும். இல்லையேல் உதவித் தொகை அத்தகைய தல ஆட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்காது. அத்துடன் அவைகள் கலைக்கவும் படலாம்.

தல ஆட்சி நிறுவனங்களின்மீது நீதித்துறை கட்டுப்பாடு அவ்வளவு அதிகமாகக் கிடையாது என்றே கூறலாம். தல ஆட்சி நிறுவனங்கள் சட்டவழியான தன் கடமைகளைச் செய்யாமலிருந்தால், அல்லது வரம்பிற்குமேல் செயல்பட்டால் சட்டவழியான நடவடிக்கைகள் அவைகளின்மீது எடுக்கப்படலாம்.

இத்தகைய கட்டுப்பாடுகளை ஆங்கில அரசாங்கம் தல ஆட்சி நிறுவனங்களின்மீது செலுத்தினும், இந்தியாவைப் போன்று அல்லாமல் இங்கிலாந்து இதுவரை ஒரே ஒரு தல ஆட்சி நிறுவனத்தைக்கூட தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யவில்லை. அத்துடன் எந்தவொரு தல ஆட்சி நிறுவனத்தின் நிர்வாகத்தையும் அரசாங்கம் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளவில்லை. தல ஆட்சி நிறுவனங்கள்தான் ஜனநாயகத்தின் உண்மையான பிரதிபலிப்புகளாகும்.

33. அரசியல் கட்சிகள்

பாராளுமன்ற மக்கள் ஆட்சிமுறை நன்கு வேரூன்றிவிட்ட இங்கிலாந்தில் அரசியல் கட்சிகள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. அங்குக் கட்சி அடிப்படையில்தான் அரசாங்கம் அமைக்கப்படுகின்றது. நாட்டில் நடக்கும் பொதுத்தேர்தலில் பொதுமக்கள் சபையில் (House of Commons) அதிக உறுப்பினர்களைப் பெறும் அரசியல் கட்சி அரசாங்கத்தை அமைக்கிறது. அக் கட்சி தனது பிரதிநிதிகளான அமைச்சர்கள் மூலம் நாட்டை உண்மையில் ஆள்கிறது. அரசியார் பெயரளவிற்கு மட்டுமே ஆட்சி செய்கின்றார். ஆட்சியைக் கைப்பற்றி அரசியாரின் பெயரில் நாட்டை ஆளும் கட்சி தவறு செய்யின் அதை மக்களுக்கு எடுத்துக் காட்டவும், அவசியமானால் அடுத்த பொதுத்தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றவும் தகுந்த பக்குவமுடைய எதிர்க்கட்சி ஒன்றும் இங்கிலாந்தில் ஓர் இன்றியமையாத நிறுவனமாகிவிட்டது. இங்கிலாந்தில் பிரதம அமைச்சருக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் உள்ளதோ அவ்வளவு மதிப்பும் மரியாதையும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் உண்டு. அதனால்தான் அங்கு எதிர்க்கட்சித் தலைவர் 'மேன்மை தங்கிய அரசியாரின் எதிர்க்கட்சித் தலைவர் (Her Majesty's Opposition Leader) என்று கண்ணியமாக அழைக்கப்படுகின்றார். இங்ஙனம் இரு கட்சிமுறை (Two Party System) இங்கிலாந்தில் நன்கு நிலை பெற்றுவிட்டது. அத்துடன் இரு கட்சி முறைக்கு இங்கிலாந்து புகழ் வாய்ந்த நாடாகவும் விளங்குகிறது.

கட்சிகளின் வளர்ச்சி

இங்கிலாந்தில் எங்ஙனம் அரசியலமைப்பு வளர்ந்ததோ, அங்ஙனமே அங்கு அரசியல் கட்சிகளும் வளர்ந்தன. ஆரம்பத்தில் இங்கிலாந்தில் கட்சிகள் என்று எவையும் இருக்கவில்லை. ஏனெனில், அரசரே தம் விருப்பம்போல் நாட்டை ஆண்டு வந்தார். பின்னர் அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே நடந்த போராட்டத்தில் அரசர்கள் தங்கள் அதிகாரங்களை இழந்தபின் பாராளுமன்றம் சக்தி வாய்ந்த நிறுவனமாக மாறிய பொழுதுதான் அரசியல் கட்சிகளும் தோன்றின. முதலாம்

சார்லஸ் காலத்தில் அரசரை ஆதரிப்போர்' 'அரசரை எதிர்ப்போர்' என்ற இரு கூட்டத்தார் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் திட்டவட்டமான அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டு செயல்படவில்லை. இரண்டாம் சார்லஸ் காலத்தில் அவருடைய சகோதரர் யார்க் கோமகனை அரியணையிலிருந்து விலக்கி வைக்கப் பாராளுமன்றம் விலக்கு மசோதாவைக் (Exclussion Bill) கொணர்ந்த போதுதான் கட்சிகள் முதன்முதலில் இங்கிலாந்தில் தோன்றின. விலக்கு மசோதாவைத் தடுக்க இரண்டாம் சார்லஸ் பாராளுமன்றத்தைக் கூட்டாமல் ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தார். அப்பொழுது பாராளுமன்றத்தை அரசர் உடனே கூட்டவேண்டுமென்று சிலர் அரசருக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் அவர்கள் 'விண்ணப்பதாரர்கள்' (Petitioners) என்று பெயர் பெற்றனர். சிலர் பாராளுமன்றத்தைக் கூட்ட அரசரை வற்புறுத்துவதை வெறுத்தனர். அத்தகையோர் 'வெறுப்பாளர்கள்' (Abhorrers) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் நாளடைவில் பாராளுமன்ற இறைமையை வற்புறுத்திய 'விக்குகளாகவும்' (Whigs), அரசரது தனியாட்சியை ஆதரித்த 'டோரிகளாகவும்' (Tories) மாறினர். அரசியலில் வரையறையற்ற பரம்பரைக் கோனாட்சியை டோரிகளும், பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட கோனாட்சியை விக்குகளும் ஆதரித்தனர். பொருளாதாரத் துறையில், தடையற்ற வாணிபக் கொள்கையை (Laissey Faire) விக்குகளும், பாதுகாப்புக் கொள்கையை (Protection) டோரிகளும் வற்புறுத்தினர். சமயத்துறையில், ஆங்கிலிக்கத் திருச்சபையை டோரிகளும், சமயப்பொறைக் கொள்கையை விக்குகளும் ஆதரித்தனர்,

உள்நாட்டுப் போருக்குப் பின்னர், இங்கிலாந்தில் அரசியல் கட்சிகளிடையே புதிய வளர்ச்சி காணப்பெற்றது. இரண்டாம் சார்லஸ் அரசர் அவருக்கு வேண்டிய நண்பர்களைப் பல்வேறு கட்சிகளிலுமிருந்து தேர்ந்தெடுத்து ஒரு சிறிய அமைச்சர் குழுவை ஏற்படுத்திக் கொண்டார். அத்தகைய அமைச்சர்குழு 'கெபால்' (Cabal) அமைச்சர் குழு என்று அழைக்கப்பட்டது. கெபால் அமைச்சர் குழுவிலுள்ள எல்லா அமைச்சர்களும் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருந்தனர். இதே போன்ற அமைச்சரவையை வில்லியம் அரசர் காலத்திலும், ஆன் அரசியார் காலத்திலும் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன- ஆனால், அத்தகைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை, 1695 ஆம் ஆண்டில் வில்லியம் அரசர் 'டோரிகளை' நீக்கிவிட்டு 'விக்கு' கட்சியினரைச் சார்ந்த ஓர் அமைச்சரவையை நிறுவினர்.

ஆனால், ஆன் அரசியார் காலத்தில் டோரிக் கட்சி பாராளு மன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்ததால், விக்கு அமைச்சர்களான மார்ல்பரோ, கொடால்பின் ஆகிய இருவரும் பதவியிலிருந்து விலக்கப்பட்டு டோரிக் கட்சியினர் அவர்க ளிடத்தில் அமர்த்தப்பட்டனர். ஆனால், வில்லியம், ஆன் அரசி யார் ஆகிய இருவருமே, இரண்டு கட்சிகளிலிருந்து அமைச்சர்களை நியமனம் செய்வது பலனளிக்கவில்லை என்பதை உணர்ந்தனர். அப்பொழுதிலிருந்து டோரிக் கட்சியினர் என்றும், விக்கு கட்சி யினர் என்றும் இரண்டு அரசியல் கட்சிகள் திட்டவட்டமாக உருவாகின.

1714ஆம் ஆண்டில் ஹனோவரியர்கள் ஆங்கில அரியணைப் பட்டத்திற்கு வந்த பின்னர், ஆங்கில மொழி தெரியாத காரணத் தினால் அவர்கள் அமைச்சர் குழுவின் ஆலோசனைக் கூட்டங் களுக்குப் போவதை நிறுத்திக் கொண்டு, அமைச்சர்களுக்கு மிகுதியான உரிமைகளை வழங்கிவிட்டனர். அதன் காரணமாகக் கட்சிகளின் முக்கியத்துவம் பெருகலாயிற்று. பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையாக இருந்த விக்கு கட்சியே அமைச் சர்களைத் தேர்ந்தெடுத்தது. லஞ்சம், பதவி, பட்டம் இவற்றை வழங்குவதன்மூலம் விக்கு கட்சியினர் தமது செல்வாக்கைப் பாராளுமன்றத்தில் வளர்த்துக் கொண்டனர். பின்னர் டோரி களும் அதே முறையைக் கையாள ஆரம்பித்தனர். ஆனால்; 1832ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்திற்குப் பின்னர் நாட்டில் வாக்காளர் தொகை பெருகி விட்டதால், வாக்காளர்களை விலைக்கு வாங்குவதென்பது முடியாத காரியமாகிவிட்டது. ஒரு சில கொள்கைகளை மக்கள்முன் வைத்து அவர்களது ஆதரவைப் பெறக் கட்சிகள் முன்வரலாயின. நாடெங்கும் சென்று தமது பணிகளைச் செய்ய அவை பொருள் திரட்டவும் கிளைக் கழகங்கள் அமைக்கவும் ஆரம் பித்தன.

1832ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சீர் திருத்தச் சட்டத்திற்குப் பின்னர், விக்கு கட்சியினர் இரண்டு பிரிவாகப் பிரிந்தனர். இவர்களில் மிதமானவர்கள் லிபரல்கள் (Liberals) எனப் பெயர் பெற்றனர். மற்றொரு பிரிவில் பணம் படைத்த நிலப்பிரபுக்களோடு பணக்கார ஆலைத் தொழிலதிபர் களும், சில தீவிர சீர்திருத்தவாதிகளும் (Radicals) சேர்ந்தனர். டோரிக் கட்சியிலும் அதே போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. பாராளுமன்றச் சீர்திருத்தத்தை வெளிப்படையாக ஆதரித்த கூட்டம் அக் கட்சியில் பெருகியது. பீல் அத்தகைய சீர்திருத்

தங்களை ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மேலும் அவருடைய ஆதரவாளர்களும் டோரிக் கட்சியின் பெயரை கன்சர்வேடிவ் கட்சி என்று மாற்றிக் கொண்டனர். தானியச் சட்டப் (Corn Laws) பிரச்சினை கன்சர்வேடிவ் (Conservative Party) கட்சியில் பிளவை உண்டாக்கியது. பீலைப் பின்பற்றிய வர்களின் கட்சி, சுயேச்சையாகச் சில ஆண்டுகள் செயல்பட்டுப் பின் இறுதியில் லிபரல் கட்சியில் (Liberal Party) இணைந்து கொண்டது. புதிய சூழ்நிலைக்கு ஏற்ப டிஸ்ரேலி கன்சர்வேடிவ் கட்சியைப் பலப்படுத்தினர். பாமர்ஸ்டனின் தனிப் பெருஞ் செல்வாக்கு, லிபரல் கட்சியின் பிளவிற்கு வழிகோலியது; அவர் இறந்த பின்னர், கிளாட்ஸ்டனின் தலைமையில் லிபரல் கட்சி ஒன்றுபட்ட சக்தியாக மாறியது. இங்ஙனம் இங்கிலாந்தில் கன்சர்வேடிவ் கட்சி (Conservative Party) என்றும், லிபரல் கட்சி (Liberal Party) என்றும் இரு கட்சிகள் தோன்றி வளர்ச்சி யடைந்தன.

இங்கிலாந்தில் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களினுல் தொழிலாளர்களும் வாக்குரிமை பெற்றனர். தொழிற் சங்கங்கள் நாட்டில் வளர்ந்தன. எனவே, தொழிலாளர்களின் நலனைப் பேணிக் காக்க தொழிற்கட்சி ஒன்று நாட்டில் தோன்றலா யிற்று. 1906ஆம் ஆண்டில்தான் இங்கிலாந்தில் தொழிற்கட்சி தோன்றியது. இதற்கு முன்னர் பல தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தொழிற் சங்கங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வந்தன. தவிர, அப்பொழுது மூன்று சோஷியலிஸ்டு இயக்கங்கள் இருந்தன. அவை சமூக ஜனநாயக கூட்டுறவு (Social Democratic Federation), ஃபேபியன் சங்கம் (The Fabian Society , சுதந்திர தொழிற் கட்சி (Independent Labour Party) ஆகும். இவைகளுடன் 64 தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து தொழில் பிரதிநிதித்துவக் குழுவை (Labour Representation Committee) அமைத்தனர். இக் குழுதான் 1906ஆம் ஆண்டில் தொழிற்கட்சி (The Labour Party) என்று பெயரிடப்பெற்றது. இக் கட்சி நாளடைவில் நன்கு வளர்ச்சியடைந்து லிபரல் கட்சியின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. தொழிற்கட்சியின் மகத்தான வளர்ச்சியினுல் லிபரல் கட்சி இங்கிலாந்தில் சிறுபான்மைக் கட்சி, தகுதிக்குத் தள்ளப் பட்டது. ஆகவே, இங்கிலாந்தில் உண்மையில் இப்பொழுது இரு கட்சிகளே செல்வாக்குடன் திகழ்கின்றன. அவைகள் கன்சர் வேடிவ் கட்சியும், தொழிற் கட்சியும் ஆகும்.

கன்சர்வேடிவ் கட்சி

இங்கிலாந்தில் அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே நடந்த போராட்டங்களின் முடிவில் பாராளுமன்றம் வெற்றியைத் தேடிக் கொண்டது. அதன் பின்னர், பாராளுமன்றத்தைச் சீர் திருத்த வேண்டுமென்ற கிளர்ச்சி நாட்டில் வலுத்தது. அப்பொழுது தான் டோரிகள் கன்சர்வேடிவ் கட்சியாகவும், விக்குகள் லிபரல் கட்சியாவும் மாறினர். கன்சர்வேடிவ் கட்சியினரின் முன்னோர்களாகக் கருதப்படத்தக்கவர்கள் முதலாம் சார்லஸ் காலத்து அவரை ஆதரித்த காவலியர்கள் (Cavaliers) ஆவர். அவர்கள் டோரிகள் எனப் பாராளுமன்றத்தவர்களால் கேலியாக அழைக்கப்பட்டனர். அயர்லாந்து நாட்டுக் கத்தோலிக்க கொள்ளைக்காரர்களுக்கு டோரிகள் என்னும் பெயர் இருந்தது. அதை மனத்திற் கொண்டு பாராளுமன்றத்தவர்கள் காவலியர்களை அங்ஙனம் கேலியாக அழைத்தனர். ஸ்காட்லாந்து நாட்டு பிரஸ்பிடீரிய மலைவாழ் முரட்டு வகுப்பினருக்கு விக்குகள் எனப் பெயரிருந்தது. அதை மனதிற் கொண்டு கவாலியர்கள் பாராளுமன்றத்தவர்களைக் கேலியாக விக்குகள் என்று அழைத்தனர்; இங்ஙனம் அரசரை ஆதரித்தவர்களுக்கு டோரிகள் என்றும், பாராளுமன்றத்தை ஆதரித்தவர்களுக்கு விக்குகள் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

1714ஆம் ஆண்டிலிருந்து விக்கு கட்சியினர் நாட்டை ஆண்டு வந்தபோது டோரிகள் எதிர்க் கட்சியாகச் செயல் பட்டு அரசாங்கத்தின் ஊழல்களைக் கண்டித்து வந்தனர். 1770ஆம் ஆண்டில் டோரிகள் ஆட்சியைக் கைப்பற்றி 1830ஆம் ஆண்டுவரை நாட்டை ஆண்டனர். அதன்பின்னர் விக்குகள் ஆட்சியைக் கைப்பற்றினர். அச் சமயத்தில்தான் சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel) என்பவர் கன்சர்வேடிவ் கட்சியை நன்கு உருவாக்கினார். 1824ஆம் ஆண்டில் கானிங் என்னும் அமைச்சர் கன்சர்வேடிவ் என்னும் பெயரை டோரிக் கட்சிக்குச் சூட்டினார் என்றாலும், அதை நன்கு விளம்பரப் படுத்தியவர் பீல் என்பவரே ஆவார். 1834ஆம் ஆண்டில் பீல் என்பவர் டாம்வொர்த் தேர்தல் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவ் வறிக்கையில் கன்சர்வேடிவ் கட்சியின் புதிய கொள்கைகளை அறிவித்திருந்தார். பழைய நிறுவனங்களை அப்படியே தொழுவதென்பது கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கையல்ல என்றும், பழையனவற்றில் இருக்கும் குறைகளை நீக்கி, குணங்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கம் என்றும் அவர் அறிவித்தார். அதனால் கன்சர்வேடிவ் கட்சி நன்கு வளர்ச்சியுற்றது.

நாட்டில் தானியச் சட்டங்களுக்கு அதிக எதிர்ப்பு ஏற்படவே, அவைகளை நீக்கிவிட பீல் முயன்ருர். அதனுல் கன்சர் வேடிவ் கட்சியில் பிளவு ஏற்பட்டது. பீலை ஆதரித்தவர்கள் ஒரு பிரிவாகவும், பீலை எதிர்த்தவர்கள் மற்ருெரு பிரிவாகவும் பிரிந்தனர். பீலின் ஆதரவாளர்கள் லிபரல்களாக மாறினர்! மறுபடியும் டிஸ்ரேலி காலத்தில் கன்சர்வேடிவ் கட்சி நன்கு வலுப் பெற்றது. பல சீர்திருத்தங்களை எதிர்த்து வந்த அக் கட்சி பாராளுமன்றச் சீர்திருத்தங்களை அப்பொழுது ஆதரிக்க முன்வந்தது. 1867ஆம் ஆண்டில் இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தது கன்சர்வேடிவ் கட்சியே யாகும். இரண்டாவது பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டத்தினுல் நாட்டில் வாக்காளர் எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்தது. அதனுல் மக்களிடம் தனது ஆதரவைப் பெருக்க கன்சர்வேடிவ் கட்சி தன்னை வலுப்படுத்திக் கொண்டது,

நாட்டில் பல பகுதிகளில் தனித்தனியாக இயங்கி வந்த தேர்தல் தொகுதி கழகங்கள் யாவும் 1867ஆம் ஆண்டில் ஒரே தேசிய கன்சர்வேடிவ் கட்சியாக (National Conservative Party) அமைக்கப்பட்டது. 1870ஆம் ஆண்டில் அதற்கென்று ஒரு மத்திய அலுவலகமும் இலண்டன் நகரில் ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னர் இவர்கள் நாட்டில் பல சீர்திருத்தங்களை ஏற் படுத்தினர். அயர்லாந்தின் சுயாட்சியை விரும்பாத பல லிபரல் கட்சியினர் இக் கட்சியில் சேர்ந்து யூனியனிஸ்ட் (Unionist) கட்சி ஒன்றை உருவாக்கினர். ஆனுல், 1922ஆம் ஆண்டில் அயர்லாந்து சுயேச்சை நாடாக அறிவிக்கப்பட்ட பின்பு, கன்சர் வேடிவ் கட்சி தன் பழைய உருவெடுத்தது. சேம்பர்லெய்ன் என்பார் கொண்டு வந்த காப்பு வரிக் கொள்கையை கன்சர்வேடிவ் கட்சியிலுள்ள சிலர் எதிர்த்தனர். அத்தகையோர் கன்சர் வேடிவ் கட்சியினின்று வெளியேறினர். அதன்பின்னர் காப்பு வரிக் கொள்கையை ஆதரித்தோர் திரண்டு ஒரே கன்சர் வேடிவ் கட்சியாக நின்று ஒற்றுமையுடன் பணியாற்றினர்.

ஆங்கிலப் பேரரசு கலையாமல் இருக்க வேண்டுமென்பதும், அரசர், பிரபுக்கள் சபை, ஆங்கிலிக்கத் திருச்சபை ஆகியவைகள் மாருமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும் கன்சர்வேடிவ் கட்சியின் முக்கிய கொள்கைகளாகும். சமுதாயத்தில் முதலாளித் துவ முறையையும், தனியார் துறையையும் காக்கவேண்டு மென்பது இக்கட்சியின் கொள்கையாகும். இதனுல் முதலாளி களும், தொழிலதிபர்களும், பிரபுக்களும் பெரும்பான்மையினராக கன்சர்வேடிவ் கட்சியில் உறுப்பினர்களாக உள்ளனர். பிற்

போக்குக் கட்சியென்ற குற்றச் சாட்டை நீக்குவதற்காக, கன்சர் வேடிவ் கட்சியும் தன் கொள்கைகளைக் காலப்போக்கில் மாற்றி யமைத்துக் கொண்டுள்ளது. கட்சியிலுள்ள இளம் உறுப்பினர்கள் பொருளாதாரத் துறையில் கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் கூடா தென்றும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியே வேண்டு மென்றும் கேட்டதனுல், 1947ஆம் ஆண்டில் கட்சியின் கொள்கை யில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. 1951ஆம் ஆண்டில் தேசியப் பாதுகாப்பிற்கு அடுத்தபடியாக, வீட்டு வசதிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்ற கொள்கையைக் கன்சர் வேடிவ் கட்சி ஏற்றுக் கொண்டது. இக் கட்சி இங்கிலாந்தில் இப்பொழுதும் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. இக் கட்சிக்கு முதலாளிகளும், தொழிலதிபர்களும், பிரபுக்களும், இராணுவ அதிகாரிகளும், உயர் நடுநிலை வகுப்பாரில் பலரும், பெண்களில் பாதிக்குமேற்பட்டவர்களும் பெரிதும் ஆதரவு தரு கின்றனர்.

கன்சர்வேடிவ் கட்சிக்கு நாடெங்கும் கிளைகள் உள்ளன. அவை தேர்தல் தொகுதிக் கழகங்கள் (Constituency Associations) எனப்படும். அவையாவும் கட்சி மேலிடத்திற்குக் கட்டுப்பட்டவைகளாகும். கட்சியின் மத்திய அலுவலகம் இடும் கட்டளைகளின்படி அத் தொகுதிக் கழகங்கள் செயல்படும். அத்தகைய தொகுதிக் கழகங்கள் அந்தந்தத் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் செய்தல், தேர்தல்களில் ஆட்களைத் தெரிந்தெடுத்து நிறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடு கின்றன. ஒவ்வொரு தொகுதிக் கழகமும் நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கும். கட்சியின் மத்திய நிர்வாகக் குழு உறுப் பினர்கள் இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சில உறுப் பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். கட்சியின் முக்கிய பிரதி நிதிகள் சேர்ந்து கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இக்கட்சி பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்ருல், இக் கட்சியின் தலைவர் தான் பிரதம அமைச்சராவார். அத்துடன் அரசியார் இக் கட்சியில் யாரை பிரதமர் பதவியேற்கும்படி கேட்டுக் கொள்கின்ருரோ அவரே கட்சியின் தலைவராகவும் இருப்பார். இது கன்சர்வேடிவ் கட்சியின் முக்கிய மரபாகும். கட்சியின் தலைவர் மிகவும் செல்வாக்குப் பெற்றவராகத்தான் இருப்பார். கட்சியை வளர்க்க வேண்டிய பொறுப்பு அவருடையதே ஆகும். கட்சிக்காக நிதியைத் திரட்டுவதும் அவருடைய பொறுப்பே ஆகும். கட்சியின் தலைவர் திறமையும், ஆற்றலும், செல்வாக்கும் பெற்றிருந்தால்தான் ஆங்கில நாட்டுப் பொதுத் தேர்தலில் அக்கட்சி வெற்றியடைய முடியும். கன்சர்வேடிவ்

கட்சி தோன்றியதிலிருந்து ஆண்களே கட்சியின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். ஆனால், இப்பொழுதுதான் மார்கரெட் தேச்சர் என்னும் பெண்மணி கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக இருக்கிறார். அடுத்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றிபெற்றால். இந்தியாவில் திருமதி இந்திராகாந்தி பிரதமராக இருந்தது போன்று அங்கும் ஒரு பெண்மணி முதன் முதலாக பிரதம அமைச்சராக ஆகும் வாய்ப்பு உள்ளது.

தொழிற் கட்சி

தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடும் இக்கட்சியானது இன்று இங்கிலாந்தின் மாபெரும் கட்சியாகவும், ஆளுங் கட்சியாகவும் விளங்குகின்றது. ஹெரால்டு வில்ஸன் (Harold Wilson) பிரதமர் பதவியை 1976ஆம் ஆண்டில் ராஜிநாமா செய்தவுடன் ஜேம்ஸ் காலஹான் (James Callaghan) பிரதமராக நியமிக்கப் பட்டார். இன்று பாராளுமன்றத்தில் தொழிற்கட்சியும் அதன் ஆதரவாளர்களும் 315 இடங்களையே பெற்றுள்ளனர். அதே சமயத்தில் கன்சர்வேடிவ் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் 314 இடங்களைப் பெற்றிருக்கின்றனர். 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் தேதி நடைபெற்ற இடைத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்றதனால்தான் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. அதனால் 314 ஆதரவாளர்களையே கொண்டு ஆட்சி செய்துவந்த தொழிற்கட்சி இப்போது 315 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி செய்து வருகின்றது. ஆனால், 1979ஆம் ஆண்டுவரை தொழிற் கட்சியின் ஆட்சி நிலைக்குமா? என்பது கேள்விக் குறியாகவும் உள்ளது. 1979ஆம் ஆண்டிற்கு முன்பேகூட தகுந்த சூழ்நிலையில் ஜேம்ஸ் காலஹான் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தலை நடத்தினாலும் நடத்தலாம். ஆனால், ஜூன் மாதம் 25ஆம் தேதி நடந்த இடைத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்ற போதிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறவில்லை. ரோத்தர்ஹான் (Rotherhan) என்ற தொகுதியில்தான் இடைத் தேர்தல் நடந்தது. அத் தொகுதி தொழிற்கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்டது. கடந்த பொதுத்தேர்தலில் அத் தொகுதியில் தொழிற்கட்சியின் உறுப்பினர் கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினரைவிட 17,034 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். ஆனால், இந்த இடைத்தேர்தலில் தொழிற்கட்சியின் உறுப்பினரான ஸ்டேன்லி குரோதர் (Stanley Growther) என்பவர் கன்சர்வேடிவ் உறுப்பினரைவிட 4527 வாக்குகளே அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அதனால் தொழிற் கட்சியின்

செல்வாக்கு இப்பொழுது நாட்டில் குறைந்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. அடுத்த தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெறுமா? என்பதும் கேள்விக் குறியாக உள்ளது,

தொழிற் சங்கங்களிலிருந்து முளைத்ததே தொழிற்கட்சி யாகும். 1825ஆம் ஆண்டிற்கு முன் தொழிற்சங்கங்கள் சட்ட விரோத மானவைகளாகக் கருதப்பட்டன. ஒன்று கூடல் சட்டங்களின்படி தொழிலாளர்கள் ஒன்றுகூடி சங்கம் அமைப்பதே குற்றமாகக் கருதப்பட்டது. 1825ஆம் ஆண்டில் அத்தகைய சட்டங்கள் ஒழிக்கப்பட்டன. அதிலிருந்து தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகத் தங்களுக்கென்று தொழிற்சங்கங்களை அமைத்துக் கொண்டனர். 1867, 1884ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டங்களால் ஏராளமான தொழிலாளர்கள் வாக்குரிமையும் பெற்றனர். அதனால் தொழிலாளர் சங்கங்கள் தமது பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்ப முயன்றன. அதன் விளைவாக இரண்டு தொழிலாளர்கள் 1874 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தொழிற் சங்கங்கள் நாளுக்கு நாள் வலிமையடைந்துகொண்டே சென்றன. சமதர்ம வாதிகள் அதில் நுழைந்தனர். 1884ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட ஃபேபியன் கழகம் பாராளுமன்றத்தில் தொழிலாளர்கள் இடம்பெற வேண்டுமென வற்புறுத்தியது. தொழிலாளர்களுக்கென்று 1893ஆம் ஆண்டில் கேர் ஹார்டி (Keir Hardie) என்பவர் ஒரு கட்சியை ஆரம்பித்தார். அக்கட்சி சுதந்திரத் தொழிற்கட்சி (Independent Labour Party) என அழைக்கப் பட்டது.

பாராளுமன்றத்திற்குத் தொழிற்சங்க உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை ஆராய்வதற்காக ஒரு கூட்டம் கூட்டப் பட்டது. அக் கூட்டத்தைக் கூட்டுவதற்காக ஜார்ஜ் பெர்னட்ஷா, கேர் ஹார்டி, ராம்சே மாக்டனல்டு ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அக் கூட்டத்திற்குத் தொழிற் சங்கங்கள், சமதர்மக் கழகங்கள் ஆகியவைகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன, அப் பிரதிநிதிகள் இலண்டனில் கூடித் தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழு (Labour Representation Committee) ஒன்றை ஏற்படுத்தினர். அதுவே நாளடைவில் தொழிற்கட்சி (Labour Party) எனப் பெயர் பெற்றது. அக்குழுவில் தொழிற் சங்கங்களும், சுதந்திரத் தொழிற் கட்சியும், ஃபேபியன் கழகமும் இடம் பெற்றிருந்தன. இங்ஙனம் இன்றைய தொழிற் கட்சியானது தொழிற் சங்கங்கள், சமதர்மக்

கழகங்கள், கூட்டுறவுக் கழகம், தேர்தல் தொகுதிக் கிளைக் கழகங்கள் ஆகியவைகளின் உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

தொழிற்கட்சி சமதர்மக் கொள்கையில் (Socialism) ஆழ்ந்த நம்பிக்கையுடையது. தொழிற் கட்சியின் முக்கியக் கொள்கை மக்களாட்சியின் மூலம் பொதுவுடைமைச் சமுதாயத்தை அடைவதாகும். நாட்டில் அரசியல், சமூக, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துதல்; உழைப்பாளிகளின் ஊதியத்தை உயர்த்துதல்; கல்வி, சுகாதார வசதிகள், வேலை வாய்ப்புகளை அதிகமாக்குதல், சமூக நலநாட்டை ஏற்படுத்துதல், ஆங்கிலப் பேரரசிலுள்ள பகுதிகளுக்கு சுயாட்சி அளித்து, அவைகளை அரசியல் பொருளாதாரத் துறைகளில் வளரச் செய்தல், ஐக்கிய நாடுகள் சபையைப் பயன்படுத்தி உலக அமைதியை நிலை நாட்டுதல் முதலியவைகள் தொழிற் கட்சியின் முக்கிய கொள்கைகளாகும்.

1906ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தொழிற்கட்சி வேகமாக வளர்ந்து லிபரல் கட்சியின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. தொழிற் கட்சியின் மகத்தான வளர்ச்சியினால் லிபரல் கட்சி ஒரு சிறுபான்மைக் கட்சியின் தகுதிக்குத் தள்ளப்பட்டது. 1922ஆம் ஆண்டிலிருந்து தொழிற்கட்சி இங்கிலாந்தின் பெரும் அரசியல் கட்சியாக இயங்கி வருகின்றது. 1924ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ராம்சே மாக்டனால்டு என்பவரின் தலைமையில் தொழிற் கட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் அமைச்சரவையை அமைத்தது. அதற்குப் பின்னர் எஃகு, நிலக்கரி, ரயில்வே முதலிய முக்கிய தொழில்களைத் தேசிய உடைமையாக்கியது. மிகவும் முற்போக்கான எண்ணங்களையுடைய தொழிற்கட்சியினர் தான் இந்தியாவுக்கு 1947ஆம் ஆண்டில் சுதந்திரத்தை வழங்கினர். இன்றைய ஜேம்ஸ் காலஹானின் தொழிற்கட்சி ஆட்சியில் அநேகமாக எல்லாக் குடியேற்ற நாடுகளும் சுயேச்சை பெற்றுவிட்டன.

தொழிற் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் சாதாரண நடுத்தர வர்க்கத்தவரும், தொழிலாளிகளுமே யாவர். மார்க்ஸீயக் கொள்கையுடைய ஒரு சிலர் தொழிற் கட்சியிலும் இருக்கின்றனர். ஆனால், தொழிற் கட்சி மார்க்ஸின் கொள்கைகளையும் முக்கியமாக அவரது வர்க்கப் போராட்டக் கொள்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. தொழிற் கட்சி மக்களாட்சியின் முறையில் பொதுவுடைமைக் கொள்கையை நிறைவேற்றப் பாடுபட்டு வருகிறது.

தொழிற் கட்சிக்கு ஒவ்வொரு தொகுதியிலும் கிளைக் கழகங்கள் உண்டு- இவைகள் தொழிற் கட்சியின் சொந்த உறுப்புகளாகும். இவைகளைத் தவிர, கூட்டுச் சேர்ந்த கழகங்களும் ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கின்றன. தொழிற்சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், சமதர்மக் கழகங்கள் ஆகியவை அத்தகைய கூட்டுச் சேர்ந்த கழகங்களாகும் ஒவ்வொரு தொகுதியிலும் கட்சிக் கூட்டம் மாதமொருமுறை நடைபெறும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு நிர்வாகக் குழு (Exceeutive Committee) உண்டு. அத்தகைய நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள கட்சி உறுப்பினர்களாலும், கூட்டுச் சேர்ந்த கழகங்களின் உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். தொகுதிகளைச் சார்ந்த கிளைக் கழகங்களே பாராளுமன்றத்திற்கும், தலஆட்சி மன்றங்களுக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும். தேர்தல் பிரச்சாரம் போன்றவைகளை அவைகளே கவனித்துக் கொள்ளும். அவைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களை தேசியச் செயற்குழு அங்கீகரித்த பின்னரே, அவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும்.

ஆண்டுதோறும் கட்சி மாநாடு கூடுகின்றது. அக் கட்சி மாநாடுதான் கட்சியின் தலைமை பெற்ற நிறுவனமாகும். அக் கட்சி மாநாட்டுக்குத் தொகுதிக் கிளைக் கழகங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகின்றன. அக் கட்சி மாநாட்டில் தான் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இச் செயற்குழுவில் 27 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்த 27 உறுப்பினர்களில், 12 உறுப்பினர்கள் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளாலும், 7 உறுப்பினர்கள் தலக்கட்சி அமைப்புகளாலும் ஓர் உறுப்பினர் கூட்டுறவுச் சங்கங்களினாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநாடு 5 பெண் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. இதனுடன் பாராளுமன்றத் தொழிற்கட்சித் தலைவரும், பொருளாளரும் பதவிபற்றிய உறுப்பினர்களாக (Ex-Officio Members) இருக்கிறார்கள். தேசியச் செயற்குழு மாதமொரு முறை கூடுகின்றது, கூட்டம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடைபெறும். கட்சி மாநாட்டின்மீது இது பெரும் அதிகாரமும் செல்வாக்கும் செலுத்துகின்றது. அத்துடன் கட்சியின் கொள்கைகளை வகுப்பதும் அதுவே யாகும்.

தேசியச் செயற்குழுவைத் தவிர, தொழிலாளர்களின் தேசியக் கவுன்சிலும் இருக்கின்றது. இதில் 21 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 7 உறுப்பினர்களைத் தொழிற்சங்க காங்கிரசும், 8 உறுப்பினர்களைத் தொழிற் கட்சியின் தேசிய

செயற்குழுவும், 4 உறுப்பினர்களைப் பாராளுமன்றத் தொழிற் கட்சியும், 7 உறுப்பினர்களைக் கூட்டுறவு யூனியனும் தேர்ந்தெடுக்கின்றன. இஃது ஓர் ஆலோசனைக் குழுவாகும். கட்சியின் பல்வேறு அமைப்புகளுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவது தான் இதன் பொறுப்பாகும். ஆகவே, தொழிற் கட்சியின் அமைப்பு மற்றக் கட்சிகளைவிடப் பெருமளவு மக்கள் சார்புடையதாய் இருக்கின்றது. அத்துடன் கட்சியின் வரவு செலவு கணக்குகள் ஆண்டுக்கொருமுறை வெளியிடப்படுவதால், பொதுமக்கள் கட்சியின் நாணயத்தைப்பற்றி சந்தேகப்பட வழியில்லை.

லிபரல் கட்சி

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் ஒரு தனிப் பெரும் கட்சியாகத் திகழ்ந்த விக்கு கட்சியே நாளடைவில் லிபரல் கட்சி (Liberal Party) என அழைக்கப்பட்டது. இக் கட்சி நாட்டில் ஒரு வலிமை பெற்ற கட்சியாகவும் 1714ஆம் ஆண்டிலிருந்து 1762ஆம் ஆண்டு வரையும், 1830ஆம் ஆண்டிலிருந்து 1874ஆம் ஆண்டு வரையிலும் ஆளும் கட்சியாகவும் இங்கிலாந்தில் விளங்கியது. நாட்டில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்று கூறிவந்த டோரிக் கட்சியினருக்கு எதிராக, அரசியலமைப்பும், அரச பதவியும் ஏனைய நிறுவனங்களும் மாற்றப்படத் தக்கவையே என்றும், மக்களின் எண்ணங்களுக் கேற்றவாறும், மக்களின் நன்மையைக் கருதியும் அவற்றை மாற்றுவதே முறை என்றும் இக் கட்சியினர் கூறிவந்தனர். பாராளுமன்றத்தின் இறைமை, சமுதாயச் சீர்திருத்தம், தடையற்ற வாணிபக் கொள்கை, சமயப் பொறை, தாழ்த்தப்பட்டவர்களின் நிலையில் உயர்வு போன்ற தாராளக் கொள்கைகளை இக் கட்சியினர் ஆதரித்தனர். ஆனால் இந்தக் கட்சியின் கொள்கைகளை ஏனைய கட்சிகளும் ஏற்றுக் கொண்டதனால் லிபரல் கட்சி இன்று ஒரு சிறுபான்மைக் கட்சியாக மாறிவிட்டது.

மற்றக் கட்சிகளைப் போலவே லிபரல் கட்சிக்கும் தொகுதிக் கிளைக் கழகங்கள் உள்ளன. இக் கட்சிக்கு மத்திய கழகமும் இருக்கின்றது. மத்தியக் கழகம் தேசிய லிபரல் கூட்டுக் கழகம் (National Liberal Federation) என அழைக்கப்படுகின்றது. ஆண்டுக்கொருமுறை கட்சி மாநாடு நடைபெறும். அம் மாநாட்டில் கட்சியின் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கட்சியை நிர்வகிக்க செயற்குழு ஒன்றும் கட்சியின் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இக் கட்சியின் உறுப்பினர்கள் பெரும் பணக்காரர்களோ, தொழிலதிபர்களோ, முதலாளிகளோ, தொழி

லாளர்களோ அல்லர். நடுத்தர வகுப்பினரில் சிலரே இதில் அதிகம் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

மற்றக் கட்சிகள்

1920ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் லெனின் என்பாரின் ஆலோசனைப்படி பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Britain) ஒன்று தனியாகத் துவக்கப்பட்டது. முதலில் தொழிற் கட்சியுடன் இணைய வேண்டுமென்று அது முயற்சி செய்தது. ஆனால், அந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை. இப்பொழுது கம்யூனிஸ்டு கட்சி ஒரு தனி அரசியல் கட்சியாக இயங்கி வருகின்றது.

பிரிட்டிஷ் யூனியன் ஆப் ஃபேசிஸ்டுகள் (British Union of Fascists) என்ற ஒரு கட்சி முதல் உலகப் போருக்குப் பின்னர் இங்கிலாந்தில் தோன்றியது. சர் ஆஸ்வால்ட் மோஸ்லி (Sir Oswald Moslely) என்ற பாராளுமன்ற சுயேச்சை உறுப்பினர்தான் இக் கட்சியை ஆரம்பித்தார். 1931ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இக் கட்சி 24 இடங்களில் போட்டியிட்டு அனைத்திலும் தோற்றது. 1940ஆம் ஆண்டில் இக் கட்சியை அரசாங்கம் தடை செய்தது. அதனால் 1948ஆம் ஆண்டில் சர் ஆஸ்வால்ட் மோஸ்லி 'யூனியன் இயக்கம்' (Union Movement) என்ற ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1966ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் இவ்வியக்கத்தினர் படுதோல்வி யடைந்தனர். அவர்கள் 3·7 சதவிகித வாக்குகளே பெற்றனர்.

1925ஆம் ஆண்டில் வெல்ஷ் தேசியக் கட்சி (Welsh National Party) ஒன்று துவக்கப்பட்டது. தேர்தல்களில் போட்டியிட்டு இக் கட்சி தோற்றுக் கொண்டே வந்தது. இக் கட்சியில் ஈஸ்டர் கலகத்தின்போது வேறுபாடுகள் தோன்றின. அதனால் இக் கட்சியின் வளர்ச்சி தடைப்பட்டது.

1928ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்து தேசியக் கட்சி (Scotish National Party) ஒன்றும் நிறுவப்பட்டது. மேலும் சில கட்சிகள் அவ்வப் பொழுது தோன்றி சிறிது காலத்திற்குள் மறைந்தன.

கடந்த நூறு ஆண்டுக் காலமாகவே இங்கிலாந்தில் இரண்டே அரசியல் கட்சிகள் (கன்சர்வேடிவ் கட்சி, தொழிற்கட்சி) மட்டுமே முக்கியமான அரசியல் கட்சிகளாக விளங்கி வருகின்றன. அவ்வப் பொழுது கட்சிகளில் பிளவு ஏற்படும்பொழுது சிறிய அரசியல்

கட்சிகள் தோன்றின. உதாரணமாக 1917ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தேசியக் கட்சியும் (National Party), 1918ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய ஜனநாயகக் கட்சியும் (National Democratic Party) அங்ஙனமே ஏற்பட்டன. ஆனால், அக் கட்சிகள் விரைவில் மறைந்துவிட்டன. ஆகவே, இங்கிலாந்தில் இன்றளவும் நிலைத்து நின்று முக்கியத்துவம் பெற்று விளங்குவன கன்சர்வேடிவ் கட்சியும் தொழிற் கட்சியுமே யாகும்.

அரசர், அரசியர்களின் பட்டியல்

ஸ்டூவர்ட்டுகள்

முதலாம் ஜேம்ஸ்	— கி. பி. 1603—1625
முதலாம் சார்லஸ்	— கி. பி. 1625—1649
இரண்டாம் சார்லஸ்	— கி. பி. 1660—1685
இரண்டாம் ஜேம்ஸ்	— கி. பி. 1685—1688
மூன்றும் வில்லியம்	— கி. பி. 1689—1702
மேரி	— கி. பி. 1689—1694
ஆன்	— கி. பி. 1702—1714

ஹனேவரியர்கள்

முதலாம் ஜார்ஜ்	— கி. பி. 1714—1727
இரண்டாம் ஜார்ஜ்	— கி. பி. 1727—1760
மூன்றும் ஜார்ஜ்	— கி. பி. 1760—1820
நான்காம் ஜார்ஜ்	— கி. பி. 1820—1830
ஆறும் வில்லியம்	— கி. பி. 1830—1837

வின்ஸ்டர்கள்

விக்டோரியா மகாராணியார்	— கி. பி. 1837—1901
ஏழாம் எட்வர்டு	— கி. பி. 1901—1910
ஐந்தாம் ஜார்ஜ்	— கி. பி. 1910—1936
எட்டாம் எட்வர்டு	— கி. பி. 1936 —
ஆறும் ஜார்ஜ்	— கி. பி. 1936—1952
இரண்டாம் எலிஸபெத்	— கி. பி. 1952 —

அமைச்சரவைகளின் பட்டியல்

(ஹனேவரியர்களின் காலத்திலிருந்து)

ஸ்டான்ஹோம் டவுன் செண்டு	—	கி. பி. 1714—1717
ஸ்டான்கோப்	—	கி. பி. 1717—1721
வால்போல்	—	கி. பி. 1721—1742
கார்ட்டரெட்	—	கி. பி. 1742—1744
பெல்ஹாம்	—	கி. பி. 1744—1754
நியூகாசில் பிரபு (1)	—	கி. பி. 1754—1756
டெவன்டியர்	—	கி. பி. 1756—1757
நியூகாசில் பிரபு (2)	—	கி. பி. 1757—1761
பூட்	—	கி. பி. 1761—1763
கிரென்வெல்	—	கி. பி. 1763—1765
ராக்கிங்ஹாம் (1)	—	கி. பி. 1765—1766
மூத்த பிட்	—	கி. பி. 1766—1768
கிராஃப்டன்	—	கி. பி. 1768—1770
நார்த் பிரபு	—	கி. பி. 1770—1782
ராக்கிங்ஹாம் (2)	—	கி. பி. 1782 —
ஷெல்பர்ன்	—	கி. பி. 1782—1783
ஃபாக்ஸ்	—	கி. பி. 1783 —
இளைய பிட் (1)	—	கி. பி. 1783—1801
ஆடிங்டன்	—	கி. பி. 1801—1804
இளைய பிட் (2)	—	கி. பி. 1804—1806
கிரென்வில் ஃபாக்ஸ்	—	கி. பி. 1806—1807
போர்ட்லந்து	—	கி. பி. 1807—1809
பெர்சிவல்	—	கி. பி. 1809—1812
லிவர்பூல்	—	கி. பி. 1812—1827
கானிங் பிரபு	—	கி. பி. 1827 —
காடரிச்	—	கி. பி. 1827—1828
வெலிங்டன் பிரபு	—	கி. பி. 1828—1830

கிரே	—	கி. பி. 1830—1834
மெல்போர்ன் (1)	—	கி. பி. 1834 —
பீல் (1)	—	கி. பி. 1834—1835
மெல்போர்ன் (2)	—	கி. பி. 1835—1841
பீல் (2)	—	கி. பி. 1841—1846
ரஸ்ஸெல் பிரபு (1)	—	கி. பி. 1846—1852
டெர்பி	—	கி. பி. 1852 —
அபெர்டீன்	—	கி. பி. 1852—1855
பாமர்ஸ்டன் (1)	—	கி. பி. 1855—1858
டெர்பி (2)	—	கி. பி. 1858—1859
பாமர்ஸ்டன் (2)	—	கி. பி. 1859—1865
ரஸ்ஸெல் பிரபு (2)	—	கி. பி. 1865—1566
டெர்பி (3)	—	கி. பி. 1866—1868
டிஸ்ரேலி (1)	—	கி. பி. 1868 —
கிளாட்ஸ்டன் (1)	—	கி. பி. 1868—1874
டிஸ்ரேலி (2)	—	கி. பி. 1874—1880
கிளாட்ஸ்டன் (2)	—	கி. பி. 1880—1885
சாலிஸ்பரி (1)	—	கி. பி. 1885—1886
கிளாட்ஸ்டன் (3)	—	கி. பி. 1886 —
சாலிஸ்பரி (2)	—	கி. பி. 1886—1892
கிளாட்ஸ்டன் (4)	—	கி. பி. 1892—1894
ரோஸ்பரி	—	கி. பி. 1894—1895
சாலிஸ்பரி (3)	—	கி. பி. 1895—1902
பால்ஃபர்	—	கி. பி. 1902—1905
காம்ப்பெல் பானர்மேன்	—	கி. பி. 1905—1908
ஆஸ்க்வித் (1)	—	கி. பி. 1908—1915
ஆஸ்க்வித் (2) (கூட்டு அமைச்சரவை)	—	கி. பி. 1915—1916
லாயிட் ஜார்ஜ்	—	கி. பி. 1916—1922
போனர்லா	—	கி. பி. 1922—1923
பால்டுவின் (1)	—	கி. பி. 1923—1924
மாக்டனல்டு (1)	—	கி. பி. 1924 —
பால்டுவின் (2)	—	கி. பி. 1924—1929
மாக்டனல்டு (2)	—	கி. பி. 1929—1931

மாக்டனுல்டு பால்டுவின் தேசிய அரசு	—	கி. பி. 1931—1935
பால்டுவின் (3)	—	கி. பி. 1935—1937
சேம்பர்லேன்	—	கி. பி. 1937—1940
சர்ச்சில் (1)	—	கி. பி. 1940—1945
அட்லி	—	கி. பி. 1945—1951
சர்ச்சில் (2)	—	கி. பி. 1951—1955
அந்தோனி ஈடன்	—	கி. பி. 1955—1957
மாக்மில்லன்	—	கி. பி. 1957—1964
ஹியூம்	—	கி. பி. 1964 —
வில்ஸன்	—	கி. பி. 1964—1970
எட்வர்டு ஹீத்	—	கி. பி. 1970—1975
வில்ஸன்	—	கி. பி. 1975—1976
ஜேம்ஸ் காலஹென்	—	கி. பி. 1976—

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

1. D. L. Keir: The Constitutional History of Modern Britain.
2. Godfrey Davies: The Early Stuarts (1603—1660).
3. G. B. Adams: Constitutional History of England.
4. F.W. Maitland: The Constitutional History of Modern Britain.
5. Sir Ivor Jennings: Parliament.
6. Sir Ivor Jennings: Party Politics.
7. Sir Ivor Jennings: Cabinet Government.
8. Ashley Maurice: Great Britain upto 1688.
9. Macaulay: History of England.
10. Rayner, R. M.: England in Tudor and Stuart Times.
11. A. B. Keith: The British Cabinet System.
12. N. H. Brasher: Studies in British Government.
13. Gardiner: History of England.
14. Gobbett: Parliamentary History.
15. P. F. Keeler: The Long Parliament.
16. MacKintosh: History of Revolution.
17. R. T. MacKenzie: British Political Parties.
18. Lecky: History of England.
19. K. R. MacKenzie: The English Parliament.
20. J. P. MacKintosh: The British Cabinet.
21. Havey and Bather: The British Constitution.
22. R.M. Jackson: The Machinery of Local Government.
23. Eric Jackson: The Structure of Local Government in England and Wales.

24. S. R. Nigam: Local Government.

25. Bagehot: The English Constitution.

26. V. D. Mahajan: England since 1485.

27. W. J. M. MacKenzie and J. W. Grove: Central Administration in Britain.

28. Pelling, H.: Modern Britain (1885—1955).

29. வீ. கண்ணையா: பிரிட்டனின் அரசாங்கமும் அரசியலும்.

30. வீ கண்ணையா: ஆங்கிலப் பாராளுமன்றம்.

31. என். ஜே. இராஜகோபால்: ஆங்கிலநாட்டு அரசியலமைப்பு.

32. கி. ர. அநுமந்தன்: பிரிட்டன் வரலாறு (Vol. I, II, III).

கலைச்சொற்கள்

A

Abdication — முடி துறப்பு
Act of Settlement — அரசுரிமை நிருணயச் சட்டம்
Act of Supremacy — சமய முதன்மைச் சட்டம்
Act of Succession — வாரிசுரிமைச் சட்டம்
Act of Uniformity — சமய ஒருமைச் சட்டம்
Act of Union — ஐக்கியச் சட்டம்
Addled Parliament — பயனற்ற பாராளுமன்றம்
Adjournment — தள்ளிவைப்பு
Administrative Law — நிருவாகச் சட்டம்
Agrarian Revolution — விவசாயப் புரட்சி
Alderman — நகரமுதுவர்
Allies — நேச நாடுகள்
Appropriation Bill — பண ஒதுக்கீட்டு மசோதா
Arbitration — நடுவர் தீர்ப்பு
Archbishop — அதிமேற்றிராணியார்
Assize Court — மாவட்ட ஆணையாளர் நீதிமன்றம்
Autocracy — தனி வல்லாட்சி

B

Bill — மசோதா
Bill of Rights — உரிமைகள் மசோதா
Bishop — மேற்றிராணியார்
Board of Trade — வர்த்தக வாரியம்
Budget — நிதிநிலை அறிக்கை
Bureaucracy — ஆளும் இனம்

C

Cabinet — அமைச்சர் குழு
Capitalism — முதலாளித்துவம்
Case Law — வழக்குச் சட்டம்

Casting vote	— முடிவு திர்ணயிக்கும் வாக்கு.
Central Powers	— அச்சு நாடுகள்
Chancellor of Exchequer	— நிதித்துறை முதல்வர்
Church	— திருச்சபை
Civil Court	— பொதுவியல் வழக்கு நீதி மன்றம்
Coalition Ministry	— கூட்டு அமைச்சரவை
Collective Responsibility	— கூட்டுப் பொறுப்பு
Colonies	— குடியேற்ற நாடுகள்
Committee	— குழு
Common Law	— பொதுச் சட்டம்
Constitution	— அரசியலமைப்பு
Corn Law	— தானியச் சட்டம்
Coroner	— பிண ஆய்வாளர்
Coup d' etat	— திடீர் அரசியல் புரட்சி
Court of Admirality	— கடற்படை நீதிமன்றம்
Court of Appeal	— மேல் முறையீட்டு நீதிமன்றம்
Court of Bankruptcy	— நொடிப்பு நீதிமன்றம்
Court of Common Pleas	— பொதுவழக்கு நீதிமன்றம்
Court of Divorce	— மணமுறிவு நீதிமன்றம்
Court of Exchequer	— நிதித்துறை நீதிமன்றம்
Court of High Commission	— உயர் ஆணை நீதிமன்றம்
Court of Probate	— இறப்புறுதிச் சான்று (உயில்) நீதிமன்றம்
Court of Star Chamber	— விண்மீன் நீதிமன்றம்
Criminal Court	— குற்றவியல் வழக்கு நீதி மன்றம்
Customs duty	— சுங்க வரி

D

Declaration of Rights	— உரிமைகள் அறிவிப்பு
Delegated Legislation	— கொடுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம்
Deflation	— பணச் சுருக்கம்
Diplomacy	— அரசியல் செயலாட்சி நயம்
Direct taxes	— நேர்முக வரிகள்
Dispensing Power	— சட்ட விலக்கு அதிகாரம்
Dissenters	— இணங்காதார்
Divine Right Theory	— தெய்விக உரிமைக் கொள்கை.

E

Ecclesiastical Commission Court — சமய உயர் ஆணை நீதிமன்றம்
Electorate — வாக்காளர்
Emergency — நெருக்கடி நிலைமை
Enclosure Act — அடைப்புச் சட்டம்
Excise duty — கலால் வரி
Exclusion Bill — அரசுரிமை விலக்கு மசோதா

F

Factory Act — தொழிற்சாலைச் சட்டம்
Feudalism — நிலமானிய முறை
Five Mile Act — ஐந்து மைல் சட்டம்
Floating vote — நிலையற்ற வாக்கு
Forced Loans — கட்டாயக் கடன்கள்

G

Glorious Revolution — மேதகு புரட்சி
Governor — ஆளுநர்
Grand Remonstrance — பெருங்கண்டனப் பத்திரம்
Great Council — பேரவை

H

Habeas Corpus Act — ஆட்கொணர் ஆணைச் சட்டம்
High Court — உயர் நீதிமன்றம்
Holly Alliance — புனிதக் கூட்டுறவு
Home Rule Bill — சுயாட்சி மசோதா
House of Commons — பொதுமக்கள் சபை
House of Lords — பிரபுக்கள் சபை

I

Immune — காப்புறுதி
Impeachment — கடுங்குற்ற விசாரணை
Indemnity Law — விலக்குரிமைச் சட்டம்
Indirect tax — மறைமுக வரி
Industrial Revolution — தொழிற்புரட்சி
Inflation — பண வீக்கம்

Invention — புதுமைப் படைப்பு
Isolationism — தலையிடாக் கொள்கை

J

Judicature Act — நீதித்துறைச் சட்டம்
Judiciary — நீதித் துறை
Jurisdiction — அதிகார வரம்பு
Jury — சான்றாயர்
Justice of Peace — அமைதிகாண் நடுவர்
Juvenile criminals — இளம் குற்றவாளிகள்

K

King — அரசர்
Kingship — அரசர் பதவி

L

Land Act — நிலச் சட்டம்
Legal Sovereignty — சட்ட இறைமை
Liberalism — தாராளக் கொள்கை
Licensing Act — தகுதிச் சான்றிதழ்ச் சட்டம்
Limited Monarchy — வரையறுக்கப்பட்ட முடியாட்சி
Local Courts — தல நீதிமன்றங்கள்
Local Governments — தல ஆட்சி மன்றங்கள்
Long Parliament — நீடித்த பாராளுமன்றம்
Lord Protector — காப்பாளர் பிரபு
Lord Treasurer — கருவூல முதன்மைப் பிரபு

M

Magistrate Court — குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
Manifesto — கொள்கை விளக்க அறிக்கை
Martial Law — இராணுவச் சட்டம்
Militia Act — நாட்டுப் படைச் சட்டம்
Ministerial Responsibility — அமைச்சரவையின் பொறுப்பு
Ministry — அமைச்சரவை
Model Parliament — மாதிரிப் பாராளுமன்றம்
Molasses Act — வெல்லப் பாகுச் சட்டம்
Monarchy — முடியாட்சி

Money Bill — பண மசோதா; நிதி மசோதா
Monopoly — தனியுரிமை
Mutiny Act — படைக் கலகச் சட்டம்

N

National Debt — தேசியக் கடன்
National Insurance Scheme — தேசியக் காப்புறுதித் திட்டம்
Nationalism — தேசியம்
Navigation Act — நாவாய்ச் சட்டம்
Nineteen Propositions — பத்தொன்பது அறுதி யுரைகள்
Nominated Parliament — நியமிக்கப்பட்ட பாராளு மன்றம்
Non Conformists — ஒருப்படாதார்

O

Occational Conformity Bill — சில வேளை இணக்க மசோதா
Organisation — அமைப்பு

P

Parliament — பாராளுமன்றம்
Parliament Act — பாராளுமன்றச் சட்டம்
Parliamentary Democracy — பாராளுமன்ற ஜனநாயகம்
Parliamentary Government — பாராளுமன்ற முறை அரசாங்கம்
Passport — பயண இசைவுச் சீட்டு
Peerage Bill — பிரபுத்துவ மசோதா
Plural voting — பன்மை வாக்களிப்பு
Political Sovereignty — அரசியல் இறைமை
Poor Law — இரவலர் சட்டம்
Precedent — முன் நிகழ்வு
Principle of Free Trade — தடையிலா வாணிபக் கொள்கை
Principle of Homogenity — ஓரினத் தன்மைக் கொள்கை
Privileges Committee — தனியுரிமைக் குழு
Proclamation — தனியாணைப் பேரறிவிப்பு
Prorogation — ஒத்திபோடுதல்
Protector — காப்பாளர்
Protectorate — காப்பாளராட்சி

Q

Quarter Sessions — காலாண்டுப் பருவ மேல் வழக்கு நீதிமன்றம்
Quorum — குறைவெண் வரம்பு

R

Registration — ஆவணப் பதிவு
Reformation — சமயச் சீர்திருத்த இயக்கம்
Reforms Society — சீர்திருத்தச் சங்கம்
Renaissance — மறுமலர்ச்சி இயக்கம்
Reorganisation — மறு அமைப்பு
Report stage — அறிக்கை நிலை
Restoration — முன்னிலை மீட்சி
Revolution — புரட்சி
Root and Branch Bill — வேரோடழிக்கும் மசோதா
Rule of Law — சட்டத்தின் ஆட்சி
Rump Parliament — எஞ்சிய பாராளுமன்றம்

S

Self Denying Ordinance — தன்னல அழிப்பு அவசரச் சட்டம்
Septennial Act — ஏழாண்டுச் சட்டம்
Ship money — கப்பற் பணம்
Short Parliament — குறுகிய பாராளுமன்றம்
Sinking Fund — கடன் கழிவு நிதி
Socialism — சமதர்மம்
Sovereignty — இறைமை
Speaker — சபாநாயகர்
Stamp Act — முத்திரைக் காகிதச் சட்டம்
Standing Committee — நிலைக் குழு
Standing Orders — நிலையான உத்தரவுகள்
Super tax — மீவரி
Supreme Court — தலைமை உயர்நீதி மன்றம்
Surveyors — அளவாயர்கள்
Suspending Power — சட்ட நிறுத்த அதிகாரம்

T

Test Act — சோதனைச் சட்டம்
Toleration Act — சமயப் பொறைச் சட்டம்

Trade Union	—	தொழிற் சங்கம்
Treasury	—	கருவூலகம்
Triennial Act	—	மூவாண்டுச் சட்டம்
Triple Alliance	—	முக்கூட்டு ஒப்பந்தம்

U

Unwritten Constitution	—	எழுதா அரசியலமைப்பு
Utilitarianism	—	பயனீட்டுக் கொள்கை

V

Vested Interests	—	வேரூன்றிய சுய நலன்கள்
Veto	—	தடைவாக்கு ; ரத்து செய்யும் அதிகாரம்
Vote	—	வாக்கு

W

Welfare State	—	பொதுநல அரசு
Writ	—	கட்டளை
Written Constitution	—	எழுதிய அரசியலமைப்பு